தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை ஒப்பனையியல்

முனைவர் கு. பகவதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை
ஒப்பனையியல்

முனைவர் கு. பகவதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	tamiḻar paṇpāṭṭuc coṟkōvai - oppaṉaiyiyal
Author	:	Dr. K. Bhagavathi Professor International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113.
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Tharamani, Chennai - 600 113 Ph: 2254 2992
Publication No.	:	624
Language	:	Tamil
Edition	:	First Edition
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg. TNPL
Size of the Book	:	Demy 1/4
Printing type Used	:	11 points
No. of Pages	:	xxi + 384
No. of Copies	:	1200
Price	:	Rs. 250/- (Rupees Two hundred and fifty only)
Printing	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Tamils' Culture

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

பழந்தமிழர் ஒப்பனைகளைக் குறிக்கப் பயன்படுத்திய சொற்களையும் தொடர்களையும் கோவையாக்கித் தருகிறது **'தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை - ஒப்பனையியல்'** என்ற இந்த நூல். பொதுவாக, கலைத்துறை குறித்த ஆய்வுகள் நம் தமிழ் மரபில் சற்றுக் குறைவு என்றால் அது மிகையில்லை. கலித்தொகை, பரிபாடல் இவ்விரண்டிலும் இசை, கூத்துக் குறித்த செய்திகள் பல பதிவாகியுள்ளன என நம் தமிழ்ச் சான்றோர்கள் பரவலாகக் கூறியுள்ளனர். எனினும் இலக்கிய ஆய்வுகள் கனமாக நடந்த அளவுக்குக் கலைத்துறை குறித்த ஆழமான ஆய்வுகள் குறைவே. கூத்து, கூத்தர், பாணர், பாடினி, விறலியர் என நம் சங்க இலக்கியங்களில் கலைஞர்களைப் பரவலாகக் காண்கிறோம். எனினும் அக்கலைஞர்கள் குறித்தும், கலைகள் குறித்தும், கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ள விபரங்கள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப் படவில்லை. இந்தச் சூழலில் எமது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் **'தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை - ஒப்பனையியல்'** என்ற இந்த நூலை வெளியிடுவதன் வழியே பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறது.

தமிழர் தம் ஒப்பனை முறைகள் இந்நூலில் இலக்கியங்களிலிருந்து தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சங்ககாலம் தொட்டு, பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையிலான தகவல்கள் இதனுள் திரட்டித் தரப்பெற்றுள்ளன. பழந்தமிழரின் ஒப்பனைக் கலை அரங்கியலை நோக்கியதாக அமையவில்லை. மாறாக, அழகியலை நோக்கியதாக அமைவது இங்குப் புலப்படுகிறது. பன்னிரண்டு நூற்றாண்டு கால வளர்ச்சியில் தமிழர் ஒப்பனைகள் எந்தெந்தக் காலக்கட்டங்களில் எவ்வெவ்வாறு அமைந்தன என்பவையெல்லாம் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டிய அருஞ்செய்திகள்.

பாதாதிகேச வருணனை, கேசாதிபாத வருணனை என வைணவ இலக்கியங்கள் கண்ணனின் ஒப்பனைகள் குறித்துப் பேசும். அதுபோல இந்நூலாசிரியர் உச்சி முதல் உள்ளங்கால் வரை, கூந்தல், நெற்றி, முகம், கழுத்து, மார்பு, தோள், முதுகு, கை, இடை, அரை, தொடை, கால், அடி, விரல்கள், மேனி என முறையே அன்று தமிழர் செய்த ஒப்பனைகளை வகைப்படுத்தி தந்துள்ளார்.

மணவணி - திருமண ஒப்பனை,

"ஒரு பெருநாளால், மணவணி காண மகிழ்ந்தனர்"

என, சிலம்புவழி விளக்கப்பட்டுள்ளது.

மணநாள் குறிக்கப்பட்டுள்ளது

மணநாள் பலராலும் கூடி முடிவெடுக்கப்பட்டுள்ளது

திருமணம் பெரியோரால் நிச்சயிக்கப்பெற்றது

திருமணத்துக்கென மணமகள் மணவணி செய்துள்ளாள்

மணவணி கொண்ட மணமகளைக் காணப் பலரும் ஆர்வம் கொண்டுள்ளனர்

மணநாள் பலருக்கும் மகிழ்ச்சி தரக்கூடியதாக அமைந்துள்ளது

என, சிலப்பதிகாரம் சுட்டும் ஒரு வரி வழிப் பல கருத்துகளை மனங்கொள்ள இது வழி வகுக்கிறது. இவ்வாறு நூலாசிரியர் எடுத்துக்கூறி உள்ள அனைத்துச் சொற்களும் சொல் விளக்கத்துக்காக எடுத்துக்காட்டியுள்ள பாடலடிகளும் ஆழ்ந்த சிந்தனைக்கும் ஆய்வுக்கும் உரிய தேடல்களை உருவாக்குகின்றன. இவ்வாறான பண்பாடு, வரலாறு என்பவை குறித்த பல செய்திகளை எண்ணிப் பார்த்திட வழிவகுக்கும் பண்பாட்டுச் சொற்கோவையாக இது சிறப்புற விளங்குகிறது.

உண் கண் - மை தீட்டிய கண்

மெல்லம் புலம்பன் பிரிந்தெனப் பல்லித
ழுண் கண் பாடொல்லாவே.... குறுந். 5: 4-5

குன்ற நாடன் கேண்மையென்றும் நன்று
மன் வாழி தோழி யுண் கண் நீ ரொ
டொராங்குத் தணப்ப குறுந். 38: 3-5

தண்டுறை யூரன் றெளிப்பவும் உண்கண்
பசப்பதெவன் கொலன்னாய் ஐங். 21: 3-4

எரிமயங்கு கானம் செலவு உரைப்ப
நில்லா அரிமயங்கு உண்கண்ணுள் நீர் ஐந்.எழு. 37: 3-4

எரிபரந்த கானம் இயை பொருட்குப் போவீர்
அரிபரந்தஉண்கண்ணாள் ஆற்றாமை நும்மின்
தெரிவார் யார் தேரும் இடத்து திணை. ஐம். 12: 3-4

எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்துப்
புரையோர் உண்கண் துயில்இன் பாயல் பதிற். 16: 17-18

(பக். 180-181)

என, தொடர்ந்து, ஏலாதி, சிலம்பு, மணிமேகலை, பெருங்கதை, கம்பராமாயணம் எனத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் 'உண்கண்' எனும் தொடர் கையாளப்பட்டுள்ளமை எடுத்து விளக்கப்பட்டுள்ளது. ஒரு சொல்லுக்குப் பல எடுத்துக்காட்டுகளைப் பல இலக்கியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டித் தொகுத்துத் தந்துள்ள பேரா. கு. பகவதி அவர்களது ஆழ்ந்த புலமையும் கடின உழைப்பும் தமிழர் பண்பாட்டுச் சொற்கோவையின் பக்கங்கள்தோறும் விரிந்து செல்கிறது. இந்நிலையில் எம் நிறுவனத்தின் பதிப்பாக இந்த நூல் வெளிவருவது எமக்குப் பெருமை அளிக்கிறது.

பல்கலைக் கழக மானியக்குழு திட்ட ஆய்வுப்பணியில் விளைந்த இந்தச் சொற்கோவைப் பெட்டகத்தினை உருவாக்கிடத் துணைநின்ற திட்ட நோக்காளர் திருமதி அ. சரசுவதி அவர்கள் இந்நேரத்தில் நினைவு கொள்ளத்தக்கவர்.

இந்தப் பணி முயற்சியில் துணைநின்ற அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றி என்றும் உண்டு.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் **திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்துப் பணிகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

நன்றியுரை

பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவியுடன் செய்யப்பட்ட **தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை - ஒப்பனையியல் (2003-2006)** என்ற திட்டப்பணியினை நூலாக வெளியிடப் பல்லாற்றானும் துணை நின்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேரா. முனைவர் கரு.அழ. குணசேகரன் அவர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை - ஒப்பனையியல்' என்ற திட்டப்பணியைச் செய்ய அனுமதி வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு என் நன்றி.

திட்டப்பணிக்கு நிதியுதவி வழங்கிய பல்கலைக்கழக நல்கைக்குழுவிற்கு என்றும் என் நன்றி உரியது. பல்கலைக்கழக நிதியுதவி வழங்க இத்திட்டப்பணியைத் தேர்வு செய்த அறிஞர்குழுவினர்க்கும், மதிப்பீடு செய்து திட்டப்பணியினைத் தொடர ஒப்புதல் அளித்த அறிஞர்குழுவினர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தைப் பல்கலைக்கழக நல்கைக்குழுவிற்கு அனுப்பவும், திட்டப்பணி செவ்வனே நடைபெறவும் துணை புரிந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு என் நன்றி.

திட்டப்பணியினைச் சிறப்பாகச் செய்து முடிக்கப் பெரிதும் உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றி.

இத்திட்டப்பணியினை ஆய்வு செய்து பல்கலைக்கழக நல்கைக்குழுவிற்கு அனுப்ப பரிந்துரை செய்த நிறுவன வல்லுநர்குழுவிற்கு என் நன்றி. இத்திட்டப்பணிக்கு நோக்காளரைத் தேர்வு செய்த தேர்வுக்குழுவிற்கு நன்றி.

திட்ட நோக்காளராகப் பணியாற்றி, கோவைக்குரியப் பதிவுகளைத் தொகுப்பதில் அயராது உழைத்து, இத்திட்டப்பணி சிறப்புற முடிய உதவிய திருமதி அ. சரசுவதி அவர்களுக்கு நன்றி.

திட்டப்பணி சார்ந்த கட்டுரைகள், நூல் எழுத ஊக்கமும் உற்சாகமும் அளித்தவர் பேராசிரியர் முனைவர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள். அவர்களுக்கு என் நன்றி.

திட்டப்பணி சிறப்புற நடைபெற ஊக்கமும் உற்சாகமும் அளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு என் நன்றி.

கோவையின் சிறப்புக்கு வேண்டிய பல கருத்துகளை வழங்கிய பேராசிரியர் முனைவர் செ. ஜீன் லாறன்ஸ் அவர்களுக்கு என் நன்றி.

திட்டப்பணி தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்றுக் கருத்துகள் வழங்கிய முனைவர் ஆறு. இராமநாதன், முனைவர் அ. சித்திரபுத்திரன், முனைவர் வே.சா. அருள்ராஜ், முனைவர் ந. ஜோசப், முனைவர் பக்தவத்சல பாரதி ஆகியோருக்கு என் நன்றி.

திட்டப்பணி செயல்பாடுகள் தொடர்பாகக் கருத்துகள் பல வழங்கிய நண்பர்கள் முனைவர் அன்னிதாமசு அவர்களுக்கும், முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும் என் நன்றி.

மெய்ப்புத் திருத்தம் செய்ய துணை புரிந்த திருமதி பி. ஸ்ரீவள்ளி அவர்களுக்கு என் நன்றி.

திட்டப்பணிக் காலத்தில் ஊக்கப்படுத்திய நிறுவன நண்பர்கள் முனைவர் மு. வளர்மதி, முனைவர் சூ. நிர்மலாதேவி ஆகியோருக்கும் என் நன்றி.

இத்திட்டப்பணிக்குரிய அலுவல் பணிகளை இன்முகத்துடன் செய்து உதவிய அலுவலக மேலாளர் திரு. க.ந. வீரபாகு சுப்பிரமணியன், கணக்கர் திரு. வெ. லோகநாதன், நேர்முக உதவியாளர் திரு. ச. குணசீலன் மற்றும் பிற அலுவலக அன்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

இத்திட்டப்பணி செய்யும்போது வேண்டிய நூல்களை இன்முகத்துடன் அளித்துதவிய நூலகர் திருமதி இரா. பார்வதி அவர்களுக்கும் பிற நூலக நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

கோவையை ஒளியச்சுச் செய்து கொடுத்த திருமதி எ.ம. லட்சுமி, திரு. எஸ். கண்ணன் ஆகியோருக்கும் என் நன்றி.

கு. பகவதி

உள்ளே.....

	பக்கம்
தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை - ஒப்பனையியல் அறிமுகம்	xi
சுருக்க விளக்கம்	xx
1. ஒப்பனைச் சொற்கள்	1
2. தயார்ப்படுத்துதல் / சுத்தப்படுத்துதல்	
2.1. நீராடுதல்	7
2.2. நீர் நிலைகளில் / நீராட்டிடங்களில் நீராடிய முறைகள்	13
2.3. நீராடல் பொருட்கள்	
அ. நீர்	22
ஆ. பிற பொருட்கள்	25
2.4. ஈரம் புலர்த்துதல்	41
3. ஒப்பனைகள் : உச்சி முதல் உள்ளங்கால் வரை	
3.1. கூந்தல்	48
அ. பெயர்கள்	48
ஆ. அழகும் சிறப்பும்	52
3.1.1. கூந்தல் : ஒப்பனைப் பொருட்கள்	
அ. மலர்கள்	58
ஆ. மாலைகள்	68
இ. மணப்பொருட்கள்	90
ஈ. அணிகலன்கள்	96
உ. துணி	111
3.1.2. கூந்தல் : ஒப்பனைச் செய்முறைகள்	112
3.2. முகம்	120

3.2.1. நெற்றி

அ. மலர்கள் 121

ஆ. மணப்பொருட்கள் 121

இ. அணிகலன்கள் 122

ஈ. திலகம் 124

3.2.2. புருவம் 127

3.2.3. கண்

அ. அஞ்சனம் 128

ஆ. மை 130

3.2.4. மூக்கு 134

3.2.5. வாய் 135

3.2.6. இதழ் 136

3.2.7. கன்னம் 137

3.2.8. காது

அ. காது துளையிடுதல் 138

ஆ. மலர்கள் 138

இ. அணிகலன்கள் 139

3.3. கழுத்து

அ. மணப்பொருட்கள் 162

ஆ. மலர்மாலைகள் 162

இ. அணிகலன்கள் 184

3.4. மார்பு

அ. அல்லி 215

ஆ. இணர் 215

இ. தளிர் 215

ஈ. தாது 215

உ. மலர் 216

ஊ. மணப்பொருட்கள் 216

எ. ஆடை 231

ஏ. கவசம் 238

3.5. தோள்

அ. மணப்பொருட்கள் 240

ஆ. மாலைகள் 241

இ. அணிகலன்கள் 242

3.6. முதுகு

அ. மணப்பொருட்கள் 250

ஆ. அணிகலன்கள் 250

3.7. கை

அ. நிறமூட்டும் பொருட்கள் 251

ஆ. அணிகலன்கள் 251

3.8. இடை

அ. அணிகலன்கள் 271

3.9. அரை

அ. அணிகலன்கள் 272

ஆ. ஆடைகள் 283

3.10. தொடை

அ. அணிகலன்கள் 318

3.11. கால்

அ. அணிகலன்கள் 319

3.12. அடி

அ. நிறமூட்டும் பொருட்கள் 351

ஆ. கவசம் 351

இ. செருப்பு 351

3.13. கை/கால் விரல்கள்

அ. நிறமூட்டும் பொருட்கள் 353

ஆ. அணிகலன்கள் 353

3.14. கை/கால் நகம்

அ. நிறமூட்டும் பொருட்கள் 357

4. மேனி

அ. மணப்பொருட்கள் 358

ஆ. அணிகலன்கள் 360

இ. ஆடைகள் 377

ஈ. கவசம் 379

பயன்பட்ட நூல்கள் 380

தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை ஒப்பனையியல்

அறிமுகம்

சொற்கோவை

சமூகவியல் சார்ந்த பல ஆய்வுகளுக்குப் பயன்படக்கூடியதொரு கோவை பண்பாட்டுச் சொற்கோவை.

கோவை என்பதற்குக் கோர்த்தல் என்பது பொருள். கோர்த்துப் பார்த்தல் அழகானது; அருமையானது. ஆய்வில் கோவை என்பதும் கோர்த்துத் தரலைக் குறிக்கும். இவற்றுள் சொற்களைக் கோர்த்துத் தரல் என்ற சொற்கோவையை அகராதிகளின் ஒரு வகையாகக் கொள்ளலாம்.

தமிழ் அகராதி பற்றிய தமிழர் சிந்தனையின் தோற்றம் பற்றித் தெரியவில்லை. எனினும் தொடக்கம் தொல்காப்பியம் தொட்டுக் கணக்கிடப்படுகிறது. தொல்காப்பியத்தில் வெளிப்பட்ட அகராதியின் முளை இன்று ஆலமரமாக வளர்ந்து வந்துள்ள நிலையில் அகராதிகளின் வளர்ச்சியும் வரலாறும் அறிஞர் பெருமக்களால் ஆராயப்பட்டன; ஆராயப்பட்டு வருகின்றன. தொல்காப்பியக் காலந்தொட்டு இன்று வரையிலும் நாம் காணும் பல தரப்பட்ட அகராதிகள் அந்தந்தக் காலத் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டவை; உருவாக்கப்பட்டு வருபவை என்பன அவர்களால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அருஞ்சொல் அகராதி முதல் கலைக்களஞ்சியம் வரையிலுமாக, ஒரு துறை முதல் பல்துறை வரையிலுமாக அவை ஆழ்ந்தும் அகன்றும் காணப்படும் தன்மை அவர்களால் விளக்கம் பெற்றுள்ளன. இந்நிலையில் இலக்கியமும் மொழியும் பயன்தரு நிலையிலும் பயன் கொள்ளப்பட்ட நிலையிலும் புரிதல் பயனுடன் நின்று விடாது பிறபல ஆய்வுகள் நோக்கிலும் அணுகப்பட்ட, அணுகப்பட்டு வரும் நிலையில் அகராதிகள் மேலும் வளர்ச்சியடையத் தொடங்கின; வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு காலந்தோறும் அகராதிகள் உருவாக்கப்பட்டு வந்துள்ள நிலையில் நாம் காண்பன புதிய புதிய அகராதிகள்; அவற்றுள் புதிய புதிய உத்திகள்; புதிய புதிய சொற்கள்; புதிய புதிய பொருண்மைகள்; புதிய புதிய விளக்கங்கள்; அவை தருவன புதிய புதிய சிந்தனைகள். எனினும் இவ்வனைத்து அகராதிகளுக்கும் உயிர்நாடியாக அமைவது சொல்; சொல்லைப் புரிந்து கொள்வதும் புரிய வைத்தலுமாம்.

சொற்கள் பாதுகாப்பு என்பது அகராதிகளின் மற்றுமொரு பயன்பாடு. தான் கண்டவை, கேட்டவை, சுவைத்தவை, நினைத்தவை, சிந்தித்தவை, பேசியவை, நடத்தியவை, நிகழ்த்தியவை, கண்டுபிடித்தவை, தோற்றுவித்தவை, பயன்படுத்தியவை என மானுட இனம் காலங்காலமாக, தான் சந்தித்த, சிந்தித்த செய்திகள் அனைத்தையும் தம் மரபினருக்குக் கொண்டு செல்லும், கொண்டு சேர்க்கும் வரலாற்றுப் பெட்டகங்கள் சொற்கள். மானுட வரலாற்றைக் காத்து வரும் இவை சிறந்த வரலாற்று மூலங்கள். இத்தகைய சொற்களைப் பாதுகாத்து வருவன அகராதிகளும்கூட. இந்நிலையில் அகராதிப் பணி என்பது இன்றியமையாததொரு பணி என்று சொன்னால் அது மிகையில்லை.

சொற்களை இலக்கணவியலாரும் மொழியியலாரும் பல்வேறு விதமாகப் பகுத்து ஆராய்ந்துள்ளனர்; ஆராய்ந்து வருகின்றனர். அகராதியியலார் சொல்லின் பொருள், ஒரு சொல்லுக்குரிய பல பொருட்கள், பல சொற்களுக்குரிய ஒரு பொருள், இலக்கணம், பயிற்சிகள், விளக்கம், வரலாறு எனப் பலவற்றையும் ஆராய்ந்து அறிந்து ஒரு பதிவில் தருகின்றனர். எனினும் இவை யாவும் எல்லா அகராதிகளிலும் இடம்பெறுவதில்லை. தவிர, எல்லாச் சொற்களும் எல்லா அகராதிகளிலும் இடம் பெறுவதுமில்லை. எடுத்துக் கொண்ட நோக்கிற்கு ஏற்ப, காலத்திற்கு ஏற்ப,

அகராதிகளில் இடம் பெறும் சொற்கள் மாறும்; சொற்பொருள் விளக்கம் தரும் நிலையும் மாறும். இத்தகைய நிலையில் மொழியில் காணப்படும் பல்லாயிரக் கணக்கான சொற்குவியலினுள் தனித்துறை சார்ந்த சொற்களைத் தொகுத்து தரலும் அகராதிகளின் இயல்பில் ஒன்றாகக் காணப்படுகிறது. தொல்காப்பியர் உரிச்சொற்களை மட்டும், அவற்றுள்ளும் வெளிப்பட பொருள் தரும் சொற்களை விடுத்து, வெளிப்படையாகப் பொருள் தெரியாத சொற்களை மட்டும் சொல்லத் தொடங்குவதிலேயே இதனைக் காண முடிகிறது. இவ்வாறு உரிச்சொற்களை மட்டும் அகராதியாகத் தரலை அவர் தன்காலத்திய தேவையாகக் கருதியிருக்கலாம். நிகண்டுகளின் பண்பும் இத்தகையதுதான். இந்நிலையில் அகராதிகளின் பன்முக வளர்ச்சி வரலாற்றில் ஒரு துறை சார்ந்த அகராதிகளின் இடமும் குறிப்பிடத்தக்கது எனலாம். இத்தகைய தனித்துறை சார்ந்த அகராதிகளை இன்றைய கலைச்சொல் அகராதிகளுடன் ஒப்பிடலாம். இந்நிலையில் கலைச்சொல் அகராதிகளைத் துறை சார்ந்த அகராதிகளின் பரிமாணமாகவும் கொள்ளலாம்; பரிணாம வளர்ச்சியாகவும் கொள்ளலாம்.

பொதுவாகக் கலைச் சொற்களைத் துறைச் சொற்கள், துறை வழக்குச் சொற்கள் என்றெல்லாம் வழங்குவர். கலைச்சொற்கள், துறைச் சொற்கள், துறை வழக்குச் சொற்கள் என்ற இச் சொல்லாக்கங்கள் சொல் நிலையில் வேறுபட்டாலும் பல சொல் ஒரு பொருளாக இவை துறை சார்ந்த கருத்துப் பொதி சொற்களையே சுட்டுகின்றன என்பது இங்குக் கருதத்தக்கது.

துறை சார்ந்த சொல்லகராதிகள் பல இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன. இச்சூழலில் குறிப்பாக ஒரு செய்தி இங்குச் சுட்டத்தக்கது. இன்றைய அறிவியல் வளர்ச்சியின் காரணமாக அறிவியல் சார்ந்த சொல்லாக்கங்களும், அவை சார்ந்த அகராதிகளும் வெளிவருவதில் முன்னிலை வகிக்கின்றன. பலரும் ஈடுபாடு கொண்டு இத்தகைய அகராதிகளை வெளிக்கொண்டுவருகின்றனர். அடுத்து, தமிழ்மொழியிலேயே புதிய பொருட்களுக்கும் புதிய கோட்பாடுகளுக்கும் சொற்களை உருவாக்குதல் என்பதும் இன்று ஓரளவிற்குக் காணப்படுகின்றது. வருங்காலத்தினர் இவற்றைத் தொகுக்கலாம். இந்நிலையில் இன்று நாம் மற்றுமொரு அகராதி பற்றி எண்ண வேண்டியவர்களாக உள்ளோம். அதுதான் ஏற்கெனவே தமிழர் வழங்கிய துறை சார்ந்த சொற்கள், இன்றும் பயிற்சியில் இருக்கின்ற சொற்கள், தமிழர் வழக்கினின்றும் மறைந்துவிட்ட சொற்கள் போன்றனவற்றைத் தொகுத்துத் தரும் அகராதி. ஏற்கெனவே தமிழர் சிந்தித்து வைத்த பல துறை அறிவுகளும் நம் தமிழ்மொழியிலே தமிழ்ச் சொற்களிலே பாதுகாக்கப்பட்டு வந்ததனை, பாதுகாக்கப்பட்டு வருவதனைச் சொற்களின் வரலாறு தருகிறது. பிறமொழிக் கருத்துகளைப் புரிந்துகொள்வதற்கு, சொல்லாக்கங்களும் மொழிபெயர்ப்பும் எந்த அளவிற்கு முக்கியமாகக் கருதப்படுகிறதோ அதனைப்போல ஏற்கெனவே நம்மிடமுள்ள துறை அறிவுகளை வெளிக் கொணரவல்ல சொற்களின் தொகுப்பும் ஆய்வும் முக்கியமானது. சில சொற்கள், சில தொடர்கள் தமிழர்கள் மரபாகச் சிந்தித்து வந்த சிந்தனைகளை இன்று வரையிலும் தொடர்ந்து எடுத்து வந்த போதிலும் அன்று தமிழர் வழங்கிய பல சொற்களையும் பொருண்மைகளையும் இன்று நாம் தெளிவாக உணர முடியவில்லை; பல சொற்கள் இன்று நம்மிடம் இல்லை; இதனால் இவை தொடர்பான சிந்தனைகளும் இல்லை. இவை மீளாய்வு செய்யப்பட்டால் தமிழரின் சிந்தனைகள் பல தெளிவு பெறும். அதற்குத் துறைச் சொற்கள் அனைத்தையும் தொகுத்துத் துறை வாரியாகப் பகுத்து ஆராய வேண்டும். அவ்வாறு ஆராயும்போது ஒவ்வொரு துறையும் தனித்தனி வரலாறாக விரிந்து தனித்தனித் துறைகளின் வரலாறு நமக்குக் கிடைக்கும். தமிழர் சிந்தனையின் ஆழம் அங்கே புலப்படும். அவர் கடைப்பிடித்த வாழ்வியல் வழிமுறைகள் பல தென்படும். சொற்களின் பயிற்சியிழப்பில் நாம் இழந்த இழப்புகளும் தெரியவரும் என்பதுடன் இவ்விழப்புகளை நாம் எவ்வாறு மீட்டெடுக்கப் போகிறோம் என்ற கேள்வியும் எழும்; மீட்டெடுத்தலுக்குரிய வழியும் கிடைக்கும் என்ற நிலையில் தமிழரின் வரலாற்றில் பண்டுதொட்டுக் காணப்படும் பல, துறை சார்ந்த சொற்களின் தொகுப்பின் தேவை புலப்படுகிறது. தவிர, பிற நாட்டார்ச் சாத்திரங்களை நாம் அறிய முனையும் அதே நேரத்தில் நம் சாத்திரங்களை அறிதலும் தேவை. நம் முன்னோர் சிந்தனைகளை முதலில் நாம் உணர்ந்து கொள்ளவும், பிறருக்கு அவற்றைப் புலப்படுத்தவும் இச்சொற்களின் மீளாக்கம் தேவைப்படுகின்ற ஒன்று. இந்நிலையில் இச்சொற்களை அகராதியாக்கித் தரலும் அகராதிகளின் உருவாக்கத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததொரு பணி என்பது தெளிவு.

இன்று அறிவியலின் வளர்ச்சி பலதுறை பற்றியும் தனித்தனியே நுணுக்கமாக ஆராயும் கல்விக்கும் ஆய்விற்கும் வித்திட்டுள்ளது; வழி வகுத்துள்ளது. இந்த வளர்ச்சியில் புதிய

சிந்தனைகள் பல வெளிப்பட்டுள்ள நிலையைக் காண முடிகின்றது. இத்தகைய சூழலில் தமிழியல் சார்ந்த கல்வி மூலம் இன்று ஆழமாக ஆராயப்படும் பல்வேறு துறைகள் சார்ந்த சிந்தனைகள் பண்டுதொட்டே தமிழரிடம் மண்டிக் கிடப்பதை அறிய முடிகிறது. தமிழரின் சிந்தனைகள் ஆழமானவை; பரந்து பட்டவை. இயந்திரக் கருவிகள், மின்னியற் கருவிகள் இன்று புதியனவாக இருக்கலாம். ஆயின் தமிழரின் மனக்கருவி மிக்க வலிமையுடன் திகழ்ந்துள்ளது. இலக்கியங்களில் காணப்படும் பல்வேறுபட்ட சிந்தனைகள் தம்மையும் தம் சூழலையும் மிக ஆழமாக நுணுக்கமாகச் சிந்தித்த தமிழரது சிந்தனைத் திறத்தை வெளிக்காட்டுவன. இன்று வரை தமிழர் எழுதியுள்ள நூல்கள் பலவற்றையும் நாம் இங்கு எண்ணிப் பார்க்கலாம். வாழ்வியல், சமயம், தத்துவம், பக்தி சார்ந்த செய்திகளுடன் தாவரவியல், வானியல், நீரியல், மண்ணியல், விலங்கியல் தொடர்பாகவும் அரிய சிந்தனைகளைத் தந்தவர்கள் அவர்கள். தாம் பார்த்தவற்றையும் கேட்டவற்றையும் உற்று நோக்கி, உணர்ந்து, ஆராய்ந்து பல செய்திகளைத் தெளிவுபடுத்தியவர்கள் அவர்கள். எனவே அவர்களிடம் இன்றைய பல சிந்தனைகளின் தொடக்கங்களையும் விளக்கங்களையும் காண முடிகின்றன. இச்சிந்தனைகளைத் தமிழர்கள் தம் சொற்களிலும் தொடர்களிலும் பாதுகாத்துக் கொடுத்த முறையில் ஒவ்வொரு துறை சார்ந்தும் தமிழரிடம் காணப்பட்ட சொற்களின் தொகுப்பும் எண்ணிப் பார்க்க வேண்டியது உடனடித் தேவையாக அமைகிறது. இவ்வாறு தொகுத்து அளிக்க வேண்டிய சொற்கோவைகளில் 'தமிழர் பண்பாட்டு சொற்கோவை'யும் ஒன்று.

பண்பாடு

பண்பாடு என்ற சொல்லாட்சி அண்மைக் காலத்தது. பண்பாடு என்ற சொல்லை முதன்முதலில் வழங்கியவர் இரசிகமணி டி.கே.சி. (உலகத் தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம், ப. 3). எனினும் பண்பாட்டில் அமையும் பண்பு என்பது தமிழ் மக்களின் எண்ணத்தில், சொல்லில், செயலில் தொன்றுதொட்டே காணப்பட்டமைக்குப் பல சான்றுகள் உண்டு. இவ்வாறு பண்பு பற்றிய சிந்தனை நமக்குப் பழையது எனினும் பண்பாடு எது என்பது குறித்த சிந்தனை உலக மக்கள் யாவரிடமும் காணப்படுவது போன்றே தமிழரிடமும் காணப்படுகிறது. பண்பாட்டிற்கு விளக்கம் அளித்து இதன் முழுமையை உணர்ந்து கொள்ள எல்லா மக்களும் முயன்றுள்ளதை உலக அறிஞர்கள் பலரின் விளக்கங்களும் புலப்படுத்துகின்றன. மக்கள் வாழ்வு நெறிகள் அனைத்தின் தொகுதியே பண்பாடு என இவ்வனைத்துச் சிந்தனைகளும் முடிவு செய்ய வழிகோலினும் வாழ்வு நெறிமுறைகள் அனைத்தும் பண்பாட்டில் அடங்குமா? பண்பாடு ஆகுமா? என்பதும் சிந்திக்கத்தக்க ஒன்று.

பண்பாடு குறித்து அறிஞர்கள் கூறும் கருத்துகளையெல்லாம் மனத்துட் கொண்டு மேலும் பண்பாடு குறித்து எண்ணிப் பார்க்க, வாழ்வு நெறிமுறைகள் என ஒட்டுமொத்தமாகக் கொண்டாலும் "ஓர் உயர்வு" என்பது பண்பாட்டில் இழையோடக் காண்கிறோம்.

பண்பு பற்றி ஆராயும்போது இது குணநலன் எனப் பொருள் தந்து நிற்கிறது. இதன் வேர்ச்சொல் பண். மேலும் கிளைத்த சொற்கள் பண்படுதல், பண்படுத்தல் போன்றன. 'பண்பாடு' சொல் பிறக்கக் காரணமான சொற்கள் இவை.

பண்படுத்தல், பண்படுதல் என்பன செம்மைப்படுத்தல் செம்மைப்படுதல் என்ற பொருள் உடைய சொற்கள். இருப்பதைச் செம்மைப்படுத்தல் என்று இதற்கு விளக்கம் அளிக்கலாம்.

நிலம் இருக்கிறது. அந்த நிலம் பண்படுத்தப்படும்பொழுது, செம்மைப்படுத்தப் படும்போது நல்ல விளைச்சலைத் தரும்.

ஒலிகள் இருக்கின்றன. ஒலிகள் அனைத்தும் இசையாகாது. வரன்முறையுடன் செம்மைப்படுத்தப்படும்போது மட்டுமே பண்ணாகும்; நல்ல பண்ணினைத் தரும்.

இதைப் போன்றே மனிதனும் பண்படும்போதே நல்ல மனிதன், சிறந்த பண்பாடுடைய மனிதன் ஆகிறான். மனிதன் பல்வேறு இயல்புகளும் கலந்த கலவை. எல்லா இயல்புகளும் அவனிடமுண்டு. இந்த இயல்புகளை அவன் அறிவு கொண்டு பண்படுத்தும்போது அவனிடம் மிளிர்வது பண்பாடு.

எனவே இவற்றையெல்லாம் நோக்க, பண்படுதல், பண்படுத்தல் போன்று பண்பாடு என்பதையும் மேலான, உயர்ந்த, செம்மையான, செம்மைப்படுத்தப்பட்ட முதலான பொருண்மைகளுடன் சார்த்திப் பொருள் நோக்குவதே பொருத்தமானதாக அமையும் எனத்

தோன்றுகிறது. இந்நிலையில் ஒரு சமுதாயத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை முறையினைப் பண்பாடு என்பர் என்ற கருத்து மேலும், செம்மைப்படுத்தப்பட்டது என்ற பொருளோடு சார்த்திப் பார்க்கப்படும்போது சமுதாயம் பின்பற்றும் வாழ்வுமுறைகள் என்ற கருத்து மேலும் சீர்படும். **தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் என்று எண்ணி ஒரு சமுதாயம் பின்பற்றும் வாழ்வு நெறிமுறைகளே பண்பாடு** என இதற்கு விளக்கம் அளிக்கலாம். பண்பாடு என்ற சொல்லுக்குரிய செம்மைப்படுதல் சார்ந்த பொருளாக இது அமையும்; மனித சமுதாயம் பின்பற்றும் வாழ்வுநெறிமுறைகள் என்பதும் இங்கு அமையும்.

ஒரு சமுதாயம் பின்பற்றும் எல்லா வாழ்வு நெறிமுறைகளையும் மற்ற எல்லா சமுதாயங்களும் பின்பற்றுவதில்லை. ஒரு சமுதாயத்தினரின் அனைத்து வாழ்வு நெறிமுறைகளும் இன்னொரு சமுதாயத்தினருக்கு உவப்பானதாக இருக்கும் என்றும் சொல்ல முடியாது; எதிர்பார்த்தலும் இயலாது. ஆயின் ஒவ்வொரு சமுதாயமும் தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் என்று எண்ணியே சில நெறிமுறைகளைக் காலங்காலமாகப் பின்பற்றுகின்றது; தன் சந்ததியினரையும் பின்பற்றச் செய்கின்றது. எனவே தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் என்ற உயர்ந்த நோக்கத்தில் ஒரு சமுதாயம் பின்பற்றும் வாழ்வு நெறிகள் சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுகின்றன. சிலவற்றில் ஒன்றுபடுகின்றன. எனவே மனித இனம் பின்பற்றும் இத்தகைய வாழ்வுநெறிகளே பண்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றன என்பது இங்குப் பொருத்தமானதாக அமையும்.

இந்நிலையினவே தமிழரின் பண்பாடுகள். காலங்காலமாக அவர்களிடம் காணப்படும் பண்பாடுகள் மிகப் பல. நுண்பொருள் சார்ந்தும் பருப்பொருள் சார்ந்தும் அவைக் காணப்படுகின்றன. இவற்றுள் சில மாற்றம் பெற்றுள்ளன. சில மறைந்துவிட்டுள்ளன. சில தொடருகின்றன; சில புதியன. தவிர, இவையும் இடத்திற்கு, சூழலுக்கு, பின்பற்றும் சமயத்திற்கு, குறிப்பிட்ட இனத்திற்கு எனவும் மாறி மாறி அமைகின்றன. இவ்வாறு பண்டுதொட்டுத் தமிழரின் வரலாற்று மூலங்கள் புலப்படுத்தி நிற்கும் பண்பாடு சார்ந்த சொற்கள் அனைத்தையும் தொகுத்து, வகைப்படுத்தி, வெளிப்படுத்தும் போது தமிழரின் பண்பாட்டுச் சிறப்புத் தெரியவரும்; தம் வாழ்வைச் செம்மையாக அமைத்துக்கொள்ள அவர்கள் பின்பற்ற எண்ணிய, பின்பற்றிய வாழ்வு நெறிமுறைகள் எவ்வளவு பெருமையும் தொன்மையும் பொருந்தியனவாக இருந்தன என்பதும் உலகுக்குத் தெரியவரும்.

பண்பாட்டுச் சொற்கோவை: ஒப்பனையியல்

தமிழரின் பெரும் பண்பாட்டு பரப்பினுள் எதிர்ப்படும் பண்பாட்டு சொற்கள் மிகப் பல. இவற்றை முழுவதுமாகத் தொகுத்து, வகைப்படுத்தித் தருதல் மேற்சுட்டிய நிலையில் தமிழரின் சிறப்புகள் பலவற்றையும் வெளிக்கொணரவல்லது எனினும் இது மிகப்பெரிய பணி. இந்நிலையில் ஒப்பனையியல் என்ற தலைப்பினுள் அடங்கும் "உச்சி முதல் உள்ளங்கால் வரை" தம்மை அழகுபடுத்திக் கொள்ள தமிழர் பயன்படுத்திய ஆடைகள், அணிகள், மலர்கள், வாசனைப் பொருட்கள், பிற இயற்கை பொருட்கள் சார்ந்த சொற்கள், தம்மை அழகுபடுத்திக் கொண்ட முறைகளை இயம்பும் சொற்கள் இங்குத் தொகுக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டுக் கோவையாகத் தரப்படுகின்றன.

ஒப்பனையியல் (Beautification and Cosmetics)

ஒப்பனை என்ற சொல்லிற்கு அழகூட்டுதல் / அழகாக்குதல் என்பது பொருள். இருக்கின்ற அழகை மிகைப்படுத்திக் காட்டுதல், இருக்கின்ற அழகை வெளிக் கொணருதல், அழகு இல்லாத பொருளையும் அழகாக மாற்றுதல் ஒப்பனையின் பயன்கள். அழகு என்பதற்கு மனிதர் உறுப்புகளில் அமையும் வசீகர இயல்பு; காண்பதற்கு இனிய தோற்றம்; பொருளிடத்து உள்ள காண்பதற்கு இனிய இயல்பு போன்ற பொருட்கள் சுட்டப்படுகின்றன (வரலாற்று முறை இலக்கியப் பேரகராதி, ப. 168). எனவே அழகு தோற்றச் சிறப்பைக் குறிக்க, ஒப்பனை இத்தோற்றச் சிறப்பை உருவாக்குதலை, மிகுதிப்படுத்துதலைக் குறிக்கிறது. கண்ணுக்கும் மனத்திற்கும் இன்பம் தருவது அழகு. இந்த அழகு இரசனையில் தோற்றம் பெற்றது ஒப்பனை செய்தல் கலை. இயற்கை அழகில் மனம் லயிக்கிறது. அதன் அடிப்படையில் செயற்கை அழகுபடுத்தல் தூண்டப்படுகிறது. இந்நிலையில் அழகுணர்வின் வெளிப்பாடாக அழகு செய்தலாகிய ஒப்பனைக்கலை தோற்றம் பெற்றமை புலப்படுகிறது. எங்கும் பரந்து குவிந்து நிறைந்து கிடக்கும் இயற்கை அழகை அள்ளி

அள்ளிப் பருகுவதுடன் மனித மனம் நிறைவு பெற்று விடுவதில்லை. இயற்கை அழகைக் கண்ணால் கண்டு மனத்தால் நுகர்ந்து தம் சிந்தனையில் கொணர்ந்து செயற்பாட்டின் மூலம் வெளிப்படுத்துவதும் மனித இயல்பு. இந்த இயல்பின் சிறப்பினைத் தமிழரின் ஒப்பனையியல் வரலாறு தெளிவாகத் தருகிறது.

கோவை - எல்லை

தமிழரின் ஒப்பனைக் கலை அறிவைப் புரிந்துகொள்ள நமக்குத் துணையாவன தமிழரின் வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவும் வரலாற்று மூலங்கள் அனைத்தும் தான். இந்த வரலாற்று மூலங்கள் அனைத்தினின்றும் ஒப்பனையியல் சார்ந்த செய்திகள் அனைத்தையும் தொகுத்து ஆராயும்போதே தமிழரின் ஒப்பனை வரலாற்றை முழுவதுமாகத் தெரிந்துகொள்ளல் இயலும். எனினும் இக்கோவையில் முதல்படியாகப் பண்டைத் தமிழரின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள மிகுதியாகத் துணை நிற்கும் இலக்கியங்களினின்றும் தெரியவரும் தமிழரின் ஒப்பனைச் சொற்களைக் கோவையாக்கித் தரலாம் என முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் இக்கோவை தமிழரின் 12ஆம் நூற்றாண்டு வரையிலுமான சில இலக்கியங்களினின்றும் பெறப்பட்ட ஒப்பனைச் சொற்களைத் தொகுத்தும், அவற்றை வகைப்படுத்தியும் தருகின்றது.

சொற்கள் தேர்வு

தமிழருடைய ஒப்பனையியல் சொற்களை இலக்கியங்களினின்றும் தொகுக்க முற்பட்டபோது ஒப்பனைச் சொற்களை எவ்வாறு தொகுப்பது என்ற கேள்வி முதலில் எழுந்தது. தொல்காப்பியம் தொட்டுத் தொடங்கியபோது தனிச் சொற்கள் எளிதாகத் தொகுக்கப்பட இயன்றன. தொடர்களாகவும் சில காணப்பட்டன. பண்பாடு என்பது செயல் சார்ந்ததும்கூட. தவிர, ஒப்பனையியல் என்பதும் அழகுப்படுத்தப் பயன்படும் பொருட்களும், அழகுபடுத்துதலும் இணைந்ததுதான். எனவே தொடர்களும் தொகுக்கப்பட்டன. இந்நிலையில் இக்கோவையில் தனிச்சொற்களுடன் தொடர்களும் தரப்படுகின்றன.

கோவை - அமைப்பு

தொகுக்கப்பட்ட சொற்களைப் பொருண்மை அடிப்படையில் வகைப்படுத்தித் தரும்போது அது பயன்பாட்டாளர்க்கு மிகுந்த பயன் அளிக்கும் என்ற நிலையில் இந்தக் கோவை பொருண்மை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுத் தரப்படுகிறது. உடலின் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தப் பொருள் கொண்டு எப்படியெல்லாம் தம்மை தமிழர்கள் அழகுபடுத்திக் கொண்டனர் என்பது உடனடியாகப் புலப்படும் என்ற எண்ணம் இதற்கு அடிப்படை. அடுத்து இக்கோவையை எங்கு இருந்து தொடங்குவது என்ற கேள்வி முன் நின்றது. ஒப்பனையைக் குறிக்கும் சொற்களை முதலில் சொல்லிய பின்னர், தொடர்ந்து இது பற்றிச் சிந்தித்தபோது கிடைத்த விடை 'நீர்'.

ஒப்பனைக்கு முன் செய்துகொள்வது சுத்தப்படுத்தல். இதற்குத் தேவையானது நீர். ஒப்பனைக்கு மட்டுமன்று பண்பாட்டுத் தோற்றம் பண்பாட்டு வளர்ச்சி எல்லாவற்றுக்குமே தொடக்கம் நீர் தான் என்பதும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு (குறள். 20)

என்றார் குறளாசிரியர். கடவுள் வாழ்த்துக்கு அடுத்த நிலையில் வான் சிறப்பை வைத்து அங்கு நீரின் மேன்மையையுணர்த்தியிருக்கிறார். நீரின் முக்கியத்துவத்தை இங்கு மிக அழகாக அவர் எடுத்தியம்பியிருப்பது சிந்தனைக்குரியது. புறந்தூய்மை நீரான் அமையும் என அவர் கூறுவதில் இரண்டு கருத்துகள் தெளிவாகின்றன. ஒழுகலாற்றிற்கு நீர், நீருக்கு மழை என பண்பாட்டையும் அறிவியலையும் வெகு அழகாக இணைத்துக் காட்டுகிறார். இந்நிலையில் பண்பாட்டிற்கு அடிப்படையாக அமையும் நீரே, நீர் கொண்டு சுத்தப்படுத்தி ஒப்பனைக்குத் தயார்படுத்துதலே இந்த ஒப்பனைச் சொற்கோவையின் தொடக்கமாகவும் அமைகிறது.

'ஒப்பனை' குறிக்கும் சொற்கள் முதல் பகுதியில் தரப்படுகின்றன. இரண்டாவதாக 'சுத்தப்படுத்துதல்' அமைகிறது. இப்பகுதியைத் தொடர்வது 'உச்சி முதல் உள்ளங்கால் வரை'யிலான ஒப்பனைப் பகுதி. தொடர்வது 'மேனி' ஒப்பனை. முதலில் இம்மூன்று பிரிவுகளிலும்

வகைப்படுத்தப்பட்ட சொற்கள் மேலும் ஒப்பனை சார்ந்த பொருண்மை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுத் தரப்படுகின்றன. இந்நிலையில் இக்கோவை கீழ்க்கண்டவாறு அமைகிறது.

1. ஒப்பனைச் சொற்கள்

2. தயார்ப்படுத்துதல் / சுத்தப்படுத்துதல்

2.1. நீராடுதல்

2.2. நீர் நிலைகளில் / நீராட்டிடங்களில் நீராடிய முறைகள்

2.3. நீராடல் பொருட்கள்

2.3.1. நீர்

2.3.2. பிற பொருட்கள்

2.4. ஈரம் புலர்த்துதல்

3. ஒப்பனைகள் : உச்சி முதல் உள்ளங்கால் வரை

3.1. கூந்தல்

அ. பெயர்கள்

ஆ. அழகும் சிறப்பும்

3.1.1. கூந்தல் : ஒப்பனைப் பொருட்கள்

அ. மலர்கள்

ஆ. மாலைகள்

இ. மணப்பொருட்கள்

ஈ. அணிகலன்கள்

உ. துணி

3.1.2. கூந்தல் : ஒப்பனைச் செய்முறைகள்

3.2. முகம்

3.2.1. நெற்றி

அ. மலர்கள்

ஆ. மணப்பொருட்கள்

இ. அணிகலன்கள்

ஈ. திலகம்

3.2.2. புருவம்

3.2.3. கண்

அ. அஞ்சனம்

ஆ. மை

3.2.4. மூக்கு

3.2.5. வாய்

3.2.6. இதழ்

3.2.7. கன்னம்

3.2.8. காது
அ. காது குத்துதல்
ஆ. மலர்கள்
இ. அணிகலன்கள்
3.3. கழுத்து
அ. மணப்பொருட்கள்
ஆ. மலர்மாலைகள்
இ. அணிகலன்கள்
3.4. மார்பு
அ. அல்லி
ஆ. இணர்
இ. தளிர்
ஈ. தாது
உ. மலர்
ஊ. மணப்பொருட்கள்
எ. ஆடை
ஏ. கவசம்
3.5. தோள்
அ. மணப்பொருட்கள்
ஆ. மாலைகள்
இ. அணிகலன்கள்
3.6. முதுகு
அ. மணப்பொருட்கள்
ஆ. அணிகலன்கள்
3.7. கை
அ. நிறமூட்டும் பொருட்கள்
ஆ. அணிகலன்கள்
3.8. இடை
அ. அணிகலன்கள்
3.9. அரை
அ. அணிகலன்கள்
ஆ. ஆடைகள்
3.10. தொடை
அ. அணிகலன்கள்
3.11. கால்
அ. அணிகலன்கள்

3.12. அடி

அ. நிறமூட்டும் பொருட்கள்

ஆ. கவசம்

இ. செருப்பு

3.13. கை/கால் விரல்கள்

அ. நிறமூட்டும் பொருட்கள்

ஆ. அணிகலன்கள்

3.14. கை/கால் நகம்

அ. நிறமூட்டும் பொருட்கள்

4. மேனி

அ. மணப்பொருட்கள்

ஆ. அணிகலன்கள்

இ. ஆடைகள்

ஈ. கவசம்

சொல் தருமுறை

இக்கோவையுள் "சொல் - பொருள் - இலக்கியப் பயிற்சிகள்" என பதிவுகள் தரப்படுகின்றன. இலக்கியப் பயிற்சிகள் பகுதியில், தொகுத்தபோது கிடைத்த தரவுகள் அனைத்தும் தரப்படுகின்றன. குறிப்பிட்ட சொல்/தொடர்களின் வழக்கும், பண்பாடும் பயன்பாட்டில் இருந்துள்ள காலங்களைத் தெரிந்துகொள்ள துணைபுரியும் என்ற நிலையில் இவை தரப்படுகின்றன.

பயன்

கோவையுள் தந்துள்ள சொற்கள் ஒவ்வொன்றும் பழந்தமிழர் தம் உடல் முழுவதும் ஒப்பனை செய்து கொண்டமைக்குரிய சான்றுகள்.

ஒப்பனை செய்து கொண்ட உடல் உறுப்புகளையும், ஒப்பனை செய்யப் பயன் கொண்ட பொருட்களையும் இக்கோவை மூலம் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்; ஒப்பனை செய்து கொண்ட முறைகளையும் ஓரளவிற்குப் புரிந்து கொள்ளலாம். இவற்றின் மூலம் தமிழர்தம் அழகுணர்ச்சி, கலையுணர்ச்சி வெளிப்படுகின்றன. தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப தம் ஒப்பனைகளை அவர்கள் அமைத்துக் கொண்ட முறையும் தெரியவருகிறது.

ஒப்பனையியல் தொடர்பான சொற்கள் ஓரிடத்தில் கிடைக்கின்றன. இவை நம் தமிழ் மொழியின் வளத்தினையும் வன்மையினையும் புலப்படுத்துகின்றன. இன்று, ஒப்பனையியல் தொடர்பான பொருட்களுக்கும், மொழிபெயர்ப்புக்கும் தேவைப்படும் கலைச்சொற்களை இக்கோவையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இக்கோவை ஓர் பார்வை நூலாக அமையும் நிலையில் கிடைக்கும் பயன்கள் இவை. இங்குச் சுட்டப்பட்டுள்ள இப்பயிற்சிகளைக் குறிப்பிட்ட அந்த அந்த இலக்கியங்களின் வழி மேலும் ஆராயும்போது மேலும் பல செய்திகள் விளக்கம் பெறும். குறிப்பிட்ட ஒப்பனையை யார், எப்போது, எப்படி, எதற்குச் செய்தனர் போன்ற வினாக்களுக்கு விடை கிடைக்கும். மேலும் இது தொடர்பாக இது வரையில் அறிஞர் கூறிய கருத்துகள், தொடர்பான பிற செய்திகள் போன்ற பலவற்றுடன் இணைத்து இவற்றை ஆராயும்போது தமிழரின் ஒப்பனையியல் சார்ந்த பல செய்திகள் தெளிவுபெறும். இவ்வாறு இங்கே தரப்பட்டுள்ள இச்சொற்களின் பின்புலம் ஆராயப்படும்போது,

1. ஒப்பனைக்குப் பயன்படுத்திய பொருட்களைத் தமிழர்கள் பெற்ற விதம்,
2. அப்பொருட்களின் பண்பு, பயன் குறித்த அவர்தம் அறிவியல் சிந்தனை,

3. பயன்பாட்டிற்கு ஏற்றவாறு ஒப்பனைப் பொருட்களை உருவாக்கிய விதம்,

4. அவை வெளிப்படுத்தும் அவர்களின் தொழில் சிறப்பு, தொழில் நுணுக்க அறிவு,

5. ஒப்பனைப் பொருட்களைப் பாதுகாத்த விதம்,

6. வணிகம்,

7. ஒப்பனை செய்த நேரங்கள், சூழல்கள்,

8. ஒப்பனை செய்யாத சூழல்கள்,

9. புதிய ஒப்பனைகள், ஒப்பனை மாற்றங்கள், இழப்புகள், அவற்றிற்குரிய காரணங்கள்,

10. ஒப்பனை சார்ந்த பழக்கவழக்கங்கள்,

11. நம்பிக்கைகள்,

12. ஒப்பனை சார்ந்த, ஒப்பனை அடிப்படையில் எழுந்த சமூகச் செயற்பாடுகள்

போன்ற செய்திகள் பல வெளிப்படும். இதன்மூலம் தமிழரின் ஒப்பனையியல் வரலாறும் முழுமை பெறும். பழந்தமிழரின் இந்த ஒப்பனையியல் சிந்தனைகளை, அக்காலத்திய உலகின் பிற மொழியாளர், பிற நாட்டார் ஒப்பனைச் சிந்தனைகளுடன் ஒப்பிட்டு ஆய்ந்து தமிழரின் தனிச் சிறப்புகளைப் புலப்படுத்தவும் இந்த ஆய்வு உதவும்.

தவிர, இந்த வரலாற்றில் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பும் அவர்தம் ஆழ்ந்த சிந்தனைகளும் தெளிவு பெறுகின்றன. அதே நேரத்தில் அவர்கள் வாழ்ந்து வந்த இடங்களில் கிடைத்த, தமிழகத்திற்கு அப்பால் இருந்து பெற்ற பொருட்களை அவர்கள் ஒப்பனைக்குப் பயன்படுத்தியபோது புற அழகிற்குக் கொடுத்த முக்கியத்துவத்தை உடல் நலத்திற்கும் அளித்தமையும் தெரிய வருகிறது. இது, இன்றைய தமிழர் வாழ்வியலின் சிறப்புக்கும் துணை கொள்ளப்பட வாய்ப்புண்டு என்பதையும் இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

இன்று பரந்தும், நுணுகியும் அணுகப்படும் துறைகள் பலவும் மனித வாழ்வியல் என்ற துறைக்குள் அடங்குவன. இவற்றுள் பண்பாடு, அறிவியல் என்ற இரண்டையும் ஆராயும்போது மனித வாழ்வின் ஆதாரங்களாக இவை அமையும் நிலையில் இவை ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள தொடர்பு தெளிவு பெறுகின்றது. இந்நிலையில் ஒப்பனையியல் சொற்கோவையும் பண்டைத் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பினையும் அறிவியல் வளத்தினையும் புரிந்து கொள்ளத் துணையாக அமைவதுடன் இவை இன்றைய தொழில்நுட்ப ஆய்வுகளுக்கும் மிக்கப் பயனுடையதாக அமையவல்லது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இன்று ஒப்பனை சார்ந்த கல்விகளும், ஆய்வுகளும், பயிற்சிகளும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. ஆடை, அணிகள், பிற ஒப்பனைப் பொருட்கள் பயன்பாட்டிற்கேற்றாற் போன்று உருவாக்கும் நிறுவனங்கள், கற்பிக்கும் நிறுவனங்கள் என இவை வளர்ச்சியடைந்து வருகின்றன. ஒப்பனையியல் கல்வியாளர்க்கும் ஆய்வாளர்க்கும் உற்பத்தியாளர்களுக்கும் இந்த ஒப்பனைச் சொற்கோவை பல செய்திகளைத் தரவல்லது. இன்று அவர்களின் துறை சார்பாகப் பயிலும் கருத்துகள் குறித்தெல்லாம் நம் முன்னோர் என்னென்ன எண்ணினர்? அவர்களுக்குத் தெரிந்திருந்த செய்திகள் என்னென்ன? போன்ற பல சிந்தனைகளை இவர்கள் பெற இயலும். இன்று கல்வியும் ஆய்வும் பல்வகைகளிலும் வளர்ச்சியுற்றுத் திகழினும் செயற்கைப் பொருட்களின் பயன்பாடும் வணிக நோக்கும் பயன்பாட்டாளர்க்குப் பாதிப்புகளை ஏற்படுத்துவது கண்கூடு. எனவே இதற்கு மாற்று ஏற்பாடு செய்தல் இன்றைய நிலையில் தேவைப்படும் ஒன்று. தக்க மாற்று ஏற்பாடுகளுள் ஒன்றாக அமையவல்லது நம் முன்னோரின் ஒப்பனைச் செயற்பாடுகளை அறிந்து பின்பற்றுதல். அன்று தமிழர்கள் ஒப்பனைக்காகப் பயன்கொண்ட பொருட்கள் இயற்கைப் பொருட்கள்; உருவாக்கிய பொருட்களும் இயற்கைப் பொருட்களை மூலமாகக் கொண்டு உருவாக்கியவை. இவற்றின் வரலாற்றைச் சங்க காலம் தொடங்கி நாம் காணமுடிந்தாலும், இவை அக்காலத்தில் தோற்றம் பெற்றவை அல்ல; சங்க காலத்திற்கும் பல நூறாண்டுகள் முன்பே தொடங்கப்பட்டனவாதல் வேண்டும். மேலும் ஒவ்வொரு பொருளையும் பயன்படுத்தி, அவற்றின் சிறப்பை உணர்ந்த பின்பே தொடர்ந்து அப்பொருளின் பயன்பாடு பரவலாகியிருக்க வாய்ப்புண்டு என்ற நிலையிலும் இவை சிந்திக்கத்தக்கன; இந்நிலையில் தமிழரின் வரலாற்றில் ஒப்பனை வரலாற்றின் முக்கியத்துவம் புலப்படுகிறது; முழுமையாக இக்கோவை தொகுக்கப்பட வேண்டியதன் தேவையும் உறுதிப்படுகிறது.

சுருக்க விளக்கம்

அகம்.	அகநானூறு
அடி.ந.	அடியார்க்கு நல்லார் உரை
அரும்பதம்.	அரும்பதஉரை
இன்னா.	இன்னா நாற்பது
இனியவை.	இனியவை நாற்பது
இ.மூ.ம.அ.	இந்திய மூலிகைகள் மருத்துவக் குண அகராதி
ஐங்.	ஐங்குறுநூறு
ஐந். ஐம்.	ஐந்திணை ஐம்பது
ஐந். எழு.	ஐந்திணை எழுபது
கம்ப.	கம்பராமாயணம்
கலித்.	கலித்தொகை
களவழி.	களவழி நாற்பது
கார்.நாற்.	கார் நாற்பது
குறள்.	திருக்குறள்
குறிஞ்.	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	குறுந்தொகை
கைந்.	கைந்நிலை
சிலப்.	சிலப்பதிகாரம்
சிறிய திரு.	சிறிய திருமடல்
சிறுபஞ்ச.	சிறுபஞ்சமூலம்
சிறுபாண்.	சிறுபாணாற்றுப்படை
சீவக.	சீவகசிந்தாமணி
திணை. ஐம்.	திணைமொழி ஐம்பது
திணை. நூற்.	திணைமாலை நூற்றைம்பது
திருக்கோ.	திருக்கோவையார்
திருச்சந்த.	திருச்சந்தவிருத்தம்
திருத்.	திருத்தொண்டர் புராணம்
திருநெடுந்.	திருநெடுந் தாண்டகம்
திருப்.	திருப்பாவை
திருமந்.	திருமந்திரம்
திருமுருகு.	திருமுருகாற்றுப்படை
திருவாச. அடைக்கலப்.	திருவாசகம் அடைக்கலப்பத்து
திருவாச. அச்சப்	திருவாசகம் அச்சப்பத்து
திருவாச. அதிசயப்	திருவாசகம் அதிசயப்பத்து
திருவாச. அருட்.	திருவாசகம் அருட்பத்து
திருவாச. அன்னைப்.	திருவாசகம் அன்னைப்பத்து
திருவாச. அற்புதப்	திருவாசகம் அற்புதப்பத்து
திருவாச. கீர்த்தித்.	திருவாசகம் கீர்த்தித் திருஅகவல்
திருவாச. குயிற்.	திருவாசகம் குயிற்பத்து
திருவாச. சிவ.	திருவாசகம் சிவபுராணம்
திருவாச. திருஅம்.	திருவாசகம் திருஅம்மானை
திருவாச. திருக்கோத்.	திருவாசகம் திருக்கோத்தும்பி

திருவாச. திருச்.	திருவாசகம் திருச்சதகம்
திருவாச. திருத்தோள்.	திருவாசகம் திருத்தோணோக்கம்
திருவாச. திருப்பள்ளி.	திருவாசகம் திருப்பள்ளியெழுச்சி
திருவாச. திருப்பொற்.	திருவாசகம் திருப்பொற் சுண்ணம்
திருவாச. திருப்பொன்.	திருவாசகம் திருப்பொன்னூசல்
திருவாச. திருவண்டப்.	திருவாசகம் திருவண்டப்பகுதி
திருவாச. திருவார்.	திருவாசகம் திருவார்த்தை
திருவாச. திருவெம்.	திருவாசகம் திருவெம்பாவை
திருவாச. போற்றித்.	திருவாசகம் போற்றித்திருஅகவல்
திருவாய்.	திருவாய்மொழி
திருவி.	திருவிசைப்பா
தேவா. திருஞா.	தேவாரம் திருஞானசம்பந்தர்
தேவா. திருநா.	தேவாரம் திருநாவுக்கரசர்
தேவா. சுந்தர.	தேவாரம் சுந்தரர்
தொல்.	தொல்காப்பியம்
நச்சி. உரை.	நச்சினார்க்கினியர் உரை
நற்.	நற்றிணை
ந.பொ.	நறுமணப் பொருட்கள்
நாச். திரு.	நாச்சியார் திருமொழி
நாலடி.	நாலடியார்
நான்மணி.	நான்மணிக்கடிகை
நி.சூ.	சூடாமணி நிகண்டு
நி.திவா.	திவாகர நிகண்டு
நி.பிங்.	பிங்கர நிகண்டு
நெடு.	நெடுநல்வாடை
ப.கு.வி.	பதார்த்த குண விளக்கம்
பதிற்.	பதிற்றுப்பத்து
11ஆம் திரு.	பதினொன்றாம் திருமுறை
ப.	பக்கம்
பக்.	பக்கங்கள்
பரி.	பரிபாடல்
பரி.தி.	பரிபாடல் திரட்டு
பழ. நா.	பழமொழி நானூறு
புறம்.	புறநானூறு
பெரியதிரு.	பெரிய திருமொழி
பெரியாழ்.	பெரியாழ்வார் திருமொழி
பெருங்.	பெருங்கதை
பெரும்.	பெரும்பாணாற்றுப்படை
மது.	மதுரைக்காஞ்சி
மணி.	மணிமேகலை
ம.இ.பெ.தொ.	மர இனப்பெயர்த் தொகுதி
மலை.	மலைபடுகடாம்
முல்.	முல்லைப்பாட்டு
மூ.செ.தொ.	மூலிகைச் செயல் தொகுப்பு
மூ.ம.கு.அ.	மூலிகைகள் மருத்துவ குண அகராதி
வர.த.இ.பே.	வரலாற்று முறை தமிழ் இலக்கியப் பேரகராதி

தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை

ஒப்பனையியல்

1. ஒப்பனைச் சொற்கள்

ஒப்பனையைக் குறிக்க, தமிழில் அணி தொட்டு வனைதல் வரையிலான பல சொற்கள் உண்டு. இவற்றுள் அணி, புனை என்பன தொன்று தொட்டு வழங்கிவரும் சொற்கள். ஒப்பனை, அலங்காரம் என்பன அழகு செய்தல் என்ற பொருளில் இடைக்காலத்துப் பயிற்சிகளில் காணக் கிடைக்கின்றன; இச்சொற்களே இன்றளவும் செல்வாக்குடன் திகழ்கின்றன.

அணி	அழகுசெய்தல்	"நெருநையின் இன்று நன்று என்னை **அணி** அணைமென் தோளாய், செய்யாத சொல்லிச் சினவுவது ஈங்கு எவன்", கலித். 91 : 4 - 5
ஈரணி	நீராடும்போது செய்து கொள்ளும் அணி	"ஐயவி அணிந்த நெய்யாட்டு **ஈரணிப்**, பசு நெய் கூர்ந்த மென்மை யாக்கைச், சீர் கெழு மடந்தை", நற். 40 : 7 - 9
தங்குலக்கோதிய தகைசால் அணி	குலத்திற்கு என்று சொல்லப்பட்ட அலங்காரம்	"**தங்குலக்கு ஓதிய தகைசால் அணியினர்**", சிலப். 26 : 107
நாளணி	நாளொப்பனை	"நறுமலர்க் கூந்தல் **நாளணி** பெறுக என", சிலப். 27: 216
நீராட்டணி	நீராடும்போது செய்து கொள்ளும் ஒப்பனை	"திறல் கெழு வேந்தன் பெரு **நீராட்டணி** பெட்கும் பொழுது என", பெருங். 1 : 39 : 3 - 4
மணவணி	திருமண ஒப்பனை	"ஒரு பெரு நாளால், **மணவணி** காண மகிழ்ந்தனர்", சிலப். 1 : 41 - 42
விழவணி	விழாக்காலத்தில் செய்து கொள்ளும் ஒப்பனை	"வாலிழை மகளிர் **விழவணி** கூட்டும், மாலையோ அறிவேன் ", குறுந். 386 : 3 - 4
அணிகூட்டுதல்	அழகுபடுத்துதல்	"வால் இழை மகளிர் விழவு **அணிகூட்டும்** மாலையோ அறிவேன்", குறுந். 386 : 3 - 4
அணிதல்	அழகுசெய்தல்	"மண்ணல், கை செய்தல், பொற்பு, அலங்கரித்தல், புனைதல், மிலைதல், வேய்தல், **அணிதல்**, வனைதல், ஒப்பனை மாற்றம் ஆகும்," நிக.திவா.1567; "புனைதலும் மண்ணலும் பொற்புறுத்துதலும் **அணிதலும்** கைசெய்தலும் அலங்கரித்தல்", நிக.பிங். 1954; "தாழ் கதுப்பு **அணிகுவர்** காதலர்", கலித். 4 : 11; "சில் பொறி **அணிந்த** பல்காழ் அல்குல்," நற். 133 : 4; "முந்துறல் விருப்பொடு முறை மறந்து **அணிந்தவர்**," பரி. 20 : 22; "கோலயானை நால் இரண்டு மிகையா ஆயிரம் **அணிந்தவை**", பெருங். 2 : 2 : 203 - 204; "புலம்பு **அணிந்தன்று** அவர் மணந்த தோளே", குறுந். 50 : 5; "துறை **அணிந்தன்று** அவர் ஊரே", குறுந்.50 : 3; "பசப்பு **அணிந்தனவால்** மகிழ்ந என் கண்ணே", ஐங். 45 : 4; "வனப்பு உறக் கொள்வன நாடி **அணிந்தனள்**", கலித். 82 : 19; "அரிவையை அரம்பை நாண **அணிந்தனன்** அனங்கன் அன்னான்", சீவக. 674 : 4; "கோதையும் சாந்தும் கொண்டு **அணிந்தனை** என", பெருங். 3 : 10: 172; "**அணிந்து** அணிந்து ஆர்வ நெஞ்சமொடு

		ஆய்நலன் அளைஇ'', அகம். 35 : 11 - 12; "சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை", கலித். 9 : 15; "உதயண குமரனைத் தாங்கரும் தோழர் தாம் புனைந்து அணிய'', பெருங். 3 : 22 : 240 - 241; "புதுவதின் இயன்ற அணியன் இத் தெரு இறப்போன்", அகம். 66 : 8 - 9; "துணைமுலை சாந்து கொண்டு அணியாள்", பெரிய திரு. 2 : 7 : 2 : 1 - 2
அணி நிலை	அழகு நிலை	"அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன'', தொல். 1114: 5
அணி நிற்றல்	அலங்கரித்து நிற்றல்	"நேர் இதழ் நிரை நிரை நெறி வெறிக் கோதையர் அணி நிற்ப", கலித். 105 : 26
அணி பெறல்	ஒப்பனைகளைச் செய்தல்	"மணி மாராட்டத்து அணிபெற வழுத்திக்", பெருங். 1: 57 : 100
அணியல்	அழகு செய்தல்	"கறை மிடறு அணியலும் அணிந்தன்று", புறம். 1 : 5
அலங்கரித்தல்	ஒப்பனை செய்தல்	"அருந்தகைய சுண்ண வெண்ணீறு அலங்கரித் தான்", தேவா. திருஞா. 1 : 12 : 9 : 2
அலங்காரம்	அழகு	"சீர் அலங்காரச் சித்திர முடிமிசை", பெருங். 3: 24: 185; "அலங்காரம் அறியாள் இவள் என", பெருங். 4 : 13 : 57
சீர் அலங்காரம்	சிறப்பான ஒப்பனை	"சீரலங்காரச் சித்திர முடிமிசைத் தாரணி கோதை தாழ்ந்து புறத்தசைய", பெருங். 3 : 24 : 185 - 186
அழகினுக்கு அழகு செய்தல்	அழகுக்கு மேலும் அழகு செய்வித்தல்	"உருவினை மறைப்பது ஓரார், அமிழ்தினைச் சுவை செய்தென்ன, அழகினுக்கு அழகு செய்தார்,'' கம்ப. 1119 : 4 - 6
எழுதுதல்	வரைதல்; ஒப்பனை செய்தல்	"இளமுலை மேல், தொய்யில் எழுதவும் வல்லன்'', கலித். 143 : 32 - 33; "கொங்கைமுன்றிற் குங்குமம் எழுதாள்,'' சிலப். 4 : 49; "குங்குமம் எழுதிய கொங்கை முன்றில்", சிலப். 22 : 124; "எழுது எழில் உண்கண்பாவை'', நற். 177 : 9; "மென்முலை மேல் தொய்யில் எழுதுகோ, கலித். 111 : 6 - 7; "நல்லேம் எனும் கிளவி வல்லோன், எழுதி அன்ன காண்தகு வனப்பின் ஐயள்", நற். 146 : 8 - 10
ஏர்	அலங்காரம்	"ஏரும் வனப்பும் எழிலும் இராமமும்....., அலங்காரமும் ஆகும்", நிக.பிங். 1941; "துணை மலர்ப் பொற்கொடி துலங்கு நுசுப்பினை நிலைபெற விசிப்பது போல ஏர்ப்ப மேற்பாற்பிறையென விளங்க அமைந்த'' பெருங். 3: 22 : 218 - 220
ஏர்படுதல்	அழகு உண்டாதல்	"ஏந்து பூங்கோதைகள் திருத்தி ஏர்படச் சாந்து கொண்டு இளமுலை எழுதித் தையல்தன்", சீவக. 1992: 1 : 2
ஒப்பனை	செயற்கையாக அழகு செய்தல்	"ஒப்பனையைப் பாவித்து இவ்வுலக மெல்லாம்", தேவா. திருநா. 6 : 27 : 5 : 3; "உச்சிக்கு ஏற்ப ஒப்பனை கொளீஇ", பெருங். 2 : 15 : 140; "ஒப்பனை புரிபோதும் ஊடலின் உகுபோதும்", கம்ப. 1189 : 1 - 2
கை	ஒப்பனை	"அணியே பொற்பு கை அலங்காரம், தெரியின் ஒப்பனையும் சிங்காரம் ஆகும்", நிக.பிங். 1955
கைஇ	கோலம் செய்து	"மயில் இயலோரும் மடமொழி யோரும் கை இ", மது. 418 - 419
கை செய்தல்	ஒப்பனை செய்தல்	"மண்ணல் கை செய்தல் ..... அணிதல் ..... ஒப்பனை மாற்றம் ஆகும்", நிக. திவா. 1567; "கண்ணி வேய்ந்து கருங்குழல் கை செய்து", சீவக. 1333 : 1

கை புனைந்து இயற்றாமை	ஒப்பனை செய்யாமை	"கை புனைந்து இயற்றாத கவின் பெறு வனப்பின்", திருமுருகு. 17
கைவினை	ஒப்பனைத் தொழில்	"தாமம் துயல்வரும் காமர் கைவினை", பெருங். 2 : 7 : 2; ''திருநுதற்கு ஏற்ற பரிசரக் கைவினை நீடிய பின்றைக் கூடாது தாங்கும்" பெருங். 2 : 7 : 34 - 35
கோடித்தல்	ஒப்பனை செய்தல்	"தலையொடு தலைவர இலையடுக் கிரீஇக் கச்சுவாய்க் கோடித்து முத்துப்புரி நாற்றி", பெருங். 2: 2: 111-112
கோலம்	அழகு	"கோல உருவொடு குன்றிடைப் போந்த", பெருங். 1: 55: 146; "குலப்பிறப்பு என்னும் கையால் கோலப் பாசம் கொளுத்தி", சீவக. 711: 2
இரவிற்கோர் கோலம் கொள்ளுதல்	இரவு ஒப்பனை செய்துகொள்ளல்	"மாலை மணிவிளக்கங்காட்டி இரவிற்கு ஓர்கோலம் கொடி இடையார் தாம்கொள்ள," சிலப். 9 : 3 - 4
எழுதுவரிக் கோலம்	மார்பு முழுவதும் செய்யப்படும் ஒப்பனை	"எழுதுவரிக் கோலம் முழு மெயும் உறீஇ", சிலப். 5 : 226
உள்வரிக்கோலம்	மாறுவேடக் கோலம்	''உள்வரிக் கோலத்து உறு துணை தேடி'', சிலப். 5 : 216
உருவக்கோலம்	அழகிய ஒப்பனை	"ஓவியருட்கு உருவக் கோலம் தேவியைப் புனைந்த பின்", பெருங். 4 : 13 : 54 - 55
கொண்ட கோலம்	ஒப்பனை செய்து கொண்ட கோலம்	"வளமரந் துறுமிய விளமரக் காவினுட் கொண்ட கோலமொடு குரவை பிணைஇ'', பெருங். 1 : 46 : 288 - 289
கொற்றவை கோலம்	கொற்றவைப் போன்ற கோலம்	"நெற்றி விழியா நிறைத் திலகம் இட்டாளே கொற்றவை கோலம் கொண்டு", பரி. 11: 99 - 100
செண்ணக் கோலம்	ஒப்பனை செய்யப் பட்ட அழகு	"விண்ணோர் விழையுஞ் செண்ணக்கோலத்துக் கண்ணிய செலவிற் கஞ்சிகை வையம்", பெருங். 1: 56 : 193 - 194
செய்யாக் கோலம்	பிறவி அழகு; புனையாத அழகு; இயற்கை அழகு	"செய்யாக் கோலமொடு வந்தீர்க்கு", சிலப். 16 : 11
தாழ்தரு கோலம்	பொருந்திய அலங்காரம்	"தாழ்தரு கோலத்து தமரொடு சிறந்து", சிலப். 26: 122
நற்பெருங் கோலம்	சிறந்த ஒப்பனை	"மணிநீர் முகம் சேர்த்தி நற்பெருங் கோலம் மிகப் புனைந்து", 11ஆம் திரு. 300 : 65 - 66
நாணுக் கோலம்	நாணுதற்கு ஏதுவான ஒப்பனை	"அருங்கலந் துதைஇப் பெருங்கலம் எல்லாம் பேணி அணிந்த நாணுக் கோலத்துப்'', பெருங். 1 : 46 : 257 - 258
நீர்க்கோலம்	நீராடச் செல்லுதலுக் குரிய கோலம்	"நறுநீர்க் கோலத்துக் கதிர்நலம் புனைஇயர்", பெருங். 1 : 38 : 205
பூண்தக்க கோலம்	தக்க ஒப்பனை	"பூண்தக்க கோலம் வல்லை புனைந்தனை'', கம்ப. 9990 : 3
வார்கொள் கோலம்	கச்சணி கோலம்	''வார் கொள் கோலம் முலைமங்கை'', தேவா. திருஞா. 2 : 116 : 5 : 1
கோலம் எய்துதல்	அழகு படுத்தல்	"குணத்து முறை வகையிற் கோல மெய்தி", பெருங். 1: 35 : 79
கோலம் குயிலல்	கோலம் கொள்ளுதல்	"கோலம் குயின்ற நீலச் சார்வு அயல்", பெருங். 2: 6: 122
கோலம் குயிற்றுதல்	ஒப்பனை செய்தல்	"கோலங் குயிற்றிக் கோடணை யியற்றிக்", பெருங். 1: 47 : 160; "கொண்டோர் மருளக் கோலங் குயிற்றி

		அம்பு வாயணிந்த பெருந்தண் சக்கரம்'', பெருங். 1 : 41 : 8 - 9; "கூடிக் கோலம் குயிற்றிப் படங்களைந்து", சீவக. 948 : 3
கோலம் கொள்ளுதல்	ஒப்பனை செய்து கொள்ளுதல்	"கோலங் கொண்ட மாதவி", சிலப். 4 : 34, "கோல் வளை மாதே கோலங் கொள்ளாய்," சிலப். 26 : 116; ''உதயண குமரன் வதுவைக்கு அணிந்த கோலம் கொண்ட கோல்வளை மகளிருள்", பெருங். 2 : 7 : 51 - 52; "கோலம் கொண்ட குறுநெறிக் கூழை", பெருங். 2 : 15 : 91
கோலங் கோடலில் கற்றுத்துறை போதல்	ஒப்பனைக் கல்வியில் சிறத்தல்	"கோலங் கோடலும் கோவையின் கோப்பும். . . கற்றுத் துறை போகிய பொற்றொடி நங்கை,'' மணி. 2 : 28 - 32
கோலச் செய்கை	ஒப்பனை	''கோலச் செய்கை வாலணிப் பொலிந்த", பெருங். 2 : 3 : 143
கோலம் செய்தல்	அழகு செய்தல்	"கோலம் செய்து கொண்டு அகம் புக்கு", பெருங். 2: 6 : 183
கோலம் புனைதல்	அழகு செய்தல்	''கோலம் புனை பெண் வண்ணமகள் என்ப'', நிக.பிங். 282; ''நறுநீர்க் கோலத்துக் கதிர்நலம் புனைஇயர் நீடகத்து இருந்த வாசவதத்தையை'', பெருங். 1 : 38 : 205 - 206; "காணவரும் கை வண்ணம் கவின் ஓங்கும்படி எழுதி, வாள் நிலவு மணிக்கடைக்கண் மங்கலக் கோலம் புனைந்து," திருத். 3076 : 5 - 8; "குங்குமம் எழுதி கோலம் புனைஇ", பெருங். 4: 13 : 104
கோலம் வீற்றிருத்தல்	அழகாகக் காணப்படல்	"குங்குமக் குவட்டின் வீங்கிக் கோலம் வீற்றிருந்த தோளாய்," சீவக. 955 : 1
கோலவித்தகம்	ஒப்பனைச் சிறப்பு	''கோல வித்தகம் குயின்ற நுட்பத்துத், தோடும் கடிப்பும் துயல் வருகாதினர்", பெருங். 2: 7 : 37 - 38
கோலவித்தகர்	ஒப்பனை செய்பவர்	''எண்ணிய நெஞ்சமொடு நுண்வினைப் பொலிந்த, கோலவித்தகர் வாலணி புனைய, ஆராக் காதல் அவந்திகை தன்னையும்'', பெருங். 2 : 5 : 159 - 161
சிங்காரம்	ஒப்பனை	''அணியே பொற்பு கை அலங்காரம் தெரியின், ஒப்பனையும் சிங்காரம் ஆகும்,"நிக.பிங். 1955
சூடுதல்	தலையில் மலர் மாலைகள் முதலியன வற்றைச் சூடி அழகுபடுத்துதல்	"உண்ணஉள; பூசஉள; சூடஉள; ஒன்றோ? வண்ணமணி ஆடை உள; மற்றும் உள பெற்றேன்'', கம்ப. 4584 : 1 - 4
சென்	அழகு செய்தல்	"கழுநீர்ச் சென் இயல் சிறுபுறம்", அகம். 59 : 14
சென்னம்	ஒப்பனை	''வண்ணம் பூமுடி வாசவதத்தையைச் சென்னக் காஞ்சனை செவ்விதின் தழீஇ," பெருங். 2 : 3 : 74 - 75
செய்வினை	அழகு செய்தல்	"ஐவகை பாராட்டினாய்; மற்றுஎம் கூந்தல் செய்வினை பாராட்டினையோ ஐய!," கலித். 22 : 13 - 14
தகையமைசாலை	ஒப்பனை செய்து கொள்ளும் இடம்	"தண்ணீர்ப் பந்தரும் தகையமை சாலையும்", பெருங். 3 : 4 : 17
தையல்	ஒப்பனை	"தையல் மகளிர் ஈர் அணி புலர்த்தர", பரி. 11 : 86
நலந்துறை போதல்	அழகுக்கு மேலும் அழகு செய்தல்	"கலன்பிற அணிந்து காண்போர் தண்டா, நலந்துறை போகிய நனிநாண் ஒடுக்கத்து", பெருங். 1: 33: 114-115
நீர்மை	கோலம்	"ஊழிற்றாக நின் செய்கை விழவில், கோடியர் நீர்மை போல", புறம். 29 : 22 - 23

பண்ணுதல்	ஒப்பனை செய்தல்	"செயிர் கொண்மன்னர் செருவிடத் தல்லது, உயிர் நடுக் குறாஅ வேழம் **பண்ணி**", பெருங். 1 : 38 : 120 - 121; "இரத்தினக் குப்பையு மிலங்கொளிப் பவழமும் இன்னவை பிறவும் பன்முறை **பண்ணித்** தொல்லோர் வகுத்த நூற் றுறை முறை போகிய", பெருங். 2 : 4 : 69 - 71; "பாவையைத் தழீஇப் **பண்ணுப்**பிடி ஏற்றி", பெருங். 1 : 54 : 107
பண்ணுக	அலங்கரிக்க	"**பண்ணுக** பசும் பொற்றேரும், படு மதக் களிறும் மாவும்", சீவக. 265 : 2
பண்ணுவனர்	கோலம் செய்வோர்	"கட்டு அமை ஊர்தியும் பண் இரும் பிடியும் **பண்ணு வனர்**", பெருங். 1 : 37 : 270 - 271
பண்ணுறுத்தல்	அலங்கரித்தல், ஒப்பனை செய்யப்படுதல்	"அண்ணல் யானையும் **பண்ணுறு**த்து", பெருங். 1 : 37: 45; "மண்ணுறு முரசு இனம் மழையின் ஆர்ப்புற, **பண்ணுறு** படர் சினப் பருமயானையின்", கம்ப. 1314 : 1 - 2
பண் அமைதல்	ஒப்பனை செய்யப் படுதல்	"புண்ணியப் புறநடைப் **பண்ணமை** இருக்கையன்", பெருங். 2 : 3 : 78
பரிசரக் கைவினை	ஒப்பனைத் தொழில்	"திருநுதற்கு ஏற்ற **பரிசரக் கைவினை**, நீடிய பின்றைக் கூடாது தாங்கும்", பெருங். 2 : 7 : 34 - 35
பரிசரம்	சேடியர் செய்யும் ஒப்பனைத் தொழில்	"வத்தவ மகடூஉச் சித்திரத்து இயற்றிய, பல்வினைப் **பரிசரத்** தெல்லையாகி", பெருங். 2 : 19 : 79 - 80
புனை	ஒப்பனை	"பொலிவும் அழகும் ஒப்பனையும் **புனை** எனல்", நிக.பிங். 3873; "பொன்செய்**புனை** இழை கட்டிய மகளிர்", குறுந். 21 : 2
புனைதல்	அலங்கரித்தல்	"நைவளம் மிகுசாயல் நங்கையைப் **புனைகின்றார்**", சீவக. 2435 : 4; "படுதிரைப்பரப்பிற் குடைவனராடி அணிதலும் **புனைதலும்** முனிவிலராகிக்", பெருங். 3 : 3 : 53 - 57; "புரிந்ததுவும் உமையாள் ஓர் பாகம் **புனைதலே**, தேவா. திருஞா. 2 : 76 : 6 : 4; "பொன்னினும் மணியினும் **புனைந்தன** வாயினும்," சிலப். 5 : 105; "போந்தை அம் தோட்டிற் **புனைந்தனர்** தொடுத்து," புறம். 265 : 3; "கடி நகர் **புனைந்து** கடவுள் பேணி", அகம்.136 : 6; "தோடு அவிழ் கமழ் கண்ணி தையுபு **புனைவார்** கண்," கலித். 28 : 3
புனைநலம்	ஒப்பனை	"பழுதற அழகொடு **புனைநலம்** புனையா," பெருங். 4: 13 : 103
புனைநெறி	அழகு செய்யும் முறை	"**புனைநெறி** பாரெனப் புனைவோன்", பெருங். 4: 13: 58
புனைந்து பூணுதல்	அணிந்து ஒப்பனை செய்தல்	"அறிவிலங்கு மனத்தானை அறிவார்க்கன்றி, அறியா தார் தந்திறத் தொன்றறியா தானைப், பொறியிலங்கு வாளரவம் **புனைந்து பூண்ட** புண்ணியனைப் பொருதிரை," தேவா. திருநா. 6 : 91 : 9 : 1 - 4
புனையல்	அழகு படுத்தாமை	"பொம்மல் ஓதியும் **புனையல்**," குறுந். 191 : 6
புனையலுறுதல்	அணிதல்	"புயல் பொரு கூந்தல் பாரக் கற்றையின் **புனையலுற் றார்**", கம்ப. 8834 : 4; "பொன் அரிமாலை கொண்டு புரி குழல் **புனையலுற்றாள்**," கம்ப. 977 : 7 - 8
புனையாமை	புனையா; அழகு படுத்தப்படாத	"**புனையா** ஓவியம் கடுப்ப புனைவில் தளிரேர் மேனித் தாயச் சுணங்கின்", நெடு. 147-148 "மனையகம் புகுந்த மணிமேகலைதான், **புனையா** ஓவியம் போல நிற்றலும்,"மணி. 16 : 130 - 131
புனைவினை	ஒப்பனை செய்தல்	"**புனைவினை** நல்இல் புள்ளும் பாங்கின," அகம். 141: 3

புனைவோன்	அலங்கரிப்பவன்	"பழித்தியான் புனை நெறிப் பார் எனப் **புனைவோன்**", பெருங். 4 : 13 : 58
பூசுதல்	மேனியில் பூசி அழகு செய்தல்	"உண்ணஉள; **பூசஉள**; சூடஉள; ஒன்றோ? வண்ண மணி ஆடைஉள; மற்றும் உள பெற்றேன்;", கம்ப. 4584 : 1 - 4
பூணல்	அலங்கரித்தல்	"**பூணல்** செய்து அடிபோற்றுமின்", தேவா. திருஞா. 2: 109 : 10 : 3
பொற்பு	அழகு	"**பொற்பே** பொலிவு", தொல். 818
பொற்புறுத்துதல்	அலங்கரித்தல்	"புனைதலும் மண்ணலும் **பொற்புறுத்தலும்** அணிதலும் கை செய்தலும் அலங்கரித்தல்," நிக.பிங். 1954
மண்ணல்	ஒப்பனை செய்தல்	"**மண்ணல்** கை செய்தல். . . . அணிதல் ஒப்பனை மாற்றம் ஆகும்", நிக. திவா. 1567
மண்ணா	ஒப்பனை செய்யப்படாத	"பின்னொடு முடித்த **மண்ணா** முச்சி," அகம். 73 : 1
மல்வினை நகர்	அலங்காரம் செய்யும் இடம்	"வல்லவர் வகுத்த **மல்வினை நகர்** வயிற் பொன்மனை பொலியப் போற்றுவனர் இரீஇ," பெருங். 2: 5: 167-168
மாத்தொழில் கழித்தல்	ஒப்பனைத் தொழில் களைச் செய்து முடித்தல்	"மலரினும் புகையினும் **மாத்தொழில் கழிப்பி**", பெருங். 4 : 16 : 42
யாப்புறு மண்டபம்	கோலம் செய்யும் இடம்	"வெய்யோன் கதிரொளி வீசு வளி நுழையா இரும்பணி பெற்ற அரும்பணைப் படுகால் மேற்புறம் அமைந்த விளங்குமணி வேயுள் **யாப்புறு மண்டபத்து** ஆசனத்து இரீஇக்," பெருங். 2 : 5 : 133-136
வடிவு காணுதல்	கோலம் செய்து கொள்ளுதல்	"வித்தக வினைஞர் தம்முடன் வந்து, **வடிவுகண்டிடும்** வத்தவர் பெருமகன்", பெருங். 2 : 5 : 152 - 153
வண்ண மகடூஉ	ஒப்பனை செய்யும் பணிப்பெண்	"**வண்ண மகடூஉ** வல்லவா வகுத்த, இரதப் பஃகாழ் பரவை யல்குலர்," பெருங். 1 : 41 : 62 - 63
வண்ண மகள்	ஒப்பனை செய்யும் பெண்	"தன்னமர் தேவிக்கு ஈத்த பின்றை, **வண்ண மகளாய்** இருந்தனன்", பெருங். 4 : 13 : 44 - 45; "வாசவதத் தைக்கும் **வண்ண மகளாய்** நாளும் புனைகை என", பெருங். 4 : 13 : 50 - 51
வண்ண மகளிர்	ஒப்பனை செய்யும் மகளிர்	"**வண்ண** மகளிர் சுண்ணமொடு சொரியும்", பெருங்.1: 38: 137; "கண்ணி சூட்டிக் கடை மணைபூட்டி, **வண்ண மகளிர்** கண்ணுறக் கவினிய. . .", பெருங். 1: 56: 196 - 197; "திருமா தேவிக்குத் தெரிவனர் அமைத்த, **வண்ண மகளி**ரொடு வையமுந் துறீஇ", பெருங்.1: 57 : 18 - 19; "**வண்ண மகளிர்** சொரிவனர் ஆட்டித் தூசு விரித்து உடீஇ", பெருங்.1: 57 : 96 - 97; "**வண்ண மகளிரும்** மைந்தரும் மயங்கி மண்ணு நீராட்டின் மரபுளிக் கழிந்த பின்", பெருங். 2: 5 : 120 - 121; "**வண்ண மகளிர்** வழி நின்றேத்திச்", பெருங். 3: 5 : 80
வனைதல்	ஒப்பனை செய்தல்	"மண்ணல் பொற்பு அலங்கரித்தல் **வனைதல்** ஒப்பனை மாற்றம் ஆகும்", நிக.திவா. 1567; "**வனையலாம்** படித்தலா வடிவிற்கு எல்லையாகிய", சீவக. 709 : 2
வனைபவர்	ஒப்பனை செய்பவர்	"**வனைபவர்** இல்லை அன்றே, வனத்துள் நாம் வந்த பின்னர்", கம்ப. 4503 : 1 - 2

2. தயார்ப்படுத்துதல் / சுத்தப்படுத்துதல்

2.1. நீராடுதல்

உடம்பைச் சுத்தப்படுத்துதலுக்கு முதல் துணையாக அமைவது நீர். ஒப்பனை செய்வதற்கு முன் தயார்ப்படுத்துதலாகிய சுத்தப்படுத்துதலுக்கும் நீரே துணையாக அமைகிறது. இதனைக் குறளாசிரியரின் 'புறந்தூய்மை நீரான் அமையும்' என்பதும் காட்டுகிறது. சுத்தப்படுத்துதலில் தொடங்காத ஒப்பனை முழுமையான ஒப்பனையாகாது. இத்தகைய சுத்தப்படுத்துதல் என்ற நிலையில் தொடங்கப்பெற்ற நீராடல் குறித்துப் பல சொற்கள் தமிழரிடம் வழங்கப்பட்டுள்ளன. இவை தமிழர் நீராடிய விதங்களைத் தெரிவிக்கின்றன; நீராடல் தமிழரிடம் பெற்ற முக்கியத்துவத்தையும் இச்சொற்கள் தெளிவுபடுத்துகின்றன. நீராடல் என்ற சொல் இன்று வரையிலும் தமிழருக்குத் தெரிந்த சொல்லாக இருப்பினும், இன்று குளித்தல் என்பதே பரவலாக வழக்கில் காணப்படுகிறது.

ஆட்டு	நீராட்டு	"கூந்தல் நலம் பெற ஆட்டி", சிலப்.6 : 89; "கங்கைப் பேர் யாற்றுக் கடும் புனல், நீத்தம் எம் கோமகளை ஆட்டிய அந்நாள்," சிலப். 25 : 160 - 161; "நல்லபடி சேர்ந்த பால் கொண்டாங்கு ஆட்டிட", தேவா. திருஞா. 3 : 54 : 7 : 1 - 2
நீராட்டல்	நீரில் ஆட்டுவித்தல்	"மண்ணக மடந்தையை மண்ணு நீராட்டி", பெருங். 1 : 49 : 89
நீராடாமை	குளிக்காமை	"நல் நுதலார் தோய்ந்த வரைமார்பன், நீராடாது என்னையும் தோய வரும்", நாலடி. 39 : 7
நீராட்டயருதல்	நீராட்டுதல்	"நுங்கட் காகென நுனித்தவை கூறி, நேரிழை மகளிரை நீராட்டயரும்", பெருங். 1 : 41 : 104 - 105
நீராட்டயர்தல்	நீராடுதல்	"ஆராக் காதலொடு அணிபாராட்டி, நீராட்டு அயர்ந்து பல்கலன் அணிந்து, சீரார் செல்வமொடு செவ்வி கொடீஇத்", பெருங். 5 : 7 : 72 - 74
ஆடல்	நீராடல்	"இடைநெறித் தாக்குற்றது ஏய்ப்ப அடல் மதுரை, ஆடற்கு நீர் அமைந்த துயாறு", பரி. 11 : 48 - 49; "விரைபு விரைபு மிகை மிகை ஈண்டி, ஆடல்தலைத் தலை சிறப்ப, கூடல், உரைதர வந்தன்று, வையை நீர், வையைக் கரைதர வந்தன்று", பரி. 12 : 30 - 33; "பண்ணிய ஈகைப் பயன் கொள்வான் ஆடலால்", பரி.16 : 51
ஆடு	நீராடு	"காவிரிப் பலர் ஆடு பெருந்துறை மருதொடு, பிணித்த ஏந்து கோட்டு யானை", குறுந். 258 : 2 - 4; "ஓங்கு வரை இழிதரும் வீங்கு பெயல்நீத்தம் . . . . பெருமலை நாடன் மார்பு புணையாக ஆடுகம் வம்மோ", அகம். 312 : 4 - 8; "குறுநுரை சுமந்து நறுமலர் உந்தி, பொங்கி வரு புதுநீர் நெஞ்சு உண ஆடுகம்," நற். 68 : 4 - 5; "நல்லெண்ணெய் விழுது பெய்து ஆடுதிர் நாள் தொறும்", தேவா. திருஞா. 3 : 96 : 1; "மருது உயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந் துறைப் பெண்டிரொடு ஆடும் என்ப", ஐங். 33 : 2 - 3; "தண்புனல் ஆடுநர் ஆர்ப்பொடு மயங்கி, வெம்போர் மள்ளர் தெண்கிணை கிறங்க", பதிற். 90 : 43 - 44; "காமர் கடும் புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்", கலித். 39 : 1; "ஆடுவார் நெஞ்சத்து அலர்ந்து அமைந்த காமம், வாடற்க வையை நினக்கு", பரி. 6 : 105 - 106; "இத்துறைமேல் எத்துறை ஆயினும்

		ஆடன்மின் யாவரும் ஆடுவீர் உளர் எனின்", பெருங். 1 : 40 : 370 - 71
ஆடுதல்	நீராடுதல்	"பகலே பாடு இன் அருவி ஆடுதல் இனிதே", குறுந். 353 : 2 - 3; "அரிலறல் அகவயின் ஆடுதல் ஆனா," பெருங். 1 : 58 : 99; "யாறுங் குளனும் காவும் ஆடி", தொல். 1137 : 1; "பொரு இல் ஆயமோடு அருவி நீர் ஆடி, நீர் அலைச் சிவந்த பேர் அமர் மழைக்கண்", நற். 44 : 1- 2; "அம்கண் அறைய அகல்வாய்ப்பைஞ்சுனை உண்கண் ஒப்பின் நீலம் அடைச்சி, நீர் அலைக் கலைஇய கண்ணிச், சாரல் நாடனொடு ஆடிய நாளே", நற். 357 : 7 - 10; "புதுவது வந்த காவிரிக் கோடு தோய் மலிர் நிறை ஆடியோரே, அகம். 166 : 14 - 15; "வெதிர் புனை தட்டையேன் மலர்பூக் கொய்து, சுனை பாய்ந்து ஆடிற்றும் இலன்", நற். 147 : 8-9; "நீர் நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்", குறுந். 354 : 1; "மாறாத் தானை மன்னனை வழுத்தி, ஆறாக் காதலொடு ஆடினர் ஒருசார்", பெருங். 2 : 12 : 65 - 66; "தண்புனலாடி தன் நலம் மேம்பட்டனள், ஒண்தொடி மடவரல், நின்னோடு", ஐங். 76 : 2 - 3; "ஓஓ புனல் ஆடினாய் எனவும் கேட்டேன்", கலித். 98 : 13; "பண்டு தன் பாதத்தின் அம் கையின் தரும் கங்கையின் ஆடினான்", கம்ப. 1941 : 3 - 4 ; "ஏந்து எழில் ஆகத்துப் பூந்தார் குழைய நெருநல் ஆடினை புனலே", அகம். 6 : 10 - 11
நீடுநீர் ஆடுதல்	மிக்க நீரில் நீராடுதல்	"ஆடினான், அன்னம் ஆய்அரு மறைகள் பாடினான், நீடுநீர்; முன்னை நூல்நெறி. . . ", கம்ப. 3745 : 1 - 3
நீராடப் போதல்	நீராடச் செல்லுதல்	"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ", திருப். 1 : 1 - 2
நீராடல்	நீராடுதல்	"இன்ன பண்பின் நின் தைந்நீராடல்", பரி. 11 : 134; "மனத்தது மாசாக மாண்டார் நீராடி மறைந் தொழுகும் மாந்தர் பலர்", குறள். 278; "நண்ணல் அரிய பிரானே நாரணா நீராட வருவாய்", பெரியதிரு. 2 : 4 : 1
அப்பு நீராடுதல்	மூழ்கிக் குளித்தல்	"அப்பு நீராடுவான்போல் அருக்கனும் அத்தம் சேர்ந்தான்", கம்ப. 6763 : 4
அபிடேகம் செய்தல்	நீராட்டுதல்	"எங்கள் நாயகனை வெவ்வேறு எதிர்ந்து அபிடேகம் செய்தார்", கம்ப. 10322 : 4
கழூஉதல்	சுத்தப்படுத்துதல்	"மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇக்", நற். 42 : 8; "கருங்குழல் கழீஇய கலவை நீரும்", மணி. 28 : 6
தெண்ணீர் கொண்டு கண் கழீஇ	தெளிந்த நீர் கொண்டு கண்ணைச் சுத்தம் செய்தல்	"புலர்ந்த காலைப் பூங்கழற் குருசில், மலர்ந்த பொய் கையுண் மணிநிறத் தெண்ணீர், கூட்டுபு கொண்டு செந்தாமரைக் கண் கழீஇ", பெருங். 1 : 55 : 1 - 7
பண்கெழு விரலிற் கண்கழூஉச் செய்தல்	கண்ணைச் சுத்தம் செய்தல்	"மறுத்தவற் காணுங் குறிப்பு மனத் தடக்கி, பண்கெழு விரலிற் கண்கழூஉச் செய்து, தெய்வம் பேணிப் பையென வருந்த பிற", பெருங். 3 : 8 : 6 - 7
குடைதல்	முழுகி நீராடுதல்	"தோய்தலும் படிதலும் ஆடலும் அன்றிக் குடைதலும் மூழ்கலும் குளித்தலின் கூற்றே", நிக.பிங். 1992; "புனலாடு மகளிர் கதுமெனக்குடைய", பொருநர். 241; "இப்புனல் குடைகுவை ஆயின்", பெருங். 1 : 40 : 214; "குடைத்து அலை நதிப் படிய நின்று...", தேவா.திருஞா. 3 : 79 : 57; "மடந்தைமார் குடைந்த நீர்", திருச்சந்த. 57 : 3; "குளித்தும் குடைந்தும் திளைத்து விளையாடி", பெருங். 3 : 9 : 59; "குளித்த மகளிரொடு திளைத்தல் ஆனார், குடைந்த வெண் ணுரை

		குடங்கையின் வாரித்" பெருங். 2 : 5 : 114 - 115; "முதிர் பூங்காவின் உதிர்தா தளைஇ, மலைவாழ் குறவர் மகளிர் குடையும்", பெருங். 1 : 50 : 38 - 39; "மகளிர் நீர்குடைவு ஒரீஇ", பெருங். 1 : 40 : 106; "வெண்தளக் கலவைச் சேறும் குங்கும விரை மென்சாந்தும், குண்டலக் கோல மைந்தர் குடைந்த நீர்க் கொள்ளை, சாற்றின்", கம்ப. 43 : 1 - 2; "பொன்தொடி தளிர்க்கைச் சங்கம், வண்டொடு புலம்பி ஆர்ப்ப, எற்றுநீர் குடையும் தோறும், ஏந்து பேர் அல்குல் நின்றும்", கம்ப. 939 : 1 - 4
சலம் குடைதல்	குளித்தல்	"தண்அம் துவர்பல ஊட்டிச் சலம் குடைவார்", பரி. 10 : 90
நீர் குடைதல்	நீராடுதல்	"ஓம்பு தாய்நீர் குடைய ஒழிக்கும் வண்ண நாடி", சீவக. 924 : 2
குடைந்தாடுதல்	நீரில் மூழ்கி விளையாடுதல்	"உடை அவிழக் குழல் அவிழக் கோதை குடைந் தாடக், குங்குமங்கள் உந்திவரும் கொள்ளிடத்தின் கரைமேல்", தேவா. சுந்தர. 36 : 6 : 5 - 6; "வரிக்கோல வண்டு ஆட மாதரார் குடைந்து ஆடும் மணிநீர் வாவி", திருத். 2004 : 3 - 4
குடைந்து நீராடுதல்	நீராடுதல்	"குடைந்து நீராடுவான் போந்தோம்", நாச். திரு. 3 : 1; "குடைந்து நீராடும் மாதர் குழாம் புடைசூழ", கம்ப. 940 : 1 - 2
கொட்டியும் குடைந்தும் ஆடுதல்	நீராடும் திறன்; நீரில் குளிக்கும்போது நீரில் கைகளால் வாத்தியங்களின் இசையை எல்லாம் முடிக்கும் தன்மையில் நீரினைக் கைவிரல்களினால் கொட்டியும் குடைந்தும் ஆடுதல்	"எண்ணிய விரலோடு அங்கை புறங்கையின் இசைய ஆக்கித், திண்ணிதின் தெறித்தும் ஓவார் கொட்டி யுங் குடைந்தும் ஆடி", சீவக. 965 : 2-3
குளி	நீராடுதல்	"குளி அறிவாளர்க்குக் கூடவும் ஒண்ணான்", திருமந். 510: 2
குளித்தல்	நீரில் மூழ்கி நீராடுதல்	"தோய்தலும் படிதலும் ஆடலும் அன்றிக், குடைதலும் மூழ்கலும் குளித்தலின் கூற்றே", நிக.பிங். 1992; "குளித்தும் குடைந்தும் திளைத்தும் விளையாடி", பெருங். 3 : 9 : 59; "குளித்தனன் கொண்டல் ஆற்று; குளித்தபின், கொண்ட நல்நீர் அளித்தனன்", கம்ப. 3538 : 5 - 7; "குளித்த மகளிரொடு திளைத்தல் ஆனார்," பெருங். 2 : 5 : 114
கீழ்நீர்க் குளித்தல்	நீருள் மூழ்குதல்	களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க் குளித் தானைத் தீர்த்துரீஇ அற்று", குறள். 929
கலச நன்னீர் சொரிதல்	சொரிந்து நீராட்டுதல்	"மின்னியல் கலச நன்னீர் சொரிந்தனன் வீரனேற் றான்", சீவக. 834 : 3
சொரிந்தாட்டுதல்	நீரைப் பெய்து நீராட்டுதல்	"தெள்ளறல் நீர் சொரிந்தாட்டினர்", சீவக. 1476 : 2
தாமரைமூய தமனியக் குடநீர் தாமுறை சொரிந்து ஆட்டுதல்	தாமரை மலரான் மூடப்பட்டிருந்த பொற்குடங்களை எடுத்து அவற்றின் கண் உள்ள நீரைப் பெய்து நூல் முறைப் படி நீராட்டுதல்	"தாமரை மூய தமனியக் குடநீர் தாமுறை சொரிந்து தம்முறைமையின் ஆட்டிச்", பெருங். 2: 5 : 104 - 105

வண்ணமகளிர் சொரிவனராட்டுதல்	ஒப்பனை மகளிர் தெளிந்த நீரை முகந்து திருமேனியில் சொரிந்து நீராட்டுதல்	"வரிவளைப் பணைத்தோள் வண்ணமகளிர் சொரிவனர் ஆட்டித்தூசுவிரித்து உடீஇக்",பெருங். 1 : 57 : 96 - 97
திளைத்தல்	நீரில் ஆடுதல்	"போதுவிரி பொய்கையுட் புக்கனர் புரிந்தும், குளித்த மகளிரொடு திளைத்தல் ஆனார் . .", பெருங். 2 : 5 : 113 - 114
திளைத்து ஆடுதல்	நன்றாகப் படிந்து முழ்குதல்	"தென் திசையில் கங்கை எனும், திருக்கெடிலம் திளைத்து ஆடி", திருத். 235 : 7 - 8
குளித்தும் குடைந்தும் திளைத்தும் விளையாடுதல்	குளித்தும் குடைந்தும் நீரில் திளைத்து விளையாடுதல்	"பொய்கைத் தாட்கொ ளெல்லையுள் வாட்கண் சிவப்பக், குளித்தும் குடைந்தும் திளைத்தும் விளையாடிக்", பெருங். 3 : 9 : 57 - 59
தோய்தல்	குளித்தல்	"தோய்தலும் படிதலும் ஆடலும் அன்றிக் குடைதலும், மூழ்கலும் குளித்தலின் கூற்றே", நிக.பிங். 1992; "புனலிடைத் தோய்கிலா மெய்யாள்", தேவா. சுந்தர. 3 : 11
தோய்வினை	குளிக்கும் செயல்	"முக்குள நீர் தோய் வினையார்", தேவா. திருஞா. 2 : 48 : 2 : 3 - 4
நீர் தோய்ந்து வருதல்	நீராடுதல்	"தூநறும் சடைக்கங்கை நீர்தோய்ந்து வந்தாரோ, வானநீர் மழை பொழிந்திட நனைந்து வந்து அணைந்தார்", திருத். 518 : 3 - 4
படிதல்	குளித்தல்	"தோய்தலும் படிதலும். . . . . குளித்தலின் கூற்றே", நிக.பிங். 1992; "பெருங்களிற்று இனம் படிநீரின்", அகம். 212 : 8 - 9; "புண்ணியப் பெருந்துறை மன்னவன் படிந்தபின்", பெருங். 1 : 39 : 48
நீர் படிந்து வருதல்	நீராடி வருதல்	"போன வேதியர் வைத்த கோவணத்தினைப் போக்கிப், பானல் அம்துறைப் பொன்னி நீர் படிந்து வந்தாரோ", திருத். 518 : 1 - 2
பாய்ந்தாடல்	நீரினுள் பாய்ந்து நீராடல்	"தறியறியான் நீரின்கண் பாய்ந்தாடல் இன்னா", இன்னா. 29 : 1 - 2
புணர்ந்து உடனாடுதல்	மகளிர்திரள் தம்மிடத்து நெருங்கின கோதை தம் கணவர் மார்பின் மாலையுடனே அழகு பெறக் கூடுமாறு நீராடுதல்	"ததைந்த கோதை தாரொடு பொலியப், புணர்ந்து உடன் ஆடு இசையே, மது. 265 - 266
பூரித்து ஆட்டுதல்	அபிடேகம் செய்தல்	"வன்னெடும் கைகொடு நீர்தனைப் பூரித்து ஆட்டியர்ச் சிக்க" தேவா. திருஞா. 2 : 10 : 1 : 2 - 4
திருமஞ்சனம்	பூசைக்கு முன் இறைவனை நீராட்டுதல்	"தொழுது பெறு வனகொண்டு தூய பூசனை தொடங்கி, வழுஇல் திருமஞ்சனமே முதலாக வரும் பூசை", திருத். 788 : 2 - 3
மஞ்சனம் ஆட்டுதல்	நீராட்டுதல்	"மாதர்க்கண்ணீர் மஞ்சனம் ஆட்டி", பெருங். 4 : 14 : 154; "ஊன் அமுது அமைத்துக் கொண்டு மஞ்சனம் ஆட்ட உன்னி, மாநதி நன்னீர் தூய வாயினில் கொண்டு கொய்த", திருத். 770 : 2 - 3
மஞ்சனம் ஆடுதல்	அபிடேகம் செய்தல்	"வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழி மிழலையார், அஞ்சனக் கண்ணுமை பங்கினர் கங்கையங் காடிய மஞ்சனச் செஞ்சடை யாரென வல்வினை மாயுமே", தேவா.திருஞா. 3 : 9 : 3 : 2 - 4; "மஞ்சனம் ஆட நீ

		வாராய்", பெரியாழ். 2: 4: 3: 4; "இழை தொடுத்து இலங்கும் மாடத்து இடைதடுமாற ஏறி, மழை பொதுத்து ஒழுகுநீரால், மஞ்சனம் ஆடுவாரும்", கம்ப. 5018 : 5 - 8; "தேன் உகு சரளச் சோலை, தெய்வநீர் ஆற்றின் தெண்ணீர், வானவர் மகளிர் ஆட்ட, மஞ்சனம் ஆடு வார்", கம்ப. 4938 : 8
மஞ்சனம் செய்தல்	நீராடுதல்	"அஞ்சன மஞ்சனம் செய்தது அனைய," திருத். 3691 : 9
பொன்குடம் நிறைந்த வாசப் புனித மஞ்சனம் நீராட்டுதல்	பொன் குடத்தில் நிறைந்த வாசனை நீரால் குளிப்பாட்டு தல்	"பொன்குடம் நிறைந்த வாசப் புனித மஞ்சனம் நீராட்டி, வில்பொலி வெண் பட்டாடை மேதகு விளங்கச் சாத்தி", திருத். 3112 : 1 - 4
மண்டியாடுதல்	நீராடுதல்	"புனல் மண்டி ஆடல் புரிவான்," பரி. 10 : 9
மண்ணா	நீராடாத	"மண்ணாக் கூந்தல் மாசுஅறக் கழீஇ", நற். 42 : 8; "கண்ணி வாடிய மண்ணா மருங்குல்", அகம். 343 : 6; "மண்ணா மேனியன் வருவோன் தன்னை", மணி. 3 : 91
மண்ணுதல்	நீராடுதல்	"உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி", பதிற். 31 : 6; "மூதூர் வாயில் பனிக்கயம் மண்ணி", புறம். 79 : 1; "நெய்யொடு துறந்த மை இருங்கூந்தல், மண்ணுறு மணியின் மாசுஅற மண்ணி", புறம். 147 : 6 - 7; "மண்ணிய சென்ற ஒள்நுதல் அரிவை", குறுந். 292 : 1 - 2; "மண்ணுதல் பறித்தலும் மாயம் இவை", தேவா.திருஞா. 1 : 111 : 10 : 1; "உருகெழு மரபின் அயிரை மண்ணி," சிலப். 28 : 45
மண்ணுநீர் ஆட்டுதல்	நீராட்டுதல்	"துணை நலத் தோழர் துன்னினர் சூழா, மண்ணுநீர் ஆட்டின் மலைந்தனர் ஆகி", பெருங். 2 : 5 : 52 - 53; "பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்; பருவரற் பரவை புக்கான், வார் மணிப் புனலால் மண்ணை, மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்," கம்ப. 2341 : 5 - 8
மண்ணுறுத்தல்	நீராட்டுதல்	"மகரப்பகுவாய் தாழ மண்ணுறுத்துத் துவரமுடித்த துகளறு முச்சி", திருமுருகு. 25 - 26
மண்ணுறுப்ப ஆடுதல்	நீராட்டுதல்	"மண்ணுறுப்ப ஆடி நீர்க்கோலம் செய்து", சீவக. 2352 : 1 - 2
நீர்முகந்து எற்றுதல்	தண்ணீரை மொண்டு கூந்தலில் வீசுதல்	"தையலாளை ஓர் தார் அணி தோளினான், நெய் கொள் ஓதியின் நீர் முகந்து எற்றினான்", கம்ப. 953 : 1 - 2
மணி நீர் முகம் சேர்த்தல்	சிவந்த வண்ணங் கொண்ட பொன் கலந்துள்ள அழகிய நீரால் முகத்தைக் கழுவுதல்	"ஆயிழையார் - செங்கேழற், பொற்கவசத் துள்ளால் மணிநீர் முகஞ்சேர்த்தி, நற்பெரும் கோலம் மிகப் புனைந்து", 11ஆம் திரு. 300 : 65 - 66
முழுகி மீது எழுதல்	நீரில் முழுகிக் குளித்து எழுதல்	"தேன் ஒழுகு தாமரை ஒத்தன, ஓங்குநீர், முழுகி மீது எழுமாதர் முகத்தையே", கம்ப. 7027 : 2 - 4
மூழ்கல்	நீருள் அமிழ்ந்து நீராடுதல்	"தோய்தலும் மூழ்கலும் குளித்தலின் கூற்றே", நிக. பிங். 1992; "வில் உமிழ் கடுங்கணை மூழ்கக் கொல் புனல்", புறம். 263 : 7; "பாசடகு மிசையார் பனி நீர் மூழ்கார்", புறம். 62 : 14; "கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி", பட். 246; "கயம் மூழ்கு மகளிர் கண்ணினும் மானும்", குறுந். 9 : 6

மூழ்குதல்	நீருள் அமிழ்ந்து நீராடுதல்	"தலைப்புனல் மூழ்குதல் இலக்கணம் ஆதலின்", பெருங். 1 : 42 : 122; "புலரும் பொழுதின் முன் எழுந்து, புனித நீரில் மூழ்கிப் போய், மலரும் செவ்வித் தம்பெருமான், முடிமேல் வான்நீர் ஆறுமதி", திருத். 1028 : 1 - 4
நீர் வார்த்தல்	குளிப்பாட்டுதல்	"பச்சிலையோடு பூவும், பறித்திட்டு நீரும் வார்த்து", திருத். 757 : 3 - 4
வெந்நீர் வாய்க் கொண்டு உமிழ்தல்	வாய்க் கொப் பளித்தல்	"வெந்நீர் வாய்க் கொண்டு உமிழ்ந்தோன் மணிமாலை வேலோன்", சீவக. 3054 : 4
வாய்ப் பூச்சியற்றல்	வாய்பூசுதல் செய்தல்	"தெளித்தலைத் தண்ணீர் குளித்தனனாடி, வாய்மைக் கொத்த வாய்ப்பூச்சியற்றித், தூய்மைக் கொத்த தொழிலனாகி", பெருங். 1 : 53 : 86 - 88
நுணுக்கிய மஞ்ச ளால் நாக்கு வழித்தல்	மஞ்சள்பொடி கொண்டு நாக்கு வழித்தல்	"நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால் நாக்கு வழித்து நீராட்டும்", பெரியாழ். 1 : 3 : 15 : 1 - 2
பசுஞ்சிறு மஞ்ச ளால் நா வழித்தல்	மஞ்சள் தேய்வை கொண்டு நாக்கு வழித்தல்	"கையும் காலும் நிமிர்த்துக் கடார நீர் பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால் ஐய நாவழித்தாளுக்கு அங்காத்திட", பெரியாழ். 1: 2: 6: 1 - 3
பொன் நாவழி யால் நா வழித்தல்	நாக்கு வழித்தல்	"பொன்னா வழியாற் புகழ் நா வழித்து", சீவக. 3045 : 1

2.2. நீர் நிலைகளில் / நீராட்டிடங்களில் நீராடிய முறைகள்

தமிழரிடம் குளித்தல் / நீராடல் என்பது தொன்று தொட்டு இன்று வரை தொடர்ந்து வரும், முக்கியத்துவம் பொருந்திய ஒரு பழக்கமாக இருந்து வருவது கண்கூடு. எனினும் நீராடிய நீர்நிலைகள் என்று நோக்கும்போது பல இன்று பயன் தருவதாக இல்லை; பயன் பெறுவதும் இல்லை; இனிவரும் தலைமுறையினருக்குப் புதுமையான தாகத் தெரியலாம் என்ற நிலையிலேயே இவை பற்றிய அறிவு இன்று காணப்படுகிறது. பழந்தமிழர் பல வகையான நீர் நிலைகளில் நீராடி மகிழ்ந்திருந்தனர். சுத்தப்படுத்துதலுக்கு இவைத் துணையாக அமைந்தன மட்டுமன்றி, சிறந்த உடல்நலம் பேணும் பயிற்சிக்களங்களாகவும் இவை அமைந்திருந்தன என்பதும் இங்குத் தெரிய வருகின்ற செய்திகள். மேலும், இந்நீர் நிலைகளில் இவர்கள் மகிழ்ந்தாடிய செய்தி, நீர் நிலைகளைத் தக்க முறையில் பேணிப்பாதுகாத்த தமிழரின் அன்றைய உணர்வையும் தரும். நகரச் சிறப்பு - ஊரின் சிறப்புக்கு, நீர் நிலைகள் தேவை என்பதையுணர்ந்து வாழ்ந்த தமிழரின் அறிவும் இச்சொற்களின் மூலம் புலப்படுகின்றது.

அரங்கம்	குளிக்குமிடம்	"அரங்கம் ஆற்றிடைக் குறை பேர் ஆடிடம் சபையும் அப்பேர்", நிக.சூ. 11 : 202
அருவி ஆடல்	அருவியில் குளித்தல்	"மணி நிறம் கொண்ட மாமலை வெற்பில், துணி நீர் அருவி நம்மோ டாடல், எளிய மன்னால் ", ஐங். 224 : 2 - 4; "மானமர் கண்ணாய்! மயங்கல் நீ - நானம், கலந்திழியும் நன்மலை மேல் வாலருவியாடப் புலம்பும் அகன்று நில்லா", ஐந். ஐம். 13 : 2 - 4
அருவியாடிச் சுனை குடைதல்	அருவியாடிய பின்னர் வேட்கைகுறையாமல் சுனையிலும் குடைந் தாடும் தன்மை	"அவிர் துகில் புரையும் அவ்வெள்ளருவித், தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடிப், பளிங்கு சொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி", குறிஞ். 55 - 57
அருவி ஆடுதல்	அருவியில் குளித்தல்	"ஐவன வெண்ணெல் குறூஉம் நாடனொடு, சூருடைச் சிலம்பின் அருவி ஆடிக்", நற். 373 : 4 - 5; "விண்தோய் வரை பந்து எறிந்த அயாவீத்தண் தாழ் அருவி அரமகளிர் ஆடுபவே", கலித். 40 : 22 - 23; "வனைய லாகா உருவம் நோக்கி மைந்தற்கு இரங்கி, இனைவ போலும் வேய்ந்து அருவி யினிதின் ஆடி, நனை கொள் போது வேய்ந்து நாதன் பாடுகின்றான்", சீவக. 1417 : 2 - 4; "குருவியோப்பியுங் கிளிகடிந்துங் குன்றத்துச் சென்று வைகி, அருவியாடியுஞ் சுனை குடைந்தும் அலவுற்று வருவேமுன்", சிலப். 24 : 1 - 2, "அணிவரைச் சாரல் அருவி ஆடியும்", பெருங். 2 : 19 : 160
பாய்ந்தருவி ஆடுதல்	அருவிகளில் புகுந்து நீராடுதல்	"மாந்தளிர் மேனி வியர்ப்ப மற்(று)-ஆங்கெனைத்தும், பாய்ந்து அருவி ஆடினேம் ஆகப் பணிமொழிக்குச் சேந்தனவாம் சேயரிக்கண் தாம்", ஐந். ஐம். 15 : 2 - 4
அருவி நீந்துதல்	மலையிலிருந்து விழும் அருவி நீரில் குளித்தல்	"நெடுமலை நன்னாட! நீள்வேல் துணையாக் கடுவிசை வாலருவி நீந்தி", ஐந். ஐம். 19 : 1 - 2
அருவி நுகர்தல்	அருவியில் இன்பமாக நீராடுதல்	"அருவி நுகரும் வானர மகளிர், வருவிசை தவிராது வாங்குபு குடைதொறும்", மலை. 294 - 296
அருவி பாய்ந்தாடுதல்	நீர் வீழ்ச்சிகளிலே பாய்ந்து நீராடுதல்	"பாலொத்த வெள்ளருவி பாய்ந்தாடிப் பல்பூப் பெய்தாலொத்த ஐவனம் காப்பாள்கண்", திணை. நூற். 19 : 1 - 2

அருவியாட்டு	அருவியில் ஆடுதல்	"இயல்பிற் செய்யவாயினும் உயர்வரை அருவி யாட்டினும் அறற்சுனைத் திளைப்பினும்", பெருங். 2 : 14 : 58 - 59
அருவியேற்றல்	அருவி நீரில் குளித்தல்	"கறங்குவெள் அருவி ஏற்றலி னிறம் பெயர்ந்து தில்லை யன்ன புல்லென் சடையோ", புறம். 252 : 1 - 2
ஆட்டகம்	குளிக்குமிடம்	"ஆட்டகத்தில் ஆன்ஐந்து உகந்தார் போலும்", தேவா. திருநா. 6 : 28 : 4
ஆடா அரங்கினுள் ஆடுதல்	ஆற்று நீரில் குளித்தல்	"வாடாத தாமரைமேல் செந்நெற் கதிர் வணக்கம் ஆடா அரங்கினுள் ஆடுவாள் ", திணை. நூற். 129 : 1 - 2
ஆடிடம்	குளிக்குமிடம்	"அரங்கம் ஆற்றிடைக் குறைபேர் ஆடிடம் சபையும் அப்பேர்", நிக.சூ. 11 : 202
ஆராட்டரவம்	விழாவின் இறுதியில் ஆடும் நீராட்டு	"நீராட்டு அரவ நெடுநகர் வரைப்பகம் ஆராட்டு அரவமொடு, அமர்ந்து விழைவு அகற்றி, பெருநிலை நிதியம் பேணாது வழங்கி", பெருங். 1 : 42 : 1 - 3
ஆற்றிடைக் குறை	குளிக்குமிடம்	"அரங்கம் ஆற்றிடைக் குறை பேர் ஆடிடம் சபையும் அப்பேர்", நிக.சூ. 11 : 202
ஆறாட்டு	நீராட்டு; விழாவின் முடிவில் ஆற்றில் ஆடும் நீராட்டு	"ஆறாட்டு இளம் பிடி ஆயிரத்து அங்கண்", பெருங். 1: 38 : 116
ஆறாடுதல்	ஆற்றில் நீராடல்	"ஆறாடு மேனி அணி கண்ட தன் அன்பன்", பரி. 7 : 72; "நொய்ம்மர நெடும்புணை கைம்முதல் தழீஇக், கூறு ஆடு ஆயமொடு குழுஉக் கொண்டீண்டி, ஆறாடு ஆயமொடு அணிவிழவு அமர்தல், இன்ன தொன்றினுள் என்ன தொன்றாயினும்", பெருங். 2 : 11 : 33 - 36
யாறு ஆடுதல்	ஆற்றில் ஆடி மகிழ்தல்	"யாறுங் குளனுங் காவுமாடிப், பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப", தொல். 1137; "சிகை கிடந்த வூடலின் செங்கண் சேப்பு ஊர, வகை தொடர்ந்த ஆடலுள் நல்லவர் தம்முள், பகை தொடர்ந்து கோதை பரியூஉ நனி வெகுண்டு யாறு ஆடு மேனி", பரி. 7 : 70 - 73
யாறு நீர் ஆடற்கு அமைதல்	ஆற்றின் நீர் நீராடு வதற்கு ஏதுவாக அமைதல்	"ஆடற்கு நீர் அமைந்தது யாறு", பரி. 11 : 49
இலவந்திகை	இயந்திரவாவி, வேண்டுங்கால் நீரை நிரப்பவும், வேண் டாக் காலை, போக் கின் போக்கவும் பொறியமைந்த நீர் நிரம்பி வழியா நின்ற எந்திர வாவி; வேண்டும்பொழுது நீரை நிரப்பியும் ஏனைப் பொழுது போக்கியும் உதவும் இயந்திரம் உடைய செய்குளம் (கழகம்)	"பன்மலர் அடுக்கிய நன்மரப்பந்தர், இலவந்திகையி னெயிற்புறம் போகி", சிலப்.10 : 30 - 31; "இலவந்தி கையின் எயிற்புறம் போகின்", மணி. 3 : 45, "நிறைக் குறினிறைத்துப் போக்குறிற் போக்கும், பொறிப்படை அமைந்த பொங்கில வந்திகை", பெருங். 1 : 40 : 311 - 312
எந்திர வாவி	வேண்டும்பொழுது நீரை நிறைத்தற்கும் வேண்டாத பொழுது போக்குதற்கும் உரிய யந்திரங் களையுடைய நீர் நிலை	"எந்திர வாவியிற் இளைஞரும் மகளிரும், தந்தமில் ஆடிய சாந்து கழி நீரும்", மணி. 28 : 7 - 8

இருகடல் நீரும் ஆடுதல்	குளித்தல்	"உருகெழு மரபின் அயிரை மண்ணி, இருகடல் நீரும் ஆடினோன் ஆயினும்", சிலப். 28 : 145 - 146
கடல் மேல் மண்டுதல்	கடலில் போய் விழுதல்	"புலவியின் கரை கண்டவர், அமுது உகப் புணரும் கலவியின் கரை கண்டிலர், மண்டினர் கடல்மேல்", கம்ப. 5968 : 3 - 4
கனைகடல் முழ்குதல்	ஆரவாரிக்கும் கடலில் நீராடுதல்	"முன்னிய கனைகடல் முழுகி, மூவகைத் தன் இயல் கதியொடு தழுவி,", கம்ப. 4958: 1 - 2
கடல் விளையாட்டு	கடலில் நீராடுதல்	"பெருநீர் போகும் இரியல் மாக்களொடு, மடல்அவிழ் கானல் கடல் விளையாட்டுக் காண்டல் விருப்பொடு வேண்டினள் ஆகிப்", சிலப். 6 : 112 - 114
கடல வெண்டலைப் புணரியாடுதல்	கடலில் நீராடுதல்	"கழிய காவி குற்றும் கடல, வெண்தலைப் புணரி ஆடியும் நன்றே", குறுந். 144 : 1 - 2
கடலாட்டு	கடலில் ஆடிக் குளித்தல், விழவின் ஒரு பகுதி கடலாடு தல்	"இனி இவ்விழாவின் முதலும் முடிவும் கடலாட்டும் புலவியும் புறப்பாடும் வதிச்செலவும் பொறை யுயிர்த்திருப்பும் நிறைபதிப்புகலும் தீதுறுநாளும் ஊர்தீப்பாடும் முதனடு விறுதியாகக் கட்டுரை காதையுள் விரியக் கூறுவாம்", சிலப். 8 : 45 - 71, அடி.ந.; "மட லார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக் கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம மர்ந்தான்", தேவா. திருஞா. 2 : 47 : 6 : 1 - 2
கடலாடுதல்	கடலில் நீராடுதல்	"இருகடல் நீரும் ஒரு பகல் ஆடி", பதிற். 3 : 7; "கடலாடு மகளிர் கானல் இழைத்த, சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி", குறுந். 326 : 2 - 3; "எம்மொடு வந்து கடல் ஆடு மகளிரும், நெய்தலம் பகைத் தழைப் பாவை புனையார்", ஐங். 187 : 2 - 3
கடலாடிக் கயம் பாய்தல்	கடலாடிய பின் கயம் பாய்ந்து குளித்தல்	"தொடலை அல்குல் தொடித் தோள் மகளிர், கடல் ஆடிக் கயம் பாய்ந்து, கழி நெய்தல் பூக்கு றுஉந்து", புறம். 339 : 6 - 9
கடலாடிய செல்லுதல்	கடலில் நீராடச் செல்லுதல்	"பெருங்கடலாடிய சென்றார் ஒருங்குடன் ஓசை அவிந்தபின் ஆடுது மென்றற்றால்", நாலடி. 332 : 1 - 2
கடலாடு வியலிடம்	கடலில் நீராடுகின்ற அகன்ற இடம்	"கடலாடு வியலிடைப் பேரணி பொலிந்த, திதலை அல்குல் நலம் பாராட்டிய வருமே தோழி", நற். 307: 3 - 5
கடலுடன் ஆடுதல்	கடலில் நீராடுதல்	"தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியும், சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்", அகம். 110: 6 - 7; "கடலுடன் ஆடியும், கானல் நல்கியும்", குறுந். 294 : 1 - 2
கடற்றிரை பாய்தல்	கடலில் நீராடுதல்	"தண்ணென் பெருங்கடல் திரைபாய்வோளே", ஐங். 123 : 3
கடற்றிரை முழ்குதல்	கடலில் நீராடுதல்	"தெண்கடற் பெருந்திரை மூழ்குவோளே", ஐங். 126 : 3
திரையுடைக் கலுழி திறவதினாடுதல்	அலையுடைய நீரின் கண்ணே திறம்பட ஆடுதல்	"நரையிடைப் படர்ந்த நறுமென் கூந்தலர், திரை யுடைக் கலுழி திறவதினாடித், தாமிள மகளிரைக் காமஞ் செப்பி ", பெருங். 1 : 41 : 99 - 101
வெயில் முனைந்து திரைமிகப் பாய்தல்	வெயிலினை வெறுத்துக் கடலில் பாய்ந்து நீராடுதல்	"நெல் அரியும் இருந்தொழுவர், செஞ்ஞாயிற்று வெயில் முனையின், தெண்கடல் திரை மிசைப் பாயுந்து", புறம். 24 : 1 - 3
பெருநீர் போதல்	கடலில் தீர்த்தமாட விரைந்து போதல்	"பெருநீர் போகும் இரியல் மாக்களொடு, மடலவிழ் கானல் கடல்விளை யாட்டுக், காண்டல் விருப்பொடு வேண்டினள் ஆகிப்", சிலப். 6 : 112 - 114
முந்நீர்ப் பாய்தல்	கடலில் பாய்ந்து குளித்தல்	"முந்நீர் உண்டு முந்நீர்ப்பாயும் தாங்கா உறையுள் நல் ஊர் கெழீஇய", புறம். 24 : 16 - 17
கயங்குடைதல்	குளத்தில் குளித்தல்	"கயம்குடைந்தன்ன இயம் தொட்டு இமிழ் இசை", மது. 363

கயம் ஆடுதல்	குளத்தில் குளித்தல்	"தண்கயம் ஆடும் மகளிரொடு கை பிணைந்து", புறம். 243 : 3
தண்கயம் படிதல்	குளத்தில் நீராடுதல்	"நறுவீ ஐம்பால் மகளிராடும், தைஇத் தண்கயம் போலப் பலர் படிந்து உண்ணும் நின் பரத்தை மார்பே", ஐங். 84 : 3 - 4
குண்டு கயம் பாய்தல்	ஆழ்ந்த இடத்திலே யுள்ள நீரின் கண் புகுதல்	"காற்றா ருடைந்து நோற்றோ ரொடுங்கும், குளிர் நீர்யமுனைக் குண்டுக் கயம்பாய", பெருங். 3: 24 : 55 - 56
கயம் பாடவிய புறங்கரை போதல்	பொய்கையில் நீராடி முடித்தல்	"இளையா விருப்பிற்றம் விளையாட்டு முனைஇக் கயம் பாடு அவியப் புறங்கரைபோந்து", பெருங். 1 : 42 : 197 - 198
கயம் மண்ணுதல்	குளத்தில் குளித்தல்	"மூதூர் வாயில் பனிக்கயம் மண்ணி", புறம். 79 : 1
கயம் மூழ்குதல்	குளத்தில் முழுகிக் குளித்தல்	"கலங்கல் நுரை யுந்தி எதிர் வந்த கய மூழ்கி மலர் கொண்டு மகிழா, மலங்கி வருகாவிரி நிரந்து பொழிகின்ற மயிலாடு துறையே", தேவா. திருஞா. 70 : 8 : 5 - 8
தோய் கயம்	நீராடும் குளம்	"தோய் கயத்தும், மரத்தும், மென்சிறை துள்ளி மீது எழு புள் எலாம்", கம்ப. 1542 : 1 - 2
குட்டத்துக் குளித்தல்	ஆழ்ந்த நீர்ப் பரப்பில் குளித்தல்	"சுட்டி சிதையக் குட்டத்துக் குளித்து", பெருங். 1: 40: 102
குட்டத்துத் துடு மெனப் பாய்ந்து குளித்தல்	குட்டமாகிய குளத்தில் பாய்ந்து மூழ்கிக் குளித்தல்	"கரையவர் மருளத் திரையகம் பிதிர, நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து, குளித்து மணற் கொண்ட கல்லா இளமை", புறம். 243 : 8 - 10
குட்டமாடுதல்	ஆழமான நீரின்கண் ஆடுதல்	"உதிர்பூங் கொம்பில் ஒடுங்கு வோரும், குட்டம் ஆடிக் குளிர்ந்த வருத்தம், அட்டுப்பதமாக அறிந்தோர் அமைத்த", பெருங். 1 : 44 : 26 - 28
குளத்திடை உள்ளாடப் புகுதல்	குளத்தில் முழுகிக் குளிக்கப் புகுதல்	"புள்ளேறு சோலைப் புக்கொளியூரில் குளத்திடை, உள்ளாடப் புக்க மாணியென்னைக் கிறி செய்தயே", தேவா. சுந்தர. 7 : 83 : 9 : 3 - 4
குளத்து ஆடுதல்	குளத்தில் நீராடுதல்	"மழைநீர் அறு குளத்து வாய்பூசி ஆடும், கழுநீர மஞ்சனக் குங்குமக் கலங்கல், வழிநீர் விழுநீர அன்று வையை", பரி.தி. 2 : 87 - 89
குளன் ஆடுதல்	குளத்தில் நீராடுதல்	"யாறும் குளனும் காவும் ஆடி", தொல். 1137 : 1; "காடும் புனமும் கடல் அன்ன கிடங்கும், மாதர் ஆடும் குளனும், அருவிச் சுனைக் குன்றும், உம்பர்", கம்ப. 164 : 1 - 2
சுனை ஆடாமை	ஒருங்கு பாய்ந்து விளையாடாமை யினால் கலங்காது தெளிந்து காணப் படும் சுனை	"பாய்பு உடன், ஆடாமையின் கலுழ்பு இல தேறி, நீடு இதழ் தலைஇய கவின் பெறு நீலம், கண்ணென மலர்ந்த சுனை. . . ", அகம். 38 : 8 - 11
சுனை ஆடுதல்	சுனையில் நீராடுதல்	"அம்கண்அறைய அகல்வாய்ப் பைஞ்சுனை, உண்கண் ஒப்பின் நீலம் அடைச்சி, நீர் அலைக் கலைஇய கண்ணிச், சாரல் நாடனொடு ஆடிய நாளே", நற். 357 : 7 - 10; "மின்நேர் ஓதி இவளொடு நாளைப் பன்மலர் கஞலிய வெறிகமழ் வேலித் தெண்ணீர் மணிச் சுனை ஆடின் , என்னோ மகளிர்தம் பண்பு என் றோளே", நற். 339 : 9 - 12; "கண்ணென மலர்ந்த மாயிதழ்க் குவளைக், கல்முகை நெடுஞ்சுனை நம்மொடு ஆடிப்", அகம். 228: 4 - 5; "தடிகண் புரையுங் குறுஞ்சுனை யாடிப் , பனிப்பூந் தளவொடு முல்லை பறித்து பனிப்படச் செல்வாய்நும் ஊர்க்கு", கலித். 108 : 41 - 44
சுனை ஆயமொடு ஆடுதல்	சுனையில் உள்ள நீரில் தன் தோழி யரோடு ஆடுதல்	"குறுந்தொடர் அடைச்சிய நறும்பல் கூழை, நீடுநீர் நெடுஞ்சுனை ஆயமொடு ஆடி," அகம். 358 : 6 - 7

சுனை குடைதல	சுனைநீரில் குடைந்து நீராடுதல்	"பளிங்கு சொரிவன்ன பாய்சுனை குடைவுழி, நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்'', குறிஞ். 57 - 58; "குருவி யோப்பியும் கிளிகடிந்தும் குன்றத்துச் சென்று வைகி, அருவிஆடியும் சுனை குடைந்தும் அலவுற்று வருவேமுன்", சிலப். 24 : 1 - 2
அகன் சுனை குடைதல்	பரந்த சுனைகளிலே மூழ்கிக் குளித்தல்	"மணி ஒளிர் மலையின் நில்லார் அன்னங்கள் புகுந்த என்ன, அகன் சுனை குடைகின்றாரும்", கம்ப. 866 6 - 8
சுனை குடைந் தாடுதல்	சுனையில் மூழ்கிக் குளித்தல்	"திருத்தம் பயிலுஞ் சுனைகுடைந் தாடிச் சிலம் பெதிர் கூய் வருத்தம் பயின்று கொல்லோ வல்லி மெல்லியல் வாடியதே", திருக்கோ. 62 : 3 - 4
சுனைத் தெளிந்த மணிமருள் தீநீர் ஆடுதல்	சுனையில் உள்ள தெளிந்த நீரில் ஆடுதல்	"உயர் வரை மருங்கில் காந்தளஞ் சோலைக் குரங்கு அறிவாரா மரம்பயில் இறும்பில், கடிசுனைத் தெளிந்த மணிமருள்தீம் நீர், பிடிபுணர் களிற்றின் எம்மொடு ஆடிப்", அகம். 368 : 8 - 11
சுனைநாப்பண் குளித்து நிவந்தல்	சுனையின் நடுவே முழுகிக் குளித்து மேலெழுதல்	"தாழ்நீர் இமிழ்சுனை நாப்பண் குளித்து அவண் மீநீர் நிவந்த விறலிழை ", பரி. 21 : 39 - 40
சுனைத் திளைத்தல்	சுனையில் ஆடுதல்	"அருவியாட்டினும் அறற்சுனைத் திளைப்பினும்'', பெருங். 2 : 14 : 59
சுனைப் படிதல்	சுனையில் குளித்தல்	"விடை கொண்டு புறம் போந்து வேடரோடும், மங்கல நீர்ச் சுனைப்படிந்து மனையின் வைகி", திருத். 705 : 4 - 5
சுனைபடிந்து ஆடுதல்	சுனையில் மூழ்கி நீராடுதல்	"அம்பொன் வார்குழல் கொடிச்சியருடன் அரமகளிர் வம்பு உலாமலர்ச் சுனைபடிந்து ஆடும் நீள் வரைப்பின்", திருத். 1096 : 1 - 2
சுனைபாய்தல்	சுனையில் பாய்ந்து குளித்தல்	"பைஞ்சுனைப் பாஅ யெழு பாவையர்", பரி. 8 : 112
சுனைபாய்ந்து ஆடுதல்	சுனையில் பாய்ந்து ஆடுதல்	"வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து, சுனை பாய்ந்து ஆடிற்றும் இலனென நினைவிலை'', நற்.147 : 8 - 9
சுனை அதனுள் புக்காடுதல்	சுனையில் நீராடுதல்	"கடிப்பகை நுண்கலுங் கவிரிதழ்க் குறுங்கலும், இடிக் கலப்பு அன்ன இழைந்துகு நீரும், உண்டோர் சுனை அதனுள் புக்கு ஆடினர்", சிலப். 30 : 57 - 59
சுனைப் புனலாடல்	சுனை நீரில் நீராடல்	"தாதிவர் போது கொய்யார்; தையலார் அங்கை கூப்ப நின்று, சோதி வரிப்பந் தடியார்; சுனைப் புனலாடல் செய்யார், போதிவர் கற்பக நாடு", திருக்கோ. 2: 40: 1 - 3
சுனையுள் குளித்தாடுதல்	சுனையில் நீராடுதல்	"மட மொழியவர் உடன் சுற்றிக் கடி சுனையுள் குளித் தாடுநரும்", பரி. 9 : 60 - 61
தீர்த்தம்	புண்ணிய நீர்நிலை	"காணும் பொருளும் கருதிய தெய்வமும், பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்", திருமந். 1302 : 1 - 2
தீர்த்தம் மகிழ்ந்து ஆடுதல்	ஆற்றில் மகிழ்ந்து நீராடுதல்	"பொருஇல் பொன்னித் திருநதியின், கரை வந்து எய்திப் புனித நீர், மருவும் தீர்த்தம் மகிழ்ந்து ஆடி, மருங்கு வடபால் கரை ஏறித்", திருத். 3804 : 1 - 4
துறை	நீர்த்துறை	"துறை அணிந்தன்று அவர் ஊரே'', குறுந். 50 : 3; "துறைவளர் நாட்டோடு", சீவக. 1618 : 3; "சூது அகற்றும் திருமறையோர் துறைஆடும் நிறை ஆறும், சுருதி தொல் நூல் மாதவத்தோர் உறை இடமும். . . . ", கம்ப. 4474 : 1 - 3
குடை துறை	நீராடும் நீர்த்துறை	"இன் நகையவர் சிலம்பு ஏங்க, ஏங்குவ கன்னியர் குடைதுறைக் கமல அன்னமே", கம்ப.157 : 3 - 4
பூந்துறை	பூக்கள் மலிந்த நீராடு துறை	"அள்ளற் படப்பை அகல் நிலந் தழீஇப், புள்ளொலிப் பொய்கையொடு பூந்துறை மல்கி, வான் கண்டன்ன

		வனப்பின வாகி", பெருங். 2 : 9 : 2 - 4; "மருது உயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந்துறை பெண்டி ரொடு ஆடும் என்ப", ஐங். 33 : 1 - 2
துறை ஆடுதல்	நீர்த்துறையில் நீராடுதல்	"வளையணி முன்கை வால் எயிற்று அமர் நகை இளையர் ஆடும் தளையவிழ் கானல் குறுந்துறை", ஐங். 198 : 1 - 3; "நறுவீ நாகமு மகிலு மாரமுந், துறையாடு மகளிர்க்குத் தோட் புணையாகிய, பொருபுன றருஉம் போக்கரு மரபிற்", சிறுபாண். 116-118; "அத்துறை மருங்கில் அயல் துறை ஆடும், மைத்துன மன்னன் கைப்படுத்து வந்துதன் சென்னி சேர்த்தி", பெருங். 1 : 40: 351 - 353; "நதி தோறும் துகில் புரை திரை நீரில் தோய்வன, துறை ஆடும் முகிழ் இள முலையாரின் மூழ்குவ பல - காணாய்", கம்ப. 2009: 4-8
துறை நறும் புனல் ஆடுதல்	துறையில் மணம் வீசும் நீரில் குளித்தல்	"துறை நறும் புனல் ஆடி, சுருதியோர் உறையுள் எய்தி, உணர்வுடையோர் உணர்", கம்ப. 1951: 1 - 2
துறை குடைதல்	துறையில் குடைந்து நீராடுதல்	"கன்னியர் குடை துறைக் கமல அன்னமே," கம்ப. 157 : 4
துறை நீந்துதல்	துறையில் நீந்திக் குளித்தல்	"நெடுந்துறை நீந்தி நிலை கொளல் அறியார்", பெருங். 1 : 41 : 116 - 17
துறை படிதல்	துறையில் நீராடுதல்	"நீடு நீர் வையை நெடுமால் அடி ஏத்தத் தூவி துறை படியப் போயினாள்", சிலப். 18 : 4 - 5
துறை மண்ணுதல்	நீராடுதல்	"உண்ணாப் பைஞ்ஞிலம் பனித்துறை மண்ணி", பதிற். 31 : 6
துறை மூழ்குதல்	துறைகளில் குளித்தல்	"சோம குண்டம், சூரிய குண்டம் துறை மூழ்கி", சிலப். 9 : 59
நீர்த்துறைக் கரை	நீராடு துறைகள்	"மதிமயக் குறூஉ மறுகணி கடையினும், நீர்த்துறைக் கரையினும் கூத்துறை சேரியும்", பெருங். 2 : 8 : 68 - 69
நீராட்டிடம்	குளிக்குமிடம்	"நீராட்டிடத்தின் நீக்கி", பெருங். 2 : 5 : 162
நதித் துறைநீர் ஆடுதல்	நதியில் நீராடுதல்	"மங்கல விழவு கொண்டு, வரு நதித் துறைநீர் ஆடி", திருத். 562 : 1-2
திரைநீரில் தோய்தல்	நதியின் அலைகளில் படிந்து குளித்தல்	"நதி தோறும் துகில் புரை திரை நீரில் தோய்வன", கம்ப. 2009 : 4 - 6
குடைத்தலை நதிப்படிதல்	நதியில் நீராடுதல்	"வேடர்கள் பயின்று குழுமிக் குடைத்தலை நதிப்படிய நின்றுபழி தீரநல்கு கோகரணமே", தேவா. திருஞா. 3 : 79 : 5 : 6 - 8
நீத்தநீரில் மூழ்குதல்	பொய்கையின் வெள்ள நீரில் குளித்தல்	"நீத்த நீரில் நெடியவன் மூழ்கலும், தீத்த காமத் தெறு கதிர்த் தீயினால் காய்த்து இரும்பை," கம்ப. 3744: 1 - 3
பண்ணைப் பாய்தல்	புனலில் பாய்ந்து ஆடுதல்	"வண்ண வொண்டழை நுடங்க வாலிழை, ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தெனக்", ஐங். 73 : 1 -2; "பண்ணைபாய் வோள் தண்ணறுங்கதுப்பே", ஐங். 74: 4
புனல் ஆடல்	நீராடுதல்	தீது நீங்கக் கடலாடியும், மாசு நீங்கப் புனல் ஆடியும், பட். 99 - 100; "அகன்புனல் ஆடி அம்மலர் சூடவும்", கம்ப. 158 : 3 - 4
தண்புனல் ஆடல்	குளிர்ந்த நீரில் நீராடுதல்	"போது ஆயினபோது, உன தண்புனல் ஆடல் பொய்யோ? சீதா பவளக் கொடி அன்னவள்", கம்ப. 5312 : 1 - 2
புனல் ஆடுதல்	நீராடுதல்	"நின் வெங்காதலி தழீஇ நெருநை, ஆடினையென்ப புனலே", ஐங். 71 : 2 - 3; "மாறன் உருகெழு புதியதாக வரும் கூடலவரோடு வையை, வருபுனலாடிய தன்மை புனல் ஆடுதல் பொருவுங்கால், இருமுந்நீர் வையம் படித்தென்னை", பரி. தி. 2 : 90 - 93; "நுரைத்தலை

		குரைபுனல் வரைப்பகம் புகுதொறும் புனலாடு மகளிர் கதுமெனக்குடை", பொருநர். 240 - 41; "இங்கு கதிர் முத்தினொடு பொன்மணிகள் உந்தியெழின் மெய்யுளுடனே, மங்கையரு மைந்தர்களு மன்னு புனலாடி மகிழ் மாகறலுளான்", தேவா. திருஞா. 3 : 72 : 4 : 1 - 4; "காலைமட வார்கள்புன லாடுவது, கௌவை கடி யார்மறுகெலாம் மாலைமண நாறு பழையாறை", தேவா. திருஞா. 3: 73 : 3 : 1 - 3; "செம்மல்அஞ் சிறுவரைச் செவிலியர் காப்பப், பூம்புனல் ஆடு தொறும் புலம்பும் புதல்வரைத்", பெருங். 1 : 41 : 85 - 86; "கான் உள; புனல் ஆடக் கங்கையும் உனது அன்றோ?," கம்ப. 1981 : 5 - 6
புனல் ஆடுநர்	புனலில் நீராடுபவர்	"தண்புனல் ஆடுநர் ஆர்ப்பொடு மயங்கி வெம்போர் மள்ளர் தெண்ணை கிறங்க", பதிற். 90 : 43 - 4
புனல் குடைதல்	புனலில் குடைந்து நீராடுதல்	"தொடர்ந்தொளிர் கிடந்ததொரு சோதிமிகு, தொண்டை யெழில் கொண்டதுவர்வாய் மடந்தையர் குடைந்த புனல் வாசமிக, நாறு மயிலாடுதுறையே", தேவா. திருஞா. 3: 70 : 6 : 5 - 8; "புதுப்புனல் குடையும் மாதர்", கம்ப. 42 : 1; "வைகலும் புனல் குடைபவர் வானர மகளிர்", கம்ப. 3726 : 2
புனல் குடைந் தாடுதல்	நீரின்கண் மூழ்கி விளையாடுதல்	"உரையினி மாதராய் உண்கண் சிவப்பப், புரைதீர் புனல் குடைந்து ஆடினோ மாயின், உரவுநீர் மாகொன்ற வேல்ஏந்தி ஏத்திக், குரவை தொடுத் தொன்று பாடுகம்வா தோழி", சிலப். 24 : 7
புனல் தோய்தல்	நீராடுதல்	"தொல் வகைக் குலத்தின் வந்தான், துன்பத்தால் புனலும் தோய்ந்து," கம்ப. 3540 : 5 - 6
புனல் படிதல்	நீரில் மூழ்கி எழுதல்	"நீறுதோய் மணிமேனியர், நெடும் புனல் படிந்தார்," கம்ப. 2033 : 3 - 4
புனல் பாய்தல்	நீரில் பாய்தல்	"ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர், குன்றுஏறிப் புனற் பாயின்", புறம். 352 : 5 - 6; "வாலிழை மடமங்கையர் தண் பொருநைப் புனல் பாயும்", புறம். 11 : 2 - 5; "உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல் பொய்த்தல் அறிந்தென் புலந்து", குறள். 1287
புனல் மண்ணுதல்	புனல் நீரில் குளித்தல்	"கந்தம் மலிபூம் புனல் மண்ணி, மணலில் கறந்து பால் உகுத்து, வந்த பரிசே செய்கின்றான்", திருத். 1252: 5 - 7
புனல் மண்டியாடல் புரிதல்	புனலில் ஆடுதல்	"போந்தது வையைப் புனல் புனல் மண்டி யாடல் புரிவான் சன மண்டித்", பரி. 10 : 8 - 10
புனல் மூழ்குதல்	நீராடுதல்	"வைகறை உணர்ந்து போந்து புனல் மூழ்கி வாயும் கட்டி, மொய்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னி", திருத். 559 : 1 - 4; "தொண்டர் அன்பு எனும் தூயநீர் ஆடுதல் வேண்டி, மண்டு தண்புனல் மூழ்கிய ஈரத்தை மாற்ற", திருத். 520 : 1 - 2; "படை நெடுங்கண் வாள் உறைபுக, படர்புனல் மூழ்கி", கம்ப. 463 : 1 - 2
புனல் வாய்ப் பாய்ந்தாடுதல்	ஆற்றுநீரில் குதித்து நீராடுதல்	"செந்தாமரைப்பூ உறநிமிர்ந்த செந்நெல்லின், பைந்தார்ப் புனல் வாய்ப்பாய்ந்(து) ஆடுவாள் - அந்தார், வயந்தகம் போல் தோன்றும் வயலூரான் கேண்மை", திணை. நூற். 128 : 1 - 3
புனலாட்டு	புனலில் ஆடும் நீராட்டு	"பொன்துஞ்சு மார்பன் புனலாட்டிடைப் புன்கண் எய்தி, நின்றெஞ்சு கின்ற ஞமலிக்கு அமிர்து ஈந்த வாறும்", சீவக. 14 : 1 - 2
புனலாட்டு அமர்தல்	நீராடுதலை விரும்புதல்	"குடகாற்று எறிந்து கொடி நுடங்கு மறுகில், கடைகழி மகளிர் காதல் அம் செல்வரொடு, வருபுனல் வையை மருதோங்கு முன்துறை, விரிபூந்துருத்தி வெண்மணல் அடை கரை, ஓங்குநீர் மாடமொடு நாவாய் இயக்கிப், பூம்புணை தழீஇப் புனல் ஆட்டு அமர்ந்து", சிலப். 14 : 70 - 75

புனலிடைப் புக்கு முழுகிப் போந்தல்	நதிநீரில் புகுந்து நீராடி வெளியேறுதல்	"புக்கனன் புனலிடை, முழுகிப் போந்தனன், தக்கநல் மறையவன் சடங்கு காட்ட," கம்ப. 2455 : 1 - 2
புனல் நயந் தாடுதல்	நீரில் விரும்பி ஆடுதல்	"தண்பதம் கொண்டு தவிர்ந்த இன்னிசை, ஒண் பொறிப்புனைகழல் சேவடிபுரளக் கருங் கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று, இரும் பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப், புனல் நயந்தாடும் அத்தி", அகம். 376 : 6 - 10
அரும்புனலாடுதல்	நீராடுதல்	"தோன்றல்! நீ ஆய கங்கை அரும் புனல் ஆடினை", கம்ப. 1940 : 2 - 3
கங்கை அரும் புனல் ஆட்டுதல்	கங்கையின் அரிய நீரினால் முழுக் காட்டுதல்	"நானம் நன்கு உரைத்தார், ஒளிர் வானிடை ஆன கங்கை அரும்புனல் ஆட்டினார்," கம்ப. 2383 : 1 - 2
கதுமெனக் குடைந்து புனலாடுதல்	கடுகக்குடைந்து விளையாடுதல்	"புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்," பொருநர். 241
காமர் கடும்புனல் ஆடுதல்	விரும்பத்தக்க நீரில் ஆடுதல்	"காமர் கடும் புனல் கலந்தெம் மொடு ஆடுவாள்", கலித். 39 : 1
கான்யாற்றுக் கடும்புனலாடுதல்	காட்டாற்றில் நீராடுதல்	"ஞால மாந்தரை நாணியன்ன நடுங்கு செலற் கான் யாற்றுக் கடும் புனல்ஆடி", பெருங். 2 : 14 : 7 - 8
தண்புனல் ஆடுதல்	நீராடுதல்	"அம்ம வாழியோ மகிழ்ந நின் மொழிவல் பேரூர் அலரெழ நீரலைக் கலங்கி நின்னொடு தண் புனலாடுதும்", ஐங். 77 : 1 - 3
சீதப்புனலாடுதல்	தண்ணிய நீரில் ஆடுதல்	"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக் கோதை குழலாட வண்டின் குழாமாடச் சீதப்புனலாடிச் சிற்றம் பலம்பாடி", திருவாச. திருவெம். 7 : 14 : 1 - 3
தண்புனல் திளைத்தல்	நீராடுதல்	"திளைக்கும் தண்புனல் சூழ்திருவாரூரான், இளைக்கும் போதெனை யேன்று கொளுங்கொலோ" தேவா. திருஞா. 3 : 45 : 7 : 3 - 4
தீம்புனலாடுதல்	மகிழ்வைத் தரும் நீரில் குளித்தல்	"தீம்புன லாயமாடும், காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே", பதிற். 48 : 17 - 18
துறைப்புனலாட்டல்	பொய்கைத்துறையில் நீராட்டல்	"கையகம் புக்கது அன்றிஇவ் வையகத்து அறத்தோடு புணர்ந்த துறைப்புனல் ஆட்டத்", பெருங். 1 : 47 : 116 - 117
படர்புனல் மூழ்குதல்	நீரில் குளித்தல்	"படை நெடுங்கண் வாள் உறைபுக, படர் புனல் மூழ்கி", கம்ப. 463 : 1 - 2
பாய்புனல் படிதல்	பாய்ந்து செல்லும் ஆற்று நீரில் முழுகுதல்	"சேல் பாய்வன; கயல் பாய்வன; செங்கால் மட அன்னம் போல், பாய் புனல், மடவார் படி நெடு நாடு அவை போனார்", கம்ப. 1933 : 5 - 8
புதுப்புனலாடல்	புதியதாகவரும் நீரில் ஆடுதல்	"அலமரல் ஆயமொடு அமர்துணை தழீஇ, நலமிகு புதுப்புனலாடக் கண்டோர்", ஐங். 64 : 1-2
புதுப்புனல் குடைதல்	ஆற்றின் புது வெள்ளத்தில் நீராடுதல்	"புதுப்புனல் குடையும் மாதர் பூவொடு நாவிபூத்த கதுப்பு உறு வெறியே நாறும்", கம்ப. 42 : 1 - 3
மலைப்புதுப் புனல் உற்றாடுதல்	அருவி நீரில் ஆடுதல்	"எற்றொன்றும் காணேம் புலத்தல் அவர்மலைக், கற்றீண்டி வந்த புதுப்புனல், கற்றீண்டி வந்த புதுப்புனல் மற்றையார் உற்றாடின் நோம் தோழி நெஞ்சன்றே;" சிலப். 24 : (4)
பூம்புனல் பாய்ந் தாடுதல்	அழகிய நீரில் ஆடுதல்	"வாருருவப் பூண்முலையீர், வாயார நாம்பாடி ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்!", திருவாச. திருவெம். 15 : 7 - 8

வருபுனல் ஆடுதல்	புதுப்புனலில் குளித்தல்	"வெருவரு கொல்யானை வீங்கு தோள்மாறன் உரு கெழு கூடலவரொடு வையை வருபுனல் ஆடிய தன்மை பொருவுங்கால்," பரி.தி. 2 : 91 - 92
அரும்புனலாடமை	நீராடமை	"ஓவாது எழுமடங்கு உட்குவரத் தோன்றி, அரும்புனல் ஆடா அகவயின் ஒழிந்த", பெருங். 1 : 43 : 122 - 123
பொய்கை ஆடல்	பொய்கையில் நீராடுதல்	"பூக்கமழ் பொய்கை ஆடச் சென்றோன்", மணி. 17 : 32
பொய்கை குடைதல்	பொய்கையில் குளித்தல்	"பூத்திகழும் பொய்கை குடைந்து", திருவாச. திருவெம். 12 : 7
பொய்கையுள் குளிர்நீர் குடைதல்	மலர்களையுடைய பொய்கையின் கண் குளிர்ந்த நீரிலாடுதல்	"அரத்தக் கொப்புளொடு வருத்தங் கொண்ட கொல், அளிமலர்ப் பொய்கையுட் குளிர்நீர் குடையக்", பெருங். 3 : 8 : 16 - 17
பொய்கைபுக்கு விளையாடுதல்	பொய்கையில் ஆடிக் குளித்தல்	"நற்பூம் பொய்கை புக்கு விளையாடும்", பெருங். 3 : 9 : 34
பொய்கையுள் புகுதல்	பொய்கையுள் நீராடப் புகுதல்	'போது விரி பொய்கையுட் புக்கனர்", பெருங். 2 : 5 : 113
பொய்கையுள் விளையாட்டு விரும்புதல்	விரிந்த பரந்த நீரை உடைய பொய்கையுள் விளையாட்டை விரும்புதல்	"புரிந்த சுற்றமொடு புணர்ந்துடன் கெழீஇ, விரிநீர்ப் பொய்கையுள் விளையாட்டு விரும்பிய மறு நீங்கு சிறப்பின் மதிலும் சேனை", பெருங். 1 : 40 : 1 - 3
தடம் பொய்கை புக்குமுகேரென்ன கையாற் குடைதல்	பொய்கையில் குளித்தல்	"மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக் கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி'', திருவாச. திருவெம். 11: 1-2
பொங்குநீர்ப் பொய்கை புகுதல்	மிகுந்த நீரையுடைய குளத்தில் நீராடப் புகுதல்	"பொங்குநீர்ப் பொய்கை புக்கனர் ஒருசார்", பெருங். 1 : 43 : 152
மஞ்சனம் ஆடுதல்	நீராடுதல்	"மழை பொதுத்து ஒழுகுநீரால் மஞ்சனம் ஆடுவாரும்", கம்ப. 5018 : 7 - 8
மஞ்சன சாலை	நீராடுமிடம்	"திரைபொரு நீரது மஞ்சன சாலை", திருமந். 1725 : 1; "வார்ந்த கண்ணருவி மஞ்சன சாலை", திருவி. 153 : 3
மஞ்சன சாலை புகுதல்	நீராடும் மண்டபத்தில் புகுதல்	"மாலையும் தாரும் பொங்க, மஞ்சன சாலை புக்கான்", திருத். 160 : 7 - 8
மடுவில் புகப் பாய்ந்து புனல் ஆடுதல்	நீராடுதல்	"பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து........... பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலெரெம்பாவாய்", திருவாச. திருவெம். 13 : 5 - 8
சுருங்கைத் தூம்பு	இல்லங்களில் சிந்துகின்ற நீரானது செல்லுமாறு கற்களால் மறைத்து அமைக்கப்பட்ட சாக்கடை	"சுருங்கைத் தூம்பின், மனை வளர் தோகையர் கருங்குழல் கழீஇய கலவை நீரும்", மணி. 28 : 5 - 6
வாவியுள் குடைந்து ஆடுதல்	குளத்தில் குடைந்து நீராடுதல்	"வரிக் கோல வண்டு ஆட மாதரார், குடைந்து, ஆடும் மணி நீர் வாவி", திருத். 2004 : 3 - 4
மணிவாவிஉள் இழிந்து புனல் புகுதல்	குள நீரில் இறங்கிக் குளித்தல்	". . . . மணிவாவிஉள் இழிந்து புனல் புக்கார் உலகு உய்ய மகப் பெற்றார்," திருத்.1962 : 3 - 4
வாவி மருவி ஆடுதல்	வாவியில் நீராடுதல்	"மருவி ஆடும் வாவி தோறும் வான யாறு பாயும்", கம்ப. 3941 : 1 - 2

2.3 நீராடல் பொருட்கள்

அ. நீர்

நீராடுதலுக்குத் தமிழர் சிறந்த நீரைப் பயன்படுத்தினர். இவை தூய்மையானதாக, மணப்பொருள் கலந்ததாக, பாதுகாக்கப்பட்டதாக, புதுநீராக எனப் பலவாறு அமைந்தன.

அணிநீர்	மணம் கலந்த தூய நீர்	"ஆசனத்து அணிநீர் ஆட்டி", திருத். 161 : 5
ஆசறு நறுநீர்	நீர் ஆடற்குப் பயன்படுத்திய நீர்; அந்தணரால் மந்திரம் ஓதித் தூய்மைச் செய்யப்பட்ட புண்ணிய நீர்	"செங்கேழ்க் கையில் சிறந்து பாராட்டி ஆசறு நறுநீர் பூசனை கொளீஇ", பெருங். 2 : 4 : 171 - 172
ஆடற்கு நீர்	ஆடுதற்கு ஏற்ற நீர்	"கழையமுிய நீண்டகன்ற கண்ணாளைக் காளை... ஆடற்கு நீர் அமைந்தது ஆறு", பரி. 11 : 46 - 49
ஆடு நீர்	நீராடுவதற்குரிய நீர், மன்னன் நீராடுவதற்காகக் கொணரப்பட்ட தூய நதிகளின் நீர், சந்திரகாந்தக் கல்லின் நீர் போன்றவை	"நீடு, நீர்மணி நீரும் அல்லவும், ஆடு நீரன அத்து மண்களும்", சீவக. 2418 : 1 - 2
ஈரநீர்	குளிர்ந்த நீர்	"ஈர நீர் படிந்து, இந்நிலத்தே சில கார்கள் என்ன, வரும், கரு மேதிகள்", கம்ப. 56 : 1 - 2
ஊறின நன்னீர்	கூந்தல் நலம் பெறுவதற்காகப் பத்துத் துவர், ஐந்து விரை, முப்பத்திரண்டு ஓமாலிகையிட்டு ஊறவைத்த நன்னீர்	"பத்துத் துவரினும் ஐந்து விரையினும், முப்பத்து இரு வகை ஓமாலிகையினும், ஊறின நல் நீர் உரைத்த நெய்வாசம் நாறு இருங் கூந்தல் நலம் பெறவாட்டிப்", சிலப். 6 : 76 - 79
கடாரநீர்	பச்சிலைகளையும், வாசனைப் பொருள்களையும் சேர்த்துக் காய்ச்சின நீர்	"கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர், பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால், ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட", பெரியாழ். 1 : 2 : 6 : 1 - 3
சந்தன நறுநீர்	சந்தனங் கலந்த நறிய மணங்கமழுகின்ற நீர்	"செம்முது செவிலியர் கைபுனைந் தேத்திச், சந்தன நறுநீர் மண்ணுறுத்தாட்டி", பெருங். 1 : 34 : 187 -188
தண்பதம்	புதுப்புனல்	"தண்பதம் கொள்ளும் தலைநாள் போல", சிலப். 6 : 160
தீர்த்த நீர்	தூய நீர்	"அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய் அருள் நோக்கில் தீர்த்தநீராடிக் கொண்டாய்", தேவா. திருநா. 95 : 8 : 1
தூநீர்	தூய நீர்	துகலிடைச் சுற்றித் தூநீர் ஆட்டி நல்லன விரைமலர் நறும்புகை விளக்கவி", 11ஆம்திரு. 512 : 50 - 51
தூய்நீர்	புனித நீர்	தூர்க்கின்ற மலர்மாரி தொடரப் போய், பாற்கடலில் தூய் நீர் ஆடி, தேர்க் குன்ற", கம்ப. 9900 : 3 - 5
தூய நீர்	தூய்மையான நீர்	"தாயரின் முனிவர் தம் தருமப் பன்னியர் தூயநீர் ஆட்டினர் துயரம் நீக்கினர்", கம்ப. 2462 : 2 - 3

தெண்ணீர்	தெளிந்த நீர்	"திங்களைத் தெளித்திட் டன்ன பாற்கடற் றிறை செய்தெண்ணீர் வெங்கள் விட்டலர்ந்த கண்ணி விண்ணவன் உரிமை தன்னால் மங்கல வகையின் ஆட்டி மணியணி கலங்கள் சேர்த்திப்", சீவக. 1169 : 1 - 3
நுண்ணிறைத் தெண்ணீர்	தெளிந்த நீர்	"புறவயிற் பொம்மென வெம்பி அகவயின் தண்மை அடக்கிய நுண்ணிறைத் தெண்ணீர்", பெருங். 1 : 57 : 94 -95
தெள்ளறல் நீர்	தெளிந்த நீர்	"தெள்ளறல் நீர் சொரிந்து ஆட்டினர்", சீவக. 1476 : 2
தெளித்தலைத் தண்ணீர்	குளிர்ந்த நீர்	"இருகரை மருங்கினும் புள்ளெழுந்து இயம்பத், தெளித்தலைத் தண்ணீர் குளித்தனன் ஆடி" பெருங். 1 : 53 : 85 - 86
தேங்கமழ் நறுநீர்	மணம் வீசும் நீர்	"தேங்கமழ் நறுநீர் திறவதின் பற்றி", பெருங். 2 : 5 : 50
நன்னீர்	நல்ல நீர்	"வாச நெய் பூசி நன்னீர். . . . துன்னினர் ஆட்டி", சீவக.1299 : 2 - 3
நான நீர்	மணமிக்க நீர்	"நானநீரிற் கலந்து நலம் கொள் பூம்பட்டு ஒளிப்ப", சீவக. 923 : 1
நறுநீர்	நல்ல மணமுள்ள நீர்	"நானமுரைத் தாங்குநறு நீர்அவனை யாட்டி, மேனிகிளர் வெண்துகிலும் விழுப்பொனியல் நூலும்...", சீவக. 2024: 1 - 2; "நான வெண்ணெய் கதுப்புரைத்து நறுநீராடி", சீவக. 2692 : 2
நிறைத்துவர் நறுநீர்	துவர் ஊறவைத்த நறிய நீர்	"நிறைத்துவர் நறுநீர் சிறப்பொடு ஆடிய", பெருங். 1 : 57 : 89
புனைந்த காப்புடை நறுநீர்	பொலிந்த காவலை யுடைய நறிய நீர்	"வாச வெண்ணெய் பூசிப் புனைந்த, காப்புடை நறுநீர் காதலினாடி", பெருங். 1 : 57 : 86 - 87
மங்கல நீர்	சிறந்த நீர்	"மங்கல நீர்ச் சுனை படிந்து மனையின் வைகி," திருத். 705 : 4 - 5
மண்ணுநீர்	குளித்தற்குரிய நீர்	"மங்கல மண்ணு நீர் ஆவன என்று," பெருங். 1 : 42 : 138
திருமண்ணு நறுநீர்	குளித்தற்குரிய மணமுள்ள நீர்; மங்கல நீராடு வதற்கு உரிய பெருமையினை உடைய மங்கல நறுநீர்	"பெருமகன் ஆடும் பீடுகெழு சிறப்பின், திருமண்ணு நறுநீர் விரைவதின் வருகென . ." பெருங். 2: 5: 3 -4
மண்ணும் நீர்	மங்கல நீராடலுக்கு வேண்டிய நீர்	"மண்ணும் நீர் முதல் மங்கலங்களும், எண்ணும் பொன்முடி ஆதியாவையும்," கம்ப. 4118 : 1 - 2
புதுநீர்	குறிய நுரைகளைச் சுமந்து கொண்டு நறிய மலர்களுடனே ஆற்றில் பொங்கி வருகின்ற புதுநீர்	"குறு நுரை சுமந்து நறுமலர் உந்திப், பொங்கி வரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம், நற். 68 : 4 - 5; "புதல்வ ராணை புதுநீராட் டெனச் சிறாஅர் மொய்த்த அறாஅ விருப்பிற்", பெருங். 1: 38 : 23 - 24
வாச நன்னீர்	பலவகை நறுமணப் பொருட்கள் கலந்த மங்கலமாகிய கங்கை நீர்	"கங்கையின் களிற்றின் உச்சிக் கதிர்மணிக் குடத்தில் தந்த, மங்கல வாச நன்னீர் மணி நிறங் கழீஇயது ஒப்ப ", சீவக. 623 : 1 - 2
வாச நீர்	மணமுள்ள நீர்	"வாசநீர்க் குடை மங்கையர்", திருத். 58 : 1, "பூசநீர் பொழியும் புனற் பொன்னியிற் பன்மலர், வாச நீர்க்குடை வாரிடர் தீர்க்கும் வலஞ்சுழித் தேசநீர்திரு நீர்சிறு மான் மறியீர் சொலீர்", தேவா. திருஞா. 2: 2: 6: 1 - 3

விரைஅடுத்த தூநீர்	மணம் கலந்த தூயநீர்	"வாச நெய் ஊட்டி மிக்க, மலர்விரை அடுத்த தூநீர்ப் பாசனத்து அமைந்த பாங்கர்," திருத். 161: 1 - 3
புதுப்புனல்	ஆற்றில் வரும் புதிய நீர்	"ஏர் தரு புதுப்புனல் உரிதினின் நுகர்ந்து", அகம். 256 : 1
மஞ்சனப் புனல்	நீராட்டுதற்குரிய நீர்	"மாறுஇல் ஊண்அமுதும் நல்ல மஞ்சனப் புனலும் சென்னி," திருத். 816 : 1 - 2
தூய் மஞ்சனம்	தூய்மையான நீர்	"வல்விரைந்து திருப்பள்ளித் தாமமும் தூய் மஞ்சனமும், ஒல்லையினில் முன்புபோல் உடன்கொண்டு வந்து அணைந்தார்", திருத். 797: 3 - 4
மங்கல மஞ்சனம்	புனிதமான நீர்	"கங்கை முதலிய கலந்த நீரினால், மங்கல மஞ்சனம் மரபின் ஆடியே", கம்ப. 1207 : 3 - 4
வாசத் திருமஞ்சனம்	புனிதமான தூய்மையான நீர்	"வாசத் திருமஞ்சனம் பள்ளித்தாமம் சாந்தம்", திருத். 3776 : 1 - 2

ஆ. பிறபொருட்கள்

நீரில் குளித்துத் தம் உடலைச் சுத்தம் செய்த பண்டைத் தமிழர்கள் குளிக்குமுன் எண்ணெய் தேய்த்தும், குளிக்கும்போது மேலும் பல பொருட்களைப் பயன்படுத்தி உடலையும் கூந்தலையும் சுத்தம் செய்தும தம் உடல் நலத்தைப் பேணினர். எண்ணெய் தேய்த்துக் குளித்தல் நெய்யணி என்று அன்று குறிப்பிடப்பட்டது. தனிமனிதரிடம் தொடங்கிய இந்த நெய்யணிதல் அரசர் குடும்பத்திலும் இடம்பெற்ற நிலையில் நீராட்டு விழாவென, சமுதாய விழாவாகப் பின்னர் இது வளர்ச்சியுற்றதை இவர்தம் வாழ்வியல் செய்திகள் புலப்படுத்து கின்றன. அழுக்கை நீக்குவதற்கு மட்டுமல்லாது கூந்தலின் நிறம் பேணுவதற் காகவும், வளர்ச்சிக்காகவும், வாசனைக்காகவும், உடலின் இளமை பாதுகாக்கவும் என, இவர்கள் இப்பொருட்களை நீராடும்போது பயன்படுத்தின மையும் தெரிகிறது. இவ்வாறு பயன்படுத்திய பொருட்களாக மண்முதல் பல் வகைப்பட்ட தாவரங்களின் பல பகுதிகளும் அமைந்தன. "எண்ணெய் குளியல் உடல் வலிமை நல்ல உறக்கம் உடற்கட்டு இவற்றை அளிக்கிறது. வாத நோய்களைத் தவிர்க்கிறது. முதுமையைப் போக்குகிறது. முக்கியமாகத் தலை, காது, பாதங்களில் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்" என்பது இன்றைய மருத்துவர் கருத்து (தினமலர், 13-8-2006. ப. 14).

கருங்குழல் கழூஉவுதல்	கூந்தலைப் பசை நீங்க தேய்த்துக் குளித்தல்	"கருங்குழல் கழீஇய கலவை நீரும்", மணி. 28 : 6
கூந்தல் நலம்பெற ஆட்டுதல்	ஊறவைத்த நல்ல நீர் கொண்டு மணமிக்க கூந்தல் நலம்பெறும் படி சுத்தப்படுத்துதல்	"ஊறின நல் நீர் உரைத்த நெய்வாசம் நாறு இருங் கூந்தல் நலம் பெற ஆட்டி,"சிலப். 6 : 78 - 79
நறும்புனல் ஆன கோது அற ஆட்டுதல்	நறுமண நீரால் அழுக்குப் போக நீராட்டுதல்	"நான நெய் நன்கு உரைத்து, நறும் புனல் ஆன கோது அற ஆட்டி", . . . ", கம்ப. 4920 : 1 - 2
அத்து உரிஞ்சி ஆட்டுதல்	துவரால் தேய்த்துக் குளிப்பாட்டுதல்	"நீடு நீர்மணி நீரும் அல்லவும், ஆடு நீரன அத்து மண்களும், ஊடு மின்னனார் உரிஞ்சி ஆட்டினார்", சீவக. 2418 : 1 - 3
அத்து முறை யுரிஞ்சி நறுநீர் ஆட்டுதல்	துவர் கொண்டு தேய்த்து நல்ல நீரில் நீராட்டுதல்	"அத்துமுறை யுரிஞ்சி ஆயிரத்தெண்குடம், முத்துறழ் நறுநீர் முறைமையின் ஆட்டி", பெருங். 1 : 42 : 135 - 136
அறுகெடுத்தல்	அறுகம்புல் எடுத்தற்கு முற்படுதல். ஒருவரை மங்கல நீராட்டுவார் முதற்கண் அறுகம் புல்லை நெய்யில் தோய்த்து எடுத்து அதனால் நெய் யேற்றிப் பின் சுண்ணந் திமிர்ந்து நீராட்டுதல் மரபு (ஆதீன உரை)	"அறுகெடுப்பார் அயனும் மரியும், அன்றி மற்று இந்திர னோடு அமரர்", திருவாச. திருப்பொற். 5 : 1 - 2
எண்ணெய் உரைத்தல்	நீராடு முன்பு எண்ணெய் தேய்த்தல்	"உரைத்த வெண்ணெய்யும் நுரைப்பமல் அரைப்பும்", பெருங். 1 : 41 : 31
எண்ணெய் கழல விழைதுகள் பிசைதல்	புனலாடச் செல்வோர் எண்ணெய் நீங்கும் படி அரைப்பினால் தேய்த்துக் கொள்ளுதல்	"மண்ணார் மணியின் வணர்குரல் வண்டார்ப்பத் தண்ணந் துவர்பல வூட்டிச் சலங்குடைவார், எண்ணெய் கழல விழைதுகள் பிசைவார்", பரி. 10 : 89 - 91

நான வெண்ணெய் கதுப்புரைத்து நறு நீராடுதல்	எண்ணெய் தேய்த்து, வாசனையுடைய நீரில் குளித்தல்	"நானவெண்ணெய் கதுப்புரைத்து, நறு நீராடி", சீவக. 2692 : 2
வாச எண்ணெய் பூசி ஆடுதல்	வாச எண்ணெய் பூசி, பின் குளித்தல்	"பெறற்கரும் வாசவெண்ணெய், அரிவையர் பூசியாடி . . . . . .", சீவக. 2737 : 2 -3
எண்ணெய் நீவுதல்	எண்ணெய் தேய்த்தல்	"எண்ணெய் நீவிய, சுரிவளர் நறுங்காழ்... மண்ணி", குறிஞ். 106 - 108
வாச வெண்ணெய் பூசி, காப்புடை நறுநீர் ஆடுதல்	எண்ணெய் தேய்த்து நன்கு பாதுகாத்தலை யுடைய நீரில் குளித்தல் (அரசன் நுகருவன வற்றைக் காப்பென்றல் மரபு, சீவக. 1873 நச்சி. உரை)	"செல்வக் காளை வல்லவன் வகுத்த, வாச வெண் ணெய் பூசிப்புனைந்த , காப்புடை நறுநீர் காதலின் ஆடி", பெருங். 1 : 57 : 85 - 87
ஓமாலிகை	குளிப்பதற்குப் (நீரில் ஊற வைக்கப்பட்டு) பயன்படுத்தப்படும் மணப்பொருட்கள்	"இலவங்கம் பச்சிலைக்கச் சோலம் இருவேரி, மலையிரு வேரி வகுளஞ் சுரபுன்னை, ஏலந்தக்கோலம் மதா வரிசி சாதிக்காய், நாகணமஞ்சட்டி நறும்பிசின் குக்குலு, மாஞ்சி கண்டில் வெண்ணெய் தீம்பு, நன்னாரி, அடவிக் கச்சோல மரத்தை சரளம் புழு காரியக் கொட்டங் கொட்டந் தகரம் அதிமதுர முத்தக்கா சாய்ந்தவிலாமிச்சம், சயி லேக நாகப்பூச் சண்பக மொட்டென்று, முழுதுணர்ந் தோரோதிய முப்பத்திரண்டே, விதிவகை யோமாலி கை," சீவக. 623 (நச்சி. உரை)
ஒப்புமுறை யமைந்த ஓமாலிகை	அளந்து கூட்டும் முறையால் அமைந்த ஓமாலிகை, இலவங்கம் முதலிய முப்பத்திரண்டு வகைப்பொருள்களை யும் நூல் கூறுமளவாற் கூட்டி இயற்றும் மணநீர் (கழக உரை)	"கூற்றொலி கேளாக் கொள்கைத் தாகி, அரைப்பமை சாந்தமு முரைப்பமை நானமும், ஒப்புமுறை யமைந்த வோமா லிகையும்", பெருங். 1 : 47 : 125 - 127
முப்பத்திரு வகை ஓமாலிகை	கூந்தல் நலம் பெறுவ தற்காகக் குளிக்கும் நீரில் ஊற வைக்கப் பட்ட முப்பத்திரண்டு வகையான பொருள் கள். அவையாவன, "இலவங்கம், பச்சி லை, கச்சோலமேலம், குலவிய நாகணங் கொட்டம் - நிலவிய, நாக மதாவரிசி தக் கோல நன்னாரி, வேக மில் வெண்கோட்ட மேவு சீர் - போகாத, கத்தூரி வேரியிலா மிச்சங் கண்டில் வெண்ணெய், ஒத் தகடு நெல்லி யுயர் தான்றி - நுத்தமொடு, வண்ணக்கச்சோல மரேணுகமாஞ்சியுடன் எண்ணுஞ் சயிலேக மின் புழுகு கண்ணு	"பத்துத் துவரினும் ஐந்து விரையினும் முப்பத்திரு வகை ஓமாலிகையினும் ஊறின நல் நீர் உரைத்த நெய்வாசம் நாறிரும் கூந்தல் நலம் பெற ஆட்டி", சிலப். 6 : 76 79

நறும், புன்னை நறுந் தாது புலியுகிர் பூஞ் சரளம், பின்னி தமாலம் பெரு குவளம் - பன்னும், பதுமுக நுண்ணேலம் பைங்கொடு வேரி, கதிர்நகையா யோ மாலிகை'' என்பது அடியார்க்கு நல்லார் உரை. இந்த முப்பத் திரண்டு வகைப் பொ ருட்கள், பலவகைப் பட்ட தாவரங்களின் காய், கனி, இலை, பூ, வேர், பட்டை போன்றன.	
இலவங்கம் : மணப் பொருளாகவும் மருந்துப்பொருளாக வும் பயன்படும் பொ ருள். கிராம்பு தைலத் திற்கு அழுகல் அகற்றும் தன்மை யும் கிருமி ஒழிக்கும் தன்மையும் இருப்ப தால் பல மருந்துப் பொருள்களில் கிராம்புத் தைலம் சேர்க்கப்படுகிறது. வாசனைப் பொருள் களிலும் உடல் சுத்தி கரிப்புத் திரவங்களி லும் கீழ்த்திசை சிறப்பு மணச்சோப்புகளிலும் கிராம்புத் தைலம் பயன்படுவது யாவரும் அறிந்த விஷயம் (ந. பொ. ப. 98)	"காழகி னூறுங் கட்சா லேகமும் கோழிரு வேரியும் பேரில வங்கமும்", பெருங். 3: 17: 136: 137; "ஏலம் இலவங்கம் எழிற் கனகம், மிகவுந்தி வரும் நிவவின் கரைமேல்'', தேவா. சுந்தர. 27: 1 - 2; ''நாளிகேரம் இலவங்கம் நரந்தம்," திருத். 239 : 2
பச்சிலை: 32 வகை ஓமாலிகையுள் ஒன்று	''புலராப் பச்சிலை இடை இடுபு தொடுத்த மலரா மாலைப் பற்று கண்டன்ன", புறம். 33 : 12
கச்சோலம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.	
ஏலம் - ஏலக்காய்; ஏலவரிசி - ஏலக்காயின் உள்ளரிசி. வாசம்தரும் பண்டப் பொருள். நறுமணச் சரக்கு களின் அரசி என்று இது அழைக்கப்படும். மருந்துப் பொருளாக வும் பயன்படுகிறது. உணவில் சேர்க்கப் பட்ட மணப்பொருளாக வும் பயன்படுகிறது (ந.பொ.ப. 49).	''ஏலம் கமழ்தார் ராகுலன் தன்னை'' மணி. 23 : 68; ''நாகத்து அல்லியும் ஏலத்திணரும் '', பெருங். 1 : 51 : 24., "தகரம் தக்கோலம் ..... ஏலம் எனப்பகரும் வாசம். . . . . தரும் பண்டப் பெயரே'', நிக. திவா. 763; ''பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்த செல்வர், இருந்த இடம் வினவில் ஏலங்கமழ் சோலையின வண்டியாழ் செய்", தேவா. திருஞா. 2: 71 : 1: 2 - 3; "தாளின் ஏலமும் தமாலமும் தொடர்தரு சாரல்", கம்ப. 2047 : 3 - 4

வெற்றிலையில் சேர்த்துண்ட பஞ்ச வாசப்பொருட்களுள் இது ஒன்று.

நாகணம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. நறும் பண்ட வகை என்கிறது தமிழ்ப் பேரகராதி (ப.2195). "நாகணத்தினால் சிரஸ்தாபம், சல தோஷம் தலையிற் குத்தலுடன் இடிப்பு, மலட்டு நோய், வீக்கம், நீங்காத கண்ணோய், பெருவயிறு இவைகள் ஏகும் என்க.

<u>உபயோகிக்கும் முறை:-</u> இது பார்வைக்கு நத்தையினது மேலோட்டின் வாய் மூடித்துண்டைப் போலிருக்கும். இதனை மணலுடன் கூட்டிப் பொன்மேனியாக வறுத்து எடுக்க ஒருவிதமான வாசனைக் கிளம்பும். இதனைப் பெரும்பாலும் உள்ளுக்கு உபயோகிப்பதில்லை. இது உஷ்ண வீரிய குணமுடையதாதலால் சீதள சம்பந்தத்தை நீக்கும் பொருட்டுக் காய்ச்சும் படியான முடித்தைலத்தில் சேரும். பொது வாகச் சாம்பிராணி, கஸ்தூரி மஞ்சள், பச்சைக் கிச்சிலிக் கிழங்கு, புனுகுச்சட்டம், வாசனைக் கிளம்ப வறுத்தெடுத்த நாகணம் இவற்றை இடித்துத் தூளாக்கி முடித் தைலங்களில் காய்ச்சி இறக்கும்தருவாயில் போட்டு ஆறவிட்டு வடித்து எடுப்பதுண்டு. இதனால் தைலத்திற்கு நல்ல வாசனையும் உஷ்ண வீரியமும் உண்டாகும் (ப.கு. வி. ப. 141)

"ஒண்காழ்த் துருக்கமு மொளி நாகுணமும், காழகி னூறுங் கட்சா லேகமும்", பெருங்.3 : 17 : 135 - 136

கொட்டம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று

"குங்குமக் குற்றியுங் கொழுங்காற் கொட்டமும்" பெருங். 3 : 17 : 134; "கொட்டமே கமழுங் குளிர் தாமரை, மொட்டின் வீங்கிய வெம்முலை மொய்குழல்", சீவக. 2575 : 1 - 2, "கொட்டமே கமழும் குழலாளொடு கூடினாய் எரு தேறினாய் நுதற் பட்டமே புனைவாய்", தேவா.திருஞா. 1 : 14(2) : 1 - 3; "கொட்டமேகமழுங் கொள்ளம் பூதூர் நட்டம் ஆடிய நம்பனை யுள்கச் செல்ல வுந்துக சிந்தையார் தொழ", தேவா. திருஞா. 3: 6: 1: 1 - 3

நாகம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. குறிஞ்சி நிலத்தின் மலை உச்சிகளில் வளரும். நாகமலர் நல்ல மணமுடையது. இணராக மலர்ந் திருக்கும். நறுவீ நாகம் (சிறுபாண். 116) நல்லிணர் நாகம் (பரி.12:80).இதனைச் சுரபுன்னை என்று நச்சினார்க்கினியர் கூறுவர். ஆனால் நாகம் வேறு. சுர புன்னை வேறு என்பது பரிபாடலால் தெரி கிறது என்பர் (ப.47 தாணம்மாள், சங்க இலக்கியங்களில் மலர்கள்).

"நாகத் தல்லியும் நயந்த தக் கோலமும்" பெருங். 3 : 17 : 132

மதாவரிசி : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று

தக்கோலம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. வாசப்பொருள். தக் கோலம் என்ற தீவி னின்று இங்கு வந்த தொரு மணப்பொரு ளாகச் சுட்டுவர் (மயி லை. சீனி வேங்கட சாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், ப. 191). தழையுடையிலும் இதன் காய் இணைக்கப் பட்டது தெரிகிறது. திருமுருகாற்றுப்படை இயம்பும் நிலையில், இதன் காய் புட்டில் போலிருக்கும் என்பார் உரையாசிரியர் (திருமுருகு. 191). வெற்றிலையுடன் உண்ட பஞ்ச வாசப் பொருள்களுள் ஒன்று.

"பல்லுறைப் பையி னுள்ளறை தோறும், நாகத்தல்லியும் நயந்ததக் கோலமும்", பெருங். 3 : 17 : 131 - 132

நன்னாரி : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.

மருத்துவப் பயன் கொண்டது. வேர் மணமுள்ளது. வேர்ப்பட்டை குளிக்கும் நீரில் மட்டுமல்லாது குடிநீரில் சேர்க்கப்படும் மருந்துப் பொருளாகவும், மணப்பொருளாகவும் பயன்படுகிறது. பல விதமான நோய்களுக்கு மருந்தாகிறது. வேர்ப் பட்டை மருந்து வியர்வைத் தூண்டுவி. வலுவேற்றி, சிறுநீர்ப் போக்கு தூண்டுவி. காய்ச்சல், பசியின்மை, உடல் மெலிவு, நாட்பட்ட மூட்டுவலி, தோல் வியாதிகள், புண்கள் (குறிப்பாகப் பால் வினை நோயினால் தோன்றியவை) ஆகியவை போக்க உதவுகிறது (இ.மூ.ம.அ. ப.130).

வெண்கோட்டம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. மரவகை. வாசனைமிக்க மணப்பொருள்.

"கூகையும் கோட்டமும் குங்குமமும் பரந்து ஏகலாகா நிலத்தல்கிவிட்டு எழுந்து போய்த் தோகையு மன்னமுந் தொக்குடன் ஆர்ப்பதோர், நாகநன் காவினுள் நயந்து விட்டார்களே", சீவக. 1905

கத்தூரி : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.

வேரி: வாசனைப்பொருள் இது. நிகண்டுகள் வெட்டிவேர் என்பதன் பிறபெயர்களாக மூல கந்தம், வேரி, பீதகம், இருவேலி போன்ற பலவற்றைத் தருகின்றன. வெட்டிவேர் என்பது இலாமிச்சு என்னும் கருத்தும் காணப்படுகிறது (மூ.செ.தொ.ப.159). ஆயின் ஓமாலிகை முப்பத்திரண்டனுள் இவை தனித்தனியே சுட்டப்படுவது இரண்டையும் வேறாகக் காட்டுகிறது. எனவே இரண்டு வகையான மணவேர்களாக இவை

"தகரங் கவினிய தண் வரைச்சாரல், நறையு நாகமு முறையிரு வேரியும்", பெருங். 1 : 50 : 21 - 22; "காழகினூறுங் கட்சா லேகமும் கோழிரு வேரியும் பேரில வங்கமும்", பெருங். 3 : 17 : 135 - 136,

இருந்திருக்கும் வாய்ப்பு அமைகிறது.

இலாமிச்சம் : வேர், மூலிகையாக, மணப் பொருளாகப் பயன் படுகிறது. இலாமிச் சையும் சடாமாஞ்சி யும் ஒன்றென்பர் (இ.மூ.ம.அ. ப.156). மருத்துவப் பயனு டையது. தலைமுடி யின் வளர்ச்சியை யும் கருமையையும் அதிகரிக்க வல்லது (இ.மூ.ம.அ. ப.157).

கண்டில் வெண்ணெய் முப்பத்திரு வகை ஓமாலிகையுள் ஒன்று. ஓர் பூடு என்பர் (வர. த.இ. ப.592). சரீரத்தில் தேஜசைத் தரும். நெஞ்சிற் கபக்கட்டு, காசம், மூத்திர கிரிச் சரம், குதச் சூலை இவைகளை நீக்கும். இந்தச் சரக்கு கடை களில் கிடைப்பதரிது. கன்றில் வெண்ணெய் என்பது கண்டில் வெண்ணெய் என மருவியது. யானை யானது குட்டிப்போட் டவுடன் முதன்முத லாகக் கழியும்படி யான மலத்தை உலர்த்தி வைத்திருப்பதற்கே கண்டில் வெண்ணெய் என்று பெயர். இதனைச் சிலர் அறியாமல் கூகை நீரைப்பாகங் களில் சேர்த்துக் கொள்வதுண்டு. இந்தச் சரக்கு மலையாளப் பிரதேசங்களில் கிடைக்கும் (ப.கு.வி. ப. 213).

"கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய் அடுக்கலில் அடுத்த செந்தேன்," கம்ப. 25 : 4 - 6

கடு : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. மருந்துப் பொருளாகப் பயன்பட்ட ஒன்று. மருத்துவப் பயன் உடையவை கனிகள். தசை இறுக்கும் தன் மை உடையவை (இ. மூ.ம.அ.,ப.211).

"வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்", தொல். 1369; "கடுக்கலித்து எழுந்த கண் அகன் சிலம்பில்", மலை. 14; "கடுவும் கோட்டமும் காழகிற் குறையும்", பெருங். 2 : 18 : 45

தமிழகத்தில் காணப் பட்ட மலை மரவகை. கடு, நெல்லி, தான்றி என்பன திரி பலா என்று சுட்டப்படுவன. இதன் மருத்துவச் சிறப்பு பண்டுதொட்டே தமிழர் அறிந்தது.

நெல்லி : திரிபலாவுள் ஒன்று. நெல்லி மரம் முழுவதும் மருத்துவக் குணம் படைத்தது. கனிகள் சதை இறுக்கி மூப்பு ஏற்படுத்தும் தொல்லைகளைப் போக்கி உடலுறுப்பு களை நல்ல நிலையில் வைக்கும் திறன் படைத்தது (இ.மூ.ம. அ., பக். 107 - 108).

"வேனிலாடும் விருப்பினால் வியன்காய் நெல்லிச் சாந்தரைத்து, நான வெண்ணெய் கதுப்புரைத்து நறுநீராடி", சீவக. 2692 : 1 - 2

தான்றி : திரிபலாவுள் ஒன்று. வலுவேற்றி. தசை இறுக்கும் தன்மை உடையது. காடுகளில் இயல் பாக வளரக் கூடிய மரம் (இ.மூ.ம. அ., ப. 210).

"தான்றியும் ஒடுவையும் உழிஞ்சிலும் ஓங்கி", மணி. 6: 80

துத்தம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.

வண்ணக் கச்சோலம்: 32 வகை ஓமாலிகை யுள் ஒன்று.

அரேணுகம் : காட்டு மிளகு என்கிறது மர இனப்பெயர் தொகுதி (ப. 188).

மாஞ்சி: 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. சடாமாஞ்சி இலாமிச்சை ஒன்றென்பர் (இ.மூ. ம.அ., ப.156) வாசம் தருபண்டப் பெயர் என்பது திவாகரம்.

"தகரம் மாஞ்சி. வாசம் தரு பண்டப்பெயரே", நிக. திவா. 763

சயிலேகம்: 'சயிரேகம் - கரு மருதோன்றி', (ம.இ.பெ.தொ., ப. 346)

புழுகு : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. புன்னை நறுந்தாது: 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. மணமுடைய,

	மருத்துவ குணமுடைய தாவரவகை.	
	புலியுகிர் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.	
	பூஞ்சரளம்: 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.	
	தமாலம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.	"பசுங்கேழ் இலைய நறுங்கொடித் தமாலம்", நற்.292 : 2; "தாளின் ஏலமும் தமாலமும் தொடர் தரு சாரல்", கம்ப. 2047 : 3 - 4
	வகுளம் : மகிழமரம். இதன் இலை, காய், பூ யாவும் நோய் தீர்க்கும் மருத்துவப் பொருட்களாகப் பயன்படுகின்றன (இ.மூ.ம.அ., பக்.113, 114).	
	பதுமுகம் : 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.	
	நுண்ணேலம்: 32 வகை ஓமாலிகையுள் ஒன்று. ஏல வகையினுள் ஒன்று. பெரிய ஏலம், சிற்றேலம் என்று சொல்லப்படும் வகையில் இது சிற்றேலமாக இருக்க வாய்ப்புண்டு. சிறப்பானதாக இது கருதப்படுகிறது (ந.பொ. ப. 49).	
	கொடுவேரி: 32 வகை ஓமாலிகையுள் ஒன்று.	"செங்கொடு வேரி தேமா மணிச் சிகை," குறிஞ்.64; "செங்கொடுவேரிச் செழும் பிணையல்", சிலப். 14-91
ஊறின நன்னீர் கூந்தல் நலம் பெற ஆட்டுதல்	பத்துத்துவர், ஐந்து விரை, முப்பத்திரண்டு ஓமாலிகையிட்டு ஊற வைத்த நன்னீர்க் கொண்டு கூந்தல் நலம்பெற நீராட்டுதல்	"பத்துத் துவரினும் ஐந்து விரையினும், முப்பத்திருவகை ஓமாலிகையினும் ஊறின நல் நீர் உரைத்த நெய் வாசம் நாறிருங் கூந்தல் நலம் பெற ஆட்டிப்" சிலப். 6 : 76 - 79
துவர்	குளிக்கும் நீரில் ஊற வைக்கும் துவர்ப்புப் பொருட்கள்	"துவர் புகை சாந்தம் எறிவன எக்குவன. . . பின் தொடர," பரி. 22 : 17 - 20
துவர்பல ஊட்டிச் சலம் குடைதல்	கூந்தல் மணம் வீசுமாறு, தண்ணிய நறிய துவர்களைத் தேய்த்து நீரில் குடைந்தாடுதல்.	"மண்ணார் மணியின் வணர் குரல் வண்டார்ப்பத் தண்ணறுந் துவர்பல ஊட்டிச் சலம் குடைவார்," பரி. 10 : 89 - 90
பத்துத்துவர்	குளிக்கும் நீரில் ஊற வைக்கப்படும் பத்து வகைத் துவர்ப்புப் பொருட்கள். "அவை	"பத்துத் துவரினும் ஐந்து விரையிலும்..... ஊறின நல் நீர் . . . . நலம் பெற ஆட்டி", சிலப். 6 : 76 - 79

யாவன பூவந்தி திரி பலை புணர் செங் கருங்காலி, துவரே";
"மாந்தளிர்.... முப் பழஞ்சீர்த்த முத்தக் காசு" எனவும் கொள்க என்பது அரும்பத வுரை.
"பூவந்தி திரி பலை புணர்கருங் காலி நாவலோடு நாற் பான் மரமே" என்பது அடியார்க்கு நல்லார் உரை. அரும்பத உரையா சிரியர் சுட்டும் மாந் தளிர், முப்பழம் சீர்த்த முத்தக்காசு பின்னவ ரால் சுட்டப்பட வில்லை. ஆயின் தமிழ் லெக் சிகன் 'பூவந்தி, கடு, நெல்லி, தான்றி, கருங்காலி, அரசு, ஆல், அத்தி, இத்தி, மாந்தளிர் என அடி யார்க்குநல்லார் சுட்டும் நாவலை விடுத்து மாந்தளி ரைச் சேர்த்து சுட்டு கிறது (தொகுதி 4, ப. 1992). எனினும் இவை யனைத் தும் அன்று மக்கள் குளிப்பதற்காகப் பயன் படுத்திய துவர்ப்புப் பொருட்கள் என்பது இங்குத் தெளிவாகிறது. துவர்ப்புப் பொருட் களுக்கு இன்று கிடைக் கும் விளக்கங்கள் அனைத்தும் இப்பொ ருட்கள் மருத்துவப் பயனுடையன என்ப தையும் பெரும்பாலான வை தசை இறுக்கும் தன்மையில், உடல் உறுப்புகளை நல்ல நிலையில் வைத்து இளமை நலங்காக்க உதவும் தன்மையன என்பதையும் தெளி வாக்குகின்றன. தமிழர் இவற்றைப் பயன் படுத்திய நோக்க மும் இப்பழக்கத்தின் மூலம் தெளிவுறுகிறது.

பூவந்தி: பத்துத் துவர் களுள் ஒன்று என்பது தவிர, இம்மரம் குறித்த

பிற தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை. தமிழ் லெக்சிகன் பூவந்தி என்ற பதிவிற்கு மர வகையுடன் See புங்கு என்று விளக்கம் தருகிறது (ப. 2850). மரஇனப் பெயர்த் தொகுதி 'காட்டுப் புங்கு'விற்குப் பூவந்தி மரவகை எனப் பொருள் தருகிறது (ப. 110). தவிர, மணிப்பூவந்தி என்ற மரவகையைத் தமிழ் நாட்டுத் தாவரங்கள் நூலும் (ப.95) சுட்டுகிறது.

கடு: காண்க: ஓமாலிகை

நெல்லி : காண்க : ஓமாலிகை

தான்றி : காண்க : ஓமாலிகை

கருங்காலி : பட்டை மருத்துவப் பயன் உடையது. உடலைக் குளிரச்செய்யும். தமிழகத்தில் காணப் பட்ட மரவகை (இ. மூ. ம. அ. ப.23).

நாவல்: அத்தி, இத்தி, அரசு, ஆல், நாவல் (மூ.செ.தொ. ப.74) என்றழைக்கப்படும் பஞ்சத்துவர்ப்பிகளுள் ஒன்று. கனிகள், விதைகள் மற்றும் பட்டை மருத்துவப் பயன் கொண்டவை. பட்டையின் கசாயம் ஏலம் மற்றும் இலவங்கப் பட்டையுடன் நாட்பட்ட வயிற்றுப் போக்கு, சீதபேதி குணப்படுத்த உதவும். ஈறு மற்றும் தொண்டை வலிகளில் கொப்பளிப்பாகப் பயன்படுகிறது. குரல்வளம் தருகிறது. தென் கிழக்காசியப் பகுதிகளில் நாவல் வேர், கை கால் வலிப்பு நோயினைக் குணப்

படுத்துவதில் பயன் படுத்தப்படுகிறது. தென் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவினைச் சார்ந்தது நாவல் மரம். இந்தியா ஆப்பிரிக்கா மற்றும் இந்தோனேசியாவின் வெப்ப மண்டலப் பகுதிகளில் வளர்கின்றன. (இ.மூ.ம.அ. ப.204). நாவல் பட்டை யைக் குடிநீர் தயாரித்து உட்கொள்ள நீரிழிவு. கழிச்சல் வகை ஆகியன தீரும். வாய்ப் புண்ணுக்கும் இதனைக் கொப்பளிக்க உபயோகப்படுத்தலாம். பஞ்ச துவர்ப்பிகளுள் ஒன்று நாவல் (மூ. செ. தொ., ப.74). நாவலுக்குச் சம்பு என்றும் சாதகம் என்றும் மறுபெயர்கள் உண்டு (மூ. ம. கு. அ., ப. 72).

அரசு: இலை, பட்டை, கனி மற்றும் விதைகள் மருத்துவப் பயன் உடையவை. வேர், இலை, பட்டை துவர்ப்பு. பட்டையின் கசாயம் தசைகளை இறுகச் செய்யும் (இ. மூ.ம. அ., ப. 119).

அத்தி: கனிகள் தசைகளை இறுக்கும் தன்மை படைத்தவை. இலைகள், பட்டை, வேர் மற்றும் கனிகள் மருத்துவப் பயன் உடையவை (இ.மூ. ம. அ. ப.117).

ஆல்: மருத்துவப் பயனுடைய மரம். இலைகளும் பட்டைகளும் தசைகளைச் சுருங்கச் செய்பவை. தமிழகத்தில் காணப்படும் மரம் (இ.மூ. ம.அ. ப.114). அத்தி, இத்தி, ஆல், அரசு, நாவல் இவற்றைப் பஞ்சதுவர்ப்பி என்பர்.

	இவை அனைத்துக் கும் குருதிப் போக் கடக்கிச் செய்கை உண்டு. இவற்றின் பட்டையைக் கொண்டு குடிநீர் செய் தும் உபயோகிக்கலாம் (மூ.செ. தொ. ப.55).	
	இத்தி: பஞ்சதுவர்ப்பி களுள் ஒன்று (மூ. செ. தொ. ப.74).	
	மாந்தளிர் : தமிழகத் தில் காணப்படும் மர வகை. நீரிழிவு நோய் போன்றவற்றைக் குணமாக்க மாந் தளிர் பயன்படுகிறது.	
நிறைத்துவர் நறுநீர் சிறப்பொடு ஆடி, காமர் கற்சுனைத் தெண்ணீர் சொரி வனர் ஆட்டுதல்	சாலில் இட்டுப்பத்துத் துவர் ஊறவைத்த வாச நீர்கொண்டு முதலில் குளித்த பின்னர் சுனையின் கண் உள்ள தெள் ளிய நீரால் குளிப் பாட்டுதல்	"நிறைத்துவர் நறுநீர் சிறப்பொடாடிய, தாமரை முகத்தியை காமர் கற்சுனைத் தான முதனிறீஇத் தெண்ணீர், வரிவளைப்பணைத்தோள் வண்ண மகளிர் சொரிவனர்ஆட்டி", பெருங். 1 : 57 : 89 - 97
நறுநீர்த் துவர்க்கை வயின் வயினுரூ உதல்	பத்துவகைத் துவரும் ஊறவைத்த நறிய நீரைக் கூந்தல் நிறம் பெறற் பொருட்டு அக் கூந்தலின்கண் இடந் தோறும் இடந்தோறும் உருவுதல்	"வருந்த லோம்பிப், பீடத் திரீஇய பாடறிந் தேற்றி நறுநீர்த் துவர்க்கை வயின் வயினுரீ இக்", பெருங். 3 : 22 : 206 - 208
நுரைப்பமல் அரைப்பு	நுரைத்தல் மிக்க, எண்ணெய் முதலியன போதற்கிடும் அரைப்பு	"உரைத்த வெண்ணெயு நுரைப்பமல் அரைப்பும்" பெருங். 1 : 41 : 131
நானப்பொடி	சந்தனம், கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் முதலிய வாசனைப் பொருள்களைக் கொண்டு செய்யும் பொடி	"மெய்திமிரும் நானப் பொடியோடு மஞ்சளும், செய்ய தடங்கண்ணுக்கு அஞ்சனமும் சிந்தூரமும், வெய்ய கலைப்பாகி கொண்டு உவ ளாய் நின்றாள்", பெரியாழ். 1 : 4 : 9 : 1 - 3
நானப்பொடி மெய் திமிர்தல்	நானப்பொடியை மெய்யில் பூசுதல்	"மெய்திமிரும் நானப் பொடியோடு மஞ்சளும்", பெரியாழ். 1 : 3 : 9
நானம் தீட்டுதல்	வாசனைச் சாந்தைப் பூசுதல்	"சேகு அற விளக்கி, நானம் தீட்டி, மண் சேர்ந்த காசை, வேகடம் செய்யுமா போல், மஞ்சன விதியின் வேதத்து, ஓகை மங்கலங்கள் பாடி ஆட்டினர், உம்பர் மாதர்", கம்ப. 9995 : 2 - 4
நானம் நன்கு உரைத்துக் கங்கை அரும் புனல் ஆட்டுதல்	(கஸ்தூரி முதலிய வற்றாலாய) வாசனைப் பொடியை நன்றாக உடம்பில் பூசி, கங்கை நதியின் அரிய நீரால் முழுக்காட்டுதல்	"நானம் நன்கு உரைத்தார்; நளிர் வானிடை ஆன கங்கை அரும்புனல் ஆட்டினார். . . . .," கம்ப. 2383 : 1 - 2

நானம் நெய் நன்குரைத்து நறும் புனல் ஆட்டுதல்	புழுகு நெய்யை நன்கு தேய்த்து நறுமண நீரால் அழுக்குப் போக நீராட்டுதல்	"நானம் நெய் நன்கு உரைத்து, நறும் புனல் ஆன கோது அற ஆட்டி. . . . ," கம்ப. 9620 : 1 - 2
நானங்கலந்த நறு நெய் தோய்த்து தானந்தோறுந் தலை முதல் உறூஉதல்	நெற்கதிரையும் வாகைத் தளிரையும் சீர் செய்து முறை முறையாகக் கையின் ஏந்தி நறுமணங் கலந்த நெய்யின்கண் தோய்த்துத் தலை முதலாக உறுப்புகள் தோறும் தேய்த்தல்	"செம்பொன் வாகையென் றொருப்படுத் தூழூழ் முறைமையின் ஏந்தி நானங்கலந்த நறுநெய் தோய்த்துத் தானந் தோறுந் தலைமுதல் உறீஇக்", பெருங். 2 : 5 : 87 - 90
மஞ்சனத்துக்கு ஏற்ற நான நெய் ஊட்டப்பட்ட நவை இல கலவை	கஸ்தூரிப் புழுகு தீற்றப்பட்டுச் செய்த குற்றம் இல்லாத கலவைச் சாந்தம்	"வானக நாட்டு மாதர் யாரும், மஞ்சனத்துக்கு ஏற்ற நான நெய் ஊட்டப்பட்ட நவை இல கலவை தாங்கி. . . . ," கம்ப. 9993 : 2 - 3
நெல்லிச் சாந்தரைத்து நான வெண்ணெய் கதுப்புரைத்து நறு நீராடுதல்	இளவேனிற் காலத்தில் நெல்லிக்காயைச் சாந்தாக அரைத்துப் பூசி, கஸ்தூரி கலந்த எண்ணெயைத் தலையில் தேய்த்து நீராடுதல்	"வேனிலாடும் விருப்பினால் வியன்காய் நெல்லிச் சாந்தரைத்து நான வெண்ணெய் கதுப் புரைத்து நறு நீராடி அமிர்துயிர்க்கும்", சீவக. 2692: 1 - 2
காய்ச்சின நீரொடு நெல்லி பூரித்து வைத்தல்	குளிப்பதற்காக நெல்லிக்காயை இட்டுக் காய்ச்சிய நீரை நிரப்பி வைத்தல்	"காய்ச்சின நீரொடு நெல்லி கடாரத்தில் பூரித்து வைத்தேன்", பெரியாழ். 2 : 4: 3: 3
நெய்யணி	புதல்வனைப் பெற்ற பின்னர் புனிறு தீரும் பொருட்டு எண்ணெய் தேய்த்துக் குளித்தல்	"கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி", தொல். 1093 : 8
நெய்யணி மயக்கம் புரிதல்	மகளிர் புதல்வனைப் பெற்று அணிமை நீங்கிய பொழுது அதற்குரிய நெய் யாடல் புரிதல்; எண் ணெய் தேய்த்துக் குளித்தல்	"புதல்வன் பயந்த புனிறுதீர் பொழுதின், நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி, ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும், செய்பெருஞ் சிறப்போடு சேர்தற்கண்ணும்", தொல். 1092 : 27 - 30
ஐயவி அணிந்த நெய்யாட்டு	குழந்தை பெற்ற மகளிர் குளிப்பதற் காகப் பூசுகின்ற எண்ணெயில் வெண் சிறுகடுகைச் சேர்த்தல்	"ஐயவி யணிந்த நெய்யாட்டு ஈரணி பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச், சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த", நற். 40 : 7 - 9
நெய்யாடல்	மங்கலமாக ஆடும் எண்ணெய் முழுக்கு	"திருமாநகரம் திரு அவதாரம் செய்விழவின் சிறப்பினால், வருமா களிகூர் நெய்யாடல் எடுப்ப", திருத். 3758 : 1-3
நெய்யாடுதல்	எண்ணெய் தேய்த்துக் கொண்டு நீராடுதல்	"சேறுசெய் கழனிப் பழனத்திருப்பனையூர், நீறுபூசி நெய்யாடித் தம்மை, நினைப்பவர் தம்மனத்த ராகி நின்(று)... ", தேவா. சுந்தர. 11 : 2 : 3 - 5; "விண்ட முல்லை யரும்பன்ன பல்லினர், அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாடினார்", பெரியாழ். 1 : 1 : 5

அறுகைப் புல்லினும் வாகைத் தளிரினும் நறுநெய் தோய்த்து முறைமுதல் நீவுதல்	அறுகம் புல்லையும் வாகைத் தளிரையும் நறிய நெய்யிடத்தே தோய்த்து முறைப்படி தலையில் தடவுதல்	"விழுத்திணைப் பிறந்த ஒழுக்குடை மரபினர், நெய்தலைப் பெய்தற் கெய்திய சிறப்பணி, ஏந்திய சென்னி மாந்தர் கூடி, அறுகைப் புல்லினும் வாகைத் தளிரினும், நறுநெய் தேய்த்து முறைமுதல் நீவி . . . .", பெருங். 2 : 5 : 66 - 70
வாச நறு நெய் ஆடுதல்	வாசனை எண்ணெய் பூசி நீராடுதல்	"வாச நறு நெய்யாடி", பரி. 12 : 19 - 21
பண்ணிய நறு நெய்யும் எண்ணெ யும் பெய்து நறு நீராடுதல்	நெய்யும் எண்ணெ யும் பூசி நீராடுதல்	"தண்ணெய் கூந்தல் தன்கையின் ஆற்றிப் பண்ணிய நறு நெயு மெண்ணெயும் பெய்து நறு நீராட்டி", பெருங். 4 : 14 - 158 - 160
வாசநெய் ஊட்டுதல்	வாசனையுடைய எண்ணெய் தேய்த்தல்	"வாச நெய் ஊட்டி மிக்க, மலர்விரை அடுத்த தூநீர்ப்", திருத். 161 : 1 - 2
வாச நெய் பூசி தெள்ளறல் நீர் சொரிந்தாட்டுதல்	வாச நெய்பூசி தெளிந்த நீரைப் பெய்து நீராட்டுதல்	"வள்ளலை வாசநெய்பூசி மணிக்குடத் தெள்ளறல் நீர் சொரிந் தாட்டினர் ", சீவக. 1476 : 1 - 2
வாச நெய் பூசி நன்னீராட்டுதல்	வாசமிகு நெய்பூசி நன்னீராட்டுதல்	"மன்னவன் பணியின் வாழ்த்தி வாச நெய்பூசி நன்னீர், துன்னினர் ஆட்டி ", சீவக. 1299 : 2 - 3
வாசநெய் விரல்கள் சேப்பப் பூசுதல்	உடம்பில் அழுத்த மாக மணமுள்ள நெய்யை நீராடு முன்னர் பூசுதல்	"வாசநெய் வண்டுமூச மாந்தளிர் விரல்கள் சேப்பப் பூசி", சீவக. 622 : 1 - 2
புளியட்டுதல்	புளிப்பழம் இட்டுத் தேய்த்தல்	"கொந்தக் குழலைக் குறந்து புளியட்டி", பெரியாழ். 2 : 5 : 8 : 3
கூழைக்கு எருமண் கொணர்தல்	கூந்தலில் தேய்த்துக் குளிப்பதற்காக எருமண் கொண்டு வருதல்	"கூழைக்கு எருமண் கொணர்கஞ் சேறும், ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே", குறுந். 113 : 5 - 6
கூந்தல் நறுமண்	கூந்தலில் தேய்த்துக் கொள்ளும் மணம் உள்ள மண்	"கூந்தல் நறுமண் சாந்தொடு கொண்டு", பெருங். 1 : 40 : 28
மண்(களும்) உரிஞ்சி ஆட்டுதல்	மண்ணைக் கொண்டு தேய்த்துக் குளிப் பாட்டுதல்	"ஆடு நீரன அத்து மண்களும், ஊடு மின்னனார் உரிஞ்சி ஆட்டினார்", சீவக. 2418 : 2 -3
திருமஞ்சனம் ஐந்து	அபிஷேகத்திற்குரிய ஐந்து பொருள்கள். அவை பால், தயிர், நெய், கோசலம், கோமியம்.	"விரும்பி ஆடி அருளுதற்குத் தூய திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள் தாம்", திருத். 1230 : 6 - 8
ஆனஞ்சும் ஆடுதல்	அபிஷேகப் பொருட் களால் நீராட்டுதல்	"பால் நெய்சேர் ஆனஞ்சும் ஆடி கண்டாய் பருப்பதத்தான் கண்டாய் பரவைமேனி மாலையோர் கூறுடைய மைந்தன் கண்டாய்," தேவா. திருநா. 6 : 23 : 7
ஆனிலங்கிளர் ஐந்தும் ஆடுதல்	அபிடேகம் செய்தல்	"கூனிளம்பிறை சூடிக் கொடுவரித் தோல் உடை ஆடை ஆனிலங்கிள ரைந்து மாடுவர் பூண்பது மரவம்", தேவா. திருஞா. 2: 91 : 2 : 1 - 2
ஆனஞ் சாடுதல்	பசுவின் பால், தயிர், போன்ற ஐந்து பொருட்களும் சேர்த்து நீராடுதல்	"மானைப்புரையு மடமென்னோக்கி மாமலை யாளோடும் ஆனஞ்சாடுஞ் சென்னிமேலோரம் புலி சூடும் அரன். . . " திருவி. 198 : 1 - 4
பால் நெய் ஐந்துடன் ஆடுதல்	பால் நெய் முதலிய ஐந்துடன் நீராடுதல்	"பானெய் ஐந்துட னாடிய படர்சடைப் பால் வண்ண னே யென்பான். . ..", திருவி. 234 : 3 - 4

மஞ்சனக் குடப் பால்	நீராட்டப் பயன் படுத்திய பால்	''மால் ஆ மறையோன் மிகச் செயிர்த்து வைத்த திருமஞ்சனக் குடப்பால் காலால் இடறிச் சிந்தி னான்", திருத். 1260 : 5 - 7
ஐந்து விரை	கூந்தல் நலம் பெறு வதற்காகக் குளிக்கும் நீரில் ஊற வைக்கப் பட்ட ஐவகை மணப் பொருள்கள். "கொட் டந்துருக்கந்தகரமகி லாரம் ஒட்டியவைந்தும் விரை'' என்பது பிங் கலம் (78). "நறும்பிசி னாகண நற்கொட்ட மாஞ்சி வெறுங்கண்டில் வெண்ணெய் விரை'' என்பது அரும்பதவுரை.	"பத்துத் துவரினும் ஐந்து விரையினும் முப்பத்திரு வகை ஓமாலிகை யினும் ஊறின நன்னீர் உரைத்த நெய்வாசம் நாறிருங் கூந்தல் நலம் பெறவாட்டிப்", சிலப். 6 : 76 -79; "சந்தன மகிலொடு கருப்பூரங் கத்தூரி குங்கும மென்றிவை யைந்தும் விரையே," சீவக. 623 (உரை)
	கொட்டம்: கோட்டம் என்ற வழக்குமுண்டு (சீவக. 1905). குரா என்பது இன்னொரு பெயர்.	"கூகையும் கோட்டமும் குங்குமமும்", சீவக. 1905 : 1
	துருக்கம் : ஐந்து விரையினுள் ஒன்று.	
	தகரம்: ஐந்து விரை யினுள் ஒன்று.	
	அகில்: ஐந்து விரை யினுள் ஒன்று.	
	ஆரம் : ஐந்து விரை யினுள் ஒன்று.	
	மாஞ்சி : காண்க : ஓமாலிகை	" தகரம். . . .மாஞ்சி. . . . வாசம் தரு பண்டப்பெயரே" நிக.திவா. 763
	கண்டில் வெண்ணெய் : காண்க : ஓமாலிகை	
	நறும்பிசின்: மரப்பிசின்	
	நாகணம் : காண்க : ஓமாலிகை	
விரையொடு துவருஞ்சேர்த்தி ஆட்டுதல்	நன்னீரில் விரை, துவர் சேர்த்து நீராட்டுதல்.	"மங்கலவாச நன்னீர் . . . நங்கையை நயப்ப எல்லாம் விரையொடு துவருஞ்சேர்த்தி அங்கு அரவு அல்குலாளை ஆட்டினார் அரம்பை அன்னார்", சீவக. 623 : 3 - 4
வேரியும் தகரமும் விரையும் உரிஞ்சி ஆர்கலி நறுநீர் ஆட்டுதல்	வெட்டிவேர், தகரம், சந்தனம், அகில், கத்தூரி, கருப்பூரம், குங்குமம் என்னும் விரைகளால் தேய்த்துக் கடல்போன்ற பெரிய வாவியின் நறிய நீரால் ஆட்டுதல்	"வேரியும் தகரமும் விரையும் உரிஞ்சி, ஆர்கலி நறுநீர் மேவர ஆட்டித், துய்யறத் திரண்டு தூறலுமிலவாய்", பெருங். 4 : 16 : 6 - 8
நல்வெணெய் விழுது பெய்தல்	நல்ல வெண்ணெயை உருக்கிய நெய்யை ஏனைய பஞ்ச கவ்வியத்தோடு கூட்டிப் பெய்து திருமஞ்சனம் ஆடுதல்	"நல்வெணெய் விழுது பெய்து ஆடுதிர் நாள்தோறும்", தேவா.திருஞா. 3: 96 : 1 : 1

2.4. ஈரம் புலர்த்துதல் / உலர்த்துதல்

நீராடிய பின்னர் உடலின் ஈரத்தைப் புலர்த்துதலும், கூந்தலை யுலர்த்துதலும் இயல்பு. துணி கொண்டு புலர்த்தியதுடன், புகையிட்டும் கூந்தலை உலர்த்தியதைச் சொற்கள் புலப்படுத்துகின்றன. இப் புகையிட்ட தன்மை. புகையிடப் பயன்படுத்திய பொருட்கள் அனைத்தும், தமிழரின் ஆழ்ந்த அறிவை, சுற்றுப்புறங்களை நுணுகி நோக்கி, இயற்கையைத் தம் வாழ்வியலின் சிறப்புக்குப் பயன்கொண்ட அறிவின் திறத்தைப் பறைசாற்றுவன; குறிப்பாக இங்குத் தெரிய வரும் அகிற்புகையின் சிறப்பு குறிப்பிடற்குரியது.

ஒலியல் உளருதல்	கூந்தலைக் கையால் பெயர்த்துக்கோதுதல்	"உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்பு, ஐதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா, ஒலியல் வார் மயிர் உளரினள் கொடிச்சி", அகம். 102 : 3 - 5
நீர்வார் கூந்தல் உளருதல்	நீர் ஒழுகும் கூந்தலை உலர்த்துதல்	"நாரை நல்லினங் கடுப்ப மகளிர், நீர்வார் கூந்தல் உளருந் துறைவ", ஐங் . 186 : 1 - 2
நீர் துடைத்தல்	உடலின் நீரைத் துடைத்தல்	"கார்நீர் நருமதைக் கரை யகம், கடந்த பின் வார் நீர் துடைத்து வயந்தகன் ஏறி", பெருங். 1 : 52 : 1 - 2
துவராக் கூந்தல்	ஈரம் புலராத கூந்தல்	"கனவினும் பிரியா உறையுளொடு தண்ணெனத் தகர நீவிய துவராக் கூந்தல் வதுவை மகளிர் நோக்கினர் பெயர்ந்து", பதிற். 89 : 15 - 17
துவருதல்	துவட்டுதல்	"பொம்மற் படுதிரை நம்மோடு ஆடி, புறம் தாழ்பு இருளிய பிறங்கு குரல் ஐம்பால் துவரினர் அருளிய துறையே", நற். 96 : 4 - 7
பின்னிருங் கூந்தல் பிழிவனம் துவரி	பின்னுதலை யுடைய கரிய கூந்தலின் நீரைப் பிழிந்து ஈரத்தைப் புலர்த்துதல்	"பொன் எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்த எம், பின் இருங்கூந்தல் பிழிவனம் துவரி", குறிஞ். 59 - 60
கூந்தல் பரப்பி யிருத்தல்	கூந்தலை உலரப் பரப்பியிருத்தல்	"கோல நெடுங்கண் மகளிர் கூந்தல் பரப்பியிருப்ப", சீவக. 919.1
ஈரம் புலர்த்துதல்	நீரை உலர்த்துதல்	"அணிக்கையில் தவழ்ந்த மணிக்குரல் ஐம்பால் ஈர்முத் தாகத்து ஈரம் புலர்த்தி அழல் நறுந்தேறல் சுழல் வண்டோப்பிக்," பெருங் . 1 : 40 : 158 - 160
துகில் கொடு குஞ்சி ஈரம் புலர்த்துதல்	ஆடையைக் கொண்டு குடுமியின் ஈரத்தை உறிஞ்சுதல்	"கைவலான் முன்கை சூழ்ந்த துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித். . . .", திருத். 162 : 4 - 6
சடை புலர்த்துதல்	தலைமுடியைப் புலர்த்துதல்	"கான யானை தந்த விறகிற், கடுந்தெறற் செந்தீ வேட்டுப் புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே", புறம். 251: 5-8
காரிருங் கூந்தல் நீரறப் புலர்த்தல்	கரிய கூந்தலை நீர் அற்றுப் போகும்படி உலர்த்துதல்	"பார மாகி நீரசைந்து ஓசிந்த காரிருங் கூந்தல் நீரறப் புலர்த்தி", பெருங். 3 : 9 : 62 - 63
மயிர் புலர்த்துதல்	கூந்தலைக் காய வைத்தல்	"எல்லையில் வரைத்த கடல் வட்டமும் இறைஞ்சி நிறை வாசம் உருவக், கொல்லையில் இளங்குறவர் தம்மயிர், புலர்த்தி வளர் கோகரணமே", தேவா. திருஞா. 3: 79 : 9 : 5 - 8
துகில் சூழ்ப்ப குழல் முறுக்குதல்	நீராடிய பின்னர் ஈரம் புலர்த்த கூந்தலைத் துகிலால் முறுக்குதல்	"வெண் டுகில் சூழ்ப்பக் குழல் முறுக்குநர்", பரி. 10 : 80

ஆவியூட்டுதல்	புகையூட்டுதல்	"முத்தணிந்து ஆவியூட்டி", சீவக. 971 : 3
ஈரணி புலர்த் தருதல்	நீராடிய மகளிர் வேள்வித் தீயில், ஈரத்தைப் புலர்த்துதல்	"ஊதை ஊர் தர உறைசிறை வேதியர் நெறிநிமிர் நுடங்கு அழல் பேணிய சிறப்பின், தையல் மகளிர் ஈரணி புலர்த் தர, வையை நினக்கு மடைவாய்த் தன்று", பரி : 11 : 84 - 87
புகை	கூந்தல் / தலைமுடியின் ஈரம் அகற்றுவதற்காகவும், குளிர்காயவும் ஆடவரும் பெண்டிரும் போட்டுக் கொள்ளும் புகை. மயிருக்குப் புகைக்கும் அகில் முதலாயின. அவையாவன: ''அஞ்சனக்கட்டி, யரியாசம் பச்சிலை ஆரமகிலுறுப் போரைந்து'' என்பார் அரும்பத உரையாசிரியர். அடியார்க்கு நல்லார், புகையுறுப்பும் ஆவன, ''நேர்கட்டி, செந்தேனிரியாசம் பச்சிலை ஆரமகிலுறுப் போடாறு என இவை'' என்பார். எனவே புகை போட பயன்பட்ட பொருட்கள் ஐந்து, எனவும் ஆறு எனவும், கருதியிருந்த நிலை புலப்படுகிறது. புகை போட பயன்பட்டதில் பண்டைக்காலம் தொட்டே மிக்க செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தது அகில். எனவே அகில் என்றாலே புகை என்பதைக் குறிக்கும் தன்மையில் புகையுறுப்பு என்ற பொருளில் அகிலுறுப்பு என வழங்கும் வழக்கு காணப்பட்டது என்பதும் இங்குப் புலப்படுகிறது. அகிலுடன் அயிர் சேர்த்துப் புகைத்தல் பண்டைக்காலத்திய வழக்காக இருந்திருக்கிறது. மேலும் பல பொருட்கள் பயன்படத் தொடங்கியமையை இந்தப்	"பூவும் புகையும் மேவிய விரையும் பகர்வனர் திரிதரு நகரவீதியும்", சிலப். 5 : 14 - 15; "உடனுறைந் தார்போ லொழியாது எழுதிப், பூவும் புகையும் பொருந்துபு புணர்ந்து துணிவுடனுரைத்தே னென்சொற் றேறெனத்," மணி. 21 : 138 - 142

	புகை உறுப்புகள் பற்றிய சிந்தனை தருகிறது. எனவே காலந்தோறும் கிடைத்த பொருட்களுக்கும் பயன் பாட்டிற்கும் ஏற்ப புகை போடும் முறை இருந்திருக்கிறது என்பது மரபாகவும் மாறியும் சுட்டப்படுவதில் தெளிவாகிறது	
தேக்கண் இன்னகில் தேனொடு கூட்டமைத்து ஆக்கப்பட்ட புகை	புகை ஆக்கியமை	"தேக்கண் இன் அகில் தேனொடு கூட்டு அமைத்து, ஆக்கப்பட்ட அளவில் கொழும் புகை", சீவக. 534 : 1 - 2
புகையவும்	புகைபோடப் பயன் பட்ட பொருட்கள். "புகைக்கு உறுப்பான நேர்கட்டி' முதலான ஐந்து (அரும்பதம்.). அஞ்சனக்கட்டி: புகையுறுப்புகளுள் ஒன்று. அஞ்சனக்கட்டி என அரும்பதவுரை காரர் சொல்ல, நேர் கட்டி என்று குறிப்பிடு கிறார் அடியார்க்கு நல்லார். அரியாசம்: புகை யுறுப்புகளுள் ஒன்று (அரும்பதம்) அடியார்க்கு நல்லார் இரியாசம் என்பார். ஆரம் : புகையுறுப்பு களுள் ஒன்று பச்சிலை: புகை யுறுப்புகளுள் ஒன்று. செந்தேன்: புகை யுறுப்புகளுள் ஒன்று.	"புகையவும் சாந்தவும் பூவிற் புனைநவும்", சிலப். 14: 177; "பூவும் புகையும் மேவிய விரையும் பகர்வனர் திரிதரு நகரவீதியும்," சிலப். 5. 13 - 15; "கட்டி தோய்த்த காழ் அகில் நறும் புகை," பெருங். 1 : 53 : 55
	அகில் : தூபவர்க்கங் களுள் ஒன்று. அகில் பண்டைத் தமிழ் மக்கள் மிகுதியாகப் பயன்படுத்திய ஒரு மணப்பொருள். இது ஒரு தாவர வகை. இதன் சிறப்பு தொடர்ந்து பல இலக்கியங்களி னின்றும் புலனாகின்ற ஒன்று. குடமலைப் பிறந்த அகில் (பட். 188), மலையருவி அகிலைச்	"கள்ளியகிலும் கருங்காக்கை சொல்லும் போல்," பழ. நா. 35: 1; "கள்ளி வயிற்றிற் அகில் பிறக்கும்," நான்மணி. 6.1; 'அகரு வழை ஞெமை ஆரம் இனைய..... வளிவரல் வையை வரவு," பரி. 12 : 5 - 8; "சாத்த மரத்த பூழில் எழுபுகை", ஐங். 212 : 1; "முருகின் பணை மேல் இருந்து நடஞ்செய் முதுகுன்றே," தேவா. திருஞா. 2 : 64 : 10 : 4

	சுமந்து செல்லும் விதம் (திருமுருகு. 295-96), காவிரியில் அகில் அடித்துச் செல்லப்படும் தன்மை (பொருநர். 236-38), துறைகளில் அகில் மலிந்து காணப் படல் (சிறுபாண்.116-117), தொண்டியோரிட்ட அகில் (சிலப். 14 : 107-110), போன்றன சில காட்டுகள். இதன் பிற பெயர்கள் அகரு (பரி. 12:5-8), காழ்வை-அகிற்பூ (குறிஞ். 93), பூழில் (பதிற் 87: 2, ஐங். 212: 1), முருகு (தேவா. திருஞா. 2. 64: 10: 4) இதன் பிறப்பிடம் மலை மட்டுமல்ல, கள்ளி வயிறு (நான்மணி. 6: 1, பழ. நா. 35: 1) என்பதும் ஆய்விற்குரியது. அடியார்க்கு நல்லார் அகிலின் வருக்கத் தையும் தருகிறார் (சிலப். 14:106). நீராட ஊற வைக்கப்பட்ட ஐந்து விரைகளுள் அகிலும் ஒன்று (சிலப். 6.76.79). இத்தகைய அகிலை அதன் புகைக் காகத் தமிழர் மிகுதி யாகப் பயன்படுத்தி யதை இது தொடர் பான பல இலக்கியப் பயிற்சிகளும் தரு கின்றன. அகில் மிகுதி யாகப் புகை போடு தலுக்குப் பயன்படுத்தப் பட்டதன் காரணமாகப் 'புகை' என்றாலே அகில் என்றும் அகில் என்றால் புகை என்றும் சுட்டும் வழக்குமிருந்தது (சிலப். உரை. 14: 177).	
புகை வகை	நறுமணப் புகைகளின் பல வகை	"புகை வகை தைஇயினார் பூங்கோதை நல்லார்", பரி. 20 : 27
அகில் கூட்டு ஓர் ஐந்து	வாசனைக் கலவை	"(உந்து) சந்தனம், கர்ப்பூரம், (உடன்) எரிகாசு, [செந்]தேன் (அந்த) ஏலங்கள் (என்ப) அகில் கூட்டு ஓர் ஐந்தும் (தாமே)", நிக. சூடா. 12 : 37
அகில் உண விரித்தல்	அகிற் புகை போடுவதற்காகக் கூந்தலை விரித்துக் காட்டுதல்	"அகிலுண விரித்த அம்மென் கூந்தல்", சிறு. 263; சிலப். 28 : 17

அகில்தரு விறகின் தடவு நெருப்பு அமர்தல்	அகிற் புகை கொள்ளல்	"முகில்தோய் மாடத்து அகில்தரு விறகின் மடவரல் மகளிர் தடவு நெருப்பு அமர்ந்து", சிலப்.14: 98-99
அகில் நாறுதல்	அகிற் புகை புகைப் பதால் மணத்தல்	"கமழ் அகில் ஆர நாறும் அறல் போல் கூந்தல்", குறுந். 286 : 2 - 3
அகிலார் புகை	அகிற் புகை	"அகிலார் புகையலால் சாந்தணியாள் பூச் சாரச் செல்லாள்", சீவக. 679 : 1
அகிலின் ஆவி தேக்கிடுதல்	புகையைக் கூந்தலுக்கு இடுதல்	"ஆக்கிய மூர்த்தத் தண்ணல் வலக்கவுள் உறுத்தி ஆர்ந்த, தேக்கணின் அகிலின் ஆவி தேக்கிடுங் குழலி னாளை, நோக்கலன் நுனித்து நொய்தா இடக்கவுள் உறுத்தி னானே", சீவக. 2495 : 3 - 4
அகிலின் புகை சேர்த்தல்	இனிமையான மணம் உடைய அகிற் புகையை ஊட்டுதல்	"தேனார் அகிலின் புகைசேர்த்தி", சீவக. 2692 : 3
அகிலொடு அயிர் புகைத்தல்	ஆடவரும் மகளிரும் குளிர்காலத்தில் வெப் பம் பெற அகிலுடன் அயிர் என்ற கண்டு சருக்கரையையும் கூட்டிப் புகைத்தல். அயிர் என்பதற்குரிய இன்னொரு பெயர் கண்டு சருக்கரை. கற்கண்டினைத் துகள் செய்து தூய்மை செய்யப் பெறும் சர்க்கரை. இதனைப் புகைக்கும் கண்டு சருக்கரை என்பார் அரும்பத உரையா சிரியர். யவனதேசத்து அயிர் என்பார் அடி யார்க்கு நல்லார். 'கண்டம், பாளிதம், கண்ட சர்க்கரை, உண்டை, புல்லகண்டம், ஒரு விகற்பம் என்பது திவாகர நிகண்டு (6.110). "கடிகை என்பதற்குக் கண்ட சருக்கரை, தேறல் என நச்சினார்க்கினியர் உரைப்பார்" (மது. 532). "குட திசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு" என்பது சிலப்பதிகாரம் (4: 5). "கண்டசர்க்கரை முக்க.·.சும்" (தெ.கல். தொ. 3 : 2; ப. 187). இது சர்க்கரைத்துகள் என்பதை உரைகள் மட்டுமல்லாது புலவரின் வருணனைகளும் தெளி வாகத் தருகின்றன. "எண்ணு வரம்பறியா இயைந்தொருங்கீண்டி, இடிக் கலப்பன்ன	"தண்ணறுந் தகரமுளரி நெருப்பமைத்து, இருங் காழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்ப", நெடு. 55 - 56

	ஈரயிற் மருங்கிற் கடிப்பகை காணும் காட்சி" சிலப். 6: 145-147. "இடியைக் கலந்தா லொத்த மணலின் மீது இட்ட வெண் சிறு கடுகு; மாவு போன்ற வெண் மையான நிறமுடைய கண்டு சர்க்கரை ஆகிய அயிர் (அடி யார்க்கு நல்லார் உரை சிலப். 6: 145 - 147). வளை முறியையும் கண்டு சருக்கரை என்பார் அடியார்க்கு நல்லார் (சிலப். 4 : 35). குளிர் காலத்தில் அகிலுடன் அயிரை யும் சேர்த்துப் புகைக்கும்போது எரி மிகுதியாகி, நல்புகை யைத் தந்திருக்கும் என்பது இன்று சர்க் கரையின் எரிசக்தி தரும் சிந்தனை.	
அகிற் கொழும் புகை முனிய உண்ணுதல்	குஞ்சிக்கு அகிற் புகையூட்டுதல்	"இன் அகில் கொழும்புகை, முனிய உண்ட குஞ்சியான்", சீவக. 704 : 3-4
அகிற்புகை	கூந்தலுக்கு ஊட்டும் அகிற் புகை	"நான நல்லகில் நறும்புகை அன்றியும்", சிலப். 2 : 67
அகிற்புகைவாசம்	அகிற்புகையின் வாசம்	"கருனை வாசமும் கார் இருங் கூந்தலார், அருமை சான்ற அகிற்புகை வாசமும், செருமிச் சேந்து கண்ணீர் வரத் தேம் பொழில் . . . ", சீவக. 130 : 1 - 3
அகிற்புகை யாவி யூட்டுதல்	மகளிர் நீராடிய பின்னர் அகிற்புகை யின் ஆவியைப் புகைத்தல்	"அரிவையர் பூசி ஆடி அகிற்புகை ஆவியூட்டித்", சீவக. 2737 : 3
அகிற் புகை வெறி யினால் அமைத்தல்	தலைமயிருக்கு அகிற்புகை யூட்டல்	"ஈரங் கொன்ற பின் இருள்மணிச் சுடர், நீரவாய் நிழல் உமிழும் குஞ்சியை, ஆர அகிற்புகை வெறியி னால் அமைத்து ஏர்படச் செய்தார் எழுதிற்று என்னவே", சீவக. 2422
காழகில் கமழ ஊட்டுதல்	அகில் கமழும் படியாகப் புகை ஊட்டுதல்	"கரு நெறி பயின்ற குஞ்சிக் காரகில் கமழவூட்டி", சீவக. 696 : 1
புகையிற் புலர்த்துதல்	நலம் பெறுமாறு நீராட்டிய கூந்தலைப் புகை போட்டுப் புலர்த்துதல்	"புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை", சிலப். 6 : 80
கூந்தல் கமழ் புகை கொளீஇ	கூந்தலில் மணம் கமழும் புகையைக் கொள்ளுவித்தல்	"கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன, ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்", புறம். 146 : 8 - 9
கூந்தலை வாரிக் கானக்காழகிற் தேனெய் தோய்த்து	கூந்தலை மெல்ல வாரிக் கை செய்து காட்டின் கண்ணதாகிய	"கருமையிற் கவினிப் பருமையிற் றிரந்த சில்லென் கூந்தலை மெல்லென வாரிக் கானக் காழகில் தேனெய் தோய்த்து நறுந்தண் கொடிப்புகை

கொடிப்புகை யூட்டுதல்	காழ்ப்புடைய அகிலைத் தேனில் தோய்த்துத் தீயிலிட்டு எழுப்பிய நறிய குளிர்ந்த கொடி போலெழா நின்ற நறுமணப்புகையை ஊட்டுதல்	அறிந்து அளந்தூட்டி", பெருங். 4 : 16 : 10 - 13
கொண்டையிற் புகைத்தல்	நீர் குடைந்தாடு தலுக்குப் பின் கூந் தலுக்கு அகில் புகை ஊட்டுதல்	"நிரை வளை மகளிர் நீர் குடைவு ஒரீஇ, புரை பூங் கொண்டையிற் புகைப்பன காண்மின்", பெருங். 1 : 40 : 106 - 107
தகரமுளரி நெருப் பமைத்துப் புகைத்தல்	தண்ணிய நறிய மயிர்ச் சந்தனமாகிய விறகிலே நெருப்பை உண்டாக்கிப் புகை போடுதல்	"தண்ணறுந் தகரமுளரி நெருப்பமைத்து, இருங் காழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்ப", நெடு. 55 - 56
தூமத்தால் கெழுமுதல்	அகிற்புகையிடுதல்	"தூமத்தால் கெழீஇய கோதை தோள் துணை பிரித்தல்", சீவக. 754 : 1; "கொள்பவளங் கோத்தனைய கால குன்றிச் செங்கண ஒள்ளகிற் புகை திரண்ட தொக்குமாமணிப்புறா கிள்ளையோடு பாலுணுங்கேடில் பூவை பாடவே", சீவக. 70 : 2 - 4
அளந்து கூட்டு அமைத்த அம்புகை கமுமுதல்	மணப்பொருட்களை அளந்து கூட்டி இயற்றிய அழகிய மணப்புகையைக் கூந்தலில் புகைத்தல்	"உளர்ந்தும் ஊறியும் அளந்து கூட்டமைத்த அம்புகை கமுமிய நன்னுதன் மாதர் பின்னிருங் கூந்தல்", பெருங். 2 : 19 : 71 - 75
ஈரம் புலர விரலு ளர்ப்ப விழாக் காழகி லம்புகை கொள்ளுதல்	ஈரம் புலர விரலால் புலர்த்தி, தன் தொழி லாலே பிணிப்பை விடுத்த கூந்தலில் வைரம் பொருந்திய அகிலின் அழகிய புகையை யூட்டுதல்	"தண்ணறுந் தகரங் கமழ மண்ணி, ஈரம் புலர விரல் உளர்ப்ப விழாக், காழ் அகிலம்புகை கொளீஇ", குறிஞ். 108 - 110

3. ஒப்பனைகள் : உச்சி முதல் உள்ளங்கால் வரை

3.1 கூந்தல்

இன்று நாள்தோறும் கூந்தலின் பராமரிப்பு குறித்து நாம் பார்க்கும், கேட்கும் செய்திகள் மிகுதி. இதற்குக் காரணம் உடலின் தோற்றப் பொலிவில் முக்கிய இடம் கூந்தலுக்கு உண்டு என்பதும், கூந்தலைத் தனியே பராமரிக்கும் போதே இத்தகைய தோற்றப் பொலிவை ஒருவர் பெற இயலும் என்பதுமாகும். இதனையும் சிறப்புற உணர்ந்தவர் நம் முன்னோர். நீராடும்போது கூந்தல் நலம்பெற பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி நீராடியதையும் ஈரம் புலர்த்த புகை போன்றவற்றைப் பயன்படுத்தியதையும் கண்டோம். மேலும் இதனை உறுதிப்படுத்துவன கூந்தலுக்குச் செய்த பலவகையான ஒப்பனைகள். எண்ணெய், வாசனைப் பொருட்கள் இட்டு நிறமும் மணமும் அளித்த தன்மை, ஐம்பாலாகப் பிரித்துக் கூந்தலைக் கட்டிய முறைகள், மலர்கள் சூடி அழகும் மணமும் அளித்த தன்மைகள், அணிகள் சூடி ,கூந்தலைப் பொலிவுற செய்தமை போன்ற பல ஒப்பனை முறைகள் அவர்களிடம் காணப்பட்டமையைச் சொற்கள் தெளிவுபடுத்துகின்றன. இப்பழக்கங்களுள் பல இன்று நம்மிடம் இல்லை.

அ. பெயர்கள்

கூந்தலின் திரட்சி, நீட்சி போன்ற தன்மைகள் காரணமாகவும், அலங்கரிக்கப்படும் தன்மைகள் காரணமாகவும் ஆடவர், மகளிர் தலைமுடி பல பெயர்களால் சுட்டப்பட்டன. இவை கூந்தலின் சிறப்பு சார்ந்த தமிழரின் எதிர்பார்ப்புகளையும் அவர்கள் செய்த கூந்தல் ஒப்பனை முறைகளையும் எடுத்தியம்புவன.

அளகம்	கூந்தல்	"அளகம் சேர்ந்த சிறுநுதல்" நற். 377 : 8; "திலகமும் அளகமும் சிறு கருஞ்சிலையும்", சிலப். 8: 74; "தேமலர் அளகம் சூழும், சிலமதி தெருவில் சூழும்'', திருத். 553: 5 - 6
அளகப்பந்தி	முன்னுச்சி மயிர்	"பாங்கு அணி சுரும்பு மொய்த்த பனிமலர் அளகப் பந்தி, தேம்கமழ் ஆரம் சேரும் திருநுதல் விளக்கம் நோக்கில்", திருத். 2999 : 1 - 2
ஓதி	செறிவான கூந்தல்	"ஒடுங்கு ஈர் ஓதி ஒள் நுதற் குறுமகள்'', குறுந். 70 : 1; "அறல் விளங்கு நிலா மணல் நறுமலர்ப்பள்ளித் துஞ்சு துயிலெழூஉம் அம்சில்ஓதி", மணி. 8 : 11 - 12; "ஓதி யும் நுதலும் மாதரை நீவி'', பெருங். 1 : 36 : 25; ''மலையும் பெண்பான் மயிரும் பூசையும் ஓதினவன் பெயரும் ஓதியென் றுரைப்பர்'', நிக.பிங். 3252
பொம்மலோதி	மிக்க கூந்தல்	"நச்சுயிர்ப்பு அளைஇய அச்சநோக்கமொடு விம்முவனள் நடுங்கும் பொம்மலோதியை " பெருங். 1 : 55 : 17 - 18
ஐங்கூந்தல்	ஐவகை கூறுபாடு அமைந்த கூந்தல்	"நாறு ஐங்கூந்தல் கொம்மை வரிமுலை'', அகம். 65 : 18
ஐம்பால்	ஐந்து வகையாக முடிக்கப்படும் பெண் களின் கூந்தல். ஐந்து பிரிவாகப் பிரிக்கப் படும் கூந்தல் எனவும் கருதுதல் பொருந்தும். ஐம்பால் - ஐந்து பகுப்பினையுடைய கூந்தல். ஐந்து பகுப் பாவன: குழல், கொண்	"இவன் இவள் ஐம்பால் பற்றவும்", குறுந். 229: 1; "மணம் கமழ் ஐம்பாலார் ஊடலை ஆங்கே, வணங்கி உணர்ப்பான் துறை", கலித். 131: 39 - 40; "வணர்ந்து ஒலி ஐம்பாலாள் செய்த இக்காமம்'', கலித். 140: 23; "வணரொலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா" இன்னா. 14: 1 - 2; "படுத்தேழை யாமென்று போகினும் போக, அடுத்தேறல் ஐம்பாலாய்! யாவர்க்கே யானும் கொடுத்தேழை யாயினார் இல்'', பழ. நா. 377: 2 - 4; ''கூந்தல் முடியே குழலொடு தொங்கல், வாய்ந்த பனிச்சை வார் மயிர்ச் சுருள், என்று ஏந்திழை யார்

	டை, சுருள், பனிச்சை, முடி. ஐந்து வகையாகப் பிரித்துப் போடப்படும் கூந்தல். முடியை உச்சியில் முடித்தல் ஆகிய முடியும், பக்கத்தில் முடித்தலாகிய கொண்டையும், பின்னே செருகுதலாகிய சுருளும், சுருட்டி முடித்தலாகிய குழலும், பின்னி விடுதலாகிய பனிச்சையுமாம். ஐம்பால் என்பதற்கு ஐந்து தன்மை உடையது என்றும் உரைப்பர். அவையாவன. மணம், மது, மென்மை, நெய்ப்பு, கருமை என்பன (உரை - கம்பராமாயணம் உரை, கம்பன் அற நிலை பதிப்பு)	முடிக்கு இயன்ற **ஐம்பாலே**", நிக. பி. 1070; "நாகமும் நாறின, நுளைச்சியர் **ஐம்பால்**, ஓங்கு நாள்முல்லை நாறின", கம்ப. 4195: 3 - 5; "**ஐம்பால்** முடியும், கொண்டையும் குழலும் (வம்பு ஆர்) பனிச்சையும், (வார்மயிர்ச்) சுருளும்", நிக. திவா. 2354
கதுப்பு	கூந்தல்	"பொன் செய் புனை இழை கட்டிய மகளிர், **கதுப்பிற்** தோன்றும் புதுப் பூங் கொன்றை", குறுந். 21 : 2 - 3; "கணங்கொள் தோகையிற் **கதுப்பி**குத்து அசைஇ", மலை. 44-6; "கண்டலவிர்பூங் **கதுப்பி**னாய் இன்னாதே", சிறுபஞ்ச. 14 : 3; "கணங்கொள் பேய்மகள் **கதுப்பி** குத்தாட", சிலப். 26: 210; "குஞ்சி பித்தை ஓரி குழல் **கதுப்பு** ஆண்பால் மயிர்", நிக. பிங். 1064; "காமர் பிணையல் **கதுப்பணி** கனற்ற", பெருங். 2: 16: 14; "மணமகள் **கதுப்பென** நாறும்", சீவக. 1621: 2
சடைக் கற்றை	மயிர்த் தொகுதி கற்றை - தொகுதி, திரட்சி, செறிவு	"வெள்ளச் செஞ்சடைக் **கற்றை** நெற்றிச் செங்கண், விமலரையும் உடன் கண்ட விருப்புப் பொங்கிப்", திருத். 2926 : 3 - 4; "கதிர்த் தொகுதி, மயிர்த் தொகுதி போல்வன **கற்றை**", நிக.திவா. 1316
குஞ்சி	ஆடவர் தலைமுடி	"கோதையர் கூந்தல் **குஞ்சி**யின், சோர்ந்து அவிழ் இதழின் இயங்கும் ஆறு இன்று", பரி.17 : 26 - 27; "வண்டு ஆர் இருங்**குஞ்சி**, சிலப். 19 : 35; "நீலக்**குஞ்சி** நிங்காதலின் ஏறிய செங்கை யிழிந்தில திந்தக்", மணி. 22 : 154 - 155; "கங்கை தங்குங்குருள் **குஞ்சி**", தேவா. திருஞா. 2 : 116 : 4; "குன்றியும் ஆண்பால் மயிரும் **குஞ்சி**", நிக.பிங். 3380; "**குஞ்சி** அழகும் கொடுந் தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல", நாலடி. 28 : 1 - 2
குடுமி	தலைமயிர்த் தொகுதி	"**குடுமி**க் கட்டிய உழவர்", அகம். 41 : 5 - 6; "புல் உளைக் **குடுமி**ப் புதல்வன்", புறம். 160.4; "நெய்தன் முகிழ்த்துணை யாங்**குடுமி** நேர் மயிரும் உய்தல் ஒரு திங்கள் நாளாகும் - செய்தல்", சிறுபஞ்ச. 30 : 1 - 2; "குஞ்சி நவிர் உளை **குடுமி** ஆண் மயிர் என்ப", நிக. திவா. 389
குந்தளம்	கூந்தல்	"சந்தமலி **குந்தள** நன்மாதினொடு", தேவா. திருஞா. 3: 75: 1: 7

குழல்	கூந்தல்	"நெய்கனி வீழ் குழல்", அகம். 73 : 2; "தகரக் குழலாள் தன்னொடு மயங்கி, மகரயாழின் வான்கோடு தழீஇ", மணி. 4 : 55 - 56; "குழல் செய் வண்டினம் குறிஞ்சியாழ் முரல்வன குறிஞ்சி", திருத். 1092: 1; புரிகுழல் அளகத்துப் புகல் ஏக்கற்று," சிலப். 2: 21; "சுருண்டிருண்ட குழல் முகத்தான் ஊதுகின்ற குழலோசை வழியே மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்து", பெரியாழ். 3 : 6 : 9 : 2 - 3; "பின்னகம் குழல் மயிர் முடி ஆகும் என்ப", நிக.திவா. 395; "கதுப்பே கேசம் சுரியல் குழல், ஆண்மயிர்க்கும் பெண் மயிர்க்கும் உரித்தே", நிக.பிங். 1066
சுரிகுழல்	நெளிந்த கூந்தல்; பெண்களின் சுருண்ட கூந்தல்	"தேமரு கொங்கையில் குங்குமம் எழுதி அம்கையில் துறுமலர் சுரிகுழற் சூட்டி", மணி. 25 : 86-87; "தொத்து உறுதொழில் மாலை சுரிகுழல் அணிவாரும்", கம்ப. 1195 : 5 - 6
கூந்தல்	மகளிர் தலை மயிர்	"அவ்வயின் அகன்ற அல்குல் தைஇத், தாழ்மென் கூந்தல் தடமென்பணைத் தோள்," அகம். 21 : 3 - 4; "அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியும் பூவே," குறுந். 2 : 4 - 5; "விரைஒலி கூந்தல் நும் விறலியர்" புறம். 109 : 16
கூழை	மகளிர் தலை மயிர்; குட்டையான கூந்தல்	"கூழைவிரித்தல்", தொல். 1208; "யாம் எம் கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்," குறுந். 113 : 4 - 5; "கண்கூடு கூழை சுவல் மிசைத் தாதொடு தாழ", கலித். 56: 3-4; "மாடந்தோறு மலிந்திறை கொண்டனர் சுவல் பொதி கூழையர் சுடர்பொன் தோட்டினர் ", பெருங். 2 : 7 : 94 - 95; "தேன் கறி கற்ற கூழைச் செண்பக மாலை" சீவக. 1487 : 1
ஐம்பால் கூழை	ஐம்பாலாகிய கூந்தல்	"அணியறலன்ன வைம்பாற் கூழையர்", பெருங். 1: 41: 52
கேசம்	கூந்தல்	"குறை இவட்கு உண்டேல் கேசம் குறைத்தற்கு அறிவேன்", பெருங். 4. 14. 29 - 30
கொண்டை	கூந்தல் முடிப்பு ஐவகை கூந்தல் ஒப்பனையுள் ஒன்று	"செறி கொண்டை மேல் வண்டு சென்று பாய்ந்தன்றே, வெறி கொண்டான் குன்றத்து வண்டு", பரி. 9 : 43 - 44; "கொண்டைக் கொப்பளித்த கோதை", தேவா. திருநா. 4: 91: 3; "கொக்கிறகும் கூவிளமும் கொண்டை கொண்டார்", தேவா. திருநா. 6 : 96 : 4: 5; "ஐம்பால் முடியும், கொண்டையும், குழலும் (வம்பு ஆர்) பனிச்சையும், (வார்மயிர்ச்) சுருளும்", நிக.திவா. 2354
கொண்டைக் கூழை	கூந்தலை முடிக்கும் வகை; கொண்டை; கூந்தல் முடிப்பு	"கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்", புறம். 61 : 1
சடை	மயிர் முடி	"தாழ்சடைப் பொலிந்த அருந் தவத்தோர்க்கே", புறம். 1 : 13; "மாடமது வார்சடைய வள்ளலை", சீவக. 598: 2; "அவிர்சடை முனிவர் அங்கிவேட்கும்", பட். 54; "நீடிய சடையோடு ஆடா மேனிக்" நற். 141: 1; வேணியும் வேரும் கிடையும் சடை எனல்", நிக.பிங். 3469; "பொன்னால் புரிந்திட்ட பொற்சடையென்ன", திருமந். 9: 1 - 2; "நீர்கொள் செஞ்சடை வாழ் புதுமதி", திருவி. 21: 7 - 8; "பிறையாரும் சடையாய்" தேவா. சுந்தர. 41 : 2 : 1
சடைமுடி	தலைமுடி	"மதிவளர் சடை முடி மன்று ளாரை முன், துதி செயும் நாயன்மார் தூய சொல்மலர்", திருத். 4 : 1 - 2
சிக்கம்	குடுமி	"அரத்தப் போர்வைய யாப்பமை கச்சின, முற்றுமறை பருமமொடு பொற்பூஞ் சிக்கத் தாண வட்டத் தியாப்புப்

		பிணியுறீஇக்," பெருங். 3 : 20 : 19 -21; "சிமையம், சிகை, சிமிலி, சிக்கம், குடுமி", நிக. திவா. 406
சிகழி	கூந்தல் முடி	"ஒளிர் நறும் **சிகழி** ஆர்த்தான்", திருத். 162
சிகழிகை	தலைமயிரின் முடிப்பு மயிர் முடி, முடி - மணமுடி	"மேல் விரித்தியாத்த **சிகழிகை**", கலித். 96 : 9; "நரந்த நாறிருங் கூந்தல் எஞ்சாது நனிபற்றிப் பொலம்புனை மகரவாய் நுணங்கிய **சிகழிகை** நலம் பெற சுற்றிய குரலமையொரு காழ் விரன் முறை சுற்றி மோக்கலு மோந்தனன்", கலித். 54 : 5 - 8; "சிறுமுகச் **சிகழிகை** புடைமுதல் புதைஇய", பெருங். 1 : 46 - 232; "கடிப்பிணை காது சேர்த்திச் **சிகழிகை** காதம் நாறத் தொடுத்து அலர் மாலை சூட்டி", சீவக. 2091. 7-2
சிகை	ஆண்களின் மயிர், குடுமி, சிறிய சிகை மயிர்	"குழற் **சிகை** அவிழக் குண்டுநீர் யமுனை" பெருங். 2 : 10 : 140; "**சிகை** மயிலாய்த் தோகை விரித்து ஆடு நரும்", பரி. 9 : 64; "நூலும் **சிகை**யும் நுவலின் பரமமோ நூலது கார்ப் பாச நுண்சிகை கேசமாம்", திருமந். 230 : 1 - 2; "தாமக் கோதை யொடு தாழ் **சிகை** திருத்தி" பெருங். 1 : 40 . 178; "தழை வளர் மதுமலர் தயங்கு பூஞ்**சிகை**" சீவக. 195 : 2; "குஞ்சி நவிர் உருளை குடுமி **சிகை** ஆண்மயிர் என்ப", நிக. திவா. 389
சுரி ஆர் உளைத் தலை	சுருண்ட தலை மயிர்	"**சுரி ஆர் உளைத்தலை** பொலியச் சூடி", அகம். 83 : 2
சுரியல்	சுருண்ட கூந்தல்; ஆண் பெண் மயிர்	"சுரம் செல் மன்னர் **சுரியல்** தூற்றும்", அகம். 21 : 13; "வகை அமைப் பொலிந்த வனப்பு அமை தெரியல் **சுரியல்** அம்பொருநனைக் காண்டிரோ", அகம். 76: 8-9; "அரியல் வான்குழல் **சுரியல்** தங்க", புறம். 307 : 6; "ஆண் பெண் மயிரும் சுழியும் **சுரியல்**", நிக.பிங். 3553
சுருள்	ஐந்து வகை கூந்தல் ஒப்பனையுள் ஒன்று	"ஐம்பால் முடியும் கொண்டையும் குழலும் (வம்புஆர்) பனிச்சையும், (வார்மயிர்ச்) **சுருளும்**," நிக.திவா. 2354
சூட்டுப்புரி	உச்சிக் கொண்டை, கூந்தல் ஒப்பனை வகையுள் ஒன்று	சுருண்முறை வகுத்துச் **சூட்டுப் புரி**யுறீஇ", பெருங். 1 : 34 : 191
சென்	கொண்டை	"இன்றீம் பைஞ்சுனை ஈரணிப் பொலிந்த, தண்ணறுங் கழுநீர்ச் **சென்**னியற் சிறு புறம்", அகம். 59 : 13 - 14
தலை மயிர்	தலை முடி	"பனி பழுநிய பல்யாமத்துப், பாறு**தலை மயிர்**", புறம். 377 : 1 - 2
தலைமுடி	தலை முடி	"முலைமுகம் செய்தன; முள் எயிறு இலங்கின; **தலைமுடி** சான்ற; தண்தழை உடையை", அகம். 7: 1 - 2
தொங்கல்	கூந்தல் ஒப்பனை	"கூந்தல் முடியே குழலொடு **தொங்கல்**, வாய்ந்த பனிச்சை வார் மயிர்ச் சுருள் என்று, ஏந்திழையார் முடிக்கு இயன்ற ஐம்பாலே", நிக.பிங். 1070
நரை	நரைத்த கூந்தல்	"ஆறைந் திரட்டி ஆண்டுனக் காயதென், நாறுங் கூந்தலும் **நரை**விரா வுற்றன, இளமையுங் காமமும் யாங்கொளித் தனவோ," மணி. 22 : 129 - 131
பங்கி	முடிமயிர்; சுருண்ட மயிர்; ஆண் மயிர்	"நானப்**பங்கி** கரமிசைத் திவள", பெருங். 1 : 35: 207; "**பங்கி**கள் வந்து உன் பவள வாய் மொய்ப்ப", பெரிய. 1. 8. 2; "**பங்கி** பித்தை ஆண்மயிர் என்ப", நிக. திவா. 389
பித்தை	தலை முடி	"கோட்டினும் கொடியினும் நீரினும் நிலத்தினும் காட்டிய பூவிற் கலந்த **பித்தை**யன்", சிலப். 22. 92- 94; "சுரியிரும் **பித்தை** சுரும்புபடச் சூடி", அகம். 213.5

பனிச்சை	ஐந்து வகை கூந்தல் ஒப்பனையுள் ஒன்று	"ஐம்பால் முடியும் கொண்டையும் குழலும் (வம்புஆர்) பனிச்சையும், (வார்மயிர்ச்) சுருளும்," நிக.திவா. 2354
பின்னகம்	பின்னிய கூந்தல்	"பிடிக்கை அன்ன பின்னகம் தீண்டி", அகம். 9 : 22; "பின்னகம் பந்தம் முடி மயிர் முடி ஆகும் என்ப," நிக. திவா. 395
பின்னல்	சடை	"பின்னல் சடிலம் கோடீரம் வேணி மன்னும் மயிர்ச் சடை என வகுத்தனரே", நிக.திவா. 396
முச்சி	முடி	"பின்னொடு முடித்த மண்ணாமுச்சி நெய் கனி வீழ் குழல்", அகம். 73 : 1; "வணர் சுரி முச்சி முழுதும் மன் புரள", அகம். 390 : 5; "கவரி முச்சி கார்விரி கூந்தல்," பதிற். 1; "ஐயவி அப்பிய நெய்யணி முச்சி," மணி. 3: 134
மயிர் முடி	முடிந்த மயிர்	"பின்னகம் பந்தம் முடி முச்சி கொண்டை மயிர் முடி ஆகும் என்ப", நிக.திவா. 395
முடி	சடைமுடி; மயிர்முடி	"முன்மாலை நகு திங்கள் முகிழ் விளங்கு முடிச் சென்னி", தேவா. திருநா. 4 : 12.1; "மயில் கண் அன்ன மாண் முடிப்பாவை" குறுந். 184 : 5; "சுவல் மிசை அசை இய நிலை தயங்கு உறுமுடி" அகம். 379 : 11; "வண்டு கூந்தல் முடிபுனை மகளிர்", பதிற். 46 - 4; "திருமுடி சிமிலி சிக்கம் சிகை இவை குடுமி நாற் பேர்," நிக. சூ. 2: 98; "பின்னகம் பந்தம் முடி முச்சி கொண்டை. . . . இன்னவை ஆண்பால் மயிர் முடிக்கு எய்தும்," நிக.பி. 1073
முடி ஐந்து	கொண்டை சுருள் குழல் பனிச்சை வார் மயிர் என்பன	"ஐம்பால் முடியே கொண்டை சுருள் குழல் பனிச்சை வார் மயிர் முடியே", நிக.திவா. 12:71
முடிக்குரல்	கூந்தல் கொத்து	"பிடிக்கையின் வணரும் முடிக்குரல் ஆற்றார்," பெருங். 42 : 130
முடிச்சடை	சடைமுடி	"முடிச் சடைமுனிவன் அன்று வேள்வியில் கொண்ட," சீவக. 2285 : 1
வெண்தலை	நரைத்தலை	"தண்டுடைக் கையர் வெண் தலைச் சிதவலர்", குறுந். 146 : 3
வேணி	சடை; பின்னிய மயிர்	"வெண் நிலா மதி சூடும் வேணியன்", தேவா. திருஞா. 2 : 27 : 6; "குடிலம் வேணி கோடீரம் சடிலம் சடையின் பெயரே பின்னலும் சாற்றும்", நிக.பிங். 1074; "சீர்தாங்கும் இவர் வேணிச் சிரம் தாங்கி வரக் கண்டும், பார் தாங்க இருந்தேனோ, பழி தாங்குவேன் என்றார்", திருத். 3982 : 5 - 8

ஆ. கூந்தல் : அழகும் சிறப்பும்

கூந்தலைப் புலவர்கள் பல இடங்களில் அடையுடன் சுட்டுகின்றனர். இவ்வடைகள் மூலம் அன்று தமிழர்கள் கூந்தலைப் பேணிய முறை தெரிகிறது. கூந்தலின் எத்தகைய தோற்றத்தையெல்லாம் விரும்பினர் என்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

அஞ்சிலோதி	அழகிய சிலவாகிய கூந்தல்	"குஞ்சிமேல் அனிச்சம் மலர் கூட்டுனும், அஞ்சிலோ தியர் அம்மலர்ச் சீறடி, மஞ்சு தோய்மணி மாடத்து மல்குபூம்", சீவக. 134 : 1 - 2
அளகச் சுருள் ஓதி	செறிந்த சுருண்ட கூந்தல்	"என்று இன்னனவே பலவும் புகலும், இருள்ஆர் அளகச் சுருள் ஓதியையும் வன்தொண்டரையும் படிமேல் வரமுன்பு," திருத். 324 : 1 - 3
சில்மெல் ஓதி	குறைந்த, மென்மை யுடைய கூந்தல்	"நல்நுதல் உலறிய சில்மெல் ஓதி," நெடு. 138; "பூவெனப் பொலிந்த ஓதி," சிறுபாண். 22

மைந்நூற்றனைய மாவீழோதி	இருண்ட கூந்தல்	"மைந்நூற்றனைய மாவீழோதி வகுத்தும் தொகுத்தும் விரித்தும்," சீவக. 2437 : 1 - 2
எ..கிடை தொட்ட ஐம்பால்	கத்திரிகையால் வெட்டப்பட்ட ஐம் பகுப்பு கூந்தல்	"எ..கிடை தொட்ட கார்க்கவின் பெற்ற ஐம்பால் போல்," கலித். 32 : 1
வணரொலி ஐம்பால்	சுருண்ட ஐம்பால்	"புணர்தரு செல்வந் தருபாக்குச் சென்றார் கூந்தல் வணரொலிஐம்பாலாய் வல்வருதல் கூறும்," கார் நாற். 11 : 1 - 2
வளையொலி ஐம்பால்	சுருண்டு தழைத்த கூந்தல்	"உளைய உரையா உறுதியே கொள்க வளையொலி ஐம்பாலாய்! வாங்கியிருந்து தொளை யெண்ணார் அப்பம்தின் பார்," பழ. நா. 165:2-4
நெய்கனிந்து இருளிய கதுப்பு	எண்ணெய் தேய்த்த லால் இருண்ட கூந்தல்	"நெய்கனிந்து இருளிய கதுப்பிற் கதுப்பென மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்," சிறுபாண். 14 - 15
கருங்குழல்கற்றை	கருமையான அடர்ந்த கூந்தல்	"மருங்கில் மந்திரியார் பிள்ளையார் கழல் வணங்கிக், கருங்குழல் கற்றை மேல்குவி கைத்தளிர் உடையார்," திருத். 2573 : 1 - 2
வனை குழற்கற்றை	புனையப்பட்ட குழல்	"வாய்மொழிந்து உரைக்க லுற்றாள் வனைகுழற் கற்றை வண்டார்த் தோய்பிழி துளிக்குங் கண்ணிச் சுரும்பு சூழ் கொம்பனாளே," சீவக. 1707 : 2 - 4
குழல்படு குஞ்சி	சுருண்ட கூந்தல்	"குழல்படு குஞ்சியும் கோலமாக", பெருங். 5: 2: 28
நீலக்குஞ்சி	கரிய முடி	"நின்றஅப் படையுளானே ஒருமகன் நீலக் குஞ்சி...," சீவக. 2289 : 1
நெறிதரு குஞ்சி	சுருண்ட தலைமயிர்	"நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர், பாண்டி நன்னாடரால் அன்னே என்னும். . ." திருவாச. அன்னைப். 5 : 1 - 2
மணியறைந்தன்ன மாண் இருங் குஞ்சி	நீலமணியைப் பதித்து வைத்தாற் போன்ற கரிய நிறமாட்சியோட வலம் சுரிந்த மயிர்	"பொன்புனை நன்கலத்தின் பதம் ஆர்ந்தபின், மணி யறைந் தன்ன மாண்இருங் குஞ்சி, அணிவலஞ் சுரிந்த அமைதிக் கேற்ப," பெருங். 2: 4: 139 -141
அணி குழல்	அழகிய குழல்	"முருந்தேய் எயிறொடுதார் பூப்பித்(து) இருந்தே அரும் (பு) ஈர்முலையாள் அணிகுழல் தாழ் வேய்த்தோள், பெரும்பீர் பசப்பித்தீர் போந்து," திணை.நூற். 116 : 2 - 4; "ஆடல் நீடுவ துகில் கொடி அணி குழல் கொடிகள்", திருத். 2406 : 1 - 2
அம்பொன்வார் குழல்	அழகிய பொன்னிறம் உடைய கூந்தல்	"அம்பொன் வார் குழல் கொடிச்சியருடன் அரமகளிர், வம்பு உலாமலர்ச் சுனைபடிந்து ஆடும் நீள் வரைப்பின்," திருத். 1096 : 1 - 2
அறலின் நேர் குழல்	கருமணலை ஒத்த கூந்தல்	"அறலின் நேர் குழலார் மணி விளக்கு எடுத்து எதிர்கொள அணைவுற்றார்," திருத். 2860 : 7 - 8
ஆய்குழல்	ஆய்ந்து சிக்கு எடுக்கப்பட்ட அழகிய கூந்தல்	"அந்தம் இல்சீர் அணிந்திதை ஆய்குழல், கந்த மாலைக் கமலினி என்பவர், கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி, வந்து வானவர் ஈசர் அருள் என," திருத். 34: 1 - 4
கருங்குழல்	கரிய கூந்தல்	"துடித்தலைக் கருங்குழல் சுரும்பு உண் கோதை," சீவக. 194 : 1
இருண்டு கடை குழன்ற கருங் குழல்	எண்ணெய், புழுகு இவற்றிலே மூழ்கிக் குழன்ற கரிய குழல்	"எண்ணெயும் நானமும் இவை மூழ்கி இருள் திருக்கிட்டு ஒண்ணறுந்து கில்கிழி பொதிந்து உறை கழித்தன போல் கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்," சீவக. 164 : 1 - 3

சுரிகுழல்	சுருண்ட கூந்தல்	"சோதியே சுடரே சூழொளி விளக்கே, சுரிகுழற் பணை முலை மடந்தை", திருவாச. அருட். 1: 1 - 2; "துணிவு கொண்டு ஆர்ப்ப மஞ்சு சுரிகுழற்கு அழிய, விண்ணும், பணியும் என்று இனவண்டு ஆர்ப்பப்," திருத். 284 : 5 - 7; "பல்பெரும்புனம் பயில்வன படர்சிறைத் தோகை, சொல்லும் அப்புனம் காப்பவும் சுரிகுழல் தோகை,"; திருத். 1093 : 3 - 4
சுருண்டு இருண்ட குழல்	சுருண்ட கரிய கூந்தல்	"சுருண்டு இருண்ட குழல் தாழ்ந்த முகத்தான்", பெரியாழ். 3 : 6 : 9 : 2
சோர்குழல்	தொங்கும் கூந்தல்	"பார்புகழ் தவத்தினை, பணித்தருள்க! என்றாள்; சோர் குழலும், மற்று அவனொடு உற்றபடி சொன்னாள்," கம்ப. 4577 : 5 - 8
திருகு குழல்	சுருண்ட கூந்தல்	திருகு குழல் உமை நங்கை பங்கன் தன்னைச் செங்கட்டாங் குடியதனிற் கண்டேன் நானே," தேவா. திருநா. 6: 84 : 3: 5 - 8
துன்றார் குழல்	நெருங்குதல் பொருந்திய கூந்தல்	"குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம் பரவித் துன்றார்குழலினீர் தோணோக்க மாடாமோ," திருவாச. திருத்தோள். 2 : 3 - 4
நெய்க்குழல்	புனுகு பூசப்பெற்ற கூந்தல்	"நீவி நிதம்ப உழத்தியர் நெய்க்குழல் மைச்சூழல், மேவி உறங்குவ மென்சிறை வண்டு விரைக்கஞ்சப்," திருத். 932 : 1 - 2
நெய்த்தலைக் கருங்குழல்	புழுகைத் தன் இடத்தே உடைய கரிய கூந்தல்	"நெய்த் தலைக் கருங்குழல் நிழன் றெருத் தலைத் தர முத்த லைத்திளம் முலை முகஞ்சி வந்தலம ரக்," சீவக. 1101 : 1 - 2
நெறி குழல்	நெறித்த கூந்தல்	"வெறி மலர்த்திண் சினைக் காஞ்சி, விரிநீழல் மருங்கு எல்லாம், நெறிகுழல் புன் புலை மகளிர், நெல் குறுபாட்டு ஒலிபரக்கும்," திருத். 1054 : 5 - 8
நெறிகொண்ட குழல்	நெறிப்பை (வளை வைக்) கொண்ட கூந்தல்	"தித்திக்கும் சிவபுவனத்து அமுதம் போலும், நெறி கொண்ட குழலியுமை பாகமாக, கணம் வணங்க", தேவா. திருநா. 6 : 75 : 11 : 2 - 3
நெறிமென் குழல்	நெறித்த மெல்லிய கூந்தல்	"நின்று பாவாய் திறவாய் என்று அழைப்ப நெறிமென் குழலாரும் ஒன்றும் துயிலாது உணர்ந்து அயர்வார்," திருத். 3497 : 3 - 5
பாரக் குழல்	செறிந்த கூந்தல்	"அலம்பு பாரக் குழலி ஓர் ஆயிழை, சிலம்பும் மேகலையும் ஒலி செய்திட," கம்ப. 1083 : 1 - 2
புரிகுழல்	குழன்று சுருண்ட கூந்தல்	"தாது அவிழ் புரிகுழல் மாதவி தன்னை ஆடலும் பாடலும் அழகும் என்று," சிலப். 3 : 7 - 8; "அங்கொரு சிலதியை யரசற் குய்ப்பப், புதுமான் விழியிற் புரிகுழற் செவ்வாய்ப் பதுமாபதியை வருகெனக் கூஉய்," பெருங். 4 : 14 : 80 - 82; "பொங்கு பெரு விருப்பினொடு புரிகுழலார் பலர் போற்றப், பங்கயக்கண் செங்கனி வாய்ப் பரவையார் அடி வணங்கி," திருத். 3285: 1 - 2; "புரிக்குழல் மடந்தையர் பொம்மல் வெம்முலை திருக்கழற் குரிசில் தார் திளைக்கும் போரினுட்," சீவக. 2688 : 1 - 2
மைந்நிற வார்குழல்	கருமையான நிற முடைய நீண்ட கூந்தல்	"செந்நிற மேனிவெண்ணீறணி அந்நிற மேனி நின் கொங் கையில் அங்கழி குங்குமம் மைந்நிற வார்குழல் மாலையும் தாதும் வளாய் மதஞ்சேர்", திருக்கோ. 69 : 1 - 3
மைம்மரு பூங்குழல்	இருண்ட கூந்தல்	"மைம்மரு பூங்குழல் என்று எடுத்து, மாறுஇல் பெருந்திருத் தோணி தன்மேல், கொம்மை முலை யினாள் கூடநீடு, கோலம் குலாவு மிழலை தன்னில்" திருத். 2460 : 1 - 4

வடித்து ஆய் பூங்குழல்	சீவப்பெற்று ஆராய்ந்து எடுக்கப்பெற்ற பூக்கள் அணியப் பெற்ற கூந்தல்	"வடித்து ஆய் பூங்குழலாளை வான் அறிய மண் அறிய", கம்ப. 5067 : 1 - 2
அறல் இயல் கூந்தல்	கருமணல் போன்ற கூந்தல்	"அறல் இயல் கூந்தலாள் அம், மனைவியும் அருளின் ஆர்ந்த திறல் உடைச் செய்கை செய்து," திருத். 402: 3 - 5
அறல் இயல் நறுமென் கூந்தல்	கருமணல் போன்ற நறிய மெல்லிய கூந்தல்	"பெறல் அரும் திருவி னாளைப், பெருமணம் புணர்ந்து முன்னை, அறல் இயல் நறுமென் கூந்தல், அணங்கு அனாள் திறத்தில் அற்றம்," திருத். 1757 : 1 - 4
இருள் ஐங்கூந்தல்	இருண்ட ஐந்து பகுதி களையுடைய கூந்தல்	"பொருள் வயின் நீடலோ இலர் நின், இருளைங் கூந்தல் இன்துயின் மறந்தே," அகம். 233 : 14 - 15
இருள் செய்த கருங் கூந்தல்	இருள் போன்ற கருமையான கூந்தல்	"இருள் செய்த கருங்கூந்தல், அடியில் அரிந்து எதிர் நின்ற, மருள் செய்த பிறப்பு அறுப்பார், மலர்க் கரத்தின் இடைநீட்ட," திருத். 900 : 1 - 4
காசுண்ட கூந்தல்	அழுக்குப் படிந்த கூந்தல்	"மாசுண்ட மணி அனாள், வயங்கு வெங்கதிர்த் தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள் காசுண்ட கூந்தலாள் கற்பும், காதலும், ஏசுண்டது இல்லை யாள்," கம்ப. 5136
கார் விரிக் கூந்தல்	மேகத்தைப் போன்ற விரிந்த கூந்தல்	"கவரி முச்சிக் கார் விரிக்கூந்தல்", பதிற். 43 : 1
சில்லைங் கூந்தல்	சிலவாகிய ஐந்து பகுதிகளையுடைய கூந்தல்	"இறந்து பொருள் தருதலும் ஆற்றாய்; சிறந்த, சில்லைங் கூந்தல் நல்லகம் பொருந்தி, ஒழியின் வறுமை அஞ்சுதி; அழிதகவு உடைமதி வாழிய நெஞ்சே," அகம். 123 : 5 - 8
தாழிருங் கூந்தல்	தாழ்ந்த இருண்ட கூந்தல்	"புறத்தோ னன்மை திறப்படத் தெளிந்து, தாழிருங் கூந்தற் றோழியைச் சேர்ந்திவன், யாழறி வித்தகனறிந்தரு. . . . ", பெருங். 3 : 14 : 239 - 241
நரை கூந்தல்	வெண்மையான கூந்தல்	"மன்னவன் அருளால் வாசந்தவை எனும் நன்னெடுங் கூந்தல் நரை மூதாட்டி", மணி. 23 : 1 - 2
நறுநுதல் செறி நெறி கூந்தல்	நறிய நெற்றியில் செறிந்து நெறிந்து காணப்படும் கூந்தல்	"நவ்வி வாள் விழி நறுநுதல் செறி நெறி கூந்தல், கொவ்வை வாயவள் முகில்விரல் கவர்ந்தது குறித்து," திருத். 2960 : 3 - 4
நன்னெடுங் கூந்தல்	அழகிய நீண்ட கூந்தல்	"மன்னவன் அருளால் வாசந்தவை எனும் நன்னெடுங் கூந்தல் நரை மூதாட்டி," மணி. 23 : 1- 2
நாறைங் கூந்தல்	மணமிக்க கூந்தல்	"நாறு ஐங் கூந்தல் நரை விராவுற்றன, இளமையுங் காமமும் யாங் கொளித் தனவோ," மணி. 22 : 130 -131
நெட்டிருங் கூந்தல்	நீண்ட கரியகூந்தல்	"திரிதரல் ஓவாள் தீய்ந்துநிற மழுங்கிக் கட்டழற் கதிய நெட்டிருங்கூந்தல். . ., " பெருங். 2 : 18 : 69 - 70
நெய்யார்ந்த கூந்தல்	வாசநெய்பூசிய அழகிய கூந்தல்	"நெய்யார்ந்த கூந்தல் நிழற் பொன்னரிமாலை சோரக் கையார் வளையார். . . .", சீவக. 2342 : 2 - 3
நெறிப் பல கூந்தல்	நெறிப்புடைய பலவாகிய கூந்தல்	"சுள்ளிவெண் சூழ்ச்சி சுரும்புணத் தொடுத்து, நெறிப் பல கூந்தல் நேயந் தோன்றக், குறிப்பறிந் தணிந்து கூடினர் ஒருசார். . . ", பெருங். 2 : 12 : 108 - 110
பல்லிருங் கூந்தல்	பலவாகிய கரிய கூந்தல்	"கல்லோங்கு கானம் களிற்றின் மதம்நாறும் பல்லிருங் கூந்தல் பணி நோனாள் கார் வானம் மெல்லவும் தோன்றும் பெயல்," கார் நாற். 24 : 2 - 4
புயல் காட்டும் கூந்தல்	மேகத்தைப் போன்ற கூந்தல்	"புயல்காட்டும் கூந்தல் சிறுபுறம் காட்டப் புன மயிலின் இயல்காட்டி இடை ஒதுங்க," திருத். 873 : 1 - 3
பூங்கூந்தல்	மலரணிந்த கூந்தல்	"அவிழ்பூங் கூந்தலுள் மகிழ் துயில்வெய்தி", பெருங். 3 : 1 : 179
பூவிரும் கூந்தல்	மலரணிந்த கூந்தல்	"பூவிரும் கூந்தல் புல்லென விரிய", பெருங். 2 : 10 : 134

மஞ்சு தழைத்து என வளர்ந்த மலர்க் கூந்தல்	மேகம் போல் தழைத்து வளர்ந்த மலர் அணிந்த கூந்தல்	"மஞ்சு தழைத்து என வளர்ந்த, மலர்க்கூந்தல் புறம் நோக்கி," திருத். 899 : 3 - 4
மண்ணார் கூந்தல்	மண்ணுதல் அமைந்த கூந்தல்	"தண்நறுங் கமழ்தொடை வேய்ந்தநின், மண்ணார் கூந்தல் மரீஇய துயிலே," அகம். 223 : 15 - 16
மணியிருங் கூந்தல்	நீலமணி போன்ற கூந்தல்	"சூழ்வளை முன்கைச் சுடர்க்குழை மாதர், மழைக்கால் அன்ன மணியிருங் கூந்தல்," பெருங். 2 : 19 : 33 - 34
மைஆர் கூந்தல்	கருமையான கூந்தல்	"மைஆர் கூந்தல் மனையாரைப் பார்த்து மனத்துள் கருதுவார்," திருத். 4023 : 7 - 8
வண்ணமலர்க் கருங்கூந்தல்	மலர் சூடிய கருமை யான கூந்தல்	"வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடியை வலது ஆக்கிக்", திருத். 291 : 5 - 6
வார்சான்ற கூந்தல்	நீட்சி மிகுந்த கூந்தல்	"வார்சான்ற கூந்தல்! வரம்புயர வைகலும் நீர்சான்று உயரவே நெல்லுயருஞ் - சீர்சான்ற," சிறுபஞ்ச. 46: 1 - 2
வெண்மணலாகிய கூந்தல்	வெள்ளிய மணலைப் போல் நரைத்த கூந்தல்	தண்ணறல் வண்ணம் திரிந்து வேறாகி, வெண்மண லாகிய கூந்தல் காணாய்," மணி. 20 : 41 - 42
நுண்ணறல் போல் நுணங்கிய ஐங் கூந்தல்	நுண்மையான, ஆற்றின் மணல் போல கருமையான ஐவகைப்பட்ட கூந்தல்	"தண்வயல் ஊரன் புலக்குந் தகையமோ, நுண்ணறல் போல நுணங்கிய ஐங்கூந்தல்" ஐந். ஐம். 27 : 1 - 2
குறுநெறிக் கூழை	குறிய நெறிப்பினை யுடைய கூந்தல்	"கோலங்கொண்ட குறுநெறிக் கூழை ஒருசிகை முடித்த உறுப்பமை கோலத்து," பெருங். 2 : 15 : 91-92
சுருள்புரி கூழை	சுருண்ட கூந்தல்	"சுருள்புரி கூழையர் குழலிற் பட்டுன், திறம் மறந்திங் கிருள்புரி யாக்கையிலே கிடந்தெய்த்தனன்...," திருவாச. அடைக்கலப். 5 : 1 - 4
மடக்காக் கூழை	வாரி கை செய்யாத கூந்தல்	"மடக்காக் கூழையும் மருங்குலும் பற்றிப்," பெருங். 1 : 34 : 132
வார் சடை	நீண்ட சடை	"கற்றானைக் கங்கை வார் சடையான் தன்னைக், காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதினானை," தேவா. திருநா. 1 : 2 : 1 - 2
கற்றைவார் சடை	நெருக்கமான சடைமுடி	"புற்றில் வாளரவும் அஞ்சேன், பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன் கற்றைவார் சடைஎம் அண்ணல், கண்ணுதல் பாத நண்ணி", திருவாச. அச்சப். 1: 1 - 4
வார்வளர் சடை	வளர்ந்த நெடிய சடை	"வேள்விக் கலப்பை விழுப்பொருள் விரதத்துச் சீரை யுடுக்கை வார் வளர் புன்சடை", பெருங். 2 : 15 : 39 - 40
திரிபுரிவார் சடை	திரித்து முறுக்கிய நீண்ட சடை	"புரிநூன் மார்பில் திரிபுரி வார்சடை, மரவுரி உடையன் விருச்சிகன் என்போன்", மணி. 18 : 27 - 28
புரிசடைமுடி	சுருண்ட சடைமுடி	"தன்னை யாவரும் அறிவதற் கரியவன், எளியவன் அடியார்க்குப், பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில், இளமதி யது வைத்த", திருவாச. அதிசய. 3: 3 - 6
ஒலிமயிர்ச் சிகழிகை	அடர்ந்த மயிரால் முடித்த முடி	"எலிமயிர்ப் போர்வைத் தெழினி வாங்கினார், ஒலிமயிர்ச் சிகழிகை உருவக் கொம்பனார்", சீவக. 2471: 3 - 4
குழலுடைச் சிகழிகை	குழற்சி பொருந்திய முடி	"குழலுடைச் சிகழிகைக் குமரன் தோளினைக் கழலுடை இளையவர் கச்சின் வீக்கலின்," சீவக. 1092 : 1 - 2
திருமுடிச் சிகை	குடுமி	"செய்யபுன்சடை கரந்ததோர் திருமுடிச் சிகையும், சைவ வெண்திரு நீற்று முண்டகத்து ஒளித் தழைப்பும்," திருத். 508 : 1 - 2
துவர் நிறப் பங்கி	பவளம் போன்ற நிற முடைய தலைமயிர்	"கவருடை எயிற்றினர்: கடித்த வாயினர் : துவர் நிறப் பங்கியர் : சுழல்கண் தீயினர்," கம்ப. 439 : 1 - 2

தாழ்ந்த வேணி	தாழ்ந்த சடை	"தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர், வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்", திருத். 96 : 1 - 200
வண்டுளர் ஐம்பால்	வண்டுகள் சுற்று கின்ற கூந்தல்	"வண்டுள ரைம்பால் வாசவதத்தை", பெருங். 1 : 40: 235
வரி உளர்த்தும் ஐம்பால்	வண்டுகள் குடைகின்ற ஐம்பால் கூந்தல்	"வளத்தில் நீடும்பதி அதன் கண்வரி உளர்த்தும் ஐம்பால் உடையோர் முகத்தினும்", திருத். 910 : 1 - 2
வண்டுஆர் இருங்குஞ்சி	வண்டுகள் சுற்றித் திரியும் குஞ்சி	"வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன் மேற் கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்", சிலப். 19 : 35 - 36
கமழ் சுரும்பின் பூப்பயிலும் சுருள் குழல்	வண்டுகள் மொய்க் கும் பூக்கள் அணிந்த சுருண்ட குழல்	"காப்பு அணியும் இளங்குழவிப் பதம்நீங்கிக் கமழ் சுரும்பின் பூப்பயிலும் சுருள் குழலும் பொலம் குழையும் உடன் தாழ", திருத். 883 : 1 - 4
வண்டு அலையும் குழல்	வண்டுகள் சுற்றும் கூந்தல்	"இடறி இடை தளர்ந்து அசைவார் வண்டு அலையும் குழல் அனைய மடநடையின் வரம்பு அணைவார்", திருத். 63 : 6 - 8
வண்டு அறை குழல்	வண்டு ஒலிக்கும் கூந்தல்	"வண்டு அறை குழல்கள் எங்கும் வளர் இசைக் குழல்கள் எங்கும்", திருத். 82 : 3 - 4
வண்டார் குழல்	வண்டுகள் ஒலிக்கும் கூந்தல்	"மன்னும் இசைமொழி வண்டார் குழல் அரிவை என்று எடுத்து மின்னு சுடர் மாளிகை விண்தாங்குவ போல்", திருத். 3050 : 1 - 2
வண்டு உலாம் குழல்	வண்டுகள் மொய்க்கும் கூந்தல்	"வண்டு உலாம் குழல் கற்றை முன் தாழ", திருத். 1140 : 3; "வண்டு உலாம் குழல் மலை மகளுடன் வடகயிலை அண்டர் நாயகர் இருக்கும் அப்பரிசு அவர் அடியேன்" திருத். 1634 : 1 - 2
வண்டுலாம் பல்குழல்	வண்டுகள் உலவுகின்ற செறிந்த கூந்தல்	"பருகி வண்டுலாம் பல் குழலினாள்", சீவக. 989 : 2
பூவாதி வண்டு தேர்ந்துண் குழல்	கூந்தலில் மலர்களை அணிந்ததால் வண்டு கள் மொய்த்தல்	"உரையான் பொருளொடு வாழ்வுஆயு உரையானாய்ப் பூவாதி வண்டு தேர்ந்துண்குழலா யீத்துண் பான்", ஏலாதி. 32 : 2 - 4
வண்டு மருவும் குழல்	வண்டுகள் சூழ்ந்த கூந்தல்	"வண்டுமருவும் குழல் உமையாள்", திருத். 1713 : 5 - 6
வண்டுவார் குழல்	வண்டுகள் மொய்க் கும் நீண்ட கூந்தல்	"வண்டுவார் குழல் கொடியைக் கைப்பிடிக்க மணக் கோலம் கண்டவர்கள் கண்களிப்பக்", திருத். 904 : 5 - 7; "வண்டுவார் குழல் மலைமகள் கமல வதனம் நோக்கி", திருத். 1150 : 5 - 6; "அண்டர் நாயகர் கோபுர வாயில் நேர் அணைந்து வண்டுவார் குழலாள் என்பு நிறைந்த மண்குடத்தை", திருத். 2988 : 2 - 3
வண்டு வாழும் மலர்க் கூந்தல்	வண்டுகள் மொய்க்கும் மலர் அணிந்த கூந்தல்	"வண்டு வாழும் மலர்க் கூந்தல் பரவையார் மாளிகை நோக்கி", திருத். 3490 : 5 - 6
வண்டு படுபு இருளிய தாழிருங் கூந்தல்	வண்டு மொய்த்து இருண்ட தாழ்ந்த பெரிய கூந்தல்	"வண்டு படுபு இருளிய தாழிருங் கூந்தல்", அகம். 131: 3
பாணுவண்டரற்றுங் கோலச் சிகழிகை	பண்பாடும் வண்டுகள் மொய்த்து முரலும் கோலமயிர் முடிப்பு	"பாணுவண்டரற்றுங் கோலச் சிகழிகைப் படியும் நோக்கி", சீவக. 2447 : 3
தேன் கோதை மலர்க்குழல் மேல் வண்டு ஆர்த்தல்	தேன் பொருந்திய மலர் மாலையை அணிதலால் கூந்தலில் வண்டுகள் ஒலித்தல்	"தேன் கோதை மலர்க் குழல் மேல் சிறை வண்டு கலந்து ஆர்ப்ப", திருத். 292 : 5 - 6

3.1.1 கூந்தல் : ஒப்பனைப் பொருட்கள்

அ. மலர்கள்

தமிழர் வாழ்வில் மலர்கள் இரண்டறக் கலந்த ஒன்று. இன்றும் தமிழர் வாழ்வில் மலர்கள் செல்வாக்குடன் திகழினும் பண்டைத் தமிழரிடம் மலர்கள் கொண்டிருந்த உறவு இன்று இதற்கு இல்லை என்றே கூறவேண்டும். காரணம் வாழ்க்கைச் சூழல். இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர் நம் முன்னோர். எனவே ஒப்பனைகளுக்கு மிகுதியாக மலர்களைப் பயன்கொண்டனர். எளிதாக, மிகுதியாகக் கிடைத்த நிலையை முதற் காரணமாக்கலாம். மலர்களின் நிறமும் அழகும் மணமும் மனிதனைக் கவருவதில் முன்னின்ற நிலையில் பல மலர்களை அவர்கள் பயன்படுத்தினர். கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூக்களை அவர்கள் பயன்படுத்தினர். விடுபூக்களாக, தொடுபூக்களாக, கட்டுப் பூக்களாக அவர்கள் மலர்களைப் பயன்கொண்டனர். புதிய பூக்களைப் பயன்படுத்தினர். வாடிய மலர்களையும் பயன் கொண்டனர். கூந்தலுக்கும், நெற்றிக்கும், மார்புக்கும், தோள்களுக்கும் அவர்கள் மலர்களைப் பயன்கொண்டனர். இவற்றையெல்லாம் குறிப்பிடத் தனித்தனிச் சொற்களையும் பயன்படுத்தினர். இன்று இத்தகைய மலர்ப் பயன்பாடு மிகக் குறைந்துவிட்டது கண்கூடு.

கூந்தலுக்கும் மலர்களுக்கும் உள்ள தொடர்பை அன்றைய் புலவர்கள் அடைகள் மூலமாக வெளிப்படுத்துகின்றனர். கூந்தலுக்கும் மலருக்கும் இருந்த நெருக்கமான உறவை அறிந்து கொள்ள இச்சொற்கள் துணை புரிகின்றன. குறிஞ்சிப் பாட்டில் கபிலர் அன்றைய மகளிர் பயன்படுத்திய மலர்களையெல்லாம் தருகிறார் (குறிஞ்சிப்பாட்டு. 63-98). இவை பரவலாக அன்றைய பயன்பாட்டில் இருந்தவை என்பதை யுணர இச்சொற்களும் துணையாகின்றன.

மலர்க் கூந்தல்

தேமலர் அளகம்	தேன் பொருந்திய மலர் அணிந்த கூந்தல்	"தேமலர் அளகம் சூழும், சில மதித் தெருவில் சூழும்", திருத். 553 : 5-6
பூவொடு நாவி பூத்த கதுப்பு	மலர்களும் கஸ்தூரிக் கலவையும் கமழ்கின்ற கூந்தல்	"புதுப்புனல் குடையும் மாதர், பூவொடு நாவி பூத்த, கதுப்பு உறு வெறியே நாறும்", கம்ப. 42 : 1 - 3
கொந்து அலர்க் குழல்	கொத்து மலரணிந்த கூந்தல்	"கொந்து அலர்க் குழலார் போதக் குலச்சிறையார் அங்கு எய்த, இந்த நன் மாற்றம் எல்லாம், அவர்க்கு உரைத்து இருந்த பின்னர்", திருத். 2597 : 5 - 8
செழுமலர்த்தார்க் குழல்	செழித்த மலர் மாலைகளை அணிந்த கூந்தல்	"கடை சூழ்ந்து பலிதேருங் கங்காளனார், கழுமலத்தார் செழுமலர்த்தார்க் குழலியோடும், விடை சூழ்ந்த வெல் கொடியார் மல்கு செல்வ, வீழி மிழலை மேவினாரே" தேவா. திருநா. 6: 51 : 3 : 5 - 8
தோட்டார் குழல்	மலர் அணிந்த கூந்தல்	"அறவோர் கோட்டமாக்கிய வண்ணமும், கேட்டன னாகியத் தோட்டார் குழலியை", மணி. 20 : 13 - 14
தோடு அலர் குழல்	இதழ்களையுடைய பூக்கள் பொலிந்த கூந்தல்	"நாடுதலே நலம் இன்னும்; நாடி, அத்தோடு அலர் குழலி தன் துயரின் சென்று", கம்ப. 4668 : 1 - 2
பூ கற்றைக் குழல்	மலரணிந்த அடர்ந்த கூந்தல்	"கற்றைப் பூங்குழலாளைச் சிறை வைத்த கண்டகனை, முற்றப்போர் முடித்தது", கம்ப. 5057 : 3 - 5
பூங்குழல்	பூவணிந்த கூந்தல்	"பூங்குழல் மகளிர் முன்னர் புலம்பல் நீ", சீவக. 712 : 3
ஆய்பூங்குழல்	ஆராய்ந்து தொடுக்கப் பட்ட பூவணிந்த குழல்	"வடித்து ஆய்பூங்குழலாளை", கம்ப. 5067 : 1

கொந்து அலர் பூங்குழல்	கொத்தாக மலர்ந்த பூவை அணிந்த கூந்தல்	"கொந்து அலர்பூங் குழல் இமயக் கொம்பு கம்பர் கொள்ளும்பூ சனைகுறித்த தானம் காக்க", திருத். 1169: 1 - 2
சேடார் பூங்குழல்	அழகாக பூவணிந்து இருந்த கூந்தல்	"சேடார் பூங்குழல் சிங்கடியப்பன்", தேவா. சுந்தர. 8 : 10 : 3 - 5
முருகு அலர் பூங்குழல்	மணம் கமழும் மலர் அணிந்த கூந்தல்	"முன் செய்த அருள் வழியே முருகு அலர் பூங்குழல் பரவை, தன் செய்யவாயில் நகை தாராமோ தாரும் என", திருத். 3291 : 1 - 2
வடித்து ஆய் பூங்குழல்	சீவப் பெற்று ஆராய்ந் தெடுக்கப் பெற்ற பூக்கள் அணியப் பெற்ற கூந்தல்	"வடித்து ஆய்பூங்குழலாளை வான் அறிய மண் அறியப்பிடித்தான் இவ் அடலரத்தன்", கம்ப. 5067 : 1 - 3
வெறிகொள் பூங்குழல்	மணங் கமழும் பூக்களைச் சூடின கூந்தல்	"வெறிகொள் பூங்குழலினாளை, வீரனே! வேண்டினேன் யான்", கம்ப. 2935 : 5 - 6
பூப்பெயில் மென் குழல்	மலர் நிறைந்த மென் மையான கூந்தல்	"பூப்பெயில் மென் குழல் மடவார் செயல் உவந்து போயினார்", திருத். 1742 : 4
பூந்தண் வார் குழல்	பூ அணிந்த குளிர்ந்த நீண்ட கூந்தல்	"பூந்தண் வார் குழல் பொன் கொழுந்தே! புகழ் ஏந்து செல்வம் இகழ்ந்தனை", கம்ப. 5173 : 1 - 3
மதுவூர் குழல்	தேன் சிந்தும் மலர்க் கூந்தல்	"மதுவூர் குழலியும் மாடும் மனையும்", திருமந். 155 : 1 - 2
மலர்க் குழல்	மலரணிந்த கூந்தல்	"மூதுஎயில் திருவாயிலைத் தொழுது போய் முனை மலர்க் குழலார்கள், ஆதரித்து வாழ்த்து உரை இரு மருங்கு எழ அணி மறுகு இடைச்சென்று", திருத். 2859 : 3 - 6
கொத்திரைத்த மலர்க்குழல்	மலர் அணிந்த கூந்தல்	"கொத்திரைத்த மலர்க் குழலாள் குயில் கோலஞ்சேர், சித்திரக்கொடி மாளிகை சூழ்தெளிச் சேரியீர்", தேவா. திருஞா. 23 : 8 : 1 - 2
மதுமலர்க் குழல்	தேன் பொருந்திய மலர்களை அணிந்த கூந்தல்	"முதியோள் கோட்டத் தகவயிற் கிடந்த, மதுமலர்க் குழலி மயங்கின ளெழுந்து", மணி. 21 : 3 - 4; "மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்கும்", மணி. 3 : 16
மலர்க் கருங்குழல்	மலரணிந்த கருமை யான கூந்தல்	"வார்ந்து இழி குருதி சோர, மலர்க் கருங் குழலும் சோரச், சோர்ந்து வீழ்ந்து அரற்றும் தோகை", திருத். 4107 : 1 - 4
வாசநன் மலரணி குழல்	மணமலர் அணிந்த கூந்தல்	"வாசநன் மலரணி குழல் மடவார்", திருவி. 267 : 3
குரற்றலைக் கூந்தல்	பூங்கொத்தை அணிந்த கூந்தல்	"குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ, அரற்றினள்", மணி. 8 : 36 - 38
பூ அலர் நறுமென் கூந்தல்	மலர் அணிந்த கூந்தல்	"பூ அலர் நறுமென் கூந்தல் பொன்கொடி கணைக் கால் காமன், ஆவ நாழிகையே போலும் அழகினில் மேன்மை எய்த", திருத். 3010 : 1 - 2
பூவிருங் கூந்தல்	மலரணிந்த கூந்தல்	"கொடியேர் சாயற் கொழுங்கவின் வாடப் பூவிருங் கூந்தல் புல்லென விரிய வாசவ தத்தையும் வத்தவன் மார்பின்", பெருங். 2 : 10 : 113 -115
அவிழ்பூங் கூந்தல்	மலரணிந்த கூந்தல்	"அவிழ்பூங் கூந்தலுண் மகிழ்துயில் வெய்தி நீயுமெவ்வந் தீரயானும்", பெருங். 3 : 1 : 179 - 180
போதணி கூந்தல்	மலரணிந்த கூந்தல்	"அன்பிற் கரந்தே அகன்றனை யோவெனப் போதணி கூந்தற் பொற்பூம் பாவை", பெருங். 2 : 19 : 98 - 99

தேன் நக்க மலர்க் கூந்தல்	தேன் விளங்கும் மலர் அணிந்த கூந்தல்	"மானக் கஞ்சாறனார் மணக் கோலம் புனைந்திருந்த **தேன் நக்க மலர்க் கூந்தல்**, திருமகளைக் கொண்டு அணைந்து", திருத். 898 : 3 - 6
மணம் மலியும் மலர்க் கூந்தல்	மணம் வீசுகின்ற மலரை அணிந்த கூந்தல்	"கணவன் தான் வரவிடுத்த கனி இரண்டும் கைக் கொண்டு, **மணம் மலியும் மலர்க்கூந்தல்** மாதரார் வைத்த தன்பின்", திருத். 1738 : 1 - 2
மதுமலர்க் கூந்தல்	தேன் பொருந்திய மலர்களை அணிந்த கூந்தல்	"பொதியறைப் பட்டோர் போன்றுஉளம் வருந்தி, **மதுமலர்க் கூந்தல்** சுதமதியுரைக்கும்", மணி. 4: 105 - 106
விரா மலர்க் கூந்தல்	மணம் பொருந்திய மலர்களை அணிந்த கூந்தல்	"இராகுலன் வந்தோன் யாரென வெகுளலும், **விரா மலர்க் கூந்தல்** வன்வாய் புதையா", மணி. 10: 31 - 32
பிணி அவிழ் மலர் மென் கூந்தல்	புதியமலர் அணிந்த கூந்தல்	"**பிணி அவிழ் மலர்மென் கூந்தல்**, பெண் அமுது அனையாள் செம்பொன், அணிவளர் அல்குல் தங்கள், அரவுசெய் பிழையால் அஞ்சி", திருத். 3008 : 1 - 24
விரைசெறி மலர் மென் கூந்தல்	மணம் நிறைந்த மலரைச் சூடிய கூந்தல்	"**விரைசெறி மலர்மென் கூந்தல்**, உரிமை மெல்லியலார் தம்முள், உரை சிறந்து உயர்ந்த பட்டத்து, ஒரு தனித் தேவி மேவி", திருத். 4104 : 5 - 8
மன்றல் மலர்த் துணர் தூக்கிய மருங்கு தாழ் சடை	பூங்கொத்துகளைத் தாங்கிய தாழ்ந்த சடை	"**மன்றல் மலர்த்துணர் தூக்கி மருங்கு தாழ் சடை** யார் போல்", திருத். 951 : 3 - 4
வம்பு உலா மலர்ச் சடை	வாசனை வீசும் மலர்கள் பொருந்திய தலைமுடி	"எம்பிரான் யான்செய்யும் பணிஅது என்றனர், **வம்பு உலா மலர்ச்சடை** வள்ளல் தொண்டனார்....", திருத். 374 : 1 - 2
கொங்கலர்த்த முடி	புதிய மலர் அணிந்த முடி	"**கொங்கலர்த்த முடி** நெரிய விரலார் ஊன்றும் குழகன் காண் அழகன் காண்", தேவா. திருநா. 6: 48: 10: 5 - 8
வண்ணப்பூ முடி	மலர் அணிந்த முடி	"பொன்னணி மாலை பொலிந்த பூ முடிஇ **வண்ணப்பூ முடி** வாசவதத்தை", பெருங். 2 : 3 : 73 - 74
அலர்ததைதல்	மலர் செறிந்திருத்தல்	"சில மாக்களொடு சிவிகை வருகென, **அலர்ததை** யைம்பாலணியிழை யேறிப்போந்தன ளாகிப் பூந்தண் கானத்துள்", பெருங். 3 : 13 : 11 - 13
இணர் பிறங்குதல்	கொத்துக்கள் விளங்குதல்	"**பிறங்கு இணர்** நறுங்குழலர் அன்பர் பிரியாதோர் உறங்கினர்", கம்ப. 4993 : 3 - 4
பாசிலை மென் கொடியின் வடம் நறுவிலி புனைதல்	பச்சை இலைகளை உடைய மெல்லிய கொடியாகிய வடத்தில் கட்டிய நறுவிலியை அணிதல் (நறுவிலி - இலை, காய்)	"**பாசிலை மென் கொடியின் வடம்** பயில, **நறுவிலி புனைந்து** காசு உடை நாண் அதற்கு அயலே கரும் சுருளின் புறம் கட்டி", திருத். 945 : 3 - 4
கொத்து ஆர்தல்	பூங்கொத்து நிறைந்த மலரை அணிதல்	"**கொத்து ஆர்** மலர் குழலாள் ஒருகூறுஆய் அடியவர் பால், மெய்த்தாயினும் இனியானை அவ்வியன் நாவலர் பெருமான்", திருத். 220 : 1 - 2
கொந்து ஆர்தல்	பூங்கொத்துகளை அணிதல்	"மஞ்சு ஆர் முகில் வண்ணன் மாயம் செய் பாசத்தும் **கொந்து ஆர்** குழலியர் கூடிய கூட்டத்தும்", திருமந். 405: 2 -3
தாது கொண்டு அளகத்து அப்புதல்	முன் உச்சியில் மலர்த் தாதினை அப்புதல்	"கோதையுந் துகிலு மேந்திக் குங்கும மெழுதிக் கொய் பூந் **தாது கொண்டளகத் தப்பித்** தடமுலை வருடிச் சேர்ந்து", சீவக. 2948 : 1 - 2

தோடு இவர்தல்	இதழ்கள் நெருங்கிய மலர்களை அணிதல்	"தோடு இவர்ந்த பூஞ்சுரி குழலாள் தனைக் காணான்", கம்ப. 3473 : 3 - 4.
தோடு உலாவுதல்	பூவிதழ்களை உடைய மலர் அசைதல்	"நீடு சீர்த்திரு நீலகண்டப் பெரும் பாணர் தோடு உலாம் குழல் விறலியார் உடன்வரத்", திருத். 1856 : 1 - 2
தோடு சேர்தல்	பூவிதழ்களை உடைய மலர் சூடுதல்	"நாயகன் தோடு சேர் குழலாள் துயர் நீக்குவான்", கம்ப. 6740 : 1 - 3
பூ அணிதல்	மலரணிதல்	"புணர்ந்தோர் பூவணிய", புறம். 194 : 3; "கோசலத் தரசன் கோமகட் பூவணி வாசச்சுரி குழல் மாணிழை யொருத்தி", பெருங். 4 : 12 : 165 - 166
பூ ஆர்தல்	மிகுதியாக மலர் சூடுதல்	"பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி", தேவா. திருநா. 6 : 32 : 9 : 1 - 2; "ஓதை மலி மகிழ் நற்(கு) யாஅம் எவன் செய்தும் பூவார் குழல் கூந்தல் பொன்னன்னார் சேரியுள் ஓவாது செல்பாண! நீ", ஐந். எழு. 48 : 2 - 4
பூ சிரம் கொள்ளுதல்	தலையில் பூ அணிதல்	"சிரக் கொள் பூவென வொருக்கினார் புகழ், பரக்கு நீள் புவியே", தேவா. திருஞா. 2: 111 : 8 : 3 - 4
பூ சூட்டல்	மலர் அணிதல்	"இகலேந்து இளமுலைமேல் சாந்தெழுதி முத்தணித்து பூவும் சூட்ட", சீவக. 6791 : 2 - 1; "செண்பகப் பூச் சூட்ட வாராய்", பெரியாழ். 2: 7: 1: 4
பூ மலைதல்	பூ அணிதல்	"மாபெருந் தானையர் மலைந்த பூவும்", தொல். 1006: 5
பூ விரிதல்	பூக்கள் மலர்ந்து காணப்படுதல்	"தானை வேந்தன் தானெறி திரியான், பூவிரி கூந்தற் பொங்கிள வனமுலை", பெருங். 4 : 17 : 107 - 108
பூ வேய்தல்	பூ அணிதல்	"பெரும்பல் குவளைச் சுரும்படு பல்மலர், திறந்து மோந்தன்ன சிறந்து கமழ் நாற்றத்து, கொண்டல் மலர்ப்புதல் மானப்பூ வேய்ந்து", மது. 566 - 568; "பூ வேய்ந்த நெடுஞ்சடை மேல் அடம்பு தும்பை புதிய மதி நதி இதழி பொருந்த வைத்த", திருத். 4174 : 5 - 6
கொடிப் பூ மிலைதல்	கொடிப் பூ அணிதல்	"கொடிப்பூ மிலைந்து செல்க என விடுத்தனன்; எதிர்த்தனன் மீட்டும்", கம்ப. 3995 : 6 - 8
கோட்டுப் பூச்சூடுதல்	கிளைகளில் மலர்ந்துள்ள பூக்களைச் சூடுதல்	"கோட்டுப் பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீ ரென்று", குறள். 1313
சாரல் பல்பூ வண்டுபடச் சூடுதல்	அரிய முழைஞ்சு களில் செறிந்த பல பூக்களை வண்டு மொய்த்திடச் சூடுதல்	"சாரற் பல் பூ வண்டு படச் சூடிக்", அகம். 22 : 13
சின்னப்பூ அணிதல்	விடுபூ அணிதல்	"சின்னப் பூ அணிந்த குஞ்சி", சீவக. 2251 : 1
சினைப்பூ அணிதல்	கோட்டுப் பூக்களை அணிதல்	"சுனைப் பூக் குற்றும் சுள்ளி சூடியும் சினைப்பூ அணிந்தும் கொடிப் பூக்கொய்தும்", பெருங். 2 : 12 : 129 - 130
மென்பூ செருகுதல்	பூ செருகுதல்	"சின்னப் பூ செருகும் மென்பூ", கம்ப. 1133: 1
தலைநிறையப் பூச்சூடுதல்	தலை நிரம்ப மலர் சூடுதல்	"தக்கோலம் தின்று தலைநிறையப் பூச்சூடி பொய்க் கோலம் செய்ய ஒழியுமே", நாலடி. 43 : 1 - 2
வாச பூச்சுமை கொள்ளுதல்	பல வித பூக்களை மிகுதியாக அணிந்திருத்தல்	"வண்டினம் இசைகொள வாசப் பூச்சுமை கொண்டவர் குழாம் பொலிவுற்ற தாங்கொர்பால்", சீவக. 827 : 3 - 4
போது ஆர்தல்	மலர் நிறைந்து காணப்படுதல்	"தெண்ணீர் ஆய்சுனை நிகர்மலர் போன்மென நசைஇ வீதேர் பறவை விழையும் போதார் கூந்தல் நம் காதலி கண்ணே", அகம். 371 : 11 - 14

போது அணிதல்	மலர் அணிதல்	"சாந்தார் கூந்தல் உளரிப் போதணிந்து", அகம். 399 : 2
இணர்ப்போது அணிதல்	கொத்தில் உள்ள மலர் அணிதல்	"இணர்ப்போ தணிகுழல் ஏழை தன்னீர்மை இந் நீர்மை யென்றாற், புணர்ப்போ! கனவோ! பிறிதோ! அறியேன் புகுந்ததுவே", திருக்கோ. 1 : 17 : 3 - 4
போது துணைத்தல்	மலர் கொண்டு கூந் தல் அலங்கரித்தல்	"சாந்துளர் வணர்குரல் வாரி வகைவகுத்து யான் போது துணைப்ப, தகரம் மண்ணாள்", அகம். 117 : 10 - 11
மலர் சூடுதல்	மலர் அணிதல்	"விண்தடவு வார் பொழி லுகுத்த நற, வாடி மலர் சூடி விரையார், சென்தடவு மாளிகை செறிந்த திரு", தேவா. திருஞா. 3 : 74 : 3 : 5 - 7
மலர் பிணித்தல்	மலர் அணிதல்	"வேத வேதியர் வேள்வியே தீயன மாதர் ஓதி மலரே பிணியன", திருத். 1188 : 1 - 2
மலர் புனைதல்	மலர்களைச் சூடுதல்	"வெறி கமழ் பன் மலர் புனைய பின்னுவிட", அகம். 117 : 13; "மனம் மகிழ்ந்து அவர் மலர்க்கழல், சென்னியால் வணங்கிப், புனை மலர்க்குழல் மனைவியார், தம்மொடு புதல்வன்", திருத். 543 : 1 - 2
மலர்குழல் மலைதல்	கூந்தலில் மலர் களைச் சூடிக் கொள்ளுதல்	"கலவைகள் புனைவாரும், கலை நல தெரிவாரும், மலர்குழல் மலைவாரும், மதிமுகம் மணிஆடித்" கம்ப. 1188 : 1 - 2
கான்மலர் தலைவேய்தல்	காட்டு மலர்களைத் தலையில் அணிந்து கொள்ளல்	"விலைஞ ரொழித்த தலைவேய் கான்மலர்", அகம். 391 : 4
கைபுனை மலர் அணிதல்	புனையப்பட்ட மலர் அணிதல்	"கைபுனை மலரும், தடந்தோட்கு ஒப்பவுடங்கணிந் தொழுகிய", பெருங். 3 : 22 : 230 - 231
சுனை மலர் நாறுதல்	சுனைப் பூக்களை அணிதலால் கூந்தல் மணத்தல்	"பாரி தீம் பெரும் பைஞ் சுனைப் பூத்த தேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே", அகம். 78 : 22 - 24
சுனை மலர் மலைதல்	சுனைப் பூக்களை அணிதல்	"தீஞ்சுனை நீர்மலர் மலைந்து மதஞ்செருக்கி", பதிற். 70 : 8
தூமலர் கஞலுதல்	தூய மலர்களை நெருக்கமாக அணிதல்	"துவரப் புலர்ந்து தூமலர் கஞலித்", அகம். 141: 12 - 13
கொய்யணி நறுமலர் குலாவுதல்	கொய்யப்பட்ட அழ கிய நறிய மலர்கள் விளங்குதல்	"செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன், கொய்யணி நறுமலர் குலாய சென்னி மையணி மிடறுடை மறை யவனே" தேவா. திருஞா. 3 : 4 : 5 : 2 - 4
நறுமலர் சுரிகுழல் சூட்டுதல்	சுரிந்த கூந்தலில் நெருங்கிய நறுமலர் களைச் சூட்டுதல்	"தேமரு கொங்கையில் குங்கும மெழுதி அங்கையிற் நறுமலர் சுரிகுழற் சூட்டி", மணி. 25 : 86 - 87
நாள் மலர் துன்று சென்னியில் சூடுதல்	அன்றலர்ந்த மலர் களை நெருக்கமாகச் சூடுதல்	"துன்று நாள் மலர்ச் சென்னியில் சூடினான்", கம்ப. 2106 : 4
நாள் மலர் புனைதல்	புதிய மலர்களைச் சூடுதல்	"அஞ்சனம் என, வாள் அம்புகள் இடையே நஞ்சினை இடுவார்; நாள் மலர் புனைவர்", கம்ப. 1558 : 3 - 4
பன்மலர் வேய்தல்	பல மலர்களைச் சூடிக் கொள்ளல்	"பொன்னடர்ந்தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப் பன்மலர் வேய்ந்த நலம் பெறு கோதையள்", அகம். 280: 1 - 2; "வேர்பிணி பன்மலர் வேயு மோரும்", பரி. 12 : 16
வளமலர் அணியப் பெறுதல்	சிறந்த மலர் அணியப் பெறுதல்	"வள மலர், அணியப் பெற்றேன்", சீவக. 684 : 1
வீ சேர்தல்	மலர் சூடுதல்	"மாசற மண்ணுற்ற மணியேசும் இருங்கூந்தல், வீ சேர்ந்து வண்டார்க்கும் கவின் பெறல்", கலித். 77 : 16 - 7

அணிந்த மலர்கள்

கமல மலர் நாறும் முடி	தாமரை மணத்தல்	"படுங்கமல மலர் நாறும் முடி பரந்த பெருங் கிடக்கை", கம்ப. 9605 : 5 - 6
குரவ ஓதி	குரவம் பூவணிந்த கூந்தல்	"இரவு பாதகர் செய்த தீங்கு இரவி தன் மரபில் குரவ ஓதியார் குலச் சிறையார் உடன்கேட்டுச்", திருத். 2611: 1 - 2
குரவமருங்குழல்	குராமலர் அணிந்த கூந்தல்	"குரவமருங்குழலாள் உமை, நங்கை ஓர் பங்குடையாய்", தேவா. சுந்தர. 7 : 6 : 1 - 2
கொன்றையம் பூங்குழல்	கொன்றை மலர் அணிந்த கூந்தல்	"வென்றி மழவிடை ஊர்ந்தாற் குரியள்இக், கொன்றையம் பூங்குழலாள்", சிலப். 17 : 11
நாகம் நாறும் நனை குழல்	சுரபுன்னை மலர் மணக்கும் தேனால் நனைந்த கூந்தல்	"நாள் நாகம் நாறும் நனைகுழலாள் நல்கித்தன் பூண் ஆகம் நேர்வளவும் போகாது", திணை. நூற். 16: 1 - 2
பித்திகையின் தோடு அலர் மென்குழல்	பித்திகையின் இதழ் மலர்கின்ற மெல்லிய கூந்தல்	"பேடையுடன் பவளக்கால், புறவொடுங்கப் பித்திகையின் தோடு அலர்மென் குழல் மடவார் துணைக் கலச வெம் முலைகள்", திருத். 2234 : 3 - 6
முல்லையம் பூங்குழல்	முல்லைப்பூவால் ஆகிய அழகிய மலர் மாலை வேய்ந்த கூந்தல்	"மல்லன் மழவிடை ஊர்ந்தாற் குரியள் இம் முல்லையம் பூங்குழல்தான்", சிலப். 17 : 8
மௌவலங் குழல்	மல்லிகை சூடிய கூந்தல்	"மௌவலங்குழலாள் சுரமஞ்சரி", சீவக. 874 : 2
கோடல் வார் சடை	காந்தட் பூ பொருந் திய சடை முடி	"அங்கை அனல் கண்டேன் கங்கையாளைக், கோடல் அரவார் சடையிற் கண்டேன், கொக்கினிதழ் கண்டேன்", தேவா. திருநா. 6 : 77 : 1 : 4 - 6
தூநாண் மென் மலர்க் கொன்றைச் சடை	தூய்மையான அன்றலர்ந்த மென் மையான கொன்றை மலரை அணிந்த தலை முடி	"தூ நாண் மென் மலர்க் கொன்றைச் சடையார் செய்ய துணைப் பாத மலர்கண்டு தொழுதேன்", திருத். 3279 : 3 - 4
மொய் வாச நறுங் கொன்றை முடிச் சடை	வாசனை வீசும் கொன்றை மலரை அணிந்த முடி	"மொய் வாச நறுங் கொன்றை, முடிச் சடையார் அடித் தொண்டர், செவ்வாயின் மிசை வைத்த திருக்குழல் வாசனை", திருத். 966 : 5 - 8
வாகைச் சென்னி	வாகை மாலை சூடிய முடி	"மாலைவெண் குடைக்கீழ் வாகைச் சென்னியன்", சிலப். 27 : 253
கரந்தைத் திருமுடி	கரந்தை மலர் அணிந்த முடி	"காலைக் கதிர் செய் மதியங் கண்டேன், கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன், மாலைச் சடையும் முடியுங் கண்டேன்", தேவா. திருநா. 6 : 77 : 2 : 5 - 7
தூ நறுங் கொன்றை முடி	தூய்மையான நறு மணம் கொண்ட கொன்றை மலரை அணிந்த தலைமுடி	"ஞானம் உண்டவர் புண்டரீகக் கழல் அருச்சனை நலம் பெற்றுத் தூநறுங் கொன்றை முடியவர்.....", திருத். 3933 : 3 - 5
துளவை ஆய்முடி	துளசியை ஆராய்ந்து எடுத்து அணிந்த திருமுடி	"களவை ஆய்ந்து உறத் தெளிந்திலது ஆயினும் கண்ணால் துளவை ஆய்முடியாய்! 'உளை நீ' எனத் துணியும்", கம்ப. 10056 : 3 - 4
அடும்பின் மலர் மலைதல்	அடப்பம் பூவைத் தலையிலே சூட்டுதல்	"வறளடும்பின் மலர்மலைந்தும்", பட். 65
அதிரல் பல்காழ் மாலை மையிரும் பித்தை பொலியச் சூடுதல்	காட்டு மல்லிகை மலர் மாலையைச் சூடுதல்	"குயில் வாய் அன்ன கூர்முகை அதிரல், பயிலாது அல்கிய பல்காழ்மாலை, மை இரும் பித்தை பொலியச் சூட்டி", புறம். 269 : 1 - 3

அதிரல் பித்தைச் சுரும்பு படச் சூடுதல்	காட்டு மல்லிகையின் மலர்களைச் சுருண்ட கரிய மயிரில் சூடுதல்	"கொய்குழை அதிரல் வைகுபுலர் அலரி சுரி இரும் பித்தை சுரும்புபடச் சூடி", அகம். 213 : 4 - 5
ஆம்பல் மலைதல்	ஆம்பற் பூவைத் தலையில் சூடுதல்	"அரியல் ஆர்கை வன்கை வினைஞர் அருவியாம்பன் மலைந்த சென்னியர்", பதி. 62 : 16 - 17
ஆம்பல் மலர் கொண்டு அணிதல்	ஆம்பல் பூவை சூடுதல்	"ஆம்பல் மலர் கொண்டணிந்தாய் போற்றி", தேவா. திருநா. 6 : 5 : 4 : 7 - 8
அனிச்சப் பூக்கால் களையாது பெய்தல்	அனிச்சப் பூவைக் காம்படி களையாது சூடுதல்	"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு, நல்ல படாஅ பறை", குறள். 1115
புனலாம்பற் பூச்சூடுதல்	ஆம்பற் பூவைப் பறித்து அணிதல்	"புனலாம்பற் பூச் சூடியும்", பட். 66
ஆர் மலைதல்	ஆத்தி மலர் அணிதல்	"போந்தை வேம்பே ஆரென வருஉம் மாபெரும் தானையர் மலைந்த பூவும்", தொல். 1006
கடுக்கை மலைதல்	கார்காலத்தில் பூத்த கொன்றைப் பூவைச் சூடுதல்	"கடியேர் பூட்டுநர் கடுக்கை மலைய", பதிற். 43 : 16
கரந்தை சூடுதல்	கரந்தை மாலை சூடுதல்	"இணைமலர் மேலன்னம் வைகுகானல், இராமேச்சுரமேய அணைபிணை புல்கு கரந்தை சூடும் அடிகள் செயுஞ் செயலே", தேவா. திருஞா. 3: 101 : 6 : 4 - 8
செங்கழுநீர் சிரத்தையாற் சூடுதல்	சிவந்த குவளை மலர்களைச் சூடுதல்	"அரத்தம் உடீஇ அணி பழுப்பப் பூசிச் சிரத்தையால் செங்கழுநீர் சூடிப்", திணை நூற். 144 : 1 - 2
உயர் காஞ்சி மிலைதல்	உயர்ந்த காஞ்சிப் பூக்களை அணிதல்	"உளம் நிறை வெம்சினம் திருகி, உயர் காஞ்சி மிலைந்து ஏறக்", திருத். 3965 : 5 - 6
குரவு அலருதல்	குரவுமலர்கள் ஒளிருதல்	"குரவு அலரும் குழல் மடவார் அடியில் ஊட்டும் குழம்பு அடுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம்.....", திருத். 1179 : 5 - 6
குராவருதல்	குரவுமலர் அணிந்திருத்தல்	"குரா வரும் குழலி! நீ குறித்த நாளினே விராவு அரு நெடுஞ்சிறை மீட்கிலான்", கம்ப. 5418 : 1 - 2
குரவு ஆர்தல்	குரவுமலரை கூந்தலில் அணிந்து இருத்தல்	"அரவார்கர வன்னமை யார்திரடோள், குரவார் குழலா ளொரு கூறன்இடங், கரவாத கொடைக் கலந் தாரவர்க்கு", தேவா. திருஞா. 2: 17 : 2 : 1 - 3; "பன்மலர் பறித்தேத்தேன் குரவுவார் குழலார் திறத்தே நின்று குடிகெடு கின்றேனை", திருவாச. அதிசயப். 5 : 2 - 4; "குரவுவார் குழல் மடவாள் கூறுடையாள் ஒரு பாகம்", திருவாச. திருச். 1: 7 : 1
குவளைப் போது கமழ்தல்	குவளை மலர் மணம் வீசும் படிக் கூந்தலில் அணிந்து கொள்ளல்	"குடவரைச் சுனைய மாயிதழ்க் குவளை, வண்டுபடு வான்போது கமழும், அஞ்சில் ஓதி அரும்படர் உறவே", நற். 105 : 8 - 10
குவளை உள்ளகம் கமழுதல்	குவளை மலர் கூந்தல் முழுவதும் மணத்தல்	"அம்ம வாழி தோழி பைஞ்சுனைப், பாசடை நிவந்த பனிமலர்க் குவளை, உள்ளகங் கமழுங் கூந்தல்", ஐங். 225 : 1 - 3
அவிழ் பூங்குவளை பைங்குழல் மிலைச்சுதல்	விரிந்த குவளை மலரைப் பசிய கூந்தலில் சூடுதல்	"அவிழ் பூங்குவளை மதுவிள்ளும் பைங்குழல் கதிர் நெல்மிலைச்சிய", திருத். 1055 : 4 - 8
குறுஞ்சுனைக் குவளை வண்டுபட சூடுதல்	குறிய சுனையிற் பூத்த குவளைப் பூவினை வண்டு மொய்த்திட சூடுதல்	"குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக், கான நாடன் வருஉம்", அகம். 128 : 9 - 10

சுனைக் குவளை அடைச்சுதல்	குவளை மலரை அணிந்து கொள்ளல்	"குறுஞ்சுனைக் குவளை அடைச்சி நாம் புணரிய, நறுந்தண் சாரல் ஆடுகம் வருகோ", நற். 204 : 3 - 4
குவளைப்போது கோலச் சிகழிகை அழுத்துதல்	குவளை மலரைக் கூந்தலில் வைத்தல்	"குன்றிரண்டனைய தோளான் கொழுமலர்க் குவளைப் போதங் கொன்றிரண் டுருவ மோதி யுறக்கிடை மயில னாள்தன் சென்றிருண் டமைந்த கோலச் சிகழிகை யழுத்திச் செல்வன்", சீவக. 1289 : 1 - 3
மணிநிறக் குவளை அணிமலர் செருவுதல்	நீலமணி போலும் நிறமுடைய குவளை யினது அழகிய மலரைச் செருகுதல்	"நான மண்ணிய நீனிறக் குஞ்சியர் மணி நிறக் குவளை யணிமலர் செரீஇ", பெருங். 3 : 17 : 153 - 154
சுனைக் குவளைச் சூடுதல்	குவளை மலர் சூடுதல்	"குறுஞ் சுனைக் குவளை வண்டுபடச் சூடி", அகம். 128 : 9
செங்குவளை பறித்து அணிதல்	கூந்தலில் செங் குவளைப் பூவை பறித்து அணிதல்	"செங்குவளை பறித்து அணிவார், கருங்குழல் மேல் சிறை வண்டை", திருத். 64 : 1 - 2
சுடுபொன் அன்ன கொன்றை சூடுதல்	கொன்றைப் பூவினை அணிந்து கொள்ளல்	"சுடுபொன் அன்ன கொன்றைசூடிக், கடி புகுவனர் போல் மள்ளரும் உடைத்தே", ஐங். 432 : 2 - 3
சண்பகம் செரூஉதல்	பெரிய குளிர்ந்த சண்பகப் பூவைச் செருகுதல்	"துவர முடித்த துகள் அறும் முச்சி பெருந்தண் சண் பகம் செரீஇ", திருமுருகு. 26 - 27
சண்பகம் முடிப் பெய்தல்	சண்பக மாலையை முடியில் அணிதல்	"நீள் வெண் மாடத்து நின்று கொண்டு அந்நலார் ஆளிய மொய்ம்பர்க்கு அளித்து அணி சண்பகம், நாள் செய் மாலை நகை முடிப் பெய்பவே", சீவக. 132 : 2 - 4
சுள்ளி சூடுதல்	மராமரப் பூக்களைச் சூடுதல்	"விச்சா தரியரின் வியப்பத் தோன்றிச், சுனைப் பூங் குற்றும் சுள்ளி சூடியும்", பெருங். 2 : 12 : 128 - 129
தளவின் பூச்சூடுதல்	செம்முல்லையின் பூவினைச் சூடுதல்	"பழஞ்சோற்றுப் புகவருந்திப், புதற்றளவின் பூச்சூடி" புறம். 395 : 5 - 6
தும்பை சூட்டுதல்	தும்பை மலர் மாலையை அணிதல்	"தோகை அன்னவர் விழி தொடர் தும்பையும் சூட்டி" கம்ப. 9657 : 3 - 4
கொத்தலர்த் தும்பை சூட்டுதல்	தலையில் தும்பை மலர்க் கொத்தைச் சூடுதல்	"பத்திரக் கடிப்பு மின்னப் பங்கியை வம்பிற்கட்டிக், கொத்தலர்த் தும்பை சூடிக் கோவிந்தன் வாழ்க வென்னா", சீவக. 2277 : 1 - 2
நெடுந்தும்பையும் சூடுதல்	தும்பை மாலையைச் சூடுதல்	"பற்றினான்; கவசம் படர் மார்பிடைச் சுற்றினான்; நெடுந் தும்பையும் சூடினான்", கம்ப. 7113 : 3 - 4
தும்பை மலைதல்	தும்பைப் பூவைச் சூடுதல்	"அமர் கடந்து மலைந்த தும்பைப் பகைவர் போர் பீடழித்த செருப்புகன் முன்ப", பதிற். 14 : 8 - 9
துவர்ப்பூ தலைத் தங்குதல்	தலையில் சிவந்த பூவை அணிந்து இருத்தல்	"தன் தலைத் தங்கிய துவர்ப்பூ ஏற்றி", 11ஆம் திரு. 512 : 60 - 61
கருங்குரல் நொச்சிப் பசுந் தழை சூடுதல்	மலர்ந்த கரிய பூங் கொத்தினை உடைய நொச்சித் தழையைச் சூடுதல்	"அலவன்கண் ஏய்ப்ப அரும்பீன்று அவிழ்ந்த கருங் குரல் நொச்சிப் பசுந்தழை சூடி, இரும் புனம் ஏர்க்கடி கொண்டார்", கார். நாற். 39 : 1 - 3
பசுமுகை சென்னி சூடுதல்	சிறிய பசிய முல்லை அரும்புகளைச் சென் னியில் சூடியிருத்தல்	"ஆடுடை இடைமகன் சென்னிச் சூடிய எல்லாம் சிறுபசு முகையே", குறுந். 221 : 4 - 5
போந்தை மலைதல்	பனம்பூ மாலை அணிதல்	"போந்தை வேம்பே ஆரென வருஉம் மாபெரும் தானையர் மலைந்த பூவும்", தொல். 1006

மரா அத்து வால் மெல் இணர் பித்தை பொலியச் சூடுதல்	வெண்கடம்பின் வெள்ளிய பூங் கொத்துக்களைக் கூந்தலில் அழகு பெறச் சூடுதல்	"கருங்கால் மராத்துவா அல்மெல் இணர், சுரிந்து வணர் பித்தை பொலியச் சூடிக், கல்லா மழவர் வில்லிடந் தழீஇ" அகம். 127 : 13 - 15
மரா அத்து மெல் லிணர் தளிரொடு கொண்டு தண்ண றும் உச்சிப் புனைதல்	வெண்கடம்பின் மெல்லிணரைத் தளிரோடு சூடுதல்	"மதியுடம் பட்ட மையணற் காளை, வாங்கு சினை மலிந்த திரளரை மராஅத்துத் தேம்பாய் மெல்லிணர் தளிரொடு கொண்டு நின் தண் ணறும் முச்சி புனைய", அகம். 221 : 6 - 9
வலஞ்சுரி மராத்து புதுவீச் சுரியா உளைத்தலை பொலிய	வலமாகச் சுழித்த வெண் கடம்பினது சுரமெல்லாம் கமழும் புதிய பூக்களைச் சுருள் கொண்ட உளை போன்ற மயிரில் அழகு பெற அணிதல்	"வலஞ்சுரி மராஅத்துச் சுரங்கமழ் புதுவீச் சுரியா உளைத்தலை பொலியச் சூடிக்", அகம். 83: 1 - 2
மல்லிகை ஒலியல் சூடுதல்	மல்லிகை மாலை சூடுதல்	"வளைந்த மின்னார் மகிழ்ந்து சண்பகம், உளைந்து மல்லிகை யொலியல் சூடினார்", சீவக. 2682: 3-4
பூஞ்சிகை மல்லிகை கால் தொடர்தல்	பூ முடியில் மல்லிகை கட்டப்படுதல்	"கடிகமழ் பூஞ்சிகை காமர் மல்லிகை, வடிவுடை மாலைகா றொடர்ந்து வாய்ந்தது", சீவக. 1011 : 1 - 2
சிறுமுல்லை நாறுதல்	கூந்தலில் முல்லைப் பூவின் மணம் நாறுதல்	"நறுநுதால் என் கொல்ஐங் கூந்தல் உளரச் சிறுமுல்லை நாறியதற்குக் குறுமறுகி யொல்லாது உடன்று எமர் செய்தார்", கலித். 105 : 53 - 56
முல்லை அலரி முடித்தல்	முல்லையின் குறுகிய காம்புகளையுடைய மலரைக் கூந்தலில் முடித்தல்	"கூதிர் முல்லைக் குறுங்கால் அலரி மாதர் வண்டொடு சுரும்புபட முடித்த", நற். 366 : 5 - 6
பூத்தவஞ்சி மணி முடிக்கு அணிதல்	வஞ்சிப் பூக்களை அழகிய முடியின்கண் அணிதல்	"பூவா வஞ்சியிற் பூத்த வஞ்சி, வாய்வாள் நெடுந்தகை மணிமுடிக்கு அணிந்த", சிலப். 26 : 50 - 5
பூத்த வஞ்சி குஞ்சி யில் புனைதல்	வஞ்சிப் பூவைத் தமது முடியிலே சூடுதல்	"பூத்த வஞ்சி பூவா வஞ்சியிற் போர்த் தொழில் தானை குஞ்சியில் புனைய", மணி. 26 : 78 - 79
வஞ்சி மலர் மிலைதல்	வஞ்சி மலர் அணிதல்	"வளவனார் பெருஞ்சேனை வஞ்சிமலர் மிலைந்து ஏற", திருத். 3965 : 1 - 2
வெட்சி மலர் புனைதல்	வெட்சி மலரைச் சூடுதல்	"வெட்சி மலர் புனைய வெள்வாளுழத்தியும்" சிலப். 12 : 13
வெட்சி மிலைதல்	வெட்சிப்பூ சூடுதல்	"காட்டுமா வல்சியர் கரந்தை பாழ்பட, வெட்சி மிலைச்சிய வில்லுறு வாழ்க்கை", பெருங். 1 : 52 : 76 - 77
வெள்ளோத்திரத்து இணர்சென்னிக் கூட்டுதல்	வெள்ளோத்திரத்து வெண் மலரைத் தலையில் அணிதல்	"மால் வெள்ளோத்திரத்து மைஇல் அருஞ்சுரம் செல்வோர் வால் இணர் சென்னிக் கூட்டும்" ஐங். 301 : 1 - 2
வேம்பின் ஒண் குழை மலைதல்	வேம்பினது ஒள்ளிய தளிரைச் சூடுதல்	"மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி, மன்ற வேம்பிற் ஒண் குழை மலைந்து, தெண்கிணை முன்னர்க்", புறம். 79: 1-3
வேம்பின் வான் பூ சூடுதல்	வேப்ப மரத்தின் வெள்ளிய மலரைத் தலையில் அணிதல்	"அத்த வேம்பின மலை வான்பூச், சுரியா ருளைத் தலை பொலியச் சூடிக்", குறுந். 281 : 3 - 4
வேம்பு மலைதல்	வேப்பம்பூ மாலை சூடுதல்	"போந்தை வேம்பே ஆரென வருஉம் மாபெருந்தானை யர் மலைந்தபூவும்", தொல். 1006

வேங்கை பொன்னிணர் கொய்து கதுப்பு அணிதல்	வேங்கையின் பொன் னிற மலர்க் கொத்துக் களை மகளிரின் கதுப் பின் கண் சூட்டுதல்	"புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர் கொய்து நின், கதுப்பய லணியு மளவை", ஐங். 396 : 1 - 2
வேங்கைப் பொன்னிணர் மிலைதல்	வேங்கை மரத்தின் பொன்போலுள்ள பூங்கொத்துக்களைச் சூடுதல்	"பூங்கண் வேங்கைப் பொன்னிணர் மிலைந்து" அகம். 182 : 1
வேங்கையின் வயங்கிதழ் அணிதல்	வேங்கை மலர் அணிதல்	"செல்லா யோதில் சில்வளை விறலி, மலர்ந்த வேங் கையின் வயங்கிதழ் அணிந்து", பதிற். 40 : 21 - 3

பல மலர்களை ஒரு சேர அணிதல்

ஆரொடு ஏர் பெறத் துளவொடு தும்பையும் சுழியச் சூடுதல்	ஆத்தி துளபம் தும்பை வட்டமாக அணிதல்	"இளவரிக் கவட்டிலை ஆரொடு ஏர் பெறத் துளவொடு தும்பையும் சுழியச் சூடினான்", கம்ப. 7131 : 3 - 4
வான்கழு நீர் உய்த்தாங்கு செவி கொள அழுத்திக் குவளைச் செவித் தாது உறுத்துதல்	கூந்தலைத் திரள முடித்து அதனுள்ளே சிறந்த கழுநீர் மாலையைச் செலுத்தி அது கொள்ள அழுத்தி வெளியே குவளை மலர்களைச் சூடுதல்	"மணி நூற்றன ஐம்பால் வளைய முடித்து வான்கழு நீர் உய்த்தாங்கு அதனுள் செவி கொள அழுத்திக் குவளைச் செவித் தாது உறுத்து வாரே", சீவக. 2693 : 3 - 4
குவளைப் போதொடு அதிரல் வேய்தல்	குவளைப் பூவுடன் காட்டு மல்லிகைப் பூவினையும் சூடுதல்	"புகரில் குவளைப் போதொடு தெரியிதழ், வேனில் அதிரல் வேய்ந்த நின், ஏமுறு புணர்ச்சி இன் துயில் மறந்தே", அகம். 393 : 24 - 26
குவளையொடு பொதிந்த குளவி நாறுதல்	குவளையையும் காட்டு மல்லிகைப் பூவையையும் அணிதலால் கூந்தல் மணத்தல்	"அதலைக் குன்றத் தகல்வாய்க் குண்டு சுனைக் குவளை யொடு பொதிந்த குளவி நாறு நறுநுதன் தவ்வென மறப்பரோ மற்றே; முயலவும்", குறுந். 59 : 2 - 4
குவளை முண்டகக் கோதையொடு முடித்த குஞ்சியின் முருகுவிரி தாமரை முழுமலர் தோய்தல்	குவளை, முள்ளிப் பூமாலைகளுடன் தாமரை மலரையும் அணிதல்	"வண்டுண மலர்ந்த மணித் தோட்டுக்குவளை முண் டகக் கோதையொடு முடித்த குஞ்சியின் முருகு விரிதாமரை முழுமலர் தோய்க்", சிலப். 27 : 235 - 236
செங்கூதாளமொடு நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்தல்	மலையில் பூத்த செந் நறுந்தாளிப் பூவுடனே நறிய மலரையுடைய குறிஞ்சியினது நாட்பூவைச் சூடுதல்	"சிறுமலைச் சிலம்பிற் செங்கூதாளமொடு, நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து", சிலப். 14 : 88 - 89
சுள்ளி சுனை நீலம் சோபாலிகை செயலை அள்ளி அளகத்தின் மேலாய்தல்	அனிச்ச மலரையும், சுனையில் மலர்ந்த நீலோற்பவ மலர் களையும் கொய்து கூந்தலில் வைத்தல்	"சுள்ளி சுனைநீலம் சோபாலிகை செயலை, அள்ளி அளகத்தின் மேலாய்ந்து - தெள்ளி, இதணாற் கடியொடுங்கா ஈர்ங்கடா", திணை. நூற். 2: 1 - 3
தும்பை வாகை யொடு முடித்தல்	தும்பை பூச்சூடி வென்று வாகைப் பூச்சூடுதல்	"வடதிசைத் தும்பை வாகையொடு முடித்துத் தென்திசைப் பெயர்ந்த வென்றித் தானை", சிலப். 27 : 198 - 199

தோடார் போந்தை தும்பையொடு முடித்தல்	இதழ் நிரம்பிய பனம் பூ தும்பைப்பூ மாலை ஒரு சேர அணிதல்	"தோடார் போந்தை தும்பையோடு முடித்துப் பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்", சிலப். 27 : 45 - 46; "தோடார் போந்தை தும்பையொடு முடித்த வாடா வஞ்சி வானவர் பெருந்தகை", சிலப். 27 : 112 - 113
நாக நறுமலர் நாள் வேங்கைப் பூவிரவிக் கேசம் அணிதல்	புன்னையின் மணம் மிக்க மலரையும் அன்று அலர்ந்த வேங்கை மலரையும் ஒன்றுசேர்த்துக் கலந்து கூந்தலுக்கு அணிதல்	"நாக நறுமலர் நாள்வேங்கைப் பூவிரவிக் கேசம் அணிந்த கிளர் எழிலோள் ஆகம்", கைந். 12 : 1 - 2
நாகம் போதொடு இலவங்க மலரும் கூட்டிச் சூடுதல்	கொம்புகளில் பூத்த சுரபுன்னை மலர்களோடு இலவங்க மலரையும் சேர்த்து அணிதல்	"கோடு உலாம் நாகப் போதொடு, இலவங்க மலரும் கூட்டிச் சூடுவார், களி வண்டு ஒச்சித்", கம்ப. 858 : 1 - 3
பாதிரி அதிரலொடு விரைஇச் சில்லைங் கூந்தல் அழுத்துதல்	கூந்தலில் பாதிரி, புனலி மலரைக் கலந்து அழகுபட செருகுதல்	"கானப் பாதிரிக் கருந்தகட்டு ஒள்வீ, வேனில் அதிரலொடு விரைஇக் காண்வரச் சில்லைங் கூந்தல் அழுத்தி", அகம். 261 : 1 - 4
போந்தை உச்சிக் கொண்ட ஊசி வெண்தோட்டு வெட்சி வேங்கை யோடு விரைஇ சுரியிரும் பித்தை பொலிய சூடுதல்	பனந்தோட்டுடன் வெட்சியின் பெரிய மலர்களையும் வேங்கையின் மலர்களையும் கரிய தலைமயிர் பொலிய சூடுதல்	"வட்கர் போகிய வளர் இளம் போந்தை உச்சிக் கொண்ட ஊசி வெண்தோட்டு, வெட்சி மா மலர் வேங்கையொடு விரைஇ சுரிஇரும் பித்தை பொலியச் சூடி", புறம். 100 : 3 - 6
போந்தை தும்பை யொடு முடித்தல்	பனம்பூவுடன் தும்பை சேர்த்து அணிதல்	"தோடு ஆர் போந்தை தும்பையொடு முடித்து" சிலப். 27 : 45
முல்லை குருந் தொடு உச்சி வேய்தல்	முல்லைப் பூவைக் குருந்தம் பூவோடே சூடுதல்	"பல்கால்யாங் கான்யாற்று அவிர் மணல்தண் பொழில், அல்கல் அகலறை ஆயமொடாடி, முல்லை குருந்தொடு முச்சி வேய்ந்து", கலித். 113 : 23 - 25
முல்லையும் குவளையும் நெய் தலுங் கதுப்புற அடைச்சுதல்	முல்லை, குவளை மலர்களோடு நெய் தல் மலர்களையும் கொண்டையில் மிகுதியாகச் செருகுதல்	"தண்ணறு முல்லையும் தாழ்நீர்க் குவளையும் கண்ணவிழ் நெய்தலும் கதுப்புற அடைச்சி", சிலப். 14 : 76 - 77
நறுந்தொடை வாகை வேம்புடன் புனைதல்	வாகைப் பூ வேம்புடன் அணிதல்	"முனை அழிந்த வட புலத்து முதல், மன்னர் படை சரியப், புனையும் நறுந்தொடை வாகை, பூழியர் வேம்புடன் புனைந்து" திருத். 4080 : 5 - 8
மலர் புனையல்	மணம் கமழும் பல வகையான மலர் களைச் சூடுதல்	"வெறி கமழ் பன் மலர் புனைய பின்னுவிட", அகம். 117 : 13
வேம்பின் ஒண் டளிர் உழிஞைப் பவரொடு மிலைதல்	வேம்பினது ஒள்ளிய தளிரை நெடிய கொடி யாகிய உழிஞை யோடு சூடுதல்	"குடுமிகளைந் நுதல் வேம்பினொண்டளிர் நெடுங் கொடியுழிஞைப் பவரொடு மிலைந்து", புறம். 77: 2 - 3
ஆ. மாலைகள்		
மாலை	பூ மாலை	"மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்", தொல். 1092; "பொறியின், மணி பொன்னும் சாந்தமும் மாலையும்

		இன்ன அணியெலாம் ஆடையின் பின்", பழ. நா. 26: 2 - 4; "மாலையோதி மடவரன் மகளிர்", பெருங். 2: 12: 93 - 94; "வடங்களும் குழையும் பூணும் மாலையும் சாந்தும் யானைக்... யாற்றொடும் எடுத்த எல்லாம் அடங்கியது என்னில் என்னே! ஆழியின் ஆழ்ந்தது உண்டோ!", கம்ப. 4874; "முத்தின் ஆரங்களும் முடியும் மாலையும் உத்தரியங்களும் சரிய ஓடுவார்", கம்ப. 4885 : 3 - 4; "நீள் இரவு புலர்காலை மாலை வாச, நெறி குழலாள் நெடிது அயர்ந்து புலம்புகின்றாள்", திருத். 2377 : 7 - 3
அட்டுந் தேன் அணிந்த மாலை	தேன்வழியும் மலர் மாலை	"அட்டுந்தேன் அணிந்த மாலை பவளக் கொம் பணிந்ததொத்தார்", சீவக. 2553 : 4
அலர் மாலை	மலர் மாலை	"ஆங்கணைந்த சண்டிக்கும் அருளியன்று, தன் முடி மேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்", தேவா. திருநா. 6 : 18 10 : 1 - 2
எருக்கின் கோத்த மாலை	எருக்கினது குவிந்த முகைகளாற் கோக் கப் பெற்ற மாலை	"குவிமுகி ழெருக்கின் கோத்த மாலையன்" மணி. 3 : 105
எல்லவிழ் மாலை	ஒளியோடு மலர்கின்ற மலர்மாலை	"பல்லிரும் கூந்தல் சின்மலர் அன்றியும், எல்லவிழ் மாலையொடு என்னுற்றனர் கொல்", சிலப். 2 : 65 - 66
சந்த மலர் மாலை	அழகு தரும் மலர் மாலை	"சந்த மலர் மாலைகள் முத்தின் தாமம் நாற்றித்", திருத். 3734 : 5 - 6
சிகழிகை	சிகை மாலை	"நீல நாகம் பைவரித்தன்ன கோலச் சிகழிகை தான் முதல் சேர்த்தி", பெருங். 2: 15: 142; "சிகழிகை படலிகை வாசிகை சிகைமாலை", நிக. பிங். 3026
கூழைச் செண்பக மாலை	சண்பக மாலை	"தேன்கறி கற்ற கூழைச் செண்பகமாலை வேற் கண்", சீவக. 1487 : 1
தட மாலை	பெரிய மாலை	"தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர், தஞ்சுண்டா யங்கருதி நஞ்சுண்டீரே", 11ஆம் திரு. 832 : 5 - 8
தோடு சூழ் மாலை	இதழ்கள் சூழ்ந்த மாலை	"தோடு சூழ் மாலை எங்கும்", திருத். 83 : 7
படலிகை	தலை மாலை	"சிகழிகை படலிகை வாசிகை சிகைமாலை", நிக.பிங். 3026
புடை மாலை	திரண்ட மாலை	"புடைமாலை மதிக்கண்ணிப், புரிசடையார் பொன்கழல் கீழ், அடைமாலைச் சீலம் உடை, அப்பூதி அடிகள் தமை", திருத். 1481 : 1 - 4
மல்லிகை மாலை	மல்லிகை மலர் மாலை	"மல்லிகை மாலை மணங்கமழ் வார்குழற்", சீவக. 879 : 1
மல்லிகை ஒலியன் மாலை	மல்லிகை மலர் மாலை	"தடக்கையின் ஒத்து ஏருடைய மல்லிகையி னொலியன் மாலை உறுப்படக்கி வைத்தார்", சீவக. 2693 : 1 - 3
முறிமிடை படலை மாலை	தளிரும் மலருமாகத் தொடுத்த மாலை	"முன்னினர் முயங்கின் அல்லான் முறிமிடை படலை மாலைப், பொன்னிழை மகளிர் ஒவ்வாதவரை முன்புணர்தல் செல்லார்", சீவக. 483 : 2 - 3
வாசிகை	தலை மாலை	"சிகழிகை படலிகை வாசிகை சிகைமாலை", நிக. பிங். 3026
மாலை வகை	வாகை வகையாகத் தொடுக்கப்பட்ட பல மாலைகள்	"வகை வகை தை இயினார் மாலை", பரி. 20 : 29
ஆய்ந்த மாலை அணிதல்	மலர் தேர்ந்தெடுத்துக் கட்டிய மாலை அணிதல்	"நறும்புகை நான நாவிக்குழம் பொடு பளிதச் சுண்ணம் அறிந்தவர் ஆய்ந்த மாலை அணிந்த பைங் கூந்தலாய்", சீவக. 2994 : 1 - 2

தொத்து உறு தொழில் மாலை சுரிகுழல் அணிதல்	பூங்கொத்துக்களை வைத்துக் கைத்திறன் காட்டிப் புனையப் பட்ட மாலைகளை நெளிந்த கூந்தலில் அணிதல்	"தொத்து உறு தொழில் மாலை சுரிகுழல் அணிவாரும்", கம்ப. 1195 : 5 - 6
தாழ்குழல் சூழ்தரு மாலை ஆடல்	தாழ்ந்த கூந்தலில் சூடிய மாலை அசைதல்	"சங்கம் அரற்றச் சிலம் பொலிப்பத் தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்", திருவாச. திருப்பொற். 14 : 1 - 2
மாலையேந்துதல்	கூந்தலில் மல்லிகை மாலை அணிதல்	"ஏத்தரு மல்லிகை மாலை ஏந்திய, பூத்தலைக் கருங்குழற் புரியினால் புறம், யாத்து வைத்து அலைக்கும் இவ்வருளிலாள்", சீவக. 2007 : 1 - 3
துணைமாலை சூட்டல்	பூக்களைப் பிணைத்துச் செய்யும் மாலையை அணிவித்தல்	"துறந்தார்ந் தூநெறிக் கண் சென்றேன் அல்லேன், துணை மாலை சூட்டநான் தூயேன் அல்லேன்", தேவா. திருநா. 6 : 47 : 10 : 1 - 2
மாலை சூட்டுதல்	மாலைகளை அணிவித்தல்	"மாந்தளிர் அனைய மேனிக், குறத்தியர் மாலை சூட்டி", கம்ப. 854 : 1 - 2
விரைத்தலை மாலை சூட்டுதல்	மணம் மிகுந்த தலை மாலையை அணிதல்	"விரைத்தலை மாலை சூட்டி மின்னனார் அங்கை சேப்ப", சீவக. 2414 : 1 - 2
மாலை சூடுதல்	கூந்தலில் மாலை சூடியிருத்தல்	"ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலிற், சூடிய மாலையும் தொன்னிறம் வழாஅ", மணி. 16 : 31 - 32
பல்காழ் மாலை சூடுதல்	பல வடத்தால் அமைந்த அதிரற் பூ மாலையைப் பொலிவு பெறச் சூடுதல்	"குயில்வா யன்ன கூர்முகையதிரல், பயிலாது அல்கிய பல்காழ் மாலை, மையிரும் பித்தை பொலியச் சூடி", புறம். 269 : 1 - 3
ஊசிபோகிய மாலை சூழ் செய்தல்	ஒளி பொருந்திய செங் கழுநீர்ப் பூக்களை ஊசியாற் கோத்துச் சுற்றி அணிதல்	"ஒண்செங்கழுநீர்க் கண்போல் ஆயிதழ், ஊசிபோகிய சூழ் செய் மாலையன்", அகம். 48 : 8 - 9
தேன் நகு நறவ மாலைச் செறிதல்	வண்டுகள் மகிழும் தேனையுடைய மலர் மாலையை அணிதல்	"தேன் நகு நறவ மாலைச், செறிகுழல் தெய்வம் அன்னாள், தானுடைக் கோல மேனி", கம்ப. 936 : 1 - 3
மாலை சிகழிகைச் சேர்த்தல்	மலர் மாலையை அணிதல்	"விம்மகிற் புகையின் மேவியுடம் பினை வேது செய்து, கொம்மென நாவி நாறும் கூந்தலை யுலர்த்தி நொய்ய, அம்மலருரோமப் பூம்பட்டுடுத்த பின் அனிச்ச மாலை செம்மலர்த் திருவினன்னார் சிகழிகைச் சேர்த்தி னாரே", சீவக. 2667
குழலில் மாலை தாழ்தல்	கூந்தலில் மாலை அணிதல்	"காலன் ஆர்உயிர் மாளக் கறுத்தன, மாலை தாழ்குழல் மாமலை யாள் செங்கை, சீலம் ஆக வருடச் சிவந்தன", திருத். 338 : 2 - 4
மணிக்குழல் மாலை கால் தொடுதல்	நீலமணி போன்ற கூந்தலில் அணிந்த மாலை காலைத் தொடுதல்	"நெகிழ்ந்துசோர் பூந்துகினோக்கி நோக்கியே மகிழ்ந்து வீழ் மணிக்குழன் மாலை காறொடும்", சீவக. 1004 : 1 - 2
ஒலியன் மாலை பரப்புதல்	தழைத்த மாலையை அணிந்து இருத்தல்	"இருள்படப் பொதுளிய சுருளிருங்குஞ்சி, மருள்படப் பரப்பிய வொலியன் மாலையர்", சிலப். 26: 108 - 109
ஒலியன் மாலைப் புறந்தாழ்தல்	பூமாலை புறத்தே தாழ்தல்	"உண்ணற்கினிய மதுமகிழ்ந்தார் ஒலியல் மாலைப் புறந்தாழக், கண்ணகக் கழுநீர் மெல்விரலாற் கிழித்து மோந்தார் கனிவாயார்", சீவக. 2700 : 3 - 4

சுரியிரும் பித்தை சூழ்ந்து விரிபூ மாலை புறந் தாழ்தல்	கூந்தலைச் சுற்றி மாலை அணிந்து இருத்தல்	"கருகிய நெஞ்சினன் காமங் காழ்கொளச் சுரியிரும் பித்தை சூழ்ந்து புறந்தாழ்ந்த, விரிபூ மாலை விரும்பினன் வாங்கி", மணி. 22 : 148 - 154
புகை மலி கந்த மாலை புனைதல்	பூகை நிரம்பிய மாலை அணிதல்	"புகைமலி கந்த மாலை புனைவார்கள், பூசல் பணிவார்கள் பாடல் பெருகி", தேவா. திருஞா. 2: 84: 7: 5 - 6
மலர்மாலைப் புனைதல்	மாலை அணிதல்	"வண்தமிழ் மென் மலர்மாலை புனைந்தருளி", திருத். 1425 : 1
மாலை புனைதல்	மாலை அணிதல்	"மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந் திறைஞ் சாச் சென்னி யிறைஞ் சிவலங் கொண்டு", சிலப். 26 : 56 - 57
விளங்கு விறல் மாலை மலைதல்	புனைந்த விளக்கம் உடைய வெற்றி மாலையை அணிதல்	"அலர் மந்தாரமொடு ஆங்கயல் மலர்ந்த, வேங் கையொடு தொடுத்த விளங்கு விறல் மாலை மேம்பட மலைதலும் காண்குவல் ஈங்கென", சிலப். 25 : 138 - 140
வண்ண மாலை மிலைச்சுதல்	அழகிய மாலையைக் கூந்தலில் அணிவித்தல்	"வரிநிற வண்ண மாலை வலம்பட மிலைச்சி", சீவக. 696 - 2
மடல்பட்ட மாலை குழல் வளாய்	இதழ் விரிந்த மலர் மாலை சூடுதல்	"மடல்பட்ட மாலை வளாய குழலாள் மணம் நாறு சோலை இளங்கிளி போல் தூமொழியாள்", 11ஆம் திரு. 300 : 91 - 92
வண்ண மாலை நடுச்சிகையுள் வளைத்தல்	அழகிய பூமாலையைக் கொண்டையின் நடுவே வளையமாக வைத்தல்	"கண்ணி வேய்ந்து கருங்குழல் கை செய்து, வண்ண மாலை நடுச்சிகையுள் வளைஇ", சீவக. 133: 1 - 2

மாலை வகைகள்

அலங்கல்

அலங்கல்	தலை மாலை	"பொருதலங்கல் நீண்முடியான் போரரக்கன்", தேவா. திருநா. 6 : 12 : 10 : 1; "வேயழத் திரண்ட மென்தோள் வெம்முலைப் பரவை யல்குற், றோய்பிழி அலங்கல் ஆர்ந்த தொன்னலந் தொலைந்து வாடி", சீவக. 2923 : 2 - 3; "விசும்பிவர் கடவுளொப்பான் விரிச் சிகன் அறிந்து கூற, அசும்பு தேனலங் கல்ஐம் பால்அரிவையொடு ஆய்ந்து", சீவக. 621 : 3; "அலங்கல் மாலையும் சாந் தமும் அன்றுதான் அணிந்த கலங்களோடும்", கம்ப. 6581 : 2 - 3
துழாஅய் அலங்கல்	துளசி மாலை	"தண்பொரு திகிரிகமழ் குரல் துழாஅய் அலங்கல் செல்வன்", பதிற். 31 : 8 - 9
தேனுடை அலங்கல்	தேன் சிந்தும் மாலை	"மானுட மடந்தையால்" என்னும் வாய்மொழி தேனுடை அலங்கலாய்! - இன்று தீர்ந்ததே", கம்ப. 6147 : 3 - 4
மட்டுவிரி அலங்கல்	தேன் சிதறும் மாலை	"மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண, நட்டம் ஆடிய நம்ப அதனால்", 11ஆம் திரு. 487 : 49 - 50
மதுக்கமழ் அலங்கல்	தேன் மணக்கும் மாலை	"மதுக்கமழ லங்கன் மன்னவன்ம கற்கு, முதுக்குறை முதுமொழி யெடுத்துக் காட்டி", மணி. 20 : 73 - 74
தார் அலங்கல்	மலர் மாலை	"செறி பொன் - தார் அலங்கல் வீர! செய்திலம் குற்றம்! நம்மை", கம்ப. 4348 : 5 - 6
நறை கமழ் அலங்கல்	நறுமணம் கமழும் பூ மாலை	"நறைகமழ் அலங்கலான் நயன கோசரம், மறைதலும், மனம் எனும் மத்த யானையின்", கம்ப. 519 : 2 - 3
வண்டு உளர் அலங்கல்	வண்டுகள் கிளறு கின்ற மலர் மாலை	"வண்டு உளர் அலங்கலாய்! வஞ்சர் வாள்முகம், கண்டது ஓர் பொழுதினில்", கம்ப. 6451 : 1 - 2

விரைஉள அலங்கல்	மணம் கமழும் மாலை	"உரை உளது உணர்த்துவது; உணர்ந்து கோடியேல், விரை உள அலங்கலாய்!", கம்ப. 6245 : 1 - 2
நறுங்கொன்றை யலங்கலந் தெரியல்	அலங்கலாகிய கொன்றை மாலை	"அயந்திகழ் நறுங்கொன்றை யலங்கலந் தெரியலான்", கலித். 150 : 1
அலங்கல் அம் தொடை	அசைகின்ற மாலை	"அலங்கல் அம் தொடையினானும், அந்தியின் பொலங் குழை மயிலினோடு துயிலுற", கம்ப. 1252: 1 - 2
அலங்கல் மாலை	பூ மாலை	"ஊனுயர் நுதிகொள் வேலீர் ஒழிக ஈங்கில்லை யென்றான், கானுய ரலங்கன் மாலைக் கட்டியங் காரனன்றே", சீவக. 664 : 4
மதுக் குலாம் அலங்கல் மாலை	தேன் பொருந்திய மலர் மாலை	"மதுக்குலாம் அலங்கன் மாலை மங்கையர் வளர்த்த செந்தீப், புதுக்கலத் தெழுந்த தீம்பாற் பொங்க லினுரையிற் பொங்கி", சீவக. 1821 : 1 - 2
அலங்கல் சூட்டுதல்	பூ மாலை அணி வித்தல்	"வலங்கொண் மழுவொன் றுடையாய் விடையாய் என ஏத்தி, அலங்கல் சூட்ட வல்லார்க்கு அடையா வருநோயே", தேவா. திருஞா. 2: 59 : 1 : 2 - 4
கமழ் கொன்றைத் துன்றும் அலங்கல் சூழ்தல்	மணம் வீசுகின்ற கொன்றை மலரால் ஆன மாலையை சுற்றி அணிதல்	"விலங்கலைக் கால் விண்டு மேன்மேலிட விண்ணும் மண்ணும் முந்நீர்க், கலங்கலைச் சென்ற அன்றுங் கலங்காய், கமழ் கொன்றை துன்றும் அலங் கலைச் சூழ்ந்த சிற்றம்பலத் தான்", திருக்கோ. 24 : 1 - 3
அலங்கல் தாங்குதல்	அலங்கல் அணிதல்	"அகில் கமழ் அங்கை சேப்ப அரிவையர் அலங்கல் தாங்கி", சீவக. 2540 : 2
அலங்கல் சடை தாழ்தல்	சடையில் மாலை சூடுதல்	"அலங்கற் சடை தாழ ஐயமேற்று, அரவம் அரை யார்க்க வல்லார் போலும்", தேவா. திருநா. 6 : 89 : 10: 1 - 2
புதுவிரை அலங் கல் குழன்மிசைப் பொலிதல்	புதிய மணமுள்ள மாலை கூந்தல் மீது விளங்குதல்	"மதியென மாசறு வதனம் விளங்கப் புதுவிரை அலங்கல் குழன்மிசைப் பொலியும்", 11ஆம் திரு. 896: 62 - 63

கண்ணி

கண்ணி	தலையில் சூடும் மாலை	"கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே", தொல். 1580; "வில்லும் வேலும் கழலும் கண்ணியும்", தொல். 1583; "சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்புதல், கண்ணி யின் மலரும் தண்ணறும் புறவில்", அகம். 34 : 1 - 2; "பகலிடைக் கண்ணியன் பைதற் குழலன்", கலித். 101: 39; "வாழ்க நின்கண்ணி வாய்வாள் வேந்தென", மணி. 18 : 63; "சூலப் படையுடையார் தாமே போலுஞ் சுடர்த் திங்கட் கண்ணி யுடையார் போலும்", தேவா. திருநா. 6 : 16 : 1 : 1 - 2; "கண்ணி நெற்றியர் கை தொழுஉப் புகுதரக்", பெருங். 1 : 32 : 67; "கச்சினர் கண்ணியர் கதிர்வெள் வளையினர்", பெருங். 1 : 34 : 122; "கண்ணி நெற்றி வெண்சூட்டு ஏற்றி", பெருங். 1 : 39 : 20; "தழையுந் தாருங் கண்ணியும் பிணையலும் விழை பவை பிறவும் வேண்டுவகொண்டு", பெருங். 2 : 18 : 6 - 7; "மறைந்தனமிருந்த காலைமற்றவளென் கண்ணி கொள்ளிற் கலக்கு முள்ளம்", பெருங். 3 : 8 : 132 - 133; "நிழன்மணி மேகலை நேர்முகத் தடித்தும் கண்ணியிற் சார்த்தியுங் கைக்குட் போக்கியும்", பெருங். 4 : 12 : 71 - 72; "உருமண்ணுவாவும் பெருவிதுப் பெய்திக் கண்ணியன் கழலினன் கச்சினன்", பெருங். 5: 4 : 35 - 36; "கண்ணி இளம்பிறையும் காய்சினத்த மாசுணமும் நண்ணி இருந்தால் நலமில்லை", 11ஆம் திரு. 545 : 1 - 2; "சூட்டொடு கண்ணி சூளாமணி சிந்தித் திரியும்

		அன்றே", சீவக. 786 : 4; "ஓக்கினார் **கண்ணி** சுண்ண முடற்றினா ருருவச் சாந்திற்", சீவக. 2661 : 2
அதிரலங் கண்ணி	புனலிப் பூ தலை மாலை அணிதல்	"**அதிரலங் கண்ணி** நீயன்பனெற் கன்பன்", பரி. 20: 81
அந்தளிர்க் கண்ணி	அழகிய தளிர் மாலை	"**அந்தளிர்க் கண்ணி** யவந்திகை வெல்கெனப் பைந் தொடி மாதர் பற்பல வகையால்", பெருங். 4: 12: 243 - 244
இலைப்புறங் கண்ட கண்ணி	பச்சிலையைக் கொண்ட கண்ணி	"**இலைப்புறங் கண்ட கண்ணி** இன்றமிழ் இயற்கை இன்பம், நிலைபெற நெறியிற் றுய்த்தார் நிகர் தமக்கிலாத நீரார்", சீவக. 2063 : 3 - 4
இலையுடைக் கண்ணி	இலையோடு கலந்து கட்டப்பட்ட மாலை	"**இலையுடைக் கண்ணி**யீர்க்கு இ.்.து எளிது", சீவக. 1735 : 3
ஈர்ந்தண் கண்ணி	குல்லை, குளவி, கூதாளம், குவளை ஆகிய மலர்களை இல்ல மலரொடு மிடைந்த குளிர்ந்த கண்ணி	"குல்லை குளவி கூதளங் குவளை, இல்லமொடு மிடைந்த **ஈர்ந்தண் கண்ணியன்**", நற். 376 : 5 - 6
உவலைக் கண்ணி	தழை விரவித் தொடுத்த மாலை	"**உவலைக் கண்ணி**த் துடியன் வந்தென", புறம். 269: 6
ஒலியற் கண்ணி	மாலை	"பாண்கடன் ஆற்றிய, **ஒலியற் கண்ணி**ப் புலிகடிமா அல்", புறம். 201 : 14 - 15; "நுந்தை தாயம் நிறைவுற எய்திய, **ஒலியற் கண்ணி**ப் புலிகடிமா அல்", புறம். 202 : 9 - 10
களங்காய்க் கண்ணி	களங்காயாற் செய்யப்பட்ட கண்ணி	"வளந்தலை மயங்கிய பைதிரந் திருத்திய, **களங்காய்க் கண்ணி** நார்முடிச் சேரல்", பதிற். 38 : 3 - 4
காஞ்சிப் பனிமுறி ஆரங்கண்ணி	காஞ்சி மரத்தின் குளிர்ந்த தளிர்கள் மிடைந்த சந்தனத் தின் அழகிய மாலை	"**காஞ்சிப் பனிமுறி ஆரங்கண்ணி**, கணிமே வந்த வள்அல்குல்அவ் வரியே", புறம். 344 : 6 - 7
காந்தளங் கண்ணி	காந்தள் மலரால் தொடுக்கப்பட்ட தலை மாலை	"**காந்தளங் கண்ணி**க் கொலைவில் வேட்டுவர்", பதிற். 30 : 9
காந்தள் பெருந் தண் கண்ணி	காந்தள் மலரால் கட்டிய கண்ணி	"சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் **காந்தள் பெருந்தண் கண்ணி** மிலைந்த சென்னியன்", திருமுருகு. 43 . 44
காயாம் பூங்கண்ணி	காயாம் பூவாற் செய்த கண்ணி	"**காயாம் பூங்கண்ணி**ப் பொதுவன் தகை கண்டை", கலித். 103: 50 - 52; "**காயாம் பூங் கண்ணி**க் கருந்து வராடை", கலித். 108 : 10
குருந்தங் கண்ணி	குருந்த மலராலான கண்ணி	"நன்றே காதலர் சென்றவாறே, **குருந்தங் கண்ணி**க் கோவலர், பெருந்தண் ணிலைய பாக்கமுடைத்தே", ஐங். 439
குல்லைக் கண்ணி	கஞ்சங் குல்லை யாலாகிய கண்ணி	"**குல்லைக் கண்ணி** வடுகர் முனையது", குறுந். 11: 5
குவளைக் கண்ணி	குவளை மலர் மாலை	"சுனைப் பூங்குவளைச் சுரும்பார் **கண்ணி**யன், மடவர லரிவைநின் மார்பம ரின்றுணை", குறுந். 321 : 2 - 3; "அவனெனை ஆட்கொண்டருளினன் காண்க **குவளைக் கண்ணி** கூறன் காண்க", திருவாச. திருவண்டப். 63 - 64; "கைம் மலர்த் தனைய காந்தட் கடிமலர் நாறுகானம் மொய்ம் மலர்க் **குவளைக் கண்ணி** மொய்ம்ப நீ", சீவக. 1214 : 1 - 2; "தாணெடுங் **குவளைக் கண்ணி**த் தளையவிழ் கோதை மாலை வாண்முடி வைரவில்லும் வார்குழை சுடரு மார்பிற்", சீவக. 2802 : 1 - 2

குவளை மலர்க் கண்ணி	சிறந்த குவளை மலர் மாலை	"குவளைமா மலர்க் கண்ணியுங் கொன்றையும், துன்று பொற் குழல் திருச்சடையும்", திருவி. 226 : 3 - 4
கூவிளங் கண்ணி	கூவிள மலர்க் கண்ணி	"ஊரா தேந்திய குதிரை கூர்வேல், கூவிளங் கண்ணி கொடும்பூண் எழினியும்", புறம். 158 : 7 - 9
கொய்தளிர்க் கண்ணி	கொய்யப்பட்ட தளிர் விரவின தலை மாலை	"குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச் செல் இசை நிலைஇய பண்பின், நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே", சிறுபாண். 267 - 269
கொன்றை நறுங் கண்ணி	கொன்றை மலர்க் கண்ணி	"கண்ணி கார் நறுங் கொன்றை", புறம். 1 : 1
கொன்றைக் குறுநறுங் கண்ணி	கொன்றையின் சிறந்த மணங் கொண்ட தலை மாலை	"கொன்றைக் குறுநறுங் கண்ணியினான் தன் கொய் பூங்கயிலைக்", 11ஆம் திரு. 552 : 5 - 6
கடிக்கொன்றைக் கண்ணி	மணங்கொண்ட கொன்றை தலை மாலை	"கடிக் கொன்றைக் கண்ணியலான் பாதமே கல்", 11ஆம் திரு. 756 : 3 - 4
கந்தம் கமழ் கொன்றை மாலைக் கண்ணி	மணம் கமழும் கொன்றை மாலைக் கண்ணி	"கந்தம் கமழ் கொன்றை மாலைக் கண்ணி யன் விண்ணவர் ஏத்தும் எந்தை, இருப்பதும் ஆரூர் அவர்", தேவா. சுந்தர. 76 : 7 : 5 - 7
கமழ் கொன்றை யங் கண்ணி	மணம் வீசும் கொன்றை மலரா லான தலை மாலை	"கடித்தார் கமழ் கொன்றைக் கண்ணி யான் காண் காளத்தியான் அவன் என் கண்ணுளானே", தேவா. திருநா. 6 : 8 : 2 : 7 - 8
காரார் கமழ் கொன்றைக் கண்ணி	மணம் கமழும் கொன்றை மலர் களாலான தலை மாலை	"காரார் கமழ்கொன்றைக் கண்ணி போலுங்", தேவா. திருநா. 6 : 16 : 2 : 1
சின்ன மலர்க் கொன்றைக் கண்ணி	கொன்றை மலர் களாகிய தலை மாலை	"சின்ன மலர்க்கொன்றைக் கண்ணி கண்டேன் சிவனை நான் சிந்தையுட் கண்டவாறே", தேவா. திருநா. 6 : 97 : 11 : 7 - 8
கோடனீடிதழ்க் கண்ணி	காந்தளினது நீண்ட இதழ்களால் கட்டின தலைமாலை	"புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடனீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ", நெடு. 5 - 8
கோடற்கண்ணி	காந்தட் பூவால் செய்த கண்ணி	"கோடற்கண்ணி குறவர் பெருமகன்", புறம். 157 : 7
சண்பகம் கரு விளை செங் கூதாளம் பூ நீர்ச் சாதியோடு கட்டும் கண்ணி	சண்பகம், கருவிளை செங்கூதாளம் போன்ற பல பூக்களி னால் கட்டப்படும் தலை மாலை	"சண்பகம் கருவிளை செங்கூதாளம், தண்கமழ் பூ நீர்ச் சாதியோடு இனையவை கட்டும் கண்ணியும் தொடுத்த மாலையும், ஒட்டிய திரணையோடு ஒசிந்த பூவினன்", சிலப். 22 : 40 - 43
மலரினும் அரும் பினும் தளிரினும் வனைந்த சந்தக் கண்ணி	மலர்களானும் அரும்பானும் தளிரா னும் கட்டப்பட்ட அழகுடைய மாலை	"திருச்சேர் மார்பன் தேற்றுதல் வேண்டி, மலரினும் அரும் பினுந்தளிரினும் வனைந்த, சந்தக் கண்ணிதன்", பெருங். 3 : 8 : 126 - 128
சுடர்ப் பூங்காந்தட் பெருந்தண் கண்ணி	சுரும்பினம் மொய்யாத நெருப்புபோலும் பூவினுடைய செங் காந்தளினது பெரிய குளிர்ந்த தலை மாலை	"சுரும்பு மூசாச் சுடர்ப் பூங்காந்தட் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்", திருமுருகு. 43 : 44

சுரும்பார் கண்ணி	சுரும்புகள் ஆர்க்கும் கண்ணி	"முக்காழ் மேல் **சுரும்பார் கண்ணி**", கலித். 85: 13 - 14; "மாறாது உற்ற வடுப்படு நெற்றிச் **சுரும்பு ஆர் கண்ணி** பெரும்புகல் மறவர்", மது. 595 - 6
சுரும்புண் கண்ணி	வண்டு மொய்க்கும் தலைமாலை	"**சுரும்புண் கண்ணிச்** சுதஞ்சணனென்பவே", சீவக. 952 : 4
செறிவினைப் பொலிந்த செம் பூங்கண்ணி	செறிந்த தொடைத் தொழிலாற் பொலிந்த தலை மாலை	"**செறிவினைப் பொலிந்த செம் பூங்கண்ணியர்**", பரி. 22 : 21 - 22
தளிர் தரு கண்ணி	தளிர் விரவிப் புனைந்த மாலை	"துன்னரும் பொதும்பிற் றொத்திடைத் துளங்கத், **தளிர் தரு கண்ணி**", பெருங். 3 : 9 : 8 - 9
தாமரைக் கண்ணி	தாமரைப் பூவால் செய்த கண்ணி	"**தாமரைக் கண்ணி**யை தண்ணறுஞ் சாந்தினை, நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்... அணங்கென அஞ்சுவர் சிறுகுடியோரே", கலித். 52 : 6 - 10
துணை மலர்க் கண்ணி	கட்டிய மலர்க் கண்ணி	"**துணை மலர்க் கண்ணி**யும் செம் பொன் மாலையும் இணை மலர்த் தாரினான் இடறியேகினான்", சீவக. 1621: 3 - 4
தொடை மாண்ட கண்ணி	கட்டுதல் மாட்சி மைப்பட்ட கண்ணி	"வயமான் அடித்தேர்வான் போலத் **தொடை மாண்ட கண்ணி**யன் வில்லன் வருமென்னை நோக்குபு", கலித். 37 : 2 - 3
தொடையமைக் கண்ணி	கட்டுதல் அமைந்த தலை மாலை	"**தொடையமைக் கண்ணித்** திருந்து வேற் தடக்கை", புறம். 378 : 3 - 5
நறுங்கமழ் கண்ணி	மிக்க மணம் வீசு கின்ற மாலை	"கட்டு ஏறு, **நறுங்கமழ் கண்ணி**, இக்காளை என்கைப் பட்டால் அதுவே அவ்இராவணன் பாடும் ஆகும்", கம்ப. 5767 : 1 - 2
நாறிணர்க் கொன்றை வெண் போழ்க் கண்ணி	கொன்றைப் பூங் கொத்தைப் பனங் குருத்தின்கண் வைத்துத் தொடுத்த கண்ணி	"**நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணி**யர், வான்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்", பதிற். 67: 13 - 14
பகன்றைக் கண்ணி	பகன்றைப் பூவால் செய்த கண்ணி	"**பகன்றைக் கண்ணி**ப் பழையர் மகளிர் ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த, விலங்கல் அன்ன போர் முதல் தொலைஇ", மலை. 459 - 461
படலைக் கண்ணி	தழை விரவின மாலை	"**படலைக் கண்ணி**ப்பரு ஏர் எறுழ்த் திணிதோள், முடலையாக்கை முழுவலிமாக்கள்", பெரும். 60 - 62
பன்மலர் படலைக் கண்ணி	பல மலர்களையும் தளிர் இலைகளையும் கொண்டு தொடுத்த தலை மாலை	"**பன்மலர்ப் படலைக் கண்ணி**க் குமரனைப் பாவை நல்லார் மன்னவன் பணியின் வாழ்த்தி வாச நெய், பூசி நன்னீர்", சீவக. 1299 : 1 - 2
பனிக் கணங்கு கண்ணி	பனிக்கு வாடிடும் கொன்றை மாலை	"அதுவே, **பனிக் கணங்கு கண்ணி**யார் ஒண்ணுதலின் மேலோர், தனிக் கணங்கு வைத்தார், தகவு", 11ஆம் திரு. 55 : 2 - 4
பிணையலம் கண்ணி	கட்டிய மாலை	"**பிணையல் அம் கண்ணி**ப் பெரும்பூண் சென்னி", அகம். 44 : 14
பிறைக் கண்ணி	பிறையாகிய கொண்டை மாலை	"மாதர்ப் **பிறைக் கண்ணி**யானை, மலையான் மகளொடும் என்னும்", திருத். 1654 : 1 - 2
பூஞ்செய் கண்ணி	பூவாற் செய்த கண்ணி	"சுரியல் அஞ்சென்னிப் **பூஞ்செய் கண்ணி**", பதிற். 27: 4
போந்தைக் கண்ணி	பனம் பூ மாலை	"வேம்பு முதல் தடிந்த வேந்துவாள் வலத்துப் **போந்தைக் கண்ணி**ப் பொறைய கேட்டருள்", சிலப். 27: 125 - 126; "**போந்தைக் கண்ணி**", சிலப். 28 : 9; "வேந்துவினை முடித்த வேந்துவாள் வலத்துப் **போந்தைக் கண்ணி** நின் ஊங்கணோர் மருங்கில்", சிலப். 28 : 133-134

மயிலைக் கண்ணி	இருவாட்சி மலரால் தொடுக்கப்பட்ட தலை மாலை	"கானக் காக்கை கலிச்சிற கேய்க்கும், மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள்" புறம். 342 : 1 - 2
மலர்க் கண்ணி	மலர் மாலை	"மாட டுத்த மலர்க் கண்ணினாள் கங்கை நங்கையைத், தோடடுத்த மலர்ச்சடை யென்கொனீர் சூடிற்றே", தேவா. திருஞா. 2 : 3: 7 : 3 - 4
முல்லைக் கண்ணி	முல்லைப் பூவால் தொடுத்த கண்ணி	"முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்", பதிற். 21: 25
முல்லையங் கண்ணி	முல்லை மலர்களால் ஆன தலை மாலை	"முல்லையங் கண்ணி முடியாய் போற்றி", தேவா. திருநா. 6 : 5 : 3 : 1
முறி கொண்ட கண்ணி	தளிர்களால் ஆன மாலை	"நெறி கொண்ட குஞ்சி சுருள் துஞ்சி நிமிர்ந்து பொங்க, முறி கொண்ட கண்ணிக்கு இடைமொய் ஒளிப்பீலி சேர்த்தி", திருத். 706 : 1 - 2
வண்டுபடு கண்ணி	வண்டுகள் மொய்க் கின்ற மாலை	"விரலுளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்காற், குண்டு சுனை பூத்த வண்டுபடு கண்ணி, யிணைத்த கோதை யணைத்த கூந்தல்", திருமுருகு. 198 - 200
வண்டுலவு கொன்றையங் கண்ணி	வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலர் களாலான தலை மாலை	"வண்டுலவு கொன்றையங் கண்ணி யானை வானவர்களேத்தப் படுவான் தன்னை, எண்டிசைக்கும் மூர்த்தியாய் நின்றான்", தேவா. திருநா. 6 : 3 : 7 : 5 - 7
வழைப் பூங்கண்ணி	சுரபுன்னை பூவால் தொடுக்கப்பட்ட கண்ணி	"வழைப் பூங்கண்ணி வாய்வாளண்டிரன்", புறம். 131: 2
வனைதரு வடி வார் கண்ணி	செய்யப் பெற்ற அழகு நிறைந்த கொண்டை மாலை	"வனைதரு வடிவார் கண்ணி, மறச் சிறு மைந்தரோடும்", திருத். 674 : 3 - 4
வாசக் கண்ணி	நறிய தலை மாலை	"மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி, மணிநீல மலை ஒன்று வந்தது என்ன", திருத். 701 : 3 - 4
விரைக் கொன்றைக் கண்ணி	வாசனை வீசும் கொன்றை மலர் களால் செய்யப்பட்ட தலை மாலை	"விரைக் கொன்றைக் கண்ணியன் காண்", தேவா. திருநா. 6 : 76 : 1 - 4
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணி	வாசனையுடைய வெள்ளெருக்கு மாலை	"விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணி யானை", தேவா. திருநா. 6 : 74 : 5 : 3
வெண் போழ்க் கண்ணி	வெள்ளிய தாழை மடல் கண்ணி	"வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய தண்ணறுந் தொடையல் வெண் போழ்க் கண்ணி", குறிஞ். 114-115
கண்ணி அயருதல்	ஞாழல், குவளை, முல்லையோடு ஒருங்குக்கூட்டிக் கட்டிய தலை மாலையை அணிதல்	"கடலாடு மகளிர் கொய்த ஞாழலும், கழனி உழவர் குற்ற குவளையும் கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு, பல்லிளங்கோசர் கண்ணி அயரும்", அகம். 216: 8-11
தளிரோடு ஊழ்பட விரீஇக் கண்விழவு தருஉங் கண்ணி கட்டுதல்	குளிர்ந்த அரும்புகளை யும் பல்வேறு வகைப் பட்ட மலர்களையும் அழகுமிக்க ஒளியும் நிறமும் உடைய தளிர் களோடே கட்டிய மாலை அணிதல்	"தண் அரும் பினமலர் தகைபெரிதுடைய, ஒண்ணிறத் தளிரோடு ஊழ்பட விரீஇக், கண்விழவு தருஉங் கண்ணி கட்டி", பெருங். 3 : 9 : 3 - 5

ஆரங்கண்ணியிற் சாற்றுதல்	ஆத்தி மாலையை அணிதல்	"ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்", மணி. 4 : 50
கண்ணி சூட்டுதல்	மாலை அணிதல்	"சுரும்பு சூழ் கண்ணி சூட்டியவர் கொலோ கயவர் சொல்லீர்", சீவக. 678 : 4
கண்ணி சூடுதல்	கொண்டை மாலையை அணிதல்	"கானில் வரித்தளிர் துதைந்த கண்ணி சூடி, கலை மருப்பின் அரிந்த குழை காதில் பெய்து", திருத். 697: 1 - 2
குவளைக் கண்ணி பின்னுப் புறந்தாழச் சூட்டுதல்	பின்னிய கூந்தலில் குவளைக் கண்ணி அணிதல்	"தண்கயத்து அமன்ற ஒண்பூங்குவளை, அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி, பின்னுப் புறந்தாழக் கொன்னே சூட்டி", அகம். 180 : 5 - 7
கண்ணி பொலியச் சூடுதல்	மரா மரத்தின் பூங்கொத்துக் களையும் ஒள்ளிய தளிரையுடைய யாம் மரத்தின் பூவினையும் மரல் நாரில் தளிரொடு தொடுத்த கண்ணியை அணிதல்	"தேம்படர்ந்த மராஅ மெல் இணரும், உம் பல் அகைத்த ஒண்முறி யாவும், தளிரொடு மிடைந்த காமரு கண்ணி, திரங்கு மரல் நாரில் பொலியச் சூடி, முரம்புகண் உடைந்த நடவை தண்ணென, உண்டனிர் ஆடிக் கொண்டனிர் கழிமின்", மலை. 428 : 3 - 4
கமழ் கொன்றைக் கண்ணி சூடுதல்	மணம் வீசும் கொன்றை மலரால் ஆன தலை மாலையை அணிதல்	"காரார் கமழ் கொன்றைக் கண்ணி சூடிக் கபாலங்கை யேந்தி கணங்கள் பாட", தேவா. திருநா. 6: 2 : 5 : 1 - 2
நெய்தல் நறுங் கண்ணி சூடுதல்	நெய்தலின் நறிய பூவாற் செய்த தலை மாலையைச் சூடுதல்	"குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்நறும் பூங்கண்ணி குறவர் சூடக்", பொருநர். 218 : 219
மருங்கு உயர்ந்த தேசு உடை சிகழியின் செறி கண்ணித் தொடை செருகுதல்	உயரமுடித்த பொலிவுடைய கூந்தலில் நெருங்கி தொடுக்கப்பட்ட தலைமாலையை அணிதல்	"வாச மலர்ப் பிணை பொங்க மயிர்நுழுதி மருங்கு உயர்ந்த தேசு உடைய சிகழிகையின் செறி கண்ணித் தொடை செருகிப்", திருத். 945 : 1 - 2
கண்ணி கொண்டு தன் சென்னி சேர்த்தல்	தலை மாலையை எடுத்துத் தன் தலையிலே சூட்டிக் கொள்ளுதல்	"கண்ணி கொண்டு தன் சென்னி சேர்த்தி, ஒருங்கு கலந்தனள்", பெருங். 3 : 9 : 91 - 92
குவியிணர் எருக்கின் ததர் பூங்கண்ணி சென்னி தகைத்தல்	குவிந்த கொத்துக் களையுடைய எருக் கினது நெருங்கிய பூக்களையுடைய கண்ணி அழகு செய்தல்	"குவியிண ரெருக்கின் ததர் பூங்கண்ணி, ஆடுஉச் சென்னி தகைப்ப", அகம். 301 : 11 - 12
முறிஆர் நறுங் கண்ணி முன்னர் தயங்குதல்	தளிர்கள் இடை இடையே பொருந்திய மணமமைந்த மலர்மாலை அணிதல்	"வெறியார் வெங்களத்து வேல்மகன் பாணி, முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க", நாலடி. 16: 1-2
கண்ணி திருத்துதல்	கூந்தலில் உள்ள கண்ணியை அழகு உடைத்தாகத் திருத்துதல்	அடிமே லடிமே லொதுங்கித் தொடி முன்கைக் காரிகை யாகத்தன் கண்ணி திருத்தினாள்", பரி 12 : 90 - 91
கண்ணி புனைதல்	கண்ணியால் அழகுபடுத்துதல்	"அம்பு கொண்டு அறுத்த ஆர்நார் உரிவையின் செம் பூங் கரந்தை புனைந்த கண்ணி", அகம். 269: 10 - 11

கண்ணி பெய்தல்	கண்ணியைக் கூந்தலிலே இட்டு முடிதல்	"புல்லினத்து ஆய மகன்சூடி வந்தது ஓர் முல்லையொரு காழுங் கண்ணியும் மெல்லியால் கூந்தலுள் பெய்து முடித்தேன்மன் தோழியாய்", கலித். 115 : 4 - 6
கண்ணி அணி கொள மலைதல்	தலையில் காயாம் பூக்களும் பிற பூக்களும் அழகு கொள்ளும்படி கண்ணியைச் சூடுதல்	"மணிபுரை யுருவின காயாவும் பிறவும், அணிகொள மலைந்த கண்ணியர்", கலித். 101 : 5 - 6
கமழ் கண்ணி மலைதல்	மணம் வீசும் மலர் களால் செய்த கண்ணியைச் சூடுதல்	"புல்இலை வெட்சியும், பிடவும், தளவும், குல்லையும் குருந்தும் கோடலும் பாங்கரும், கல்லவும் கடத்தவும் கமழ் கண்ணி மலைந்தனர், பல் ஆன் பொதுவர் கதழ்விடை கோள் காண்மார்", கலித். 103 : 2 - 5
வெண்போழ்க் கண்ணி சென்னி நலமுற மிலைச் சுதல்	தாழை மடலிலே தொடுத்ததாகிய தலை மாலையைச் சூடுதல்	"வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய தண்ணறுங் தொடையல் வெண்போழ்க் கண்ணி, நலம் பெறு சென்னி நலமுற மிலைச்சி", குறிஞ். 114 - 116
மெல்லிணர்க் கண்ணி மிலைதல்	தேன் பரந்த புன்னை யினது மெல்லிய பூங் கொத்தாற் செய்யப்பட்ட மாலையைச் சூடுதல்	"தூவற் கலித்த தேம்பாய் புன்னை, மெல் இணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்", புறம். 24 : 7 - 8
தேம்பாய் கண்ணி நல்வலந்திருத்தல்	தேன்பரக்கும் மாலையைத் திருத்துதல்	"தேம்பாய் கண்ணி நல்வலந்திருத்தி, அரசிருந்து பனிக்கு முரசு முழங்கு பாசறை, இன் துயில் வதியுநற் காணாடுயருழந்து", முல். 78 - 80
புதுப்பூங் கொன்றைக் கண்ணி வேய்தல்	கொன்றை மலர்களைத் தலை மாலையாகக் கொள்ளுதல்	"புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக் கண்ணி வேய்ந்த கைகலை நாயக", 11ஆம் திரு. 896: 1 - 2
கத்திகை		
கத்திகை	மாலை	"சண்பகம் மாதவி தமாலம் கருமுகை வெண்பூ மல்லிகை வேரொடு மிடைந்த அஞ்செங்கழுநீர் ஆயிதழ்க் கத்திகை", சிலப். 8 : 45 - 47
அஞ்செங் கத்திகை அணி பெற அடைச் சுதல்	அழகிய சிவந்த மாலையை அழகுண்டாகச் செருகுதல்	"கோலச் சிகழிகை தான் முதல் சேர்த்தி, அஞ்செங் கத்திகை அணி பெற அடைச்சி", பெருங். 2 : 15 : 143 - 144
மல்லிகைக் கத்திகை சிகை முதற்பாற்பட அடைச்சுதல்	மல்லிகை மாலையைச் செருகுதல்	"வளர்பிறை அன்ன மல்லிகைக் கத்திகை, கிளர்பொன் போதொடு களையறப் பிணித்த, வாக்கமை சிகைமுதற் பாற்பட அடைச்சி", பெருங். 2 : 4 : 142 - 144
வாசம் திணியும் பித்திகை கத் திகை சேர்த்தல்	வாசமிக்க பித்திகை மாலை அணிதல்	"வாசம் திணியும் இதழ்ப் பித்திகைக் கத்திகை சேர்த்து வாரும்", கம்ப. 887 : 6 - 8
கோதை		
கோதை	நீளமாகக் கட்டப்படும் மாலை; தலையிலும் மார்பிலும் அணியப் படும் மாலை வகை	"கோதையு குழலும் தாதுசேர் அளகமும் ஒருகாழ் முத்தமும் திருமுலைத் தடமும் மின்னிடை வருத்த", சிலப். 8. 94 - 96; "மாசில் வாண் முகத்து வண்டொடு சுருண்ட குழலுங் கோதையுங் கோலமுங் காண்மார்" சிலப். 28. 28 - 29
அலங்கிதழ்க் கோதை	இதழ்கள் அசையும் மாலை	"குலங்கெழு குருசில் கொடிக்கைம் மாறி அலங் கிதழ்க் கோதையொ டவிழ் முடி திருத்திக்", பெருங் 1: 56: 33 - 35

கமழ்நறும்பூங் கோதை	மிகவும் நாறுகின்ற மாலை	"பொன்அகை தகை வகிர் வகை நெறி வயங்கிட்டுப், போழ்இடை இட்ட கமழ்நறும் பூங்கோதை", கலித். 55 : 2 - 3
குவளைக் கோதை	குவளை மலர் மாலை	"குவளைக் கோதை கொண்ட கூந்தலர்", பெருங். 1: 46 : 245
சுரும்புண் கோதை	புதிய மாலை	"துடித்தலைக் கருங்குழற் சுரும்புண் கோதை தன் அடித்தலைச்சிலம்பினோ டரவ மேகலை", சீவக. 194: 1 - 2
சென்னிகைக் கோதை	பூ மாலை வகை	"சென்னிகைக் கோதை கதுப்போடு இயல", பரி. 21 : 56
தளை அவிழ்க் கோதை	இதழ்களின் கட்ட விழ்ந்த மலர் மாலை	"தளை அவிழ் கோதை ஓதிச் சானகி தளிர்க் கை என்னும்", கம்ப. 1127 : 1 - 2
திருந்து கோதை	திருத்தமாகச் செய்யப்பட்ட மாலை	"திருந்து கோதைச் சிகழிகைச் சீறடி மருந்தின் சாயன் மணங்கமழ் மேனியாள்", சீவக. 1033 : 1 - 2
தோடு அவிழ் கோதை	விரிந்த மலர் மாலை	"உம்பர் தம் அரம்பை மாதர் தோடு அவிழ் கோதை நின்றும் துறந்த மந்தார மாலை வாடல நறவு அறாத வயின் வயின் வயங்கும் மாதோ!" கம்ப. 853 : 4 - 8
மணங்கமழ் நறுங் கோதை	மணம் நாறுகின்ற நறிய மாலை	"மணங்கமழ் நறுங்கோதை மாரிவீழ்இருங் கூந்தல்", கலித். 60 : 2
மல்லிகைக் கோதை	மல்லிகை மாலை	"மல்லிகைக் கோதை ஐம்பான் மலைமகண் மனையைச் சேர்ந்தேன்", சீவக. 1745 : 3 -4
வண்டலர் கோதை	வண்டுகள் மலர் விக்கின்ற மாலை	"வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக் கண்ட வர்க் குரைத்த காட்சி வரியும்" சிலப். 8 : 105 - 106
முல்லையங் கோதை முடிமிசை அணிதல்	முல்லை மலர் மாலை அணிதல்	"முடிமிசை அணிந்த முல்லையங் கோதை", பெருங். 2 : 5 : 83
கோதை குழலாடுதல்	கூந்தலில் அணிந் திருந்த மலர்மாலை ஆடுதல்	"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக் கோதைக் குழலாட வண்டின் குழாமாடச்", திருவாச. திருவெம். 14 : 1 - 2
சென்னிகைக் கோதை கதுப்போடு இயலுதல்	அழகிய கோதை கூந்தலோடு அசைதல்	"கண்ணொளிர் திகழ் அடர் சுடர் படர்கொடி மின்னுப் போல் ஒண்ணகை தகைவகை நெறிபெற இடையிடை இழைத்து யாத்த சென்னிகைக் கோதை கதுப்போடியல", பரி. 21 : 54 - 56
பல்வேறு உருவின் வனப்பமை கோதை கட்டுதல்	பலவாய் வேறுபட்ட அழகமைந்த மாலையை அழகு பெறச் சூடுதல்	"பல்வே றுருவின் வனப்பமை கோதையெம், மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி", குறிஞ். 103 - 104
கோதை கூட்டுதல்	மலர் அணிந்த கூந்தலில் கோதை யையும் அணிதல்	"மாக்கொடி அடும்பின் மாயிதழ் அலரி கூந்தன் மகளிர் கோதைக் கூட்டும்", நற். 145 : 2 - 3
துதைபூங் கோதை சுமத்தல்	கூந்தலில் செறிந்த மலர் மாலையைப் பொறுத்தல்	"தண்டாது புகழுந் தன்மையளாகித் துதைபூங் கோதை சுமத்தலாற்றா", பெரும். 5 : 8 : 65 - 66
கோதை சூட்டுதல்	மாலையணிதல்	"கொடுங்குழை மகளிர் கோதை சூட்டி", புறம். 304 : 1
அனிச்சப்பூங் கோதை சூட்டுதல்	அனிச்சப்பூ மாலையை அணிதல்	"அனிச்சப் பூங்கோதை சூட்டின் அம்மனையோ என்றஞ்சி", சீவக. 745 - 1
தெரிமலர்க் கோதை திகழச் சூட்டுதல்	மலர்க் கோதையை விளக்கமாகச் சூட்டுதல்	"அவாவுறு நெஞ்சமொடு கவான்முதல் இரீஇத் தெரி மலர்க் கோதை திகழச்சூட்டி அரிமலர்க் கண்ணி நின் அகத்தனள் ஆக", பெருங். 2 : 16 : 93 - 95

தண்நறும் கோதை சூடுதல்	தண்ணிய நன்மண முடைய பூ மாலை யைச் சூடுதல்	"மெல்லியல் அரிவைநின் பல்லிருங் கதுப்பிற் குவளை யோடு தொடுத்த நறுவீமுல்லைத் தளையவிழ் அலரித் தண்நறும் கோதை இளையருஞ் சூடி வந்தனர்", நற். 367 : 7 - 10
கோதை சூழ்தல்	பூமாலை அணிந்திருத்தல்	"கோதை சூழ் குஞ்சி அக்குமரர் வந்து எய்தலும்", கம்ப. 1058 : 2 - 3; "கோதை சூழ்ந்த குழலாரைக் குறங்கின் வைத்துக் கொண்டிருந்து", திருத். 3199 : 1 - 2
கோதை தாழ்ந்து புறத்தசைதல்	முடியில் சூட்டப்பட்ட கோதை சரிந்து புறத்தே கிடந்து அசைதல்	"சீரலங்காரச் சித்திர முடிமிசைத் தாரணி கோதை தாழ்ந்து புறத் தசைய உற்றதை யறியாள் தெற்றென இரங்கி", பெருங். 3 : 24 : 185 - 187
கோதை சேர்தல்	மாலை அணிதல்	"அதிநலம் கோதை சேர் ஓதியோடு", கம்ப. 5710 : 3
தோடு ஆர் கோதைச் சோர்தல்	தொகுதியான மாலை அசைதல்	"கேட்டார் கொள்ளார்; கண்டவர் பேணார்; கிளர் போரில் தோட்டார் கோதைச் சோர் குழல் தன்னைத் துவளாமல் மீட்டான் என்னும் பேர்", கம்ப. 3674 : 1 - 5
தேனிமிர் கோதை கேசந் தாங்குதல்	வண்டுகள் முரலும் தன்மையுடைய மலர்மாலையைக் கூந்தலில் அணிதல்	"தேனிமிர் கோதை கேசந் தாங்குவென் மற்றறி யேனென வணங்கினன் போந்து", பெருங். 4 : 14 : 62 - 63
கோதை தாழ்தல்	நீளமாக மாலை அணிந்திருத்தல்	"நீல்நெய் தாழ் கோதையவர் விலக்க நில்லாது, பூ ஊது வண்டினம் யாழ் கொண்ட - கொளை கேண் மின்", பரி. 11 : 124 - 125; "சங்குவிம்மு நித்திலம் சாந் தொடு ஏந்து பூண்முலைக் கொங்கு விம்முக் கோதை தாழ் கூந்தல் ஏந்து சாயலார்", சீவக. 145 : 1 - 2; "குரல் குரலாகப் பண்ணிக் கோதை தாழ் குஞ்சி யான் தன்", சீவக. 723 : 1
அணிமலர் முண்டகத்து ஆய்பூங்கோதை தைஇ	அழகிய மலர்மிக்க கழிமுள்ளியின் நுண் ணிய பூ மாலையை அணிந்து கொள்ளல்	"அணிமலர் முண்டகத்து ஆய்பூங்கோதை மணி மருள் ஐம்பால் வண்டுபடத் தைஇத்", நற். 245: 2-4
நறுமலர்க் கோதை நான்று வந்தசைதல்	நறிய மலர்மாலை நழுவி வந்து தொங்கி அசையா நிற்றல்	"குறுநெறிக் கொண்ட கூழைக் கூந்தலுள் நறுமலர்க் கோதை நான்று வந்தசைஇ", பெருங். 1 : 46 : 221 - 222
கோதை புரளுதல்	கோதை அசைதல்	"கோதை புரளப்பாடி", சீவக. 927 - 3
கோதை புனைதல்	மாலை சூடுதல்	"நெறியிருங் கதுப்பிற் கோதையும் புனைக", அகம். 269 : 1- 2; "பாடுவல் விறலியர் கோதையும் புனைக", புறம். 172 : 3; "தாதுசூழ் கூந்தல் தகைபெறத் தைஇய கோதையும் புனைகோ நினக்கென்றான்", கலித். 111 : 12- 13
அடும்பின் கோதை புனைதல்	அடும்பின் மலரைக் கொண்டு கோதை புனைதல்	"ஆய் அடும்பின் பூ அலர் கொண்டு உதுக்காண் எங் கோதை புனைந்த வழி", கலித். 144 : 30 -31
கோதை கூந்தல் நலம் பெற புனைதல்	கூந்தல் அழகுபெற அலங்கரித்த அரும்பு மலர்ந்த பூமாலை யைச் சூடுதல்	"ஒலிபல் கூந்தல் நலம் பெறப் புனைந்த முகை அவிழ்கோதை வாட்டிய பகைவன்மன் யான் மறந்து அமைகலனே", நற். 260 : 8 - 10
தண்கமழ் கோதை புனைதல்	குளிர்ந்த மணம் கமழும் மாலையைச் சூடுதல்	"ஒலிமென்கூந்தற் கமழ்புகை கொளீஇத் தண்கமழ் கோதை புனைய வண்பரி நெடுந்தேர் பூண்க நின் மாவே", புறம். 146 : 9 - 11

நெறியிருங் கதுப்பிற் கோதை புனைதல்	நெளிந்த கரிய கூந்தலில் மாலையைப் புனைதல்	"நெறியிருங் கதுப்பிற் கோதையும் புனைக", அகம். 269 : 1 - 2
புதுமலர்க் கோதை புனைதல்	புதிய மலர் மாலையை அணிதல்	"புதுமலர்க் கோதை புனையிருங் கூந்தல் பதுமா பதியெனும் பைந்தொடிக் கோமகள்", பெருங். 3: 5: 26 - 27
குழலில் கோதை பொங்குதல்	கூந்தலில் பூமாலை சூடியிருத்தல்	"செங்கண் மாதர் தெருவில் தெளித்த செங் குங்குமத்தின் குழம்பை அவர் குழல் பொங்கு கோதையின் பூந்து கள் வீழ்ந்து உடன் அங்கண் மேவி அளறுபுலர்த்து மால்", திருத். 92
கோதை குழல் மலிதல்	குழலில் கோதை அணிதல்	"குழல் மலிந்த கோதை மாலை பொங்க", சீவக. 1952 : 1
முண்டகக் கோதை யொடு முடித்தல்	கருங்குவளையை முள்ளிப் பூமாலை யோடு சேர்த்துத் தலையில் அணிதல்	"வண்டுண மலர்ந்தமணித் தோட்டுக் குவளை முண்டகக் கோதையொடு முடிந்த குஞ்சி", சிலப். 27: 234 - 235
கோதை முடி யுறுதல்	கோதை தலை முடி யில் பொருந்துதல்	"முடியுற்ற கோதை போல் யாம் வாட ஏதிலார், தொடியுற்ற வடுகாட்டி யீங் கெம்மில் வருவதை", கலித். 78 : 21 - 22
கோதை விம்முதல்	மாலை அணிந்தி ருத்தல்	"விண்டலர் கோதை விம்மும் விரைகுழல் தொழுது நீவிப்", சீவக. 618 : 3
கோதை வேய்தல்	மலர் மாலை சூடுதல்	"கோமகன் குறிப்பறிந் தோடுதல் புரிந்த வுறுபிடி மீமிசைக் கூந்தலுங் கூந்தல் வேய்ந்த கோதையும்", பெருங். 1: 48: 76-77; "விண்நின்ற மதியின், மென்பூஞ் சிகழிகைக் கோதை வேய்ந்தார்", கம்ப. 1120 : 7 - 8

சிகழிகை

சீர்ப்பமை சிக ழிகை அணிதல்	சிறப்பமைந்த தலை மாலையினைக் கூந்தலில் அணிதல்	"வனப்பொடு புணர வகுத்தணி முடிமிசை நீர்ப்பூம் பிணை யல் சீர்ப்பமை சிகழிகை முல்லையங் கோதை சில்சூட்டணிந்து", பெருங். 1 : 42 : 147 - 149
மென்பூஞ் சிகழிகைக் கோதை வேய்தல்	மென்மையான மலர் களாலான சிகழிகை எனும் மாலையைச் சூட்டுதல்	"விண் நின்ற மதியின், மென் பூஞ் சிகழிகைக் கோதை வேய்ந்தார்", கம்ப. 1120 : 7 - 8

சுழியம்

சுழியம்	வளைவாக அணியும் மாலை	"செங்கையினில் பொன் செண்டும்திரு முடியில் சுழியமுடன் எங்கும் இலாத்திருவடிவம்", திருத். 3864: 3 - 4

சூட்டு

சூட்டு	மாலை	"சூட்டும் கண்ணியும் மோட்டு வலையமும்", பரி. 20 : 30; "துறுமலர்ப் பிணையலும் சூட்டும் சுண்ணமும் நறுமலர்க் கண்ணியும் நாறு சாந்தமும்'', சீவக 193 : 1 - 2; "சூட்டொடு விரைஇச் சுற்றுபு முடித்து", பெருங். 2: 5: 175
மல்லிகைச் சூட்டு	மல்லிகை மாலை	"மலர்ப்பூம் பந்தும் தலைத் தளிர்ப்போதும் மல்லிகைச் சூட்டுநெல்வளர் கதிரும்", பெருங். 1: 42: 67 - 68
அரும்பும் இலையும் மயக்கி ஆய்ந்த முல்லைச் சூட்டு	அரும்பும் இலையும் இடையிட்டுக் கட்டின முல்லைச் சூட்டு	"அரும்பும் இலையும் மயக்கி ஆய்ந்த முல்லைச் சூட்டுமிலைச்சி திருந்து திங்கள் சூழ்ந்த மின்னிற் செம்பொற் பட்டஞ் சேர்த்தி", சீவக. 2438: 2 - 3
சில்சூட்டணிதல்	தலை மாலையாகச் சிலவாகிய சூட்டுகளை அணிதல்	"வனப்பொடு புணர வகுத்தணி முடிமிசை நீர்ப்பூம் பிணை யல் சீர்ப்பமை சிகழிகை முல்லையங் கோதை சில் சூட்டணிந்து", பெருங். 1: 42: 147 - 149

மங்கல நறுஞ் சூட்டு மரபின் அணிதல்	மங்கலமாகிய நறிய முல்லைச் சூட்டினை முறையாகக் கூந்தலில் அணிதல்	"வனப்பொடு புணர வகுத்தணி முடிமிசை நீர்ப்பூம் பிணையல் சீர்ப்பமை சிகழிகை முல்லையங் கோதை சில் சூட்டணிந்து", பெருங். 1: 42: 147 - 149
வதுவை சூட்டயர்தல்	மணமாலை சூட்டப் பெறுதல்	"வானவ மகளிரின் வதுவைசூட்டயர்ந்தோர்", சிலப். 27: 26
சூட்டு சிந்துதல்	சூட்டு கீழே விழுதல்	"சூட்டொடு கண்ணி சூளாமணி சிந்தித் திரியுமன்றோ", சீவக. 786 : 4
அரும்பும் இலையும் மயக்கி ஆய்ந்த முல்லைச் சூட்டு மிலைச்சுதல்	அரும்பும் இலையும் இடையிட்டுக் கட்டின முல்லைச் சூட்டு அணிதல்	"கரும்புந் தேனும் அமிழ்தும் பாலுங் கலந்த தீஞ்சொல்மடவாட்கு அரும்பும் இலையும் மயக்கி ஆய்ந்த முல்லைச் சூட்டு மிலைச்சித்", சீவக. 2438: 1 - 2
மல்லிகை நறுஞ் சூட்டு வெள்ளிதின் விளங்குதல்	மல்லிகை மலரால் இயன்ற மல்லிகை நறுஞ்சூட்டு வெள்ளிதின் விளங்குதல்	"சிறுமுகச் சிகழிகை புடைமுதல் புதைஇய மல்லிகை நறுஞ்சூட்டு வெள்ளிதின் விளங்க", பெருங். 1: 46: 232 - 233
முல்லைச் சூட்டு வேய்தல்	முல்லைப் பூ மாலையைத் தலையில் அணிதல்	"பண்ணிறச் சுரும்பு சூழும் பனிமுல்லைச் சூட்டு வேய்ந்தார்", சீவக. 624 : 4
தாமம்		
தாமம்	மாலை	"திருமருத முன்துறை சேர் புனல் கண்துய்ப்பார் தாமம் தலைபுனை பேஎம் நீர்வையை", பரி. 7 : 83 - 84; "சென்னித் தாமத்துப் பன்மலர்த் தாதுக", பெருங். 2: 7: 90; "தகையழி தாமமொடு தாழ்வன பரப்பித்", பெருங். 2: 18 : 72; "தூமமார்ந் தணங்கு நாறுஞ் சுரும்பு சூழ் தாரினானும் தாமமார் ஒலியல் ஐம்பாற் சயமதித் திருவும் ஆர்ந்த", சீவக. 2888 : 1-2; "தூமலர்ப்பிணையல் மாலை துணர் இணர்க் கண்ணி கோதை, தாமம் என்று இனைய வேறு தகுதியால் அமையச் சாத்தி", திருத். 164: 1 - 4; "தாமக் குழலாள் பரவை வதுவை தகும் நீர்மையினால் நிகழச் செய்தார்", திருத். 326 : 7 - 8; "இடம் வலமது ஆகச் சாரிகை திரியல் ஆன மாருதி தாமப் பொன் - தோள்", கம்ப. 7238 : 3 - 4
அகத்தோடு தெற்றிய தாமம்	அகவிதழ்களால் புனைந்த மாலை	"ஆய்பூந் தட்டம் அகத்தோடு தெற்றிய தாமம் வாட்டுங் காம வுயிர்ப்பினன்", பெருங். 4 : 7 : 26 - 27
கோதைப் பூந்தாமம்	கோதையாகிய பூமாலைகள்	"நிரந்த மணித் தாமம் கமுகு விடும் கோதைப் பூந்தாமங்கள் நிரைத்து வெவ்வேறு அலங்கரித்து", திருத். 3896 : 5 - 7
சுரும்பணை துணை மலர்க்கோதைத் தாமம்	வண்டுகள் மொய்க்கும் ஒத்த மலர்களாலான மலர் மாலை	"துணர்மலர்க் கோதை தாமச் சுரும்பணை தோளினானைப்", திருத். 158 : 3 - 4
தத்தொளித் தாமம்	குளிர்ந்த மலர் மாலை	"இன்மகிழ் இருக்கை ஏயர் மகனொடு தண்மகிழ் நெடுங்குழல் தத்தொளி தாமத்து", பெருங். 2 : 2 : 4 - 5
தளிரினும் போதினும் ஒளி பெறத்தொடுத்த தாமம்	தளிராலும் மலராலும் ஒளியுண்டாகத் தொடுக்கப்பட்ட அழகு பொருந்திய மாலை	"தளிரினும் போதினும் ஒளி பெறத் தொடுத்த சேடுறு தாமஞ் சிறந்தோன் சூட்டிய", பெருங். 4 : 16 : 15 - 16
தளையவிழ் தாமம்	மலர்ந்த மாலை	"விளைவுறு தீங்கனி வீழ்ச்சி யேய்ப்பத் தளையவிழ் தாமமொடு தலைபல புரளவும்", பெருங். 1 : 46 : 21 - 22;

		"களைக ணீகுவென் கையற வொழி கெனத் தளைய விழ் தாமமொடு தச்சுவினைப் பொலிந்தவோர் இளையனிற் றோன்றி", பெருங். 5 : 4 : 30 - 32
தேந்தாமம்	தேன் சிந்தும் மலர் மாலை	"தேந்தாமம் செம்பவளத் தாமம் செம்பொன் எரிதாமம் மின்னும் திரள் தாமங்கள்", சீவக. 680 - 22
முல்லைப்பூந்தாமம்	முல்லைப் பூ மாலை	"முல்லைப் பூந்தாமம் கொம்பாட", சீவக. 68 : 3 - 4
விரைத்தாமம்	மணங்கமழும் பூமாலை	"சென்று அணைந்த ஆனாயர் செய்த விரைத்தாமம் என", திருத். 951 : 1 - 2
வெண்பூந்தாமம்	வெண்ணிற மாலை	"எண்வகைச் சிறப்பொடு கண் அணங்கெய்த விடாஅ விளக்கொளி வெண்பூந்தாமமொடு", பெருங். 2: 1: 10 - 11
கொய்தாம மாலை	கொய்து ஒழுங்குப் பட்ட மாலை	"பெய்தாமமாலைப் பிடியின்னிழிந் தேகி மன்னர் கொய்தாம மாலைக் கொழும் பொன்முடி தேய்த் திலங்கும்", சீவக. 2135 : 2 - 3
கொந்து அலர் பள்ளித்தாமம் குஞ்சி நிற்றல்	கொத்தாக மலர்ந்த மலர்மாலையைத் தம் குஞ்சியாகிய தலையில் அணிந் திருத்தல்	"சிந்திடக் கையில் ஊனும் சிலையுடன் சிதறி வீழக் கொந்துஅலர் பள்ளித் தாமம் குஞ்சி நின்று அலைந்து சோர", திருத். 819 : 3- 6
தாமம் சூட்டுதல்	மாலை சூட்டப்படுதல்	"தளிரினும் போதினு மொளி பெறத் தொடுத்த, சேடுறு தாமஞ் சிறந் தோன் சூட்டிய", பெருங். 4 : 15 - 16
தண் பள்ளித் தாமம் தலைச் செருகுதல்	மலர் மாலையைத் தலையில் செருகுதல்	"தன்தலைச் செருகிய தண்பள்ளித் தாமமும் வாய்க் கலசத்து மஞ்சன நீரும்", 11ஆம் திரு. 514 : 19 - 20
தூநறும் திருப் பள்ளித்தாமம் சூட்டுதல்	மணம்கமழும் மலர் மாலையைத் தலை மயிரில் நெருங்க வைத்தல்	"தூநறும் பள்ளித்தாமம் குஞ்சிமேல் துதையக் கொண்டார்", திருத். 770 : 4
தாமம் துயல் வருதல்	தாமம் அசைதல்	"பரவுக்கடன் கழிந்து விரவுப்பகை தணிந்த தாமந் துயல் வருங் காமர் கைவினைக்", பெருங். 2 : 7 : 1 - 2
தாமம் பிணித்தல்	மலர் மாலை அணிதல்	"அகன்பணை யூரனைத் தாமம்பிணித்த(து) இகன்மை கருதி இருப்ப - முகன் அமரா", ஐந். எழு. 44 : 1 - 2
பைங்கேழ்த் தாமம் பக்கம் வளைஇ	பசிய நிறமுடைய மாலைகளை வளைத்து அணிதல்	"நீலநாகம் பை விரித் தன்ன கோலச் சிகழிகை தான் முதல் சேர்த்தி அஞ்செங் கத்திகை அணி பெற அடைச்சிப் பைங்கேழ்த்தாமம் பக்கம் வளைஇ", பெருங். 2: 15 : 142 - 145
தார்		
கொய்தார்	கொய்யப்பட்ட மலர் மாலை	"கொண்ட பலிநுமக்கும் கொய்தார் குமரர்க்கும் புண் டரிக மாதினுக்கும் போதுமே", 11ஆம் திரு. 553 : 1 - 2
கொங்கார் மலர் கொன்றையந் தார்	தேன் நிறைந்த கொன்றை மலர் மாலை	"கொங்கார் மலர்க் கொன்றை யந்தாரவனே கொடுகொட்டி யொர்வீணை உடையவனே", தேவா. சுந்தர. 27 : 9 : 1 - 2
வால்வீ முல்லைப் பெருந்தார் கமழுதல்	முல்லை மாலை மணத்தல்	"வேலி சுற்றிய வால்வீ முல்லை பெருந்தார் கமழும் விருந்தொலி கதுப்பின் இன்னகை இளையோள்", அகம். 314 : 17 - 21
நன் முல்லைத் தார் சேர்த்தல்	ஒளி மிக்க நல்ல முல்லை மாலைகள் அணிந்திருத்தல்	"சொல்லில் பயின்று உரைக்க வேண்டா ஒழிதிநீ, எல்லுநன் முல்லைத்தார் சேர்ந்த இருங் கூந்தல் சொல்லுமவர் வண்ணம் சோர்வு", திணை. ஐம். 38 : 2 - 4
தாரின் மலிதல்	பூ மாலை மிகுந்த கூந்தல்	"தாரின் மலிப் பூங்குழல் மடவாய் தாழாது அமுது செய்வி எனப்", திருத். 3826 : 3 - 4

தெரியல்	மாலை	"வெருவரு குருதியொடு மயங்கி உருவு கரந்து ஓறு வாய்ப்பட்ட தெரியல் ஊன் செத்துப் பருந்து கொண்டு உகப்ப யாம் கண்டனம்", புறம். 271 : 5 - 7
ஆர் புனை தெரியல்	ஆத்தி மாலை	"ஆர்புனை தெரியல் நின் முன்னோரெல்லாம் பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது", புறம் 43 : 13 - 14; "ஆர்புனை தெரியலும் மலர்தார் வேம்பும் சீர்கெழு மணிமுடிக் கணிந்தோ ரல்லால்", சிலப். 26 : 19 - 20; "ஆர்புனை தெரிய லிளங்கோன் றன்னால் காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி", மணி. 19 : 125 - 120
கமழ் தெரியல்	மணக்கின்ற மாலை	"பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே கண்ணார் கமழ் தெரியல் காவிரி நீர்நாடன் நண்ணாரை அட்ட களத்து", களவழி. 24 : 3 - 5
கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்	கார்காலத்து நறிய கடம்பினது பசிய இலையோடு விரவிய மாலை	"கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல் சூர்நவை முருகன் சுற்றத்து அன்ன நின்", புறம். 28 : 3 - 4
கொன்றைக் குறுந் தெரியல்	கொன்றை மாலை	"கொட்டுக் காட்டான் சடைமேல் கொன்றைக் குறுந்தெரியல் தொட்டுக் காட்டாய் சுழல்வாய் தொக்கு", 11ஆம் திரு. 563 : 3 - 4
செங்கழு நீர்த் தெரியல்	செங்கழுநீர் மாலை	"ஒண் செங்கழுநீர் தெரியலடைச்சி", பெருங். 5: 2: 29
தண் தெரியல்	குளிர்ந்த மாலை	"தங்கள் குல முதல் தலைவன் ஆகி உள்ள தண் தெரியல் நாகன்பால் சார்ந்து சொன்னார்", திருத். 693: 7 - 8
தளையவிழ் தெரியல்	அரும்பு நெகிழ்ந்த மாலை	"கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான் தளை அவிழ் தெரியல் தகையோற்பாடி", சிறுபாண். 160-161
தேமரு தெரியல்	தேன் பொருந்திய மலர் மாலை	"தேமரு தெரியல் வீரன் கண் எனத் தெரிந்த செய்ய தாமரை", கம்ப. 3544 : 5 - 6
தேனுயர் தெரியல்	தேன் ஒழுகும் மாலை	"தான் ஒரு மனிதனால் தளர்ந்துளான் எனின் தேன் உயர் தெரியலான் தன்மை தேர்தியால்", கம்ப. 5195 : 3 - 4
தேனுடைய நறுந் தெரியல்	தேனைக் கொண்ட நறுமணம் மிக்க பூமாலை	"தேனுடைய நறுந் தெரியல் தேவரையும் தெறும் ஆற்றல்", கம்ப. 2837 : 1 - 2
பகன்றைப் பாங் குடைத் தெரியல்	பகன்றைப் பூ மாலை	"பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல் கழுவுறு கலிங்கம் கடுப்பச்சூடி", பதிற். 76 : 12 - 13
பைந்தெரியல்	மணம் கமழும் பசிய பூமாலை	"மட்டு அலர்ந்த பைந் தெரியல் வன் தொண்டர் மேல் கொண்ட மாதங்கத்தை முட்ட எய்திமுன் வலம் கொண்டு சென்றது மற்று அதன்முன் ஆக", திருத். 4269 : 5 - 8
மட்டவிழ் தெரியல்	தேன் ஒழுகும் மாலை	"மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்", அகம். 212 : 16
மதுநாறு தெரியல்	தேன் மணக்கும் மலர் மாலை	"மதுநாறு தெரியன் மகதவன் தங்கை பதுமா பதி வயிற் பசைந்தவள் வைத்த", பெருங். 3 : 9 : 170 - 171; "மதுநாறு தெரியல் மகதவன் தங்கை", பெருங். 4: 12: 36
மலர்த் தெரியல்	மலர் மாலை	"அறா மலர்த் தெரியலான் அழன்று நோக்கி", சீவக. 703 - 2

வண்டார் தெரியல்	வண்டுகள் ஆரவாரிக்கின்ற மலர்மாலை	"பெருஞ்சிறப் பெய்திய வனிருந்த செவ்வியுள் வண்டார் தெரியல் வருட காரனிற் பண்டே பயிர்குறிக் கொண்டு", பெருங். 3 : 27 : 1 - 3; "தண்டாக் கருவி தாந்துறை போகிய வண்டார் தெரியன் மறவர் மயங்கி அருநில மதிரத் திரிதர லோவா" பெருங். 3 : 20 : 38 - 40; "வண்டார் தெரியல் வாண்முகம் சுடர", பெருங். 4: 15: 73
வம்பு இட்ட தெரியல்	மணம் பொருந்திய மலர் மாலை	"செம்பு இட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி வம்பு இட்ட தெரியல் எம்முன் உயிர் கொண்ட பகை வாழ்த்தி", கம்ப. 7431 : 1 - 2
அரவாய் வேம் பினங் குழைத் தெரியல்	அரத்தின் வாய் போலும் விளிம்பினை உடைய அழகிய வேப்பந் தளிராற் செய்த தலை மாலை	"இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை அர வாய் வேம்பினங்குழைத் தெரியலு ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த இருபெரு வேந்தரு", பொருநர். 143 - 146
கருஞ்சினை வேம்பின் தெரியல்	கருஞ்சினை வேம்பின் மாலை	"கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்", புறம். 45 : 2
தோட்டு அலர் தெரியல் மாலை	இதழ்கள் மலரப் பெற்றதும் தேர்ந்து தொடுக்கப்பட்டது மான மாலை	"கேட்டலும், வெகுளி வெந் தீக் கிளர்ந்து எழும் உயிர்ப் பனாகி, தோட்டு அலர் தெரியல் மாலை வண்டொடும் சுறுக் கொண்டு ஏற", கம்ப. 5668 : 1 - 2
குஞ்சியுட் கோல மாகச் செங்கழுநீர் தெரியல் அடைச் சுதல்	தலைமயிரின்கண் அழகாகச் செங்கழு நீர் மலரானலான மாலையைச் செருகுதல்	"குழல்படு குஞ்சியுட் கோலமாக ஒண்செங்கழு நீர்த் தெரிய லடைச்சித்", பெருங். 5 : 2 : 28 - 30
சிறியிலை உழிஞைத் தெரி யல் சூடுதல்	உழிஞைப் பூவால் செய்யப்பட்ட மாலையை அணிதல்	"சிறியிலை உழிஞைத் தெரியல் சூடி", பதிற். 63: 8
நொச்சித் தெரியல் சூடுதல்	நொச்சி மாலையைச் சூடியிருத்தல்	"கண்ணி கட்டிய கதிர அன்ன ஒண்குரல் நொச்சித் தெரியல் சூடியாறு கிடந்தன்ன அகனெடுந்தெருவில் சாறெென நுவலும் முதுவாய்க் குயவ", நற். 200 : 1 -4
மணம்கமழ் தெரியல் சூடுதல்	மணம் வீசும் மாலையை அணிதல்	"அணங்குறை நெடுவரை அருமை பேணாது மணங் கமழ் தெரியல் சூடிவைகலும்",11ஆம் திரு. 276: 1-2
வனப்பமை தெரியல் பொலிதல்	கூறுபாட்டின் அமைதி யோடு கூடிய மாலை அணிதல்	"வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்", அகம். 76 : 8
வேம்பின் அங் குழைத் தெரியல் சென்னி மேம்பட மிலைதல்	தெரியலாகிய மாலையைக் கூந்தல் அழகுபட அணிதல்	"இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும் ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த விருபெரு வேந்தரு மொருகளத் தவிய", பொருநர். 143 - 146

தொடர்

குவளைக் குறுந்தொடர் அடைச்சுதல்	குவளை மலரின் குறிய மாலை யினைச் செருகுதல்	"கண்ணேர் இதழ தண்ணறுங் குவளைக் குறுந் தொடர் அடைச்சிய நறும்பல் கூழை", அகம். 358 : 5 - 6
நெடுந்தொடர்க் குவளை அடைச்சுதல்	தளிரோடு கூடிய குவளை மாலை அணிதல்	"மென்றளிர்க் கொழுங் கொம்பு கொழுதி நீர் நனை மேவர நெடுந் தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி மணங் கமழ் மனைதொறும் பொய்தலயரக்", மது. 586 - 589

வேங்கை மலி தொடர் அடைச் சுதல்	வேங்கை மாலை யைத் தரித்தல்	"மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சிப் பொலிந்த ஆயமொடு காண்டக இயலித்", அகம். 188 : 9 - 10

தொடை

தொடை	மாலை	"தொடைமலி யிதழியும் துன்னெருக் கொடு புடைமலி சடை முடியடிகள் பொன்னகர்", தேவா. திருஞா. 3 : 17 : 4: 1 - 2; "புடைபட வாடவல்லான் மிகுபூதமார் பல்படை யான் தொடை நவில் கொன்றையொடு வன்னி தன் னெருக்கும் பணிந்த சடையவ னூர்பனந்தாட் டிருத் தாடகை யீச்சரமே", தேவா. திருஞா. 3 : 62 : 6 : 2 - 4
குழைத் தொடை	தழைகளால் கட்டப் பெற்ற மாலை	"தாளின் நெடுந்தோரணமும் தழைக்கமுகும் குழைத் தொடையும் நீர் இலைய கதலிகளும்", திருத். 266 : 3 - 5
பூந்தொடை	மலர்மாலை	"பூந்தொடை அரிவை காணப் புரி நெகிழ்த்து", சீவக. 721 - 2
விரை செய் நறும்பூத்தொடை	வாசனை வீசும் நல்ல அழகு பொருந்திய கொன்றைப்பூ மாலை	"விரைசெய் நறும்பூத் தொடை இதழி வேணியார் தம் கழல் பரவிப்", திருத். 491 : 1 - 2
ஆம்பல் குரூஉத் தொடை	ஆம்பற்பூவின் முறுக்கப்பட்ட இதழ் களாலாய பருத்த நிறம் பொருந்திய மாலை	"பரூஉப்பகை ஆம்பல் குரூஉத் தொடை நீவி", அகம். 136 : 27
பைம்பொற் கொன்றைத் தொடை	பொன்னிறத்தை ஒத்த கொன்றை மலர் மாலை	"படைகொண் டிகல் தெறும் பார்த்திவர் ஆவதிற் பைம் பொற் கொன்றைத் தொடை கொண்ட வார் சடை அம்பலத்தான்", 11ஆம்திரு. 827 : 3 - 6
பித்திகத்து ஆயி தழ் அலரி அம் தொடை ஒரு காழ் வளைஇ	பிச்சியின் அழகிய இதழ்களையுடைய பூவைத் தொடுத்த தொடையாகிய ஒரு வடத்தைக் கூந்தலில் சூட்டுதல்	"பைங்காற் பித்திகத் தாயிதழலரி யந்தொடை யொருகாழ் வளைஇஞ்", குறிஞ். 117 - 118
அதிரல்போதொடு குவளை தண் நறுங்கமழ் தொடை வேய்தல்	காட்டு மல்லிகையின் நல்ல அரும்புடன் கூடிய மலரொடு தண் ணிய நறிய குவளை மலரைத் தொடுத்த மாலையைச் சூட்டுதல்	"நன்முகை அதிரற் போதொடு குவளைத்தண் நறுங் கமழ் தொடை வேய்ந்த நின் மண்ணார் கூந்தல் மரீஇய துயிலே", அகம். 223 : 14 - 16
நெடுந்தொடை வேய்தல்	நெடிய மாலையை அணிந்திருத்தல்	"நெடுந் தொடை வேய்ந்த நீர்வார்க் கூந்தல்", குறுந். 401 : 2

தொடையல்

தொடையல்	மாலை	"மலையவு நிலத்தவுந் சினையவுஞ் வண்ண வண்ணத்த மலராய்வு விரைஇய தண்ணறுந் தொடையல் வெண் போழ்க் கண்ணி", குறிஞ். 113 : 116
ஈரிதழ்த் தொடையல்	மலர்மாலை	"நீரலைக் கலைஇய ஈரிதழ்த் தொடையல்", நற். 339 : 7
தோடு உழுத நறுந் தொடையல்	இதழ்களால் ஆன மணமாலை	"தோடு உழுத நறுத் தொடையல் தொகை உழுத கிளை வண்டின் சுழியத் தொங்கல்", கம்ப. 9906 : 1 - 2
நறுந்தொடையல்	மணம் கமழும் மாலை	"பிரசங்கொள் நறுந் தொடையல் புகழ்ச் சோழர் பெருமையினைப்", திருத். 3987 : 3 - 4

பிணைமலர்த் தொடையல்	பிணைத்த மலர் மாலை	"பிணைமலர்த் தொடையற் பெருமக னவ்வயிற் பணைநிலைப் பிடிமிசைப் பலர்வரச் சாற்றி", பெருங். 4 : 14 : 174 - 175
பைந்துணர்த் தொடையல்	பசிய பூங்கொத்துக் களால் இயன்ற மாலை	"பைந்துணர்த் தொடையற் பாஞ்சால ரசற்கு", பெருங். 4 : 13 : 28
மலர் ஆய்வு விரைஇய தண் நறுந் தொடையல்	மலரை ஆராய்ந்து தொடுத்த தண்ணிய நறிய தொடையல்	"வண்ண வண்ணத்த மலர் ஆய்வு விரைஇய தண் நறுந் தொடையல், வெண்போழ்க் கண்ணி மிலைச்சி நலம்பெறு சென்னி, நாம் உற", குறிஞ். 114 - 115
வரிநெடுந் தொடையல்	வரிந்துகட்டிய நெடிய பூந்தொடையல்	"வரிநெடுந் தொடையல் வயந்தக னவ்வயின் விரைவிற் சென்று வேந்தற் குரைப்ப", பெருங். 4 : 14 : 164 - 165
அனேக வித வன் தொடையல் மாலை	பலவிதமான, தொடுக்கப்பட்ட மாலைகள்	"அனேகவித, வன் தொடையல் மாலை துயல் வந்து உலவு தோள் பொலியவே", கம்ப. 2525 : 6 - 8
தும்பி அம் தொடையல் மாலை	வண்டுகள் மொய்க்கிற அழகிய தொடுத்தல் அமைந்த மலர் மாலை	"தும்பி அம் தொடையல் மாலைச் சுடர் முடி படியில் தோய", கம்ப. 7425 : 1
தும்பி அம் தொடையல் சுற்றுதல்	புதிய மலர் மாலை அணிதல்	"தும்பி அம் தொடையல் வீரன் சுடு கணை துரப்ப சுற்றும் வெம்பு வெஞ் சேனையோடும்", கம்ப. 7429 : 1 - 2
பல்மலர்த் தொடையல் சூடுதல்	பலமலர்களால் தொடுக்கப்பட்ட மாலையைத் தலையில் சூடுதல்	"பல்மலர்த் தொடையல் சூடிக்", திருத். 686 : 2
குறுநெறி		
குறுநெறி பயிலுதல்	கூந்தலில் கண்ணியை அணிதல்	"முறுவன்முன் சிறிய தோற்றா முகை நெறித் தனைய வுண்கட் குறுநெறி பயின்ற கூந்தல் குறும்பல்காலாவிக் கொள்ளாச் சிறுநுதற் புருவ மேற்றாச் சேர்துகிற்றானை சோர", சீவக. 1572: 1 - 3
படலை		
அவிழ்மலர் படலை	மலர் மாலை	"அவிழ்மலர்ப்படலைத் தந்தை யகவயின்", பெருங். 1 : 57 : 102 - 103
கொய்மலர்ப் படலை	கொய்த மலரோடு தளிர் விரவிப் புனைந்த படலை மாலை	"அந்தண் காவினு ளசைந்தன னிருந்து கொய்ம் மலர்ப்படலைக் கோமுகற் கூஉய்க் கைபுனை வனப்பிற் கணிகையர்", பெருங். 5 : 8 : 89 - 91
சுடர் ஒளிப் படலை	ஒளிவீசும் பச்சிலை மாலை	"தூநறும் துகள் சொரிதலின் சுடர் ஒளிப் படலை ஆன வீதிகள் அடிவலித்து அவை கரைந்து அலைய", திருத். 2405 : 3 - 6
தகை மலர்ப் படலை	அழகிய தளிர் விரவித் தொடுத்த மாலை	"தகைமலர்ப் படலைத் தந்தை தலைத்தாள் முகைமலர்க் கோதை முறுவற் செவ்வாய்க் கன்னி ஆயத்துப் பொன்னணி சுடர", பெருங். 2 : 9 : 94 - 96
தண் மலர்ப் படலை	குளிர்ச்சிப் பொருந்திய விரவிய மலர்மாலை	"தண்மலர்ப் படலைத் தருசகன் றங்கை பன்மலர்க் கோதைப் பதுமா பதியெனும் பேருடை மாதருளண்", பெருங். 3 : 9 : 174 - 176
தேனார் படலை	தேன்பொருந்திய மலருந் தளிரும் விரவிய மாலை	"ஆனா வுவகையொ டவண்மெய் தீண்டியும் தேனார் படலைத் திருவளர் மார்பன்", பெருங். 4 : 7 : 64 - 65

தேனிமிர் படலை	தழை விரவிய மலர் மாலை	"கண்ணார்மாட நண்ணுவனள் இழிந்து, தேனிமிர் படலைத் திருவளர் மார்பனை", பெருங். 3 : 8 : 36 - 37
நீர்மலர்ப் படலை	நீர்ப் பூக்களால் ஆன மாலை	"ஆருயிர்க் கிழத்தி அகன்றனள் இவணிலள் நீர்மலர்ப் படலை நெடுந்தகை யாள", பெருங். 2 : 18 : 34 - 35
பாசிலைப் படலை	பச்சிலை மாலை	"பாசிலைப் படலை சுற்றி", திருத். 686 : 1
பிணைமலர்ப் படலை	பிணைத்த மலர் மாலை	"வடுநீங் கமைச்சர் வலித்தன ராகிப் பிணைமலர்ப் படலை பிரச்சோ தனன்றன்", பெருங். 2 : 17 : 55 - 56
பீலியும் குழையும் தட்டச் சுரும்பு உறு படலை	மயிற் பீலிகளும், தழைகளும், நெருங்கக் கட்டிய வண்டுகள் மொய்க் கும் மாலை	"பெரும்புறம் அலையப் பூண்டாள் பீலியும் குழையும் தட்டச் சுரும்பு உறு படலை முச்சிச் சூர் அரிப் பிணவு போல்வாள்", திருத். 658 : 5 - 8
பைந்தளிர்ப் படலை	பசிய தளிர் விரவிய படலை மாலை	"ஒளிதரும் இருக்கையி னொடுங்கினர் தாமெனப் பைந்தளிர்ப் படலைப் பாஞ்சால ராயற்கு வந்துகண் கூடிய வருடகாரன்", பெருங். 3 : 27 : 13 - 15
மயங்கிதழ்ப் படலை	தளிரும் மலரும் விரவிய மாலை	"வயந்தககுமரற் கியைந்தது கூறும் மயங்கிதழ்ப் படலை மகதவற் கண்டு செருச்செய் தானைப் பிரச்சோதனன்றன்", பெருங். 3 : 19 : 69 - 71
வண்டலர் படலை	வண்டுகள் மொய்த்த மலர்ந்த மாலை	"கூப்பிய கையினர் காப் பொடுபுரிய வண்டலர் படலை வயந்தக குமரன்", பெருங். 1 : 57 : 3 - 4
வண்டளிர்ப் படலை	வளவிய தளிர் விர விய படலை மாலை	"தண்டத் தலைவன் றளர்வி லூக்கத்து வண்டளிர்ப் படலை வருடகாரன்", பெருங். 3 : 25 : 174 - 175
வரிமலர்ப் படலை	அழகிய மலர் விரவிய படலை மாலை	"அருமறை யோலை யாய்ந்தன னடக்கி வரிமலர்ப் படலை வயந்தக னுரைக்கும்", பெருங். 3 : 24 : 49 - 51
வார் தளிர்ப் படலை	நெடிய தளிரோடு விரவிப்புனைந்த மாலை	"போர்வலம் வாய்த்த பொங்கம ரழுவத்து வார்தளிர்ப் படலை வத்தவர் பெருமகன்", பெருங். 3 : 20 : 86 - 87
கழுநீர்மா மலர்ப் பைந்தளிர்ப்படலை	தாமரைக் கொழுமுறி யினையும் அதன் மலரினையும் குவளை யையும் கழுநீர் மலரி னையும் பச்சிலையுடன் கலந்துதொடுத்த படலை	"தாமரைக் கொழு முறித்தாதுபட செழுமலர்க் காமரு குவளைக் கழுநீர் மாமலர்ப் பைந்தளிர்ப் படலை", சிலப். 4 : 39 - 41
குருந்தலைவான் படலை	குருந்த மலரால் தொடுக்கப்பட்ட பெரிய மாலை	"குருந்தலை வான் படலை சூடிச் சுரும்பார்ப்ப ஆயன் புகுதரும் போழ்தினான் ஆயிழாய்!", ஐந்.எழு. 26: 1 - 2
கொன்றையம் படலை	கொன்றை மாலை	"சுடர்ப் பிழம்பு தழைத்த அழல் தனி நெடுவேல் சேய்மூ வுலகம் வலம் வரவேயக் கொன்றையம் படலை துன்ற சடைக் கிடந்த ஓங்கிருந்த தாதையை", 11ஆம் திரு. 815: 1-4
பாசிலைப் படலை சுற்றுதல்	பச்சிலை மாலையை அணிதல்	"பாசிலைப் படலை சுற்றிப்", திருத். 686 : 1
குருந்தலை வான் படலை சூடுதல்	குருந்த மலரால் தொடுக்கப்பட்ட பெரிய மாலையை அணிதல்	"குருந்தலை வான்படலை சூடிச் சுரும்பார்ப்ப ஆயன் புகுதரும் போழ்தினான் ஆயிழாய்!", ஐந்.எழு. 26: 1 - 2
பீலியும் குழையும் தட்டச் சுரும்பு உறுபடலை உச்சி பெரும் புறம் அலையப் பூணுதல்	மயிற்பீலிகளும் தழை களும் நெருங்க கட்டிய வண்டுகள் மொய்க்கும் மாலையைக் கூந்தலில் அணிதல்	"பெரும்புறம் அலையப் பூண்டாள் பீலியும் குழையும் தட்டச் சுரும்பு உறுபடலை முச்சிச் சூர் அரிப் பிணவு போல்வாள்", திருத். 658 : 5 - 8

படலை தலையில் மலைதல்	தலையின்கண் படலை மாலை சூட்டுதல்	"நிலம மர்செங்கோல் நித்திலம் ஏர்தரத், தலைமலை படலைத் தருசகன் புகுந்து", பெருங். 3 : 22 : 253 - 55

பிணை

பிணைமலர்	பிணைத்துக் கட்டிய மாலை	"துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால் தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்", திருவாச. திருப்பள்ளி. 4: 3 - 4
தேம்பிணை	தேன்பொருந்திய மாலை	"பாம்பிணை யாக்குழை கொண்டோன் கயிலைப் பயில் புனமும் தேம்பிணை வார் குழலாள் எனத் தோன்றும் என் சிந்தனைக்கே", திருக்கோ. 38 : 3 - 4
முல்லைப் பிணை மீது குறிஞ்சி வெட்சி பின்பு செய்தல்	முல்லை மாலை மீது குறிஞ்சி மலரையும் வெட்சி மலரையும் பின்னாற் செருகுதல்	"வெறிகொண்ட முல்லைப் பிணை மீது குறிஞ்சி வெட்சி செறிகொண்ட வண்டின் குலம்சீர் கொளப் பின் புசெய்து", திருத். 706 : 3 - 4

பிணையல்

பிணையல்	தலை மாலை	"நறுமலர் அவிழ்ந்த நாறிரு முச்சித் துறுமலர் பிணை யல்", சிலப். 22 : 122 - 123; "மண்ணார் மார்வன் மாதரைச் சூட்டிய காமர்ப் பிணையற் கதுப்பணி கனற்றத் தாமரை யன்னதன் தகைமுக மழுங்கா", பெருங். 2 : 16: 13 - 15; "தழையுந் தாரும் கண்ணியும் பிணை யலும் விழைபவை பிறவும் வேண்டுவ கொண்டு", பெருங். 2 : 18 : 6 - 7
துணை மலர்ப் பிணையல்	இரண்டிரண்டாக மலர்களைப் பிணைத்துக் கட்டிய கண்ணி	"புனை நறுஞ்சாந்தமுந் துணைமலர்ப் பிணையலும் மனநிறை கலக்கிய கனல்புரை நோக்கத்துப் பொன் வரை மார்ப னென்னோ யகல", பெருங். 3 : 9 : 71 - 73
நறும்தேமலர் நீலம் செறிமலர்த் தாமரைப் பிணையல்	நல்லவென்று ஆராய்ந்து எடுக்கப் பட்டமலர், மணமிக்க நீலமலர், தாமரை மலர் நிறைத்துக் கட்டப்பட்ட மாலை	"தீம்புனல் ஊரன் மகளிவள் ஆய்ந்த நறும் தேமலர் நீலம் பிணையல் செறிமலர்த் தாமரை தன் ஐயர் பூ", திணை. ஐம். 40 : 2 - 4
நறைஇதழிப் பிணையல்	தேன்சிந்தும் கொன்றை மலர் மாலை	"பிறைகொள் அருகு நறைஇதழிப் பிணையல் சுரும்பு தொடர உடன் மறைகள் தொடர வன்தொண்டர் மனமும் தொடர வரும் பொழுது", திருத். 3494 : 5 - 8
நாண்மலர்ப் பிணையல்	அன்றலர்ந்த மலர் களாலாகிய மாலை	"ஆர்மின்! ஆர்மின்! நாண்மலர்ப் பிணையலில் தாள் தளையிடுமின்", திருவாச. திருவண்டப். 142 - 143
பித்திகைப் பிணையல்	பிச்சி மலர் மாலை	"வித்தகர் கொடுத்தப் பித்திகைப் பிணையலும்", பெருங். 1 : 42 : 74
புதுமலர்ப் பிணையல்	புதிய மலர் மாலை	"அருகு சிறை மருங்கி னொருமகள் வைத்த, புது மலர்ப் பிணையலும் புனைநறுஞ் சாந்தமும்", பெருங். 3 : 9 : 119 - 120
வாடுறு பிணையல்	வாடுதலுற்ற மாலை	"சேடுறு தாமஞ் சிறந்தோன் சூட்டிய வாடுறு பிணைய லொடு வகைபெற வளாஅய்க்", பெருங். 4 : 16 : 16 - 17
வெண்பூ மல்லிகை விரியலொடு தொடர்ந்த செங் கழுநீர்ப் பிணையல்	மல்லிகையின் மலர்ந்த வெளிய பூவோடே குளிர்ந்த செங்கழுநீரிதழ் களையும் கால் நெருங்கக் கட்டிய தலைமலர்ந்த பிணையல்	"வெண்பூ மல்லிகை விரியலொடு தொடர்ந்த தண் செங்கழுநீர்த் தாதுவிரி பிணையல்", சிலப். 14 : 78 - 79

நீர்ப்பூம் பிணையல் அணிதல்	நீர்ப்பூக்களாலியன்ற மாலை அணிதல்	"வனப்பொடு புணர வகுத்தணி முடிமிசை நீர்ப்பூம் பிணையல் சீர்ப்பமை சிகழிகை முல்லையங் கோதை சில்சூட்டணிந்து", பெருங். 1 : 42 : 147 - 149
பிணையல் சூட்டுதல்	மலர்மாலை சூட்டுதல்	"கணைபுரை கண்ணியைக் கவான் முதலிரீஇப் பிணை யல் சூட்டினை பெருந்தகை", பெருங். 4 : 15 : 56 - 57
புனைமலர்ப் பிணையல் சூட்டுதல்	புனைந்த மலர்ப் பிணையலைச் சூட்டுதல்	"இருளறு மதியின் திருமுகஞ்சுடர அமைபுரி தோளியை அன்பின் அளைஇப் புனைமலர்ப் பிணையல் சூட்டினன் புகன்றென்", பெருங். 2 : 15 : 146 - 148; "புனைமலர்ப் பிணையல் புரவலன் சூட்டி இனமடற் பெண்ணை ஈர்ந்தோடு திருத்திச்", பெருங். 2 : 16 : 1 - 2
புனையிருஞ் குஞ்சித் தோட்டுக் கிடையே துணை மலர்ப் பிணையல் சூடுதல்	ஒப்பனை செய்யப் பட்ட தலை மயிரின் கண் சூட்டப்பட்ட மாலைகளுக்கிடையே இரட்டை மலர் மாலையைச் சூடுதல்	"புனையிருங் குஞ்சித் தோட்டுக் கிடையே துணை மலர்ப் பிணைய றோன்றச் சூடி", பெருங். 3 : 9 : 133 - 134
பிணையல் தொடுத்துப் பண் புளிச் சூடுதல்	பிணையல் தொடுத்துச் சூடுதல்	"பெருந்தண் மலரிற் பிணையல் தொடுத்தென் பாவையும் யானும் பண்புளிச் சூடுகம்", பெருங். 2: 14: 111 - 112
நறுமலர்க் கொன்றை பிணையல் செய்தல்	கொன்றை மாலை அணிதல்	"புல்கு பொன்னிறம் புரிசடை நெடுமுடிப் போழிள மதி சூடிப், பில்கு தேனுடை நறுமலர்க் கொன்றையும் பிணையல் செய்தவர் மேய", தேவா. திருஞா. 2: 103: 1 : 1 - 2
முல்லை மல்லிகை மயிலை, தாழிக் குவளை,சூழ் செங்கழுநீர் பயில் பூங்கோதைப் பிணையல் பொலிதல்	முல்லை, மல்லிகை, குவளை, செங்கழு நீர் போன்றவற்றால் கட்டப்பட்ட கோதை யாகியப் பிணை யலை அணிதல்	"இல்வளர் முல்லை மல்லிகை மயிலை தாழிக் குவளை சூழ்செங்கழுநீர் பயில் பூங் கோதைப் பிணையலிற் பொலிந்து", சிலப். 5 : 190 - 192
இணைப்புறு பிணையல் வளைஇ	சண்பகமும், மருதமும் வெவ்வேறு நிறங்காட்டி அழகு செய்யும்படி அக் கொண்டையைச் சுற்றி வளைத்துக் கட்டுதல்	"பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக் கிளைக் கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக", திருமுருகு. 27 - 30
வாசிகை		
வாசிகை கட்டுதல்	மாலை அணிதல்	"வண்டு வளாய வளர் வாசிகை கட்டி", 11ஆம். திரு. 300 : 103

இ. மணப்பொருட்கள்

இன்று மலர்களுடன் கூந்தலுக்குத் தேய்த்துக் கொள்ளும் எண்ணெய், கூந்தலைச் சுத்தப்படுத்த உதவும் ஷாம்பூ வகைகள், சில நேரங்களில் சிலர் பயன்படுத்தும் புகைகள் கூந்தலுக்கு மணமும் ஊட்டுகின்றன. ஆயின் பழந்தமிழரிடம் காணப்பட்ட மேலும் பல வகையான செயல்முறைகள், 'கொங்கு தேர் வாழ்க்கை' பாடலை மீண்டும் எண்ணச் செய்கின்றன. ஒவ்வொரு பூவுக்கும் ஒவ்வொரு மணம். இம்மலர்களுடன், பிற பல மணப் பொருட்களையும் கூந்தலின் மணத்தை மிகுவிக்க அவர்கள் பயன்கொண்டனர். நறுமணம் முகர்தல் என்பது அவர்கள் மிகவும் விரும்பிய ஒன்று என்பதும் அதற்காக அவர்கள் பல பொருட்களை நாடிப் பயன் கொண்டனர் என்பதும் இங்கு விளக்கம் பெறுகிறது.

தூமக்கள்ளுடை ஓதி	வாசனைப் புகை ஊட்டப் பெற்றதும் தேனையுடைய மலர் களை சூட்டியதுமான கூந்தல்	"தள்ளுற, தலைவர் தம்மைப் பிரிந்தவர் தழீஇய தூமக் கள்ளுடை ஓதியார் தம், கலவியில், பல்கால் கான்ற", கம்ப. 4176 : 3 - 6
தேனாரோதி	தேன்நிறைந்த மணக்கும் கூந்தல்	"ஞானநன்னீர் நன்கனந் தெளித்துத் தேனாரோதி செவி முதல் வார்த்து", மணி. 23 : 138 - 139
மேம்பாலுரைத்த ஓதி	ஆன்பால் தடவிய கூந்தல்	"மேம்பால் உரைத்த வோரி", பெரும். 172
தேங்கமழ் ஐம்பால்	அகில் மணத்தல்	"தேங்கமழ் ஐம்பால் பற்றியென் வயின்", நற். 100 : 4
நெய்பருகிநீண்ட இருள் குழல் கற்றை	நெய் பூசப் பெற்று நீண்டு வளர்ந்த இருள் கற்றைப் போன்ற குழல் கற்றை	"நெய்பருகி நீண்ட இருள் கற்றை போலும் குழற்கற்றை கண்டு நிறைக லங்குவார்", சீவக. 682 : 1 - 2
தேன்கலந்து மணிநிறம் கொண்ட மாயிரும் குஞ்சி	அகிலினது நெய் பூசியதால் மணி யினது நிறம் கொண்ட இருண்ட நெருங்கிய குஞ்சி	"அணிமிகு வரி மிஞிறார்ப்பத் தேன்கலந்து, மணி நிறங் கொண்ட மாயிருங்குஞ்சி", குறிஞ். 111-112
கந்தவார் குழல்	வாசனையுடைய நீண்ட கூந்தல்	"நந்து நம்பாண்டார் நம்பி ஞானபோன கர்பொன் பாதம் கந்தவார் குழலினார் பொன் கரகநீர் எடுத்து வார்ப்பப்", திருத். 3136 : 3 - 6
கொங்கவிழ் குழல்	மணம் விரியும் கூந்தல்	"கொங்கவிழ் குழலாள் கோயிலுட் புக்காங்கு", மணி. 23 : 38; "கொங்கவிழ் குழலார் கற்புக் குறை பட்டோ", மணி. 28 : 89
கொங்கியல் சுரிகுழல்	வாசனைப் பொருந்திய சுரிந்த கூந்தல்	"கொங்கியல் சுரிகுழல் வரிவளையிளமுலை யுமை யொரு பங்கிய நிருவுரு வுடையவர்", தேவா. திருஞா. 3 : 84 : 3 : 1 - 2
கொங்கொளிக் குழல்	வாசனையும் ஒளியும் உடைய கூந்தல்	"கொங்கொளிக் குழலா யெனக் கூறினான்", சீவக. 1334 : 4
தேமலர்க் குழல்	மணம் கமழும் மலர்க் கூந்தல்	"தாமநித்திலக் கோவைகள் சரிந்திடச் சரிந்த, தேமலர்க் குழல் மாதர் பந்து ஆடு தெற்றிகள் சூழ் காமர் பொன் சுடர் மாளிகை", திருத். 3998 : 1 - 3
தேன்கமழ் குழல்	தேன்மணக்கும் கூந்தல்	"தேன்கமழ் குழலின் வாசம் திசை எலாம் சென்று சூழ", திருத். 283 : 3 - 4
மட்டவிழ் குழல்	மணம்கமழும் கூந்தல்	"மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடும் துணித்தார் அன்றே", திருத். 4110 : 7 - 8
மட்டு அவிழ் மலர்க் குழல்	தேன் சிந்தும் மலர்களை அணிந்த கூந்தல்	"சிட்டர் செயல் செய்திலை குலச் சிறுமை செய்தாய் மட்டு அவிழ் மலர்க் குழலினானை இனி மன்னா! விட்டிடுது மேல் எளியம் ஆகும்", கம்ப. 6123 : 1 - 3
மட்டு விரி பூங்குழல்	தேன் சிந்தும் மலர் அணிந்த கூந்தல்	"மட்டுவிரி பூங்குழல் மடவார் அடுப்பில் ஏற்றி மனம் மகிழ்ந்தே", திருத். 3730 : 1 - 2
மணந்தாழ் புரிகுழல்	நறுமணம் தங்கிய கூந்தல்	"மணந்தாழ் புரிகுழலாள் அல்குல் போல வளர்கின்றதே", திருக்கோ. 9 : 4
மருஆரும் குழல்	மணம்பொருந்திய கூந்தல்	"மருஆரும் குழல் மலையாள் வழிபாடு செய்ய அருள் தருவார்", திருத். 2293 : 5 - 7

மருவை வென்ற குழல்	மணக்கும் கூந்தல்	"மருவை வென்ற குழல்மடவாள் பாகம் வைத்த மயானத்து மாசிலா மணியை", தேவா. திருநா. 6 : 91 : 3: 5 - 6
மருவுற்ற மலர்க்குழல்	வாசனையையுடைய மலர் கூந்தல்	"மருவுற்ற மலர்க் குழலி மடவாள் அஞ்ச மலை துளங்கத் திசைநடுங்கச் செறுத்து நோக்கிச்", தேவா. திருநா. 6 : 45 : 10 : 1 - 2
மன்றல் அம் குழல்	வாசனைப் பொருந்திய கூந்தல்	"நின்றவர் தம்மை நோக்கி நிகர் இல்சீர்ச் சண்பை மன்னர் மன்றல் அம்குழ லியாராம் மானியார் தமக்கும்", திருத். 2525 : 1 - 4; "மன்றல் அம்குழலி னாரும் வணிகன் வாய் மாற்றம் கேளாக்", திருத். 1769 : 3 - 4
மன்றல் வார் குழல்	வாசனை வீசும் நீண்ட கூந்தல்	"மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்", திருத். 301 : 3
முருகு அலர் குழல்	மணம் கமழும் கூந்தல்	"முருகு அலர் குழலாய் இன்னம், முன்புபோல் மறாதே நின்பால்", திருத். 3523 : 5 - 6
மைவாச நறுங் குழல்	மணம் வீசும் கருங் கூந்தல்	"மைவா சநறுங் குழல்மா மலையாள், மணவாளன் மலர்க்கழல் வந்து அடையும்", திருத். 1343 : 5 - 6
மொய்தரும் பூங் குழல்	மணம் வீசும் கூந்தல்	"எய்தவரும் கனி அளித்தார் யார் என்னும் கணவனுக்கு மொய்தருபூங் குழல்மடவார் புகுந்தபடி தனை மொழிந்தார்", திருத். 1749 : 3 - 4
விரவு நறுங் குழல்	மணம் வீசும் கூந்தல்	"விரவு நறுங்குழல் அலைய விமானங்கள் விரைந்து ஏறிப்", திருத். 963 : 5 - 6
விரையீர்ங் குழல்	வாசனையுடைய, நெய்ப்புடைய கூந்தல்	"பேரென்னவோ உரையீர் விரையீர்ங் குழல் பேதையரே", திருக்கோ. 56 : 4
விரை சென்ற டைந்த குழல்	மணம் வந்து பொருந்திய கூந்தல்	"விரை சென்றடைந்த குழலாளையவ் வேனிலானே", சீவக. 1063 : 3 : 4
விரைசேருங் குழல்	நறுமணம் பொருந்திய கூந்தல்	"விரைசேருங் குழலாள் பரவை இவள் தன்முகப்பே அரசே தந்தருள்வாய் அடியேன் இட்டளங்கெடவே", தேவா. சுந்தர. 38(14அ): 8 : 3 : 4
வேரி நற்குழல்	மணம் கமழும் கூந்தல்	"சீரியற் றில்லை யாய் சிவனே யென்று, வேரி நற்குழ லாளிவள் விம்முமே", திருவி. 281 : 3 - 4
விரை நறுங் குழல்	மணம் கமழும் கூந்தல்	"விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒரு பால் மிக்க முரசொடு சங்கம் ஆர்ப்ப", திருத். 106 : 3 - 5
வேரி மலிவார் குழல்	மணம் மிக்க தொங்கும் கூந்தல்	"நாளுமிசையால் வேரிமலி வார்குழனன் மாதரிசை பாடலொலி வேத வனமே", தேவா. திருஞா. 3: 76: 3: 6 - 8
தெய்வநாறும் வம்பின் நாண் மலர்க் கூந்தல்	புதியமலர் மணம் வீசும் கூந்தல்	"செம் பொனாற் செய்தழகு பெய்தாற் போலுஞ், செஞ்சடையெம்பெருமானே தெய்வநாறும், வம்பினாண் மலர்க் கூந்தல் உமையாள்", தேவா.திருநா. 6: 4: 9: 1 - 3
நறுங்கூந்தல்	மணமுடைய கூந்தல்	"நல்மதுர மாங்கனியில் இருந்ததனை நறுங்கூந்தல் அன்னம் அனையார் தாமும் கொடு வந்து கலந்து அளித்தார்", திருத். 1744 : 1 - 2
நறை கமழ் கூந்தல்	மணங்கமழும் கூந்தல்	"எத்திறத் தார்க்கு மிருத்தியுஞ் செய்குவ நறைகமழ் கூந்தனங்கை நீயும்", மணி. 26 : 61 - 62
நாறைங் கூந்தல்	மணம் நாறும் ஐவகை கூறுபாடும் அமைந்த கூந்தல்	"ஆறுகடி கொள்ளும் அருஞ்சுரம் பணைத்தோள் நாறைங் கூந்தல் கொம்மை வரிமுலை நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு", அகம். 65 : 17 - 19; "நாறைங் கூந்தலு நரை விராவுற்றன இளமையுங் காமமும் யாங்கொளித் தனவோ", மணி. 22 : 130 - 131
மணம் மலியும் மலர்க் கூந்தல்	மணம் வீசுகின்ற மலரை அணிந்த கூந்தல்	"கணவன் தான் வரவிடுத்த கனி இரண்டும் கைக் கொண்டு மணம் மலியும் மலர்க்கூந்தல் மாதரார் வைத்தன்பின்", திருத். 1789 : 1 - 2

மருஒன்று கூந்தல்	நறுமணம் பொருந்திய கூந்தல்	"மருஒன்று கூந்தலாளை வனத்து இவன் கொண்டு வாரான்", கம்ப. 2790 : 1 - 2
நறை கமழும் சடைமுடி	மணங்கமழும் சடைமுடி	"நறைகமழும் சடை முடியும் நால்தோளும் முக்கண்ணும் கறைமருவும் திருமிடறும் கரந்து அருளி எழுந்து அருளும்", திருத். 392 : 1 - 3
வெறிகமழ் சடை	வாசனை வீசுகின்ற சடை	"வெறிகமழ் சடையன் அப்பன் விண்ணவர் நண்ண மாட்டாச்", திருவாச. அச்சப். 8 : 3 - 4
வெறிகமழ் துறு முடி	மணம் வீசும் முடி	"வெறி கமழ் துறுமுடி தயங்க", நற். 308 : 6
கந்தம் கமழ்தல்	கூந்தல் மணம் கமழுதல்	"கந்தம் கமழ்மென்குழலீர் இதுஎன்", திருத். 321:1
கதுப்பு நாறுதல்	மயிர் மணம் வீசுதல்	"யார் நட்பே யாயினும் நட்புக் கொளல் வேண்டும் கான் அட்டு நாறும் கதுப்பினாய்! தீற்றாதோ நாய் நட்டால் நல்ல முயல்", பழ. நா. 128 : 2 - 4
கூந்தல் நறுவிரை குடைதல்	மயிர்ச் சாந்து பூசுதல்	"நல்நெடுங் கூந்தல் நறுவிரை குடைய", மது. 552; "நல்நெடுங் கூந்தல் நறுவிரை குடைவோர்", மணி. 19 : 89
கூந்தல் நாறுதல்	கூந்தல் மணம் நாறுதல்	"கூந்தல் நாறுநின் மார்பே", ஐங். 240 : 4; "நாறிருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே", புறம். 113 : 9
மயிர் நாறுதல்	கூந்தல் மணத்தல்	"சீறூரோளே நாறு மயிர்க் கொடிச்சி", நற். 95 : 8
கூந்தல் விரை யொலித்தல்	கூந்தல் மணத்தல்	"விரையொலிக் கூந்தல்நும் விறலியர் பின்வர", புறம். 109 : 16
ஏரார் குழல் கமழ்தல்	கூந்தல் மணம் வீசுதல்	"சீரால் வணங்கப்படுவார் போலும் திசையனைத்து மாய் மற்று மானார் போலும் ஏரார் கமழ் குழலாள் பாகர் போலும் இடைமருது மேவிய ஈசனாரே", தேவா.திருநா. 6 : 16 : 2 : 5 - 8
கந்தமும் மகரந்தமும் அளகம் தருதல்	மணம் வீசுதல்	"மாகந்தமும் மகரந்தமும் அளகம் தரும் மதியின் பாகம் தரும் நுதலாளொடு பவளம் தரும் இதழான்", கம்ப. 1929 : 1 - 2
ஏலக்குழல்	ஏலம் மணக்கும் கூந்தல்	"ஏலக்குழலி பரி சேலோ ரெம்பாவாய்", திருவாச. திருவெம். 5 : 8
ஏலநாறு இருங்குழல்	ஏலம் மணம் வீசுகின்ற கூந்தல்	"ஏல நாறிருங் குழற்புறத்த வாண்முகத்தவாம்", சீவக. 1953 : 1 - 3
ஏலம்ஆர் தருகுழல்	ஏலம் மணக்கும் கூந்தல்	"ஏலமார் தருகுழ லேலையோ டெழில் பெறும் கோல மார் தருவிடைக் குழகனா ருறைவிடம்", தேவா. திருஞா. 3: 32 : 4 : 1 - 2
ஏலம் ஏலும் குழல்	ஏலமணம் பொருந்திய கூந்தல்	"ஏலம் ஏலுநற் குழலி பங்கனே!", திருவாச. திருச். 94: 2
ஏலம் கமழ் குழல்	ஏலமணம் கமழ்கின்ற கூந்தல்	"ஏலம் கமழ் குழலாள் பாகர் போலும் இடை மருது மேவிய ஈசனாரே", தேவா.திருநா. 6 : 16 : 8 : 7 - 8
ஏலமலர்க் குழல்	ஏலம் மணம் வீசும் குழல்	"ஏலமலர்க் குழன் மங்கை நல்லாள் இமவான் மகள் பாலமருந்திரு மேனியெங்கள் பரமேட்டியும்", தேவா. திருஞா. 2: 12 : 2 : 1 - 2
ஏலவார் குழல்	ஏலம் மணக்கின்ற நீண்ட கூந்தல்	"மாலுங் காணவொ ணாவெரியான் மங்கலக் குடி ஏலவார்குழ லாளொருபாக மிடங்கொடு", தேவா. திருஞா. 2: 10 : 9 : 2 -3; "காலினோடு கைகளுந் தளர்ந்து காம நோய்தனால் ஏலவார்குழலினார் இகழ்ந்து உரைப்ப", தேவா. திருஞா. 2 : 97 : 9 : 1 - 2; "ஏல வார்குழ லாள்உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற

		கால காலனை", தேவா. சுந்தர. 65 : 1 : 5 - 7; "எங்கள்நா யகனே என்னு யிர்த்த லைவா ஏலவார் குழலிமார் இருவர்'', திருவாச. அருட். 3 : 1 - 2; ''ஏலவார் குழலாள் தன் னோடு, இடபவாகனன் ஆய்த்தோன்றிச்", திருத். 464: 5- 8 "ஏலவார் குழலாள் பாகர் பாணிகள் யாழில் இட்டார்", திருத். 4221 : 5 - 8;
உரைத்த சாந்தின் ஊரல் இருங் கதுப்பு	பூசிய மயிர்ச் சாந்தி னையுடைய கரிய கூந்தல்	"உரைத்த சாந்தின் ஊரல் இருங்கதுப் பைதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா", அகம். 102 : 3 - 4
சாந்துளர் நறுங் கதுப்பு	மயிர்ச்சாந்து பூசிய நறிய கூந்தல்	"கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச் சாந்துஉளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி", குறுந். 312 : 5 - 6
சாந்துளர் கூழை	மயிர்ச்சாந்து பூசி உலர்த்தின மயிர்	''நீங்கிப் புறங்கடைப் போயினாள் யானுமென் சாந் துளர் கூழை முடியா நிலந்தாழ்ந்த பூங்கரை நீலந் தழீஇத் தளர் பொல்கி", கலித். 115 : 12 - 14
சாந்து உளர் வணர் குரல்	மயிர்ச்சாந்து பூசிய வளைந்த கொத் தாகிய கூந்தல்	"சாந்துளர் வணர்குரல் வாரி வகை வகுத்து", அகம். 117 : 10
தகரக் குழல்	மயிர்ச்சாந்து பூசிய குழல்	"தகரக் குழலாள் தன்னொடு மயங்கி", மணி. 4 : 55; "வெந்தாற்போல் தோன்றுநீள் வேய் அத்தம் தந்தார், தகரக் குழல் புரளத் தாழ் துகில்கை யேந்தி, மகரக் குழை மறித்த நோக்கு", திணை. நூற். 77 : 2 - 4
தகரக் கூந்தல்	மயிர்ச்சாந்து தடவப் பெற்ற கூந்தல்	''மடக்கண் தகரக் கூந்தல் பணைத்தோள் வார்ந்த வால் எயிற்றுச் சேர்ந்துசெறி குறங்கில்", நற். 170 : 1
துடித்தலைக் கருங்குழல்	ஏலம் அணிந்த கூந்தல்	"துடித்தலைக் கருங்குழல் சுரும்பு உண் கோதைதன் அடித்தலைச் சிலம்பினோடு அரவம் மேகலை வடித்தலைக் கண்மலர் வளர்த்த நோக்கமோடு அடுத்து உலப்பு அரிது அவர் ஊறு இல் இன்பமே", சீவக. 194 : 1 - 4
தேமறப்பு அறியாக் கூந்தல்	அகில் நெய் பூசுவதை மறக்காத கூந்தல்	"தேமறப்பு அறியாக் கமழ் கூந்தலளே", நற். 301: 9
நரந்தம் நறை குழல்	கஸ்தூரி மணம் கமழும் கூந்தல்	"இருங் களிறு இச்சிலை ஏற்றிலன் ஆயின் நரந்த நறைக் குழல் நங்கையும், நாமும் முருங்கு எரியில் புகமூழ் குதும் என்பார்", கம்ப. 694 : 2 - 4
நாவி ஓதி	புழுகு நெய் பூசப் பட்ட கூந்தல்	"நாவி ஓதியை நானிலம் தைவரப் பரப்பி", கம்ப. 1493: 3 - 4
நாவி பூத்த கதுப்பு	கஸ்தூரிக் கலவை கமழ்கின்ற கூந்தல்	''புதுப்புனல் குடையும் மாதர் பூவொடு நாவி பூத்த கதுப்பு உறு வெறியே நாறும்", கம்ப. 42 : 1 - 3
நாவி விரி கூழை	கஸ்தூரி மணம் கமழும் கூந்தல்	"நாவி விரி கூழை இள நவ்வியர் துயின்றார்", கம்ப. 1849 : 4
நானம்	கூந்தலில் தடவும் வாசனைப் பொருட் களுள் ஒன்று	"புதுக்கச் சார்ந்த பொன் வாளுஞ் சுரிகையும் கதுப்பின் நானமுங்காமர் கலங்களும்", சீவக. 1712 : 2 - 3
திருந்து நானக் குழல்	புழுகு மணம் வீசும் கூந்தல் மயிர்	"திருந்து நானக்குழல் புலம்பத் தேனும் வண்டு இசைப் புலம்ப", சீவக. 349 : 3
நானப் பங்கி	நறுமணம் கமழும் கூந்தல்	"நானப் பங்கி கரமிசைத் திவளப்", பெருங். 1: 35: 207
ஏலம் கமழ்தல்	ஏலம் கமழ்தல்	"ஏலக்கமழ் குழலாள் பாகர் போலும் இடைமருது மேவிய ஈசனாரே'', தேவா.திருநா. 159 : 7 - 8; ''ஏலம் கமழ கோதையர் தம் திறம் என்றும் நீங்கும்", திருத். 1019 : 1

ஏலநாறுதல்	ஏலம் மணம் வீசுதல்	"மாலை யுட்கலந்த பந்து வந்து கைத்தலத்தவாம் ஏலநாறி ருங்குழற் புறத்த வாண்முகத்தவாம்", சீவக. 1954 : 1 - 3
சாந்து அருந்துதல்	கூந்தலுக்கு மயிர்ச் சாந்து அணிவித்தல்	"சிமையக் குரல சாந்து அருந்தி இருளி", அகம். 399:1
சாந்தார்தல்	சாந்தணிந்திருத்தல்	"நெறிகுரல் சாந்தார் கூந்தல் போதணிந்து", அகம். 389 : 2
அளகத்துச் செம் பொற் சுண்ணம் அப்புதல்	கூந்தலில் சுண்ணம் அப்புதல்	"அலமரு திருமுகத் தளகத் தப்பிய செம்பொற் சுண்ணஞ் சிதர்ந்த திருநுதல்", பெருங் 1: 33: 119 - 120
சுண்ணமொடு சொரிதல்	சுண்ணம் அணிதல்	"பெருந்தேன் ஒழுக்கின் பிணங்கிய செலவின் வண்ண மகளிர் சுண்ணமொடு சொரியும்", பெருங். 1: 38: 131 - 133
ஆனாப் பளித நறுஞ் சுண்ணம் உகிரின் உழு தாங்கு அணிதல்	நகத்தினால் கூந்தலைச் சிக்கு அறுத்து நல்ல மணம் கமழும் சுண்ணப் பொடியை அணிதல்	"தேனார் அகிலின் புகை சேர்த்தி வகுத்து நாவிக் குழம்புறீஇ ஆனாப் பளித நறுஞ் சுண்ணம் உகிரின் உழு தாங்கு அணிந்தாரே", சீவக. 2692: 3 - 4
தகரம் கமழ்தல்	மயிர்ச் சாந்து பூசும் பழக்கமுடைமை காரணமாகக் குளிக்கும் போது மயிர்ச் சாந்து மணத்தல்	"தண்ணறுந் தகரங் கமழ மண்ணி", குறிஞ். 108 : 110
தகரம் நாறுதல்	மயிர்ச் சாந்து மணத்தல்	"தகரநாறுந் தண்ணறுங் கதுப்பின் புதுமண மகடூஉ", அகம். 142 : 13 - 14
தகரம் நீவுதல்	கூந்தலில் மயிர்ச் சாந்து தடவப் பெறுதல்	"கனவினும் பிரியா உறையுளொடு தண்ணெனத் தகரம் நீவிய துவராக் கூந்தல் வதுவை மகளிர் நோக்கினர் பெயர்ந்து", பதிற். 89 : 15 - 17
தகரம் மண்ணுதல்	மயிர்ச்சாந்து பூசிக் கொள்ளுதல்	"யான் போது துணைப்ப தகரம் மண்ணாள்", அகம். 117 . 11; "நன்மாண் விழவில் தகரம் மண்ணி", அகம். 385 : 6
மென்தயிர் உரைத்தல்	தயிரை வார்த்தல்	"உரைத்த மென்தயிர்ப் பித்தைக் கோவலர் தீங்குழல் உலவ நிரைக் கண் மாமணி கறங்க நீள்நிலம் கடந்தனன் நெடியோன்", சீவக. 1564 : 3 - 4
நாவிக் குழம்பு அளைஇ	கூந்தலுக்கு நாவிக் குழம்பு (புனுகு) பூசுதல்	"வேனிலாடும் விருப்பினால் வகுத்து நாவிக் குழம்பு அளைஇ", சீவக. 2692 : 1 - 3
நாவி தோய்தல்	கத்தூரியைப் பூசுதல்	"நகை எரி கற்றை நெற்றி நாவிதோய்ந் தனைய ஓதி புனை எனத் தும்பி சுற்ற", கம்ப. 5015 : 1 - 3
பூங்குழல் கற்றையின் நாவிநாள் மலர் நாறுதல்	அழகமைந்த கூந்தல் தொகுதியில் கத்தூரிப் புனுகும் எண்ணெய் மணமும் அன்றலர்ந்த மலர்களின் மணமும் வீசப் பெறுதல்	"பூவும் நாறலள் பூங்குழல் கற்றையின், நாவி நாள்மலர் கங்கையும் நாறினள்", கம்ப. 1946 : 3 - 4
நானக்கலவை ஊட்டுதல்	கூந்தலை முடிக்கு முன் வாசனையுள்ள கலவையைப் பூசுதல்	"கைந் நூற் நிறத்திற் கலப்ப வாரிக் கமழும் நானக் கலவை கமழவூட்டி", சீவக. 2437 : 2 - 3
நானம் ஆர்தல்	கத்தூரி மணம் வீசுதல்	"நானம் ஆர்ந்த நறைக் குழல் ஆவியும்", கம்ப. 4984: 3

நானம் கமழ்தல்	கத்தூரி மணத்தல்	"இம்மையும் நன்றாம் இயல் நெறியுங்கைவிடாது உம்மை யும் நல்ல பயத்தலால் - செம்மையின் நானம் கமழுங் கதுப்பினாய். . . .", நாலடி. 294 : 1 - 3
நறுமென் கூந்தலுள் நானந் தோய்த்தல்	நறுவிய மெல்லிய கூந்தலில் நறுமண நெய் தடவுதல்	"நானந் தோய்த்த நறுமென் கூந்தலுள் ஆனைந்து தெளித்து நீரிடை மூழ்கி", பெருங். 1 : 40 : 265 - 266
நானம் நாறுதல்	நானம் மணத்தல்	"நறுந்தண் தகரமும் நானமும் நாறும் நெறிந்த குரற்கூந்தல் நாளணிக் கொப்ப", கலித். 93 : 21 - 22
நானம் நெய் நன்கு உரைத்தல்	புழுகு நெய்யை நன்கு தேய்த்தல்	"நானம் நெய் நன்கு உரைத்து நறும்புனல் ஆன கோது அற ஆட்டி", கம்ப. 9620 : 1 - 2
நானம் மண்ணுதல்	(கூந்தலை) நறுமணப் பொடியிட்டு முழுகித் தூய்மை செய்தல்	"பண்கெழு விரலிற் பன்முறை தொகுத்து நான மண்ணி நீனிறங் கொண்டவை", பெருங். 2 : 19 : 68 - 69; "இலச்சினை யொற்றிய தலைச்சுமைச் சரக்கினர் நான மண்ணிய நீனிறக் குஞ்சியர்", பெருங். 3 : 17 : 152 - 153
நானமிக நாறுதல்	நானம் மணத்தல்	"நான மண்ணிய நன் மண மங்கையர்", சீவக. 853: 1; "நானம் மிக நாறுகமழ் குஞ்சியவன் ஏறி ஊனம் எனும் இன்றி இனிது ஒடுக இது என்றான்", சீவக. 500: 3 - 4
தகரமும் நானமும் நாறுதல்	குளிர்ந்த மயிர்ச்சாந்தும் புழுகும் நாறுதல்	"நறுந்தண் தகரமும் நானமும் நாறும் நெறிந்த குரற்கூந்தல் ", கலித். 93 : 21 - 22
கூந்தல் நெய்யார்தல்	அழகிய கூந்தலில் வாச நெய் பூசுதல்	"நெய்யார்ந்த கூந்தனிழற் பொன்னரிமாலை சோரக் கையார் வளையார் ", சீவக. 2342: 2
மான்மதக் கொழுஞ் சேறூட்டுதல்	புகையிற் புலர்த்திய கூந்தலை வகைபெற வகுத்து மான்மதம் கலந்த கொழுவிய குழம்பினை ஊட்டுதல்	"புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை வகை தொறு மான்மதக் கொழுஞ் சேறூட்டி", சிலப். 6 : 80 - 81
மான்மதச் சாந்தொடு வருதல்	கூந்தலுக்கு அகிற் புகையுடன் மான் மதம் கலந்த குழம் பினையும் பூசுதல்	"நான நல்லகில் நறும் புகை யன்றியும் மான் மதச் சாந்தொடு வந்ததை எவன்கொல்", சிலப். 2: 67-68

ஈ. அணிகலன்கள்

கூந்தலைச் சுத்தப்படுத்துதல், எண்ணெய் மற்றும் மணப்பொருட்கள் தடவுதல், பல்வேறு விதமாகக் கூந்தலை முடித்து அழகுபடுத்துதல், மலர் அணிதல் என இவற்றுடன் பழந்தமிழரின் கூந்தல் ஒப்பனை முடிந்துவிடவில்லை. விலை மதிப்பற்ற அணிகள் கொண்டு அழகுபடுத்தியதையும் காண்கிறோம். தலையில் அல்லது கூந்தலில் அணி அணியும் இப்பண்பாடு பெரும்பாலும் இன்று நம்மிடமிருந்து மறைந்து வருவது கண்கூடு.

தமிழரின் ஒப்பனை வெளிப்பாட்டில் முக்கியத்துவம் பொருந்திய ஒன்றாகத் தொன்றுதொட்டுத் தொடர்ந்து வருவன அணிகள். என்றும் வாடாததும், கெடாததும் என்ற நிலையில் இதன் பெருமை பண்டைத் தமிழரால் சிறப்புற உணரப்பட்டு, பெரும்பயன் கொள்ளப்பட்டதை அவர்தம் ஒப்பனை வரலாறு காட்டுகிறது. கூந்தல் முதல் பாதம் வரை 'அடிக்கலம் முதலா முடிக்கலம் ஈறா' என அவர்கள் பயன்படுத்திய அணிகள் மிகப்பல. பொன்போன்ற உலோகங்கள், பவளம், முத்து போன்ற கடல்படு பொருட்கள், பல்வேறு மணிகள் போன்ற பலவும் அவர்கள் பயன்படுத்தியது அங்கு வெளிப்படுகிறது. இந்த வரலாற்றில் பழந்தமிழரின் ஒப்பனைக் கலை ஆர்வம், இரசனை மட்டும் வெளிப்படவில்லை. அவர்களின் பல்வேறு பட்ட அறிவு மேம்பாடு, தொழில் நுட்ப உணர்வு போன்றனவும் வெளிப்படுகின்றதை இங்குச் சுட்டவேண்டும். தவிர, இந்த அணிகளைச் சுட்ட அவர்கள் பயன்படுத்திய பல்வேறு வகைப்பட்ட சொற்களும் அவர்களிடம் அணிகள் பெற்றிருந்த முக்கியத்தைத் தெளிவாக இனங்காட்டும். பொதுவாக அணிகளைச் சுட்ட அவர்கள் பயன்படுத்திய பெயர்கள் பல இன்று நம்மிடம் வழக்கில் இல்லாமை, இவை நம்மிடம் செல்வாக்கு இழந்ததைத் தெரிவிக்கும்.

உருளிழை	தலையில் கிடந்து அசையும் அணி	"உருளிழாய் ஒளிவாட் இவள் உண்ணோய் யாதென்னும்", கலித். 59 : 14
பொன் செய் புனையிழை	பொன்னால் செய்யப் பட்ட அணி	"பொன் செய் புனையிழை கட்டிய மகளிர்", குறுந். 21: 12
பெருங்கலம்	பேரணிகலன்	"தானணி பெருங்கலம் தலைவயிற் களைந்து", பெருங். 5 : 5 : 21
பேரணிகலம்	பெரிய அணிகலன்	"பகையடு வேந்தற்குப் பணிந்தனனுரைப்பத் தன்மைக் கேற்ற தலைப் பேரணிகலம் புன்மை தீர முன்னிலை நல்கிப்", பெருங். 5 : 7 : 8 - 10
முடிக்கலம்	தலையணி கலன்	"முடிக்கலமுதலா முறைமுறை தோன்றும் அடிக்கலம் ஈறா அணிந்தழகு பெறீஇ", பெருங். 2 : 5 : 179 - 180; "அடிக்கலம் அரற்ற ஏகி அரும்பெறல் தாதை பாதம் முடிக்கலம் சொரியச் சென்னி யிறைஞ்சலும்", சீவக. 562 : 1 - 2
பூண்	தலை அணி	"பூண்திகழ் சிறுபுன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி", திருத். 669 : 3 - 4
திருமணிப் புனை பூண்	மணி புனையப் பட்ட தலையணி	"திருமணிப்புனை பூண் செல்லப் பைம் பொனின் மாலை வேய்ந்த", திருத். 3126 : 2 - 3
சேகரப் போது	தலைமுடி உச்சியிலே சூடற்குரிய பூ	"சின்னப்பூ, செருகும் மென் பூ, சேகரப் போது, கோது இல் கன்னப் பூ", கம்ப. 1133 : 1 - 3
பொன்புனை உழிஞை	பொன்னாற் புனையப் பெற்ற உழிஞை	"பொன்புனை யுழிஞை வெல்போர்க் குட்டுவ", பதிற். 22 : 27
பொலங்கொள் கொன்றை	பொன்னால் செய்யப் பட்ட கொன்றை	"கலங்கு தெண்திரை மேய்ந்து கணமழை பொலங் கொள் கொன்றையினான் சடை போல் மின்னி", சீவக. 32 : 2 - 3
பொலம் பூந் தும்பை	பொன்னாற் செய்த தும்பைப் பூ	"பொலம் பூந்தும்பை பொறிகிளர் தூணி", பதிற். 45: 1
பொன் நவில் கொன்றை	பொன்னால் செய்யப் பட்ட கொன்றை மலர்	"பொன் நவில் கொன்றையார் தம் திருநீறு பூசப் பெற்று முன்னை வல்வினையும் நீங்கி", திருத். 2722: 3 - 5
பொன்வாகை	பொன்னாற் செய்யப் பட்ட வாகை	"செய்பொன் வாகையுஞ் சேர்த்திய சேரன்", மணி. 26 : 90
உத்தி	சீதேவி எனும் தலைக்கோலம்	"முத்தின ருத்தியர் மும்மணிக் காசினர்", பெருங். 1: 34: 12; "உத்தியொரு காழ் நூல் உத்திரியத் திண் பிடி", கலித். 96 : 13; "உத்தி பொறித்த புனைபூண் பரு மத்து", கலித். 97 : 14
சித்திர உத்தி	சித்திரம் அமைந்த சீதேவி எனும் தலை அணி	"முத்தணி வடமுஞ் சித்திர வுத்தியும், நாணும் தொடரும் ஏனைய பிறவும்", பெருங். 2 : 19 : 120 - 121
தெய்வவுத்தி	சீதேவி என்னும் தலைக்கோல அணி	"தெய்வவுத்தியோடு வலம்புரி வயின் வைத்து", திருமுருகு. 23; "தெய்வவுத்தியோடு செழுநீர் வலம்புரி தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக் கணி", சிலப். 6 : 106 - 107
ஈகையங் கண்ணி	பொன்னால் செய்த அழகிய கண்ணி	"ஐதாக நெறித்தன்ன அறலவிர் நீளைம்பால் அணி நகை யிடையிட்ட ஈகையங் கண்ணி போற்", கலித். 32 : 3 - 4
எரி பொன் கண்ணி	ஒளிவீசும் பொற் கண்ணி	"ஏந்தல் வேல் திருத்த யானை இரிந்தன எரி பொன் கண்ணி நாந்தக உழவர் நண்ணார் கூற்று என நடுங்கி மள்ளர் சாய்ந்த பின்", சீவக. 285 : 1 - 3

செம் பொற் கண்ணி	செம்மையான பொன் மாலை	"சிறாஅர் வீழ்த்த செம் பொற் கண்ணியும்", பெருங். 2: 2: 98; "செம்பொற் கண்ணி சிறார் களைந் திட்டவும் அம் பொன் மாலை யவிழ்ந்துடன் வீழ்ந்தவும்", சீவக. 128: 1-2; "சீருடைச் செம்பொற் கண்ணிச் சிறுவனைச் செம்பொன்மாரி, பேரறைந்துலக முண்ணப் பெரு நம்பி யாக என்றான்", சீவக. 2913 : 3 - 4
பொன்னங்கண்ணி	பொன்னாற் செய்த கண்ணி	"பொன்னங்கண்ணிப் பொலந்தேர் நன்னன்", பதிற். 40 : 41
மணிப்பூண் கண்ணி	மணியணி கலன்	"மணிப்பூண் கண்ணியர் மரபறி மாந்தர்", பெருங். 4: 1 : 37 - 38
சென்னிகைக் கோதை	சுடர் பரந்த மின்னலைப் போலப் பொன்னால் இடை யிடை இழைத்துச் செய்த கோதை	"கண்ணொளிர் திகழட ரிடுசுடர் படர்கொடி மின்னுப் போல், ஒண்ணகை தகைவகை நெறிபெற இடையிடை யிழைத்தியாத்த சென்னிகைக் கோதை கதுப் போடியல மணிமருடேன் மகிழ் தட்ப வொல்கிப்", பரி. 21: 54 - 57
நித்திலக் கோவை	முத்து மாலை	"தாழ நித்திலக் கோவைகள் சரிந்திடச் சரிந்த தேமலர்க் குழல் மாதர் பந்து ஆடு", திருத். 3998: 1 - 2
புனைவினை பொலங் கோதை	ஒளிதிகழும் கட்டு வகையமைந்த மூட்டு வாய் புனைந்த தொழில்திறம் வாய்ந்த பொன் னாலாகிய மாலை	"ஒளிதிகழ் தகை வகை செறிபொறி புனைவினைப் பொலங் கோதை யவரொடு" பரி : 64 - 65
பொலன் கோதை	பொற்பூவாற் செய்த கோதை	"கொடியவுங் கோட்டவும் நீரின்றி நிறம் பெறப், பொடி யழற் புறந்தாழ்ந்த பூவாப் பூம் பொலன் கோதை", கலித் 54 : 1 - 2
பொன்நாண் கோர்த்த நன் மணிக் கோவை	பொன்னாலாகிய கயிற்றில் கோத்த நல்ல மணிக்கோவை	"பொன்நாண் கோத்த நன்மணிக் கோவை", மணி. 3 : 133 - 134
சிகழிகை	தலையணி	"முத்துத் தாமம் உறைகின்ற உருவக்கோலச் சிகழிகை மகளிர்", சீவக. 2653 : 1 - 2
கைவல் வினைவன் தையுபு சொரிந்த சுரிதகம்	கைத் தொழிலில் வல்ல கம்மியன் அழகு பொருந்த அர தனக்கற்களை இட்டு இழைத்த பொன்னால் ஆகிய சுரிதகம்	"கைவல் வினைவன் தையுபு சொரிந்த சுரிதக உருவின ஆகிப் பெரிய கோங்கம் குவிமுகை அவிழ் ஈங்கை நல்தளிர் நயவர நுடங்கும்" நற். 89 : 5 - 8
சிகழிகை செம் பொன் மாலை தொங்கலும் துயல் வர சுழியம் சூடுதல்	பூ மாலை அசையா நிற்க சுழியம் என்னும் அணியை முடியில் அணிதல்	"செங்கிடைச் சிகழிகை, செம்பொன் மாலையும் தொங்கலும் துயல்வர சுழியம் சூடியே", கம்ப. 1210 : 3 - 4
சூட்டு	நெற்றி அணி	"சூட்டொடு கண்ணியன்றே யென் செய்வானிவைகள் சொல்லி நீட்டித்தல் குணமோ வென்று நெஞ்சகங் குளிர்ப்பச் சொன்னான்", சீவக 484: 4
பொற்சூட்டு	கூந்தல் அழகு பெறும்படி அதனயலே கிடந்த அழகிய பொற்பட்டம் ; நெற்றிப் பட்டம்	"மணி அறைந் தன்ன மாவீழ் ஓதி அணி பெறக் கிடந்த அம்பொற் சூட்டினர்", பெருங். 2 : 7 : 17 - 18
செம்பொன் சூட்டு	பொன் பட்டம்	"செம்பொற் சூட்டொடு கண்ணி", சீவக. 2569 : 2

செம்பொன் செய் வாசிச் சூட்டு	செம்பொன்னாலாகிய நுதலணி மாலை	"செம்பொன் செய் வாசிச் சூட்டு", திருத். 3126:1
சூட்டணிதல்	நெற்றிச் சூட்டை அணிந்துகொள்ளுதல்	"வாண்மின் நுண்ணிடை வருந்தினும் சூட்டணிந் தழ கார்ஆண மாகிய அருவிலை வண்ணப் பட்டு டுமின்", சீவக 2389:3 - 4
சூட்டு சுடர்தல்	நுதலில் சூட்டு சுடர் விடுதல்	"தோட்டார் திருநுதற் சூட்டயற் சுடரும்", பெருங். 1: 40 : 101
சூட்டு சொரிதல்	தலையணி அணி வித்தல்	"சுண்ணமுந் சூட்டுஞ் சொரிந்து வார்குழற் கண்ணி மகாரொடு காற்சிலம்பு ஆர்த்தெழ", சீவக. 2114 : 1 - 2
செஞ்சூட்டு ஒண் குழை காது துயல் வருதல்	நெற்றியில் அணிந்த சூட்டு, குழை அணிந்த காதினைத் தொட்டு அசைதல்	"செஞ்சூட்டு ஒண்குழை வண்காது துயல் வர அகம் மலி உவகையள் ஆகி", அகம் 86: 26 - 27
நாட்டுப்பெயர்ப் பொறித்த சூட்டுப் பொலிதல்	பிறந்த நாட்டுப் பெயர் பொறித்த சூட்டு ஒளி வீசுதல்	"பெருநில மன்னர் திருநகர்ப் பிறந்துதம் நாட்டுப் பெயர் பொறித்த சூட்டுப் பொலி சுடர்நுதற் கொடிப்பூண் திளைக்கும்", பெருங் 2:4: 9 - 11
ஒள்ளழல் புரிந்த தாமரை	பொன்தாமரை	"ஒள்ளழல் புரிந்த தாமரை வெள்ளிநாரால் பூப் பெற்றிசினே", புறம். 11: 17-18
தொய்யகம்	மகளிர் தலையில் அணியக்கூடிய தலைக்கோலம்	"கைவளையாழி தொய்யகம் புனைதுகில்", பரி. 7 : 46; "தொய்யகம் தாழ்ந்த கதுப்பு போல", கலித். 28: 6; "தொய்யகத் தோட்டிக் குழைதாழ் வடிமணி", கலித். 97 : 13; "தெய்வ வுத்தியோடு செழுநீர் வலம்புரி தொய் யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி", சிலப். 6 : 106- 107
செம்பொற் பட்டம்	பொற்பட்டம்	"செம்பொற் பட்டம் பின்தலைக் கொளீஇ", பெருங். 1 : 46: 235
புல்லகம்	தலையணி, தென் பல்லி, வடபல்லி என்னும் தலையணி	"புல்லகம் ஏய்க்கும் புகழ்வயல் ஊரன்தன்", திணை நூற். 129 : 3; "தெய்வ வுத்தியோடு செழுநீர் வலம்புரி, தொய்யகம், புல்லகம் தொடர்ந்த தலைக் கணி", சிலப். 6: 106 - 107; "புல்லகம் பொருந்திய மெல் லென் ஓதி", பெருங். 2 : 3 : 72
பொலம்பிறை	பிறை வடிவில் செய்த அணி	"பொலம்பிறையுள் தாழ்ந்த புனை வினை உருள்கலன்", கலித். 81 : 3; "பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழ", மணி. 3: 136
மகுடம்	முடி	"பவளமே மகுடம் பவளமே திருவாய் பவளமே திருவுடம்பு அதனில்", திருவி. 95 : 1 - 2
குரு மணி மகுடம்	ஒளி பொருந்திய இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற கீரிடம்	"வெருவரு முழக்கும், ஈசன் வில் இறும் ஒலியும் என்ன, குருமணி மகுட கோடி முடித்தலை குலுங்கும் வண்ணம்", கம்ப. 5489 : 2 - 3
சுடர் மகுடம்	ஒளி வீசும் முடி	"மணி குண்டலம், வலயம், குழை, மகரம், சுடர் மகுடம் அணி கண்டிகை, கவசம், கழல், திலகம் முதல துணியுண் டவர் உடல் சிந்தின", கம்ப. 9410 : 1 - 3
செம்மணி மகுடம்	சிவந்த மணி பதித்த மணி மகுடம்	"மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்க செம்மணி மகுடம் நீக்கி, திருவடி புனைந்த செல்வன்", கம்ப. 6499 : 1 - 2
பசும் பொன் மணி மகுடம்	தூய பொன்னும் மணியும் கொண்டு செய்யப் பெற்ற திருமுடி	"விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து, பசும் பொன் மணி மகுடந் தேய்ப்ப", 11ஆம் திரு. 119: 1 - 2

பொன்னின் மா மணி மகுடம்	பொன்னில் செய்த பெருமைக்குரிய நவமணிகள் பதிக்கப் பெற்ற கீரிடம்	"அவன் தலையில், பொன்னின் மாமணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த", கம்ப. 7260 : 3 - 4
மந்தாரத்தின் மாலை அலம்பும் மகுடம்	மந்தார மலர்களால் கட்டப்பெற்ற மாலை அசைகின்ற மகுடம்	"கந்தா ரத்தின் இன் இசை பன்னிக் களி கூறும், மந்தாரத்தின் மாலை அலம்பும் மகுடத்தாள்", கம்ப. 4914 : 3 - 4
மத்தக நித்திலம்	தலை அணி	"துறையே, முத்து நேர்பு புணர்காழ் மத்தகநித்திலம், பொலம்புனை அவிரிழை கலங்கல் அம் புனல்மணி", பரி. 16 : 5 - 6
மவுலி	திருமுடி	"குண்டலங்களும், மவுலியும், ஆரமும், கோவை, தண்டை, தோள்வளை, கடகம் என்னும் இனையன தறுகண், கண்டகண்டங்களொடும் கணை துரந்தன" கம்ப. 7523 : 1 - 3
தோடு அணை மவுலி	மலர் செறிந்த மகுடம்	"தோடு அணை மவுலிச் செங்கண் வாலி சேய் தூசி செல்ல", கம்ப. 10293 : 3
தோடு அணைந்த தார் மவுலி	இதழ்கள் நெருங்கிய மாலை அணிந்த மணி முடி	"வீடணன் தனை அன்புற நோக்குறா, விமலன், தோடு அணைந்த தார் மவுலியாய்! சொல்வது, ஒன்று உளது", கம்ப. 10099 : 1 - 2
மின்னும் பன்மணி மவுலி	ஒளிர்கின்ற பல மணிகள் பதித்த மகுடம்	"மின்னும் பல் மணி மவுலிமேல் ஒருகணை விட்டான்", கம்ப. 7260 : 1
மாராட்டம்	மகாராட்டிர தேசத்து அணி	"அணிமாராட்டத்து அணி பெற அழுத்தி" பெருங். 1: 57: 100; "அம்புகை கமுமிய அணி மாராட்டம்", பெருங். 2: 19: 72
மாலை	பொன் மாலை	"மாண் இழைவிறலி மாலையொடு விளங்க", புறம். 141 : 2; "பாடினி மாலை அணிய", புறம். 319 : 14; "புரிமாலையர் பாடினிக்குப்", புறம். 361 : 12; "வாடா மாலை பாடினி அணிய", புறம். 364 : 1
எரி மிடைந்தனைய மாலை	பொன்மாலை	"எரிமிடைந் தனைய மாலை இனமணி திருவில் வீசுந், திருமுடி ஆர மார்பிற் சேணிகன் என்ப நாமம்", சீவக. 3044 : 1 - 2
பொன்மாலை	பொன்னரி மாலை	"செம்பொனோலை வீழவுஞ் செய்கலன்கள் சிந்தவும் அம்பொன்மாலை யோடவீழ்ந் தசைந்து கூந்தல் சோரவும்", சீவக. 1103 : 1 - 2
பொன்னரி மாலை	பொன் மாலை	"சென்னச் சிகழிகைப் பின்னிடை சேர்ந்த பொன்னரி மாலை தன் புறம்பிடைப் புடைப்ப", பெருங். 1 : 40 : 40; "பொன்னரி மாலையைப் புனல் கொண்டு ஈர்ப்ப", பெருங். 1 : 40 : 150; "நனைவளர் கோதை நாணிப் பொன்னரி மாலை ஓச்சக் கனை கழற் குரிசில் நண்ணிக் கவர்கிளி ஓப்பினானே", சீவக. 1498 : 3 - 4; "பொன்னரி மாலாய் பொருளிலை என்றும்", பெருங். 2 : 19 : 76; "பனிவி சும்பில் அமரர் பணிந்து சூழ், அனிதகோடி அணிமுடி மாலையும், புனித கற்பகப் பொன்னரி மாலையும், முனிவர் அஞ்சலி மாலையும் முன் எலாம்" திருத். 15;"பெய்யார் முகிலின் பிறழ் பூங்கொடி மின்னின் மின்னா நெய்யார்ந்த கூந்தல் நிழற் பொன்னரி மாலை சோரக்", சீவக. 2342 : 1 - 2; "பூ அணை பலவும் கண்டார், பொன்னரி மாலை கண்டார்", கம்ப. 861 : 1 - 2

நுணங்கரில் மாலை	நூலால் கட்டாத நுண்மையினையும் பிணக்கத்தையும் உடைய பொன்னரி மாலை	"நூலின் வலவா நுணங்கரின் மாலை, வாலொளி முத்தமொடு பாடினி யணிய", பொருநர். 161 - 162
பொன்னின் தொடை அமை மாலை	பொன்னாற் செய்து சேரக் கட்டுதல் அமைந்த மாலை	"புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின் றொடையமை மாலை விறலியர் மலைய", பெரும். 485 - 486
அம்பொன் மாலை	பொன்னாலான மாலை	"செம்பொற் கண்ணி சிறார்களைந் திட்டவும் அம் பொன் மாலை யவிழ்ந்துடன் வீழ்ந்தவும்", சீவக. 128 : 1 - 2
செம்பொன் மாலை	செம்பொன்னாலான மாலை	"செங்கிடைச் சிகழிகை, செம்பொன் மாலையும் தொங்கலும் துயல்வர, சுழியம் சூடியே", கம்ப. 1210: 3 - 4
மின்னவிர் மாலை	ஒளிவிடும் மாலை	"மின்னவிர் மாலை மென்பூங்குழல் வலத்தோளின் வீழக்", சீவக. 2056 : 2
முஞ்சம்	உச்சி அணி; சிறுவர்கள் உச்சியில் அணிந்த அணி	"வலஞ்சுழி யுந்திய திணைபிரி புதல்வர்; கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇத், தத்தந் துணையோ டொருங்குடனாடும்", பரி. 16 : 7 - 9
முடி	தலையில் அணியும் முடி	"தாரும் முடியும் நேர்வன பிறவும் தெரிவு கொள் செங்கோல் அரசர்க்கு உரிய", தொல். 1571; "முடித்தலை அரும்பாகம் புனற் குருதி உலைக் கொள்கி", புறம். 26: 8; "முடிகெழு தந்தை முன்னர்த் தோன்றி", பெருங். 1 : 34: 147; "முத்தின் ஆரங்களும் முடியும் மாலையும் உத்திரீ யங்களும் சரிய ஓடுவார்", கம்ப. 4885 : 1; "மன்னவர் முடியும் பூணும் மாலையும், பணையம் ஆக பொன் அணி பலகைச் சூது துயில்கிலர் பொருகின்றாரும்", கம்ப. 5019 : 4 - 8
அணி முடி	அழகிய முடிக்கலன்	"கொடுத்தில னென்பது கூறி நல்லதை, அடுத்தனன் கண்டா யணிமுடி யண்ணல்", பெருங். 1 : 48 : 101 - 102
ஐவேறு உருவில் செய்வினை முற்றிய முடி	ஐந்தாகிய, வேறுபட்ட வடிவினை உடைய முடிக்குச் செய்யும் தொழில் எல்லாம் முற்றுப்பெற்ற கிரீடம்	"கால்கிளர்ந்தன்ன வேழ மேல் கொண்டு ஐ வேறு உருவிற் செய்வினை முற்றிய முடியொடு விளங் கிய முரண்மிகு திருமணி", திருமுருகு. 82 - 84
கதிர் முடி	ஒளிவிடும் முடி	"கண்டிகை ஆரம் கதிர்முடி மாமதிச் சண்டிகை, நால் திசை தாங்கி நின்றாளே", திருமந். 1050 : 3 - 4; "நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப் போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்", திருவாச. போற்றித். 3 - 5; "கதிர்முடி வேந்தன் கண்ணிய நுண்பொருட்", பெருங். 1 : 32 : 30; "கதிர்முடி மன்னர் சூழ்ந்து கைதொழு திறைஞ்சி மாலைத்", சீவக. 613 : 1
புதுமணக் கோலத்துப் பொலிவோடு புணர்ந்த கதிர்முடி	புதுமணக் கோலத்துப் பொலிவோடே பொருந்திய ஒளி முடி	"புதுமணக் கோலத்துப் பொலிவோடு புணர்ந்த கதிர்முடி மன்னனைக் காண்பது விரும்பி", பெருங். 2: 7: 15 - 16
கதிர் பொன் முடி	ஒளி வீசும் முடி	"இலங்கையர் மன்னனாகி யெழில் பெற்ற விராவணனைக் கலங்கவார் கால்விரலாற் கதிர் பொன்முடி பத்தலற", தேவா. திருஞா. 3 : 60 : 8 : 1 - 2
கொற்ற நன்முடி	வெற்றிக்கு அறிகுறியான மணி முடி	"எற்றும் நும் அரசு, எய்துவையாம் என, கொற்ற நன்முடி கொண்டது, இக்கோது இலான்", கம்ப. 4036 : 5 - 8

சித்திர நளி முடி	சித்திர வேலைப்பாடு அமைந்த மணி முடி	"பொன் திணிந்த தோட்டு, அரும் பெறல் இலச்சினைப் போக்கி, நன்று சித்திர நளிர்முடி, கவித்தற்கு நல்லோய்!", கம்ப. 1385 : 3 - 6
திருமுடி	அழகிய முடி	"திருமுடி அண்ணல் தீப்படச் சீறி", பெருங். 1 : 47 : 108 "திருமுடி இந்திரர் இருநிலக் கிழவர் உரிமை மகளி ரோடுருபுடப் புனைந்த", பெருங். 2 : 6 : 147 - 148
இனமணி திருவில் வீசும் திருமுடி	பலவகை மணிகளின் ஒளி வீசித் திகழும் மணிமுடி	"எரிமிடைந் தனைய மாலை இனமணி திருவில் வீசும் திருமுடி யார மார்பிற் சேணிகன் என்ப நாமம்", சீவக. 3044 : 1 - 2
தேசிக முடி	ஒளி தவழும் மணி முடி	"தேசிக முடியுந் திருந்துபட்டுடையும் பாசமாக நின்று பன்மலர்க் கழுநீர்", சீவக. 2549 : 1 - 2
தூ முடி	தூய முடி	"துறந்த மன்னர் தம் தூமுடி தோள் வளை நிறங்கொள் ஆரம்பைம் பூணிழற் குண்டலம் பிறங்க வெங்கதிர் மின்னொடு பின்னி வீழ்ந்து உறங்குகின்றன", சீவக. 1605 : 1 - 3
நறுந்தார் புனை முடி	மாலை அணியப் பட்ட முடி	"தெங்கு நிகர் இல்ல தெழிற் கிடங் கணிந்தது பொங்கு மலர் நறுந்தார்ப் புனைமுடிப் பொற்கழல்", பெருங். 2 : 20 : 107 - 108
நார் முடி	சிலந்திப்பூச்சி தொடுத்த அசைகின்ற வலையைப் போல விளங்குகின்ற மணிகள் விளிம்பிலே கோத்த பசிய பொற்றகட்டால் செய்த கூட்டின் புறத்தே விளங்குகின்ற இழையணிந்து ஒளி சொரிந்து விளங்குமாறு சிறப்புமிக்க முத்துவடம் கோத்த நாரால் தொடுக்கப்பட்ட முடி (கழக உரை)	"இலங்குமணி மிடைந்த பசும்பொற் படலத் தவிரிழை தைஇ மின்னுமிழ் பிலங்கச் சீர் மிகு முத்தந்தை இய நார் முடிச் சேரனின்", பதிற். 39: 14-17; "சுடர்வீ வாகைக் கடி முதல் தடித்த தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்", பதிற். 40 : 15 - 16
அம்பொன் முடி	அழகிய பொன்முடி	"கனக விசயர் முதற்பல வேந்தர் அனைவரை வென்றவர் அம் பொன் முடிமிசைச், சிமைய மோங்கிய விமைய மால்வரை", மணி. 26 : 86 - 88
செம்பொன் நீள் முடி	செம்பொன்னால் ஆன நீண்ட முடி	"செம்பொன் நீள்முடித் தேர் மன்னர் மன்னற்குப், பைம் பொன் ஆழிதொட்டான் படை காட்டினான்", சீவக. 2167 : 1 - 2
அணிகிளர் நெடுமுடி	அழகு விளங்குகின்ற பெரிய முடி	"கணிகை மகளையும் காவல் செய்க என்றனன் அணிகிளர் நெடுமுடி அரசாள் வேந்து என", மணி. 22 : 214 - 215
அழன்மணி நெடுமுடி	சுடரும் மணிபதித்த நெடிய முடி	"அழன் மணி நெடுமுடி யரசருளரசன்", பெருங். 3 : 22 : 254
கிளர் மணி நெடுமுடி	ஒளி பொருந்திய மணிகளானாய பெரிய திரு முடி	"பொங்கு திரை யுலாவும் புன்னையங் கானல், கிளர் மணி நெடுமுடிக் கிள்ளி முன்னா இளவேனி விறுப்ப இறும் பூது சான்ற", மணி. 24 : 28 - 30
தொல் நெடும் முடி	பழமையான நீண்ட திருமுடி	"நின் நெடும் புதல்வன் தனை நேமியான் தொல் நெடும் முடி சூட்டுகின்றான் என்றார்", கம்ப. 1402 : 3 - 4
பூவியலும் முடி	வெற்றி மாலை அசையும் முடி	"பூவியலும் முடி பொன்றுவித்த பழிபோயற", தேவா. திருஞா. 3 : 10 : 2 : 1 - 2

பொன்மணி நெடுமுடி	பொன்னாலும் மணியாலும் செய்து நீண்டதாய் விளங்கிய முடி	"போர்த்த பொன் நெடு மணி முடித் தலையிடைப் புடைத்தான்", கம்ப. 5789 : 4
மகரிகை நெடுமுடி	மகர வடிவாக அமைந்த முடி	"வளர்ந்த காதலர் மகரிகை நெடுமுடி அரக்கனை வரக்காணார்", கம்ப. 5026 : 1 - 2
மணி முடி	நவமணிகளால் ஆன திருமுடி	"கும்பக் களிறு ஐந்தும், கோலொடு பாகனும் வம்பில் திகழும் மணிமுடி வண்ணனும்", திருமந். 1127 : 1 - 2; "பணிவினல் வினைப் பயனுண்டாயின் மணிமுடி மன்ன னணியுஞ் சேனையுள்", பெருங். 1: 40: 386 - 387; "தான்மீக் கூரிய வேம வெண்குடை மணிமுடிச் சென்னி மகத மன்னவன்", பெருங். 3 : 5 : 7 - 8; "ஆன்றபேர் அரசனும் இருப்ப ஐயனும் ஏன்றனன், மணிமுடி ஏந்த, ஏந்தல் நீ", கம்ப. 2262 : 1 - 2; "வாள் ஆற்று கண்ணாளை வஞ்சித்தான் மணிமுடி என் தாள் ஆற்றலால் இடித்தது தலைபத்தும் தகர்த்து", கம்ப. 5053 : 3 - 6; "சொல்லும் அத்தனை அளவையில் மணிமுடி துறந்தான்", கம்ப. 7263 : 1; "மணிமுடி, பாதம் சிலம்பு அணி மங்கை அணிபவள் அன்றி அருள் இல்லை ஆகும்", திருமந். 1377: 1 - 2; "உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை உம்பர் மணிமுடிக் கணியை", தேவா. திருநா. 6 : 84 : 3 : 1 - 2
அணிமணி முடி	அழகிய மணி முடி	"மணிமேகலை தான் காரணமாக வென் றணி மணி நீண் முடி யரசன் கூற", மணி. 25 : 95 - 96
எரியன மணிமுடி	ஒளி வீசும் மணி முடி	"எரியன மணிமுடி யிலங்கைக் கோன்தன கரியன தடக்கைகள் அடர்த்த காலினர்", தேவா. திருஞா. 3 : 19: 8 : 1 - 2
எல் அணை மணிமுடி	ஒளி பொருந்திய மணி மகுடம்	"கல் அணை மனத்தினை யுடைக் கைகேசியால் எல் அணை மணிமுடி துறந்த எம்பிரான்", கம்ப. 4376: 1 - 4
கனமணிமுடி	பொன்னாலும் மணி யாலும் இயற்றப் பட்ட முடிக்கலன்	"கனமணி முடியுங் கதிர்முத்தாரமும்", பெருங். 2 : 5 : 137 - 138
குருமணி முடி	அழகிய மணிமுடி	"திருமணிப் பூணினாற்குச் சினந்தலை மழுங்கலின்றிக் குருமணி முடியின் தேய்த்த தரன் தமர் கொள்க என்றான்", சீவக. 557 : 3 - 4
குலமணி முடி	மணிகள் பதிக்கப் பெற்ற மகுடம்	"குலங்களோடும் தம் குலமணி முடியொடும் குறைய அலங்கல் வாள்கொடு", கம்ப. 6570 : 1 - 2
குளிர்மணி முடி	ஒளிவீசும் மணிமுடி	"சாறயர்ந் திறைவற் பேணிச் சார்பறுத் துயர்தி யென்று கூறினன் கதிர்கள் பொங்கும் குளிர்மணி முடியினானே", சீவக. 1221 : 3 - 4
கேழ்கிளர் மணி முடி	ஒளிர்கின்ற மணிகள் பதித்த கோமுடி	"பாசிழை நன்கலம் பரிச முந்துறீ இக்கேழ்கிளர் மணி முடிக் கேகயத் தரசன்", பெருங். 3 : 16 : 8 - 9
கொழுமணி முடி	உயர்வான நவ மணிகள் பதிக்கப் பெற்ற மகுடம்	"கொழுமணி முடிகள் தோறும் கொண்ட நல் மணியின் கூட்டம்", கம்ப. 6927 : 1
சுடர் நெடு மணி முடி	ஒளிமிக்க நீண்ட மணிமுடி	"கடன் அறி காவலன் கழறினான் அரோ சுடர் நெடு மணி முடிச் சுக்கிரீவனே", கம்ப. 6420 : 3 - 4
சூளாமணி	தலையில் அணியும் மணி	"சூளாமணி உம்பர்க் காயவன் சூழ்பொழிற்றில்லை யன்னாய்க் காளா யொழிந்த தென்னாருயிர், ஆரமிழ்தே அணங்கே", திருக்கோ. 47 : 1 - 2; "சூட்டொடு கண்ணிச்

		சூளாமணி சிந்தித் திரியும் அன்றே", சீவக. 786 : 4; "சூளாமணியொடு துளங்குகடை துயல் வரும் புல்ல கம் பொருந்திய மெல்லெனோதி", பெருங். 2 : 3 : 71 - 72
சூளாமணி சேர் முடி	சூளாமணி பதித்த முடி	"சூளாமணி சேர் முடியான் தன்னைச் சுண்ண வெண்ணீ றணிந்த சோதி", தேவா. திருநா. 6 : 29 : 7 :1-2
சோதி மணி முடி	ஒளி விளங்கும் மணி முடி	"சோதி மணிமுடி சொல்லில் சொல் இறந்துந் நின்ற தொன்மை", திருவாச. குயிற் : 5 - 6
தாழ்கிலா மணி முடி	இரத்தினம் பதித்த திருமுடி	"புலவி மங்கையர் பூஞ்சிலம்பு அரற்று அடி போக்கி, தலைமை கண்ணினர்த் தாழ்கிலா மணிமுடித் தலங்கள்", கம்ப. 9656 : 1 - 2
திருக்கிளர் மணி முடி	அழகு விளங்கும் மணிமுடி	"ஓங்கிய சிறப்பி னொரு நூற்று நால்வரும் திருக்கிளர் மணிமுடித் தேவர் கோன் றன்முன் உருப்பசி முனிந்த வென்குலத் தொருத்தியும்", மணி. 24 : 12 - 14
திருமுடித் திலகம்	முடியில் திகழும் சூடாமணி	"திருமுடித் திலகம் கொண்டார்", சீவக. 787 : 4
நீண்மணி முடி	நீண்ட மணி முடி	"வேகயானை மீளிவேல் வெய்ய தானை யையகோன் மாக நீண்மணிம் முடி மாரி வண்கை மாசில்சீர்", சீவக. 141 : 1 - 2
மணி நீண் முடி	மணிகள் பதித்த நீண்ட முடி	"மணி நீண் முடியான் மலையை அரக்கன் தணியாது எடுத்தான் உடலந்நெரித்த", தேவா. திருஞா. 2 : 20 : 9 : 1 - 2
மாற்றருந் தடமணி முடி	ஒப்பு உரைக்க இய லாத பெரிய மணி கள் பதித்த மகுடம்	"மாற்றருந் தட மணி முடி இழந்த வாள் அரக்கன்" கம்ப. 7264 : 1
மின்னார் மணிமுடி	மின்னுதல் பொருந்திய மணிமுடி	"அரைச ருள்ளும் உரைசெல விளங்கிய, மின்னார் மணிமுடி மன்னனு மிழிந்து", பெருங். 5 : 9 : 17 - 18
விலையிலா மணி முடி	விலை மதிக்க முடியாத மாணிக்க முடி	"அலகையிலாக் குணக்கடலை அகன்ஞான வரம் பானை, விலையிலா மணிமுடியான் விண்வியப்பஇறைஞ்சினான்", சீவக. 3023 : 3 - 4
மாமுடி	சிறந்த பெரிய முடி	"யானைமிசையோன் மாமுடிக் குருசில்", பெருங். 1: 32: 26
அலங்கல் மாமுடி	மலர்மாலையோடு கூடிய மகுடம்	"அன்னவன் தனைக் கொணர்ந்து அலங்கல் மாமுடி தொல் நெறி முறைமையின் சூட்டிக் காண்டிரால்", கம்ப. 2260 : 3 - 4
பைம்பொன் ஆர மாமுடி	பசிய பொன்னாலும் முத்தாலும் ஆகிய பெரிய முடி	"பார மாமதில் அயோத்தியின் எய்தி நின்பைம் பொன் ஆர மாமுடிக் கோலமும் செவ்வியும் அழகும்", கம்ப. 10104 : 1 - 2
முகிழ் முடி	கூம்பிய முடிக் கலன்	"தொடையமை கோவை துளங்குமணிப் பன்னகை முகிழ்முடிச் 'சிறுநுதன் முதிரா இளமை", பெருங். 2: 6: 133 - 134
முடித்திரு மாமணி	முடி மணி; சூடாமணி; மணிபோலும் மயிர் முடியில் கிடந்த தெய்வவுத்தி	"விரி மா மணி மாலை விளங்கு முடித் திருமாமணி சிறிது திளைப்பினராய்", சீவக. 217 : 1 - 2
வயிரம் வேய்ந்த மணி நீண்முடி	வயிரம் பதித்த நீண்ட மணிமுடி	"வயிரம் வேய்ந்த மணி நீண்முடி வாலொளி வானவன், செயிரிற் றீர்ந்த செழுந்தாமரைக்கண்ணிடன் ஆடலும்", சீவக. 1156 : 1 - 2
வாண்முடி	ஒளி பொருந்திய மணி முடி	"மாலை வாண்முடி மன்னவன் மணவினை எழுநாள் சீல மில்லன சினக்களி றகற்றுகென்று அணிந்த", சீவக. 2392: 1 - 2; "தாணெடுங் குவளைக் கண்ணித் தளையவிழ் கோதை மாலை வாண்முடி வைர வில்லும் வார்குழை சுடரு மார்பிற்", சீவக. 2802 : 1 - 2

மௌலி	மகுடம்	"வன்திறல் அரக்கன் மௌலி மணிகளை வலியால் வாங்கி", கம்ப. 6926 : 3
அரிஉணும் அலங்கல் மௌலி	வண்டுகள் தேனை உண்கின்ற மாலை உடைய முடி	"அரி உணும் அலங்கல் மௌலி இழந்த என் மதலை யாக்கை, நரி உணக் கண்டேன் ஊனின் நாய் உணும் உணவு நன்றால்!", கம்ப. 9221 : 3 - 4
ஒண் பொன் தாரொடும் புனைந்த மௌலி	ஒளி பொருந்திய பொன்னால் ஆகிய மாலைகளினால் அழகு படுத்தப்பட்ட மகுடம்	"உளரொடும் பொருந்தித் தோன்றும் ஒளியவன் என்ன ஒண்பொன் தாரொடும் புனைந்த மௌலி தரையொடும் பொருந்தி", கம்ப. 7707 : 1 - 2
தார் கெழு மௌலி	மாலைகள் நிறைந்த மகுடம்	"வார் கழல் காலினாலே கல்ல வல்லவனை முன்னா, தார் கெழு மௌலி பத்தின் தனி மணி வலிதின் தந்த, வீரதை விடைவலோற்கும் முடியுமோ?", கம்ப. 6939 : 2 - 4
பொன் ஆரும் மணி மௌலி	பொன் முடி	"பொன் ஆரும் மணி மௌலிப்புரவலன் பால்", திருத். 1292 : 7 - 8
பொன்னின் மௌலி	பொன்னாலான முடி	"பொன்னின் மௌலியன் வீடணன், தமரொடும் போனான்", கம்ப. 8529 : 2
மணி மௌலி	மணி முடி	"சோதி சூழும் மணி மௌலிச் சோழர் பொன்னித் திரு நாட்டு", திருத். 1022 : 5 - 6
வலம்புரி	வலம்புரிச் சங்கு வடிவாகச் செய்த தலை அணி	"தெய்வவுத்தியோடு வலம்புரி வயின் வைத்து", திருமுருகு. 23; "தெய்வவுத்தியோடு செழுநீர் வலம்புரி, தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி", சிலப். 6 : 106 - 107
தலைக்கணி மையீர் ஓதிக்கு மாண்புற அணிதல்	"சீதேவியாரென்னும் பணியுடனே வலம்புரிச் சங்கும் பூரப்பாளையும் தென்பல்லி, வடபல்லியென்னும் இவையும் தம்மில் தொடர்ந்து ஒன்றான தலைக் கோலத்தைக் கரிய பெரிய ஓதிக்கு அழகுறும்படி அணிந்து" (அடியார்க்குநல்லார்). தொடர்ந்த தலைக் கணி - இவை முதலிய தொடர்ந்த தலைக்கணிகளை (அரும்பதம்)	"தெய்வவுத்தியோடு செழுநீர் வலம்புரி தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி மையீர் ஓதிக்கு மாண்புற அணிந்து", சிலப். 6 : 106 - 108
பொன்னணி கொள்ளல்	சிகழிகை பொன்னாலாகிய அணிகலனால் அழகு செய்யப்படல்	"மான்தோம் கூறுமம்மர் நோக்கினர், பொன்னணி கொண்ட பூந்தண் சிகழிகைக் கன்னி மகளிர்", பெருங். 2 : 2 : 223 - 225
முடியணி திருத்தல்	தலைக் கோலங்களைத் திருத்துதல்	"வழிமொழிக் கட்டளை வழிவழி அளைஇ முடியணி திருத்தியு முலைமுதல் வருடியும்", பெருங். 2 : 16 : 70 - 71
அவிரிழை சுடருதல்	அணிகலன்கள் ஒளிவிடுதல்	"அவிரிழை சுடரமுல்லை அலங்கலங் கூந்தல் சோரத் தவிர் வெய்ய காமம் தாங்கித் தடமுலைக் கால்கள் சாய", சீவக. 2542 : 1 - 2
பொன் செய் புனையிழை கதுப்பிற் கட்டுதல்	பொன்னாற் செய்த அணிந்து கொள்ளுதற்குரிய தலையணிகளைச் சேர்த்துக் கட்டுதல்	"வண்டு படத்ததைந்த கொடியிணர் இடையிடுபு பொன் செய்புனையிழை கட்டிய மகளிர், கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றை", குறுந். 1 : 1 - 3

கதுப்பு வயங்கிழை கரத்தல்	கூந்தலில் அணிந்து இருந்த அணிகளை மறைத்தல்	"வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பின், ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ", பதிற். 14 : 14 - 15
பிறழ் கலம் திருத்தல்	பிறழ்ந்து கிடக்கும் அணிகலனைத் திருத்துதல்	"அஞ்சொற் பேதாயதுவிது வாமெனப் பின்னிருங் கூந்தலொடு பிறழ் கலந்திருத்திச்", பெருங். 1 : 46 : 197 - 198
உருள் கலன் நகையொடு துயல்வரல்	அணிகள் ஒளி வீசுதல்	"பொலம் பிறையுட் தாழ்ந்த புனைவினை உருள்கலன் நலம்பெறு கமழ் சென்னி நகையொடு துயல்வர", கலித். 81 : 3 - 4
எரி அகைந்தன்ன தாமரை சூடுதல்	பொன்னால் செய்யப் பட்ட தாமரைப் பூவினைச் சூடுதல்	"எரிஅகைந் தன்ன ஏடு இல் தாமரை சுரிஇரும் பித்தை பொலியச் சூட்டி", பொருநர். 159 - 160
பூண் நிலவு முத்து அணிதல்	முத்தணி அணிதல்	"பூண் நிலவு முத்து அணிந்த பூங்குழலார்", திருத். 2290 : 5 - 6
பூண்கொண்டு துன்னரி மாலை யாகச் சூடுதல்	கழுத்தணிகலனைக் கழுத்தில் அணிவது போல் மயங்கிச் சிரசில் சூடுதல்	"பொன்னரி மாலையைப் பூண்பார் அப்பூண் கொண்டு துன்னரி மாலையாச் சூடுவார்", 11ஆம் திரு. 300 : 72
பூண் திகழ்தல்	பூண் அணிதல்	"பூண் திகழ் சிறு புன் குஞ்சி", திருத். 669 : 3
பூண் நீவுதல்	தலை அணிகலன்களை நீவித் திருத்துதல்	"அளகமும் பூணும் நீவி", பெருங். 1 : 33 : 163
ஏடு உண்ட பசும் பொன் பூ சுருளில் தோய்தல்	இதழ் பொருந்திய பசும் பொன்னால் இயன்ற பூவினைச் சுருள் என்ற முடி வகையில் அணிதல்	"சுருளின் தோய்ந்த, ஏடு உண்ட பசும் பொன் பூவும், திலதமும்", கம்ப. 8822: 1 - 2
பொன்னடர் பூம் புனை திருந்துதல்	பொன் தகட்டாற் செய்த பூவை அணிதல்	"பொன்னடர்ப் பூம்புனை திருத்துவோரும்", பரி. 12: 12
பைம்பூ மலைதல்	பசிய பொன்னாற் செய்த தாமரைப் பூவைச் சூடுதல்	"பாணர் பைம்பூ மலைய", பதிற். 40 : 24
தாமரை மலைதல்	பொன் தாமரை அணிதல்	"பாணர் தாமரை மலையவும்", புறம். 12 : 1; "நும்முள் தலைவன் தாமரை மலைய", மலை. 568 - 569
சென்னி பொலிய வாடாத் தாமரை தைஇ	வாடாத தாமரையாகிய பொற்றாமரையைச் சென்னி அழகுற அணிந்திருத்தல்	"ஒன்னார் யானை ஓடைப் பொன் கொண்டு, பாணர் சென்னி பொலியத் தைஇ, வாடாத் தாமரை சூட்டிய", புறம். 126 : 1 - 3
பொலந் தாமரைப் பூச்சூடுதல்	பொன்னால் செய்யப் பட்ட தாமரைப் பூவைச் சூடுதல்	"பொலந் தாமரைப் பூச்சூட்டியும்", மது. 103
பைம் பொற்றா மரை சூடுதல்	பசிய பொன்னால் செய்யப்பெற்ற தாமரை மலரைச் சூடுதல்	"பைம் பொற்றாமரைப் பாணர்ச் சூட்டி", பதிற். 48 : 1 - 2
வண்டு இமிரா அழல் அவிர் தாமரை நீடிரும் பித்தை பொலியச் சூட்டுதல்	வண்டுகள் ஒலியாத நெருப்பிடத்தே கிடந்து விளங்கின பொற்றாமரையைக் கரிய மயிரில் அழகு பெறச் சூட்டுதல்	"மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும் ஆடுவண்டு இமிரா அழலவிர் தாமரை, நீடு இரும் பித்தை பொலியச் சூட்டி", பெரும். 480 - 482

பொலந்தோட்டுப் பைந் தும்பை மிசை பனைப்போழ் செருகுதல்	பொன்னாலாகிய தும்பையின் மீது பனந்தோடு அணிதல்	"பொலந்தோட்டுப் பைந்தும்பை மிசையலங் குழைய பனைப்போழ்ச் செரீஇச்", புறம். 22: 20 - 21
தொடுத்த பொலம் பூந்தும்பை சூட்டுதல்	பொன்னாற் செய்த தும்பைப் பூவைச் சூட்டுதல்	"புரையோர்க்குத் தொடுத்த பொலம் பூந்தும்பை நீர் யாரென்னாது முறை கருதுபு சூட்டி", மது. 737 - 738
பொன் வாகை சேர்த்தல்	பொன்னாற் செய்யப் பட்ட வாகை மலரைத் தலையில் வைத்தல்	"தெய்வக் கல்லுந் தன்திரு முடிமிசைச் செய்பொன் வாகையுஞ் சேர்த்திய சேரன்", மணி. 26 : 89 - 90
மணியிரு தலையும் சேர்த்திவான் பொனின் இயன்ற நாணால் அணி யிருங்குஞ்சி கட்டுதல்	இருமுனைகளிலும் மணியைக் கோத்துச் சிறந்த பொன்னால் செய்யப்பட்ட கயிற்றி னால் அழகிய தலை முடியைச் சேர்த்துக் கட்டுதல்	"மணியிரு தலையும் சேர்த்தி வான் பொனின் இயன்ற நாணால் அணியிருங் குஞ்சியேறக் கட்டியிட் டலங்கல் சூழ்ந்து", சீவக. 977 : 1 - 2
காசு உடை நாண் கரும் சுருளில் கட்டுதல்	பொற்காசு கோத்த மயிர்க் கயிற்றைக் கரிய சுருண்ட மயிர் முடியில் அணிதல்	"பாசிலை மென் கொடியின் வடம் பயில் நறுவிலி புனைந்து, காசு உடை நாண் அதற்கு அயலே கரும் சுருளின் புறம் கட்டி", திருத். 945 : 3 - 4
ஈகைக் கண்ணி இலங்கத் தைஇ	பொன்னால் செய்த கண்ணியை அணிதல்	"பொலஞ் செய் பல்காசு அணிந்த அல்குல், ஈகைக் கண்ணி இலங்கத் தைஇ", புறம். 353 : 2 - 3
கோதை சூட்டுதல்	முடியில் கோதையை அணிவித்தல்	"நலநுதற்பட்டம் கட்டி நகை முடிக் கோதை சூட்டி", சீவக. 673 : 2
நடுச்சிகை முத்துத் தாமம் வாணுதல் நாலுதல்	கூந்தலின் நடுவில் இருந்து தலைப் பாளை நெற்றியில் தொங்கிக் கொண்டு இருத்தல்	"நடுச்சிகை முத்துத் தாமம் வாணுதல் நான்று நக்க", சீவக. 2731 : 1
பொலநறுந் தெரியல் பொலியச் சூடுதல்	பொன்னால் ஆன மாலை பொலியுமாறு சூடுதல்	"அழல் புரிந்த அடர் தாமரை ஐது அடர்ந்த நூற் பெய்து புனைவினைப் பொலிந்த பொலன்நறுந் தெரியல் பாறுமயிர் இருந்தலை பொலியச் சூடி, பாண் முற்றுக நின்நாள் மகிழ் இருக்கை", புறம். 29 : 1 - 5
பொன்போதொடு மல்லிகை கத்திகை அடைச்சுதல்	பொன் பூவுடன் மல்லிகை மாலை அணிதல்	"வளர் பிறையன்ன மல்லிகைக் கத்திகை கிளர் பொன் போதொடு களையறப் பிணித்த வாக்கமை சிகை முதற்பாற்பட்ட அடைச்சி", பெருங். 2: 4: 142-144
மாலை அணிதல்	பொன் மாலை	"பாடினி மாலை யணிய, வாடாத் தாமரை சூட்டு வனினக்கே", புறம். 319 : 14 - 15
ஒரு காழ் மாலை மலைதல்	ஒற்றைவட மாலை சூடுதல்	"தன் தலை மணிமருள் மாலை சூட்டி, அவன் தலை ஒரு காழ் மாலை தான் மலைந்தனனே", புறம். 291 : 6 - 9
செம்பொன் மாலை துயல் வருதல்	செம் பொன்னால் ஆன மாலை அசைதல்	"செங்கிடைச் சிகழிகை செம்பொன் மாலையும் தொங்கலும் துயல்வர சுழியம் சூடியே", கம்ப. 1210 : 3 - 4
நூலின் வலவா நுணங்கு அரில் மாலை முத்த மொடு அணிதல்	நூலாற் கட்டாத நுண்மையும் பிணக் கத்தையும் உடைய பொன்னரி மாலையை முத்து மாலையுடன் அணிதல்	"சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி, நூலின் வலவா நுணங்கரின் மாலை வாலொளி முத்தமொடு பாடினியணிய", பொருநர். 160 - 162

பொன்னணி மாலை பொலிதல்	பொன் மாலை அணிதல்	"பொன்னணி மாலை பொலிந்த பூமுடி", பெருங். 2 : 3 : 73
பொன்னரி மாலைச் சென்னி சேர்த்தல்	பொன்னரி மாலையைத் தலையிலே அணிவித்தல்	"பொன்னரி மாலையைப் புனல் கொண்டீர்ப்ப, அத் துறை மருங்கினயற்றுறை யாடும் மைத்துன மன்னன் கைப்படுத்து வந்துதன், சென்னி சேர்த்தியவன், முன்னர் தோன்ற", பெருங். 1 : 40 : 150 - 153
பொன்னரி மாலை அசைதல்	பொன் மாலை அசைதல்	"பொன்னரி மாலை புனல் பொதிந்தசைதர'', பெருங். 1 : 41 : 90
பொன்னரிமாலை தலைக் கணிதல்	பொன்னரி மாலையைத் தலையில் அணிதல்	"பொன்னரி மாலை தலைக் கணிந்து பூண் கொண்டு, மன்னுங் கழுத்தை மகிழ்வித்தல்", 11ஆம் திரு. 300 : 140
பொன் அரி மாலை தாழ்தல்	பொன்னால் செய்த மாலை தாழ்ந்து கிடத்தல்	"பொன் அரி மாலை தாழப் போதணி கூந்தல் ஏந்திப் பன்அரு மாலையாற்குப் பட்டதையெவன் கொலென்னாப்", சீவக. 1085 : 1 - 2; "இன்னரிச் சிலம்போ டேங்கிக் கிண்கிணி யிகலி யார்ப்பப் பொன்னரி மாலை தாழப் பூஞ்சிகையவிழ்ந்து சோர", சீவக. 1985 : 1 - 2
பொன்னரி மாலை கொண்டு புரிகுழல் புனையலுறுதல்	பொன்னரி மாலையைக் கொண்டு கூந்தலை அழகு செய்தல்	"பொன் அரிமாலை கொண்டு புரிகுழல் புனையலுற்றாள்", கம்ப. 977 : 7 - 8
கதுப்பகம் பொலிய பொன்னின் தொடை அமை மாலை மலைதல்	கூந்தல் பொலியுமாறு பொன்னின் தொடை அமை மாலையைச் சூடுதல்	"புனைஇருள் கதுப்பகம் பொலிய, பொன்னின் தொடை அமை மாலை விறலியர் மலைய'', பெரும். 485 - 486
பைம்பொனின் மாலை வேய்தல்	பசிய பொன்னாலான மாலையைச் சூடுதல்	"பைம் பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடி ஒப்பாரை", திருத். 3126 : 3 - 4
தலை மணி மருள் மாலை சூட்டுதல்	தான் தலையில் அணிந்திருந்த பலவகை மணிகள் விரவிய பல வடமுள்ள மாலையைச் சூட்டுதல்	"கொன்னும் சாதல் வெய்யோற்குத் தன் தலை மணி மருள் மாலை சூட்டி அவன் தலை ஒரு காழ் மாலை தான் மலைந்தனனே", புறம். 291 : 6 - 8
மணிமருள் மாலை சூழ் நூலாதல்	சிறுவர் தலையணி: நீலத்தினது அடர்ந்த இதழ் நாணும் படியாக நீல மணியாற் பண்ணின கண்டார் மருளும் மாலையை, கண்ணியைச் சூழ அணிவித்திருத்தல்; பூமாலையைச் சுற்றி அணிவித்த நீலமணி மாலை	"சுரும்பார் கண்ணிக்குச் சூழ் நூலாக அரும்பவிழ் நீலத் தாயிதழ் நாணச், சுரும் பாற்றுப்படுத்த மணி மருள் மாலை", கலித். 85 : 14 - 16
பூஞ்சிகையில் முத்த மாலை திவளுதல்	முத்த மாலை அழகாக அசைந்து ஆடுதல்	"கலி வளர் களிறு கைந்நீர் சொரிவ போல் முத்த மாலை பொலிவொடு திவண்டு பொங்கிப் பூஞ்சிகை அலமந்தாடக்", சீவக. 968 : 1 - 2
வாடாமாலை அணிதல்	பொன்னரி மாலையை அணிதல்	"வாடா மாலை பாடினி யணியப் பாணன் சென்னிக் கேணி பூவா எரி மருள் தாமரைப் பெருமலர் தயங்க", புறம். 364 : 1 - 3
முக்காழ் சூடுதல்	கரிய கடலின் முத்தும் அதனுடனே பல மணிகள் பிறவும்	"சூடின, இருங்கடல் முத்தமும் பல்மணி பிறவும் ஆங்கு, ஒருங்குடன் கோத்த உருள்அமை முக்காழ் மேல்'', கலித். 85 : 12 - 13

	சேர்த்துக் கோத்த உருட்சி அமைந்த மூன்று வடங்கள் கொண்ட அணியை அணிந்து இருத்தல்	
முக்காழ் மின்னுதல்	புதல்வர் அணி; தலையணி; மூன்று வடங்களையுடைய முத்துவடம் ஒளி வீசுதல்	"கயந்தலை மின்னுங் கதிர்விடு முக்காழ்ப் பயந்த வெங் கண்ணா யாங்காண நல்கி", கலித். 80 : 2 - 3
மயிர்ப்புறம் சுற்றிய முக்காழ் பொலம் பிறைச் சென்னி நலம் பெறத் தாழ்தல்	முக்காழ் ஆகிய மூன்று வடங்கள் அழகுபெறத் தொங்குதல்	"பொன்னாண் கோத்த நன்மணிக் கோவை மயிர்ப் புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ் பொலம்பிறைச் சென்னி நலம் பெறத் தாழச்", மணி. 3 : 133 - 136
கைபுனை முக்காழ் கயந்தலை தாழ்தல்	சென்னியில் கையால் புனைந்த மூன்று வடத்தை அணிந்து இருத்தல்	"மைபடு சென்னி மழகளிற்றோடை போற் கைபுனை முக்காழ் கயந்தலைத் தாழ", கலித். 86 : 1 - 2
சிகழிகை அணிதல்	தலைமுடியில் அணிகள் அணிந்து கொள்ளுதல்	"திலகம் முன் இடுவாரும், சிகழிகை அணிவாரும், இலவு இதழ் பொலிகோலம் எழில் பெற இடுவாரும்'', கம்ப. 1188 : 3 - 4
பொலம்புனை மகரவாய் சிகழிகையை நுங்குதல்	மகரவாயுடனமைந்த பொன்னாற் செய்த தலையணி கூந்தலைக் கவ்வியதைப் போன்று காணப்படல்	"பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை", கலித். 54 : 6
சுழியம் சூடுதல்	முடி அணி அணிதல்	"செங்கிடைச் சிகழிகை செம்பொன் மாலையும், தொங்கலும் துயல்வர, சுழியம் சூடியே", கம்ப. 1210: 3 - 4
முத்துத் தாமம் உறைதல்	முத்துச் சரங்கள் அணிதல்	"முத்துத் தாமம் உறைகின்ற உருவக்கோலச் சிகழிகை மகளிர்", சீவக. 2653 : 1 - 2
தொய்யகம் தாழ்தல்	தொய்யகத்தைத் தாழ்வாக அணிந்து இருத்தல்	"தொய்யகந் தாழ்ந்த கதுப்புப் போல் துவர்மணல், வையை வார் அவிரற விடைபோழும் பொழுதினான்'', கலித். 28 : 6 - 7
சூளாமணியொடு துளங்குகடை துயல்வரும் புல்ல கம் பொருந்துதல்	புல்லகம் என்ற தலையணி அணிதல்	"சூளாமணியொடு துளங்குகடை துயல்வரும் புல்லகம் பொருந்திய மெல்லென் ஓதி", பெருங். 2 : 3 : 71 - 72
பொன் மகுடம் பொறுத்தல்	பொன்னாலாகிய மணி முடியைத் தரித்தல்	"புதல்வன் பொன் மகுடம் பொறுத்தலால், முதல்வன், பேர் உவகைக்கு முந்துவான்", கம்ப. 4115 : 1 - 2
மாமணி மகுடம் சூட்டுதல்	மாணிக்கம் இழைத்த உயர்ந்த மகுடம் அணிவித்தல்	"வரதனும் இளைஞற்கு ஆங்கண் மாமணி மகுடம் சூட்டி", கம்ப. 10331 : 2
மணியிரு தலை யும் சேர்த்தல்	தலையில் மணி அணிதல்	"மணியிரு தலையும் சேர்த்தி", கலித். 977 : 1
சூளாமணி சேர் முடி கவித்தல்	ஒளி வீசும் சூளாமணி பதித்த மகுடத்தைச் சூட்டுதல்	"விற்பகரும், சூளா மணி சேர் முடிகவித்துச் சுட்டி சேர்'', 11ஆம் திரு. 300 : 16 - 17
செஞ்சுடர் மணி முடி திகழுதல்	செவ்விய ஒளி மணி யையுடைய மணிமுடி விளங்குதல்	"வேண்டிய மருங்கிற் காண்டக நெருங்கிச், செஞ்சுடர் மணிமுடி திகழுஞ் சென்னிப்", பெருங். 3: 3: 101 - 102

மணி முடி மிடைதல்	கிரீடம் அணிந்து இருத்தல்	"மாசறுமணி முடி மிடைந்த மாலையன்", சீவக. 953: 3
வான் கதிர்த் திரு மணி சென்னியில் விளங்குதல்	வாலிய ஒளியை உடைய அழகிய நீல மணியைத் தலையில் அணிதல்	"வான் கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச் செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்", புறம். 150: 6 - 7
முடியொடு மணி விளங்குதல்	ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய முடிக்குச் செய்யும் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற கீரிடத் தோடு கூடி விளங்கிய ஒன்றுக்கொன்று மாறு பாடு மிகும் அழகினை உடைய மணி விளங்குதல்	"ஐ வேறு உருவின் செய்வினை முற்றிய, முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி", திருமுருகு. 83 - 84
முடிமிசை அணிந்த முத்தொடு பன் மணி சுடர் விடுதல்	முடிமீது அணியப்பட்ட முத்தும் மணியும் ஒளி வீசுதல்	"கருவி யமைத்த காலிற் செலவிற், புரவியின் வழுக்கிப் பொறியறு பாவையின், முடிமிசை அணிந்த முத்தொடு பன்மணி, விடு சுடர் விசும்பின் மீனெனச் சிதறச்", பெருங். 2 : 18 : 95 - 96
முடியணிதல்	முடிகலன் அணிதல்	"முடிவுறழ் மொய்ம்பினர் முடியணி சென்னியர்", பெருங். 2 : 6 : 127
முடியணி அணிதல்	அரசன் முடிக்கலன் அணிதல்	"இடியுறழ் முரசின் இறைமகன் அணியும் முடியணி ஒழிய முற்றணிப் பெருங்கலம்", பெருங். 2 : 2 : 158 - 159
முடி தயங்குதல்	முடியணிந்திருத்தல்	"முடி தயங் கமரர் முறைமுறை யிரப்பத்", மணி. 30 : 8
அருமுடி அணிதல்	அரிய மணி முடி புனைதல்	"அருமுடி அணிந்த கொற்றத்து அவந்தியன் முரசம் ஆர்ப்ப", சீவக. 613 : 3
முகைநகை முத்தொடு தகை முடி தயங்குதல்	அரும்பனைய ஒளி முத்து மாலையோடு அழகுமிக்க முடிக் கலன் சுடருதல்	"முகை நகை முத்தொடு தகைமுடி தயங்க", பெருங். 1 : 47 : 106
நெடு முடி சூட்டுதல்	சிறந்த கிரீடத்தைச் சூட்டுதல்	"ஆதி நாயகன் ஆக்கிய நூல் முறை, நீதியானை நெடு முடி சூட்டுவாய்", கம்ப. 9953 : 3 - 4
மணி முடி சூடுதல்	மணிமுடி அணிதல்	"சூடின மணி முடித், துகள் இல் விஞ்சையர்", கம்ப. 4156 : 1 - 2
முடியணி ஆர முத்து நிரை துளங்குதல்	முடிக்கலனிடத்து உள்ள முத்து மாலைகளின் நிரல் அசைதல்	"முடியணி·யாரமுத்து நிரை துளங்கத், தொடியணி திண்டோடுணிந்து நிலஞ்சேரப்", பெருங். 3: 27: 172 - 173
முத்திலங்கு முடி துளங்குதல்	முத்திலங்குகின்ற தலை முடி விளங்குதல்	"கயிலை மலை அது தன்னைக் கருதா தோடி முத்திலங்கு துளங்க வளைக ளெற்றி", தேவா. திருநா. 6: 79: 10: 2-3
வாளார் முடிவைர விற்றிளைத்தல்	சிறந்து விளங்கும் முடியில் அணிந்த வைரக் கற்கள் ஒளி வீசுதல்	"வாளார் முடிவைர விற்றிளைத்து வண்டரற்றுந் தாளார ஏத்திப் போய்த் தன் கோயில் புக்கானே", சீவக. 3037 : 3 - 4
மவுலி சூடுதல்	திருமுடி சூடுதல்	"நாளை நீ மவுலி சூட நன்மை சால் பெருமை நல்நாள்", கம்ப. 10317 : 1 - 2; "இறையோன் தன் இளை யோன், அவ் ஏந்தலை, துறையோர் நூல்முறை மௌலி சூட்டினான்", கம்ப. 4119 : 3 - 4

மௌலி புனைதல்	முடி அணிந்திருத்தல்	"பொறிப் புண்டரீகம் போலும் ஒருவனால், **புனைந்த மௌலி**, பறிப்புண்டும், வந்திலாதான் இனிப் பொரும் பான்மை உண்டோ?", கம்ப. 7009 : 3 - 4
பொன்மா மௌலி புனைதல்	பொன்னால் ஆன சிறந்த மணி முடியைத் தரித்தல்	"**பொன்மா மௌலி புனைந்து** பொய் இலான்", கம்ப. 4120 : 1 - 2
மௌலி வேய்தல்	முடி சூட்டுதல்	"வான் அந்நகர் புக்கு அன்றோ **வேய்வான் மௌலியும்**? மெய் அன்றோ?", கம்ப. 5384 : 3 - 4
வலம்புரி வைத்தல்	வலம்புரி வடிவாகச் செய்த தலைக் கோலத்தை வைத்தல்	"தெய்வவுத்தியொடு **வலம்புரி வயின் வைத்துத்**", திருமுருகு. 23

உ. துணி

ஆடையின் தோற்றத்திற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் இன்று "மானம் காப்பது" முதன்மை காரணமாக அமைகிறது. இந்த 'மானம் காப்பது' என்பதிலும் உடலின் எந்தப் பகுதியை எல்லாம் மறைப்பது என்பதிலும் உலக மக்கள் அனைவருக்கும் தொன்று தொட்டு இன்று வரை இருந்து வரும் கருத்து மாறுபாடுகள் போன்றே நமக்கும் பழந்தமிழ் மக்களுக்கும் வேறுபாடு இருப்பதைக் காண்கிறோம். இன்று உடலின் மேற்பகுதி, கீழ்பகுதி மூடுதல் என்பது மானம் காத்தலுக்குத் தேவை என்ற நிலையிருக்க அன்று இடையாடையே மூக்கியமானதாகக் கருதப்பட்டுள்ளது. மேலாடைக்கு அன்று முக்கியத்துவம் இல்லை. மேலாடை அணிந்து கொள்ளல் என்பதை ஒரு ஒப்பனை என்ற நிலையிலேயே கொண்டனர். எனினும் அவர்களின் ஆடைத்தொழில் அறிவு மிகவும் மேன்மை பொருந்திய ஒன்றாக இருந்ததை வரலாறு காட்டுகிறது. தலையில் துணி கட்டுதல் என்பது இன்று சில பொழுதுகளில் ஒப்பனையாகவும் கொள்ளும் தன்மை காணப்படுகிறது. இதனைப் போன்றே அன்றும் சிலர் சில பொழுதுகளில் துணியைத் தலையில் கட்டியிருத்தமையைக் காணுதல் இயலுகிறது.

துகில் முடி	தலைப்பாகை	"பைந்துகில் முடி அணிந்தவர்", சீவக. 7 : 2
நேத்திரம் அணிதல்	முடியைத் துணியால் கட்டுதல்	"அந்தரமின்றி தன்னெறி பங்கியை அழகிய **நேத்திரத் தால் அணிந்து**", பெரியாழ் 3 : 4 : 8
அறுவை தோய்தல்	துகில் கட்டுதல்	"**அறுவை தோயும்** ஒரு பெருங்குடுமி", அகம். 195: 12
துகில் முடித்தல்	துகில் கட்டுதல்	"**துகில் முடித்துப்** போர்த்த தூங்கல் ஓங்கு நடைப் பெருமுதாளர்", முல்லை. 53 - 54; "ஆவுதி மண்ணி அவிர் **துகின் முடித்து**", மது. 194
பைந்துகில் முடி அணிதல்	துகில் கட்டுதல்	"**பைந்துகின் முடி அணிந்தவர்** பின் உலவு", சீவக. 1558 : 3 - 4
வம்பிற் கட்டுதல்	மயிரைத் துணியால் கட்டுதல்	"பத்திரக் கடிப்பு மின்னப் பங்கியை **வம்பிற் கட்டி**", சீவக. 2277 : 1

3.1.2. கூந்தல் : ஒப்பனைச் செய்முறைகள்

"நீண்டு, குழன்று, நெய்த்து, இருண்டு, நெறிந்து, செறிந்து, நெடு நீலம் பூண்டு, புரிந்து, சரிந்து, கடை சுருண்டு, புகையும் நறும் பூவும் வேண்டும் அல்ல என தெய்வ வெறியே கமழும் நறுங்குஞ்சி'' என, கம்பன் (5284) கூந்தலின் சிறப்பைக் காட்டுவான். இத்தன்மைகள் அன்றைய தமிழர் விரும்பிய கூந்தலின் சிறப்புகள் எவை என்பதைச் சான்றுகளாக நின்று காட்டுவன. இத்தகைய அழகும் சிறப்புமுடையதாகக் கூந்தலை நம் முன்னோர் பேணிய முறைகளையும், முடித்து ஒப்பனை செய்து கொண்ட முறைகளையும் சொற்கள் சிறப்பாக எடுத்தியம்புகின்றன. கூந்தலை விரித்து, வகுத்து, எண்ணெய் பூசி, மணப் பொருட்கள் பூசி, பின்னர் முடித்த விதங்களையெல்லாம் அங்குக் காண்கிறோம்.

ஓதி விரித்தல்	கூந்தலை முடிக்குமுன் விரித்தல்	"மைந்நூற்றனைய மாவீழோதி வகுத்தும் தொகுத்தும் விரித்தும்", சீவக. 2437 : 1
எண்ணெய் நீவுதல்	எண்ணெய் தடவுதல்	"கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச் சாந்துஉளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி, அமரா முகத்தளாகித், தமரோ ரன்னள் வைகறை யானே", குறுந். 312 : 5 - 8; "எண்ணெய் நீவிய நலம் பெறு சென்னி", குறிஞ். 107; ''பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி, ஒரு மகன் அல்லது இல்லோள்", புறம். 279 : 9
எண்ணெயும் நானமும் மூழ்குதல்	கூந்தலில் எண்ணெய், புனுகு ஆகியவற்றைப் பூசுதல்	"எண்ணெயும் நானமும் இவை மூழ்கி இருடிருக் கிட்டொண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறைகழித்தன போல் கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள், வண்ணப்போது அருச்சித்து மகிழ்வு ஆனாத் தகையவே", சீவக. 164
நெய் உரைத்தல்	எண்ணெய் பூசுதல்	"ஊறின நல் நீர் உரைத்த நெய்வாசம்", சிலப். 6 : 78; "உடன் உறை காலத்து உரைத்த நெய்வாசம்'' சிலப்.13:83
நெய் நீவுதல்	குடுமியிலும் கூந்தலிலும் நறிய நெய்யை ஏற்றிச் சிறப்புகள் செய்தல்	''இடுமணன் முற்றத் தின்னியங் கறங்கக், குடுமிக் கூந்தலுள் நறுநெய்நீவி, நல்லவை நாப்பட் பல்சிறப்பு அயர்ந்து", பெருங். 4 : 2 : 30 - 32
நெய்யிடை நீவுதல்	கூந்தலில் நெய் பூசுதல்	"நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன ஐவகை பாராட்டி னாய்மற்றெங் கூந்தற், செய்வினை பாராட்டி னையோ ஐய", கலித். 22 : 12 - 14
நெய்பருகுதல்	எண்ணெய் தடவுதல்	"நெய்பருகி நீண்ட இருள்கற்றை போலும், குழற் கற்றை கண்டு நிறை கலங்குவார்", சீவக. 682 . 1
நெய் பொதிதல்	கூந்தலில் நெய் பூசுதல்	"நெடுமலை அத்தம் சென்றார் என்று நெய் பொதிந்த பித்தை", சீவக. 428 : 3
வெண்ணெய் உரைஇ விரித்தல்	கூந்தலில் எண்ணெய் தேய்த்தல்	"புல்லினத்தாயர் மகன்சூடி வந்ததோர், முல்லை ஒருகாழும் கண்ணியும் மெல்லியால், கூந்தலுட் பெய்து முடித்தேன்மன் தோழி யாய் வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே, அன்னையும் அத்தனும் இல்லரா யாய்நாண அன்னை முன் வீழ்ந்தன்று அப்பூ", கலித். 115 : 4 - 9
உகிர் நுதி முறையில் போக்குதல்	நகநுனியால் கூந்தலின் சிக்கெடுத்தல்	"உகிர் நுதி முறையில் போக்கி, ஒளிர் நறும் சிகழி ஆர்த்தான்", திருத். 162 : 7 - 8

ஈரம் புலரவிரல் உளர்ப்பு அவிழ்த்தல்	ஈரம் புலரும்படி கூந்தலை விரலால் கலைத்துப் பிணிப்பு எடுத்தல்	"ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா, காழகிலம் புகை கொளீஇ", குறிஞ். 109 - 110
குறந்து	சிக்கெடுத்தல்	"கொந்தக் குழலைக் குறந்து," பெரியாழ். 2 : 5: 8 : 3
வேணியை விரல் முறை சுகிர்ந்து விடுதல்	கூந்தலை விரல் களால் ஒழுங்காகச் சிக்கெடுத்து பிரித்துச் சீர் செய்தல்	"வேணியை, அரம்பை, மெல்ல, விரல் முறை சுகிர்ந்து விட்டாள்", கம்ப. 9994 : 4
சிகைத்தொழில் சிக்கம்	மயிர்வினைக் கருவி யாகிய சீப்பு	"புகைத்துளை யகலுஞ் சிகைத் தொழிற் சிக்கமும்," பெருங். 1 : 57 : 36
மங்கல மணிச் சீப்பு	யானையின் வலது பக்கத்துத் தந்தத்தை அறுத்துப்பொன்னைப் பதித்து மணியழுத்தி மணம் தங்கச் செய்த சீப்பு	"வலமருப் பீர்ந்து, ஊனமில் ஒளிர் செம்பொன் பதித் தொளி மணியழுத்தி வான்மண முறச்செய்த மங்கல மணிச் சீப்புத் தான் முகில் சுழிமதிபோல் தன்னுறை நீக்கினளே", சீவக. 2436 : 1 - 4
மணியியல் சீப்பு	மணிகள் பதித்த அழகிய சீப்பு	"மணியியல் சீப்பிடச் சிவக்கும் வாணுதல் அணியிருங் கூந்தலை யெளவை மார்கடாம் ", சீவக. 2637 : 1 - 2
மயிர் வாரி	சீப்பு	"சிக்கம் மயிர் வாரி சீப்பு என்று ஆகும்", நிக.திவா. 1298
வாருதல்	கோதுதல்	"வாருற்றுப் பெரும் பின்னிட்ட வால்நரைக் கூந்தலர்", மது. 407- 408
வாருநர்	வாருதல்	"நெறித்து நெறிப்பட வாருநர் முடித்து" பெருங். 3: 22: 1
ஓதி வகுத்தும் தொகுத்தும் விரித்தும் கலப்ப வாருதல்	மகளிர் கூந்தலை ஐ வகையாக முடித்தல்; குழலையும் அளகத் தையும் வகுத்தும் கொண்டையைத் தொகுத்தும், பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும் நூற்றி றத்தின்... முடித்தா ளென்க (நச்சி.).	"மைநூற்றனைய மாவீழோதி வகுத்தும் தொகுத் தும் விரித்தும் கைந்நூல் திறத்தின் கலப்ப வாரிக் கமழும் நானக் கலவை", சீவக. 2437 : 1 - 2
ஐம்பால் சிறுபுறம் புதைய வாருதல்	கூந்தலைக் கோதுதல்	"துளித் தலைத் தலை இய மணி ஏர் ஐம்பால் சிறு புறம் புதைய வாரிக் குரல் பிழியூஉ", அகம். 8: 5 - 6
ஐம்பால் தகை பெற வாருதல்	கூந்தலை வாரி முடித்தல்	"கொண்டல் மாமழை குடக்கு ஏர்பு குழைத்த சிறுகோல் இணர பெருந்தண் சாந்தம், வகை சேர் ஐம்பால் தகைபெற வாரிப், புலர்விடத்து உதிர்த்த, துகள்படு கூழைப் பெருங்கண் ஆயம் உவப்பத் தந்தை", நற். 140: 1 - 5
காரிருங் கூந்தல் நீரற வாருதல்	முகில் போலும் கரிய கூந்தலின் கண் நீர் இல்லையாம்படி நன்கு சீப்பால் .வாருதல்	"காரிருங் கூந்தல் நீரற வாரி" பெருங். 1 : 42 : 146
குழல் வாருதல்	கூந்தலை வாருதல்	"குழற்கணியாகக் குழல் வாராய்" பெரியாழ். 2 : 5 : 6: 4; "பின்னே இருந்து குழல் வாராய்" பெரியாழ். 2 : 5 : 9: 4
சீப்பின் வாருதல்	கூந்தலைச் சீப்பினாலே வாருதல்	"சிறுபுறங் கவைஇச் சீப்பின் வாரிக், குறுநெறிக் கொண்ட கூழைக் கூந்தலுள்," பெருங். 1 : 46 : 220-221

சுரிவணர் ஐம்பால் நுண்கேழ் அடங்க வாருதல்	மகளிர் சுரிந்து வளைந்த நுண்ணிய கருநிறம் வாய்ந்த ஐந்து பகுதிகளான கூந்தலை வாருதல்	"அரியினங் கடுக்குஞ் சுரிவணர் ஐம்பால் நுண்கேழ் அடங்க வாரிப் பையுள் கெட", அகம். 223 : 12 - 13
தந்தத்தின் சீப்பால் குழல் வாருதல்	தந்தச் சீப்பால் வாருதல்	"தந்தத்தின் சீப்பால் குழல் வாராய் அக்காக்காய்" பெரியாழ். 2 : 5 : 8: 4
நெட்டிருங் கூந்தல் நீரற வாருதல்	கூந்தலை ஈரம் புலர வாருதல்	"நெட்டிருங் கூந்தல் நீரற வாரிப்", பெருங். 2: 5: 172
நெறிமயிர்க் கூந்தல் நீரற வாருதல்	மகளிர் நெறிப்புடைய மயிராகிய கூந்தலின் கண் நீர் அற்றுப் போகும்படி வாருதல்	"நெறிமயிர்க் கூந்தல் நீரற வாரிச், செழும்பூம் பிணையல் அடக்குபு முடித்துக்", பெருங். 1: 42: 201 - 202
வெண்கோட்டு மங்கலம் பொறித்த பெருவெண் சீப்பிற் வாருதல்	யானையினது குற்ற மற்ற தந்தத்தாலான மங்கலமான ஓவியம் பொறித்த பெரிய வெள்ளை சீப்பு கொண்டு வாருதல்	"மறுவில் வெண்கோட்டு மங்கலம் பொறித்த பெருவெண் சீப்பில் திருவுற வாரிச்", பெருங். 1 : 34 : 189 - 190
ஓதி தொகுத்தல்	கூந்தலை முடிப் பதற்காக முதலில் முழுமையாகத் தொகுத்தல்	"மைந்நூற்றனைய மாவீழோதி வகுத்தும் தொகுத் தும்", சீவக. 2437 : 1 - 2
வகிர்	வகிடு	"பொன் அகை தகை வகிர் வகை நெறி வயங் கிட்டு", கலித். 55 : 2
வகுத்தல்	பகுக்கப்படுதல்	"ஐம்பால் வகுத்த கூந்தல்", நற். 160 : 6; "மை ஈர் ஓதி வகை பெறு வனப்பின், ஐவகை வகுக்கும் பருவம் கொண்டது", சிலப். 30 : 10
ஓதி வகுத்தல்	கூந்தலை கட்டுமுன் பிரித்தல்	"மைந்நூற்றனைய மாவீழோதி வகுத்தும்", சீவக. 2437: 1 - 2
வகுத்தல்	கூந்தலை வகிர்தல்	"தேனராகிலின் புகை சேர்த்தி வகுத்து" சீவக. 2692 : 3
குரல்வாரி வகை வகுத்தல்	கூந்தலை வாரி வகைப்படுத்தல்	"சாந்துளர் வணர்குரல் வாரி வகை வகுத்து", அகம். 117 : 10
கழற்கனி சில்ஓதி வகுத்தல்	கழற்கனியால் கூந்தலைக் கூறு செய்தல்	"கழற்கனி வகுத்த துணைச் சில் ஓதி, குறுந் தொடி மகளிர் தோள் விடல்," புறம். 97 : 23 - 24
சுருண்முறை வகுத்தல்	சுருளையாகக் கூந்தலை வகுக்கும் முறை	"சுருண்முறை வகுத்துச் சூட்டுப் புரியுறீஇக்" பெருங். 1 : 34 : 191
வகை	பிரிவு	"பொன் அகைதகை வகிர்வகை நெறி வயங்கிட்டு", கலித். 55: 2; "கூந்தலை வகை தொறும் மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி" சிலப். 6 : 76 - 77
வடுஆழ் கூந்தல்	வகிர்ந்த கோடு ஆழ்ந்து கிடக்கும் கூந்தல்	"திருவார் மார்பன் தெரிந்தவற் குரைக்கும், வடுவாழ் கூந்தல் வாசவ தத்தையொ டிடை தெரி வின்மையி னவளே யிவளென", பெருங். 4 : 6 : 54 - 56
யாப்புற வடக்கிய வாக்கமை சிகை	மலரைப் பொருந்தும் படி அடக்கி வைத்த வகிர்தலையுடைய சிகை	"மணிநிறக் குவளை யணிமலர் செரீஇ, யாப்புற வடக்கிய வாக்கமை சிகையினர்", பெருங் 3 : 17 : 154 - 155
வாழைக் கொழு முகை அன்ன ஓதி	கொண்டை அமைப்பு	"வாழை ஈன்ற வை ஏந்து கொழுமுகை மெல்இயல் மகளிர் ஓதி அன்ன", நற். 225: 3 - 4

ஐம்பால் அணி பெறுதல்	கத்திரிகை இடையிலே தீண்டிய மேகத்தின் கவினைப் பெற்ற ஐந்து பகுதியை உடைய கூந்தல்	"ஐதாக நெறித்தன்ன அறலவிர் நீளைம்பால் அணி நகை யிடையிட்ட ஈகையங் கண்ணி போல்", கலித். 32: 2 - 3
ஐம்பாற் கூழை	ஐந்தாகப் பகுக்கப் பட்ட கூந்தல்	"அணியறல் அன்ன ஐம்பாற் கூழையர்", பெருங். 1: 41 : 52
ஐவகை	கூந்தல் பிரிவு	"நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன ஐவகை பாராட்டினாய் மற்றெங் கூந்தல் செய்வினை பாராட்டி னையோ ஐய", கலித். 22 : 12 - 14
கூந்தல் கதுப்பு அமைத்தல்	கூந்தலைக் குழலாக முடித்தல்	"கார்கொள் கூந்தற் கதுப்பமைப் போரும்", பரி. 12: 15
சிகழி ஆர்த்தல்	குடுமியை முடித்தல்	"உகிர் நுதி முறையில் போக்கி, ஒளிர் நறும் சிகழி ஆர்த்தான்", திருத். 162 : 7 - 8
உச்சிக் கேற்ப ஒப்பனை கொளீஇ	அழகிய முடிக்குப் பொருந்த ஒப்பனை செய்தல்	"தடவரை மார்பன்றாண் முதல் உறீஇ உச்சிக் கேற்ப ஒப்பனை கொளீ இப்", பெருங். 2 : 15 : 139 - 140
எஃகு இடைதொடல்	கத்திரிகையால் குறைத்தல்	"எஃகு இடைதொட்ட கார்கவின் பெற்ற ஐம் பால்போல்", கலித். 32: 1
கத்திரிகை	மயிர் வினைக்கருவி	"ஓரும் ஒண்டிறற் கத்திரிகைத்தொழில் நீரில் செய்து", சீவக. 2500 : 2 - 3; "ஒரு கத்திரிகை தருகென வாங்கி", பெருங். 4 : 14 : 41
மயிர் குறை கருவி	கத்திரி	"மயிர் குறை கருவி மாண்கடை அன்ன", பொருநர். 29
கருங்குழல் கட்டுதல்	குழலைக் கட்டுதல், கூந்தல் ஒப்பனை வகையுள் ஒன்று	"கருங்குழல் கட்டி கன்னிக் கூழை", பெருங். 1 : 34 : 192
குடுமி களைதல்	நுதற் குடுமியை அகற்றுதல்	"குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்தளிர் நெடுங் கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து", புறம். 77 : 2
கூந்தல் நெடுமுடி கட்டுதல்	குழலைக் கட்டுதல்	"சிறுவெள்அரவின் குருளை நாண் சுற்றிக் குறுநெறி கூந்தல் நெடு முடிகட்டி", சிலப். 12 : 23 - 24
கூழை பொன் நாணில் கட்டுதல்	கூந்தலைப் பொன் நாணினால் கட்டுதல்	"கருங்குழல் கட்டிக் கன்னிக்கூழை பொன்னி னாணிற் புடையெடுத்தியாத்துப்", பெருங். 1: 34: 192-193
பங்கியை அம்பிற் கட்டுதல்	தலைமயிரைக் கச்சாலே சேர்த்துக் கட்டுதல்	"பத்திரக் கடிப்பு மின்னப் பங்கியை வம்பிற் கட்டிக் கொத்தலர்த் தும்பை சூடிக்", சீவக. 2277 : 1 - 2
புனை கதிர்ப் பொன்செய் நாணிற் குஞ்சி யைக் கட்டுதல்	அழகிய பொன்னால் ஆன கயிற்றால் சிகையைக் கட்டுதல்	"புனைகதிர்ப் பொன்செய் நாணிற் குஞ்சியைக் கட்டி", சீவக. 2288 : 1
பின்னலார் சடை	பின்னலுடைய சடையைக் கட்டுதல்	"தவம் முயன்றவம் ஆயின பேசிப் பின்னலார் சடை கட்டி என் பணிந்தால் பெரிதும் நீந்துவது அரிது அது நிற்க", தேவா. சுந்தர. 4 : 7 : 2 - 4
கவரி முச்சி கார் விரிக் கூந்தல்	கவரியை அணிந்த உச்சிக் கொண்டை	"கவரி முச்சிக் கார்விரி கூந்தல் ஊசல் மேவற் சேயிழை மகளிர்", பதிற். 43 : 1 - 2
கருங்குழல் கை செய்தல்	மகளிர் கூந்தலைத் திறம்பட அலங்கரித்தல்	"கண்ணி வேய்ந்து கருங்குழல் கைசெய்து வண்ண மாலை நடுச்சிகையுள் வளைஇச்", சீவக. 1333 : 1 - 2
கொண்டை	கூந்தல் முடிப்பு	"புனலூடு போவதோர் பூமாலை கொண்டை எனலூழ் வகை எய்திற்று என்று ஏற்றுக் கொண்ட புனலூடு நாடறியப் பூமாலை அப்பி", பரி.தி. 2: 51 - 53

கேசம் குறைத்தல்	கூந்தலைக் குறைத்தல்	"குறையிவட்கு உண்டேல் கேசங்குறைத்தற்கு அறிவேன் யானெனக் குறையெனக் கூறலும்", பெருங். 4: 14 : 29 - 30
சுனை நோக்கிப் பாறு மயிர் திருத்துதல்	சுனை நீரில் பார்த்துத் தன் தலைமுடியைத் திருத்தம் செய்தல்	"குண்டு நீர் நெடுஞ் சுனை நோக்கிக் கவிழ்ந்து தன் புன்றலைப் பாறு மயிர் திருத்தும் குன்ற நாடன்", நற். 151 : 10 - 12
சிகழிகை முடி	மயிர் முடி	"திகழ்நிலா விரிந்த திருமதி முகத்தர் செண்ண மாகிய சிகழிகை முடியர்," பெருங்.1: 41 : 61 - 62
கோலச் சிகழிகை	முடி அலங்காரம்	"நீலநாகம் பை விரித்தன்ன கோலச் சிகழிகை தான் முதல் சேர்த்தி," பெருங். 2 : 15 : 142 - 143
ஒரு சிகை முடித்த உறுப்பமை கோலம்	கூந்தலைக் கை செய்யாது ஒரே சிகையாக முடிக்கப் பட்ட அழகு	"கோலங்கொண்ட குறுநெறிக் கூழை ஒரு சிகை முடித்த உறுப்பமை கோலத்து", பெருங். 2 : 15 : 91 - 92
குழற்சிகை	குழலாக கட்டிய குடுமி	"நிழற் பொலி காவின் நிரந்துடன் ஆடிக் குழற்சிகை அவிழக் குண்டுநீர் யமுனைக் கணைக்கடு நீத்திடைப் புணைப்புறந்தழீஇ. . . ," பெருங். 2 : 10 : 139 - 141
கூந்தல் செய்வினை	கூந்தல் அலங்காரம்	"ஐவகை பாராட்டினாய் மற்றெங் கூந்தற் செய் வினை பாராட்டினையோ ஐய", கலித். 22 : 13 - 14
சிகை திருத்தல்	முடியைச்சரி செய்தல்	தாமக் கோதையொரு தாழ்சிகை திருத்தி" பெருங். 40 : 178
குஞ்சி திருத்துதல்	குடுமியைச் சரி செய்தல்	"குஞ்சி திருத்தி முகம் துடைத்துக், கொட்டை அரைஞாண் துகள் நீக்கி. . . ," திருத். 3724 : 1 - 2
பின்னகம்	பின்னல்	"பிடிக்கை அன்ன பின்னகம்", அகம். 9: 22
பின்னணி	பின்னுதலையுடைய சடை	நின்னணி யெல்லா நீக்கி யோராப் பின்னணி கொண்டு பிறளே போன்றனை. . . " பெருங். 4 : 7 : 60 - 61
சடைக்கற்றைப் பின்னல் முடி	சடாமகுடம் (சடைக் கற்றையைப் பின்னி மகுடம் போன்று அழகொளிர விளங் கும் சடாமகுடம்)	"தன்னுள் எய்தி இறைஞ்சிப் போய்ச், சாரும் மேல்பால் சடைக்கற்றைப் பின்னல் முடியார் இடம் பலவும், பேணி வணங்கிப் பெருந்தொண்டர்," திருத். 3354 : 3 - 6
வார்குழல் பின்னல்	நீண்ட பின்னல்	"வலவிய மாமதம் பாய்முகில் யானைகள் வானில் வந்தால் கலவிய வார்குழல் பின்னரென் பாரிர் என நினைந்து," 11ஆம் திரு. 993 : 2 - 5
வாருற்றுப் பின்னிட்ட வால் பெருநரை கூந்தல்	கோதிப் பின்னே முடித்த நரை மயிர்	"வாருற்றுப் பெரும் பின்னிட்ட வால்நரைக் கூந்தலர் நன்னர் நலத்தார் தொன் முது பெண்டிர்", மது. 407 - 409
பின்னிருங் கூந்தல்	பின்னப்பட்ட, கரிய நிறமுடைய கூந்தல்	"நெய்தல் உண்கண் பைதல் கூரப் பின்னிருங் கூந்தலின் மறையினள்," நற். 113 : 7 - 8; "அஞ்சொற் பேதா யதுவிது வாமெனப் பின்னிருங் கூந்தலொடு பிறழ்கலம் திருத்திக் கலக்க நீங்கெனக் காஞ்சனை தெருட்டி," பெருங். 1 : 46 : 197 - 199
பின்னிவிட்ட ன குழல்	பின்னிய கூந்தல்	"மின்னுவிட்டு எரிவதோர் நலத்தள் வீங்கிருள் பின்னிவிட்டன குழல் பெருங்கண் பேதையூர்," சீவக. 1457 : 2 - 3
பின்னும் பின்னல் முடி	சடை முடி	"பின்னும் பின்னல் முடியார் முன், பெருக நாணித் தொழுது உரைப்பார் மன்னும் திருவாரூரின் கண் அவர்தாம் மிகவும் மகிழ்ந்து உறைவது," திருத். 3401: 1 - 4

வாசவெண்ணெய் இன்றி மாசொடு பிணங்குபு கிடந்த பின்னு	நறுமண எண்ணெய் யிடாமல் அழுக்கோடு பின்னிக் கிடந்த சடை	"வாச வெண்ணெய் இன்றி மாசொடு பிணங்குபு கிடந்த பின்னுச்சேர் புறத்தொடு மணங்கமழ் நுதலும் மருங்குலும் நீவி", பெருங். 4 : 7 : 103 - 105
பன்னுமுறை விரித்துப் பின்னுபு தொகுத்தல்	கூந்தலை விரித்துப் பின்னிச் சேர்த்தல்	"நெட்டிருங் கூந்தல் நீரறவாரிப், பன்னுமுறை விரித்துப் பின்னுபு தொகுத்து", பெருங். 2 : 5 : 172 - 173
பின்னுவார் சடை	பின்னிய நீண்ட சடை	மன்னும் ஆனந்த வெள்ளத்தில், திளைத்து எதிர் வந்து முன் நின்றாடும் பின்னுவார் சடைக் கூத்தர் பேர் அருள் பெறப் பிரியாத விடைபெற்று," திருத். 2078 : 3 - 6
பின்னுவிடல்	கூந்தலைப் பின்னுதல்	"வெறி கமழ் பன் மலர் புனையப் பின்னுவிடச் சிறு புறம் புதைய நெறிவு தாழ்ந்தன கொல்," அகம். 117: 13 - 14
பின்னுவிடு கதுப்பு	பின்னிவிடப்பட்ட கூந்தல்	பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர் இளையரும் மடவரும் உளரே," குறு. 246 : 6 - 7
பின்னுவிடு முச்சி	கூந்தல் ஒப்பனை	"மின்னு நிமிர்ந்தன்னவேலன் வந்தெனப் பின்னு விடுமுச்சி அளிப்பு ஆனாதே," நற். 51 : 7
பிடிக் கை அன்ன பின்னு வீழ் சிறு புறம்	பிடியினது கையை ஒத்த பின்னின மயிர் வீழ்ந்து கிடக்கின்ற சிறிய முதுகு	"பிடிக் கை அன்ன பின்னு வீழ் சிறுபுறத்து தொடிக்கை மகடூஉ," சிறுபாண். 191 - 2
பொன்னெறி மணி யிற் சிறுபுறம் தாழ்தல்	கூந்தல் முதுகிடத்தே தாழ்ந்து கிடத்தல்	"பொன்னெறி மணியிற் சிறுபுறம் தாழ்ந்த", குறிஞ். 59
முடி ஐந்து	கொண்டை சுருள் குழல் பனிச்சை வார் மயிர்	"ஐம்பால் முடியும் கொண்டையும் குழலும் (வம்பு ஆர்) பனிச்சையும், (வார்மயிர்ச்) சுருளும்", நிக. திவா. 2354
முச்சி	கொண்டை, கூந்தல் ஒப்பனை	"பின்னொடு முடித்த மண்ணா முச்சி நெய்கனி வீழ் குழல் அகப்படத் தைஇ," அகம். 73 : 1 - 2
பின்னொடு முடித்தல்	பின்னுதல் அளவில் முடித்தல்	"பின்னொடு முடித்த மண்ணா முச்சி நெய் கனி வீழ் குழல்," அகம். 73 : 1
மையார் குழல் புரளுதல்	மேகம் போலும் உள்ள கூந்தல் புரளுதல்	"கையார் வளைசிலம்பக் காதார் குழையாட மையார் குழல் புரளத் தேன்பாய வண்டொலிப்பச்", திருவாச. திருஅம். 13: 1 - 2
புரிசுரி வரி குழல்	பின்னியதும், சுரிந்த தும், கட்டியதுமான கூந்தல்	"வரிபுரி பாடநின்(று) ஆடும் எம் மான்இடம், புரி சுரி வரி குழல் அரிவையொர் பால் மகிழ்ந்து எரிஎரி யாடிதன் இடம் வலம் புரமே," தேவா. சுந்தர. 42 : 7 : 2 - 4
சூட்டுப்புரியுறுதல்	உச்சிக் கொண்டை இடுதல்	"சுருண்முறை வகுத்துச் சூட்டுப் புரியுறீஇ," பெருங். 1 : 34 : 191
புனை இருங் கூந்தல்	ஒப்பனை செய்யப் பட்ட கரிய கூந்தல்	"வேங்கை விரியிணர் விரும்புபு கொய்து புணர் காதலர் புனையிருங்கூந்தற் கிணரிவை அணிமி னென் றிரந்தனர் நீட்ட," பெருங். 2 : 12 : 83 - 84
புனைகுழல்	அலங்கரிக்கப்பட்ட கூந்தல்	"புனை குழல் மகளிரோடு இளைஞர்ப் போக்கினான் நினைவுறு காரியம் நிகழ்த்தும் நெஞ்சினான்," கம்ப. 6077 : 3 - 4; "அனந்தம் நூறாயிரம் அரக்கர் மங்கைமார், புனைந்த பூங்குழல் விரித்து அரற்றும் பூசலார்", கம்ப. 9929 : 1 - 2
சடைப்பரம் புனைதல்	கூந்தலை அலங்கரி யாது சடையாகிய சுமையைக் கொள்ளுதல்	"அடைப்பர், ஐம்புலன்களை; ஒழுக்கம் ஆணியாச் சடைப்பரம் புனைந்து, ஒளிர் தகையின் மாதவம் படைப்பர்", கம்ப. 10018 : 1 - 3

வாழைப் பூவெனப் பொலிதல்	கொண்டை வகை	"வாழைப் பூவெனப் பொலிந்த ஓதி", சிறுபாண். 21 - 22
மயிர் நுழுதி	மயிர் முடிச்சு	"வாசமலர்ப் பிணை பொங்க மயிர் நுழுதி மருங்கு உயர்ந்த தேசு உடைய சிகழிகையின் செறிகண்ணித் தொடை செருகி, திருத். 945 : 1 - 2
சீரலங்காரச் சித்திர முடி	முடியலங்காரம்	"சீர் அலங்காரச் சித்திர முடிமிசை," பெருங். 3: 24: 185
வனப்பொடு புணர வகுத்தணி முடி	கூந்தலைப் பொருந்தும்படி வகுத்து அமைத்த முடி அலங்காரம்	"வனப்பொடுபுணர வகுத்தணி முடிமிசை," பெருங். 1 : 42 : 147
முடிபுனைதல்	கூந்தல் அலங்காரம்	"வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர்," பதிற். 46 : 4
முடித்தல்	கூந்தலை முடியிடுதல்	"நோக்குநர் மகிழப் பூக்குழன் முடித்தும் பட்ட நெற்றி யிற் பொட்டிடை யேற்றும்", பெருங். 4 : 12 : 87 - 88
நெறிப்பட வாருநர் முடித்தல்	கூந்தலைச் சிக்கறச் சீப்பால் வாரி முடித்தல்	"கறைமாண் காழகிற் கொழும்புகை கொளீஇ நெறித்து நெறிப்பட வாருநர் முடித்து", பெருங். 3 : 22 : 109-110
கூந்தல் நீரறவாரிச் செழும்பூம் பிணை யல் அடக்குபு முடித்தல்	மகளிர், நெறிப்புடைய கூந்தலின் கண்நீர் அற்றுப்போம் வடி வாரி செழித்த மலர்மாலை யைக் கூந்தலின் அகத்தே பொதிந்து வைத்தல்	"நெறிமயிர்க் கூந்தல் நீரறவாரிச் செழும்பூம் பிணையல் அடக்குபு முடித்துக் குழங்கற் சாந்த மழுந்து பட வணிந்து," பெருங். 1: 42 : 201 - 202
ஏற்றிமிலின் ஏற்ப முடித்தல்	கூந்தலை வகுத்து, தொகுத்து, விரித்து, வாரி வாசனைக் கலவையுடன் புகை ஊட்டி, கமழச் செய்து எழில் பொருந்திய ஏறினது இமில் போல முடித்த தன்மை	"ஐந்நூல் திறத்தின் அகிலின் ஆவி அளைந்து கமழ ஊட்டி எந்நூற் திறமும் உணர்வாள் எழில் ஏற்றிமிலின் ஏற்ப முடித்தாள்", சீவக. 2437 : 3 - 4
பூக்குழல் முடித்தல்	மலருடைய கூந்தலை முடியிடுதல்	"நோக்குநர் மகிழப் பூக்குழல் முடித்தும் பட்ட நெற்றியிற் பொட்டிடை யேற்றும்," பெருங். 4 : 12 : 87 - 88
நல்நெடுங் கூந்தல் நரையொடு முடித்தல்	கூந்தலை முடித்தல்	"நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்," நற். 10 : 3
மணங்கமழ் கூந்தல் வகைபெற முடித்தல்	நறுமணம் கமழும் கூந்தலை வகுத்து முடித்தல்	"மணங்கமழ் கூந்தல் வகைபெற முடித்தும் சூடக மேற்றியும் பாடகம் திருத்தியும்", பெருங். 4 : 12: 117 - 118
வடித்து வனப்பிரீஇ முடித்தல்	புகையூட்டிக் கூந்தலைக் கை செய்து அழகுற முடித்தல்	"கானக் காழ் தேனெய் தோய்த்து நறுந்தண் கொடிப் புகை அறிந்தளந் தூட்டி வடித்து வனப்பிரீஇ முடித்ததன் பின்னர்த்", பெருங். 4: 16 : 12 - 14
தடக்கையின் ஒத்த ஐம்பால் வளைய முடித்தல்	துதிக்கை போன்ற கூந்தலில் மல்லிகை மாலை சூடி வளைய முடித்தல்	"முத்தார் மருப்பின் இடை வளைத்த முரண் கொள் யானைத் தடக்கையின் ஒத்தேருடைய மல்லிகையின் ஒலியன் மாலை யுறுப்பு அடக்கி வைத்தார் மணி நூற்றன ஐம்பால் வளைய முடித்து", சீவக. 2693: 1 - 3
மாண் இருங்குஞ்சி வலம் சுரிதல்	வலப்பக்கமாகச் சுருண்ட முடி	"மணியறைந்தன்ன மாண் இருங்குஞ்சி அணி வலஞ் சுரிந்த அமைதிக் கேற்ப", பெருங். 2 : 4 : 140 - 141
கோங்கின்தட்டமுங் குரவின் பாவையும் வாங்கிக் கொண்டு வாருபு முடித்தல்	கூந்தலை நீரற வாரிக் கோங்க மலரும் குரவ மலரும் கொய்து கூந்தலி லிட்டு முடித்தல்	"கோங்கின் தட்டமுங் குரவின் பாவையும் வாங்கிக் கொண்டு வாருபு முடித்து", பெருங். 1 : 57 : 98 - 99

மயிர்களை வேறு வேறாகும் விரகுளி முடித்தல்	நெடிய மயிர்களைப் பல்வேறு வகையாகத் தந்திரமாக முடித்தல்	"நீறுமெய் பூசி நெடிய மயிர்களை வேறு வேறாகும் விரகுளி முடித்துக் கண்டோர் வெருவக் கண்மலரடக்கம் . . . . . ," பெருங். 4 : 14 : 67 - 69
முடியகம் புகா கூந்தல்	முடித்தற்குரிய நீட்சியற்ற கூந்தல்	"முடியகம் புகாஅக் கூந்தலள்", ஐங். 374 : 3
ஐம்பால் வளைய முடித்தல்	மயிரினைத் திரள முடித்து அதனுள்ளே கழுநீர் மாலையைச் செலுத்தி அது கொள்ள அழுத்தி ஆங்கே குவளை யினது செவ்வித்தா தையும் உறுத்தினா ரென்க (உரை-நச்சினார்க்கினியர்)	"வைத்தார் மணிநூற்றள ஐம்பால் வளைய முடித்து வான்கழுநீர் உய்த்தாங் கதனுட் கொள வழுத்திக் குவளைச் செவித்தா துறுத்தாரே," சீவக. 2693 : 3 - 4
வட்டவார்குழல்	வட்ட வடிவமாய்ச் சுருட்டி முடித்த கூந்தல்	"சுந்தரராய்த் தூமதியம் சூடுவது சுவண்டே வட்ட வார் குழல் மடவார் தம்மைமயல் செய்தல் மாதவமோ மாதிமையோ வாட்டம் எலாந்தீர்", தேவா, சுந்தர. 71 : 4 : 4 - 6
வினைய வார்குழல்	ஐவகையாக அணி செய்யத்தக்க நீண்ட குழல் : முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள் ஆகிய ஐ வகைத் தொழிலுக் குரிய கூந்தல்	"நினையும் வேலைவாய் நெடிது தேடுவார் வினைய வார் குழல் திருவை மேவலார்", கம்ப. 4616 : 2 - 3
கூந்தல் கோட்டிடை விரைஇச் சுற்றுபு பூ முடித்தல்	கூந்தலைப் பின்னிச் சேர்த்து வளைத்து யானையின் பெரிய கையினைப் போலக் கொண்டைப் பூ மாலையினையிட்டு வளையச் சுற்றி முடித்தல்	"நெட்டிருங் கூந்தல் நீரற வாரிப், பன்னுமுறை விரித்துப் பின்னுபு தொகுத்துக், கோட்டிடை வளை இய குஞ்சரத் தடக்கையிற், சூட்டொடு விரைஇச் சுற்றுபு முடித்துப்", பெருங். 2 : 5 : 172 - 175

3.2 முகம்

முகத்தின் தனித் தன்மையும் முக்கியத்துவமும் யாவரும் அறிந்தது. இன்று முக ஒப்பனை என்பது பெரும்பாலும் மணப்பொடி, நெற்றிப் பொட்டு, காதணியுடன் நின்று விடுகிறது. மூக்குத்தி, கண்மை அடுத்த இடம் பிடிக்கிறது. இவற்றைத் தவிர, சாதாரண மக்கள் முகத்தை அழகுபடுத்திக் கொள்ளல் என்பது பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். ஆயின் அன்று நெற்றியிலிருந்து கண், வாய், கன்னம், காது என முகத்தின் ஒவ்வொரு பகுதியையும் அழகுபடுத்தியுள்ளனர் என்பது தமிழர் வாழ்வு தரும் செய்தியாகும். வியக்கும் வண்ணம் சொற்கள் இதனை விளக்கி நிற்கின்றன. நெற்றியில், வகிட்டின் கீழும் நெற்றிப் பகுதியிலும் அவர்கள் அணிந்த அணிகள், மாலைகள், பூசிய பொடிகள், பொட்டு, ஓவியம், கண்களில் அவர்கள் இட்ட மை, அஞ்சனம், காதுகளில் அவர்கள் அணிந்த காதணி வகைகள், கன்னத்தில் பூசிய வண்ணப்பூச்சு, வாய் இதழில் அவர்கள் பூசிய பூச்சு என இவை பலவாறு அமைகின்றன. அவர்களின் அழகுணர்ச்சியை இவையும் தெளிவுபடுத்துகின்றன.

மணிநீர் முகம் சேர்த்து நற் பெரும் கோலம் மிகப் புனைதல்	முகம் கழுவிய பின்னர் அழகு படுத்துதல்	"செங்கேழற் பொற் கவசத்துள்ளால் மணி நீர் முகம் சேர்த்தி, நற்பெரும் கோலம் மிகப் புனைந்து", 11ஆம். திரு. 300: 65 - 66
வெண்ணிற நுண் தாது நிறம் பெற உரிஞ்சி நேர்துகில் துடைத்தல்	மணப் பொடியினை முகத்தில் தடவி, திங்கள் ஒளியினும் மிக ஒளி பெறும்படி நிறமுண்டாகத் தேய்த்துப் பின்னர் நேரிய துகிலால் துடைத்தல்	"விரலிற் கொண்ட வெண்ணிற நுண்டாது விரிகதிர் மதியின் விளங்கொளி அழிப்ப நிறம்பெற உரிஞ்சி நேர்துகில் துடைத்தும்", பெருங். 2 : 4 : 189 - 191
முகத்தில் மதிமாசு கழீஇய 'வண்ணம் கைவினை முடித்தல்	முகம் பொலியச் செய்தல்	"இலக்கணம் பிழையா வெ.ஃகமை இருப்பின் நீர் அளந் தூட்டிய நிறையமை வாளினைப்.. கன்மிசை அறிந்து வாய்தீட்டி, ...சேட்டொழிற் பொலிந்த திருமுகக் கேற்ப... மண்ணு வினைமயிர்த் தொழினன்னல நாவிதன்.... எதிர்நோக்காற்றா இலங்கிழை முகத்தையும் மதிமாசு கழீஇய வண்ணம் போலக் கதிர் மேலிலங்கக் கைவினை முடித்த பின்", பெருங். 2: 4: 164 - 182
முகம் கோலஞ் செய்தல்	முகத்தை அழகு படுத்துதல்	"ஏற்றியும் இழித்தும் மிடையொற்றியும் போற்றிச் சந்தனம் பூசுகின்றான் எனக் கூற்றனான் முகம் கோலஞ் செய்தான் கடற்றோற்றும் செஞ்சுடர் போலச் சுடர்ந்ததே", சீவக. 2497 : 1 - 4
முகம் செய் கோலம்	முக ஒப்பனை	"தோற்றினாண் முகஞ்செய் கோலந்துளக்கினாண் மனத்தையெல்லாம்", சீவக. 675 : 4

3.2.1. நெற்றி

அ. மலர்கள்

மலர் அளகநல் நுதலில் அப்புதல்	நெற்றியில் சிறிய மலர்களை அப்புதல்	"புதுமென்பூ அன்ன மென் நடையாய்! நின் அளகநல் நுதல் அப்பும் சின்ன மென் மலர் மானச் சிந்துவ பல காணாய்!", கம்ப. 2012 : 4 - 8
திருநுதலில் தோடு ஆர்தல்	நெற்றியில் இதழ் பொருந்திய மாலை அணிதல்	"தோட்டார் திருநுதற் சூட்டயற் சுடரும்", பெருங். 1 : 40 : 101
வேம்பின் தளிர் நெடுங்கொடி உழிஞைப்பவ ரொடுமிலைதல்	நுதலில் வேம்பின் ஒளி பொருந்திய தளிரையும் நெடிய கொடியாகிய உழிஞைக் கொடி யையும் அணிதல்	"குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்தளிர் நெடுங் கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து", புறம். 77 : 2 - 3
காந்தளங் கடிமலர் கண்ணி	நறுமணத்தை யுடைய காந்தள் மலர்மாலை	"காந்தளங் கடிமலர்க் கண்ணி நெற்றியர்", சீவக. 1848: 1
வண்ண மணி யொடு முத்திடை விரைஇய கண்ணி	வண்ணமுடைய மணியும் முத்துங் கலந்த கண்ணி	"வண்ணமணி யோடு முத்திடை விரைஇய கண்ணி நெற்றிக் காவிதி மகளிரும்", பெருங். 1 : 42 : 175 - 176
அங்கழு நீர்த் தாமம் நுதல் சேர்த்தல்	அழகிய கழுநீர் மாலையை நெற்றி யில் கொள்ளுதல்	"செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங்குமம் எழுதி அங் கழுநீர்த் தாமம் நுதல் சேர்த்திப்", 11ஆம் திரு. 300: 165
முருந்து இடை வைத்த குன்றி தன்னில் மயிர்க் கயிறு ஆரம் சாத்துதல்	முன்நெற்றியில் மயில் இறகின் அடியின் இடையிடையே குன்றிமணிகளுடன் முறுக்கப்பட்ட மயிர்க்கயிற்றைப் பொருந்தும்படி அணிதல்	"முன்நெற்றியின்மீது முருந்து இடை வைத்த குன்றி தன்னில் புரிகொண்ட மயிர்க்கயிறு ஆரம் சாத்தி", திருத். 707: 1 - 2

ஆ. மணப்பொருட்கள்

பூந்தாதோடு சாந்துறக் கூட்டுதல்	பூந்துகளையும் சந்தனத்தையும் நன்கு பூசுதல்	"கேட்டன னாதலிற் கோற்றொடி நுதன்மிசைப் பூந்தா தோடு சாந்துறக் கூட்டி ஒடியா விழுச்சீ ருதயண னோலை", பெருங் 4:13: 61 - 63
சுண்ணம் சிதறுதல்	சுண்ணமாகிய சிறந்த பொற்பொடியைத் தூவுதல்	"கதழ்வுறு சுண்ணஞ் சிதறிய மருங்கில் திருநுதற் சுட்டி திகழச் சூட்டி", பெருங் 1:34: 195 - 196
சுண்ணம் சொரிதல்	வாசனைப் பொடி யைச் சொரிதல்	"சுண்ணமுஞ் சூட்டுஞ் சொரிந்து வார்குழற் கண்ணி மகாரொடு காற்சிலம்பு ஆர்த்தெழ", சீவக 2114: 1 - 2
தெள்ளும் மணி செய் சுண்ணம் இலங்க அப்புதல்	மென்மையான மணியால் செய்யப் பட்ட சுண்ணத்தை நெற்றியில் பூசுதல்	"தெள்ளும் மணிசெய் சுண்ணம் இலங்கத் திருநீர் நுதலின் அப்பி", சீவக. 2439: 5 - 6

இ. அணிகலன்கள்

இலம்பகம்	தலைக்கோலம் என்னும் ஆபரணம்; வயந்தகமுமாம் (நச்சி.)	"கரும்பணி வளவயற் காமர் தாமரை வரம்பு அணைந்து அதன் நுதற் கிடந்த வார் செந்நெல் அரங்கணி நாடக மகளிராய் நுதற் சுரும்பு சூழிலம்பகத் தோற்ற மொத்ததே", சீவக 1442:3 - 4
இழை	நெற்றிச்சுட்டி	"பொன் செய் புனை இழை கட்டிய மகளிர்", குறுந். 21 : 2; "இழை வாள் நுதலாள் இடைபோல் இடையே குழைவாய்", கம்ப. 4202:5 - 7
ஓடை	நெற்றி அணி	"ஓடை வாள் நுதலினாளை ஒளிக்கலாம் உபாயம் உன்னி நாடி மாரீசனார் ஓர் ஆடக நவ்வி ஆனார்", கம்ப. 4207: 1 - 4
செம்பொற் ஐயவி நுதலில் சேர்த்தல்	பொன்னால் ஆகிய சிறுவெண்கடுகினை நெற்றியில் அணிதல்	"வேத பாரகர்க்கு ஈந்து, செம்பொன் ஐயவி நுதலில் சேர்த்தி", கம்ப. 1134 : 3 - 4
உருள்கலன் நகை யொடு துயல்வரல்	தலையணி அசைதல்	"பொலம்பிறை யுட்டாழ்ந்த புனைவினை உருள் கலன் நலம்பெறு கமழ் சென்னி நகையொடு துயல் வர", கலித். 81: 3 - 4
நுதல்சுட்டி	நெற்றிச்சுட்டி	"விழுந்தது என்னவும், மேல்திசையாள் சுடர்க்கொழுந்து சேர் நுதற்கோது அறு சுட்டிபோய் அழிந்தது என்னவும் ஆழ்ந்தது - திங்களே", கம்ப. 627: 2 - 4; "சுருளுமயிர் நுதற் சுட்டி துணைக்காதின் மணிக்குதம்பை மருவு திருக் கண்டநாண் மார்பினில் ஐம்படைகையிற்", திருத். 3685: 1 - 2
சுட்டி அலைதல்	சுட்டி அசைதல்	"தொட்ட வரிவரால் பாயும் புனலூரன் கட்டலர் கண்ணிப் புதல்வனைக் கொண்டெம்மில் சுட்டி அலைய வரும்", கைந். 39: 2 - 4
அணிமணிச் சுட்டி சாத்துதல்	நெற்றிச்சுட்டி அணிவித்தல்	"ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்தி செம்பொன் நாண் அரையில் மின்னத் தெருவில் தேர் உருட்டும் நாளில்", திருத். 150: 5 - 8
புலியுகிர் சுட்டி சாத்துதல்	புலிநகத்தால் செய்யப் பட்ட சுட்டியை அணிவித்தல்	"பூண்திகழ் சிறுபுன் குஞ்சிப் புலிஉகிர்ச் சுட்டி சாத்தி", திருத். 669: 3 - 4
தோட்டார் திருநுதற் சூட்டு அயலில் சுட்டி சுடருதல்	நெற்றியில் அணிந்த சூட்டாகிய மாலை யின் அருகே நெற்றிச் சுட்டி சுடருதல்	"தோட்டார் திருநுதற்சூட்டு அயற் சுடரும் சுட்டிச் சிதையக் குட்டத்துக் குளித்து", பெருங். 1 : 40 : 101 - 102
சுட்டி சூட்டுதல்	நுதற் சுட்டியை நெற்றியில் திகழு மாறு அணிவித்தல்	"திருநுதற் சுட்டி திகழச்சூட்டி", பெருங் 1:34: 196
சுட்டி சேர்தல்	சுட்டி அணிதல்	"சூளாமணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர் வாளாக நுதற்பட்டம் மன்னுவித்துத்", 11ஆம் திரு. 300 : 17
சுடிகை	நெற்றிச் சுட்டி	"சுடிகைப் பூங்கமலம் அன்ன சுடர்மதி முகத்தினார் தம்", கம்ப. 860: 3 - 4
சுழியம்	நெற்றிச்சுட்டி	"படர்சடை மொழுப்பும் சுழியமும்", திருவி. 102 : 1 - 2; "தொங்கலும் துயல் வரச் சுழியம் சூடியே", கம்ப. 1210: 4
திரு அணிதல்	திரு என்னும் நுதல் அணியை அணிதல்	"பெருவிறல் வானம் பெருவரை சேரும் கருவணி காலம் குறித் தார் திரு அணிந்த நுண்ணுதல் மாதர் திறத்து", கார். நாற். 34 : 2 - 4

பட்டம்	நெற்றியில் அணியும் அணி	"கதிர் பொற் பட்டமொடு கனங்குழை திருந்தி", பெருங். 1 : 37 : 164; "பட்ட நெற்றியர் நட்டமாடுவர்", தேவா. திருஞா 3: 112 : 2 : 1 - 2; "பட்ட முந்தோடு மோர் பாகங் கண்டேன் பார்திகழப் பலிதிரிந்து போதக் கண்டேன்", தேவா. திருஞா 6: 97: 6: 1 - 2; "மட்டுண்டு வண்டு ஆலும் பொழில் மாதோட்ட நன்னகரில் பட்டவ்வரி நுதலா ளொடு பாலாவியின் கரைமேல் சிட்டன் றமை அள்வான் திருக்கேதீச் சரத் தானே", தேவா.சுந்தர. 76: 8: 2 - 4
அளவு அறு செஞ் சுடர்ப் பட்டம்	அளவில்லாத செவ் வொளியை உடைய வீரபட்டம்	"கிளர் மழைக் குழுவிடைக் கிளர்ந்த மின் என அளவு அறு செஞ்சுடர்ப் பட்டம் ஆர்த்தனன்", கம்ப. 7131: 1 - 2
செம்பொன் செய் பட்டம்	சிவந்த பொன்னால் ஆன நெற்றிச்சுட்டி	"சேறாடுங் கிண்கிணிக் கால் செம்பொன் செய் பட்டத்து நீறாடு மாயதிவன் இல்முறை", திணை. நூற். 151 : 1 - 2
சுருங்காச் சுடர் ஒளி செம்பொற்பட்டம்	ஒளிமங்காத பட்டம்	"சுருங்காச் சுடரொளிச் செம்பொற்பட்டம்", பெருங். 2 : 3 : 70
பட்ட நெற்றி	பட்டம் அணிந்த நெற்றி	"பட்ட நெற்றியிற் பொட்டிடை ஏற்றும்", பெருங். 4: 12 : 88 - 89
பட்டம் அணிதல்	நெற்றிப்பட்டம் அணிதல்	"மேற்பாற் பிறையென விளங்க வமைந்த தொருகாழார மொளிபெற வணிந்து திருக்கேழ்க் களிகை செவ்வனஞ் சேர்த்திப் பைம்பொற்றிலகமொடு பட்ட மணிந்த ஒண் கதிர் மதிமுக மொளி யொடு சுடர", பெருங் 3: 22 : 220 - 224
பெரும்பட்டம் அணிதல்	பட்டம் அணிதல்	"பிள்ளை வெண்பிறைச் சிறுநுதற் பெரும்பட்டம் அணிமின்", சீவக. 2390 : 1
செஞ்சுடர்ப் பட்டம் ஆர்த்தல்	வீர பட்டம் கட்டுதல்	"கிளர் மழைக் குழுவிடைக் கிளர்ந்த மின்என அளவு ஆறு செஞ்சுடர்ப் பட்டம் ஆர்த்தனன்", கம்ப. 7131 : 1-2
பட்டம் கட்டுதல்	நெற்றியில் பட்டம் கட்டுதல்	"பட்டம் கட்டிப் பொற்றோடு பெய்து இவள் பாடகமும் சிலம்பும் இட்டமாக வளர்த் தெடுத் தேனுச்", பெரியாழ். 3: 7: 6: 1 - 2
நுதல்பட்டம் கட்டுதல்	அழகிய நெற்றியில் பட்டத்தைக் கட்டுதல்	"நிலம் அறிந்து அணிக ஐயன் சீவகன் நெறியின் என்ன நலம் நுதல்பட்டம் கட்டி நகை முடிக்கோதை சூட்டி..", சீவக. 673: 1 - 2
செம்பொற் பட்டம் சேர்த்தல்	செம்பொற் பட்டத் தைச் சேர்த்தல்	"திருந்தும் திங்கள் சூழ்ந்த மின்னின செம்பொன் பட்டம் சேர்த்தி விரும்பும் முத்தம் மாலை நான்ற விழுப்பொன் மகரம் செறித்தாள்", சீவக. 2438: 5 - 8
சிறப்புடைப் பட்டம் சுடர்ந்திலங்குதல்	பட்டம் நுதற்புறம் சுடர்ந்திலங்குதல்	"நுதற்புறங் கவ்வி மிகச் சுடர்ந் திலங்கும் சிறப்புடைப் பட்டஞ் சிறியோர் போல", பெருங். 2: 19 : 83 - 84
செம்பொற் பட்டம் முகம் சுடரச் சூட்டுதல்	செம்பொன்னால் இயன்ற பட்டத்தினை முகம் ஒளிபெறும்படி சூட்டுதல்	"செம்பொற் பட்டம் பைந்தொடிப் பாவை மதிமுகஞ் சுடர மன்னவன் சூட்டித்", பெருங். 3 : 22 : 275 - 276
சூழ்புடன் வளை இய செம்பொற் பட்டம் பின்றலைக் கொளீஇ	செம்பொன்னால் இயன்ற பட்டம் பின்தலையில் கொளுத்தி அணிதல்	"ஊர்கோ ளேய்ப்பச் சூழ்புடன் வளைஇய செம்பொற் பட்டம் பின்றலைக் கொளீஇச்", பெருங். 1: 46 : 234-235
நுதற்பட்டம் புனைதல்	நெற்றிப்பட்டம் அணிவித்தல்	"கொட்டமே கமழும் குழலாளொடு கூடினாய் எரு தேறி னாய் நுதற் பட்டமே புனைவாய் இசைபாடுவ பாரிடமா", தேவா. திருஞா 3 : 1 : 2 : 1 - 3

பட்டம் போக்குதல்	நெற்றியில் பட்டம் அணிந்திருத்தல்	"பூநுதல் மாணிறக் கருங்குழல் மருங்கிற் போக்கிய நாணிறமிகு கதிர்ப்பட்ட நல்லொளி", சீவக 1010 : 1 - 3
பட்டம் மின்னுதல்	நெற்றிப்பட்டம் ஒளி வீசுதல்	"பட்டமும் குழையும் மின்னப் பல்கலன் ஒலிப்பச் சூழ்ந்து மட்டு அவிழ் கோதைமாதர் மைந்தனைக் கொண்டு புக்கார்", சீவக 472: 3 - 4
நுதற்பட்டம் மின்னுதல்	நெற்றிப்பட்டம் மின்னுதல்	"வாணுதற் பட்டம் மின்னவார்குழை திருவில் வீசப் பூண்முலைப் பிறழப் பொற்றோ டிடவயின் நுடங்க ஒல்கி", சீவக. 1257: 1 - 2; "குடர்தொடர் குருதிக் கோட்டுக் குஞ்சர நகரத் தார்கோன் சுடர்நுதற் பட்டம் மின்னச் சுரும் பிமிர் கண்ணி சிந்த", சீவக. 2182: 1 - 2
நன்னுதற்சூட்டிய வெல்கதிர்ப் பட்டம் விளங்குதல்	அழகிய நெற்றியில் அணிந்த நெற்றிப் பட்டம் ஒளிவீசுதல்	"நல்லெழில் மங்கையர் நன்னுதற் சூட்டிய வெல் கதிர்ப் பட்டம் விளங்கிற் றொருபால்", சீவக. 2113 : 3 - 4
வீரபட்டம் வீக்குதல்	முகப்படாத்தை வீர பட்டம் என நெற்றி யில் கட்டுதல்	"சோர விட்ட சுடர்மணி ஓடையை வீரபட்டம் என நுதல் வீக்கினான்", கம்ப. 7345: 3 - 4
பொதிஇருள் அளக பந்தி பூட்டிய பூட்டும் இடுதல்	இருள் பொதிந்த முன் நெற்றி மயிரின் ஒழுங்கிலே பூட்டு தற்கு உரிய பூட்டு என்னும் ஆபரணத் தைப் பூட்டுதல்	"பொதி இருள் அளக பந்தி பூட்டிய பூட்டும் இட்டார்", கம்ப 1121: 7 - 8
மகரப் பகுவாய் தாழ்தல்	நெற்றியில் சுறாவினது அங்காந்த வாயாகப் பண்ணின தலைக் கோலம் தாழ்தல்	"திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல் மகரப் பகு வாய் தாழ மண்ணுறுத்துத் துவர முடித்த துகளறு முச்சி", திருமுருகு. 24 - 26
மகர வலயம் திகழ்தல்	நெற்றி அணி; மகர வலயம் அழகுடன் திகழ்தல்	"எறி மகர வலய மணிதிகழ் நுதலியர்", பரி. 10: 77
மத்தகம் புல்லகம் நக்குபு கிடத்தல்	புல்லகம் விளங்குதல்	"மணிமுதற் கொளீஇய மாண்பொற் சந்தின் எரி மணி இமைக்கும் இலங்கு பொற் கோணத்துக் கதிர் நகைக் கோவைக் கைவினைப் பொலிந்த மத்தகப் புல்லக நக்குபு கிடந்த திலகத் திருநுதல்", பெருங். 1 : 46 : 158 - 160
வயந்தகம்	தலையணி; தலையில் இருந்து நெற்றியில் படும்படியாக அணிந்த அணி	"செந்தாமரைப் பூஉற நிமிர்ந்த செந்நெல்லின் பைந்தார்ப் புனல் வாய்ப் பாய்ந்து ஆடுவாள் - அந்தார் வயந்தகம் போல் தோன்றும் வயலூரன்", திணை. நூற். 128: 1 - 3
அணிநுதல் வகை பெற வயந்தகம் செரூஉதல்	வயந்தகம் அணிதல்	"அவைபுகழ் அரங்கின் மேல் ஆடுவாள் அணிநுதல் வகைபெறச் செரீஇய வயந்தகம் போல் தோன்றும் தகைபெறு கழனியந் தண்டுறை", கலித். 79 : 4 : 1 - 6
ஈ. திலகம்		
கோறம்பு	திலகம்	"சிந்துரம் இலங்கத் தன் திருநெற்றிமேல் திருத்திய கோறம்பு திருக்குழலும்", பெரியாழ். 3 : 4 : 6 : 1
காப்பு இடுதல்	நெற்றிக்காப்பிடுதல் (மந்திரத்தோடு கூடிய ஆலத்தி நீரால் சுழற்றி, பின் அதனால் நெற்றியில் பொட்டு இடுதல்)	"மந்திரத்து அயினி நீரால் வலஞ்செய்து காப்பும் இட்டார்", கம்ப. 9997 : 3 - 4

திலகம்	நெற்றிப் பொட்டு	"ஒருத்தி தெரிமுத்தம் சேர்ந்த திலகம்", கலித். 92: 35; "பவள வாள் நுதல் திலகம்", சிலப். 4.54; "நல்நுதல் நீத்த திலகத்தள்", கலித். 143: 3; "மறந்து மழை மறா மகத நன்னாட்டுக்கு ஒரு பெருந் திலகம் என்று உரவோர் உரைக்கும்", மணி 26 : 42 - 43; "மத்தகப் புல்லக நக்குபு கிடந்த திலகத் திருநுதல்", பெருங். 1 : 46 : 159 - 160; "திலக வாணுதற் றிருவடி வொக்கும் பிறை", பெருங் 1: 33: 164 - 165; "திலகவாண்முகம்", பெருங். 2: 7: 105; "நிழலவிர் கதிர்மதி நிரந்துநின் றாங்குத் திலகத் திருமுகஞ் செவ்வன் திருத்தி", பெருங் 2: 16. 112 - 113; "நிலமிசை மருங்கின் வீழ்ந்தனை யோவெனத் திலக நோக்கிப் பலபாராட்டியும்", பெருங் 2: 19: 90 - 91; "அகல்க யாவிரு மழலு மெனக் கெனத் திலக முகத்தி திருந்து படந்திறந்து கூன் மகள் வீச", பெருங் 3: 13 : 82 - 84; "நிலாவுறழ் பூந்துகின் நெகிழ்ந் திடைத் தோன்றக் கலாவப் பல்காழ் கச்சுவிரிந் திலங்கத் திருநுதற் திலகமுஞ் சுமத்தலாற்றாள்", பெருங். 5: 1 : 137 - 139; "கண்டமும் குழையும், பவளவாய் இதழும், கண்ணுதல் திலகமும் காட்டி", திருவி. 102 : 3 - 4; "திலக நுதலுமை நங்கைக்குந் திருவாவடு துறை", திருவி. 62: 1 - 2; "திருந்தச் செய்ததன் பின் நங்கை திரு விற்கோர் திலகமொத்தாள்", சீவக. 627: 4; "தீட்டினான் கிழிமிசை திலக வாணுதல்", சீவக 1003: 2; "நிலமகட்கு அழகு ஆர்திரு நீள்நுதல் திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி", திருத். 97: 1 - 2; "சுடிகையும் திலகமும் சுட்டியும் திலகம்", நிக. தி. 6 : 48
பைம்பொற்றிலகம்	பொன்பொட்டு	"திருக்கேழ்க் களிகை செவ்வனஞ் சேர்த்திப் பைம் பொற் றிலகமொடு பட்ட மணிந்த ஒண்கதிர் மதி முகமொளியொடு சுடர", பெருங். 3: 22 : 222 - 224
மானின் வயிற்று அரிதாரத் திலகம்	கத்தூரிப் பொட்டு	"கலை மருப்பின் அரிந்த குழைகாதில் பெய்து மானின் வயிற்று அரிதாரத் திலகம் இட்டு", திருத். 697: 2 - 3
திலகம் இடுதல்	திலகத்தை இட்டுக் கொள்ளுதல்	"மலர்குழல் மலைவாரும், மதிமுகம் மணி ஆடித் திலகம் முன் இடுவாரும், சிகழிகை அணிவாரும்", கம்ப. 1188: 2 - 3
நிறைத் திலகம் இடுதல்	நெற்றி விழி போல் திலகம் இட்டுக் கொள்ளல்; பெரிய பொட்டு இடுதல்	"நெற்றி விழியாநிறைத் திலகமிட்டாளே", பரி. 11: 99
திலகம் இழைத்தல்	நெற்றியில் திலகம் இடுதல்	"செய்யாட் கிழைத்த திலகம் போற் சீர்க்கொப்ப வையம் விளங்கிப் புகழ் பூத்தல் அல்லது பொய்யாதல் உண்டோ மதுரை", பரி. தி. 9 : 1 - 3
காசறைத் திலகம் கருங்கறையாகக் கிடத்தல்	கத்தூரித் திலகம் அணிந்திருத்தல்	"காசறைத் திலகம் கருங்கறை கிடந்த மாசில் வாண் முகத்து வண்டொடு சுருண்ட குழலுங் கோதை யும்", சிலப். 28 : 27 - 29
திலகம் செய்தல்	திலகம் இட்டு அழகு செய்தல்	"தெய்வ மங்கையர்க்கும், எல்லாம், திலகத்தைத் திலகம் செய்தார்", கம்ப 1132: 4
திலகம் சேர்த்தல்	பொட்டு வைத்தல்	"வீங்கிள முலைகள் விம்மித் திறந்துபால் பிலிற்றவாற் றாள் வாங்குபு திலகஞ் சேர்த்தித் திலகனைத் திருந்த வைத்தாள்", சீவக. 305: 4
திலகம் சேர்தல்	திலகம் இடுதல்	"நிலவஞ்சேர் நுண்ணிடைய நேரிழைஅவ ளோடும் திலகஞ்சேர் நெற்றியினார் திருவேட்டக் குடியாரே", தேவா. திருஞா. 3: 66: 4: 3 - 4

திலகம் தைஇ	பொட்டு அணிதல்	"திலகம் தைஇய தேம் கமழ் திருநுதல்", நற் 62 : 6; "தேங்கமழ் திருநுதல் திலகம் தை இயும்", அகம். 389: 3
குவளைத் தூவிதழ் கிள்ளித் திலகம் தைஇ	குவளையினது தூய இதழைக் கிள்ளித் திலகமிடுதல்	"துணையோ ராய்ந்த இணையீ ரோதிச் செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித் தெய்வ வுத்தியோடு வலம்புரி வயின் வைத்துத் திலகந்தைஇய தேங்கமழ் திரு நுதல்", திருமுருகு. 20 - 24
திலகமொடு பதித்தல்	நெற்றியில் திலகம் பதித்தல்	"மாக விசும்பில் திலகமொடு பதித்த திங்கள் அன்ன நின் திருமுகத்து", அகம் 253: 24 - 25
திலகம் திகழப் பொறித்தல்	குவளையை நகத் தால் கிள்ளித் திலகம் திகழப் பொறித்தல்	"கள்ளும் தேனும் ஒழுகுங் குவளைக் கமழ் பூ நெரித்து வாங்கிக் கிள்ளை வளைவா யுகிரிற் கிள்ளித் திலகந் திகழப் பொறித்து", சீவக 2439: 1 - 4
திலகம் மின்னுதல்	திலகம் என்னும் அணியை அணிதல்	"சூர் சுடர்க் குலம் எலாம் சூடினான் என, வீர பட்டத்தொடு திலகம் மின்னவே", கம்ப. 1212: 3 - 4
திலகம் நுதலில் யாத்தல்	நெற்றியில் திலகம் அணிதல்	"ஒண்ணுதல் யாத்த திலக அவிரோடைத் தொய் யில் பொறித்த வனமுலை வான்கோட்டு", கலித். 97 : 11 - 12
திலதம்	பொட்டு	"தென்திசைத் திலத மனையவர் நாங்கைச் செம் பொன் செய் கோயிலினுள்ளே", பெரிய திரு. 4: 3 : 8 : 3; "சுருளின் தோய்ந்த ஏடு உண்ட பசும்பொன் பூவும் திலதமும்", கம்ப. 8822: 1 - 2
திலதம் சுடருதல்	பொட்டு ஒளிவீசுதல்	"திலதம் சுடரும் திருமதி வாண் முகத்து", பெருங். 3 : 5 : 23
திலதம் திகழுதல்	திலகம் ஒளி வீசுதல்	"கண்ணுலாவிய கதிரொளி முடிமிசைக் கனல்விடு சுடர் நாகம் தெண்ணிலாவொடு திலகமும் ஒரு தலை திகழ வைத்தவர்", தேவா. திருஞா. 2 : 103 : 6 : 1 - 2
நெற்றிக்குறி	பொட்டு	"திலகம், புண்டரங்கம் என்பன செறி நெற்றிக் குறிகள் என்ப", நிக. சூடா. 6: 16
பொட்டு	நெற்றிப் பொட்டு	"பட்ட நெற்றியிற் பொட்டிடை யேற்றும்", பெருங். 4: 12: 88 - 89; "பொட்டணியான் நுதல்போய் இறும் பொய் போல் இடையென", திருக். 303: 1

3.2.2. புருவம்

எழுது நுண் புருவம்	மை எழுதிய புருவம்	"எழுது நுண் புருவ மேற்றி யியைவித்", பெருங். 1: 35 : 199
கருங்கொடி புருவம்	கரிய வளைந்த புருவம்	"கருங்கொடி புருவத்து மருங்கு வளை பிறைநுதல்", மணி 3: 119
புருவம் திருத்துதல்	புருவங்களைத் திருத்துதல்	"கண்மலர் வெருவிஓட விசும்பில் குலாவிய திருவிற் போல் புருவங்கள் திருத்தினான்", சீவக. 2499 : 2 - 4
மயிர்வினை	புருவம் ஒதுக்குதல் (உ.வே.சா. உரை)	"நாட்கடி மயிர் வினை நன்பொன் தாமரைப் பூக்கடி கோயிலாள் புலம்ப ஆக்கினார்", சீவக. 2413: 3 - 4

3.2.3. கண்

கண்கள் ஒப்பனையில் மையிடுதல் தொன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் பழக்கமாக அமைகிறது. உண்கண் என்ற சொல்லாட்சி இதன் செல்வாக்கை விளக்கும். அஞ்சனம் என்று மையைக் குறித்து வழங்கும் சொல்லும் பழந் தமிழகத்திலேயே வழக்கில் வழங்கி வருகின்ற ஒன்று. மையைக் கண்ணில் இட கருவிகள் இருந்தன என்பதும், மையினை மருத்துவ முறையில் தயாரித்தனர் போன்றனவும் இங்கு நாம் தெரிய வரும் செய்திகள். "கண்களுக்கு நாள்தோறும் மை தீட்டுவது அவசியம். மை இடுவதால் கண்களுக்கு அழகு, நுட்பமான பார்வை, கண் இமை மற்றும் உரோமங்கள் உறுதியாக இருப்பது போன்ற நன்மைகளைப் பெறலாம்" (தினமலர், 13-8-2006, ப. 14).

அ. அஞ்சனம்

அஞ்சனம்	கண்ணில் பூசும் மை	"வேழத்துத் தூம்புடைத் திரள்கால் சிறுதொழு மகளிர் **அஞ்சனம்** பெய்யும்", ஐங். 16 : 1 - 2; "செங்கயல் நெடுங்கண் **அஞ்சனம்**", சிலப். 4: 53; "நடுவு படிகம் நற்குங்கும வன்னம் அடைவு உள **அஞ்சனம்** செவ் வரத்தம், பால், அடியார்க்கு அருளிய முகம் இவை அஞ்சே", திருமந். 1735 : 2 - 4; "**அஞ்சனம்** போலும் மிடற்றான் தன்னை", தேவா. திருநா. 6 : 3 : 6 : 2; "அமிழ் தியல் யோகத்து **அஞ்சனம்** வகுத்து", பெருங். 1 : 34 : 15; "**அஞ்சனம்** மனோசிலை அணியரிதாரம்", பெருங் 3 : 17 : 146; "**அஞ்சனம்** அஞ்சனம் செய்தது அனைய அணிகிளர் பம்பை மஞ்சினிடை இடை எழுந்த வானமீன் பரப்பு என்ன", திருத். 3691 : 1 - 2; "காண்டலும் நோக்கிய கடைக்கண் **அஞ்சனம்** ஆண்தகைக்கு இனியது ஓர் அமுதம் ஆயதே", கம்ப. 756: 3 - 4
கண்ணகத்து அஞ்சனம்	கண்களின் அகத்திடும் அஞ்சனம்	"காதல் மிக்குழிக் கற்றவும் கைகொடா ஆதல் **கண்ண கத்து அஞ்சனம்** போலுமால்", சீவக. 1632: 1 - 2
கண்ணியல் அஞ்சனம்	கண்ணிற்கு இயற்றப் பட்ட மை	"பெண்ணியல் நல்லாய் பிரிந்தார் வரல்கூறும் **கண்ணி யல் அஞ்சனம்** தோய்ந்த போல் காயாவும் நுண்ண ரும் பூழ்த்த புறவு", கார்நாற். 8 : 2 - 4
அஞ்சன இழுது	கண்ணுக்கு இடும் மை	"மெள்ளவே இமையை நீக்கி **அஞ்சன இழுது** வேய்ந்த கள்ளவாள் நெடுங்கண் என்னும் வாளுறை கழிக்கின்றாரை", கம்ப. 4951: 5 - 8
அஞ்சனக் கொழுஞ்சேறு	கண்களில் பூசப்பட்ட மை	"கண்ணீர்ப் பெருமழை பொழிதலின் ஒண்ணிறத்து **அஞ்சனக் கொழுஞ்சேறு** அலம்பி எஞ்சா மணியும் பொன்னும் மாசறு வயிரமும் அணிகிளர் அகிலும் ஆரமும் உரிஞ்சிக்", 11ஆம் திரு. 270: 11 - 14
அஞ்சனத்தினீறு	மை	"வாரார வீக்கி மணிமே கலை திருத்தி ஆரார் அயில் வேற்கண் **அஞ்சனத்தின் நீ**றணிந்து சீரார் செழும் பந்து கொண்டடியா நின்றேன் நான்", சிறியதிரு. 20 - 22
அஞ்சனக் கண்	மை எழுதப்பட்ட கண்	"வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழி மிழலையார் **அஞ்சனக் கண்**ணுமை பங்கினர் கங்கையங் காடிய மஞ்சனச் செஞ்சடை யாரென வல்வினை மாயுமே", தேவா. திருஞா. 3 : 9 : 3 : 2 - 4; "திருவால வாயுறையுஞ் செல்வனாரும் **அஞ்சனக் கண்** அரிவையொரு பாகத் தாரும் ஆறங்கம் நால்வேதமாய் நின்றாரும்", தேவா. திருநா. 6: 59: 8: 2 - 4; "இரங்கும் இன்சொலார் **அஞ்சனக் கண்ணின்** நீர் அருவி சோர்தர பஞ்சரத்து இருந்து

		அழும் கிளியின் பன்னினார்'', கம்ப. 1799 : 2 - 4; ''பஞ்சரத்தொடு, பசு நிறக் கிளி வெந்து தைப்ப, அஞ்சனக் கணின் அருவிநீர் முலை முன்றில் அலைப்ப'', கம்ப. 5969 : 1 - 2; ''பஞ்சு என, சிவக்கும் மென் பாதப் பேதையர் அஞ்சனக் கண் எனப் பிறழ்ந்த ஆடல்மீன்'', கம்ப. 4260: 3 - 4
அஞ்சன நயனம்	மை பூசிய கண்	''நஞ்சினின் நளிர்நெடுங் கடலின், நங்கையர் அஞ்சன நயனத்தின் அவிழ்ந்த கூந்தலின்'', கம்ப. 4151 : 1 - 2
அஞ்சன நோக்கம்	அஞ்சனம் இடப்பட்ட கண்	''மஞ்சு அன மேனியான்தன் மணிநிறம், மாதரார்தம் அஞ்சன நோக்கம் போர்க்க இருண்டதோ? அறிகிலே மால்'', கம்ப. 1072
அஞ்சனப் பூழி	அஞ்சனப் பொடி	''அஞ்சனப் பூழி அரிதாரத்து இன் இடியல்'', சிலப். 24 : 22
கண்ணஞ்சனத்தர்	கண்ணில் அஞ்சனம் தீட்டியவர்	''கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர் உண் ணின் றுருக்குவர் அன்னே என்னும்'', திருவாச. அன்னைப். 2 : 1 - 2
அஞ்சனம் ஆடுதல்	அஞ்சனம் பூசுதல்	''வரிகிடந்து அஞ்சனம் ஆடி மணிகள் உருவம் நடுவு உடைய வாகிப்'', 11ஆம் திரு. 300 : 182
அஞ்சனத்தை இட்டு அழகாக்குதல்	கண்களுக்கு மை தீட்டுதல்	''சாலவும் வஞ்சனை செய்து மனங்கவரும் கண்ணுக்கு அஞ்சனத்தை இட்டங்கு அழகாக்கி.'', 11ஆம் திரு. 300 : 92 - 93
அஞ்சனம் எழுதுதல்	மையிடுதல்	''அற்புத வடிக்கண் வாளிக்கு அஞ்சனம் எழுதி, அந்தில் கற்பகம் கொடுப்ப வாங்கி கலன் தெரிந்து அணிகின்றாரை'', கம்ப. 4943: 5 - 8
புனையப்பட்ட அஞ்சனம் எழுதுதல்	கண்களில் கை செய்யப் பட்ட அஞ்சனத்தை எழுதுதல்	''நினைய லாகா நெடுவாழ்க்கை வென்றிக் கோல விளக்காகப் புனையப்பட்ட அஞ்சனத்தைப் புகழ வெழுதிப் புனைபூணான்'', சீவக. 2357 : 2 - 3
அஞ்சனம் கான்றுதல்	மை கரைந்து சிந்துதல்	''காவி உண்கண் அஞ்சனம் கான்றிடக் கலுழா'', கம்ப. 1493 : 3
அஞ்சனஞ் சேர்தல்	மை தீட்டப் பெறுதல்	''அஞ்சனஞ் சேர் கண்ணார் அருவருக்கும் அப்பத மாய்க் குஞ்சி வெளுத்துடலம் கோடாமுன்'', 11ஆம். திரு.159 : 1 - 2
அஞ்சனம் சேராமை	மையெழுதப்படாமை	''பவளச் செவ்வாய்த் தவளவாய் நகையும் அஞ்சனஞ் சேராச் செங்கயல் நெடுங்கண்ணும்'', மணி. 18 : 160 -161
அஞ்சனத்தை முன்னூட்டுதல்	செய்த மையை முதலில் கண் களுக்கு இடுதல்	''மைப் பகரும் காவியங் கண்ணைக் கதந்தணிப்பாள் போலத்தன் தாவிய அஞ்சனத்தை முன்னூட்டி - யாவரையும் ஆகுலம் ஆக்கும் அழகினாள்'', 11ஆம் திரு. 300 : 160 - 162
அஞ்சன இழுது வேய்தல்	மை பூசுதல்	''அஞ்சன இழுது வேய்ந்த கள்ள வாள் நெடுங் கண் என்னும்'', கம்ப. 4951 : 3 - 4
அஞ்சனத்தொடு மையணிதல்	அஞ்சனத்தையும் மையையும் அணிதல்	''மஞ்சு சூழ்வரை மார்பனைக் காணிய துஞ்ச லோம்பு மின் என்னவுந் துஞ்சினீர் அஞ்சனத்தொடு மை யணி மின்என நெஞ்சில் நீள் நெடுங் கண்மலர் சீறினாள்'', சீவக. 1373 : 1 - 4
கோல்	அஞ்சனக் கோல்; கண்ணிற்கு மை தீட்டுங் கோல்	''எழுதுங் காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கண் பழிகாணேன் கண்ட விடத்து'', குறள். 1285
அஞ்சனக் கோல்	மை எழுதும் கோல்	''அஞ்சனக் கோலி னாற்றா நாக மோ ரருவிக் குன்றிற் குஞ்சரம் புலம்பி வீழக் கூர் நுதி யெயிற்றிற் கொல்லும்'', சீவக. 1894: 1 - 2

ஆ. மை

உண்கண்	மை தீட்டிய கண்	"மெல்லம் புலம்பன் பிரிந்தெனப் பல்லித ழுண்கண் பாடொல்லாவே", குறுந். 5 : 4 - 5; "குன்ற நாடன் கேண்மை யென்றும் நன்றுமன் வாழி தோழி யுண்கண் நீ ரொ டொராங்குத் தணப்ப", குறுந். 38 : 3 - 5; "தண்டுறை யூரன் றெளிப்பவும் உண்கண் பசப்பதெவன் கொலன்னாய்" ஐங். 21 : 3 - 4; "எரிமயங்கு கானம் செலவு உரைப்ப நில்லா அரிமயங்கு உண்கண்ணுள் நீர்" ஐந். எழு. 37 : 3 - 4; " எரிபரந்த கானம் இயை பொருட்குப் போவீர் அரிபரந்த உண்கண்ணாள் ஆற்றாமை நும்மின் தெரிவார்யார் தேரும் இடத்து", திணை. ஐம். 12: 3 - 4; "எழுமுடிகெழீஇய திருஞெம ரகலத்துப் புரையோர் உண்கண் துயில் இன்பாயல்", பதிற்.16: 17 - 18; இகழு நர் சொல்லஞ்சிச் சென்றார் வருதல் பகழி போல் உண் கண்ணாய் பொய்யன்மை", கார்நாற். 5 : 1 - 2; "அண் கண்ணி வாடாமையால் நல்ல என்(று) ஆற்றான் உண் கண்ணி வாடாள் உடன்று", திணை. நூற். 21 : 3 - 4; "இருகயல் உண்கண் இளையவளை வேந்தன் தருகென்றால் தன்னையரு நேரார்", பழ. நா. 326 : 1 - 2; "செய்யான் சிறியா ரினஞ் சேரான் - வையான் கயலியலுண் கண்ணாய் கருதுங்கா லென்றும்", ஏலாதி. 14 : 2 - 3; "கடமா இரிந்தோடும் கல்லதர் அத்த மடமா இரும்பிடி வேழமரு... உண்கண்ணுள்நீர்", கைந். 17 : 1 - 3; "எதிர்மலர் புரையுண்கண் எவ்வநீர் உகுத்தனவே", சிலப். 7: 41: 2; "ஐயரியுண்கண் அவன்துயர் பொறஅள்", மணி. பதி. 77; "உண்கண் சிவந்தாங் கொல்கு கொடி", மணி. 7 : 51; "மலரே ருண்கண் மாதர்க் கமைந்த", பெருங். 1 : 35 - 60; "தாடி மிகவா வரிபரந் தகன்ற மாழை யுண்கண் மலரென மதித்துத் தண்செங்கழுநீர்த் தகைமலர்த்தாதும்", பெருங். 1: 40 : 300 - 302; " கருங்கே ழுண்கண் கயலெனப் பிறழ்ந்து பெருங்கயத் தாமரைப் பெற்றிய வாகத்", பெருங். 3 : 14: 119 - 120; "அத்திறத் தொன்றி யெத்திறத் தானும் குவளை யுண்கண் இவளொடு புணர்ந்த காலை அல்லது கோலக் குருசில்", பெருங். 3: 17: 117 - 119; "அடியேற் கியைவ திதுவென விடலும் வடிவே லுண் கண் வாசவதத்தை", பெருங். 4: 13: 125 - 126; "பருவ மங்கையர் பங்கய வாள் முகத்து உருவ உண் கணை, 'ஒண் பெடைஆம்' எனக் கருதி, அன்பொடு காமுற்று", கம்ப. 54 : 1 - 3; "ஊழி திரிவது எனக் கோயில் உலையும் வேலை, மற்று ஒழிந்த மாழை உண்கண் தேவியரும், மயிலின் குழாத்தின் வந்து இரைத்தார்", கம்ப. 1908 : 5 - 8; "சாலத் தவளம்" என்று உரைக்கும் வண்ணம் சிவந்து, தேன் ததும்பும் ஆயின் குவளை உண் கண்ணி வண்ண வாய் அது குறியும் அஃதே", கம்ப. 4495 : 4 - 8; "உள்ளுடை மயக்கால் உண்கண் சிவந்து வாய் வண்மை ஊறி", கம்ப. 4945 : 1 - 2; "கவிர் ஒளிச் செக்கர் கற்றை ஓதியா, மழை உண்கண்ணா அவிர் மதி நெற்றியாக, அந்தி வான் ஒக்கின்றாரும்", கம்ப. 5016 : 5 - 8; "குடங்கையின் அகன்ற உண்கண் கடைசியர் குழுமி ஆடும் இடம்படு பண்ணைதோறும் எழுவன மருதம் பாடல்", திருத். 838 : 1 - 4
மை	கண்ணில் இடும் இருண்ட பொருள்	"மை கூர்ந்து மலர் பிணைத் தன்னமாயிதழ் மழைக் கண்", நற். 252: 8; "மையனைய கண்டத்தாய்", தேவா.

		திருநா. 6 : 44 : 10 : 1; "அஞ்சனம் குற்றம் கருநிறம் மலடு மஞ்சயாடும் மை எனலாகும்", நி. பிங். 10 : 967
மைஅரிநெடுங்கண்	மையிட்டுச் செவ்வரி படர்ந்த நீண்ட கண்	"**மைஅரிநெடுங்கண்** நோக்கம் இமைத்தலும், மயங்கி நின்றார்", கம்ப.706: 7 - 8
மைஆர உண்டகண்	நிரம்ப மையிட்ட கண்	"பொய்யாகத் தம்மைப் பொருளல்லார் கூறுபவேல் **மையார உண்டகண்** மாணிழாய்! என்பரிவ செய் யாத எய்தா வெனின்", பழ. நா. 56 : 2 - 4
மைத்தகு மதர்விழி	மையணிந்த விழி	"**மைத்தகு மதர்விழி** மலைமகளுருவொரு பாகமா வைத்தவர் மதகரி யுரிவை செய்தவர் தமை மருவினார்", தேவா. திருஞா. 3 : 85: 3 : 1 - 2
மைத் தடங்கண்	மை பூசிய பெரிய கண்	"**மைத் தடங்கண்**ணார் மைந்தர் தம்முடன்", சிலப். 22: 120; "சுருள்புரி கூழையர் குழலிற் பட்டுன் திறம் மறந்திங் கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் **மைத்தடங்கண்** வெருள்புரிமான் அன்ன நோக்கிதன் பங்கவிண்ணோர் பெருமான்", திருவாச. அடைக்கலப். 5: 1 - 3; "**மைத்தடங்கண்** ணார் தமக்கும் எற் பயந்த சித்திரா பதிக்குஞ் செப்பு நீயென", மணி. 2: 70 - 71; "பின்னைய∴. தாராய்ந்து கொள்குறுதல்- இன்னியல் **மைத்தடங் கண்** மாதராய் அ∴தாதல் வெண்ணெய் மேல் வைத்து மயில் கொள்ளுமாறு", பழ. நா. 210 : 2 - 4; "**மைத் தடங் கண்**ணியர், மைந்தர், யாவரும் பைந்தலை அரவு எனக் கனன்று", கம்ப. 5806: 1 - 2
மைத்தலை நெடுங்கண்	மைதீட்டிய நீண்ட கண்	"**மைத்தலை நெடுங்கண்**ணாரும் மைந்தரும் மறலிஆட", சீவக. 963 : 3
மைந்நிற கண்	மை நிறைந்த கண்	"நெய் நிறை வேலவன்; மங்கையர் நேர்ந்தார் **மைந் நிற கண்**ணியர், வான் உறை நீரார்", கம்ப. 1260: 2 - 3
மைப்புரை கண்	மைதீட்டப் பெற்ற கண்	"**மைப்புரை கண்**ணுக்கு வார்புனல் கங்கையைத் தான் மனத்துக்கு ஒப்ப இல்லா", 11ஆம் திரு. 217 : 3 - 5
மைபூத்துஅலர்ந்த கண்	மை பூசிய மலர்ந்த கண்	"**மைபூத்தலர்ந்த** மழைக் **கண்** மாழை மானேர் நோக்கிற் கொய்பூங் கோதை மடவார் கொற்றங் கொள்கென்று ஏத்தப்", சீவக. 2198: 1 - 2
மைம்மலர்க் கண்	மையூட்டப் பெற்ற மலர் போன்ற கண்	"பன்மர மெல்லாம் பணிந்தன குரங்க **மைம்மலர்க் கண்**ணியு மகிழ்ந்து மெய்ம்மறப்ப", பெருங். 3 : 14 : 283 - 284
மைய கண்	மையுண்ட கண்	"மெய்யகம் மிளிரும் வெண் நூலர் வேதியர் **மைய கண்** மலை மகளோடும் வைகிடம்", தேவா. திருஞா. 3 : 18 : 2 : 1 - 2
மையால் தளிர்க்கும் மலர்க் கண்	மையிடுவதால் அழகு பெற்று விளங்கும் கண்கள்	"**மையால் தளிர்க்கும் மலர்க் கண்**கள் மாலிருள் நெய்யால் தளிர்க்கும் நிமிர் சுடர்", நான்மணி. 37 : 1 - 2
மையுடை வாள்கண்	மைதீட்டிய கண்	"மெய்யுடையார்க்கவன் அம்பலம் போல மிக நணுகும் **மையுடை வாட்கண்** மணியுடைப் பூண்முலை வாணுதல் வான்", திருக்கோ. 48 : 2 - 3
மையுண்டு மதர்த்த நெடுங்கண்	மையணிந்த நீண்ட பெரிய கண்	"ஐயரி பரந்த அரிமலர் **நெடுங்கண் மையுண்டு மதர்த்த** மணியொழுக் கேய்ப்ப", பெருங். 1 : 40 : 218 - 219
மையெழிலுண்கண்	கருமையும் அழகும பொருந்திய மையுண்ட கண்	"**மையெழி லுண்கண்** மயிலன்ன சாயலாய் ஐயந்தீர் காட்சி யவர் வருதல்", கார்நாற். 12 : 1 - 2

மையேர் தடங்கண்	மைதீட்டிய அழகான பெரிய கண்கள்	"மையேர் தடங்கண் மயிலன்னாய் சாயலே மெய்யே உணர்ந்தார் மிக உரைப்பார்", ஏலாதி. 28: 1 - 2
மை இடுதல்	மை பூசுதல்	"மைஇட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே மெய் விட்டுப் போக விடைகொள்ளுமாறே", திருமந். 151 : 3 - 4
மையினால் கண்ணெழுதல்	கண்ணுக்கு மை எழுதுதல்	"ஆவியார் போவதுமே அகத்தார் கூடி மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி மயானத்திலிடுவதன் முன் மதியஞ் சூடி", தேவா. திருநா. 6 : 61 : 7 : 2 - 4
எழுதுதல்	மை எழுதுதல்	"எழுது வாணெடுங் கண்ணிணை யந்நலார் மெழுகு குங்கும மார்பிடை", சீவக. 133 : 1 - 2
கண் எழுதுதல்	கண்ணில் மை எழுதுதல்	"முழுது மெய்ந் நல மூழ்கலி னீர்சுமந் தெழுது கண்ணிரங்கப்", சீவக. 2670: 1 - 2; "ஒருகண் எழுதி விட்டு ஒன்றெழுதாது ஓடித்தெருவம் புகுவார் திகைப் பார்", 11ஆம் திரு. 300 : 73
மையும் கண்ணில் மருங்கு ஒதுக்குதல்	கண்ணின் பக்கத்தில் மையை ஒதுக்குதல்	"மஞ்சள் அழிந்த அதற்கு இரங்கி மையும் கண்ணில் மருங்கு ஒதுக்கி", திருத். 3724 : 3 - 4
மைகூர்தல்	மை எழுதப்படுதல்	"ஐதேய்ந்து அகன்ற அல்குல் மைகூர்ந்து மலர் பிணைந்தன்ன மாயிதழ் மழைக்கண்", நற். 252 : 8 - 9
மைக் கொள்ளுதல்	மை பூசுதல்	"செக்கர் மாமதி சேர்மதில் சூழ்தெளிச் சேரியீர் மைக் கொள் கண்ணியர் கைவளை மால்செய்து வெளவவே நக்க ராயுல கெங்கும் பலிக்கு நடப்பதே", தேவா. திருஞா. 2 : 3 : 5 : 2 - 4; "பொன்னிழை சுடரப் பொம்மென வுராஅய் மைகொள் கண்ணியர் வெய்துயிர்த் திரிய மாவீழோதி மதன மஞ்சிகையும்", பெருங். 5 : 9 : 61 - 63
மைச் செறிதல்	மை பூசுதல்	"மைச்செறிந்து அனைய மேனி வன்தொழில் மறவர்", திருத். 656 : 1 - 2
மைதோய்தல்	மையூட்டப் பெறுதல்	"ஐதேந் தல்குலு மாகமு மசைஇ மைதோய் கண்ணி மதியின் மெலிய பசைவுறு காதற் பட்டத் தேவி", பெருங். 5 : 1 : 209 - 211
மைச்சு அணிதல்	மை அணியப் பெறுதல்	"மைச்சு அணிவரி அரி நயனி தொல் முதுமகள்", தேவா. திருஞா. 3 : 87 : 4 : 1
மைந்நூறு	மையாகிய பொடி	"மைந்நூறு வேற்கண் மடவார் மனம் போல் மாய்ந் தார்", சீவக. 453 : 4
மைப்படிதல்	மை பூசியிருத்தல்	"மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி மயானத் தான் வார்சடையான் என்னி னல்லான்", தேவா. திருநா. 6 : 97 : 10 : 1 - 2
மைப் பயத்தல்	மை பூசுதல்	"மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக் கைப் பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்", தேவா. திருஞா. 2 : 47 : 2 : 1 - 2
மைப்புறுதல்	மைதீட்டப்படுதல்	"மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின் வணங்கு கின்றார் அணங்கின் மணவாளா", திருவாச. திருப்பள்ளி. 6 : 3 - 4
மைப் பொலிதல்	மை விளங்குதல்	"மைப் பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்தி ரனும் எப்பிறவி யுந்தேட", திருவாச. திருஅம். 12 : 1 - 2
மையாடுதல்	மை பொருந்துதல்	"மையாடு கண்மடவாள் பாகத் தானே மான்தோல் உடையா மகிழ்ந்து நின்றாய்", தேவா. திருநா. 6: 99: 8: 3 - 4
மையார்தல்	மைதீட்டப் பெறுதல்	"மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு கையார் பிரிவித்தல் காண்", திணை. நூற். 5: 3 - 4; "சடையுடை யானும் நெய்யாடலானுஞ்சரி கோவண உடையுடை

		யானும் மையார்ந்த வொண்கண் உமைகேள்வனும்”, தேவா. திருஞா. 3 : 8 : 1 : 1 - 2; “மையார் கண்ணியை யொய்யா னாகிக் கையிகந் தனனாற் காவலன் மகன் எனக்”, பெருங். 1 : 46 : 204 - 205; “ஒண்முக விரலிற் கண்முக ஞெமிடி மையார் நெடுங்கண் மாலை யாமத்துப் பையாந்து பொருந்திப் பள்ளி கொள்வோய்”, பெருங். 1 : 46 : 301 - 303; “செய்யாரக் கொணர்ந்தெற்றி யோர் பெண்ணை வடபால் மையார் தடங்கண்ணியர் ஆடும் துறையூர்”, தேவா. சுந்தர. 2 : 8 : 2 - 3; “செய்யா! வெண்ணீறாடி! செல்வா! சிறுமருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளா!”, திருவாச. திருவெம். 11 : 5 - 6; “மையார் தடங்கண் மடந்தைக்கொன் றருளா தொழிவது மாதிமையே”, திருவி. 58 : 7 - 8; “பொய்யால் தொழினும் அருளும் இறைகண்டம் போல் இருண்ட மையார் தடங்கண் மடந்தையர் கேட்கிற் பொல்லாது வந்து”, 11ஆம் திரு. 290 : 1 - 4; “மையார் நெடுங்கண்ணாள் மாமணி யாழ்”, சீவக. 736 : 1
மையிற் புனைதல்	மை தீட்டி அழகு படுத்துதல்	“தெள்ளும் மணி செய் சுண்ணம் இலங்கத் திருநீர்நுதலின் அப்பி உள்ளம் பருகி மதர்த்த வாட்கண் உருவம் மையிற் புனைந்தாள்”, சீவக. 2439 : 3 - 4
மையுண்டமர்தல்	மை எழுதிய கண் அழகு மிகல்	“பொய் கொண்டறைபோய்த் திரிபவர்க் கென்கொலோ மையுண்ட மர்ந்தகண் மாணிழாய்! சான்றவர் கையுண்டும் கூறுவர் மெய்”, பழ. நா. 83 : 2 - 4
மைவளர்தல்	மை தீட்டுதல்	“நனவிற் தோன்றிய நறுநுதற் சீறடி மைவளர் கண் ணியை யெய்தும் வாயில்”, பெருங். 3 : 7 : 64 - 65; “கொய்து கொண்டுடீஇய கோடி நுண்டுகில் மைவளர் கண்ணி மருங்குல் வருத்தக்”, பெருங். 3 : 22 : 228 - 229; “மைவளர் கண்ணியை வாங்குபு தழீஇக்”, பெருங். 1 : 14 : 146
மை விரவுதல்	மை தீட்டுதல்	“மைவிரவு கண்ணா ளைப் பாகங் கொண்டாய் மான் மறிகை ஏந்தினாய்”, தேவா. திருநா. 6 : 99 : 3 : 3 - 4
மைப்பு உலாவுதல்	மை தீட்டுதல்	“தப்பிலாது பொற்கழல்களுக் கிடாது நான் தடமுலை யார் தங்கள் மைப்பு லாங்கண்ணால் ஏறுண்டு கிடப் பேனை மலரடி யிணை காட்டி”, திருவாச. அற்புதப். 7 : 3 : 6
வரி வனப்பு	மை எழுதிய அழகு	“வல்லோன் தைஇய வரி வனப்பு உற்ற அல்லிப் பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப”, புறம். 33 : 16 - 17; “மாதர் செங்கண் வரி வனப்பு அழித்து”, மணி. 3 : 8

3.2.4. மூக்கு

மூக்குயர்த்தல்	குழந்தைகளின் நாவில் இனிய தேனிலே அதிவிடயத்தையும் திப்பிலியையும் தேய்த்துக் குழைத்துத் தடவி உண்ணாக்கை உருஞ்சி மூக்கை உயர்த்துதல்	"பாடற்கினிய பகுவாயுங்கண்ணும் பெருக உகிருறுத்தித் தேடித் தீந்தேன் திப்பிலிதேய்த் தண்ணா வுரிஞ்சி மூக்குயர்த்தார்", சீவக 2703: 5 - 8

3.2.5. வாய்

வாயும் கண்ணும் பெருக உகிர் உறுத்துதல்	வாயும் கண்ணும் பெரிதாகுமாறு விரல் நகத்தால் உதட்டை அகலமாக்குதல்	"பாடற்கினிய பகுவாயுங் கண்ணும் பெருக உகிரு றுத்தித் தேடிந் தீந்தேன் திப்பிலிதேய்த் தண்ணா வுரிஞ்சி மூக்குயர்த்தார் ", சீவக. 2703: 5: 8
அலத்தகம் எழுதியிடுதல்	வாயில் செம்பஞ்சு பூசுதல்	"அம்மலரடியும் கையும் அணிகிளர் பவள வாயும்........ அலத்தகம் எழுதி யிட்டாள்", சீவக. 2446 : 1 - 3
அலத்தக விரைக் குமுத வாய்	செம்பஞ்சு ஊட்டப் பெற்ற வாய்	"விண்டு அலத்தக விரைக் குமுத வாய் விரிதலால் அண்டம் உற்றுள்ளது", கம்ப. 5709 : 3 - 4

3.2.6. இதழ்

இலவு இதழ்பொலி கோலம் எழில்பெற இடுதல்	இலவம் பூப்போலச் சிவந்த தங்கள் அழகிய உதடு களிலே அழகுறக் கோலம் இட்டு கொள்ளுதல்	"இலவு இதழ் பொலி கோலம் எழில்பெற இடுவாரும்", கம்ப. 1188: 3 - 4

3.2.7. கன்னம்

கொடிறு செம்பஞ்சி உண்ணுதல்	கன்னத்தில் செம் பஞ்சுக் குழம்பு பூசுதல்	"உகிரும் கொடிறும் உண்ட செம்பஞ்சியும்', பரி. 6 : 17

3.2.8. காது

காது ஒப்பனையில் முதலிடம் பெறுவது காது சுரையில் குத்திக் காதணி அணிதல். இதன் தொடக்கம் தொன்மை வாய்ந்தது. தமிழரின் தொன்மையான பழக்கம் என்ற நிலையில், காதணிக்குப் பயன்பட்ட பொருட்களும் இயற்கைப் பொருட்களே. இன்று வழக்கில் காணப்படும் சில சொற்களும் இதனை உணர்த்தும். தோடு, குழை, ஓலை போன்ற அன்றைய சொற்களில் இன்று தோடு உண்டு. எனினும் 'கம்மல்' என்ற பிற்காலச் சொல்லே இன்று பெருவழக்கு பெற்று நிற்கிறது.

அ. காது துளையிடுதல்

காது குத்தல்	காது குத்துதல்	"கேசவ நம்பீ! உன்னைக் காதுகுத்த ஆய்பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார்", பெரியாழ். 2: 3: 1: 3 - 4
காது பெருக்குதல்	காது வளர்த்துதல்	"சேரியிற் பிள்ளைகள் எல்லாரும் காது பெருக்கித் திரியவும்", பெரியாழ். 2: 3: 10: 4
வார்காது தாழப் பெருக்குதல்	குழையையிடுவதற் காகக் காதைத் தொங்கும்படி வளர்த்தல்	"வார்காது தாழப் பெருக்கி அமைத்து மகரக் குழையிட வேண்டி", பெரியாழ். 2 : 3 : 13: 1; "வயிரக் கடிப்பிட்டு வார்காது தாழப் பெருக்கி", பெரியாழ். 2: 3: 4: 1
காது வடித்தல்	காது தொங்கும் படியாக வளர்த்தல்	"வெண்கோடல் இலைச் சுருளில் பைந்தோட்டு விரைத் தோன்றித் தண்கோல மலர் புனைந்த வடிகாதின் ஒளி தயங்க", திருத். 946 : 1 - 2
காதொன்று களைதல்	காதில் உள்ள அணி யைக் கழற்றுதல்	"கூழைவிரித்தல், காதொன்று களைதல், ஊழணி தைவரல், உடை பெயர்த்து உடுத்தலொடு, கெழீஇய நான்கே இரண்டென மொழிப", தொல். 1208
காதில் திரி இடுதல்	காது தூராமல் இருக்க திரியிடுதல்	"உன் காது தூரும் கையில் திரியை இடுகிடாய்", பெரியாழ். 2: 3: 9: 3 - 4

ஆ. மலர்கள்

பிண்டி யொண் தளிர் வண்காது நிறைதல்	பிண்டியினுடைய ஒள்ளிய தளிரைக் காதில் அணிதல்	"வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர் நுண்பூணாகம் திளைப்பத்", திருமுருகு. 31 - 32
பிண்டி காதில் செருகுதல்	காதில் அசோக மலரைச் செருகுதல்	"சுடுநீர் வினைக் குழையின் ஞாலச் சிவந்த கடிமலர்ப் பிண்டிதன் காதிற் செரீஇ", பரி. 12 : 87 - 88
ஒண்பூம் பிண்டி யொருகாது செரீஇ	அசோகினது அழகிய தளிரைக் காதில் அணிதல்	"ஒண்பூம் பிண்டியொரு காது செரீஇ யந்தளிர்க் குவவு மொய்ம் பலைப்பச் சாந்தருந்தி", குறிஞ். 119 - 120
சாய்குழை பிண்டித் தளிர் காதில் தைஇ	அசோகந் தளிரைக் காதில் அணிதல்	"சாய்குழை பிண்டித் தளிர் காதில், தையினாள்; பாய்குழை நீலம் பகலாகத் தையினாள்; குவளைக் காதின் கோலச் செவியின் இவள் செரீஇ, நான்கு விழிபடைத்தாள்", பரி. 11 : 95 - 98
இனமலர்ப் பெண்ணை (ஈர்ந்)தோடு திருத்தல்	காதோலையினைச் சீர்திருத்தல்	"புனைமலர்ப் பிணையல் புரவலன் சூட்டி இனமடற் பெண்ணை ஈர்ந்தோடு திருத்திச்", பெருங். 2: 16: 1 - 2
வடி காதில் மலர் புனைதல்	வடிந்த காதில் மலர் அணிதல்	"வெண்கோடல் இலைச் சுருளில் பைந்தோட்டு விரை தோன்றித் தண்கோல மலர்புனைந்த வடிகாதின் ஒளி தயங்கத்", திருத். 946 : 1 - 2

கோது இல் கன்னப் பூ	காதுகளிலே வைக்கத் தக்க மலர்	"சின்னப்பூ, செருகும் மென்பூ, சேகரப் போது, கோது இல் கன்னப்பூ, கஞல", கம்ப. 1133 : 1 - 3

இ. அணிகலன்கள்

செம்பொன் னோலை	செம்பொன்னாலான தோடு	"செம்பொன்னோலை வீழவுஞ் செய்கலன்கள் சிந்தவும் அம்பொன் மாலை யோடசைந் தவிழ்ந்து கூந்தல் சோரவும்", சீவக. 1103 : 1 - 2
செம்பொன் ஓலை சேடுபடச் சுருக்குதல்	செம்பொன்னாலாகிய ஓலையை அழகு உண்டாகச் சுருக்கி அணிதல்	"ஒண்கதிர் மதிமுகம் ஒளியொடு சுடரச் செம்பொன் ஓலை சேடுபடச் சுருக்கி", பெருங். 3: 22: 224-225
செம்பொன் ஓர் ஓலை சேர்த்தல்	செம்பொன்னாலான ஓர் ஓலையைக் காதில் அணிதல்	"திருநிற முகத்திற்கேற்பச் செம்பொன் ஓர் ஓலை சேர்த்தி எரிநிறக் குழையோர் காதிற்கு இருளறச் சுடர வைத்தான்", சீவக. 696 : 3 - 4
பொன்செயோலை	பொன்னாலியன்ற காதோலை	"பொன்செயோலையொடு பூங்குழை நீக்கி", பெருங். 1: 34: 198; "புதுவிரி பொன்செய் ஓலை", தேவா. திருநா. 4 : 8 : 10
பொன்ஓலை மின் செய்தல்	பொன்னால் செய்த ஓலை ஒளிவிடுதல்	"எழின் மணிக் குழைவில் வீசவின் பொனோலை மின் செய", சீவக. 1952 : 3
பொன்னோலை மின்னுகுத்தல்	காதணி ஒளி வீசுதல்	"பொங்கப் பொன்னோலை வட்டம் பொழிந்து மின்னுகுப்ப", சீவக. 677 : 2
பொன்னோலை மின்னுதல்	காதில் அணிந்திருந்த பொன் ஓலை ஒளி வீசுதல்	"ஒண்மணிக் குழைவில் வீச ஒளிர்ந்து பொன் ஓலை மின்ன வண்ணமே கலைகள் ஆர்ப்ப வான்சிலம் பொலிப்ப", சீவக. 1689 : 1 - 2; "இலங்கு பொன் னோலை மின்ன இன்முகஞ்சிறிது கோட்டி", சீவக. 2060 : 1
கடிப்பிணை	காதணி	"கடிப்பிணை வல்லிகை வேடகம் காதிற்கு அணிப் பெயர் தோடும் ஆகும் என்ப", நிக. தி. 7 : 71
மணிசெய் கடிப் பிணை	மணியினால் செய்யப் பட்ட ஒருவகைக் காதணி	"மணிசெய் கடிப்பிணை மட்டஞ்செய்து", பெருங். 1: 34: 199
மைஆர் கடிப் பிணை	நீலக் கடிப்பிணை	"மைஆர் கடிப்பிணையும் வார் குழையும் களைந்து இடுவார் கையால் வயிறு அதக்குவார்", சீவக. 295 : 3
கடிப்பிணை காது சேர்த்தல்	கடிப்பிணை என்னும் ஆபரணத்தைக் காதில் அணிதல் குதம்பைப் போல்வ வதொரு ஆபரணம் காதைப் பெருக்கு வதற்கு இடப்படுவது (உ.வே.சா.)	"காதுசேர்ந்த கடிப்பிணை கையது தாதுமல்கிய தண்கழுநீர் மலர்", சீவக. 1323 : 1 - 2; "கடிப்பிணை காது சேர்த்திச் சிகழிகை காதம் நாறத்தொடுத்தவர் மாலைச் சூட்டிக் கிம்புரி முத்த மென்தோள்", சீவக. 2091 : 1 - 2
கடிப்பிணை மட்டஞ் செய்தல்	கடிப்பிணை என்னும் காதணிகளை இரு செவிகளிலும் சமமாகத் தொங்கவிடுதல்	"மணிசெய் கடிப்பிணை மட்டஞ் செய்து", பெருங். 1 : 34 : 199
இந்திர நீலக் கடிப் பிணை அங்காது வயின் அழகுற அணிதல்	நீலமும் வைரமும் பதிக்கப்பட்ட காதணி யாகிய இந்திர நீலக் கடிப்பிணை என்னும் காதணியை அணிதல்	"இந்திரநீலத் திடையிடை திரண்ட சந்திரபாணி தகை பெறு கடிப்பிணை அங்காதக வயினழ குறவணிந்து", சிலப். 6: 103 - 104

கடிப்பு	காது வளர்க்கும் அணி	"கடிப்பு இகு காதிற் கனங்குழை தொடர", பரி. தி. 1: 33
கனகக் கடிப்பு	பொற்கடிப்பு	"கண்ணுக்கு நன்றும் அழகும் உடைய கனகக் கடிப்பும் இவையா", பெரியாழ். 2 : 3 : 2 : 1
செம்பொற் கடிப்பு	செம்பொன்னால் இயன்ற கடிப்பு எனும் காதணி	"முத்தப் பேரணி முழுக்கல மொழித்துச் சிப்பப் பூணுஞ் செம்பொற் கடிப்பும் ஏகவல்லியும் ஏற்பன அணிந்து", பெருங். 3 : 9 : 65 - 67
பத்திக் கடிப்பு	காதணி	"மகரிகை நிறைய வெகிர்முக மாக்கிப் பாடிமகளிர் விழையுஞ் சேடொளிப் பத்திக் கடிப்பும் பவழத் திரியும்", பெருங். 3: 17 : 161 - 163
வயிரக் கடிப்பு	வயிரக் கற்கள் பதித்துச் செய்த கடிப்பு	"வணநன்று உடைய வயிரக் கடிப்பிட்டு வார்காது தாழப் பெருக்கி", பெரியாழ். 2 : 3 : 4 : 1
கடிப்பு இடுதல்	காதில் கடிப்பு அணிதல்	"காதில் கடிப்பிட்டுக் கலிங்க முடுத்து தாது நல்ல தண்ணந்துழாய் கொடணிந்து", பெரியதிரு. 10 : 8 : 1 : 1 - 2; "கடிப்பொன்றும் நோவாமே காதுக்கிடுவன்", பெரியாழ். 2: 3: 11: 3
வயிரக் கடிப்பு இடுதல்	வயிரக் கடிப்பை அணிதல்	"வணநன்று உடைய வயிரக் கடிப்பிட்டு வார்காது தாழப் பெருக்கி", பெரியாழ். 2 : 3 : 4 : 1
கடிப்புப் பெயர்த்து அணிதல்	காதணிகலன்களைக் கழற்றி மீண்டும் திருத்தமுற அணிதல்	"மதுக்களி கொண்ட மதரரி நெடுங்கண் கடைத்துளி துடைத்துங் கடிப்புப் பெயர்த் தணிந்தும்", பெருங். 2 : 16 : 74 - 75
மங்கலக் கடிப்புச் சேர்த்தல்	மங்கலமான காது அணியை அணி வித்தல்	"நெய்விலைப் பசும்பொற்றோடும் நிழன்மணிக் குழையும் நீக்கி மைவிரி குழலினாளை மங்கலக் கடிப்புச் சேர்த்திப் பெய்தனர் பிணையன் மாலை", சீவக. 488: 1 - 3
பத்திரக்கடிப்பு மின்னுதல்	கடிப்பு அழகாக ஒளிவிடுதல்	"பத்திரக் கடிப்பு மின்னப் பங்கியை அம்பிற்கட்டிக் கொத்தார்த் தும்பை சூடிக் கோவிந்தன் வாழ்க என்னாக்", சீவக. 2277 : 1 - 2
எரியும் மணியின் இயன்ற கடிப்பு வாங்குதல்	பலநிற ஒளிவீசும் மிக்க அழகிய மணி களாலான கடிப்பு என்னும் காதணியை அணிதல்	"பொருவில் திருவில் உமிழ்ந்து மின்னுப் பொழியும் ஏக மாகி யெரியும் மணியின் இயன்ற கடிப்பு வாங்கி மேக விசும்பில் தேவர் விழைய விளங்கிச் சேர்த்தி னாளே", சீவக. 2440 : 3 - 8
பொனார்ந்த கடுக்கன்	பொன்னால் ஆக்கப் பட்ட காதணி	"காதுப் பொனார்ந்த கடுக்கனிரண்டுஞ் சேர்த் தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன் சோதனை செய்து", திருமந். 1424 : 1 - 3
கருவிக் காலென வடிந்த காதணி பெறீஇ	கத்திரிகையின் கால் போல வடிந்து தூங்கும் காதணியை அணிதல்	"நீல நெடு மயிர் எறியும் கருவிக் காலென வடிந்த காதணி பெறீஇச் சில்லென் அரும்பு வல்லிதின் அமைத்து", பெருங். 4 : 16 : 25 - 27
குண்டலம்	காதணி	"குங்குமச் சாந்து வேய்ந்து குண்டலம் திருவில் வீச", சீவக. 677 - 3; "குண்டலம் குமரன் கொண்டு குன்றின் மேல் வீழு மின்போல், ஒண்டிறற் களிற்றின் நெற்றி எறிந்துதோ டொலித்து வீழ", சீவக. 979: 1 - 2; "குண் டலமும் பொற்றோடும் பைந்தாருங் குளிர்முத்தும் வண் டலம்பு மாலையு மணித் தொத்து நிலந்திவள", சீவக. 3022 : 1 - 2; "எற்றி கொண்டலின் இடைநின்று உமிழ்சுடர் இன மின் இனம் விழுவன என்ன முற்றிக் குண்டலம் முதல் ஆம் மணி உக, முழை நால் அரவு இவர் குடர் நால", கம்ப. 5704 : 3 - 6; "குண்டலங்களும் மவுலியும், ஆரமும், கோவை தண்டை, தோள்வளை, கடகம் என்று இனையன", கம்ப. 7523 : 1 - 2; "குண்டலங்

		களும் ஆரமும் கோவையும் கண்ட நாணும்.... விண் தலத்தினின் மீன் என, வீழ்ந்தவால்", கம்ப. 8139: 1-4
குண்டலக்காது	குண்டலம் அணிந்த காது	"குண்டலக் காதி கொலைவில் புருவத்தள்", திருமந். 1050 : 1
குண்டலக்கோலம்	காது ஒப்பனை; குண்டலம் அணிந்து ஒப்பனை செய்தல்	"குண்டலக் கோலமைந்தர் குடைந்த நீர்க் கொள்ளை", கம்ப. 43 : 3 - 4
எரிகுண்டலம்	ஒளிவீசும் குண்டலம்	"விருந்தா விரிப்பான் அவன் சீவகசாமி வேறா இருந் தாற்கு ஓரோலை கொடுத்தான் எரிகுண்டலத்தாற் பொருந்தார் பொறியைப் புற நீக்குபு நோக்குகின் றான்", சீவக. 1872 : 2 - 4
தாம்பிர குண்டலம்	தாமிரத்தால் ஆன குண்டலம்	"பூதியணிவது சாதன மாதியிற் காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை ஓதியவர்க்கும் உருத்திர சாதனம்", திருமந். 1662 : 1 - 3
மகர குண்டலம்	மகர வடிவில் செய்த குண்டலம்	"மகர குண்டலம் மறிந்து வில்வீச", பெருங். 1 : 40 : 103; "செயிர் மகர குண்டலமும் திளைப்பானா வார் காதும்", சீவக. 168 : 3
கனமகர குண்டலம்	பொன்னாலான மகர குண்டலம்	"கார்த்திகை காதிற் கனமகர குண்டலம் போற்", பரி. தி. 10 : 1
தோளாமணி மகர குண்டலங்கள்	துளை செய்யாத இரத்தின கற்கள் பதித்திட்ட மகர மீன் வடிவில் செய்யப் பெற்ற குண்டலங்கள்	"தோளா மணிமகர குண்டலங்கள் காதுக்கு அணிந்தாங்கு", 11ஆம் திரு. 300 : 17 - 18
பைம்பொன் மகரக் குண்டலம்	பசிய பொன்னாலான மகர குண்டலம்	"பைம் பொன்மகர குண்டலமும் பாவை கழுத்தின் அணிகலமும்", சீவக. 350 : 2
மணிமகர குண்டலம்	மகர வடிவாகச் செய்த குண்டலம்	"பைங்கண் மணிமகர குண்டலமும் பைந்தோடும் திங்கள் முகத்திலங்கச்", சீவக. 1971 : 1 - 2
விழிகண் மகர குண்டலம்	மகர வடிவில் செய்த குண்டலம்	"விழிகண் மகர குண்டலமும் தோடும் காதில் மிளிர்ந்தனவே", சீவக. 2696: 4
மணி குண்டலம்	இரத்தின மணி இழைத்த குண்டலம்	"மணி குண்டலம், வலயம், குழை, மகரம், சுடர் மகு டம் அணி கண்டிகை கவசம், கழல், திலகம், முதல அக லம் துணியுண்டவர் உடல், சிந்தின", கம்ப. 9410 : 1 - 3
மணி செய் குண்டலம்	மணியால் செய்த குண்டலம்	"வாசம் வாய்க் கொண்டனன் மணி செய் குண்டலம் வீசி", சீவக. 1480 : 3 - 4
மாமணிக் குண்டலம்	கரிய நீலநிறக் குண்டலம்	"ஏர் அணி அங்குசபாசம் எழில்முடி காரணி, மாமணிக் குண்டலக் காதிக்", திருமந். 1049 : 3 - 4
வயிரக் குண்டலம்	வயிரம் பதித்த குண்டலம்	"மகரிகை வயிரக் குண்டலம் அலம்பும் தோள் புடைவயங்க", கம்ப. 407 : 3 - 4
குண்டலக் குழை	குண்டலம் எனும் காதணி	"குண்டலக் குழை முகக் குங்குமக் கொங்கையார், வண்டு அலைத்து எழுகுழல் கற்றை கால் வருடவே", கம்ப. 5709 : 1 - 2
குண்டலம் அலம்புதல்	குண்டலங்கள் அசைந்து ஒளி பரப்புதல்	"கண்ட கண் கனலும் நீரும் குருதியும் காலை, மாலை, குண்டலம் அலம்புகின்ற குவவுத் தோள் குரிசில்", கம்ப. 4082: 1 - 3
மணிக் குண்டலம் வலக்காதில் ஆடுதல்	செஞ்சுடர் மாமணி விட்டு அலர்ந்த மணிக் குண்டலம் ஆடிவருதல்	"செஞ்சுடர் மாமணிவிட்டு அலர்ந்த மணிக்குண்டலம் வலக் காதினில் ஆடி வரும்", 11ஆம் திரு. 947: 2-4

குண்டலங்கள் காதாடுதல்	காதிலணிந்த குழைகள் ஆடுதல்	"காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால் போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ", திருவாச. திருப்பொன். 6 : 5 - 6
குண்டலம் இலங்குதல்	குண்டலம் காதில் விளங்குதல்	"ஊசல் பாய்ந்து ஆடிக் காதில் குண்டலம் இலங்க நின்றாள்", சீவக. 550 : 3; "மண்டிலம் நிறைந்த மாசில் மதிப்புடையியாழம் போன்றோர் குண்டலம் இலங்க நின்ற கொடியினைக் குறுகித் தோழி", சீவக. 618: 1 - 2; "அலங்கல்வா யடிமல ரணிந்து குண்டலம் இலங்கப் பேர்ந் தினமலர் சிதறி ஏகினாள்", சீவக. 1019: 3 - 4; "நுண்டுகில் நெகிழ்ந்த அல்குல் மணி பரந்து இமைப்ப நொந்து கண்களை இடுகக் கோட்டிக் காமத்திற் செயிர்த்து நோக்கிக் குண்டலம் இலங்கக் கோதை கூந்தல் அவிழ்ந்து சோர", சீவக. 2086: 1 - 3; "குண்டல மிலங்க வாங்கிக் குனிசிலை யுறையி னீக்கிக் கொண் டவன் கொழும் பொற்றாரு மாரமு மிலிர", சீவக. 2192: 1 - 2
குண்டலம் ஒரு புடை குலாவுதல்	ஒரு காதில் குண் டலம் ஒளி வீசுதல்	"குண்டலம் ஒருபுடை குலாவி வில்லிட", சீவக. 1009 : 1
குண்டலம் சேர்தல்	குண்டலம் அணிதல்	"கொக்கிருந்த மகுடத்தெங் கூத்தன் தன்னை குண் டலஞ்சேர் காதானைக் குழைவார் சிந்தை", தேவா. திருநா. 6 : 79 : 2 : 3 - 4
குண்டலம் தாங்குதல்	குண்டலம் அணிதல்	"அழலவிர் செம்பொற் பட்டங் குண்டலம் ஆரந் தாங்கி நிழலவிர் அல்குற்காசு சிலம்பொடு சிலம்ப நீண்தோள்", சீவக. 1254 : 2 - 3
குண்டலம் தாழ்தல்	குண்டலம் தாழ்ந் திருத்தல்	"பூண்டதோ ரார மேனிப் பொன்னுரைத் திட்ட தொக்கும் காண்டகு காதிற்றாழ்ந்த குண்டலம் குவளைப் பைந் தார்", சீவக. 1722 : 2 - 3; "தன் காதில் தாழ்ந்த குண்டலம் சுடர ஒல்கி", சீவக. 1570: 1 - 2
குண்டலம் திகழ்தல்	குண்டலம் விளங்குதல்	"குண்டலந் திகழ் காதுடை யானைக் கூற்று தைத்த கொடுந் தொழிலானை வண்ட லம்பும்மலர்க் கொன்றை யினானை", தேவா. சுந்தர. 65 : 4 : 1 - 3
குண்டலம் திகழ் தருதல்	குண்டலம் விளங்குதல்	"குண்டலம் திகழ்தரு காதுடைக் குழகனை வண் டலம்பும் மலர்க் கொன்றைவான் மதியணி செண்டலம் பும் விடைச் சேடனூ ரேடகம்", தேவா. திருஞா. 3: 32: 3: 1 - 3
மகரக் குண்டலம் திளைத்தல்	அழகமைந்த குண்டலம் காது களில் அசைதல்	"செயிர் மகர குண்டலமுந் திளைப்பானாவர் காதும் வயிரவின் முகம்சூடி வண்ணம் வீற்றிருந் தனவே", சீவக. 168: 3 - 4
சுடர் தயங்குற குண்டலம் செவி யிடைத் தூக்குதல்	சுடர் விளங்கிய குண்டலங்களைக் காதிலே அணிதல்	"உடல் கடைந்த நாள் ஒளியவன் உதிர்த்த பொன் கதிரின் சுடர் தயங்குற குண்டலம் செவியிடைத் தூக்கி", கம்ப. 9651 : 3 - 4
குண்டலங்கள் தொங்குதல்	குண்டலங்கள் தொங்குதல்	"கழற்றிய காலத்து, இற்ற தூங்கு குண்டலங்கள் நீங்கி, கிழக்கொடு மேற்கும் ஓடி விழுந்தன", கம்ப. 6339: 1 - 2
குண்டலம் பொறப்ப பெய்தல்	குண்டலத்தைப் பூட்டுதல்	"ஒட்டி ஒண்பொனால் ஓங்கு தாரொடு பூட்டிக் குண் டலம் பொறப்பப் பெய்தபின்", சீவக. 2519 : 2 - 3
குண்டலம் குலவி மின்னுதல்	குண்டலம் விளங்கி மின்னுதல்	"குண்டலங் குலவி மின்னப் பொன்னரி மாலை தாழத் தெண்கடல் அமிர்திற் செய்த பாவையிற்", சீவக. 2837 : 1 - 2
காதுக்கு விற்பக ரும் குண்டலங்கள் மேவித்தல்	செவிகளுக்கு ஒளி மிக்கதென எவராலும் கூறப்பெறும் குண்ட லங்களை விரும்பி அணிதல்	"நற்கழுத்தை நல்லாரத் தால் மறைத்துக் காதுக்கு விற்பகரும் குண்டலங்கள் மேவுவித்து", 11ஆம் திரு. 300: 160

குண்டலம் ஒரு புடை குலாவி வில்லிடுதல்	காதுகுண்டலம் ஒரு புறம் வளைந்து ஒளி வீசுதல்	"குண்டலம் ஒருபுடை குலாவிவில்லிட விண் டலர்ந் தொருபுடை தோடுமின் செய", சீவக. 1009 : 1 - 2
மகரக் குண்டலம் மறிந்து வில்வீசல்	மகரகுண்டலம் பிறழ்ந்து ஒளிசுதல்	"மகரகுண்டல மறிந்து வில் வீச", பெருங். 1 : 40 : 103
குண்டலம் வில் விலங்குதல்	காதில் அணிந்த குண்டலம் ஒளி வீசுதல்	"மல்லிகைம் மலிந்த மாலை சோரவார்ந்த குண்டலம் வில்விலங்க மின்னுக் கோட்ட வீணைவிட்டு வெய் துராய்", சீவக 1100 : 1 - 2
மணிசெய் குண்டலம் வீசுதல்	மணியாற் செய்த குண்டலம் அசைந்து ஒளிவீசுதல்	"வாசம் வாய்க் கொண்டனன் மணிசெய் குண்டலம் வீசிவில் விலங்கி விட்டுமிழ என்பவே", சீவக. 1480: 3 - 4
குண்டலம் திருவில் வீசுதல்	காதிலணிந்த குண்டலம் வானவில் போல ஒளிவீசுதல்	"கோதையும் தோடும் மின்னக் குண்டலம் திருவில் வீச மாதரம் பாவை நாணி மழைமினின் ஒசிந்து நிற் பக்", சீவக. 740 : 1 - 2; "சூர்ங்கள் உண்டு அலமந்த கண்ணார் ஊசலிட்டு உலாவு கின்ற குண்டலம் திரு வில் வீச குரவையில் குழறு வாரும்", கம்ப. 5022 : 4 - 8
மணிக்குதம்பை	இரத்தினத்தினாலான காதணி	"சுருளு மயிர் நுதற்கட்டி துணைக்காதின் மணிக் குதம்பை மருவுதிருக் கண்ட நாண்மார்பினில் ஐம் படை கையிற்", திருத். 385 : 1 - 2
சீலைக் குதம்பை	ஓலைச் சுருள்	"சீலைக் குதம்பை ஒரு காது", திருத். 3 : 3 : 1
செறிமணிக் குதம்பை	காதில் தொங்க அணி யும் ஓர் ஆபரணம்	"செறிமணிக் குதம்பை மின்ன மாசு அறு கோலம் காட்டி மறுகிடை ஆடும் நாளில்", திருத். 670 : 6 - 8
குழை	தொங்கலாக இடப் படும் காதணி	"ஊசல் ஒண்குழை உடை வியத்தன்ன அத்தக் குமிழின் ஆயிதழ் அலரி", நற். 286: 1 - 2; "கழை நிலை பெறாஅக் காவிரி நீத்தம் குழை மாண் ஒள் இழை நீ வெய்யோ ளொடு வேழ வெண் புணை தழீஇ", அகம். 6 : 6 - 8; "குழைக்கு விளக்காகிய வொண்ணுதற் பொன்னின் இழைக்கு விளக்காகிய அவ் வாங்கு உந்தி", பதிற். 31: 25 - 26 ; "இழைக்கமர்ந்த ஏஎர் இளமுலையாள் ஈடில் குழைக் கமர்ந்த நோக்கின் குறிப்பு", திணை. நூற். 68: 3 - 4; "கொண்ட கனகம், குழை, முடி, ஆடையாய்க் கண்ட இம்மூர்த்தம் கனல் திருமேனி", திருமந். 1372: 1 - 2; "குழைக் கணி கொண்ட கோல வான்முகத் தரிபரந் தலமரு மச்சுறு கண்ணினர்", பெருங். 3 : 24 : 194 - 195; "தோலும் துகிலுங் குழையும் சுருள் தோடும் பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்", திருவாச. திருக்கோ. 18 : 1 - 2; "மங்கல ஐம்படை யும் தோள்வளையும் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக எங்கள் குடிக்கரசே!", பெரியாழ். 1 : 6 : 10 : 5 - 7; "துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப் புஞ் சுழியமுஞ் சூலமு நீல கண்டமுங் குழையும் பவள வாயிதழுங் கண்ணுதற் றிலகமுங் காட்டி", திருவி. 102: 1 - 4; "வடகமுந் துகிலுந் தோடு மாலையு மணியும் முத்தும் கடகமுங் குழையும் பூணுங் கதிரொளி கலந்து மூதூர்", சீவக. 462 : 1 -2; "குழையுடை முகத்தினாள்", சீவக. 816 - 1; "இழைகளும் குழைகளும் இன்ன, முன் னமே மழை பொருகண் இணை மடந்தை", கம்ப. 513 : 1 - 2; "யாணர்க் குழைத் தொடர் நயனம் கூர்வேல் குமரர் நெஞ்சு உருவக் கோட்டி", கம்ப. 4950 : 2 - 4; "வடங்களும், குழையும், பூணும் மாலையும் சாந்தும் யானைக்", கம்ப. 4874 : 1; "குழைப் பொலி நல்அணிக் குழங்கள் வில்லிட", கம்ப. 9932 : 1 - 2

அங்குழை	அழகிய குழை	"சோதியஞ் சுடர்மேனி வெண்ணீறணி வீர்சொலிர் காதி லங் குழை சங்க வெண்டோடுடன் வைத்ததே", தேவா. திருஞா. 2 : 1 : 6 : 3 - 4
அரிக்குழை	அழகினையுடைய குழை	"திருத்தாச் சுமட்டினள் ஏனைத் தோள்வீசி வரிக் கூழ வட்டிதழீஇ அரிக்குழை ஆடற் றகையள் கழுத்தினும் வாலிது", கலித். 109 : 13 - 15
அரிமாண் அவிர்குழை	மகரக் குழை	"ஒருத்தி அரிமாண் அவிர்குழை ஆய் காது வாங்க", கலித். 92 : 36
அவிர்குழை	ஒள்ளிய மத்தகமணி அமைந்து விளங்குகின்ற காதணியாகிய குழை	"திங்கள் அன்னநின் திருமுகத்து ஒண்சூட்டு அவிர் குழை மலைந்த நோக்கே", அகம். 253 : 25 - 26
இணைஆர் இணைக்குழை	இரண்டாய் பொருந் திய இரண்டு காது அணிகள்	"இணை ஆர் திருவடி ஏத்தும் சீர் அங்கத்து இணை ஆர் இணைக்குழை ஈரணை முத்திரை குணம் ஆர் இணைக் கண்டமாலையும் குன்றாது", திருமந். 1423: 1 - 3
இருகுழை	இரண்டு குண்டலங்கள்	"இலகு செந்தளிர் ஒளிநிறம் திகழ்தர இருகுழை புடை ஆட மலர்முகம் பொலிந்து அசையமென் கொம்பர் நின்று ஆடுவ மலர்ச் சோலை", திருத். 2052 : 5 - 8
எரிநிறக்குழை	செந்தீ நிறம் பொருந்திய குழை	"எரிநிறக் குழையோர் காதிற்கு இருளறச் சுடர வைத்தான்", சீவக. 696 - 4
ஒண்குழை	ஒள்ளிய மகரக்குழை	"ஒண்குழை திகழு மொளிகெழு திருமுகம்", மது. 448; "ஒண்குழை மடவோ யுவத்தி யோவென அருமையிற் பெற்றநும் மடித்தி", பெருங். 1 : 47 : 225 - 226; "உற்றவர் கோழிமே லெறிந்த வொண்குழை", சீவக. 89 : 2 - 3
ஒரு குழை	ஒற்றைக் காதணி	"வாய் வாங்கும் வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை", பரி. 1 : 5
ஒற்றைக்குழை	ஒரு காதிற் தொங்கு கின்ற குண்டலம்	"ஒற்றைக் குழையும் நாஞ்சிலும் ஒருபால் தோன்றத் தான் தோன்றி", பெரியதிரு. 8 : 8 : 8 : 1
கடைக்குழை	காதணி	"இடைக்குமிழ் எறிந்து கடைக்குழை ஓட்டி", சிலப். 4 : 69
கணங்குழை	திரட்சியுடைத்தாகிய குழை	"குணங்களைப் பாராட்டுந் தோழன் வந்தீயான் கொல் கணங்குழை நல்லவர் கதுப்பறல் அணைத்துஞ்சி அணங்குபோற் கமழுநின் அலர்மார்பு காணிய", கலித். 71: 18 - 20; "திருமா தேவியுந் தேன்புரை தீஞ்சொற் கணங் குழை மகளைக் காமனனைய வணங்கு சிலைதடக்கை வத்தவர் பெருமகற்", பெருங். 3: 22: 50-52; "தாங் கருங் காதற்றவ்வையை வந்து காண்க வென்றலுங் கணங்குழை மாதரும்", பெருங். 4: 8: 11-12; "கலைக் கோட்ட அகலல்குல் கணங்குழையார் கதிர்மணிப் பூண் முலைக்கோட்டால் உழுப்பட்ட மொய்ம் மலர்த்தார் அகல்மார்பர்", சீவக. 2224 : 1 - 2; "நெடும் பகல் இம் மாநகர் உறைந்தார், கணங்குழை யினாளொடு உயர் காதல் ஒருவாது உற்று", கம்ப. 4580: 3 - 6 ; "கணங் குழை மகளிர் ஈண்டி இரைத்தவர், கடைக்கண் என்னும் அணங்குடை நெடுவேல் பாயும் அமர் கடந்து அரிதின் போனான்", கம்ப. 9131: 3 - 4
கனங்குழை	பொற்குழை	"கனங்குழைக்கு அமர்த்த சேயரிமழைக்கண்", நற். 16 : 9 ; "மலரின் மௌவல் நலம்வரக் காட்டிக் கயலேர் உண்கண் கனங்குழை இவைநின் எயிறேர் பொழு தின் ஏய்தரு வேமென", நற். 316: 2 - 4; "கடிப்பு இகு காதில் கனம்குழை தொடர", பரி. தி. 1: 33; "கனலும் நோய்த் தலையும், நீ கனங்குழை யவரொடு புனல் உளாய் என வந்த பூசலின் பெரிது அன்றோ", கலித். 66:

13 - 14; "நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும் கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை", பட். 22 - 23; "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங் குழை மாதர்கொல் மாலுமென் நெஞ்சு'', குறள். 1081; "ஆற்றாதவரை அடைந்தொழுகல், ஆற்றுள் கயல்புரை உண்கண் கனங்குழாய்? அஃதால் உயவு நெய்உட் குளிக்கும் ஆறு" பழ. நா. 385: 2 - 4; "கைவைத் தனளாற் கனங்குழை யாழென்" பெருங். 1 : 34 : 247; "கண்ணீ ராடுமோர் கனங்குழை காண்மின்", பெருங். 1: 40: 231; "நாவலந் தண் பொழில் நண்ணார் ஓட்டிய காவலன் மகளே கனங்குழை மடவோய்", பெருங். 2: 18: 76-77; "பெரும்பே துற்று விளியுமற்றதனாற் கரும்பேர் கிளவிக் கனங்குழை திறவயிற்'', பெருங். 2: 20: 28-29; "பெருங்கடைகாவலர் பெருமான் றங்கை கருங் கடை மழைக்கட் கனங்குழைப் பாவை", பெருங். 3: 13: 66-67; "உவவுறு மதிமுகத் தொளிவளை முன்கைக் கண்ணார் கனங்குழை கதுமெனக் கண்டே", பெருங். 2 : 16 : 11 - 12; "மனத்தது வெளிப்பட மறுமொழி கொடா அன் கலக்க மறிந்த கனங்குழை மாதர் புலத்தல் யாவதும் பொருத்த மின்றென" பெருங். 4 : 5 : 29 - 31; "பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாய நும் மூர்க் கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்குங் கனங்குழையே", திருக்கோ. 15 : 3 - 4; "கனங்குழை யாள் தற்பிரிய நமக்குறும் கையறவால்", 11ஆம் திரு. 935 : 3 - 4; "கனங்குழைக் கேகயன் மகளின் கண் ணிய சினம் கிடந்து எரிதலின்'', கம்ப. 2294 : 1 - 2; "காதல்மிக்க ஓர் திருவிளையாட்டில் கனங்குழைக்கு அருள் புரிந்திட வேண்டி", திருத். 1144 : 3 - 4

கனமகரக்குழை	மகரக் குண்டலம்	"கை வளையும் மேகலையும் காணேன் கண்டேன் கனமகரக் குழையிரண்டும் நான்கு தோளும் எவ் வளவுண்டு எம்பெருமான் கோயில்", திருநெடுந். 22: 5 -7
கனமணிக்குழை	குண்டலம்	"கான்று வில் வயிரம் வீசும் கனமணிக் குழையினானே", சீவக. 581: 4; "கன்னியர் கவரி வீசக் கனமணிக் குழைவில் வீச", சீவக. 1170 : 3 - 4
கொடுங்குழை	வளைந்த குழை	"கொடுங்குழைக் கமர்த்த நோக்கம் நெடுஞ்சேணா ரிடை விலங்கு ஞான்றே", அகம். 3 : 17 - 18; "கடுந்தேர்த் திதியன் அழுந்தை, கொடுங்குழை அன்னிமிஞிலி யின் இயலும் நின் நிலத் தகுவியை முயங்கிய மார்பே", அகம். 196 : 11 - 13; "கொடுங்குழை மகளிரின் ஒடுங் கிய இருக்கை அறியா மையின் அழிந்த நெஞ்சின்'', அகம். 236 : 12 - 13; "கொடுங்குழை மகளிர் கோதை சூட்டி", புறம். 304 : 1; "வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப் பின் ஒடுங்கீ ரோதிக் கொடுங்குழை கணவ'', பதிற். 14 : 14 - 15; "கொடுங்குழைக்கு அமர்த்த நோக்கின் நயவரப்", பதிற். 81 : 29; "யானையுடையார் கதனுவப்பர் மன்னர் கடும்பரிமாக் காதலித் தூர்வர் - கொடுங் குழை நல்லாரை நல்லவர்", நான்மணி. 55 : 1 - 3; "கடுங் கதிர் நல்கூரக் கார்செல்வம் எய்த நெடுங்கால நேர் சினை யீனக் கொடுங்குழாய் இன்னே வருவர் நம ரென்(று)", கார் நாற். 2: 1 - 3; "இடுமணல் எக்கர் அகன் கானல் சேர்ப்பன் கடுமான் மணியரவம் என்று கொடுங் குழை புள்ளரவம் கேட்டுப் பெயர்ந்தாள்", ஐந். எழு. 59: 1 - 3; "கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காதினள்", சிலப். 4: 51; "காதல் கொழுநனைப் பிரிந்து அலர் எய்தா மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னொடு'', சிலப்.

		5: 190 - 191; "கோவலன் தன்னொடும் கொடுங்குழை மாதொடும்", சிலப். 11 : 205; "மாற்றுரை கொடாஅன் மனத்தோடலமரீஇக் கோட்டுவனளிறைஞ்சிக் கொடுங் குழையிருப்ப", பெருங். 4 : 7 : 52 - 53; "குவளை வேய்ந்த கொடுங்குழை கூந்தலுள் திவளும் வாழிய செம்பொறி வண்டுகாள்", சீவக. 1331 : 1 - 2; "கோதை யும் தாரும் பிணங்கக் கொடுங்குழைக் காதன் மகளிரு மைந்தருங் காணிய", சீவக. 2119 : 1 - 2
கோடு அரிந்து இடும் அழகு உறு குழை	யானைக் கொம்பு களை அறுத்து அவற்றைக் கொண்டு செய்த அழகு பொருந்திய காதணி	"பொன் திணிந்த தோள் இராவணன் மார்பொடும் பொருத அன்று இழந்த கோடு அரிந்து இடும் அழகு உறு குழையர்", கம்ப. 5619 : 1 - 2
சங்கக் குழை	சங்கினால் செய்யப் பட்ட குண்டலம்	"சந்திரனும் வெங்கதிரு மாயி னானைச் சங்கரனைச் சங்கக் குழையான் தன்னை", தேவா. திருநா 6 : 29 : 4 : 3 - 4; "தண்ணம் பிறைச் சடைச் சங்கரன் சங்கக் குழையன் வந்தென்", 11ஆம் திரு. 212 : 3 - 4; "சலமுடியாய் சங்கரனே சங்கக் குழையாய் சலமுடி யாது இன்றருள் உன் தார்", 11ஆம் திரு. 593: 3-4
சங்கணிகுழை	சங்கினாலான காதணி	"சங்கணி குழையினர் சாமம் பாடுவர் வெங்கனல் கனல்தர வீசி யாடுவர்", தேவா. திருஞா. 3: 19 : 5 : 1 - 2
சங்கவார் குழை	சங்கினாலாகிய காதணி	"சாதியார் பளிங்கின்னொடு வெள்ளிய சங்கவார் குழையாய் திகழப்படும் வேதியாவிகிர்தா விழவாரணி தில்லை", தேவா. திருஞா. 2 : 1 : 7 : 1 - 3
சங்கவெண் குழை	சங்கினால் செய்யப் பெற்ற வெண்மை யான குண்டலம்	"சங்க வெண் குழையினாரும் தாம் எதிர் நோக்கி நம்பால் இங்கு வேண்டுவது என் என்ன", திருத். 1780: 5 - 7; "கொங்கினில் பொன்னித் தென்கரைக் கறையூர்க் கொடுமுடிக் கோயில் முன் குறுகிச் சங்க வெண் குழையர் உழைவலம் செய்து சார்ந்து அடி அன்பினில் தாழ்ந்து", திருத். 3245 : 1 - 4
சதுரக்குழை	சிறந்து விளங்குங் குழை	"சதுரா சதுரக் குழையாய் போற்றி சாம்பர்மெய் பூசுந் தலைவா போற்றி", தேவா. திருநா. 6 : 57 : 2 : 3 - 4
சித்திர மணிக் குழை	சித்திர வேலைப்பாடு அமைந்த குழை	"சித்திர மணிக்குழை திளைக்கும் வாண்முகத்", சீவக. 1075 : 1
சிறுகுழை	சிறிய காதணி	"சிறுகுழை துயல் வருங் காதிற் பணைத் தோட் குறு நெறிக் கொண்ட கூந்தலாய்", பெரும். 161 - 162
சுடர்குழை	ஒளியையுடைய குழை	"கடைக்கட் டுதாற் காவலற் கடை இச் சுடர்க்குழை பயந்தோள் சொல்லா ணிற்ப", பெருங். 1 : 37 : 171 - 172; "சூழ்வளை முன்கைச் சுடர்க்குழை மாதர்", பெருங். 2: 19 : 33; "தாதுகு புனைமலர்த் தண்பூங் காவினுட் சூடக முன்கைச் சுடர்க்குழை மகளிரொ டாடுத லானா", பெருங். 3 : 6 : 90 - 92; "புலப்பிற் றீரக் கலப்புறு கணவரை முயக்கிடை விடா அச்சுடர்க்குழை மகளிர்", பெருங். 3: 7: 102 - 103; "செவ்வாய் உந்தி வெண்பல் சுடர்க் குழை தம்மோடு எவ்வாய்ச் சுடரும் தம்மில்முன் வளாய்க் கொள்ள", திருவாய். 8 : 7 : 7 : 1 - 2; "கடக் களிறு கண் வளரக் கார்நிற வண்டார்ப்பச் சுடர்க் குழையார் பாட்டெழவு கேட்டு", 11ஆம் திரு. 423 : 1 - 2
சுலாவெண்குழை	சங்கக்குழை	"தோணியைத் தொண்டனேன் தூய சோதிச் சுலா வெண் குழையானைச் சுடர்பொற்காசின் ஆணியை ஆவடுதண் துறையுள் மேய", தேவா. திருநா. 6 : 46 : 4 : 5 - 7

சுறா நிறக் கொடுங் குழை	மகரமீன் வடிவான வளைந்த குழை	"சுறா நிறக் கொடுங்குழை சுழன்றுஎருத்து அலைத்தர", சீவக 703 - 1
சுறவுக் குழை	அழகு பொருந்திய மகரக் குண்டலம்	"நாகம் மருப்பின் இயன்ற தோடும் நலங்கொள் சுறவுக் குழையும் போக நீக்கிப்", சீவக 2440 : 1 - 3
சோர்குழை	நெரிந்து சோர்கின்ற குழை	"மார்புறு முயங்கிடை ஞெமிர்ந்த சோர்குழை", நற். 20: 9
தமனியக்குழை	பொன்னால் செய்யப் பெற்ற குண்டலம்	"தாமரை செங்கட் செவ்வாய்த் தமனியக் குழை யினாயோர் காமமிங் குடையேன் காளை சீவக னகலஞ் சேர்த்தின்", சீவக 2057 : 1 - 2
தமனிய இணைக் குழை	பொன்னாலியன்ற இரண்டு குழை	"வயலுந் தோட்டமு மயல்பல கெழீஇய தாமரைச் செங் கட்டமனிய விணைக்குழைக் காமன் கோட்டத்துக் கைப்புடை நிவந்த", பெருங். 3 : 4 : 57 - 59
தாழ் குழை	தாழ்ந்த குண்டலங்கள்	"சந்துஆர் முலைமேலன தாழ்குழை வாள் முகப் பொன் செந்தாமரை மேலன நித்திலம் சேர்ந்த கோவை", திருத். 978 : 3 - 4
திணிவார்குழை	வலிமையான நீண்ட குழை	"பணிமேல் இட்ட பாசுபதர் பஞ்சவடிவமார் பினர்கடவூர்த் திணிவார்குழையார் புரமூன்றும் தீவாய்ப் படுத்த சேவகனார்", தேவா. சுந்தர. 40 : 6 : 2 - 3
தெய்வக்குழை	ஒளியுமிழ்கின்ற குழை	"செம்பொன் செய் சுருளும் தெய்வக் குழைகளும் சேர்ந்து மின்ன", கம்ப. 894 : 1 - 2
நகுமணிகள் கலந்த செம்பொன் மகரக் குழை	நகுமணிகள் கலந்த செம்பொன் மகரக் குழை	"நலந்திரு நீள் வயிரம் வெயிற் பாய நகுமணிகள் கலந்த செம்பொன் மகரக் குழை ஏகம்பர் காதிடமே", 11ஆம் திரு. 947 : 5 - 8
பளிக்குங்குழை	பளிங்கு போன்ற சங்கினால் செய்த குண்டலம்	"பையரவக் கச்சையாய் பால்வெண்ணீற்றாய் பளிக்குக் குழையினாய் பண்ணாரின்சொல் மை விரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்", தேவா. திருநா. 6 : 99 : 3 : 1 - 3
பூக்குழை	பொலிவுடைய குழை	"ஆற்றுளி வழிபா டாற்றி யமைச்சனொடு பூக்குழை மாதரை மீட்டனங் கொண்டு", பெருங் 3 : 1 : 79 - 80; "பூக்குழை மாதர் நோக்கிடை நோக்கிப்", பெருங். 3: 8: 129
பூங்குழை	பொலிவுடைய குழை	"கொம்மை வரிமுலை செப்புட னெதிரின யாங்காகுவள் கொல் பூங்குழை யென்னும் அவல நெஞ்சமொடு உசாவாக் கவலை மாக்கட்டிப் பேதை யூரே", குறுந். 159: 4 - 7; "தாங்க லொல்லுமோ பூங்குழை யோயெனச் சொல்லா முன்னர் நில்லா வாகி", குறுந். 256 : 5 - 6; "பூங்குழை ஊசற் பொறைசால் காதின் நாண் அடச் சாய்ந்த நலம் கிளர் எருத்தின் ஆடு அமைப் பணைத் தோள்", பொருநர். 30 - 32; "மெத்தென் சாயல், முத்து உறழ் முறுவல், பூங்குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக்கண்", நெடு. 37 - 38; "புதுப்புனலும் பூங்குழை யார் நட்பும் இரண்டும் விதுப்புற நாடின்வேறல்ல புதுப்புனலும்", நாலடி. 370 : 1 - 2; "பொன்செ யோலை யொடு பூங்குழை நீக்கி", பெருங். 1 : 34 : 198; "ஈண்டிய மாதரை யீண்டிடந் தம்மினெம் பூங்குழை மாதர் புனல கம் புக்கனள்", பெருங். 1 : 40 : 25 - 26; "வாங்குபு கொள்ளும் வழக்கியல் வழாஅப் பூங்குழை மகளிர் புனைமணிப் பைம்பூண் ஒளிபெற் றிலங்கும் உதயண குமரன்", பெருங். 2 : 7 : 69 - 71; "அருவியாட்டினும் அறற் சுனைத் திளைப்பினும் பூங்குழை மகளிர் பொலங் கலத் தேந்திய தேங்கமழ் தேறலொடு", பெருங். 2 : 14 : 59 - 61; "காஞ்சன மாலை கலக்கமுங் காணாப் பூங் குழை மாதர் பொச்சாப் புணர்ந்து", பெருங். 2 : 18 : 93 -

		94; "வாய்மை யாமென மனத்தி னினைஇ நீங்கிய வெழுந்தோன் பூங்குழை மாதரை வண்ணக் கஞ்சிகை வளிமுகந் தெடுத்துழிச்", பெருங். 3 : 6 : 36 - 38; "மறைப் பியல் வழா அக் குறிப்பு முத றொடங்கி ஆங்கப் பொழுதே பூங்குழை யுணர வாக்கமை பாவை வகை பெற வெழுதி", பெருங். 3 : 22 : 146 - 148; "நீங்குவை யாயி னீங்கு மென்னுயிரெனப் பூங்குழை மாதரைப் பொருக்கெனத் தம்மென்றாங்கவன் மொழிந்த வல்ல னோக்கி", பெருங். 4 : 7 : 197 - 198; "ஆங்கொரு காரணத் தவள் வயினிருந்தோள் பூங்குழை தோற்றது பொறாஅ நிலைமையள்", பெருங். 4 : 12 : 67 - 68
பைங்குழை	பசிய குழை	"வடியினன்ன வாளரித் தடங்கட் பைங்குழை மகளிர் பல்காழ்க் கலையோடங்குழைச் செயலைத் தண்டழை யுடீஇச்", பெருங். 1 : 55 : 55 - 57
பொலங்குழை	பொன்னால் செய்யப் பட்ட குழை	"எழுது சுவர் நனைந்த அழுதுவார் மழைக்கண் விலங்கு வீழ் அரிப்பனி பொலங்குழைத் தெறிப்பத்", அகம் 351: 6 - 7; "வண்டலாய மொடுண்டுறைத் தலைஇப் புனலாடு மகளிரிட்ட பொலங்குழையிரைதேர் மணிச் சிரலிரைசெத்து எறிந்தெனப்'', பெரும். 311 - 313; "பொலங்குழை மகளிர், நாவாய்ப் போக்கின் ஒன்று ஒன்று தாக்கப்", கம்ப. 2357 : 1 - 2; "விலங்கினர் தம்மை எல்லாம் வேரொடும் விளிய நூறி, பொலங்குழை மயிலைக் கொண்டு போது எனப் புகன்றிட்டாலும்", கம்ப. 4731: 3 - 6; "இலங்கையை முழுதும் நாடி, இராவணன் இருக்கை எய்தி பொலங்குழையவரை எல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தேன்'', கம்ப. 6041 : 1 - 2; "பொலங் குழை மகளிரோடும், பால் நுகர் புதல்வ ரோடும் குலங்களோடு அடங்கக் கொன்று, கொடுந் தொழில் குறித்து", கம்ப. 8910 : 2 - 3; "அலங்கல் அம் தொடையினானும், அந்தியின் கடன் ஆற்றி, பொலங் குழை மயிலினோடு துயிலுற", கம்ப. 10252 : 1 - 2
செறியிலைப் பொற்குழை	செறிந்த இலை வடிவமமைத்த பொன்னாலியன்ற குழை	"மன்னவன் வினாய மாத்திரைக் கண்ணே செறி யிலைப் பொற்குழை சிறப்பொடு தூக்கிய சிறுதுளைக் காதிற்", பெருங். 1 : 47 : 17 - 19
நன் பொற்குழை	நல்ல, பொன்னால் ஆகிய குழை	"சீர்கெழு திருமுகத் தேரணியாகிய வார்நலக் காதினுள் வனப்பு வீற்றிருந்த நன்பொற் குழைநீ நன்னுதன் மாதரை", பெருங். 2 : 19 : 94 - 96
பொன்செய்குழை	பொன்னால் செய்யப் பட்ட காதணி	"இமிழிசை வானம் முழங்கக் குமிழின் பூப் பொன் செய் குழையின் துணர் தூங்கத் தண்பதம் செவ்வி உடைய சுரம் நெஞ்சே", கார்நாற். 28 : 1 - 3
பொன்செய் பூங்குழை	பொன்னாற் செய்த அழகிய குழை	"கழைநிலை பெறாஅக் குட்டத்தாயினும் புனல்பாய் மகளிராட வொழிந்த பொன்செய் பூங்குழைமீ மிசைத் தோன்றும் சாந்து வரு வானிநீரினும்", பதிற். 86 : 9 - 12
பொன்தாழ் குழை	பொன்னாற் செய்யப் பெற்றுக் காதில் தொங்குகின்ற குழை	"பொன் தாழ் குழையாள்தனை ஈன்ற பூமா மடந்தை புரிந்து அழுதாள்", கம்ப. 8676 : 1 - 2
பொன்னவிர் குழை	பொன் குழை	"பொன்னவிர் குழையும் பூணும் ஆரமும் சுடர", சீவக. 2251 : 3
மகரக் குழை	சுறாமீன் போன்ற காதணி	"வெந்தாற்போல் தோன்று நீள்வேய் அத்தம் - தந்தார் தகரக் குழல்புரளத் தாழ்துகில் கையேந்தி மகரக் குழைமறித்த நோக்கு", திணை. நூற். 77 : 2 - 4; "நிகரில்

		மயிலாரவர் தாம் பயிலும் நெல்வாயில் அரத்துறை நின் மலனே மகரக்குழையாய் மணக் கோலமதே பிணக் கோலம தாம்பிறவி இதுதான்", தேவா. சுந்தர. 3: 7: 3-6; "வண்ணம் எழில்கொள் மகரக் குழையிவை திண்ணம் இருந்தவா காணீரே, சேயிழையீர்", பெரியாழ். 1 : 3 : 18 : 3 - 4; "வையம் எல்லாம் பெறும் வார்கடல் வாழும் மகரக் குழைக் கொண்டு வைத்தேன்", பெரியாழ். 2: 3: 3: 1 - 2; "வாயனை மகரக் குழைக் காதனை மைந்தனை மதிட்கோவலிடை கழி யாயனை அமரர்க் களி மேற்றை...", பெரிய திரு. 7: 3: 10: 2: 5 - 7; "உருவ மாமதி வாண்முகத்து ஓடிய இருவிலும் எறிமா மகரக்குழை", சீவக. 339 : 1 - 2; "வார்காது தாழப் பெருக்கி அமைத்து மகரக்குழையிட வேண்டி", பெரியாழ். 2 : 3 : 13 : 1; "நகர மாந்தர் எதிர்கொள்ள நண்ணி எண்இல் அரங்கு தொறும் மகரக்குழை மாதர்கள் பாடி ஆடமணி வீதியில் அணைவார்", திருத். 3897 : 1 - 4
மறிமகரவார் குழை	சிறிய சுறாமீனைப் போன்ற காதணி	"வந்தால் நீ எய்துதல் வாயால் மற்(று) எந்தாய் மறி மகர வார்குழையாள் வாழாள்நீ வாரல் எறிமகரம் கொட்கும் இரா", திணை. நூற். 46 : 2 - 4
மாமகரக்குழை	பெரிய மகரக் குண்டலம்	"மாமகரக் குழைமகளிர் மைந்தர் அங்கண் வந்து ஏறு முன் நறுநீர் வண்டல் ஆடத்", திருத். 1177 : 3 - 4
மணிக் கொடுங் குழை	அழகிய வளைந்த குழை	"திணித் தடங்கிரி வெடித்து உக சிலையை நாண் தெறித் தான் மணிக் கொடுங்குழை வானவர், தானவர், மகளிர் துணுக்கம் எய்தினர்", கம்ப. 9670 : 2 - 4
மாண்குழை	மாட்சிமை பொருந்திய குழை	"மதலை மாடத்து மாண்குழை மகளிர்", பெருங். 1: 33 : 71 : 1; "பூண்டிகழ் கொங்கைப் புயலேர் கூந்தல் மாண்குழை புதுநலங் காண்டகச் சென்ற உள்ளந் தன்னையொருப்படுக் கல்லா", பெருங். 4 : 12 : 265 - 267
மின்னார்குழை	ஒளிவீசும் காதணி	"பொன்னார் கலையினார் பொற்பூஞ் சிலம்பினர் மின் னார் குழையினர் கோதையர் வீதியுள் மன்ன குமரனை வாழ்த்தி மகிழ்ந்தார்", சீவக. 2128 : 2 - 4
வடிவார் குழை	சிறந்த வடிவுடைய குழை	"பாடுபெயல் நின்ற பானாள் இரவில் தொடிபொலி தோளும், முலையும், கதுப்பும் வடிவார் குழையும் இறையும் பொறையா ஒடிவது போலும் நுசுப்போடு அடி தளரா ஆராக் கவவின் ஒருத்தி", கலித். 90 : 5 - 9
வயிரக்குழை	வயிரமணியாலாகிய காதணி	"வயிரக்குழையும் வல்வினைப் பொலிந்த நெடுந் தோள் வளையுங் கடுங்கதிர்க் கடகம்", பெருங். 2 : 5 : 140 - 141; "வல்லான்புனைந்த வயிரக்குழை வார்ந்து வான் பொற, பல்பூண் எருத்திற் பரந்தம் சுடர் கால மன்னன்", சீவக. 1868 : 1 - 2
வயிரம் கான்றுவில் வீசும் கனமணிக் குழை	மிக்க ஒளிவீசும் வயிரம் பதித்த பெரிய மணியை யுடைய குண்டலம்	"கோன்தரு துன்பம் மற்றென் குலத்தொடு முடிக என் றான் கான்றுவில் வயிரம் வீசும் கனமணிக் குழை யினனே", சீவக. 581 : 3 - 4
வயிரக் கொடுங் குழை	வயிர மணியாலே இயற்றிய வளைந்த குழை	"மயிர்வினைக் கம்ம மரபுளி முடித்தபின் வயிரக் கொடுங்குழை வார்ந்த காதிற்", பெருங். 2 : 5 : 1 - 2
வரிக்குழை	வரியினையுடைத் தாகிய குழை	"குருஉக்கண் கொலையேறு கொள்வான் வரிக் குழை வேயுறழ் மென்தோள் துயில் பெறும் வெந்துப் பிற்", கலித். 104 : 23 - 24

வினைக்குழை	தொழில்நுட்பமுடைய காதணி; சுடு பொன் னாலமைந்த குழை	"சுடுநீர் வினைக் குழையின் ஞாலச் சிவந்த கடி மலர்ப் பிண்டி தன் காதிற் செரீஇ", பரி. 12 : 87 - 88
வெண்குழை	சங்கினால் செய்த குழை	"எண்வகை ஒருவனை எங்கள் பிரானைக் காதில் வெண் குழையானைக் கடல்கொள மிதந்த கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே", தேவா. சுந்தர. 5: 1: 6 - 8; "காதில் வெண்குழையோன் கழல்தொழ நெடியோன்", திருத். 18 : 1
வெயில் கதிர்மென் குழை	ஒளி உமிழும் மெல் லிய இரத்தினக் குண்டலங்கள்	"வெயில்கதிர் மென்குழை மகளிர் விரவிய மாடமும் மேவி மயில் குலமும் முகில் குலமும் மாறாட மருங்கு ஆடும்", திருத். 1280 : 3 - 4
ஒண்குழைக்காது	சங்கினால் செய்த காதணியை அணிந்த காது	"வேதனார் வெண்மழு வேந்தினார் அரங்கமுன் ஓதினார் உமையொரு கூறனார் ஒண்குழைக் காதினார் கடி பொழில் சூழ்ந்த காட்டுப் பள்ளி", தேவா. திருஞா. 3: 29: 6 : 1 - 3
கணங்குழைக் காது	காதணி: பலவாய்த் திரண்ட காதணி அணிந்த காது	"கதிர்வளைப் பணைத் தோட் கணங் குழைக் காதிற்", பெருங். 3 : 5 : 25
கருவடிக்குழைக் காது	நீண்ட குழையணிந்த காது	"கருவடிக் குழைக் காது அமலச் செங்கமல மலர் முகம்", திருவி. 20: 7 - 8
கொடுங்குழைக் காது	வளைந்த குழை யுடைய காது	"நன்னர் நோக்கி நயந்ததை யொன்று கொல் கோல் வளைப் பணைத்தோட் கொடுங்குழைக் காதின் நீலத் தன்ன நெறியிருங் கூந்தலைப்", பெருங். 3 : 21 : 77 - 79
கொள்ளைக் குழைக் காது	மிக்க ஒளிவீசும் குண்டலம் அணிந்த காது	"கொள்ளைக் குழைக் காதிற்குண்டைப் பூதங் கொடு கொட்டி கொட்டிக் குனித்துப் பாட", தேவா. திருநா. 6 : 35 : 5 : 1- 2
சங்க வெண் குழைக் காது	சங்கினால் செய்யப் பட்ட வெண்குழையை அணிந்த காது	"சங்க வெண்குழைக் காதுடையானைச் சாம வேதம் பெரிதுகப் பானை", தேவா. சுந்தர. 65: 6: 3 - 4
மகரங்கவ்விய மணிக்குழைக் காது	இருமகரமீன் ஒன்றனை ஒன்று கவ்விக் கொண் டிருத்தல் போன்று இயற்றப்பட்ட மணிக் குழை அணிந்த காது	"மகரங் கவ்விய மணிக் குழைக் காதினர்", பெருங். 2 : 4 : 145
வெண்பளிங்கின் குழைக் காது	சங்கு அணி அணிந்த காது	"வேத நாவினர் வெண் பளிங்கின் குழைக்காதர்", தேவா. திருஞா. 2 : 38 : 7 : 1 - 2
குழை முகம்	காதணி அணிந்த முகம்	"குழைமுகக் கொடியொடு குருதி வேலினான் மழை முகின் மாரியின் வைகும் என்பவே", சீவக. 195 : 3 - 4; "குழைமுகத்திடியரி வளைத்த வன்ன மள்ளரிற் குழை முகப்பு ரிசையுட் குருசிறான கப்பட", சீவக. 275 : 1 - 2; "முற் றணி பிறையெயிற்றம்பு முழ்கலின் அற்றுவீழ் குழை முக மலர்ந்த தாமரை மற்றவை சொரிவதோர் மாரி யொத்தவே", சீவக. 780: 2 - 4; "வடியுறு கடைக்க ணோக்க நெஞ்சுதுட்கென்ன வார்பூங் கொடியுறவொ சிந்து நின்றாள் குழைமுகத் திருவோடொப்பாள்", சீவக. 2059 : 3 - 4; "உழை உழைப் பரந்த வானயாற்று நின்று, உம்பர் நாட்டுக் குழை முகத்து ஆயம் தந்த புனல் குளிர்ப்பு இல என்று ஊடி", கம்ப. 5018: 1 - 4; "இழவு, எனக்கு, உயிர்க்கு எய்தினும் எய்துக, குழை முகத்து நின் சிந்தனை கோடினால்", கம்ப. 5177 : 1 - 2; "குழைமு கத்தவர் ஆடு அரங்கு இமையவர் குழா மும்", திருத். 2408 : 3 - 4

கணங்குழை முகம்	திரண்ட குழை அணிந்த முகம்	"விராய் மலர்க்கோதை யிராசனை யென்போள் கணங் குழை முகத்தியை வணங்கினள் புகுந்து", பெருங். 4: 12 : 39 - 40
குழையன்	குழை அணிந்தவன்	"குழையன் கோதையன் குறும்பைந் தொடியன் விழ வயர் துணங்கை தழூ உகஞ் செல்ல", நற். 50 : 2 - 3
குழையர்	குழை அணிந்தவர்	"நீணிர் முழவின் பாணியிற் பாடியும் குழையர் கோதையர் இழையர் ஏரிணர்த் தழையர் தாரினர்", பெருங். 2 : 14 : 12 - 14
குழையணிதல்	குழையணிதல்	"உலாவேட் டெழுந்த உதயண குமரன் குழையணி காதிற் குளிர்மதி முகத்திக்குத்", பெருங். 2 : 18 : 4 - 5; "குழைஅணி காதர் வெற்பைக் கும்பிடச் சென்றால் ஒக்கும்", திருத். 778: 4
குழை காதணிதல்	செவிகளில் குழையினை அணிதல்	"தாதணி மலரனை தருமனை பரமனை காதணி குழையனை களிற்றின் உரியனை", 11ஆம் திரு. 489 : 34 - 35
பெருங்காதின் இலங்கு குழை அணிதல்	செவியின்கண் விளங்குகின்ற குழை அணிதல்	"பணைப் பெருந் திரள்தோள் பகுவாய்க் கூரெயிற் றிணைப் பெருங்காதின் இலங்குகுழை அணிந்த சேடேந்து வனப்பிற் செழுமலர்த் தடங்கண்", பெருங். 2: 8: 103 - 105
சுறாநிறக் கொடுங் குழை சுழன்று அலைத்தரல்	மகரமீன் வடிவான அழகிய நிறமுடைய வளைந்த காதுக் குழை அசைந்து பிடரியில் ஆடுதல்	"சுறாநிறக் கொடுங்குழை சுழன்று எருத்து அலைத்தர", சீவக. 703 : 1
புனைவார் பொன் குழை அசைதல்	காதில் அணிந்த பொன்னால் ஆன குண்டலம் அசைதல்	"புனைவார் பொன்குழை அசையப் பூந்தானை பின் போக்கி வினைவாய்ந்த தழல் வேதி மெழுக்கு உறவெண் சுதை ஒழுக்கும்", திருத். 1913 : 1 - 2
குழை காதமர்தல்	குண்டலம் காதில் அணிதல்	"வண்ணமர் மேனியினாரும் பிறைபுல்கு செஞ்சடை யாருங் கண்ணமர் நெற்றியினாருங் காதமருங்குழை யாரும்", தேவா. திருஞா. 2: 69: 1: 1 - 2
குழைக்கு வடி காது அலைதல்	குண்டலத்தால் வடித்த காது அசைதல்	"குழைக்கு அலையும் வடிகாதில் கூத்தனார் அருளாலே மழைக்கு உதவும் பெருங்கற்பின் மனைக் கிழத்தியார் தம்பால்", திருத். 881 : 1 - 4
கொடுங்குழை ஆட்டுதல்	கொடுங்குழையை அசைத்தல்	"தாம்பல்வா யோடி நிறைகாத்தல் - ஓம்பார் நெடுங்கழை நீண் மூங்கில் என இகழ்ந்தாராட்டும் கொடுங்குழை போலக் கொளின்", சிறுபஞ்ச. 55 : 2 - 4
அரிக்குழை ஆடல்	அழகையுடைய மகரக் குழை ஆடுதல்	"வரிக்கூழ வட்டி தழீஇ அரிக்குழை ஆடற் றகையள் கழுத்தினும் வாலிது நுண்ணிதாத் தோன்றும் நுசுப்பு", கலித். 109 : 14 - 16
காதார் குழையாடல்	காதில் பொருந்திய குண்டலம் ஆடுதல்	"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்கோதை குழலாட வண்டின் குழாமாடச்", திருவாச. திருவெம். 14: 1 - 2;"கையார் வளை சிலம்பக் காதார் குழையாட மையார் குழல் புரளத் தேன்பாய வண்டொலிப்பச்", திருவாச. திருஅம். 13 : 1 - 2
பூங்குழை ஊசலாடல்	காதில் பொலிவினை யுடைய மகரக் குழை அசைதல்	"பூங்குழைஊசற் பொறைசால் காதின் நாண் அடச் சாய்ந்த நலங்கிளர் எருத்தின்", பொருநர். 30 - 31
குழையாடுதல்	காதில் அணிந்த குண்டலம் அசைதல்	"கூறுடைய மடவாளோர் பாகங்கொண்டு குழையாடக் கொடு கொட்டி கொட்டா வந்து", தேவா. திருநா. 6: 9: 6: 3-4; "குழையாட நடமாடுங் கூத்தன் கண்டாய் கோடிகா அமர்ந்துறையுங் குழகன் தானே", தேவா. திருநா. 6 : 81 : 7 : 7 - 8

மகரம் சேர்குழை இலங்கி ஆடுதல்	மகர (மீன்) வடிவம் கொண்ட குண்டலம் அசைதல்	"மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின் தாழ மகரம் சேர்குழை இருபாடு இலங்கியாட", திருநெடுந். 21: 1 - 2
ஒளிர் குழைகள் காதின் நான்று பொன்னூசலாடுதல்	அழகிய ஒளி விளங்கும் குழைகள் காதிலே பொன்னூஞ்சல் ஆடுதல்	"நித்தில வடமும் பூணும் ஆரமும் நிழன்று தாழ ஒத் தொளிர் குழைகள் காதின் நான்று பொன்னூ சலாடப்", சீவக. 2493 : 1 - 2
குழை காதார்தல்	காதிலணிந்த குழை அசைதல்	"காதார் குழையும் கடற் சங்கமும் குங்குமமும் போதார் அலங்கல் பொறையும் பொறை யென்று நீக்கித்", சீவக. 2349 : 1 - 2; "காதார் குழையினர் கட்டங்கத்தர் கயிலாய மாமலையார் காரோணத்தார்", தேவா. திருநா. 6 : 2 : 6 : 1 - 2
கனகக்குழை காதில் ஆர்தல்	பொற்குழை காதில் பொருந்துதல்	"கட்டு வாங்கம் தரித்த பிரானைக் காதிலார் கனகக் குழை யானை", தேவா. சுந்தர. 46 : 7 : 3 - 4
சங்கக் குழை காதிசைதல்	குழை அசைதல்	"காதிசைந்த சங்கக் குழையினான் காண் கனக மணியனைய காட்சியான் காண் மாதிசைந்த மாதவ முஞ் சேர்தித்தான் காண்", தேவா. திருநா. 6 : 52 : 4 : 1 - 3
கனங்குழை யிமைத்தல்	பொற் குழை ஒளி வீசுதல்	"பெயலான்று அவிந்த தூங்கிருள் நடுநாள் மின்னு நிமிர்ந்தன்ன கனங்குழை யிமைப்பப்", அகம். 158: 2-3
ஊசலாடும் குழை நிழல் உமிழ இடுதல்	அசைகின்ற குழை ஒளியுமிழுமாறு பூட்டுதல்	"உள்ளத்தின் ஊசலாடும் குழை நிழல் உமிழ இட்டார்", கம்ப. 1122 : 7 - 8
குழை இலங்குதல்	காதில் குண்டலம் விளங்க அணிதல்	"கொட்டிநின் றிலயங்களாடக் கண்டேன் குழைகாதிற் பிறைசென்னி யிலங்கக் கண்டேன்", தேவா. திருநா. 6 : 97 : 6 : 3 - 4; "புரிமுத்தாரமும் பூணும் புரள எரி மணிக் கடகமுங் குழையும் இலங்க", பெருங். 2: 18: 100 - 101
காதிற்குழை பொலிந்து இலங்குதல்	காதில் அணிந்த குண்டலம் விளங்குதல்	"இழைத்த பொன்னகரின் வெள்ளியிடுமணை மன்ன ரேத்தக் குழைப் பொலிந் திலங்கு காதிற் கொற்ற வன் இருந்த பின்றை", சீவக. 2416: 1 - 2
வார்குழை எரிதல்	நீண்ட குழை விளங்குதல்	"அருவி போல்வதோ ராரமு மார்பிடைத் துயல எரியும் வார்குழை யிமையவ னொருவன் வந்திழிந்தான்", சீவக. 2363 : 3 - 4
குழை காது கொள்ளுதல்	குழைகள் காதில் அணிதல்	"காது கொள் குழைகள் வீசும் கதிர்நிலவு இருள் கால் சீப்ப", திருத். 972 : 3 - 4; "இளமயில் அனைய சாயல் ஏந்திழை குழை கொள் காது வளம்மிகு வனப்பினாலும் வடிந்த தாளுடைமையாலும்", திருத். 3003 : 1 - 2
குழை கொள்ளுதல்	குழை அணிதல்	"விழைய வூட்டிய மேதகு தீம்புகை குழைகொள் வாண்முகஞ் சூழ்குளிரங் கதிர் மழையுண் மாமதி போன் மெனத் தோன்றுமே", சீவக. 127 : 2 - 4
சங்கு குழைச்செவி கொள்ளுதல்	சங்கு குழையைச் செவியில் அணிதல்	"சங்கு குழைச்செவி கொண்டரு வித்திரள் பாய வியர்த்தழல் போலுடைத்தாம்", தேவா. சுந்தர. 56 : 4: 5 - 6
கனங்குழை சுடர்தல்	காதில் பொன்னாற் செய்த மகரக் குழையை அணிதல்	"பல்லார் பெருமழைக் கண்ணர்மடஞ் சேர்த்தசொல்லர் சுடருங் கனங்குழைக் காதினர்", கலித். 103 : 5 - 9
பொன்னவிர் குழை சுடர்தல்	பொன்குழை சுடர் விடுதல்	"மன்னருள் கலிங்கர் கோமான் மத்தகத் திருப்ப மன்னர் பொன்னவிர் குழையும் பூணும் ஆரமும் சுடர வீழ் வான்", சீவக. 2251 : 2 - 3
மணிக்குழை சுடர்தல்	மணிக்குழை ஒளி வீசுதல்	"திளைக்குமா மணிக்குழை சுடரச் செப்பினான் வளைக்கையார் கவரிகொண் டெறிய மன்னனே", சீவக. 2867 : 3 - 4

குழையோர் காதிற்கு இருளறச் சுடர வைத்தல்	செந்தீ நிறம் பொருந்திய மகரக் குழையை ஒரு காதில் அணிதல்	"எரிநிறக் குழையோர் காதிற்கு இருளறச் சுடர வைத்தான்", சீவக. 696 : 4
வார்குழை சுடருதல்	நீண்ட குழை ஒளி வீசுதல்	"தாணெடுங் குவளைக் கண்ணித் தளையவிழ் கோதை மாலை வாண்முடி வைர வில்லும் வார்குழை சுடரு மார்பின் பூணிடை நிலவு மேனி மின்னொடு பொலிந்த தேவர்", சீவக. 2802 : 1 - 3
எரியும் வார்குழை சுடருதல்	ஒளிவிடும் காதுக் குழை விளங்குதல்	"உருவம் ஆர்ந்தன உரோமப் பட்டுடுத்து எரியும் வார் குழை சுடர இந்திர திருவி லன்னதார் திளைப்பத்", சீவக. 2425 : 1 - 3
குழை சேர்தல்	காதில் குழை அணிதல்	"தோடொரு காதொரு காது சேர்ந்த குழையானிழை தோன்றும்", தேவா. திருஞா. 3 : 107 : 3 : 1 - 2
விட்டிலங்கு வெண் குழை சேர்தல்	காதில் விட்டுவிட்டு ஒளிவீசும் சங்கினால் ஆன குண்டலத்தை அணிதல்	"காலன்றன் கால மறுப்பார் தாமும் விட்டிலங்கு வெண்குழை சேர் காதினாரும் வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்தனாரே", தேவா. திருநா. 6: 59: 7: 6 - 8
குழை தவழ்தல்	குழையணிதல்	"குழைதவழ் செவியுங் குளிர்சடைத் தெண்டும் குண் டையுங் குழாங்கொடு தோன்றும்", திருவி. 107: 3 - 4
குழை தழுவுதல்	செவியில் குண்டலம் பொருந்தியிருத்தல்	"குழைதழுவு திருக்காதில் கோளரவம் அசைத்துக் கோவணம் கொள் குழகனைக் குளிர் சடயினானை" தேவா. சுந்தர. 36: 8: 3 - 4
குழை தாழ்தல்	குழைகள் தாழ்தல்	"அணிவரந் தோழர் சூழத்தாழ்குழை திருவில் வீச பணிவருங் குரிசில் செல்வான் பாவைய திடரைக் கண்டான்", சீவக. 977 : 3 - 4
காதில் அணி கண்டிகை வடிந்த குழை தாழ்தல்	காதின் அணிந்த கண்டிகை போன்று வளைந்த குழை தாழ்தல்	"காதில் அணி கண்டிகை வடிந்த குழை தாழச் சோதிமணி மார்பின் மிசை நூலினொடு தோளின்", திருத். 176 : 1 - 2
காதில் வெண் குழை கண்டிகைத் தாழ்தல்	காதில் அணிந்த வெண்மையான கண்டிகை எனும் அணி தாழ்தல்	"பூதி ஆகிய புனித நீறு ஆடிப் பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து காதில் வெண்குழை கண் டிகை தாழக்", திருத். 1148 : 1 - 3
தகை நிறக் குழை தாழ்தல்	ஒளிமிக்க காது குண்டலங்கள் தாழ்தல்	"பகைபுறங் கொடுத்த வேந்தின் பரிவொடு பகடு நிற்பத் தகைநிறக் குழைகள் தாழ்ந்து சாந்தின்வாய் நக்கி மின்ன", சீவக. 1077 : 1 - 2
பொலம்குழை தாழ்தல்	பொற்குண்டலம் தாழ்தல்	"பூம்பயிலும் சுருள் குழலும் பொலம் குழையும் உடன் தாழ", திருத். 883 : 3 - 4
மணிக்குழை தாழ்தல்	மணிக் குண்டலம் தாழ்தல்	"தாழுமணிக் குழையார்முன் தக்கதிருக் கடைக் காப்பு சாத்தி நின்றார்", திருத். 2007 : 7 - 8
வான்மகர வார் குழை காது தாழ்தல்	மகரமென்னும் மீன் போன்ற நீண்ட அணி காதின் கண் தொங்குதல்	"வாதுவவான் மாதரார் சொற்றேறான் - காது தாழ் வான் மகர வார் குழையாய் மாதவர்க்(கு) ஊணீந் தான் தான் மகர வாய்மாடத்தான்", ஏலாதி. 43 : 2 - 4
தாழ்குழை திருவில் வீசுதல்	தாழ்வாக அணியப் பட்டுள்ள குழை ஒளிவீசுதல்	"தாழ்குழை திருவில் வீசப் பணிவரும் குரிசில் செல்லான்", சீவக. 977 : 3 - 4
வார்குழை திருவில் வீசுதல்	நீண்ட குழைகள் வானவில் போல ஒளி வீசுதல்	"வாணுதற் பட்டம் மின்னவார் குழை திருவில் வீசப் பூண்முலைப் பிறழப் பொற்றோ டிடவயின் நுடங்க ஒல்கி", சீவக. 1257 : 1 - 2

கொடுங்குழை திளைத்தல்	காதில் அணிந்த குழை திளைத்தல்	"கொடுங்குழை திளைக்குங் காதினர் கடுங்கதிர்க் கலாவம் புதைத்த நிலா", பெருங். 2 : 5 : 84 - 85
சித்திர மணிக் குழை திளைத்தல்	சித்திர வேலைப்பாடு அமைந்த குண்டலம் அசைதல்	"சித்திர மணிக் குழை திளைக்கும் வாண்முகத்து ஒத்தொளிர் பவளவா யோவக் கைவினைத் தத்தரி நெடுங்கணாடன் னொடுஆடுநாள்", சீவக. 1075 : 1 - 3
சிறுகுழை துயல் வருதல்	காதில் சிறுகுழை அசைதல்	"சிறுகுழை துயல் வருங்காதில் பணைத் தோள் குறுநெறிக் கொண்ட கூந்தலாய் மகள்", பெரும். 161 - 162
செஞ்சூட் டொண் குழை துயல் வரல்	ஒள்ளிய குழை அசைதல்	"செஞ்சுட் டொண்குழை வண்காது துயல்வர", அகம். 86 : 27
பொலங்குழை துயல் வருஉம்	காதணி அசைதல்	"நகை தாழ்பு துயல்வருஉம் வகையமை பொலங் குழை சேண் விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ யகலா மீனின் அவிர்வன இமைப்பத்", திருமுருகு. 86 - 88
குழை தூங்குதல்	குழைகள் தொங்குதல்	"தோடு உண்ட சுருளும், தூங்கும் குழைகளும் சுருளின் தோய்ந்த ஏடு உண்ட பசும் பொன் பூவும்", கம்ப. 8822 : 1 - 2
கடிப்புஇகு காதிற் கனங்குழை தொடர்தல்	கடிப்பு எனும் காது வளர்க்கும் அணியால் துளையைப் பெரிய தாக்கி, காதில் குழை அணிதல்	"கடிப்புகு வேரிக் கதவமிற் றோட்டிக் கடிப்புஇகு காதிற் கனங்குழை தொடர", பரி. தி. 1 : 32 - 33
நன்மணிக் குழை இரண்டும் நக்குதல்	காது குண்டலங்கள் ஒளி வீசுதல்	"பொன் அணிந்து பூஞ் சுண்ணந் தைவர நன்மணிக் குழை இரண்டும் நக்கவே", சீவக. 3127 : 3 - 4
ஒண்குழை புணர்தல்	வளவிய தாழ்ந்த காதில் ஒள்ளிய மகரக் குழை அணிதல்	"ஒண்குழை புணரிய வண்தாழ் காதின் கடவுட் கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரை", மது. 709 - 710
கலைமான் மருப் பின் அரிந்த குழை காதில்பெய்தல்	கலைமான் கொம் பிலே செய்யப்பட்ட குண்டலத்தைக் காதில் அணிதல்	"கானில் வரித்தளிர் துதைந்த கண்ணி சூடி கலைமருப் பின் அரிந்தகுழை காதில் பெய்து", திருத். 697 : 1 - 2
காதில் குழை இலங்கப் பெய்தல்	காதில் குண்டலம் ஒளி விளங்கும்படி அணிதல்	"ஓதிற் றொருநூலுமில்லை போலும் உணரப் படாத தொன் றில்லை போலும் காதிற் குழையிலங்கப் பெய்தார் போலுங் கவலைப் பிறப்பிடும்பை காப்பார் போலும்", தேவா.திருநா. 6 : 21 : 2 : 1 - 4
குழையோர் காதினிற் பெய்தல்	ஒரு காதில் குழை அணிதல்	"குழையொர் காதினிற் பெய்து கந்தொரு குன் றின் மங்கை வெருவுற மழை நெடுங்கை", தேவா. திருஞா. 3 : 38 : 4 : 5 - 7
கொடுங்குழை பெய்தல்	வளைந்த குண்டலத் தைக் காதில் அணிதல்	"கொடுங்குழை பெய்த செழுஞ் செய் பேதை", நற். 120 : 3
குழை மிளிர்தல்	காதில் விளங்கும் குழை அணிதல்	"காதின் மிளிருங் குழையர் கரிய கண்டத்தார் போதி லவனு மாலுந் தொழப் பொங் கெரியானார்", தேவா. திருஞா. 2 : 62 : 9 : 1 - 2
குழை மின்னுதல்	காதில் அணிந்த குழை ஒளிவிடுதல்	"பட்டமும் குழையும் மின்னப் பல்கலன் ஒலிப்பச் சூழ்ந்து மட்டுஅவிழ் கோதை மாதர் மைந்தனைக் கொண்டு புக்கார்", சீவக. 471 : 3 - 4; "கோல் தொடி மகளிர் செம்பொன் கோதையும் குழை யும் மின்ன", சீவக. 702 : 3; "மின்னு குழையினர் கோதையர் மின்னுயர் பொன் வரை மாடம் புதையப் பொறிமயில்" சீவக. 2117 : 1 - 2; "கோவையும் குழையும் மின்ன கொண்டலின் முரசம் ஆர்ப்ப புதுமணம் புகுகின் றாரை", கம்ப. 4954 : 83

ஒளிர்மணிக் குழை மின்னுதல்	அழகு விளங்கும் காதுக் குழை மின்னுதல்	"ஒள்ளழல் வயிரப்பூணும் ஒளிர்மணிக் குழையும் மின்ன ஒள்ளழல் கொள்ளி வட்டம் போற்குலாய்ச் சுழலப் பொன் ஞாண் ஒள்ளழல் நேமி நக்க மண்டில மாகா நின்றான்", சீவக. 2203 : 1 - 3
கனமணிக் குழை மின்னுதல்	மணிக்குழை மின்னு தல்	"ஏந்தெழில் ஆகம் சாந்தின் இடுகொடி எழுதிக் காதின் காய்ந்தெரி செம்பொன் தோடும் கனமணிக் குழை யும் மின்ன" சீவக. 2181 : 1 - 2
சுடர்க்குழைகள் மின்னுதல்	ஒளிவிடுகின்ற குண்டலங்கள் மின்னுதல்	"தூமணி விளக்கொடு சுடர்க்குழைகள் மின்னக் காமர் திரு மாளிகை கவின் பொலிவு செய்வார்", திருத். 1939: 3 - 4
தெய்வக் குழை மின்னுதல்	ஒளியுமிழ்கின்ற குழை என்னும் காதணி மின்னுதல்	"செம்பொன் செய் சுருளும் தெய்வக் குழைகளும் சேர்ந்து மின்ன", கம்ப. 894: 1 - 2
நலங்கிளர் குழைகள் நான்று சாந்தின் வாய் நக்கி மின்னுதல்	சந்தனம் பூசிய தோளின் மேல் காதுக் குழைகள் தவழ்ந்து ஒளி செய்தல்	"இலங்கு பொற்குவடு சாந்தம் எழுதிய தனைய தோள் மேல் நலங்கிளர் குழைகள் நான்று சாந்தின் வாய்நக்கி மின்னக்", சீவக. 2836 : 1 - 2
புடை இரு குழையும் மின்னுதல்	இருகாதுகளிலும் அணிந்த குழைகள் ஒளி விடுதல்	"புடை இருகுழையும் மின்னப் பூந்துகில் செறிந்த அல்குல் நடைஅறி மகளிர் ஏந்த நல் அமிழ்து உண்ணும் போழ்தில்", சீவக. 399 : 1 - 2
குழை முற்றுதல்	குண்டலம் சூழ்ந்து இருத்தல்	"கழை முற்று தீந்தேன் சுரும்பார்வய லைந்து மூதூர் குழைமுற்று காதின் மணிக்கொம்பொடு நாய்கன் ஈந்தான்", சீவக. 1064 : 3 - 4
வல்லான் புனைந்த வயிரக்குழை வார்தல்	தொழில் வல்லவ னால் செய்யப்பட்ட வயிரக்குழை அழகிய ஒளியை வீசுதல்	"வல்லான் புனைந்த வயிரக்குழை வார்ந்து வான்பொற் பல்பூண் எருத்திற் பரந்தம் சுடர் கால மன்னன்", சீவக. 1868 : 1 - 2
வயிரக் கொடுங் குழை வார்தல்	வயிர மணியாலே இயற்றிய வளைந்த குழை அணிந்திருத்தல்	"மயிர்வினைக் கம்ம மரபுளி முடித்தபின் வயிரக் கொடுங் குழை வார்ந்த காதிற்", பெருங். 2: 5: 1 - 2
மாமகரக் குழை வில்லிடுதல்	பெரிய மகரக் குண்டலம் ஒளி விடுதல்	"காசு இல் மாமணிச் சாமரை கன்னியர் வீச மாமகரக் குழை வில்லிட வாசவான் கழுநீர் பிடித்து ஆங்கு அரி", சீவக. 429 : 1 - 3
குழை விளங்குதல்	குழை ஒளி வீசுதல்	"வேறா உன்னடியேன் விளங்குங்குழைக் காதுடை யாய் தேறேன் உன்னையல்லால் சிவனேயென் செழுஞ் சுடரே", தேவா. சுந்தர. 41 : 8 : 1 - 2; "வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன் விளங்குங் குழைக் காதுடை வேதியனே", தேவா. சுந்தர. 84: 8: 1 - 2
வெண்குழைத் தோடு விளங்குதல்	சங்குத்தோடு விளங்குதல்	"ஏதனை யே தமிலா விமையோர் தொழும் வேதனை வெண்குழை தோடு விளங்கிய காதனைக் கடி பொழிற்கோழம்ப மேவிய", தேவா. திருஞா. 2 : 13 : 3 : 1 - 3
எழின்மணிக் குழைவில் வீசுதல்	குண்டலம் ஒளி வீசுதல்	"நிழன்மலிந்த நேர்வடந் நிழற்படப்பு டைத்தர எழின் மணிக்குழைவில் வீச இன்பொனோலை மின்செய", சீவக. 1952 : 2 - 3
ஒண்மணிக் குழைவில் வீசுதல்	சிறந்த மணிக் குண்டலம் ஒளி வீசுதல்	"ஒண்மணிக் குழைவில் வீச ஒளிர்ந்து பொன் னோலைமின்ன வண்ணமே கலைகள் ஆர்ப்ப வான்சிலம் பொலிப்ப முத்தும் கண்ணியும்", சீவக. 1689 : 1 - 3
கனமணிக் குழை வில் வீசுதல்	காதில் அணிந்திருந்த குண்டலம் ஒளி வீசுதல்	"கன்னியர் கவரி வீசக் கனமணிக் குழைவில் வீச இன்னிசைக் கூத்து நோக்கி யிருந்தனன் திலக னான்", சீவக. 1170 : 3 - 4

வார் காதில் குழை வைத்தல்	நீண்ட காதில் குண்டலம் அணிதல்	"மன்நலத்த திரள்தோள் மேல் மழுவாள் வைத்தார் வார்காதிற் குழை வைத்தார் மதியும் வைத்தார்", தேவா. திருநா. 6 : 14 : 2 : 3 - 4
இலங்கு பொன் னோலை மின்ன குழையோர் காதில் திருவில் வீசுதல்	ஒரு காதில் ஓலை மின்ன, குழை ஒரு காதில் மின்னுதல்	"இலங்கு பொன்னோலை மின்ன இன்முகம் சிறிது கோட்டி அலங்கலும் குழலும் தாழ அருமணிக்குழை யோர் காதிற் கலந்தொளி கான்று நின்று கதிர்விடு திருவில் வீச", சீவக. 2060 : 1 - 3
செம்பொன் ஓர் ஓலை சேர்த்தி, எரிநிறக் குழை யோர் காதிற்கு இருளறச் சுடர வைத்தல்	ஒரு காதில் ஓலை ஒரு காதில் குழை அணிவித்தல்	"வரநிற வண்ணமாலை வலம்பட மிலைச்சி வாளார் திருநிற முகத்திற்கேற்பச் செம்பொன் ஓர் ஓலை சேர்த்தி எரிநிறக் குழையோர் காதிற்கு இருளறச் சுடரவைத்தான்", சீவக. 696 : 2 - 4
புடை தாழ்குழை பொருவில்லுயர் பொன்னோலை யொடு எரிதல்	குண்டலத்தோடு உயர்ந்த பொன் னோலை விளங்குதல்	"புடைதாழ் குழை பொருவில்லுயர் பொன் னோலை யொடெரிய உடை நாணொடு கடிவட்டினொ டொளிர் வாளினொடொருவன் அடையாநிக ரெறி நீயெனவதுவோவென நக்கான்", சீவக. 2263 : 1 - 3
மின்னும் குண்டலம் செம்பொன் ஓலை முகம் சுடர ஆக்குதல்	மின்னுகின்ற குண்ட லத்தையும் பொன் னோலையையும் முகம் மேலும் அழகு விளங்க அணிவித்தல்	"திருவிலே சொரிந்து மின்னும் குண்டலமும் செம் பொன் ஓலை உருவுகொள் மதியம் என்ன ஒளி முகம் சுடர ஆக்கி", சீவக. 674 : 1 - 2
மின்னு வீசும் குண்டலம் காய் பொன்ஓலை ஏற்ப அணிதல்	மின்னலைப் போல் ஒளிவீசும் காதுக் குண்டலமும் பொன் ஓலையும் பொருந்த அணிதல்	"கார்வளர் மின்னு வீசும் குண்டலம் காய்பொன் ஓலை ஏர்வளர் பட்டம் ஏற்ப அணிந்திருள் சுமந்து திங்கள்", சீவக. 2536 : 1 - 2
கோல வித்தகங் குயின்ற நுட்பத்துத் தோடுங் கடிப்பும் காதில் துயல் வருதல்	ஒப்பனைத் தொழில் திறமியன்ற நுட்பத் தினையுடைய தோடும் கடிப்பும் காதில் அசைதல்	"கோல வித்தகங் குயின்ற நுட்பத்துத் தோடுங் கடிப்புந் துயல்வருங் காதினர் வாலிழை மகளிர்", பெருங். 2 : 7 : 37 - 39
சூடுறு பொன் வினைச் சுவணர் புனைந்த தோடுங் கடிப்பும் துளங்குதல்	காதில் சுடுதலுற்ற பொற்றொழிலாற் செய்த சுவணப் பொன்னால் செய்த தோடும் கடிப்பும் அணிதல்	"சூடுறு பொன்வினைச் சுவணர் புனைந்த தோடுங் கடிப்புந் துளங்கு காதினர்", பெருங். 2 : 7 : 19 - 20
குண்டலமும் பொன் தோடும் காதில் ஒளிர்ந்திலங்குதல்	குண்டலமும் பொன் தோடும் காதில் ஒளி யுடன் விளங்குதல்	"கோதை புறம்தாழக் குண்டலமும் பொன்தோடும் காதின் ஒளிர்ந்திலங்கக் காமர் நுதல்வியர்ப்ப...", சீவக. 731 : 1 - 2
மணிமகர குண்டலமும் பைந்தோடும் முகத்தில் இலங்குதல்	மகரமீனின் வடிவமாகச் செய்யப்பெற்ற குண்டலமும் புதிய பொன்னாலான தோடும் விளங்குதல்	"பைங்கண் மணிமகர குண்டலமும் பைந் தோடும் திங்கண் முகத்திலங்கச்", சீவக. 1971 : 1 - 2
குண்டலமும் பொற்றோடும் நிலந்திவள்தல்	வணங்குகையில் குண்டலமும் பொற றோடும் நிலத்தில் படுதல்	"குண்டலமும் பொற்றோடும் பைந்தாருங் குளிர் முத்தும் வண்டலம்பு மாலையு மணித் தொத்து நிலந் திவள .... வண்டலர் பூந்திருவடியை மணிமுடியின் வணங் கினான்", சீவக. 3022

மகரகுண்டலமும் தோடும் காதில் மிளிர்தல்	மகர மீன் வடிவில் செய்யப்பட்ட குண் டலமும் தோடும் காதிலே பொருந்தி அழகு செய்தல்	"தழுவப் பெரிய தடமென் தோட் சலாகை மின்னத் தாழ்ந்திலங்கும் விழிகண் மகர குண்டலமுந் தோடுங் காதில் மிளிர்ந்தனவே", சீவக. 2696: 5 - 8
குண்டலம் ஒரு புடை குலாவி வில்லிட ஒரு புடை தோடு மின் செய்தல்	ஒரு பக்கத்தில் குண்டலமும் மற் றொரு பக்கத்தில் தோடும்வேறுபட விரிந்து ஒளிவீசுதல்	"குண்டலம் ஒரு புடை குலாவி வில்லிட விண் டலர்ந் தொருபுடை தோடு மின்செய", சீவக. 1009 : 1 - 2
தோடு மின்ன குண்டலம் திருவில் வீசுதல்	காதில் பொன் தோடும் குண்டலமும் ஒளிவீசுதல்	"கோதையும் தோடும் மின்னக் குண்டலம் திரு வில் வீச", சீவக. 740 : 1
பொற்றோடும் குண்டலமும் துளங்குதல்	தோடும் குண்டலமும் அசைதல்	"ஐயாண்டெய்தி மையாடி யறிந்தார் கலைகள் படை நவின்றார், கொய் பூமாலை குழன் மின்னுங் கொழும் பொற்றோடுங் குண்டலமும் ஐயன் மார்கடுளக் கின்றியாலுங் கலிமா வெகுண்டூர்ந்தார்", சீவக. 2706: 1 - 3
காதணிந்த பொற் றோடும் குண்டல மும் நகுதல்	காதில் பொன் தோடும் குண்டலமும் ஒளிவிடுதல்	"காதணிந்த பொற்றோடும் குண்டலமும் நக நகா வீததைந்த வரைமார்பர் விஞ்சையர் போற் கிடந்தனரே", சீவக. 2241 : 3 - 4
பைம்பொற்றோடும் குண்டலமும் பதைத்தல்	பொன்தோடும் குண் டலமும் அசைந்து ஒளி வீசுதல்	"பண்கனியப் பாவைமார் பைம் பொற்றோடுங் குண்டலமுந் தாம் பதைப்ப இருந்துபாட", சீவக. 3138 : 3 - 4
குண்டலம் குழை திகழ்தல்	காதில் குண்டலமும் குழையும் விளங்குதல்	"குண்டலங் குழை திகழ் காதனே என்றும் கொடுமழு வாட்படைக் குழகனே என்றும்", தேவா. சுந்தர. 5: 5: 1 - 2
தாழ்மகரக் குழையும் தோடும் அணிதல்	தாழத் தொங்கு கின்ற மகர குண்ட லமும் தோடும் அணிந்திருந்தல்	"தூதனை என்றனையாள் தோழனை நாயகனைத் தாழ் மகரக்குழையும் தோடும் அணிந்ததிருக் காதனை நாயடியேன் எய்துவ(து) என்று கொலோ", தேவா. சுந்தர. 78 : 9 : 5 - 7
திருத்தோடு குழை யொடு ஆர்த்தல்	குழை, தோடு இரண்டு அணிந்திருத்தல்	"குழையார் திருத்தோடு காதிற் கண்டேன் கொக் கரையுஞ் சச்சரியுங் கொள்கை கண்டேன்", தேவா. திருநா. 6 : 77 : 7 : 1 - 2
பொற்குழைகளும் தோடும் துளங்குதல்	பொன்னாலாகிய குழை விளங்குதல்	"துளங்கு பொற்குழைகளும் தோடும் சுண்ணமும் கிளர்ந்தகில் சாந்துபூக் கமழ்ந்து கேழ்கிளர்", சீவக. 2408 : 1 - 2
தோடு பெய்தொரு காதினிற்குழை தூங்கல்	ஒரு செவியில் தோடும் பிறிதொரு செவியில் குண்டலமும் ஆடுதல்	"பாடல் வண்டறையும் பழனத்திருப் பனையூர்த் தோடு பெய்தொரு காதினிற் குழை தூங்கத் தொண்டர் கள் துள்ளிபாட நின்று", தேவா. சுந்தர. 11 : 1 : 3 - 5
துளை வெண் குழை சுருள் வெண்தோடும் தூங்குதல்	வெண் குழையையும், சுருண்ட வெள்ளிய தோட்டினையும் நீண்ட காதில் அசையும்படி அணிதல்	"துளை வெண்குழையும் சுருள்வெண்தோடும் தூங்கும் காதில் துளங்கும் படியாய்", தேவா. சுந்தர. 27 : 5 : 1 - 2
சங்க வெண்குழை யும் தோடும் காதில் அணிதல்	சங்காலான வெள்ளிய குண்டலமும் தோடும் காதில் அணிதல்	"நலச்சங்க வெண்குழையுந் தோடும் பெய் தோர் நால்வேதம் சொலச்சங்கை யில்லாதீர் சுடுகாடல் லாற் கருதாதீர்", தேவா. திருஞா. 2 : 55 : 1 : 1 - 2
மணிக்குழை சங்கு வளைத்து மலர் செறிந்த திருத் தோடு புடை செறித்தல்	குழையும் தோடும் அணிதல்	"உடன் அணைந்தது என அழகை வவ்வுதிருக் காதின் மணிக்குழைச் சங்கு வளைத்து அதனுள் செவ் வரத்த மலர் செறிந்த திருத்தோடு புடை சிறக்க", திருத். 3693 : 3 - 4

பொற்றோடும் குழையும் பொங்குதல்	பொன்னாலாகிய தோடும் குழையும் அணிதல்	"இனிதினி னிலங்கு பொற்றோ டேற்றுமின் குழை கள் பொங்கத் துணிவிலர் களிற்றோ டாடித் தொழு தகக் கழிப்பர் வேந்தே", சீவக. 2807 : 3 - 4
குழையும் பொற் றோடும் மிளிர்தல்	ஒளிவீசும் குழையும் பொன்தோடும் விளங்குதல்	"கன்னிக் கலிங்கம் அகிலார்ந்து கவவிக் கிடந்த குறங் கினாள் மின்னுக் குழையும் பொற்றோடும் மிளிர எருத்தம் இடங்கோட்டி என்னும் இமையாள் நினைத்து இருந்தாள்", சீவக. 1658 : 1 - 3
காதின் காய்ந்தெரி செம்பொன் தோடும் கனமணிக் குழையும் மின்னுதல்	காதுகளில் மின்னி ஒளிவிடும் பொன் தோடும் மணிக் குழையும் விளங்குதல்	"ஏந்தெழில் ஆகம் சாந்தின் இடுகொடி எழுதிக் காதின் காய்ந்தெரி செம்பொன் தோடும் கனமணிக் குழையும் மின்ன", சீவக. 2181 : 1 - 2
காதணிந்த தோடு ஒருபால் மின்னு வீச குழை ஒரு பால் திருவில் வீசல்	காதில் அணிந்த தோடும் குழையும் ஒளி வீசுதல்	"காதணிந்த தோடொருபால் மின்னு வீசக் கதிர் மின்னுக் குழையொரு பால் திருவில் வீச தாதணிந்த தாமங்கள் ஒருபாற் சோரத் தாமரைக்கண் தாமிரங்க புருவமாட", சீவக. 3136 : 1 - 4
தோடு உண்ட சுருள்	பனந்தோட்டின் தன்மை பொருந்திய காதணியாகிய பொற் சுருள்	"தோடு உண்ட சுருளும் தூங்கும் குழைகளும் சுருளின் தோய்ந்த ஏடுஉண்ட பசும் பொன் பூவும்", கம்ப. 8822 : 1 - 2
செம்பொன் செய் சுருளும் தெய்வக் குழைகளும் சேர்ந்து மின்னுதல்	செம்பொன்னால் செய்யப்பெற்ற ஓலை என்னும் காதணியும் குழை களும் ஒளிவீசுதல்	"செம்பொன் செய் சுருளும் தெய்வக் குழைகளும் சேர்ந்து மின்ன", கம்ப. 894 : 1 - 2
செவிப்பூ அணிதல்	காதணி அணிதல்	"நாடுபுகழும் பரிசினால் நன்றாக சூடகமே தோள் வளையே, தோடே, செவிப்பூவே பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்", திருப். 27 : 3 - 5
தோடு	காதணி	"நகை மாலைப் பூ வேய்ந்து தோள்அணி, தோடு, சுடர் இழை, நித்திலம் கொண்டிய வண்டு கதுப்பின் குரல் ஊத", பரி. 10 : 115; "அணித்தோட்டுத் திருமுகத்து ஆயிழை எழுதிய", சிலப். 8 : 111; "தோடுடையார் குழைக் காதிற் சுடுபொடி யாரனலாடக் காடுடை யாரெரி வீசுங் கையுடையார்கடல் சூழ்ந்த", தேவா. திருஞா. 2 : 67 : 5 : 1 - 2; "தோடொரு காதனாகி யொருகாதிலங்கு சுரிசங்கு நின்று புரளக் காடிடமாக நின்று", தேவா. திருஞா. 2 : 84 : 5 : 1 - 3; "மெய்யமரும் பொடிப் பூசி வீசுங் குழையார் தரு தோடும் பைய மரும்மர வாட வாடும்", தேவா. திருஞா. 3 : 106 : 5 : 3 - 5; "பட்டமுந் தோடுமோர் பாகம் கண்டேன் பார்திகழப் பலிதிரிந்து போதக் கண்டேன்" தேவா. திருநா. 6 : 97 : 6 : 1 - 2; "வடகமுந் துகிலுந் தோடு மாலையு மணியும் முத்தும்", சீவக. 462 : 1; "ஒண்டிறற் களிற்றின் நெற்றி எறிந்து தோடு ஒலித்து வீழ", சீவக. 979 - 2; "துளங்கு பொற் குழைகளுந் தோடுஞ் சுண்ணமும் கிளர்ந்தகில் சாந்து பூக் கமழ்ந்து கேழ்கிளர் இளங்கதி ரெறிமணிப் பூணு மாரமும்", சீவக. 2408 : 1 - 3
சங்கவெண் தோடணி காது	வெண்சங்கத்தோடு அணிந்த காது	"சங்க வெண் தோடணி காதினானுஞ்சடை தாழவே அங்கையிலங்கழ லேந்தினா னும்மழ காகவே", தேவா. திருஞா. 3 : 11 : 4 : 1 - 2

தோடுடைய செவி	தோடு அணிந்த காது	"தோடுடைய செவியன் விடையேறி தூவெண் மதிசூடி", தேவா. திருஞா. 1: 1: 1; "தோடுடைய செவியன் என்றும் கையில் சுட்டிக் காட்ட", 11ஆம் திரு. 866 : 30 - 31; "செம்மைபெற எடுத்த திருத் தோடுடைய செவியன் எனும் மெய்ம்மை மொழித் திருப்பதிகம் பிரமபுரம் மேவினார்", திருத். 1979 : 1 - 2
ஆர் திருத்தோடு	நிறைந்த அழகினை யுடைய திருத்தோடு	"குழையார் திருத்தோடு காதிற் கண்டேன் கொக் கரையுஞ் சச்சரியுங் கொள்கை கண்டேன்", தேவா. திருஞா. 6 : 77 : 7 : 1 - 2
சங்கு வெண்தோடு	சங்கினால் செய்யப் பட்ட தோடு	"சோதி யஞ்சுடர் மேனி வெண்ணீறணி வீர்சொலீர் காதிலங் குழை சங்க வெண்டோடுடன் வைத் ததே", தேவா. திருஞா. 2 : 1 : 6 : 3 - 4
சுரிசங்கின் தோடு	சங்கினால் செய்த தோடு	"துப்புரவார் சுரிசங்கின் தோடு கொண்டார் சுடர் முடிசூழ்ந் தடியமரர் தொழவுங் கொண்டார்", தேவா. திருநா. 6 : 96 : 2 : 5 - 6
சுருள் தோடு	காதணி	"தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும் பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும்", திருவாச. திருக்கோ. 18: 1 - 2
தண்தரள மணித் தோடு	குளிர்ச்சிப் பொருந்திய முத்தாலும் மணியாலும் அமைந்த காதணி	"தண்தரள மணித் தோடும் தகைத்து ஓடும் கடை பிறழும்", திருத். 288 : 1 - 2
நாகம் மருப்பின் இயன்ற தோடு	யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட காதணி	"நாகம் மருப்பினியன்ற தோடும் நலங்கொள் சுறவுக் குழையும்", சீவக. 2440 : 1
பொற்றோடு	பொன்னால் செய்யப் பட்ட காதணி	"வெள்ளி வெண் தோட்டோடு பொற்றோடாக", மணி. 5: 121; "குண்டலமும் பொற்றோடும் பைந்தாருங் குளிர்முத்தும் வண்டலம்பும் மாலையும் மணித் தொத்து நிலந்திவள வணங்கினாள்" சீவக. 3022 : 1 - 2; "கொய்பூ மாலை குழன்மின்னுங் கொழும் பொற்றோடுங் குண்டலமும் ஐயன் மார்கடுளக்கின்றி யாலுங் கலிமா வெகுண்டுர்ந்தார்", சீவக. 2706 : 2 - 3
சுடர்பொன் தோடு	ஒளி வீசுகின்ற பொன் னாலான தோடு	"சுவல்பொதி கூழையர் சுடர்பொன் தோட்டினர்", பெருங். 2: 7: 95
பசும்பொற்றோடு	பசுமையான பொன் னால் செய்யப்பட்ட தோடு	"நெய்விலைப் பசும்பொற்றோடு நிழன்மணிக் குழையு நீவி மைவிரி குழலினாளை மங்கலக் கடிப்புச் சேர்த்தி", சீவக. 488 : 1 - 2
பைந்தோடு	பொற்றோடு	"பைங்கண் மணிமகர குண்டலமும் பைந்தோடும் திங்கண் முகத்திலங்கச் செவ்வா யெயிறிலங்க", சீவக. 1971 : 1 - 2
வயிரப் பொற் றோடு	வயிரம் இழைத்த பொன் காதணி	"பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை நல் வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழை சேர்", சிலப். 29 : 40 : 9
வெண்தோடு	சங்கினாற் செய்த காதணி	"அரிபரந் தொழுகிய செழுங்கய னெடுங்கண் விரி வெண் தோட்டு வெண்ணகைத் துவர்வாய்", சிலப். 27 : 182 - 183; "வீறுடைய ஏறேறி நீறுபூசி வெண்டோடு பெய்திடங்கை வீணை ஏந்திக் கூறுடைய மடவாளோர் பாகங் கொண்டு", தேவா. திருநா. 6 : 9 : 6 : 1 - 3; "இறை யவனீசனெந்தையிமை யோர்தொழு தேத்த நின்ற கறையணி கண்டன் வெண்டோ டணிகாதினன்", தேவா. திருஞா. 3 : 56 : 11 - 2

வெள்ளி வெண் தோடு	சங்கினாற் செய்த காதணி	"ஒள்ளரி நெடுங்கண் வெள்ளி வெண்தோட்டுக் கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற்", மணி. 3 : 118 - 119; "வெள்ளி வெண்தோட்டோடு பொற்றோடாக எள்ளறு திருமுகம் பொலியப் பெய் தலும்", மணி. 5: 121 - 122; "வெள்ளி வெண்தோடு செய்த விழுத்தவம் விளைந்தது என்றே உள்ளுதி, உலகுக்கு எல்லாம் உவமைக்கும், உவமை உண்டோ", கம்ப. 4499 : 5 - 8;
தோடு அணிதல்	குழையணிதல்	"தோடணி மகளிர் போன்ற துணர்மலர்க் கொம்பர் கொம்பின் ஆடவர் போல வண்டும் அடைந்தன அளியிற் கொல்கி", சீவக. 852: 1 - 2
செங்கையில் திருத்திப் பைந் தோடு அணிதல்	பசிய தோட்டினைத் தன் சிவந்த கை களாலே திருத்தி நன்கு அணிதல்	"பொன்புனை பாவை புறக்குடை நீவிச் செங்கையிற் றிருத்திப் பைந்தோடணிந்து கலம்பல திருத்தி நலம் பாராட்டி", பெருங். 3 : 14 : 144 - 146
தோடு அமர்தல்	தோடு அணிதல்	"தோடமர் காதினன் துதைந்த நீற்றினன் ஏடமர் கோதையோ டினிதமர்விடம்", தேவா. திருஞா. 3: 17 : 5 : 1 - 2
தோடு இடுதல்	தோட்டை அணிதல்	"கட்டங்க மொன்றுதங் கையி லேந்திக் கங்கணமுங் காதில் விடுதோடு மிட்டுக்", தேவா. திருநா. 6 : 20 : 4: 1 - 2; "தோடு காதிடு தூநெறி யானைத் தோற்ற மும் துறப்பாயவன் தன்னைப்பாடு மறைபாட வல் லானை", தேவா. சுந்தர. 46 : 4 : 1 - 3
தோடு இலங்குதல்	தோடு விளங்குதல்	"கையினில் புனைபொன் கோலும் காதினில் இலங்கு தோடும் மெய்யினில் துவளும் நூலும்", திருத். 331: 4 - 3; "தோடிலங்கிய காதயன்மின் றுளங்க வெண் குழை துள்ள நள்ளிருள் ஆடுஞ் சங்கரனே யடைந்தார்க் கருளாயே", தேவா. திருஞா. 2 : 53 : 2 : 3 - 4
தோடு ஒரு காது இலங்குதல்	ஒரு காதில் அணிந்த தோடு விளங்குதல்	"வெள்ளையெருத்தின் மிசையார் விரிதோடொருகா திலங்க துள்ளுமிளமான் மறியார் சுடர் பொற்சடை கடுளங்க", தேவா. திருஞா. 2 : 80 : 5 : 1 - 2
பொற்றோடு இலங்குதல்	பொன்மயமான காதணி பிரகாசித்தல்	"அமையொடு நீண்ட திண்டோளழ காய பொற்றோ டிலங்க உமையொடுங் கூடி நின்றானுறை யும்மிட மொற்றியூரே", தேவா. திருஞா. 3 : 57 : 6 : 3 - 4
தோடுலாவுதல்	தோடு அசைதல்	"காடெலாமலர் தேன்றுளிக்குங் கடற்காழித் தோடு லாவிய காது ளார்சுரி சங்க வெண்குழை யானென் றென்றுன்னும்", தேவா. திருஞா. 2 : 49 : 3 : 2 - 3
பொற்றோடு இடவயின் நுடங்க ஒல்குதல்	பொன்தோடு இடப் பக்கத்தே அசைதல்	"வாணுதற் பட்டம் மின்ன வார்குழை திருவில் வீசப் பூண்முலைப் பிறழப் பொற்றோ டிடவயின் நுடங்க ஒல்கி", சீவக. 1257 : 5 - 7
பைம்பொற்றோடு கழலுதல்	பொன் தோடு கழன்று விழுதல்	"பாம்பால் என்ன வெருவிப் பைம்பொற்றோடு கழலக் காம்பேர் தோளி நடுங்கிக் கரைசேர் பவளைக் காண்மின்", சீவக. 924 : 3 - 4
சங்கு விளங்கு வெண்தோடு காதில் திகழ்தல்	சங்கினால் செய்யப் பட்ட அழகிய வெண்மையான தோடு காதில் பொலிதல்	"மின்னில் திகழ்சங்கு விளங்கு வெண் தோடு காதின் மின்னிப்புடை நின்றன மாமதிபோல வைக", திருத். 707 : 3 -4
தோடு பெய்தல்	காதில் தோடு அணிதல்	"சொல்லிய வருமறை யிசை பாடிச் சூடிள மதியினர் தோடு பெய்து வல்லியந் தோலுடுத்திவராணீர்", தேவா. திருஞா. 2 : 111 : 6 : 5 - 7

பொற்றோடு பெய்தல்	காதிலே காதணி அணிவித்தல்	"பட்டம் கட்டிப் பொற்றோடு பெய்து இவள் பாடகமும் சிலம்பும் இட்டமாக வளர்த்தெடுத் தேனுக் கென்னோடு", பெரியாழ். 3 : 7 : 6 : 1 - 2
வெண்தோடு பெய்தல்	சங்குத் தோடு அணிதல்	"விரையேறு நீறணிந்தோ ராமை பூண்டு வெண்தோடு பெய்திடங்கை வீணை யேந்தித்", தேவா. திருநா. 6 : 13 : 9 : 1 - 2
வெள்ளி வெண் தோட்டோடு பொற்றோடாகப் பொலியப் பெய்தல்	வெள்ளியாலாகிய வெண்தோட்டுடன் பொன்னாலாகிய தோடும் முகம் பொலியுமாறு அணிதல்	"வெள்ளி வெண் டோட்டொடு பொற்றோடாக வெள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலு மன்னச் சேவலயர்ந்துவிளை யாடிய", மணி. 5 : 121 - 123
தோடு மின்னுதல்	காதணி மின்னுதல்	"கோதையும் தோடும் மின்ன குண்டலம் திருவில் வீச", சீவக. 740 - 1
தோடு வில் இடுதல்	காதணி ஒளி வீசுதல்	"நல்இயல் மகர வீணைத் தேன் உக, நகையும் தோடும் வில் இட", கம்ப. 703 : 1 - 3
பொற்றோடு வீழ்தல்	பொன் தோடு கழன்று விழுதல்	"வெள்ளமை கலந்த நோக்கிற் கிண்கிணி மிழற்றி ஆர்ப்பப் பிள்ளைமை காதல் கூரப் பிறழ்ந்து பொற் றோடு வீழத்", சீவக. 2529 : 1 - 2
புல்லிகைச் சாமரை கவின் பெறுதல்	மெல்லிய காதில் புல்லிகை என்னும் பூணாகிய கீழே நாலும் இயல்புடைய கன்ன சாமரையினை அணிதல்	"ஞாலியல் மென்காதிற் புல்லிகைச் சாமரை மத் திகை கண்ணுறையாகக் கவின்பெற்ற உத்தியொரு காழ் நூலுத் தரியத் திண்பிடி", கலித். 96 : 11 - 12
மகரம்	குண்டலம்	"மங்கல ஐம்படையும் தோள்வளையும் குழையும் மகரமும் வாளிகளும்", பெரியாழ். 1 : 6 : 10 : 5 - 6
இருங்குழை மகரம்	பெரிய மகர குண்டலங்கள்	"இருங்குழை மகரத்தாலும் இலங்குஒளி மணி களாலும் நெருங்கிய பீலிச் சோலை", திருத். 168 : 3 - 5
மகரம் சேர் குழை தாழ்ந்து இலங்குதல்	மகரக் குண்டலங்கள் கீழே தாழ்ந்து விளங்குதல்	"தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே தாழ்ந்து இலங்கு மகரம் சேர் குழையும் காட்டி என்னலனும் என்னிறைவும்", திருநெடுந். 25 : 3 - 5
மின் மகரம் கூத் தாடி வில்லிட்டு இருங் குழைக்கீழ் இலங்குதல்	மின்போன்ற மகரக் குழை அசைந்தாடி ஒளிவீசிக் காதணி யின் கீழ் விளங்குதல்	"மின்மகரம் கூத்தாடி வில்லிட்டு இருங்குழைக் கீழ் இலங்குமாறும் மன்மகர வெல்கொடியான்மால் கொள்ளக்கால் கொண்ட முலையினாளை", சீவக. 644: 2 - 3
துளங்கு மஞ்சிகை துளைச் சிறு காதினுள் துளங்குதல்	சிறிய துளையுடைய காதில் மஞ்சிகை என்னும் காதணி அணிதல்	"விளங்கு வெண்துகில் உடுத்து வெண்சாந்து மெய்பூசித் துளங்கு மஞ்சிகை துளைச் சிறு காதினுட்டுளங்க" சீவக. 2388 : 1 - 2
மாத்திரை	காதணி	"செம்பொன் மாத்திரை செரீஇய காதினர்", பெருங். 3: 17: 157

3.3. கழுத்து

கழுத்து ஒப்பனையில் மலர் மாலைகளும் அணிகளும் மிக்க இடம் பிடிப்பதைச் சொற்கள் காட்டுகின்றன. இவற்றுள் அணிகள் தொடர்ந்து பயன்பட்டு வருகின்றன. மலர் மாலைகளை ஒருசில சூழல்களில் மட்டும் பயன்படுத்தும் நிலை இன்றைய நிலையாக அமைகிறது. கழுத்து அணிகளின் பெயர்களில் மாற்றம் இருப்பினும் ஒரு சில பெயர்கள் மாறாமல் இன்றுவரை பயன்பாட்டில் உள்ளன. ஆரம், தாலி, மாலை போன்ற சிலவற்றை இங்குக் குறிப்பிடலாம். சில சொற்களை நாம் இழந்துள்ளது போன்று அந்த அணியின் செய்முறைகளையும் நாம் இழந்திருக்கலாம். எனினும் பொதுவாகக் கழுத்தணிகளின் செல்வாக்கு இன்றும் குறையவில்லை. மேலும் இந்தக் கழுத்தணிகளை நோக்க, கழுத்தணிகளே மார்பு அணிகளாகப் பயன்பட்டமை தெளிவாகிறது. கழுத்தணிகள் தொடர்பான சொற்கள், இவற்றின் வருணனைகள், மார்போடு தொடர்புபடுத்தும் விதம் போன்றன கழுத்தில் இடப்பட்டு மார்பில் தொங்கி ஒளிவீசும் தன்மையைச் சிறக்கக் காட்டுகின்றன. மலர்மாலைகளும் இத்தன்மையனவே. தவிர, இன்று கழுத்துக்கு மட்டும் அணியும் அணிகளான அட்டிகை, நெக்லஸ் போன்றனவும் அன்று அணிந்திருக்கலாம். ஆயின் அவை தெளிவாகத் தெரியவில்லை. இந்த அணிகள் அனைத்தும் மேலும் ஆழமான ஆய்விற்குரியன.

அ. மணப்பொருள்

கழுத்தில் வாச வெள்ளை வரைதல்	மணமுள்ள வெண் சந்தனத்தைக் கழுத்தில் பூசுதல்	"வாச வெள்ளை வரைந்த கழுத்தினர்", பெருங். 3 : 1 : 123 - 124
கண்டத்தின் நாவி	கழுத்தில் பூசப்படும் மணப்பொருள்	"கண்டத்தின் நாவியர் தம் கடிமனை துறந்து காட்டும் பண்டைச் செய்தொழிலில் பாவம் பறைக் குற்றாற் பறைக்கலாமே", சீவக. 1434 : 3 - 4

ஆ. மலர் மாலைகள்

அலங்கல்

அலங்கல்	மாலை	"அலங்கல் அம் தாதவிழ்ந்த மார்ப", சீவக. 577: 1 - 2; "அலங்கல்தா தவிழ்ந்து சோர அல்குற் பொற்றோரை மின்னச் சிலம்பின்மேல் பஞ்சியார்ந்த சீறடி வலத்த தூன்றி நலந்துறை போய நங்கை தோழியைப் புல்லி நின்றாள்", சீவக. 2132 : 1 - 3; "அணி இழை மகளிரும், அலங்கல் வீரரும் தணிவன அறநெறி, தணிவு இலாதன", கம்ப. 125: 1-2; "வம்பு அவிழ் அலங்கல் மார்பின் மைந்தரும், மயங்கி நின்றார்", கம்ப. 894: 7 - 8; "அறைகழல் அலங்கல் வீரர் ஆயவர் புரிவது ஆண்மைத் துறை எனல் ஆயிற்று அன்றே", கம்ப. 4024: 1 - 3; "பொன்-தோள் அங்கு அவன் அலங்கல் மார்பில் புரண்டனள்", கம்ப. 4096 : 4 - 6; "ஐயன் அங்கதன் அலங்கல் மார்பினில் கையின் மோதினான் காலனே அனான்", கம்ப. 4599 : 5 - 8; "கட்டவிழ் கண்ணி நம்பி சீவகன் றிறத்திற் காய்ந்தாள் அட்டுந்தே னலங்கன் மார்ப அதுபட்ட தறிமோ வென்றாள்", சீவக. 904 : 3 - 4; "நல்திரு வாயில் நண்ணி நறைமலி அலங்கல் மார்பர் மற்று அதன் முன்பு மண்மேல் வணங்கி உள் புகுந்து", திருத். 3271 : 3 - 6; "பைந்தழை அலங்கல் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்", திருத். 819 : 7 - 8; "மறிக்கும் மாருதி தன் வாசம் நறு அலங்கல் மார்பும்

		உயர் தோளும் ஊடுருவ, ஆயிரம் சரம் அழுத்தினான்", கம்ப. 8082 : 6 - 8
இணர் அலங்கல்	பூங்கொத்துக்களால் ஆன மாலை	"இணர் அலங்கல் மைந்தனையும் மண அணியின் எழில் விளக்கிப் பணைமுரசம் எழுந்து ஆர்ப்பக் காரைக்கால் பதி புகுந்தார்", திருத். 1731 : 3 - 4
கள்ளவிழ் அலங்கல்	தேன் சிந்தும் மாலை	"கள்ளவிழ் அலங்கல் மார்பன் கார்மழை முழக்கிற் சொன்னான்", சீவக. 768 - 4
தண்மலர் அலங்கல்	குளிர்ந்த மலர்களால் ஆன மாலை	"தண்மலர் அலங்கல் தாதை தாய்மனம் களிப்ப வந்து", திருத். 671 : 1 - 2
தளை அவிழ் அலங்கல்	கட்டு அவிழ்ந்த மலர்களால் ஆகிய மாலை	"இளையவன் தன்மை ஈதால்; இராமனது ஆற்றல் எண்ணின், தளை அவிழ் அலங்கல் மார்ப!" கம்ப. 8290 : 1 - 2
தார் குலாம் அலங்கல்	மலர்களால் தொடுக்கப் பெற்ற மாலை	"ஏர்குலாம் முகத்தினாளை, இறை முகம் எடுத்து நோக்கி, தார் குலாம் அலங்கல் மார்பன், தாயரை நினைந்து நைந்தான்", கம்ப. 4316 : 5 - 8
தோட்டு அலங்கல்	இதழ்களையுடைய மலர் மாலை	"கேட்ட அப்பொழுதே பெருமகிழ்ச்சியில் கிளர்ந்து தோட்டு அலங்கலும் கொடிகளும் புனைந்து", திருத். 1857: 1-2
பைந்துணர் அலங்கல்	பசிய பூங்கொத்தால் ஆகிய மாலை	"பைந்துணர் அலங்கல் மன்னன் பரிசு கண்டு இதுவோ பண்பால் நம் தனிச் சமயம் தன்னை நாட்டும் ஆறு என்று பின்னும்", திருத். 2651 : 5 - 8
மட்டு அவிழ் அலங்கல்	தேன் சிந்தும் மலர் மாலை	"மட்டு அவிழ் அலங்கன் மன்ன குமரற்கு எட்டி குமரன் எய்திய துரைப்போன்", மணி. 4 : 61 - 62
மடலுடை அலங்கல்	இதழ்களையுடைய மலர்களால் ஆன மாலை	"கடலிடைக் கோட்டம் தேய்த்துக் கழிவது கருமம் அன்றால் மடலுடை அலங்கல் மார்ப! மதி உடையவர்க்கு மன்னோ", கம்ப. 7417 : 3 - 4
முருகு அலர் அலங்கல்	மணங்கமழும் மாலை	"முருகு அலர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றில் சென்று பரவுதல் செய்து நாளும் பராய்க் கடன் நெறியில் நிற்பார்", திருத். 659 : 5 - 8
விரை அலங்கல்	மணம் கமழும் மாலை	"விரை அலங்கல் பல்லவனும் அதுகேட்டு வெகுண்டு எழுந்து", திருத். 1358 : 1
விரைசெய் நறுந் தொடை அலங்கல்	மணம் கமழும் மலர் களால் தொடுக்கப் பட்ட மாலை	"விரைசெய் நறுந்தொடை அலங்கல் குமரர் செய்யும் வியப்பு உறுசெய் தொழில் கண்டு விஞ்சை விண்ணோர்", திருத். 1182 : 5 - 6
செந்தழை அலங் கல் ஏந்துதல்	செவ்விய தழையினா லான மாலையினை ஏந்துதல்	"கொந்தழல் வேற்கணாலென்னாவி கூட்டுண்ட கொம்பே செந்தழை யலங்க லேந்திச் சீறடி பரவ வந்தேன்", சீவக. 1499 : 1 - 2
அலங்கல் தாங்குதல்	அலங்கலை அணிதல்	"உகிர்வினை செய்து பஞ்சியொள்ளொளி யரத்தமூட்டி அகில் கமழுங்கை சேப்ப அரிவையர் அலங்கல் தாங்கி", சீவக. 2540 : 1 - 2
அலங்கல் தாழ்தல்	மாலை அணிதல்	"அலங்கல் தாழ் மார்பன் முன் தாழ்ந்து அடித்துணை அழுத்தலோடும் பொலன் கெழு மாலையும் தாளும் பூதலம் புக்கமாதோ", கம்ப. 4755 : 5 - 8
ஆரம்		
செஞ்சாந்தின் ஆரம்	சிவந்த சந்தன மாலை	"மலைச் செஞ்சாந்தி னார மார்பினன்", குறுந். 321 : 1
இருபேராரம் அணிதல்	முத்தாரத்தையும் சந்தன ஆரத்தையும் அணிதல்	"குறவர் தந்த சந்தின் ஆரமும் இருபேராரமும் எழில் பெற அணியும் திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்", அகம். 13 : 4 - 6

ஆரம் திகழ்தல்	மாலை அணிதல்.	"சீரும் திருவும் பொழியும் திருஆரூர் எய்தி ஆரம் திகழ் மார்பின் அனுக்க வன்தொண்டர்க்கு அன்பால்", பெரிய. 3638 : 1 - 2

இலம்பகம்

இலம்பகம்	மாலை	"இலம்பகம் மாலை", நிக. தி. 4 : 256; "மஞ்சரி இலம் பகம் மார்பில் அணி மாலை", நிக. பி. 9 : 378

ஒலியல்

ஒலியல்	மாலை	"உடையும் ஒலியலும் செய்யை", பரி. 19 : 97; "ஒலியற் கண்ணி புலி கடி மாஅல்", புறம். 202 : 10; "அதழும் ஆடையும் ஆறும் ஒலியல் என்னும் ஒண் பெயர் பெறுமே", நிக. பி. 10 : 212

கோதை

கோதை	மாலை	"கோடல் முல்லை குவளையொடு இடையிடுபு விரைஇ ஐதுதொடை மாண்ட கோதை போல்", குறுந். 62: 1 - 3; "பண்டம் அறியார் படுசாந்தும் கோதையும் கண்டுபாராட்டுவார் கண்டிலர்கொல்", நாலடி. 48 : 1 - 2; "நீணீர் முழவின் பாணியிற் பாடியும் குழையர் கோதையர் இழையர் ஏரிணர்த் தழையர் தாரினர்", பெருங். 2 : 14 : 12 - 14; "இறங்கிய மாதர் தன்னை யெரி மணிக் கடகக் கையாற் குறங்கின் மேற்றழுவி வைத்துக் கோதையங் குருதி வேலான் அறந்தலை நீங்கக் காக்கு மரசன் யானாக", சீவக. 2067 : 1 - 3; "கோதை யுந் தாரும் பிணங்கக் கொடுங் குழைக் காதன் மகளிரு மைந்தருங் காணிய", சீவக. 2119: 1 - 2; "அள்ளல் நீர் எலாம், அமரர் மாதரார் கொள்ளை மாமுலைக் கலவை, கோதையின் கள்ளு நாறலின்", கம்ப. 4613 : 1 - 3
அந்தளிர்க் கோதை	அழகிய தளிர்மாலை	"முற்றம் புகுந்து முன்கடையாரென அந்தளிர்க் கோதையைப் பெற்றது மற்றவள்", பெருங். 4: 10: 8 - 9
ஆவிரைக் கிளர் பூங்கோதை	ஆவிரைச் செடியின் பூக்களாலான மாலை	"ஆடுஉச் சென்னி தகைப்ப, மகடூஉ முளரித் தீயின் முழங்கு அழல் விளக்கத்துக் களரி ஆவிரைக் கிளர் பூங்கோதை வண்ண மார்பின் வனமுலைத் துயல்வர", அகம். 301 : 12 - 15
இருநூற் பெய்த அனிச்சக் கோதை	இரண்டு நூல்களாலே இணைத்த அனிச்ச மாலை	"எனத் துணிந் திளையோ ரிருநூற் பெய்த அனிச் சக் கோதையு மாய் பொற் சுண்ணமும்", பெருங். 1: 42 : 70 - 71
ஈர்ங்கோதை	குளிர்ந்த பூமாலை	"கடுவிசை வாலருவி நீந்தி - நடுஇருள் இன்னா அதர்வர ஈர்ங்கோதை மாதராள் என்னவாம் என்னும் என் நெஞ்சு", ஐந். ஐம். 19 : 2 - 4
ஈரமை வெட்சி இதழ்புனை கோதை	குளிர்ச்சிமிக்க வெட்சி மலரின் இதழால் தொடுக்கப் பட்ட கோதை	"ஈரமை வெட்சி யிதழ்புனை கோதையர்", பரி. 22: 22
ஈரிதழ்க் கோதை	குளிர்ச்சியான மலர் மாலை	"ஏதமாங்கொல்இஃ. தென்றுரைப் போரும் ஈரிதழ்க் கோதை யியக்கி யிவளெனின் நேரடி யிவையோ...", பெருங். 4: 17: 56 - 58
ஏடு அறு கோதை	புறவிதழ் நீக்கிய தொடுத்த மாலை	"ஏடு அறு கோதையர் விழியின் எய்தகோல் ஊடு உற மலர்கொண்டு உரம் தொளைத்து...", கம்ப. 2293: 1-2
ஒண் பூங்கோதை	மாணிக்கம் ஒழுகினா லொத்த ஒள்ளிய மாலை	"மணி தொடர்ந்தன்ன வொண்பூங்கோதை யணி கிளர் மார்பினரரமொ டளைஇக்", மது. 438 - 439

ஒளிமலர்க் கோதை	ஒளியையுடைய மலர் மாலை	"எளிதெனக் கென்ன வமைச்சரோ டாராய்ந் தொளி மலர்க் கோதா யுற்றபி னறியென", பெருங். 5: 1 : 236-237
கமழ்நறுங்கோதை	மணம் கமழும் மாலை	"கண்ணியர் தாரர் கமழ்நறுங் கோதையர்", பரி. 16: 50
கள்படி கோதை	தேன் பொருந்திய மாலை	"மண்படி செய்த தவத்தினில் வந்த கள்படி கோதை யை நாடினர் காணார்", கம்ப. 3574 : 1 - 2
கள்வயிற் றலர்ந்த கோதை	தேன் பொருந்திய மாலை	"புள்வயிற் பிறந்தபுட்போ லொன்றலாதுரைத்த றேற்றார் கள்வயிற் றலர்ந்த கோதைக் கலாபவில் உமிழும் அல்குல் ஒள்ளெயிற் றவர்கள் பொன்பூத் தொளிமணி உருவம் நீத்தார்", சீவக. 2897 : 2 - 4
கொங்கலர் கோதை	மணம் பொருந்திய மலர் மாலை	"மங்கல மண்ணுநீர் மரபின் ஆடக் கொங்கலர் கோதையைப் பண்டுமுன் பயின்ற தோழிதானே தாழாது விரும்பிச்", பெருங். 2: 7: 148 - 150; "தவலரும் வென்றித் தருசகன் தங்கை கொங்கலர் கோதை நங்கைநம் பெருமகள்", பெருங். 3: 6: 136 - 137; "அங் கண் ஞாலத் தழகுவீற் றிருந்த கொங்கலர் கோதை யெங்கையைப் பொருளொடு", பெருங். 3 : 17 : 54-55; "தங்கை தலைமை தன்னையு முவந்து கொங்கலர் கோதையைக் கொடுக்கு நாளாதலின்", பெருங். 3 : 22 : 72 - 73
கொங்கார் கோதை	மணம் பொருந்திய மாலை	"பொன்னே திருவே அன்னே அரிவாய் நங்காய் நல்லாய் கொங்கார் கோதாய்", பெருங். 2 : 18 : 80 - 81
கொய்பூங் கோதை	கொய்து தொடுத்த மலர்மாலை	"மைபூத்தலர்ந்த மழைக்கண் மாழை மானேர் நோக்கிற் கொய்பூங் கோதை மடவார் கொற்றங் கொள்கென்றேத்த...", சீவக. 2198: 1 - 2
கொழுங்குவளைக் கோதை	குவளை மலர்களான மாலை	"மழுங்கலா நீறாடும் மார்பர் போலும் மணிமிழலை மேய மணாளர் போலும் கொழுங்குவளைக் கோதைக் கிறைவர் போலும் கொடுகொட்டி தாள முடையார் போலும்", தேவா. திருநா. 6 : 9 : 10 : 1 - 4
சுரும்பிமிர் பூங்கோதை	சுரும்புகள் ஒலிக்கின்ற பூவாற் செய்த மாலை	"சுரும்பு இமிர் பூங்கோதை அம்நல்லாய் யானின்", கலித். 64: 12
செந்தளிர்க் கோதை	சிவந்த தளிராற் புனைந்த மாலை	"மந்திர மறிந்த தந்திர முதுமகள் செந்தளிர்க் கோதைக்குச் சேடநீட்டிப் பொலிக நங்கை பொருபடை யழித்த", பெருங். 3: 21: 30-32; "செந்தளிர்க் கோதை சோரக் கிண்கிணி சிலம்பொடு ஏங்க மைந் தருட் காமனன்னான் மகளிருட் திருவனாளை, அந்தரத்த மரர் பெற்ற வமிர்தெனப் பருகினானே", சீவக. 84: 2 - 4
சேறுபடு கோதை	தேன் விளைகின்ற கோதை	"சேறுபடு கோதைமிசை வண்டு திசைபாட நாறு மலர்க் கொம்பர் நடை கற்பதென வந்தாள்", சீவக. 2019 : 2 - 3
தடமலர்க் கோதை	பெருமையுடைய மலர் களால் தொடுக்கப் பட்ட மாலை	"பிடவங் குருந்தொடு பிண்டிமலா மடவமயில் கூவ மந்திமா கூரத் தடமலர்க் கோதையாய் தங்கார் வருவர்", கைந். 36 : 1 - 3
தயங்கிணர்க் கோதை	பூங்கொத்துக்களால் ஆன மாலை	"தயங்கிணர்க் கோதை தன்றுயர் பொறாஅன் மயங்கினன் கொல்லென மலரடி வருடி", சிலப். 25: 80-81; "இரவி வன்ம னொரு பெருமகளே துரகத் தானைத் துச்சயன் றேவி தயங்கிணர்க் கோதைத் தாரை சாவுற", மணி. 7 : 98 - 100
தளையவிழ் கோதை	கட்டவிழ்ந்த புதிய மலர்மாலை	"இளையோ னமைந்த காலை மற்றுத்தன் தளையவிழ் கோதைத் தையலிவளெனும்", பெருங். 3:6: 153-154;

		"வளையெரிப் பட்ட தெளிபே ரன்பிற் றளையவிழ் கோதை யொடு தருதலும் பொருளோ", பெருங். 3: 24: 122-123; "தாணெடுங் குவளைக் கண்ணித் தளையவிழ் கோதை மாலை வாண்முடி வைரவில்லும் வார்குழை சுடருமார்பிற் பூணிடை நிலவு மேனி மின்னொடு பொலிந்த தேவர்", சீவக. 2802: 1 - 3
தளையவிழ் வண்ணக் கோதை	கட்டவிழ்ந்து மலர்ந்த வண்ணமிக்க மலர்மாலை	"கிளையின் மன்னர் கேளிர் சூழத் தளையகப்பட்ட காலையுந் தளையவிழ் வண்ணக் கோதை வாசவ தத்தையொடு", பெருங். 5: 3 : 5 - 7
தாதவிழ் கோதை	மகரந்த தூள் சிந்தும் மலர் மாலை	"போது அவிழ் தாமரை பூந்துறை ஊரனைத் தாதவிழ் கோதைத் தகையிலார் தாம் புலப்பர்", கைந். 43 : 1 - 2
தாதலர் கோதை	பூந்துகள் விரியும் மலர் மாலை	"தாதலர் கோதைத் தையலுக் கிசைத்தவள் அணங் கருஞ் சீறடி வணங்கலின் வாங்கிப்", பெருங். 4: 8: 20 - 21
துணைமலர்க் கோதை	பிணைத்தலையுடைய மலர்மாலை	"இணைமலர் நெடுங்கண் இமைத்தலும் வாடிய துணைமலர்க் கோதைத் தோற்றமுங் கண்டே", பெருங். 2:15: 117 - 118
தூமத்தாற் கெழீஇய கோதை	அகிற்புகை பொருந்திய பூமாலை	"தூமத்தாற் கெழீஇய கோதை தோட்டுணை பிரித்தல் விண்மேற் றாமத்தாற் கெழீஇய மார்ப னிந்திரன் றனக்குமாகா", சீவக. 754: 1 - 2
தெரிமலர்க் கோதை	ஆராய்ந்து தொடுத்த மலர் மாலை	"அரிபரந்தகன்ற வம்மலர் நெடுங்கட் டெரிமலர்க் கோதைத் தேவியு மின்றித்", பெருங். 3 : 1 : 46 - 47
தேங்கமழ் கோதை	தேன் கமழும் மலர் மாலை	"தலைத்தாண் முதியோர்க்குந் தானே கூறி நோன்பு முத றொடங்கித் தேங்கமழ் கோதை தலைநாட்ட னந் தக்கவை யளித்தலிற்", பெருங். 3 : 6 : 106 - 108
தேங்கோதை	தேன் பொருந்திய மலர் மாலை	"எஞ்சாது நீ வருதி யென்றெண்ணி - அஞ்சித் திரு வொடுங்கும் மென்சாயல் தேங்கோதை மாதர் உருவொடுங்கும் உள்ளுருகி நின்று", ஐந். ஐம். 17: 2-4
தேன்அமர் கோதை	தேன் நிறைந்த மலர் மாலை	"வான்உயர் கன்னி மாடத்துவைத்தனர் தேன்அமர் கோதையும் சிவத்தை மேவினாள்", திருத். 3020: 3-4
தேன்தோய் கோதை	தேன் நிறைந்த மலர்மாலை	"வான்றோ யிஞ்சி வளநகர் வரைப்பிற் றேன்றோய் கோதை திருநில மடந்தை", பெருங். 1: 54: 5 - 6; "தேன்றோய் கோதை சில்லென வுராய் இடுகிய கருங்கண் வீங்கிய கொழுங் கவுட்....", பெருங். 3: 8: 50 - 51
தேன் நக்க கோதை	தேன் விளங்கும் மாலை	"தேன்நக்க கோதை மாதர் திருநெடுந் தாலி மாறிக்", திருத். 870: 1 - 2
தேனார் கோதை	தேன் நிரம்பிய மலர்மாலை	"வானோர் கிழவனின் வரம்பின்று பொலியத் தேனார் கோதையொடு திறவதினிருப்ப", பெருங். 5 : 4 : 55 - 56; "தேனார் கோதை பரிந்து என் கோயான்", சீவக. 726 : 4
தேனிமிர் கோதை	வண்டுகள் முரலும் மலர் மாலை	"மாசில் கற்பின் வசுந்திரி யென்னும் தேனிமிர் கோதை சேடியேன் யான் மானனீகை யென்பதென் னாமம்", பெருங். 4 : 13 : 37 - 38
தொடையலங் கோதை	சேர்த்துக் கட்டிய அழகிய மாலை	"நடையுளார் சொல்லிற் றெல்லா நம்பிசீ வகன் கட் கண்டாம் தொடையலங் கோதை யென்று சொல்லுபு தொழுது நிற்பார்", சீவக. 464 : 3 - 4
தொடை மாண்ட கோதை	காந்தள் மலர், முல் லை மலர், குவளை மலர் இவற்றை இடையிடையே	"கோட லெதிர் முகைப் பசுவீ முல்லை நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ ஐதுதொடை மாண்ட கோதை போல நறிய நல்லோள் மேனி", குறுந். 62 : 1 - 4

	பொருந்தும் படி கலந்து அழகியதாகத் தொடுத்த மாட்சி மைப்பட்ட கோதை	
தோடலர் கோதை	இதழ் விரிந்த மலர் மாலை	"தோடலர் கோதையைத் தொழுதனள் ஏத்தி மாய விஞ்சை மந்திரம் ஓதிக் காய சண்டிகை யெனுங் காரிகை வடிவாய்", மணி. 18 : 147 - 149
நறுங்கோதை	மணம்மிகு மலர் மாலை	"துறும் போதினில் தேன் துவைத்து உண்டு உழல் தும்பி ஈட்டம் நறுங்கோதையோடு நனை சின்னமும் நீத்த நல்லார்", கம்ப. 901: 1 - 4
நறுமலர்க் கோதை	மணம்மிக்க மலர் மாலை	"தான் றொலை வில்லாத் தகைமைய தாகும் நறுமலர்க் கோதை நின்னூ ராங்கண் அறவணன் தன்பால் கேட் குவை யிதன்திறம்", மணி. 11: 50 - 52; "பிறவியுமறவியும் பெற்றியி னுணர்ந்த நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்", மணி. 12 : 55 - 56; "மறுமொழி கொடா அன் மனத்தே நினைஇ நறுமலர்க் கோதையை நாட்பூங் காவினுட்", பெருங். 3 : 21 : 69 - 70
நறுமலர்த் தண் கோதை	நறிய மலர்களால் தொடுக்கப்பட்ட குளிர்ந்த மாலை	"நறுமலர்த் தண் கோதாய்! நட்டார்க்கு நட்டார் மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ!", நாலடி. 209 : 1 - 2
நானம் வழங்கும் கோதை	நானம் பூசியதால் மணம் கமழும் மாலை	"நானம் வழங்குங் கோதை நைய வெய்ய வாய் கானம் வழங்கன் மேவிக் காலின் னேகினானே", சீவக. 1412 : 3 - 4
நூலார் கோதை	நூலில் கோக்கப்பட்ட மலர்மாலை	"ஏலாதேலா தெம்பெரு மானுக் கி∴தென்னா நூலார் கோதை நுங்கெரி வாய்பட்டது வொத்தாள்", சீவக. 1094 : 3 - 4
நூற்பட்டார் பூங்கோதை	நூலினாற் கேர்க்கப் பட்ட மலர்மாலை	"உளையாமையுட் குடைத்தா வென்று - களையாமை நூற்பட்டார் பூங்கோதாய் நோக்கின் இவை யாறும் பாற்பட்டார் கொண்டொழுகும் பண்பு", ஏலாதி 13 : 2 - 4
நேரிதழ்க் கோதை	ஒத்த இதழாற் கட்டின மலர் மாலை	"தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்", கலித். 52: 7-8
பஞ்சாய் கோதை	பைஞ்சாய்க் கோரை யால் அமைந்த மாலை	"பஞ்சாய்க் கோதை மகளிர்", ஐங். 54 : 5
பல்பூங் கோதை	பலவாகிய மலர் மாலை	"பல்பூங் கோதாய் பள்ளிக் கொண்டருளெனப்", பெருங். 1 : 36 : 127
பல்லிதழ்க் கோதை	பலவாகிய இதழ்களை உடைய மலர்மாலை	"உள்வழி யுணரா துழலுமென் னெஞ்சினைப் பல்லி தழ்க் கோதைப் பதுமா பதியெனும்", பெருங். 3 : 8 : 92 - 93
பலவகை விரித்த எதிர் பூங்கோதை	பலவகையாக விரித்து வைத்த ஒன்றற்கொன்று மாறுபட்ட பூமாலை	"பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர் பலவகை விரித்த வெதிர் பூங்கோதையர் மலைபுரை மாடத்து கொழுநிழ லிருத்தர", மது. 397 - 406
பன்மலர்க் கோதை	பலவேறு மலர்களால் தொடுத்த மாலை	"நன்முகங் கங்கையின் நகர பண்ணிப் பன்மலர்க் கோதையைப் பற்றுவிட் டகலான்", பெருங். 2: 17: 35 - 36; "தண்மலர்ப் படலைத் தருசகன் தங்கை பன் மலர்க் கோதைப் பதுமா பதியெனும்", பெருங். 3: 9: 174 - 176
பனிப்பூங்கோதை	குளிர்ந்த மலர்மாலை	"காலை நீங்கிய மாலை யாமத்துப் பனிப் பூங்கோதை யொடு தனித்தன மியங்கின்", பெருங். 1 : 54 : 51 - 52
பனிமலர்க் கோதை	குளிர்ந்த மலர்மாலை	"தானே யாகத் தருகுவெ னென்றனன் பனிமலர்க் கோதைப் பதுமையை நீங்கித் தனியை யாகித் தங்குதல் பொருளென", பெருங். 4 : 6 : 66 - 68

புதுமலர்க் கோதை	புதிய மலர்மாலை	"தீமாண் புற்ற திருத்தகு பொழுதிற் புதுமலர்க் கோதைப் பூந்தொடிப் பணைத் தோட்பதுமா நங்கையைப் பண்புணப் பேணி", பெருங். 3 : 22 : 265 - 267
பூங்கோதை	பூமாலை	"பெரியவர் நல்குரவு நன்றே - தெரியின் மதுமயங்கு பூங்கோதை மாணிழாய்! மோரின் முதுநெய்தீ தாகலோ வில்", பழ. நா. 89 : 2 - 4; "நின்றநிலை கல்வி வள்ளன்மை - என்றும் வழிவந்தார் பூங்கோதா யாறு மறையின் வழிவந்தார் கண்ணே வனப்பு", ஏலாதி 1 : 2 - 4; "வீங்கோதந்தந்து விளங்கொளிய வெண்முத்தம் விரைசூழ் கானற் பூங்கோதை கொண்டு விலைஞர் போன்மீளும் புகாரே யெம்மூர்", சிலப். 7 : 28 : 3 - 4
பூம்பெய் கோதை	பூவால் கட்டப்பட்ட மாலை	"தேம்பெய் கற்பகத் தாரவன் சேர்தலும் பூம்பெய் கோதை புரிசைச் குழா நலம், ஓம்பு திங்க ளுலந்து சுடர் கண்ட, ஆம்பலாய் மலர்க் காடொத் தழிந்ததே", சீவக. 2336
பூவரம்பாய கோதை	பூக்களுக்கு எல்லையாகிய மாலை	"பூவரம்பாய கோதைப் பொன்னனார் புலவிநீக்கி நூபுரந் திருத்திச் சேந்த நுதிவிர னொந்த வென்பார்", சீவக. 1111 : 1 - 2
பிழிபடுகோதை	வண்டுகள் உண்ட மாலை	"ஒழிபடைக் களிறுபோல வுயங்கவுமுருகி நோக்காப் பிழிபடு கோதை போலாம் பெண்டிரைக் கெட பிறந்தாள்", சீவக. 2512: 3-4
புரையப் பூண்ட கோதை	சிறந்த மாலை	"அரையுற் றமைந்த ஆரம்நீவிப், புரையப் பூண்ட கோதை மார்பினை, நல்அகம் வடுக்கொள முயங்கி, நீவந்து எல்லினில் பெயர்தல் எனக்குமார் இனிதே", அகம். 100 : 1 - 4
மட்டுவார் கோதை	தேன் ஒழுகும் மலர் மாலை	"விட்டகன் றனையோ வேந்த னொடின் றெமை மட்டு வார் கோதாய் மறந்தென மாழ்கவும்", பெருங். 1: 46: 218 - 219
மட்டுவிளை கோதை	தேனொழுகுகின்ற மலர் மாலை	"முட்டில் செல்வத்து முனிதல் செல்லான் மட்டுவிளை கோதையொடு மகிழ்ந்து விளையாடிச்", பெருங். 4: 2: 85 - 86
மணங்கமழ் கோதை	நறுமணம் கமழும் மலர் மாலை	"வணங்கின னிருந்துழி மணங்கமழ் கோதை கருத்தினை யெல்லாம் விரித்தவற் குரைப்ப", பெருங். 5: 2 : 5 - 6
மதுக்கமழ் கோதை	தேன் மணம் கமழும் மலர் மாலை	"உறுபுரிக் கொண்டன பிறநரம்பு கொணர்கென மதுக் கமழ் கோதை விதுப்பொடு விரும்பிப்", பெருங். 3: 15: 30 - 31; "முதற்பெருந் தேவி திருநா ளீன்ற மதுக் கமழ் கோதை வாசவ தத்தை", பெருங். 5 : 7 : 30 - 31
மதுமலி பூங்கோதை	தேன் நிரம்பிய பூவால் கட்டப்பட்ட மாலை	"அலைபுரியான் வஞ்சியான் யாதும் - நிலை திரியான் மண்ணவர்க்கு மன்றி மதுமலி பூங்கோதாய் விண் ணவர்க்கு மேலாய்விடும்", ஏலாதி. 2 : 2 - 4
மயங்கு மலர்க் கோதை	பலவகை மலர்கள் கலந்த மாலை	"குறவர் பாக்கத் திழிதரு நாடன் மயங்கு மலர்க் கோதை நன்மார்பு முயங்கல் இனிதுமன் வாழி தோழி", குறுந். 339 : 3 - 5
மருதிணர் மிடைந்த அவிழ் பூங்கோதை	மருதப் பூங்கொத்து கட்டிய மலர்ந்த மாலை	"மகிழம்பூ மாலையோடு மருதிணர் மிடைந்த அவிழ் பூங் கோதையொ டவிரிழை பொங்க", பெருங். 1:40:190-191
மாமலர்க் கோதை	சிறந்த மலர் மாலை	"காமன் கோட்டமுங் கடிநகர் விழவும் மாமலர்க் கோதை மடமொழி யூரும்", பெருங். 3 : 9 : 13 - 14
முகைமலர்க் கோதை	மலர் மாலை	"தகைமலர்ப் படலைத் தந்தை தலைத்தாள் முகை மலர்க் கோதை முறுவற் செவ்வாய்க் கன்னி ஆயத்துப் பொன்னணி சுடர", பெருங். 2 : 9 : 94 - 96

முண்டகக் கோதை	முள்ளிப்பூவாற் செய்யப் பெற்ற மாலை	"வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல் முண்டகக் கோதை யொண்தொடி மகளிர்", புறம். 24 : 10 - 11
முருகு விம்மு கோதை	வாசனை மிகுந்த மலர் மாலை	"முருகு விம்மு கோதையார் மொய்யலங்கல் வண்டு போல்", சீவக. 706 - 1
முல்லைத் தொகு கடாங் கோதை	முல்லைப் பூவினது திரண்ட தேன்பரக்கும் கோதை	"முகபடாம் வைப்ப ஆட்செற்றுழன்று கண் கரிந்த முல்லைத் தொகுகடாங் கோதை வெய்ய துணைமணி முலைகள் தாமே", சீவக. 1486 : 3 - 4
வண்டு இமிருங் கோதை	தேனைப் பொருந்த உண்ணுகின்ற வண்டு களொலிக்கின்ற மாலை	"ஊதுவண்டு இமிருங்கோதை மார்பின் மின்னிவர் கொடும்பூண் கொண்கனொடு இன்னகை மேவநாம் ஆடிய பொழிலே", நற். 187 : 8 - 10
வண்ணக் கோதை	நிறமிக்க மாலை	"செங்கடைபோழ்ந்த சிதரரி மழைக்கண் வண்ணக் கோதை வாசவதத்தையை", பெருங். 2 : 4 : 128 - 129; "கண்ணியது முடித்துக் காரிகை பொலிந்த வண்ணக் கோதை வாசவ தத்தையொடு", பெருங். 2 : 8 : 24 - 25; "அண்ணல் நிலைமை திண்ணிதின் அறிந்து வண்ணக் கோதை வாசவதத்தைக்குக்", பெருங். 2 : 20 : 35 - 36
வண்டார் கோதை	வண்டுகள் முரலு கின்ற மலர் மாலை	"கண்டா னாகித் திண்தேர் உதயணன் வண்டார் கோதை வாசவ தத்தை", பெருங். 2 : 18 : 54 - 55
வண்டலர் கோதை	வண்டுகள் மொய்க் கும் மலர் மாலை	"புலர்ந்தது கங்குலும் புரவல வாழ்கென வண்டலர் கோதாய் மனத்தினுமில்லது கண்டனை யாதலிற்", பெருங். 4 : 13 : 202 - 204
வண்டு உணத் துதைந்த கோதை	வண்டுகள் உலாவும் நெருங்கிய பூமாலை	"வண்டு உணத்துதைந்த கோதை மானியே இங்கு வந்த பண்பு மற்று இதுவே ஆகும் பரிசு வேறு இல்லை என்றான்", திருத். 2595 : 5 - 8
வண்டுது கோதை	வண்டுகள் இசை பாடும் மாலை	"தண்துறை ஊரன் தடமென் பணைத்தோளாய் வண் டூது கோதை வகைநாடிக்", கைந். 44 : 1 - 2
வள்ளிதழ்க் கோதை	பெரிய இதழை உடைய மலர் மாலை	"பூணாராகத்துப் பொங்கிள வனமுலை வள்ளிதழ்க் கோதை வாசவ தத்தைக்கு", பெருங். 1: 57 : 29 - 30; "எரியுள் விளிந்தவென் வரிவளைப் பணைத்தோள் வள்ளிதழ்க் கோதை யுள்ளூழி யுணரிற்", பெருங். 3 : 1 : 175 - 176; "மந்திரச் சூழ்ச்சியுள் வெந்திறல் வீரன் வள்ளிதழ்க் கோதை வாசவ தத்தையை", பெருங். 3 : 8 : 90 - 91; "பொன்வரை மார்ப னென்னோயகலக் கொள்ளி னன்றென வள்ளிதழ்க் கோதை மன்ன வன் வைத்த சின்மென் போதுடன்", பெருங். 3: 9: 73 - 75; "பள்ளிப் பேரறைப் பாயலுளல்லது வள்ளிதழ்க் கோதையை வைக்கப் பெறீரென", பெருங். 3: 13: 55-56; "வள்ளிதழ்க் கோதை மற்று நகரொடுங் கடியு மேனும் வெள்ளநீ ணிதியி னின்னே வேண்டிய விளைப்ப லென்றான்", சீவக. 905 : 3 - 4
வளைவாய் கோதை	வளைவு கொண்ட மாலை	"வளைவாய்க் கோதையர் வண்டல் தைஇ, இளை யோர் செல்ப எல்லும் எல்லின்று", அகம். 370 : 1 - 2
விராய் மலர்க் கோதை	விராய்மலர் மாலை	"பதுமா பதிதன் பணியெதிர் விரும்பி, விராய் மலர்க் கோதை யிராசனை யென்போள், கணங்குழை முகத் தியை வணங்கினள் புகுந்து", பெருங். 4 : 12 : 37 - 39; "விச்சா தரரின் விதியினைக் காட்டி விராய் மலர்க் கோதைய ருராஅவூக்கமொடொருங்கு பல கண்டு", பெருங். 5 : 4 : 131 - 133
விரைகமழ் கோதை	மணங் கமழும் மலர் மாலை	"ஏனையோர் பிறரும் புனைவன ரீண்டி விரைகமழ் கோதை விரிசிகை மாதர்", பெருங். 4 : 15 : 128 - 129

வெண்கூதாளத்துத் தண்பூங் கோதை	வெண்கூதாளத்தின் குளிர்ச்சி மிக்க பூவாற் செய்த மாலை	"வெண்கூதாளத் துத்தண்பூங் கோதையர்'', பட். 85
வேரிமலர்க் கோதை	தேன் நிறைந்த மலர்க் கோதை	"காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் கா்முறுமிவ் வேரி மலர்க்கோதையாள்", சிலப். 17 : கொளு 1
கோதை மாலை	மாலை வகை	"பொருளுடைய ரல்லர் இலரு மல்லர் புலித்தோலுடை யாகப் பூதஞ்சூழ அருளுடைய அங்கோதை மாலை மார்பர் அழகியரே ஆமாத்தூர் ஐயனாரே", தேவா. திருநா. 6 : 9 : 5 : 5 - 8
கோதை மார்பு	கோதையை அணிந்த மார்பு	"கோதை மார்பிற் கோதை யானும் கோதையைப் புணர்ந்தோர் கோதையானும்", புறம். 48 : 1 - 2
தண்கமழ் கோதை சூடுதல்	குளிர்ந்த மணம் வீசும் கோதையை அணிதல்	"புகன்ற மாண்பொறிப் பொலிந்த சாந்தமொடு தண் கமழ் கோதை சூடிப் பூண்சுமந்து", பதி. 88 : 30 - 34
கோதை துயலுதல்	மாலை அணிதல்	"துயலுங் கோதைத் துளங்கியல் விறலியர்'', பதி. 49 : 2
தெரியல் கோதை ஆரமொடு அளைதல்	வேப்ப மாலையினையும் ஆரத்தையும் செங்கழு நீர் மாலையையும் அணிந்து இருத்தல்	"மொய்ம்பு இறந்து திரிதரும் ஒரு பெருந் தெரியல் மணி தொடர்ந்தன்ன ஒண் பூங்கோதை அணி கிளர் மார்பினார மொடளைஇக்", மது. 437 - 439
கோதைப் பிணையலிற் பொலிதல்	இருவாட்சி மலருடனே பிறமலர்களும் கலந்து விரவி புனையப்பட்ட மாலையை அணிதல்	"மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னொடு இல்வளர் முல்லை மல்லிகை மயிலை தாழிக் குவளை சூழ் செங்கழு நீர் பயில் பூங்கோதைப் பிணையலிற் பொலிந்து", சிலப். 5 : 190 - 193
தகை		
முகைவாய் அவிழ்ந்த தகை ஆகம் சூழ்தல்	அரும்புகள் மலர்ந்த மலர்களால் கட்டப் பட்ட மாலையை மார்பில் அணிதல்	"புகைமுகந்தன்ன மாசில் தூவுடை முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்து", திருமுருகு. 138-139
தாமம்		
தாமம்	மாலை	"காமக் காரிகைக் காதன் மகளிர் தாமப் புணர்முலைத் தலைப்பிணி உறீஇ", பெருங். 2 : 11: 23 - 24; "சேயுயர் மாடத்து வாயில் புக்குத் தாம மார்ப னாருணி தன்னோ டீம மேறா வியல் புடை யமைதியர்க்", பெருங். 4: 1: 25 - 27; "தாமச் செப்பிணை முகட்டுத் தண்கதிர் விடுநீல மாமணிதா பித்தனபோன் மனம்பருகி கருங் கண்ண ஏமுற வடிபரந் திளம் பிறை வடஞ்சூடி", சீவக. 171: 1-3
இலை வட்டத் தாமம்	இலைகளேயுள்ள வளைந்த மாலை	"முலை வட்டப் பூணு முத்து முள்கலிற் கிழித்து பொல்லா இலை வட்டத்தாம மார்பிற் கோசலத் திறைவ னெய்த", சீவக. 2184 : 1 - 2
சதங்கைத் தாமம்	பூமாலை	"மதம் கமழ் நறுமலர்ச் சதங்கைத் தாமமும்'', பெருங். 87 : 45
செங்கமலத் தாதின் தாமம்	வாசனையுடைய செம் மலரின் தாதுக்களின் அழகு பெருகும் மாலை	"கடிகொள் செங்கமலத்தாதின் செவ்வி நீள் தாம மார்பர்", திருத். 3119 : 4 - 5
தாமத்தால் கெழுமுதல்	மாலை அணிந்து இருத்தல்	"விண்மேல் தாமத்தால் கெழீஇய மார்பன் இந்திரன்", சீவக. 754 : 1 - 2

தார்

தார்	மாலை	"படையும் கொடியும் குடையும் முரசும் நடை நவில் புரவியும் களிறும் தேரும் தாரும் முடியும் நேர்வன பிறவும் தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய'', தொல். 1571; ''கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே'', தொல். 580; ''வில்லும் வேலும் கழலும் கண்ணியும் தாரும் மாலையும் தேரும் வாளும் மன் பெறு மரபின ஏனோர்க்கும் உரிய", தொல். 1583; "மகளிர் கோதை மைந்தர் புனையவும், மைந்தர் தண் தார் மகளிர் பெய்யவும் முந்துறல் விருப்பொடு முறை மறந்து அணிந்தவர்", பரி. 20: 20-22; "தாரர் முடியர் தகைகெழு மார்பினர்'', பரி. 22 : 23; "குருந்தே! கொடி முல்லாய்! கொன்றாய்! தளவே! முருந்தேய் எயிறொடு தார் பூப்பித்(து) - இருந்தே", திணை. நூற். 116 : 1 - 2; "நீர் நிறைக்கும் வாய்ப்புதல் வன் நிற்கும் உனை முலைப்பால் தார்சிதைக்கும் வேண்டாதழூஉ", திணை. நூற். 152 : 3 - 4; "செல்வக் கடம்பமர்ந்தான் வேல்மின்னி- நல்லாய் இயங்கெயில் எய்தவன் தார் பூப்ப ஈதோ மயங்கி வலனேருங் கார்'', ஐந். ஐம். 1 : 2 - 4; ''செறிவுடைத் தார்வேந்தன் செவ்வியல் பெற்றால் அறிவுடையார் அவ்வியமும் செய்வர்", பழ. நா. 264 : 1 - 2; "தாரன் மாலையன் தமனியப் பூணினன்'', சிலப். 15 : 157; ''தாரினார் விரி கொன்றையாய் மதி தாங்கு நீள்சடையாய் தலைவா நல்ல தேரினார் மறுகின் திரு வாரணிதில்லை", தேவா. திருஞா. 3 : 1 : 9 : 1 - 3; "நீணீர் முழவின் பாணியிற் பாடியும் குழையர் கோதையர் இழையர் ஏரிணர்த் தழையர் தாரினர்", பெருங். 2 : 14 : 12 - 14; ''அமிழ்துபடு போகத் தற்புவலைப் படுத்த மாதரை மணந்த தார்கெழு வேந்தன் வழித்தொழிற் கருமமனத்தின் எண்ணான்", பெருங். 2 : 16 : 118 - 120; "குழையணி காதிற் குளிர்மதி முகத்திக்குத்தழையுந் தாருங் கண்ணியும் பிணையலும் விழைபவை பிறவும் வேண்டுவகொண்டு", பெருங். 2 : 18 : 5 - 7; "கண்ணியன் கழலினன் கச்சினன் தாரினன் வண்ண வாடையன் வந்தி வட்டோன்றித்", பெருங். 5 : 4 : 36 - 37; "தார் கெழு மின்னும் வீசித்", சீவக. 820 - 3; "தார்கள் தாம், கோதை தாம்", கம்ப. 2290 : 1 - 2; "கழலினர்; தாரினர்; கவச மார்பினர்", கம்ப. 2917: 1 - 2; "நீரிடைக் கண்துயில் நெடிய நேமியும், தாருடைத் தனிமலர் உலகின் தாதையும்", கம்ப. 5821 : 1 - 2; "போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது அங்குப் போகேன் தார்க்கோல மேனி மைந்த", கம்.ப 7426 : 2 - 3; "தாரின் மலிந்த புயத்து அரசன் தரணி நீத்தத் தவம் சார்ந்தான்", திருத். 3762: 7 - 8
அணிகிளர் தார்	அழகு வீசும் மாலை	"அணிகிளர் தாரவன் சொன்ன மாற்றம் அருளொடும் கேட்டு அந்நிலையில் நின்றே பணி வளர் செஞ்சடைப் பாச்சின் மேய பரம்பொருள் ஆயினாரைப் பணிந்து'', திருத். 2221 : 1 - 4
அணிமலர்த் தார்	அழகிய மலர்மாலை	"அணிமலர் தாரோ னவற்பாற் புக்குக் குச்சரக் குடி கைக் குமரியை மரீஇப் பிச்சைப் பாத்திரம் பெரும்பசி உழந்த காயசண்டிகை தன்கையிற் காட்டி'', மணி. 18 :150 - 153
அரும்பவிழ் தார்	அரும்புகள் போதாகி மலரும் மாலை	"அரும்பவிழ் தாரினான் எம் அருளும்என்று பெரும் பொய் உரையாதி, பாண: கரும்பின்", நாலடி. 390 : 1 - 2

அல்லி நறுந்தார்	அகவிதழாற் தொடுத்த நறிய மலர் மாலை	"வெந்திறல் வேட்டுவர் விரைந்தன ராகி அல்லி நறுந் தாரண்ணலை நலிய", பெருங். 1 : 56 : 235 - 236
அல்லியந் தார்	அகவிதழ் பொருந் திய மலர் மாலை	"செல்லல் செல்லல் சேயரி நெடுங்கண் அல்லியந்தா ரோன் றன்பாற் செல்லல்", மணி. 21 : 27 - 28
அலங்கல் பைந்தார்	தேன் நிறைந்த அலங்கலாகிய பசிய மாலை	"தேன் இமிர் அலங்கல் பைந்தார் வீடணக் குரிசில் செய்ய", கம்ப. 10340 : 3
அலர்தார்	மலர்கின்ற மாலை	"எய்துவ னென்னுஞ் சிந்தையன் வெய்துற் றேரலர் தாரோ னாற்றலி னூர்தரக்...", பெருங். 1: 52 : 113 - 114
அவிழ்தண்தார்	மலர்ந்த குளிர்ந்த மாலை	"நின்னஞ்சிக் கடற்பாய்ந்த பிணிநெகிழ் பவிழ் தண்டார்", பரி. 3: 55
அளிமிடைத்தார்	வண்டுகள் நிறைந்த மாலை	"அளிமிடைத்தார்த் தனதத்தன் அணிமாடத்துள் புகுந்து தெளிதருநூல் விதிவழியே செயல்முறைமை செய்து அமைத்துத்", திருத். 1732: 1 - 2
இணர்ஆர்தருதார்	பூங்கொத்துகள் பொருந்திய மாலை	"இணர்ஆர்தருதார் அரசன் - இடரால் அயர்வான்; வினையேன் துணைவா! துணைவா என்றான்", கம்ப 1659: 5 - 7
இணர்மலர்த்தார்	மலரால் இணைக்கப் பட்ட மாலை	"துணைமலர்க் கண்ணியுஞ் செம்பொன் மாலையும் இணைமலர்த் தாரினா னிடறி யேகினான்", சீவக. 1621 : 3 - 4
இலைத்தார்	இலைவிரவிப் புனைந்த மாலை	"மாடமூதூர் மதுரை புக்காங் கிலைத்தார் வேந்த னெழில்வா னெய்", சிலப். 27 : 61 - 62
இலைவிரவு பூம் பைந்தார்	இலை கலந்து கட்டப் பட்ட மலர்மாலை	"இலைவிரவு பூம்பைந்தார் வேந்த னேந்தல் குலங் கேட்பான் மலைவிரவு நீண்மார்பின் மைந்தன் றோழர் முகநோக்கி", சீவக. 1885: 1 - 2
ஈரிதழ்த் தார்	ஈரிய இதழ்களை உடைய மலர்மாலை	"கோற்றொழி லவற்குக் கூறின னிற்ப ஈரிதழ்த் தாரோடு யிற்றை நாளால் காரொடு உறந்த இக்கடுவளி நிமித்தம் ஊரொடுறந்த உறுகண் காட்டி", பெருங். 1 : 47 : 10 - 12
உருவத்தார்	அழகிய மலர்மாலை	"தோடலர் தெரிய லான்றன் றோழரைக் கண்டுகாதல் ஊடலர்ந் தெழுந்து பொங்க வுருவத்தார் குழையப் புல்லி", சீவக. 582: 1 - 2
உருளிணர்க் கடம்பினொலிதார்	கடம்பின் மலரரால் தழைத்த தார்	"உருளிணர்க் கடம்பி னொலி தாரோயே", பரி. 5: 81
எதிர்மலர்ப் பைந்தார்	எதிர்எதிர் அமைத்துப் புனைந்த மல்ரை உடைய பசிய மாலை	"பாலைதழீஇய பயனறு பெருவழி நீடிருளல்லது நீந்துத லரிதென எதிர்மலர்ப் பைந்தா ரேயர் பெருமகன்", பெருங். 1 : 52 : 80 - 83
எரிநகை யிடை யிடுபு இழைத்த நறுந்தார்	நிறத்தால் எரியை யொத்த வெட்சி மலரை இடையிட்டுக் கட்டின மாலை	"எரிநகை யிடையிடு பிழைத்த நறுந்தார்ப் புரிமலர்த்துழாஅய் மேவல் மார்பினோய்", பரி. 13: 59 - 60
ஏடு அகம் பொதி தார்	பூக்களால் கட்டிய மாலை	"ஏடுஅகம் பொதி தார் பொருந்திட யாம பேரி இசைத்தலால் சேடகம் புனை கோதை", கம்ப. 1551: 3-6
ஏற்றலர் பைந்தார்	பருவ மேற்று மலரு கின்ற பசியமலர் மாலை	"ஆற்றலின் மிக்க வாருணி மற்றும் ஏற்றலர் பைந்தா ரேயர்க் கென்றும் நிலத்தொடு தொடர்ந்த குலப்பகை யன்றியும்", பெருங். 4 : 8 : 43 - 45
ஒலித்தார்	தழைத்தலை உடைய மாலை	"சலித்தான் ஐயன்; கையால், எய்யும் சரத்தை உகச் சாடி ஒலித்தார் அமரர் கண்டார் ஆர்ப்ப, தேரினுள் புக்கு", கம்ப. 5596 : 1 - 2;

கடிகமழ் நறுந்தார்	நறுமணம் கமழும் நறிய மலர்மாலை	"கூற்றம் போல வேற்றவர் முருக்கிக் கடிகமழ் நறுந்தார்க் காவலன் மகளைப்", பெருங். 1: 46: 90 - 91; "தோரணக் கந்தின் றாண்முதல் பொருந்திக் கடிகமழ் நறுந்தார்க் காவலற் குறுகி", பெருங். 1: 47: 6 - 7
கடித்தார்	மணமுள்ள மாலை	"கடித்தார் கமழ் கொன்றைக் கண்ணி யான் காண் காளத்தி யானவனென் கண்ணு ளானே", தேவா. திருநா. 6: 8: 2: 7 - 8
கடிதார்	வாசமாலை	"கடிதார் மார்பனுங் கலிழ்ச்சி நோக்கிப்", பெருங். 1: 36: 202
கண்வாள் அறுக்கும் கமழ்தார்	கண்களைக் கூசச் செய்யும் ஒளியும் மணமும் உடைய மாலை	"கண்வாள் அறுக்கும் கமழ்தாரவன் தாயொடு எண்ணி விண்வாள் அறுக்கும் நகர்வீதி புகுந்த வாறும்", சீவக. 24 : 1 - 2
களிவண்டு கனைக்கும் தார்	வண்டொலிக்கும் தார்	"தேன்வயிறார்ந்த கோதைத் தீஞ்சொலார் கண்கள் போலும் ஊன் வயிறார்ந்த வெள்வே லொய்யெனப் பறித்து நக்கான், கான் வயிற்றார்ந்து தேக்கிக் களி வண்டு கனைக்குந் தாரான்", சீவக. 2290 : 2 - 4
கனைத்து வண்டு உளர்ந்த தார்	வண்டுகள் ஒலிக்கும் பூமாலை	"கனைத்து வண்டு உளர்ந்த தார்க் காளை சீவகன் னரோ", சீவக. 707: 4
குலம்கொள்தார்	பலவகை மலர்க் குலமும் அமைந்த மாலை	"நெடுந் தேவரும் கூச, அண்டம் குலுங்க, குலம் கொள் தார் வாசவன் சங்கை மாதலி வாய்வைத் தான்", கம்ப. 9734: 2 - 4
கைபுனை நறுந்தார்	கையாற் புனைந்த நறிய மாலை	"நெய்தல் நறு மலர் செருந்தியோடு விரைஇக் கை புனை நறுந்தார் கமழு மார்பின்", ஐங். 182 : 1-2
கொங்கலர் நறுந் தார்	தேன் பொருந்திய நறிய மலர் மாலை	"அம்பல மடைந்தன ளாயிழை யென்றே கொங்கலர் நறுந்தார்க் கோமகன் சென்றதும் அம்பல மடைந்த வர சிளங் குமரன் முன்", மணி. பதிக. 67 - 69; "மங்கல மரபினர் அல்லது மற்றையர் கொங்கலர் நறுந்தார்க் குமரன் முன்னர்", பெருங். 2: 7: 9 - 10; "யானை மாயத் தருந்தளைப் படுதலிற் கொங்கலர் நறுந்தார்க் கோலமார்பிற் பிங்கல கடகர் பெற்றியிற் பிழைப்பப்", பெருங். 2 : 17 : 117 - 119
கொங்கலரும் நறுங்கொன்றைத் தார்	தேன் நிறைந்த நறுமணம் கொண்ட கொன்றை மலர்மாலை	"கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி", தேவா. திருநா. 6 : 32 : 2 : 3 - 4
கொங்கு அலரும் நறுந்தண் தார்	மணம் வீசித் தேன் பிலிற்றும் குளிர்ந்த மாலை	"கொங்கு அலரும் நறுந்தண் தார்க் குகன் என்னும் குறி உடையான்", கம்ப. 2327 : 7 - 8
கொந்து அலர்தார்	கொத்தாக அலர்ந்த மாலை	"கொந்து அலர்தார் மைந்தனை முன் கோவதை செய்தார்க்கு மறை அந்தணர்கள் விதித்த முறை வழிநிறுத்தல் அறம் என்றார்", திருத். 119: 1 - 4
கொய்மலர்த்தார்	கத்தரித்த மலர் களான மாலை	"வைம்மலர்ந் திலங்கு வெள்வேல் மத்திம தேயம் ஆளுங் கொய்ம் மலர்த் தாரினானைக் கண்ணுறு குணமதென்றான்", சீவக. 1214: 3 - 4
கொய்தார்	கத்தரித்துச் செய்யப் பட்ட பூமாலை	"குங்குமஞ்சேர் வெம்முலைமேற் கொய்தார் வடுப் பொறிச் செங்கயற்கண் வெம்பனியாற் சிந்தை யெரிய வித்து", சீவக. 1043 : 1 - 2
கொழுந்தார்	மாலை	"பொன்னாணினர் பொருவில்லுயர் புனைகேடகந் திரியாகக் கொன்வாளினர் கொழுந்தாரினர் கொடி மார்பினர் திரிந்தார்", சீவக. 2264: 3 - 4

கொன்றைத்தார்	கொன்றை மாலை	"ஊர் கொன்றவனால், பிறரால் என, உற்ற எல்லாம் தார் கொன்றையினான் கிரி சாய்த்தவன்தான் உரைத்தான்", கம்ப. 8007: 3 - 4
மதுக்கொன்றைத் தார்	தேன் சிந்தும் கொன்றை மாலை	"சதுக்கென்று வேறே சமைந்தாரைக் காண மதுக் கொன்றை தாரான் வளந்தருமன்றே", திருமந். 2950: 3 - 4
கொன்றையந்தார்	கொன்றை மலர் மாலை	"வளைய வெஞ்சரம் வாங்கியெய் தான்மதுத் தும்பி வண்டு அளையுங் கொன்றையந் தார் மழ பாடியு ளண்ணலே", தேவா. திருஞா. 2 : 9 : 1 : 3 - 4
பைந்தளிர்க் கொன்றையந்தார்	கொன்றை மாலை	"பைந்தளிர்க் கொன்றையந் தாரார் போலும்", தேவா. திருநா. 6 : 16 : 7 : 1 - 2
முருகமரும் கொன்றையந்தார்	வாசனை வீசும் கொன்றை மாலை	"முக்கூடல் அம்மா முருகமரும் கொன்றையந் தார் முக்கூட மாட்டா முலை", 11ஆம். திரு. 621 : 3 - 4
கொன்றையம் போதணிதார்	கொன்றைப் போது மாலை	"காரனைக் கடிகமழ் கொன்றையம் போதணி தாரனைத்தையலொர்பான் மகிழ்ந்தோங்கிய சீரா னைச்", தேவா. திருஞா. 2 : 13 : 5 : 1-3
சந்த விரைத்தார்	அழகிய மணம் கமழும் மாலை	"சந்த விரைத்தார் வன்தொண்டர் முன்பு விருப் பினுடன் தாழ்ந்தார்", திருத். 3816 : 7 - 8
செங்கழுநீர்த் தகைமலர்த்தார்	செங்கழுநீர் மலரால் கட்டப்பட்ட மாலை	"ஒண் செங்கழுநீர்த் தெரிய லடைச்சித் தண் செங்கழு நீர்த் தகைமலர்த் தாரினன்", பெருங். 5 : 2 : 29 - 30
செழுந்தார்	வளமான மாலை	"தீங்கரும்பு மென்றனைய இன்பவளச் செவ்வாய்த் தேங்கொளமிர் தார்ந்து செழுந்தார் குழையச் சேர்ந் தார்", சீவக. 2034 : 3 - 4
செறிந்த தார்	நெருங்கிய மலர் மாலை	"செறிந்த தார் நிருதர் வேந்தன் உரை செய, காலின் செம்மல், இறும் திறம் அவனுக்கு இல்லை; நாடுதும், ஏகி என்றான்", கம்ப. 8717: 3 - 4
தகைமலர்த்தார்	அழகிய மலர் மாலை	"தகைமலர்த் தாரோன் தடக்கை பற்றியவள்", பெருங். 2: 3: 158
தகைமலர்ப் பைந்தார்	அழகிய மலராற் புனைந்த புதிய மாலை	"செய்வது தெரியுஞ் சிந்தையோ டிருந்துழித் தகை மலர்ப் பைந்தார்த் தருசகன் றன்னொடு", பெருங். 3: 17 : 2 - 3
தளையவிழ் தார்	கட்டவிழ்ந்த மலர் மாலை	"தளையவிழ் தாரோன் வலமுறை வந்து", பெருங். 2 : 3 : 109; "ஒருவலத் துயரிய பொருவில் புட்கொடித் தளையவிழ் நறுந்தார்த் தனக்கிணை இல்லா", பெருங். 2 : 5 : 148 - 149
தாது அவிழ்தார்	மகரந்தம் சிந்தும் மாலை	"தளிர் அடிமென் நகை மயிலைத் தாது அவிழ்தார்க் காளைக்குக் களிமகிழ் சுற்றம் போற்றக் கல்யாணம் செய்தார்கள்", திருத். 1732: 3 - 4
தாளி அறுகாம் உவந்த தார்	தாளி அறுகினாலாய மாலை	"நாளுமனு காவண்ணம் நாயேனை ஆளுடையான் தாளி அறுகாம் உவந்ததார்", திருவாச. திருத். 9: 3 - 4
துதைமலர்ப் பைந்தார்	செறிந்த மலராற் புனைந்த புதிய மாலை	"யானை வணக்கும் வீணை வித்தகன் துதைமலர்ப் பைந்தா ருதையண குமரற்கு", பெருங். 3 : 21 : 34 - 35
தெரிமலர்த்தார்	தெரிந்தெடுத்த மலர் களாலாகிய மாலை	"தெரிமலர்தாரர் தெருவிருள் சீப்பநின்", பரி. 19 : 14
தேந்தார்	தேனொழுகும் தார்	"கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்", அகம். 76: 7; "தொருதுணைத் தோழியை யொன்றுவனள் கூவித்

		திருவிற்கமைந்த தேந்தார் மார்பன் உருவிற் கமைந்த வுணர்வு நன்குடைமை", பெருங். 3 : 14 : 166 - 169; "தேந்தார்ச் சூரனுந் திறற்பம சேனனும் இந்நாற்றலை வரு மெரிகான்று", பெருங். 3 : 27 : 126 - 127; "காந்த ரகனைக் கடக பிங்கலர் தேந்தார் மார்பந்திறப்ப வெய்ய", பெருங். 3 : 27 : 129 - 130
தேம்படுதார்	தேன் துளிக்கும் மாலை	"ஆம் பொரு ளோதின ரிகழா ரதனாற் றேம்படு தாரோன் றெளித லொன்றினாய்", பெருங். 4:10: 131-132
தேம்மருவு நறும் பைந்தார்	தேன் நிறைந்து நறுமணம் கமழும் பசிய மாலை	"மாமறையோர் வளம்பதிகளிடைத் தங்கிவழிச் செல்வார் தேம் மருவு நறும்பைந்தார்த் தென்னவன் தன்திரு மதுரை", திருத். 2779 : 1 - 2
தேன்தோய் நறுந் தார்	தேன் தோய்ந்த நறிய மலர்மாலை	"வான்றோய் பெரும்புகழ் வத்தவர் பெருமகன் தேன் றோய் நறுந்தார் திருவொடு திளைத்தற்", பெருங். 4: 17 : 45 - 46
தேனிமிர்தார்	தேன் நிறைந்த மலர்களாகிய மாலை	"ஐயுறா னணங்கெனவே யகத்தடக்கிச் செல்கின்றான் மொய்யறாக் களியானை முழங்கித்தேனிமிர் தாரான்", சீவக. 181: 3-4
தேனுயர் நறுந்தார்	தேன்மிக்க நறிய மலர்மாலை	"வானுயருலகம் வழுக்குபு வீழ்ந்த தேனுயர் நறுந் தார்த் திறலோன் போலத்", பெருங். 3 : 18 : 78 - 79
தோகை தூவி தொடைத்தார்	மயிலின் சிறகாற் றொடுத்தலை உடைய மாலை	"தோகை தூவித் தொடைத்தார் மழவர்", அகம். 249 : 12
தோட்டு ஆர் பூந்தார்	இதழ்களுடைய பூமாலை	"வாள்தாயம் கொள்போர் மலைக்க வருக எனத் தோட்டுஆர் பூந்தாரர்க்குச் சொல்லிச் செலவிட்டான்", திருத். 638: 3 - 4
தோடலர்தார்	இதழ் விரிந்த மலர் மாலை	"கடுப்புந் தவிர்ப்புறி னுளத்துள் ளனவென தோடலர் தாரோன் றோன்றக் கூறி", பெருங். 5: 4: 75 - 76
தோடு இவர்ந்த தார்	இதழ்கள் அமைந்த மலர் மாலை	"மூடும் உம்பரும், இம்பரும் பூமியில் மூழ்க, தோடு இவர்ந்த தார்க்கிரி புரை துமிந்தனும் - தொடர்ந் தான்", கம்ப. 4421 : 5 - 8
நறுந்தார்	மணம் பொருந்திய மாலை	"தொடை ஊற்றின் தேன்துளிக்கும் நறுந்தாரன் ஒரு வண்ணம் துயரம் நீங்கி", கம்ப. 326 : 1 - 2; "எரி நகை யிடை யிடுபு இழைத்த நறுந்தார்ப் புரிமலர்த் துழாஅய் மேவன் மார்பினோய்", பரி. 13 : 59 - 60
நிரைதார்	மலர்கள் இணைந்த மாலை	"என்றவன் வளர்ப்ப அரைசாள் செல்வம் அவன்பால் உண்மையின் நிரைதார் வேந்தன் ஆயினன் அவன் தான்", மணி. 15 : 40 - 45
நிரைக் கொன்றைத் தார்	கொன்றை மலர்கள் வரிசையாக அமைந்த மாலை	"நீரானே நீள்சடை மேலோர் நிரைக்கொன்றைத் தாரானே தாமரை மேலயன் றான்றொழும் சீரானே", தேவா. திருஞா. 2 : 15 : 1 : 1 - 3
புரிதார்	மலர்மாலை	"புரிதார் நெடுந்தகை பூவணை வைகிய", பெருங். 1: 34: 5
புனை தண்தார்	தொடுக்கப்பட்ட குளிர்ந்த மாலை	"பூவினான் நந்தும் புனைதண்தார் மற்றதன் தாதி னான் நந்துஞ் சுரும்பெல்லாந் - தீதில்", நான்மணி. 50: 1 - 2
புனை மலர்த்தார்	அழகிய மலர்களால் தொடுக்கப் பெற்ற மாலை	"துனை பரித் தேர்மேல் ஏறிச் சேறி என்று இனைய சொன்னான் புனைமலர்த் தாரினானும் போர் அணி அணிந்து போனான்", கம்ப. 5673 : 3 - 4
பூ அலர்தார்	விரிந்த பூமாலை	"காவல்புரி வல்ஆயர் கன்றுடைஆன் நிரைசூழப் பூ அலர்தார்க் கோவலனார் நிரைகாக்கப் புறம் போந்தார்", திருத். 948 : 3 - 4

பூக்கவினார்ந்த பைந்தார்	பூக்களினழகை நிறையக் கொண்ட பசுமையான மாலை	"மாக்கவின் வளரத் தீண்டி மணிநகை நக்குநாளும் **பூக்கவினார்ந்த பைந்தார்** புனைமதுத் தேனொ டேந்தி தாக்கியெம் முலைக டம்மை நெருங்கினாய்", சீவக. 2951 : 1 - 3
பூங்கொன்றைத் தார்	கொன்றை மலர் களாலான பூமாலை	"அரும்பமரும் **பூங்கொன்றைத் தாரான்** தன்னை அருமறையோடாறங்க மாயினானை", தேவா. திருநா. 6: 1 : 6 : 1 - 4
பூசல்வண்டு உறையும் தார்	ஒலிக்கும் வண்டுகள் தங்குகின்ற மாலை	"**பூசல் வண்டு உறையும் தாராய்**- இது இங்குப் புகுந்தது என்றான்", கம்ப. 7302 : 4
பூந்தண்டார்	குளிர்ந்த பூமாலை	"பொருத்த மழியாத **பூந்தண்டார்** மன்னர் அருத்தம் அடிநிழலாரை வருத்தாது கொண்டாரும் போலாதே", பழ. நா. 244 : 1 - 3
பூந்தார்	பூமாலை	"வண்டினம் வாய்வீழா மாலையும் - வண்டினம் ஆராத **பூந்தார்** அணிதேரான் தான் போத வாராத நாளே வரும்", திணை. நூற். 101: 2-4; "**பூந்தாரான்** திருமுடி மேல் பதுமமலர்த் தாள் வைத்துப்பள்ளி கொள்வார் போல் பயின்றார்", திருத். 231 : 6 - 8
பூவலர் தார்	மலர் விரிந்த மாலை	"காவலன் கருதிய கட்டுரை யுணர்தி **பூவலர் தாரோய்** புனைகழ னோன்றாள்", பெருங். 3 : 21 : 46 - 47
பைந்தார்	பசிய மலர்மாலை	"**பைந்தார்த்** தத்தையை நொந்த நோயன்", பெருங். 1 : 33 : 143; "அலமந் தழுஉ மஞ்சிலோதியை முகைமலர்ப் **பைந்தார்** குழைய முயங்கி" பெருங். 1 : 47 : 249 - 250; "ஏரணி நெடுங்குடை யிறைமீக் கூரிய படைநவிறடக் கைப் **பைந்தார்க்** கருங்கழல்", பெருங். 3: 17: 14 - 16; "அடலருஞ்சீற்றத் தரசுபல கடந்த விடலரும் **பைந்தார்** வேந்தருள் வேந்தன்". பெருங். 3 : 17 : 240 - 241; "பொருமுரணண்ணல் புகன்ற பொழுதிற் பாடு பெறு சிறப்பிற் **பைந்தார்** மன்னன்", பெருங். 3: 24: 72 - 73; "உய்ந்தோ ரோடி யூரகங் குறுகிப் **பைந்தார்** வேந்தனைக் கண்டு கைகூப்பி அகலாதாகிய வரும் பெறற் சூழ்ச்சி", பெருங். 3: 26: 44 - 46; "பரந்தகேள்வித் துறை போய **பைந்தார்** மார்பன்", சீவக. 717 - 2; "**பைந்தார்** எங்கள் இராமன் பத்தினி செந்தாள் வஞ்சி, திறத்து இறந்தவன்", கம்ப. 4691 : 1 - 2
மட்டலர் பைந்தார்	தேனொடு மலர்ந்த பசிய மலர்மாலை	"ஒட்டிய குமரனுள்ள நோக்கி **மட்டலர் பைந்தார்** மகதவன் வயந்தகற் குற்ற நண்பினுயிர்போ லுதயணற்", பெருங். 3 : 19 : 146 - 148
பொங்கு மலர்த்தார்	தேன் மிக்குப் பொங்கும் மலர்	"வெங்கண் இருட்டுயர் இங்கண் நீக்கிய **பொங்கு மலர்த் தாரோய்** புகுகென் போரும்", பெருங். 2 : 1 : 22 - 23
பொங்குமலர் நறுந்தார்	மிக்க மலராற் புனைந்த நறிய மலர்மாலை	"மன்னரை முருக்கிய மதிய வெண்குடைப் **பொங்கு மலர் நறுந்தார்ச்** சங்கர வரசனும்", பெருங். 3 : 17 : 30 - 31
பொதியவிழ் பூந் தார்	கட்டவிழ்ந்த மலர் மாலை	"மதியம் பெற்ற வானகம் போலப் **பொதியவிழ் பூந்தார்** புரவலற்றழீஇச்", பெருங். 1: 57: 109 - 110
பொன்னிதழிக் கமழ்தார்	பொன் போன்ற கொன்றை மலர் களால் மணம் வீசும் மாலை	"கணிவளர் தார்ப் **பொன்னிதழிக் கமழ்தார்** கொண்டார் காதலார் கோடிகலந்த திருக்கை கொண்டார்", தேவா. திருநா. 6 : 96 : 7 : 3 - 4
பொன்னிலங்கு கொன்றையந்தார்	பொன்போல் விளங்கு கின்ற கொன்றை மாலை	"**பொன்னிலங்கு கொன்றையந்தார்** மாலை சூடிப் புகலூரும் பூவணமும் பொருந்தினாரும்", தேவா. திருநா. 6 : 59 : 10 : 1 - 2

மட்டவிழ்ந்த தார்	புதிய மாலை	"மட்டவிழ்ந்த தாரினான்", சீவக. 690 - 1
மட்டுலாந் தார்	தேன் நிறைந்த மாலை	"மட்டுலாந் தாரினாய்", சீவக. 772 - 1
மணம் கமழ் தார்	நறுமணம் கமழும் மாலை	"பல்மலர்ப் புனித நந்தவனங்கள் பணிந்து சென்றனன் மணம் கமழ் தாரான்", திருத். 240: 7-8
மணங்கமழ் நறுந் தார்	மணங்கமழுகின்ற நறிய மலர்மாலை	"ததும்பு குரற் பூசலிரங்கு வன வொலிப்ப மணங் கமழ் நறுந்தார் மன்ன குமரன்", பெருங். 1 : 53 : 168 - 169; "நுணங்கு வினை விச்சையொடு நூற்பொரு ளுனித்த மணங்கமழ் நறுந்தார் மானச வேக னென் றாற்றல் சான்ற நூற்றொரு பதின்மர்", பெருங். 5 : 9 : 14 - 16
மணம் மலிதார்	மணம் வீசும் மாலை	"உணர்வு உறுகிளைஞர் வெள்கி உன்திரு மனைவி தன்னை மணம் மலிதாரினாய் நீ வணங்குவது என்கொல் என்றார்", திருத். 1767 : 4 - 5
மதுக்கமழ் தார்	தேன் கமழும் மலர் மாலை	"முதுக்குறை முது மொழிகேட்கு வனென்றே மதுக்கமழ் தாரோன் மனங்கொண் டெழுந்து பலர்பசி களையப் பாவைதா னொதுங்கிய உலக வறவியி னூடுசென் றேறலும்", மணி. 20 : 16 - 21
மலர்தார்	மலர்ந்த பூமாலை	"அலரா கின்றால் தானே மலர்தார் மையணி யானை மறப்போர்ச் செழியன்", அகம். 116 : 12 - 13; "பலர்குறை செய்த மலர்தா ரண்ணல்", புறம். 311 : 4
மிடை தார்	நெருங்கிய மலர் மாலை	"அன்ன னாகுத றிண்ணிதி னாடி மெய்ப்பொரு டெரியு மிடைதார் மன்னவ", பெருங். 5: 3: 48-49
முருகுவிம்முதார்	மணமிக்க மாலை	"முருகு விம்முதார்ச் செய்கழல் சீவகன்", சீவக. 778: 3 - 4
வகையமை நறுந் தார்	நறியு மலர்மாலை	"இவனிற் பின்னை நயனுணர் கேள்வி வகையமை நறுந்தார் வத்தவர் பெருமகன்", பெருங். 3: 14: 289 - 290
வட்டம் மலர்த்தார்	வட்டமாக அமைந்த மாலை	"வட்டம் மலர்த்தாரவனாலருள் பெற்று வான் பொன் பட்டம் அணிந்தாள் இவர் தங்களுள் யாவள் என்ன", சீவக. 2343 : 1 - 2
வண்டலர் தார்	வண்டுகள் மொய்க் கின்ற மலர் மாலை	"தமர்களை யேவலி னவர் வந்தவரைக் கொண்டனர் செல்ல வண்டலர் தாரோன்", பெருங். 3 : 26 : 49 - 50
வண்டவிழ் நறுந் தார்	வண்டுகள் கிண்டி அலர்த்தும் நறிய மலர்மாலை	"கொண்டது வாவெனக் கோமகள் கொண்டு வண்ட விழ் நறுந்தார் வத்தவற் கருளி", பெருங். 5: 1: 100 - 101
வண்தார்	வளவிய பூமாலை	"வண்டார் பூந்தொங்கல் மகன்தந்தை வண்தாராய் யார்ப்பார் பூங்கோதை அணியிழை நன்கியையக் காப்பார் கருதுமிடத்து", சிறுபஞ்ச. 54 : 2-4
வள்ளிதழ் நறுந்தார்	பெரிய இதழையுடைய நறியமலர் மாலை	"உள்ளத்துள் பொரு ளுணர்ந்தோன் போல வள்ளிதழ் நறுந்தார் வயந்தக னுரைத்த மாற்றங் கேட்டே", பெருங். 1 : 54 : 72 - 74; "உள்ளதோழரும் ஒருப்பட் டெய்தி வள்ளிதழ் நறுந்தார் வத்தவற் குறுகி", பெருங். 2 : 11 : 182 - 183; "கண்ணி கட்டித் தம்மின் எனக் கென வள்ளிதழ் நறுந்தார் வத்தவ மன்னனும்", பெருங். 2 : 17 : 50 - 51; "உள்ளம் பிறழ்ந்ததை யுள்ளகத் தடக்கி வள்ளிதழ் நறுந்தார் வச்சிர வண்ணன்", பெருங். 5 : 3 : 87 - 88; "கொள்ளா ரழிவினைக் கூறுமிவை யென வள்ளிதழ் நறுந்தார் வருட காரன்", பெருங். 3: 27: 87 - 88; "செல்பொறி செறித்த பல்புக ழமைச் சனை வள்ளிதழ் நறுந்தார் வத்தவர் கோமாற்", பெருங். 3: 21 : 22 - 23; "உள்ளுதலானா துள்ளகஞ் சுருங்கிய வள்ளிதழ் நறுந்தார் வத்தவன் தன் னொடு", பெருங். 3 : 4: 1 - 2

வாசத் தார்	மணம் மிக்க மலர் மாலை	"வாசத் தாரவன் மார்பு எனும் மலை வழங்கு அருவி", கம்ப. 4011 : 1 - 2
வாடாத் தார்	வாடாத மாலை	"வாடாத் தாரினர் சேடார் கச்சையர்", பெருங். 2: 6: 123
வாடா நறுந்தார்	வாடாத நறிய மாலை	"கோடா துயர்ந்த குருகுலக் குருசில் வாடா நறுந் தார் வத்தவர் பெருமகன்", பெருங். 4 : 15 : 26 - 27
வித்தக நறுந்தார்	சித்திர வேலை செய்யப்பட்ட நறிய மாலை	"வத்தவர் பெருமகன் வரைபுரை அகலத்து வித்தக நறுந்தார் விருப்பொடு பொருந்தி நுகர்தற் கமைந்த புகர்தீ பொம்மற்", பெருங். 2 : 17 : 109 - 111; "மத்தநல் யானை மதிய வெண்குடை வித்தக நறுந்தார் விலங்கு நடைப்புரவி அத்தின புரத்தினரசருளரிமான்", பெருங். 3: 17 : 6 - 8
விரவுத்தார்	பல மலர்கள் விரவு தலையுடைத்தாகிய தார்	"பூந்தாமரைப் போது தந்த விரவுத்தார்க் கல்லாப் பொது வனை நீமாறு நின்னொடு", கலித். 112 : 2 - 3
விரை செய் தார்	வாசனையுடைய பூ மாலை	"அரசன் ஆங்கு அருளிச் செய்ய அருகு சென்றணைந்து பாகர் விரைசெய்தார் மாலையோய் நின் விறல் களிற்று எதிரே நிற்கும்", திருத். 586 : 1 - 4
விரை விளை யாடும் தார்	மணம் உலாவும் மாலை	"விரை விளையாடுந் தாரோ யானென விரும்பித் தீம்பாற் நிரை விளையமிர்த மன்ன கட்டுரை செல்க வென்றான்", சீவக. 397 : 3
வேப்பந்தார்	வேப்பமாலை	"மீனக் கொடிபாடும் பாடலே பாடல் வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்", சிலப். 29 : 27 4 - 5
ஆய்தார் மார்பு	அழகிய மாலை அணிந்த மார்பு	"இருக்கென விருந்த பின்றை விருப்போடாய்தார் மார்ப னீர்வயி னிரைத்த நாவாய்", பெருங். 3: 26: 90 - 92
இலைத்தார் மார்பு	இலை விரவிய படலை மாலை அணிந்த மார்பு	"மலைத்தொகை யன்ன மையணி யானை இலைத்தார் மார்பி னேரணி தடக்கைப்", பெருங். 3 : 17 : 17 - 18
ஒண்டார் மார்பு	ஒள்ளிய மலர் மாலை அணிந்த மார்பு	"திண்தோள் கட்டிய வென்றி நோக்கி ஒண்டார் மார்பன் கொண்டமை கண்டே ஒருக்கி நிரல் பொருஉ முருமண்ணுவா நம்", பெருங். 3 : 20 : 93 - 95
ஒண்தார் மார்பு	ஒளி பொருந்திய மலர் மாலை மார்பு	"வண்டொடு கூம்பிய மரைமலர் போல ஒண்டார் மார்பனை யுட் பெற்றுவகையின் மணி வரைச்சாரன்", பெருங். 3: 13: 48 - 50
கட்டு அலர்தார் மார்பு	கட்டிய பூ மாலை அணிந்த மார்பு	"அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே கட்டலர் தார் மார்ப! கலியூழிக் காலத்துக் கெட்டார்க்கு நட்டாரோ இல்", பழ. நா. 134 : 2 - 4
கட்டலர் கமழும் ஒண்தார் மார்பு	முறுக்குடைய மலராலான ஒளி பொருந்திய மாலை அணிந்த மார்பு	"கட்டலர் கமழும் ஒண்டார் மார்பின் உதயணகுமரற்குத்", பெருங். 2 : 3 : 146 - 147
துதைதார் மார்பு	மலர் செறிந்த மாலை அணிந்த மார்பு	"தெரிவன னுணர்ந்து விரைவனன் போந்து துதைதார் மார்பி னுதையணற் குறுகிச்", பெருங். 4 : 15 : 17 - 18
தேன்தார் மார்பு	தேன் துளும்பும் மாலை அணிந்த மார்பு	"காய்ந்த நோக்கிற் காவலாளரும் தேன்றார் மார்பன் திருநகர் முற்றத்துக் கைபுனைந் தோருங் கண்டு காணார்", பெருங். 4 : 10 : 38 - 40
நற்றார் மார்பு	நல்ல மாலை அணிந்த மார்பு	"பற்றார் உவப்பப் பனிவரைப் பழகுதல் நற்றார் மார்ப நன்றியின் றாகும்", பெருங். 2 : 17 : 28 - 29
நறுந்தார் மார்பு	நறிய மலர்மாலை அணிந்த மார்பு	"கனவினினையுங் கணவனைக் கண்டே நனவினு மிதுவோ நறுந்தார் மார்பன்", பெருங். 4 : 7 : 28 - 29

பனித்தார் மார்பு	குளிர்ந்த மலர் மாலை அணிந்த மார்பு	"தனித்தாய் இயங்கலுந் தாங்கினை யோவெனப் பனித்தார் மார்பன் பல பாராட்டியும்", பெருங். 2 : 19 : 127 - 128; "தனித்தாணி வந்த தாமரை போலப் பனித்தார் மார்பனிற்ப மொய்த்துடன்", பெருங். 1 : 56 : 226 - 227
பூந்தார் மார்பு	பூ மாலை அணிந்த மார்பு	"பூந்தார் மார்பிற் புரந்தர குமரனிற் போந்தனன் மாதோ புறநகர் கடந்தென்", பெருங். 2 : 8: 196 - 197; "ஒண்பூஞ் சாந்தினுண் பொறி யொற்றிப் போயினள் புரவலன் பூந்தார்மார்பிற்", பெருங். 3 : 9 : 107 - 108; "சாலிகைக் கவயங் கோலமாகப் புக்க மெய்யினர் பூந்தார் மார்பிற் நாளாண் கடுந்திறல் விரிசிகன் வாழ்கென", பெருங். 3 : 17 : 227 - 229
முகைத்தார் மார்பு	அரும்பு மாலை அணிந்த மார்பு	"பொழில் வயிற் புதைத்த தொழிலினெம் யாமென முகைத்தார் மார்ப னுவப்பதை யுரைப்ப", பெருங். 1 : 56 : 94 - 95
வகைத்தார் மார்பு	பல்வேறு வகைப்பட்ட மாலை அணிந்த மார்பு	"நீயேயென் வயி னினைந்திலை யோவென வகைத் தார் மார்ப னகத்தே யழல் சுடத் தம்பியர்ப் பெற்றுந் தனியாழ் வந்தும்", பெருங். 4 : 4 : 7 - 9
வண்டார் மார்பு	வளவிய மாலை அணிந்த மார்பு	"புகற்சியொடு புல்லிப் புனையிழை கேண்மதி வண்டார் மார்பின் வடிநூல் வயவனைக் கண்டே னன்ன தன்மைய னாகிக்", பெருங். 3 : 22 : 124 - 126
தார் அகலம்	மாலை அணிந்த மார்பு	"தகவுடையார் தாம் உளரேல் தார் அகலம் சாரப் புகவிடுதல் பொல்லாது கண்டீர்", 11ஆம் திரு. 56: 1 - 2
பூந்தார் அகலம்	மலர் மாலை அணிந்த மார்பு	"தம்முள் தாக்கிய விம்ம வெகுட்சியுள் பொருமுரண் அண்ணல் பூந்தார் அகலத்துத் திருமகள் தன்னில் தீரா தியைந்தனள்", பெருங். 2 : 8 : 84 - 86
பொலந்தார் அகலம்	அழகிய மாலை அணிந்த மார்பு	"புகழ்குறி கொண்ட பொலந்தார் அகலத்துத் தண் கமழ் சாந்தம் நுண்டுகள் அணிய", அகம். 354 : 9 - 10
தாரணிதல்	மாலை அணிதல்	"தாரணி மார்பனோடு பேரணி யணிந்து வான வண் கையனத்திரி யேற", சிலப். 6 : 118 - 119; "தாரணி வேந்தன் றலைத்தா ணிகழ்ந்தது", பெருங். 1 : 32 : 50; "தாரணி மார்ப னாருணி யரசனும்", பெருங். 3 : 27 : 124; "விள்ளா நண்பின் விறலோ னமைச்சன் பூரண குண் டலன்றாரணி மார்ப", பெருங். 3 : 27 : 80 - 81; "திருத்தகு மார்வன் றிறவதிற் கிளப்பத் தாரணி மார்ப காரணங் கேண்மதி", பெருங். 5 : 3 : 42 - 44; "பட்டமும் பசும் பொற் பூணும் பரந்தொளி நிழற்றுந் தீந்தேன் அட்டுந்தார் அணிந்த மார்பராவணங் கிளக்க லுற்றேன்", சீவக. 112: 3 - 4
கொன்றைத் தாரணிதல்	கொன்றை மலரா லான மலர் மாலை யை அணிதல்	"குலாவெண் தலை மாலை யென்பு பூண்டு குளிர் கொன்றைத் தாரணிந்து கொல்லேறேறிக்", தேவா. திருநா. 6 : 2 : 8 : 1 - 2
சுடர் கொன்றைத் தாரணிதல்	ஒளிவீசும் கொன்றை மலர் மாலையை அணிதல்	"தொட்டிலங்கு சூலத்தார் மழுவாளேந்திச் சுடர்க் கொன்றைத் தாரணிந்து சுவைகள் பேசிப்", தேவா. திருநா. 6 : 35 : 6 : 1 - 2
பூங்கொன்றைத் தாரொன்றணிதல்	கொன்றை மலரால் ஆன மாலையை அணிதல்	"பொன்னியலுந் திருமேனி உடையான் கண்டாய் பூங் கொன்றைத் தாரொன் றணிந்தான் கண்டாய்", தேவா. திருநா. 6 : 39 : 8 : 1 - 2
அலர்தார் வேம்பு அணிதல்	மலர்ந்த மாலை அணிதல்	"ஆர்புனை தெரியலும் அலர்தார் வேம்பும் சீர்கெழு மணிமுடிக் கணிந்தோ ரல்லால்", சிலப். 26 : 19 - 20
தார் உலாவுதல்	மாலைகள் அசைதல்	"தார் உலாம் மணி மார்பநின் தம்பியே", கம்ப. 6806: 1

நெய்தல் நறுமலர் செருந்தியோடு விரைஇக் கை புனை நறுந்தார் கமழுதல்	நெய்தல் நறுமலரைச் செருந்தியோடு கை யாற் புனைந்த நறிய தாரின் மணம் கமழுதல்	"நெய்தல்நறு மலர் செருந்தியோடு விரைஇக் கைபுனை நறுந்தார் கமழும் மார்பன்", ஐங். 182: 1 - 2
பூந்தார் குழைதல்	மலர்மாலை அசைதல்	"வந்தனை யென்றுதன் சந்தன மார்பிற் பூந்தார் குழையப் புல்லினன் பொருக் கெனத் தீந்தேன் கலந்த தேம்பால் போல", பெருங். 4 : 7 : 190 - 192
தார் கெழுமுதல்	மாலையணிதல்	"தார்கெழு வேந்தன் றமர் களை விடுத்தபின்", பெருங். 1 : 36 : 56; "தார் கெழு மார்புந் தலையுந் தகர முடியணி யார முத்து நிரை துளங்கத்", பெருங். 3 : 27 : 171 - 172
தார் சூழ்தல்	மலர்மாலை அணிதல்	"தம்மமர் காதலர் தார்சூழ் அணியகலம் விம்ம முயங்குந்துணையில்லார்க்", நாலடி. 392 : 1 - 2
கொன்றைத் தார் சூழ்தல்	கொன்றை மலர் மாலை அணிதல்	"வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமாபாடிச் சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி ஆதி திறம்பாடி அந்தம் ஆ மாபாடிப்", திருவாச. திருவெம். 14 : 4 - 6
தார் மலர்க் கொன்றை தயங்குதல்	கொன்றை மலர் களாலான மாலை விளங்குதல்	"சூழ்சடைப் புனலனை சுந்தர விடங்கனை தார்மலர்க் கொன்றை தயங்கு மார்பனை", 11-ஆம் திரு. 489: 36 - 37
தார் தாங்குதல்	மாலையை அணிதல்	"தார் தாங்கிக் கடன் முடித்த சடை தாங்கும் திருமுடியார்", திருத். 3982 : 1 - 2
மரா அத்து உருள் பூந்தண்தார் புரளுதல்	செங்கடம்பினது தேரின் உருளையைப் போன்ற பூக்களால் கட்டப்பட்ட குளிர்ந்த மாலை புரளுதல்	"இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்து உருள் பூந்தண்தார் புரளும் மார்பினன்", திருமந். 10-11
தார் புல்குதல்	மாலை பொருந்துதல்	"நீர்புல்கு புன்சடை நின்றிலங்க நெடுவெண் மதிசூடித் தார்புல்கு மார்பில் வெண்ணீ றணிந்து தலையார் பலிதேர்வார்", தேவா. திருஞா. 3 : 104 : 5 : 1 - 4
தார் புனைதல்	மாலையணிதல்	"ஊரும் கலிமா உரனுடைமை முன் இனிதே தார் புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்", இனியவை. 8: 1 - 2; "பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார் போல் திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ", கார் நாற் 1 : 1 - 2
தார் பூணுதல்	மாலை அணிதல்	"வாசவதத்தை தன் தார் பூண்மார்பிற்", பெருங். 1:54: 21 - 22
நிரைத்தார் பொங்கல்	மாலை அணிந்திருத்தல்	"நீள்வயிர வெண்மருப்பினீலக் களிற்றின் மேல் நிரைத் தார் பொங்க", சீவக. 645 : 2
தார் பொலிதல்	மாலை பொலியச் சூடுதல்	"தார்பொலி தருமதத்தன் தக்கவாறு உரைப்பக் குன்றில் கார்த்திகை விளக்கிட்டு அன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்", சீவக. 256 : 1-2; "தார்ப்பொலி மார்பன்", சீவக. 758 : 3
குவளைப் பைந்தார் போர்த்தல்	குவளை மலர்மாலை அணிதல்	"கார்த்திகை விளக்கிட்டு அன்ன கடிகமழ் குவளைப் பைந்தார் போர்த்த தன் அகலம் எல்லாம் பொள் ளென வியர்த்துப் பொங்கி", சீவக. 256 : 2 - 3
தார் விளங்குதல்	பூமாலை விளங்குதல்	"தார்விளங்கு வரைமார்பின் அயன்பொன் சதுர் முகங்கள் என ஆயினதில்லை", திருத். 243 : 5 - 6
தாரும் பூணும் மார்பிடைத் துயல் வருதல்	மலர் மாலைகளும் அணிகலன்களும் மார்பிற் கிடந்து புரளா நிற்றல்	"சிதர்பொறி எந்திரம் போலச் சிதர்ந்து தாரும் பூணு மார்பிடைத் துயல்வரச் சோருங் கண்ணினன் துளங்கி மெய்ம் மறப்ப", பெருங். 2 : 10 : 109 - 111

திரணை

திரணை	மாலை விசேடம், கட்டிய மாலை	"கட்டுங்கண்ணியு தொடுத்த மாலையும் ஒட்டிய திர ணையோ டொசிந்த பூவினன்", சிலப். 22 : 42 - 43

துணையல்

துணையல்	மாலை	"தொண்டர் தண்கயம் மூழ்கித் துணைய லுஞ் சாந்தமும் புகையும் கொண்டு கொண்டடி பரவி குறிப்பறி முருகன் செய்கோலம்", தேவா. திருஞா. 2 : 92 : 2 : 1 - 2

தெரியல்

மதுநாறு தெரியன்	தேன் மணங்கமழும் மலர் மாலை	"ஆசின்று பயந்த வணியிழைக் குறுமகள் மதுநாறு தெரியன் மகளிருட் பொலிந்த பதுமா பதியெனப் பகர்ந்த பேரினள்", பெருங். 3 : 6 : 174 - 176
தொங்கு அலர் தெரியலாரம்	மணம் கமழும் மலர் மாலை	"மங்கையர்க் கரசியார் பால் வந்து அடி வணங்கிநின்ற தொங்கு அலர்தெரியலாரம் குலச்சிறை யாரை நோக்கி", திருத். 2548 : 1 - 4
நாள் மலர்த் தெரியல் மார்பு	அன்றலர்ந்த மலர் களால் ஆன மாலை அணிந்த மார்பு	"நாள்மலர்த் தெரியல் மார்ப நம்பலம் காண்பான் மாடத்து", கம்ப. 6858 : 1

தொங்கல்

தொங்கல்	மாலை	"தோடு உழுத நறுந் தொடையல் தொகை உழுத கிளை வண்டின் சுழியத் தொங்கல் பாடு உழுத படர் வெரிநின் பணி உழுத அணிநிகர்ப்ப", கம்ப. 9906 : 1 - 4
மட்டு அவிழ் தொங்கல்	தேன் சிந்தும் மலர் மாலை	"மட்டுஅவிழ் தொங்கல் மன்னன் வாயில் காவலரை நோக்கிப் பட்டவர்த் தனமும் பட்டுப் பாகரும் பட்டார் என்று முட்டநீர் கடிது புக்கு", திருத். 576 : 3 - 7
மன்றல் அம் தொங்கல்	மணமிக்க அழகிய மலர் மாலை	"சென்றனர் பத்து நூற்றுச் சீரிய வீரர் ஓடி மன்றல் அம் தொங்கலான் தன் மனம் தனில் வருத்தம் மாற இன்று இவன் முடிக்கும் என்னா", கம்ப. 7319 : 1 - 3
வண்டார் பூந் தொங்கல்	வண்டுகள் மொய்க் கின்ற பூமாலை	"கொண்டான் கொழுநன் உடன்பிறந்தான் தன் மாமன் வண்டார்பூந் தொங்கல் மகன் தந்தை வண்தாராய்", சிறுபஞ்ச. 54 : 1 - 2
வெறி விரவு கூவிள நல் தொங்கல்	வாசனை வீசும் வில்வத் தால் ஆன மாலை	"வெறிவிரவு கூவிளநல் தொங்க லானை வீரட்டத் தானை", தேவா. திருநா. 6 : 3 : 1 : 1 - 2
தொங்கல் சூழ்தல்	மாலை அணிதல்	"மங்கல கீதநாத மறையவர் குழாங்களோடு தொங் கலும் விரையும் சூழ்ந்த மைந்தரும் துவன்றிச் சூதும் பங்கய முகையும் சாய்த்துப்", திருத். 167 : 1 - 5

தொடை

பெருந்தொடை புரளுதல	நன்மணங்கமழும் பெரிய பூமாலை அசைதல்	"அயினிமா இன்று அருந்த நீவிக் கணம் நாறு பெருந் தொடை புரளும் மார்பில் துணையிலை தமியை சேக்குவை அல்லை", நற். 254 : 7 - 9

தொடையல்

தளைவரும் தொடையல்	கட்டப்பட்ட மாலை	"இளைய பைங் குரிசில் வந்து, அடி பணிந்து எழுதலும், தளை வரும் தொடையல் மார்பு உற உறத் தழுவி னான்", கம்ப. 1052 : 1 - 4
தேமரு தொடையல்	தேன் பொருந்திய மாலை	"தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலம் காணக் காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம் செய்தான்", திருத். 159 : 5 - 8

பிணையல்

பிணையல்	பூ மாலை	"மரு ஆற்றல் மழவிடையார் திருவல்லம் வணங்கித்தம் பெருமாற்குத் திருப்பதிகப் பெரும் பிணையல் அணிவித் தார்", திருத். 2906 : 3 - 4

கழுநீர்ப் பிணையல்	கழுநீர் மாலை	"கழுநீர்ப் பிணையன் முழு நெறி பிறழத் தாரு மாலையு மயங்கிக் கையற்றுத் தீராக் காதலிற் றிருமுக நோக்கி", சிலப். 2 : 34 - 36
பித்திகைப் பிணையல் மாலை	பிச்சி மாலை	"பெருமகன் காதற்பாவைப் பித்திகைப் பிணையன் மாலை ஒரு மகணோக்கி னாரை யுயிரொடும் போகொடாத திருமகளவட்குப் பாலா னருந்திரி பன்றி யெய்த", சீவக. 2177 : 1 - 3
பித்திகைப் பிணையல் சூழ்தல்	பித்திகை மாலை அணிதல்	"பித்திகைப் பிணையல் சூழ்ந்து வெண்கொடி பொலிந்த வன்றே", சீவக. 971 : 4
கழுநீர்ப் பிணையல் முழுநெறி பிறழுதல்	கழுநீர் பூவினைக் கொண்டு கட்டப் பட்ட மாலையை அணிதல்	"கழுநீர்ப் பிணையல் முழுநெறி பிறழத்", சிலப். 2 : 34
தண்செங்கழுநீர்த் தாதுவிரி பிணையல் பூணல்	மல்லிகையின் மலர்ந்த வெளிய பூவோடே குளிர்ந்த செங்கழு நீரிதழ்களையும் கால் நெருங்க கட்டுதலால் தலை மலர்ந்த பிணையலை மார்பில் அணிதல்	"வெண்பூ மல்லிகை விரியலொடு தொடர்ந்த தண் செங் கழுநீர்த் தாதுவிரி பிணையல் கொற்கை யம் பெருந்துறை முத்தொடு பூண்டு", சிலப். 14 : 78 - 79
செங்கொடுவேரிச் செழும்பூம் பிணையல் பூணல்	சிவந்த கொடுவேரி யின் செழிப்புமிக்க பூவால் தொடுத்த மாலையினை மார்பில் அணிந்திருத்தல்	"செங்கொடு வேரிச் செழும்பூம் பிணையல் அந்துகிர்க் கோவை அணியோடு பூண்டு", சிலப். 14: 91 - 93
பிணையல் மாலை பெய்தல்	மாலை அணிதல்	"மைவிரி குழலினாளை மங்கலக் கடிப்புச் சேரத்திப் பெய்தனர் பிணையல் மாலை", சீவக. 488 : 1 - 3
பிறங்கல்		
மலர்ப் பிறங்கல்	மலர்மாலை	"மடை எங்கும் மணிக்குப்பை வயல் எங்கும் கயல் வெள்ளம் புடை எங்கும் மலர்ப் பிறங்கல் புறம் எங்கும் மகப்பொலிவு", திருத். 1716 : 1 - 2
புடையல்		
இரும்பனம் புடையல்	பெரிய பனந்தோடால் ஆகிய மாலை	"ஈகையங் கழற்கா லிரும்பனம் புடையற் பூவார் காவிற் புனிற்றுப்புலா னெடுவேல்", புறம். 99 : 5 - 6
போது		
போதாடுதல்	பூமாலை அசைதல்	"காதாடு குண்டலங்கள் பாடி கசிந்தன்பால் போதாடு பூண்முலையீர் பொன்னூசலாட ாமோ", திருவாச. திருப் பொன். 6: 5 - 6
மஞ்சரி		
மஞ்சரி	மார்பில் அணியும் மாலை	"மஞ்சரி இலம்பகம் மார்பில் அணி மாலை", நிக.பி. 9 : 378
மாலை		
மாலை	மார்பு மாலை	"குரும்பை மணிப்பூண் பெருஞ்செங் கிண்கிணிப் பாலார் துவர்வாய்ப் பைம்பூண் புதல்வன் மாலை கட்டின் மார்பூர்பு இழிய", நற். 269 : 1 - 3; "அணிகொள் ஆடையும் பூண் அணி மாலை அமுது செய்(து) அமுதம் பெறு சண்டி", தேவா. சுந்தர. 45 : 2 : 1 - 2

அனிச்ச மாலை	அனிச்ச மலர்களான மாலை	"அனிச்ச மாலை, பெரும் பாரமாய்ப் பெரிதும் நைந்து", சீவக. 231 : 3 - 4
குழங்கல் மாலை	மணம் பெருந்திய மாலை	"முல்லைப் பூம்பந்துதன்னை மும்மதக் களிற்றுவேலிக் கொல்லைப்பூம் குன்றம் செய்தீர் குங்குமக் குழங்கல் மாலை மல்லுப்பூத்து அகன்ற மார்பீர் புகழ் எனும் போர்வை போர்த்து", சீவக. 743 : 1 - 3; "கோதையுங் குழலும் பொங்கக் குவிமுலைக் குழங்கல் மாலை போதுகப் பொருதுபூணும் பொருகடன் முத்து மூழ்கக்", சீவக. 1494 : 1 - 2
துழாய் மாலை	துளபமாலை	"இனி, சில தாழ்ப்பது என்னே? ஏறுதிர், இரண்டு தோளும் புனத்துழாய் மாலை மார்பீர்", கம்ப. 8924 : 3 - 4
தோட்டு வண்டொலியன் மாலை	வண்டுகள் ஒலிக்கும் மாலை	"தோட்டுவண் டொலியன் மாலைத் துடியிடை மகளிராய்ந்த மோட்டுவெண் முத்த மின்னு முகிழ்முலை யுழுது", சீவக. 2294 : 1 - 2
பூவலர் கொன்றை மாலை	கொன்றைப் பூ மாலை	"பூவலர் கொன்றைய மாலை மார்பன் போருகிர் வன்புலி கொன்ற வீரன்", திருவாச. திரு. 8 : 1 - 2
மட்டிலங்கு தார் மாலை	தேன் துளிர்க்கும் மாலை, புதிய மாலை	"மட்டிலங்கு தார் மாலை மார்பில் நீற்றர் மழபாடி யுள்ளுறைவர் மாகாளத்தர்", தேவா.திருநா. 6: 17: 10: 3 - 4
மருக்கமழ் தொடையல் மாலை	மணம் வீசும் கட்டமைந்த மாலை	"மருக்கமழ் தொடையல் மாலை மார்பினன், பரதன் நின்றான்", கம்ப. 10284 : 4
மன்றல் தங்கு மாலை	மணம் நிறைந்த மாலை	"அன்னவன் எழுந்திராமை கண்டுபோய், மன்றல் தங்கு மாலை மார்ப? வன்துயில் எழுப்பலம்", கம்ப. 7317: 1-2
முல்லை மாலை	முல்லைப் பூவால் ஆன மாலை	"தாழிவாய் மறைக்கும் தண்ணென் றடம் பெருங் குவளைக் கண்ணார் மூழிவாய் முல்லை மாலை முலைமுக முரிந்து நக்க", சீவக. 2974 : 1 - 2
வம்புந்து கொன்றையந்தார் மாலை	வாசனை எழுவிக் கின்ற கொன்றை மலர் மாலை	"எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டான் காண் ஏழ் கடலும் ஏழுலகும் ஆயினான் காண் வம்புந்து கொன்றையந்தார் மாலை யான்காண்", தேவா. திருநா. 6 : 30 : 1 : 1 - 4
வாசத்தார் மாலை	மணம் மிக்க மாலை	"தேசத்தார், என்னை என் என் சிந்திப்பார்! என்று தீயும் வாசத்தார் மாலை மார்பன் வாய் திறந்து அரற்றலுற் றான்", கம்ப. 8210 : 3 - 4; "வாசத்தார் மாலை மார்ப! வான் உறை கலுழன் வந்தான்", கம்ப. 8296 : 4
மாலை அணிதல்	மாலை மார்பில் அணிதல்	"வள்ளுவ முதுமகன் நறுவெண் சாந்தொடு மாலை அணிந்து", பெருங். 2 : 2 : 34 - 35
மாலை சூட்டுதல்	மாலை அணிதல்	"மாந்தளிர் அனைய மேனிக் குறத்தியர் மாலை சூட்டி", கம்ப. 854 : 1 - 2
தமால மாலை ஆய்ந்து தாங்குதல்	பச்சிலையால் தொடுத்த மாலையை அணிந்திருத்தல்	"கூந்தலின் புகைக் குவவு மென்முலைச் சாந்த மேந்திய தமால மாலையும் ஆய்ந்து தாங்கினார்", சீவக. 2681 : 1 - 2
குழங்கல் மாலை தாங்குதல்	மாலை அணிதல்	"கொம்பி னொத்தொ துங்கியுங் குழங்கன் மாலை தாங்கியும் அம்பினொத்த கண்ணினாரடிக்கலம் அரற்றவும்", சீவக. 2037 : 1 - 3
மாலை தாழ்தல்	மாலை அணிதல்	"கொங்கு அலர் மாலை தாழ்ந்த குங்குமம் குவவுத் தோளான்", திருத். 105 : 5 - 6
விரை செறி மாலை தாழ்தல்	மணம் கமழும் மாலை தாழ்தல்	"விரைசெறி மாலை தாழ நிலம்மிசை வீழ்ந்து தாழ்ந்து முரசு ஏறி தானையோடு மீண்டுதன் மூதூர்ப்புக் கான்", திருத். 4191 : 5 - 8

வனமாலை மார்பு புரளுதல்	பல்வகை இலைகளால் தொடுக்கப்பட்ட மாலை மார்பில் அசைதல்	"பொன்னால் இயன்ற நகை ஓடை பொங்க; வனமாலை மார்பு புரள", கம்ப. 8249 : 5 - 6
மாலையுஞ் சாந்தும் மங்கல மரபின் நூலிற்றிரியாது புனைதல்	மங்கல மரபினவாகிய வெண் சாந்தும், வெண் மலர்களும் ஒப்பனை நூல் விதியிற் பிறழாது அணிதல்	"மாலையுஞ் சாந்து மங்கல மரபின் நூலிற் றிரியாது நுண்எழில் புரியப் புதுவது புனைந்த பூங் கொடி புரையும்", பெருங். 2 : 7 : 161 - 163
மாலை பொங்குதல்	மாலை அணிதல்	"குழன்மலிந்த கோதை மாலை பொங்க வெங்க திர்ம்முலை நிழன் மலிந்த நேர்வடம் நிழற்படப் புடைத்தர", சீவக. 1952 : 1 - 2
தும்பை மாலை விலங்குதல்	தும்பை மாலையை அணிதல்	"கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே தும்பை மாலை யிளமுலை நுண்பூணாகம் விலங்கு வோளே", ஐங். 127
நறைகெழு மாலை யின் நல்லகம் வருத்தல்	தேன் நிறைந்த பூமாலை அணிந்து இருத்தல்	"நறைகெழு மாலையி னல்லகம் வருத்த", சிலப். 26 : 59

இ. அணிகலன்கள்

அக்கு

அக்கொடு பல்மணி கோத்து இடை ஏனக்கோடு துண்டப் பிறை தூங்குதல்	சங்கு மணியோடு பிற மணிகளையும் கோத்து இடையே பன்றிக் கொம்பினை யும் சேர்த்துக் கழுத்தில் தொங்க விடுதல்	"அக்கொடு பல்மணி கோத்து இடை ஏனக் கோடு துண்டப்பிறை போல்வன தூங்கிட வேங்கை வன்தோல்", திருத். 708 : 2 - 3
அக்கு வடம்	மாலை	"அக்குவடம் உடுத்து", பெரியாழ். 1: 8: 2: 2; "இக்குறியுடைக் கொடி இராமன் மனையாளோ? அக்கு வடம், முத்த மணி ஆரம் அதன் நேர்நின்று ஒக்கும் எனின், ஒக்கும்", கம்ப. 4571 : 3 - 7

ஆரம்

ஆரம்	மாலை	"ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்து", அகம்.75 : 12; "ஒண்காழ் ஆரம் கவைஇய மார்பின்", மது. 716; "பூண் ஆரம் நோக்கிப் புணர்முலை பார்த்தான் உவன்", பரி. 12 : 55; "கொடியார மார்ப குடி கெட வந்தால்", பழ. நா. 288: 3; "கண்டிகை ஆரம் கதிர்முடி மாமதிச் சண்டிகை, நால் திசை தாங்கி நின்றாளே", திருமந். 1050 : 3 - 4; "நீரில் நின்றடி போற்றி நின்மலா கொள்என ஆங்கே ஆரங் கொண்ட எம் ஆனைக்", தேவா. சுந்தர. 23 : 7 : 3-4; "குண்டிகை கொட்டம் ஏய்ப்ப அறாஅது ஒழுகும் அம்முலையாரம் பொறாஅவாயினும் புடைத்தல் ஆனார்", பெருங். 1: 43: 130 - 132; "மாயோன் மார்பின் மன்னுபு கிடந்த ஆரம்போல அணிபெறத் தோன்றி", பெருங். 2 : 14 : 3 - 4; "இன்னதோர் ஆரம் தம்மோ வென்று கொண்டேகினானே", சீவக. 906 - 4; "இறுதியில் தான் என இருந்த ஏந்தலை அறை மணித் தாரினோடு ஆரம் பார் தொட, செறிமலர்ச் சேவடி முடியின் தீண்டினான்", கம்ப. 4394 : 2 - 4; குண்டலங் களும் மவுலியும் ஆரமும் கோவை தண்டை தோள் வளை கடகம் என்று இனையன தறுகண் கண்ட கண்டங் களொடும் கணை துரந்தன", கம்ப. 7523 : 1 - 3; "குண்

		டலங்கலும் ஆரமும் கோவையும் ...... விண்தலத்தினின் மீன் என, வீழ்ந்தவால்", கம்ப. 8139.
அரும் பெறல் ஆரம்	பெறுதற்கரிய மாலை	"அரும் பெறல் ஆரமும், நல் நிதிக் குவையும், நனி நல்கி, தன்", கம்ப. 1404 : 1 - 2
இணை ஆரம்	இணைந்த மாலைகள்	"இளையான் எழுந்து தொழுவானை, அன்பின் இணை ஆர மார்பின் அணையா", கம்ப. 8267 : 1 - 2
கோத்த கடலாரம்	கோக்கப்பட்ட முத்தாரம்	"கோவா மலையாரங் கோத்த கடலாரம் தேவர் கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே", சிலப். 17 : 29 : 1 - 2
சூழ்கதிராரம்	ஒளி பொருந்திய மாலை	"பீழைதான் பொறுக்க என்னப் பிறங்கிணர் அலங்கல் மாலை சூழ்கதிராரம் வீழ்நூல் பரிந்தற நிமிர்ந்து திண் தோள்", சீவக. 1120 : 2 - 3
மிளிர் கதிர் ஆரம்	ஒளி வீசும் மாலை	"மின்னும் பூணும் மிளிர் கதிர் ஆரமும் பொன்னும் பூத்ததொர் கற்பகப் பூமரம்", சீவக. 1716 : 1 - 2
காழ் ஆரம்	வடமாகக் கோக்கப் பட்ட மாலை	"காழார மார்ப! கசடறக் கை காவாக் கீழாயோர் செய்த பிழைப்பினை மேலாயோர்", பழ. நா. 50 : 1 - 2
பரூஉக்காழாரம்	பருமுத்து வடம்	"பரூஉக்காழாரம் சுந்தரச் சுண்ணத்துக ளொடும் அளைஇச் சிந்துபு பரிந்த", சிலப். 4: 40 - 41
பைங்காழாரம்	முத்துமாலை	"குங்கும மெழுதிய கொங்கை முன்றிற் பைங்காழா ரம் பரிந்தன பரந்த தூமென் சேக்கை", சிலப். 22: 124 - 126
பொங்கு ஆரம்	நிரம்பிய முத்து மாலை	"சங்காரத்தான் கண்டை ஒலிப்ப தழல்சிந்த, பொங்கு ஆரத்தான் மார்பு எதிர் ஓடிப்புகலோடும்", கம்ப. 9834: 1 - 2
பொன்னாரம்	பொன் மாலை	"பருமப் பணையெருத்தில் பல்யானை புண்கூர்ந்து உருமெறி பாம்பின் புரளும் - செரு மொய்ம்பில் பொன்னார மார்பின் புனைகழற்கால் செம்பியன்", களவழி. 38 : 1 - 3; "ஒன்னாதார் முவெயிலும் ஓரம் பால் எய்தானே பொன்னாரம் மற்றொன்று பூண்", 11ஆம் திரு. 70 : 3 - 4
எரிபொன்னாரம்	ஒளி விளங்கும் பொன் மாலை	"இவையின் னனவும் பிறவும் எரிபொன்னார மார்பன் கவிஞர் மதியின் அகன்று காட்சிக்கினிய விழவின்", சீவக. 933 : 1 - 2
ஒளி முத்தம் பூண் ஆரம்	முத்து மாலை	"ஒளி முத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும் கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்", தேவா. சுந்தர. 71 : 11 : 3 - 5
கழு மணி ஆரம்	மணி மாலை	"கழுமணியார மார்பிற் காவலன் மக்கள் காய் பொன் எழுவளர்ந் தனைய திண்டோள் இளையவர் தம்முள் மூத்த", சீவக. 2905 : 1 - 2
தாஇல் மணி ஆரம்	குற்றமில்லாத இரத்தின மாலை	"சந்தம் இவை : தாஇல் மணி ஆரம் இவை : யாவும் சிந்துரமும் இங்கு இவை", கம்ப. 1587 : 1 - 3
திரைவளர் இப்பி ஈன்ற திருமணி ஆரம்	அலைகடலில் சங்கு ஈன்ற முத்துக்களால் ஆன மாலை	"திரைவளர் இப்பியீன்ற திருமணியார மார்பின் வரை வளர் சாந்த மார்ந்த வயிரக்குன்றனைய திண் தோள்", சீவக. 2645 : 1 - 2
தெண்மணியாரம்	தெளிந்த மணி மாலை	"மண்மிசைத் தோன்றியன்ன வகை நலம் உடைய காளை தெண்மணியார மார்பன் திருநுதல் மகளிர் நெஞ்சத்து", சீவக. 695 : 2 - 3
நிரைத்த மாமணி ஆரம்	சிறந்த மணிக்கற்கள் வரிசையாக வைத்துச் செய்யப் பெற்ற மாலை.	"உரைத்த கூனியை உவந்தனள், உயிர் உறத் தழுவி, நிரைத்த மாமணி ஆரமும் நிதியமும் நீட்டி", கம்ப. 1489 : 1 - 4

முத்த மணி ஆரம்	முத்தினால் ஆகிய மாலை	"இக்குறியுடைக் கொடி இராமன் மனையாளோ? அக்கு வடம், முத்தமணி ஆரம் அதன் நேர்நின்று ஒக்கும் எனின், ஒக்கும்", கம்ப. 4571 : 3 - 7
அவிர் மணிக் கோவை ஆரம்	ஒளிரும் நவமணி மாலை	"அரம்பையர் வெறுத்து நீத்த அவிர்மணிக்கோவை ஆரம் மரம் பயில் கடுவன் பூண மந்தி கண்டு உவக்கும் மாதோ", கம்ப. 855 : 5 - 8
மணிசெய் ஆரம்	மணி மாலை	"வானின் வழங்கும் வண்கை மணிசெய் ஆரம் மார்பின் தேனும் வழங்கும் பைந்தார் விசயை சிறுவன் தேங் கொள்", சீவக. 1412 : 1 - 2
பல்காழ் முத்தணி ஆரம்	பலவடங்களை உடைய முத்தாரம்	"புல்லலெம் புதல்வனைப் புகலகல் நின்மார்பின் பல் காழ் முத்தணியாரம் பற்றினான் பரிவானான்", கலித். 79 : 11 - 12
முத்தாரம்	முத்து மாலை	"உகந்தனள் பொன்முடி முத்தாரமாகப் பரந்த பவள மும் பட்டிடை சாத்தி மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து", திருமந். 1393 : 1 - 3; "முத்தாரம் இலங்கி மிளிர் மணிவயிரக் கோவை அவை பூணத்தந்தருளி மெய்க் கினிதா நாறும்", தேவா. சுந்தர. 71 : 1 : 5 - 6
கதிர் முத்தாரம்	ஒளி வீசுகின்ற முத்து மணி மாலை	"கதிர் முத்தாரங் கழிவன போலச்". பெருங். 1: 36: 69; "கனமணி முடியுங் கதிர் முத்தாரமும் இனமணிப் பூணும் ஏக வட்டமும்", பெருங். 2 : 5 : 138 - 139; "கார் எனும் பெயர்க் கரியவன் மார்பினில் கதிர்முத்து ஆரம் என்னவும் பொலிந்தன", கம்ப. 4188 : 1 - 3
நன் முத்தாரம்	முத்தாரம்	"நலப் பெருங் களிகையு நன் முத்தாரமும் பன்மணிப் பூணுஞ் சின்மணித் தாலியும்", பெருங்.2 : 19 : 118 - 119
முத்தின் ஆரம்	முத்துக்கள் கோக்கப் பெற்ற ஆரம்	"சித்திரப் பத்தியின் தேவர் சென்றனர்............. முத்தின் ஆரங் களும் முடியும் மாலையும் உத்திரீயங்களும் சரிய ஓடு வார்", கம்ப. 4885
மணிமுத்து ஆரம்	முத்து மாலை	"மலையத்தாரமும் மணிமுத்தாரமும் அலர்முலை யாகத் தடையாது வருந்தத்", சிலப். 4 : 62 - 63
எரிமணிப் பரு முத்தாரம்	ஒளிவிடும் முத்து மாலை	"இட்ட உத்தரிய மின்னும் எரிமணிப் பருமுத்தாரம் மட்டவிழ் கோதை வெய்ய வருமுலை தாங்கலாற்றா", சீவக. 835 : 1 - 2
வாளொளி ஆரம்	ஒளிவிடும் மாலை	"வரை விழித்து இமைப்ப தொக்கும் வாளொளி ஆர மார்பின் விரைவழித்து இளையரெல்லாம் விழுமணிக் கலன்கள் தாங்கி", சீவக. 699 : 1 - 2
ஆரமார்பு	முத்து மாலை அணிந்த மார்பு	"நாரரி நறவினார மார்பிற்", பதிற். 11 : 15; "ஆரமார் பனும் பேர்வன னெழுந்து", பெருங். 1 : 36 : 355; "ஆர மார்ப னருமறைப் பள்ளியுள் உற்றதுகூறுங் கொற்ற வாயிலன்", பெருங். 1 : 47 : 21 - 22; "ஆரமார்ப நின் னருள் வகை யாங்கொல்", பெருங். 1 : 47 : 68; "ஆரமார்ப வ.'.தியா வரு மறிவர்", பெருங். 1 : 47 : 134
பசும்பொன் ஆரத்தின் மால்நிற மணிகள் இடை உறப்பிறழ்தல்	பசும்பொன்னாற் செய்யப் செய்யப் பெற்ற ஆரத் திலே உள்ள பெருமை மிக்க நிறத்த இரத்தினங்கள் இடை யிடையே நன்றாக ஒளியை வீசுதல்	"பால்நிறப் பட்டின் மாலை உத்தரியம் பண்புற, பசும் பொன் ஆரத்தின் மால் நிற மணிகள் இடை உறப் பிறழ்ந்து வளர்கதிர் இளவெயில் பொருவ", கம்ப. 5150 : 3 - 6
முத்து ஒளிர் ஆரத்து அணி கொள்ளுதல்	முத்து விளங்கும் ஆரங்களால் அழகு பெறுதல்	"அம் சுவணத்தின் உத்தரியத்தாள் அலையாளும் அம்சுவள் நத்தின் முத்து ஒளிர் ஆரத்து அணி கொண்டாள்", கம்ப. 4913 : 3 - 4

ஆரமொடு அணி கொள்ளுதல்	முத்தாரத்தை அணிந்து கொள்ளுதல்	"செய்யவள் அணி அகலத்து ஆரமொடு அணி கொள்பு தொய்யகந் தாழ்ந்த கதுப்பு போல்", கலித். 28 : 5 - 6
ஒருகாழ் ஆரம் ஒளி பெற அணிதல்	ஒற்றை வடமாகிய முத்து மாலையைப் புத்தொளி பெறும்படி அணிதல்	"மேற்பாற் பிறையென விளங்க வமைந்த தொருகா ழார மொளிபெற வணிந்து", பெருங். 3 : 22 : 220 - 221
பொன் ஆரம் அணிதல்	பொன்னால் ஆன மாலையை அணிதல்	"அந்நாளில் மதுரை நகர் மருங்கு அரனார் அமர்பதிகள் பொன் ஆரம் அணி மார்பில் புரவலர் மூவரும் போத", திருத். 3849 : 1 - 2; "பொன் ஆரம் அணி மார்பின் புரவலனார் பொலிகின்றார்", திருத். 4075 : 7 - 8
தன்கடற் பிறந்த முத்தின் ஆரம் எழில் பெற அணிதல்	மார்பில் தென்கடலில் தோன்றிய முத்தின் ஆரத்தை அழகுற அணிந்திருத்தல்	"தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும் முனைதிறை கொடுக்குந் துப்பின் தன் மலைத் தெறலரும் மரபின் கடவுட் பேணிக் குறவர் தந்த சந்தின் ஆரமும் இரு பேராரமும் எழில்பெற அணியும் திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்", அகம். 13 : 1 - 6
ஆரம் இமைத்தல்	முத்து மாலை ஒளி விடுதல்	"அரும்பொற்பூணு மாரமு மிமைப்பக் கணிகளகன் கோயில் ஒருங்கு கூடிச் சாதகஞ் செய் தோகையர சர்க் குடன் போக்கிக்", சீவக. 308 : 1 - 2
மணியியல் ஆரங் கதிர் விரித்து ஒளிர் தரல்	மணியோடு கூடிய மாலை ஒளி வீசுதல்	"அணியியல் கமுகை அலங்கரித்தது போல் மணி யியல் ஆரங் கதிர்விரித்து ஒளிர்தர மணிவளை தாங்கிய அணி கெழு மென்தோள்", 11ஆம் திரு. 896 : 51 - 52
கோடணிந்த முத் தாரம் ஓங்குதல்	அணிந்திருந்த முத்தாரம் அசைதல்	"கோடணிந்த முத்தார மொல்க", பரி. 21 : 61
ஆரம் கவவுதல்	கழுவி விளக்கம் பெற்ற முத்தாரத்தை அணிந்திருத்தல்	"கழூஉ விளங் காரங் கவைஇய மார்பே", புறம். 19: 18
ஒண்காழ் ஆரம் கவவுதல்	ஒளிவிடும் ஒள்ளிய வடமாகிய முத்து மாலையை அணிந்திருத்தல்	"திண்காழார நீவிக் கதிர்விடு மொண்கா ழாராங் கவைஇய மார்பின்", மது. 715 : 7 - 8
மார்பினில் இடை விளங்கிய தகை யின் ஆரம் சுடர் விடுதல்	மார்பின் இடையே விளங்குகிற அழகிய (பலவகை மணிகள் பதித்த) மாலை யானது ஒளிர்தல்	"தேனுடைய மலர்மகள் திளைக்கும் மார்பினில்தான் இடை விளங்கிய தகையின் ஆரம்தான் மீனொடு சுடர்விட விளங்கும் மேகத்து", கம்ப. 1217 : 1 - 3
ஆரம் சூடுதல்	முத்து மாலை அணிதல்	"சோருங் காரிகை யாள்சுர மஞ்சரி ஆரஞ்சூடிய அம் முலைப் பூந்தடந்தாரும் மார்பமுந்", சீவக. 2005 : 1 - 2
ஆரம் தாங்குதல்	ஆரம் அணிந்து இருத்தல்	"ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப் பின் அமை நெடு வீழ் தாழ", நெடு. 136 - 137; "விரவிப் பூந்தாமம் நாற்றி விரை தெளித்து ஆரம் தாங்கி அரவு உயர் கொடியினான் தன் அகன்படை அனுங்க வென்ற", சீவக 456 : 2 - 3; "பிணையலும் நறிய சேர்த்திப் பெருவிலை யாரம் தாங்கித் துணைவனுக்குற்ற துன்பம் சொல் லிய தொடங்கினாளே", சீவக. 1146 : 3 - 4
வலம்புரி ஆரம் தாங்குதல்	வலம்புரிச் சங்கு ஈன்ற முத்து மாலை அணிதல்	"தென்வரைப் பொதியில் தந்த சந்தனத் தேய்வை தேங் கொள் மன்வரை யகலத் தப்பி வலம்புரி ஆரம் தாங்கி", சீவக. 697 : 1 - 2
ஆரம் தாழ்தல்	ஆரத்தை அணிந்து இருத்தல்	"ஆரம் தாழ்ந்த வணிகிளர் மார்பிற்றாடோய் தடக் கைத் தகைமாண் வழுதி", புறம். 59 : 1 - 2; "ஆரம் தாழ் திருமார்பற்கு அமைந்தது ஓர் தாரம்தான் அலனேனும்", கம்ப. 5374 : 1 - 2

துருவு மாமணி ஆரம் துயல்வரல்	தேடி எடுத்துப்பதித்த சிறந்த (இரத்தின) மணிமாலைகள் மார்பில் அசைந்து ஒளி வீசுதல்	"திருவின் நாயகன், மின் திரிந்தாலெனத் துருவு மாமணி ஆரம் துயல்வர பருவ மேகம் படிந்தது போல் படிந்து", கம்ப. 1105 : 1 - 3
அருவி போல் வதோர் ஆரமும் மார்பிடைத் துயலுதல்	அருவி போன்ற முத்துச்சரம் மார்பிலே அசைதல்	"திருவின் மால்வரைக் குலவிய தனையதோர் தேந்தார் அருவி போல்வதோர் ஆரமும் மார்பிடைத் துயல எரியும் வார் குழை யிமையவன் ஒருவன்வந் திழிந்தான்", சீவக. 2363 : 2 - 4
ஆரம் புரளுதல்	மார்பில் அணிந்த முத்தாரம் புரளுதல்	"அருவரை யகலத் தாரம் புரளத்", பெருங். 1: 47: 107
ஆரம் பூணுதல்	அழகு கிளரும் ஆரத்தை அணிதல்	"நலங்கிள ரார மார்பிற் பூண்டு பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய செங்க ணெடியோனின்ற வண்ணமும்", சிலப். 11 : 49 - 51; "கோவா மலையாரங் கோத்த கடலாரம் தேவர்கோன் பூணாரந் தென்னர்கோ மார்பினவே", சிலப். 17 : 29 : 1 - 2; "நீண்டதோள் நெடிய செங்கண் நீலமாய்ச் சுரிந்த குஞ்சி பூண்டதோரார மேனிப் பொன்னுரைத்திட்ட.... தொக்கும்", சீவக. 1722: 1 - 2
பணி பெரிய ஆரம் பூணுதல்	சிறப்பான முறையில் நல்ல வேலைப்பாடு கள் கொண்டிட்ட வீரச் சங்கிலியை மார்பில் ஒளி பெற அணிதல்	"அணிவயிரக் கண்டிகை பொன்னாண் - பணி பெரிய ஆரம் அவை பூண்டு அணி திகழும் சன்ன வீரம் திருமார்பில் வில்லிலக", 11ஆம் திரு. 300 : 18 - 19
விளங்காரம் பூணுதல்	விளங்குகின்ற மார்பணியை அணிதல்	"திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச் செங்கணா யிரத்தோன் திறல் விளங்காரம் பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி", சிலப். 11 : 23 - 25
ஆரம் பொலிதல்	ஆரம் பொலிதல்	"அருவிதாழ்ந்த பெருவரை போல ஆரமொடு பொலிந்த மார்பிற் றண்டாக் கடவுள் சான்ற கற்பிற் சேயிழை", புறம். 198 : 1 - 3
கேழாரம் பொற்ப வருதல்	நிறத்தையுடைய முத்தாரம் அழகு பெற வருதல்	"காழாரத் தம்புகை சுற்றிய தார்மார்பிற் கேழாரம் பொற்ப வருவானைத் தொழாஅ", பரி. 9 : 28 - 29
நற்கழுத்தை நல்லாரத்தால் மறைத்தல்	கீர்த்தி மிகுந்த நல் கழுத்தை உயர்ந்த முத்தாரங்கள் கொண்டு மறைத்தல்	"வாய்ந்த சீர் நற்கழுத்தை நல்லாரத்தால் மறைத்துக் காதுக்கு விற்பகரும் குண்டலங்கள் மேவுவித்து", 11ஆம். திரு. 300 : 159 - 160
ஆரம் மிளிர்தல்	மாலை மின்னுதல்	"குண்டலம் இலங்க வாங்கிக் குனிசிலை உறையின் நீக்கிக் கொண்டவன் கொழும் பொற்றாரும் ஆரமும் மிளிர ஏறிக்கண்டு கோல் நிறைய வாங்கிக்", சீவக. 2192: 1 - 3
ஆரம் மின்னுதல்	ஆரம் ஒளிவிடுதல்	"அங்கதிர் ஆரமின்ன அரிவை கூத்தாடுகின்றாள்", சீவக. 677 - 4; "ஆரமின்னும் பணை வெம்முலை யாடமைத் தோளினாள் வீரனுற்ற துயர் மின்னென நீக்கிய மெல்லவே", சீவக. 1148: 1- 2; "வீறு ஆக்கிய பொற்கலன் வில்லிட, ஆரம் மின்ன மாறாத் தனிச் சொல் துளிமாரி வழங்கி வந்தான்", கம்ப. 1726 : 1 - 4
காழ்விரி கவை ஆரம் மீவரல்	முத்து வடங்கள் அசைதல்	"காழ்விரி கவையார மீவரும் இளமுலை போழ்நிடைப் படாஅமல் முயங்கியுமமையாரென் தாழ் கதுப்பு அணிகுவர்", கலித். 4 : 9 - 10
ஆரம் வில்லிடுதல்	மாலை ஒளி விடுதல்	"மற்ப கம்மலர்ந் தகன்ற மார்பின் மேல் விற்பகக் குலாம் ஆரம் வில்லிடக்", சீவக. 2424 : 1 - 2

தண்ணாரம் வில் விலங்கல்	தண்ணிய முத்து மாலைகள் ஒளி வீசுதல்	''தாழ்ந்துலவி மென்முலைமேல் தண்ணாரம் வில்விலங்கப் போழ்ந்தகன்ற கண்ணினால் ஏப் பெற்றுப் போகலாய்'', சீவக. 2959 : 1 - 2
முத்தாரம் விலங்கி வீழ்தல்	முத்துவடம் அணிந்து இருத்தல்	"இலங்கு நீண்முடி யிந்திரன் மார்பின் மேல் விலங்கி வீழ்ந்த முத்தாரமும் போன்றவை", சீவக. 35: 1 - 2
அங்கழுத்தகவயின் ஆரமொடு அணிதல்	கழுத்தில் முத்தாரத் தைப் பிற அணி களுடன் அணிதல்	"சங்கிலி நுண்தொடர் பூண்ஞாண் புனைவினை அங்கழுத் தகவயினாரமோ டணிந்து", சிலப். 6 : 99 - 100

எழுமுடி கெழீஇய திரு

எழுமுடி கெழீஇய திரு	ஏழு அரசர்களை வென்று அவர்களது பொன் முடிகளால் செய்த ஆரத்தை மார்பில் அணிந்து இருத்தல்	"எழுமுடி கெழீஇய திருஞெமரகலத்து நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை", பதிற். 14 : 11

இதய வாசனை

இதய வாசனை	மார்பு அணிகலன்	"பொங்கழற் போர்வை போர்த்ததோ எனவும் இலைப் பெரும் பூணும் இதய வாசனையும்", பெருங். 2 : 19 : 116 - 117

இழை

இழை	மார்பணி	"இழைத் தடமார்பத்து அண்ணல் எய்ய, போய் வையம் சேர்வான் அழைத்தது அவ்வோசை; உன்னை மயக்கியது அரக்கன் சொல்லால்", கம்ப. 5301 : 3 - 4
இழையணிதல்	மார்பில் அணிகலன் அணிதல்	"விழவணி மகளிர்தம் விரைகமழிளமுலை இழையணி யொளியிள வெயில் செயவிடுபுகை மழையென மறை யின பொலிவின தொருபால்", சீவக. 118 : 2 - 4
இழைக் கமர்தல்	அணிகலன் அணிந்து இருத்தல்	"நின்றக்கால் நீடி ஒளிவிடா - நின்ற இழைக்கமர்ந்த ஏஏர் இளமுலையாள் ஈடில் குழைக்கமர்ந்த நோக்கின் குறிப்பு", திணை. நூற். 68 : 2 - 4
இழையார்தல்	அணிகலன் பொருந்தி இருத்தல்	"இழையார் வனமுலை வீக்கி இடையிறுகின்றது இற்றால் பிழையாள் நமக்கிவை கட்டுண்க", 11ஆம். திரு. 227 : 1 - 3
முலைகொள் பேரணி முற்றிழை சிந்துதல்	மார்பில் கிடந்த பொன்னணிகளை எல்லாம் எறிதல்	"மலைகொள் சந்தனம் வாய்மெழுக் கிட்டதன் முலை கொள் பேரணி முற்றிழை சிந்தினாள்'', சீவக. 1371 : 3 - 4
பொற்கொடி இழை யொடு நற்குடன் தாழ்தல்	மார்பில் பொன்னால் இயற்றிய நீண்ட அணிகலனை நன்கு தாழ அணிதல்	"இலைப்பூண் கவைஇ முலைப்புறம் புதைஇப் பொற் கொடி இழையொடு நற்குடன்தாழ", பெருங். 2 : 4 : 119 - 120
சேயிழை தெளிர்ப்ப	சிவந்த அணிகள் ஒலித்தல்	''ஏந்து முலை முற்றம் வீங்கப் பல்லூழ் சேயிழை தெளிர்ப்பக்கவைஇ நாளும் மனைமுதல் வினையொடும் உவப்ப", அகம். 51 : 11 - 13
இழைவளர்தல்	அணிகள் அணிந்து இருத்தல்	"இழைவளர் முலையார் சாயல் போற்றோகை இறை கொள் பூங் குறிஞ்சியும் இறந்தார்", சீவக. 2105 : 7 - 8

ஏகவட்டம்

ஏகவட்டம்	மார்பு அணிகலன்	"இனமணிப் பூணும் ஏக வட்டமும்'', பெருங். 2: 5 : 138 - 139

ஏகவல்லி

ஏகவல்லி அணிதல்	ஏகவல்லி என்னும் ஒற்றை வடத்தை அணிந்து கொள்ளுதல்	''சிப்பப் பூணுஞ் செம்பொற் கடிப்பும் ஏகவல்லியு மேற்பன வணிந்து", பெருங். 3 : 9 : 66 - 67

ஏகவல்லி இடை முலைக் கிடத்தல்	ஏகவல்லி என்னும் ஒற்றை வடம் முலையிடையே கிடைத்தல்	"படைமலர்த் தடங்கண் பனி சுமந்து வீழ இடை முலைக் கிடந்த ஏகவல்லி", பெருங். 1 : 46 : 210 - 211
ஏகவல்லி பிறழுதல்	ஏகவல்லி என்னும் அணி அசைதல்	"வெம்மைப் பொதிந்த பொம்மென் இளமுலை இடைப் படீ இப்பிறழும் ஏகவல்லி", பெருங். 2 : 7 : 21 - 22
ஏகவாரம்		
ஏகவாரம் இலங்குதல்	ஒற்றை முத்துவடம் திகழுதல்	"மாசில் வனப்பினன் மறுமதித் தேய்வென ஏகவார மிலங்கு கழுத்தினன்", பெருங். 5 : 2 : 25 - 26
ஐம்படை		
ஐம்படை	குழந்தைகளுக்குரிய அணி (ஐம்படை என்பது காத்தற் கடவுளான திருமாலின் சங்கு, சக்கரம், கதை, வாள், வில் என்னும் ஐந்து படைகளின் வடிவாகிய அணி- கழக உரை)	"செவ்வாய்க் குதலை மெய் பெறா மழலை சிந்துபு சின்னீர் ஐம்படை நனைப்ப", மணி. 3: 137-138; "மருவு திருக்கண்ட நாண் மார்பினில் ஐம்படை", திருத். 3685 : 2
ஐம்படை சதங்கை சாத்துதல்	ஐம்படைத்தாலி, பஞ்சாயுதம் திருமாலின் சங்கம், சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்னும் ஐந்து ஆயுதங்களின் வடிவாய்ச் செய்து ஐந்தாம் நாளில் குழந்தை அணியும் ஓர் ஆபரணம்: இஃது அச்சம் முதலிய வற்றைத் தடுக்கும் என்பது நம்பிக்கை (திரு.வி.க. உரை)	"ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்தி செம்பொன் நாண் அரையில் மின்ன", திருத். 150 : 5 - 7
ஐம்படைத் தாலி	திருமாலின் பஞ்சாயுத வடிவமுடைய அணிகலன்	"அமளிதுஞ்சு மைம்படைத் தாலிக் குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக் காவற் பெண்டிற் கடிப்பகை யெறிந்து", மணி. 7 : 56 - 58
ஐம்படைத் தாலி மார்பு தழுவுதல்	ஐம்படைத்தாலி மார்பில் அணிதல்	"தாலி ஐம்படை தழுவு மார்பிடை மாலை வாய் அமுது ஒழுகு மக்களை", கம்ப. 89 : 1 - 2
ஐம்படையின் பூட்டு மார்பு ஆர்தல்	ஐம்படைப் பூண் மார்பில் அணிதல்	"நாட்டார் அறிய முன் நாளில் நல்நாள் உலந்த ஐம் படையின் பூட்டு ஆர் மார்பின் சிறிய மாரைப் புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்", திருத். 1903: 1-4
கடிகை		
கடிகை மின்னுதல்	ஆரம் மின்னுதல்	"கடிகை யாரம் கழுத்தின் மின்ன", பெருங். 1: 38: 123; "கடிகை வாளாரம் மின்னக்... தொடிகவின் அறாத மென்தோள் தேவியர்", சீவக. 2808: 1 - 2
கண்டி		
கண்டி கழுத்தில் சேர்த்தல்	கண்டியென்னும் அணிகலத்தைக் கழுத்தில் அழகு பெற அணிதல்	"வண்டு வளாய வளர்வா சிகைக் கட்டிக் கண்டி கழுத்திற் கவின் சேர்த்திக்", 11ஆம் திரு. 300 : 104

கண்டிகை

கண்டிகை	கழுத்தணி வகையில் ஒன்று	"நேர்மணி நேர்முக்காழ்ப் பல்பல கண்டிகைத்", கலித். 96 : 14; "பூதியணிவது சாதன மாதியிற் காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை ஒதியவர்க்கும் உருத்திர சாதனம்", திருமந். 1662 : 1 - 3; "கண்டிகை ஆரம் கதிர்முடி.... தாங்கி நின்றாளே", திருமந். 1050
அணிவயிரக் கண்டிகை	அழகிய வயிரக் கண்டிகை	"அணிவயிரக் கண்டிகை பொன்னாண் - பணிபெரிய ஆரம் அவைபூண்டு அணி திகழும் சன்ன வீரம் திரு மார்பில் வில்லிலக", 11ஆம் திரு. 300 : 18 - 19
காமர் கண்டிகை	கழுத்து வடத்தின்பின் தாலிக்கு இரண்டு பக்கமும் பகுத்துப் போந்து வாகுவலயத் தோடு தொடக்கிக் கிடப்பதோர் ஆபரணம்	"காமர் கண்டிகை தன்னொடு பின்னிய தூமணித் தோள் வளை தோளுக் கணிந்து", சிலப். 6 : 89 - 90
முத்து வடக் கண்டிகை	முத்தால் அமைந்த அணி	"முத்து வடக் கண்டிகையும்", தேவா. திருநா. 4: 1(3): 3: 3
திருக்கழுத்து ஆரம் தெய்வக் கண்டிகை மாலை சேர்தல்	கழுத்தில் ஆரமும் கண்டிகையையும் அணிதல்	"திருக்கழுத்து ஆரம் தெய்வக் கண்டிகை மாலை சேரப்", திருத். 3117 : 1 - 2
கண்டிகை பூணுதல்	மாலை அணிதல்	"சந்தமென் மலர்த்தாது அணி நீறு மெய் தரித்துக் கந்தம் மேவுவண்டு ஒழுங்கு எனும் கண்டிகை பூண்டு சிந்தை தூய அன்பர்களுடன் திருமணம் போத மந்த சாரியின் மணம் கொணர்ந்து எழுந்தது மருத்து", திருத். 3097

கலம்

பூங்கொடி பொற்கலம்	பூங்கொடி வடிவிற் செய்யப்பட்ட பொன் அணிகலன்	"வீங்குபு செறிந்த வெங்கண் வனமுலை பூங்கொடிப் பொற்கலம் போழ்ந்து வடுப்பொறிப்ப", பெருங். 2 : 19: 110 - 111
கலம் கலந்து இலங்குதல்	அணிகலன்கள் அணிந்து விளங்குதல்	"கலம் கலந்து இலங்கு மார்பின் கந்துகன் மகன் என", சீவக. 689 : 2
பொலங்கலம் சுமத்தல்	பொற்கலன்களை அணிந்திருத்தல்	"பொலங்கலஞ் சுமந்த பூண்தாங் கிளமுலை", அகம். 16 : 9
பொறி மாண்கலம் சேர்த்தல்	நல்ல அணிகலன் அணிதல்	"பூங்கச்சு நீக்கிப் பொறிமாண்கல நல்ல சேர்த்தி", சீவக. 16 : 2

களிகை

களிகை	ஒரு பேரணி கலன்	"நலப் பெருங் களிகையும் நன்முத்தாரமும்", பெருங். 2 : 19 : 118
கண்ணார் களிகை	கண்ணிறைந்த களிகை என்னும் அணி	"மடந்தை மகளிர் குடைந்தாடரவமும் கலங்கவின் பெற்ற கண்ணார் களிகை நலங்கவின் கொண்ட நனி நாகரிகத் தம்மென் சாய லரிவை மகளிர்", பெருங். 1: 41: 81 - 84
திருக்கேழ்க் களிகை செவ் வனஞ் சேர்த்தல்	அழகிய நிறமுடைய கழுத்தணியைச் செவ்வையாகப் பூட்டுதல்	"விளங்க வமைந்த தொருகாழார மொளி பெற வணிந்து திருக்கேழ்க் களிகை செவ்வனஞ் சேர்த்திப் பைம்பொற் றிலக மொடு பட்ட மணிந்த", பெருங். 3: 22 : 220 - 223

காசு

காசு	மார்பணி; பொற்காசு	"வேப்ப ஒண்பழம் புது நாண் நுழைப்பான் நுதிமாண் வள் உகிர்ப் பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்", குறுந். 67: 1-2; "மணிகள் எத்துணை பெரியவும், மால்திருமார்பின்

		அணியும் காசினுக்கு ஆன்றன உள", கம்ப. 4842: 1-2; "மாலையும், சாந்தும் கலவையும் பூணும் வயங்கு நுண் தூசொடு, காசும், சோலையின் தொழு திக் கற்பகத் தருவும் நிதிகளும், கொண்டு பின் தொடர", கம்ப. 5161: 1 - 4
மும்மணிக் காசு	மூன்றுவகை மணிகள் பதித்த பொற்காசா லாகிய அணிகலன்	"பழவிறன் மூதூர் விழவணி நோக்கி மும்மணிக் காசும் பன்மணித் தாலியும் பொன்மணிக் கொடியும் பூணுஞ் சுடர மதன மஞ்சிகை நின்றோட் கண்டு", பெருங். 5 : 9 : 48 - 51
காழ்		
காழ்	முத்து மாலை	"மார்பிற் பூண்ட வயங்கு காழ் ஆரம்", புறம். 150 : 20; "பல்காழ் முத்து அணி ஆரம் பற்றினன் பரிவானால்", கலித். 79 : 125; "தோடமை கொளுவத் தூடுற வளைஇத் தாழ்காழ் நகையொடு தாமந்துயல் வரும்", பெருங். 1 : 47 : 203 - 204
ஒரு காழ் முத்தம்	முத்து மாலை	"ஒரு காழ் முத்தமொடு உற்றதை எவன் கொல்" சிலப். 2 : 70; "ஒரு காழ் முத்த முந்திருமுலை தடமும் மின்னிடை வருத்த நன்னுத றோன்றிச்", சிலப். 8 : 95 - 96
கயிலணி காழ்	கொக்கு வாய் அழகு செய்த வடம்	"கட்டிய கயிலணி காழ் கொள்வோரும்", பரி. 12 : 18
காழார்தல்	முத்து வடம் அணிதல்	"பந்துகைக் கொண்டு மைந்தன் போகிக் காழார் வன முலைக் கணிகையர் சேரித்", பெருங். 5 : 8 : 117 - 118
ஒரு காழ் முத்து மணி ஆரத்துடன் கிடந்திமைத்தல்	ஒற்றை முத்துவடம் மணியாரத்தோ்டே கிடந்து ஒளிர்தல்	"மலர்ந்தேந் தகலத் திலங்கு மணி ஆரத்துடன் கிடந்திமைக்கும் ஒருகாழ் முத்தினர்", பெருங். 2: 6 : 125 - 126
காழ் இயலுதல்	மார்பில் முத்துவடம் அசைதல்	"மாழை நோக்கிற் காழியல் வனமுலை", அகம். 116 : 8
ஒரு காழ் முத்த மொடுறுதல்	தனி முத்துவடம் பூட்டுதல்	"திருமுலைத் தடத்திடைத் தொய்யிலன்றியும் ஒரு காழ் முத்தமொடுற்றதை யெவன்கொல்", சிலப். 2 : 69 - 70
கட்டிய கயிலணி காழ் கொள்ளுதல்	கட்டிய கொக்குவாய் அழகு செய்த வடங் களைப் பூணுதல்	"கட்டிய கயிலணி காழ் கொள்வோரும்", பரி. 12: 18
முத்து ஒரு காழ் தாழ்தல்	ஒற்றை வடமாகிய முத்து மாலை தொங்குதல்	"தணி முத்தொரு காழ் தாழ்ந்த வாகத்", பெருங். 1 : 33 : 117
ஒண்முத்தொரு காழ் அணிபெறப் பூட்டுதல்	ஒளி முத்துக்களால் கோவையாகச் செய் யப்பட்ட ஒற்றை வடத்தை அழகு பெறப் பூட்டுதல்	"கடைந்து செறித்தன்ன கழுத்து முதற் கொளீஇ உடைந்துவே யுகுத்த வொண்முத்தொரு காழ் அடைந்து வில் லிமைப்ப வணிபெறப் பூட்டிக்", பெருங். 4 : 16 : 30 - 32
ஒரு காழ் மாலை மலைதல்	ஒற்றை வட மாலை அணிதல்	"மணிமருண் மாலை சூட்டி யவன்றலை ஒருகாழ் மாலை தான் மலைந்தனனே", புறம். 291 : 7 - 8
ஒரு காழ் முத்தம் இடைமுலை விளங்கல்	ஒற்றை முத்துவடம் மார்பில் ஒளி வீசுதல்	"வெருகிருள் நோக்கி அன்ன கதிர்விடு ஒருகாழ் முத்தம் இடைமுலை விளங்க", அகம். 73 : 3 - 4
காறு		
காறார்தல்	காறு என்னும் அணி அணிதல்	"தேறேன் உன்னையல்லால் சிவனேயென் செழுஞ்சுடரே காறார் வெண்மருப்பா கடவூர்த்திரு வீரட்டத்துள்", தேவா. சுந்தர. 41 : 8 : 2 - 3

கொடி		
பொன்மணிக் கொடி	பொற்சரடு	"மும்மணிக் காசும் பன்மணித் தாலியும் **பொன்மணிக் கொடியும்** பூணுஞ் சுடர மதன மஞ்சிகை நின்றோட் கண்டு", பெருங். 5 : 9 : 49 - 51
கோதை		
பொடி அழல் புறந் தந்த பூவாப் பூம் பொலன் கோதை	நெருப்பிலேயிட்டுச் செய்த பூவாத பூக் களைக் கொண்ட பொன் மாலை	"**பொடி அழல் புறம் தந்த பூவாப் பூம்பொலன் கோதை** தொடி செறி யாப்பு அமை அரிமுன்கை அணைத் தோளாய்", கலித். 54 ; 1 - 3
பொலஞ் செய் கோதை	பொன் மாலை	"பொன்னிலங்கு பூங்கொடி **பொலஞ்செய் கோதை** வில்லிட", சிலப். 29 : 20 : 1 - 2
செம்பொன் கோதை மின்னுதல்	செம்மையான பொன் மாலை மின்னுதல்	"கோல்தொடி மகளிர் **செம்பொன் கோதை**யும் குழையும் **மின்ன**", சீவக. 702 : 3
கோவை		
கோவை	வடம்	"பசுங்காழ்க் **கோவை**", அகம். 385: 12; "தொழலும் தொல்வினை தீர்க்கின்ற சோதி சோற்றுத் துறை சுழலும் **கோவை** யுடையவன் காதலிக்கும் இடம் பழனம் பாம்பணி பாம்புரந் தஞ்சைதஞ் சாக்கையே", தேவா. சுந்தர. 14 : (2) 9 : 2 - 4; "குண்டலங்களும், மவுலியும், ஆரமும், **கோவை**, தண்டை, தோள்வளை, கடகம் என்று இனையன தறுகண் கண்ட கண்டங் களொடும் கணைதுரந்தன", கம்ப. 7523 : 1 - 3; "குண் டலங்களும் ஆரமும் **கோவை**யும் ...... சண்டமாருதம் வீச", கம்ப. 8139 : 1 - 3
கயிற்கடை யொழுகிய கோவை	கழுத்தாபரணிங்களிற் கொக்கி வாய் முத்தாரமாகச் செய்து அதிலே நவரத்தினங்களைக் கோத்து முதுகு மறைய விடும் பின் தாலி (அரும்பதம்)	"**கயிற்கடை யொழுகிய** காமர் தூமணிசெயத்தகு **கோவை** யிற் சிறுபுற மறைத்தாங்", சிலப். 6 : 101 - 102
தாரகைக் கோவை	தாரகை போலுங் கோவை என்றது ஏகாவலிவடம் (அரும்) வான்மீனொழுங்கு போன்ற முத்துவடம் (அடி.ந.)	"தென்னவன் குலமுதற் செல்வன் தோன்றித் **தார கைக் கோவை**யுஞ் சந்தின் குழம்பும் சீரிள வன முலை சேரா தொழியவும்", சிலப். 13 : 18 - 20
பொன் நாண் கோத்த நன்மணிக் கோவை	பொன்னாலாகிய கயிற்றிற் கோத்த நல்ல மணிக்கோவை	"**பொன்னாண் கோத்த நன்மணிக் கோவை** ஐயவி யப்பிய நெய்யணி முச்சி", மணி. 3 : 133 - 134
இலங்கி மிளிர் மணி வயிரக் கோவை	மிக்க ஒளி கொண்ட வயிர மணி மாலை	"முத்தாரம் **இலங்கி மிளிர் மணி வயிரக்கோவை** அவை பூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்", தேவா. சுந்தர. 71 : 1 : 5 - 6
சன்ன வீரத்த வெண்தரளக் கோவை	சன்னவீரம் என்னும் உறுப்பைப் பெற்ற வெண்மையான முத்தால் அமைந்த வீரச் சங்கிலி	"**சன்ன வீரத்த கோவை வெண்தரளம்** ஊழியின் இறுதியில் தனித்த பொன் நெடு வரையில் தொத்திய கோளும்", கம்ப. 5153 : 1 - 3
கோவை நித்திலம்	முத்து மாலை	"ஏவல் எம்பெருமான் சொன்ன வாறென்றாள் **கோவை நித்தில** மென்முலைக் கொம்பனாள்", சீவக. 891 : 3 - 4

கோவையின் பெரு முத்துவடம்	முத்துக்கள் கோக் கப்பட்ட மூன்று பெரிய வடங்கள்	"கோவையின் பெருவட முத்தம் கோத்தன காவல் செய் தடக்கையின் நடுவண் காந்துவ", கம்ப. 1215: 1 - 2
கோவை முத்து	முத்து வடம்	"தங்கு செஞ் சாந்து அகில் கலவை சார்கில, குங்குமம், கொட்டில, கோவைமுத்து இல பொங்கு இளங் கொங்கைகள்", கம்ப. 2280 : 1 - 3
அந்துகிர்க் கோவை அணி யொடு பூணுதல்	அழகிய பவளக் கோவையைப் பூணுதல்	"சிந்துரச் சுண்ணஞ் சேர்ந்த மேனியில் அந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு", சிலப். 14 : 92 - 93
கோவை மின்னுதல்	முத்துக்களாலும் மணி களாலும் அமைந்த மாலைகள் ஒளி வீசுதல்	"கோவையும் குழையும் மின்ன கொண்டலின் முரசம் ஆர்ப்ப", கம்ப. 4954 : 1 - 2
வில்பொலி தரளக் கோவை விளங்குதல்	ஒளி பொலியும் முத்துக் கோவை ஒளி வீசுதல்	"வில்பொலி தரளக் கோவை விளங்கிய கழுத்து மீது பொற்பு அமைவதனம் ஆகும் பதுமநன் நிதியம் பூத்த", திருத். 3004 : 1 - 2
சங்கிலி		
சங்கிலி	வீரச் சங்கிலி, கழுத் தணிகளுள் ஒன்று	"சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனை வினை அங் கழுத்தகவயி னாரமோ டணிந்து", சிலப். 6 : 99 - 100
சன்ன வீரம்		
சன்ன வீரம்	வீரச் சங்கிலி	"ஆரம் அவை பூண்டு அணி திகழும் சன்ன வீரம் திருமார்பில் வில்லிலக", 11ஆம். திரு. 300 : 19; "அக்கு மணியால் சன்ன வீரமும் ஆரமும் வடமும்", திருத். 3696 : 1 - 4
தளிர் ஒளி துளும்பு முத்தின் சன்ன வீரத்தைச் சாத்துதல்	கழுத்திலிருந்து உந்தி வரைத் தொங்கும் அணியை அணிவித்தல்	"ஒளிகதிர் தரளக் கோவை உதரபந்தனத்தின் மீது தளிர் ஒளி துளும்பு முத்தின் சன்ன வீரத்தைச் சாத்தி", திருத். 3115 : 1 - 4
சன்ன வீரம் தயங்குதல்	மாலை விளங்குதல்	"தண்டைச் செயல் பொங்கிய சன்னவீரம் தயங்க", திருத். 708 : 4
ஞாண்		
பூண் ஞாண்	பூணப்படுகின்ற கழுத் தணிகளுள் ஒன்று	"சங்கிலி நுண்தொடர் பூண்ஞாண் புனைவினை அங் கழுத் தகவயினாரமோ டணிந்து", சிலப். 6 : 99 - 100
தாமம்		
ஓதநீர் நித்திலத் தாமம்	கடல் நீரில் பிறக்கும் முத்தாலாகிய மாலை	"மாதர்மண் மடந்தை பொன் மார்பில் தாழ்ந்ததோர் ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்", திருத். 52: 3 - 4
செம்பொன் எரி தாமம்	சிவந்த பொன் மாலை	"தேந்தாமம் செம்பவளத் தாமம் செம்பொன் எரி தாமம் மின்னும் திரள் தாமங்கள்", சிலப். 680 : 1
தாழ் மணித் தாமம்	நீண்ட மாணிக்க மாலை	"ஊழ்மணி மிடறும் ஒன்றாய்ப் பணிசெய்தவாறு நோக்கித் தாழ்மணித் தாம மார்பின் கின்னரர் சாம்பினாரே" சீவக. 728 : 3 - 4
மின்னும் திரள் தாமம்	ஒளி விடும் மணி மாலை	"தேந்தாமம் செம்பவளத் தாமம் செம்பொன் எரி தாமம் மின்னும் திரள் தாமங்கள்", சீவக. 680 : 1
மின்தெளித்த மின்னு மணி வீழ்ந்த திரள் தாமம்	மின்னல் போல ஒளி விடும் மணிகளால் திரண்ட மாலை	"பொன் தெளித்த தாமம் புரி முத்தமிளிர் தாமம் மின் தெளித்த மின்னுமணி வீழ்ந்ததிரள் தாமம்", சீவக. 2919 : 3 - 4

பொன் சரட்டில் கோத்த முத்தின் தாமம்	பொன் வடத்தில் கோக்கப்பட்ட முத்து மாலை	"விரிசுடர்ப் பரட்டின் மீது விளங்கு பொன் சரட்டில் கோத்த பருகு ஒளி முத்தின் தாமம் பிறங்கிய தொங்கல் சாத்தி", திருத். 3113 : 5 8
தூய்த்திரள் மணித் தாமஞ் சொரிதல்	பொலிவு பெறத் தொடுத்த மணி மாலை அணிதல்	"தூய்த்திரள் மணித்தாமஞ் சொரிந்து பொன் நிலம் நக்கப் பூத்திரள் மணி மாலைப் போர்சிங்கம் போதகம் போல்", சீவக. 3024 : 1 - 2

தார்

புனை பொற் பூந்தார்	பொற் பூவால் புனைந்த மாலை	"கனை பொற் கடிப்பிற் காண்டக வோச்சிப் புனை பொற் பூந்தார்ப் புரவலன் காக்கும்", பெருங். 5 : 7 : 25 - 26
பசும் பொற் பைந்தார்	பசிய பொன்னால் இயன்ற மாலை	"விசும்பின் மின்னென விரைந்தனன் மறைந்தபின் பசும் பொற் பைந்தார்ப் பனிமதி வெண்குடை ஒன் றிய வொழுக்கி னுதயண மன்னன்", பெருங். 5 : 4 : 1 - 3
பொலம் தார்	பொன் மாலை	"பொலந்தா ரிராமன் துணையாகத் தான்போந் திலங்கைக் கிழவற்கிளையான் - இலங்கைக்கே போந் திறை யாயதூஉம் பெற்றான்", பழ. நா. 257 : 1 - 3; "புக்கார் அமரர், பொலந்தார் அரக்கன் பொரு இல் பெருங்கோயில்", கம்ப. 5599 : 1
பொற்றார்	பொன் மாலை	"பொற்றார் மார்பன் பொங்குபு வெகுண்டு முகைநகை முத்தொடு தகைமுடி தயங்க", பெருங். 1 : 47 : 105 - 106; "உற்றவ னுரைத்த வுறுதி மாற்றம் பொற்றார் வேந்தன் பூங்கொடிப் பாவையைக்", பெருங். 1: 53: 124 - 125; "பொதியவிழ் கோதை தன்மேற் பொருகளிறகன்று பொற்றார்க் கதியமை தோளி னானைக் கையகப் படுத்ததன்றே", சீவக. 982 : 3 - 4; "பொற்றார் அகல் மார்ப", கம்ப. 4797: 4
பொன்தார்	பொன் மாலை	"தலை எலாம் அற்ற; முற்றும் தாள் எலாம் அற்ற; தோளாம் மலை எலாம் அற்ற; பொன்தார் மார்பு எலாம் அற்ற; சூலத்து", கம்ப. 7165 : 1 - 2
அலம் பொன்தார்	அசைகின்ற பொன் மாலை	"குலம்புக்கு ஆன்ற முதியர், குறிக்கொள் நீ அலம் பொன் தாரவனே! அரசு என்றலும்", கம்ப. 4034: 5 - 8
செறி பொன்தார்	பொன் மாலை	"செறி பொன் தார் அலங்கல் வீர! செய்திலம் குற்றம்", கம்ப. 4348 : 5 - 6
புனையவே பட்ட பொன்தார்	அழகு செய்யப்பட்ட பொன் மாலை	"வனையவே பட்ட போலும் மணிமருள் முலையினாளைப் புனையவே பட்ட பொற்றார்ப் புண்ணியற்கு ஈதும் என்றான்", சீவக. 1053 : 3 - 4
பைம்பொன் தார்	பொன்னாலான மாலை	"பணைமுனிந் தாலுவ பைம்பொன் தாரின கணை விசை தவிர்ப்பன கவரி நெற்றிய", சீவக. 2228 : 1 - 2
மணி அணிப் பெருந்தார்	மணிமாலை	"மணி அணிப் பெருந்தார் மரபிற் பூட்டி", குறுந். 182 : 2
அறைமணித் தார்	ஒலிக்கின்ற மணி மாலை	"இறுதியில் தான் என இருந்த ஏந்தலை அறைமணித் தாரினோடு ஆரம்பார் தொட செறி மலர்ச் சேவடி முடியின் தீண்டினான்", கம்ப. 4394 : 2 - 4
தார் ஆர்த்தல்	மாலைகள் ஒலித்தல்	"தேர் ஆர்ப்பு ஒலி, வீரர் தெழிப்பு ஒலியும், தார் ஆர்ப்பு ஒலியும், கழல் தாக்கு ஒலியும்", கம்ப. 9491 : 1 - 2
தார் கொள்ளுதல்	மார்பில் மாலை அணிதல்	"நீர் கொண்டும் பூக்கொண்டு நீங்காத் தொண்டர் நின் றேற்றத் தார்கொண்ட நூன்மார்பர் தக்கோர் வாழுந் தலைச் சங்கை", தேவா. திருஞா. 2 : 55 : 3 : 2 - 3

தாலி

தாலி	கழுத்தணிகலன்	"தாலி களைந்தன்றும் இலனே", புறம். 77: 7; "காதலி தாலி கொடுத்து", 11ஆம் திரு. 1120 : 4; "தாலிக் கொழுந்தைத் தடங் கழுத்திற் பூண்டு", பெரியாழ். 2: 6: 1; "கோல வில் குரல் கேட்டுக் குலுங்கித் தம் தாலியைத் தொடல் என்னும் மற்றும் ஓர் தலை", கம்ப. 9206 : 1 - 2; "பொன் தரத்தாரும் என்று புகன்றிட வணிகன் தானும் என்தர இசைந்தது என்னத் தாலியைக் கலயர் ஈந்தார்", திருத். 847 : 1 - 4
இரும்புலி எயிற்றுத் தாலி	பெரிய புலிப்பல் தாலி	"அரும்பெறல் மறவர் தாயத்து ஆன்றதொல் குடியில் வந்தான் இரும்புலி எயிற்றுத் தாலி இடைஇடை மனவு கோத்து", திருத். 658 : 1 - 4
ஐம்படைத் தாலி	ஐம்படை உரு வமைந்த தாலி	"ஐம்படைத் தாலி குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்கு", மணி. 7 : 56 - 7
திருநெடுந்தாலி	சிறந்த தாலி	"கோதை மாதர் திருநெடுந்தாலி மாறி", திருத். 870: 1 - 2
முளவுமுள் அரிந்து கோத்த நாண்தரும் எயிற்றுத் தாலி	முள்ளம் பன்றியின் முள்ளால் அரிந்து கோத்த கயிற்றில் கட்டப்பட்ட புலிப்பல் மாலை	"முண்டு எழு சினத்துச் செங்கண் முளவுமுள் அரிந்து கோத்த நாண்தரும் எயிற்றுத் தாலி நலம் கிளர் மார்பில் தூங்க", திருத். 669 : 5 - 8
பாப்பெயிற்றன்ன கோப்பு முறை கொண்ட பன்னிரைத் தாலி	பாம்பின் பல் போன்று பொன்னாற் செய்த பற்களை நிரலாகக் கோத்த முறைமை யினை உடைய பன்னிரைத் தாலி	"பாப்பெயிற்றன்ன பன்னிரைத் தாலி கோப்பு முறை கொண்ட கோலக் கழுத்தினர்", பெருங். 2 : 7 : 97 - 98
பொன்னொடு புலிப்பல் கோத்த புலம்பு மணித் தாலி	பொன்னால் இயன்ற புலிப்பல்லொடு கோக்கப் பெற்ற மணித்தாலி	"நின்னொடு வினவல் கேளாய் பொன்னொடு புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி", அகம். 7 : 17 - 18
புலிப்பல் தாலி	புலியின் பல்லைக் கோத்துச் செய்த கழுத்தணி	"புலிப்பற்றாலிப் புன்றலைச் சிறாஅர்", புறம். 374: 9; "புலிப்பல் தாலி புதல்வர் புல்லி", குறுந். 161 : 3
பைம்பொன் நிரைத்தாலி	பச்சைக் கயிற்றிலே புதிய பொன்னால் ஆன தாலி	"பாசிப்பா சத்துப் பைம்பொன் நிரைத்தாலி பூத்த வேங்கை மாசில் வெண்துகிலை நீர் தோய்த்து மேற் போர்த்த வண்ணமே போல்", சீவக. 1649 : 1 - 2
பொற்றாலி	உயரிய பொன்னால் இயற்றப்பட்ட தாலி	"கலினங் கவவிக் கான்றுநுரை தெவிட்டும் வலியுடை யுரத்தின் வான் பொற்றாலி", பெருங். 2 : 18 : 12 - 13
பொன்னுடைத் தாலி	பொன்னாலாகிய தாலி	"பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி வருகுவை யாயின் தருகுவென் பாலென", அகம். 54 : 18 - 19
மங்கலத் தாலி	மங்கலமாக விளங்கும் தாலி	"மங்கையர் மங்கலத் தாலி; மற்றையோர் அங்கை யின் வாங்குநர் எவரும் இன்றியே", கம்ப. 5116 : 1 - 3
மங்கல நூல் தாலி	திருமாங்கல்யம்	"காதல் செய் மனைவியார் தம் கணவனார் கலயனார்க் கைக் கோது இல் மங்கல நூல் தாலி கொடுத்து நெல் கொள்ளும் என்றார்", திருத். 844 : 4 - 8
சின்மணித் தாலி	தாலி	"பன்மணிப் பூணுஞ் சின்மணித் தாலியும் முத்தணி வடமுஞ் சித்திர வுத்தியும்", பெருங். 2 : 19 : 119 - 120
பன் மணித் தாலி	பலவாகிய மணி களாலியன்ற தாலி	"முத்து வடமும் முழுமணிக் காசும் பன்மணித் தாலி யும் மென்முலைக் கச்சும்", பெருங். 3: 17: 164 - 165; "விழவணி நோக்கி மும்மணிக் காசும் பன்மணித்

		தாலியும் பொன்மணிக் கொடியும் பூணுஞ் சுடர", பெருங். 5 : 9 : 48 - 50
நாணுள்ளிட்டுச் சுடர்வீசு நன் மாணிக்கம் நகு தாலி	பொன்னிலே மணிகள் இழைத்து ஒளி வீசும் தாலி	"நாணுள் ளிட்டுச் சுடர் வீசு நன் மாணிக்கம் நகுதாலி பேணி நல்லார் கழுத்தணிந்து பெருங்கண் கருமை விருந்தூட்டி", சீவக. 2697 : 1 - 2
தாலி கழுத்தணிதல்	தாலியை அணிதல்	"நன்றாகத் தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி", 11ஆம் திரு. 300: 81 : 82
தாலி ஐம்படை மார்பு தழுவுதல்	ஐம்படைத் தாலி அணிந்திருத்தல்	"தாலி ஐம்படை தழுவு மார்பிடை மாலை வாய் அமுது ஒழுகு மக்களை", கம்ப. 89: 1 - 255
நாணுள்ளிட்டுச் சுடர் வீசு நன் மாணிக்கம் நகு தாலி கழுத்தில் அணிதல்	பொன்னிலே மணிகள் இழைத்து ஒளி வீசும் தாலியைப் போற்றி மகளிர் கழுத்திலே அணிதல்	"நாணுள் ளிட்டுச் சுடர்வீசு நன் மாணிக்கம் நகுதாலி பேணி நல்லார் கழுத்தணிந்து பெருங் கண் கருமை விருந்தூட்டி", சீவக. 2697 : 1 - 2
வல்லோன் புனைந்த நெற் சிறுதாலி நிரல் படக்கிடந்து இலங்குதல்	தொழில் வல்லவனால் புனையப்பட்ட சிறு நெற்றாலி எனும் அணிகலன் நிரல் பட்டுக் கிடந்து திகழுதல்	"சில்லெனரும்பு வல்லிதினமைத்து நச்சர வெயிற்றி னல்லோன் புனைந்த நெற்சிறுதாலி நிரல் கிடந்திலங்கக் கடைசெறிந்தன்ன கழுத்து முதற் கொளீஇ", பெருங். 4 : 16 - 27 - 30
முளவுமுள் அரிந்து கோத்த நாண்தரும் எயிற்றுத்தாலி மார்பில் தூங்குதல்	முள்ளம் பன்றியின் முள்ளால் அரிந்து கோத்த கயிற்றில் கட்டப்பட்ட புலிப்பல் மாலை மார்பில் அசைதல்	"மூண்டுஎழு சினத்துச் செங்கண் முளவுமுள் அரிந்து கோத்த நாண்தரும் எயிற்றுத் தாலி நலம் கிளர் மார்பில் தூங்க", திருத். 669 : 5 - 8
பவளக் கொழுந் தின் மேற் பொற் றாலி பாஆய்த் திகழ்தல்	பொற்றாலியின் மீது பவளக் கொழுந் தினைப்பதித்து வைத்துத் தாலி ஒளி வீசும்படியாகச் செய்தல்	"வல்வருங் காணாய் வயங்கி முருக்கெல்லாம் செல்வர் சிறார்க்குப் பொற்கொல்லர் போல் நல்ல பவளக் கொழுந் தின்மேல் பொற்றாலி பாஆய்த் திகழக் கான் றிட்டன தேர்ந்து", திணை. நூற். 66: 3 - 4
வெண்பற்றாலி பூட்டுதல்	புலியின் பல்லால் செய்யப்பட்ட மாலை அணிதல்	"மறங் கொள் வயப்புலி வாய் பிளந்து பெற்ற மாலை வெண்பற்றாலி நிரை பூட்டி", சிலப். 12 : 27 - 28
ஆமைத்தாலி பூணுதல்	தாலி அணிதல்	"ஆமைத் தாலி பூண்ட அனந்த சயனன்", பெரியாழ். 1 : 8: 2 : 3
தெரியல்		
பொலம்பூந் தெரியல்	பொன் மாலை	"போந்தைக் கண்ணி பொலம் பூந்தெரியல்", சிலப். 28: 9
தொடர்		
தொடர்	சங்கிலி	"கங்கணம் இட்டுக் கழுத்தில் தொடர்கட்டி", பெரியாழ். 1 : 10 : 2; "முத்தணி வடமுஞ் சித்திரவுத்தியும் நாணுந் தொடரும் ஏனைய பிறவும்", பெருங். 2 : 19 : 120 - 121
நுண்தொடர்	நேர்ஞ்சங்கிலி; கழுத் தணிகளுள் ஒன்று	"சங்கிலி நுண்தொடர் பூண்ஞாண் புனைவினை அங் கழுத்தகவயின் ஆரமோ டணிந்து", சிலப். 6 : 99 - 100
திரு		
திரு	திருமாங்கல்யம்	"இவன் சிரத்து இருந்து அலால் திரு வாங்கலம்", கம்ப. 5809: 3 - 4

நூல்

நூல்	கழுத்தணி	"பெண்டிரும் எய்தி நூல் இழப்ப", பெரியதிரு. 2: 3: 6
நகை		
நகை தாழ்தல்	அணி தாழ்தல்	"தாழ்நகை ஆகத்துத் தண்சாந்து சிதைய", பெருங். 2 : 10 : 60 - 61
அங்கதிர் மணி நகை அலமருதல்	மணி நகை தவழுதல்	"அங்கதிர் மணி நகை அலமரும் முலை வளர்", சீவக. 603 : 1 - 2
நாண்		
நாண்	பொற்கயிறு	"முத்தணி வடமுஞ்சித்திரவுத்தியும் நாணுந் தொடரும் ஏனைய பிறவும்", பெருங். 2 : 19 : 120 - 121; "பூண் நாணும் அரை ஞாணும் பொலிந்து தோன்றும்", தேவா. திருநா. 6 : 18 : 2: 7
கழுத்தின் நாண்	கழுத்தணி	"நின் கழுத்தின் நாண் உன் மகற்கு காப்பின் நாணாம் என்றாள்", கம்ப. 1653: 7 - 8
பொன்னாண்	மார்பணி	"அணிவயிரக் கண்டிகை பொன்னாண் பணிபெரிய ஆரம் அவைபூண்டு அணிதிகழும் சன்ன வீரம் திரு மார்பில் வில்லிலக", 11ஆம் திரு. 300 : 18 - 19; "பொன் னாணினர் பொருவில்லுயர் புனைகேடக திரியாக் கொன்வாளினர் கொழுந்தாரினர் கொடிமார்பினர் திருந்தார்", சீவக. 2264 : 3 - 4; "திரு நல மின்னுப் பொன் ஞாண் முகில் முலைமாரித் தீம்பால்", சீவக. 720 : 2
பசும்பொன் நாண்	பொன்னால் ஆன நாண்	"கண்ணியும் பசும்பொன் நாணும் கதிர்முலை புடைப்பக் காமர் அண்ணலங் குமரன் தன்னோடாயிழை யாடினாளே", சீவக. 1689 : 3 - 4
மங்கல நாண்	தாலி	"மணிக் கொடுங் குழை வானவர், தானவர், மகளிர், துணுக்கம் எய்தினர், மங்கல நாண்களைத் தொட்ட னர்", கம்ப. 9670 : 3 - 4
நிறைநெடு மங்கல நாண்	நிறைவான நெடிய திருமாங்கலியக்கயிறு	"நிலமகள்முகமோ! திலகமோ! கண்ணோ! நிறைநெடு மங்கல நாணோ!", கம்ப. 94 : 1 - 2
பொற்பில் பயிலும் நெடுமங்கல நாண்	அழகுடன் பொலியும் மங்கல நாண்	"பாண்டி மாதேவியார் தமது பொற்பில் பயிலும் நெடு மங்கல நாண் பாதுகாத்தும் ", திருத். 2608: 1 - 2
பொன்னாண் பொருதல்	பொண் நாண் பூட்டி இருத்தல்	"பொன்னாண் பொருத முலை என்கோ யான்", சீவக. 724 : 4
பொன் செய் நாண் முலை மேற் கொள்ளுதல்	பொன் சரடு மார்பில் அணிதல்	"ஓத நித்தில வட்டமொர் பொன் செய்நாண் கோதை மென்முலை மேற்கொண்ட கோலமே", சீவக. 1323: 1323 : 3 - 4
கோத்த நித்திலம்	கோத்துத் தொடுத்த முத்து மாலை	"கோத்த நித்திலம் கோதை மார்பினான் வாய்த்த அந்நிரை வள்ளுவன் சொன்னான்", சீவக. 419 : 3 - 4
பூண்		
பூண்	மார்பு அணி	"ஈரிடைத் தாழ்ந்த பெய்புல மூதாய்ப்புகர் நிறத்துகிரின் மையற விளங்கிய ஆனேற்று அவிர் பூண்", கலித். 85: 9 - 11; "மதி மாறு ஓரா நன்று உணர் சூழ்ச்சி வில் நவில் தடக்கை மே வரும் பெரும் பூண் நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கை", மலை. 62 - 64; "படையேர் கண்ணியர் பணிந்துகை கூப்பிப் புடைவீங் கிள முலைப் பூண்பொறை யாற்றா", பெருங். 1 : 42 : 125 - 126; "நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை பூணதுவாகக் கோணுத லின்றிச்", திருவாச. போற்றித். 69 - 70;

		"தடங்கை நான்குமத் தோள்களுந்தட மார் பினிற் **பூண்**கண் மேற்றிசை விடங்கொள் கண்டமன்றே", திருவி. 221 : 5 - 6; "தார்விடை ஏகம்பர் கச்சிப் புறவிடைத் தம்பொன் நன் **பூண்** மார்விடை வைகல் பெறுவார் தழுவ மழ விடையே", 11ஆம் திரு. 998 : 5 - 8; "வடகமும் துகிலுந்தோடு மாலையு மணியும் முத்தும் கடகமுங் குழையும் **பூணு**ம் கதிரொளி கலந்து", சீவக. 462 : 1 - 2; "பொன்னை விட்ட சாயலாள் புணர்முலைத் தடத்தி னால் மின்னை விட்டிலங்கு **பூண்** விரைசெய் மார்பம் ஓலையா", சீவக. 708 : 1 - 2; "**பூணி**ற முலையவள் பொருவில் பூநுதல்", சீவக. 1010 : 1; "புல்லும் போழ் தினும் **பூணுறி** னோமென மல்லற் காளையை வைதுமி ழற்றுவாய்", சீவக. 1363 : 3 - 4; "வீணை வித்தகன் வேந் தடு வீங்குதோள் காணுங் காரிகை யார்கதிர் வெம் முலைப் **பூணு**மாரமு மீன்று பொன் பூத்தலர்ந்", சீவக. 2335 : 1 - 3; "வாண் முடி வைரவில்லும் வார்குழை சுடரு மார்பிற் **பூணி**டை நிலவு மேனி மின்னொடு பொலிந்த தேவர்", சீவக. 2802 : 2 - 3; "வடங்களும் குழையும் **பூணு**ம் மாலையும் சாந்தும் யானைக் .... யாற்றொடும் எடுத்த எலாம் அடங்கியது என்னில் என்னே! ஆழியின் ஆழ்ந்தது உண்டோ?", கம்ப. 4874; "மாலையும், சாந் தும், கலவையும், **பூணு**ம் வயங்கு நுண் தூசொடு, காசும் சோலையின் தொழுதிக் கற்பகத் தருவும் நிதி களும் கொண்டு பின் தொடர", கம்ப. 5161 : 1 - 4
பூண் அகலம்	பூண் தாங்கிய மார்பு	"கோற்றொடி மாதரொடு வேற்றுநாடடைந்து வைவா ளுழந்த மணிப்**பூண் அகலத்து** ஐயா வோவென் றழுவோள் முன்னர்", மணி. 8 : 41 - 43; "சுடரும் வாளினர் சோர்நிண மிழுக்கி அடர் **பூணகலத்** தரும்படை யுற்றுக்", பெருங். 1 : 46 : 56 - 57; "எழுந்த மன்னன் செழும் **பூணகலத்** தீர் நறுஞ் சாந்தத் தாரொடு குழையப்", பெருங். 3 : 24 : 167 - 168
பூண் ஆகம்	பூண் அணிந்த மார்பு	"வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர் நுண் **பூணா கந்**திளைப்பத் திண்காழ்", திருமுருகு. 31 - 32; "தானே பெருஞ்சேமஞ் செய்யுமால் தானே ஓர் **பூணாகத்தா**ற் பொலிந்து பொங்கழல் சேர் நஞ்சுமிழும் நீணாகத் தானை நினைந்து", 11ஆம் திரு. 57 : 2 - 4; "குறிப்புவயின் வாரா ளாயினுங் கூடிப் பொறிப் **பூண் ஆகத்து** புல்லு வனன் ஒடுக்கி", பெருங். 2 : 16 : 65 - 66; "மேகம் ஈன்ற மின் அனையாள் தன் மிளிர் பைம் **பூண் ஆகம்** ஈன் அம்முலை இன்பால் அமிர்து ஏந்தப்", சீவக. 362 : 1 - 2
பூண் மார்பு	பூண் அணிந்த மார்பு	"செவ்வினை யாளர் சேரார் நம்பதிக் கணித்து மன்றது மணிப் **பூண் மார்ப**", பெருங். 1 : 49 : 52 - 53; "நிற் பெறு சிறப்பொடு நெடுநகர் புகல முற்படத் தோன்றிய முகைப்**பூண் மார்வ**ன்", பெருங். 2 : 17 : 124 - 125; "தனிப்படச் செய்கை தன் கட்டாங்கிய மணிப் **பூண்** மார்பன் வத்தவ மன்னனொடு சுற்றத் தாரெனு சொல் லுடை வேந்தர்", பெருங். 3 : 21 : 12 - 14; "விசையைப் பிரிதல் ஆற்றேன் வேந்தன் நீயாகி வையம் இசைபடக் காத்தல் வேண்டும் இலங்கு **பூண் மார்ப** என்றான்", சீவக. 201 : 3 - 4
பூண் முலை	பூண் அணிந்த மார்பு	"பேணிலனாய்ப்பிறர் சேவகனாய் - ஏணில் பொருந்திய **பூண்முலை**யார் சேரிகைத் தில்லான் பருத்தி பகர்வுழி நாய்", சிறுபஞ்ச. 88 : 2 - 4; "**பூண்முலை** மாதரொடு புறங்கடை நிறுத்தும்", மணி. 11 : 79; "ஆருருவ உள்குவர்

		உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும் வாருருவப் **பூண்முலை** நன் மங்கை தன்னை மகிழ்ந்தொரு பால்வைத்து கந்த வடிவந் தோன்றும்", தேவா. திருநா. 6 : 18 : 11 : 1 - 4; "வனப்பொடு புணரிய வடகப் போர்வையை மணிப் **பூண் வனமுலை** யிடைக் கரை புதை இப்", பெருங். 1 : 53 : 146 - 147; "துணை நலத்தோழி முன் மணநலக் கோலமொடு நாணி நின் றோளைநின் **பூணிள வனமுலை** புல்லின துண் மையிற் புல்லேன் யானென", பெருங். 3 : 22 : 116 - 118; "காவற் றேவிக்குக் காவல னுணர்த்த மணிப் **பூண் வன முலை** வாசவசத்தை", பெருங். 4 : 15 : 82 - 83; "அங் கண் வான்மிசை அரம்பையர் கருங்குழல் சுரும்பு பொங்கு **பூண்முலைக்** கொடிச்சியர் குழல் மூழ்கிப் போகாச் செங்கண் மால் விடையார் திருக்காளத்தி என்னும்", திருத். 1094 : 1 - 3
அள்ளிலைப் பூண்	கூரிய இலை வடிவம் கொண்ட அணிகலன்	"உள்ளவ ரொன்ற லாத செயச்செய வூறு கேளாது **அள்ளிலைப் பூ**ணினாளுக் காவியுண் டில்லை யென்ன வெள்ளெயிற்றரவு கான்ற வேகமிக் கிட்ட வன்றே", சீவக. 1274 : 2 - 4
ஆடகம் தரு பூண்	பொன் மாலை	"**ஆடகம் தரு பூண்** முயங்கிட அஞ்சி அஞ்சி அனந்தரால்", கம்ப. 1551 : 1 - 2
ஆடகப் பைம் பூண்	ஆடகம் என்ற பொன் னாற் செய்யப்பட்ட அணி	"**ஆடகப் பைம்பூ** ணருவிலை யழிப்ப", சிலப். 16 : 10
இலைக் குலாம் பூண்	இலை வடிவாகச் செய்த அணி	"**இலைக் குலாம் பூ**ணினானும், இரும் பிணக் குருதி ஈர்த்து அலகு இல் வெம் படைகள் தெற்றி, அளவிடற்கு அரிய ஆகி", கம்ப. 5757 : 1 - 2
இலைப் பெரும் பூண்	இலைத் தொழில் அமைந்த பேரணி கலன்	"பொங்கழற் போர்வை போர்த்தோ எனவும் **இலைப் பெரும் பூ**ணும் இதய வாசனையும்", பெருங். 2 : 19 : 116 - 117
இலைப் பொலி பூண்	இலையின் உருவம் விளங்கும் ஆபரணம்	"**இலைப் பொலி பூண்** முலை யெரிபொன் மேகலைக் குலத்தலை மகளிர் தங்கற்பிற் றிண்ணிய", சீவக. 1210 : 1 - 2
இன்நிழல் இவரும் பூண்	இனிய ஒளி பரவும் அணி	"**இன்நிழல் இவரும் பூணான்** இருவிசும்பு ஏற லூற்றுப் பொன்எழு அனைய தோளாற் புல்லிக் கொண் டினிய கூறி", சீவக. 956 : 1 - 2
எரிமணி பிறங்கும் பூண்	ஒளி வீசும் பூண்	"திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை மார்பில் **எரிமணி பிறங்கும் பூ**ணினை மால்வரை", பரி. 1 : 8 - 9
ஒள் பூண்	ஒள்ளிய பேரணி கலன்	"செஞ்சாந்து சிதைந்த மார்பி **னொண்பூ** ணரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்", பட். 297 : 98
கதிர் விரி பூண்	ஒளி சிந்தும் அணி கலன்	"அதிர்குரல் முரசம் நாண அமிர்து பெய் மாரி ஏய்ப்பக் **கதிர்விரி பூ**ணினாற்குத் தந்தை தாய் தாரம் காதல்", சீவக. 543 : 2 - 3
கயில் பூண்	மூட்டுவாய் அமைந்த அணிகலன்	"தேவிய ரிருவர்க்கு மாறு துயில் கூறக் **கயிற்பூண்** கோதை யயிர்த்தன ளிருப்பப்", பெருங். 4 : 13 : 165 - 166
காசு ஒளிர் பூண்	மணிகள் ஒளி விடுகின்ற அணிகலன்	"உறைதந்தன செங்கதிரோன் உருவின் பொறை தந்தன, **காசு ஒளிர் பூண்**, இமையோர் திறை தந்தன", கம்ப. 7766 : 1 - 3
கிளர் பூண்	ஒளி பொருந்திய அணிகலன்	"தளர்நடை தாங்காக் **கிளர் பூட்** புதல்வரை", மணி. 3: 141
கிளர் ஒளிப் பூண்	ஒளிரும் ஆபரணம்	"கெண்டை நெடுங் கண்வியப்பக் **கிளர் ஒளிப் பூண்** உரவோனை", திருத். 288 : 3 - 4

கிளர்மணிப் பூண்	ஒளி விளங்கும் அணிகலன்	"நாளினும் பெருகுகின்ற நகைமதி யனைய காதற் கேள் வனைக் கனவிற் காணாள் கிளர்மணிப் பூணி னாளே", சீவக. 1506 : 3 - 4
கொடும் பூண்	வளைந்த ஆரம்	"கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்", புறம். 158 : 9; "கூழ்உடை நல்இல் கொடும்பூண் மகளிர் கொன்றை மென்சினை பனிதவழ் பவை போல்", பெரும். 327 - 328; "கச்சார் வனமுலைக் கண்மணிக் கொடும் பூண்", பெருங். 1 : 52 : 19 - 20; "தாக்கருந் தானைத் தருசகன் கழலடி கூப்புபு பணிந்த கொடும் பூட் குருசிலை", பெருங். 3 : 16 : 33 - 34
சிப்பப் பூண்	சிற்பம் மிகுந்த அணிகலன்	"முத்தப் பேரணி முழுக்கல மொழித்து சிப்பப் பூணுஞ் செம்பொற் கடிப்பும்", பெருங். 3 : 9 : 65 - 66
சுடர்ப் பூண்	ஒளிவிடும் அணிகலன்	"சூழியானைச் சுடர்ப்பூண் நன்னன்", அகம். 15 : 10
சுடர்மணிப் பூண்	சுடரும் மணிப் பூண்	"சூழ்கதிர் மதியம் அன்ன சுடர்மணிப் பூணினானும் வீழ்தரு கதியின் நீங்கி விளங்கு பொன் உலகத்து உய்க்கும்", சீவக. 380 : 1 - 2
தமனியப் பூண்	பொன் மாலை	"பெருவிழாக் காணும் பெற்றியின் வருவோன் தாரன் மாலையன் தமனியப் பூணினன்", மணி. 3 : 35 - 36
தழலரப் பூண்	தழல் போலக் கொடிய அரவமாகிய அணிகலம்	"தாரகை போலுந் தலைத் தலை மாலைத் தழலரப் பூண் வீர", திருவாச. நீத்தல். 1 - 2
நகு பொன் பூண்	பொற்றாலி	"நாண் எறிந்தனன் சிலையினை; அரக்கியர் நகு பொன் பூண் எறிந்தனர்", கம்ப. 7480 : 1 - 2
நித்திலப் பூண்	முத்து அணி	"என்று சாலவும் ஆற்றலர் என் உயிர் நின்றது எங்கு என நித்திலப் பூண்முலை", திருத். 301 : 1 - 2
நிலவுறழ் பூண்	நிலவைப் பழிக்கும் ஒளியையுடைய பொற் பூண்	"நிலவுறழ் பூணினானை நெடுநகர் இரங்கக் கையாத்து அலபல செய்து கொல்வான் அருளிலான் கொண்ட போழ்தில்", சீவக. 1131 : 1 - 2
நிலாவுமிழும் பைம்பூண்	நிலவுபோல் ஒளி வீசும் அழகிய அணி	"நிலவுமணி மேகலை நிலாவுமிழும் பைம்பூண் இலவ மலர் வாயினணி கூரெயிற்றினீரே", சீவக. 2922 : 2 - 3
நிழல் படு பூண்	ஒளி வீசும் அணி கலன்	"நிழல்படு பூண் நெடுமால் அயன் காணாமை நீண்ட வரே தழல்படு பொன்னகல் ஏந்தித்", கம்ப. 1047 : 1 - 3
நிழலுறு பூண்	ஒளி மிகுந்த ஆபரணம்	"கழலினர்; தாரினர்; கவச மார்பினர்; நிழலுறு பூணினர்", கம்ப. 2917 : 1 - 3
பிறைப் பூண்	பிறை வடிவாகிய அணிகலன்	"சிறப்புப் பல செயினுந் திரிந்து பிறி துறையாள் பிறைப் பூணகலத்துப் பெருமக னவன் மாட்டுக் குறித்துக் கூறல்", பெருங். 4 : 10 : 24 - 26
பெரும் பூண்	பேரணி கலன்	"பெரும் பூண் பொறையன்", குறுந். 89 : 4; "இயற் பெருந் தேவி வயிற்றகத் தியன்ற வட்டப் பெரும் பூண் வாசவத்தையொடு", பெருங். 2 : 4 : 24 - 25
பைம் பூண்	பொன் அணிகலன்	"தருசகன் தங்கை தகையேர்சாயற் பத்திப் பைம்பூட் பதுமா நங்கை தக்கனள் கொடுப்பின் மிக்க தென் போரும்", பெருங். 3 : 20 : 179 - 181; "பெருமலை யுலகம் பேணுமவாவொடு பறத்த லூற்றம் பிறப்பப் பைம் பூட் சிறப்பொடு புணர்ந்த சேயிழை மாதர்", பெருங். 5 : 1 : 174 - 176; "மின்னொப் புடைய பைம்பூண் நீருள் வீழக் காணாள் அன்னப் பெடையே தொழுதேன் அன்னை கொடியள் கண்டாய்", சீவக. 920 : 1 - 2; "அன்னவன் தன்னை நோக்கி, அழகனை நோக்கி, ஆழி மின் என விளங்கும் பைம் பூண் வீடணன் விளம்பலுற் றான்", கம்ப. 6937 : 3 - 4

அடர் பைம் பூண்	தகட்டு வடிவமாகிய அணிகலன்	"குடர் கொண்டு வாங்குங் குறுநரி கந்தில் தொடரொடு கோணாய் புரையும் அடர்பைம் பூண் சேய்பொருது அட்ட களத்து", களவழி. 34 : 3 - 5
அடர் பொன் பைம் பூண்	பொன் தகடுகளால் செய்யப்பட்ட அணி	"அடர் பொன் பைம்பூண் அரசு அழிய அரும் பொன் புதல்வன் பெற்றிருந்த இடர்கொள் நெஞ்சத்து இறைவியும் இரும்கண் ஞாலத்து இருள் பருகி", சீவக. 313 : 1 - 2
அருமணிப் பைம் பூண்	பெறற்கரிய மணிகள் பதித்த பொன்னணி கலன்	"யாப்புடைப் புரிசை யணிபெற வளைஇ அருமணிப் பைம் பூணரசகத் தடைந்து", பெருங். 3 : 3 : 105 - 106
ஆய்கதிர் உமிழும் பைம் பூண்	ஒளி வீசும் அணி	"காய்கதிர் மணிசெய் வெள்வேல் காளையைக் காவல் ஓம்பி ஆய்கதிர் உமிழும் பைம்பூண் ஆயிரச் செங்கணான் தன்", சீவக. 473 : 2 - 3
தமனியப் பைம் பூண்	பொன்னாலியன்ற பசிய அணிகலன்	"தமனியப் பைம்பூண் தம்மிறைக் கியன்ற கண்மணி அன்ன திண்நட் பாளன்", பெருங். 2 : 8 : 169 - 170
மணித்தகைப் பைம் பூண்	மணிகள் பதித்த அழகிய பசிய அணி கலன்	"நெஞ்சுநீ நெகிழ்ந்தவற் றெளியவை செல்லென மணித் தகைப் பைம்பூண் மகதவர் கோமான்", பெருங். 3 : 25 : 77 - 78
மணி மிடைப் பைம் பூண்	மணிகள் பதித்த அணிகலன்	"பல்களிற் றியானைப் படைப் பெருவேந்தன் மெல்லியற் குலமகள் மிடைமணிப் பைம்பூண்", பெருங். 2 : 2 : 45 - 46
மின் நிரைத்த பைம்பூண்	ஒளி விளங்கும் புதிய அணி	"மின்நிரைத்த பைம் பூண் விளங்கிலை வேல் வேந்தன் முன் உரைத்த மூன்று கனவும் புணையாக என் உயிரை தாங்கி யிருந்தேன்", சீவக. 1803 : 1 - 3
வித்தகப் பைம் பூண்	வேலைப்பாடு அமைந்த பொன் னாலான அணிகலன்	"தத்தும் திரை தயங்கும் தண்ணங் கடற் சேர்ப்ப! சித்திரப் பூங்கொடி அன்னாட்(கு) அருள் ஈயாய் வித்தகப் பைம் பூணின் மார்பு", திணை. ஐம் 42 : 2 - 4
வைரச் சாதி வாலொளி கலந்த பைம் பூண்	வைரத் திரளின் ஒளி கலந்த புதிய அணி கலன்	"குடவரை யனைய மார்பிற் குங்குமம் எழுதிக்கோல வடவரை வைரச் சாதி வாலொளி கலந்த பைம் பூண் தடவரை மார்பின் மின்னத் தம்பியோ டமிர்தம் உண்டான்", சீவக. 1731 : 1 - 3
பொலம் பூண்	பொன்னாற் செய்த பேரணிகலன்	"பொலம்பூ ணைவருட்படப் புகழ்ந்த மறமிகு சிறப்பிற் குறுநில மன்னன்", மது. 775 - 776
பொலன் கொள் பூண்	பொன்னால் செய்யப் பட்ட அணிகலன்	" 'விதி' என, அன்னவன் வெந்நிட்டு ஓடவே பொதி யொடும் வாரிய பொலன் கொள் பூணினார்", கம்ப. 5620: 3-4
பொற்பூண்	பொன்னணிகலன்	"தற்கா முற்ற தன்னமர் காதற் பொற் பூண் மாதரைப் பொருந்த வலிப்ப", பெருங். 3 : 10 : 13 - 14; "சின்னகை முறுவலொடு பொற் பூண் முலைமிசை யப்புபு தடாஅக்", பெருங். 3 : 9 : 89 - 90; "அணங்கருஞ் சீறடி வணங்கலின் வாங்கிப் பொற் பூண் வனமுலை பொருந்தப் புல்லிக்", பெருங். 4 : 7 : 21 - 22
வான் பொற் பல் பூண்	தூய பொன்னால் ஆன பல பூண்	"வல்லான் புனைந்த வயிரக் குழை வார்ந்து வான் பொற் பல் பூண் எருத்திற் பரந்தஞ் சுடர் கால", சீவக. 1668 : 1 - 2
பொன் உயிர்த்து ஒளிரும் பூண்	பொன்னால் செய்யப் பட்டு ஒளி வீசும் அணிகலன்	"பொன் உயிர்த்து ஒளிரும் பூணாய்! பொதுநின்று, தருமம் நோக்கி, மன்னுயிர்க்கு உறுதி செய்வான்", கம்ப. 4090 : 5 - 7
மணிப் பூண்	மணி அணிகலன்	"பொருளும் போகமும் புகழும் போல மறுவில் மணிப் பூண் மன்னவன் உள்வழிக் குறுகுதல் குணனென", பெருங். 2 : 8 : 132 - 134; "மகதவன் தங்கை மணிப்பூண் வனமுலை நுகர விட்டனர் நுண்ணறி விலரெனின்", பெருங். 3 : 10 : 38 - 39; "அமைச்ச ருரைத்த திகத்த வின்றி

		மணிப் பூண் மார்பன் பணித் தொழிலன்மை", பெருங். 4 : 7 : 204 - 205; "கல்லார் மணிப்பூண் மார்பிற் காமன்", சீவக. 2196 : 1
ஆய்மணிப் பூண்	ஆராய்ந்த மணியால் செய்த அணிகலன்	"அசும்பு பொன்வரை ஆய்மணிப் பூண்களும் பசும் பொன் மாலையும் பட்டுழிப் பட்டவை", சீவக. 533 : 1 - 2
இனமணிப் பூண்	மாணிக்க வடம்	"இனமணிப் பூணும் ஏகவட்டமும் வயிரக் குழையும் வல்வினைப் பொலிந்த", பெருங். 2 : 5 : 138 - 139
ஒளிர் மணிப் பூண்	ஒளி வீசும் மணிப் பூண்	"ஓங்கிய பொன் நவமணிகள் ஒளிர் மணிப் பூண் துகில் வருக்கம்", திருத். 3914 : 3 - 4
கதிர் மணிப் பூண்	ஒளிரும் மணிகள் பதித்த பூண்	"கலைக்கோட்ட அகலல்குல் கணங்குழையார் கதிர் மணிப்பூண் முலைக்கோட்டால் உழப்பட்ட மொய்ம் மலர்த்தார் அகல் மார்பர்", சீவக. 2234 : 1 - 2
கல்லார் மணிப் பூண்	கல் இழைத்த மணிப் பூண்	"கல்லார் மணிப் பூண் மார்பிற் காமன் இவனே என்ன வில்லார் கடலந்தானை வேந்தர் குழாத்துட் தோன்றிப்", சீவக. 2196 : 1 - 3
சுடர் மணிப் பூண்	ஒளிவிடும் மணிப் பூண்	"பாடகம் சுமந்த செம்பொன் சீறடிப் பரவை அல்குல் சூடகம் அணிந்த முன்கைச் சுடர்மணிப் பூணி னாளை", சீவக. 479 : 1 - 2
திருமணிப் பூண்	அழகிய மணிப் பூண்	"திருமணிப் பூணினாற்குச் சினந்தலை மழுங்க வின்றிக் குருமணி முடியின் தேய்த்த தரன் தமர் கொள்க என்றான்", சீவக. 557 : 3 - 4
துஞ்சா மணிப் பூண்	ஒளி குன்றாத மாணிக்கப் பூண்	"துஞ்சா மணிப்பூண் சுரமஞ்சரி என்னும் நாமத்து அஞ்சாயல் பூத்த அகிலார்துகிலாய் பொன் அல்குல்", சீவக. 25 : 1 - 2
நகாக் கிடந்த எரி மணிப் பூண்	ஒளிவிட்டுக் கிடந்த மணிப் பூண்	"நடந்தொழுகு குருதியுள் நகாக் கிடந்த எரிமணிப் பூண் இடம்படு செவ்வானத் திளம்பிறை போல் தோன்றினவே", சீவக. 2244 : 3 - 4
நவமணிப் பூண்	மணிகள் பலவற்றால் செய்யப்பட்ட அணி	"பரவு சேரன் தனக்கு உனக்குப் பைம்பொன் காணம் பட்டாடை விரவுகதிர் செய் நவமணிப் பூண் வேண் டிற்று எல்லாம் குறைவு இன்றி", திருத். 3779 : 3 - 6
பரு மணிப் பூண்	பெரிய மணிகள் பொருந்திய அணி	"படைக் கலங்களும், பருமணிப் பூண்களும் பகு வாய் இடைக் கலந்தன", கம்ப. 8539 : 1 - 2
பன்மணிப் பூண்	பல மணிகளும் இழைத்த அணிகலன்	"பன்மணிப் பூணுஞ் சின்மணித் தாலியும் முத்தணி வடமுஞ் சித்திர வுத்தியும்", பெருங். 2 : 19 : 119 - 120
பொன் செய் மணிப் பூண்	பொன்னால் செய்யப் பெற்ற அணிகலன்	"துன்பம் ஒழிநீ யாம் உனக்கு ஓர் தூதன் ஆகி இப் பொழுதே பொன்செய் மணிப் பூண் பரவைபால் போகின்றோம் என்று அருள் செய்தார்", திருத். 3488 : 5 - 8
பொன் துன்றும் மணிப் பூண்	பொன்னிலே பதித்த மணிகளையுடைய ஆபரணம்	"நின்று எண்ணி உன்னுவான் அந்தோ! இந்நெடு நகரில் பொன் துன்றும் மணிப் பூணாள் இலன் என்ன, பொருமுவான்", கம்ப. 5059 : 5 - 8
மின்னவிர் மணிப் பூண்	மின்னல் போன்று ஒளிரும் மணிகள் பதித்த அணிகலன்	"மின்னவிர் மணிப்பூண் மன்னவன் மடமகள்", பெருங். 1 : 40 : 366
விலை அறா மணிப் பூண்	விலை மதிப்புடைய மணிகள் பதித்த அணிகலன்	"கலை அறாத் திங்கள் அன்ன வாளியால், கையைக் கொய்தான் விலை அறா மணிப் பூணோடும், வில்லொடும் நிலத்து வீழ", கம்ப. 9158 : 3 - 4
விழுமணிப் பூண்	உயர்ந்த மணிப் பூண்	"தழுமலர்க் கொம்பு போலுந் தத்தை நாட் பயந்த நம்பி விழுமணிப் பூணினானை வீற்றிரீஇ விதியிற் சொன்னான்", சீவக. 2905 : 3 - 4

திருமணி ஒளிர் வரும் பூண்	அழகிய மணி விளங்கும் பூண்	"திருமணி ஒளிர்வரும் பூணன்", அகம். 32 : 2
மணிகள் வேய்ந்து இமைக்கும் பூண்	மணிகள் பதிக்கப் பெற்ற பூண்	"அளந்தன வாழுநாளு மதுவெனக் குரைய லென்றான் விளங்கொளி மணிகள் வேய்ந்து விடுசுடரி மைக்கும் பூணான்", சீவக. 213 : 3 - 4
ஒளி மணிக் கொடும் பூண்	ஒளிமிக்க மணிகளை உடைய வளைந்த அணிகலன்	"நளிவரை அன்ன நளகிரி ஏறி ஒளிமணிக் கொடும்பூண் உதயண குமரனைப் பற்றுபு தம்மின்'', பெருங். 2: 8 : 51 - 53
நளிமணிக் கொடும் பூண்	செறிந்த மணிகள் பதித்த வளைந்த அணிகலன்	"நல்லியாழ் நவிற்றிய நளிமணிக் கொடும் பூண் உறுவரை மார்பி னுதயண குமரன்'', பெருங். 1 : 47 : 220 - 221
நிலா மணிக் கொடும் பூண்	ஒளிவிடும் மணிகள் இழைக்கப்பட்ட வளைந்த அணிகலன்	"உயர் பெருங் கோயிலுள் தேவியை ஒழியா நிலா மணிக் கொடும் பூண் நெடுந்தகைக் குருசிலை உலாவெழப் போக்கி ஒள்ளழல் உறீஇயபின்", பெருங். 2: 17 : 13 - 14
வாள் மணிக் கொடும் பூண்	ஒளியையுடைய மணி களிழைத்த வளைந்த அணிகலன்	"உருவப் பூந்தார் உதயண குமரனும் வள்ளியம் பணைத் தோண் முள்ளெயிற் றமர் நகை வாண் மணிக் கொடும் பூண் வாசவ தத்தையும்", பெருங். 2 : 14 : 56 - 57
மணியுடைப் பூண்	மணிப் பூண்	"மெய்யுடை யார்க்கவன் அம்பலம் போல மிக நணுகும்; மையுடைவாட் கண் மணியுடைப் பூண்முலை வாணுதல் வான்", திருக்கோ. 48 : 2 - 3
பல்கதிர் மணியொளி பரந்த பூண்	பல் கதிரையுடைய மணிகள் ஒளிரும் அணிகலன்	"செல்வனைத் திருநகர்ச் சேட்பட் டானரோ பல்கதிர் மணியொளி பரந்த பூணினான்", சீவக. 1458: 3 - 4
புனை மணிப் பொன் செய் பூண்	மணிகள் வைத்து இழைக்கப் பெற்ற பொன் அணி	''திருந்தியாழ் முரல்வதோர் தெய்வப் பூம்பொழில் பொருந்தினான் புனைமணிப் பொன் செய் பூணி னான்", சீவக. 1936: 3 - 4; "நூல்வலீர் இவனைக் கொல்லும் நுண்மதிச் சூழ்ச்சி ஈதே போல்வ தொன்றி இல்லை யென்றான் புனைமணிப் பொன்செய் பூணான்'', சீவக. 2148 : 3 - 4
மின் அவிர் பூண்	ஒளி விளங்கும் பூண்	"பொன் அனாள் அமிர்தமாகப் புகழ்வெய்யோன் பருகி யிட்டான் மின் அவிர் பூணினானை வேல் கணார்க்கு இயற்றப்பட்ட மன்னிய மதுவின் வாங்கி மாதரும் பருகி யிட்டாள்", சீவக. 190 : 2 - 4
மின் பொரு பூண்	மின்னல் போன்று ஒளி விடுகின்ற அணி	"மன் பெருங் கிளைஞரும் மருங்கு சுற்றுற மின்பொரு பூணினான் செல்லும் வேலையில்", கம்ப. 4388 : 3 - 4
வயிரப் பூண்	வயிர ஆபரணம்	"ஒள்ளழல் வயிரப் பூணும் ஒளிர் மணிக் குழையும் மின்ன ஒள்ளழல் கொள்ளிவட்டம் போற்குலாய்ச் சுழலப் பொன்ஞாண் ஒள்ளழல் நேமி நக்க மண்டிலமாக நின்றான்", சீவக. 2203 : 1 - 3
வயிர மணிப் பூண்	வயிர மணிக் கலன்	"கடுத்தாங்கு வீழக் கதிர்வான் பிறையம்பின் எய்தான் வடித்தாரை வெள்வேல் வயிரமணிப் பூணினானே", சீவக. 2320 : 3 - 4
பொன் திணி வயிரப் பைம் பூண்	பொன்னால் செய்யப் பட்டு வயிரம் முதலி யன பதிக்கப் பெற்ற பசும்பொன்னாலான அணிகலன்	''கொற்றப் பொன்திணி வயிரப் பைம் பூண் புரவலன் தன்னை நோக்கி", கம்ப. 4091 : 6 - 8
விளங்குமணிக் கொடும் பூண்	விளங்கிய மணிகளால் இயன்ற வளைந்த பூணாகிய ஆரம்	"விளங்குமணிக் கொடும்பூ ணாஅய் நின்னாட்", புறம். 130 : 1; "விளங்கு மணிக் கொடும் பூண் விச்சிக் கோவே", புறம். 200 : 8

விளங்குமணிப் பைம்பூண்	விளங்குகின்ற மணி கள் பதித்த பசிய அணிகலன்	"விறற்படை சூழ விளங்குமணிப் பைம்பூண் மறப்படை நோன்றாள் வத்தவர் பெருமகன்", பெருங். 1: 58 : 1 - 2
வினையாரெரி பூண்	வேலைப்பாடு மிக்க அணிகலன்	"புனைதார் பொரநொந்து பொதிர்ந்தவென வினையா ரெரிபூண் முலைகண் குளிர", சீவக. 1380 : 1 - 2
பூண் அணிதல்	பூண் அணிதல்	"பூண் அணி நூல் மணி மார்பீர் புகுந்தபரிசு இது என்று சேண் இடையும் தீங்கு அடையிற் திருத் தொண்டர் உரை செய்தார்", திருத். 393 : 5 - 8; "ஏனமாமணிப் பூண் அணி மார்பனே", திருவி. 234 : 7 - 8; "பொற்கச் சார்ந்த பூணணி பொம்மன் முலையாளை அற்கச் செய்த யாப்பினராகி அவண் வந்தார்", சீவக. 1060 : 1 - 2
நற்பூண் அணிதல்	நல்ல அணிகளை அணிதல்	"நற்பூண் அணிந்த முலையார் நிலைகால் சரிந்து நெற்றி நிறுத்து வடம் வைத்த முலையினாரும்", சீவக. 2340 : 3 - 4
பத்திப் பூண் அணிதல்	மார்பில் வரிசையுற அணிகள் அணிதல்	"நித்திலக் குப்பை போல நிழலுமிழ்ந்திலங்கு மேனிப் பத்திப் பூண் அணிந்த மார்பிற் பதுமுகன் பைம் பொற் சூழி மொய்த்தெரி யோடை நெற்றி மும்மதக் களிற்றின் மேலான்", சீவக. 2266 : 1 - 3
வயிரப் பூண் அணிதல்	வயிர அணிகள் அணிதல்	"வழிவரல் வருத்தம் ஓம்பி வயிரப் பூண் அணிந்து மார்பன் அழிகவுள் யானை வேந்தற் கவன் திறம் அறியச் சொன்னான்", சீவக. 1644 : 1 - 2
பூண் ஆர்தல்	அணிகலன் அணிதல்	"பேணார்க் கடந்த பிரச்சோ தனன் மகள் பூணாரா கத்துப் பொங்கிள வனமுலை", பெருங். 1: 57: 28- 29; "பூணார் வனமுலைமேற் பூவம் பாற்காமவேள் ஆணாடு கின்றவா கண்டும்அருளாரே", திருவி. 272: 5 : 3 - 4
பூண் இயல்தல்	அணிகலன் அசைதல்	"பூண் இயல் கொங்கை அன்னாள் அம்மொழி புகற லோடும்", கம்ப. 2777 : 5 - 6
பூண் ஏந்துதல்	மார்பில் அணிகலன் களை அணிந்து இருத்தல்	"உரைசார் மடமந்தி ஓடி உகளும் புரைநீர் மலை நாடன் பூண் ஏந்து அகலம் உரையா வழங்கும் என் நெஞ்சு", கைந். 6 : 2 - 4; "பூணொடு ஏந்திய வெம்முலைப் பொன்னன் னாள்", சீவக. 1002 : 1
அருமணிப் பூணேந்துதல்	பெறற்கரிய மணிகள் பதிக்கப் பெற்ற அணிகலத்தை மார் பில் ஏந்தி இருத்தல்	"அங்கண் விசும்பின் உருமெறிந்(து) எங்கும் பெருமலை தூறெறிந் தற்றே அருமணிப்பூணேந்(து) எழில் மார்(பு) இயல்திண்டேர்ச்", களவழி. 6 : 3 - 5
இலங்கு கதிரிலைப் பூணேந்துதல்	விளங்கா நின்ற ஒளி யுடைய இலை வடிவ மாகச் செய்யப்பட்ட அணிகலன் அணிந்து இருத்தல்	"மலிபெருங் காதன் மடமொழிப் பாவை இலங்கு கதிரிலைப்பூ ணேந்து முலையாகத்து நலங்கிளர் நறுநுத னாறிருங் கூந்தல் மாசில் கற்பின் வாசவத்தை", பெருங். 4 : 5 : 94 - 97
இலையார் எரி மணிப்பூண் ஏந்துதல்	இலைவடிவமாக அமைந்த ஒளி விளங்கும் மாணிக்க மணிகளாற் செய்த ஆபரணத்தை அணிந்திருத்தல்	"இலையார் எரிமணிப் பூண் ஏந்து முலையும் சிலையார் திருநுதலும் செம்பசலை மூழ்க", சீவக. 732 : 1 - 2
கதிர்த்த பூண் ஏந்துதல்	மார்பில் சிறந்த ஆபரணத்தை அணிதல்	"பொதுக் கடிந்து உரிமை செய்யும் பூங்குழல் சேடி மாரில் கதிர்த்த பூண் ஏந்து கொங்கைக் கமலினி அவதரித்தாள்", திருத். 277 : 5 - 8
பூணேற்றல்	அணிகலன்களை மார்பில் அணிதல்	"வீர நோக்கினர் வேழமொடு வீழவும் பூணேற் றகன்ற புடைகிள ரகலத்துத் தாமேற் றழுத்திய சத்தி வாங்கிப்", பெருங். 3 : 20 : 61 - 63

பூண் ஒளிர்தல்	அணிகலன் ஒளி விடுதல்	"காணினும், காலின் மேல் அரிய காட்சியன் **பூண் ஒளிர்** மார்பினன்; யாவன் போலுமால்?", கம்ப. 7381 : 3 - 4
இலைப்பூண் கவவுதல்	இலைத் தொழிலை உடைய அணிகலன் கள் சூழ்தல்	"**இலைப்பூண் கவை**இய வெழுது கொடியாகத்து", பெருங். 1 : 40 : 144
பூண் குலாவுதல்	மார்பில் அழகிய பொன் அணி அணிதல்	"**பூண்குலாம்** வனமுலைப் பூமி தேவிதான் காண்கலேன் கடியன கண்ணினால் எனாச்", சீவக. 2233 : 1 - 2
பூண்கொள்ளுதல்	அணிகலன்கள் தாங்குதல்	"பொன்றுஞ் சாகத்துப் பூங்கண்கள் போழ்ந்த புண் இன்றிப் **பூண்கொள்** இளமுலைச் சாந்தலால்", சீவக. 1332: 1 - 2
பூண் சுடர் வருதல்	பூண் ஒளி வீசுதல்	"**பூண் சுடர் வர** எழுமுடி கெழீஇய", பதிற். 16 : 16 - 17
பொற்பூண் சுமத்தல்	பொன்னணி தாங்குதல்	"**பொற்பூண் சுமந்த** புணர் மென்முலைக் கோடு போழ", சீவக. 19 : 1; "**பொற்பூண் சுமந்து** பொரு கோட்டை அழித்து", சீவக. 2340 : 1 - 2
பூண்சேர்தல்	மார்பில் அணிகலன் அணிதல்	"நறுநீர் விழவின் நாளணி யகலம் **பூண்சேர்** மார்வன் காண்பான் போலக்", பெருங். 1 : 43 : 87 - 88
பூண் தயங்குதல்	அணிகலன் விளங்குதல்	"தீண்டலுந் தேறலுந் திருத்தகைத் தன்றெனப் **பூண்ட யங்** கிளமுலைப் புனை வளைத்தோளி", பெருங். 3: 22: 165 - 166
பூண் தாங்குதல்	மார்பணியை அணிந்திருத்தல்	"**பூண் தாங்கு** இளமுலைப் பொற்றொடி", பழ. நா. 84 - 3; "ஆண்டொன்று வேண்டுது மென்ப துரையற்க **பூண்டாங்கு** மார்ப! பொருடக்கார் வேண்டாமை வேண்டிய தெல்லாந் தரும்", பழ. நா. 273 : 2 - 4; "வேண்டாது பிரிந்த விரிபுனல் ஊரன் **பூண்தாங்கு** அகலம் புல்குவன் என்போய்ஞ்", 11ஆம் திரு. 291 : 11 - 12
பூண் திகழ்தல்	அணிகலன் விளங்கா நிற்றல்	"ஓடரிக் கண்ணி யுலாவர நோக்கிப் **பூண்டிகழ்** கொங்கைப் புயலேர் கூந்தல்", பெருங். 4 : 12 : 264 - 265
இலைப்பூண் திளைத்தல்	இலைத் தொழில் அமைந்த அணிகலன் சிறத்தல்	"**இலைப் பூண் டிளைக்கு** மேந்திள முலையள்", பெருங். 3 : 5 : 22
கொடிப் பூண் திளைத்தல்	மார்பில் நீண்ட வடி வினவாகிய அணி கலன் ஒளி வீசுதல்	"நாட்டுப் பெயர் பொறித்த சூட்டுப்பொலி சுடர் நுதல் **கொடிப்பூண் திளைக்கும்** கோல ஆகத்து", பெருங். 2 : 4 : 10 - 11
பூண்துயல்வரல்	பூண் புரளுதல்	"தாரும் **பூணும்** மார்பிடைத் **துயல்வர**", பெருங். 2 : 10 : 110
இலை பூண் கவைஇ முலைப் புறம் புதைதல்	மார்பை அகத்திட்டு மறைத்துப் பொன்னால் இயன்ற நெடிய அணி கலன்களை அணிதல்	"**இலைப்பூண் கவைஇ முலைப்புறம் புதைஇ**", பெருங். 2 : 4 : 119
பொலங்கல மணிப் பூண் பொலிதல்	பொன்னணிகலனும் மணியணிகலனும் பொலிவுறுதல்.	"வளர்ந்தேந்திளமுலை மருங்கி வர்ந்து கிடந்த **பொலங்கல மணிப்பூண் பொலியப்** புல்லியவள்", பெருங். : 40 : 179 - 180
பூண் பொலிதல்	பூண் ஒளி வீசுதல்	"மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத் தொன்றுபடு நறுத்தார் **பூணொடு பொலிய**", குறிஞ். 121 - 122
பூண்கொண்டு மன்னுங் கழுத்தை மகிழ்வித்தல்	ஆபரணத்தை எடுத்து நிறைந்த கழுத்தில் அணிந்து மகிழ்தல்	"பொன்னரி மாலை தலைக்கணிந்து **பூண்கொண்டு மன்னுங் கழுத்தை மகிழ்வித்தாள்**", 11ஆம் திரு. 300 : 140
பூண் மின்னுதல்	அணிகலன்கள் மின்னுதல்	"தாள் மின்னு வீங்கு கழலான் தனைச் சூழமற்றப் **பூண் மின்னு** மார்பன் பொலிந்தாங்கிருந்தான் விசும்பிற்", சீவக. 882 : 2 - 3

பூண் மொய்த்தல்	மார்பணி நிறைந்து இருத்தல்	"வாண் மொய்த்தானை அவன் தம்பியும் தோழன் மாரும் **பூண்மொய்த்த** பொம்மன் முலையாரும் புலம் துறப்ப", சீவக. 28 : 2 - 3
பூண்முலைப் பிறழ்தல்	மார்பில் அணிகள் பிறழ்தல்	"வாணுதற் பட்டம் மின்ன வார்குழை திருவில் வீசப் **பூண்முலைப் பிறழப்** பொற்றோடிடவயின் நுடங்க ஒல்கி", சீவக. 1257 : 1 - 2
பூண் வடுப் பொறித்தல்	அணிகள் வடுப்பட அழுத்துதல்	"திகழ்ந்து ஏத்து அகலத்துச் செஞ்சாந்து சிதையப் **பூண் வடுப் பொறிப்ப**", பெருங். 2 : 16 : 86 - 87
பூண் விளங்குதல்	பூண் ஒளி வீசுதல்	"மெய் பெறா மழலையின் **விளங்கு பூண்** நனைத்தர", கலித். 81 : 2
ஆரமும் பூணும் சேர்த்தல்	மார்பில் முத்து மாலைகளையும் அணிகலன்களையும் அணிவித்தல்	"அலர்முலைக் குருதிச் சாந்தும் **ஆரமும் பூணும் சேர்த்திக்**", சீவக. 673 : 3
தாழ்ந்த ஆரமும் பூணும் மின்னுதல்	முத்து வடமும் பொற் பூணும் ஒளிவிட அணிந்திருத்தல்	"தாரணி பரவை மார்பில் குங்குமம் எழுதித் **தாழ்ந்த ஆரமும் பூணும் மின்ன** அருவிலைப் பட்டினங்கண் ஏற்படக் கிடந்த பொன்ஞாண் இருள் கெட விழிப்ப வெய்ய", சீவக. 2280 : 1 - 3
பல் கதிர் ஆரமும் பூணும் பருமித்தல்	பல வண்ணம் ஒளிவிடும் முத்துமாலையையும் (முத்துச் சரங்கள்) அணிகளையும் அணிதல்	"**பல்கதிர் ஆரமும் பூணும் பருமித்துக்** கொல்சின வெந்தொழிற் கோடேந்திளமுலை", சீவக. 2113 : 1 - 2
புரிமுத்தாரமும் பூணும் புரளுதல்	ஆரமும் அணிகலனும் புரளுதல்	"**புரிமுத்தாரமும் பூணும் புரள** எரிமணிக் கடக முங் குழையும் இலங்க", பெருங். 2 : 18 : 100 - 101
பொற்றாரும் ஆரமும் மிளிர்தல்	பொன் மாலைகள் மிளிர்தல்	"குண்டல மிலங்க வாங்கிக் குனிசிலை யுறையி னீக்கிக் கொண்டவன் கொழும் **பொற்றாரு மாரமு மிளிர** வேறி", சீவக. 2192 : 1 - 2
அடர்கதிர்ப் பசும் பொற் பூணும் ஆரமும் அகலத்து ஒல்குதல்	செறிந்த ஒளியை உடைய பொன் அணியும் மாலையும் மார்பில் விளங்குதல்	"**அடர்கதிர்ப் பசும்பொற் பூணும் ஆரமும் அகலத்தொல்கப்** படர்சிலை குழைய வாங்கிப் பன்றியைப் பதைப்ப எய்தான்", சீவக. 2182 : 3 - 4
அரும்பொற் பூணும் ஆரமும் இமைத்தல்	பொன்னாலான அணியும் முத்துமாலையும் ஒளி விடுதல்	"**அரும்பொற் பூணு மாரமு மிமைப்பக்** கணி களகன் கோயில் ஒருங்கு கூடிச் சாதகஞ்செய்", சீவக. 308 : 1 - 2
பைம்பூண் முத் தொடு முரணுதல்	மணிகள் சுடர்வீசும் பசிய மணியணிகலன் கள் முத்து மாலை யோடு மாறுபட்டு தவழா நிற்றல்	"அணியறலன்ன வைம்பாற் கூழையர் மணியுமிழ்ந் திமைக்கும் வயங்கு கொடிப் **பைம்பூண் முத்தொடு முரணித்**தத்து மாகத்து", பெருங். 1 : 41 : 52 - 54

பசும்பொற் பல்படை

பசும் பொற் பல்படை இலங்குதல்	பசியபொன்னால் ஆகிய ஐம்படை விளங்குதல்	"பசும்பொற் பல்படை இலங்கும் கழுத்தினன்", பெருங். 5 : 8 : 29

பொற்றோரை

பொற்றோரை சுடர்தல்	பொன்வடம் ஒளி ஒளிவீசுதல்	"தனிப் பொற்றோரைத் தகை யொளி சுடர", பெருங். 1: 34: 205

பொன்	பொன்னாபரணம்	"பிறிதினால் மாண்ட தெவனாம்? பொறியின் மணி பொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன அணி யெல்லாம் ஆடையின் பின்", பழ. நா. 26 : 2 - 4
பொன் தாலி	தாலி	"பொன்தரத் தாரும் என்று புகன்றிட வணிகன் தானும் என் தர இசைந்தது என்னத் தாலியைக் கலயர் ஈந்தார்", திருத். 847 : 1 - 4
எரிபொன்	ஒளி விளங்கும் பொன் மாலை	"இங்கித நிலைமை நோக்கி முறுவலித் தெரிபொன் மார்பன் நங்கையைக் காக்கும் வண்ண நகாநின்று மொழிந்து பேழ்வாய்ச்", சீவக. 765 : 1 - 2
அம்பொன் மணி நூல்	திருமங்கலிய சூத்திரம்	"அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்து உயிர்க்கும் அருள்தாங்கி இம்பர் மனைத் தவம் புரிந்து திலக வதியார் இருந்தார்", திருத். 1304 : 5 - 8
பொன் மாலை	மார்பணி	"பொன் மாலை பெய்பூங்கழலாற்கு பெண்ணரசி ஏந்தினாளே", சீவக. 736 : 3 - 4
செம்பொன் மாலை	பொன்னாலான மாலை	"துணைமலர்க் கண்ணியும் செம்பொன் மாலையும் இணைமலர்த் தாரினான் இடறி யேகினான்", சீவக. 1621: 3 - 4
பசும்பொன் மாலை	புதிய பொன் மாலை	"அசும்பு பொன்வரை ஆய்மணிப் பூண்களும் பசும் பொன் மாலையும் பட்டுழிப் பட்டவை", சீவக. 533: 1-2; "வென்றவன் அகலம் பூட்ட விளங்கு ஒளி மணி செய் செப்பின் நின்றுஎரி பசும்பொன் மாலை போந்தது நெறியின் பின்னர்", சீவக. 630 : 1 - 2; "பைந்துகின் மகளிர் மேவார் பாசிழை பசும்பொன் மாலை சிந்தியே கரந்தார்", சீவக. 2973 : 2 - 3
வீறுயர் பசும் பொன் மாலை	மாற்றற்ற பசும்பொன் மாலை. இம்மாலை இராசாவின் பக்கற் பெற்ற பச்சைமாலை (அரும்பதம்) பசும் பொன் கிளிச்சிறை (அடி)	"வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென", சிலப். 3 : 165 - 166
பைம் பொன் மாலை	பொன் மாலை	"பதினறு மணியும் பைம் பொன் மாலையும் நுதியிற் பெய்து விதியுற இரீஇப்", பெருங். 2 : 4 : 94 - 95
தாழ் தரு பைம் பொன் மாலை	தொங்கும் பசிய பொன்னால் ஆன மாலை	"தாழ்தரு பைம்பொன் மாலை தடமலர்த் தாம மாலை வீழ்தரு மணிசெய் மாலை இவற்றிடை மின்னின் நின்று சூழ்வளைத் தோளி", சீவக. 1452: 1 - 3
புரிகதிர் பொன் செய்மாலை	ஒளிமிக்க பொன்னால் செய்த மாலை	"சொரிகதிர் முத்த மின்னுந் துணை முலைத் தடத்தில் வீழ்ந்தான் புரிகதிர்ப் பொன்செய் மாலைப் புகைநுதிப் புலவு வேலான்", சீவக. 1352 : 3 - 4
பொன் அணிதல்	பொன்னணி அணிதல்	"பொன்னணி மார்பன் போர்த்தொழில் அடங்க", பெருங். 2: 56: 51; "பொன்னணி மார்பன் முன்னை விடுதலின்", பெருங். 2: 19: 65; "மின் அணிந்துகத் திருத்தி மென்முலைப் பொன் அணிந்து பூஞ் சுண்ணந்தைவர நன் மணிக்குழை இரண்டும் நக்கவே", சீவக. 3127: 2 - 4
பைம்பொன் ஆர்தல்	பொன் அணி அணிதல்	"பைங்காசும் முத்தும் பவளத்தொடு பைம்பொன் ஆர்ந்த பொங்கார் முலையார்", சீவக. 2341 : 2 - 4
செம்பொன் உறுதல்	செம்பொன் ஆகிய அணி அணிந்து இருத்தல்	"அன்ன ஒரு கணை தெரிந்து செம்பொன் உறும் சுடர்க் கழுத்தை நோக்கி, நூக்கினான், உருமின் வெய்யோன்", கம்ப. 9110 : 3 - 4

பொன் சுமந்து ஏந்துதல்	பொன்னணி அணிதல்	"பொருமத யானைப் புணர்மருப் பேய்ப்பப் பொன் சுமந்தேந்திய முலையார்", சீவக. 2111 : 1 - 2
ஒண்பொனூல் பூட்டுதல்	பொன்னூல் அணிதல்	"ஒண்பொன் நூல் ஓங்கு தாரொடு பூட்டி", சீவக. 2519 : 2
செம்பொன் மாலை பூட்டுதல்	அழகுடன் கூடிய செம்பொன் மாலையை அணிவித்தல்	"நாகத்துப் படங்கொள் அல்குல் நலங்கிளர் செம்பொன் மாலை மேகத்துப் பிறந்தோர் மின்னு மணிவரை .... ஆகத்துப் பூட்டி மைந்தன் அடி தொழுது", சீவக. 738: 1-3
பொன்னரி மாலைப் பூணுதல்	பொன் மாலை அணிதல்	"பொன்னரி மாலையைப் பூண்பார்", 11ஆம் திரு. 300 : 72
பொன்புனை வெண் தரளத்து அணி சிறத்தல்	செம்பொன்னால் அலங்கரிக்கப்பட்ட வெண்மையான முத்தினாலான அணி ஒளி வீசுதல்	"செய்ய பொன்புனை வெண்தரளத்து அணி சிறக்கச் சைவ மாமறைத் தலைவர் பால் பெறும் தனிக் காளம்", திருத். 2124 : 1 - 2
மங்கலம்		
மங்கலம்	மங்கல நாண்	"மாதர் அருங்கலமும் மங்கலமும் சிந்தித் தம் கோதை புடை பெயரக் கூற்று அனைய கண் சிவப்ப", கம்ப. 1699: 1 - 4; "இற்றை நாள் அளவும், அன்னாய்! அன்றுநீ இழித்து நீத்த மற்றை நல் அணிகள் காண், உன் மங்கலம் காத்த மன்னோ!", கம்ப. 5262 : 3 - 4; "பெண்ணிற்கு இசையும் மங்கலத்தில் பிணித்த கயிறே இடைபிழைத்த கண்ணில் கண்டவன் பாசம் எல்லாம் இட்டு, கட்டினார்", கம்ப. 5924 : 3 - 4
மங்கலவணி	தாலி; இயற்கை அழகு (அரும்பதம்.) புனையாத அழகு; மாங்கலியம் என்பாரு முளர் (அடி.ந.)	"மறுவின் மங்கலவணியே யன்றியும் பிறிதணியணி யப் பெற்றதை யெவன் கொல்", சிலப். 2 : 63 - 64; "மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்", சிலப். 4 : 50; "மங்கல அணியை நீக்கி, மணி அணி துறந்து", கம்ப. 4320: 1 - 2
மஞ்சரி		
மஞ்சரி	மார்பு மாலை	"மஞ்சரி இலம்பகம் மார்பில் அணிமாலை", நிக. பி. 9: 38
மதாணி		
மதாணி	திண்ணிய ஒளியினை உடைய பேரணி	"திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை யோம் பினர்த் தழீஇத் தாம் புணர்ந்து முயங்கி", மது. 461-462; "பெரும் பூண் மதாணி பேர் அணிகலமே", நிக. தி. 7: 78; "பொலம் கலம் நாண் இழை பூண் அணி மதாணி பொன்னினும் மணியினும் செய் ஆபரணம்", நிக. தி. 7: 79
நித்தில மதாணி	நித்தில மதாணி	"பூணணி கவைஇய ஆர் அணி நித்தில நித்தில மதாணி அத்தகு மதிமறுச்", பரி. 2 : 29 - 30
மணி		
அருமணி	பெறற்கரிய மணி அணிகலன்	"திருமலர் நெடுங்கண் டென்பனி யுறைத்தந் தருமணி யாகத் தகல நனைப்ப", பெருங். 5 : 3 : 157 - 158
ஒண்மணிக் காசிற் பன்மணி	ஒள்ளிய மணியும் காசும் கலந்த பன் மணி மாலை	"கழுமடிக் கலிங்கம் வழுவில வாங்கி ஒண்மணிக் காசிற் பன்மணிப் பாவை கண்ணிய காதல் உண்ணெகிழ்ந்து விரும்பி", பெருங். 2: 7: 156 - 157
கதிர் மணி	மணி அணிகலன்	"உலாவு முற்றத் தூழ் சென்றாட நிலா விரிகதிர்மணி நின்று விளக்கலும் பள்ளி தன்னுள் வள்ளிதழ்க் கோதை யொடு", பெருங். 3 : 14 : 93 - 95

பதினாறு மணி	பதினாறு கோவையினையுடையதொரு அணிகலன்	"ஆனெயும் வெண்ணெயும் அனையவை பிறவும் பதினாறு மணியும் பைம்பொன் மாலையும் நுதியிற் பெய்து விதியுற இரீஇப்", பெருங். 2 : 4 : 93 - 95
மணி அணி	மணியாபரணங்கள்	"முத்து அணி அணிவாரும் மணி அணி முனிவாரும்", கம்ப. 1195 : 1 - 2
மும் மணிக் காசு	மூன்று வகை மணிகள் பதித்த பொற்காசாலாகிய ஒரு வகை அணிகலன்	"பழவிறன் மூதூர் விழவணி நோக்கி மும்மணிக் காசும் பன் மணித் தாலியும் பொன்மணிக் கொடியும் பூணுஞ் சுடர மதன மஞ்சிகை நின்றோட் கண்டு", பெருங். 5 : 9 : 48 - 51
முழு மணிக் காசு	மணிமாலை	"பத்திக் கடிப்பும் பவழத்திரியும் முத்து வடமும் முழு மணிக் காசும் பன் மணித் தாலியும் மென்முலைக் கச்சும்", பெருங். 3 : 17 : 163 - 165
மணி மாலை	மார்பில் அணியும் மாமணி மாலை	"விரி மாமணிமாலை விளங்கு", சீவக. 217 : 1
மின்தவழ் மணி வரை மாலை	ஒளி பொருந்திய மணி மாலை	"மின்தவழ் மணிவரை மாலை மார்பனைப் பொன் தவழ் இளமுலை பொருது புல்லுநாள்", சீவக. 1703: 1-2
வீழ்தரு மணி செய்மாலை	விருப்பம் தோற்றுவிக்கும் மணிகளால் செய்யப்பட்ட மாலை	"தாழ்தரு பைம்பொன் மாலை தடமலர்த் தாம மாலை வீழ்தரு மணி செய் மாலை இவற்றிடை மின்னின் நின்று சூழ்வளைத் தோளி", சீவக. 1452 : 1 - 3
மாமணி மார்பு	இரத்தின மாலை மார்பு	"தேம அலங்கல் அணி மாமணி மார்பின் செம்மல் அம்கயல்கள் செங்கமலத் தண் பூமலங்க எதிர்பாய்வன மாடே", திருத். 238 : 1 - 3
மணியியல் ஆரங் கதிர்வித்து ஒளிர்தரல்	மணியோடு கூடிய மாலை ஒளி வீசுதல்	"அணியியல் கமுகை அலங்கரித்தது போல் மணியியல் ஆரங் கதிர்விரித்து ஒளிர்தர மணிவளை தாங்கிய அணிகெழு மென்தோள்", 11ஆம் திரு. 896 : 51 - 52
மணி திகழ்தல்	மார்பில் மணி திகழ்தல்	"உண்மகிழுரோணியொ டொளித்தது போலவும் திகழ் மணி மார்பனக நகரொடுங்கப் பொருள் புரி யமைச்சர்", பெருங். 3 : 14 : 10 - 12
மணி வலம் வருதல்	மணி மாலை அசைதல்	"அருமணி வலம் வரும் அம்பொன் கொம்பனாள்", சீவக. 822 : 3
பருமணி பூணுதல்	பருத்த மணியை அணிந்து இருத்தல்	"கல்லால் நிழற்கீ ழிருந்தான் கண்டாய் பருமணி மாநாகம் பூண்டான் கண்டாய் பவளக் குன்றன்ன பரமன் கண்டாய்", தேவா. திருநா. 6 : 73 : 1 : 2 - 4
மணி ஆரம் சாத்துதல்	மணி மாலை அணிதல்	"வளவர் பெருமான் மணிஆரம் சாத்திக் கொண்டு வரும் பொன்னிக் கிளரும் திரைநீர் மூழ்குதலும்", திருத். 3236 : 1 - 3
மணி கிளர் ஆரம் தாரொடு துயல் வருதல்	மாணிக்கம் விளங்குகின்ற முத்துவடமும் தாரும் அசைதல்	"அணிகிளர் நெடுவரை அலைக்குநின் அகலத்து மணிகிளராரந் தாரொடு துயல்வர", கலித். 135 : 17 - 18
மணிப் பல்கலம் பூணுதல்	ஒளிரும் மணி பதித்த பலவாகிய அணிகலன் அணிந்து இருத்தல்	"நீண்ட குறங்கி நிழன்மணிப் பல்கலம் பூண்ட வாகத்துப் பூந்துகி லல்குல்", பெருங். 3 : 8 : 53 - 54
மணி ஆரத்துடன் ஒரு காழ் முத்து இலங்குதல்	மணிமாலை இலங்குதல்	"மலர்ந்தேந் தகலத் திலங்கு மணி ஆரத்துடன் கிடந்திமைக்கும் ஒரு காழ் முத்தினர்", பெருங். 2 : 6 : 125 - 126
முத்தவள்ளியோடு மும்மணி சுடருதல்	முத்த வள்ளி என்ற முத்துமாலையையும் மும்மணி மாலையையும் மார்பில் ஒளி வீசும்படி அணிதல்	"கச்சியாப் புறுத்த கால்வீங் கிளமுலை முத்தவள்ளி யோடு மும்மணி சுடர", பெருங். 1 : 34 : 202 - 203

மனவுக் கோப்பு

மனவுக் கோப்பு	சங்குமணியினாலாகிய கோவை	"அகவன் மகளே யகவன் மகளே மனவுக் கோப்பு அன்ன நன்னெடுங் கூந்தல் அகவன் மகளே", குறுந். 23 : 1 - 2
மனவு இடை ஆமைத் தொடையல்	மணியின் இடையில் ஆமையோடு சேர்த்துக் கோக்கப்பட்ட மாலை	"மனவு இடை ஆமைத் தொடையல் அணி மார்பர் வழித் தொண்டு கனவிடை ஆகிலும் வழுவாக் கடன் ஆற்றிச் செல்கின்றார்", திருத். 3990 : 5 - 8

மாலை

மாலை	மாலை	"தாரன் மாலையன் தமனியப் பூணினன்", சிலப். 15: 157; "தூயவள் உவகை போய் மிக, சுடர்க்கு எலாம் நாயகம் அனையது ஓர் மாலை நல்கினாள்", கம்ப. 1458 : 3 - 4; " ஆரம் பதக்கம் கண்டிகை மாலை முலை மேல் அணி வடம் ஆகும்", நிக. தி. 7 : 20
அலங்கல் மாலை	பொன் சரடு	"அழல் செய் தடத்துள் மலர்ந்த அலங்கல் மாலை யதனை நிழல் செய் நீர் கொண் டீர்ப்ப நெடுங்கண் ணிணையின் நோக்கி", சீவக. 918 : 1 - 2
ஆரமாலை அணிதல்	முத்து மாலை அணிந்திருத்தல்	"அறனிழலாய் உலகளிக்கும் நின் ஆரமாலை யணி வெண்குடைப் புறனிழலின் அயலேனோயான்", சீவக. 2590 : 1 - 3
மாணிக்க மாலை	சிவந்த மாணிக்க மாலை	"மாணிக்க மாலை மலர்ந்து எழு மண்டலம் ஆணிப் பொன் நின்று அங்கு அமுதம் விளைந்தது", திருமந். 2064 : 1 - 2
குளிர் முத்தம்	குளிர்ந்த முத்து மாலை	"தானடைந் திருந்த காவிற் பாடினாள் தனிமை தீர்வான் கூனடைந் திருந்த திங்கட் குளிர்முத்த முலையி னாளே", சீவக. 1355 : 3 - 4
முத்த மாலை	முத்து மணி மாலை	"நகில் அணி முத்த மாலை நகைமுக மடவார் வாழ்த்த இகல் இல்சீர் மறையோர் சூழ இனிதின் அங்கு இருந்த வேலை", திருத். 3134 : 5 - 8
முத்து	முத்து வடம்	"முலைக்கண்ணும் முத்தும் முழுமெய்யும் புல்லும் இலக்கணம் யாதும் அறியேன்", நாலடி. 399 : 1 - 2; "முத்தின ருத்தியர் மும்மணிக் காசினர்", பெருங். 1: 34: 121; "வண்ணமே கலைகள் ஆர்ப்ப வான்சிலம் பொலிப்ப முத்தும் கண்ணியும் பசும்பொன் நாணும் கதிர் முலை புடைப்பக் காவலர் அண்ணலங் குமரன் தன்னோ டாயிழை யாடினாளே", சீவக. 1689 : 2 - 4
முத்து அணிதல்	முத்தாரம் அணிதல்	"இளமுலை மேல் சாந்தெழுதி முத்தணித்து பூவும் சூட்ட", சீவக. 679 : 3
வயங்கு ஒளி முத்தம் வாங்கி அணிதல்	விளங்குகின்ற ஒளி உடைய முத்து மாலையை அணிதல்	"மணியின் அணி நீக்கி வயங்கு ஒளி முத்தம் வாங்கி அணியும் முலையார், அகில் ஆவி புலர்த்தும் நல்லார்", கம்ப. 887 : 1 - 4
முத்தம் ஏந்துதல்	முத்து மாலை அணிதல்	"முன்னரே வளர்கின் றாற்போல் முகில் முலை முத்தம் ஏந்திப் பொன்னறி மணியின் பொங்கிக் குழல்புறம் புடைப்ப ஓடிப்", சீவக. 2530 : 2 - 3
கதிர்பேர் துணை முத்தந் திருவில் உமிழ்ந்து சுடர்தல்	ஒளிமிக்க முத்துமாலை மார்பில் வானவில் போல ஒளி திகழக் கிடத்தல்	"உடுத்த சாந்தின் மிசைச் செக்கர் ஒளிகொள் முந்நாட் பிறையேப்பத் துடிக்குங் கதிர்பேர் துணைமுத்தந் திருவில் உமிழ்ந்து சுடர்ந்தனவே", சீவக. 2965 : 5 - 8
முத்தஞ் சூடுதல்	முத்தணிகளைச் சூடுதல்	"மதுநிறை பெய்து விம்மு மணிக்குடம் இரண்டு போல நுதிமுக முத்தஞ்சூடி நோக்குநர் ஆவிவாட்ட", சீவக. 2823 : 2 - 3

முத்துரிஞ்சி மின்னுதல்	முத்து மாலை ஒளி வீசல்	"முலையுலாய் நிமிர்ந்தமொய்தார்... முத்துரிஞ்சி மின்ன", சீவக. 2976 : 2
முத்தம் சூழ்தல்	முத்து மாலை அணிதல்	"கோட்டு இளந்திங்கள் சூழ்ந்து குலவிய திருவில் போல மோட்டு ஒளி முத்தம் சூழ்ந்து முருகு கொப்புளிக்கும் தாரோய்", சீவக. 404 : 1 - 2
முத்தம் சேர்த்தல்	முத்து வடத்தை மார்பில் அணிதல்	"எரிமணிச் சுண்ணம் மின்னும் இருஞ்சிலை முத்தம் சேர்த்தித் திருமணி முலையின் நெற்றிச் சிறுபுறம் செறியத் தீட்டி", சீவக. 625 : 1 - 2
முத்தம் துயலுதல்	முத்து வடம் அசைதல்	"தோளார் முத்தும் தொன்முலைக் கோட்டுத் துயல் முத்தும் வாளா ருண்கண் வந்திழி முத்தும் இவை சிந்த", சீவக. 1093 : 1 - 2
தெரிந்துகோத் தணிந்த சொரிகதிர் முத்தம் மின்னுதல்	தேர்ந்து கோர்த்த ஒளியுடைய முத்து மாலை மின்னுதல்	"எரிகதிர் திரட்டி வல்லான் தெரிந்துகோத்தணிந்த போலுஞ் சொரிகதிர் முத்த மின்னுந் துணை முலைத் தடத்தில் வீழ்ந்தான்", சீவக. 1352 : 2 - 3
பந்தி வெண் முத்தின் அணி கலன் முழுநிலா பரப்புதல்	வரிசையாகக் கோக்கப் பெற்ற முத்துக்களால் ஆகிய மாலை முதலிய ஆபரணங் கள் சந்திரனது ஒளியைப் பரவச் செய்தல்	"சிந்து ராகத்தின் செறி துகில் கச்சொடு செறிய பந்தி வெண் முத்தின் அணிகலன் முழுநிலாப் பரப்ப", கம்ப. 5847 : 1 - 2
முத்தணிதல்	முத்து மாலை அணிதல்	"முத்தணி கொங்கைகள் ஆட ஆட மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்", திருவாச. திருப்பொற். 10: 1 - 2; "இகலேந்து இளமுலைமேல் சாந்தெழுதி முத்தணிந்து பூவும் சூட்ட", சீவக. 679: 3; "கோதை முத்தணிந்த மார்பன் கூரெயிறிலங்க நக்காங்கு", சீவக. 694: 2; "வித்தக இளையர் எல்லாம் விழுமணிக் கலன்கள் தாங்கி முத் தணிந் தாவியூட்டி முகிழ்முலை கச்சின் வீக்கிப்", சீவக. 971 : 2 - 3; "அமுது நுண்ணிடை நைய அலர் முலை முழுதும் குங்கும முத்தொ டணிந்தபின் தொழுது கோதையுங் கண்ணியுஞ் சூட்டினார்", சீவக. 1317 : 1 - 3
முத்து அணி அணிதல்	முத்துக்களாலான நகைகளை அணிதல்	"முத்து அணி அணிவாரும் மணி அணி முனி வாரும்", கம்ப. 1195 : 1 - 2
முத்து அலைத்தல்	மார்பில் முத்து மாலை அசைதல்	"மருப்பியல் செப்புங் குரும்பையு மிகலி உருத்தெழு மென் முலை முத்தலைத் தனகொல்", பெருங். 1: 33 : 82 - 83
முத்துப் பூணுதல்	முத்து மாலையை அணிதல்	"தென் பவ்வத்து முத்துப் பூண்டு", புறம். 380 - 1
தொகுகதிர் முத்துத் தொடை கலிழ்பு மழுகுதல்	ஆணிமுத்து வடங்கள் நிறம் மாறுதல்	"தொகுகதிர் முத்துத் தொடை கலிழ்பு மழுக", பரி. 6 : 16
முத்து முலைப் படுதல்	முத்து மாலையை மார்பில் அணிதல்	"வலைப்படும் மான் என மஞ்ஞை எனத்தம் முலைப் படு முத்தொடு மொய்குழல் வேய்ந்த", சீவக. 424: 1 - 2
முத்து வயிரமணி மாணிக்க மாலை	முத்தினாலும் வைரத் தினாலும் மாணிக்க மணிகளாலும் செய் யப் பெற்ற மாலை	"முத்து வயிரமணி மாணிக்க மாலைகண் மேல் தொத்து மிளிர்வன போல் தூண்டு விளக்கேய்ப்ப", திருவி. 185 : 1 - 2
வயிர மாலை	வயிரத்தால் செய்த மாலை	"தேன்றலைத் துவலை மாலை பைந்துகில் செம்பொன் பூத்து ஞான்றன வயிரமாலை நகுகதிர் முத்த மாலை கான்றமிர் தேந்தி நின்ற கற்பகச் சோலை யார்க்கும்", சீவக. 140 : 1 - 3

வெண் கவடிக் கதிர் மாலை	ஒளி வீசும் மாலை	"கண்டத்து இடை வெண் கவடிக் கதிர் மாலை சேர", திருத். 708 : 1
மாலை முத்தமொடு அணிதல்	நூலாற் கட்டாத நுண்மையையும் பிணக்கத்தையு முடைய பொன்னரி மாலையை வெள்ளி தாகிய ஒளியை யுடைய முத்தத் தோடே சூடுதல்	"நூலின் வலவா நுணங்கரின் மாலை வாலொளி முத்தமொடு பாடினி யணிய", பொருநர். 161 - 162
மார்பில் சிறு தந்த மணித்திரள் மாலை தாழ்தல்	தந்தத்தாலாகிய மணி மாலை தாழ்தல்	"மார்பில் சிறு தந்த மணித்திரள் மாலை தாழத்", திருத். 709 : 1
வடம்		
வடம்	ஆரம்	"வடம் கொள் முலையாள் மழை மின்னுப் போல", சிலப். 7 : 18 : 3; "வடம் சுமந்து ஓங்கிய வளர் இள வன முலை", சிலப். 26 : 110; "வடங்களும், குழையும், பூணும் மாலையும் சாந்தும் யானைக்... யாற்றொடும் எடுத்த எலாம் அடங்கியது என்னில் என்னே! ஆழியின் ஆழ்ந்தது உண்டோ?", கம்ப. 4874 : 1
தாழ்வடம்	கழுத்தில் அணியப் பெறும் அணி வகை	"தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும் தாழ் வடமும்", திருத். 1410 : 1
நேர்வடம்	முத்துமாலை	"குழன்மலிந்த கோதை மாலை பொங்க வெங்கதிர் முலை நிழன்மலிந்த நேர்வடந்நிழற்படப் புடைத்தர", சீவக. 1952 : 1 - 2
மின்னு நிழல் மணி வடம்	மார்பில் ஒளிவிடும் மணி மாலை	"செருக்கயல் நெடுங்க ணாள் அத்திருமகன் காண்!. லஞ்சி நெருக்கித்தன் முலையின் மின்னு நிழல்மணி வடத்தை மாதர் பொருக்குநூல் பரிந்து சிந்தாப் பூவெலாம் கரிந்து வாட", சீவக. 1259 : 1 - 3
முத்தணி வடம்	முத்தாலியன்ற வடம்	"முத்தணி வடமுஞ் சித்திர வுத்தியும் நாணுந் தொடரும் ஏனைய பிறவும்", பெருங். 2 : 19 : 120 - 121
முத்தின் தாழ்வடம்	முத்துமாலை	"முத்தின்றாழ் வடமுஞ் சந்தனக் குழம்பு நீறுந்தன் மார்பினின் முயங்கப்", தேவா. திருஞா. 3: 120 : 7 : 1 - 2
முத்துவடம்	முத்துமாலை	"மகரிகை நிறைய வெகிர் முகமாக்கிப் பாடி மகளிர் விழையுஞ் சேடொளிப் பத்திக் கடிப்பும் பவழத் திரியும் முத்துவடமு முழுமணிக் காசும்", பெருங். 3: 17: 161 - 164; "முகிழ்நிலா விரிந்த முத்துவடக் கழுத் தினர்", பெருங். 1 : 41 : 59
திருத்தாழ் வடம் ஒளிமணி கோத்து அணிதல்	ஒளி வீசுகின்ற நீல மணியைக் கோத்து செய்யப்பட்ட வடத்தை அணிதல்	"அவ்வன்பின் ஒளிமணி கோத்து அணிந்த திருத் தாழ் வடமும் பைவன் பேர் அரவு ஒழியத் தோளில் இடும் பட்டிகையும்", திருத். 893 : 1 - 4
ஒளி வெண் திரள் கோவைத் தூய வடம் அணிதல்	முத்துமாலை அணிதல்	"கடல் அமுதக் குமிழி நிறைத்து துளங்கு ஒளிவெண் திரள் கோவைத் தூய வடம் அணிந்தது என", திருத். 3694 : 2 - 4
கழுத்திலோர் தனி வடங் கட்டுதல்	கழுத்தில் ஒப்பற்ற மணிமாலை அணிதல்	"கைக்கு வான் முத்தின் சரிவளை பெய்து கழுத்தி லோர் தனிவடங் கட்டி", திருவி. 183 : 1 - 2
வடம் கொள்ளுதல்	மாலை அணிதல்	"வடம் கொள் மென் முலை மாது ஒரு கூறனை", தேவா. திருநா. 5 : 8 : 6

நிரைசுடர் வடம் சாத்துதல்	மணி வடங்களை வரிசையாக அணிதல்	"நீள்ஒளி முழங்கைப் பொட்டு நிரைசுடர் வடமும் சாத்தி", திருத். 3116 : 5 - 6
பருத்த முத்து ஒழுங்கு கோத்த படர் ஒளி வடம் சாத்துதல்	பருத்த முத்தினால் கோக்கப்பட்ட முத்து வடத்தை அணிவித்தல்	"பருத்த முத்து ஒழுங்கு கோத்த படர் ஒளி வடமும் சாத்திப்", திருத். 3117 : 3 - 4
மண்ணிய நித்தில வடத்தொடு புரளும் பல்கலம் சுமத்தல்	மார்பில் அணிந்த முத்து வடத்தோடு கிடந்து புரளும் பிற அணிகலன்களையும் சுமத்தல்	"மண்ணிய நித்தில வடத்தொடு புரளும் பல் கலஞ் சுமத்தல் ஆற்றாது பையென", பெருங். 2 : 2 : 214 - 215
வடம் சூடுதல்	முத்து வடத்தைச் சூடுதல்	"வார்மீ தாடி வடம் சூடிப் பொற்பார்ந் திருந்த வன முலையார் ஏர்மீதாடிச் சாந்தெழுதி இலங்கு முந்நீர் வலம்புரி போல்", சீவக. 2359 : 1 - 2
கழுத்தில் தனிவடம் சேர்த்தல்	கழுத்தில் ஒப்பற்ற மாலையை அணிதல்	"கரியரே யிடந்தான் செய்யரே யொருபாற் கழுத்தி லோர் தனிவடஞ் சேர்த்தி", திருவி. 2 : 3 : 1 - 2
திரள் வடம் தாழ்தல்	ஒளி வீசுகின்ற முத்து மாலைகள் அணிதல்	"கொன் வளர் குவிமுலைக் கோட்டில் தாழ்ந்தன மின்வளர் திரள் வடம்", சீவக. 1008 : 1 - 2
தனிவடம் திளைத்தல்	ஒற்றைவடமான முத்து மாலை மின்னுதல்	"தார் கெழு மின்னும் வீசித் தனிவடம் திளைக்கும் மார்பின்", சீவக. 820 : 3
வடம் ஏர் பெறப் புனைதல்	வடத்தை அழகுற அணிதல்	"ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம் வாரும் வடமும் ஏர் பெறப் புனைந்து", 11ஆம் திரு. 878 : 28 - 29
நித்தில மணிவடம் பூணுதல்	முத்துமாலையையும் மணி வடத்தையும் அணிதல்	"கேண்மின் கேண்மின்கள் யாவரும் இனியன கேண்மின் பூண்மின் நித்தில மணிவடம் பூசுமின் சாந்தம்'', சீவக. 2389 : 1 - 2
நித்தில வட்டம் முலை மேற் கொள்ளல்	முத்து வடம் அணிதல்	"ஓதநித்தில வட்டம்... மென்முலை மேற் கொண்ட கோலமே", சீவக. 1323 : 4
பளிக்கு வடம் புனைதல்	படிக மணி மாலையை அணிதல்	"மங்குல் மதிவைப்பர் வான நாடர் மடமா னிடமுடையார் மாதராளைப் பங்கின் மிக வைப்பர்பால் போல் நீற்றர் பளிக்கு வடம் புனைவர் பாவ நாசர்", தேவா. திருநா. 6: 170 : 1 - 4
மனவு மணி வடம் பூணுதல்	அக்குமணியை வடமாக அணிதல்	"மயிற்கழுத்து மனவுமணி வடமும் பூண்டு", திருத். 697 : 4
மணிவடம் திருவில் வீசுதல்	மார்பில் அணிந்த மாலை வானவில் போன்று ஒளிவீசுதல்	"தென்வரைப் பொதியில் ஆரம் அகிலொடு தேய்த்த தேய்வை மன்வரை அகலத் தப்பி மணிவடந்திருவில் வீச", சீவக. 2187 : 1 - 2
முத்தொளிர் வடம் வளாவுதல்	முத்து மாலை அணிதல்	"மோட்டு முத்தொளிர் வடம் வளாயினர்'', சீவக. 2519 : 3 - 4

3.4. மார்பு

இன்று மார்பு மறைத்தலுக்கு என ஆடைகள் பயன்பட்டாலும் ஒப்பனையிலும் முக்கிய இடத்தை வகிப்பன இவையே. தவிர அணிகளும் ஒப்பனைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. சில நேரங்களில் சிலரால் பல அணிகலன்கள் பயன்படுத்தப்படுவதைக் காண்கிறோம். ஆயின் பண்டைத் தமிழரின் வாழ்வில் இயற்கைப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கலவைகள், அணிகலன்களே முக்கியத்துவம் பெற்று விளங்கின. சில நேரங்களில் மட்டும் ஆடைகளை ஒப்பனைக்குப் பயன்படுத்தியுள்ளனர். அணிகள் என்று நோக்க, முன்பகுதியில் சுட்டப்பட்ட கழுத்தணிகளே மார்பு அணிகளாகவும் பயன்பட்டது தெளிவாகிறது. கழுத்தணிகள் தொடர்பான சொற்கள் இவற்றின் வருணனைகள், மார்போடு தொடர்புபடுத்தும் விதம் போன்றன கழுத்தில் இடப்பட்டு மார்பில் தொங்கி ஒளிவீசும் தன்மையைச் சிறக்கக் காட்டுகின்றன. மாலைகளும் இத்தன்மையின.

இன்று உடலில் ஓவியம் வரைந்து ஒப்பனை செய்து கொள்ளும் கலையை ஆங்காங்கே காண்கிறோம். ஆயின் பழந்தமிழரிடம் இக்கலை பரவலாகக் காணப்பட்டதை இந்த மார்பு ஒப்பனைகள் தெளிவாகக் காட்டுகின்றன. அன்று இந்த ஓவியங்கள் பெற்ற இடத்தை இன்று ஆடை பெற்றிருப்பது கண்கூடு. அணிகளின் பயன்பாடு அன்று போன்று இன்று இல்லை எனினும் இன்றும் அதன் செல்வாக்குத் தொடர்ந்து வருகின்ற ஒன்றாகவே அமைகிறது.

அ. அல்லி

இளவனமுலை அல்லியொடு அப்புதல்	புதிய மலர்களில் காணப்படும் மகரந்தப் பொடிகளை மார்பில் அப்புதல்	"பல்லிதழ் எதிர்மலர் கிள்ளி வேறுபட நல்லிள வன முலை அல்லியொடப்பியும் பெருந்தோள் தொய யில் வரித்தும் சிறுபரட்டு... மனைவயின் இருப்பவர் மன்னே துனைதந்து", அகம். 389: 4 - 10

ஆ. இணர்

இளமுலை மருதிணர் கொட்டுதல்	மருதம் பூவை இள முலையில் அப்புதல்	"நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின் குவிமுகிழிளமுலைக் கொட்டி", திருமுருகு. 33

இ. தளிர்

பிண்டி அம் தளிர்க் கைக்கொண்ட சின்னங்கள் முலையின் அப்புதல்	அசோகின் அழகிய தளிர்களை நகங்க ளால் சிறுசிறு துண்டு களாகச் செய்து மார் பில் பொருத்துதல்	"பின்னங்கள் உகிரின் செய்து, பிண்டி அம் தளிர்க் கைக் கொண்ட சின்னங்கள் முலையின் அப்பி தேமலர் கொய்கின்றாரும்", கம்ப. 866: 1 - 4

ஈ. தாது

எதிர்மலர்க் குவளை இடுநீர் சொரிந்து சீதச் சந்தனம் தாதோடு அப்புதல்	குவளைமலர் இட்டு வைத்த குளிர்ந்த நீரை மெய்யில் தெளித்து குளிர்ந்த சந்தனம் மலர்த்தாது போன்றவற்றை அப்புதல்	"கதுமென உரைத்தது கவன்றனன் ஆகி எதிர்மலர்க் குவளை இடுநீர் சொரிந்து சீதச் சந்தனந் தாதோ டப்ப", பெருங். 2: 9: 155 - 157
புன்னைப் பூந்தாது மானும் பொற்பொடி அப்புதல்	புன்னை மலர்களின் மகரந்தப் பொடிகளை ஒத்த பொற்பொடி அப்புதல்	"புன்னைப் பூந்தாது மானும் பொற்பொடி அப்பி விட்டார்", கம்ப. 1133: 7 - 8

உ. மலர்

வேங்கையும் பொன்னும் பிதிர்தல்	வேங்கை மலரையும் பொற்சுண்ணத்தையும் மார்பில் சிதறுதல்	"திருக்கிளர் வேங்கையும் பொன்னும் பிதிர்ந்து" பெருங். 1 : 33 : 181

ஊ. மணப்பொருட்கள்

அளறு

அளறு	மணக்குழம்பு	"மார்புஅழி சாந்தின் மணல் அளறு பட்டன்று", பரி. 12: 97
அளறு நகில் அணிதல்	மார்பில் மணக்குழம்பு பூசுதல்	"நகிலணி யளறு நனிவண்டல் மண்ட", பரி. 6: 18
சாந்தகிலின் அளறு தோய்தல்	சந்தனக் கட்டையும், அகிற்கட்டையும் தேய்த்துச் செய்த அளறு பூசிக் கொள்ளல்	"தணல் முழுகு பொடியாடுஞ் செக்கர் மேனித் தத்துவனைச் சாந்தகிலின் அளறு தோய்ந்த பணைமுலையாள் பாகனை யெம் பாகர் மேய", தேவா. திருநா. 6: 83: 7: 5 - 7
சாந்தனத்தின் அளறு தாங்குதல்	சந்தனம் பூசுதல்	"தழும்புளவே வரை மார்பில் வெண்ணூ லுண்டே சாந்தமொடு சந்தனத்தின் அளறு தாங்கி அழுந்திய செந் திருவுருவில் வெண்ணீற் றானே அவனாகில் அதிகைவீர ட்டனாமே", தேவா. திருநா. 6 : 4 : 10 : 5 - 7
நகில் முகடு அளறு மெழுகுதல்	கலவைக் குழம்பை மார்பில் பூசுதல்	"நகில் முகடு மெழுகிய அளறு மடைதிறந்து திகை முழுதுங் கமழ முகில கடு கழி மதியின்", பரி. 10 : 73 - 74

ஆரம்

ஆரம்	சந்தனம்	"நானம் ஆர்ந்த நறைகுழல் ஆவியும் தேனும் ஆரமும் தேய்வையும் நாறுமால்", கம்ப. 4984 : 3 - 4
அரையுற்று அமைந்த ஆரம்	அரைத்த சந்தனம	"அரையுற்று அமைந்த ஆரம் நீவி புரையப் பூண்ட கோதை மார்பினை", அகம். 100 : 1
ஆர மார்பு	சந்தன மார்பு	"பாரத்து அன்ன ஆர மார்பிற் சிறுகோல் சென்னி ஆரேற்று அன்ன", நற். 265 : 5 - 6
ஆரம் கமழுதல்	சந்தனம் மணத்தல்	"ஆரம் தண்ணிது கமழும் நின் மார்பு", அகம். 218: 14 - 15
ஆரம் நாறுதல்	சந்தனக் குழம்பு மணத்தல்	"தன் மலை ஆரம் நாறும் மார்பினன் மாரியானையின் வந்து நின்றனனே", குறுந். 161 : 5 - 7
ஆரம் நீவுதல்	சந்தனம் பூசுதல்	"ஆரம் நீவிய அம்பகட்டு மார்பினன்", அகம். 288: 2; "திண் காழார நீவிக் கதிர்விடு வொண்காழ் ஆரங் கவைஇய மார்பின்", மது. 715 - 716

கலவை

கலவை	கலவைச் சாந்து	"விதி ஆற்றான் ஆக்கிய மெய்க்கலவை போல", பரி. 7: 20; "அள்ளல் நீர் எலாம், அமரர் மாதரார் கொள்ளை மாமுலைக் கலவை, கோதையின், கள்ளு", கம்ப. 4613 : 1 - 3; "கருப்பூரச் சாந்தும், கலவையும், மலரும் கலந்து உமிழ் பரிமள கந்தம், மருப்புடைப் பொருப்பு ஏர் மாதிரக் களிற்றின் வரிக்கை வாய் மூக்கிடை மடுப்ப", கம்ப. 5147: 5 - 8
நறும் கலவை	வாசனை உடைய (குங்குமப் பூ முதலிய) கலவை	"நாவியும், நறுங் கலவையும் கற்பகம் நக்க பூவும், ஆரமும், அகிலும் என்று இனையன புகைய", கம்ப. 5982: 1 - 2
மனாலக் கலவை	குங்குமக் கலவை	"நீர் நிறம் பெயர்ந்து மனாலக் கலவை போல", பதிற். 11 : 9 - 10

வாசமென் கலவை	மணமும் மென்மையும் வாய்ந்த கலவைச் சந்தனக் குழம்பு	"வாச மென் கலவைக் களிவாரி மேல் பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினாள்", கம்ப. 559 : 1 - 2
தண்கலவைச் சேறு	வாசனைப் பொருட்கள் கலந்த குழம்பு	"மாலை தண் கலவைச் சேறு மான்மதச் சாந்து பொங்கும்", திருத். 3536 : 1 - 2
வெண்தளக் கலவைச் சேறு	பச்சைக் கருப்பூரம் கலந்த சாந்து	"வெண்தளக் கலவைச் சேறும் குங்கும விரை மென் சாந்தும்", கம்ப. 43: 1 - 2
கடுங்கூட்டமைத்துக் கைவயிற்கொண்ட போகக் கலவை ஆகத்து அப்புதல்	நுகர்ச்சிக்குக் காரணமான உணர்ச்சியைக் கூட்டும் மருந்தை மார்பில் பூசுதல்	"அவலந்தீர்க்கும் கடுங் கூட்டமைத்துக் கைவயிற் கொண்ட போகக் கலவை ஆகத்தப்பிச்", பெருங். 2 : 18 : 10 : 108
கலவை முலை உறுதல்	மார்பின் கண்ணே கலவை பூசப் பெறுதல்	"நலன்உறு கணவர் தம்மை நவைஉறப் பிரிந்து, விம்மும் முலை உறு கலவை தீய முள்இலா முளரிச் செங்கேழ்", கம்ப. 4947 : 1 - 4
மருவிளை கலவை ஊட்டுதல்	மணம் நிரம்பிய கலவைச் சாந்தை மேனி மறையும்படி பூசுதல்	"உருவிளை பவளவல்லி பால்நுரை உண்டதென்ன மருவிளை கலவை ஊட்டி, குங்குமம் முலையின் ஆட்டி", கம்ப. 9996 : 1 - 2
கலவை சாத்துதல்	கலவைச் சந்தனத்தை அணிதல்	"எழுத அருவடிவு கொண்டு, இருண்ட மேகத்தைத் தழுவிய நிலவு என, கலவை சாத்தியே", கம்ப. 1209 : 3 - 4
ஆர நறுமென் கலவை சாத்துதல்	மணம் கமழும் சந்தனக் கலவையை அணிதல்	"ஆர நறுமென் கலவை மான் மதச் சாந்து ஆடை அணிமணிப் பூண் ஈர விரை மென்மலர்ப் பணிகள் .... வன் தொண்டர்ச் சாத்திமிக்க தமக்கு ஆக்கி", திருத். 3905 : 3 - 8
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்துதல்	கத்தூரி கலந்த வாசனைக் கலவையைப் பூசுதல்	"மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப் பால்முறை முந்நூல் மின்னப் பவித்திரம் சிறந்த கையான்", திருத். 163 : 5 - 8
கலவைகள் புனைதல்	மணக்கலவைகளைப் பூசிக் கொள்ளுதல்	"கலவைகள் புனைவாரும், கலை நல தெரிவாரும், மலர்குழல் மலைவாரும், மதிமுகமும் மணி ஆடித்", கம்ப. 1188 : 1 - 2
வாசமென் கலவைக் களி வாரி பூசுதல்	மணமும் மென்மையும் வாய்ந்த கலவைச் சந்தனக் குழம்பை அள்ளிக் கொண்டு பூசுதல்	"வாசமென் கலவைக் களி வாரி, மேல் பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினாள்", கம்ப. 559 : 1 - 2
காக துண்ட நறுங் கலவைக் களி ஆகம் உண்டல்	அகிலோடு சேர்ந்த நறுமணமுடைய சந்தனக் குழம்பை மார்பில் பூசுதல்	"காக துண்ட நறுங் கலவைக் களி, ஆகம் உண்டது, அடங்கலும் நீங்கலால்", கம்ப. 950 : 1 - 2

களபம்

களபம் அணிதல்	மார்பில் கலவைச் சாந்தணிதல்	"வளவர் பிரான் திருமகளார், மங்கையருக் கரசியார், களபம் அணி முலை திளைக்கும்தட மார்பின், கவுரியனார்", திருத். 4081 : 1 - 4

குங்குமம்

குங்குமச் சுவடு	குங்குமக் குழம்பு	"செங்கயல் நறவம் மாந்திக் களிப்பன சிவனும் கண்ணார் குங்குமச் சுவடுநீங்காக் குவவுத் தோள் குமரர் எல்லாம்", கம்ப. 1559 : 5 - 8; "இணை எடுத்து இடை இடை நெருக்க, ஏழையர் துணை முலைக் குங்குமச் சுவடும்", கம்ப. 746 : 1 - 4

குங்குமச் சேதகம்	குங்குமக் குழம்பு	"திமிர மா உடல் குங்குமச் சேதகம் திமிர மாவொடும் சந்தோடும் தேய்க்கும் மால்", கம்ப. 868 : 1 - 2
குங்குமச் சேறு	குங்குமக் குழம்பு	"திடருடைக் குங்குமச் சேறும், சாந்தமும் இடைஇடை வண்டல் இட்டு ஆரம் ஈர்த்தன", கம்ப. 1783 : 1 - 2
குங்குமப் பங்கி	குங்குமச் சேறு	"மங்கை கொங் கைத்தடத் திங்குமக் குங்குமப் பங்க நுங்கி அங்க மெங்கும் நெகச் சங்கமங்", 11ஆம் திரு. 200 : 1 - 3
குங்குமம்	குங்குமக் குழம்பு	"வேளரவு கொங்கையிள மங்கையர்கள் குங்குமம் விரைக்குமணமார் தேளரவு தென்றறெரு வெங்கு நிறை", தேவா. திருஞா. 3: 74 : 2 : 5 - 7; "குங்குமக் குழங் கல் மாலை, மல்லுப் பூத்து அகன்ற மார்பீர்", சீவக. 743: 2 - 3; "எழுது வாணெடுங் கண்ணினை யந்நலர் மெழுகு குங்கும மார்பிடை வெம்முலை", சீவக. 133 : 1 - 2; "ஆனை மும் மதமும் பரி ஆழியும் மானமங்கையர் குங்கும வாரியும்", கம்ப. 4984: 1 - 2
குங்குமக் கொங்கை	குங்குமக் குழம்பு பூசப்பட்ட மார்பு	"குண்டலக் குழை முகக் குங்குமக் கொங்கையார், வண்டு அலைத்து எழு குழல் கற்றை கால் வருடவே", கம்ப. 5709 : 1 - 2
குங்குமக் கொம்மை குவி முலை	குங்குமச் சாந்து அணியப் பெற்ற மார்பு	"நங்கையர், நாக மடந்தையர், சித்த நாரியர், அரக்கியர் முதலாம் குங்குமக் கொம்மை குவிமுலை, கனி, வாய் கோகிலம் துயர்ந்த மென் குதலை", கம்ப. 5155: 3 - 6
குங்கும முலை	குங்குமத்தை அணிந்த மார்பு	"குறிஞ்சிப் பூங்கோதை போலுங் குங்கும முலையினொடன் நிறைந்த பொற்கலாபந் தோன்ற நெடுந்துகில் விளிம் பொன்றேந்தி", சீவக. 1568 : 1 - 2
குங்கும வளாகம்	குங்குமத்தால் அலங் கரிக்கப்பட்ட மார்பு	"கொங்கை முன்றிற் குங்கும வளாகத்து, மையறு சிறப்பின் கையுறை யேந்தி", சிலப். 8 : 18 - 22
குங்குமம் அப்புதல்	குங்குமம் பூசுதல்	"குங்குமம் அப்பிக் குளிர் சாந்தம் மட்டித்து", நாச். திரு. 6 : 10: 1
குங்குமம் முலையின் ஆட்டுதல்	குங்குமக் குழம்பை முலை முழுதும் அப்புதல்	"உருவிளை பவளவல்லி பால்நுரை உண்டதென்ன மருவிளை கலவை ஊட்டி, குங்குமம் முலையின் ஆட்டி, கருவிளை மலரின் காட்சிக் காசு", கம்ப. 9996: 1 - 3
குங்கும வருணம் கொங்கையின் இழைத்தல்	குங்குமம் மார்பில் பூசுதல்	"குங்கும வருணங் கொங்கையின் இழைப் போர்", மணி. 19 : 87
குங்குமச் சுவடு உறுதல்	குங்குமக் குழம்பு சேர்தல்	"குடைந்த தண்புனல் வாய், ஓவு இல் குங்குமச் சுவடு உற, ஒன்றொடு ஒன்று ஊடி", கம்ப. 460 : 4 - 6
குங்குமம் எழுதிக் கோலம் புனைதல்	குங்குமத்தால் கோலம் எழுதி அலங்கரித்தல்	"பழுதற வழகொடு புனைநலம் புனையாக் குங்கும மெழுதிக் கோலம் புனைஇ", பெருங். 4: 13: 103-104
குங்குமம் எழுதுதல்	குங்குமக் குழம்பால் எழுதுதல்	"தேமரு கொங்கையில் குங்குமம் எழுதி", மணி. 25: 86; "குங்குமம் எழுதிய கொங்கை முன்றில்", சிலப். 22 : 124; "மங்கல வகையிற் சேர்ந்து மதுத்துளி யறாத மாலை கொங்கலர் கண்ணி சேர்த்திக் குங்கும மெழுதினானே", சீவக. 2098 : 3 - 4; "எழுது குங்குமத் திருவின் ஏந்து கோடு உழுத மார்பினான், உருகி, உள் உறத்தழுவி நிற்றலும்", கம்ப. 8811 : 1 - 3
செங்குங்குமம் எழுதுதல்	சிவந்த குங்குமம் எழுதுதல்	"செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங்குமம் எழுதி, அங்கழுநீர்த் தாமம் நுதல் சேர்த்தி", 11ஆம் திரு. 300: 165
குங்குமம் கொட்டுதல்	மார்பில் குங்குமம் பூசப்படுதல்	"கடியன கச்சினாற் சுட்டப்பட்டன கொடியன குங்குமங் கொட்டப்பட்டன", சீவக. 1483: 1 - 2

குங்கும வருணம் கொள்ளுதல்	மார்பில் குங்குமம் பூசுதல்	"குங்கும வருணங் கொண்ட மார்பினன் பொங் கொளியரத்தம் பூம்பட்டுடையினன்", சிலப். 22 : 45 - 46
குங்குமச் சேறாட்டுதல்	குங்குமக் குழம்பு பூசுதல்	"கொடியார் குளிர்முத்தம் சூட்டி வைத்தார் கொல்வானே குங்குமச் சேறாட்டினார்கள்", சீவக. 681 : 1
கொங்கையில் குங்குமம் பூசுதல்	மகளிர் மார்பில் குங்குமம் பூசுதல்	"வாசநீர் குடை மங்கையர் கொங்கையில் பூசு குங்குமமும் புனை சாந்தமும்", திருத். 58 : 1 - 2
குங்குமம் மட்டித்தல்	குங்குமத்தைப் பூசுதல்	"குங்குமக் கொம்மை மட்டித்தார் கொடி அனாளையே", சீவக. 991 : 3 - 4
குங்குமச்சாந்து வேய்தல்	மேனியில் குங்குமச் சாந்து பூசியிருத்தல்	"குங்குமச் சாந்து வேய்ந்து குண்டலம் திருவில் வீச", சீவக. 677 : 3
குலிகம்		
குலிகம்	சாதிலிங்கக் குழம்பு	"குலிகச் செப்பு எனக் கொம்மை வரிமுலை", சீவக. 641: 1
குலிகம் இட்டு எழுதுதல்	சாதிலிங்கக் குழம்பினால் தொய்யில் வரைதல்	"செம்பொனால் செய்து குலிகம் இட்டு எழுதிய செப்பு ஓர் கொம்பு தாங்கியது எனப்", கம்ப. 2071 : 1 - 3
சந்தனம்		
சந்தம் பொலிதல்	சந்தனம் பொலிவுடன் திகழ்தல்	"சைவ விடங்கின் அணி புனைந்து சந்தமும் மாலையும் தாரும் ஆகி மெய்வளர் கோலம் எல்லாம் பொலிய மிக்க விழுத் தவவேந்தர் என்ன", திருத். 276 : 3 - 6
சந்தனக் களி	சந்தனக் குழம்பு	"சந்தனக் களியும் பூவும் தமனியக் குடத்துள் நீரும்", சீவக. 1719 : 1
சந்தனக் குழம்பு	சந்தனச் சேறு	"முத்தின்தாழ் வடமுஞ் சந்தனக் குழம்பு நீறுந்தன் மார்பினின் முயங்கப்", தேவா. திருஞா. 3: 120 : 7 : 1 - 2
சந்தனச் சேதகம் மார்பு அணிதல்	சந்தனக் குழம்பை மார்பில் பூசுதல்	"வண்ணக் கொழுஞ் சந்தனச் சேதகம் மார்பு அணிந்து", கம்ப 868 : 5 - 6
சந்தனம் உதிர்த்துப் பின்னுற ஊட்டுதல்	சந்தன மணம் நிலை பெற பூசி உதிர்த்து மேலும் பூசும் தன்மை	"பொதிர்ந்த முலையிடைப் பூசி சந்தனம் உதிர்த் துப் பின்னுற ஊட்டுவாள் விருப்பும்", பரி. 21 : 25 - 26
சந்தனம் தோய்த்தல்	சந்தனம் பூசுதல்	"சூடி, சந்தனம் தோய்த்துடைச் சுற்றுமண் முடு தோட்டின் முடங்கல் நிமிர்த்தனன்", கம்ப. 2107 : 1 - 2
சந்தனம் தாமரைத் தோடின் பயின் வினால் பூசுதல்	சந்தனத்தைத் தாமரை இதழின் கனத்தோடே பூசுதல்	"ஈடில் சந்தன மேந்து தாமரைத் தோடின் பயில் வினாற் பூசித் தூமலர்", சீவக. 2423: 1 - 2
மலைகொள் சந்தனம் முலை கொள்ளுதல்	தென்மலையிலிருந்து கொள்ளப்பட்ட சந்தனக் குழம்பை மார்பில் பூசுதல்	"மலைகொள் சந்தனம் வாய்மெழுக் கிட்டதன், முலைகொள் பேரணி முற்றிழை சிந்தினாள்", சீவக. 137: 3 - 4
சந்து		
சந்து ஆர்தல்	சந்தனம் அணிதல்	"பந்து ஆடிய மங்கையர் பங்கயச் செங்கை தாங்கும் சந்து ஆர்முலை மேலன தாழ்குழை வாள் முகப் பொன்", திருத். 978: 2 - 3
தென் மலைச் சந்து தன் கடன் இறுத்தல்	சந்தனம் வேனிற் காலத்தில் பூசுவன வாய் பயன்படுதல்	"தென்கடன் முத்துந் தென்மலைச் சந்தும் தன் கடனிறுக்குந் தன்மைய வாதலிற்", சிலப். 8 : 19 - 20
சந்து புனைதல்	சந்தனம் பூசுதல்	"சந்து புனைய வெதும்பி மலரணை தங்க வெருவி இலங்கு கலையொடு", 11ஆம் திரு. 836 : 1 - 2

சாந்தம்	சந்தனக் குழம்பு	"சிதைந்த சாந்தமொடு", நற். 250: 3; "பிறிதினால் மாண்ட தெவனாம்? பொறியின் மணி பொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன அணியெல் லாம் ஆடையின் பின்", பழ. நா. 26 : 2 - 4; "கேழல் வெண்பிறையன்ன கெழுமணி மிடறு நின் றிலங்க வாழி சாந்தமு முடையார் வாழ்கொளி புத்தூருளாரே", தேவா. திருஞா. 2 : 94 : 8 : 3 - 4; "பலவகம் புக்(கு) உழி தர்வீர் பட்டோடு சாந்தம் பணித்தருளாது இருக்கின்ற பரிசென்ன படிறோ", தேவா. சுந்தர. 71 : 6 : 3 - 4; "பாகுஞ் சாந்தமும் போகமொடு புணர்ந்த", பெருங். 2 : 3 : 43; "குறுந்தா ரகவயிற் கூடுபு முயங்கிக் குவி முலைச் சாந்த நவிர்முதற் பொறித்தே", பெருங். 3 : 9 : 78 - 79; "தேனும் சாந்தமும் மான்மதச் செறி நறுஞ் சேறும் வான நாள்மலர்க் கற்பக மலர்களும் வயமாத்", கம்ப. 4851 : 1 - 2
அரைப்பமை சாந்தம்	அரைத்தற்றொழி லான் அமைந்த சந்தனம்	"கூற்றொலி கேளாக கொள்கைத்தாகி அரைப்பமை சாந்தமு முரைப்பமை நானமும் ஒப்புமுறை யமைந்த ஓமா லிகையும்", பெருங். 1 : 41 : 125 - 127
கைபுனை சாந்தம்	கையால் புனையப் பட்ட சந்தனம்	"கைபுனை சாந்தமும் கடி செய்மாலையும்", சீவக. 80 : 1
நறுமென் சாந்தம்	நறுமணம் வீசும் சந்தனக் குழம்பு	"தாகு உகு நறுமென் சாந்தம், குங்குமம், குலிகம், தண்தேன் மீது உறு சுனைநீர் ஆடி அருவிபோய் உலகின் வீழ்வ", கம்ப. 4749 : 1 - 6
நறும் சாந்தம்	நறுமணமுள்ள சந்தனம்	"அகருவும் நறுஞ்சாந்தமும் முதலிய, அனேகம் புகல் இல் நல் மரத்து உறுவெறி, உலகு எலாம் போர்ப்ப", கம்ப. 5971 : 1 - 2
பசும்பொற் சாந்தம்	பசிய சந்தனம்	"பாடலோ டியைந்த ஆடல் தண்ணுமை கருவி மூன்றும் ஓடரி நெடுங்க ணம்பால் உளங்கிழிந் துருவ எய்யா வீடமை பசும்பொன் சாந்தம் இலயமா ஆடுகின் றாள்", சீவக. 1256
புனை சாந்தம்	பூசுதற்குரிய சந்தனம்	"வாசநீர் குடை மங்கையர் கொங்கையில் பூசுகுங் கும மும் புனை சாந்தமும்", திருத். 58: 1 - 2
புனைநறுஞ் சாந்தம்	பூசுதற்குரிய சந்தனம்; மணப்பொருள் கூட்டிச் செய்த நறிய சந்தனம்	"நாம மோதிரஞ் தாண் முதற் செறித்துப் புனை நறுஞ் சாந்தமும் துணைமலர்ப் பிணையலும் மனநிறை கலக்கிய", பெரும். 3 : 9 : 70 - 72; "அருகு சிறை மருங்கி னொருமகள் வைத்த புதுமலர்ப் பிணையலும் புனை நறுஞ்சாந்தமும் கதிர் மணி யாழியுங்", பெரும். 3: 9: 119 - 121
பூந்தண் சாந்தம்	குளிர்ச்சியான சந்தனம்	"வாங்கின னுடுத்துப் பூந்தண் சாந்தம் எழுவுறழ் தோளு மகலமு மெழுதி", பெருங். 3 : 9 : 131 - 132
சாந்தம் அணிதல்	சந்தனம் பூசுதல்	"அலங்கல் மாலையும் சாந்தமும் அன்று தான் அணிந்த கலங்கலோடும், அச்சாத்திய துகிலொடும்", கம்ப. 6581 : 2 - 3; "மற்றிவள் வைத்த மாலையுஞ் சாந்தமும் அணிந்ததை பொல்லா தருளிணை", பெருங். 3 : 10 : 6 - 7
கலவைச் சாந்தம் அணிதல்	அரைக்கப்பட்ட சந்தனம் பூசுதல்	"நல்திரு உத்தரீய, நறும் துகில் சாத்தி நானப் பல்பல கலவைச் சாந்தம் பான்மையின் அணிந்த பின்னர்", திருத். 3112 : 5 - 8
சாந்தம் அழுந்து பட வணிதல்	சந்தனக் குழம்பை நன்கு பூசுதல்	"நெறிமயிர்க் கூந்த னீரற வாரிச் செழும்பூம் பிணைய லடக்குபு முடித்துக் குழங்கற் சாந்த மழுந்துபட வணிந்து", பெருங். 1 : 42 : 201 - 203

சாந்தம் நுண்துகள் அணிதல்	சாந்தினுடன் நுண்ணிய பொடி களையும் அணிதல்	"புகழ்குறி கொண்ட பொலந்தார் அகலத்துத் தண் கமழ் சாந்தம் நுண் துகள் அணிய வென்றி கொள் உவகை யொடு புகுதல் வேண்டின்", அகம். 354: 9 - 11
சாந்தம் ஆடுதல்	சந்தனம் பூசுதல்	"ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலில் சூடிய மாலையும் தொன்னிறம் வழாது", மணி. 16 : 31 - 32
சாந்தம் ஆர்தல்	சாந்தம் அணிதல்	"ஏய்ந்த மாமலரிட்டு முட்டாததோர் இயல்பொடும் வணங் காதே சாந்த மார்முலை தையல் நல்லாரொடுந்தலை தடுமாறாகிப்", திருவாச. அற்புதப். 2 : 1 - 4
சாந்தம் இலங்குதல்	சந்தனம் விளங்குதல்	"காந்தட் குலம் பழித்தாள் காமவேள் காதலாள் சாந்தம் இலங்கும் அகலத்தாள்", 11ஆம் திரு. 300 : 178
சாந்தம் இழிதல்	சந்தனம் வழிதல்	"உகைத்தெழு பந்தி னுடனெழு வனபோற் சுழன்றன தாமங் குழன்றது கூந்தல் எழுந்தது குறுவிய ரிழிந்தது சாந்தம்", பெருங். 4 : 12 : 224 - 227
சாந்தம் இறுகுதல்	சந்தனம் உலருதல்	"முறுகு காதலின் வேதனை உழப்பவர், முயங்கிய முலை முன்றில் இறுகு சாந்தமும், எழுதிய குறிகளும் இன் உயிர்ப் பொறை ஈ;", கம்ப. 5028 : 3 - 6
சாந்தம் உரீஇ	சந்தனத்தைப் பூசுதல்	"வடகுன்றத்துச் சாந்த முரீஇ", புறம் 380 : 2
சாந்தம் முகிழ் முலையுழுதல்	சந்தனக் குழம்பு தோய்தல்	"மோட்டுவெண் முத்த மின்னும் முகிழ்முலை யுழுத சாந்தம் கோட்டுமண் கொண்ட மார்பம் கோதைவாள் குளித்து முழ்கிக் கோட்டு மண் கொள்ள நின்றான்", சீவக. 2294: 3 - 7
அஞ்செஞ் சாந்தம் அகலம் எழுதுதல்	மார்பில் சாந்து பூசுதல்	"அஞ்செஞ் சாந்தம் மெழுதிய வகலம் ஒண் செங் குருதிப் பைந்தளி பரப்பவும்", பெருங். 1 : 46 : 25 - 26
நுண் சாந்தம் ஆகம் எழுதுதல்	அழகிய நுண்ணிய சந்தனத்தால் எழுதுதல்	"கைந்நுண் மீக்கோள் கச்சினோ டணவர அந்நுண் சாந்த மெழுதிய வாகத்தன் காசு கண் ணரிந்து கதிரொளி சுடரும்", பெருங். 5 : 2 : 22 - 24
பூந்தண் சாந்தம் தோளும் அகலமும் எழுதுதல்	மார்பில் சந்தனம் பூசுதல்	"வாங்கின னுடுத்துப் பூந்தண் சாந்தம் எழுவுறழ் தோளு மகலமு மெழுதிப் புனையிருங் குஞ்சித் தோட்டுக் கிடையே", பெருங். 3 : 9 : 131 - 132
செஞ்சாந்தமாகத்து எறிதல்	சிவந்த சந்தனக் குழம்பை மார்பின் கண் பூசுதல்	"அஞ்செஞ் சாந்தமாகத் தெறிந்தும் நறுநீர்ச் சிவிறிப் பொறிநீ ரெக்கியும்", பெருங். 1 : 42 : 187 - 188
ஈர் நறுஞ்சாந்தம் தாரொடு குழைதல்	மார்பில் பூசப்பட்ட குளிர்ந்த நறிய சந்தனம் மாலை யொடு குழைதல்	"எழுந்த மன்னன் செழும்பூ ணகலத் தீர்நறுஞ் சாந் சாந்தத் தாரொடு குழையப் பரத்தையர்த் தோய்ந்தநின் பருவரையகலம்", பெருங். 3 : 24: 167 - 169
செஞ்சாந்தம் சேர்த்தல்	மணம் வீசுகின்ற செஞ்சந்தனக் குழம்பைப் பூசுதல்	"தொய்யில் வாசத்துவர் துதைந்து ஆடிய கையின் நாகம் என, கடல் மேனியில் தெய்வம் நாறு செஞ் சாந்தமும் சேர்த்தினான்", கம்ப. 7346: 2 - 4
நல்லுறுப்புக் கூட்டிச் செய்த சாந்தம் கொண்டு ஆகம் தழீஇ	சிறந்த கூட்டுப் பொருள்களைச் சேர்த்து அமைத்த கொழுமையான சாந்தினை எடுத்து அழகுமிக்க திரு மேனியில் பூசுதல்	"நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப் பயன்கொள் குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தம் கொண்டு நலமலிய ஆகம் தழீஇக் கலைமலிந்த", 11ஆம் திரு. 300 : 14 - 15
சாந்தம் திமிர்தல்	சந்தனம் பூசுதல்	"தூசுசூழ் பரவை யல்குல் சுமக்கலா தென்ன வீழ்த்த காசுசூழ் கோவை முத்தங் கதிர் முலை திமிர்ந்த சாந்தம்", சீவக. 109 : 1 - 2

அந்தண் சாந்தம் ஆகத்துத் திமிர்தல்	மார்பில் பூசப்பட்ட அழகிய குளிர்ந்த சந்தனத்தைத் தேய்த்து உதிர்த்தல்	"காதல் செய் கலங்கள் போதொடு போக்கி அந்தண் சாந்த மாகத்துத் திமிர்ந்து பண்புரை கிளவி பையெனத் திரிய", பெருங். 3 : 14 : 129 - 131
ஈரம் புலர்ந்த சாந்தம் திமிர்தல்	சந்தனம் உதிர்த்தல்	"ஈரம் புலர்ந்த சாந்தம் திமிர்வோர்", மணி. 15: 86
கோலஞ் செய் சாந்தம் திமிர்தல்	மார்பில் தொய்யி லெழுதி அழகு செய் திருந்த சந்தனத்தைக் கலைத்துதிர்த்தல்	"மாலை பரிந்திட் டழுதாள் வனமுலை மேற் கோலஞ் செய் சாந்தந் திமிர்ந்து", நாலடி. 397 : 3 - 4
சாந்தம் தோய்தல்	சாந்தம் பூசுதல்	"சாந்தம் தோய்ந்த ஏந்திள வனமுலை", சிலப். 22: 119; "சாந்தம் தோய்ந்த ஏந்திள வனமுலை காய்ந்த பசி எருவை கவர்ந்தூண் ஓதையுங்", மணி. 6 : 116 - 117
சாந்தம் நாறுதல்	மார்பில் சந்தனம் நாறுதல்	"பொறிவரிச் சிறைய வண்டினம் மொய்ப்பச் சாந்த நாறும் .... நின் மார்பே தெய்யோ", ஐங். 240: 2 - 4
சாந்தம் நீவுதல்	சந்தனம் பூசியிருத்தல்	"வண்டார் பிறங்கல் மைந்தர் நீவிய தண்கமழ் சாந்தம்", பரி. 21 : 46 - 47
சாந்தம் படுத்தல்	சந்தனம் பூசுதல்	"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை, மலை யுளே பிறப்பினும் மலைக்கவை தாமென் செய்யும்", கலித். 9 : 12 - 14
வண்டுது சாந்தம் வடுக் கொள நீவுதல்	மணமிக்க சந்தனத்தை அழுத்தமாகப் பூசுதல்	"வண்டுது சாந்தம் வடுக்கொள நீவிய தண்டாத் தீஞ் சாயற் பரத்தை வியன்மார்ப", கலித். 93 : 1 - 3
சாந்தம் பூசுதல்	மார்பில் பூசுதல்	"மூசின கொன்றை முடிமே வதுமுலை மேல் முயங்கப் பூசின சாந்தம் தொழுமால், இவை ஒன்றும் பொய் யலவே", 11ஆம் திரு. 265 : 5 - 8
புகை கெழு சாந்தம் பூசுதல்	புகையூட்டப் பெற்றச் சாந்தம் பூசிக் கொள்ளுதல்	"அகில் கெழு சாந்தம் மாற்றி ஆற்றப் புகைகெழு சாந்தம் பூசுவோரும்", பரி. 12 : 13 - 14
கைப்பொடி சாந்தம் ஏந்திக் கரகநீர் விதியிற் பூசுதல்	பொடியையும், சந்தனத்தையும் கையில் வாங்கி நூலில் விதித்த வழி தப்பாமற் பூசுதல்	"கைப்பொடி சாந்த மேந்திக் கரகநீர் விதியிற் பூசி மைப்படு மழைக் கணல்லார் மணிச் செப்பின் வாச நீட்டச்", சீவக. 2736 : 1 - 2
சாந்தம் பொலிதல்	சாந்தம் பூசுதல்	"புகன்ற மாண் பொறிப் பொலிந்த சாந்தமொடு", பதி. 88: 30
சாந்தம் கமழ் தோள் மணத்தல்	நறிய சந்தனம் நாறுதல்	"தண்நறுஞ் சாந்தம் கமழும் தோள் மணந்து இன்னும் பிறள் வயினானே", அகம். 186 : 12 - 13
அகில் கெழு சாந்தம் மாற்றுதல்	அகிலும் ஆரமும் சேர்ந்து அரைத்த சாந்தத்தை அகற்றுதல்	"அகில் கெழு சாந்தம் மாற்றி ஆற்றப் புகைகெழு சாந்தம் பூசுவோரும்", பரி. 12 : 13 - 14
குளிர்சாந்தம் மிகுதல்	சந்தனக்குழம்பு பூசியிருத்தல்	"கொக்கார் வளவயல் ஊரன் குளிர்சாந்தம் மிக்க வன முலை புல்லான் பொலிவுடைத்தா தக்கயாழ்ப் பாண", கைந். 48 : 1 - 3
சாந்தம் மெழுகுதல்	சந்தனம் பூசுதல்	"கலம் பலதிருத்தி நலம் பாராட்டிச் சாந்தம் மெழுகிச் சாயனெகிழ் பறிந்து", பெருங். 3 : 14 : 146 - 147
சாந்த முலை மெழுகுதல்	சாந்தம் கொண்டு மெழுகுதல்	"மாலை பல தாழ்ந்து மதுப்பிலிற்றி மணங்கமழும் கோல அகிற் றேய்வை கொழுஞ் சாந்த முலை மெழுகி", சீவக. 2018 : 1 - 2

குங்குமம் சாந்தம் கொட்டாமை	குங்குமம், சாந்தம் கலவைகள் பூசப்படாதவை	"கொங்கு அலர் கோதை மாற்றி, குங்குமம் சாந்தம் கொட்டா பொங்க வெம்முலைகள்", கம்ப. 4320 : 3 - 5

சாந்து

சாந்து	மணக்குழம்பு	"சாந்து அழிவேரை சுவல் தாழ்ந்த கண்ணியை", கலித். 96 : 3 ; "மார்பழிச் சாந்தின் மணவளறு பட்டன்று", பரி 12 : 97; "அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணி முலைமேல் மல்கிய சாந்தொடு பூண்புனைந்து", 11ஆம் திரு. 300 : 137; "மலயச் செஞ்சாந்து முந்நீர் வலம்புரியீன்ற முத்தும் இலை வைத்த கோதை நல்லா ரிளமுலைப் பொறியு மார்ந்து", சீவக. 2190 : 1 - 2; "வடங் களும், குழையும், பூணும் மாலையும் சாந்தும் யானை கடங்களும் கலினமா விலாழியும் கணக்கு இலாத", கம்ப. 4874 : 1 - 4; "சுண்ணமும் சாந்தும் நெய்யும் சுரி வளை முத்தும் பூவும்", கம்ப. 10273 : 1
கத்தூரி கமழ் சாந்து	மணம்வீசும் சாந்து	"உண்மயத்த உமக்கடியேன் குறை தீர்க்க வேண்டும் ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும் கண்மயத்த கத்தூரி கமழ் சாந்தும் வேண்டும்", தேவா. சுந்தர. 71 : 11 : 3 - 5
கருப்புரச் சாந்து	கர்ப்பூரம் கலந்த சாந்து	"கருப்புரச் சாந்தும், கலவையும், மலரும் கலந்து உமிழ் பரிமள கந்தம்", கம்ப. 5147 : 5 - 6
குங்கும விரை மென்சாந்து	குங்குமப்பூ முதலி யன கலந்த சாந்து	"வெண்தளக் கலவைச் சேறும், குங்கும விரை மென்சாந்தும், குண்டலக் கோல மைந்தர் குடைந்த, நீர்க் கொள்ளை, சாற்றின்", கம்ப. 43 : 1 - 4
குழங்கற் சாந்து	மணமிக்க சாந்து	"நாடிச் சென்றவள் சேடிள வனமுலைக் குழங்கற் சாந்திடைக் குளித்து விளையாடியென் அழுங்க னெஞ்சத் தயா அ நோய் தீர", பெருங். 3 : 1 : 202 - 203
கூட்டுபு நிகழ்த்திய சாந்து	மணப்பொருட்களைக் கூட்டியுண்டாக்கிய சாந்து	"வடவர் தந்த வான்கேழ் வட்டம் குடபுல உறுப்பிற் கூட்டுபு நிகழ்த்திய வண்டிமிர் நறுஞ்சாந்து", அகம். 340: 16-18
சந்தனச் சாந்து	குளிர்ந்த சந்தனக் குழம்பு	"செந்தீக் கதீஇய வெந்தழற் புண்ணினுட் சந்தனச் சாந்திட்டன்ன தண்மையொடு வந்தது மாதோ வைக வின்றென்", பெருங். 3 : 7 : 108 - 110; "தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர் ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்", திருவாச. அன்னைப். 8: 1-2; "சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி!", திருவாச. போற்றித். 203 - 204
சுண்ண வெண் சந்தனச் சாந்து	வெண்மையான சந்தனக் குழம்பு	"விண்ணவர் தம் பெருமானை விடை உகந்து ஏறும் பிரானைச் சுண்ண வெண் சந்தனச் சாந்து தொடுத்த திருப்பதிகத்தை மண்ணுலகு உய்ய எடுத்து மகிழ்வுடனே பாடுகின்றார்", திருத். 1385 : 3 - 8
செஞ்சாந்து	சிவந்த சந்தனக்குழம்பு	"செஞ்சாந்து சிதைந்த மார்பின்", பட். 297
உரைத்த செஞ் சாந்து	அரைத்த சிவந்த சந்தனக் குழம்பு	"உரைத்த செஞ் சாந்தும், பூவும் சுண்ணமும், புகையும் ஊழின் நிரைத்த பொற்குடமும்", கம்ப. 4367: 1 - 3
தெள்ளிய சாந்து	தெளிவான சாந்து	"நள்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக் கள்ள விழ் தாமம் களபம் கத்தூரியும் தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து ஒள்ளிய தூபம் உவந்திடு வீரே", திருமந். 1918
நறுஞ்சாந்து	மணமிக்க சாந்து	"நறுஞ்சாந்து அகலத்து நம்பியர் தம்மொடு", சிலப். 14: 100
பசுஞ்சாந்து	பசிய சந்தனம்	"தோலும் துகிலுங் குழையும் சுருள் தோடும் பால் வெள்ளை நிறம் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்", திரு வாச. திருக்கோத் : 18 : 1 - 2; "பாய் அரித் திறலான்

		பசுஞ்சாந்தி னால் தூய பொன் புயத்துப் பொதி தூக்குறிமீ அரித்து விளர்க்க", கம்ப. 951 : 1 - 3
படுசாந்து	அணியப்படும் சந்தனம்	"பண்டம் அறியார் படுசாந்தும் கோதையும் கண்டு பாராட்டுவார் கண்டிலர் கொல்", நாலடி. 48 : 1 - 2
புகை விம்மு சாந்து	புகையூட்டப்பட்ட சாந்து	"தொண்டர் மிண்டிப்புகை விம்மு சாந்துங்கமழ் துணை யலும் கொண்டு கண்டார் குறிப்புணர நின்ற", தேவா. திருஞா. 2 : 118 : 2 : 1 - 2
பைங்கேழ் சாந்து	பசிய நிறமமைந்த சந்தனம்	"பைங்கேழ்ச் சாந்தும் குங்குமக் குவையும்", பெருங். 1 : 42 : 66
மான்மதச் சாந்து	கஸ்தூரி கலந்த சந்தனம்	"அடுத்து அடுத்து ஆடுவார் புல்லக் குழைந்து வடுப்படு மான்மதச் சாந்து ஆர் அகலத்தவன்", பரி. 16: 43-44; "மாலை தண் கலவைச் சேறு மான்மதச் சாந்து பொங்கும்", திருத். 3536 : 1 - 2
மென்சாந்து	சந்தனக் குழம்பு	"ஆடவர் மணிவரைப் புயத்து மென்சாந்தும், மாழ்கி, மெல் அணை எனப் பொலிந்தது, அக் கடல் செல் ஆறு அரோ", கம்ப. 746 : 4 - 8; "சவியுடைத் தூசும், மென் சாந்தும், மாலையும் அவிர் இழைக் குப்பையும் அளவு இலாதது", கம்ப. 4555 : 5 - 8
வெண்சாந்து	வெண்ணிய சந்தனக் குழம்பு	"படலை வெண் சாந்தினும்", பெருங். 1: 38 : 71
சாந்தகம்	சாந்து பூசப்பட்ட மார்பு	"சாந்தகங் கிழிய மாலைத் தடமுலை நெமுங்கப் புல்லிச் சேர்ந்தெழு நங்கைமாரே திருநங்கை மார்களல் லார்", சீவக. 2552 : 1 - 2
சாந்து அகலம்	சாந்து பூசப்பட்ட மார்பு	"நறுஞ்சாந்தகலத்து நம்பியர் தம்மொடு குறுங்கண டைக்கும் கூதிர் காலையும்", சிலப். 14 : 100 - 101; "மடத் தகை மகளிர் மருங்குல் கடிந்த முலைப்பூணழுத்திய மொய்சாந்தகலம்", பெருங். 1 : 46 : 45 - 46; "சில்லென் கோலத்துச் சிறுகொடி மருங்கில் தனிமுத்தணிந்த தண்சாந்தாகத்து", பெருங். 1 : 46 : 236 - 237
சாந்திள முலை	சந்தனம் நீவிய அழகிய மார்பு	"நண்ண வருவோள் போலு மென்கண் ஆற்றே னவட னஞ்சாந்திள முலை நோற்றே யாயினு நுகர்வல்", பெருங். 3: 7 : 53 - 55
சாந்து அகல் மார்பு	சந்தனம் பூசப்பட்ட மார்பு	"ஏந்து எழில் ஆகத்து எம்முன் இறந்தனன் என்று நீ நின் சாந்து அகல் மார்பு, திண்தோள் நீக்கி", கம்ப. 7934: 1-2
சாந்திடைக் குளித்தல்	சாந்து பூசுதல்	"சாந்திடைக் குளித்த வெங்கட் பணைமுலைத் தாம மாலைப்பூந்தொடி யரிவை பொய்கைப் பூமகள னைய பொற்பின்", சீவக. 1358 : 1 - 2
சாந்து அணிதல்	சந்தனம் பூசுதல்	"சாந்து அணி புளினத்தின் தடமுலை உயர் கங்கை", கம்ப. 1988 : 1 - 2; "நறுஞ் சாந்தணிந்த கேழ்கிளர் மார்பிற்", திருமுருகு. 193; "சாய்ப் பறிக்க நீர்திகழுந்தண் வயலூரன் மீது ஈப்பறக்க நொந்தேனும் யானேமன் தீப்பிறக்கத்தாக்கி முலை பொருத தண்சாந்தணி யகலம்", நாலடி. 389 : 1 - 3; "நல்வயல் ஊரன் நறுஞ் சாந்(து) அணிஅகலம் புல்விப் புடை பெயரா மாத் திரைக் கண்", திணை.நூற். 143: 1 - 2; "பதுமா பதிவயிற் பசைந்தவள் வைத்த கோதையுஞ் சாந்துங் கொண்டு அணிந்தனையென", பெருங். 3 : 9 : 172 - 173
அரைத்த சாந்து கொடு அப்புதல்	நன்றாக அரைத்த சந்தனத்தைப் பூசுதல்	"குறைத்த மேனியோடு உள்ளம் குளிர்ந்ததால் அரைத்த சாந்து கொடு அப்பியது என்னவே", கம்ப. 2379 : 3 - 4
சாந்தமைதல்	சாந்தணிதல்	"சாந்தமை மார்பி னெடுவேல் பாய்ந்தென", புறம். 63: 7

சாந்து அளாவுதல்	சந்தனம் பூசுதல்	"காந்தள் மெல்விரல் சனகிதன் கற்பு எனும் கடலை நீந்தி பெறுவது எங்கன்? என்று ஒருமுகம் நினைய சாந்து அளாவிய கொங்கை நன்மகளிர் தற்சூழ்ந் தார்", கம்ப. 5855 : 1 - 3
சாந்தார்தல்	சந்தனம் பூசுதல்	"சாந்து ஆர் அகலமும் தகையும் மிக நயந்து", அகம். 388 : 16; "வடுப்படு மான் மதச் சாந்து ஆர் அகலத் தான்", பரி. 16 : 43 - 44; "நாவாய்ப் பெருஞ்சிறை நீர் வாய்க் கோலிச் சாந்தார் மார்பிற் சாயனுஞ் சாயாக் காந்தா ரகனுங் கலக்கமில் பெரும்படைச்", பெருங். 3 : 26 : 77 - 79
செஞ்சாந்துதிரல்	மார்பில் பூசிப் புலர்ந்த சந்தனம் உதிர்தல்	"ததரிதழ் ஞாழற் றாழ் சினைத் தூக்கிப் பைந்தாட் பொருந்திச் செஞ்சாந்துதிரத் திருமலி யகலஞ் சேர", பெருங். 3 : 9 : 27 - 29
சாந்தெழுதுதல்	அழகிய சிவந்த சந்தனத்தாலே கோலம் செய்தல்	"அஞ்செஞ் சாந்த மெழுதிய அகலம் ஒண்செங் குருதிப் பைந்தளி பரப்பவும்", பெருங். 1: 46: 25 - 26; "இகலேந்திள முலைமேற் சாந்தெழுதி முத்தணிந்து பூவுஞ்சூட்ட", சீவக. 679: 3; "இன்துணையவர் முலை எழுது சாந்தினும் மன்றல் அம் தாரினும் மறைந்தி லாமையால்", கம்ப. 2281 : 1 - 2
சாந்து கமழுதல்	சாந்து மணத்தல்	"கமழு நின் சாந்தினால்", கலித். 79 : 9; "அவை பூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும் கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்", தேவா. சுந்தர. 71 : 1 : 6 - 7
சாந்து கொட்டுதல்	சந்தனம் மிகுதியாகக் கொட்டப்படுதல்	"விட்டபேர் உணர்வினை, விளித்த என் கெனோ, அட்டன உயிரை அவ், அணிகள் என்கெனோ கொட்டின சாந்து எனக் குளிர்ந்த என்கெனோ?", கம்ப. 3907 : 1 - 6
சாந்தருந்திப் பல் பொறி கொள்ளல்	சாந்து பூசப் பெறுதல்	"சாந்தருந்திப், பல்பொறிக் கொண்ட வேந் தெழில் அகலம்", புறம். 161 : 26 - 27
சாந்தினால் குறி கொள்ளுதல்	மார்பில் சாந்து பூசுதல்	"கமழு நின் சாந்தினாற் குறி கொண்டாள்", கலித். 79 : 10
சாந்து சேர்த்தல்	சாந்தை அணிதல்	"நிலமறிந் தணிக வையன் சீவக னெறியி னென்ன நலநுதற் பட்டங் கட்டி நகைமுடிக் கோதை சூட்டி அலர்முலைக் குருதிச் சாந்து மாரமும் பூணுஞ் சேர்த்தி குலவிய குருதிப் பட்டிற் கலைநலங் கொளுத்தியிட்டான்", சீவக. 673: 1 - 4
சாந்து தோய்தல்	சந்தனம் பூசுதல்	"ஆகந் தோய்ந்த சாந்தலருறுத்த", மணி. 20: 100
சாந்து நாறுதல்	சாந்து மணம் கமழுதல்	"நாறு சாந்திளமுலை யரிவையோ டொருபக மலர்ந்த பிரான் வீறுசேர் துருத்தியா ரிரவிடத் துறைவர்வேள் விக்குடியே", தேவா.திருஞா. 3 : 90 : 2 : 5 - 8; "வானத்தின் இழிந்து வந்த வானவர் மகளும் ஒப்பாள் நானமும் பூவுஞ் சாந்து நாறவந்தருகுநின்றாள்", சீவக. 1567 : 1 - 2
சாந்து நீவுதல்	சிவந்த சந்தனத் தைப் பூசுதல்	"குயமண்டாகஞ் செஞ்சாந்து நீவி வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு யாதோ மற்றம் மாதிறம் படரென வினவி நிற்றந்தோனே அவற்கண்டு", அகம். 48: 11 - 14; "நறுஞ் சாந்து நீவிய கேழ்கிளர் அகலம்", மது. 493
சாந்து படுதல்	சாந்து பூசுதல்	"சிலையுலாய் நிமிர்ந்த சாந்து படு மார்பின்", புறம். 394 : 1
சாந்து புலர்தல்	பூசிய சந்தனம்	"தோண்முற்றுக நின் சாந்து புலரகலம்", புறம். 29: 7; "ஓங்கு மலை நாடன் சாந்து புலர் அகலம்", குறுந். 150: 3; "புலர் சாந்தின் விலங்கு அகன்ற வியல் மார்ப", புறம். 3: 16; "சாந்துபுலர் அகலம் மறுப்ப", அகம். 224: 9; "பூந்தண் தார் புலர் சாந்தின் தென்னவன்", கலித். 57 : 8;

		"சாந்து புலர்ந்தவியன் மார்பிற்", பதிற். 80 : 5; "சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்'', சிறுபாண். 98; ''விடு சுடர் விசும்பின் மீனெனச் சிதறச் சாந்து புலராகத்துத் தேந்தார் திவளப் புரிமுத்தாரமும் பூணும் புரள", பெருங். 2 : 18 : 99 - 100
வெள்ளி லோத்திரத் தில் பூ பொருக்கு அரைத்த சாந்து மட்டித்தல்	வெள்ளி லோத்திரத் தினது உலர்ந்த பூவை அரைத்த குழம்பைத் தடிமனாகப் பூசுதல்	"வாசநெய் வண்டுமுச மாந்தளிர் விரல்கள் சேப்பப் பூசி வெள்ளி லோத்திரத்தின் பூம்பொருக் கரைத்த சாந்தின் காசறு குவளைக் காம ரக விதழ் பயில மட்டித்", சீவக. 622 : 1 - 3
தென்வரைச் சாந்து முழ்குதல்	பொதியமலையின் சந்தனத்தால் மார்பு அழகு பெறுதல்	"பொன்வரை பொருத யானைப் புணர்மருப் பனைய வாகித் தென்வரைச் சாந்து முழ்கித் திரள் வடஞ் சுமந்து வீங்கி", சீவக. 2081 : 1 - 2
செஞ்சாந்து வரித்தல்	சந்தனத்தால் வரைதல்	"செஞ்சாந்து வரித்த சின்மெல் ஆகத்துத் தஞ்சாய் மருங்குல் வருந்த", பெருங். 2 : 19 : 108 - 109
சாந்து மெழுகுதல்	சந்தனம் பூசுதல்	''குஞ்சர மருப்பிற் குறியிடப்பட்டுச் செஞ்சாந்து மெழுகிய சேடுபடு செல்வத்து மார்பினது வனப்புந் தோளினது திரட்சியும்", பெருங். 1 : 45 : 21 - 23; "மாறு அளாவிய மகரந்த நறவு உண்டு மகளிர் வீறு அளாவிய முகிழ் முலை மெழுகிய சாந்தின் சேறு அளாவிய சிறு நறுஞ் சீகரத் தென்றல்", கம்ப. 5857 : 1 - 3
வெண்சாந்து வரித்தல்	வெள்ளைச் சந்தனத் தால் கோலம் எழுதுதல்	"ஆற்றுந் தகையன வாற்றுளி வாங்கி வெண்சாந்து வரித்த வஞ்சி லாகத் திணைமுலை யிடைப்பட் டிலங்குபு பிறழும்", பெருங். 3 : 22 : 215 - 17
சாந்தின் வள்ளுகிர் வரித்தல்	மகளிர் மார்பில் கூரிய நகத்தாலே சாந்து எழுதுதல்	"வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை நோக்கி னாரை உள்ளுயிர் உண்ணும் கூற்றின் உடன்றுகண் கரிந்து பொங்கக்", சீவக. 2532 : 1 - 2
சுண்ணம்		
சுண்ணம்	மணப்பொடி	"பலர் தொகுபு இடித்த தாது உகு சுண்ணத்தர்", மது. 399
எரிமணிச் சுண்ணம் புரிமணி ஆகத்து ஐதா விரனுதி கொண்டு பூசுதல்	மார்பில் சுண்ணம் கொண்டு எழுதுதல்	"எரிமணிச் சுண்ணம்....... சிறுபுறம் செறியத் தீட்டிப் புரிமணி ஆகத்து ஐதா விரல் நுதி கொண்டு பூசி", சீவக. 625 : 1 - 3
வாச நறும்பொடி திமிர்தல்	நறுமணப் பொடியை மார்பில் பூசுதல்	"வாசநறும் பொடி திமிர்ந்த மார்பினர்", பெருங். 3:17: 160
செச்சை		
செச்சை	சாந்து	"தேய்வையும் செச்சையும் செறிகுழம்பு ஆகும்", தி.நிக. 6: 44; "பெறுகுற்ற வனப்பர் உச்சி பிறங்கு வெண்குடையார் செச்சை மது உற்ற அலங்கல் மார்பர்", கம்ப. 1029 : 3 - 4
சேறு		
மான்மதச் செறி நறுஞ்சேறு	நறுமணம் செறிந்துள்ள கஸ்தூரிக் குழம்பு	"தேனும் சாந்தமும்மான்மதச் செறி நறுஞ்சேறும் வானநாள் மலர்க் கற்பக மலர்களும்", கம்ப. 4851 : 1 - 2
ஆரநறுஞ்சேறு ஆட்டுதல்	வாசனையுடைய சந்தனக் குழம்பைப் பூசுதல்	"ஆரநறுஞ் சேறு ஆட்டி அரும்பனிநீர் நறுந்தி வலை அருகு வீசி", திருத். 319 : 1 - 2
மலயகஞ்செழுஞ் சேறு ஆடுதல்	சந்தனக் குழம்பு பூசுதல்	"கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு தெக்கண மலயகச் செழுஞ்சேறாடிப்", சிலப். 14: 76 - 77
முலை பூசிய சந்தனம் புழுகு குங்குமச் சேறு உலருதல்	மார்பில் பூசிய சந்தனம் புழுகு, குங்குமம் போன்ற கலவைகள் உலருதல்	"பாசிழை மடந்தையர் பகட்டு வெம்முலைபூசிய சந்தனம், புழுகு, குங்குமம் மூசின முயங்கு சேறு உலர", கம்ப. 4257 : 1 - 3

தேய்வை

தேய்வை	கட்டைகளைத் தேய்த்தலால் கிடைக்கும் குழம்பு	"நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை", திருமுருகு. 33; "நானம் ஆர்ந்த நறைக்குழல் ஆவியும் தேனும் ஆரமும் தேய்வையும் நாறுமால்", கம்ப 4984 : 3 - 4
சந்தனத் தேய்வை	சந்தனக் குழம்பு	"சாதிலிங்கமுஞ் சந்தனத் தேய்வையும் உரைத்த வெண்ணெயு நுரைப்பம லரைப்பும் பீடுடன் பேராப் பெருந் துறை யெங்கும்", பெருங். 1 : 41 : 130 - 132
நறும்சந்தனத் தேய்வை	மணம் கமழும் சந்தனக் குழம்பு	"தண்புனல் குளிர் கால் நறும் சந்தனத் தேவை", திருத். 2288 : 1
நலங்கொள் தேய்வை	நலம்தரும் சந்தனக் குழம்பு	"நாவிக்குழம்பு நலங் கொ டேய்வை மான்மதச் சாந்த மணங்கமழ் தெய்வத்", சிலப். 13 : 115
வெண்காழ் தேய்வை	சந்தனக் குழம்பு	"தேய்வை வெண்காழ் புரையும் விசிபிணி", புறம் 369: 19
சந்தனக் கொழுங் குறை பளிதம் பெய்த தேய்வை	சந்தன மரத்தினது கொழுவிய கட்டையினைத் தேய்த்து அதனோடு பச்சைக் கருப்பூரம் பெய்த நுண்மையுடைய குழம்பு	"குளிர் கொள் சாதிச் சந்தனக் கொழுங்குறை பளிதம் பெய்த பருப்பிற் றேய்வையின் ஆகமு முலையுந் தோளும் அணி பெறத் தாரையுங் கொடியுந் தகைபெற வாங்கி", பெருங் 4 : 16 : 18 - 21
சந்தனத் தேய்வை அகலத்து அப்புதல்	மார்பில் சந்தனக் குழம்பு பூசுதல்	"தென்வரைப் பொதியில் தந்த சந்தனத் தேய்வை தேங்கொண் மன்வரை அகலத் தப்பி", சீவக. 697: 1-2
ஆரம் அகிலொடு தேய்த்த தேய்வை அகலத்து அப்புதல்	அகிலையும், சந்தனத்தையும் தேய்த்தக் குழம்பை மார்பில் பூசுதல்	"தென்வரைப் பொதியில் ஆரம் அகிலொடு தேய்த்த தேய்வை மன்வரை அகலத் தப்பி மணி வடந் திருவில் வீச மின்னென விட்ட கோலை விழுங்கக் கண்டமுங்கி வேர்த்துக்", சீவக. 2187 : 1 - 3
சந்தனத் தேய்வை கொட்டுதல்	மார்பிலும் தோளிலும் சந்தனம் பூசுதல்	"கண்ணிற முலையும் தோளும் சந்தனத் தேய்வை கொட்டி", சீவக. 624 : 2
பூங்கேழ்த் தேய்வை இளமுலைக் கொட்டுதல்	சந்தனக் குழம்பை இளமுலையில் அப்புதல்	"நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை குவிமுகிழ் இளமுலைக் கொட்டி", திருமுருகு. 33
அகிற்தேய்வை கொழுஞ் சாந்த மெழுகுதல்	மார்பில் அகிற் தேய்வையைப் பூசுதல்	"மாலைபல தாழ்ந்து மதுப்பிலிற்றி மணங்கமழும் கோல அகிற் றேய்வை கொழுஞ் சாந்தமுலை மெழுகிப்", சீவக. 2018

நாவி

நாவியகலம் எழுதுதல்	மார்பில் புனுகு பூசுதல்	"நாவியகல மெழுதி நறுநுதலார் ஆவி தளிர்ப்ப அவர் தோண் மேற் றுஞ்சினார்", சீவக. 1575 : 1 - 2

எழுதியதும் வரைந்ததும்

எழுதுதல்

இலை பொர எழுதுதல்	இலை நெருங்க எழுதுதல்	"இலைபொர எழுதி யன்ன", சீவக. 612 : 1
குறி எழுதுதல்	எழுதி ஒப்பனை செய்தல்	"முறுகு காதலின் வேதனை உழப்பவர், முயங்கிய முலை முன்றில் இறுகு சாந்தமும், எழுதிய குறிகளும் இன் உயிர்ப் பொறை ஈர", கம்ப. 5028 : 3 - 6

குவட்டின் தொழில்

குவட்டின் தொழில்	மார்பில் எழுதப்பட்ட கோலம்	"கொங்கை இணைக் குவட்டை நோக்கி அக்குவட்டின் தொழிலை நோக்கி தன்னுடைய தோளை நோக்கி நாள் கழிப்பான்", கம்ப. 3571 : 5 - 8

இடுகொடி அகலம்	கொடி எழுதப்பட்ட மார்பு	"தோக்கையந் துகிலினாள்தன் துணைமுலை பொருது சேந்த ஏக்கொசி விலாத வில்லான் இடுகொடி அகல மின்றேன்", சீவக. 2477 : 1 - 2
எழுது கொடி ஆகம்	கொடி எழுதப்பட்ட மார்பு	"இலைப்பூண் கவை இய வெழுது கொடி யாகத்து", பெருங். 1 : 40 : 144
கொடி மார்பு	கொடி எழுதப்பட்ட மார்பு	"பொன்னாணினர் பொருவில்லுயர் புனை கேடகந்திரி யாகக் கொன்வாளினர் கொழுந்தாரினர் கொடிமார்பினர் திரிந்தார்", சீவக. 2264 : 3 - 4
கொடியணிதல்	கொடி எழுதி ஒப்பனை செய்தல்	"இடுகொடி அணிந்த மார்பர் இருவிசும்பேறிச் சீறி", சீவக. 2145 : 3; "தோடு மலி கோதையொடு துதைந்த வரை மின்போல் ஆடு கொடி அணிந்த உயர் அலங்கல் வரை மார்பன்", சீவக. 2483: 2 - 3; "கொடியணி யலங்கன் மார்பிற் குங்குமக் குன்ற மன்னான் அடிபணிந் தருளு வாழி யரசரு ளரச வென்ன", சீவக. 2900 : 1 - 2
கொடிபல அணிதல்	கொடிகளை வரைதல்	"கொடிப்பல வணிந்த மார்பிற் கோவிந்தன் வாழ்க வென்று நடத்துவா னவனை நோக்கி நகாச் சிலை பாரித் தானே", சீவக. 2285: 3 - 4
ஆகத்துக் கொடிபட எழுதுதல்	சாதிலிங்கக் குழம்பு முதலாகச் சுட்டிச் சுண்ணத்தையும் விரவிக் குழைத்துக் கலந்த குங்குமமாகிய கொழுவிய குழம்பில் கொடி எழுதுதல்	"கோல வாகத்துக் கொடிபட வெழுதிய சாதிங் குலிக மாதியாகச் சுட்டிச் சுண்ணமொடு மட்டித்துக் கலந்த குங்குமக் கொழுஞ்சோறு கூடக் குழைத்திட்டிந்திர வின்னெகிழ்ந்துருகி யாங்கு நீடுர வழியினூடு நிமிர்ந்தொ முகிப் பிணர்முரிப் பட்டுடைப் பெருநல வல்குற் காசு நிழற் காட்டு மாசின் மாமை ஆவி நுண்டுகிலணி நல நனைப்ப", பெருங். 1 : 40 : 220 - 228
குங்குமக் கொடி	குங்குமத்தால் எழுதப்பட்ட கொடியுருவம்	"இன்பம் பொதிந்த ஏந்தணி வனமுலை குங்குமக் கொடி யொடு குலாஅய்க் கிடந்த பூந்தா தொழுக்கஞ்", பெருங். 2 : 16 : 27 - 29
குங்குமம் இடு கொடி எழுதுதல்	குங்குமத்தால் கொடி எழுதுதல்	"கோல மென்முகை குங்கும மிடுகொடி யெழுதிச் சோலை வேய்மரு டோண்முத்துந் தொழுதக வணிந் தார்", சீவக. 2383: 3 - 4
சாந்தின் இடுகொடி எழுதுதல்	சாந்தினால் கொடி எழுதுதல்	"ஏந்தெழி லாகஞ் சாந்தி னிடுகொடி யெழுதிக் காதிற் காய்ந்தெரி செம்பொற் றோடுங் கனமணிக் குழையுமின்ன", சீவக. 2181 : 1 - 2
சித்திரச் செய் கொடித் தொழில்	மார்பிலும் நுதலிலும் எழுதும் கோலம்; அகிற் குழம்பு கொண்டு எழுதுதல்	"சுட்டுருக்கு அகிலின் வட்டித்துக் கலந்த வண்ண இலேகை நுண்ணிதின் வாங்கி இடைமுலை எழுச்சித் தாகிப்புடை முலை முத்திடைப் பரந்த சித்திரச் செய் கொடி முதலின் முன்னம் காட்டி நுதலின் சுட்டியிற் தோன்றிய சுருளிற்றாகி வித்தகத்து இயன்ற தன் கைத் தொழில் காட்டி", பெருங். 1 : 38 : 190 - 196
சந்தனமும் குங்குமமும் கூட்டியிடுகொடி எழுதுதல்	குங்குமத்தையும் சந்தனத்தையும் கலந்து கொடி எழுதுதல்	"குங்குமமும் சந்தனமுங் கூட்டியிடுகொடியா வெங்கணிள முலையின் மிசை யெழுதிவிளையாடி", சீவக. 850 : 1 - 2
பூங்கொடி புனைதல்	பொற் பூங்கொடி அணிதல்	"அணியிய லமிர்த மாற்றிய பின்னவட் டெளியக் காட்டுந் தெரிவினனாகிப் பூங்கொடிப் புனைந்த வீங்கு முலை யாகத்து வாங்கமைப் பணைத்தோள் வாச வதத்தையை", பெருங். 1 : 47 : 216 - 219

சித்திரம்

சித்திர வனமுலை	தொய்யிற் கோலம் எழுதிய அழகிய மார்பு	"சித்திர வனமுலைச் சீதை செவ்வியால் முத்தனார் மிதிலை ஊர், அறிவு முற்றிய பித்தன்", கம்ப. 7532: 1 - 3

தொய்யில்

தொய்யில்	தோளில், மார்பில் எழுதப் பயன் படுத்திய கலவை/ மார்புக் கோலம்	"தொய்யில் வனமுலைவரி வனப்பு இழப்ப", நற். 225: 7; "தொய்யில் சிதைத்தானைத் தேர்கு", கலித். 142: 44; "தொய்யில் துறந்தார் அவர் என", கலித். 24: 15; 'விரும்பியான் விட்டேனும் போல்வல்என் தோண்மேல் கரும்பெழுது தொய்யிற்குச் செல்வல் ஈங்காக", கலித் 63 : 7 - 8; "தொக்கனர் படியுந் தொய்யின் மகளிர்தம்", பெருங். 1 : 40 : 152; "தடம் எங்கும் புனல் குடையும் தையலார் தொய்யில் நிறம் இடம் எங்கும்", திருத். 2530: 1 - 2
புள்ளித் தொய்யில்	புள்ளி வடிவமாக எழுதப்படும் தொய்யில்	"புள்ளித் தொய்யில் பொறிபடு சுணங்கின் ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம் புல்லென் மாலையாம் இவண் ஒழிய", அகம். 239 : 8 - 10
தொய்யில் முலை	தொய்யில் மார்பு	"தொய்யில் இளமுலை இனிய தைவந்து தொய்யல் அம்தடக்கையின் வீழ்பிடிஅளிக்கும் மையல் யானை யின் மருட்டலும் மருட்டினன் அதனால் அல்லல் களைந் தனன் தோழி", கலித். 54: 12 - 16; "தொடித் தோள் வளை நெகிழத் தொய்யின் முலைமேல் வடிக் கேழ் மலர் நெடுங்கண் வார் புயலுங் காலும்", சீவக. 2049 : 1 - 2; "தொய்யில் மாமுலை மங்கையர் தோய்தலால் பொய்கை காதல் கொழுநரும் போன்றதே", கம்ப. 947: 3 - 4; "அணிபெற வியலி யடிக்கல மார்பத் தொய்யில் வனமுலை தோழி மாரொடு", பெருங். 3 : 13 : 51 - 52; "தொய்யில் வெய்யமுலை, துடிபோல் இடை நையும் நொய்ய மருங்குல்", கம்ப. 1098 : 1 - 2
தொய்யில் எழுதியிறுத்தல்	தொய்யில் எழுதி முடித்தல்	"ஏஎ! எல்லா, மொழிவது கண்டை இஃதொத்தன் தொய்யில் எழுதியிறுத்த பெரும் பொன்படுக", கலித். 64 : 8 - 9
தொய்யில் எழுதுதல்	தொய்யில் எழுதுதல்	"பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்தும் மற்றிவள் உருத்தெழு வன முலையொளி பெற வெழுதிய தொய்யில் காப்போ ரறிதலு மறியார்", குறுந். 276 : 2 - 4; "ஐய பிதிர்ந்த சுணங் கணி மென்முலைமேல் தொய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்", கலித். 111 : 16 - 17; "நெய்தல் நெறிக்கவும் வல்லன் நெடுமென் தோள் பெய்கரும் பீர்க்கவும் வல்லன் இளமுலைமேல் தொய்யில் எழுதவும் வல்லன் தன் கையிற்", கலித். 143 : 31 - 33
எறித்த குங்குமத்து இளமுலை தொய்யில் எழுதுதல்	மார்பில் ஒளியை வீசுகின்ற குங்குமக் குழம்பால் வரிக் கோலங்கள் எழுதப்பெறுதல்	"எறித்த குங்குமத்து இளமுலை எழுதிய தொய்யில் கறுத்த மேனியில் பொலிந்தன", கம்ப. 4866: 1 - 3
தொய்யில் சூழ்தல்	தொய்யில் எழுதுதல்	"மகிழ்செய் தேமொழித் தொய்யில் சூழ்இளமுலை முகிழ்செய முள்கிய தொடர்பவள் உண்கண்", கலித். 125: 8 - 9
தொய்யில் பொறித்தல்	புள்ளியாகத் தொய் யில் எழுதுதல்	"தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத் தொய்யகத் தோட்டிக் குழைதாழ் வடிமணி", கலித். 97 : 12 - 13; "முதிரா இளமுகை யொப்ப எதிரிய தொய்யில் பொறித்த வனமுலையாய் மற்றுநின் கைய தெவன்மற் றுரை", கலித். 117 : 3 - 5; "உதுக்காண் சாஅய்மலர் காட்டிச் சால்பிலான் யாமாடும் பாவை கொண் டோடி யுழி

		உதுக்காணந், தொய்யில் பொறித்த வழி உதுக் காண், தையால்தேறெனத் தேற்றி அறனில்லான்'', கலித். 144 : 32 - 35; "தொய்யில் பொறித்த சுணங் கெதிரிளமுலை", மது. 416
தொய்யில் வரித்தல்	தொய்யில் எழுதுதல்	"காடிறந் தகன்றோர் நீடின ராயினும்.... தளிர் ஏர் ஆகம் தகைபெற முகைந்த அணங்குடை வனமுலைத்தா அய நின்சுணங்கிடை வரித்தல் தொய்யில் நினைந்தே", அகம் 177 : 13 : 18 - 20; ''பெருந்தோள் தொய்யில் வரித்தும்", அகம். 389: 6
பத்தி		
நறுவெண் சாந்தின் பத்தியும் கொடியும் பல்வழி எழுதுதல்	வெண்சாந்தினால் பத்தியாகவும் கொடி உருவாகவும் பல முறைகளில் எழுதுதல்	"மறுவின்று அமைந்த நறுவெண்சாந்தின் பத்தியும் கொடியும் பல்வழி எழுதி", பெருங். 2 : 4 : 63 - 64
வரி		
எழுதுவரிக் கோலம்	வரைந்து செய்யப் படும் ஒப்பனை	"காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை அகன்ற வல்கு லந்நுண் மருங்குல் இகந்த வட்டுடை யெழுது வரிக் கோலத்து வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி", மணி. 3 : 120 - 123
கொம்மை வரி முலை	வரைந்து ஒப்பனை செய்யப்பட்ட மார்பு	"செம்மையொன் றின்றிச் சிறியாரினத் தராய்க் கொம்மை வரி முலையாள் தோள்மரீஇ'', நாலடி. 85 : 1 - 2; ''கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச் செம்மை மனத்தால் திருப்பணிகள் செய் வேனுக்கு", திருவாச. குலாப். 10 : 1 - 2
வரி தைஇ	தொய்யில் எழுதுதல்	"அணிவரி தைஇயும் நம் இல் வந்து வணங்கியும்'', கலித். 76 : 2
வல்லி		
சாந்தின் விழு முலை காமவல்லி வாணுதல் சுட்டி பூக்க வைத்தல்	சந்தனத்தையும் பச்சைக் கருப்பூரத்தையும் கலந்து வானளாவ மணக்கும் சந்தனக் குழம்பாலே மகளிர் மார்பில் தொடங்கி நெற்றியில் கொடி எழுதி முடித்தல்	"சண்பக மாலை வேய்ந்து சந்தனம் பளிதந்தீற்றி விண்புக நாறு சாந்தின் விழுமுலைக் காமவல்லி கொண்டெழுந் துருவுகாட்டி முகத்திடைக் குளித்துத் தோண் மேல் வண்டளி ரீன்று சுட்டி வாணுதல் பூப்ப வைத்தான்", சீவக. 1081 : 1 - 4
வில்		
வல்லியும் அனங் கன் வில்லும் மான்மதச் சாந்தின் தீட்டுதல்	கொடியும் வில்லும் எழுதுதல்	"சில் இயல் ஓதி கொங்கைத் திரள் மணிக் கனகச் செப்பில் வல்லியும் அனங்கன் வில்லும் மான்மதச் சாந்தின் தீட்டி", கம்ப. 1128 : 1 - 4
வள்ளி		
வள்ளி	தொய்யிற் கொடி	"வண்டே இழையே வள்ளிபூவே... அன்னவை பிறவும் ஆங்கு அவண் நிகழ நின்றவை களையும் கருவி என்ப'', தொல். 1041 : 1 - 4
வள்ளி எழுதுதல்	கொடி எழுதுதல்	"வெள்ளைச் சாந்தின் வள்ளி யெழுதிய வயந்தக குமரன் வரை புரை அகலத்து அசைந்த தோளனாகி யொருகையுட் டாரகம் புதைத்த தண்மலர் நறும்பைத் தூழறிந் துருட்டா வொருசிறை", பெருங். 3 : 8 : 61 - 65

எ. ஆடை

சுவன்மேல் அறுவை	தோளில் இடும் ஆடை	"தோமறு கடிகையும் சுவன் மேல் அறுவையும் காவுந்தி யையைக் கைப்பீலியும் கொண்டு" சிலப். 10: 98-99
அறுவையர்	துகிலினையுடையவர்	"துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்திரு கோட்டு அறுவையர் வேண்டுவயிற் திரிதர", நெடு. 34 - 35
உத்தரா சங்கம்	மேலாடை	"உத்தரா சங்கம் இட்டு ஒளிக்கும் கூற்றமே", கம்ப. 747 : 4
உத்தரிகம்	மேலாடை	"கோசிகத் தினிலுற்ற கொழுங்கனல் தூசினுத் தரிகத்தொடும் சுற்றுறா", கம்ப. 5967 : 1 - 2; "ஊசல் நீங்கினர் உத்தரிகத்தொடு தூசு வீசினர்", கம்ப. 8131: 3 - 4
உத்தரியத் துகில்	மேலாடை	"மிக்கான் மிசை உத்தரியத் துகில் தாங்கி மேற் சென்று அக்காலம் உன் தந்தை தன் தந்தை ஆள் ஓலை ஈதலால்", திருத். 185 : 2 - 3
உத்தரியம்	மேலாடை	"உத்தியொரு காழ் நூலுத்தரியத் திண்பிடி நேர்மணி முக்காழ்ப் பல்பல கண்டிகை", கலித். 96 : 13 - 14; "பாங்கின் உத்தரியம் மானப் படர்திரை தவழ ", கம்ப. 2353: 1; "மோந்திட நறுமலர் ஆன மொய்ம்பினில் ஏந்திட உத்தரியத்தை ஏய்ந்தன", கம்ப. 3908: 1 - 2; "திருவின் நாயகன் இவன் எனத் தேமறைத் தெரிக்கும் ஒருவன் மார்பினின் உத்தரியத்தினை ஒத்த", கம்ப. 4189: 3 - 4; "வெள் அருவியின் நிமிர்ந்த பால்நிறப் பட்டின் மாலை உத்தரியம் பண்புற", கம்ப. 5150: 1 - 2; "ஓயா அருவித் திரள் உத்திரியத்தை ஒப்பத்", கம்ப. 4780: 2; "உத்தரிய வெயிலுந்திய வெண் பட்டதன் மேல் விரித்துப் பள்ளி மேவினார்", திருத். 3208 : 6 - 8; "தாமறுவை உத்தரியந் தனி விசும்பில் எறிந்து ஆர்க்கும் தன்மையிலே", திருத். 1998 : 3 - 4
அம்சுவணத்தின் உத்தரியம்	அழகிய பொன் இழையில் அமையப் பெற்ற மேலாடை	"அம்சுவணத்தின் உத்தரியத்தாள் அலையாரும் அம்சுவள் நத்தின் முத்து ஒளிர் ஆரத்து அணி கொண் டாள்", கம்ப. 4913 : 3 - 4
ஏகஉத்தரியம்	மேலாடை	"ஏகஉத்தரியம் இடைச்சுவல் வருத்த", பெருங். 2: 4: 117
உத்தரிய வெண்துகில்	மேலாடை	"மீது புனை உத்தரிய வெண்துகில் நுடங்க", திருத். 176 : 3
பட்டு உத்தரியம்	பட்டு அங்கவத்திரம்	"நீத்த வெள்ளருவியின் நிமிர்ந்த பானிறப்பட்டு யுத்தரியம் பசப்புற", கம்ப. 5150 : 3 - 4
உத்தரீயம்	மேலாடை	"உத்தரீயங்களும் சரிய ஓடுவார்", கம்ப. 4885: 4; "அருவிமாலை, உலகு அளந்தவன் தன் மார்பின் உத்தரீயத்தை ஒத்த", கம்ப. 857: 3 - 4; "உழைபுகு செப்பின் ஒளிதர மறைத்த உத்தரீயத் தினர் ஒல்கி", கம்ப. 5160 : 3 - 4
உத்தரியத் துகில் தாங்குதல்	மேலாடையை அணிதல்	"மிக்கான் மிசை உத்தரியத் துகில் தாங்கி மேற் சென்று அக்காலம் உன்தந்தை தன் தந்தை ஆள் ஓலை ஈதலால்", திருத். 185 : 2 - 3
உத்தரியம் அணிதல்	மேலாடை அணிதல்	"பொன்னாரும் உத்தரியம் புரிமுந்நூல் அணிமார்பர்", திருத். 263 : 31
உத்தரியம் இடுதல்	உத்தரியம் அணிதல்	"இட்ட வுத்தரியம் மெல்லென்றிடை சுவல் வருத்த வொல்கி", சீவக. 472 : 1; "இட்ட வுத்தரியம் மின்னும் எரிமணி .... வருமுலை தாங்கலாற்றா", சீவக. 835 : 1
உத்தரீகம் நெடு மார்பில்	மார்பில் மேலாடையை அணிதல்	"தத்தி வீழ் அருவியின்திரள் சால உத்தரீகம் நெடு மார்பின் உலாவ", கம்ப. 6864: 3 - 4

உலாவுதல்

உத்தரீகம் தாங்குதல்	மேலாடையை அணிதல்	"நாணுத்தரீகம் தாங்கி", பெருங். 4 : 16 : 40
உத்தரீய நறுந் துகில் சாத்துதல்	மேலாடையை அணி வித்தல்	"நற்றிரு உத்தரீய நறுந்துகில் சாத்தி", திருத்.3112: 4 - 5
உத்தரீயம் மார்பில் தோன்றுதல்	உத்தரீயம் அணிந்திருத்தல்	"ஒளி திகழ் உத்தரீயம் தான், தணிவு இல் கருணையான் கழுத்தில் சாத்திய மணிஉமிழ் கதிர் என மார்பில் தோன்றவே", கம்ப. 1218: 2 - 4
உத்தரீய வெண் துகில் நுடங்குதல்	வெண்மையான உத்தரீயம் அசைதல்	"மீதுபுனை உத்தரீய வெண்துகில் நுடங்க", திருத். 176 : 3
கச்சு	மார்புக் கச்சு	"துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி" சிலப். 12: 59 : 60; "கண்ணியுங் கழங்குங் கதிர்முலைக் கச்சும்", பெருங். 1 : 34 : 162; "வட்டிகைப் பலகையும் வருமுலைக் கச்சும்", பெருங். 1 : 38 : 169; "இலைப்பூண் கவைஇய எழுதுகொடி ஆகத்து முலைக் கச்சிளமுலை முகத்திடையப்பி", பெருங். 1 : 40 : 143 - 144; "வட்டச் சூரையர் வார்முலைக் கச்சினர்", சீவக. 632 : 1; "கச்சற நிமிர்ந்து மாந்தர்க் கடாவிடு களிறுபோல்", சீவக. 1153: 1; "தாளுண்ட கச்சின் தகையுண்ட முலைக் கண்ஆவி வாளுண்ட கண்ணின் மழையுண்டென வார நின்றாள்", கம்ப. 903: 3 - 4; "முலை மிசைக் கச்சொடு கலையும் மூட்டு அற", கம்ப. 985: 2
மாணிக்கத்தோடு தொடர்ந்த முத்து, பவளக் கச்சு	மணி, முத்து, பவளம் என்பவை விரவிச் செய்யப்பட்ட கச்சு	"கடந்தவள் பொன்முடி மாணிக்கத்தோடு தொடர்ந்த அணி முத்து, பவளம் கச்சு ஆகப் படர்ந்த அல்குல் பட்டாடை", திருமந். 1400 : 1 - 3
மென்முலைக் கச்சு	மென்மையான முலைக் கச்சு	"முத்துவடமு முழுமணிக் காசும் பன்மணித் தாலியு மென்முலைக் கச்சும்", பெருங். 3 : 17 : 164 - 165
வார்முலைக் கச்சு	கச்சு	"வார்முலை கச்சினர் கண்ணியர்; பட்டு வீக்கிய அல்குலர்", சீவக. 632 : 1 - 2
கச்சினர்	மார்புக் கச்சு அணிந்தவர்	"கச்சினர் கண்ணியர் கதிர் வெள்வளையினர்", பெருங். 1 : 34 : 122
மணிக்கச்சு அணிதல்	கச்சு அணிதல்	"மலர்ந்தெழு கொங்கை மணிக்கச்சு அணிந்து", திருமந். 1393 : 3
முலைக்கச்சு அசைதல்	கச்சு நெகிழ்தல்	"முளைத்தெழு முலைக்கச்சு அசைத்தலின்", பெருங். 2 : 7: 28
கச்சார்தல்	கச்சு அணிதல்	"எண்வகைப் பொலிந்த வொண்படைத் தடக்கைக் கச்சார் வனமுலைக் கண்மணிக் கொடும்பூட்", பெருங். 1 : 52 : 19 - 20
பொற்கச்சு ஆர்தல்	பொன்னாலாகிய கச்சு அணிதல்	"பொற்கச் சார்ந்த பூணணி பொம்மன் முலை யாளை", சீவக. 1060 : 1
கச்சுலாவுதல்	கச்சு அணிதல்	"கச்சுலா முலையினார்க் கணங்காகிய சச்சந்தன் என்னும் தாமரைச் செங்கணான்", சீவக. 157 : 3 - 4
கச்சுப் பிணி உறுத்தல்	கச்சு கட்டுதல்	"கச்சுப் பிணியுறுத்துக் கண்டகம் பூண்ட", பெருங். 3 : 5 : 108
கச்சு யாப்புறுத்தல்	கச்சு கட்டுதல்	"கச்சி யாப்புறுத்த கால்வீங்கிள முலை", பெருங். 1 : 34 : 202
பூங்கச்சினால் அடையப் பூட்டுறீஇ	கச்சினால் மார்பை முடுதல்	"பூங்கச்சினால் அடையப் பூட்டுறீஇ", 11ஆம் திரு. 300: 159

கச்சு விசித்து யாத்தல்	கச்சினை இறுக்கி கட்டுதல்	"கச்சு விசித்து யாத்த கதிர்முலையர் மணியயில் வாள்", சீவக. 2015 : 1
கச்சு அற வீக்குதல்	கச்சினால் இறுகக் கட்டுதல்	"கருங்கணிள முலை கச்சற வீக்கி மருங்குல் தளர", சீவக. 2116 : 1
கச்சின் வீக்குதல்	கச்சினால் இறுக்கிக் கட்டுதல்	"நூல்பொர அரிய நுண்மை நுசுப்பினை ஒசிய வீங்கிக் கால் பரந் திருந்த வெங்கண் கதிர்முலை கச்சின் வீக்கி", சீவக. 459 : 1 - 2; "கால் பரந்திருந்த வெங்கட் கதிர்முலைக் கச்சின் வீக்கி", சீவக. 541 : 1; "முத்தணிந் தாவி பூட்டி முகிழ் முலைக் கச்சின் வீக்கி", சீவக. 971 : 3
கஞ்சுகத்தர்	சட்டை அணிந்தவர்	"நஞ்சு கக்கி எரி கண்ணினர் நாமக் கஞ்சுகத்தர் சுதை பற்றிய கையர்" கம்ப. 6873: 1 - 2
கஞ்சுகம்	சட்டை	"கஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற கஞ்சுக முதல் வர் ஈரைந் நூற்றுவரும்", சிலப். 26 : 137 - 138; "கஞ்சுக மாக்கள் எஞ்சா நாவினர்", சிலப். 26 : 166 - 167; "நீலன் முதலிய கஞ்சுக மாக்கள்", சிலப். 28 : 80; "பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாய நும்மூர்க் கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்கும் கனங்குழையே", திருக்கோ. 1 : 15 : 3 - 4; "பாதக இருள் செய் கஞ்சுகமும் பற்றலால் சாதகர் என்னவும் தகைத்து அம்மாலையே", கம்ப. 542: 3 - 4; "தாழ்ந்து விரிந்த கஞ்சு கத்து மெய்யார்", கம்ப. 798: 2; "மின்னுடை வேத்திரக் கையர் மெய்புகத் துன்நெடுங் கஞ்சுகத் துகிலர்", கம்ப. 3082: 1 - 2; "காவலற் றொழுது கஞ்சுக னுரைப்போன்", மணி. 25 : 11; "கைதொழுதிறைஞ்சிக் கஞ்சுகன்", மணி. 28 : 178
கஞ்சுகி	சட்டை அணிந்தவர்	"அரசனுக்கு வெப்படுத்தது என்றருகு கஞ்சுகிகள் உரை செயப் பதைத்து ஒரு தனித் தேவியர்புகுத", திருத். 2613 : 1 - 2; "கதிரின்பொலி செம்மணியின் கற்றைச் சுடர் விட்டெரி கஞ்சுகியான்", கம்ப. 2596: 1 - 2; "கஞ்சுகி அயல் நின்றானை, ஈண்டு நம் தூதர் தம்மை", கம்ப. 7277: 2 - 3
காஞ்சுகி	சட்டை அணிந்தவர்	"காவன்மாக்களும் காஞ்சுகி முதியரும்", பெருங். 1 : 44 : 111; "காஞ்சுகி முதியர்", பெருங். 1 : 46 : 318; "காஞ்சுகி முதியர்", பெருங். 1 : 47 : 167; "நண்பிற் றிரியாது பண்பொடு புணர்ந்த காஞ்சுகி மாந் தரும் தாம் சென்று தருகென", பெருங். 4 : 15 : 145 - 146; "காஞ்சுகி மாந்தர்க்கு ஓம்படை கூறி", பெருங். 4 : 16 : 45; "அச்சுறு நோக்கினறுபது கழிந்த காஞ்சுகி மாக்கள் சோர்ந்து புடை காப்ப", பெருங். 3 : 5 : 109 - 110
கஞ்சுகத்தின் அணி விளங்குதல்	சட்டை அழகாக விளங்குதல்	"தம் பழைய கரி உரிவை கொண்டு சமைத்து அது சாத்தும் அம் பவளத் திருமேனிக் கஞ்சுகத்தின் அணி விளங்க", திருத். 3695 : 7 - 8
கஞ்சுகம் மூடுதல்	சட்டை அணிதல்	"முற்றும் மூடிய கஞ்சுகன் மூட்டிய வெற்று அனல் பொறிக் கண்ணினன்", கம்ப. 6798: 1 - 2
முலைக் கலிங்கம்	மேலாடை	"வந்துபனி வார்ந்து முலைக் கலிங்கம் அது நனைப்ப", சீவக. 1785: 2
நுரைபுரைக் கலிங்கம் ஒரு முலை புதைத்தல்	மேலாடை அணிதல்	"நிலாவெண் துகிலினர் நுரைபுரைக் கலிங்கம் ஒரு முலை புதைப்ப", பெருங். 2: 5: 85-86
குப்பாயம்	சட்டை	"ஓதிடும் வெண்ணீற்றால் உத்தூளம் குப்பாய மீதினி விட்டா சனத்தினின் மேல்வைத்து", திருமந். 1919 : 1 -2;

		"குப்பாயமென நின்று காட்சி தரும் கோவர்த்தன மென்னும் கொற்றக் குடையே", பெரியாழ். 3 : 5 : 6: 4; "போர்த்த முத்தின் குப்பாயப் புகர் மால் யானைக் கன்றே போல்", நாச். திரு. 14 : 4: 3; "வெங்கண் நோக்கிற் குப்பாய மிலேச்சனைச் செங்கண் தீவிழியா", சீவக. 431 : 2 - 3
புதைக் குப்பாயம்	உடலை மறைக்கும் மெய்ப்பை	"உதையண குமர னொளிபெறத் தோன்றப் புதைக் குப்பாயத்துப் பூண்ட வாளிற்", பெருங். 1 : 58 : 23 - 24
வரிக் குப்பாயம்	சட்டை	"வரிக் குப்பாயத்து வார்பொற் கச்சையர்", பெருங். 1 : 40 : 378
நுதி மயிர்த்துகிற் குப்பாயம் புகுதல்	எலியினது கூர்மை யையுடைய மயிராற் செய்த சட்டை அணிதல்	"நுதிமயிர்த் துகிற் குப்பாயம் புகுகென நூக்கி னானே", சீவக. 819 : 4
சாலிகை	கவசம்	"சாலிகை முதல் ஆன போர்ப்பரம் தாங்கிற்று எல்லாம்", கம்ப. 9580 : 1
சீவரம்	மரவுரி	"மார்பம் புதை மலி சீவரம் மறையா வருவாரும்", தேவா. திருஞா. 1 : 10: 10: 2
தானை	மேலாடை	"பாப்புரியன்ன மீக் கொள் தானை இருபுடை மருங்கினும் வருவளிக்கு ஒசிந்து", பெருங். 1 : 42: 244 - 245
பூந்துகில்	மேலாடை	"பூந்துகில் பொருதிரை பொம்மல் வெம்முலை", சீவக. 1492 : 1
பைந்துகில்	மேலாடை	"பான் மலிந்த செம்முலைப் பைந்துகில் அரிவையர்", சீவக. 1105 : 3
துகில் இடவயின் தழுவுதல்	துகிலைப் பிடித்தல்	"புடை வீழ் அந்துகில் இடவயின் தழீஇ", நெடு. 181
மென்தோல் மார்பு	மெல்லிய தோல் அணிந்த மார்பு	"மென்தோல் மார்பின் முனிவன்", கம்ப. 1671: 3
பட்டம்	மேலாடை	"கட்டக முத்தின் புதல்வனை மார்பின் மேல் பட்டம் சிதைப்ப வரும்", ஐந்.எழு. 41: 3-4
பட்டிகை	முலைக்கச்சு	"வம்பு வார் விசிகை பட்டிகை முலைக் கச்சே", நிக.பி. 6 : 189
படம்	சட்டை	"கொண்ட இவ்விந்து பரமம் போல் கோது அற நின்ற படம் கடமாய் நிலை நிற்றலின்", திருமந். 1930 : 1 - 2
சித்திரப் படம்	ஓவியத் தொழில் அமைந்த சட்டை	"சித்திரப் படத்துள் புக்கு, செழுங்கோட்டின் மலர் புனைந்து", சிலப். 7 : 1
வண்ணம் கொளீஇய நுண்ணூற் பூம்படம்	வண்ணம் கொண்ட நுண்ணிய நூலால் ஆகிய படம்	"வண்ணங்கொளீஇய நுண்ணூற் பூம்படம்", பெருங். 1 : 42 : 34
படம் புகுதல்	சட்டை அணிதல்	"படம்புகு மிலேச்சர் உழையராக", முல்லை. 6; "அடி புதை அரணம் எய்தி படம்புக்கு", பெரும். 69
படாம்	உடுத்தலுக்கும் போர்த்தலுக்கும் உரிய ஆடை	"உடாஅ போரா ஆகுதல் அறிந்தும் படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ", புறம். 141: 10-11; "மடத்தகை மாமயில் பனிக்குமென்றருளிப் படாஅ மீத்தக் கெடாஅ நல்லிசைக் கடாஅ யானை கலிமான் பேக", புறம். 145: 1 - 3; "கடாஅக் களிற்றின் மேல் கட்படாம் மாதர் படாஅ முலைமேல் துகில்", குறள். 1087; "வண்டின முகபடா மணிந்து வார் மதம் உண்டுகுத் திடுகளிற் றுழவன் தன் மகன்", சீவக.

		182 : 1 - 2; "மூப்பெனு முகபடாம் புதைந்து முற்றிழை காப்புடை வளநகர் காளை எய்தினான்", சீவக. 2011: 3-4
சித்திரச் செய்கைப் படாம்	ஓவியத் தொழில் நிறைந்த போர்வை	"வித்தகரியற்றிய விளங்கிய கைவினைச் சித்திரச் செய்கைப்படாம் போர்த்ததுவே", மணி. 3 : 167 - 168
நன்பொன்படாம்	பொன்னால் செய்யப் பட்ட படாம்	"நன்பொன் முகபடாம் வைப்ப", சீவக. 1486: 3-4
பூம்படாம்	பூ வேலைப்பாடு அமையப் பெற்ற போர்வை	"நெய்யோடு குங்கும நிறைந்த நாணினாற் பொய்கைகள் பூம்படாம் போர்த்த போன்றவே", சீவக. 80: 3-4
மயிர்ப் படாம்	மயிர்ப் போர்வை	"எலிப்பூம் போர்வையோடு மயிர் படாம் விரித்து", பெருங். 1 : 47 : 179
வெண்படாம்	வெள்ளிய போர்வை	"சூழ்பனியால் குளிர்க்கு உடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும்", திருத். 2232 : 6 - 8
முலைகள் கழுத்தொடு மறையப் போர்த்தல்	மார்பு பகுதியை முழுவதுமாக மறைத்தல்	"பொங்கு வெம்முலைகள் பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நைந்தான்", கம்ப. 4320: 5 - 8
கைந்நுண் மீக்கோள்	கைத் தொழிலால் நுணுகிய மேற் போர்வை	"இசைந்த வெண்டுகி லேற்ற தானையன் கைந்நுண் மீக்கோள் கச்சினோ டணவர", பெருங். 5 : 2 : 21 - 22
புரிநூல் மீக்கோள்	மேலாடை	"புரிநூன் மீக்கோள் பூம்புறத் தேற்றதன் தெரிநூல் வாங்கியிரு நூற்கொளீஇ", பெருங். 2 : 15 : 126 - 127
போர்ப்புறு மீக்கோள்	மேலாடை	"போர்ப்புறு மீக்கோள் யாப்புறுத் தசைஇ", பெருங். 3 : 17 : 172
மெய்ப்பை புகுதல்	சட்டை இடுதல்	"மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்", முல். 59 - 61; "நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர மெய்ப்பை புக்கு விலங்கு நடைச் செலவிற்", சிலப். 16 : 105 - 106
மெய்யாப்பு	போர்வை	"மெய்யாப்பு மெய்யார மூடுவார்", பரி. திரட். 2 : 19
மேலாப்பு	மேலாடை	"விண்ணீல மேலாப்பு விரித்தாற் போல்", நாச். திரு. 8: 1: 1; "மேலாப்பின் கீழ் வருவானை", நாச். திரு.14 : 3: 4
வனப்பொடு புணரிய வடகப் போர்வை	அழகோடுகூடிய மேலாடை	"வனப்பொடு புணரிய வடகப் போர்வையை மணிப்பூண் வனமுலை யிடைக் கரைபுதைஇப்", பெருங். 1 : 53 : 146
வடகப் போர்வையை வனப்பொடு திருத்துதல்	போர்த்திய வடிவு அமைந்த மேலாடையை அழகுறத் திருத்தி அமைத்தல்	"படாஅத் தன்ன படிவத் தாகிய வடகப் போர்வையை வனப்பொடு திருத்திக்", பெருங். 1 : 45 : 9 - 10
வட்டம் சாத்துதல்	மேலாடை அணிதல்	"தரித்தபின் மேல் வட்டம் சாத்திடுவீரே", திருமந். 1920: 3 - 4
வடகம்	மேலாடை	"சடசடவிடு பெணை பழம்படும் இடவகை படவடகத்தொடு பலிகலந்(து) உலவிய", தேவா. சுந்தர. 42: 9: 1 - 2; "கொல்லாத் தொழிலினர் கொலைப்படை யகற்றி வல்லாண் டோன்றலை வடகம் வாங்கிக் கையாப் புறுத்துக் காட்டிய", பெருங். 1 : 56 : 98 - 100; "வடகமும் துகிலும் தோடு மாலையும் மணியும் முத்தும்", சீவக. 462: 1; "வடகத்தோடு உடுத்த தூசு மாசுஇல் நீர்

		நனைப்ப'', கம்ப. 860: 3; ''வடகமும் மகரயாழும் வட்டினி கொடுத்து", கம்ப. 496: 2
வடக மீக்கோள்	மேலாடை	"எருவை வேந்தன் வீசிய வடகமீக்கோள் ஈது என விளங்கிற்று அன்றே", கம்ப. 4622 : 5-8; வடகமீக் கோள் வாளொடு களைந்த தன் படுகரை மருங்கிற் பாங்குற வைத்து", பெருங். 1 : 53 : 82 - 83
வம்பு	கச்சு	"வம்பு நெருக்குற்றப் பொங்கிள முலையர்", பெருங். 1 : 46 - 244; "வம்பு மீக்கூறும் பொங்கிள முலையின் நுடங்கு கொடி மருங்கின் நுணுகிய நுசுப்பின்", பெருங். 1 : 41 : 79 - 80; "வம்பிற் றுளும்பு முலை வாணெடுங்கட் மடவார்", சீவக. 1867 : 2; "வம்பு அளவு கொங்கையொடு வாலுகம் வளர்க்கும்", கம்ப. 1853: 3; "வம்பின் முலை யாயுறையிடவும் போதார் கணக்கு வரம்புண்டோ", கம்ப. 5344: 4; "வம்பில் பொங்கும் கொங்கை சுமக்கும் வலி இன்றி", கம்ப. 917: 1-2; "வம்பு இழை கொங்கை வஞ்சி", கம்ப். 3526; "வம்புமால் செய்து வல்லியின் ஒல்கியின்று", திருத். 299 : 3
வம்பு அணிதல்	கச்சு அணிதல்	"வம்பணி மென்முலையவர்க்கு மனங்கொடுத்தவன் றொண்டர்", திருத். 3406 : 1
வம்பு கொள்ளுதல்	கச்சு அணிதல்	"வம்பு கொண்டிருந்த மாதர் வனமுலை மாலைத் தேன் சோர், கொம்பு கொண்டன்ன நல்லார்", சீவக. 439: 1 - 2
வம்பு விசித்து யாத்தல்	கச்சினால் இறுகக் கட்டுதல்	''அம்பணைத் தடைஇய மென்றோண் முகிழ்முலை வம்பு விசித்தியாத்த வாங்கு சாய் நுசுப்பின்", நெடு. 149 - 150
வம்பு வீக்கி வரு முலையுள் கரத்தல்	மார்பைக் கச்சினால் மறைத்தல்	"வம்பு வீக்கி வருமுலையுட் கரத்து அம்பினொய்யர் ஆடைத் தானையர்", சீவக. 633: 1 - 2
வார்	மார்புக் கச்சு	"வார் நின்று இளகு முலையினாய்", சீவக. 718 : 2; "வார் காத்த வன முலையார்", கம்ப. 652: 2; "வார் முகம் கெழுவு கொங்கையார் கருங்குழலின் வண்டு ஏர் முழங்கு அரவம் ஏழ்இசை முழங்கு அரவமே", கம்ப. 1037:1-3; "வார்ப் பொற் கொங்கை மருகியை", கம்ப. 2731: 1-2; ''வார் தந்த கொங்கையார் தம் வயிறு தந்தாளும் அல்லள்'', கம்ப. 3144:3-4; ''வார் ஆழிக் கலசக் கொங்கை'', கம்ப. 4483: 1; ''வார்க்கடை மதுகைக் கொங்கை", கம்ப. ஆரணிய. 8206: 3; "வார் அணங்கு முலை உமையாள் குழைத்த செம் பொன் வள்ளத்தில் அமுது உண்ட வள்ளலாரை", திருத். 216 : 5 - 6
வார்க்கோலம்	கச்சு அணிந்த கோலம்	"வார்க்கோல் மாலை முலையார் மண்ணுறுப்ப வாடி", சீவக. 2352 : 2
வார்ச் செறி கொங்கை	கச்சு அணிந்த மார்பு	"வார்ச்செறி கொங்கை அன்ன கும்பமும் மருப்பும்", கம்ப. 790: 3-4
வார் முலை	வார் அணிந்த மார்பு	"ஆயிதழ் மடந்தை வார்முலை முற்றம்", அகம். 361
வார் உடை முலை	கச்சு அணிந்த மார்பு	"வாருடை முலை முகம் நனைப்ப'', சீவக. 274: 2; "வார் உடை முலையொடும் மதுகை மைந்தரைப் பாரிடைச் செலுத்தினேன்", கம்ப. 1860: 2 - 3; "வாருடை வனமுலை மகளிர் சிந்தைபோல்", கம்ப. 751: 2
வார் அணவுதல்	கச்சு அணிதல்	"வாரணவு முலை மங்கை பங்கினரா யங்கையினில் போரணவு மழுவொன்றங் கேந்தி வெண்பொடியணிவர்", தேவா. திருஞா. 3 : 65 : 1 : 1 - 2
வார் அணிதல்	கச்சு அணிதல்	"தாள் அணி நூபுரம், செம்பட்டுத்தான் உடை வார் அணி கொங்கை, மலர்க் கன்னல் வாளி", திருமந். 1049: 1 - 2;

		"வாரணி முலை யினார்க்கு மன்னற்கும் வகுத்து வாவி ஏரணி கொண்ட விந் நீர் இறைவற் கண்டருளுக", சீவக. 2654: 3 - 4; "வாரணி மணித்துடி மருட்டு நுண்ணிடைக் காரணி மயிலனார் சூழக் காவலன்", சீவக. 2892 : 1 - 2; "வாரணி வனமுலை வஞ்சிக் கொம்பனார் போரணி புலவுவேற் கண்கள்", சீவக. 2894: 2 - 3; "வாருமணிய அணிய லாம் வளர் மென் முலைகள் இடை வருத்த", திருத். 3368 : 5 - 6; "வாருடை முலையொடும்", கம்ப. 1860: 2
வார் கொண்டணிதல்	கச்சு அணிதல்	"வார் கொண்டணி கொங்கையை வவ்வினர் பால் போர் கொண்டனனோ", கம்ப. 3604: 5 - 7
பொன்னிற் பொலி வார் அணிதல்	சிறந்த கச்சினை அணிதல்	"பொன்னிற் பொலி வாரணி", கம்ப. 2589: 3
வார் ஆர்தல்	கச்சு அணிதல்	"வார்ஆர் முலையாரும் மற்று உள்ள மாந்தர்களும்", கம்ப. 1697: 1 - 2
வார் உடுத்தல்	கச்சு சூழ்தல்	"வார் உடுத்த மென்முலைய வண்டார் பூங்கோதையை", சீவக. 1970 : 1
வார் உலாவுதல்	கச்சு அணிதல்	"வாருலா முலையினாட்கும் வரிசிலை தடக்கை யாற்கும் சீருலாக் கோலம் செய்தார் செப்பினார் மணம்", சீவக. 1687 : 1 - 2
வார் ஏறுதல்	கச்சு அணிதல்	"வாரேறும் முலைமடவார்", திருத். 3953 : 5
வார் காத்தல்	கச்சு அணிதல்	"வார் காத்த வனமுலையார்", கம்ப. 652 : 3
வார் குலாவுதல்	கச்சு அணிதல்	"வார் குலாம் முலை வைத்த கண் வாங்கிடப் பேர்கி லாது பிறங்கு முகத்தினான்", கம்ப. 761: 1-2
வார் கொள்ளுதல்	கச்சு அணிதல்	"வார் கொண் மென்முலை வம்பணி கோதையார் ஏர்கொள் சாயலுண்டாடு மற்றென்பவே", சீவக. 2668: 3 - 4; "கருங்குழல் பாரம் வார்கொள் கனமுலை கலைசூழ் அல்குல் நெருங்கின மறைப்ப", கம்ப. 1079: 1 - 3; "வார் கொள் முலையாய்", திருத். 3398 : 7
வார் தருதல்	கச்சு அணிதல்	"வார் தந்த கொங்கையார் தம் வயிறு தந்தாளும் அல்லள்", கம்ப. 3144 : 3 - 4
வார் தாங்குதல்	கச்சு அணிதல்	"வார்தாங்கு வனமுலையாள் பாகன் தன்னை மறி கடலுள் நஞ்சுண்டு வானோ ரச்சந் தீர்த்தானைத் தென்றி சைக்கே காமன் செல்லக்", தேவா. திருநா. 6: 93 : 3 - 5
வார் திகழ்தல்	கச்சு பொலிதல்	"வார் திகழ் மென்முலையாளொரு பாகன்", திருத். 1510 : 5 - 6
வார் புனைதல்	கச்சு அணிதல்	"வார் புனையும் வனமுலையார்", திருத். 3422 : 7
வார்ப் பொலிதல்	கச்சு அணிந்து இருத்தல்	"வார்ப்பொலி முலையினாட்கு வாய்திறந்து", சீவக. 758 : 4
வாரின் மல்குதல்	கச்சு அணிதல்	"வாரின் மல்கிய வனமுலையாளுடன் மன்னினார்", திருத். 2858 : 3 - 4; "வாரின் மல்கிய கொங்கை யாள்", திருத். 2872 : 3; "வாரின்மலி கொங்கை யுமை நங்கையொடு சங்கரன் மகிழ்ந்தமருமூர்" தேவா. திருஞா. 3 : 75 : 11 : 1 - 2
வார் மீதாடுதல்	கச்சு அணிதல்	"வார்மீதாடி வடம் சூடி பொற்பார்த்து இருந்த வன முலையார்", சீவக. 2359 : 1 - 2
வார் விளை யாடுதல்	கச்சு அணிந்து இருத்தல்	"வார் விளையாடிய மென்முலை, மைந்தர் தார் விளையாட்டொடு", சீவக. 915 : 2 - 3

வார் செல விம்முதல்	கச்சு இறுக அணிதல்	"வார் செல விம்மும் வனமுலை மகளிர்", சீவக. 469: 1
வார் வீக்குதல்	கச்சு கட்டுதல்	"வீக்குவார் முலையினாற் போல் வெய்துயிர்த்துருகி நைய", சீவக. 1727 : 3

ஏ. கவசம்

கவசம்	போரில் காப்புக்காக அணியும் மேல் அணி	"கவசமா யாருயிராய் கண்ணாய் மொய்த்தவமாய்..... காப்பானை" கம்ப. 2612: 9-11; "நிச்சய மென்னு கவசந் தான்", கம்ப. 3016: 5-6; "கருவி ஓடின, கச்சையும் கவசமும் கழல", கம்ப. 3024: 2; "கவசம் படர் மார்பிடைச் சுற்றினான்", கம்ப. 7113: 3 - 4; "ஆரத்தொடு கவசத்து உடல் பொடிபட்டு உக", கம்ப. 7189: 3; "இடபம் உந்தும் எழில் இரு நான்கு தோள் கடவுள் ஈந்த கவசமும் கட்டி னான்", கம்ப. 7347: 3 - 4; "கண்ணுதல் பெருங்கடவுள் தன் கவசத்தைக் கடந்தில கதிர்வாளி", கம்ப. 7602: 4; "நொய்து, அவன் கவசம் கீறி நுழைவன", கம்ப. 7919: 4; "நூறுகோல் கவசம் கீறி நுழைதலும்", கம்ப. 7920: 1; "கழுத்து அற்றார் கவசம் அற்றார்", கம்ப. 8100: 1; "ஏழ் இரு நூறு வாளி இலக்குவன் கவசத்து எய்தான்", கம்ப. 8116: 4; "கண்ட நாணும் கழலும் கவசமும் ...... விண்தலத் தினின் மீன் என....... வீழ்ந்தால்", கம்ப. 8139: 2-4; "அளப்பிலாத பகழிகள் கவசம் பற்று அற்று அருகின", கம்ப. 8288: 2-3; "அம்புயக் கண்ணன் கண்டத்து ஆயிரம் பகழி நாட்டி தம்பி தன் கவச மீதே இரட்டி", கம்ப. மி. 861:1-2; "தனுவும் வெங்கணைப் புட்டிலும் கவசமும்", கம்ப. 8526: 2; "கைச் சிலை கோடி என்று கொடுத்தனன் கவசத்தோடும்", கம்ப. 8942: 4; "ஏமத் தடங் கவசத்து இகல் அகலத்தன", கம்ப. 9048:1; "கனல் வெங்கணை, கவசம் புக்கு ஆகமும் கழன்று ஓடிட", கம்ப. 9052:3-4; "கவசத்தையும் நெடுமார் பையும் கழன்று அக்கணை கழிய", கம்ப. 9057: 1; "சொல் அறுக்கும் வலி அரக்கர் தொடு கவசம் துகள் படுக்கும்", கம்ப. 9398: 1-2; "அணி கண்டிகை கவசம் கழல் திலகம் முதல அகலம்", கம்ப. 9410: 2; "ஒரு தன்னின் பின்னக அசத்த பொருள் இல்லை பெரியோனை மன்ன கவசத்து உறவரிந்தது என என்கோ?", கம்ப. 9679: 2-3; "வில் ஒன்றால் கவசம் ஒன்றால்", கம்ப. 9718: 1; "கருங்கணைப் புட்டிலும் கவசம் தானும் மற்று இடம்படு சுரிகையும் சேர ஈந்த னன்", கம்ப. 10214: 3-4
அரும்பெரும் கவசம்	கவசம்	"ஆடவர்க்கு அரும்பெரும் கவசம் ஆயது", கம்ப. 2293: 3
ஆடகக் கவசம்	பொற் கவசம்	"கேடகத் தடக்கைய கிரியின் தோற்றத்த ஆடகக் கவ சத்த கவந்தம் ஆடுவ", கம்ப. 2993: 1-4
உயிர்க் கவசம்	உயிர் காக்கும் கவசம்	"வின்மரியதோள் விசயத் தத்தனுயிர்க் கவசம்", சீவக. 1792 : 2
எல்லிடு கவசம்	ஒளி வீசும் கவசம்	"வில் இடை அறுத்து, வேல் துணித்து வீரர்தம் எல்லிடு கவசமும் மார்பும் ஈர்ந்து", கம்ப. 7831: 1-2
ஒளி கிளர் கவசம்	ஒளி வீசும் கவசம்	"ஒளிகிளர் கவசம் நுழைந்து உறுகில", கம்ப. 9138: 5
கற்றை அம்சுடர்க் கவசம்	ஒளிவிடும் கவசம்	"கற்றை அம்சுடர்க் கவசமும் கட்டு அறக் கழித் தான்", கம்ப. 7258: 4
காந்து வெஞ்சுடர்க் கவசம்	ஒளி வீசும் கவசம்	"காந்து வெஞ்சுடர்க் கவசம் அற்று உகுதலும்", கம்ப. 7604: 1
சுடர் விடு கவசம்	ஒளிவிடும் கவசம்	"தோளின் மேல் மார்பின் மேலும் சுடர்விடு கவசம் சூழ", கம்ப. 8119: 2

செம்பொன் கவசம்	பொற் கவசம்	"ஆறுநூறு அம்பு செம்பொன் கவசம் புக்கு அழுந்த எய்தான்", கம்ப. 8118: 4
நெடுங்கவசம்	நெடிய கவசம்	"நெடுங் கவசத்தையும் குலையாச் செல்லும் கடுங் கணை யாவையும்", கம்ப. 9060: 2 - 3
நல்நெடும் கவசம்	நல்ல நெடிய கவசம்	"நல்நெடுங் கவசத்து நாம வெங்கணை மின்னொடு நிகர்ப்பன பலவும் வீசினான்", கம்ப. 7581: 3 - 4
புலிநிறக் கவசம்	புலியின் தோலா லாகிய கவசம்	"புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்", புறம். 13: 2 - 3
பொன் கவசம்	பொற் கவசம்	"கருவி நான்முகன் வேள்வியில் படைத்ததும் சுட்டிச் செருவில் இந்திரன் தந்த பொன் கவசமும் சேர்ந் தான்", கம்ப. 9645: 3-4
பொன்னணி கவசம்	பொன்னால் ஆன கவசம்	"புன்மன வேந்தர் தங்கள் பொன்னணி கவசம் கீறி", சீவக. 799 : 2; "மெய்புகு பொன்னணி கவசம் ஒப்பன", சீவக. 2819 : 2
மெய்புகு கவசம்	மெய்புகும் கவசம்	"மெய்புகு கவசமும் வீழ்மணித் தோட்டியும்", சிலப். 14 : 169
விள்ளா நெடுங் கவசம்	பிளக்க முடியாத நீண்ட கவசம்	"விள்ளா நெடுங் கவசத்திடை நுழையாது உக வெகுண்டான்", கம்ப. 9058: 4
வீரக் கவசம்	கவசம்	"சிலையன் வீரக் கவசத்தன்", கம்ப. 2934: 1-2
கவச மார்பம்	கவசமணிந்த மார்பு	"கருவியும் கைகளும் கவச மார்பமும்", கம்ப. 2406: 1
கவச மார்பு	கவசமணிந்த மார்பு	"கழலினர் தாரினர் கவச மார்பினர்", கம்ப. 2917: 1-2; "காய்ந்த வெஞ்சரம் நிருதர் தம் கவச மார்பு உருவ", கம்ப. 3025: 6-7; "கடிநெடுஞ்சிலை அறும் கவச மார்பு இறும்", கம்ப. 8491: 2
கவச மெய்	கவசமணிந்த உடம்பு	"கைகள் வாளொடு களம்பட கழுத்தற கவச மெய்கள் போழ்பட", கம்ப. 2956: 1-3
கவசம் இடுதல்	கவசம் அணிதல்	"உரம்படர் தோளின் மீளாக் கவசமிட்டுடைவாள் ஆர்த்தான்", கம்ப. 293: 3-4; "ஆயிடை இளையவன் விடமனையான் அவன் இடு கவசமும் அழிவுபடத் தூயினன்", கம்ப. 9139:1-3; "கருணை அம் கடலே அன்ன எல் ஒளி மார்பில் தீராக் கவசம் இட்டு", கம்ப. 9367: 2-3; "கண்ணனே எளியேன் இட்ட கவசமே", கம்ப. 9369: 1; "மின்மின் கொள் கவசம் இட்டான்", கம்ப. 9018: 2
கவசம் பூட்டு அமைத்து இடுதல்	கவசம் அணிதல்	"கவசம் பூட்டு அமைத்துஇட்டனன் எடுத்தனன் வரி வில்", கம்ப. 2403: 2-3
கவசம் மார்பிடைச் சுற்றுதல்	கவசம் மார்பில் அணிதல்	"கவசம் படர் மார்பிடைச் சுற்றினான்", கம்ப. 7113: 3 - 4
கவசம் வீக்குதல்	கவசம் கட்டுதல்	"தூக்கிய தூணிவாங்கி தோளொடு மார்பைச் சுற்றி வீக்கிய கவச பாசம் ஒழித்து அது விரைவின் நீக்கி", கம்ப. 9184: 1-2
கவசம் இட்டு இறுக்கி வீக்குதல்	கவசம் வீக்குதல்	"பூஉயர் மீன் எலாம் பூத்த வான்நிகர் மேவரும் கவசம் இட்டு இறுக்கி வீக்கினன்", கம்ப. 7127: 1-2
பொன்னணிக் கவசம் மின்னுதல்	கவசம் ஒளி வீசுதல்	"பூமுக மாலை மார்பன் பொன்னணிக் கவச மின்ன", சீவக. 2270 : 3
கவயம்	கவசம்	"பிரிபிணை யரிந்த நிறஞ்சிதை கவயத்து வானத் தன்ன வளநகர் பொற்ப", மது. 740 - 741
சாலிகைக் கவயம்	கவசம்	"சாலிகைக் கவயம் கோலம் ஆகப் புக்க மெய்யினர் பூந்தார் மார்பிற்", பெருங். 3 : 17: 227-228

3.5. தோள்

மார்பு ஒப்பனை போன்றே தோள்களிலும் பலவித ஒப்பனைகளைச் செய்தவர் நம் முன்னோர். மணப்பொருட்களைப் பூசியும், வரைந்தும், மாலை அணிந்தும் அணிகள் பல அணிந்தும் என அவை பலவாறு அமைந்தன. தவிர, மார்பில் அணிந்த ஆடைகளான உத்தரீயம், கஞ்சுகம், குப்பாயம் போன்ற கச்சு தவிர்த்த ஏனையவை தோளிலும் மார்பிலும் ஒரு சேர அணியப்பட்ட தன்மையில் அவை இங்கும் இணைத்து நோக்கத்தக்கன. இன்று ஆடையுடன் தோள் ஒப்பனை நின்று விட்டிருப்பதைக் காண்கிறோம்.

அ. மணப்பொருட்கள்

எழுதுதல்	தோளில் எழுதுதல்	"தேய்வுற்று அமைத்த திருவெள்ளாரத்து ஏகவிடு கொடி எழில் தோள் எழுதி", பெருங். 1: 34: 201; "எழுதி ஏர் அணிந்த திண்தோள் இராவணன் இராமன் அம்பால்", கம்ப. 9102 : 1; "வாங்கினன் உடுத்தப் பூந்தண் சாந்தம் எழுவுறழ் தோளு மகலமு மெழுதி", பெருங். 3: 9: 131 - 132
கலவைக் களி தடந்தோள் உரைத்தல்	தோள்களில் சாந்து பூசுதல்	"தடந்தோள் வாய் உரைத்த கலவைக் களி வாசம் வேய் உரைப்பது என,", கம்ப. 6874 : 2 - 4
கரும்பு அமர்தல்	கரும்பு எழுதுதல்	"நடாஅ கரும்பு அமன்ற தோளாரைக்காணின்", கலித். 112 : 5 - 7
கரும்பு இழைத்தல்	தோளில் கரும்பு வடிவத்தை எழுதுதல்	"திருந்திழை மென்றோள் இழைத்தமற்றிஃதோ கரும் பெல்லாம் நின்னுழவன்றோ ஒருங்கே", கலித். 64: 13 - 14; "எல்லா, நற்றோள் இழைத்த கரும்புக்கு நீகூறு முற்றெழில் நீல மலரென உற்ற", கலித். 64 : 19 - 20
பெய்கரும் பீர்த்தல்	கரும்பை எழுதுதல்	"நெய்தல் நெறிக்கவும் வல்லான் நெடுமென் தோள் பெய்கரும் பீர்க்கவும் வல்லான் இளமுலை மேல் தொய்யிலெழுதவும் வல்லன்", கலித். 143 : 31 - 33
கரும்பு எழுதுதல்	கரும்பு எழுதுதல்	"என் தோள் மேல் கரும்பெழுது தொய்யிற்குச் செல்வல்", கலித். 63 : 7 - 8
கரும்பின் அணை மென்தோள்	கரும்பு எழுதப்பட்ட தோள்	"கரும்பின் அணை மென்தோள் போக்கி", பரி. 7: 55
கரும்புடைத் தோள்	கரும்பு எழுதப்பட்ட தோள்	"கரும்புடைத் தோளும் உடையவா லணங்கே", நற். 39 : 11; "கரும்புடைப் பணைத்தோள் நோக்கியும் ஒருதிறம்", நற். 298: 7; "உழுந்துடைக் கழுத்திற் கரும்புடைப் பணைத் தோள்", குறுந். 384 : 1
குங்குமத்தோள்	குங்குமம் அணிந்த தோள்	"குங்குமத் தோளினானும் கொழுங் கயற் கண்ணினாளும்", சீவக. 199 : 1-2; "குடைவரை யனைய கோல குங்குமக் குவவுத் தோளாய்", சீவக. 2708: 2
திரு வெள்ளாரத்து ஏகவிடு கொடி எழில் தோள் எழுதுதல்	தோளில், இழைத்தல் தொழிலினால் இயற்றிய அழகிய வெண்மையான சந்தனத்தால் ஒற்றைக் கொடி எழுதுதல்	"தேய்வுற்றமைத்த திருவெள்ளாரத் தேகவிடுகொடி யெழிற்றோ ளெழுதிக்", பெருங். 1 : 34 : 200 - 201
நறுவெண் சாந்தின் நன்னலங் குயிலக் கொடி பல கோலத் தோளில் எழுதுதல்	மங்கல மகளிர் வெண் சாந்தினால் தோளில் தொய்யில் எழுதுதல்	"மறுவில் தொல்குடி மங்கல மடந்தையர் நறுவெண் சாந்தின் நன்னலங் குயிலக் கொடி பல எழுதிய கோலத் தோளினர்", பெருங். 2 : 5 : 80 - 82

கோலம் எழுதுதல்	தோளில் வரைதல்	"எழுவின் கோலம் எழுதிய தோள்களால் தழுவிக் கொள் கலையோ என்னும்", கம்ப. 9202 : 1-2
சந்தம் கமழுதல்	சந்தனம் மணத்தல்	"சந்தம் கமழும் தோளாய்", கம்ப. 1684 : 7
சந்தனத் தேய்வை கொட்டுதல்	மகளிர் மார்பிலும் தோளிலும் சந்தன குழம்பைப் பூசுதல்	"வெண்ணிற மழையின் மின்போல் வெண்டுகிற் கலாபம் வீக்கிக் கண்ணிற முலையுந் தோளுஞ் சந்தனத் தேய்வை கொட்டி", சீவக. 624 : 1 - 2
சந்தனம் தோய்தல்	சந்தனம் பூசியிருத்தல்	"சந்தனம் தோய்ந்த தடந் தோளாள்", 11ஆம் திரு. 300: 90
சந்து அணிதல்	தோளில் சந்தனம் பூசுதல்	"சந்து அணியும் மணிப்புயத்து", திருத். 4138: 5
தோள் நறுஞ் சாந்து அணிதல்	நறிய சாந்து பூசுதல்	"தாதலைக்கும் குழல் சேர் பணைத் தோள் நறுஞ் சாந்து அணிந்து", 11ஆம் திரு. 94 : 5 - 8
தண்ணறும் சாந்தம் நுண்ணிதின் எழுதுதல்	சாந்து கொண்டு வரைதல்	"தண்ணறும் சாந்தம் நுண்ணிதின் எழுதி", பெருங். 1: 42: 150
சாந்து தோய்தல்	சந்தனம் பூசுதல் சந்தனம் அணிதல்	"தாளாளைத் தன்னொப்பார் இல்லாதானைச் சந்தனமும் குங்குமமும் சாந்து தோய்த்த தோளாத முத்தொப்பானைத் தூவெருத்த கோவணத்தை அரையில் ஆர்த்த", தேவா. திருநா. 6 : 67: 1: 3 - 6
சாந்து வரித்தல்	சந்தனம் பூசுதல்	"மணிவளை தாங்கிய அணிகெழு மென்தோள் வரித்த சாந்தின்மிசை விரித்து மீது இட்ட உத்தரீயப்பட்டு", 11ஆம் திரு. 296 : 53 - 55
சந்தனக் கொழுங் குறை பளிதம் பெய்த தேய்வை யில் ஆகமும் முலையும் தோளும் அணிபெற தாரையும் கொடியும் தகை பெற வாங்குதல்	சந்தன மரத்தினது கொழுவிய கட்டை யினைத் தேய்த்து அதனோடு பச்சைக் கருப்பூரம் பெய்த நுண்மையுடை குழம் பினால் மார்பு, முலை தோள் ஆகிய இடங் களில் கொடி உருவம் எழுதுதல்	"குளிர் கொள் சாதிச் சந்தனக் கொழுங்குறைப் பளிதம் பெய்த பருப்பிற் றேய்வையின் ஆகமு முலையுந் தோளு மணிபெறத் தாரையுங் கொடியுந் தகை பெற வாங்கி", பெருங். 4 : 16 : 18 - 21
தோளில் தொய்யில் எழுதுதல்	தோளில் தொய்யில் எழுதுதல்	"பிரிந்துறை சூழாதி யைய விரும்பிநீ என்றோள் எழுதிய தொய்யிலும் யாழநின் மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்", கலித். 18 : 2 - 4
கரும்பெழுதித் தொய்யில் செய்தல்	தோளில் கரும்பெழுதித் தொய்யிற் குழம்பால் மற்றும் எழுதுதற்குரிய வற்றை எழுதுதல்	"வரிதேற்றாய் நீயென வணங்கிறையவன் பற்றித் தெரி வேய்த் தோள் கரும்பெழுதித் தொய்யில் செய்தனைத்தற்கோ", கலித். 76 : 14 - 15
தொய்யில் வரித்தல்	பெரிய தோள்களில் தொய்யில் எழுதுதல்	"பெருந்தோள் தொய்யில் வரித்தும் சிறுபரட்டு அஞ் செஞ்சீறடிப் பஞ்சி ஊட்டியும்", அகம். 389 : 6 - 7
தூக்குறி புயத்துப் பொறித்தல்	தொய்யில் பொறித்தல்	"பாய் அரித் திறலான் பசுஞ் சாந்தினால் தூய பொன் புயத்துப் பொறி தூக்குறி மீ ஆர்த்து விளர்க்க", கம்ப. 951 : 1-3

ஆ. மாலைகள்

அலங்கல்	தோள் மாலை	"வலங்கையில் வாள் சிவன் கொடுக்க வாங்கிய அலங்கல் அம் தோளவர் துணைவர், அந்தம்இல் வலங்களும் வரங்களும், தவத்தின் வாய்த்தவர்", கம்ப. 6547: 2-4; "செறிந்தபுனை வடம் தாழத்திரள் தோளின் புடை அலங்கல் அறைந்த சுரும்பு இசை அரும்ப அரை உடுத்த மரவுரியின்", திருத். 947: 2-3

முருகுடைந்த பூங்கோதை அணிதல்	தேன் பொருந்திய மலர் மாலையை அணிதல்	"முருகுடைந்த பூங்கோதை முத்தணிந்த தோளார் ஒருகுடங்கைக் கண்ணா லுளங்கழிய வேவுண்", சீவக. 3139: 1 - 2
கொன்றைத்தார் சுவற்புரளுதல்	கொன்றைப் பூவாற் செய்த மாலை தோளில் அசைதல்	"கொலையு ழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்புரளத் தலையங்கை கொண்டுநீ காபால மாடுங் கால்", கலித். 1 : 11 - 12
கொன்றையும் துளவமும் குழுமத் தொடுத்த மலர்ப் பிணையல் தோள் மேலிடுதல்	கொன்றை மலரையும் துளபத்தையும் கலந்து தொடுக்கப்பட்ட மலர் செறிந்த மாலையைத் தோளில் அணிதல்	"கொன்றையுந் துளவமும் குழுமத் தொடுத்த துன்று மலர்ப்பிணையல் தோள் மேலிட்டாங்கு", சிலப். 12 : 11
தோள் மாலை விட்டிலங்குதல்	தோள் மீதிருந்த மாலை ஒளி வீசுதல்	"தோள் மாலை விட்டிலங்கத் தக்கிணமே நோக்கி வியந்த குணம் எட்டிலங்க வைத்த இறைபோற்றி", 11ஆம் திரு. 500 : 38 - 39
மாலைத் தோள்	மாலை அணிந்த தோள்	"விழுதக்க மையமர் மாலைப் பணைத் தோளாய்", பழ. நா. 253 : 2 - 3
இலைகொள் தண் துழாய் தோளில் விளங்குதல்	இலைகளைக் கொண்ட குளிர்ந்த துழாய் மாலை விளங்குதல்	"கரம் புடை நிமிரும் அலைகள் ஒத்தன; அதில் எழும் இரவியை ஒத்தான் இலைகொள் தண் துழாய் இலங்கு தோள் இராமனுக்கு இளையான்", கம்ப. 7227: 2-4

இ. அணிகலன்கள்

தோளணி	தோளில் அணியும் அணி	"சூடகத்திரள் தோளணி வாட்டினாள்", சீவக. 1370 : 4
திருந்திழை	திருந்திய அணிகலன்	"ஒருங்குபுறம் புதைஇ யுதயண குமரனும் திருந்திழைத் தோளி விரும்புபு நோக்க", பெருங். 3 : 9: 24 - 25
வார்கோல் திருந்திழை	நீண்ட தொழிலமைந்த இழை; தோள் அணி	"அருஞ்சுரம் அரியஅல்ல வார்கோல் திருந்திழைப் பணைத்தோள் தேன்நாறு கதுப்பின்", அகம். 129 : 14 - 15
வயங்கிழை	ஒளி வீசும் அணி	"பயந்தினி தெடுத்த வயங்கிழைப் பணைத்தோட் கோப் பெருந் தேவிக்குக் கொடுக்கெனப் பணித்தே", பெருங். 4: 11: 41 - 42
வாலிழை	வெள்ளிய அணிகலன்	"வயந்தக குமரன் வந்து கூறும் வாலிழைப் பணைத்தோள் வாசவதத்தைக்கும் பாசிழை யல்குற் பதுமா பதிக்கும் சீர்நிறை கோல்போற் றானடு வாகி", பெருங். 4: 5: 41 - 44
விறலிழைப் பொலிதல்	அணிகலன்கள் விளக்கமுறல்	"விறலிழைப் பொலிந்த காண்பின் சாயல் தடைஇத் திரண்டநின் தோள் சோர்பு அல்லதை", அகம். 218 : 7-8; "ஈண்டுபன் னாற்றம் வேண்டுவயின் உவப்பச் செய்வுறு விளங்கிழைப் பொலிந்த தோள் சேர்பு", அகம். 379: 12 - 13
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய தூமணி தோள் வளை தோளுக்கு அணிதல்	மணி வளை அணிதல்	"காமர் கண்டிகை தன்னொடு பின்னிய தூமணி தோள்வளை தோளுக்கு அணிந்து", சிலப். 6: 89 - 90
சலாகை மின்னுதல்	தோள் அணி ஒளி வீசுதல்	"தழியப் பெரிய தடமென்தோள் சலாகை மின்ன தாழ்ந்திலங்கும்", சீவக. 2696 : 3
சூடகம் ஆர்த்தல்	வளை ஒலித்தல்	"சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத் தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப", திருவாச. திருப்பொற். 7: 1 - 2
பொன் அரும்பு உறுதார்	அழகுமிக்க அரும்பால் கட்டிய பொன்மாலை	"பொன் அரும்பு உறு தார்ப் புயப் பொருப்பினான் பொன்ற என் இருந்து நான்?.....", கம்ப. 9568 : 1-2

தொடி	தோளில் அணியும் வளை	"தொடி பழி மறைத்தலின் தோள் உய்ந்தனவே", நற். 23 : 1; "தொடி விளங்கு இறைய தோள்", குறுந். 367 : 2; "தெறலருங் கடுந்துப் பின் விறல் விளங்கிய விழுச்சூர்ப்பிற் தொடித் தோட்கை துடுப்பாக", மது. 32 - 34; "கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு தொல்கவின் வாடிய தோள்", குறள். 1235; "ஓங்குயர் மலயத்தருந்தவ னுரைப்பத் தூங்கெயி லெறிந்த தொடித் தோட் செம்பியன்", மணி. 1 : 3 - 4; "முடிமுத லண் ணலை முந்தினன் குறுகித் தொடிமுதற் றினிதோ டோன்ற வோச்சி", பெருங். 1 : 46 : 103 - 104; "கால்வல் இவுளிக் காவலற் காட்டத் தொடித்தோள் வேந்தன் முன்றுட் கென்றிறைஞ்சினள்", பெருங். 4 : 10 : 88 - 89; "தொடி கவின் அறாத மென் தோள் தேவியர்", சீவக. 2808: 2, "தொடி துணிந்தன தோளொடு; தோமரம் துணிந்த; அடி துணிந்தன", கம்ப. 2952 : 1 - 3; "அடியுண்டான் தளர்ந்து அலறி வீழ்தலும், தொடியின் தோள் விசைத்து எழுந்து சுற்றினார்", கம்ப. 4601 : 3 - 6
கோற்றொடி	வளைந்த தொடி	"கிடினென இடிக்கும் கோல்தொடி மறவர்", நற்.48: 6
நிரை தொடி	வரிசையாக அணிந்த வளையல்	"நிரை தொடி தாங்கிய நீள் தோள்", பழ. நா. 79 : 1
பூந்தொடி	பொலிவுடைய தோள் வளையல்	"வரிநிற நீள்வண்டர் பாடப் - புரிநிற நீள் பொன்ன ணிந்த கோங்கம் புணர் முலையாய்! பூந்தொடித்தோள் என்னணிந்த ஈடில் பசப்பு", திணை, நூற். 63 : 2 - 4; "தீமாண் புற்ற திருத்தகு பொழுதிற் புதுமலர்க் கோதைப் பூந்தொடிப் பணைத்தோட் பதுமா நங்கையைப் பண் புணப் பேணி", பெருங். 3 : 22 : 265 - 267
பைந்தொடி	பசிய தொடி	"பைந்தொடித் தோளி பரிவறக் கேளென", பெருங். 1: 36 : 88; "மணிப்பூண் வனமுலையிடைக்கரை புதை இப் பைந்தொடி பணைத்தோள் பைய வீசி", பெருங். 1 : 53 : 147 - 148; "ஏர் செலச் செல்ல ஏத்தித் தொழுது தோள் தூக்க இப்பால் பார் செலச் செல்லச் சிந்திப் பைந்தொடி சொரிந்த நம்பன்", சீவக. 469 : 2 - 3
பொற்றொடி	பொன்னாலியன்ற தோளணி	"பெரும் புணையாக விருந்தகத் துறையும் பொற் றொடிப் பணைத்தோண் முற்றிழை மாதரை", பெருங். 3 : 21 : 5 - 6; "வயந்தக னுரைக்கும் நயந்தனை யருளின் மற்றுநின் றோழியர் பொற்றொடிப் பணைத் தோட்", பெருங். 4 : 12 : 18 - 20; "பூங்கச்சினால் அடையப் பூட்டுறீஇப் பொற்றொடியால் காம்பொத்த தோளிணையைக் காப்பேவி", 11ஆம் திரு. 300 : 159
தொடித் தோள்	தொடி அணிந்த தோள்	"தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்", மணி. 1: 4; "இடக்கண் ஆடலுந் தொடித்தோள் துலங்கலும் ஆருயிர்க் கிழத்தி", பெருங். 2 : 18 : 33 - 34; "தோலாப் போர் மறமன்னர் தொடித் தோள்கள் எடுத்தோச்சி மேலாள் மேல் நெருப்புமிழ்ந்து மின்னிலங்கும் அயில் வாளால்", சீவக. 2236 : 1 - 2
தொடி அணிதல்	தொடி என்னும் தோள் அணியை அணிதல்	"தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவலங் கொடியன் நெடியன் தொடி அணி தோளன்", திருமந். 211 - 212; "இனத்திடைப் புகுந்து மிளையோ ரரவமும் தொடியணி தோளியர் துன்ன யேறிய", பெருங். 1 : 41 : 43 - 44; "தொடியணி திண்தோள் அணிந்து நிலஞ்சேரப் பணி வில னெறிதலிற் படைக்கலஞ் சோரத்", பெருங். 3: 27: 173 - 174
தொடியிடல்	தோளில் வளை அணிதல்	"தொடியிட ஆற்றா தொலைந்த தோள் நோக்கி வடு விடைப் போழ்ந்தகன்ற கண்ணாய் வருந்தல்", கார்நாற். 6 : 1 - 2

தொடி மணி தோளில் இமைத்தல்	தோள் வளையில் பதித்துள்ள மணிகள் ஒளிருதல்	"தொடி மணி இமைக்கும் தோளாய் சொல் இனி வேறும் உண்டோ?", கம்ப. 6941 : 1
தொடி கெழுமுதல்	தொடி பொருந்துதல்	"அற்றன் றாயிற் கொற்றங்குன்றித் தொடிகெழு தோளி சுடுதீப் பட்டெனப்", பெருங். 3 : 8 : 105 - 106
தொடி தோள் செறித்தல்	தோள்களில் அணிந்த வளையல்கள் இறுகுதல்	"தொடிதோள் செறிப்ப, தோள் வளை இயங்க", பரி. 6: 14
தொடி தாங்குதல்	தோளணி அணிதல்	"நிரைதொடி தாங்கிய நீடோள்மாற் கேயும் உரை யொழியா வாகும் உயர்ந்தோர்கட் குற்றம்", பழ. நா. 79: 1-2
தொடி நெகிழ்தல்	வளையல் கழலுதல்	"தொடியொடு தோள் நெகிழ நோவல் அவரைக் கொடியார் எனக்கூறல் நொந்து", குறள். 1236
சவிச் சுடர்க்கலன் அணிந்த பொன் தோள் தயங்குதல்	சுடரை வீசும் ஆபரணங்கள் அணிந்துள்ள அழகிய தோள் விளங்குதல்	"குவித்த பல்மணிக் குப்பைகள் கலையொடும் கொழிப்ப சவிச் சுடர்க்கலன் அணிந்த பொன் தோளொடு தயங்க", கம்ப. 5846 : 1 - 2
பைம்பூண் சாத்துதல்	பசிய அணியைத் தோளில் அணிதல்	"தோள்வளைத் தரளப் பைம்பூண் சுந்தரத் தோள் மேல் சாத்தி", திருத். 3116: 7-8
பொன்னரி மாலை சுடர் மணித் தோளில் தோன்றுதல்	பொன்னாலாகிய அரிமாலை தோளில் விளங்குதல்	"துன்இருள் இரிந்து தோற்ப, சுடர்மணித் தோளில் தோன்றும் பொன்னரி மாலை நீல வரையில் வீழ் அருவி பொற்ப", கம்ப. 7636 : 2 - 3
மணி அணி	மணி பதித்த அணிகலன்	"மற்று அவன் மணிஅணி வயிரத் தோள்", கம்ப. 7613: 7 - 8
மணி வேய்தல்	மணி அணிதல்	"வேய்மணித் தோளி நிற்ப விழுத்தவன் நியமம் முற்றி வாய்மணி முறுவல் தோன்ற வந்தனை விதியின் செய்தேன்", சீவக. 1126: 3 - 4
திரள் முத்தம்	திரண்ட முத்து மாலைகள்	"நுண்துகிற் றிரைகள் சேர்ந்த நூற்றுலா மண்டபத்துக் கண்திரள் முத்த மென்றோட் காவிக்கண் மகளிர் போற்றி", சீவக. 2734: 2-3
தோள் முத்தம்	தோளிலணியும் மகர மீன் வடிவமாகச் செய்யப்பட்ட ஆபரணத்தின் வாயினின்றும் தொங்கும் பல வடங்களாகிய முத்தின் தொகுதி	"கரும்பாற் தோண் முத்தங் கழன்று செவ்வாய் வளர்த்துக் கண் பசலை பூத்த காமம்", சீவக. 231: 1
பகுவாய் மகரம் கான்றிட்ட துஞ்சாக் கதிர் கொள்துணை முத்தம்	மகரமீன் வடிவில் செய்த தோளணி	"பஞ்சியனைய வேய் மென்தோள் பகுவாய் மகரம் கான்றிட்ட துஞ்சாக் கதிர் கொள்துணை முத்தம்", சீவக. 351: 1-2
கிம்புரி முத்த மென்தோள் அணிதல்	கிம்புரி வடிவமுள்ள முத்து மாலையைத் தோளில் அணிதல்	"தொடுத்தலர் மாலை சுட்டிக் கிம்புரி முத்த மென் தோள் அடுத்தணிந் தாகஞ் சாந்தின் அணிபெற எழுதி அல்குல் உடுத்த பொற் கலாபந் தைவந் தொளி வளை திருத்தினானே", சீவக. 2091: 2-4
முத்து தோள் ஆர்தல்	முத்துக்கள் தோளில் அணிதல்	"தோளார் முத்தும் தொன்முலைக் கோட்டுத் துயல் முத்தும் வாளா ருண்கண் வந்திழி முத்தும் இவை சிந்த", சீவக. 1093: 1-2

மணமகரம வாய போழ்ந்து வாழ் முத்துவடம் சூழ்தல்	அழகிய சுறாமீனின் வடிவமாகச் செய்யப் பட்ட தோளணியை அணிதல்	"மணிமகரம் வாய்போழ்ந்து வாழ்முத்த வடஞ் சூழ்ந்தாங் கணியரக்கார் செம்பஞ்சி யணையணைய வாடமைத் தோள்", சீவக. 170: 1-2
வந்திகை	தோளணி; கையில் தோளின்கீழ் அணியப்படும் ஆபரணம். இப்பெயர் வழக்கிலுமுள்ளது (உ.வே.சா. உரை)	''வணங்கிறைப் பணைத்தோள் சோர்ந்துஉ குவன்ன வயக்குறு வந்திகை", மது. 415
வலயம்	தோள் வளை; வாகு வலயம்	"தொடியும், உந்தியும் தோள் அணி வலயமும்", பரி. 13: 52; "அந்தம் இல்சுடர் மணி அழலின் தோன்றலால் சுந்தரத் தோள் அணி வலயம், தொல்லை நாள் மந்தரம் சுற்றிய அரவை மானுமே", கம்ப. 1214 : 2 - 4; "மணி குண்டலம், வலயம், குழை, மகரம், சுடர் மகுடம், அணி கண்டிகை, கவசம், கழல், திலகம், முதல அகலம், துணியுண்டவர் உடல் சிந்தின", கம்ப. 9410: 1 - 3
காசின் சுடர் ஒளி வலயம்	மணிகள் பதித்த மிகுந்த ஒளியை உடைய வாகுவலயம்	"சுடர் கடை மத்தின் பாம்பு கழற்றியது என்னக் காசின் சுடர் ஒளி வலயம் தீர்ந்த சுந்தரத் தோளினானை", கம்ப. 6496 : 3 - 4
பொன்ஆர் வலயம்	பொன்னால் செய்யப் பெற்ற வாகுவலயம்	"பொன்ஆர் வலயத் தோளான், கானோ புகுதல் தவிரான்", கம்ப. 1677 : 1 - 2
வாகுவலயம்	தோளில் அணியும் அணி	''கைவளை யாழி தொய்யகம் புனைதுகில் மேகலை காஞ்சி வாகுவலயம் எல்லாங் கவருமியல் பிற்றாய்த் தென்னவன் ஒன்னாருடை புலம் புக்கற்றால் மாறட்ட தானையான் வையை வனப்பு", பரி. 7 : 46 - 50
ஒளி வலயம் இலங்குதல்	தோளில் வாகுவலயம் ஒளிவீசுதல்	"பொலம்கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்பு போத இலங்கு ஒளி வலயப் பொன்தோள் இடைஇடை மிடைந்து தொங்கல்", திருத். 334 : 1 - 4
மகரிகை வயிரக் கிம்புரி வலயம் தோள்தொறும் தொடர்தல்	சுறாமீன் வடிவமாக அமைந்த வயிரம் பதிக்கப் பெற்ற தோள் வலயம் தோள்கள்தோறும் அணியப் பெறுதல்	"தோள்தொறும் தொடர்ந்த, மகரிகை வயிரக் கிம்புரி வலயமாச் சுடர்கள் நாள்தோறும் சுடரும் கலி கெழு விசும்பில்", கம்ப. 5151 : 1 - 3
வலயம் தோளில் பூட்டுதல்	தோளில் வாகுவலயம் அணிதல்	"கோட்டு வெஞ்சிலையின் வாளிமுன் சென்று கொற்றப் பொன்தோள் பூட்டிய வலயத்தோடும், பூழியாய்ப் போயிற்று அன்றே", கம்ப. 7151 : 3 - 4
தோள் வலயங்கள் தழைத்து மின்னுதல்	தோளில் அணிந்த வாகுவலயங்கள் மாலை போல மின்னுதல்	''தாரின் பொலி தோள்வலயங்கள் தழைத்து மின்னச்", திருத். 709 : 2
தோள் வலயத்தில் காசு வயங்குதல்	சிறந்த தோள் வளை களில் இரத்தினங்கள் விளங்குதல்	"வடித்த தோள் வலயத்தின் வயங்கு காசு அரோ", கம்ப. 3954 : 7 - 8
வெள்ளி வள்ளி	சங்கினால் ஆன தோள் அணி	"எள்ளன் மின்னிரை யின்று நீரென வெள்ளி வள்ளியின் விளங்கு தோணலார்", சீவக. 420: 2-3
வளை	தோளணி	''வளை யானா நெகிழ்போடும் தோளாயின் என் செய்கோ", கலித். 34: 19
அணிவளை	அழகிய வளை	"மணிநில மருங்கின் பந்தொடு மறலிநின் அணிவளைப் பணைத்தோள் அசைய வாற்றாய்", பெருங். 1: 46: 297- 298

அவ்வளை	அழகிய வளை	"மண்ணகமன்னர் மரபறிந் தியற்ற அவ்வளைப் பணைத் தோள் அதிநா கிரிகியைக்", பெருங். 2 : 3 : 150 - 151
ஆய்வளை	சிறந்த தோள் வளை	"கோடாச் செங்கோற் குருகுலத் தரசன் ஓடாக் கழற்கா லுதயண குமரன் கோயில் வேவினு ளாய் வளைப் பணைத் தோட்டேவி வீயத் தீரா வவலமொடு", பெருங். 3: 18: 11 - 14
எல்வளை	ஒளிமிக்க வளையல்	"வில்லுழுது வாழ்நர் குறும்புள்ளும் போவார் கொல் எல்வளை மென்தோள் நெகிழப் பொருள் நசைஇ", திணை.ஐம். 17 : 2 - 3
எழில் வளை	அழகிய வளையல்	"ஏந்திள வனமுலை யெழில் வளைப் பணைத் தோள் மாந்தளிர் மேனி மடமா னோக்கின்'', பெருங். 3: 6: 157 - 158
இலைக் கொழுந்து குயின்ற எழில் வளை	இலையுங் கொழுந்தும் எழுதப்பட்ட அழகிய வளையல்	''உலைப்பருந் தினையுதயண குமரற் கிலைக் கொழுந்து குயின்ற வெழில் வளைப் பணைத் தோள்", பெருங். 3: 6: 77 - 78
கதிர் வளை	ஒளி வீசும் வளை	"கதிர்வளைப் பணைத்தோள் கணங்குழைக் காதிற்", பெருங். 3 : 5 : 25; ''அரந்தினைப் பிறந்த பைம்பொன் அரும்பிய முலையி னாளைக் கரந்தவன் கங்குல் நீங்கக் கதிர்வளை அணங்கு மென்றோள் வரந்தரும் தெய்வ மன்னாள் வைஇருள் அனந்தல் தேறிப்'', சீவக. 1507: 1 - 3
கனவளை	பொன் வளையல்	"மாழ்கிய மாதரை வாங்குபு தழீஇக் கனவளைப் பணைத் தோட் காஞ்சன மாலை", பெருங். 1: 56: 118 - 119
கோல் வளை	திரண்ட வளையல்	"நன்னர் நோக்கி நயந்ததை யொன்றுகொல் கோல் வளைப் பணைத் தோட் கொடுங்குழைக் காதின் நீலத் தன்ன நெறியிருங் கூந்தலை", பெருங். 3: 21: 77-79
சுரிவளை	சுழித்த சங்காற் செய்த வளை	"சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றும்", குறுந். 260: 260 : 3
செறிவளை	செறிவாக அணியும் வளை	"ஈர்த்தண் பொழிலுள் இருங்கழித் தண்சேர்ப்பன் சேர்ந் தென் செறிவளைத் தோள் பற்றித் தெளித்தமை மாந்தளிர் மேனியாய்!", ஐந்.ஐம். 45 : 1 - 3
தோள்வளை	தோள் வளையல்	"இடுபுணர் வளையொடு தொடு தோள் வளையர்", பரி. 12:23; ''குண்டலங்களும், மவுலியும், ஆரமும், கோவை தண்டை, தோள்வளை, கடகம் என்று இனையன தறுகண் கண்ட கண்டங்களொடும் கணை துரந்தன'', கம்ப. 7523 : 1-3; ''சுந்தரத் தடந்தோள் வளை மாசுணம் சுற்றிய தொழில் காட்ட மந்தரத்தையும் கடுத்தது, மற்று அவன் மணி அணி வயிரத் தோள்'', கம்ப. 7613 : 5 - 8
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய தூமணி தோள் வளை	கண்டிகையுடன் சேர்ந்த தோள் வளை	"காமர் கண்டிகை தன்னொடு பின்னிய தூமணி தோள்வளை தோளுக்கு அணிந்து", சிலப். 6: 89 - 90
வல்வினைப் பொலிந்த வளை	தொழில் வன்மை யாலே பொலிவுற்ற தோள்வளை	"வயிரக்குழையும் வல்வினைப் பொலிந்த நெடுந் தோள் வளையுங் கடுங்கதிர் கடகமும்", பெருங். 2: 5: 140 - 141
பல்வளை	பல வளையல்	"நாடக மகளிர் நாலிரு பதின்மருட் பல்வளைப் பணைத் தோட் பத்திரா பதியெனும் மெல்லியல் தன்னை'', பெருங். 5: 3: 91 - 93; ''பஞ்சி சூழல்குல் பல்வளை வீங்குதோள் வஞ்சி நுண்ணிடை வம்பணி வெம்முலை", சீவக. 2576 : 1 - 2

புனவளை	புனையப்பட்ட வளை	"புனவளைத் தோளி பொழில் ஆக", பெருங். 1: 56: 119- 120
பெய்வளை	அணிகின்ற வளையல்	"பெருந் தோளி பெய்வளாய் என்னுமீப் போர்த்த", நாலடி. 47: 3 "களைகண் காணாது கையறு துயரமொடு பெய்வளைத்தோளி வெய்துயிர்த் தேங்கக்", பெருங். 1: 56: 31-32; "நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணுணர்வு இன்மை அன்றே பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி என்றான்", சீவக. 269: 3 - 4; "கழிந்தன இரண்டு திங்கள் காளையு மற்றோர் நாளாற் பிழிந்து கொள்வனைய பெண்மைப் பெய்வளைத் தோளி தன்னோடு", சீவக. 1496: 2-3
பொங்கு தோள் வளை	ஒளி விளங்குகின்ற தோள் வளை	"பொங்கு தோள் வளையும் கணைப் புட்டிலோடு அங்கதங்களும் அம்பும் இலங்கிட", கம்ப. 9213 : 1 - 2
வரிவளை	வரிகள் அமைந்த வளையல்	"வரிவளைப் பணைத்தோள் வண்ண மகளிர்", பெருங். 1 : 57 : 96; "அஞ்சிறை யறுகாற் செம் பொறி வண்டே எரியுள் விளிந்தவென் வரிவளைப் பணைத் தோள்", பெருங். 3: 1: 174 - 175
வால்வளை	வெள்ளிய சங்கு வளையல்	"வலிதிற் றந்த வால்வளைப் பணைத்தோள்", பெருங். 1: 35: 242; "வால்வளைப் பணைத்தோள் வாசவதத் தையைக்", பெருங். 1: 42: 13; "ஆருயி ரன்ன வரும் பெறன் மடமகள் வால்வளைப் பணைத்தோள் வாச வதத்தையை", பெருங். 1 : 46 : 71 - 72; "கோல வன முலைக் கொடிபுரை மருங்குல் வால்வளைப் பணைத் தோள் வாசவதத்தாய்", பெருங். 2: 17: 112-113
வெள்வளை	சங்கு வளையல்	"தகைகொள் வேந்தன் தமரொடு சூழ்ந்து செங்கடை வேற் கண் வெள்வளைப் பணைத்தோள் தங்கையைப் புணர்க்குஞ் சிந்தையனாகி", பெருங். 3: 21: 17-19; "காம்பென வீங்குதோள் தெளிர்த்த வெள்வளை சேர்ந்தது மாமையும்", சீவக. 1330: 1-2
அவ்வளைத் தோளி	அழகிய வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"அரக்கு எறி இவளை வாள்கண் அவ்வளைத் தோளினாளைப்", சீவக. 560: 1
ஆய்வளைத் தோளி	அழகிய வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"பாயலமைத்த பாசடைப் பள்ளியுள் ஆய்வளைத் தோளியை யமர் துயில் கொளீஇத்", பெருங். 1: 53: 181 - 182; "வாயில் புக்கபின் வையநிறீஇ ஆய்வளைத் தோளி யகம்புக் கருளென", பெருங். 3 : 6 : 1 - 2; "நின்கைக் கொண்ட பூம்பந் தென்கை ஆய்வளைத் தோளிக் கீக்க வென்ன", பெருங். 3 : 8 : 84 - 85
எல்வளைத் தோளி	ஒளிவீசும் வளை அணிந்த தோள்/ மகளிர்	"எல்வளைத் தோளியை யெவ்வழி யானும்", பெருங். 3 : 1 : 201
ஒளிவளைத் தோளி	ஒளிவீசும் வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"தாழிருங் கூந்தலைத் தணப்ப நின்றதோர் ஊழ்வினை உண்மையின் ஒளிவளைத் தோளியும்", பெருங். 2: 17 : 46 - 47
கதிர்வளைத் தோளி	ஒளிமிகு வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"காமமா கண்ட காதற் கதிர்வளைத் தோளினாரும் நாமநாற் கதியும் அஞ்சி நற்றவத் துச்சி கொண்டார்", சீவக. 2888 : 3 - 4
சூழ்வளைத் தோளி	சுற்றிய வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"ஆழ்புனற் பட்டோர்க் கரும்புணை போலச் சூழ்வளைத் தோளி காமநற் கடலிற்", பெருங். 4 : 13 : 82 - 83; "சூழ்வளைத் தோளி செம்பொன் தூணையே சார்ந்து நோக்கும் ஊழ்படு காதலானை ஒருபிடி நுசுப்பினாளே", சீவக. 1452 : 3 - 4

செய்வளைத் தோளி	அழகுறச் செய்யப் பட்ட வளையல் அணிந்த தோள் / மகளிர்	"வைக றோறு மெய்வகை தெரிவார் செய்வளைத் தோளியைச் சேர்ந்து நலனுகர்வதோர் தெய்வங் கொல் எனத் தெளிதலாற்றார்", பெருங். 3 : 15 : 69 - 71
செறிவளை தோளி	செறிந்த வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"அணிச்சா லேகத் தணித்தகு துளையூ டெறிபந்திழுக்குபு விழுதலி னோக்கிச் செறிவளைத் தோளி", பெருங். 5: 8: 71-73
தொடிவளைத் தோளி	வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"தொடி வளைத் தோளி துயர் தீர்த்தேன்", சிலப். 10: 63
நல்வளைத் தோளி	அழகிய வளை அணிந்த தோள்/ மகளிர்	"அற்றே யாயினு மிற்றங் கூறுவென் நயக்குங் காதனல் வளைத் தோளியை பெயர்க்கும் விச்சையிற் பெரியோற் கண்டவன்", பெருங். 4: 6: 38 - 40
நிரைவளைத் தோளி	நிரல்பட்ட வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"அலைகடன் ஞாலத் தாக்கையொ டாருயிர் நிலைநின்ற மையாது நிரைவளைத் தோளி துஞ்சியுஞ் துஞ்சா டோணல நுகர்ந்த'', பெருங். 3: 20: 170 - 172; ''அங் கவன்நுதன்மிசை முன்பவ னெழுதிய பாடை கொண்டுதன் பெயர்நிலைக் கீடா நீல நெடுங்கணிரைவளைத் தோளி மறுமொழி கொடுக்கு நினைவினளாகி'', பெருங். 4: 13: 105 - 108
புனைவளைத் தோளி	ஒப்பனை செய்யப் பட்ட வளையல், அணிந்த தோள்/ மகளிர்	"நலங்கவர்ந் தகன்ற நண்பனைக் கண்டனென் புலம்பினி யொழிக புனைவளைத் தோளி வளங்கெழு தானை வத்தவனாமென", பெருங். 3 : 22 : 111 - 113; "தீண்டலுந் தேறலுந் திருத்தகைத் தன்றெனப் பூண்டயங் கிளமுலைப் புனைவளை தோளி'', பெருங். 3: 22: 165 - 166; "தினைவிளை ஏனற் செவ்வாய் சிறுகிளி மாதர் ஓப்பப் புனைவளைத் தோளி சொல்லைக் கிளியெனக் கிள்ளை போகா", சீவக. 1498 : 1 - 2
வரிவளைத் தோளி	வரிகள் பொருந்திய வளையல் அணிந்த தோள்/ மகளிர்	"அருவி அதிரக் குருகிலை பூப்பத் தெரிஆ இனநிரை தீம்பால் பிலிற்ற வரிவளைத் தோளி வருவார் நமர் கொல்", திணை. ஐம். 30 : 1 - 3
வெள்வளைத் தோளி	வெண்ணிற வளை அணிந்த தோள்/ மகளிர்	"விண்கனிந்து உருகும் நீர்மை வெள்வளைத் தோளி போந்தாள்", சீவக. 628 : 3
காமர் கண்டிகை தன்னொடு பின் னிய தூமணித் தோள்வளை தோளுக்கு அணிதல்	கழுத்துவடத்தின் பின் தாலிக்கு இரண்டு பக்கமும் பகுத்துப் போந்து வாகுவலயத் தோடு தொடக்கிக் கிடப்பதோர் ஆபரணம். காமர் கண்டிகையுடனே மணி நெருங்கின தோள்வளையைத் தோளுக்கணிந்து என்றுமாம் (அரும்பதம்)	''காமர் கண்டிகை தன்னொடு பின்னிய தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து'', சிலப். 6: 89 - 90
தோள் வளை ஆர்த்தல்	தோளில் அணியும் வளையல் ஒலித்தல்	"சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத் தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப", திருவாச. திருப்பொற். 1 - 2
வெள்வளை ஆர்த்தல்	சங்கு வளையல்கள் ஆரவாரித்தல்	"உண்ணின்று திருத்தியும் விண்ணுறச் செலுத்தியும் வேயிருந்தடந்தோள் வெள்வளை யார்ப்ப", பெருங். 4 : 12 : 73 - 74
வளை இயங்குதல்	தோள்வளை அசைதல்	"தொடிதோள் செறிப்பத் தோள்வளை யியங்கக்", பரி. 6 : 14

எழில் வளை கவ்வுதல்	அழகிய வளையல்கள் செறிதல்	"புடை திரண்டமைந்த பொங்குசின நாகம் இடை நிரைத் தன்ன எழில்வளை கவ்விய எழுவுறழ் திணிதோள் எடுத்தனர் ஏந்தி", பெருங். 2 : 6 : 128 - 130
கழல்தொடி கவ்வுதல்	உழலும் தொடியை அணிந்திருத்தல்	"கழறொடி கவைஇய கலம்பொழி தடக்கை", பெருங். 1: 35: 102
வெள்வளை சுடருதல்	வெள்ளிய வளையல் ஒளி வீசுதல்	"சுடரும் வெள்வளைத் தோளி, தன் கொழுநனைத் தொடர்வாள்", கம்ப. 8363: 1
மணிவளை தாங்குதல்	மணிவளைகளை அணிதல்	"மணியியல் ஆரங்கதிர்விரித்து ஒளிர்தர மணிவளை தாங்கிய அணிகெழுமென் தோள்", 11ஆம் திரு. 869 : 52-53
நிரைவளை நெகிழ்தல்	செறித்த வளைகள் நெகிழ்ந்து விழுதல்	"நீடு இறை நெடுமென் தோள் நிரைவளை நெகிழ்ந்ததை", கலித். 132: 15
வளை பொலிதல்	தோள் வளை பொலிவுறுதல்	"பெண்மீக் கூரிய பெருநல வனப்பின் வளைபொலி பணைத் தோள் வாசவதத்தை", பெருங். 2 : 1 : 44 - 45
அணியார் வளை தோள் மேல் மின்னுதல்	அழகிய வளை தோள் மீது ஒளிருதல்	"எஞ்சா மணியாரம் பூண்டாழி மெல்விரல் சேர்த்தி அணியார் வளைதோள் மேல் மின்ன", 11ஆம் திரு. 300: 93 - 94
வளை வேய்தல்	வளையல் அணிதல்	"வார்முயங்கு மென்முலைய வளைவேய்த் தோளான் மனமகிழ நீர்முயங்கு கண்குளிர்ப்பப் புல்லி நீள் தோளவன் நீங்கத்", சீவக. 1888 : 1 - 2

3. 6. முதுகு

அ. மணப்பொருள்

எரிமணிச் சுண்ணம் சிறுபுறம் செறியத் தீட்டுதல்	முதுகில் சுண்ணம் அணிதல்	"எரிமணிச் சுண்ணம் மின்னும் .... நெற்றிச் சிறுபுறம் செறியத் தீட்டி", சீவக. 625: 1-2

ஆ. அணிகலன்கள்

சிறுபுறத்து இழை	முதுகில் காணப்படும் அணி	"அறல் அன்ன இரும்பல் கூந்தல் இடனில் சிறு புறத் திழை யொடு துயல் வர", அகம். 142: 18-19
கயிற் கடை ஒழுகிய காமர் தூமணி செயத் தகு கோவையிற் சிறுபுறம் மறைத்தல்	கோவையால் முதுகினை மறைத்தல்	"கயிற்கடை யொழுகிய காமர் தூமணி செயத் தகு கோவையிற் சிறுபுறம் மறைத்தாங்கு", சிலப். 6: 101-102

3.7. கை

தோள் அணிகள் போன்றே கை வளையல்களும் தொடி என்றும் வளை என்றும் அழைக்கப்பட்டதுடன் மேலும் பல பெயர்களாலும் சுட்டப்பட்டன. கைகளில் வளையல் அணிந்துகொள்ளும் வழக்கம் அன்று ஆடவர் மகளிர் இருவரிடமும் காணப்பட்டது. இன்று ஆடவரிடம் இந்த வழக்கம் இல்லை. இன்று போன்றே பல விதமான வளையல்களையும், பலவித பொருட்களால் செய்யப்பட்டவற்றையும் அன்று நம் முன்னோர் அணிந்திருந்தமை இச்சொற்கள் தரும் செய்தியாகும். கைகளில் செம்பஞ்சுக் குழம்பு பூசிய தன்மையையும் சில சான்றுகள் தருகின்றன.

அ. நிறமூட்டும் பொருட்கள்

அரத்தப் பஞ்சின் அணிநிறம் கொள்ளுதல்	செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"கண்டோர் மருளக் கைவளம் காட்டி அரத்தப் பஞ்சின் அணிநிறம் கொளீஇப்", பெருங். 2: 4: 194 - 195
அலத்தகத் தளிர்க்கை	செம்பஞ்சுக் குழம்பு பூசப் பெற்ற கை	"இலக்கண மரபிற்கு ஏற்ற எழுவகை நரம்பின் நல்யாழ் அலத்தகத் தளிர்க்கை நோவ", கம்ப. 4939 : 1-3
கை குலிகம் ஆர்தல்	கைகளில் வண்ணம் பூசுதல்	"துணி கதிர்வளை முன்கைத் தொகுவிரல் செங்காந்தள் மலரங்கை குலிகமார் வனப்பினவே", சீவக. 170: 3-4
கையில் அலத்தகம் எழுதியிடுதல்	கைகளில் அலத்தகம் பூசுதல்	"அம்மலரடியும் கையும் அணிகிளர் பவள வாயும்....... அலத்தகம் எழுதியிட்டாள்", சீவக. 2446: 1-3

ஆ. அணிகலன்கள்

இழை	கையணி	"திருந்திழை முன்கை அணல்அசைத் தூன்றி", அகம். 351: 13
கங்கணம்	காப்பு நாண்	"கங்கணம் முன்கையில்", தேவா.திருஞா. 1: 117: 2; "சேர்வில் பொலி கங்கணம் மீது திகழ்ந்த முன்கை", திருத். 709: 3
கங்கணம் இடுதல்	கங்கணம் அணிதல்	"கையினிற் கங்கணம் இட்டு", பெரியாழ். 1: 10: 2
கங்கணம் கைப் பெய்தல்	கரத்தில் கங்கணத்தை அணிதல்	"கடிசூத்திரம் புனைந்து கங்கணங்கைப் பெய்து வடி வடைய கோலம் புனைந்தாங்கு", 11ஆம் திரு. 300 : 21
கங்கணம் சேர்ந்திலங்குதல்	கங்கணம் கையில் பொலிதல்	"கங்கணம் சேர்ந்திலங்கு கையாள்", 11ஆம் திரு. 300: 89
கடகம்	கையணி	"ஒரு கை முடியொடு கடகம் சேர்த்தி", முல். 76; "மடைசெறி முன்கைக் கடகமொடு", புறம். 150: 21; "கவரியுங் கடகமுங் கதிர் முத்தாரமும் ....பண்டம் புதைத்த வண்டுபடு வளநகர்", பெருங். 1 : 32 : 74 - 80; "குண்டலங்களும், மவுலியும், ஆரமும், கோவை, தண்டை, தோள்வளை, கடகம் என்று இனையன, தறுகண் கண்ட கண்டங்களொடும் கணை துரந்தன", கம்ப. 7523 : 1 - 3; "வடகமுந் துகிலுந்தோடு மாலையு மணியும் முத்தும் கடகமுங் குழையும் பூணுங்கதிரொளி கலந்துமூதூர்", சீவக. 462 : 1 - 2; "கடகமும் கொடியும் கங்கணம் ஆகும்", நி.தி. 3: 68
இலையார் கடகம்	இலைவடிவம் பொருந்திய கடகம்	"வலியார் திணிதோள் மதனன் அவனைப் பிழைத்த பிழைப்பும் நலியும் என்னை நலியும் என்னக் களிற்றின் உச்சி இலையார் கடகத் தடக்கை புடைத்து மெய்சோர்ந் திருந்தான்", சீவக. 2197 : 2 - 4
எரிமணிக் கடகம்	ஒளிரும் மணிகள் பதித்த கடகம்	"இறங்கிய மாதர் தன்னை எரிமணிக் கடகக் கையால் குறங்கின் மேற்றழுவி வைத்துக் கோதையங் குருதி வேலான்", சீவக. 2067 : 1 - 2

இலைபொர எழுதி யன்ன எரிமணிக் கடகம்	ஒளி விளங்கும் மணிக் கடகம்	"இலைபொர எழுதியன்ன எரிமணிக் கடக முன்கை", சீவக. 612: 1
ஒளி மணிக் கடகம்	ஒளிபடைத்த மணிகள் அழுத்திய கடகம்	"உம்பர்தம் பெருமான் ஈந்த ஒளி மணிக் கடகத் தோடும், கொம்புடைய மலையும், தேரும் குரகதக் குழுவும் தூபம் அம்பரம் தன்னை நீத்தான் அலரிகாதலனுக்கு ஈந்தான்", கம்ப. 10348 : 1 - 2
கடுங்கதிர்க் கடகம்	ஒளிமிக்க கடகம்	"நெடுந்தோள் வளையுங் கடுங்கதிர்க் கடகமும்", பெருங். 2 : 5 : 141
பன்மணிக் கடகம்	மணிக் கடகம்	"பன்மணிக் கடகம் சிந்த", சீவக. 1282 : 1
புனை மணிக் கடகம்	மணிகள் பதித்த கடகம்	"எங்ஙணான் ஐயன் என்றாட் கடியன்யானடி களென்னாப் பொங்கிவில் லுமிழ்ந்து மின்னும் புனைமணிக் கடக மார்ந்த தங்கொளித்தடக்கை கூப்பித் தொழுதடி தழுவி வீழ்ந்தான்", சீவக. 1910 : 1 - 3
மகரம் கவ்வி கொடியொடு துளங்கி அடிபெற வகுத்த அருமணிக் கடகம்	மகர மீனாற் கவ்வப் பட்ட கொடியுருவத் தில் அமைக்கப்பட்ட மணிக்கடகம்	"பொறிவறி ஒழுக்கம் போலும் மற்றிம் மறியிலைக் கம்ம மொடு மகரங் கவ்விக் கொடியொடு துளங்கி அடி பெற வகுத்த அருமணிக் கடகமொடங்குலி யழியச்", பெருங். 2 : 19 : 135 - 138
மணி நகுகடகம்	மணி பதித்த கடகம்	"மணி நகுகடக மேற்றா வெண்ணகை", சீவக. 258: 3 - 4
பெருவிலைக் கடகம்	விலை மிகுந்த கடகம்	"பெருந்தகைக் குரிசில் தோழன் பெருவிலைக் கடக முன்கை திருந்துபு செறியப் பற்றிச் சென்றுதன் உரிமை காட்டப்", சீவக. 548 : 1 - 2
வண்ணப் பொற் கடகம்	அழகிய பொற்கடகம்	"வண்ணப் பொற்கடக மேற்றா வார்கச்சிற் றானை வீக்கா அண்ணலங் களிற்றை வையா ஆர்த்துமே லோடி னானே", சீவக. 978 : 3 - 4
எரிமணிக் கடகம் இலங்குதல்	ஒளிருகின்ற மணிகள் பதித்த கடகம் விளங்குதல்	"புரிமுத்தாரமும் பூணும் புரள எரிமணிக் கடகமுங் குழையும் இலங்க", பெருங். 2 : 18 : 100 - 101
வண்ணப்பொற் கடகம் ஏற்றல்	பொற்கடகத்தை மேலே ஏற்றுதல்	"வண்ணப்பொற் கடகம் ஏற்றா, வார் கச்சின் தானை வீக்கா", சீவக. 978 : 3
கடகம் செறிதல்	கடகம் செறிவாக அணிந்திருத்தல்	"கடகஞ் செறிந்த கையைத் தீநாய் உடையக் கவ்வி யொடுங்கா வோதையும்", மணி. 6 : 114 - 115; "கடகம் செறிந்ததங் கைகளால் வாங்கி அடகு பறித்துக் கொண்டட்டுக் குடை கலனா", நாலடி. 289 : 1 - 2
முன்கைப் பொன் வளை முதலாகக் கடகமொடு இயற்றுதல்	முன் கையின் கண் பொன்வளை முத லாகக் கண்ணிறைந்த அழகுடைய கடகம் ஈறாக உள்ள அணி களை அணிதல்	"சின்மயிர் முன்கைப் பொன்வளை முதலாக் கண்ணார் கடகமொடு கைபுனைந் தியற்றிய", பெருங். 3: 22 : 232 - 233
கடகக் கை	வளையம் அணிந்த கை	"வடகப் போர்வையை வனப்பொடு திருத்திக் கடகமுன் கைக் காஞ்சன மாலை", பெருங். 1 : 45 : 10 - 11; "கழுமணிக் கடிப்பினர் கடகக் கையினர்", பெருங். 2: 6 : 128; "ஏர்மீதாடிச் சாந்தெழுதி இலங்கு முந்நீர் வலம்புரி போல் கார்மீதாடிக் கலம்பொழியும் கடகத் தடக்கைக் கழலோனைப் போர்மீதாடிப் புறங்கண்ட புலால் வேல் மன்னர் புடை சூழ்ந்தார்", சீவக. 2359 : 2 - 4; "மாசு இல்நீர் நனைப்ப, நோக்கி கடகக் கை எறிந்து, தம்மில் கருங்கழல் வீரர் நக்கார்", கம்ப. 860 : 6 - 8; "நங்கைக்கு அறிவின் திறம்! நன்று, இது! நன்று, இது! என்னா, கங்கைக்கு இறைவன் கடகக்கை புடைத்து நக்கான்", கம்ப. 1718: 5 - 8

கடிகை நூல் யாத்தல்	காப்பு நாணைக் கட்டியிருத்தல்	"பொலந் தொடி தின்ற மயிர்வார் முன்கை வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து", நெடு. 141 - 142
காப்பு நாண் கட்டுதல்	காப்பு நாண் அணிவித்தல்	"காப்பு நாண் கட்டக் கனாக் கண்டேன் தோழி நான்", நாச். திரு. 6: 4: 4
பைம்பொன் நாண் காப்பு சேர்த்தல்	பசிய பொன் கயிற் றாலான நாண் காப்பு அணிவித்தல்	"பணைமுரசு இயம்ப வாழ்த்திப் பைம்பொன் நாண் காப்புச் சேர்த்தார்", திருத். 158 : 7 - 8
குருகு	வளையல்	"சூராலமேயாக் குருகோடு நைவேற்கு", 11ஆம் திரு. 601: 1-2
குருகு இரங்குதல்	வளை ஒலித்தல்	"அங்கை சேப்பக் குருகிரங்க அலங்க லம்பூங் குழல் துயல் வர", சீவக. 2592 : 1 - 2
கைப்புள் ஒலி சிறத்தல்	கைகளில் அணிந்த வளையல்க்ள் ஒலித்தல்	"பூம்பொழி லார்கைப் புள்ளொலி சிறப்பக் பூங்கொடி யார்கைப் புள்ளொலி சிறப்பக் கடவுட் பீடிகைப் பூப்பலி கடைக்கொளக்", மணி. 7 : 191 - 121
சங்கம்	வளையல்	"சங்க மது ஆர் குற மாதர்", தேவா.திருஞா. 1: 43: 2; "சங்கங் கவர்ந்துவண் சாத்தி னோடுஞ் சதுரன் பெருந் துறை ஆளி அன்று", திருவாச. திருவார். 10 : 5 - 6; "பொன் தொடி தளிர்க்கை சங்கம் வண்டொடு புலம்பி ஆர்ப்ப", கம்ப. 936: 1 - 2
ஒண் சங்கம்	ஒள்ளிய வளையல்	"நட்டமா கின்றன வொண் சங்கம் நானவன்பால் நட் டமா நன்னீர்மை வாடினேன்", 11ஆம் திரு. 631 : 1 - 2
கடற் சங்கம்	கடல் சங்கினாலான வளை	"காதார் குழையும் கடற்சங்கமும் குங்குமமும் போதார் அலங்கல் பொறையும் பொறையென்று நீக்கித்", சீவக. 2349 : 1 - 2
சங்கு	சங்கு வளையல்	"ஊணொன்று இல்லை உறக்கில்லை உன்மாலின் ஊண் என்று பேசுவோர் சங்கிழந்தாள்", 11ஆம் திரு. 701: 1 - 2; "சங்கொடு சிலம்பும், நூலும் பாத சாலகமும் தாழ", கம்ப. 4949 : 1 - 2
சங்கணைதல்	வளையல்கள் பொருந்துதல்	"சங்கணையும் முன்கைத் தடமுலையார் மேல் எய்வான் கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த", 11ஆம் திரு. 300: 39
இறை கழன்ற சங்கு ஆர்த்தல்	முன்கைகளில் அணிந்திருந்த சங்கு வளையல்கள் ஒலித்தல்	"முரசு ஆர்த்திட, மடவார் இறை கழன்ற சங்கு ஆர்த்திட இமையவர்", கம்ப. 1364 : 2 - 5
வெண்சங்கு இயம்புதல்	வெள்ளிய வளையல் கள் ஒலித்தல்	"பொங்கு இயம் பலவும் கறங்கின; நூபுரங்கள் புலம்ப, வெண்சங்கு இயம்பின! கொம்பு அலம்பின, சாம கீதம் நிரந்தவே", கம்ப. 1554 : 5 - 8
சங்கின் பொலிதல்	சங்கினாலியன்ற வளைகள் ஒளி வீசுதல்	"சங்கின் பொலிந்த தகையாளைப் பிரிந்த பின்பு, தமக்கு இனம் ஆம் கொங்கின் பொலிந்த தாமரையின்", கம்ப. 6061 : 3 - 5
சூடகத்தொடி	முன்கைவளை	"சுண்ணமும் தூசும் வீசி, சூடகத் தொடிக் கைம் மாதர்", கம்ப. 4370 : 1 - 2
சூடகம்	கையில் அணியப் படும் வளையல்	"ஆய்ப்பொன் னரிச்சிலம்புஞ் சூடகமு மேகலையு மார்ப்பவார்ப்ப", சிலப். 12 : 12 : 1; "கண்ணார் கடக மொடு கைபுனைந்தியற்றிய சூடகத் தேற்ற சுடரொளிப் பவளமொடு", பெருங். 3 : 22 : 233 - 235; "சூடக அரவு உறழ் சூலக் கையினள்", கம்ப. 362: 1
மத்தக மணியொடு வயிரங்கட்டிய சித்திரச் சூடகம்	முகப்பிற்கட்டிய மாணிக்கத்தோடே பத்திகளில் வயிரங்கள் அழுத்தப்பட்ட சித்திரத் தொழிலை உடைய சூடகம் (அடி.ந.)	"மத்தக மணியொடு வயிரம் கட்டிய சித்திரச் சூடகம் செம் பொன் கைவளை... அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து", சிலப். 6 : 91 - 94

சூடக வரிவளை	சூடக வளை	"சூடக வரிவளை ஆடமைப்பணைத் தோள்", சிலப். 27 : 184
சூடக வால்வளை	சூடகம் என்ற கை வளை	"சீதை எனும் பொன் சூடக வால் வளை, சூட்டிட நீட்டும் ஏடு அவிழ் மாலை இது, என்ன எடுத்தான்'', கம்ப. 698 : 2 - 4
சூடகக்கை	வளை அணிந்த கை	''பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச் சூடகக்கை நல்லார் தொழுதேத்த'', திருவி. 192: 1 - 2; ''சூடகத் தளிர்க் கை, மற்றைச் சுடர் மணித் தடக்கை பற்றி'', கம்ப. 783: 3 - 4; ''சூடகத் தளிர்க் கைம் மாதர் குழுமினர் துவன்றித் தோன்ற'', கம்ப. 2356: 3 - 4; "சூடகத் தடக்கை, சுடு சினத்து அடுபோர், அரக்கியர் தலைதொறும் சுமப்ப", கம்ப. 5163 : 7 - 8
சூடக முன்கை	வளையல் அணிந்த முன்கை	''சூடகமுன்கை மங்கை யொருபாகமாக வருள் காரணங்கள் வருவான்'', தேவா. திருஞா. 2: 87: 3: 1 - 2; ''தாதுகு புனை மலர்த் தண் பூங்காவினுட் சூடக முன்கைச் சுடர்குழை மகளிரொடாடுதலானா", பெருங். 3 : 6 : 90 - 92; "பாடகக் கான்மிசைப் பரிந்தவை விடுத்தும் சூடக முன்கையிற் சுழன்றுமாறடித்தும் அடித்த பந்துக ளங்கையி னடக்கியும்", பெருங். 4 : 12 : 59 - 61
சூடகம் அணிதல்	வளை அணிதல்	''பாடகம் சுமந்த செம்பொன் சீறடிப் பரவை அல்குல் சூடகம் அணிந்த முன்கைச் சுடர்மணிப் பூணி னாளை", சீவக. 479 : 1 - 2
சூடகம் ஏற்றல்	சூடகம் என்னும் கையணியை ஏறச் செறித்தல்	"சூடக மேற்றியும் பாடகந் திருந்தியும் நாடக மகளி ரினன்கன முலாவியும்", பெருங். 4 : 12 : 118 - 119
பன்மணிசேர் சூடகம் முன்கை தொடர்வித்தல்	பல்வேறு மணிகள் பதிக்கப் பெற்ற சூடகம் என்னும் வளையை முன்னங் கையில் அணிதல்	''பாடகங் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர் சூடகம் முன்கை தொடர்வித்தாள்", 11ஆம் திரு. 300: 139
சூடகம் துயல்வரல்	கை வளையல் அசைதல்	"சூடகம் துயல்வர, கோதை சோர்தர", கம்ப. 1061 : 1 - 2
சூடகம் துளங்காமை	வளையல் அசையாமை	"சூடகம் துளங்காது", சிலப். 28 : 71
சூடகம் விளங்குதல்	வளையல் பொலிவு பெறுதல்	"தருமகப் பறையும் அமர்தரத் தாங்கிச் சிறந்துளது ஒரு பால் திருக்கரம் செறிந்த சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்", 11ஆம் திரு. 878 : 36 - 38
தொடி	வளையல்	"தொடி பழி மறைத்தலின் தோள் உய்ந்தனவே", நற். 23:1; ''தொடியோர் மடிந்தெனத் துறை புலம்பின்றே'', நற். 49 : 2; "தொடிமகள் முரற்சி போல் தும்பி வந்து இமிர்தர'', கலித். 36 : 4; "தொடி முன்கை நல்லாய்! அத்தொக்க பொருளைக் குடிமக னல்லான் கை வைத்தல்'', பழ. நா. 209 : 1 - 2; "தொடி கையிடை முத்தம் தொக்கு'', திணை. நூற். 42: 4; "தொடிசேர் செங்கையிற் றொழுது நின்றேத்தியும்'', மணி. 19 : 78; "தொடியுடைத் தடக்கையிற் றொழுதன ளிறைஞ்சி மீட்டவற் போக்கு மாற்றங் கேட்டே'', பெருங். 1 : 46 : 154 - 156; "கடிகமழ் மார்ப கவல லென்று தொடியுடைத் தடக்கையிற் றோழனைப் புல்லிப்", பெருங். 5 : 3 : 124 - 125; "கடகமும் தொடியும் கங்கணம்", நிக.திவா. 7 : 68
அகன் தொடி	அகன்ற வளையல்	"வாளரம் பொருத கோணேர் எல்வளை அகன்தொடி செறித்த முன்கை", நற். 77: 9 - 10

அங்கோல் அவிர் தொடி	திரண்டு விளங்கு கின்ற வளையல்	"அங்கோ லவிர்தொடி! ஆழியா னாயினும் செங்கோல நல்லாக்கால் சேர்ந்தாரும் எள்ளுவரால் வெங்கோன்மை வேந்தர்கண் வேண்டும்", பழ. நா. 251 : 1 - 3
அலவன் கண் அவிர் தொடி	நண்டின் கண் தன்மை பெற நெருங்கப் பெற பல அரும்புத் தொழில் சூழப்பெற்ற கோற்றொழில் அவிர் கின்ற இரண்டாய்ச் சேருந்தொடி	"கையதை, அலவன் கண்பெற அடங்கச் சுற்றிய பலவுறு கண்ணுள் சிலகோல் அவிர்தொடி", கலித். 85: 6 - 7
ஆய்கோல் அவிர்தொடி	அழகிய திரட்சியை உடைய விளங்கு கின்ற தொடி	"ஆய்கோல் அவிர்தொடி விளங்க வீசி", மது. 563
ஆய்பொன் அவிர் தொடி	உயர்ச்சிப் பெற்ற பொன்னாற் செய்த விளங்குகின்ற தொடி	"மணம்புணர்ந் தோங்கிய அணங்குடை நல்லில் ஆய்பொன் னவிர்தொடிப் பாசிழை மகளி ரொண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி நீனிற விசும்பி லமர்ந்த னராடும்", மது. 578 - 581
கோல் அவிர் தொடி	தொழிற்றிறம் உடைய தொடி	"கையதை அலவன் கண்பெற அடங்கச் சுற்றிய பலவுறு கண்ணுள் சில கோல் அவிர்கொடி", கலித். 85: 6 - 7
முத்துக்கோல் அவிர்தொடி	முத்தழுத்திச் செய்த தொடி	"பாசடைத் தாமரை முளை நிமிர்ந்தவை போலும் முத்துக்கோல் அவிர்தொடி", கலித். 59 : 1 - 2
ஆம்பல் வள்ளித் தொடி	ஆம்பல் தண்டாற் செய்த வளையல்	"ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர் பாசவன் முக்கித் தண்புனற் பாயும்", புறம். 63 : 12 - 13
ஆய்தொடி	ஆராய்ந்து சிறப்பாகச் செய்த வளையல்/ வளை அணிந்த மகளிர்	"போதவிழ் அலரின் நாறும் ஆய்தொடி அரிவை நின் மாணலம் படர்ந்தே", அகம். 4 : 16 - 17; "அன்பின் விழையார் பொருள் விழையு மாய்தொடியார் இன்சொ லிழுக்குத் தரும்", குறள். 911; "செருக்கினால் வாழுஞ் சிறியவனும் பைத்தகன்ற அல்குல் விலைபகரும் ஆய் தொடியும் - நல்லவர்க்கு", திரிகடு. 25 : 1 - 2; "சிந்தை யான் நீர் என்று செத்துத் தவாஓடும் பண்பில் அருஞ்சுரம் என்பவால் ஆய்தொடி நண்பிலார் சென்ற நெறி", கைந். 24 : 2 - 4; "தீவினைச் சிலம்பு காரணமாக ஆய் தொடி யரிவை கணவற் குற்றதும்", சிலப். 25 : 69 - 70; "செயப்பாட்டு வினையாற் தெரிந்துணர்வரியது அவ்வுயிர்க் கன்பினை யாயினாய் தொடி எவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும்", மணி. 23 : 77 - 79; "பூமிசந்திரன் கொடு போந்த வண்ணமும் ஆய்தொடி யரிவை யமர சுந்தரி யெனும் தாய்வாய்க் கேட்டுத் தாழ்துய ரெய்தி இறந்த பிறவியின் யாய் செய் ததூஉம்", மணி. 25 : 75 - 78
இலங்கு தொடி	விளங்குகின்ற வளையல்கள்	"இலங்குதொடி நல்லார் சிலர்நின்றேற்றி", மணி. 3: 143; "கலங்கவிழ் மகளிரின் வந்தீங் கெய்திய இலங்கு தொடி நல்லாய் யார்நீ என்றலும்", மணி. 11: 7 - 8
இறை தொடி	முன்கை வளையல்	"தந்தை இறைதொடி மற்றிவன் தன்கைக்கண் தந்தாரி யார் எல்லாஅ இது", கலித். 84 : 31 - 32
ஒண்தொடி	ஒள்ளிய தொடி/ தொடி அணிந்த மகளிர்	"ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியோடு கண்டோர் மொழிதல் கண்ட தென்ப", தொல். 1449; "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் ஒண்தொடி கண்ணே உள", குறள். 1101; "கொண்டெழில் வானமும் கொண்டன்(று) ஒண்தொடி ஊடும் நிலை", கார். நாற். 23 : 3 - 4; "உள்ளார் கொல் காதலார் ஒண்டொடி நம்திறம் வள்வார் முரசின் குரல்போல் இடித்துரறி", ஐந்.

		ஐம். 4 : 1 - 2; "ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெரு வர வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா", திருமந். 54 - 55; "ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம் திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்", சிலப். 25 : 67 - 68; "ஒண்டொடி மகளிர் கொண்டகம் புகுதரத்", பெருங். 1 : 34 : 230; "உதையை யோடை என்னும் ஒண்தொடி காசியரசன் காதலி", பெருங்.3: 6: 172-173; "நயந்தோர்க் காயினு நாணுத்தக் கன்றென உயர்ந்தோர் கொள்கையி னொண்டொடி யொதுங்க" பெருங். 5 : 1 : 215 - 216; "விரிகடல் பருகி அளறுபட் டன்ன கருநிறமேகம் கல்முக டேறி நுண்துளி பொழிய நோக்கி ஒண்தொடி பொலங் குழை மின்னப்", 11ஆம் திரு. 270 : 1 - 4; "விண்கண் அருவி சோர விம்மு உயிர்த்து இனையை ஆதல் ஒண் தொடி தகுவது அன்றால் ஒழிக நின் கவலை என்றான்", சீவக. 271 : 3 - 4; "தேனடைந் திருந்த கண்ணித் தெண்மட்டுத் துவலை மாலை ஊனடைந் திருந்த வேற்கண் ஒண்டொடி யுருவ வீணை தானடைந் திருந்த காவிற் பாடினாள் தனிமை தீர்வான்", சீவக. 1355 : 1 - 3; "ஒண்தொடி இயக்கி யாரும் உளையிட்டுப் புலம்பி ஒடக்கண்டனம் என்று சொன்னார் கையறு கவலை உற்றார்", திருத். 2541 : 52
கழல்தொடி	கழலும் வீரவளையல்	"கழல்தொடி சேய் குன்றம்", குறுந். 1: 3; "நசைபிழைப் பறியாக் கழல்தொடி அதிகன்", அகம். 162 : 18; "அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சி நெடுவேற் கழல்தொடி தடக்கைக் காரி", சிறுபாண். 94 - 95
கீழ்வீழ் தொடி	கழலும் தொடி	"கீழ்வீழ்தொடி யொடு மீமிசைக்கொட்ப ஒருகை", திருமுருகு. 114
குறுந்தொடி	குறுகிய தொடி/ வளை அணிந்த மகளிர்	"நிரைகோல் குறுந்தொடி தந்தை ஊரே", குறுந். 233: 7; "செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர் பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்", புறம். 36 : 3 - 4; "கைபுனை குறுந்தொடி தத்தப்பைய முத்தவார் மணற் பொற்கழங்காடும்", பெரும். 334 - 5; "குறுந்தொடி முன்கை கூந்தலஞ் சிறுபுறத்து", முல். 45; "தூவி நெருஞ் சிக்காய் நீர்முள்ளி தும்பையலர் காவியன சேல்கண் குறுந்தொடியார்", இன். 26 : 1 - 2; "குதலைச் செவ் வாய்க் குறுந்தொடி மகளிர் முதியோர் மொழியின் முன்றி னின்றழத்", சிலப். 30 : 114 - 115
தொடலைக் குறுந்தொடி	மாலை போலத் தொடர்ந்த சிறு வளையல்/ வளை அணிந்த மகளிர்	"தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு மாலை உழக்கும் துயர்", குறள். 1135
கோட்டியானை தொடி	ஆண்யானையின் தந்தத்தால் செய்யப் பட்ட வளையல்	"தோற்றாரே வெல்வர் துணைமிசைவார் கோட்டி யானை ஏற்றுக்கழல் தொடியார் மிக்காரை", இன்னி. 29 : 1 - 2
கோற்றொடி	திரட்சியுடைய வளை/ வளையணிந்த மகளிர்	"புறவணி கொண்ட பூநாறு கடத்திடைக் கிடினென இடிக்குங் கோற்றொடி மறவர்", நற். 48 : 5 - 6; "காஅர்க் குரவையொடு கருங்கய னெடுங்கண் கோற்றொடி மாத ரொடு குடகர் தோன்றத் தாழ்தரு கோலத்துத் தமரொடு சிறந்து", சிலப். 26 : 120 - 121; "எம்மிதிற் படுத்தும் வெவ் வினை யுருப்பக் கோற்றொடி மாதரொடு வேற்றுநாடு அடைந்து", மணி. 8 : 40 - 41; "கூப்பிய கையினள் கோயிலுட் பட்டதும் கோற்றொடி மாதர் கொள்கை யுங்கூற", பெருங். 3 : 17 : 76 - 77;

		"நூற்றொரு பதின்பர் கோற்றொடி மகளிருட் ...... பணைமுலை மகளிரைப்" பெருங். 4 : 11 : 38 - 39; "கற்றன ளென்றெடுத் துற்றவ வருரைப்ப கேட்டன னாதலிற் கோற்றொடி நுதன் மிசைப் பூந்தா தோடு சாந்துறக் கூட்டி", பெருங். 4 : 13 : 60 - 62; "கோற்றொடி நுழைச்சியர் முத்தங் கோப்பவர்", சீவக. 47 : 3; "கோல்தொடி மகளிர் செம்பொன் கோதையும் குழையும் மின்ன", சீவக. 702 : 3; "ஆற்றலங் குமரன் தன்மேல் அடுகளிரோட அஞ்சான் கோற்றொடிப் பாவை தன்னைக் கொண்டுயப் போமின் என்றான்", சீவக. 981 : 3 - 4; "போற்றுவார் குழல் சேடிய ருடன் புறம் போந்து கோல்தொடித் தளிர்க் கையி னால் முகை மலர் கொய்ய", திருத். 2958 : 3 - 4; "ஏற்றது அன்று என எடுத்துரைப்பார் என்றபோது கோல் தொடிச் செங்கை தோற்றிடக் குடம் உடைந்து எழு வாள்", திருத். 2993: 2- 3
சுடர்த்தொடி	ஒளி வீசுகின்ற தொடி/ வளை அணிந்த மகளிர்	"சுடர்த்தொடி குறுமகளினைய", ஐங். 305 : 3; "கடக் கருங் கானத்துக் காளைபின் நாளை நடக்கவும் வல் லையோ என்றி சுடர்த்தொடீஇ", நாலடி. 398 : 1 - 2; "மடிசெவி வேழம் இரீஇ - அடியோசை அஞ்சி யொதுங் கும் அதருள்ளி ஆரிருள் துஞ்சா சுடர்த்தொடி கண்", ஐந். ஐம். 16 : 2 - 4
செறிதொடி	செறிவாக அணியும் தொடி/ வளை அணிந்த மகளிர்	"செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச", மலை. 201; "செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர் தீர்க்கும் மருந்தொன் றுடைத்து", குறள். 1275; "ஆர் அன்பின் ஆயன் உவந்(து) ஊதும் - சீர்சால் சிறுகுழல் ஓசை செறிதொடி! வேல் கொண்டு எறிவது போலும் எனக்கு", ஐந். ஐம். 7 : 2 - 4; "சென்றார் வருதல் செறி தொடி! சேய்த்தன்றால் நின்றார் கொல் தேறாதாய்! நீடின்றி - வென்றார்", திணை. நூற். 79 : 1 - 2; "சென்றார் வருவர் செறிதொடீஇ காரி·.தோர் வெஞ்சின வேந்தர் முரசின் இடித்துரறித்", திணை. ஐம். 23 : 1 - 2; "செறி தொடி நல்லீர் உம் பிறப்பீங்கி·. தாபுத் திரன்கை அமுத சுரபியெனும்", மணி. 11 : 142 - 143; "நின் செறிதொடி ஒழிய என்றார்" சீவக. 770 - 4
நற்றொடி	நல்ல வளையல்	"பொற்கொடி மூதூர்ப் பொருளுரை யிழந்து நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்", மணி. 2 : 40 - 41
நிரைத்தொடி	ஒழுங்காக அணிந்த வளையல்/ வளை அணிந்த மகளிர்	"இசையா ஒரு பொருள் இல்லென்றல் யார்க்கும் வசை அன்று வையத் தியற்கை - நசையழுங்க நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ", நாலடி. 111 : 1 - 3; "வரை யக நாட! வரையாய் வரின் எம் நிரைதொடி வாழ்தல் இலன்", ஐந். எழு. 10 : 3 - 4; "நீலவேற்க ணிரைதொடிக் கீகெனப் பொற்கோங் கேய்ப்ப நற்கலனணிந்த முப்பதி னிரட்டி முற்றிழை மகளிரைப்", பெருங். 4 : 11 : 46 - 48
பூந்தொடி	அழகிய வளையல்/ வளையணிந்த மகளிர்	"அணங்கு வீழ்வு அன்ன பூந்தொடி மகளிர் மணம் கமழ", மது. 446: 5; "நிரை கொளற்புத்தளை நெரிய வூர்தரும் புலவி நோக்கத்துப் பூந்தொடி புலம்பி", பெருங். 1 : 40: 326 - 327
பைந்தொடி	பசிய வளையல்/ வளையணிந்த மகளிர்	"பணை நீங்கிப் பைந்தொடி சோரும் துணை நீங்கித் தொல்கவின் வாடிய தோள்", குறள். 1234; "எய்ப்புழி வைப்பாம் எனப் போற்றப் பட்டவர் உற்றுழி ஒன்றுக் குதவலார், பைந்தொடீஇ", பழ. நா. 136 : 1 - 2; "அடையப் பயின்றார் சொல் ஆற்றுவராக் கேட்டால் உடைய தொன்றில்லாமை யொட்டின் - படைபெற் றடைய அமர்த்த கண் பைந்தொடி!", பழ. நா. 223:

1 - 3; "சங்கம னென்னும் வாணிகன் றன்னை முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவன் .... பரதனென்னும் பெய ரனக் கோவலன்'', சிலப். 23 : 151 - 154; ''மஞ்சு சூழ்சோலை மலைகாண் குவமெனப் பைந்தொடி யாயமொடு பரந் தொருங்கீண்டி வஞ்சி முற்ற நீங்கிச் செல்வோன்", சிலப். 25 : 7 - 9; "முருகச் செவ்வி முகந்து தன் கண்ணாற் பருகா ளாயிற் பைந்தொடி நங்கை'', மணி. 5 : 14 - 15; ''அந்தியந்தணர் செந்தீப் பேணப் பைந்தொடி மகளிர் பலர் விளக்கெடுப்ப", மணி. 5 : 133 - 134; ''அமுத சுரபியை அங்கையின் வாங்கிப் பதியகந் திரிதரும் பைந்தொடி நங்கை", மணி. 19 : 40 - 41; ''பைந் தொடி சுற்றமொடு தந்தை தலைத்தாள்", பெருங். 1: 32 : 24; "பைந்தொடி மகளிர் பரவினர் கைதொழ", பெருங். 1 : 33 : 57; "பைந்தொடி மாதர் பண்பில பயிற்றத்", பெருங். 1 : 35: 133; "முன்னம் புக்க தன்னமர் காதலன் பாடகச் சீறடிப் பைந்தொடி மாதரை ஆடுக வாவித னகவயி'', பெருங். 1 : 40 : 313 - 315; ''புதுமலர்க் கோதை புனையிருங் கூந்தல் பதுமா பதியெனும் பைந் தொடிக் கோமகள் கன்னி யாயந் துன்னுபு சூழ", பெருங். 3 : 5 : 26 - 28; "பெருஞ்சாற் றுறாஉம் பெற்றியள் போலப் பைந்தொடி மகளிர் நெஞ்சுநிறையன் பொடு வண்ண மலருஞ் சுண்ணமுந் தூவ", பெருங். 3 : 5 : 113 - 115; "மந்திர மறப்ப மனநனி கலக்கும் பைந்தொடி பயிற்றும் பண்யாழ் வருகெனத்", பெருங். 3 : 14 : 191 - 192; "விழுத்தகு வேள்வி யொழுக்கிய லோம்பிச் செம்பொற் பட்டம் பைந்தொடிப் பாவை மதிமுகஞ் சுடர மன்னவன் சூட்டித்", பெருங். 3 : 22 : 274 - 276; "அந்தளிர்க் கண்ணி யவந்திகை வெல்கெனப் பைந் தொடி மாதர் பற்பல வகையால்'', பெருங். 4 : 12 : 243 - 244; "கந்துகொல் கடாக்களி யானை மன்னவன் பைந் தொடிப் பாசிழைப் பரவை யேந்தல்குல்'', சீவக. 186 : 2 - 3; "பைவிரி பசும்பொன் அல்குல் பைந்தொடி விசயை என்பாள்'', சீவக. 385 : 2; "கந்தெரி மணியில் செய்த கன்னியா மாடம் எய்திப் பைந்தொடிப் பாவை ஒன்றும் பிரிவிலள் வைகினாளே'', சீவக. 585 : 3 - 4; "பைந்தொடிக்கு இடர்களை பருவம் பையவே வந்து அடுத்துளது", கம்ப. 4249 : 1 - 3; "பதவிய மனிதரேனும், பைந்தொடி! நின்னைத் தந்த உதவியை உணர நோக் கின்", கம்ப. 5216 : 1 - 2; "உய்ந்தனென் என்ன, உயர்ந் தான், பைந்தொடி தாள்கள் பணிந்தான்'', கம்ப. 6004 : 3 - 4; "பண்நிறை பவளச் செவ்வாய், பைந் தொடி, சீதை என்னும் பெண் இறை கொண்ட நாண் நிறை கொண்ட பின்னர்", கம்ப. 7281 : 1 - 2; "கந்தமா தனம் என்று ஓதும் கிரி, இவண் கிடப்ப கண்டாய், பைந் தொடி! அடைத்த சேது பாவனம் ஆயது! என்றான்'', கம்ப. 10119 : 3 - 4

பொலந்தொடி	பொன்னாலாகிய தொடி/வளை அணிந்த மகளிர்	''அறநிலைப் பெற்றோர் அனையேன் அதன்தலைப் பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்", நற். 166 : 6 - 7; ''யாவரும் விழையும் பொலந்தொடி புதல்வன்", அகம். 16 : 5; "பொலந்தொடி தின்ற மயிர் வார் முன்கை வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து" நெடு. 141 - 142; "எவ்வம் என்னும் எழுந்தீக-வைகல் மறு வில் பொலந்தொடி வீசும் அலற்றும் சிறுவன் உடை யேன் துணை", ஐங். எழு. 55 : 2 - 4; "மராஅ மலர்ந்தன தோன்றி விராஅய்க் கலந்தனர் சென்றார் வலந்த சொல்

		எல்லாம் பொலந்தொடிஇ பொய்த்த குயில்", திணை. ஐம். 13 : 2 - 4; "நயவர நட்டொழுகு வாரும் தாம் கேட்ட துயவா தொழிவா ரொருவருமில்லை புயலமை கூந்தற் பொலந்தொடி!", பழ. நா. 180 : 1 - 3; "வையத் திலங்கிழை மாதரேற்ற வேறிப் பொலந்தொடி மகளிர் பொலிவொடு சூழ", பெருங். 3 : 6 : 130 - 131
பொற்றொடி	பொன்னாற் செய்த தொடி / வளை அணிந்த மகளிர்	"பொற்றொடி புதல்வரோடியாடவும்", பட். 295; "மாண்டிலா ரென்றே மறைப்பக் கிடந்ததோ? பூண்டாங் கிளமுலைப் பொற்றொடி! பூண்ட பறையறையா ராயினா ரில்", பழ. நா. 84 : 2 - 4; "நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரிய விப் பொற்றொடி மாதராடோள்", சிலப். 17: 7; "நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த ஓவியச் செந்நூலுரைநூற் கிடக்கையும் கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை நற்றவம் புரிந்தது நாணுடைத் தென்றே", மணி. 2: 30-33; "தணியா இன்பம் தலைத்தலை மேல்வரப் பொற்றொடி மாதர் நற்றிறஞ் சிறக்க உற்றுணர் வாய்நீ யிவர்திறம் உரைக்கேன்", மணி. 12 : 32-34; "மற்றவ னிவ்வூர் வந்தமை கேட்டுப் பொற்றொடி விசாகையும் மனைப்புறம் போந்து நல்லாள் நாணாள் பல் லோர் நாப்பண்", மணி. 22: 123 - 125; "கற்றமணருற்று லவு தேரருரை செய்த குற்றமொழி கொள்கைய திலாத பெருமானூர் பொற்றொடி மடந்தையரு மைந்தர் புலனைந்தும்", தேவா. திருஞா. 2 : 29 : 10 : 1 - 3; "பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப் போதரிக் கண்ணிணைப் பொற்றொடித் தோள் பையர வல்குல் மடந்தை", திருவாச. திருப்பொற். 12 : 5 - 7; "மற்றவ னின்ற பொற்றொடி மகளிரைச்", பெருங். 1 : 34 : 151; "போர்ப் புறு மீக்கோள் யாப்புறுத் தசைஇப் பொற்றொடி நிறை கோல் பற்றிய கையினர்", பெருங். 3 : 17 : 172 - 173; "நாமப் பொற்றொடிக் குறளி யானிவ ணிற்பக் கூனியைப் புகழ்தல்", பெருங். 4 : 12 : 95 - 96; "கொற்றவ னுரைக்கும் பொற்றொடித் திரளினைப் பாரான் பார்த் தொரு பைந்தொடி நின்னொடு", பெருங். 4 : 13 : 15 - 16; "கொற்றத் தேவியைக் குறுகலு மவளும் பொற் றொடித் தோழியர் புரிந்து புறங் காப்பத்", பெருங். 5: 1 : 59 - 60; "மற்று உரையாடலளாய் மணி மாநிலத்து அற்றது ஓர் கோதையின் பொற்றொடி சோர்ந்தாள்", சீவக. 226: 3 - 4; "முற்றிமை சொல்லின் நங்கை மூன்று நாள் அடிசில் காட்டாள் பொற்றொடி தத்தையீரே பொத்தும் நும்வாயை என்றே", சீவக. 2511: 2 - 3; "பொற் றொடி மகளிர் ஊரும் பொலன் கொள் தார்ப்புரவி வெள்ளம்", கம்ப. 806: 1-2; "பொன்தொடி தளிர்க்கைச் சங்கம் வண்டொடு புலம்பி ஆர்ப்ப", கம்ப, 936: 1 - 2; "பொற்றொடிச் சிறுமகளிர் ஆயத்தொடும் புணர்ந்து சிற்றில் முற்றவும் இழைத்துடன் அடுதொழில் சிறுசோறு உற்ற உண்டிகள் பயின்று ஒளி மணிஊசல் ஆடி", திருத். 2951 : 1 - 3; "மற்று இதன் தூய்மை எண்ணின், மலர் அயன் தனக்கும் எட்டா பொன் தொடித் தெரிவை! யான் என் புகலுகேன்!", கம்ப. 10118: 1 - 2; "பொன்தொடியாய் உனை இகந்து போகாமைக்கு ஒரு சபதம் அற்றம் உறு நிலைமையி னால் அவன் செய்வான் என அருளி", திருத். 3402: 3-4
வழங்கு தொடி	கழலும் வளை	"கழங்காடு மகளிரோதை யாயத்து வழங்குதொடி முன்கை மலர வேந்தி", சிலப். 27 : 245 - 246

விளங்குதொடி	விளங்குகின்ற தொடி	"விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற நின் மார்படை தலின் இனிதாகின்றே", அகம். 58 : 8 - 9
விழுத்தொடி	சிறந்த வளையல்	"நகைமாண் டிலங்கும் நலங்கெழு துவர் வாய் கோலமை விழுத்தொடி விளங்க வீசி", அகம். 162 : 13 - 14
தொடிக்கை	தொடி அணிந்திருந்த கை	"ஆம்பல வள்ளி தொடிக்கை மகளிர்", புறம். 63: 12; "தொடிக்கை மகடுஉ மகமுறை தடுப்ப", சிறுபாண். 192; "தொக்கது ஆம் படை, சரிகுழல் மடந்தையர் தொடிக்கை மக்கள், தாயர், மற்று யாவரும் தடுத் தனர்", கம்ப. 5614: 1 - 2
பொன் தொடியாள்	பொன்னாலான வளையலை அணிந்த மகளிர்	"உற்றவரை என்றும் உடன்பிரியா அன்பு அருளிப் பொன் தொடியாள் பாகனார் பொன்னம்பலம் அணைந்தார்", திருத். 648 : 3 - 4
தொடியோர்	தொடி அணிந்தவர்	"தொடியோர் மடிந்தென துறைபுலம்பின்றே", நற். 69: 6
தொடியோள்	தொடி அணிந்தவர்	"தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே", குறுந். 7: 1
தொடியணிதல்	தொடியைக் கையில் அணிதல்	"இடுமணி யானை யிரீஇ யிழிந்து தன் தொடியணி தடக்கை தோன்ற வோச்சி", பெருங். 3 : 16 : 31 - 32
தொடி ஆர்தல்	வளையல் அணிந்து இருத்தல்	"தொடி ஆர் தடக்கைச் சுகோதய சுந்தரி வடிவு ஆர் திரிபுரையா மங்கை", திருமந். 1151 : 1 - 2
பொன் தொடி தளிர்க்கைச் சங்கம் ஆர்த்தல்	தளிர் போன்ற கைகளில் அணிந்த பொன்னாலும் சங்குகளாலும் ஆன வளையல்கள் ஒலித்தல்	"பொன் தொடி தளிர்க் கைச் சங்கம் வண்டொடு புலம்பி ஆர்ப்ப", கம்ப. 936 : 1 - 2
அவிர் தொடி இறை ஊர்தல்	அவிர்தொடி முன் கைகளில் நின்றும் கழலுதல்	"கலங்கு அஞர் உற்று, நின் கமழ் மார்பு நசை இயாள் இலங்கு கோல் அவிர்தொடி இறை ஊரக் காணுங்கால்", கலித். 13 - 14
தொடி கழிதல்	தொடியை அகற்றுதல்	"தொடி கழி மகளிரின் தொல் கவின் வாடி", புறம். 238: 6
குறுந்தொடி செறித்தல்	கைகளில் குறிய தொடிகளையிடுதல்	"விறலியர் வறுங்கைக் குறுந்தொடி செறிப்பப்", மது. 217
தொடி சேர்தல்	வீரவளையணிதல்	"நெடியோன் முன்னொடு நின்றன னாமெனத் தொடி சேர் செங்கையிற் றொழுது நின்றேத்தியும்", மணி. 19: 77 - 78
செறிதொடி தெளிர்ப்ப வீசுதல்	கைகள் வீசி நடத்தலால் தொடி ஒலித்தல்	"செறிதொடி தெளிர்ப்ப வீசி", நற். 20 : 5
தொடிபொலிதல்	அணிந்திருந்த பசுமையான திரண்ட வளையல்கள் ஒலித்தல்	"செங்கால் மரா அந் தகைந்தன பைங்கோல் தொடி பொலி முன்கையாள் தோள் துணையா வேண்டி நெடுவிடைச் சென்றதென் நெஞ்சு", கார். நாற். 19 : 2 - 4
தொடி விளங்குதல்	தொடி அணிந் திருத்தல்	"தூங்கெயி லெறிந்த தொடி விளங்கு தடக்கை நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன் உறந்தையும் வறிதே", சிறுபாண். 81 - 83
பரியகம்	கையணி; கைச்சரியுமாம்; பாசித்தாமணி (அரும்பதம்.) நவரத்தின வளை (அடி. ந) நவமணி வளை (கழகம்)	"சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை பரியகம் வால்வளை பவழப் பல்வளை அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து", சிலப். 6 : 92 - 94; "பரியகம் காற்சரிப் பேர் பகர்ந்த கைச் சரிக்கும் பேரே", நிக. சூ. 7: 25
பூண்	கை வளையல்	"சுடர்விடு பசும்பூண் சூர்ப்பமை முன்கை", புறம். 153: 3
பொன் திணித்தல்	பொன் வளை அணிதல்	"ஏத்தி இறைஞ்சினான், பொன் திணிந்த பொரு இல் தடக் கையால் நின்று வாங்கி", கம்ப. 2106 : 1-3

மணி சுடர்தல்	மணி வளை ஒளி வீசல்	"சூடகத் தளிர்க்கை மற்றைச் சுடர் மணித் தடக்கை பற்றி", கம்ப. 783 : 2
வண்டு	வளையல்	"வண்டு பொரேரென எழ வண்டு பொரேரென எழும்", பரி. திர. 1: 30; "பொன்தொடி தளிர்க்கை சங்கம் வண்டொடு புலம்பி ஆர்ப்ப", கம்ப. 936 : 1-2; "நாகச் சிரம் செய் நூபுரமும் வண்டும் சிலம்பொடு சிலம்பி ஆர்ப்ப", கம்ப. 935 : 1-2
வயிரச் சரிகள்	வயிர வளைகள்	"பொருவில் வயிரச் சரிகள் பொன்னரை ஞாண் புனை சதங்கை தெருவிலொளி விளங்கவளர் திருவிளையாட் டினிலமர்ந்தார்", திருத். 3685 : 3 - 4
வெள்ளி வள்ளி இறை செறிதல்	வெண்ணிறச் சங்கு வளையல் முன் கையில் செறிதல்	"வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத் தோள்", நெடு. 36
வளை	முன் கையில் அணியும் கையணி	"பிறை வனப்பு இழந்த நுதலும் யாழநின் இறைவரை நில்லா வளையும்" நற். 263 : 2; "வளையுடைத் தனையதாகிப் பலர் தொழச் செவ்வாய் வானத்து", குறுந். 307 : 1-2; "வளையுடைக் கையிற் சூலமேந்தி", சிலப். 12 : 60; "குரவம் நாறிய குழலினார் வளை கொள்வதே தொழில் ஆகிநீர் இரவும் இம்மனை அறிதிரே", தேவா. சுந்தர. 25 : 6 : 1 - 2; "தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும் பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும் சூல மும் தொக்க வளையுமுடைத் தொன்மைக் கோலமே" திருவாச. திருக்கோத். 18: 1 - 4; "மானேர் கலை வளையுங் கவர்ந்து உளங் கொள்ளை கொள்ளவழக் குண்டே", திருவி. 66: 1 - 2
அணி வளை	அழகிய வளை	"அணி வளை முன்கை ஆயிதழ் மடந்தை", அகம். 361 : 4
அறையார் அணி வளை	அறுத்துச் செய்யப் பட்ட அழகிய வளையல்	"உற்ற குறையை உரைப்பதாம் - தெற்ற அறையார் அணிவளையாய்! தீர்தலுறுவார் மறையார் மருத்து வர்க்கு நோய்", பழ. நா. 133 : 2 - 4
அம்கோல் வளை	அழகான வளையல்	"செம்பியன் பொன்னணிந்த அங்கோல் வளையார் பாடி யாடும் அணிதில்லை அம்பலத்துள் எங்கோனீச னெம்மி றையை யென்று கொலெய்துவதே", திருவி. 202: 2 - 4
அரம் போழ் அவ்வளை	அரத்தால் பிளக்கப் பட்ட அழகிய வளை	"அரம் போழ் அவ் வளை பொலிந்த முன்கை", அகம். 1 - 2 ; "அரம் போழவ் வளைக் குறுமகள் நரம்பார்த் தன்ன தீங்கிள வியளே", ஐங். 185 : 3 - 4; "பட்டிமை யொழுக்கிற் பலர்தோய் சாயல் அரம் போழவ் வளை மகளிர் மனத்தின்", பெருங். 1 : 50 : 9 - 10; "அரம் போழ் அவ்வளை அணிந்த முன்கை", பெருங். 2 : 3 : 69
கடற் கோடறுத்த அரம் போழவ் வளை	கடலில் பிறந்த சங்கை அறுத்துப் பின்னர் ஈர் வாளாற் போழ்ந்து செய்யப்பெற்ற வளை	"கடற்கோ டறுத்த அரம்போழவ் வளை ஒண்டொடி மடவரற் கண்டிகுங் கொண்க", ஐங். 194: 1 - 2
வாளரந்துமித்த வளை	கூரிய அரத்தால் அறுத்தெடுத்த வளை	"வேளாப்பார்ப்பான் வாளரந் துமித்த வளைகளைந் தொழிந்த கொழுந்தின்அன்ன", அகம். 24 : 1 - 2
ஆய்வளை	நுண்ணிய வினை யமைந்த வளையல்	"ஆய்வளை நல்லாய் இது நகையாகின்றே மாமலை வெற்பனோய் தீர்க்க வரும் வேலன்", சிலப். 24: 12: 1 - 2; "வாயா கின்றன வந்தித் தேத்தி ஆய்வளை நல்லா டன்னுழைச் சென்று செங்கோல் கோடியோ செய் தவம் பிழைத்தோ", மணி. 28 : 186 - 188; "புல்லினன் றேவியைச் செல்கென விடலும் கோயில் குறுக ஆய் வளை

		யணுகலும்", பெருங். 4 : 13 : 93 - 94; "தாயுந் தவ்வையுந் தம்மொடு பயின்ற ஆய்வளை மகளிரு நிகழ்ந்ததை யறிந்து சீரின மதித்துச் சிற்றின மொரீஇப்", பெருங். 5: 8: 129 - 131; "தேற்றுவாய், நீ உளையாக, தேறி நின்று ஆற்றுவேன், நான் உளனாக, ஆய்வளை தோற்றுவாள் அல்லள்", கம்ப. 4240 : 1 - 3; "அனையன் உள்ளமும் ஆய்வளையாய்! அலர் மனையின் வாயில் வழியினை மாற்றினால்", கம்ப. 4310 : 1 - 4; "அந்நதி முழுதும் நாடி, ஆய்வளை மயிலை, யாண்டும் சந்நிதி உற்றிலாதார்", கம்ப. 4623 : 1 - 3
அரம்போழ்ந்து அறுத்த இலங்கு வளை	சங்கு வளை	"அரம்போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்குவளை", மது. 316
கோடு ஈர் இலங்கு வளை	வளைந்த சங்கு வளையல்	"கோடுஈர் இலங்கு வளை நெகிழ", குறுந். 11: 1
இலங்கு ஏர் எல்வளை	விளங்கும் அழகினை உடைய ஒளி பொருந்திய வளை	"இலங்கு ஏர் எல்வளை இறை ஊரும்மே", கலித். 7: 15
இறைவளை	முன்கை வளையல்	"இறைவளை நல்லாயிது நகையாகின்றே கறிவளர் தண்சிலம்பன் செய்த நோய் தீர்க்க", சிலப். 24: 11: 1 - 2; "அறைபோய் நெஞ்சம் அவன்பால் அணுகினும் இறைவளை முன்கை ஈங்கிவன் பற்றினும்", மணி. 18: 130 - 131; "நவையறு நாத னல்லறம் பகர்வோர் உறையும் பள்ளிபுக் கிறைவளை நல்லாள் கோவலன் றாதை மாதவம் புரிந்தோன்", மணி. 28 : 71 - 73; "பிறை யது காணாயிறைவளை முன்கை", பெருங். 1 : 3 : 165; "கணையுளங் கழியக் கவினழி வெய்தி இறைவளை நில்லார் நிறைவரை நெகிழ", பெருங். 2 : 7 : 56 - 57; "நிறையப்பூத் தணிந்து வண்டும் தேன்களும் நிழன்றுபாட இறைவளைத் தோளிமற்றென் தோழியீதென்று சேர்ந்து", சீவக. 1270 : 1 - 2
இறையார் வளை	முன்கை வளையல்	"மறையார்மரு கன்மகிழ் வாயிவளை இறையார் வளை கொண்டெழில் வல்வினையே", தேவா. திருஞா. 2 : 18 : 3 : 3 - 4
இறையுருவக்கன வளை	முன்கை வளையல்	"இறையுருவக் கனவளையாள் இடப்பாகன்காண்", தேவா. திருநா. 6: 24: 6: 5-6
எல்வளை	ஒளிவிடும் வளையல்	"இறையே எல்வளை கொண்டு நின்றதுவே" ஐங். 165: 4; "வாளரம் பொருத கோணேர் எல்வளை அகன்தொடி செறித்த முன்கை" நற். 77 : 9-10; "நின்சாரல் ஊழுறு கோல்போல் எல்வளை யுருபவால்" கலித். 48: 10-11; "சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற எல்வளை மகளிர் மணிவிளக்கெடுப்ப", சிலப். 4 : 18 - 19; "வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும் எல்வளை வாராய் விட்டகன் றனையோ", மணி. 8 : 23 - 24; "பல்கலன் கொண்டு பலரறியாமல் எல்வளை யாளோ டரிபுரமெய்திப் பண்டக் கலம்பகர் சங்கமன் றன்னை", மணி. 26 : 21 - 23
இறை ஏர் எல்வளை	கையிலுள்ள அழகிய வளை	"மாண் நலம் இழந்த இறை ஏர் எல்வளைக் குறுமகள் பிறை ஏர் திருநுதல் பாஅய பசப்பே", நற். 167: 8 - 10; "என் இறை ஏர் எல்வளை நெகிழ்ந்து ஓடும்மே", ஐங். 20 : 4 - 5; "இறை ஏர் எல்வளை கொண்டு நின்ற துவே", ஐங். 165 : 4

இறை கேழ் எல்வளை	முன் கையில் செறிவாக அணிந்த ஒளி மிக்க வளையல்	"இறைகேழ் எல்வளை நீங்கிய நிலையே", ஐங். 140: 3
கோடீரெல் வளை	சங்கினை ஈர்ந்து செய்யப்பட்ட வளையல்	"கோடீரெல்வளைக் கொழும்பல் கூந்தல்", ஐங். 196: 1
திருந்தேர் எல்வளை	திருந்திய அழகு அமைந்த ஒள்ளிய வளை	"மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரென்போர் அல்லன் மாக்கட் கில்லது நிரப்புநர் திருந்தே ரெல்வளை செல்லுல கறிந்தோர்", மணி. 23 : 132 - 134
திருந்து கோல் எல்வளை	திருந்திய திரட்சியை உடையதாகிய ஒளியினையுடைய வளை	"திருந்துகோ லெல்வளை வேண்டி யான் அழவும்", நற். 136: 1
ஒளிவளை	ஒளி பொருந்திய வளை	"வச்சிரத் தடக்கை யமரர் கோமான் உச்சிரப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை", சிலப். 23 : 50 - 51; "ஒற்றொருவர் போல உறங்கு வேன்கை ஒளிவளையை ஒன்றொன்றா எண்ணுகின்றார்", தேவா. திருநா. 6: 13: 2: 3 - 4; "உய்யாதென் ஆவி ஒளி வளையும் மேகலையும் உய்யாது உடம்பழிக்கும் ஒண்திதலை", 11ஆம் திரு. 606: 1 - 2; "கவவுறு காதலிற் கண்ணுற வருஉம் உவவுறு மதிமுகத் தொளிவளை முன்கைக்", பெருங். 2 : 16: 10 - 11; "ஒடித்தனன் வெரிநை வீழ்ந்தார், ஒளிவளை மகளிர் எல்லாம்", கம்ப. 401 : 7 - 8
கடற்கோடு வளை	கடலில் உள்ள சங்கை யறுத்துச் செய்யப்பட்ட நெருங்கிய வளை	"கடற்கோடு செறிந்த வளை வார் முன்கை", ஐங். 191 : 1
கைவளை	கைகளில் அணியும் வளையல்	"கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன் வாரா தமையினுமமைக சிறியளவு முளவீண்டு விலைஞர் கை வளையே", குறுந். 117 : 4 - 6; "கைவளை யாழி தொய்யகம் புனை துகில் எல்லாங் கவருமியல் பிற்றாய்த் தென்னவன்", பரி. 7 : 46 - 48; "மைக்கொள் கண்ணியர் கைவளை மால்செய்து வெளவவே நக்கராயுல கெங்கும் பலிக்கு நடப்பதே", தேவா. திருஞா. 2: 3: 5: 3 - 4; "மைதவழுமா மிடறன் மாநடமதாடி கைவளை யினாளொடு கலந்த பதியென்பர்", தேவா. திருஞா. 2 : 29: 4: 1 - 2; "கைவளை மாதர் களைந்து சென்றீயென", பெருங். 1 : 35 : 126
கையவளை	கையில் அணியும் வளையல்	"கையவளை மையகுழல் ஐயரிய வாட்கண் நையுமிடை வெய்யமுலை நங்கையொரு பார்ப்பான்", சீவக. 2017 : 1 - 2
கோல்வளை	திரட்சியையுடைய திரண்ட வளையல்	"சாலியரிசி தம்பாற் பயனொடு கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப", சிலப். 16 : 27 - 28; "கொண்ட நல்வாயு இருவர்க்கும் குழறிடில் கொண்டது மில்லையாம் கோல் வளையாட்கே", திருமந். 483 : 3 - 4; "கூற்றானைக் கூற்று தைத்துக் கோல்வளையாள் அவளோடுங் கொகுடிக் கோயில்", தேவா. சுந்தர. 33 : 2: 3 - 4; "குருமணிகள் கொழித்திழிந்து கழித்திழியும் திரைவாய்க் கோல் வளையார் குடைந்தாடும் கொள்ளிடத்தின் கரைமேல்" தேவா. சுந்தர. 36: 7 : 5 - 6; "காற்றானே கார்முகில் போல்வதோர் கண்டெத்தெம் கூற்றானே கோல்வளை யாளையோர் பாகமாய்", தேவா. சுந்தர. 69 : 8 : 1 - 2; "குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல் வளையாள் நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்", திருவாச. திருத்தெள். 20: 1 - 2;

		"குறையாப் பலியிவை கொள்க என் கோல் வளையும் கலையும் நிறையாக் கொண்டாயினிச் செய்வ தென்", 11ஆம் திரு. 799 : 1 - 3; "வெந்து விழும் உடற் பிறவி மெய்யென்று வினை பெருக்கிக் கொந்து குழல் கோல்வளையார் குவிமுலை குலைமேல் வீழ்வே ணைப்", திருவாச. அச்சோ. 6 : 1 - 2; "கூற்றும் பொருளும் போற் காட்டியென் கோல் வளையைக் கூற்றின் பொருள் முயன்ற குற்றாலன்", 11ஆம் திரு. 655 : 1 - 2; "குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்து எழிலாக வைத்தேக வேண்டா கழலார்ப்பப் பேரிரவில்", 11ஆம் திரு. 94 : 1 - 2; "கோல்வளை மகளிர் கொட்டையைச் சூழ்ந்த'', பெருங். 1 : 42 : 14; "குழைகொள் வாள் முகத்துக் கோல்வளையைக் காணான் குழைந்தழுகின்ற அழகன் சொல்லு மணிசெய் கோதை காமமும் கண்டும் கேட்டும்", சீவக. 1593 : 1 - 2
சங்க வளை	சங்கு வளையல்	''சங்க வளைக் குயிலைத் தழீஇ நின்றார், அம் கணனுக்கு உரியார் உளர் ஆவார்", கம்ப. 1255 : 1 - 2
சரிவளை	நழுவும் வளை	"பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை அரியஇவ்வி யோகம் அடைந்தவர்க்கு அல்லது சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை உருவித் தழுவ ஒருவர்க்கு ஒண்ணாதே", திருமந். 831: 1 - 4
சில் வளை	சில வளை	"நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள்", நற். 90: 9; "சில்வளைப் பல்கூந்தலள்", நற். 198 : 8; "சில்வளை விறலியும் யானும்'', புறம். 60: 5; "செல்லாமோ தில் சில்வளை விறலி'', பதிற். 57 : 6; "செறித்தாய்க்கு இவைபுகழ் ஆகின்ற கண்டிவள் சில்வளையும் பறித்தாய்க்கு இது பழி ஆகுங்கொ" 11ஆம் திரு. 249 : 3 - 5
சிறுவளை	சிறிய வளை	"சிறுவளை விலையெனப் பெருந்தேர் பண்ணிஎம் முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே", நற். 300 : 5 - 6
சூர்ப்புறு கோல் வளை	வளைவு பொருந்திய திரண்ட வளை	"சூர்ப்புறு கோல்வளை செறித்த முன்கைக் குறை யறல் அன்ன இரும்பல் கூந்தல்", அகம். 142 : 17 - 18
சூழ்வளை	சூழ அணியும் வளையயல்	''வேழமுகத்து விநாயகனை உள்ளுறுத்துச் சூழ் வளைக்கைத் தொண்டை வாய்க் கெண்டையொண் கண்", 11ஆம் திரு. 300 : 41
செம்பொற் வளை	செம் பொன்னாற் செய்த வளையல்	"சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை பரியகம் வால் வளை பவழப் பல்வளை அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து", சிலப். 6 : 92 - 94
செய்வளை	செய்யப்பட்ட வளை	"மைவரை மீமிசை மகளிர் போலச் செய்வளை மகளிர் செய்குன் றேறினர்", பெருங். 2 : 7 : 30 - 31
செறிவளை	செறிவாக அணியப் படும் வளையல்	"பூவலூட்டிய புனைமாண் பந்தர்க் காவற் சிற்றிற் கடி மனைப் படுத்துச் செறிவளை யாய்ச்சியர் சிலருடன் கூடி", சிலப். 16 : 5 - 7; ''செறி வளை மகளிர் செப்பலு முண்டோ வனைய தாயினும் யானென்று கிளப்பல்'', மணி. 4 : 110 - 111; "வஞ்ச கிளவி மாண்பொடு தேர்ந்து செறிவளை நல்லார் சிலர் புறஞ் சூழக் குறுவியர் பொடித்த கோலவாண் முகத்தள்" மணி. 18 : 38 - 40; ''செறிவளையாய் நீ விரையல் குல நலம் கல்வி மெய்யாம்", 11ஆம் திரு. 253 : 1 - 2
துணி கதிர்வளை	தெளிந்த கிரணம் வீசும் வளைகள்	"துணிகதிர் வளை முன்கைத் தொகுவிரல் செங்காந்தள் மணியரும்பு மலரங்கை குலிகமார் வனப்பினவே" சீவக. 170 : 3 - 4
தொகு வளை	வளை	"தொகு வளை முன்கை மடந்தை நட்பே", குறுந். 15: 6

நல்வளை	சிறப்பான வளை	"கொடுங்கழிச் சேர்ப்பன் அருளான் எனத் தெளிந்து கள்ள மனத்தான் அயல் நெறிச் செல்லுங்கால் நல் வளை சோர நடந்து", ஐந். எழு. 62 : 2 - 4
நியர் வளை	நிகர் வளை	"நியர் வளை முன்கையாள் நேரிழை அவளொடும்", தேவா. திருஞா. 3: 24: 4: 2
நிரை வளை	முன்கையில் வரிசை யாக அணியும் வளையல்	"நிரைவளை முன்கை நேரிழை மகளிர்", குறுந். 335: 1; "நிரை வளை முன்கை வருந்தலோ விலலே", ஐங். 422 : 4; "நிரைவளை முன்கை பற்றி", புறம். 255 : 5; "வினைப்பகை யாயின தீர்க்கும் விண்ணவர் விஞ்சையர் நெஞ்சில் நினைத்தெழு வார்துயர் தீர்ப்பார் நிரை வளை மங்கை நடுங்க", தேவா. திருஞா. 2 : 69 : 2 - 3; "நில்லாதே பல்லூரும் பலிகள் வேண்டி நிரை வளையார் பலிபெய்ய நிறையுங் கொண்டு", தேவா. திருநா: 6: 13: 8: 1 - 2; "நிரை வளை மகளிர் நீர்குடை வொரீஇப்" பெருங். 1 : 40 : 106; "நீர்மையால் உணர்தி ஐய! நிரை வளை மகளிர்க்கு எல்லாம் வாய்மையால் உவமை ஆக", கம்ப. 4480 : 1 - 3
நிறைந்து ஆர் வளை	அழகு நிறைந்து பொருந்தி இருக் கின்ற வளையல்	"கல்லாத் துணையார் தாம் கைப்பித்தல் சொல்லின் நிறைந்தார் வளையினாய்! அஃதால் எருக்கு மறைந்தியானை பாய்ச்சி விடல்", பழ. நா. 63 : 2 - 4
நெறிநீர் வளை	கடலில் பிறந்த சங்கு வளையல்	"நெறிநீர் வளையும் நிழல் நித்திலமும் பொறிநீ ரபுனைந் தெழுதிப் புகழும் வெறிதா ரவன்எவ் வழியே கினன்நீர்", சீவக. 1522 : 1 - 3
நேர்வளை	நேரிய வளையல்	"வாரா தவணுறை நீடினேர் வளை இணையீ ரோதி நீயழத் துணை நனி யிழக்குவென் மடமையானே", ஐங். 269 : 3 - 5; "தாழருவி நாடன் தெளிகொடுத்தான் என்தோழி நேர்வளை நெஞ்(சு) ஊன்று கோல்", ஐந். எழு. 11 : 3 - 4; "நெட்டிருங் கூந்தல் ஆட நேர் வளை முன்கைப் பற்றிக்", சீவக. 835 : 3
பல்வளை	பலவிதமான வளையல்	"பாடன்மறை சூடன்மதி பல்வளையொர் பாகமதின் மூன்றொர் கணையால்", தேவா. திருஞா. 3 : 73 : 1 : 1 - 2; "ஆடுகொம் பன்ன வம்மென் மருங்குற் பாடகச் சீறடிப் பல்வளை மகளிரைப்", பெருங். 3 : 9 : 31 - 32; "பண் ஒன்று பாடலது ஒன்று பல்வளைக்கை மண் ஒன்று மெல்விரலும் வாள் நரம்பின் மேல் நடவா", சீவக. 735 : 1 - 2
பவழப் பல்வளை	பலவாகிய பவழ வளையல்கள்	"சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை பரியகம் வால் வளை பவழப் பல்வளை அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து", சிலப். 6 : 92 - 94
பவள வளை	செந்நிறமுடைய பவளத்தால் ஆன வளையல்	"பவள வளை செறித்தாட் கண்டு அணிந்தாள், பச்சைக் குவளை பசுந்தண்டு கொண்டு கல்லகாரப் பூவால் கண்ணி தொடுத்தாளை", பரி. 11 : 101 - 102
புனை வளை	புனையப்பட்ட வளையல் அணியும் மகளிர்	"காந்தண்முகி ழன்ன மெல்விரல் காந்தட் பூந்துடுப் பன்ன புனை வளை முன்கை அன்னத்தன்ன மென்னடை யன்னத்துப்", பெருங். 4 : 11 : 78 - 80
பெய்வளை	அணியப்படும் வளை	"ஆதி திறம்பாடி அந்தம் ஆமாபாடிப் பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்!", திருவாச. திருவெம். 14: 6 - 8; "பின்னை நின்று எண்ணுதல் பிழை அப்பெய்வளை தன்னை நன்கு அளிப்பது தவத்தின் பாலதே", கம்ப. 7368: 3 - 4; "பெண்ணினுக்கு அருங்கலம் அனைய பெய்வளை கண் என, பொழிந்தது கால மாரியே", கம்ப. 4167 : 5 - 8

பொன்னியல் ஆய்வளை	பொன்னால் இயன்ற அழகிய வளை	"பொன்னிய லாய்வளைக் கன்னிய ரசைப்பப்", பெருங். 1 : 34 : 219
மணியார் வளை	மணிகள் பதித்த வளையல்	"துணையில் தோகை மஞ்ஞை ஈயற்கிவரும் வகைபோல் மணியார் வளைசேர் முன்கை வலனும் இடனும் நோக்கி", சீவக. 925 : 1 - 2
வரி வளை	கீற்றுக்களையுடைய வளையல்	"திரிபுர மெரி செய்த செல்வர் சேர்விடம் வரிவளை யவர் பயில் வைகல் மேற்றிசை வருமுகில் அணவிய மாடக் கோயிலே", தேவா. திருஞா. 3 : 18 : 7 : 2 - 4; "கொக்கியல் சுரிகுழல் வரிவளை யிளமுலை யுமை யொரு பங்கிய திருவுரு வுடையவர் பரசுவொடிரலை மெய்", தேவா. திருஞா. 3 : 84 : 3 : 1 - 2; "மன்னிய சீர் மறை நாவன் நின்றவூர்ப் பூசல் வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்", தேவா. சுந்தர. 6 : 11 : 1 - 2; "வனப்பார் நிறமும் வரிவளையும் நாணும் வனப் பார் வளர்சடையான் கொள்ள", 11ஆம் திரு. 618 : 1 - 2; "வரிவளை யரவமு மணிமுழ வரவமும் அரிவளர் கண் ணிய ரணிகல வரவமும்", சீவக. 124 : 1 - 2
இறையுறு வரிவளை	முன்கையில் பொருந்திய கீற்றுக் களை உடைய வளையல்	"இறையுறு வரிவளை யிசைகள் பாடிட அறையுறு கழலடி ஆர்க்க ஆடுவர்", தேவா. திருஞா. 3: 16: 7: 1 - 2
வரிதரு வளை	கீற்றுக்களையுடைய வளை	"எரிதரு முருவின ரிடபமதேறுவ ரீடுலா வரிதரு வளை யின ரவரவர் மகிழ்தர மனைதொறும்", தேவா. திருஞா. 3 : 86 : 3 : 2 - 3
வரிய வளை	கீற்றுக்களை உடைய வளையல்	"பரியதிரை யெரியபுனல் வரியபுலி யுரியதுடை பரிசை யுடையான் வரியவளை யரியகணி யுருவினொடு புரிவினவர் பரிவினகர் தான்", தேவா. திருஞா. 3: 68: 9: 1 - 4
வலம்புரி வளை	வலம்புரியை அறுத்துப் பண்ணின வளை	"பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து", நெடு. 141 - 142
வால் வளை	சங்கு வளையல்	"சில நிரை வால்வளைச் செய்யாயோவென", கலித். 14: 6; "சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை பரியகம் வால் வளை பவழப் பல்வளை அரிமயிர் முன்கைக்கு அமை வுற அணிந்து", சிலப். 6: 92 - 94; "கோப்பெருந்தேவி வால்வளை செறிய வலம்புரி வலனெழ மாலை வெண் குடைக்கீழ் வாகைச் சென்னி...வஞ்சியுட் புகுந்தனன் செங் குட்டுவனென்", சிலப். 27 : 252 - 256; "வால்வளை மகளிர் மணிநிலத் 'தமைந்த கால்வளர் சாலி யாய்பத வரிசிப்", பெருங். 1 : 43: 181 - 182; "வால்வளை மகளி ரொடு மைந்தரை யுழக்கி", பெருங். 1 : 44 : 82
எறிவால் வளை	ஒளி வீசும் வெள்ளிய வளையல்	"நெறிநா டியபோ யினள்நீடினள் கண்டு எறிவால் வளை கொண்டு வரும் இனியே", சீவக. 1525 : 3 - 4
வெள்வளை	வெள்ளிய சங்கு வளை	"விடமல்கு கண்டத்தான் வெள்வளையோர் கூறுடை யான் படமல்கு பாம்பரையான்", தேவா. திருஞா. 2 : 45 : 2 : 1 - 2; "புக்கடைந்த வேதியற்காக் காலற் காய்ந்த புண்ணியன்காண் வெண்ணகை வெள்வளை யாள ஞ்ச மிக் கெதிர்ந்த கரிவெருவ உரித்த கோன் காண்" தேவா. திருநா. 6 : 76 : 8 : 1 - 3; "துஞ்சல் பிறப்ப றுப்பான் தூய புகழ்பாடிப் புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூ சலாடாமோ", திருவாச. திருப்பொன். 4 : 5 - 6; "கச்சினர் கண்ணியர் கதிர் வெள்வளையினர்", பெருங். 1 : 34 : 122; "வெள்வளை முன்கை தோழியர் பற்றி", பெருங். 1 : 34 : 237; "வேந்துகாயினும் வெள்வளை யாயமோடு

		ஏந்தும் பூம்பொழில் எய்தியங் காடுதல்", சீவக. 1318 : 1 - 2; "விலங்கி, மெல்இயல், வெண் நகை, வெள் வளை இலங்கு நுண்இடை", கம்ப. 4313 : 1 - 3; "விஞ்சை யர் பாடலும், விசும்பின் வெள்வளைப் பஞ்சின் மெல் அடியினார்", கம்ப. 4535 : 1 - 3; "விரை நறுங்குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க முரசொடு சங்கம் ஆர்ப்ப", திருத். 106 : 3 - 5; "தலைசிறந்த வெள்வளை சொரிபவர் தழங்கு ஒலியும் அலை நெடுங்கடல் அதிர் ஒலிக்கு எதிர்ஒலி அனைய", திருத். 4004 : 3 - 4
வரிகொள் வெள் வளை	வரிகளைக் கொண்ட வெள்ளிய வளையல்	"வரிகொள் வெள்வளை யான் உமை நங்கை மருவி ஏத்தி வழிபடப் பெற்ற பெரிய கம்பனை", தேவா. சுந்தர. 65 : 3 : 5 - 7
மாசில் வெள்ளிச் சூர்ப்புறு கோல் வளை	வெள்ளியினால் செய்த வளைவான திரண்ட வளை	"நீர்த்திரள் கடுக்கும் மாசில் வெள்ளிச் சூர்ப்புறு கோல்வளை செறித்த முன்கை", அகம். 142 : 16 - 17
வெள்ளைப் புரிவளை	இடமாகவும் வல மாகவும் வளைந்து இருக்கும் வெண்ணிற சங்கு வளையல்	"விரிகதிர் வெண்மதியு மீன்கணமுமா மென்றே விளங்கும் வெள்ளைப் புரிவளையு முத்துங்கண் டாம்பல் பொதிய விழ்க்கும் புகாரே யெம்மூர்", சிலப். 7, பா. 5
வளைக்கை	வளையல் அணிந்த கை	"வரிவளைக் கைவாளேந்தி மாமயிடற் செற்றுக் கரிய திரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்", சிலப். 12: 9: 1 - 2; "மாதவி மகளு மாதவர்க் காண்டலும் எழுந்தெதிர் சென்றாங் கிணைவளைக் கையால் தொழுந்தகை மாதவன் துணையடி வணங்க", மணி. 24: 90 - 93; "வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில் துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகை நாள்", தேவா. திருஞா. 2: 47: 3: 1-2; "மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மடமானி பங்கயச் செவ்வி பாண்டிமா தேவி", தேவா. திருநா. 3: 120: 1: 1-3; "கூறேற்கக் கூறமர வல்லான் தன்னைக் கோல் வளைக்கை மாதராள் பாகன் தன்னை நீறேற்கப் பூசும் அகலத்தானை", தேவா. திருநா. 6: 3: 6: 3-5; "வளைக்கை நெருக்கி வாய்மிக் கெழுதரக்" பெருங். 1: 36: 68; "வரிவளைக் கையு மனமுமோட", பெருங். 4: 12: 124; "வேறுபடு வனப்பின் மும்மைய வானவை ஏர்ப்பொலி வளைக்கை யிரண்டேயா யினும்", பெருங். 4 : 12 : 204 - 205; "என் உங்கட்கு உள்ளம் இலங்கீர் வளைக் கையினீரே மன் இங்கு வாழ்வு தருதும் அவற்றானும் வாழ்மின்", சீவக. 2347: 1 - 2; "அந்நிலையான் பெயர்த்துரைப்பான் ஆய் வளைக்கை அணி இழையார் இந்நிலையானுடன் துயில்வார்", கம்ப. 5058: 1 - 3; "திணி கொள் தீ உற்றது, உற்றில, தேர்கிலார் அணி வளைக்கை நல்லார், அலமந்துள்ளார்", கம்ப. 5045 : 3 - 4
தொகுவளை முன்கை	பலவாகத் தொக்க வளையல் அணிந்த முன்கை	"சேயிலை வெள்வேல் விடலையொடு தொகுவளை முன்கை மடந்தை நட்பே", குறுந். 15 : 5 - 6
வளையோர்	வளையணிந்த மகளிர்	"முறைமையின் நகர நம்பியர் வளையோர் தம் முடன்", மணி. 19 : 24
வளையோள்	வளையணிந்த மகளிர்	"அல்லியங் கோதை கேட்குறு மந்நாள் இளையள் வளையோ ளென்றுனக் கியாவரும்", மணி. 10: 78 - 79; "இன்னதிவ் வியல்பெனத் தாயெடுத் துரைத்தலும் இளையள் வளையோ ளென்றுனக் கியா வரும் விளை

		பொரு ளுரையார் வேற்றுருக்கொள் கென", மணி. 26: 67 - 69
அணிவளை அணிதல்	அழகிய வளையல் அணிதல்	"துணைமலர்க் காந்தள் ஊழ்த்துச் சொரிவ போற் றோன்றி முன்கை அணிவளை நலத்தோடேக அங்ஙனமிருந்து நைவாள்" சீவக. 1742 : 3 - 4
அரம்போழ் அவ் வளை முன்கை அணிதல்	முன்கையில் அரத் தாற் பிளக்கப்பட்ட அழகிய வளையை அணிதல்	"அரம் போழ் அவ்வளை அணிந்த முன்கைச்", பெருங். 2 : 3 : 69
ஆய வெள்வளை வாய்விட்டு அரற்றல்	நுட்பமான வேலைப் பாடுடைய வெண்ணிறச் சங்கு வளையல்கள் வாய் திறந்து கத்துவது போல ஒலித்தல்	"தோயும் வெண்தயிர் மத்து ஒலி துள்ளவும் ஆய வெள்வளை வாய்விட்டு அரற்றவும்", கம்ப. 59: 1 - 2
வளையரவம்	வளையல்களால் உண்டாகின்ற ஆரவாரம்	"உரியோர்த் தரீஇ யுள்ளுவந் தீயும் தெரிவை மகளிர் வரிவளை யரவமும்", பெருங். 1 : 41 : 95 - 96
வளையாடுதல்	வளையல் அசைதல்	"மலைமடந்தை விளையாடி வளையாடு கரத்தால் மகிழ்ந்தவள்கண் புதைத்தலுமே வல்லிருளாய் எல்லா உலகுடன் தான்", தேவா. சுந்தர. 20 : 4: 1 - 3
வளை ஆர்த்தல்	கைவளை ஒலித்தல்	"கழலொலியுங் கைவளையும் ஆர்ப்ப ஆர்ப்பக் கடை தோறு மிடுபிச்சைக் கென்று செல்லுந்", தேவா. திருநா. 6: 68: 6: 5 - 6; "வாட்டடங் கண்மட மங்கை நல்லீர் வரி வளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்", திருவாச. திருப்பொற். 8 : 1 - 2; "தலைப்புனன் மூழ்குதலிலக்கண மாதலின் மணலிடு நிலைத்துறைத் துணைவளை யார்ப்பக்", பெருங். 1 : 42 : 122 - 123; "கூழையின் தாழ வளை யார்ப்பக் கைப்போந்து கேழ்கிளரும் அல்குலாம் தேருந்தி", 11ஆம் திரு. 300: 64; "அரும்கடி எழுந்த போழ்தின் ஆர்த்த வெள்வளை களாலும்", திருத். 168 : 1 - 2; "வளையார் முன்கை மலையாள் வெருவ வரையூன்றி முளையார் மதியஞ்சூடி யென்று முப் போதும்", தேவா. திருஞா. 2 : 61: 8: 1 - 2; "வளையார் முன்கை வையெயிற் றின்னகை இளையோர் குடைதலி னிரை கொளப் பெறாஅப்", பெருங். 1 : 41 : 24 - 25
வளை இறையுறுதல்	பொருந்திய கீற்றுக்களை யுடைய வளையலை முன்கையில் அணிதல்	"இறையுறு வரிவளை யிசைகள் பாடிட அறையுறு கழலடி ஆர்க்க ஆடுவார்", தேவா. திருஞா. 3: 16: 7: 1 - 2
வளை இறைக் கொள்ளுதல்	வளையல் முன் கையில் அணிதல்	"இறைக் கொண்ட வளையாளோடிருகூறா யொருகூறு மறைக் கண்டத் திறைஞரவர் மதிலெய் தசிலை வலவர்", தேவா. திருஞா. 3 : 64 : 4 : 1 - 2
வளை ஊர்தல்	முன்கையில் அணிந்த வளையல்கள் கழன்று விழுதல்	"வாடுபு வனப்பு ஓடி வணங்கு இறை வளை ஊர", கலித். 16 : 2
வளை ஒலித்தல்	வளை யொலித்தல்	"செல்வமுஞ் சிறப்பும் பல்லூழ் பாடிக்குராஅ நீழற் கோல்வளை ஒலிப்ப மாரஅங் குரவை மகிழ்ந்தனர் மறலியும்", பெருங். 2: 14: 39 - 41; "மிடையும் வெள் வளை புள்ளொடும் ஒலிப்ப", கம்ப. 463 : 3; "இளை யவன் தனை அழைத்து இடுதி, நீ என வளை ஒலி முன் கையாள் வாயின் கூறினாள்", கம்ப. 10029: 1 - 2

இறை நில்லா வளை ஓடுதல்	முன்கையில் கிடந்த வளையல்கள் கழலுதல்	"இறை நில்லா வளை ஓட, இதழ் சோர்பு பனி மல்க", கலித். 3 : 3
வளை நெகிழ்ந்து ஓடுதல்	வளை நெகிழ்ந்து போதல்	"ஈங்குநீர் அளிக்குங்கால் இறை சிறந்து ஒருநாள் நீர் நீங்குங்கால் நெகிழ்பு ஓடும் வளை எனவும் உள அன்றோ", கலித். 25 : 17 - 18
இறை ஏர் எல் வளை நெகிழ்ந்து ஓடுதல்	முன்கையில்செறிக்கப் பட்ட ஒளியையுடைய வளையல்கள் நெகிழ்ந்து கழன்று ஓடுதல்	"என் இறை ஏர் எல்வளை நெகிழ்பு ஓடும்மே"; ஐங். 20 : 4 - 5
வளை சிலம்புதல்	வளையல் ஒலித்தல்	"கையார் வளை சிலம்பக் காதார் குழையாட மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்", திருவாச. திருஅம்: 1 - 2
முன்கை வளை சூழ்தல்	முன்கைகளில் வளையல் சூழ அணிதல்	"சூழ்வளை முன்கைச் சுடர்குழை மாதர்", பெருங். 2 : 19 : 33
கடற்கோடு வளை செறித்தல்	கடலிலுள்ள சங்கை அறுத்துச் செய்யப்பட்ட நெருங்கிய வளையல் களை அணிதல்	"கடற்கோடு செறிந்த வளைவார் முன்கை", ஐங். 191 : 1
சூர்ப்புறு கோல் வளை செறித்தல்	வளைவு பொருந்திய திரண்ட வளையல் களை அணிதல்	"நீர்த்திரள் கடுக்கும் மாசில் வெள்ளிச் சூர்ப்புறு கோல்வளை செறித்த முன்கைக் குறையறல் அன்ன இரும்பல் கூந்தல்", அகம். 142 : 16 - 18
பவளவளை செறித்தல்	பவள வளையைக் கையில் அணிதல்	"பவளவளை செறிந்தாட்கண் டணிந்தாள் பச்சைக் குவளைப் பசுந்தண்டு கொண்டு", பரி. 11 : 101 - 102
வளை செறிதல்	வளையல் கழலாமல் இறுகியமைதல்	"பொய்கையூரன் கேண்மை செய்தின் புற்றனெஞ் செறிந் தனவளையே", குறுந். 61 : 5 - 6
வளை சேர்தல்	வளை அணிதல்	"வளை சேர்செங்கை மெல்விர லுதைத்த வெம்மை வெய் துறாது தன்மையிற் றிரியவும்", மணி. 7 : 48 - 49; "களையா வேட்கை கையுதிர்க் கொள்ளான் வளை சேர் செங்கை மணிமேகலையே", மணி. 20 : 83 - 84
மணியார் வளை சேர்தல்	மணிகள் பதித்த வளையல் அணிதல்	"துணையில் தோகை மஞ்ஞை ஈயற்கிவரும் வகைபோல் மணியார் வளைசேர் முன்கை வலனும் இடனும் நோக்கி", சீவக. 925 : 1 - 2
வளை சொரிதல்	வளையல்களை அணிதல்	"சில்வளை சொரிந்த மெல்லிறை முன்கை", அகம். 19 : 15
வளை தெரிதல்	வளையல்களைத் தேர்ந்தெடுத்துக் கையில் அணிதல்	"குஞ்சரம் அனையார் சிந்தை கொள் இளையார் பஞ் சினை அணிவார் பால்வளை தெரிவார்", கம்ப. 1558: 1 - 2
வளை தெளிர்த்தல்	வளை ஒலித்தல்	"திருந்து கோல் எல் வளை தெழிப்ப நாணுமறந்து", குறிஞ். 167
விலங்கரம் பொருத சங்கின் வெள்வளை தெளிர்த்தல்	வளைந்த வாளால் அறுத்துச் செய்யப் பட்ட சங்கு வளை யல்கள் ஒலித்தல்	"விலங்கரம் பொருத சங்கின் வெள்வளை தெளிர்க்கு முன்கை நலங்கிளர் பவள நன்பொன் விரல்மணி யாழி மின்னக்", சீவக. 2441 : 1 - 2
வளை இறைவரை நிற்காமை	முன்கை வளை நில்லாமல் கழன்று விழுதல்	"அனையள் என்று, அளிமதி பெரும! நின்இன்று! இறை வரை நில்லா வளையள்", கலித். 125 : 21 - 22

கோல்வளையை நிறைத்தல்	திரட்சி பொருந்திய வளையலை நிறைய அடுக்குதல்	"மிறைத்தான் வரை யாலரக் கன்மிகையைக் குறைத் தான் சடைமேற்குளிர் கோல்வளையை நிறைத்தா னெல்லிக் காவுணிலாயவனே", தேவா. திருஞா. 2 : 19: 8: 2-4
இறைகேழ் எல் வளை நீங்குதல்	செறிவாக அணிந்த ஒளிமிக்க.வளையல் கழன்று விழுதல்	"இறைகேழ் எல்வளை நீங்கிய நிலையே", ஐங். 140 : 3
இலங்கு வளை நெகிழ்தல்	வளை நெகிழ்தல்	"துறையணிந் தன்றவ ரூரேயிறையிறந் திலங்கு வளை நெகிழச் சாஅய்ப் புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே", குறுந். 50 : 3 - 5
இறைவளை நெகிழ்தல்	முன்கையில் அணிந்த வளை நெகிழ்தல்	"வளர்பிறை போல வழிவழிப் பெருகி இறைவளை நெகிழ்த்த வெவ்வ நோயொடு", குறுந். 289: 1 - 2; "மறையின் மணந்து ஆங்கே மருவு அறத்துறந்தபின் இறைவளை நெகிழ்பு ஓட, ஏற்பவும் ஒல்லும்மன்", கலித். 53 : 8 - 9; "இறைவளை நெகிழ்ந்த எவ்வ நோய் இவள் தீர", கலித். 127 : 19; "இறைவளை நெகிழ்ந்த நம்மொடு துறையும் துஞ்சாது கங்கு லானே", அகம். 250 : 13 - 14
கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்தல்	சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட முன் கையில் அணிந்த வளையல்கள் நெகிழ்தல்	"கோடு ஈர் இலங்கு வளை நெகிழ", குறுந். 11: 1
தோடு ஆர் எல் வளை நெகிழ்தல்	வளையல்கள் நெகிழ்தல்	"யானே தோடுஆர் எல்வளை நெகிழ", குறுந். 216: 8
நிரைவளை நெகிழ்தல்	நிரல்பட அணிந்த வளைகள் நெகிழ்தல்	"நீடலர் யாழநின் நிரைவளை நெகிழ", அகம். 197: 9
வளை பெய்தல்	வளை அணிதல்	"பெய்வளைக் கையாய்! பெருநகை யாகின்றே செய் வயல் ஊரன் வதுவைவிழவு", ஐந். ஐம். 26 : 1 - 2; "பெய்வளைக் கையாள் நம் பின்னை தானா மென்றே ஐயென்றா ளாயர் மகள்", சிலப். 17 : 16 : 4 - 5; "கேடி லியைக் கீழ்வேளூ ராளுங் கோவைக் கிறிபேசி மடவார் பெய் வளைகள் கொள்ளுங் காடவனைக் கஞ்சனூ ராண்ட கோவை கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே", தேவா. திருநா. 6: 90: 6: 5 - 8; "பிறைக் கொழுந்து அனைய நெற்றிப் பெய்வளை மகளிர் மெய்யை மறைத்தனர் பூணின்", கம்ப. 10303: 3-4
கோல்வளை பெய்தல்	கையில் வளையல் அணிதல்	"குறிக் கொண்டு இவள் பெய்த கோல்வளையே வந்து கோள் இழைத்தீர்", 11ஆம் திரு. 247 : 1 - 2
வளை பொலிதல்	வளையல் பொலிதல்	"வளைபொலி முன்கை வருந்தப் பற்றி தளையவிழ் தாரோன் வலமுறை வந்து", பெருங். 2 : 3 : 108 - 109
அரம்போழ் வளை பொலிதல்	முன்கையில் அரத்தாற் பிளக்கப்பட்ட அழகிய வளையல்கள் பொலிதல்	"அரிபெய் சிலம்பி னாம்பலந் தொடலை அரம்போ ழவ் வளைப் பொலிந்த முன்கை", அகம். 6 : 1 - 2
வளைச்சரி கைக்கு அணி கொள்ளுதல்	கடகம் கையை அழகு செய்தல்	"கைக்கு அணிகொள் வளைச் சரியும்", திருத். 3696 : 5
அரிமயிர் முன் கைக்கு அமைவுற அணிதல்	சித்திரச் சூடகம், செம் பொன் கை வளை, பரியகம் போன்றவற்றை முன்கைக்கேற்ப அணிதல்	"சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை பரியகம் வால் வளை பவழப் பல்வளை அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து", சிலப். 6 : 92 - 94
கோல் ஏர் எல்வளை அகன் தொடி செறித்தல்	வளைந்த அழகிய ஒளியை உடைய வளையும் அகன்ற தொடியும்' அணிதல்	"வல்லோன் வாளரம் பொருத கோல் ஏர் எல்வளை அகன் தொடி செறித்தமுன்கை ஒண்ணுதல்", நற். 77: 8 - 10

3. 8. இடை

இடை அணியான ஒட்டியாணம் என்ற நகை இன்றும் தமிழர்க்குத் தெரிந்த நகைதான். எனினும் அதனை அணிந்து கொள்ளும் பழக்கம் பொதுவாக இன்று இல்லை. இதனைப் போன்றே உதரபந்தனம் போன்ற நகைகள் பற்றிய ஒரு சில குறிப்புகள் மட்டும் அன்று காணப்படும் நிலை அன்றும் இடையணி என்பது மிகுதியாக இருந்திருக்கவில்லையோ என்ற எண்ணத்தைத் தருகிறது.

அ. அணிகலன்கள்

ஒளிகதிர் தரளக் கோவை உதர பந்தனம்	ஒளிவீசும் முத்தால் செய்யப்பட்ட உதரபந்தனம்	"ஒளிகதிர் தரளக் கோவை உதர பந்தனத்தின் மீது தளிர் ஒளி துளும்பு முத்தின் அன்ன சன்ன வீரத்தைச் சாத்தி'', திருத். 3115 : 1 - 4
ஒற்றை மாமணி உமிழ் உதர பந்தனம்	ஒற்றையாகப் பெரிய மாணிக்கம் ஒன்றை ஒளி விளங்கப் பதித்த உதரபந்தனம்; திரு வயிற்றின் மேலிடும் அணி	"சுற்றும் நீள் தமனியச் சோதி பொங்க, மேல் ஒற்றை மாமணி உமிழ் உதரபந்தனம் மற்றும் ஓர் அண்டமும் அயனும் வந்து எழ பொன் தடந் தாமரை பூத்த போன்றதே'', கம்ப. 1220: 1 - 4
கலம்	இடையணி	"கலம் பெறா நுசுப்பினள் காதல்நோக்க மொடு", சிலப். 8: 91
குறும்பொறி	இடையணிகளுள் ஒன்று	"குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல் மருங்கில் கட்டிய நிலனேர்பு துகிலினன்'', திருமுருகு. 213 - 214
பட்டிகை	அரைப்பட்டிகை	"முகை விரி சுடர் ஒளி முத்தின் பத்திவாள் தொகை விரி பட்டிகைச் சுடரும் சுற்றிட", கம்ப. 1223 : 1 - 2
பூண்	இடை அணி	"நுண்பூண் வசிந்து வாங்குநுசுப்பின் அவ்வாங்கு உந்தி'', புறம். 383 : 11 - 12

3.9. அரை

அரையில் ஆடையுடுத்துதல் என்பது தொன்று தொட்டே தமிழரிடம் காணப்படும் பழக்கமாக அமைகிறது. மானம் காக்கவா பாதுகாப்பிற்காகவா அழகுணர்ச்சி காரணமாகவா போன்ற பல கேள்விகள் இதன் தொடக்கம் குறித்து எழுந்தவை. அழகுணர்ச்சி தான் காரணம் என்பதற்கு, மிகுதியாக வாய்ப்பு உண்டு. எனினும் பின்னர் மானம் காத்தல் முக்கியத்துவம் பெற்றது. இந்த இடையாடை உடுத்தும் நிலையிலும் ஒப்பனை உணர்வும் அழகுணர்வும் இணைந்தே காணப்படுகின்றன. தமிழரின் கலையுணர்வும் இங்கு வெளிப்படுகிறது. ஒப்பனையுணர்வு காரணமாகப் பலவித ஆடைகளையும் காண்கிறோம்.

அணிகளைக் கொண்டு செய்யும் அரை ஒப்பனை முறை குழந்தைகள் சார்ந்த ஒரு சில தவிர இன்று இல்லை. ஆயின் நம் முன்னோர் அணிந்த அரையணிகள் மிகுதி. இவற்றையெல்லாம் இச்சொற்கள் சிறப்பாகக் காட்டுகின்றன.

அ. அணிகலன்கள்

திருந்திழை	திருத்தமாகச் செய்யப் பட்ட அணிகலன்	"அருந்திற லமைச்ச னறிவி னாடித் திருந்திழை யல்குற் றேவியைப் பிரிப்ப", பெருங். 5: 3: 12 - 13
தெரியிழை	சிறப்புடைய அணிகலன்	"உருவினு முணர்வினு மொப்புமை யாற்றாத் தெரியிழை யல்குற் றேமொழிக் குறுமகள்", பெருங். 3: 5: 72-73
பாசிழை	பசிய அணிகலன்	"காவினுட் காவலன் கலங்கக் கோயிலுட் பாசிழை யல்குற் பாவையும் புலம்பித்", பெருங். 3: 7: 71-72; "வாலிழைப் பணைத்தோள் வாசவ தத்தைக்கும் பாசிழை யல்குற் பதுமா பதிக்கும் சீர் நிறை கோல் போற்றா னடு வாகி", பெருங். 4: 5: 42-44; "பாசிழை யல்குற் றாய ரெல்லாம்", பெருங். 4: 10: 44; "வீயாக் கற்பின் விரிசிகை யென்னும் பாசிழை யல்குற் பாவையைத் தழீஇ", பெருங். 4: 15: 48 - 49; "கந்து கொல் கடாக்களி யானை மன்னவன் பைந்தொடிப் பாசிழைப் பரவை ஏந்து அல்குல்", சீவக. 186: 2-3; "பாசிழை பரவை அல்குல் பசுங்கதிர்க் கலாபம் வீங்கக் காசுகண் பரிய வைகிக் கடன்தலை கழிந்த பின்னர்த்", சீவக. 386: 1-2; "பட்டதென் நங்கைக் கென்னப் பாசிழை பரவை அல்குல்", சீவக். 904: 1; "நனிவருந்தி, நலம்குடிபோயிட பனிவரும் கண் ஓர் பாசிழை அல்குலாள்", கம்ப. 1090 : 1 - 2; "கோசிகத் துகில் உற்ற கொழுங்கனல் தூசின் உத்திரிகத் தொடு சுற்றுறா, வாச மைக் குழல் பற்ற மயங்கினார் பாசிழை பரவைப் படர் அல்குலார்", கம்ப. 5967: 1 - 4
மாணிழை	மாட்சிமைப்பட்ட அணிகலன்	"வீணை வித்தகம் விளங்கிழை கற்கென மாணிழை அல்குன் மகள் நலங்காட்டி", பெருங். 2: 1: 81 - 92
இழையணிதல்	மகளிர் இடையில் மேகலை அணிதல்	"உழையிற் பிரியிற் பிரியும் இழையணி யல்குலென் தோழியது கவினே", கலித். 50 : 23 - 24
இழையணிப் பொலிதல்	இடையில் அணிந்து இருந்த அணி பொலிவு பெற்று விளங்குதல்	"இழையணிப் பொலிந்த வேந்துகோட்டல்குல் மட வர லுண்கண் வாணுதல் விறலி", புறம். 89 : 1 - 2
இழை வளர்தல்	இழை அணிந் திருத்தல்	"இழை வளர் துகில் அல்குல் அரிவை யோடு ஒரு பகமலர்ந்த பிரான்", தேவா. திருஞா. 3 : 90: 3: 5 - 6

திருந்திழை அணிதல்	திருத்தமான அணிகலன் அணிந்திருத்தல்	"பெருந்தகை யண்ணல் பிடிமிசை யேற்றித் திருந்திழை யணிந்த பரந்தேந் தல்குல்", பெருங். 1:45: 1 - 2
திருந்திழை துயல்வுக் கோட்டசைதல்	திருத்தமுறச் செய்த அணிகலன்களை அசைதலையுடைய இடையின் கீழ்க்கட்டுதல்	"தித்தி பரந்த பைத்தக லல்குற் றிருந்திழை துயல்வுக் கோட்டசைத்த பசுங்குழைத்", குறுந். 294: 5 - 6
மணியும் பவழமும் அணிபெற நிரை இய செம்பொற் பாசிழை செறிய வீக்குதல்	இடையணி; மாணிக்கமும் பவழமும் அழகுண்டாக நிரல்படக் கோத்த செம்பொன்னால் ஆன பசிய மேகலை அணிகலனைப் பொருந்தக் கட்டுதல்	"மணியும் பவழமு மணிபெற நிரைஇய செம்பொற் பாசிழை செறிய வீக்கிய பைந்துகிலணிந்த பரவை அல்குலார்", பெருங். 3: 5: 15-17
கலம்	அரையணி	"கலம்புரி அகல் அல்குல் தாயர் தவ்வையார் சிலம்புபுரி திருந்தடி பரவச் செல்பவள்", சீவக. 184: 1 - 2
ஒளிர் பல்கலன் பூட்டுதல்	பல அணிகளை அணிதல்	"கடல்நுரைத் துகில் சுற்றி, கதிர்க் குழாம் புடை நிரைத்து ஒளிர் பல்கலன் பூட்டினான்", கம்ப. 7344 : 3 - 4
எரிமணிக் கலாபம்	ஒளி விளங்குகின்ற மணிகளையுடைய மேகலை	"எரிமணிக் கலாபமிட்ட விந்திர நீலமென்னும் ஒரு மணியுந்தி நேரே யொருகதிருமிழ்வதே போல்", சீவக. 2061 : 1 - 2
காசு விரி கலாபம்	ஒளிபரப்பும் மணிகள் மிக்க மேகலை	"ஆசானி வனென வருளிய வச்சொற் றூசார்ந்து துளும் புங் காசுவிரி கலாபத்துப் பைவிரி யல்குற் பாவாய் மற்றிது", பெருங். 1 : 48 : 106 - 108
பொற்கலாபம்	பொன்னால் ஆன அரையணி	"குறிஞ்சிப் பூங்கோதை போலும் குங்கும முலையினாள் தன் நிறைந்த பொற்கலாபந் தோன்ற நெடுந்துகில் விளிம்பொன் றேந்திச் செறிந்ததோர் மலரைக் கிள்ளித்", சீவக. 1568 : 1 - 3
மணிக் கலாபம்	மணியால் ஆகிய மேகலை	"வெம்முலைப் பாவை யல்குல்மிடை மணிக்கலாபம் வேய்த்தோள் செம்மலர்த் திருவின்சாயல்", சீவக. 606 : 3 - 4
வண்ணக் கலாபம்	பொலிவுற நின்ற அரையணி	"வட்டுடைப்பொலிந்த வண்ணக் கலாபமொடு பட்டுச் சுமந்த சைந்த பரவையல்குல்", பெருங். 2 : 4 : 122 - 123
அழல் மணிக் கலாபம் ஆர்த்தல்	தீப்போலும் நிறத்தை உடைய மணிகளைக் கொண்ட மேகலை ஒலித்தல்	"எழின் மணிக்குழைவில் வீசவின் பொனோலை மின் செய அழன்ம ணிக்கலாப மஞ்சிலம் பொடார்ப்ப வாடுமே", சீவக. 1952 : 3 - 4
பொற்கலாபம் இலங்குதல்	அழகிய விளக்கமுற்ற பொன் மேகலை ஒளிவீசுதல்	"கலந்தெழு திரை நுண்ணாடைக் கடிக்கய மடந்தை காமர் இலங்கு பொற் கலாபத் தல்குல் இருகரைப் பரப்புமாக", சீவக. 964 : 1 - 2
கலாபவில் உமிழ்தல்	அரையில் அணிந்த மேகலை ஒளி வீசதல்	"கள்வயிற் றலர்ந்த கோதைக் கலாபவில் உமிழும் அல்குல் ஒள்ளெயிற்றவர்கள் பொன்பூத் தொளிமணி உருவம் நீத்தார்", சீவக. 2897 : 3 - 4
கலாபம் சூழ்தல்	அல்குலில் பதினாறு கோவையணி சூழ்ந்திருத்தல்	"காந்தின மணியும் முத்தும் சிந்தின, கலாபம் சூழ்ந்த பாந்தளின் அல்குலார்", கம்ப. 788 : 3 - 5
மணிக் கலாபம் மிடைதல்	கலாபம் அரையில் அணிந்திருத்தல்	"வெம்முலைப் பரவை யல்குல் மிடை மணிக் கலாபம் வேய்த்தோள்", சீவக. 606 : 3
அங்கதிர் கலாபம் மின்னுதல்	ஒளிவீசும் மேகலை மின்னுதல்	"திங்கள் வாண் முகமும் நோக்கான் திருமுலைத் தடமும் நோக்கான் அங்கதிர்க் கலாபம் மின்னும் அணியல்குற் பரப்பும் நோக்கான்", சீவக. 1705 : 1 - 2

மின்னிரும் கலாபம் வீங்கி இரங்குதல்	மேகலை ஒலி எழுப்புதல்	"மின்னிரும் கலாபம் வீங்கி மிளிர்ந்து கண் இரங்க வெம்பித் துன்னரும் களி கொள் காமக் கொடுங்கனி சுவைத்து விள்ளான்", சீவக. 1985 : 3 - 4
பசுங்கதிர்க் கலாபம் வீங்குதல்	பொன்னொளி வீசும் மேகலையை இறுக அணிதல்	"பாசிழை பரவை அல்குல் பசுங்கதிர்க் கலாபம் வீங்க", சீவக. 586: 1; "பஞ்சுசூழ் பரவை யல்குல் பசுங்கதிர்க் கலாபம் வீங்கச் செந்தளிர் கோதை சோரக் கிண்கிணி சிலம் பொடேங்க", சீவக. 840 : 1 - 2
கடுங்கதிர் கலா வம் புதைத்தல்	கலாவம் அணிதல்	"கடுங்கதிர்க் கலாவம் புதைத்த நிலாவெண் துகிலினர்", பெருங். 2 : 5 : 84 - 85
கலை	மேகலை	"கலையார் துகிலேந்தல் குலுங்கதிர் சூழ் முலையார் தடமும் முனியாது படிந்", சீவக. 216 : 1 - 2; "சூடிய கலைப்புறம் சூழ்ந்தபூந்துகில்", சீவக. 1007 : 2; "கலைக்கோட்ட அகலல்குல் கணங்குழையார் கதிர்மணிப் பூண் முலை கோட்டால் உழப்பட்ட மொய்ம் மலர்த்தார் அகல்மார் பர்", சீவக. 2234 : 1 - 2
அணிக்கலை புனைந்த அரசிலைப் பொன்னடர்	பொன்தகடு	"அணிக்கலை புனைந்த அரசிலைப் பொன்னடர் புனற்சுழி புரையும் பொலிவிற்றாகி", பெருங். 2: 7: 23 - 24
எரிமணிப் பொன் னார் கலை	ஒளிமிக்க மணிகள் பதித்த பொன்னால் ஆகிய மேகலை	"என்னோர் மருங்கினும் ஏத்தி எரிமணிப் பொன்னார் கலையினர் பொற்பூஞ் சிலம்பினர்", சீவக. 2128 : 1 - 3
பல்கலை	எண்கோவையாகிய மேகலை	"கடி திவளைக் காவார் விடுதல் கொடியியற் பல்கலைக் சில்பூங் கலிங்கத்தள் ஈங்கிதோர்", கலித். 56 : 10 - 11; "பாடு வண்டிருந்தன்ன பல்கலை யகலல்குல்", சீவக. 1996 : 1; "நீர்துளும்பு வயிற்றின் நிழல்முகில் பார் துளும்ப முழங்கலிற் பல்கலை ஏர்துளும்ப வெரீஇயிறை", சீவக. 2672 : 1 - 3
பல்காழ்கலை	பலவடங்களையுடைய மேகலையணி	"வடியினன்ன வாளரித் தடங்கட் பைங்குழை மகளிர் பல்காழ்க் கலையோ டங்குழைச் செயலைத் தண் டழை யுடீஇக்", பெருங். 1 : 55 : 55 - 57
பொன்னுடைக் கலை	பொன்னால் ஆன மேகலை	"பொன்னுடைக் கலையல்குல் கணிகைப் பூம்புனல் மன்னுடை வேலினாய் வல்லை நீந்தினாய்", சீவக. 1200: 3 - 4
மின்னும் கலை	ஒளிவீசும் கலை	"மின்னும் கலையெல்லாம் வேந்தன் போகி", சீவக. 352: 3
கலை ஆர்தல்	மேகலை அணியப் பெற்றிருத்தல்	"அரையார் கலை சேரன மென்னடையை உரை யாவுகந் தானுரை யும்மிடமாம்", தேவா. திருநா. 2: 17: 5: 1 - 2; "குலையாரக் கொணர்ந்தெற்றியோர் பெண்ணை கலையார் அல்குற்கன்னியர் ஆடும் துறையூர்", தேவா. சுந்தர. 2: 1: 2-3; "கலையார் துகிலேந்தல் குலுங் கதிர் சூழ் முலையார் தடமும் முனியா துபடிந்", சீவக. 216: 1-2
வார் கலைகள் ஆர்ப்பரவஞ் செய்தல்	நீண்ட மேகலைகள் ஆரவாரிப்பு செய்தல்	"வார்த்தையும் பேசி, வளைசிலம்ப வார்கலைகள் ஆர்ப்பரவஞ் செய்ய அணி குழல்மேல் வண்டார்ப்ப", திருவாச. திருவெம். 12: 5 - 6
கலை இம் மென்னுதல்	மேகலை இம்மென ஒலி எழுப்புதல்	"பொம்மென் இலவப் பூம்போதனநின் அடிபோற்றி இம் மென் கலையார் இடுவென் றேத்த ஒதுக்கினாள்", சீவக. 2454 : 3 - 4
பவளக்கலை உடுத்தல்	மேகலை அணிதல்	"நலம்சார் பவளக் கலையுடுத்து", சிலப். 7: 37: 1
கலை உலாவுதல்	இடையில் மேகலை சூழ்ந்து கிடத்தல்	"கலையுலாய் நிமிர்ந்த அல்குற்கடல்விளை அமுத மன்னார் முலையுலாய் நிமிர்ந்த மொய்தார் முழவு முத்து ரிஞ்சிமின்ன", சீவக. 2976 : 1 - 2

வார்முரலுங் கலை ஏந்துதல்	நீண்ட ஒலிக்கும் மேகலை அணிந்து இருத்தல்	"இங்கு வார்முர லுங்கலை யேந்தல் குல் நங்கை வாட்படை நங்கையைச் சூழ்ந்ததே", சீவக. 763 : 3 - 4
கலை கலித்தல்	மேகலை ஒலித்தல்	"கால் முதல் தொடர்ந்த நூபுரம் சிலம்ப கிண்கிணி கலை யொடும் கலிப்ப", கம்ப. 5148 : 5 - 6
கலை சார்தல்	மேகலை அணிதல்	"வார் அழிக் கலசக் கொங்கை வஞ்சிபோல் மருங்கு லாள்தன் தார் ஆழி, கலை சார் அல்குல் தடங்கடற்கு உவமை தக்கோய்!", கம்ப. 4483 : 1 - 4
கலை தழங்குதல்	மேகலை ஒலித்தல்	"தழுங்கிய கலைகளும், நிறையும், சங்கமும், மழுங்கிய உள்ளமும், அறிவும், மாமையும்", கம்ப. 523 : 1 - 2
கலை தாங்குதல்	மேகலையை அணிந்திருத்தல்	"பலநாளும் ஆற்றாரெனினும் அறத்தைச் சிலநாள் சிறந்தவற்றாற் செய்க கலைதாங்கி", பழ. நா. 367: 1 - 2
பொன்னங் கலை கள் புறஞ்சூழ்தல்	பொன்னாலாகிய மேகலைகளை ஆடைக்கு மேலே வளைத்து அணிதல்	"புகையார் வண்ணப் பட்டுடுத்துப் பொன்னங் கலை கள் புறஞ்சூழ்ந்து நகையார் கவுள கிண்கிணியுந்", சீவக. 2694 : 1 - 3
பல்கலை மிழற்றல்	மேகலையின் பல மணிகள் ஒலித்தல்	"பாம்பு வைத்தனைய அல்குல் பல்கலை மிழற்ற ஏகி", சீவக. 561 : 3
வேம்பு இழைத்து இடையே கோத்த அரைமணிக் கவடி கட்டுதல்	மலைவேப்பங் கொட்டைகளை அலங்கரித்துச் செய்த அரை ஞாண் கட்டுதல்	"வேம்பு இழைத்து இடையே கோத்த அரைமணிக் கவடி கட்டி அழகுஉற வளர்க்கும் நாளில்", திருத். 667: 5 - 8
காஞ்சி	அரையணி	"கைவளை யாழி தொய்யகம் புனைதுகில் மேகலை காஞ்சி வாகுவலயம் எல்லாங்கவரு மியல் பிற்றாய்த்", பரி. 7: 47-49; "துயல் வரு கனக நாணும் காஞ்சியும் துகிலும் வாங்கி, புயல்வரு கூந்தல் பாரக் கற்றையின் புனை யலுற்றார்", கம்ப. 8834 : 3 - 4
மணிக் காஞ்சி	மணி மேகலை	"மகளிர் இடை ஏங்குவன நூபுரங்கள் இரங்குவன மணிக்காஞ்சி ஒங்குவன மாட நிரை ஒழுகுவன", திருத். 1283 : 2 - 4
மணி கிளர் காஞ்சி	முத்து முதலிய மணி கள் ஒளிரும் காஞ்சி எனும் அணி	"மணிகிளர் காஞ்சி அல்குல் வரி அரவு உலகை வென்ற", திருத். 284 : 3 - 4
தொடக்குறு காஞ்சி தொடுத்த அரசிலை	காஞ்சி என்ற அரை அணியில் தொகுக் கப்பட்ட அரசிலை	"வடத்தெரு கோவணத் தோன்றும் அரைவலம் மற்றை யல்குல் தொடக்குறு காஞ்சித் தொடுத்த அர சிலை தூநுண்துகில் அகல்பொலி ஏறுடை ஏகம்பம்", 11ஆம் திரு. 950 : 4 - 7
மணிகிளர் காஞ்சி சூழ்தல்	முத்து முதலிய மணி கள் ஒளிரும் காஞ்சி எனும் அரை ஆபரணம் அணிதல்	"பிணி அவிழ் மலர்மென் கூந்தல் பெண் அமுது அனை யாள் செம்பொன் அணிவளர் அல்குல் தங்கள் அரவு செய்பிழையால் அஞ்சி மணிகிளர் காஞ்சி சூழ்ந்து வனப்புடை அல்குல் ஆகிப்", திருத். 3008 : 1-3
காசு	மேகலை	"அறு நூல் பளிங்கின் துளைக்காசு கடுப்ப", அகம். 315: 12; "பொலம்செய் காசின் பொற்ப", அகம். 363: 8; "புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள் உகிர்ப் பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்", குறுந். 67: 3-4; "இழைமகள் பொன்செய் காசின்", நற். 274: 3-4; "நீடுர வழியி னூடுநிமிர்ந் தொழுகிப் பிணர் முரிப் பட்டுடைப் பெருநல வல்குற் காசுநிழற் காட்டு மாசின மாமை ஆவி நுண்டுகி லணிநல நனைப்ப", பெருங். 1: 40: 225 - 228

பத்திப் பல்காசு	நிரல்படக்கோத்த பலவாகிய பொற்காசு	"சித்திர நுண்டுகில் சேர்ந்த அல்குல் பத்திப் பல்காசு பரிந்தனர் உகுத்தும்", பெருங். 2 : 5 : 109 - 110
பவழப் பல்காசு	பவழத்தாலியன்ற அணி	"பைவர வல்குல் பவழப் பல்காசு", பெருங். 1: 46: 259
பொலஞ் செய் பல் காசு அணிதல்	பல்காசு அணிதல்	"ஆசுஇல் கம்மியன் மாசுஅறப் புனைந்த பொலஞ் செய் பல்காசு அணிந்த அல்குல் ஈகைக் கண்ணி இலங்கத் தைஇ தருமமொடு இயல்வோள் சாயல் நோக்கி", புறம். 353: 1 - 4
பைங்காசு அரவம்	பசிய மணிமேகலை யின் ஒலி	"மங்கை மகளிர் பைங்காசு அரவமும் நீனிறக் கொண்மூ நெற்றி முள்கும் வானிற வளர்பிறை வண்ணங் கடுப்ப", பெருங். 1: 41: 73 - 75
காசு பட்டுடை சூழ்தல்	மேகலையைப் பட்டாடையைச் சுற்றி அணிதல்	"வட்டுடை பொலிந்த தானை வள்ளலைக் கண்ட போழ்தே பட்டுடை சூழ்ந்தகாசு பஞ்சி மெல்லடி யைச் சூழ அட்டரக்கு அனைய செவ்வாய் அணி நலம்", சீவக. 468: 1 - 3
பல்காசு நிரைத்தல்	பல்காசுகளாலாய மேகலையை அணிந் திருத்தல்; பொன்னால் ஆகிய காசுகளைத் தொடுத்து அணிந் திருத்தல்	"அம்மாமேனி ஐதமை நுசுப்பின் பல்காசு நிரைத்த கோடேந்தல்குல்", அகம். 75: 19 - 20; "பல்காசு நிரைத்த சில்காழல்குற் கைபுனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பினாவலொடு பெயரிய பொலம்புனை அவி ரிழை", திருமுருகு. 16 - 18; "பல்காசு நிரைஇய வல்குல் வெண்டுகில்", பெருங். 1 : 40 : 99
பொலங்காசு நிரைத்தல்	பொன்னால் செய்யப் பட்ட காசுகளைத் தொடுத்து அணிந்து இருத்தல்	"பொலங்காசு நிரைத்த கோடு ஏந்து அல்குல் நலம் கேழ் மாக்குரல் குழையொடு துயல்வர", அகம். 269: 15-16
நீர்மைப் பல்காசு நிழலுமிழ்ந் திமைத்தல்	நீர்மை மிக்க பல வாகிய மாணிக்கக் கோவையாகிய மணிமேகலை ஒளி வீசி விளங்குதல்	"திருந்திழை யணிந்த பரந்தேந் தல்குல் நீர்மைப் பல் காசு நிழலு மிழ்ந் திமைப்பப்", பெருங். 1 : 45 : 2 - 3
பல்காசு புதைத்தல்	பலவாகிய பொற் காசுகளானாய வடம் அணியப்படுதல்	"நீராட் டிடத்தின் நீக்கி நடுவிற்குப் பாரம் ஆகிய பல் காசு புதைஇ", பெருங். 2 : 5 : 162 - 163
பல்காசு புரளுதல்	பலவாகிய மணிக் கோவையாகிய மேகலை புரளுதல்	"திருநலத் தோழியர் சிறுபுறங் கவைஇப் பரவை யல்குற் பல்காசு புரளக்", பெருங். 1 : 46 : 180 - 181
காசு புனைந்து ஏந்தல்	மேகலை அணிதல்	"குழாஅ மகளிர் குரவை காண்மின் புனைந்தேந்து அல்குற் காசு புதையாது நனைந்து நிறங்கரந்த நார் நூல் வெண்டுகில்", பெருங். 1 : 40 : 146 - 148
காசு பெய் காழ்	காசு சேர்க்கப்பட்ட வடம்	"காழ்பெய் அல்குற் காசுமுறை திரியினும் மாணலங் கையறக் கலுழுமென் மாயக் குறுமகள் மலரேர் கண்ணே", நற். 66 : 9 - 11
தனிக் காழ்	ஒப்பற்ற தனிக்காழ்; ஒற்றை வடம்	"கட்டழன் முத்தங் காலப் பட்டுடைத் தனிக்காழ் அல் குற் பனிப்பசப் பிவர ", பெருங். 3 : 7 : 33 - 34
திருந்து காழ்	திருந்திய மணிவடம்	"சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ", திருமுருகு. 203 - 204
பசுங்காழ்	மேகலை	"பசுங்காழ் அல்குல் பற்றுவனன்", நற். 222: 5
வயங்கு மணி பொருத வகை யமை வனப்பின் பசுங்காழ்	பளிங்கு மணியினை யொத்த அழகிய பசிய சரத்தாலாய மேகலை	"வயங்குமணி பொருத வகையமை வனப்பின் பசுங் காழ் அல்குல் மாஅ யோளொடு", அகம். 167 : 1 - 2

பல்காழ்	மேகலை	"அரவு கிளர்ந்தன்ன விரவுறு பல்காழ் வீடுறு நுண் துகில் ஊடு வந்து இமைக்கும்", நற். 366: 1-2; "சில் பொறி அணிந்த பல்காழ் அல்குல்", நற். 133: 4; "இதரப் பல்காழ்ப் பரவை யல்குலர்", பெருங். 1 : 41: 63; "நுண்சிறு மருங்கு னுகர்வின் சாயற் பாசப் பாண்டிற் பல்காழ் அல்குலென் வாசவத்தை யுள்வழி யறியின்", பெருங். 3: 1: 163 - 165
பவழஞ் சேர்ந்த பல்காழ்	பவழம் விரவிய பல வாகிய கோவைகளை உடைய மேகலை	"தவழும் புதல்வரை யொருகையாற் றழீஇப் பவழஞ் சேர்ந்த பல்காழல் குலர் அவிழ்ந்த பூந்துகி லங்கை யினசைஇ", பெருங். 1 : 43 : 145 - 147
வண்டிருப்பன்ன பல்காழ்	பலமணி கோத்த வடங்களையுடைய மேகலை	"வண்டிருப் பன்ன பல்காழல்குல் இரும்பிடித் தடக் கையின் செறிந்து திரள் குறங்கின்", பொருநர். 39 - 40
பைங்காழ்	பசிய மணிகள் கோத்த வடம்	"கொன்றை மென்சினைப் பனிதவழ்பவை போல் பைங்காழல்குல் நுண்டுகி னுடங்க", பெரும். 329 - 330
கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ்	கைத்தொழிலாலே பொலிவு பெற்ற மணிகள் இடையிடை அமைந்த பொன் மணிகளையுடைய வடம்	"உடுத்தவை, கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ் மேல் மையில் செந்துகிர்க் கோவை யவற்றின் மேல் தைஇய பூந்துகில் ஐதுகழல் ஒருதிரை", கலித். 85 : 3 - 5
எண்ணாற் காழ் நிரை	விரிசிகை என்னும் ஒருவகை மேகலை அணி	"கைவினைக் கொளுவிற் செய்து நலங்குயின்ற எண் ணாற் காழ்நிரை கண்ணுமிழ்ந் திலங்க", பெருங். 2: 19: 144 - 145
முப்பத்து இருகாழ் முத்து	முத்துவடம் முப்பத்திரண்டு	"பிறங்கிய முத்தரை முப்பத்து இருகாழ் நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ", சிலப். 6: 87 - 88
பொலன்காழ் இமைத்தல்	பொன்வடம் ஒளி வீசுதல்	"பசைவிரற் புலைத்தி நெடிது பிசைந்தூட்டிய பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்", அகம். 387: 6 - 7
கலாவப் பல்காழ் கச்சு விரிந்து இலங்குதல்	கலாவமாகிய பல கோவைகளையுடைய மேகலை விரிந்து விளங்குதல்	"நிலாவுறழ் பூந்துகின் நெகிழ்ந்திடைத் தோன்றக் கலாவப் பல்காழ் கச்சு விரிந்திலங்கத்", பெருங். 5 : 1 : 137 - 138
காழ் திளைப்ப உடீஇ	ஒளி வீசும் காழ் அணிதல்	"திருந்துகா ழல்கு றிளைப்பவுடீஇ மயில்கண்டன்ன மடநடை மகளிரொடு", திருமுருகு. 204 - 205
காசு சூழ் கோவை முத்தம்	மணிகளால் ஆன முத்தக் கோவை	"தூசுசூழ் பரவையல்குல் சுமக்கலா தென்ன வீழ்த்த காசுசூழ் கோவை முத்தங் கதிர்முலை திமிர்ந்த சாந்தம்", சீவக. 109 : 1 - 2
செந்துகிர்க் கோவை	பவளத்தால் ஆன அரையணி	"செந்துகிர்க் கோவை சென்றேந்தல்குல்", சிலப். 4: 29
கைவினைப் பொலிந்த காச மை பொலங்காழ் மேல் செந்துகிர்க் கோவை	பொன் மணி வடத் தின் மேல் சிவந்த பவழ வடம்	"கைவினைப் பொலிந்த காசமை பொலங் காழ் மேல் மையில் செந்துகிர்க் கோவை யவற்றின் மேல் தைஇய பூந்துகில் ஐதுகழல் ஒருதிரை", கலித். 85 : 3 - 5
பசுங்காழ்க் கோவை	அழகிய வடங்களைக் கொண்ட மேகலை	"பயிலிரும் பிணையற் பசுங்காழ்க் கோவை அக லமை யல்குல் பற்றிக்", அகம். 385 : 12 - 13
பல்கலைக் கோவை	பல வடங்களை உடைய முத்துமணி மாலை	"ஆவியன்ன பூந்துகிலணிந்த வல்குற் பல்கலைக் கோவை யற்று உதிர்ந்தன கொள்ளு நீரரின் மையின் வாவியாவும் பொன்னணிந்து வானம் பூத்ததொத்தவே", சீவக. 67 : 2 - 4

செந்துகிர்க் கோவை ஏந்துதல்	அரையில் பவளக் கோவையை அணிந்திருத்தல்	"செந்துகிர்க் கோவை சென்றேந் தல்குல் அந்து கின் மேகலை யசைந்தன வருந்த", சிலப். 4 : 29 - 30
தொடுத்த மணிக்கோவை துயல்வரல்	தொடுக்கப்பட்ட மணிகளின் கோவை அசைதல்	"அற்றங்காவாச் சுற்றுடைப் பூந்துகில் தொடுத்த மணிக் கோவை யுடுப்பொடு துயல் வரத்", மணி. 3 : 139 - 140
அரைக்கடி சூத்திரச் சரி	அரைஞாண்	"அரைக்கடி சூத்திரச் சரியும் தக்க திருக்கால் சரியும் சாத்திய ஒண்சுடர் தயங்க", திருத். 3696 : 6 - 8
கடி சூத்திரம் புனைதல்	அரைஞாணினை அழகுறப் பூட்டுதல்	"கடி சூத்திரம் புனைந்து கங்கணங்கைப் பெய்து வடிவுடைய கோலம் புனைந்தாங்கு", 11ஆம் திரு. 300: 21
அரை ஞாண்	அரையில் கட்டும் நாண்	"சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ் செத்தவர் தம் எலும்பினாற் செறியச் செய்த பூணாணும் அரை ஞாணும் பொலிந்து தோன்றும் பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே", தேவா. திருநா. 6: 18: 2: 5 - 8; "கொட்டை அரைஞாண் துகள் நீக்கி", திருத். 3724: 2
பொன் ஞாண்	அரை ஞாண்	"ஏற்படக் கிடந்த பொன் ஞாண் இருள் கெட விழிப்ப வெய்ய", சீவக. 2280 : 2 - 3
பொன்னரை ஞாண்	பொன்னால் செய்யப் பெற்ற அரை ஞாண்	"பொருவில் வயிரச் சரிகள் பொன்னரைஞாண் புனை சதங்கை தெருவிலொளி விளங்கவளர் திருவிளை யாட்டி னிலமர்ந்தார்", திருத். 3685: 3 - 4
காசொடு தொடுத்த காப்பு கலன்புனை அரைஞாண் சேர்த்தல்	காசுடன் சேர்த்த காவற்கலன் புனைந்த அரைஞாணைக் கட்டுதல்	"காசொடு தொடுத்த காப்புக் கலன்புனை அரைஞாண் சேர்த்தித்", திருத். 670 : 3 - 4
அருவிலைப் பட்டி னங்கண் ஏர்படக் கிடந்த பொன் ஞாண் இருள்கெட விழித்தல்	விலைமிக்க பட்டாடை களின் மேல் அழகு பொருந்தக் கிடந்த அரை ஞாண் இருளைப் போக்கி ஒளி செய்தல்	"ஆரமும் பூணும் மின்ன அருவிலைப் பட்டினங்கண் ஏர்படக் கிடந்த பொன்ஞாண் இருள்கெட விழிப்ப வெய்ய", சீவக. 2280 : 2 - 3
காசுடை வடத் தோல் கட்டுதல்	மாணிக்கங்கள் கோக்கப் பெற்ற தோல் வடத்தை அரையில் கட்டுதல்	"காசுடை வடத்தோல் கட்டிக்", திருத். 686 : 4
நாண்	அரைஞாண்	"உடை நாணோடு கடிவட்டி னொடு ஒளிர் வாளினொடு ஒருவன்", சீவக. 2763: 2
பொன்னாண் துயல் வருதல்	நாண் அசைதல்	"புகை நிறத்துகிலின் பொன்னாண் துயல்வரப் போந்து வேந்தன்", சீவக. 1077: 3
செம்பொன் நாண் அரையில் மின்னுதல்	செம்பொன்னாலான நாணை அரையில் அணிவித்தல்	"ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்தி செம்பொன் நாண் அரையில் மின்னத் தெருவில் தேர்உருட்டும் நாளில்", திருத். 150: 4-8
நூல்	அரை நூல் மாலை	"சங்கொடு சிலம்பும் நூலும் பாத சாலகமும் தாழ, பொங்குபல் முரசும் ஆர்ப்ப இல்உறை தெய்வம் போற்றி", கம்ப. 4949 : 1 - 4
பருமம் தாங்குதல்	ஒளியையுடைய பதினெண் கோவை யாகிய மேகலை யை அணிதல்	"பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப் பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்", திருமுருகு. 145 - 146
பாசப் பாண்டில் பல்காழ்	அரையணி	"நுண்சிறு மருங்கு னுகர்வின் சாயற் பாசப் பாண்டிற் பல்காழல்கு லென் வாசவதத்தை", பெருங். 3: 1: 163-164

பொலம்பசும் பாண்டில்	அரையணி	"பொலம் பசும்பாண்டிற் காசு நிரை அல்குல்", ஐங். 310: 1
பொன் செய் பாண்டிற் பொலங் கலம்	பொன்னால் செய்த வட்டவடிவ அணி	"பொன் செய்பாண்டிற் பொலங்கல நந்தந் தேரக லல்கு லவ்வரி வாட", ஐங். 316 : 1 - 2
பவளக் காசொடு பன்மணி விரைஇத் திகழக் கோத்த செம் பொற்பாண்டில்	வட்டவடிவப் பொற் காசு மாலை	"பவளக் காசொடு பண்மணி விரைஇத் திகழக் கோத்த செம்பொற் பாண்டில்", பெருங். 2: 19: 142-143
பூண் உறுதல்	அரை அணி பொருந்துதல்	"சேண் உறு திவலையால் நனைந்த செந்துகில், பூண் உறும் அல்குலில் பொருந்திப் போதலால் நாணினர்", கம்ப. 6687 : 1-3
பொன்னடர் பொலிதல்	பொன் அணி ஒளி வீசுதல்	"அணிக்கலை புனைந்த அரசிலைப் பொன்னடர் புனற்சுழி புனையும் பொலிவிற்றாகி", பெருங். 2: 7: 22-24
பொற்றோரை மின்னுதல்	பொன்வடம் மின்னுதல்	"அலங்கல்தா தவிழ்ந்து சோர அல்குற் பொற்றோரை மின்னச் சிலம்பின்மேல் பஞ்சி யார்ந்த சீறடி வலத் தூன்றி", சீவக. 2132 : 1 - 2
பொன்னொடு மணிமிடைதல்	பொன்னொடு மணி செறிந்து அமைக்கப் பட்ட அணிகலனை அணிதல்	"பொன்னொடு மணிமிடை அல்குல் மடந்தை அணி முலை ஆகம் முயங்கினம் செலினே", குறுந். 274 : 6 - 8
மணி	மேகலாபரணம்	"மட்டொளி விரிதரு மலர்நிறை சுரிகுழன் மடவரல் பட்டொளி மணியல் குலுமையமை யுருவொரு பாக மாக", தேவா. திருஞா. 3 : 85 : 1 : 1 - 3
திருமணி	மேகலை	"செம்மலரடியும் நோக்கித் திருமணி அல்குல் நோக்கி வெம்முலைத் தடமும் நோக்கி விரிமதி முகமும் நோக்கி", சீவக. 739 : 1 - 2
கதிர்மணி முத்தம்	ஒளி வீசும் முத்து மணி மாலை	"கடல் கொழித்து இட்ட கதிர்மணி முத்தம் படமணி அல்குல் பரதர் மகளிர் தொடலை சேர்த்து ஆடும் துறைவ!", திணை. ஐம். 45 : 1 - 3
முத்தரை முப்பத்து இரு காழ் பிறங்குதல்	முத்து வடம் அணிதல்	"பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ் நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ", சிலப். 6: 87-88
முத்தும் பவளமும் இமைத்தல்	முத்தும் பவளமும் அணிந்திருத்தல்	"பச்சிலைப்பட்டும் முத்தும் பவளமும் இமைக்கும் அல்குல்", சீவக. 2090: 1
மேகலை	அரையணி	"மேகலை காஞ்சி வாகுவலயம் எல்லாங்கவரு மியல் பிற்றாய்த் தென்னவன் ஒன்னாருடை புலம் புக்கற்றான் மாறட்ட தானையான் வையை வனப்பு", பரி. 7: 47 - 50; "மேகலை ஏணிப் படுகால் இறுகத் தாளிட", பரி. 10: 11; "அரைவரை மேகலை", பரி. 21: 14; "அம்துகில் மேகலை அசைந்தன வருந்த", சிலப். 4: 30; "பொன்னை மேகலை கவர்வானே", திருவி. 71: 4; "உய்யாதென் ஆவி ஒளிவளையும் மேகலையும் உய்யாது உடம்பழிக்கும் ஒண்திதலை", 11ஆம் திரு. 606: 1 - 2; "நூபுரமும், மேகலையும், நூலும், அறல் ஓதிப்", கம்ப. 2765 : 1 - 2; "பூந்துகிலோடும் பூசல் மேகலை சிலம்பு பூண்ட மாந்தளிர் எய்த", கம்ப. 8826: 3 - 4; "அகழ் கிடங் கந்துகில் ஆர்ந்த பாம்புரி புகழ்தகு மேகலை நாயில் பூண்முலை", சீவக. 1444: 1 - 2

அரவ மேகலை	ஒலி எழுப்பும் மேகலை	"ஆய்ந்து தாங்கினார் அரவ மேகலை காய்ந்து நித் திலங் கடிய சிந்தினார்", சீவக. 2681 : 3 - 4
அரியார் மேகலை	அழகமைந்த மேகலையணி	"அரியார் மேகலை யார்ப்பொடு துளங்கவும்", பெருங். 4: 12: 125
அரைசெய் மேகலை	மேகலை	"அரைசெய் மேகலை யானும் ஐயாறுடை ஐயனே", தேவா. திருஞா. 2: 6: 9
ஆய்ந்த மேகலை	நுட்ப வேலைப்பாடு அமைந்த மேகலை	"ஆய்ந்த மேகலையார் அம்பொன் மாளிகை வேய்ந்த கார் அகில் புகை உண்ட மேகம் போய்த்", கம்ப. 134: 1-2
எரிபொன் மேகலை	ஒளி விளங்குகின்ற பொன்னாலாகிய மேகலை	"இலைப் பொலி பூண்முலை யெரிபொன் மேகலைக் குலத்தலை மகளிர் தங்கற்பில் திண்ணிய அலைத்துவீ ழருவிகளார்க்குஞ் சோலைசூழ்", சீவக. 1210: 1 - 3; "உருவ நுண்ணிடை ஒளிமணி வருமுலை யுருவார் எரி பொன் மேகலை இலக்கணை கடிவினை நொடி வாம்", சீவக. 2385 : 3 - 4
எரிமணிப் பூண் மேகலை	ஒளிமணிப் பூண் ஆகிய மேகலை	"ஏயே இவளொருத்தி பேடியோ என்றார் எரிமணிப் பூண் மேகலையாள் பேடியோ என்றார்", சீவக. 652: 3 - 4
ஏரார்ந்த மேகலை	அழகான மேகலை	"பேரார்ந்த வெண்மழுவொன் றுடையீர் பூதம் பாடலீர் ஏரார்ந்த மேகலையாள் பாகங் கொண்டீ ரிடை மருதில்", தேவா. திருஞா. 2 : 56 : 1 : 2 - 3
ஐவகை வண்ணத் தந்நுண் மேகலை	பச்சை, சிவப்பு, நீலம், கருப்பு, பொன்னிறம் ஆகிய ஐந்து வண்ணங் களையுடைய அழகிய நுண்ணிய மேகலை	"செம்பொனோலை சேடுபடச் சுருக்கி ஐவகை வண்ணத் தந்நுண் மேகலை பையரவல்குற் பரப்பிடை யிமைப்பக்", பெருங். 3 : 22 : 225 - 227
ஒண்பொன் மேகலை	சிறந்த பொன்னால் ஆகிய மேகலை	"அடுத்தசாந் தலங்கல் சுண்ணம் அரும்புனல் கவர அஞ்சி உடுத்தபட் டொளிப்ப ஒண்பொன் மேகலை யொன்றும் பேசா", சீவக. 2666 : 1 - 2
காசடை மேகலை	மணிகள் பதிக்கப் பெற்ற மேகலை	"காசடை மேகலை சோரவுள்ளங் கவர்ந்தார்க் கிடம் போலும் பாசடைத் தாமரை வைகுபொய்க்கைப் பரிதிந் நியமம்மே", தேவா. திருஞா. 3 : 104 : 8 : 5 - 6
திருவ மேகலை	அழகிய மேகலை	"திருவ மேகலை தெள்ளரிக் கிண்கிணி பரவை யாழ்குல பண்ணமை மென்முழா", சீவக. 530 : 1 - 2
பரந்த மேகலை	பரவி அணியப்பட்ட மேகலை	"பரந்த மேகலையும், கோத்த பாத சாலகமும் நாகச் சிரம் செய் நூபுரமும்", கம்ப. 1138 : 1 - 3
பொன் மேகலை	பொன்னாற் செய்யப் பட்ட மேகலை	"தாந்தாமெனத் தாழ்ந்த பொன் மேகலைத்தாம அரங்கின் மேற்றாதார் முல்லைப்", சீவக. 680 : 3
மணிமேகலை	ஒள்ளிய மணிகளா லாய மேகலை	"ஞாயி லிஞ்சி நகைமணி மேகலை வாயின்மருங் கியன்ற வான் பணைத்தோளி", மணி. 5 : 112
சிறுமணி மேகலை	மெல்லிய சிறிய மணிகளால் ஆக்கப் பட்ட மணிமேகலை	"யாப்பு உறுமென் சிறுமணி மேகலை அணி சிற்றாடையுடன்", திருத். 883 : 4 - 5
தமனிய மேகலை	பொன் மேகலை	"தார் மணி பூண்ட தமனிய மேகலை", கலித். 96: 15
நிலவு மணி மேகலை	அழகொளி விளங் கும் மணிகள் இழைத்த மேகலை	"நிலவுமணி மேகலை நிலாவுமிழும் பைம்பூண் இலவமலர் வாயினணி கூரெயிற்றினீரே", சீவக. 2922: 2 - 3
நிழன் மணி மேகலை	ஒளியுடைய மணி மேகலை	"நிழன்மணி மேகலை நேர் முகத் தடித்தும் கண் ணியிற் சார்த்தியுங் கைக்குட் போக்கியும்", பெருங். 4: 12 : 71 - 72

மணிசெய் மேகலை	மணிகளால் ஆன மேகலை	"துணிகபோது மெனவிடுத்தாய் போந்தேன் துயருழப்பநீ மணிசெய் மேகலை யாய்மாற்றந் தாராய்", சீவக. 1589 : 3 - 4
மணிவிரி மேகலை	மணிகள் பதிக்கப் பெற்ற மேகலை	"விரிமணி மேகலை விரவி ஆர்க்கில தெரிவையர் அல்குல், தார் ஒலி இல் தேர் என", கம்ப. 2283 : 1 - 2
மிடைமணி மேகலை	நெருங்கிய மணிகளை யுடைய மேகலை	"ஏந்தல்குல் மிடைமணி மேகலை நோற்ற", சீவக. 1005 : 1 - 2
மின்னு மேகலை	ஒளி வீசும் மேகலை	"இன்மலர்க் கமலமாகிப் பூமுகம் பொருந்த வைப்பார் மின்னுமே கலையுந் தோடுங் கொடுத்தடி தொழுது நிற்பார்", சீவக. 2662 : 3 - 4
மீன்சேர் குழாம் அனைய மேகலை	மணிகள் நிறைந்த மேகலை	"மீன்சேர் குழாம் அனைய மேகலையும் வெம் முலையும் கூற்றம் கூற்றம்", சீவக. 637 : 1
வகையமை மேகலை	வகைவகையாகக் கோத்த மேகலை	"வாரணிக் கொம்மை வகையமை மேகலை", பரி. 22 : 30
வகையவா மணிமேகலை	பலவகையான மணி கள் தோக்கப் பெற்ற மேகலை	"புகைய வாவிய பூந்துகில் ஏந்தல்குல் வகைய வாமணி மேகலை வார்மது", சீவக. 1307 : 1 - 2
வரியினுரிவை மேகலை	சிங்கத் தோல் மேகலை	"வரியின் உரிவை மேகலை யாட்டி", சிலப். 12 : 61 - 62
வாம மேகலை	அழகிய மேகலை	"தூமகேது புவிக்கு எனத் தோன்றிய வாம மேகலை மங்கையரால் வரும் காமம் இல்லை", கம்ப. 1427 : 1 - 3; "வாம மேகலை வானவர் மங்கையர், காம ஊசல் களி இசை கள்ளினால் தூமமேனி அசுணம் துயில் அறும்", கம்ப. 4460 : 1 - 3; "தாமநீள் கண்ணி சேர்த்த சலாகை தூக்கியதே போலும் வாம மேகலை சூழ் வல்லி மருங்கின் மேல் உரோம வல்லி", திருத். 3007: 3 - 4
வில் வளைந் தனைய திரு மேகலை	வில் வளைந்தாற் போன்ற மேகலை	"திருவில் வளைந் தனைய திருமேகலையின் நீங்கிப்", சீவக. 1878 : 2
மேகலை அசைதல்	புடவையின் மேற் சூழ்ந்த பவளவட மாகிய மேகலை அசைதல்	"செந்துகிர்க் கோவை சென்றேந் தல்குல் அந்துகின் மேகலை யசைந்தன வருந்த", சிலப். 4 : 29 - 30
மேகலை அணிதல்	மேகலை அணிதல்	"அணிமே கலையா ராயிரங் கணிகையர் மணிமே கலையென வாழ்த்திய ஞான்று", சிலப். 15 : 38 - 39
மேகலை அரை செய்தல்	மேகலையை அரையில் அணிதல்	"கரைசெய் காவிரியின்வட பாலது காதலான் அரை செய் மேகலை யானுமை யாறுடை யையனே", தேவா. திருஞா. 2: 6: 9: 3-4
மேகலை அரை யார்தல்	அரையில் மேகலை ஒலித்தல்	"அரையார்த்த மேகலையீ ரந்தணாளர் தலைச் சங்கை நிரை யார்ந்த கோயிலே கோயிலாக நினைந்தீரே", தேவா. திருஞா. 2 : 55 : 8 : 3 - 4
மேகலை ஆர்த்தல்	மேகலை ஒலித்தல்	"சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவும் கலம் பெறா நுசுப்பினள் காதனோக்கமொடு", சிலப். 8: 90 - 91; "பரிந்த மாலை பறைந்தன குங்குமம் கரிந்த கண்ணி கலந்த மகிழ்ச்சியின் அரிந்த மேகலை ஆர்த்தன அஞ்சிலம்பு இரிந்த வண்டிளை யார் விளையாடவே", சீவக. 1349: 1-4
மின் இலங்கு மேகலைகள் ஆர்த்தல்	மின்போல் விளங்கும் மேகலைகள் ஒலித்தல்	"பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட மின்னிலங்கு மேகலைக ளார்ப்ப வார்ப்ப வெங்கணும்", சிலப். 29 : 20 : 1 - 2

வண்ண மேகலை கள் ஆர்த்தல்	அழகிய மேகலைகள் ஒலி செய்தல்	"ஒண்மணிக் குழைவில் வீச ஒளிர்ந்து பொன்னோலை மின்ன வண்ணமே கலைகள் ஆர்ப்ப வான்சிலம் பொலிப்ப முத்தும் கண்ணியும்", சீவக. 1689 : 1 - 3
மேகலை வாய் திறந்து ஆர்த்தல்	மேகலை ஒளித்தல்	"புல்லிப் பூண்டதார் புரள மேகலை அல்குல் வாய் திறந்தாவித் தார்த்தவே", சீவக. 3129 : 3 - 4
மேகலை ஆர்த்து எழுதல்	அரையணியான மேகலை ஆர வாரித்தல்	"வில்லும் வாளும் அணிதொறும் மின்னிட மெல் அரிக் குரல் மேகலை ஆர்த்து எழ", கம்ப. 4314 : 1 - 2
மேகலை இரங்குதல்	மேகலை ஒலித்தல்	"இரங்கு மேகலை அல்குல் இன்கனித் தொண்டை யந்துவர்வாய் அரங்கக் கூத்திகண் அன்பின் மனைய வட்டுறந்து செல்பவர் போற்", சீவக. 1557 : 1 - 2
ஐவகை வண்ணத் தந்நுண் மேகலை இமைத்தல்	பச்சை, சிவப்பு, நீலம், கருப்பு, பொன்னிறம் ஆகிய ஐந்து வண்ணங் களையுடைய அழகிய நுண்ணிய மேகலை ஒளி செய்தல்	"செம்பொனோலை சேடுபடச் சுருக்கி ஐவகை வண்ணத் தந்நுண் மேகலை பையரவல்குற் பரப் பிடை யிமைப்ப", பெருங். 3 : 22 : 225 - 227
மேகலை உடீஇ	புலித்தோலை அரை யில் மேகலையாக உடுத்தல்	"வரியும் புள்ளியு மயங்கு வான்புறத் துரிவை மேகலை யுடீஇப் பரிவொடு கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்", சிலப். 12 : 29 - 31
மிடைந்த மாமணி மேகலை ஏந்துதல்	நெருங்கிய சிறந்த மணிகள் பதிக்கப் பெற்ற மேகலை அணிதல்	"மிடைந்த மாமணி மேகலை யேந்தல்குல் தடங்கொள் வெம்முலைத் தாமரை வாண்முகத்து", சீவக. 950 : 1 - 2
மணிமேகலை மருங்கிற் கிடத்தல்	மணிமேகலையை அரையில் கட்டி இருத்தல்	"கண்ணும் மனமும் கவற்றப் பண்வர இரங்குமணி மேகலை மருங்கிற் கிடப்ப", 11ஆம் திரு. 896: 47-48
மேகலை குரற் கொடாமை	மேகலை ஆரவாரிக் காமை	"வருத்த முற்றனள் என்று கொல் மேகலை குரற் கொடாது குலுங்கிக் குறைந்ததே", சீவக. 1374 : 3 - 4
மேகலை கோத்தல்	மேகலை அணிதல்	"கோத்த மேகலையினோடும் துகில்மணிக் குறங்கை கூட", கம்ப. 8827: 1
மணிமேகலை ஒருங்குடன் சாத்துதல்	விளங்கும் ஒலிசெய் கின்ற மேகலையை ஒருங்குடன் அணி வித்தல்	"அரத்த ஆடை விரித்து மீதுறீஇ இரங்குமணி மேகலை மேகலை ஒருங்குடன் சாத்திய மருங்கிற் றாகும்", 11ஆம் திரு. 878 : 21 - 22
வண்ண மேகலை சிலம்புதல்	பன்னிற மணிகளால் புனைந்த மேகலை ஒலி செய்தல்	"கண்ணிமை யாம லெண்ணுமி னென்று வண்ண மேகலை வளையொடு சிலம்பப்", பெருங். 4: 12: 57-58
மேகலையைச் சூழ்தல்	அரையில் மேகலை யைச் சுற்றிக் கட்டுதல்	"அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணி முலை மேல் மல்கிய சாந்தொடு பூண் புனைந்து", 11ஆம் திரு. 300 : 137
மேகலைக் கோவை மிடைந்து சூழ்போதல்	பல்வகைப்பட்ட மலர் களும் கொடிகளும் கோவை போன்று காணப்படுதல்	"கொடுங் கரை மேகலைக் கோவை யாங்கணும் மிடைந்து சூழ் போகிய அகன்றேந்தல்குல்", சிலப். 13 : 159 - 160
மேகலை தழுவச் சேர்த்தல்	மேகலை என்னும் ஆபரணம் பொருந்தித் தழுவும்படி அணிவித்தல்	"கருவிளை மலரின் காட்சிக் காசு அறுதூசு, காமன் திருவிளை அல்குற்கு ஏற்ப மேகலை தழுவச் சேர்த்தார்", கம்ப. 9996 : 3 - 4

மேகலை ஏணிப் படுகாலிறுகிறுகத் தாளிஇ	ஏணிப்படுகாலாகிய மேகலையை இறுகக் கட்டுதல். இருகோவை முதல் முப்பத்திரு கோவையீறாக ஒன்றற்கொன்று வடமேறுதலான் மேகலையை ஏணிப்படு கால் என்றார் (உ.வே.சா.)	"தாளித நொய்ந் நூற் சரணத்தர் மேகலை ஏணிப் படுகாலிறுகிறுகத் தாளிஇ", பரி. 10 : 10 - 11
மணிமேகலைகள் தானந் தழுவி கிடத்தல்	மேகலையாகிய அரையணி ஒட்டிக் கிடத்தல்	"மணிமேகலைகள் பேசாத் தானத் தழுவி கிடப்பச் செல்வோள்", சிலப். 923 : 3 - 4
அரியார் மேகலை ஆர்ப்பொடு துளங்குதல்	அழகமைந்த மேகலை யணி ஆரவாரத்தோடு அசைதல்	"வரிவளைக் கையு மனமுமோட அரியார் மேகலை யார்ப்பொடு துளங்கவும்", பெருங். 4: 12: 124-125
மேகலை துளும்புதல்	மேகலை மின்னொளி வீசதல்	''பாடல்வண்டு யாழ்செயும் பசும்பொன் கிண்கிணித் தோடலர் கோதையின் துளும்பு மேகலை", சீவக. 1207: 1-2
மேகலை புனைதல்	மேகலையை அணிதல்	"பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலை வளைக்கை நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழை சேர்", சிலப். 29: 9: 2-3
மேகலைகள் மின்னுதல்	மேகலை ஒளி வீசுதல்	''இன்னதருள் என்றிளையர் ஏத்தஞ்மிறார்ப்ப மின்னி னிடை நோவமிளிர் மேகலைகள் மின்னப்", சீவக. 2921: 1 - 2
மேகலைகள் மின்னுமிழல்	மேகலைகள் ஒளி வீசுதல்	"மெல்லென் சிலம்பு அரற்ற மேகலைகண் மின்னு மிழ நல்ல பெடை அன்னம் நாண அடியொதுங்கி'', சீவக. 747: 1 - 2
மேகலைகள் மெல் லெனமிழற்றல்	மேகலைகளில் உள்ள மணிகள் இசைத்தல்	''சீறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப வேறுபடு மேகலைகள் மெல்லென மிழற்றச்", சீவக. 2019: 1 - 2
மேகலை விரீஇய	அல்குலில் மேகலை யணியை விரித்துக் கட்டுதல்	"மேகலை விரீஇய தூசுவிசி யல்குல் நீருடை களை தல் செல்லார் கலங்கி", பெருங். 1: 44: 6 - 7
வடம்	மேகலை	"மணக்காற் பந்தருள் வடமென் மருங்குல்", பெருங். 2: 4: 43; "அக்கு வடம் உடுத்து ஆமைத்தாலி பூண்ட அனந்த சயனன்", பெரியாழ். 1: 8: 2 - 3

ஆ. ஆடைகள்

ஆடை	உடை	''கைபுனை தாரினர் கண்ணியர் ஐ எனும் ஆவியர் ஆடை யர்'', பரி.தி. 2:11-2; "சர்ந்தண் ஆடையை எல்லி மாலையை', கலித். 52:115; ''உதிர்துகள் உக்கநின் ஆடை யொலிப்ப", கலித். 81: 31; ''பிறிதினால் மாண்ட தெவனாம்? பொறியின் மணி பொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன அணியெல்லாம் ஆடையின் பின்", பழ. நா. 26 : 2 - 4; "ஐயமே, பிச்சை அருந்தவர்க்கு ஊணாடை ஐயமே இன்றி அறிந்து ஈந்தான்'', ஏலாதி. 70; ''திரை நீராடை யிருநில மடந்தை", சிலப். 4 : 7; "அலை நீராடை மலைமுலை யாக", சிலப். 5: 1; "மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப் பூவாடை அதுபோர்த்து'', சிலப். 7: 25; ''ஆடியும் ஆடையும் அணிதரு கலன்களும் சேடியர் செவ்வியிலேந்தினர் ஒருசார்", சிலப். 28: 63-64; "எண்

		ணில் பல்கலன்களும் ஏலுமாடையும்.'.தே", நம். திரு. 4: 3 - 5; "திருமார்பு வாய் கண்கை உந்தி காலுடை யாடைகள் செய்ய பிரான்", நம். திரு. 8: 9: 1; "வயிரக் கிடங்காடை மதிற் கன்னியது கவினே", சீவக. 105: 4; "உயிரைமதம் செய்யும் மதுத்தண்டொடுடை ஆடை", சீவக. 1874: 2; "வண்ணப்பூமாலை சாந்தம் வாலணி கலன்களாடை கண்முகத் துறுத்தித் தூய்மை காண்டலாற்'', சீவக. 1893: 1 - 2; "வேட்பன வடிசில் ஆடை விழுக்கலன் மாலை சாந்தம் கோட் குறைவின்றி ஆக்கி'', சீவக. 2078: 2-3; "தோழர்க் கெல்லா மணி கலமடி சிலாடை வேற்றுமையின்றி வேண்டுட்டமைந்தனன்'', சீவக. 2142: 2 - 3; "ஓத நெடும் கடல் ஆடை உலகினில் வாழ்", கம்ப. 216:1; "எழுமுகில் ஆடையா அகன் பந்தர் ஒத்தநெடும் பருதிவானமே", கம்ப. 6686 : 3 - 4; "மாமதில் ஆடை இலங்கையாள் நெய்கொள் சோரி நிறைந்த நெடுங்கடல்", கம்ப. 7055 : 2 - 3; "பிறவும், ஆடையும், சாந்தமும், பெய்ம்மலர்த் திறமும், நானப் புனலொடு சேக்கையும் புறமும் உள்ளும் நிறையப் புகுந்தவால்", கம்ப. 9619 : 2 - 4; "பாசிழை மகளிர் ஆடை அந்தணர் பறித்துச் சுற்ற, வாசம், மென்கலவைச் சாந்து, என்று இனையன", கம்ப. 10302 : 2 - 3; "கொய்யுளைப் புரவி, திண்தேர் குஞ்சரம் ஆடை இன்ன, மெய் உறக்கொடுத்த பின்னர்", கம்ப. 10347 : 3 - 4; "அம்பொன் மணிப்பூண் நவமணிகள் ஆடை சாந்தம் அடற்பரிமா பைம்பொன் சுரிகை முதலான பெற்று", திருத். 3815 : 3 - 4
அஞ்சுவணத்தின் ஆடை	ஐந்து நிறமுடைய ஆடை	"அஞ்சுவணத்தின் ஆடை உடுத்தாள்'', கம்ப. 4913: 1
அத்துண் ஆடை	துவரூட்டப் பெற்ற ஆடை அணிந்தவர்	"ஆய்ந்தளந்து இயற்றிய அத்துணாடையர்", சீவக. 1848: 2: 3
அந்திபோல் நிறத் தாடை	செவ்வானம் போன்ற நிறத்தையுடைய ஆடை	"அந்திபோல் நிறத்தாடையும்'', திருப்பாண். அமலன். 3
அம்துவர் ஆடை	அழகிய துவரூட்டின ஆடை	"அந்துவராடைப் பொதுவனோடு ஆய்ந்த முறுவ லாள்", கலித். 102 : 37
உடுத்தாடை	உடுத்திய ஆடை	"எள்ளே பருத்தியே எண்ணெயுடுத்தாடை ... இன்புற்று வாழ்வான் இயைந்து", ஏலாதி. 50
உடையாடை	உடையாகிய ஆடை	"போரானை ஈருரிவைப் போர்வை யானைப் புலியதளே யுடையாடை போற்றி னானைப் பாரானை மதியானைப் பகலா னானைப் பல்லுயிராய் நெடுவெளியாய்", தேவா. திருநா. 6: 50: 1: 1 - 4
உடைப்புலி ஆடை	புலித்தோல் ஆடை	"உடைப்புலி ஆடையின் மேலுர கக்கச்சு வீக்கி முஞ்சி வடத்தெரு கோவணத் தோன்றும்", 11ஆம் திரு. 950 : 1 - 3
உடையார்ந்த ஆடை	உடுத்தியிருக்கின்ற பொருந்திய ஆடை	"உடையார்ந்த வாடையன் கண்டிகையனுடை நாணினன்", நம். திரு. 3 : 7 : 4
ஊசித்துன்ன மூசிய ஆடையுடை	முள்ளாகிய ஊசி யாலேதைத்த தையல் மொய்த்த ஆடை	"மாசித் திங்கண் மாசின சின்னத் துணிமுள்ளின் ஊசித் துன்ன மூசிய வாடையுடையாகப் பேசிப் பாவாய் பிச்சை யெனக் கையகலேந்தி", சீவக. 2929: 1-3
கடுக்கொடுத்த துவராடை	கடுக்காய் நீர் கொண்டு சாயம் ஏற்றிய ஆடை	"கடுக்கொடுத்த துவராடையர் காட்சியில்லாத தோர் தடுக்கிடுக்கிச் சமணேதிரி வார்கட்குத் தன்னருள்", தேவா. திருஞா. 3: 12: 10: 1 - 2

கமழ் துவராடை	நாற்றம் வீசும் பழுப் பேறிய ஆடை	"கையி லுண்டுழல் வாருங் கமழ்துவராடையான் மெய்யைப் போர்த்துழல் வாரு முரைப்பன மெய்யல", தேவா. திருஞா. 2 : 6 : 11 : 1 - 2
கருந்துவர் ஆடை	துவருட்டின கரிய ஆடை	"காயாம் பூகண்ணிக் கருந்துவர் ஆடை", கலித். 108: 10
கீளாடை	அரையாடை	"வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர் கேளார் போல் அந்தோ குறிபட்டார் கீளாடை அண்ணற்கு அணுக் கராய்", 11ஆம் திரு. 313 : 1 - 3
கந்தை கீளாடை	கந்தை ஆடை	"முன்புதாம் கொடுக்கும் கந்தை கீளாடை கோ வணம் அன்றி", திருத். 517 : 2 - 3
கொடுந்திரை ஆடை	சுருக்கத்தோடு கூடிய வளைந்த ஆடை	"கோட்டங் கண்ணியும் கொடுந்திரை ஆடையும்", புறம். 275 : 1
கொல் புலித் தோல் நல்லாடை	புலித்தோல் ஆடை	"கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை தாயுமிலி தந்தையுமிலி தான் தனியன் காணேடீ!", திருவாச. திருச். 3 : 1 - 2
சரணத்துரி ஆடை	மயிற் பீலியோடு சேர்ந்த புலித்தோல் ஆடை	"அரையிற் சரணத்துரி ஆடையின் மீது பௌவத் திரையிற்படு வெள்ளலகார்த்து விளிம்பு சேர்த்தி", திருத். 710: 1 - 2
சரிகோவண ஆடை	ஆடை	"சந்தார் வெண்குழைய்ய சரிகோவண ஆடையனே பந்தா ரும்விரலாள் ஒருபாகம் அமர்ந்தவனே", தேவா. சுந்தர. 28 : 5 : 1 - 2
சிற்றாடை	சிறிய ஆடை	"யாப்பு உறுமென் சிறுமணி மேகலை அணி சிற்றாடை உடன்", திருத். 883 : 4 - 5; "சிற்றாடையும் சிறுபத்திர மும் இவை கட்டிலின் மேல் வைத்துப் போய்", திருத். திரு. 3 : 3 : 5
சிவந்தவாடை	பீதாம்பரம்	"செய்யன் சிவந்த ஆடையன்", திருமுருகு. 206; "அரைச் சிவந்த வாடையின்மேல் சென்றதாம் என் சிந்தனையே", திருப்பாண். அமலன். 2: 3 - 4; "சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை செம்பொன் செய்த திருஉருவம் ஆனான் தன்னை", பெரிய திரு. 2: 10: 9
துவராடை	சிவந்த ஆடை	"துற்றரையார் துவராடையர் துப்புர வொன்றியா வெற்றரை யார்அறியா நெறி வீழி மிழலையார்", தேவா. திருஞா. 3: 9: 10: 1 - 2; "தூசு புனை துவராடை மேவுந் தொழிலாருடம் பினிலுள் மாசு புனைந்துடை", தேவா. திருஞா. 3: 102: 10: 1 - 3; "தொடங்கிய நாள் அருளியஅத் தொழில் ஒழியா வழி தொடரும் கடன்புரிவார் அதுகண்டு கல் எறிவார் துவர்ஆடைப் படம் புனைவேடம் தவிரார் பசுபதியார் தம் செயலே", திருத். 3652: 1-3
செந்துவராடை	சிவந்த ஆடை	"சிலைவிற் பகழிச் செந்துவராடைக் கொலைவில் எயினர்", ஐங். 363: 1 - 2; "தேன்சொரி முல்லைக் கண்ணி செந்துவராடையாயர்", சீவக. 485: 1
செய்ய நுண் துவராடை	சிவந்த மெல்லிய காவி உடை	"செய்ய நுண்துவராடையினாரொடு மெய்யின் மாசு பிறக்கிய வீறிலாக் கையர் கேண்மை", தேவா. திருஞா. 3: 44: 10: 1 - 3
செய்ய ஆடை	செந்நிற ஆடை	"செய்ய ஆடையள் அன்ன செஞ்சாந்தினள்", கம்ப. 9432: 2
துவர் செய்யாடை	துவர்த்த நிறத்தை உடைய ஆடை	"துவர் செய்யாடைச் செந்தொடை மறவர்", நற். 33: 6
துவரியாடை	துவர்த்த நிறம் உடைய ஆடை	"துவரியாடையர் மட்டையர்", பெரிய திரு. 2: 1: 6

துன்ன ஆடை	தைக்கப்பட்ட ஆடை	"தூயவர் கண்ணும் வாயும் மேனியும் துன்ன ஆடை சுடலையில் பேயொடு ஆடலைத் தவிரும்", தேவா. சுந்தர. 25 : 3 : 1 - 3
தோனயங் கமராடை	தோலால் ஆன ஆடை	"தேனயங்கிய பைம்பொழில் சூழ்திருவான்மியூர்த் தோன யங்கம ராடையினீரடிகேள் சொலீர் ஆனை யங் கவ்வுரி போர்த்தன லாடவுகந்ததே", தேவா. திருஞா. 2: 4: 3: 2 - 4
நல்லாடை	சிறந்த ஆடை	"மணியும் பொன்னும் நல்ஆடையும் மற்றும் என் செய்ய", திருத். 530 : 3 - 4
நுண் ஆடை	நுண்ணிய ஆடை	"நிலம் தோய்பு உடுத்த நெடு நுண்ஆடையர்", பெருங். 1: 32: 64
நுண்ணாடை	மெல்லிய ஆடை	"கலந்தெழு திரை நுண்ணாடைக் கடிக்கய மடந்தை", சீவக. 964: 1
வல்லி நுண்ணிதழ் அன்ன ஆடை	மெல்லிய ஆடை	"வல்லி நுண்ணிதழன்ன ஆடை கொண்டு", பெரியாழ். 3: 4: 2: 1
நுண்துகிலாடை	மெல்லிய ஆடை	"தவர்கொண்ட தொழிற்சமண் வேடரொடுந் துவர் கொண்டனர் நுண்டுகிலாடையரும்", தேவா. திருஞா. 2: 21: 10: 1 - 2
பட்டாடை	பட்டு ஆடை	"பரந்த பவளமும் பட்டாடை சாத்தி", திருமந். 1393: 2
படிச்சோதி யாடை	ஒளி வீசும் ஆடை	"படிச்சோதி யாடை யொடும் பல்கலனாய்", நம். திரு. 3: 1: 1
பல் இயல் ஆடை	பலவகை மணிகளால் ஆன ஆடை	"கல் இயல் ஒப்பது காணும் திருமேனி பல்இயல் ஆடையும் பன்மணிதானே", திருமந். 1082 : 3 - 4
பீதகச் சிற்றாடை	சிறந்த பட்டாடை	"பின்னல் துலங்கும் அரசிலையும் பீதகச் சிற்றாடை யொடும்", பெரியாழ். 1: 8: 3
பீதகவாடை	பட்டாடை	"பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து", பெரியாழ். 5 : 2 : 8; "சக்கரமும் தடக்கைகளும் கண்களும் பீதகவாடையொடும் செக்கர் நிறத்துச் சிவப்புடை யாய்", பெரியாழ். 5: 3: 7
பொலம்புரி ஆடை	பொன்னிற ஆடை	"பொலம்புரியாடை வலம்புரிவண்ண", பரி. 3: 88
பொலம் பூவாடை	பொன்போல் விளங்கும் ஆடை	"பொன்னிற் றிகழும் பொலம் பூவாடையன்", மணி. 5 : 61
பொன்னொத்த ஆடை	பொன்னாடை; பீதாம்பரம்	"பொன்னொத்த வாடைக் குக்கூடலிட்டுப் போகின்ற போது", பெருமாள் திரு. 6: 5: 1 - 2
மாசில் தூவுடை	அழுக்கற்ற தூய்மை யான உடை	"புகைமுகந்தன்ன மாசில் தூவுடை முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்து", திருமுருகு. 138-139
வண்துவர் ஆடை	துவராடை	"மாசு மெய்யினர் வண்டுவ ராடை கொள் காசை போர்க்குங் கலதிகள் சொற்கொளேல்", தேவா. திருஞா. 3: 45: 10: 1 - 2
வண்ண ஆடை	வண்ணமிக்க ஆடை	"கண்ணியன் கழலினன் கச்சினன் றாரினன் வண்ண வாடையன் வந்திவட் டோன்றித்", பெருங். 5: 4: 36-37
வண்ண மணி ஆடை	நல்ல நிறத்தோடு கூடிய அழகிய ஆடை	"உண்ண உள; பூசஉள; சூடஉள; ஒன்றோ? வண்ண மணி ஆடை உள பெற்றேன்", கம்ப. 4584 : 1 - 4
ஆடை உடுத்தல்	ஆடையை உடுத்துதல்	"ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்", கலித்.18: 10; "ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற் சோறு", திருப். 27: 6
அஞ்சு வணத்தின் ஆடை உடுத்தல்	ஐந்து நிறங்களைப் பெற்ற சேலையை உடுத்தல்	"அஞ்சு வணத்தின் ஆடை உடுத்தாள்", கம்ப. 4913: 1

துவராடையுடுத்தல்	சிவந்த ஆடையுடுத்தல்	"துவராடையுடுத்து ஒரு செண்டு சிறப்பி", பெரிய திரு. 10: 8: 2
துன்னவாடை உடுத்தல்	கந்தலாடையை அணிதல்	"பின்னு முன்னுஞ்சில பேய்க் கணஞ் சூழத்திரிதர்வர் துன்னவாடை யுடுப்பர் சுடலைப் பொடி பூசுவர்", தேவா. திருஞா. 2: 6: 2: 2-3
பீதக ஆடை உடுத்தல்	பொன்னாடை அணிந்திருத்தல்	"உடுத்துங்களைந்த நின் பீதகவாடையுடுத்து", பெரியாழ். 1: 1: 9
பீதகவாடை கட்டி நன்கு உடுத்தல்	பீதாம்பரம் அழகாக உடுத்தல்	"கட்டி நன்குடுத்த பீதகவாடை", பெரியாழ். 3: 6: 10
சிற்றாடை செப்பனுடுத்தல்	சிற்றாடையைச் சீராக உடுத்துதல்	"செய்ய நூலின் சிற்றாடை செப்பனுடுக்கவும் வல்லள் அல்லள்", பெரியாழ். 3 : 7 : 1
தொடையுறு வற் கலை ஆடை சுற்றுதல்	தொடுத்துக் கட்டப் பெற்ற மரவுரியை இடையிலே சுற்றி உடுத்தல்	"தொடையுறு வற்கலை ஆடை சுற்றி, மேல்புடை உறு வயிர வாள் பொலிய வீக்கினான்", கம்ப. 7125: 1-2
பொன்னிற ஆடை யைக் கையில் தாங்குதல்	பொன்னிற ஆடையைத் தாங்கிக்கொண்டு இருத்தல்	"பொன்னிற ஆடையைக் கையில் தாங்கி", பெருமாள் திரு. 6: 8: 5
நுண்ணாடை நிலந் தோய்புடுத்தல்	நிலந்தோயுமாறு தாழ் வாக ஆடையுடுத்தல்	"நிலந்தோய் புடுத்த நெடு நுண்ணாடையார்", பெருங். 1 : 32 : 64
பொலம் பூவாடை பொலிதல்	பொற்பூவாடையை உடுத்துப் பொலிதல்	"பொலம் பூவாடையிற் பொலிந்து தோன்றிய", சிலப். 11 : 50
ஆடை போர்த்தல்	ஆடையாலே மெய் முழுதும் போர்த்தல்	"புண்ணிய நறுமலராடை போர்த்து", சிலப். 13 : 173
வண் துவர் ஆடை போர்த்தல்	துவராடை போர்த்தல்	"குண்டர் வண்டுவராடை போர்த்ததொர் கொள்கையினார்கள் மிண்டர் பேசிய பேச்சு மெய்யல மையணி கண்டன்", தேவா. திருஞா. 2 : 89 : 10 : 1 - 2
ஆடை மடைத்தல்	ஆடை அணிதல்	"மாசிலருமணி மடைத்த வாடையர்", பெருங். 3: 1: 119
அரத்த ஆடை விரித்து மீதுறீஇ	சிவந்த ஆடையை விரித்து உடுத்தல்	"பொலிந்துளது ஒருபால் திருவிடை இலங்கொளி அரத்த ஆடை விரித்து மீதுறீஇ", 11ஆம் திரு. 878 : 20- 21
ஈர்ங்கட்டு அயர்தல்	குளிர்காலத்திற்குரிய உடையினை அணிதல்	"இளையரும் ஈர்ங்கட்டு அயரவுளை யணிந்து", கார். நாற். 22
ஈர்ந்தண் ஆடை	ஈரத்தினாற் தண்ணிய தாகிய ஆடை	"ஈர்ந்தண் ஆடையை எல்லி மாலையை", கலித். 52: 11
ஈரணி	நீராட்டிற்குரிய ஆடை	"மகளிர் ஈரணி புலர்த்தர, வையை நினக்குமடை வாய்த்தன்று", பரி. 11 : 86 - 87; "ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்பசு நெய்கூர்ந்த மென்மையாக்கை", நற். 40: 7-8; "வதுவை ஈரணிப்பொலிந்த நம்மோடு", அகம். 166 : 13; "ஈரணிக் கேற்ற ஓடியாப் படிவத்து", கலித். 93 : 25; "நீரணி கொண்ட ஈரணி நீக்கி", பெருங். 1: 42: 143
ஈர் அணிக் கலைதல்	நீர் விளையாட்டிற்குரிய ஆடை அணிகளை அணிதல்	"இளந்துணை மகளிரொடு ஈரணி கலைஇ", அகம். 266: 5
உடுக்கை	உடை	"குன்றி யேய்க்கும் உடுக்கை", குறுந். கட. வா; "புதையிருள் உடுக்கைப் பொலம்பனைக் கொடி யேற்கு", பரி. 2 : 22; "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு", குறள். 788; "உண்டி உறையுள் உடுக்கை யிவை ஈந்தார் பண்டி தராய் வாழ்வார் பயின்று", ஏலாதி. 9; "உடுக்கை மருந்

		துறையுள் கொடுத்து குறைத் தீர்த்தலாற்றி", பழ. நா. 338; "உண்டுடுக்கைவிட் டார்களும்உயர் கஞ்சி மண்டை கொள் தேரரும் பண்டடக்கு சொற்பேசும் அப்பரி வென்றிலார்கள் சொற்கொள்ளன்மின்", தேவா. திருஞா. 3: 37: 9: 1 - 2
சீரை தைஇய உடுக்கை	மரனார் உடுக்கை	"சீரை தைஇய உடுக்கையர்", திருமுருகு. 126
பல்கிழியுடுக்கை	பல கிழிவுகளைக் கொண்ட உடை	"இரும்புலி வேங்கைக் கருந் தோலன்ன கல்லெடுத் தெறிந்த பல்கிழியுடுக்கை", அகம். 285: 8 - 9
புலரா உடுக்கை	ஈரம் புலரா உடுக்கை	"புன்மயிர் சடைமுடிப் புலரா உடுக்கை", சிலப். 25: 126
பொன்புனை உடுக்கை	பீதாம்பர உடை	"எரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்கை", பரி. 1: 10; "பொன்புனை யுடுக்கையோன் புணர்ந்தமர் நிலையே", பரி. 15 : 28
மரனார் உடுக்கை	மரப்பட்டையினாரலே பின்னிய உடை	"மரனார் உடுக்கை மலையுறை குறவர்", நற். 64: 4
மாசுணுடுக்கை	மாசுண்ட உடுக்கை	"மாசுணுடுக்கை மடிவாயிடையன்", புறம். 54: 11
மாசொடு குறைந்த உடுக்கை	மாசோடு கூடித் துணிப்பட்ட உடுக்கை	"மாசொடு குறைந்த உடுக்கையள்", புறம். 159: 13
முரணிய உடுக்கை	மாறுபட்ட ஆடை	"மாஅய் மெய்யோடு முரணிய உடுக்கையை", பரி. 4 : 8
உடுக்கை உலறுதல்	உடை சிறப்பு குன்றுதல்	"உடுக்கையுலறி உடம்பழிந்த கண்ணும் குடிப்பிறப் பாளர் தம் கொள்கையிற் குன்றார்", நாலடி. 141
உடுத்தாடை	உடுத்த உடை	"படுக்கை இலராயக் கண்ணும் உடுத்தாடை உண்டி வினவுவாரில்", பழ. நா. 329
உடுப்பு	உடை	"தொடுத்த மணிக்கோவை யுடுப்பொடுத் துயல்வர", மணி. 3: 140
உடுப்பு துயல் வருதல்	உடை அசைதல்	"தொடுத்த மணிக்கோவை யுடுப்பொடுத் துயல் வர", மணி. 3: 140
உடை	ஆடை	"உடைபெயர்த்துடுத்தலொடு, கெழீஇய நான்கே", தொல். மெய்ப். 14; "உருகெழு யானை உடை கோடு அன்ன ததர் பிணியவிழ்ந்த தாழை", நற். 299: 1 - 2; "தொன்று படுத்துளையொடு பருவிழை போகி நைந்து கரை பறைந்த என்னுடையும் நோக்கி", புறம். 376: 10 - 11; "உரு எஞ்சாது இடை காட்டும் உடை கழல் அம் துகில்", கலித். 81: 5; "பொன் ஒக்கும் உடையவை", பரி. 1: 56; "உடை செல்வம் ஊணொளி கல்வி என்னும் ஐந்தும் அடையாவாம் ஆயம்கொளின்", குறள். 939; "ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல நாணுடைமை மாந்தர்ச் சிறப்பு", குறள். 1012; "உடை நடை சொற் சோர்வு வைதல்.... குடிமைக்குத்தக்க செயல்", ஆசாரக். 49; "சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்", சிலப். 26: 25; "நாணமு முடையும் நன்கனம் நீத்து", மணி. 3: 88; "ததர் வீழப் பொடித்துக் கட்டிய வுடையினன்", மணி. 3 : 107; "உடை ஒழிந்தொரு பேச்சிடையிடை இன்றி நின்று உண்போர்", திருத். 1355: 1; "உடையும் கடியன ஊன்று வெம்பரற்களுடை", பெரியாழ். 3: 2: 9; "உண்டியே உடையே உகந்தோடும்", பெருமாள்திரு. 3: 4; "உடைமாடு கொண்டான் உங்களுக் கினியொன்று போதுமே", நாச்.திரு. 10: 7: 4; "மின்லன, உடையாகக் கொண்டு அன்றுலகளந் தான்

		குன்றம்", பேயாழ். 41: 2 - 3; "உடையுயிர் யாவை யும் உடையுமாலென்றாள்", கம்ப. 2754 : 7 - 8; "அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடைவன் தோலார்", திருத். 656: 3 - 4
உடைதோல்	தோலுடை	"உடைதோலும் சுரிகையுங் கைக்கொடுத்தான் அன்றே", திருத். 702 : 8; "முறைமை தந்த முதற் சுரிகை உடைதோலும் வாங்கிக் கொண்டு", திருத். 703: 5-6
உரியுடை	தோலுடை	"உரியுடைக் கையர் பாயின் உடுக்கையர்", திருத். 2669: 1
கந்தை கீளுடை	கரிய ஆடை	"கந்தை கீளுடை கோவணம் கருத்தறிந்துதவி", திருத். 504: 3; "ஊனும் மேன்மையில் ஊட்டி நற்கந்தைகீள் உடைகள் யாணர் வெண்கிழிக் கோவணம் ஈவது கேட்டுக் காண வந்தனம்", திருத். 512: 2 - 4
காளக உடை	கரிய உடை	"காளக உடையினன் கந்து நாமனும்", சீவக. 320: 3
சரியுடை	சரிந்த உடை	"சரியுடைச் சுடர் சாய்நிலம் சார்வுறச் சாத்தி", கம்ப. 9649: 4
செக்கர் நிறத்துச் சிவப்புடை	சிவந்த ஆடை	"செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்", பெரியாழ். 5: 3 : 7
துவரித்த உடை	காவித்துணி	"துவரித்த உடையவர்க்கும் தூய்மையில்லாச் சமணர்க்கும்", பெரியதிரு. 5 : 6 : 8
பாய் உடை	பாய் உடை	"பாயுடைப் பாதகத்தோர் திருமடப்பாங்கு செய்த தீவினை", திருத். 2627: 1-3
பொன்னிறம் கொண்ட உடை	பொன்நிற ஆடை	"பொன்னிறம் கொண்ட உடையினன்", சிலப். 22: 67
மாசில் தூஉடை	அழுக்கேறாத தூய உடை	"புகைமுகந்தன்ன மாசில் தூஉடை", திருமுருகு. 138
மரவுரியுடை	மரவுரியில் செய்த ஆடை	"மரவுரி உடையன் விருச்சிகன் என்போன்", மணி. 17: 2; "மரவுரியுடையன்", சீவக. 1231: 3
வேறுபட்ட உடை	வேறுவேறு வகை யான உடை	"வேறுபட்ட உடையும் சேறுபட்ட தசும்பும்", புறம். 377. 18
உடுத்தல்	உடை உடுத்தல்	"துகில் உடுத்தவைபோல்", பெரும். 236; "படுக்கை இலராயக் கண்ணும் உடுத்தாரை உண்டி வினவுவாரில்", பழ. நா. 185; "உடுத்தும் தொடுத்தும் ஆயமொடு துவன்றி", குறுந். 295 : 1-2; "உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்", குறள். 166; "ஒன்றன் கூறு ஆடை யுடுப்பவரே ஆயினும்", கலித். 18. 10; "உடுப்பது நாழி உடுப்பவை இரண்டே", புறம். 189: 5; "உண்டி கொல்லோ உடுப்பன கொல்லோ", மணி. 14: 46; "உடுக்கும் தழை தந்தனனே", நற். 359: 4; "உடுப்பொடு துயல் வர", மணி. 3: 140; "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண வற்றாகும் கீழ்", குறள். 1079
உடை கட்டுதல்	உடை உடுத்தல்	"ததர் வீழப் பொடித்துக் கட்டிய வுடையினன்", மணி.3: 107
சரியுடைச் சாத்துதல்	உடை அணிவித்தல்	"சரியுடைச் சுடர் சாய் நிலம் சாய்வுற சாத்தி", கம்ப. 9649 : 4
உடை புனைதல்	ஆடை அணிதல்	"கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறி உடை புனைந்து" திருத். 3459: 1-2
உடை பெயர்த்து உடுத்தல்	உடையை அவிழ்த்து மீண்டும் உடுத்தல்	"உடை பெயர்த்துடுத்தலொடு, கெழீஇய நான்கே", தொல். மெய். 14

தூஉடைப் பொலிதல்	உடை பொலிவுடன் விளங்குதல்	"பாவை தண்நறு முகையொடு வெண்ணூல் சூட்டித் தூஉடைப் பொலிந்து", அகம். 136: 14-15
உடை வீக்குதல்	உடையை இறுக்கிக் கட்டுதல்	"சேர்வு பெறக் கச்சில் செறிந்த வுடைமேல் வீக்கி வார் கழலுங் கட்டி வடிவாட் பலகை கொடுபோர் முனையில்", ஏலாதி. 11
செறிவுடை வீங்குதல்	புடவையுடை செறி வாக விளங்குதல்	"மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை", முல்லை. 59; "சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறி வுடை", பெரும். 73
துணிச்சிதர் உடுத்தல்	கிழிந்த சீரைகளை உடுத்திக் கொள்ளுதல்	"துய்ப்போர் தம்மனைத்துணிச் சிதருடுத்து", மணி. 11: 109
சிதர்வை	சிதைந்த ஆடை	"நின்னரைப் பாசியன்ன சிதர்வை நீக்கி", பெரும். 468
சிதவல்	சிதைந்த ஆடை	"தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்", குறுந். 146: 3
சிதவற்றுணி	கிழிந்த (சிதைந்த) ஆடை	"சிதவற் றுணியொடு சேணோங்கு நெடுஞ்சினை ததர் வீழப் பொடித்துக் கட்டிய உடையினன்", மணி. 3: 106 - 107
சிதார்	உடை	"பாறிய சிதாரேன்", புறம். 150: 2; "துணி சிதார் ஆகும்", நிக. சூடா. 7: 75
சிதார் உடுக்கை	கிழிந்த (சிதைந்த) ஆடை	"சிதார் உடுக்கை முதாரிப் பாண", புறம். 138: 5
சிதாஅர்	கந்தை ஆடை	"திறனில் சிதாஅர் வறுமை நோக்கி", அகம். 337 : 12; "வேற்றிழை நுழைந்த வேர்நனைச் சிதாஅர்", புறம். 69: 3; "என்னரை, நிலத்தினஞ் சிதைந்த சிதாஅர் களைந்து", புறம். 385: 5-6; "ஊருண் கேணி பகட்டிலைப் பாசி வேர்புரை சிதாஅர் நீக்கி", புறம். 392: 14; "ஈன்ற வரவினாவுரிக் கடுக்குமென் தொண்டு படு சிதாஅர் துவர நீக்கி", புறம். 393: 16; "விரும்பிய முகத் தனாகி என்னரைத் துரும்புபடு சிதாஅர் மருங்கு நீக்கி", புறம். 400: 16; "நீர்ப்படு பருந்தின் ஈர்ஞ்சிறகன்ன நிலந்தின் சிதாஅர் களைந்த பின்றை", பதிற். 2: 2; "ஈரும் பேனும் இருந்திறைகூடி வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த துன்னற் சிதாஅர் துவர நீக்கி", பொருநர். 79 : 81; "பாசி வேரின் மாசொடு குறைந்த துன்னற் சிதாஅர் நீக்கி", பொருநர். 153 - 154
சீரம்	சீலை	"தீரா மனத்தாள் தர வந்தன சீரம்", கம்ப. 1748: 4
சீரை	மரவுரி; ஆடை	"சீரை தைஇய உடுக்கையர்", திருமுருகு. 126; "ஊரை நூறும் கருங்கனலுட் பொதி சீரை நூறவை சேமஞ் செலுத் துமோ", கம்ப. 5906: 3-4; "பொன் அரைச் சீரையின் பொலிவு நோக்கினான்", கம்ப. 1763: 2; "பழுது சீரையின் உடையினன்", கம்ப. 1819: 3
மென் சீரை	மரவுரி ஆடை	"ஆய்தந்த மென் சீரை அணிந்தடி தாழ்ந்து நின்ற", கம்ப. 218: 1 - 2 (மி. பா.)
சீரையாடை	மரவுரி ஆடை	"திருஅரை சுற்றிய சீரை ஆடையன்", கம்ப. 1793: 1
சீரையுடுக்கை	மரவுரி ஆடை	"வேள்விக் கலப்பை விழுப்பொருள் விரதத்துச் சீரை யுடுக்கை வார்வளர் புன்சடை", பெருங். 2 : 15 : 39 - 40; "காலத் தொருநாட் சீலத் திறந்த சீரையுடுக்கை வார் வளர் புன்சடை ஏதமில் காட்சித் தாபதன் மடமகள்", பெருங். 4 : 15 : 4 - 6
சீரை சாத்துதல்	சீரை அணிதல்	"தான் புனை சீரையைத் தம்பி சாத்திட", கம்ப. 1754: 1; "தாழ்வினை அது வரச்சீரை சாத்தினான்",

		கம்ப. 1764: 2; "திருஅரைத் துகில் ஓரீஇ சீரை சாத்தியே", கம்ப. 1753: 4; "தன்னுடைத் திரு அரைச்சீரை சாத்தினான்", கம்ப. 2295: 2
சீரை சுற்றுதல்	அரையில் சீரை அணிதல்	"சுற்றிய சீரையும் உழையின் தோற்றமும்", கம்ப. 250: 3; "சுற்றிய சீரையன் தொடரும் தம்பியன்", கம்ப. 1771: 1; "சீரைச் சுற்றித் திருமகள் பின்செல", கம்ப. 1835: 1
சீரை திரு அரையில் சுற்றுதல்	சீரை அரையில் அணிதல்	"திருஅரைச் சுற்றிய சீரை ஆடையன்", கம்ப. 1793: 1
துன்நெடுஞ்சீரை	சீரை அணிதல்	"துன்நெடுஞ் சீரையும் சுற்றி மீண்டும் அப் பொன்நெடுந் தேரினிடை", கம்ப. 1787: 3 - 4
சீரை தைஇய	மரவுரியை அணிதல்	"சீரைதைஇய உடுக்கையர், சீரொடு வலம்புரி புரையும் வால்நரை முடியினர்", திருமுருகு. 126 - 127
சீரை புனைதல்	சீரை அணிதல்	"புனையும் சீரை துணிந்து புனைந்தனள்", கம்ப. 1829: 2
சீலை	துணி/ ஆடை	"காறையும் நாணும் வளையலும்.... சீலை", திருமந். 2894: 2; "சீலைக் குதம்பை ஒரு காது", பெரியாழ். 3: 3: 1
சீவரத்தார்	பழுப்பேறிய ஆடை உடுத்தவர்	"உறிகொள் கையர் சீவரத்தர்", தேவா. திருநா. 1: 53: 10; "வெற் றரைச் சீவரத்தார்க்கு வெளிப்பட நின்றிலர் போலும் அற்றவ ரானிழனால்வர்க்கறங்க ளுரைத்திலர் போலும்", தேவா. திருஞா. 2: 65: 10: 1 - 2; "கலவுசீவரத்தார் கையிலுண் பவர் குலவ மாட்டாக் குழகனுறைவிடம்", தேவா. திருஞா. 3: 50: 10: 1 - 2
சீவரம்	காவியுடை	"மார்பம் புதை மலி சீவரம் மறையா வருவாரும்", தேவா. திருநா. 1: 10: 10
தழை	தழையுடை	"திருந்திழை அல்குற்குப் பெருந்தழை உதவி", குறுந். 214: 4; "கானல் ஞாழற் கவின் பெறும் தழையள்", ஐங். 19 : 3; "தானும் மலைந்தனன் எமக்குந் தழையாயின", ஐங். 201: 2; "ஆம்பல், இளையமாகத் தழையாயினவே", புறம். 248: 1-2; " தழையும் தாரும் கண்ணியும்", பெருங். 1: 76: 6
அணித்தழை	அழகிய தழையுடை	"செம்பொறிச் சிலம்பொடு அணித்தழைத் தூங்கும்", பதிற். 53: 6; "மந்திரத் தோழியோடு மணங்கமழ் காவின் அணித்தழை மகளிரருங்கடிக் கமைந்த", பெருங். 3 : 9 : 54 - 55
தண்தழை	குளிர்ச்சியான தழையுடை	"தண்டழை விலையென நல்கினன் நாடே", ஐங். 147: 3; "வண்டுபடு கூந்தற் தண்டழைக் கொடிச்சி", ஐங். 256: 2; "தலைமுடி சான்ற தண்தழை உடையை", அகம். 7: 2; "கொண்டைக் கூழை தண் டழைக் கடைசியர்", புறம். 61: 1; "தண்டழை மகளி ரொடு தலைநின் றொழுகக் கண்டனிர் உளிரோ காவ லன் மகளையென்", பெருங். 2: 20: 87 - 88
உருவத் தண்டழை	அழகிய தண்ணிய தழையாடை	"உடையோ ரில்லோர்க் குறுபொருள் வீசி உருவத் தண்டழைத் தாபதன் மடமகள் வருவழிக் காண்டு நாமென விரும்பித்", பெருங். 4 : 15 : 100 - 102
குவளைத் தண்தழை	குவளை மலர்களா லான குளிர்ச்சியான தழை ஆடை	"பைஞ்சுனை குவளைத் தண்தழை யிவளீண்டு வருந்த", குறுந். 342: 5
நெறித்தழை	கட்டப்பட்ட தழையுடை	"அய வெள்ளாம்பல் அம்பகை நெறித்தழை தித்திக் குறங்கினூழ் மாறலைப்ப", குறுந். 293: 5-6

பகைத்தழை	பல தழைகள், பூக்கள், தளிர்கள் இவற்றை விரவித் தொடுத்தமைத்த தழையுடை	"செயலையம் பகைத் தழை வாடுமன்னாய்", ஐங். 211: 3
நெய்தலம் பகைத்தழை	தழையுடை	"நெய்தலம் பகைத்தழை பாவை புனையார் உடலகம் கொள்வாரின்மையின்", ஐங். 187: 3-4
பசுங்குழைத்தழை	பசிய குழையாற் ஆன தழையுடை	"பசுங்குழைத் தழையினும் உழையிற் போகான்", குறுந். 294: 6-7
பூமென் தழை	பூவையுடைய மெல் லிய தழையுடை	"தேமென் கிளவிதன் பங்கத் திறையுறை தில்லை யன்னீர் பூமென் தழையும் அம்போதுங் கொள்ளீர் தமியேன் புலம்ப", திருக்கோ. 90: 1 - 2
பைங்குழைத் தழை	பசிய தழையுடை	"பைங்குழைத் தழையர் பழையர் மகளிர்", அகம். 331: 5
பைந்தழை	பசிய தழையுடை	"பைந்தழை சிதைய கோதை வாட", நற். 363: 7; "கழனியாம்பல் முழுநெறிப் பைந்தழை", அகம். 156: 9; "பைந்தழை மாமகளிரொடு", பட். 9; "பைந் தழை அல்குற் பாவாய் பணியெனப் பரவினானே", சீவக 1499: 4
பெருந்தண் மாத்தழை	பெரிய குளிர்ச்சி மிக்க தழையுடை	"பெருந்தண் மாத்தழையிருந்த அல்குல்", அகம். 230: 3
பெருந்தழை	தழையுடை	"திருந்திழை யல்குற்குப் பெருந்தழை யுதவி", குறுந். 214: 4
முறித்தழை	தழை உடை	"முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி", அகம். 348: 9
தழைத்துகில்	தழை உடை	"கொடிமுதிர் கிழங்கு தீந்தேன் கொழுந்தடி நறவோ டேந்தி பிடிமுதிர் முலையினாள்தன் தழைத்துகில் பெண்ணினோடும்", சீவக. 1231 : 1 - 2
ஏர்இணர்த் தழையர்	அழகிய பூங்கொத்துக் களாலும் தழையாலும் இயற்றிய ஆடை யினை உடையவர்	"நீணீர் முழவின் பாணியிற் பாடியும் குழையர் கோதை யர் இழையர் ஏரிணர்த் தழையர் தாரினர் உழை வயிற் பிரியார்", பெருங். 2 : 14 : 12 - 14
தழை அணிதல்	அரையில் தழையுடை உடுத்தல்	"தழையணிந்து அலமரும் அல்குல்", நற். 320: 3; "கோடேந்து அல்குல் தழையணிந்து", நற். 368: 3; "சாரற் றழையணி அல்குல் மகளிர்", குறுந். 125: 3; "தழையணி யல்கு றாங்கல் செல்லா நுழைசிறு நுசுப்பிற் கெவ்வமாக அம்மெல்லாகம் நிறைய வீங்கி", குறுந். 159: 1 - 3; "தழையணி அல்குல் செல்வத் தங்கையர்", அகம். 320: 3; "ஏந்துகோட்டம் பூந்தொடலை அணித் தழையல்குல்", புறம். 341: 1-2
தழை உடீஇ	தழையுடை உடுத்தல்	"அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்", அகம். 59: 5; "குல்லை இலையுடை நறும்பூச் செங்கால் மராஅத்த வால் இணர் இடைஇடுபு சுரும்பு உணத்தொடுத்த பெருந் தண் மாத்தழை திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ", திருமுருகு. 201: 204
தழை உடுத்தல்	தழையுடை உடுத்தல்	"உடுக்கும் தழை தந்தனனே", நற். 359: 4
தழை அணி கூட்டுதல்	தழையுடை அணிதல்	"பாசழைக் கலித்த கணைக்கால் நெய்தல் விழவு அணி மகளிர் தழை அணிக் கூட்டும்", அகம். 70: 11 - 12; "ஐதகல் அல்குல் தழையணி கூட்டும் கூழை நொச்சிக் கீழது", அகம். 275: 16 - 17
தழைக் கூட்டுதல்	தழையுடை அணிதல்	"அல்குல் தழைக்கூட்டு அங்குழை யுதவிய", அகம். 383: 8

தழை தாழ்தல்	தழையுடை உடுத்தல்	"தழைதாழ் அல்குல் இவள் புலம்ப அகல", குறுந். 345: 4
அணித்தழை துயல்வருதல்	தழையுடை அசைதல்	"ஆம்பலணித் தழை யாரந் துயல் வருந் தீம்புன லூரன் மகளிவள்", திணை. ஐம். 40: 1-2
பைந்தழை துயல்வருதல்	தழையுடை அசைதல்	"பைந்தழை துயல் வருஞ் செறு", புறம். 339: 9
தழை தைஇ	இலைகளாலான உடை உடுத்தல்	"தழையுங் கோதையு மிழையு மென்றிவை தைஇணர் மகிழ்ந்து", கலித். 102: 5-6; "அம்பகை நெறித்தழை அணி பெறத் தைஇ", நற். 96: 8; "காவி, அம்பகை நெறித்தழை அணிப் பெறத் தைஇ", நற். 123: 7; "பிணையல் அம்தழை தைஇய", நற். 170: 3; "தளிர்சேர் தண்தழை தைஇ", நற். 204: 1; "அரி மலர் ஆம்பலோடார் தழை தைஇ", அகம். 176: 14; "இலங்கேர் எல்வளையேர் தழை தைஇ", கலித். 125: 12; "பைவிரியல் குல்கொய்தழை தைஇ", குறிஞ். 102
செண்பகச் சோலைத் தண் டழை தைஇ	செண்பகத் தழை களை ஆடையாக்கி உடுத்துதல்	"நறுமலர்ச் செல்வமொடு நாட்கடி கமழும் செண்பகச் சோலைத் தண்டழை தைஇயும்", பெருங். 2: 14: 35-36
மணிப்பூம் பைந் தழை தைஇ	அழகிய பூக்களோடு மேவிய பசியதழை உடையினை அழகு பொருந்த உடுத்துதல்	"வெண்டலைப் புணரி ஆயமொடாடி மணிப்பூம் பைந் தழை தைஇ யணித்தகப் பல்பூங் கானல் அல்கினம் வருதல்", அகம். 20 : 9 - 11
தழை நுடங்குதல்	தழையுடை அசைதல்	"நுடங்கு தழைத் திதலை அல்குல்", ஐங். 72: 1-2
அணித்தழை நுடங்குதல்	தழையுடை அசைதல்	"அணித்தழை நுடங்க ஓடி", புறம். 340: 1
ஆய்தழை நுடங்குதல்	தழையுடை அசைதல்	"ஆய்தழை நுடங்கு அல்குல்", ஐங். 291: 3
பகைத்தழை நுடங்குதல்	தழையுடை அசைதல்	"பல்பூம் பகைத்தழை நுடங்கு மல்குல்", நற். 8: 2
வண்ண ஒண் தழை நுடங்குதல்	தழையுடை அசைதல்	"வண்ண வொண்டழை நுடங்க வாலிழை ஒண்ணுதல் அரிவை", ஐங். 73: 1-2
பூந்தழை புனைதல்	தொடுக்கப்பட்ட மலர்களுடன் கூடிய தழையுடை அணிதல்	"புனைபூந் தழை அல்குல் பொன்னன்னாய்! சாரல் தினைகாத் திருந்தோம் யாம் ஆக", ஐந். ஐம். 14: 1 - 2
தழை அணிப் பொலிதல்	தழையுடை விளங்குதல்	"உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும் தழை யணிப் பொலிந்த ஆயம்", குறு. 295: 1-2; "தழை யணிப் பொலிந்த கோடேந்து அல்குல்", அகம். 201: 6
தழைப்பீலி மரவுரி மேல் சார எய்துதல்	தழையும் மரவுரியும் அணிதல்	"தழைப்பீலி மரவுரி மேல் சார எய்தி", திருத். 697: 3
தொடலை	தழையாடை	"கடலுடனாடியுங் கான லல்கியும் தொடலை யாய மொடு தழுவணி யயர்ந்தும்", குறுந். 294: 1-2; "தொடலை யாயமொடு கடலுடன் ஆடியுந்", அகம். 110 : 6; "மகளிர் ஐது அகல் அல்குல் தொடலை ஆகவும் கண்டனம்", புறம். 271 : 3 - 4; "தொடலை அல்குல் தொடித்தோள் மகளிர்", புறம். 339 : 6; "பரதர் மகளிர் தொடலை சேர்த்து ஆடும் துறைவ", திணை. ஐம். 45: 2 - 3
ஆம்பலந் தொடலை	ஆம்பலால் கட்டப் பட்ட மாலையுடை	"அரிபெய் சிலம்பினாம்பலந் தொடலை அரம் போழவ் வளை பொலிந்த முன்கை", அகம். 6: 1 - 3

பூக்கெழு தொடலை	பூக்கள் பொருந்திய மாலையுடை	"பூக்கெழு தொடலை நுடங்க வெழுந்தெழுந்து கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி", அகம். 28: 9 - 13
பூந்தொடலை	அழகிய பூக்கள் விரவித் தொடுத்த மாலை	"வேந்துகுறை யுறவுங் கொடாஅ னேந்துகோட் டம்பூந் தொடலை யணித்தழை யல்குல்", புறம். 341 : 1 - 2
வீநறு முல்லை வெண்போழ் தைஇய அலங்கலந் தொடலை	முல்லையின் நறிய மலரைப் பனங் குருத்தின் போழுடனே சேர்த்துத் தொடுத்த அசைகின்ற மாலை	"மீமிசைக் கலித்தவீநறு முல்லை ஆடுதலைத் துருவின் தோடுதலைப் பெயர்க்கும் வன்கை இடையன் எல்லிப்பரீஇ, வெண்போழ் தைஇய அலங்கலந் தொடலை மறுகுடன் கமழும் மாலை", நற். 169 : 5 - 9
சுனைப் பூக்குற்றுத் தொடலை தைஇப்	சுனையில் மலர்ந்த மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டிப் புனைதல்	"சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப் புனக் கிளி கடியும் பூங்கட் கோதை", குறுந். 142 : 1 - 2
நெய்தல் பூவுடன் நெறிதரு தொடலை தைஇ	நெய்தல் மலருடன் நெறிக்கின்ற இலையை இடையிடையே இட்டுத்தொடுத்த மாலை உடுத்தல்	"தண்ணந் துறைவன் முன்னாள் நம்மொடு பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல் பூவுடன் நெறிதரு தொடலை தைஇத்", நற். 138 : 5 - 7
பாதிரி விரிமலர் குவைஇத் தொடலை தைஇ	வேனிற் காலத்து மலர்கின்ற பாதிரியினது மலர்களைத் தொடுத்த தொடலையை அணிதல்	"வேனிற் பாதிரி விரிமலர் குவைஇத் தொடலை தைஇய மடவரன் மகளே", ஐங். 361 : 2 - 3
வேங்கை ஒள்ளிலைத் தொடலை தைஇ	மலர்ந்த வேங்கையின் ஒள்ளிய இலை விராவிய மாலையினை அணிதல்	"அகலறை மலர்ந்த அரும்பு முதிர் வேங்கை ஒள்ளிலைத் தொடலை தைஇ மெல்லென நல்வரை நாடன் தற்பா ராட்ட", அகம். 105 : 1 - 3
அரத்த ஆடை	சிவந்த ஆடை	"அண்ணன் அவ்இராவணன் அரத்தவாடையன்", கம்ப. 5108: 3
அரத்தப் பூம்பட்டு	சிவந்த நிறமுடைய பட்டு	"பொங்கொளி அரத்தப் பூம்பட்டு உடையினன்", சிலப். 22: 46; "அரத்தப் பூம்பட்டு அரைமிசை உடீஇ", சிலப். 14: 86
அரத்தம்	சிவந்த ஆடை	"நீலமும் அரத்தமும் வாலிழை வட்டமும்", பெருங். 1 : 42 : 208; "புகைக் கொடிப்புத்தேள் பொருக்கென ஊட்டி அழற்கொடி அரத்த மறைத்தவோ எனவும்", பெருங். 2: 19: 148 - 149
அரத்தம் உடுத்தல்	செம்பட்டை உடுத்தல்	"அரத்த முடீஇ அணிபழுப்பப் பூசி", திணை. நூற். 144
அறுவை	ஆடை	"அறுவை, தூவிரி கடுப்பத் துவன்றி, மீமிசை தண்பல விழிதரும் அருவி", புறம். 154: 10 - 12; "நறுமடி செறிந்த அறுவை வீதியும்", சிலப். 14: 207; "அக்காரம் ஆட ரவம் நாண் அறுவை தொல்பொடி சாந்து அக்காரம் தீர்ந்தேன் அடியேற்கு", 11ஆம் திரு. 625: 1 - 2; "அந்தரத் தறுவை வைப்பார் அந்தணர் அங்கை கொட்டி", சீவக. 1279: 3; "மாமறையோர் குழாத்தினுடன் மல்கு திருத் தொண்டர் குழாம் மருங்கு சூழ்ந்து தாமறுவை உத்திரியந் தனி விசும்பில் எறிந்து ஆர்க்கும் தன்மையாலே", திருத். 1998: 1 - 2
உள்ளீட்டறுவை	ஆடை	"வெள்ளிற் பாடையு முள்ளீட்டறுவையும் பரிந்த மாலையும் உடைந்த கும்பமும்", மணி. 6 : 93 - 94

தூவெள்ளறுவை	மிக வெண்மையான ஆடை	"கால்கழி கட்டிலிற் கிடப்பித் தூவெள்ளறுவை போர்ப் பித்திலதே", புறம். 286: 4 - 5; "தூவெள்ளறுவை மாயோற் குறுகி", புறம். 291: 2; "களர்ப்படு கூவற்தோண்டி நாளும் புலைத்தி கழீஇய தூவெள்ளறுவை", புறம். 311: 1-2
நுண் அவிர் அறுவை	நுண்ணிதாகிய பீறின ஆடை	"நுண்ண விரறுவையன் நொசித்த நோக்கினன்", சீவக. 2010: 2
அறுவைக் கோதிய ஐவகை வண்ணம்	ஆடைக்குரிய ஐந்து வகை நிறம்	"அறுவைக்கோதிய ஐவகை வண்ணத்து", பெருங். 2 : 5 : 128
அறுவைத் தூமடி	மாசற்ற ஆடை	"துறைபோகு அறுவைத் தூமடியன்ன", நற். 70 : 2
அறுவை உடீஇ	ஆடையை உடுத்தல்	"காம்பு சொலித்தன்ன அறுவையுடீஇ", சிறுபாண். 236
விரிநூல் அறுவை இருநிலந் தோய்தல்	ஆடை இரு நிலத் தோய உடுத்தி இருத்தல்	"ஓடாப் பூட்கையொண் பொறி கழற்கால் இருநிலந் தோயும் விரிநூல் அறுவையர்", பதிற். 34 : 2 - 3
நீல அறுவை விரித்துடுத்தல்	நீலச் சிற்றாடையை விரித்துக் கட்டுதல்	"தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி நீல அறுவை விரித்துடுத்துக் கோலஞ்சேர் பந்தரில் பாவை கொண்டாடும் இப்பாவைக்கு", 11ஆம் திரு. 300: 82 - 83
கச்சு	அரையில் அணியும் துணி; கச்சை	"கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்", அகம். 76: 7; "பொற்றொடி நிறைக்கோல் பற்றிய கையினர் கழலுங் கச்சுங் கலிங்கமு மற்றவர் விழைவன அறிந்து வேறுவே றடக்கிக் காட்சி முந்துறுத்த மாட்சியராகிப்", பெருங். 3: 17: 173 - 176; "கண்ணியன் கழலினன் கச்சினன் தாரி னன் வண்ண வாடையன் வந்திவட் டோன்றித்", பெருங். 5: 4: 36-37; "கச்சொடு பொற்சுரிகை காம்பு கனக வளை", பெரிய திரு. 1 : 2 : 8; "கச்சும் வாளும் தம் காறொடர்ந்து ஈர்வன காணார் அச்சமென்ப தொன்றுருவு கொண்டால் எனஅழிவார்", கம்ப. 3014: 1 - 4; 'கச்சொடு ஆர்த்த கறைக்கதிர் வாளினன்", கம்ப. 1959: 1
அம்பூங்கச்சு	அழகிய கச்சு	"சுரிகை அம்பூங்கச்சிடைக் கோத்து வாங்கி", சீவக. 698: 2
அம்பொன்கச்சு	அழகிய ஒளிவீசும் கச்சு	"அலம்வரு நிழல் உமிழ் அம்பொன் கச்சினால்", கம்ப. 1222: 2
கருங்கச்சு	கரிய கச்சை	"பெரும்புறத் திட்ட கருங்கச் சீர்ப்பினர்", பெருங். 3: 20: 3
பத்திக் கச்சு	கச்சு	"சித்திரப் பிணையலும் பத்திரச் சுரிகையும் பத்திக் கச்சினொடு ஒத்தவை பிறவும்", பெருங். 2 : 5 : 143 - 144
பூங்கச்சு,	பூவேலை செய்யப் பட்ட கச்சு	"நுரைவிரித்தன்ன நுண்ணூற் கலிங்கம் அரைவிரித் தசைத்த வம்பூங்கச்சொடு", பெருங். 3: 17: 170 - 171; "பூங்கச்சு நீக்கிப் பொறிமாண் கல நல்ல சேர்த்தி", சீவக. 16: 2; "தேன் அலர் கொன்றையார் தம் திருமேனிப் பூங்கச்சு ஏய்ந்த மானவன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்தல் உற்றார்", திருத். 862: 4 - 8
செம்பூங்கச்சு	சிவந்த பூத்தொழில் உடைய கச்சை	"வெண் பூந்துகிலும் செம்பூங்கச்சும் சுரிகையும் வாளும் உருவொடு புணர்ந்த அணியினராகி", பெருங். 3: 17: 127 - 129
வரிக் கச்சு	கச்சு	"தண்பனி வைஇய வரிக் கச்சினனே", ஐங். 206: 5; "பொருகணைத் தொலைச்சிய புண்டீர் மார்பின் விரவு வரிக் கச்சின் வெண்கை யொள் வாள் வரையூர் பாம் பின் பூண்டு புடை தூங்க", பெரும். 70 - 72; "வரிக் கச் சில் பிணிக்கப்பட்டான் மன்னனால் என்ன", சீவக. 1133: 2

விரவு வரிக்கச்சு	கச்சு	"இரவுபகற் செய்யும் திண்பிடி ஒள்வாள் விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்", முல்லை. 46-47
வரிக்கச்சு ஒளிர்தல்	கச்சு ஒளிர்தல்	"கொற்றமேவு திசையானையின் மணிக் குலமுடைக் கற்றை மாசுணம் விரித்து வரிக்கச் சொளிரவே", கம்ப. 2530: 4 - 8
கச்சு விரிந்திலங்குதல்	கச்சு இலங்குதல்	"கலாவப் பல்காழ் கச்சு விரிந்திலங்க", பெருங். 5: 1: 138
கச்சு பொலிய வீக்குதல்	கச்சினைப் பொலிவு பெறும்படி இறுகக் கட்டுதல்	"பொன்திகழ் அறுவை சாத்திப் பூங்கச்சு பொலிய வீக்கி", திருத். 414: 7-8
கச்சினோடு அணவரல்	கச்சு அசைதல்	"கைந்நுண் மீக்கோள் கச்சினோடணவர", பெருங். 5: 2: 22
கச்சொடு சாத்துதல்	கச்சொடு சேர்த்துக் கட்டுதல்	"வாள் வலம்பட மந்தரம் சூழ்ந்த மாசுணத்தின் தாள் வலந்து ஒளிர் தமனியக் கச்சொடும் சார்த்தி", கம்ப. 9646: 1 - 2
கச்சு சுற்று ஆர்தல்	சூழ கச்சு உடுத்தல்	"சுற்று ஆர்ந்த கச்சில் சுரிகை புடைதோன்ற ஆர்த்து", கம்ப. 1719: 1
கச்சு செறித்தல்	கச்சு அணிதல்	"சிந்து ராகத்தின் செறிதுகில் கச்சொடு செறிய", கம்ப. 5847: 1
கச்சு தரித்தல்	கச்சை அணிதல்	"நச்சர வாட்டிலர் போலு நஞ்ச மிடற்றிலர் போலுங் கச்சுத் தரித்திலர் போலுங் கங்கை தரித்திலர் போலுங்", தேவா. திருஞா. 2: 65: 4: 1-2
பெருங் கச்சு நிறீஇ	கச்சு அணிதல்	"பெருங்கச்சு நிறீஇ", நற். 220: 1
கச்சு பிணித்தல்	கச்சு இறுகக் கட்டுதல்	"பெரும் புறத் தலமரப் பிணித்த கச்சினர்", சீவக. 2224: 2
வரிக் கச்சினால் பிணித்தல்	கச்சினால் கட்டப் படுதல்	"வரிக்கச்சில் பிணிக்கப்பட்டான் மன்னனால் என்ன", சீவக. 1133: 2
நீலக்கச்சு புனைதல்	நீல நிறமுடைய கச்சு அணிதல்	"நிறங்க வர்பு புனைந்த நீலக்கச்சினர்", மது. 369
கருங்கச்சு யாத்தல்	கரிய நிறமுள்ள கச்சை கட்டுதல்	"கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று... புனல்நயந் தாடும் அத்தி", அகம். 376: 8-10
பூங்கச்சு அரை விரித்தசைத்தல்	அழகிய பூ வேலை செய்த கச்சு அரையின் கண் விரித்துக் கட்டுதல்	"நுரைவிரித் தன்ன நுண்ணூற் கலிங்கம் அரைவிரித் தசைத்த வம்பூங் கச்சொடு", பெருங். 3: 17: 170-171
கச்சு விரிந்து இலங்குதல்	கச்சு விரிந்து ஒளி வீசுதல்	"நிலாவுறழ் பூந்துகில் நெகிழ்ந்து இடைதோன்ற கலாவப் பல்காழ் கச்சு விரிந்திலங்க", பெருங். 5: 1: 137 - 138
வார் கச்சிற் றானை வீக்குதல்	கச்சினால் ஆடையை இறுகக் கட்டுதல்	"வண்ணப் பொற்கடக மேற்றா வார்கச்சிற்றானை வீக்கா", சீவக. 978 : 3
கச்சில் செறிந்த உடை வீக்குதல்	கச்சினால் ஆடையை இறுக்கிக் கட்டுதல்	"ஆர்கொல் பொர அழைத்தார் என்றரியேற்றிற் கிளர்ந்து சேர்வுபெறக் கச்சில் செறிந்தவுடை மேல் வீக்கி", ஏலாதி. 11
கச்சினால் வாள் வீக்குதல்	கச்சில் வாள் அணிதல்	"அம்பொன் கச்சினால்........ வாளும் வீக்கியே", கம்ப. 1222: 2 - 4
கச்சு வீக்குதல்	கச்சு கட்டுதல்	"கழலுடை யிளையவர் கச்சின் வீக்கலின்", சீவக. 1092: 2
கச்சு பொலிய வீக்குதல்	கச்சினை இறுகக் கட்டுதல்	"பொன் திகழ் அறுவை சாத்திப் பூங்கச்சு பொலிய வீக்கி", திருத். 414: 7 - 8

கச்சை	அரையிற் கட்டும் துணி	"அரைச் செறி கச்சை யாப்பு அழித்து அசைஇ", நற். 21: 2; "கதிர் வாட் கச்சையர்", பெருங். 1: 37: 7; "உற்றோ னுற்ற வுறுகண் தீர்க்கெனக் கற்றோய் கலிங்கங் கட்டிய கச்சையன் ஊழி யிறுதி யுட்குவரத் தோன்றி", பெருங். 1 : 46 : 96 - 98; "தின்மை செறிவில் சேடக மகளிர் தன்மை கடுக்குந் தானைக் கச்சையர்", பெருங். 1: 46: 242 - 243; "வாடாத் தாரினர் சேடார் கச்சையர்", பெருங். 2: 6: 123; "காழகம் வீக்கிய கச்சையன்", சீவக. 939: 3; "கச்சையும் கவசமும் கழல", கம்ப. 3024 : 2
நீலக் கச்சை	நீலநிறக் கச்சை	"நீலக் கச்சைப் பூவாராடை, பீலிக் கண்ணிப் பெருந் தகை மறவன்", புறம். 274 : 1 - 2; "மேலாண் மல்லன் பாடிகாத்த நீலக்கச்சை நிரைகழன் மறவரை வேலிற் சாய்த்துங் கோல மான்றேர்", பெருங். 3 : 17 : 230 - 232
நுண் வினைக் கச்சை	நுண்ணிய தொழில் உடைய கச்சை	"வண்ணவரி வில்லேந்தி அம்புதெரிந்து நுண்வினைக் கச்சை தயக்கறக் கட்டி", குறிஞ். 124 - 125
பசும் பொற்கச்சை	பொற்கச்சை	"பொன் பொலிந்தியலும் பொங்குபூந்தானைப் பசும் பொற் கச்சை பத்தியிற் குயின்ற", பெருங். 2: 6: 141-142
பூவிரிக் கச்சை	பூவேலைப்பாடு மிக்க கச்சை	"காவெரியூட்டிய கவர்கணைத் தூணிப் பூவிரிக் கச்சைப் புகழோன் தன்முன்", சிறுபாண். 238: 239
பெரும் புடைக் கச்சை	இருப்புத் தகடுகளை இடையிடையே அமைத்தியற்றப்பட்ட பெரிய பக்கங்களை உடைய கச்சை	"வெங்கணை திருத்தி வில்லிடந்தழீஇ இரும்பிடையிட்ட பெரும்புடைக் கச்சையன்", பெருங். 1: 55: 48-49
பொற்கச்சை	பொன்னாடை	"செம் பொற் கச்சையர்", பெருங். 1: 39: 31; "வரிக் குப்பாயத்து வார் பொற்கச்சையர்", பெருங். 1: 40: 378
கச்சையுடை	கச்சை	"பாசுபத விச்சைவரி நச்சரவு கச்சையுடை பேணியழ கார் பூசுபொடி யீசனென வேத்தவினை நிற்றலில் போகு முடனே", தேவா. திருஞா. 3: 72: 8: 5-8
கச்சை கட்டுதல்	கச்சையை இறுகக் கட்டுதல்	"கட்டிய கச்சையள் கைவிரல் கூப்பி", பெருங். 2: 5: 171
தோற் கச்சை அரையிற் கட்டுதல்	தோலாலாக்கப் பெற்ற கச்சையை அரையில் கட்டுதல்	"குருதி புலராச் சுரிகை எ∴கம் அரையிற் கட்டிய உடை தோற்கச்சையன்", 11ஆம் திரு. 514: 3 - 4
கச்சை அரைச் செறித்தல்	கச்சையை அரையில் இறுகக் கட்டுதல்	"அரைச் செறி கச்சை யாப்பழித் தசைஇ", நற். 21: 2
செறிமென் கச்சை சேர்தல்	இறுக்கி யாத்த கச்சை அணிதல்	"நறுநெய் தோய்ந்த நார்நூல் வெண்டுகிற் செறிமென் கச்சை சேர்ந்த வல்குலர்", பெருங். 1 : 43 : 125 - 126
கச்சை தாழ்தல்	கச்சை தாழக் கட்டுதல்	"வீழ்ந்த வெண்மலர் வெறுநிலம் படாது தாழ்ந்த கச்சைநின் தாள்முதல் தங்கலிற்", பெருங். 2 : 13 : 57 - 58
கச்சை வீக்குதல்	கச்சையை இறுக்கியணிதல்	"வேலுங் கணையமும் வீழினு மிமையார் வீரியத் தறு கணர் வீக்கிய கச்சையர்", பெருங். 1: 46: 17 - 18; "கச்சையும் வீக்கினன் கறங்கிரு மணி அணிந்து", சீவக. 1836: 1
கம்பல்	ஆடை	"தீரத்தறைத்த தலையுந் தன் கம்பலும்", கலித். 65: 6
கலிங்கம்	ஆடை; பட்டாடை	"மாசுபட்டன்றே கலிங்கமும் தோளும்", நற். 380: 2; "கழு வுறு கலிங்கம் கழாஅதுடீஇ", குறுந். 167 : 2; "கலிங்கம் அளித்திட்டு", புறம் 400: 13; "கழுவுறு கலிங்கம் கடுப்பச் சூடி", பதிற். 8: 6; "நலம்பெறு கலிங்கத்துக் குறங்கில் மிசை அசைஇயது ஒருகை",

		திருமுருகு. 109; "கானமஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்'', சிறுபாண். 85-86; "நிழல் திகழ் நீலம் நாகம் நல்கிய கலிங்கம்" சிறுபாண். 95; "மையுண்டு கழுமிய மாசுபடு கலிங்கத்திளை யோர்'', பெருங். 1: 35: 120-121; "கற்றோய் கலிங்கம் கட்டிய கச்சையினன்", பெருங். 1: 46: 97; "கையமைத்து இயற்றிய கலிங்கத் துணியினர்", பெருங். 3: 1: 99; "கழலுங் கச்சுங் கலிங்கமு மற்றவர் விழைவன வறிந்து வேறு வேறடக்கிக் காட்சிமுந்துறுத்த மாட்சியராகிப்", பெருங். 3: 17: 174-176
ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்	மெல்லிய நூலால் செய்யப்பட்ட ஆடை	''ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம் இரும் பேரொக்கலோடு ஒருங்குடன் உடீஇ", பெரும். 469 - 470
ஒண் பூங்கலிங்கம்	பூ வேலைப்பாடு உடைய ஆடை	"வெயிற் கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுச் செக்கரன்ன சிவந்து நுணங்குருவிற்கண்பொரு புகூமொண் பூங்கலிங்கம் .... புரளும் தானை", மது. 431 : 435
கருங்காற் கலிங்கம்	ஆடை	"கருங்காற் கலிங்க மொடு காஅழ் கலக்கி", பெருங். 1: 37: 239
கல்லுண் கலிங்கம்	காவிக்கற் குழம்பு தோய்த்த ஆடை	"கல்லுண் கலிங்க நீக்கிக் காவலன் இல்லின் மகளிரேந்துவன ரீத்த கோடி நுண்டுகில்", பெருங். 4: 16: 33-35
கழுமடிக் கலிங்கம்	கழுவி தூய்மை யாக்கப்பட்ட ஆடை	"பானீர் நெடுங்கடற் பனிநாள் எழுந்த மேனீர் ஆவியின் மெல்லிதாகிய கழுமடிக் கலிங்கம் வழுவில வாங்கி", பெருங். 2: 7: 155-157
காடி கலந்த கோடிக் கலிங்கம்	கஞ்சியூட்டப்பட்ட புத்தாடை	"பள்ளிமாடத்துப் பருஉச்சுடர் கொளீஇக் காடி கலந்த கோடிக் கலிங்கம்", பெருங். 1 : 54 : 8 - 9
காடி கொண்ட கழுவுறு கலிங்கம்	கஞ்சியூட்டப்பட்ட ஆடை	"காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத் தோடமை தூமடி விரித்த சேக்கை", நெடு. 134 - 135
கைபுனை கலிங்கம்	ஆடை	"கைபுனை கலிங்கத்து ஐது கலந்து ஒன்றி", பெருங். 1: 46: 260
சோறமைவுற்ற நீருடைக் கலிங்கம்	கஞ்சியிட்ட ஆடை	"சோறமைவுற்ற நீருடை கலிங்கம்", மது. 721
நுண் பூங்கலிங்கம்	மெல்லிய பூ வேலைப் பாடுடைய ஆடை	"நுரையெனவிரிந்த நுண் பூங்கலிங்கம்", சிலப். 22:21
நுரைக் கலிங்கம்	மென்மையான ஆடை	"மின் விரித்தனையது ஒத்து விலை வரம்பு அறியலாகா இன் நுரைக் கலிங்கம் ஏற்ப மருங்கினுக்கு எழுதி வைத்தான்", சீவக. 697: 3-4
நுரைவிரித்தன்ன நுண்ணூற் கலிங்கம்	நுரை விரிந்தாற் போன்ற நுண்ணிய நூலால் நெய்யப் பட்ட ஆடை	"ஏற்றிய கோலமொடு நுரைவிரித்தன்ன நுண்ணூற் கலிங்கம்", பெருங். 3 : 17 : 169 - 170
நூற்கலிங்கம்	நூலாடை	"இழை மருங்கறியா நுழை நூற்கலிங்கம் எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ'', மலை. 561; "அம்மா சூர்ந்த அவிர் நூற் கலிங்கமொடு", நெடு. 146
நொம்மென் கலிங்கம்	மெல்லிய ஆடை	''பொன்தோரணத்தைச் சுற்றிய துகிலென அம்மென் குறங்கின் நொம்மென் கலிங்கம்", 11ஆம் திரு. 896: 45-46
பட்டியற் கலிங்கம்	பட்டில் இயற்றிய ஆடை	"பட்டியற் கலிங்கமொடு பாசிழை நல்கி இலைத் தொழிற் றடக்கையன்", பெருங். 1 : 37 : 156 - 157

பூங்கலிங்கம்	சிறந்த ஆடை	"புகாப் புகர்கொண்ட புன் பூங்கலிங்கமொடு", நற். 90: 4; "பல்கலை சில் பூங்கலிங்கத்தள் ஈங்கிதோர் நல்கூர்ந்தார் செல்வமகள்", கலித். 56: 11-12
வான் பூங்கலிங்கம்	சிறந்த ஆடை	"பாம்புரித்தன்ன வான்பூங் கலிங்கம்", புறம். 397: 15
வண்ணக் கலிங்கம்	பல்வேறு வண்ணங் களையுடைய ஆடை	"ஏவன்மகளிர் வாய்மொழிக் கம்பலும் வண்ணக் கலிங்கத்துக் கண்ணறைக் கண்டம்", பெருங். 2: 2: 109 - 110
வெள்ளைக் கலிங்கம்	வெள்ளை நிற ஆடை	"வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர் பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்", திருவாச. அன்னைப். 7: 1 - 2
கலிங்கம் திண் ணென அசைதல்	கலிங்கமாகிய ஆடை அசைதல்	"கண்ணெழிற் கலிங்கம் திண்ணென அசைத்து", பெருங். 3 : 9 : 61
கலிங்கம் உடீஇ	கலிங்கம் உடுத்தல்	"பாம்புரியன்ன வடிவின காம்பின் கழைபடு சொலியின் இழையணி வாரா ஒண் பூங்கலிங்கம் உடீஇ", புறம். 383: 9 - 11; "நேர்கரை நுண்ணூற் கலிங்க முடீஇ", புறம். 392: 14-15; "பகன்றைப் புதுமலரன்ன அகன்றுமடி கலிங்கம் உடீஇ", புறம். 393: 17-18; "கோடிக் கலிங்கமுடுத்து குழல் கட்டி நீடித் தலையை வணங்கி", சிலப். 21: 32; "காதிற் கடிப்பிட்டுக் கலிங்கமுடுத்து", பெரிய திரு. 10: 8: 1; "உடுத்தாள் கற்றோய் கலிங்கம் உரவோன் சிறுவன் உயர்கெனவே", சீவக. 353: 4; "தெள்ளறல் நீர் சொரிந்தாட்டினர் தேம்புகை உள்ளுற வுண்ட கலிங்கம் உடுத்தபின் கள்ளவிழ் கண்ணி கலத்தொடணிந்தார்" சீவக. 1476: 2 - 4
கலிங்கத்துள் ஒடுங்குதல்	கலிங்கம் உடுத்தல்	"கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து ஒடுங் கினள்", அகம். 86: 21-22; "காதல் கொள் வதுவை நாட் கலிங்கத்துள் ஒடுங்கிய", கலித். 69: 3
கலிங்கம் கவவிக் கிடத்தல்	கலிங்கம் உடுத்தல்	"கன்னிக் கலிங்கமகிலார்ந்து கவவிக் கிடந்த குறங்கினாள்", சீவக. 1658: 2
கலிங்கம் அல்குல் மீமிசைக் குலாய் கிடத்தல்	அரையில் கலிங்கம் உடுத்தியிருத்தல்	"அரவிற் பரந்த அல்குல் மீமிசைக் கலாஅய்க் கிடந்த குலாத்தரு கலிங்கம்", பெருங். 1 : 42 : 140 - 141
கலிங்கம் அடி தாழ்தல்	கலிங்கத்தைத் தாழ் வாக உடுத்தி இருத்தல்	"ஒருத்தி அடிதாழ் கலிங்கம் தழீஇ ஒருகை முடிதாழ் இருங்கூந்தல் பற்றி", கலித். 92: 42-43
கலிங்கம் வால ரைக் கொளீஇ	கலிங்கம் அரையிற் உடுத்தல்	"நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ", பதிற். 2: 2
கலிங்கம் துயல் வரல்	உடுத்திய கலிங்கம் அசைதல்	"கலிங்கம் துயல்வர செறிதொடி தெளிர்ப்பவீசி", நற். 20: 4-5
கலிங்கம் முழு வதும் வளைஇ	கலிங்கம் கொண்டு முழுவதும் போர்த்தல்	"முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇ", அகம். 136: 21
கல்லுண் கலிங் கம் கட்டுதல்	காவிக்கற் குழம்பில் தோய்த்த ஆடையை உடுத்தல்	"கல்லுண் கலிங்கங் கட்டிய அரையினன்", பெருங். 4 : 7 : 158
கலை	ஆடை	"கலைப் புற அல்குல் கழுகுகுடைந்துண்டு", மணி. 6 : 112; "பாய்கலை வவ்வுதியே", தேவா. திருஞா. 1: 63: 3; "மானேர் கலைவளையுங் கவர்ந்துளங் கொள்ளை கொள்ளவழக்குண்டே", திருவி. 66: 1 - 2; "குறையாப் பலியிவை கொள்க என் கோல்வளையும் கலையும் நிறையாக் கொண்டாயினிச் செய்வதென்", 11ஆம் திரு.

		799: 1 - 3; "முலைமிசைக் கச்சொடு கலையும் மூட்டு அற", கம்ப. 985: 2; "மழையொடு கலைஉறத் தாழ்வ", கம்ப. 1368: 1; "கலை பேணார்", கம்ப. 912: 2
நுண்கலை	மெல்லிய ஆடை	"பாகு ஒக்கும் சொல் நுண்கலையாள் தன் படர் அல்குல்", கம்ப. 919 : 1
கலை செல்லல்	ஆடைகள் நழுவுதல்	"கண்களங்கம் செய்யக் கைவளை சோரக் கலையுஞ் செல்ல ஒண்களங் கண்ணுதல் வேர்ப்ப", 11ஆம் திரு. 171 : 1 - 3
கலைநலம் தெரிதல்	நல்ல ஆடைகளை ஆராய்ந்து அணிதல்	"கலவைகள் புனைவாரும் கலை நல தெரிவாரும், மலர் குழல் மலைவாரும், மதிமுகம் மணிஆடித்", கம்ப. 1188: 1 - 2
காம்பு	மென்மையான ஆடை வகை	"காம்பொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்", தேவா. சுந்தர. 46 : 2; "கச்சொடு பொற்சுரிகை காம்பு கனக வளை உச்சி மணிச்சுட்டி", பெரியாழ். 1: 4: 8; "கச்சொடு பட்டைக் கிழித்து காம்பு துகிலவை கீறி நிச்சலும் தீமைகள் செய்வாய்", பெரியாழ். 2: 7: 3
காழகம்	ஆடை	"களிறு மேற்கொள்ளவும் காழக நீப்பவும்", புறம். 41: 9; "கரையிடைக் கிழிந்த நின் காழகம் வந்து உரையாக் கால்", கலித். 73: 17; "ஒருத்திவரியார் அகலல்குற் காழகம் ஒருத்தி அரியார் நெகிழத்தணிச் சுறாதட்ப", கலித். 92: 37-38; "நெடுங்கரை காழகம் நிலம் பரல் உறுப்ப", மது. 598; "முனைவர் வகுத்த புனைபூண் அகலத்துக் காழகத் தொன்னூற் கருதுநெறி நுனித்ததன்", பெருங். 2: 4: 33-34; "காழக மூட்டப்பட்ட காரிருட் டுணியு மொப் பான்" சீவக. 1230: 1
காழகம் செறிந்த உடை	உடை	"காழகம் செறிந்த வுடையினன்", சிலப். 22: 91; "ஒண்ணிறக் காழகம் சேர்ந்த உடையினன்", சிலப். 22: 98
புலராக் காழகம் புலர உடீஇ	நீராடி நனைந்த ஆடையைப் புலர்த்தி உடுத்தல்	"புலராக்காழகம் புலர உடீஇ உச்சிக் கூப்பிய கையினர்", திருமுருகு. 184-185
வினைமாண் காழகம் வீங்கக் கட்டுதல்	தொழிற் சிறப்புடைய ஆடையை இறுக்க மாகக் கட்டுதல்	"நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப் புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே", கலித். 7 : 9 - 10
கீள்	அரைத்துணி	"கீள் உடையும் கொண்ட உருவம்", தேவா. திருஞா. 1: 23: 1
கீளாடை	அரையாடை	"கீளாடை அண்ணற்கு அணுக்கராய்", 11ஆம் திரு. 313: 1 - 3
கூறை	ஆடை	"ஊனொடு கூறை .... மானொடு கேட்டு", ஏலாதி. 63; "நாறைங் கூந்தல் நடுங்கு துயரெய்தக் கூறைகோட் பட்டுக் கோட்டு மாவூரவும்", சிலப். 15: 98; "உடுத்த கூறையும் ஒள்ளெரியுறாஅது", மணி. 16: 30; "குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை மெய்போர்த்து மிண்டாடித் திரிதருவா ருரைப்பனகண் மெய்யல்ல", தேவா. திருஞா. 3: 65: 10: 1-2; "வெற்றரைச் சமண ரோடு விலையுடை கூறை போர்க்கும் ஒற்றர்", தேவா. திருநா. 3: 114: 9; "குறியினின் றண்டு கூறையிலாச் சமண் நெறியை விட்டு", தேவா. திருநா. 2: 93: 4; "சுறில் கூறை யனாகி யெரிந்த வெண்நீறு பூசி", தேவா. திருநா. 3: 122 (15) : 5; "தங்கள் கூறை யொன்றின்றியே...", தேவா. சுந்தர. 33: 9; "இம்மையே தரும் சோறும் கூறையும்",

		தேவா. சுந்தர. 34: 1; "குற்றொருவ்வரைக் கூறைகொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாம்", தேவா. சுந்தர. 35 : 4; "கூறைகொண்டு ஆறலைக்குமிடம்", தேவா. சுந்தர. 49 : 1; "உயிர்க் கொலை பல நேர்ந்து நாடொறும் கூறைகொள்ளு மிடம்", தேவா. சுந். 49: 3; "கானெடு மனையும் கட்டுறுத் தியாத்த கூறை, வெள்ளுறிக் குண்டிகைக்காவினர் தருமதருக்கர் தற்புறம் சூழ", பெருங். 1: 36: 227-229; "கூறை சோறிவை தந்தெனக் கருளி", பெரிய திரு. 7: 7: 8; "நண்ணாச் சிறு கூறைபாகமோர் கைபாகம் உடுத்து", சீவக. 2625: 2; "கோலப்பணைக்கச்சும் கூறையுடையும்", பெரிய திரு. 3: 3: 7; "பீறற் கூறையுடுத்து", தேவா. சுந். 49 : 4; "வேசியர் உடுத்தகூறை வேதியர்சுற்ற, வெற்றிப் பாசிழை மகளிர் ஆடை அந்தணர் பறித்துச் சுற்ற", கம்ப. 10302 : 1 - 2
கூறை கீறிச் சூழ் வர உடீஇ	ஆடையைக் கிழித்து அரையை சுற்றி உடுத்துதல்	"கோவைத் தந்த மேவரச் சேர்த்திக் கூறைகீறிச் சூழ்வர வுடீஇ", பெருங். 4: 14: 65-66
கூறை கொள்ளுதல்	ஆடை அணிதல்	"கருக்கினால் கூறை கொள்வார்", பழ. நா. 321
அத்திட்ட கூறை அரைச் சுற்றுதல்	துவருட்டிய ஆடையை இடுப்பில் உடுத்திக் கொள்ளுதல்	"அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும் பத் தெட்டுடைமை பலருள்ளும் பாடெய்தும்", நாலடி. 281: 1-2
நெடுங்கூறை சுற்றுதல்	ஆடையுடுத்தல்	"நெடுங்கூறை சுற்றினாள்", கம்ப. 6643: 3
பூநிற கூறை சுற்றுதல்	கூறை உடுத்தல்	"பூ நிறக் கோல வான்களி நெடுங் கூறை சுற்றினாள் போல", கம்ப. 6643: 2 - 4
கூறையின் மூடுதல்	ஆடையால் போர்த்தல்	"மூடு கூறையின் மூடுதல் வெண்டலை ஓடுகோடல்", சீவக. 1427: 2-3
கூறைகள் போர்த்தல்	ஆடையால் போர்த்தல்	"கூறைகள் போர்த்து முல்வார்", தேவா. திருஞா. 3: 57: 10
கொய்சகம்	அணியும் ஆடையில் செய்யப்படும் ஒப்பனை	"மானாமாக் கலுழன் சிறை விரித்தன்ன கொய்சகம் மருங்கு உறச் சேர்த்தி", கம்ப. 9647: 1-2
கோசிகம்	ஆடை	"பைங்காற் பாதிரி போது பிரித்தன்ன அங்கோசிகம்", பெருங். 1: 42 : 204; "குறைந்த கூந்தலர் கோசிகம் போலப்", பெருங். 1 : 43 : 154; "நிறம் செய் கோசிக நுண் தூசு நீவி நீவாத அல்குல்", கம்ப. 1129: 1; "முறை விரித்தன்ன முறுக்கிய கோசிக மருங்கில் பிறைவிரித்தன்ன வெள் எயிற்று அரவமும் பிணித்து", கம்ப. 9647: 3-4; "ஆடை கோசிகம் கூறை எனக் கருதுவர்", நிக. பிங். 672
களிசெய் கோசிகம்	கஞ்சி தோய்த்த கோசிகப்பட்டு	"களிசெய் கோசிக நீர்விழக் கடிமாலை மேல் தொடர்ந்து கீழ் நளிசெய் தண்பூஞ் சலஞ்சயனமாக்கி நன்னீர் பிலிற்றும் வாய்க் குளிர்கொள் சாந்தாற்றி பொன்னால வட்டங்கொண்டு ஏந்திவீச", சீவக. 1673: 1 - 3
கோசிக ஆடை	பட்டாடை	"அங்கோசிக ஆடை பூத்தன பாதிரி", சீவக. 1650: 3-4
கோசிகத்துகில்	கோசிகம் எனும் பட்டாடை	"கோசிகத் துகில் உற்ற கொழுங்கனல் தூசின் உத்தரித்தொடு சுற்றுறா", கம்ப. 5967 : 1 - 2
கோடி	புதிய துணி	"கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து", அகம். 86 : 21; "கோடிக் கலிங்கம் உடுத்து", சிலப். 21: 32;

		"கோடி கடையுள் விரியார்'', ஆசாரக். 44; "கோடி ஏந்தினர் பட்டேந்தினர்'', சிலப். 20 : 14; ''கோடி நுண்துகில்", பெருங். 4: 121: 35; "கோடி முடியெடுப்பதன் முன்னம் கௌத்துவம்உடைக் கோவிந்தனோடு'', பெரியாழ். 4: 5: 8; "உயர்த்த கோடி கொண்ட ருளும்", திருத். 529: 3; "ஆடை கோடி கூறை எனக் கருதுவர்", நிக. பிங். 6: 172
மாகோடி	புதிய ஆடை	"பூசனை கெந்தம் புனைமலர் மாகோடி, யோசனை பஞ் சத்து ஒலிவந்து உரை செய்யும்", திருமந். 1086: 1-2
மின்னுக்கோடி	ஒளி வீசும் புதிய ஆடை	"மின்னுக்கோடியுடுத்து விளங்குவிற் பூண்டு நன்னிற மேகம் நின்றது போல்", சிலப். 11: 45
கோடி உடுத்தல்	புது ஆடை உடுத்தல்	"மந்திரக்கோடி யுடுத்தி மணமாலை அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீநான்", நாச். திரு. 6 : 3 : 3 - 4
மின்னுக்கோடி உடுத்தல்	புதிய ஆடை உடுத்தல்	"மின்னுக் கோடியுடுத்து விளங்குவிற் பூண்டு நன்னிற மேகம் நின்றது போல்", சிலப். 11 : 45
கோடிகம்	ஆடை	"மடியே புட்டம்... கோடிகம் ....புடவை கூறை", நிக. திவா. 7: 275
கோவணம்	அரைத்துணி	''கோவண ஆடையும்'', தேவா. திருஞா. 1: 7: 7; "கோவணம் மேற்கொண்ட வேடம்", தேவா. சுந்தர. 5: 10; "கந்தை கீளாடை கோவணம் கருத்தறிந்து உதவி", திருத். 504: 3; "கறைக் களத்திறை கோவணம் பெருமை முன்காட்டி'', திருத். 507: 2; ''யாணர் வெண்கிழிக் கோவணம் ஈதல்கேட்டு'', திருத். 512: 3; ''உணங்கு கோவணம் வைத்து, குணங் கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்தது'', திருத். 514: 3 - 4; ''ஓங்கு கோவணப் பெருமையை உள்ள வாறுமக்கே", திருத். 515: 1; ''கொடுத்த கோ வணம் கைக்கொண்டு'', திருத். 516: 1; "கந்தை சீருடை கோவணம் அன்றி", திருத். 517: 3; "போன வேதியர் வைத்த கோவணத்தைப் போக்கி" திருத். 518: 1; "நான் தந்த கோவணத்தைக் கொண்டுவாரும்'', திருத். 520: 3 - 4; "வைத்த கோ வணம் முன் செய்ததென்", திருத். 521: 3-4; "பொங்கு வெண்கிழிக் கோவணம் கொண்டு வாரும்'', திருத். 522: 1; "கீறு கோவணம் அன்று", திருத். 525: 2; "நல்ல கோவணம் கொடுப்பன்'', திருத். 527: 1; ''இக்கோவணம் அன்றி'', திருத். 529: 1; ''அடுத்த கோவணம் இது", திருத். 532: 3; "கோவணம் ஒரு தட்டில் இட்டார்", திருத். 533: 2; "அலகில் கோவணம் ஒத்தில'', திருத். 535: 2; "தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத்தட்டு", திருத். 536: 4; "எங்கள் கோவணம் நேர்நிற்க வேண்டுவ", திருத். 538: 4; "சிவன் விரும்பிய கோவண மிடுஞ் செழுந்தட்டுக்கு", திருத். 540: 2
சரி கோவணம்	கோவணம்	"சரிகோவண உடையுடையானும்", தேவா. திருஞா. 3 : 8 : 1
துன்னஞ்சேர் கோவணம்	தைத்தல் பொருந்திய ஆடை	''துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய் துதைந்திலங்கு வெண்மழுவாள் கையிலேந்தி", தேவா. திருநா. 6: 99: 9: 1 - 2
துன்னம் பெய் கோவணம்	தையல் செறிந்த ஆடை	"துன்னம் பெய் கோவணமுந் தோலுமுடையாடை பின்னஞ் சடைமேலார் பிள்ளை மதிசூடி", தேவா. திருஞா. 2: 44: 1: 1 - 2
வெண்ணிறக் கோவணம்	வெள்ளை நிற ஆடை	"அலர்ந்த வெண்ணிறக் கோவணம்", திருத். 531: 2

கோவண ஆடை	கோவணமாகிய ஆடை	"அரையார் கோ வண வாடையன்", தேவா. திருநா. 1: 1(12) : 7; "தஞ்சை மாமறைக் கோவண ஆடையின் அசைவும்", திருத். 509: 2
அரையுண்ட கோவண ஆடை	கீழ்வாங்கி உடுத்தப் படும் உடை	"சூலமுந்தண்டுஞ் சுமந்த துண்டு அரையுண்ட கோவண ஆடையுண்டு வலிக்கோலுந் தோலு மழகாவுண்டு", தேவா. திருநா. 6: 97: 9: 4 - 6
கோவணத்தர்	கோவணம் கட்டியவர்	"கோவணத்தர் வெண்ணூன் மார்பர்", தேவா. திருநா. 6: 2: 9
கோவணம் அணிதல்	கோவணம் அணிதல்	"கோவணத் தோடக் கணிந்த வம்மானை", தேவா. திருநா. 19 : 2; "அணியும் கோவணம் நேர்தர அமை யும்", திருத். 530: 4
கோவணம் அசைத்தல்	கோவணம் கட்டுதல்	"அரையார் சீளொடு கோவணமும் அரவும் அசைத்து", தேவா. சுந்தர. 28: 6: 1
கோவணத்தை அரையில் ஆர்த்தல்	அரையிற் கோவணம் கட்டுதல்	"தூவெளுத்த கோவணத்தை யரையிலார்த்த", தேவா. திருநா. 281 : 1
கோவணம் உடுத்தல்	கோவணத்தை உடுத்தியிருத்தல்	"உடுத்த கோவணம் ஒழிய", திருத். 532: 1
சேலந்திருத்துதல்	ஆடையைக் கட்டுதல்	"நாமப் பொற்றொடிக் குறளி யானிவ ணிற்பக் கூனி யைப் புகழ்தல் ஏலா தென்றவள் சேலந்திருத்திக் கருவிக்கோனனி கைப்பற் றினளாய்", பெருங். 4: 12: 95 - 98
சேலை	ஆடை	"சேலையால் செறிய வாய் புதைத்த செங்கையன்", கம்ப. 3083: 2
தானை	ஆடை	"தாரும் தானையும் பற்றி ஆரியர் பிடிபயின்று தருஉம் பெருங்களிறு போல", அகம். 276: 9-10; "அரிவையது தானை என்கோ", பரி. 11: 28; "பாய்ந்து ஆய்ந்த தானை", கலித்: 96: 2; "அயிலிடு நெடுங்கணரும் பனி யுறைத்தர உயிரேர் கணவரைத் தானைப் பற்றிநல்லது தீதென் றறியா தவ்வழிச்", பெருங். 1 : 44 : 19 - 21; "கவர் கணை நோன்சிலை கைவயினீட்டி அரணக் கூர்வாள் அசைத்த தானையன்", பெருங். 1 : 53: 59 - 60; "பானிற வெண்டுகில் ஆனத்தானையர்", பெருங். 2: 4: 147; "மேற்பட வெருவி நோக்கித் தானையை விட்டிட் டொல்கி", சீவக. 675: 3; "ஒன்றிய வுதிரச் செச்சை யொண் ணினமீக்கொடானை", சீவக. 1080: 3
கற்றானை	காவியுடை	"கற்றானைக் கங்கை வார்சடையான் தன்னைக் காவிரி சூழ் வலஞ்சுழிங் கருதினானை", தேவா. திருநா. 6: 1: 2: 1 - 2
கொடுந் தானை	வளைத்து உடுக்கப் படும் ஆடை	"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல", நாலடி. 131 : 1 - 2
துகில் தானை	ஆடை முகப்பு	"இருந்துகிற் றானை யினொன்றிப் பொருந்தலை", பரி. 16 : 23
பூந்துகிற்தானை	பூ போட்ட ஆடை	"பூந்துகிற்றானைப் பற்றிக் காய்ந்தது", பெருங். 1: 35 : 202
நீலத்தானை	நீலநிற ஆடை	"நிலனக முளியன் நீலத்தானையன்", சிலப். 16: 204
நீடுதானை	நீண்ட ஆடை	"தாளில் வாழ் செருப்பர் தோல்தழைத்த நீடுதானையர்", திருத். 717: 1
பட்டுடைத்தானை	பட்டாடை	"பட்டுடைத்தானைப் பைம்பூண் சுடர", பெருங். 1: 34: 207; "கொட்டுமடி விரித்த பட்டுடைத்தானையள்", பெருங். 1: 40: 268

பொன் பொலிந் தியலும் பொங்கு பூந்தானை	பொன்னிறத்தானே பொலிவுற்று விளங்கும் மிக்க பூத்தொழிலை யுடைய ஆடை	"பொன் பொலிந் தியலும் பொங்குபூந் தானைப் பசும் பொற் கச்சை பத்தியிற் குயின்ற", பெருங். 2: 6: 141 - 142
தானைப் பூம்பட்டு பொலிந்து அசைதல்	ஆடை பொலிந்து அசைதல்	"அறைந்த சுரும்பு இசைஅரும்ப அரைஉடுத்த மரவுரியின் புறம் தழையின் மலிதானைப் பூம்பட்டு பொலிந்து அசைய", திருத். 947 : 3 - 4
தானை இலங்குதல்	ஆடை பொலிதல்	"வணங்கி நாணி வாய்புதைத்து இலங்கு தானை முன்தலை ஒதுக்கி நின்ற மொய்ம்பனை", கம்ப. 10352: 1 - 2
அம்பூந்தானை அடிமுதல் தடவரல்	அழகிய பூத்தொழிலை யுடைய ஆடையின் முன்தானை பாதம் வரை தொடுதல்	"கைபுனை சிவிகையிற் கஞ்சிகை நீக்கி அம்பூந் தானை யடி முதற்றடவ", பெருங். 1: 47: 199-200
தானை தாழ்தல்	ஆடை தாழ்வாக அணியப்படுதல்	"பையென நோக்குவேன் தாழ்தானை பற்றுவேன்", கலித். 147: 49
தானை நெகிழ்தல்	தானை நெகிழ்தல்	"குழைந்த தார் நெகிழ்ந்த தானைக் கொற்றவன்", சீவக. 2720: 2
தானை வீக்குதல்	ஆடையை இறுக்குதல்	"வார் கச்சிற் றானை வீக்கா", சீவக. 978: 3
துகில்	ஆடை	"நுணங்கு துகில் நுடக்கம் போல்", நற். 15 : 2; "துகில் விரித்தன்ன வெயிலவிர் உருப்பின்", நற். 43: 1; "துகில் பொசி புனலிற் கரை காரேற்றன்று", பரி. 12: 98; "துகில் விரிகடுப்ப நுடங்கி", புறம். 337: 9; "மானீலம் மாண்ட துகி லுமிழ்வ தொத்தருவி", திணை. நூற். 6; "கடா அக் களிற்றின்மேற் கட்படாம் மாதர் படாஅ முலைமேல் துகில்", குறள். 1087; "தொண்டியோரிட்ட அகிலும் துகிலும் ஆரமும்", சிலப். 14 : 107 - 108; "விரைமரம் மென்றுகில் விழுநிதிக் குப்பையோ", மணி. 16: 122; "சூழுமரவத் துகிலும் துகில் கிழி கோவணக் கீளும், யாழின் மொழியவளஞ்ச வஞ்சாது", தேவா. திருஞா. 1 : 1(3): 9: 1 - 3; "துகடுறு விரிதுகிலுடையவ ரமணெனும் வடிவினர் விகடமதுறுசிறு மொழியவை நலமில வினவிடல்", தேவா. திருஞா. 3: 86: 10: 1-2; "தோலும் துகிலுங் குழையும் சுருள் தோடும் பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்", திருவாச. திருக்கோ. 18: 1 - 2; "அணிமலர்க் குழலார் துகிலும் ஆரமும் வாரி வந்து", பெரிய திரு. 1: 4: 4; "வண்டமர் பூங்குழலாக துகில் கைக் கொண்டு", பெரிய திரு. 2 : 10 : 2; "துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும்", பெரிய திரு. 3: 8: 8; "பூந்துகில் வாரி கொண்டிட்டு", பெரிய திரு. 10: 7: 11; "துகில் வண்ணத் தூநீர்ச் சேர்ப் பன்", திருவாய். 7: 2: 11; "பூத்த அகிலார் துகிலாய் பொனல்குல்", சீவக. 252: 2; "பல்கிழியும் பயினும் துகி னூலொடு", சீவக. 235: 1; "வடகமுந் துகிலுந்தோடு மாலையு மணியும் முத்தும்", சீவக. 462: 1; "பட்டினொடு பஞ்சுதுகில் பைம்பொனொடு", சீவக. 591: 2; "உடுப்பன துகில்களும் உரைக்கும் நானமும்", சீவக. 831 : 1; "மணி பொதி துகிலிற்றோன்று மஞ்சு சூழ்வரைகள்", சீவக. 1742: 1; "கூந்தல்அகிற் புலகையும் துகிற்கொழுமென்றும் புகையும்", சீவக. 2032: 3; "மண்கேழ் மணியினுழையுந் துகினூ லின் வாய்த்த", சீவக. 2346: 1; "கரையுடைத் துகிலிற் றோன்றும் காஞ்சன வட்டின்", சீவக. 2467: 1; "குறங்கினிற் வைத்துத் துகிலினிற் துடைத்துத்

		தூய்தா", சீவக. 2496: 3; "கள்செய் மாலையார் கண்கொளாத்துகில்", சீவக. 2685: 2; "வங்க வான்றுகில் பொதி மணி செய்பாவை போல்", சீவக. 2832: 1 - 2; "துகினெருப் புற்றதே போல் மின்னுத்தார் மார்பன்", சீவக. 2880: 1 - 2; "கழு மிய துகிலின் காமன் கண்புடைத் திரங்க மாதே", சீவக. 2993: 4; "துகிலினொடு இகலுவ சுதை புரை நுரை", கம்ப. 76: 3; "வாய்ந்த நல்துகிலொடு வரிசைக்கு ஏற்பன", கம்ப. 274: 2; "சுழலிடு கூந்தலும் துகிலும் சோர்தர", கம்ப. 522: 6 - 7; "துகில்இடை மடந்தையரொடு ஆடவர் துவன்றி" கம்ப. 839: 1; "தன்றிருத் துகிலிற் பொதிவுற்றது", கம்ப. 5423: 3; "நீரிடு துகிலர் அச்ச நெருப்பிடு நெஞ்சர்", கம்ப. 5483: 1; "நிலவு இலங்கிய துகிலினை நெருப்புஉண", கம்ப. 5968: 1; "சுடுதியைத் துகிலிடைப் பொதிந்து துன்மதி" கம்ப. 6408: 1; "கோத்த மேகலையினொடும் துகில் மணிக் குறங்கை", கம்ப. 8827: 1; "வாங்குதும் துகில்கள்", கம்ப. 10301: 1
துகிலுடை	துகிலாகிய ஆடை	"மடியிருந் துகிலுடை மாக்கணாடியும் புடைதிரள் பூரண குடமும் பூத்தவே", சீவக. 2406: 3 - 4
துவருறு விரி துகிலாடை	மருதந்துவரில் தோய்த்த துகிலாகிய ஆடை	"துவருறு விரிதுகிலாடையர் வேடமில் சமண ரென்னும் அவருறு சிறுசொலை யவமென நினையுமெம் மண்ணலார்தம்", தேவா. திருஞா. 3: 92: 10: 1 - 4
துகில் தோகை	ஆடையின் முன்றானை	"வாட்கணீர் தோழி தூத்துகில் தோகையின் நீக்கினாள்", சீவக. 762 : 3 - 4
துகில் தலை	துகிலின் முந்தானை	"பல்வியர், அந்துகில் தலையின் துடையினள்", நற். 129: 8
அம்துகில்	அழகிய ஆடை	"அந்துகின் மேகலை அசைந்தன வருந்த", சிலப். 4: 30; "அரிமலர்க் கண்ணீர் ததும்ப அந்துகிலும் நில் லாவே", பெரிய திரு. 9: 4: 4; "இளையவர், அந்துகில் பற்றலிற்", சீவக. 121: 1-2; "தட்டிடை அந் துகின் மூடியதன்பினர்", சீவக. 880: 2; "அகழ் கிடங்கு அந்துகில் ஆர்ந்த பாம்புரி புகழ்தகு மேகலை", சீவக. 1444: 1-2
அவிர் துகில்	ஆடை	"அவிர்துகில் புரையு மவ்வெள்ளருவி", குறிஞ். 55
ஆவி நுண்துகில்	மெல்லிய ஆடை	"ஆவி நுண்துகில் யாப்புறுத் தாயினும்", பெருங். 1: 36: 64
ஆவியந் துகில்	பாலாவி போன்ற துகில்	"ஆவியந் துகிலார் அமர்ந்தார்களே", சீவக. 873: 4
இழைநுழை துகில்	நூலிழையாலியன்ற மெல்லிய ஆடை	"மழைநுழை மதியமொடு வாளரவம் சடைமேல் இழை நுழைதுகில் அல்குல் ஏந்திழை யாளோடும்", தேவா. சுந்தர. 30: 7: 1 - 2
கோபத்து அன்ன தோயாப்பூந்துகில்	இந்திர கோபப் பூச்சி போல வண்ணம் தோய்க்காமலேயே இயல்பாகச் சிவந்த பூவேலைப்பாடமைந்த ஆடை	"கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்", திருமுருகு. 15
செந்துகில்	சிவந்த ஆடை	"நனைந்த செந்துகில் பூண்உறும் அல்குலில் பொருந்திப் போதலால்", கம்ப. 6687: 2-3
செழுந்துகில்	சிறந்த ஆடை	"செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான தம் பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும்", திருத். 1736: 2-3

நல்துகில்	நல்ல ஆடை	"வாய்ந்த நல்துகிலொடு வரிசைக்கு ஏற்ப", கம்ப. 274: 2
நறுந்துகில்	மணமுடைய துகில்	"பெய்ம் மாமுகில் போல் மதம்பாய் பெருகோடை நெற்றிக் கைம்மாவை நறுந்துகில் கொண்டுகண் கட்டி விட்டார்", திருத். 1003: 3 - 4
நார்நூல் வெண்டுகில்	நார் ஆகிய நூலால் இயற்றிய வெள்ளிய ஆடை	"நனைந்து நிறங்கரந்த நார் நூல் வெண்டுகில்", பெருங். 1 : 40 : 148
நிலனேர்பு துகில்	நிலம் தொடும்படி அணிந்த துகில்	"மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்", திருமுருகு. 214
தூநிறத் துகில்	தூய்மையான ஆடை	"தூநிறத் துகிலின் மூடிப் படலிகை", சீவக. 2707: 3
பல்நிறத் துகில்	பலவண்ண ஆடை	"பல்நிறத் துகிலினைப் பறித்து நீக்கினார்", கம்ப. 1795:3
நீலத்துகில்	நீலநிற ஆடை	"நீலத்துகிலிற் கிடந்த நிழலார் தழலம் மணிகள்", சீவக. 931 : 1
நுண்துகில்	மெல்லிய ஆடை	"வீடுறு நுண்துகில் ஊடு வந்து இமைக்கும்", நற். 366: 2; "அணங்கு நுண்டுகில் மேலசைந்தாள்", சீவக. 344: 3; "நுண்துகில் அகல் அல்குல் நொசித்தவெம்முலை உண்டு இவள் நுசுப்பென உரைக்கும்", சீவக. 654: 1 - 2; "கோடி நுண்டுகிலுங் குழையும் நினக்கு", சீவக. 1369: 1; "நுண்டுகில் வேதலஞ்சி நெருப்பகம் பொதிந்து நோக்கி", சீவக. 1434: 1; "அந்நுண்டுகிற் கல்லரத்த மல் குலது வருத்த", சீவக. 1783: 1
சித்திர நுண்டுகில்	சித்திரத் தொழில் அமைந்த நுண்ணிய ஆடை	"அத்தின் எறிந்து முத்துப் பரிந்திட்டும் சித்திர நுண்டு கில் சேர்ந்த அல்குல்", பெருங். 2: 5: 108 - 109
சின்ன நுண்துகில்	சிறிய ஆடை	"சின்ன நுண் துகிலினைச் செறிக்கின்றார் சிலர்", கம்ப. 1795: 5
நீல நுண்துகில்	நீல நிறமுடைய ஆடை	"நிவந்த நீல நுண்துகில் விதானித்தது போன்றது", திருத். 2055: 3-4
நெடுந்துகில்	நெடிய ஆடை	"நெடுந்துகில் விளிம்பொன்று ஏந்தி", சீவக. 1568: 2
பானிறத் துகில்	வெண்ணிற ஆடை	"பானிறத் துகில் பையர வல்குலாள்", சீவக. 1361: 4
நீலவான் துகில்	நீலநிற ஆடை	"நீலவான்துகிலினை நீக்கி", கம்ப. 6643: 2
புனைதுகில்	புனையப்பட்ட ஆடை	"புத்தராய்ச்சில புனைதுகிலுடையவர் புறனுரைச் சமணாதர் எத்தராகி நின் றுண்பவரியம்பிய வேழைமை கேளேன்மின்", தேவா. திருஞா. 2 : 107 : 10 : 1 - 2
புனை நறுந்துகில்	புனையப்பட்ட மண மிக்க ஆடை	"புனை நறுந்துகில் பூணொடுந் தாங்கினார்", கம்ப. 958: 4
பூக்கமழ் துகில்	மண ஆடை	"பூக்கமழ் துகிலுந்தோடு மாலையும் சொரிய", சீவக. 2661: 3
பூந்துகில்	மென்மையான ஆடை	"தேம்படு மலர் குழை பூந்துகில் வடிமணி ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ", பரி. 17: 1 - 2; "பூந்துகில் அல்குல் தேம்பாய்க் கூந்தல்", பதிற். 6: 4; "கோபத்தன்ன தோயாப் பூந்துகில்", திருமுருகு. 15; "போழிளங் கண்ணியினானைப் பூந்துகிலாளொடும்பாடி", தேவா. திருஞா. 3 : 119: 2: 1 - 2; "மட்டப் பூந்துகிற் கட்டளைக் கச்சையர்", பெருங். 1 : 41 : 98; "நீண்ட குறங்கினிழன் மணிப் பல்கலம் பூண்ட வாகத்துப் பூந்துகிலல்குல்", பெருங். 3: 8: 53 - 54; "உலாவெனப் போந்தோனிலாவுறழ்ப்

பூந்துகில்'', பெருங். 5 : 8 : 80; ''பூந்துகிலார்ந்த தோணி'', சீவக. 967: 2; "புதிதிது பூந்துகில் குழல்கள் சோர்தலால்'', சீவக. 1015: 2; ''பூந்துகிற் மகளிரிற் பொலிந்து போர்த்ததோர் பேந்தரு பேய்வனம் பெரிய காண்டியே'', சீவக. 1181: 3-4; ''பூந்துகில் மாலை சாந்தம் புனைகலம் பஞ்சவாசம் ஆய்ந்தளந் தியற்றப்பட்ட அடிசில் நீர் இன்னவெல்லாம்'', சீவக. 1896: 1-2; "நிலவு வெண்கதிர் நீர்மைய பூந்துகில்'', சீவக. 1982: 1; "பூந்துகில் புறம் போர்த்தன போன்றவே'', சீவக. 2395: 4; "பரந்து பூந்துகில் பன்மணிக் கலம் சுரந்து கொள்கென சுமக்க நல்குவார்'', சீவக. 2401: 3 - 4; ''பூந்துகில் ஒரு கையேந்திப் புகுமிடம் காண்டல் செல்லார்'', சீவக. 2660: 2; ''பூந்துகில் புனைகல மாலை'', சீவக. 2997: 1; ''செறிபுனல் பூந்துகில் திரைக்கையால் திரைத்து'', கம்ப. 4263: 1; ''யாணர்ப் பூந்துகிலோடும் பூசல் மேகலை, சிலம்பு பூண்ட மாந்தளிர் எய்த'', கம்ப. 8826: 2 - 4; "புடை இரண்டினும் கொடியோடு பூந்துகில் விதானம் மிடையுமாலைகள் நிறைகுடம் விளக்கொடு நிரைத் தார்'', திருத். 2137: 2-4; "போது சாந்தணி பூந் துகில் புனைந்த புண்ணியம் போல் மீது பூஞ்சயனத் திருந்தவர் முன்புமேவி'', திருத். 3098: 3-4; ''பலவும் வெண் துகில் பட்டுடன் இடஇட உயர இலங்கு பூந்துகிற் பொதி களை எடுத்து மேல் இட்டார்'', திருத். 535: 3 - 4; "இலங்கு பூந்துகில் கொள்வதற் கிசைந்தருள் செய்யீர்'', திருத். 531: 3; "மன்னும் அப்பதி வணிகர்தம் குலத்தினில் வந்தார்பொன்னும் முத்தும் நன் மணிகளும் பூந்துகில் முதலா எந்நிலத்தினும் உள்ளன'', திருத். 503: 1 - 3

நிறங்கிளர் பூந்துகில்	வண்ணமுடைய பூ வேலைப்பாடுடைய ஆடை	"நிறங்கிளர் பூந்துகினீர் மையினுடீ இப்'', சிலப். 6: 88
வண்ணப் பூந்துகில்	நிறமுடைய துகில்	"மலிந்த நன்மாலைகள் வண்ணப் பூந்துகில்'', சீவக 3029: 1
வனப்பமைந்த பூந்துகில்	அழகமைந்த அழகிய ஆடை	"ஞாயிற்று, அணி வனப்பமைந்த பூந்துகில்'', பரி. 13 : 2
பைந்துகில்	சிறந்த துகில்	"பைந்துகில் அருவி நெற்றி'', சீவக. 428: 2; "பைந்து கில் மகளிர் தேன்சோர் பவளவாய்'', சீவக. 1819: 1; "பைந் துகில் நூலினால் இயன்றன நுனித்த வெண்மைய'', சீவக. 2634: 1-2; "பானிலாக் கதிரென வம்மென் பைந்து கில்'', சீவக. 2635: 2; "பண்ணுரை மகளிர் மாலை பைந் துகில் கவர்ந்துகொள்ளக் கண்ணுரை மகளிர் சோர்ந்து காரிருள் திவளுமின்போல்'', சீவக. 2663: 1 - 2; "பைந் துகில் மகளிர் மேவார்'', சீவக. 2973: 2
மங்கலத் துகில்	சிறந்த துகில்	''மணியியல் யவனச் செப்பின் மங்கலத் துகிலை வாங்கி'', சீவக. 1146: 1
மணிதுகில்	ஆடை	''கரிபரித் தொகை மணிதுகில் சொரிவதாங் கலத் தால்'', திருத். 3999: 4
முழுத்துகில்	ஆடை	"முழுத் துகிலொடும் நெடுங் கொடிச் சூலம் மின்னுவ'', கம்ப. 128: 2-3
மென்துகில்	மென்மையான ஆடை	"மென்றுகில் அல்குல் மேகலை நீங்க'', சிலப். 4 : 48; ''வெப்பினாற் புலர்ந்தொரு நிலையுறாத மென்று கிலாள்'', கம்ப. 5076: 4

வெண்துகில்	வெண்மை ஆடை	"மீப்பால் வெண்டுகில் போர்க்குநர் பூப்பால் வெண்டுகில் சூழ்ப்ப குழல் முறுக்குநர்", பரி. 10 : 79 - 80; "வேல் வலானுடைத் தாழ்ந்த விளங்கு வெண்துகிலேய்ப்ப", கலித். 105: 17; "பல்காசு நிரைஇய அல்குல் வெண்டுகில்", பெருங். 1: 40: 99; "நுரையொடு பொங்கும் நுண்ணூல் வெண்டுகில்", பெருங். 1: 40: 295; "பானிற வெண்டுகில் ஆனத்தானையர்", பெருங். 2: 4: 147; "கடுங்கதிர்க் கலாவம் புதைத்தநிலா வெண்துகிலினர்", பெருங். 2: 5: 84-85; "நரல வெண்டுகில் ஆக்கினான் இருதுணி", சீவக. 1409: 1-2; "மாசில் வெண்டு கிலை நீர் தோய்த்து", சீவக. 1649: 2; "வேய்நிறத் தோளி னார்க்கு வெண்டுகில் மாலை", சீவக. 1892: 3; "மேனி கிளர் வெண்டுகிலும் விழுப்பொனியல் நூலும்", சீவக. 2024: 2; "பலவும் வெண்துகில் பட்டுடன் இடஇட உயர", திருத். 535: 3
நறுநெய் தோய்ந்த நார்நூல் வெண் துகில்	நறுநெய் தோய்ந்த நாரானியன்ற வெள்ளைத் துகிலை அணிதல்	"நறுநெய் தோய்ந்த நார்நூல் வெண்டுகிற் செறிமென் கச்சை சேர்ந்த வல்குலர்", பெருங். 1: 43: 125 - 126
விரிவெண் துகில்	விரித்த வெள்ளை ஆடை	"வரிசையினில் முன்படைத்து எடுத்து மன்னும் பரிகலக் கால்மேல் விரிவெண் துகிலின் மிசை வைக்க விமலர் பார்த்து அங்கு அருள் செய்வார்", திருத். 3737: 5 - 8
வெண்ணிறத் துகில்	வெள்ளை நிறத் துகில்	"வெண்ணிறத் துகிலிலாங்கண் வீழ்ந்து மாசாகி நின்ற", சீவக. 1433: 1
வேறு பல்துகில்	வேறுபட்ட பலவகை ஆடை	"பலவுடன் வேறு பல்துகிலினுடங்கியகில் சுமந்து ஆரமுழுமுதல் உருட்டி", திருமுருகு. 295 - 296
துகிலர்	போர்ப்பவர்	"மொச்சைய அமணரும் உடைபடு துகிலரும்", தேவா. திருஞா: 3: 85: 10: 3
துகிலினார்	போர்ப்பவர்	"பட்டுடை விரி துகிலினார்கள் சொல் பயனிலை", தேவா. திருஞா. 2: 99: 10: 2
துகிலினாள்	புடைவை அணிந்தவள்	"தோக்கை அம் துகிலினாள்", சீவக. 2477: 1
துகில் அணிதல்	துகில் உடுத்தல்	"துகிலணி யல்குருளங்கியன் மகளிர்", சிறுபாண். 262
பூந்துகில் அணிதல்	இடையில் பூந்துகில் அணியப் பெறுதல்	"யாணர்ப் பூந்துகில் அணிந்த அல்குல்", பெருங். 2: 4: 118
ஆவியன்ன பூந் துகில் அணிதல்	மெல்லிய பூந்துகில் அணிதல்	"ஆவியன்ன பூந்துகில் அணிந்த அல்குல்", சீவக. 67 : 1
வெண்பூந்துகில் அணிதல்	வெண்மையான துகில் உடுத்தல்	"வெண்பூந்துகிலும் செம்பூங் கச்சும் சுரிகையும் வாளு முருவொடு புணர்ந்த அணியினராகி", பெருங். 3: 17: 127 - 129
பைந்துகில் அணிதல்	பசிய ஆடை அணிதல்	"செம்பொற் பாசிழை செறிய வீக்கிய பைந்துகில் அணிந்த பரவை யல்குலள்", பெருங். 3 : 5 : 16 - 17
பால் நுரையன்ன பைந்துகில் அணிதல்	பால் நுரை போன்ற தூய ஆடையை அணிதல்	"பால்நுரையன்ன பைந்துகில் அணிந்து ஆனிரையினத் தலங்கல் ஏறனான்", சீவக. 2520 : 1 - 2
துகில் அசைதல்	ஆடை அசைதல்	"நீடுவார் துகில் அசைய நிற்பாரும் ஆயினர்", திருத். 169: 41
அம்துகில் கைய கத்து அசைதல்	ஆடை கையில் அசைதல்	"ஒளிக்கா சொருபாற் றோன்றத் துயிற்பதத் தசைந்த வந்துகில் கையகத் தசைய நெகிழ்ந்த நீரிற் கண் கையாக", பெருங். 3 : 24 : 178 - 180

அந்துகில் சூழ்ந்து அசைதல்	இடையில் அழகிய ஆடை அசைதல்	"ஒண்கேழல் அந்துகில் சூழ்ந்தசைந்த அல்குலாள் ஆய்பொதியில் சந்தனம் தோய்ந்த தடந்தோளாள்", 11ஆம் திரு. 300: 90
பூந்துகில் அசைதல்	துகில் அசைதல்	"விம்முவனர் தளர்ந்து மென்மெல ஒதுங்கிக் கூந்தல் சோரப் பூந்துகில் அசைஇ வேந்தன் மகளொடு விளையாட்டு விரும்பி", பெருங். 2: 5: 117-119; "அவிழ்ந்த பூந்துகில் அங்கையின் அசைஇ", பெருங். 1: 43: 147
பூந்துகில் இமைத்தல்	துகில் விளங்குதல்	"பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்", அகம். 387: 7
துகில் உடீஇ	துகில் உடுத்தல்	"தன்னரைப் புகை விரிந்தன்ன பொங்கு துகிலுடீஇ", புறம். 398: 19-20
செறிதுகில் உடீஇ	இடையில் பொருந் தும்படி ஆடையை உடுத்தல்	"பண்ணிய நறுநெய் மெண்ணெயும் பெய்து நறுநீராட்டிச் செறிதுகிலுடீஇப்", பெருங். 4: 14: 159 - 160
கோடி நுண்டுகில் கொய்து கொண்டுடீஇ	புதிய நுண்ணிய ஆடையை அழகுற உடுத்துதல்	"ஐவகை வண்ணத் தந்நுண் மேகலை பையர வல்குற் பரப்பிடை யிமைப்பக் கொய்து கொண்டுடீஇய கோடி நுண்டுகில்", பெருங். 3: 22: 226 - 228
கோடி நுண்டுகில் வகைபெற உடீஇ	புதிய ஆடையை அழகாக ஒழுங்கு பெற உடுத்துதல்	"இல்லின் மகளி ரேந்துவன ரீத்த கோடி நுண்டுகில் கோலமாக அவ்வரி யரவின் பையெனப் பரந்த செல்வ வல்குற் றீட்டி வைத்தது போல் வல்லிதின் வகைபெற வுடீஇப் பல்லோர்", பெருங். 4 : 16 : 34 - 38
கோடிப் பூந்துகில் கொய்து விளிம்புரீஇ உடீஇ	பூத்தொழில் அமைந்த புத்தாடை உடுத்தல்	"ஈரநுண்டுகில் அகற்றி ஏருடைக் கோடிப் பூந்துகில் கொய்து விளிம்புரீஇச் சேடார் அல்குல் சேடுபட உடீஇ", பெருங். 2: 5: 164 - 166
பூந்துகில் இருமடி யுடீஇ	துகில் உடுத்தல்	"புதுநூற் பூந்துகில் இருமடியுடீ இக்", பெருங். 1: 42: 145
நிறங்கிளர் பூந்துகில் நீர்மை யின் உடீஇ	துகில் உடுத்தல்	"பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ் நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ", சிலப். 6: 87 - 88
துகில் உடுத்தல்	ஆடை அணிதல்	"பட்டு நீக்கித் துகிலுடுத்தும்", பட். 107; "துணங்கையம் பூதம் துகிலுடுத்தவை போல்", பெரும். 235; "வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ் வாரே பட்டும் துகிலும் உடுத்து", நாலடி. 264 : 3 - 4; "நிணத் துகில் உடுத்து", சீவக. 803: 3; "துகிலுடுத்துப் பொன் பூண்டு திரிவார் சொல்லும் சொற்கேட்கக் கடவோமோ துரிசற்றோமே", தேவா. திருநா. 6: 98: 2: 7-8; "உடுத்த துகி லோடும், உயிர் உக்க உடலோடும், எடுத்த முனி வோடும், அயல் நின்றதும் இசைப்பாய்", கம்ப. 5387: 3-4
தூத்துகில் உடுத்தல்	தூய்மையான ஆடை உடுத்தல்	"தூத்துகில் உடுத்துத் தொடியுடைத் தடக்கை", பெருங். 1 : 39 : 21
பிழிந்து உதறித் துகில் உடுத்தல்	ஈரம் அகற்றி உடுத்தல்	"பிழிந்துதறித் துகிலுடுத் தேறினர்", திருப்பள்ளி. 10: 3 - 4
வண்ணத் துகிலுடுத்தல்	நிறமுடைய ஆடையை உடுத்துதல்	"வண்ணத் துகிலுடுப்பின் வாய்விட்டழுவது போல் வருந்தும் அல்குல்", சீவக. 2625 : 1 - 2
விளங்கு வெண் துகில் உடுத்தல்	அழகு விளங்கும் வெள்ளை ஆடை உடுத்தல்	"விளங்கு வெண்துகில் உடுத்து வெண் சாந்து மெய் பூசித் துளங்கு மஞ்சிகை துளைச்சிறு காதினுட் டுளங்க", சீவக. 2388 : 1 - 2
வெண்துகில் விரித்து உடுத்தல்	வெள்ளையாடை உடுத்தல்	"விழுத்தகு வெண்துகில் விரித்தனன் உடுத்து", பெருங். 4 : 6 : 79

தூமத்தினார்ந்த துகிலேந்துதல்	அகில்புகை கமழும் ஆடையை அணிதல்	"வீமத்தி னோடு முடனேசுட வேகலாற்றான் தூமத்தி னார்ந்த துகிலேந்திய வல்குறாதை பூமொய்த் திருந்த கடைமேற்புலம் புற்றிருந்தான்", சீவக. 1966: 2-4
வெண்துகி லேற்றல்	வெள்ளைத் துகிலா கிய ஆடையை உடுத்துதல்	"இசைந்த வெண்துகிலேற்ற தானையன்", பெருங். 5: 2: 21
நிலன்நேர்பு துகில் மருங்கில் கட்டுதல்	இடையில் நிலத்தைத் தொடுமாறு, தொங்கு கின்ற ஆடையை அணிதல்	"குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல் மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்", திருமுருகு. 213 - 214
துகிற்கைக் கொள்ளுதல்	ஆடையைக் கையாற் பிடித்தல்	"சேற்றால் எறிந்து வளை துகிற்கைக் கொண்டு", பெரிய திரு. 2: 10: 1
பூந்துகில் அல்குல் கொள்ளுதல்	பூத்தொழிலை உடைய சேலையை இடையில் உடுத்துதல்	"தண்டலை வாழை அன்ன குறங்கிடை, அல்குல் தட்டில், கொண்ட பூந்துகிலும், கோவைக் கலை களும் சோர", கம்ப. 5022 : 1 - 4
தாழ் துகில் கையேந்தல்	முன் தானையை வலக்கையால் பற்றிக் கொள்ளுதல்	"வெந்தாற்போல் தோன்றுநீள்வேய் அத்தம் தந்தார் தகரக் குழல்புரளத் தாழ்துகில்கை யேந்தி மகரக் குழை மறித்த நோக்கு", திணை. நூற். 77 : 2 - 4
துகில் சாத்துதல்	துகில் உடுத்தல்	"கலன்களோடும் அச்சாத்திய துகிலோடும்", கம்ப. 6581: 3
கடல் நுரைத்துகில் சுற்றுதல்	கடல் நுரைப் போன்ற வெண்பட்டாடையை அரையில் சுற்றி உடுத்தல்	"கடல் நுரைத் துகில் சுற்றி, கதிர்க் குழாம் புடை நிரைத்து ஒளிர் பல்கலன் பூட்டினான்", கம்ப. 7344 : 3 - 4
துகிலிடைச் சுற்றுதல்	ஆடையை உடுத்துதல்	"துகிலிடைச் சுற்றித் தூநீர் ஆட்டி", 11ஆம் திரு. 512: 50
பூந்துகில் சுற்றுதல்	துகில் உடுத்தல்	"அற்றங்காவாச் சுற்றுடைப் பூந்துகில்", மணி. 3 : 140
பூந்துகில் கலைப் புறம் சூழ்தல்	மேகலையின் மேல் ஆடை அணிதல்	"சூடிய கலைப்புறம் சூழ்ந்த பூந்துகில் ஓடிய எரி வளைத்து உருவ வெண்புகை கூடி மற்றதன் புறங் குலாய கொள்கைத்தே", சீவக. 1007: 2 - 4
அந்துகில் சூழ்தல்	துகில் அணிதல்	"அந்துகில் சூழ்ந்து அசைந்த அல்குலாள்", 11ஆம் திரு. 300. 90
பூந்துகில் சூழ்தல்	துகில் அணிதல்	"பொன்னும் முத்தும்மேல் அணிகலன் பூந்துகில் சூழ்ந்து பன்னு தூவியின் பஞ்சணை விரைப்பள்ளி", திருத். 2970: 2 -3
செறிதுகில் கச் சொடு செறிதல்	சிவப்பு நிறம் செறிந்த ஆடை அரைக் கச்சு உடனே கூடி விளங்குதல்	"சிந்து ராகத்தின் செறி துகில் கச்சொடு செறிய, பந்தி வெண் முத்தின் அணிகலன் முழுநிலாப் பரப்ப", கம்ப. 5847: 1 - 2
பூந்துகில் செறிதல்	அழகிய பட்டாடை அணிந்திருத்தல்	"புடைஇரு குழையும் மின்னப் பூந்துகில் செறிந்த அல்குல் நடை அறிமகளிர் ஏந்த நல் அமிர்து உண்ணும் போழ்தில்", சீவக. 399 : 1 - 2
நுரைகிழித்தனைய நெய்ம்மை நுண்துகில் சேர்த்தல்	நுரையைக் கிழித்தாற் போன்ற மெல்லிய அழகிய ஆடையை இடையிலே அணிதல்	"நுரை கிழித்தனைய நெய்ம்மை நுண்துகில் மருங்கில் சேர்த்தி உரைகிழித் துணரும் ஒப்பின் ஓவியப் பாவை ஒத்தார்", சீவக. 699 : 3 - 4
வெண்துகில் சேர்த்தல்	வெள்ளைத் துகில் உடுத்தல்	"வெண்டுகில் மாலை சாந்தம் தானல கலங்கள் சேர்த்தி", சீவக. 1892: 3-4
துகில் சேர்தல்	துகில் அணிதல்	"துகில் சேர் மலர்போல் மணிநீர் நிறைந்தன்று", பரி. 12: 93

தூமம் கமழ் பூந்துகில் சோர அசையா	அகில்புகை மணம் கமழும் அழகிய ஆடையை நெகிழாது இறுக உடுத்துதல்	"தூமம் கமழ் பூந்துகில் சோர அசையாத் தாமம் பரித் தாடுதண் சாந்தந் திமிர்ந்திட்டு", சீவக. 1071: 1 - 2
பூந்துகில் தழீஇ	ஆடை அணிதல்	"பொறியமை பேழையொடு பூந்துகிறழீஇக்", பெருங். 1: 44: 36
துகில் தாங்கி நிற்றல்	துகில் உடுத்தல்	"துகில் ஒன்றும் தாங்கி நின்றாள்", கம்ப. 1074: 4
துகில் தாங்குதல்	துகில் உடுத்தல்	"திருவிழை துகிலும் பூணும் திறப்படத் தாங்கினாரே", சீவக. 2737: 4; "தாங்கிய துகிலார் மெள்ளச் சரிந்து வீழ்குழலார்", கம்ப. 8281: 1
பூந்துகில் தைஇய	துகில் உடுத்தல்	"தைஇய பூந்துகில் ஐது கழல் ஒருதிரை", கலித். 85: 5
நுண்துகில் நுடங்குதல்	மெல்லிய துகில் அசைதல்	"பைங்காழ் அல்குல் நுண்துகில் நுடங்க", பெரும். 329
துகில் நெகிழ்தல்	துகில் நெகிழ்தல்	"நிலாவுறழ்ப் பூந்துகில் நெகிழ்ந்திடை தோன்ற", பெருங். 5 : 1 : 137; "சூழ்ந்த காசு தோன்ற வந்துகின் னெகிழ்ந்து", சீவக. 1958: 2; "மெய் அராகம் அழிய துகில் நெக", கம்ப. 947: 2
நுண்துகில் நெகிழ்தல்	துகில் நெகிழ்தல்	"நுண்டுகில் நெகிழ்ந்த அல்குல் மணி பரந்தி மைப்ப", சீவக. 2086: 1
பூந்துகில் பற்றுதல்	துகிலைப் பிடித்தல்	"கொய்யார் பூந்துகில் பற்றி", பெரியாழ். 3: 1: 4; "உடை நெகிழஓர் கையால் துகில் பற்றி", பெரியாழ். 3: 6: 2; "பந்து பறித்து, துகில் பற்றிக் கீறி", பெரியாழ். 10: 7: 5
ஆவியந்துகில் புனைதல்	துகில் உடுத்தல்	"ஆவியந்துகில் புனைவதொன்றன்றி வேறறியாள்", கம்ப. 5079: 1
சித்திர நிரை தோயும் செந்துகில் புனைதல்	ஓவிய வரிசைகள் அமையப் பெற்ற செந்நிறப் பட்டாடையை உடுத்தல்	"சித்திர நிரை தோயும் செந்துகில் புனை வாரும்", கம்ப. 1195 : 7 - 8
சின்ன நுண்துகில் புனைதல்	துகில் உடுத்தல்	"பல் நிறத் துகிலினைப் பறித்து நீக்கினர் சின்ன நுண் துகிலினைச் செறிக்கின்றார் சிலர்", கம்ப. 1795: 3 - 4
துகில் புனைதல்	துகில் உடுத்தல்	"கடிமலரும் துகிலும் சாந்தும் புனைந்தாரே", சீவக. 2501: 4
வெண்டுகில் மருங் கணி பெறீஇ	வெண்மையான துகில் அணிதல்	"மறுவில் வெண்டுகில் மருங்கணி பெறீஇ", பெருங். 2 : 2 : 36
பூந்துகில் மரூஉதல்	துகில் அணிந்து இருத்தல்	"பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டல்குல்", நெடு. 145
வெண்துகிலின் இணைமடி விரித்து உடீஇ	வெண்மையான ஆடையை விரித்து உடுத்தல்	"கண்டுளங் கவிரொளிக் கழுஉ நிறம் பெறீஇய வெண் டுகி லிணைமடி விரித்தன ருடீஇச்", பெருங். 2: 5: 130 - 131
வெண்துகில் அரை மிசை வீக்குதல்	துகில் அரையில் கட்டுதல்	"நுரைபுரை வெண்டுகில் அரைமிசை வீக்கி", பெருங். 1 : 40 : 286
வெண்டுகில் கலா பம் வீக்குதல்	மேகலையின் மேல் துகிலுடுத்தல்	"வெண்ணிற மழையின் மின்போற் கலாபம் வீக் கிக்", சீவக. 624 : 1
தூசு	ஆடை	"பாசிழைப் பகட்டல்குல் தூசுடைத் துகிர் மேனி", பட். 147-148; "தூசுந் துகிரும்", சிலப். 5: 18; "தூசினும் மணி யினுந் தொல்லோர் வகுத்த", மணி. 20: 68; "தூசினால் அங்கை நீவியிருந்தனன் தோற்றமிக்கான்", சீவக. 1302: 4;

"அவர்க்கு அணி, தூசு ஆதி ஆய பாங்குள மற்றவை அருளி'', கம்ப. 217: 1-2; ''தூசொடும் அணியும் முந்நூல் தோல் தரும் தோற்றம் போன்றும்", கம்ப. 590: 3 - 4; "மெய் யைச் சுதைக்கண் நுரையைப் பொருவு தூசுகொடு தூய்து ஆய் உதித்தனர்", கம்ப. 828: 1-2; "தூசினொடு வெண் படம் உடைக் குடில்கள் தோறும் வாசமலர் மங்கையர் முகங்கள்", கம்ப. 830: 1-2; "வீக்கிய கலனும் தூசும் வேறு வேறு ஆனது ஓராள்", கம்ப. 1077: 2; "பொன் அரும் கலனும் தூசும் புறத்து உள", கம்ப. 1018: 1; "புன்றொழில் அரக் கன் கொண்டு போந்த நாட் பொதிந்த தூசில்", கம்ப. 5261: 1; "பாசிழை அரம்பையர் பழிப்பு இல் அகல் அல்குல் தூசு தொடர் ஊசல் நனி வெம்மை", கம்ப. 4219: 1 - 2; "இடைஇடை வீசும் தூசு போல்'', கம்ப. 5406: 2; ''கொழுங்கனல் தூசின் உத்தரிகத்தொடு சுற்றுறா", கம்ப. 5967: 1 - 2; "கந்து அடுகளிறு, வாசி, தூசு அணி கலன்கள் மற்றும் உந்தினன், எண்கின் வேந்தற்கு உலகம் முந்து உதவினானே'', கம்ப. 10354: 3-4; "நவமணிக் காழும் முத்தும்மாலையும் நலம் கொள் தூசும்'', கம்ப. 10355: 1; ''ஒளிமணிப் பூணும் தூசும் .... தனக்குத் தந்தான்", கம்ப. 10357: 2-4; "வளன் அணிகலனும் தூசும் மாமதக் களிறும்", கம்ப. 10358: 1; "பொன்திணி தூசும் வாசக் கலவையும் புதுமென் சாந்தும் ஈந்தான்", கம்ப. 10361: 3 - 4; "தூசுடைய துகள் மாசு கழிப்பார் போல்", திருத். 1196: 3 - 4; "சொன்னவர்க் கெலாம் தூசொடு காசு பொன் அளித்தே", திருத். 2973: 1; "சொன்னவர்க் கெல்லாம் இருநிதித் தூசுடன் அளித்து", திருத். 2955: 2; "பொன் ஆர்கிழியும் மணிப்பூணும் காசும் தூசும் பொழிந்து அளித்தார்", திருத். 9249 : 7 - 8

உயர் தூசு	நல்லாடை	"கண்அகல் நாடு உயர் காசொடு தூசும் பெண்ணின் அணங்கு அனையாள் பெறுக என்றார்", கம்ப. 1256: 3-4
கோசிகத் தூசு	பட்டாடை	"நிறம் செய் கோசிக நுண் தூசு நீவி நீவாத அல்குல்", கம்ப. 1129: 1
சவியுடைத் தூசு	ஒளிமிக்க பொன்னாடை	"புவிபுகழ் சென்னி.... சவியுடைத்தூசும், மென் சாந்தும் மாலையும் அவிர் இழைக் குப்பையும் அளவு இலாதது", கம்ப. 4555: 3
துன்னு தூசி	தைக்கப்பட்ட ஆடை	"துன்னு தூசினொடு சந்திவை சுமந்த சனகன்", கம்ப. 2520: 3
நுண் தூசு	மென்மையான ஆடை	"மன்னும் நுண்தூசும் மாவும் மதமலைக்குஅரசும் ஈயா", கம்ப. 10350: 2
மென் தூசு	மென்மையான ஆடை	"மகளிர் மென்தூசு உலவு உறுபரவை அல்குல்'', கம்ப. 2358: 2-3
புனை மென் தூசு	புனையப்பட்ட மென் மையான ஆடை	"பொன்னினின் முத்தினின் புனை மென் தூசினின் மின்னின'', கம்ப. 4390: 1; ''புனைமென் தூசும் வன்திறல் கயமும் மாவும் வழங்கினன்", கம்ப. 10352: 3 - 4
பொன்னிறத் தூசு	பொன்னாடை	"பொன்னிறத் தூசு கருவரை மருங்கில் தழுவிய புது வெயில் பொருவ", கம்ப. 5152: 2
மதியின் ஒளிர் தூசு	ஒளி வீசும் ஆடை	"மதியின் ஒளிர் தூசு வகுத்தனவும் அதிகம் சகடு ஆயிரம் ஈகுவெனால்", கம்ப. 7769: 3-4
வண்ணத் தூசு	பலவண்ண ஆடை	"எண்ணிலா வண்ணத் தூசின் பொதிப் பரப்பு எங்கும் நண்ண", திருத். 3104: 7 - 8

வயங்கு நுண் தூசு	விளங்கும் நுண்ணிய ஆடை	"மாலையும், சாந்தும், கலவையும், பூணும் வயங்கு நுண் தூசொடு, காசும் சோலையின் தொழுதிக் கற்பகத் தருவும், நிதிகளும் கொண்டு பின் தொடர", கம்ப. 5161 : 1 - 4
தூசணிதல்	ஆடை அணிதல்	"தூசணி பரவை அல்குல் துளங்கு நன் நுசுப்பின் பாவை", சீவக. 586 : 3
தூசார்தல்	தூசு உடுத்தல்	"தூசு ஆர்ந்த சாக்கியரும்", தேவா. திருஞா. 2: 58: 10; "தூசார்ந்த வல்குல் துளும்பும் நலத்தாரொடு", சீவக. 2889: 4
தூசு உடுத்தல்	தூசு அணிதல்	"வடகத் தோடு உடுத்த தூசு மாசு இல் நீர் நனைப்ப", கம்ப. 860: 3
தூசு உலாய்க் கிடத்தல்	ஆடை சூழ்ந்து கிடத்தல்	"தூசு உலாய்க் கிடந்த அல்குல் துப்புறழ் தொண்டைச் செவ்வாய் வாசவான் குழலின் மின்போல் வரு முலைச் சாந்து நக்கி", சீவக. 550 : 1 - 2
தூசு உலாவுதல்	தூசு அசைதல்	"தூசுலாம் அல்குலாள்", சீவக. 1451: 3; "தூசுலாம் பரவை அல்குல்", சீவக. 1539: 4; "தூசுலா மல்குல் தீண்ட", சீவக. 1987: 2; "தூசுலாம் பரவை அல்குல் துணை முலை மகளிரொடும்", சீவக. 2268: 1
தூசு உறுதல்	தூசு அணிதல்	"தூசுறு பரவை அல்குல் தூமணிக் கொம்பனாள்", சீவக. 2080: 3
தூசு ஏறுதல்	தூசு அணிதல்	"தூசேறிய அல்குல் துடி இடையார்", தேவா. திருஞா. 1: 9: 10
தூசு தொடையில் சேர்த்தல்	தூசு அணிதல்	"தூசு நல்லன தொடையில் சேர்த்தியும்", 11ஆம் திரு. 896: 69-70
தூசு சுற்றுதல்	தூசு அணிதல்	"தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன்", கம்ப. 5428: 1
தூசு சூழ்தல்	ஆடை அணிதல்	"தூசுசூழ் பரவை யல்குல் சுமக்கலா தென்னவீழ்த்த காசு சூழ் கோவை முத்தங் கதிர்முலை திமிர்ந்த சாந்தம்", சீவக. 109: 1 - 2
தூசு சேர்த்தல்	தூசு அணிதல்	"கருவிளை மலரின் காட்சிக்காசு அறு தூசு, காமன் திருவிளை அல்குற்கு ஏற்ப மேகலை தழுவச் சேர்த்தார்", கம்ப. 9996: 3 - 4
தூசு விசித்தல்	ஆடை கட்டுதல்	"மேகலை விரீஇய தூசு விசியல்குல் நீருடைக் களைதல் செல்லார் கலங்கி", பெருங். 1 : 44 : 6 - 7
தூசு விரித்தல்	ஆடையுடுத்தல்	"சதுரச் சந்திச் சமழ்ப்பில் கலாபத்துத் தொட்டிமை கலந்த தூசுவிரி யல்குற்", பெருங். 1 : 50 : 7 - 8
தூசு விரித்து உடுத்தல்	புதிய ஆடையை விரித்து உடுத்தல்	"வரிவளைப் பணைத்தோள் வண்ண மகளிர் சொரிவன ராட்டித் தூசுவிரித் துடீஇக்", பெருங். 1 : 57 : 96 - 97
தோக்கை	தொங்கல்; கொய்சகம்	"நீள் தாழ்பு தோக்கை நித்திலஅரிச் சிலம்பு", பரி. 22: 49; "வேங்கணார் தோக்கை பற்றி", பெரியதிரு. 4: 4: 3; "தோக்கைஅம் துகிலினாள்", சீவக. 2477: 1
தோகை	கொய்சகம்	"சோலைமஞ்ஞைத் தொழுதி போல் தோகை செம்பொன் நிலந்திவள", சீவக. 2698: 2; "தூசுலா நெடுந் தோகையின் நல்லவர்", சீவக 1320: 1
தோல்தானை	தோலாடை	"தாளில் வாழ் செருப்பர் தோல் தழைத்த நீடுதானையர்", திருத். 717.1
நீலம்	நீல ஆடை	"நீலமும் அரத்தமும் வாலிழை வட்டமும்", பெருங். 1: 42: 208
பூங்கரை நீலம் தழுவுதல்	ஆடையைத் தழுவுதல்	"நீங்கிப் புறங்கடை போயினாள் யானுமென் சாந்துளர் கூழை முடியா நிலந் தாழ்ந்த பூங்கரை நீலம் தழீஇத் தளர் பொல்கி", கலித். 15: 12 - 14

பூங்கரை நீலம் புடை தாழ்தல்	பூங்கரை நிலம் ஆடையைத் தாழ்வாக அணிதல்	"யாய்தந்த பூங்கரை நீலம் புடைதாழ மெய்ய சைஇ", கலித். 111: 2 - 3
நீவி	ஆடை	"சுற்றி வாரண வுரித் தொகுதி நீவி தொடர", கம்ப. 2530: 2; "தன் நிறத்தோடு மாறு தந்து இமைக்கும் நீவி அம் தழைபட உடுத்த பொன் நிறத்தூசு", கம்ப. 5152: 1 -2; "நீவி உழத்தியர் நெய்க்குழல் மைச்சூழல் மேவி உறங்குவ மென்சிறை வண்டுவிரைக் கஞ்சப்", திருத். 932: 1 - 2; "மடியே துகில் ....நீவி உறை", நிக. திவா. 7: 275; "நீவி என் கிளவி மாதர் கொய்சகம்", நிக. திவா. 7: 286
நேத்திரம்	பட்டாடை	"காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்", தேவா. சுந்தர. 46: 2
பஞ்சி	ஆடை	"பஞ்சியும் களையாப் புண்ணர்", புறம். 353: 16; "பட்டினொடு பஞ்சு துகில் பைம்பொனாடு காணம்", சீவக. 591: 2; "பஞ்சிறை கொண்ட பைம்பொற் கலை புறஞ் சூழ்ந்து", சீவக. 1538: 1; "பஞ்சி மேற் கிடந்துடை ஞாண் பதைத்து இலங்க", சீவக. 2240: 3; "ஆரவட மேற்றிசைக் கண் இருந்தவிர் பஞ்சிச்சீர் நிறைய", சீவக. 2489: 3 - 4
பஞ்சி ஆர்தல்	ஆடை அசைதல்	"பிடிக்கை வென்று கடைந்தன போற் பஞ்சி ஆர்த்த திரள் குறங்கு", சீவக. 2695: 1 - 2
பட்டாடை	பட்டாடை	"தொடர்ந்த அணிமுத்து பவளம் கச்சு ஆகப் படர்ந்த அல்குல் பட்டாடை பாதச் சிலம்பு மடந்தை சிறியவள் வந்து நின்றாளே", திருமந். 1400 : 2 - 4; "பரவு சேரன் தனக்குனக்குப்பைம் பொற் காணம் பட்டாடை ....தரநம் ஓலை தருகின்றோம்", திருத். 3779: 3-7; "பைம்பொன் காணம் பட்டாடை விரவுகதிர் செய் நவமணிப்பூண் வேண்டிற்று எல்லாம் குறைவுஇன்றி", திருத். 3779: 4 - 6
நல்ல பட்டாடை	சிறந்த பட்டாடை	"நயத் தகுந்தன நல்ல பட்டாடைகள் மணிகள் உயர்த்த கோடி கொண்டருளும்", திருத். 529: 2 - 3
பட்டாடைச் சாத்துதல்	பட்டு உடையை உடுத்துதல்	"உகந்தனள் பொன்முடி முத்தாரமாகப் பரந்த பவளமும் பட்டாடைச் சாத்தி மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து", திருமந். 1393: 1-3; "அகில் விரைத் தூபம் ஏய்ந்த அணிகொள் பட்டாடை சாத்தி", திருத். 162: 1 - 2
வெண்பட்டாடை விளங்க சாத்துதல்	வெண்மையான பட்டு உடுத்துதல்	"விற்பொலி வெண்பட்டாடை மேதக விளங்க சாத்தி நற்றிரு உத்தரீய நறுந்துகில் சாத்தி", திருத். 3112: 3-6
பட்டு	பட்டு	"பட்டு நீக்கித் துகிலுடுத்தும்" பட். 107; "இசைபாட இடுபிச்சைக்கு எச்சம் உச்சம்போது பலவகம்புக்கு உமிதர்வீர் பட் டோடு சாந்தம் பணித்தருளாது இருக்கின்ற பரிசென்ன படிறோ", தேவா. சுந்தர. 71: 6: 2-4; "பட்டினொடு பஞ்சு துகில் பைம் பொனோடு காணம்", சீவக. 591: 2; "பட்டைப் பணித்தருளாயே", நாச். திரு. 3: 3; "படிற்றை எல்லாம் தவிர்ந்து பட்டைப் பணித்தரு ளாயே", நாச். திரு. 3: 6; "போரவிடாய் எங்கள் பட்டைப் பூங்குருந்தேறி யிராதே", நாச். திரு. 3: 7
அரத்தப்பட்டு	செந்நிறப்பட்டு; பருதியும், குருதியும் போன்ற சிவப்புப் பட்டு	"கொன்னிளம் பருதியுங் குருமுயலின் குருதியும் போன்று இன்னரத்தப் பட்டசைத் திந்திரற்கும் புகழ்வரிதே", சீவக. 173: 3 - 4
உரோமப் பட்டு	எலிமயிர் முதலியவற் றால் செய்த பட்டாடை	"உருவம் ஆர்ந்தன உரோமப் பட்டுடுத்து எரியும் வார் குழை சுடர இந்திர", சீவக. 2425 : 1 - 2

ஒண்பட்டு	அழகிய பட்டு	"உண் மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும் ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும் கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்", தேவா. சுந்தர. 71: 11: 3-5
கண்கொளாப் பட்டு	கண்ணுக்கு இனிய பட்டு	"கவாய்க் கிடந்து அணங்கு நாறும் கண் கொளாப் பட்டுடுத்தாள்", சீவக. 2444: 3
குருதிப்பட்டு	சிவந்த பட்டாடை	"குலவிய குருதிப்பட்டிற் கலைநலம் கொளுத்தி யிட்டாள்", சீவக. 673 : 4
செம்பட்டு	சிவந்த பட்டுடை	"தாள்அணி நூபுரம், செம்பட்டுத் தான் உடை", திரு மந். 1049: 1
நுழை நூற்பட்டு	பட்டு	"நூலினும் மயிரினும் நுழை நூற்பட்டினும்", சிலப். 20: 14
பச்சிலைப் பட்டு	பசிய இலைத்தொழில் நிறைந்த பட்டாடை	"பச்சிலைப் பட்டும் முத்தும் பவளமும் இமைக்கும் அல்குல்", சீவக. 2090 : 1
பூம்பட்டு	பூத்தொழில் நிறைந்த பட்டு	"பூம்பட்டாம் புல்கு மணையாம் திருமாற்கரவு", பொய்கை. 53: 3 - 4; "பூம்பட்டு கொண்ட அரட்டான் வந்து", பெரியாழ். 2 : 1 : 4
வெண்பட்டு	வெண்மை நிறப்பட்டு	"அயிலும் சுரும்பார் மலர்ச்சிகழி முடிமேல் அணியா உத்தரிய வெயிலுந்திய வெண்பட்டதன்மேல் விரித்துப்", திருத். 3208: 5-8
பட்டுடை	பட்டாடை	"நீடுர வழியினூடுநிமிர்ந் தொழுகிப் பிணர் முரிப் பட்டு டைப் பெருநல வல்குற்", பெருங். 1 : 40 : 225 - 226; "துணைப்பிரி மகளிரிணைமலர் நெடுங்கண் கட்டழன் முத்தங்காலப் பட்டுடைத் தனிக்காழல்குற்", பெருங். 3 : 7 : 32 - 33
கொட்டைக் கரைய பட்டுடை	கொட்டைக் கரை உடைய பட்டாடை	"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி", பொருநர். 155
நற்சுணப் பட்டுடை	வாசனைப் பொடி இடப்பெற்ற பட்டாடை	"கற்சுணஞ் செய்தோண் மைந்தர் காதலால் நற்சுணப் பட்டுடை பற்ற நாணினாற் பொற்சுணத் தால் விளக்க விப்பப் பொங்கிய", சீவக. 91 : 1 - 3
திருந்து பட்டுடை	விளங்கும் பட்டு உடை	"தேசிக முடியுந் திருந்து பட்டுடையும் பாசமாக நின்று பன்மலர்க் கழுநீர்", சீவக. 2549 : 1 - 2
பூம்பட்டு பொலிந்து அசைதல்	பட்டு ஒளி விடுதல்	"பூம்பட்டுப் பொலிந்தசைய", திருத். 947: 41
பூம்பட்டு அணிதல்	பட்டுடை அணிதல்	"அளித்த பூம்பட்டு அணிந்து திகழ்ந்ததே", சீவக. 1330: 4
பட்டார்தல்	பட்டாடை அணிதல்	"நட்டாரையாக்கிப் பகை பணித்து வையெயிற்றுப் பட்டா ரகலல்கு லார் படிந்து ஓட்டித்", சிறுபஞ்ச. 18 : 1 - 2
பட்டு இசைதல்	உடுத்திய பட்டு அசைதல்	"பட்டிசைந்த அல்குலாள் பாவையாளோர் பாகமா ஒட்டிசைந்த தன்றியும் முச்சியாளொருத்தி", தேவா. திருஞா. 3: 52 : 2: 1 - 2
பட்டு இமைத்தல்	பட்டாடை ஒளி விடுதல்	"அணிகிளர் சாந்தின் அம்பட்டு இமைப்ப", அகம். 236: 11
நீலப் பட்டுடை இலங்குதல்	நீலப்பட்டாடை திகழ்தல்	"நீலப்பட்டுடை நிரைமணி மேகலை கோலமொடு இலங்கத் தானுயிர்ப் பாற்றி", பெருங். 4: 12: 262 - 263
பட்டு உடுத்தல்	பட்டு உடுத்துதல்	"வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே பட்டும் துகிலும் உடுத்து", நாலடி. 264: 3 - 4; "பட்டுடுத்துத் தோல் போர்த்துப்பாம் பொன் றார்த்துப் பகவனார் பாரிடங்கள் சூழ நட்டஞ் சிட்டராய்த் தீயேந்திச்

		செய்வார்", தேவா. திருநா. 6: 2: 11: 1 - 3; "பட்டுடுத்து பவளம்போல் மேனியெல்லாம் பசுஞ்சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ", தேவா. திருநா. 6: 58: 7: 1 - 2; "உடுத்த பட் டொளிப்ப", சீவக. 2666: 2
அரத்தப் பூம்பட்டு அரைமிசை உடீஇ	சிவந்த நிறமுடைய பூம்பட்டை உடுத்தல்	"அரத்தப் பூம்பட்டு அரைமிசையுடீஇ", சிலப். 14 : 86
உரோமப்பட்டு உடுத்தல்	எலிமயிர் முதலியவற் றால் செய்த செந்நிறப் பட்டாடை அணிதல்	"உருவம் ஆர்ந்தன உரோமப் பட்டுடுத்து எரியும் வார்குழை சுடர இந்திர திருவிலன்னதார் திளைப்பத்", சீவக. 2425: 1-3; "கொம்மென நாவி நாறுங் கூந்தலை உலர்த்தி நொய்ய அம்மலரு ரோமப் பூம்பட்டுடுத்தபின் அனிச்ச மாலை செம்மலர்த் திருவினன்னார் சிகழிகை சேர்த்தி னாரே", சீவக. 2667 : 2 - 4
கமழ்பட்டினை உடுத்தல்	மணம் வீசும் பட்டா டையை உடுத்தல்	"கற்பகம் ஈன்ற கமழ்பட்டினை உடுத்துப் பொற் கழல்கள் கால்மேற் பொலிவித்து", 11ஆம் திரு. 300. 16
செங்கழுநீர் பட்டுடுத்தல்	தெள்ளிய ஒளி கொண்ட செங்கழு நீர் மலர்போலும் வண்ணங்கொண்ட பட்டுச்சேலையை உடுத்தல்	"செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங்குமம் எழுதி அங் கழுநீர்த்தாமம் நுதல் சேர்த்திப்", 11ஆம் திரு. 300: 165
அருவிலை வண்ணப் பட்டுடுத்தல்	அழகு பொருந்திய இன்பமூட்டும் விலை மதிப்பற்ற பட்டா டையை உடுத்துதல்	"வாண்மின் நுண்ணிடை வருந்தினும் சூட்டணிந் தழகார் ஆணமாகிய அருவிலை வண்ணப் பட்டுடுமின்", சீவக. 2389 : 3 - 4
புகையார் வண்ணப் பட்டு உடுத்தல்	புகை போன்ற மெல்லிய நிறமிக்க பட்டினை உடுத்தல்	"புகையார் வண்ணப்பட்டுடுத்து", சீவக. 2694: 1
தீம்பால் நுரை போல் திகழ் வெண்பட்டு உடுத்தல்	மென்மையான வெண்பட்டு உடுத்தல்	"தீம்பானுரை போற்றிகழ் வெண்பட்டுடுத்து", சீவக. 3046: 1
மணிச் செப்பில் உறைந்த வெண் பட்டு உடுத்தல்	மணிகள் பதித்த செப்பில் இருந்த வெண்பட்டாடையை அணிதல்	"முறிந்த கோல முகிழ்முலையார் பரவ மொய்யார் மணிச் செப்பில் உறைந்த வெண்பட்டுடுத் தொளிசேர் பஞ்சவாசம் கவுட்கொண்டு", சீவக. 2358 : 1 - 2
பட்டுலாய்க் கிடத்தல்	பட்டுப் பரவிக் கிடத்தல்	"பட்டுலாய்க் கிடந்த செம்பொற் கலையணி பரவை அல்குல் இட்டிடைப் பவழச் செவ்வாய்த் தத்தையு மிதனைக் கேட்டாள்", சீவக. 1145 : 3 - 4; "பட்டுலாய்க் கிடந்த செம்பொன் பவளமொடிமைக்கு மல்குல்", சீவக. 2047: 1
பூம்பட்டு ஒளித்தல்	பட்டு உடலோடு ஒட்டிக் காணப்படுதல்	"நான நீரிற் கலந்து நலங்கொள் பூம்பட்டு ஒளிப்ப", சீவக. 923 : 1
குலவிய குருதிப் பட்டின் கலைநயம் கொளுத்தியிடுதல்	ஒளிரும் செம்பட்டி னைச் சேர்த்துக் கட்டி அழகு வண்ணம் சிறக்கச் செய்தல்	"குலவிய குருதிப் பட்டின் கலைநயம் கொளுத்தியிட்டான்", சீவக. 673 : 4
பட்டுச் சுமத்தல்	பட்டு அணிதல்	"வட்டுடைப் பொலிந்த வண்ணக் கலாபமொடு பட்டுச் சுமந்தசைந்த பரவை அல்குல்", பெருங். 2: 4: 122 - 123
பட்டு வீக்குதல்	இடையில் வெண் பட்டுத் துணியணிதல்	"வட்டச் சூரையார் வார்முலைக் கச்சினர் பட்டு வீக் கிய அல்குலர்", சீவக. 632 : 1 - 2

ஏக படம் அரைச் சாத்துதல்	ஒற்றை ஆடை அணிவித்தல்	"இகழாது உமக்கு ஆட்பட்டோர்க்கு ஏக படம் ஒன்று அரைச் சாத்தி", தேவா. சுந்தர. 80: 4: 3-5
புட்டகம் பொருந்தப் புனைதல்	நீராடுவதற்கு ஏற்ற ஆடை அணியைப் பொருத்தமாக அணிதல்	"புட்டகம் பொருந்துவ புனைகுவாரும்", பரி. 12: 17
புடைவை	ஆடை	"பாத்தில் புடைவையுடை யின்னா", இன்னா. 7; "புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை", திருமந். 209 : 1
மடி	ஆடை	"தெண்டிரை அவிர்அறல் கடுப்ப குறியவு நெடியவு மடி தருஉ விரித்து", மது. 519 : 20; "மாசில் தூமடி விரித்த", அகம்: 13: 16; "நறுமடி செறிந்த அறுவை வீதியும்", சிலப். 14: 207; "குடி செய்வல் எனும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்று தான் முந்துறும்", குறள். 1023
அகன்மடி	அகன்ற ஆடை	"கடனா வைத்தலிற் கைபுனைந் தியற்றி அகன்மடி யவன்றா னமர்ந்து கொடுப்ப", பெருங். 3 : 9 : 129 - 130
புதுமடி	புதிய ஆடை	"முது நீர்ப்பாசியன்ன உடை களைந்து திருமலர் அன்ன புதுமடிக் கொளீஇ", புறம். 390 : 14 - 15
தூமடி உடுத்தல்	தூய்மையான ஆடையையுடுத்தல்	"தேமென் கூந்தல் சின் மலர்ப் பெய்து தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பின்", சிலப். 15 : 134
இணை மடிவிரித்து உடீஇ	இரண்டாகிய ஆடையை உடுத்துதல்	"கண்துளங் கவிரொளிக் கழூஉ நிறம் பெறீஇய வெண்டுகில் இணைமடி விரித்தனர் உடீஇச் செய்த கோலத்துச் சித்திரங்காண", பெருங். 2: 5: 130 - 132
வாலிழை வட்டம்	ஆடை	"நீலமும் அரத்தமும் வாலிழை வட்டமும்", பெருங். 1: 42: 218
வட்டுடை	முழந்தாளளவாக உடுக்கும் உடை	"இகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி", மணி. 3: 122 - 123
வட்டுடைப் பொலிதல்	வட்டுடை விளங்குதல்	"வட்டுடைப் பொலிந்த வண்ணக் கலாபம்", பெருங். 2: 4: 122; "வாடாத் தாரினர் சேடார் கச்சையர் வட்டுடைப் பொலிந்த கட்டுடை அல்குலர்", பெருங். 2 : 6: 123-124; "வட்டுடைப் பொலிந்த தானை வள்ளலைக் கண்ட போழ்தே பட்டு உடை சூழ்ந்த காசு பஞ்சி மெல்லடியைச் சூழ", சீவக. 468: 1-2
வட்டுடை மருங்குல் சேர்த்தல்	போர் வீரருக்குரிய வட்டுடையை அணிந்து கொள்ளுதல்	"வட்டுடை மருங்குல் சேர்த்தி வாளிருபுடையும் வீக்கித் தட்டுடைப் பொதிந்ததிண்தேர்த் தனஞ்செயன் போல ஏறிக்", சீவக. 767 : 1 - 2
வற்கலை	மரவுரி ஆடை	"வற்கலையர் வார் கழலர் மார்பின்அணி நூலர்", கம்ப. 3120: 1 - 2; "வற்கலை யுடையென் யானோ வழங்கலென்", கம்ப. 575; 3; "மாணாமரவற்கலையும் மானின் தோலும் அவை நான் காணாது", கம்ப. 1670. 5 - 7; "எல்கலை திரு வரை யெய்தி யேமுற வற்கலை நோற்றன", கம்ப. 2753: 3 - 5; "புனையும் வற்கலைப் பொற்பினர்", கம்ப. 2036: 3 - 4; "வற்கலையின் உடையானை", கம்ப. 2331: 1; "மாயப் பழியாள் தரவற்கலை ஏந்தி வந்தார்", கம்ப. 1747: 4; "தொடையுறு வற்கலை ஆடை சுற்றி", கம்ப. 7125: 1; "மாசில் வற்கலை ஆடையும் மார்பின் முந் நூலும்", திருத். 1633: 1
வாலிது	வெண்மையான ஆடை	"கலத்து முண்ணாள் வாலிது முடாஅள்", அகம். 262: 7
வெளியது உடுத்தல்	வெள்ளாடை உடுத்தல்	"வெளியதுடீஇ என்பசி களைந்தோனே", புறம். 385: 7
வெளிது விரித்து உடுத்தல்	வெண்மையான ஆடையை விரித்து உடுத்துதல்	"செருப்பறை கேட்டு விருப்புற்று, மயங்கி வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇ", புறம். 279: 7-8

3.10. தொடை

இன்று வழக்கிழந்துவிட்ட தொடையணி அன்று பயன்பாட்டில் இருந்ததைத் தெரிவிப்பன குறங்குசெறி போன்ற இவ் அணிகள்

அ. அணிகலன்கள்

இடைச் செறி குறங்கு கௌவுதல்	குறங்குசெறி என்னும் அணியைத் தொடையில் அணிதல்	"இடைச் செறி குறங்கு கௌவிக் கிம்புரியிளக மின்னும் புடைச் சிறு பரடு புல்லிக் கிண்கிணி சிலம் போடார்ப்ப", சீவக. 2445 : 1 - 2
குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்தல்	குறங்குசெறி என்னும் ஆபரணத்தைக் குறங் கிடத்தே அணிதல்	"குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து", சிலப். 6 : 86
திரள் குறங்கு கடித்துக் கிடந்த கவின் வளரும் பொன்மகரம்	திரண்ட துடைகளைக் கவ்விக் கிடந்து அழகு செய்யும் பொன்னால் மகரமீன் வடிவில் செய்யப்பட்ட குறங்கு செறி என்னும் அணி	"பிடிக்கைவென்று கடைந்தன போற் பஞ்சி யார்ந்த திரள் குறங்கு கடித்துக் கிடந்து கவின் வளரும் காய் பொன் மகரம்", சீவக. 2695: 1 - 4
மாழை கொன் மணி மகரம் கௌவுதல்	பொன்னால் செய்யப் பட்ட குறங்கு செறி என்னும் அணி; துடை அணி; மகரமீன் வடிவ மாகச் செய்யப்பட்ட அணி தொடையைக் கவ்வி கிடத்தல்	"தோழமை கொண் டெனமென்மை யுடையவாயொளி திகழ்ந்து மாழை கொண் மணிமகரங் கௌவி வீற்றிருந்தனவே", சீவக. 174 : 3 - 4

3.11. கால்

இன்று காலில் தண்டை, கொலுசு அணிதல் தமிழரிடம் பரவலாகக் காணப் படுகிறது. சிறு குழந்தைகள் தண்டை, கொலுசுகளையும், மகளிர் கொலுசு களையும் அணிகின்றனர். ஆடவர் காலில் அணிகள் அணியும் பழக்கம் இன்று இல்லை. ஆயின் அன்று ஆடவரும் காலணி அணிந்தனர். காலணிகளைக் குறிக்கும் பல சொற்கள் இப்பழக்கத்தின் செல்வாக்கைத் தெளிவுபடுத்துவதுடன் இவற்றைச் செய்த தொழில் நுணுக்க முறைகளையும், செய்யப் பயன்படுத்திய பொருட்களையும் தெரிவிக்கின்றன. இன்று கொலுசுகளின் மேல் காணப்படும் சிறு சதங்கைகள் ஒலியெழுப்ப, அன்று காலணிகளின் உள்ளிட்ட வேறுவேறு பரல்கள் வேறு வேறு ஒலியெழுப்பும் வண்ணம் அமைந்திருந்தது அம்மக்களின் கலை ரசனைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு.

அ. அணிகலன்கள்

அடிக்கலம்	அடியில் அணிந்த சிலம்பு முதலியன	"அடிக்கலம் அரற்ற ஏகி அரும்பெறல் தாதைப் பாதம்", சீவக. 562 : 1
அடிக்கலம் அரற்றுதல்	அடியில் அணிந்த சிலம்பு முதலியன ஒலித்தல்	"அடிக்கலம் அரற்ற ஏகி அரும்பெறல் தாதைப் பாதம்", சீவக. 562 : 1 - 2; "கொம்பினொத் தொதுங்கியும் குழங்கல் மாலை தாங்கியும் அம்பினொத்த கண்ணினார் அடிக்கலம் அரற்றவும் நம்பி தந்த கீதமே நயந்து காண ஓடினார்", சீவக. 2037 : 1 - 3
அடிக்கலம் ஆர்த்தல்	காலணிகலன் ஒலித்தல்	"மணிவரைச் சாரன் மஞ்ஞைபோல அணிபெற வியலி அடிக்கல மார்ப்பத்", பெருங். 3: 13: 50 - 52
காலணி	காலில் அணியும் அணி	"கோவலன் சென்றக் குறுமக னிருக்கை யோர் தேவ கோட்டச் சிறையகம் புக்கபின் கரந்தியான் கொண்ட காலணி யீங்குப் பரந்து வெளிப்படா முன்ன மன்னற் குப்", சிலப். 16 : 125 - 128
காற்கணி	காலில் அணியும் அணி	"பொன்வினைக் கொல்லன் இவனெனப் பொருந்திக் காவலன் தேவிக் காவதோர் காற்கணி", சிலப். 16 : 111
செம்பொன் சீறடி	சிவந்த பொன்னால் செய்த காலணியை அணிந்த அடி	"நொய்து அலர் தாமரை நோற்ற நோன்பினால் செய்த பேர் உவமைசால் செம்பொன் சீறடி கைகளின் தீண்டினாள்", கம்ப. 1449 : 2 - 4
பொற்கால்	பொன் அணி அணிந்த கால்	"பொற்காற் புதல்வர் புரவியின்று உருட்டும்", பட். 24
வயிரக் கால்	வயிர அணி அணிந்த கால்	"கதிரவாள் வயிரப் பணைக் கையினான் கதிரவாள் வயிரக் காலினான்", கம்ப. 7333 : 3 - 4
காலுக்கு அமை வுற அணிதல்	காலணிகளைக் காலுக்குப் பொருத்த மாக அணிதல்	"பரியகம் நூபுரம் பாடகஞ் சதங்கை அரியகங் காலுக் கமைவுற வணிந்து", சிலப். 6 : 84 - 85
அரியகம்	காலில் அணியும் அணிகலன்களுள் ஒன்று	"பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து", சிலப். 6 : 84 - 85
அரியகம் காலுக்கு அமைவுற அணிதல்	அரியகம் என்னும் காலணியைக் கால் களில் அழகாக அணிதல்	"அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து", சிலப். 6 : 85

ஈரமைச் சுற்று	காலணி	"காலவை சுடுபொன் வளைஇய ஈர் அமை சுற்றொடு பொடி அழற் புறம்தந்த செய்வுறு கிண்கிணி", கலித். 85: 1 - 2
கட்டுவடம்	காலணி	"கட்டுவடக் கழலினர் மட்டு மாலையர்", பரி. 12: 24
கழல்	வீரக்கழல்; ஆடவர், குறிப்பாக வீரர் அணியும் காலணி	"வில்லும் வேலும் கழலும் கண்ணியும் தாரும் மாலை யும் தேரும் வாளும் மன்பெறுமரபின் ஏனோர்க்கும் உரிய", தொல். 1583; "வில்லோன் காலன கழலே", குறுந். 7: 1; "கழல் பறைந்தன", புறம். 4: 3; "ஒரு கழல் கம்பலை", புறம். 120: 20; "கச்சினன் கழலினன்", அகம்: 76: 7; "கச்சினன் கழலினன் கெச்சைக் கண்ணியன்", திருமுருகு. 208; "சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் கழல் யாப்புக் காரிகை நீர்த்து", குறள். 777; "செந்நெ லங்கழ னிப்பழனத்தயலே செழும் புன்னை வெண்கிழி யிற்பவளம் புரை பூந்தராய் துன்னி நல்லிமையோர் முடி தோய் கழலீர் சொலீர்", தேவா. திருஞா. 2 : 1 : 1 : 1 - 3; "தொண்டர் வந்தடி போற்றி செய் தொல்கழலீர் சொலீர் குண்டர் சாக்கியர் கூறிய தாங்குறியின்மையே", தேவா. திருஞா. 2 : 1 : 10 : 3 - 4; "கழலுங் கச்சுங் கலிங்கமு மற்றவர் விழைவன வறிந்து வேறுவேறடக்கிக் காட்சி முந்துறுத்த மாட்சியராகிப்", பெருங். 3 : 17 : 174 - 176; "மேலாண் மல்லன் பாடி காத்த நீலக்கச்சை நிரைகழன் மறவரை வேலிற் சாய்த்துங்", பெருங். 3 : 17 : 230 - 232; "உருமண்ணு வாவும் பெருவிதுப் பெய்திக் கண்ணியன் கழலினன் கச்சினன் றாரினன்", பெருங். 5 : 4 : 35 - 36; "விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் மேன்மேல் உன் அரவுவார் கழலிணைகள் காண்பாரோ அரியானே", திருவாச. திருச். 17: 3 - 4; "நற்பூங்கழலான் இருதிங்கள் நயந்தவாறும்", சீவக. 19 : 2; "கழலினர்; தாரினர்; கவச மார்பினர்", கம்ப. 2917: 1 - 2; "வாசியின் ஆர்ப்பும், முழங்கு வெங்களிற்று அதிர்ச்சியும், மொய்கழல் ஒலி யும், தழங்கு பல்லியத்து அமலையும்", கம்ப. 5610: 1 - 3; "தேர் ஆர்ப்பு ஒலி, வீரர் தெழிப்பு ஒலியும், தார் ஆர்ப்பு ஒலியும், கழல்தாக்கு ஒலியும்", கம்ப. 9491 : 1 - 2; "காதில் வெண் குழையோன் கழல் தொழ நெடியோன்", திருத். 18 : 1; "கருமிடற்று மறையவனார் தமர் ஆய கழல் ஏயர்", திருத். 886: 5 - 6
அதிர்கழல்	ஒலிக்கின்ற வீரக் கழல்	"அதிர்கழல் வேந்தன் அடிபிழைத்தாரை ஒறுக்குந் தண்டத் துறுசிதைக் கோட்டம்", மணி. 19 : 43 - 44; "கள் ளக்கறை உள்ளத்து அதிர்கழல் வெய்யவன் கரத் தால் தள்ள", கம்ப. 7201 : 2 - 3
அரவக் கழல்	ஒலி இடும் கழல்	"ஆர்அரவக் கழல் ஆடவரொடும்", சீவக. 914 : 2
சீரரவக் கழல்	சிறந்து ஒலிக்கும் கழல்	"பிறங்கொளிவாள் அரக்கன் முடியிடியச் செற்ற சீரர வக் கழலானைச் செல்வன் தன்னைச் செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே", தேவா. திருநா. 6: 84: 10: 6 - 8
அறை கழல்	ஒலிக்கின்ற வீரக் கழல்	"அறைகழல் வேந்தனாயிழை தன்னைச் சிறை செய் கென்றதுஞ் சிறைவீடு செய்ததும்", மணி. பதி. 79 - 80; "அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச் சிறுமை யிற் பொறுக்குமம் பலத்துள் நிறைதரு கருணா நிலை யமே!", திருவி. 1: 11: 5-7; "அறைகழல் சிலைக் குன்றவர் அகன் புனம் காவல் பறை எடுத்து", கம்ப. 2067: 1 - 3; "அறைகழல் அலங்கல் வீரர் ஆயவர் புரிவது ஆண்மைத் துறை எனல் ஆயிற்று அன்றே?", கம்ப. 4024:

		1 - 3; "அறைகழல் இராமன் ஆகி, அற நெறி நிறுத்த வந்தது", கம்ப. 4073 : 5 - 6; "அறைகழல் அனுமனோடும் நால்வரே முதல்வர் அம்மா", கம்ப. 8844: 4; "முறைபடு தானையின் மருங்கு முற்றினான் அறைகழல் வீடணன், அயிர்ப்பு இல் சிந்தையான்", கம்ப. 6397 : 3 - 4; "துறை எனக்கு யாது எனச் சொல்லு, சொல்! என்றான்; அறைகழல் அனுமனும் அறியக் கூறுவான்", கம்ப. 10204 : 3 - 4; "அறைகழல் அண்ணல் ஆளாய் அந்தணர் செய்தல் என்ன முறை எனக் கீறி யிட்டார்", திருத். 191 : 5 - 7; "அறைகழல் அண்ணல் கேளா அடியனேன் அவரை எல்லாம் தறை இடைப் படுத்துகின்றேன் தளர்ந்தருள் செய்யேல் என்று", திருத். 419 : 5 - 8
அறை இருங்கழல்	ஒலிக்கின்ற பெரிய வீரக்கழல்	"அறை இருங்கழலவற் காணும் ஆசையால் நிறை இரும்பல் பகல் நிருதர் நீள் நகர்", கம்ப. 5238 : 2 - 3
அறை மல்கு கழல்	ஒலித்தல் மிகுந்த கழல்	"மறைமல்கு பாடலன் மாதொர் கூறினன் அறைமல்கு கழல் தொழ அல்லல் இல்லையே", தேவா. திருஞா. 3 : 20: 7: 3 - 4
அறையார் கழல்	ஒலிக்கின்ற வீரக் கழல்	"அறையார் கழலும்அழல் வாயரவும் பிறையார் சடையும் முடையாய் பெரிய", தேவா. திருஞா. 2 : 18 : 3 : 1 - 2
அறையுறு கழல்	ஒலித்தலையுடைய கழல்	"இறையுறு வரிவளை யிசைகள் பாடிட அறையுறு கழலடி ஆர்க்க ஆடுவர்", தேவா. திருஞா. 3: 16: 7: 1 - 2
ஆய்கழல்	அழகிய வீரக்கழல்	"நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயாகின்றே தோழி யாய்கழற்", குறுந். 15: 3-4; "ஆய்கழல் வெஞ்சின விறல்வேல் காளையொடு", ஐங். 400: 4-5; "அருள்புரி நெஞ்சமொ டரசன் கூறலின் வாயிலாளரின் மடக்கொடி தான்சென்று ஆய்கழல் வேந்தன் அருள்வாழியவெனத்", மணி. 19: 140-142; "ஆய்கழற் காலோய் அருளிக் கேண்மதி", பெருங். 4: 10: 4
ஈகையங்கழல்	பொன்னால் செய்யப் பட்ட வீரக்கழல்	"தொன்னிலை மரபினின் முன்னோர்போல ஈகையங் கழற்கா லிரும்பனம் புடையற் பூவார் காவிற் புனிற்றுப் புலா னெடுவேல்", புறம். 99: 4 - 6
ஈகை வான்கழல்	பொன்னால் செய்யப் பட்ட அழகிய வீரக் கழல்	"இயலணிப் பொலிந்த வீகை வான்கழ றுயல் வருந் தோறுந் திருந்தடிக் கலாவ", குறிஞ். 126 - 127; "செவ் வுளைக் கலிமா வீகை வான்கழற் செயலமை கண் ணிச்சேரலர் வேந்தே", பதிற். 38: 7-8; "இரும்பனம் புடையல் ஈகை வான்கழல் மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்", பதிற். 42: 1 - 2
ஒண்கழல்	ஒள்ளிய கழல்	"வண்டுபடத் ததைந்த கண்ணி ஒண்கழல் உருவக் குதிரை மழவர் ஒட்டிய முருகன் நற்போர் நெடுவேளாவி", அகம். 1: 1 - 3
அம்பொன் ஒண் கழல்	அழகிய பொற்கழல்	"பைம்பொன் ஆழிதொட்டான் படை காட்டினான் அம் பொன் ஒண்கழலான் அயிராவணம் வெம்ப ஏறினன் வெல்கென வாழ்த்தினார்", சீவக. 2167: 2 - 4
ஒண்தொழில் கழல்	ஒள்ளிய தொழில் களையுடைத்தாகிய வீரக்கழல்	"வாடாத் தும்பை வயவர் பெருமக னோடாத் தானை யொண்டொழிற் கழற்கால்", பெரும். 101 - 102
ஒண் நிறக்கழல்	ஒளிமிக்க நிறமுள்ள வீரக்கழல்	"கண் உறத் தெரிவுற்றது, கட்செவி, ஒண் நிறக் கழல் சேவடி ஊன்றலால்", கம்ப. 4279 : 5 - 8
ஒண் பொறிக் கழல்	அரிய பொறித்தலை உடைய ஒள்ளிய கழல்	"கல்லுடை நெடுநெறி போழ்ந்துசுர னறுப்ப ஒண் பொறிக் கழற்கான் மாறா வயவர்", பதிற். 19 : 2 - 3; "ஓடாப் பூட்கை யொண் பொறிக் கழற்கால்", பதிற். 34 : 2

ஒலிக்கழல்	ஒலி செய்யும் வீரக் கழல்	"புலிப்பொறிப் போர்வை நீக்கிப் பொன் அணிந்து இலங்கு கின்ற ஒலிக்கழல் மன்னர் உட்கும் உருச்சுடர் வாளை நோக்கிக்", சீவக. 266 : 1 - 2; "பொலிகென வண்டு பாடப் பூத்ததா மரைகள் போலும் ஒலிகழல் அடிகள் நுங்கீழ்ப் பிழைத்ததென் உரைமின் என்னாய்", சீவக. 2946 : 2 - 3; "வலியினர் எனில், அவர்க்கு ஒதுங்கி வாழ்துமோ ஒலிகழல் ஒருவ! நம் உயிருக்கு அன்பி னால்?", கம்ப. 6103 : 3 - 4
இன்னொலி கழல்	இனிய ஒலியினை உடைய வீரக்கழல்	"வயந்தக குமரனு நயந்தது நன்றென இன்னொலிக் கழற்கான் மன்னனைக் குறுகிப்", பெருங். 3 : 22 : 29 - 30
ஒலிக்குங் கழல்	ஆரவாரிக்கின்ற வீரக்கழல்	"மாற்றமு மனத்தே யாற்றுளி புடை பெயர்ந்தொலிக் குங் கழற்கா லுதயண குமரன் வலிக்கும் பொருண் மேல் வலித்தனனாகித்", பெருங். 3 : 19 : 134 - 136
கட்டு வடக்கழல்	கட்டுவடம் என்னும் கழல்	"கட்டுவடக் கழலினர் மட்டு மாலையர்", பரி. 12 : 24
கருங்கழல்	கொடிய கழல்	"பொருந்தினார் செய்த தெல்லாம் புரைவிடுத் துரைமோ என்னக் கருங்கழற் செங்கட் பைந்தார்க் காளையீ துரைக்கின்றானே", சீவக. 1732 : 3 - 4; "ஏரணி நெடுங் குடை யிறைமீக் கூரிய படைநவி றடக்கைப் பைந்தார்க் கருங்கழல் அடவி யரசெனு மாண்டகை யொருவ னும்", பெருங். 3 : 17 : 14 - 16
கயிறு சேர் கழல்	கயிற்றினால் காலில் கட்டப்பட்ட கழல்	"கயிறு சேர் கழல் கார் நிறக் கண்டகர் எயிறு வாளி படத் துணிந்து", கம்ப. 9421 : 1 - 2
கனைகழல்	ஒலிக்கின்ற கழல்	"குண்டிகைப் படப்பினில் விடகினை ஒழித்தவர் கண்டவர் கண்டடி வீழ்ந்தவர் கனைகழல் தண்டுடைத் தண்டி தன்", தேவா. சுந்தர. 42: 10: 1 - 3; "கனைகழல் அரக்கர் தானை கொணருதிர், கடிதின் என்றான்", கம்ப. 7278 : 4
திருகு கனை கழல்	ஒலிக்கும் கழல்	"முருகு பொறையுயிர்க்கும் மொய்பூங் காவிற் படை நீக்கித் திருகு கனைகழலான் செம்பொன் கோயில் சேர்ந்தானே", சீவக. 2559 : 3 - 4
கால்பொரு கழல்	காலில் அணிந்த வீரக்கழல்	"கால் பொருகழலினானும் காவலன் கண்டு சொன் னான்", சீவக. 588 : 3
குரைகழல்	ஒலிக்கும் கழல்	"குறைந்து அடைந்து ஈசன் குரைகழல் நாடும் நிறைந்து அடை செம்பொனின் நேர் ஒளி ஒக்கும்", திருமந். 40 : 1 - 2; "குறைவது மில்லை குரைகழற் கூடு மறைவது மாரண மவ்வெழுத்தாகித்", திருமந். 1301: 1 - 2; "கோனக் கன்று ஆயே குரைகழல் ஏத்து மின் ஞானக்கன்று ஆகிய நடுவே உழிதரும் வானக் கன்று", திருமந். 1453 : 1 - 3; "பண்டலை மழலைசெயா மென மொழியுமை பாகமாக் கொண்டலை குரை கழலடி தொழுமவர்வினை குறுகிலர்", தேவா. திருஞா. 3 : 88 : 7 : 1 - 2; "குன்றாத மாமுனிவன் சாபம் நீங்கக் குரைகழலாற் கூற்றுவனைக் குமைத்த கோனை", தேவா. திருநா. 6 : 20 : 9 : 1 - 2; "விரை செலல் வெம்பரி மேழகம் ஏற்றிக் குரைகழல் மைந்தனைக் கொண்டு பறந்தான்", சீவக. 521: 3 - 4; "மற்று அங்கு ஒருவர், குரைகழல் துணை, தோள் இணை, பிற மற்றும் கொள லால்", கம்ப. 7496 : 1 - 2; "மற்றுஅவர் மொழிந்த மாற்றம் மணிக்கடை காப்போர் கேளாக் கொற்றவன் தன்பால் எய்திக் குரைகழல் பணிந்து நின்று", திருத். 577 : 1 - 4; "கொன்றைவார் சடையினார் தம் குரைகழல் போற்றிச் சிந்தை", திருத். 1769 : 5 - 6

கோட்டியானை ஏற்றுக்கழல்	ஆண் யானையின் தந்தத்தால் செய்யப் பட்ட வீரக்கழல்	"தோற்றாரே வெல்வர் துணைமிசைவார் கோட்டியானை ஏற்றுக் கழல் தொடியார்", இன்னி. 29 : 1 - 2
சுந்தரக் கழல்	அழகிய கழல்	"சுந்தரக் கழன் மேற் சிலம் பார்க்க வல்லீர் சொலீர் அந்தி யின்னொளி யின்னிற மாக்கிய வண்ணமே'', தேவா. திருஞா. 2: 4: 2: 3 - 4
சூடுறு கழல்	சூடுதற்குரிய வீரக் கழல்	"சூடுறு கழலினாற்குச் சுதஞ்சணன் இதனைச் சொன் னான் பாடல் வண்டரற்றும் பிண்டிப் பகவன திறைமை போல", சீவக. 957: 1 - 2
சுற்றுறு கழல்	காலில் சுற்றிக்கட்டிய வீரக்கழல்	"சுற்றுறு கழலும், சங்கும், தெழி தெழித்து உரப்பும் சொல்லும் உற்று உடன்று ஒன்றாய், ஓங்கி ஒலித்து எழுந்து ஊழில் பேர்விர்", கம்ப. 5500: 2 - 3
சூழ்கழல்	வீரக்கழல்	''ஏழாண் டியற்றியோ ரீரா றாண்டிற் சூழ்கழன் மன் னற்குக் காட்டல்வேண்டி இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து", சிலப். 3 : 10 - 12; "வாழ்தல் வேண்டி யூழ் வினை துரப்பச் சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்கு கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி", சிலப். 20 : 59 - 61; "புல்லிக்கொண்டு அவலம் நீக்கிப் பொம்மல் வெம்முலையினாட்குச் சொல்லுவான் இவைகள் சொன் னான் சூழ்கழல் காலினானே", சீவக. 268 : 3 - 4
செய்கழல்	சிறக்க செய்யப்பட்ட கழல்	"கைவிசை முறுக்கி வீசும் கொள்ளியும் கறங்கும் ஏய்ப்பச் செய்கழல் குருசில் திண்தேர் விசையொடு திசைகள் எல்லாம்", சீவக. 448 : 1 - 2; "சிதைப்பருஞ் சீற்றத் துப்பிற் செய்கழனரல வீக்கி மதக்களிறடர்த்துக் குன்ற மணிவட்டினுருட்டு மாற்றற் கதக்களியொளிறு வைவேற் காம்பிலிக் காவன் மன்னன்", சீவக. 611: 1 - 3; "செய் கழல் சீவகன் வாழ்க வென்னவே", சீவக. 778: 4; ''பொருந்து நாள் நாளை, நின் புதல்வற்கு என்றனர், திருந்தினார், அன்னசொல் கேட்ட செய்கழல் பெருந் திண் மால் யானையான்'', கம்ப. 1408 : 1 - 3
செறிகழல்	செறிவாக அணியப் பட்ட கழல்	"அறிகில அரியவர் அம்பர்ச் செம்பியர் செறிகழலிறை செய்த கோயில் சேர்வரே", தேவா. திருஞா. 3 : 19 : 9 3 - 4; "செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந் திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்", தேவா. திருநா. 6 : 18 : 8 : 1 - 2; "தேவ நற் செறிகழல் தாளிணை காட்டாய் திருப்பெருந் துறையுறை சிவபெருமானே'', திருவாச. திருப். 20 : 3 : 5 - 6; "செறிகழல் அரக்கர் தம் அரசு சீரியோர் நெறி அலது; ஆதலின், நிலைக்கலா மையும்", கம்ப. 6454 : 1 - 2; ''மாறி ஓர் பாகன் ஏற, மறிதிரைப் பரவை பின்னும் சீறியது அனையன் ஆன செறிகழல் அரக்கன்", கம்ப. 7154 : 1 - 2
செய்வினைப் பொலிந்த செறி கழல்	வேலைப்பாடுகள் நிறைந்த கழல்	"செய்வினைப் பொலிந்த செறிகழனோன்றாள்'', ஐங். 389 : 1
பொன் செய்மா மணிச் செறிகழல்	பொன்னால் செய்து மணிகள் பதித்த வீரக்கழல்	"பொறைவிலங் குயிர்த்தன பொன்செய் மாமணிச் செறிகழலிளை ஞருஞ் செல்லல் நீங்கினார்'', சீவக. 1937 : 1 - 2
தாழ் கழல்	கழல்	"மாடல மறையோன் தன்னொடுங் கூடித் தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற", சிலப். 30 : 168 - 169
திருந்து கழல்	சிறப்புடைய கழல்	"திருந்து கழல் நோன் தாள் தண் நிழலேமே", புறம். 397: 27; "திருந்து கழல் காளையொடு அருஞ்சுரம் கழிவோள்", ஐங். 382: 2

தேசு உடைய கழல்	ஒளி பொருந்திய வீரக்கழல்	"ஆசுஇல் மறை முனியாகி அம்பலவர் தாள் அடைந்தார் **தேசு உடைய கழல்** வாழ்த்தித் திருக்குறிப்புத் தொண்டர் வினை", திருத். 1082 : 2 - 3
தொடுகழல்	கட்டிய வீரக்கழல்	"உம்பரோடம் பொன்னுலக மாண்டு பாதத் **தொடுகழ லார்** பைங்கணேற்றார் பலியேற்றார் பந்தனை நல்லூ ராரே", தேவா. திருநா. 6 : 10 : 3 : 6 - 8; "வாட்கெழு மழைக்கண் வாசவதத்தை தோட்குத்தக்க **தொடு கழற்** குருசிலைக் கண்டீர்", பெருங். 2 : 7 : 107 - 109; "படுகடன் ஆதியிற் பட்டது நினையான் **தொடுகழற்** குருசில் வடுவுரை நிற்ப", பெருங். 2 : 9 : 225 - 226; "தோழரை இகவாத் **தொடுகழற்** குருசில்", பெருங். 2 : 19 : 32; "நல்அறத்து இறைவன் ஆகி நால்வகைச் சரணம் எய்தித் தொல் அறக்கிழமை பூண்ட **தொடு கழல்** காலினாற்குப்", சீவக. 382 : 1 - 2
அடிபுனை தொடு கழல்	சுற்றி அணியப்பட்ட கழல்	"**அடிபுனை தொடுகழன்** மையணற் காளைக் கென் தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே", புறம். 83 : 1 - 2
நீள்கழல்	நெடிய கழல்	"**நீள்கழல்** மறவர் செல்வுழிச் செல்க", புறம். 93: 10
நோன் கழல்	வலிய வீரக்கழல்	"எய்தினன், மானவன் இருந்த மால்வரை, நொய்தினின் சேனை பின்பு ஒழிய **நோன்கழல்** ஐயவில் குமரனும்", கம்ப. 4392 : 1 - 5; "நூற்று இரண்டு எனும் வெள்ளமும் **நோன்கழல்** ஆற்றல் சால் துன்முகனும், அங்கு ஆர்த்துஎழ", கம்ப. 7097 : 1 - 2; "நூறு நூறாயிர கோடி **நோன்கழல்** மாறு இல்போர் அரக்கரை", கம்ப. 8988 : 1 - 2
பன்மணிக் கழல்	பல மணிகளால் அமைந்த கழல்	"விண்விட்டுக் கடவுள் வீழ நுடங்கின புருவம் நெஞ்சம் பண்விட்டது இருந்து காணும் **பன்மணிக் கழலினார்க்கே**", சீவக. 676 : 3 - 4
புனைகழல்	புனையப்பட்ட கழல்	"போரெனிற் புகலும் **புனைகழன்** மறவர்", புறம். 31: 9; "**புனைகழல்** எழுவர் நல்வலம் அடங்க", புறம். 76: 12; "காலன **புனைகழல்**", புறம். 100: 1; "புடை இலங்கு ஒள் வாள் **புனைகழலோயே**", புறம். 259: 7; "பொய்யா வாய்வாள் **புனை கழல்** பிட்டன்", அகம். 143. 12; "உருமெறி பாம்பின் புரளும் செரு மொய்ம்பில் பொன் னார மார்பின் **புனைகழற்**கால் செம்பியன் துன்னாரை அட்ட களத்து", களவழி. 38: 2-4; "வலக்கால் **புனை கழல்** கட்டினு மிடக்கால் தனிச்சிலம் பரற்றுத் தகைமை யள் பனித்துறை", சிலப். 23: 9 -10; "பாதமொர் விரலூற மலையடர் பலதலை நெரிதரப் பூதமொ டடியவர் **புனை கழ**றொழுதெழு புகழினர்", தேவா. திருஞா. 3: 85: 8: 1-2; "காவலன் கருதிய கட்டுரை யுணர்தி பூவலர் தாரோய் **புனைகழ** னோன்றாள் எம்மிறை மாற்ற மிசைப்பேன் யானெனத்", பெருங். 3 : 21 : 46 - 48; "**புனை கழல்** புலவு வேற்கை புளிஞர் கோன் பொரு இல்காதல்", கம்ப. 2339 : 3 - 4
பூங்கழல்	பூ வேலைப்பாடு உடைய கழல்	"புலர்ந்த காலைப் **பூங்கழற்** குருசில் மலர்ந்த பொய் கையுண் மணிநிறத் தெண்ணீர்", பெருங். 1 : 55 : 1 - 2; "பொருள் புரி யமைச்சர் **பூங்கழற்** குருசிலொடிருளறு திருமணி யிராசகிரியத்துப்", பெருங். 3 : 5 : 1 - 2; "வது வைச் செல்வத் தொளிநகைத் தோழனை நீங்கல் செல் லான் **பூங்கழ லு**தயணன் முதற்கோ சம்பியு மொய் புனல் யமுனையும்", பெருங். 3 : 22 : 79 - 81; "தாங்கருங் காதற் நம்பியர் சூழப் **பூங்கழற்** றோழர் புடைபுடை யார் தர", பெருங். 3 : 27 : 140 - 141; "மாலியவான் என்று ஓதும் **பூங்கழல்** அரக்கன் வந்து, பொலங்கழல் இலங்கை வேந்தைத் தாங்கிய அமளி மாட்டு, ஓர் தவிசுடைப் பீடம்

		சார்ந்தான்'', கம்ப. 7283 : 2 - 4; "புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்புந்தன் பூங்கழலின் துணர்ப்போ தெனக்கணி யாக்குந் தொல்லோன் தில்லைச் சூழ்பொ ழில்வாய்'', திருக்கோ. 17: 1-2; "ஓங்கிய சைவ வாய்மை ஒழுக்கத்தில் நின்ற தன்மை பூங்கழல் செழி யன் முன்பு புலப்படா வகை கொண்டு உய்த்தார்'', திருத். 2507: 5 - 8; "பொற்பூண் சுமந்த புணர்மென் முலைக் கோடுபோழ நற்பூங்கழலான் இருதிங்கள் நயந்த வாறும்'', சீவக. 19 : 1 - 2
பூம்பொறிக் கழல்	பூ போன்று பொறிக் கப்பட்ட கழல்	"வேந்துறு விழுமந் தாங்கிய பூம்பொறிக் கழற்கா னெடுந்தகை புண்ணே'', புறம். 281 : 8 - 9
பூவிரி பொலன் கழல்	பூத்தொழிலாற் சிறப்புப் பெற்ற பொன்னால் செய்யப் பெற்ற வீரக்கழல்	"பூவிரி பொலன் கழல், பொரு இல் தானையான்'', கம்ப. 2303 : 1
பெய்கழல்	காலில் அணியப்பட்ட வீரக்கழல்	"பெய்கழ லாருணி பிறந்த நாளுட்'', பெருங். 3: 27: 133; "வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க! பிறப் பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க'', திருவாச. சிவ. 6 - 7; "பிசாசன் என்று ஒரு பெயர் பெற்ற பெய்கழல் நிசாசரன் உருப் புணர் நெருப்பின் நீர்மையான்'', கம்ப. 6112 : 3 - 4
பெருங்கழல்	வீரக் கழல்	"பாசி சூழ்ந்த பெருங்கழல்'', ஐங். 206: 4
பேராக் கழல்	இறுகக் கட்டப்பட்ட கழல்	"தன்கட் டீராக் கற்பிற் றேவியை மறந்து பேராக்கழற் கால் பெருந்தகை புலம்பிப்'', பெருங். 3 : 7 : 39 - 41; "இன்பக் கோட்டியு ளினிதி னிருந்து பேராக் கழற்காற் பெருந்தகை வேந்தன்'', பெருங். 5 : 1 : 239 - 240
பைங் கழல்	பசிய பொற்கழல்	"படர்தருஞ்சடை முடியினார் பைங்கழலடி பரவுவார்'', தேவா. திருஞா. 2 : 78 : 8 : 1; "பஞ்சி நுண்டுகிலன்ன பைங்கழற் சேவடி யுடையார்'', தேவா. திருஞா. 2 : 94: 94: 4: 1 - 2; "காலினல பைங்கழல்க ணீண் முடியின் மேலுணர்வு காமுறவினார்'', தேவா. திருஞா. 3 : 72 : 10 : 1 - 2; "அறையும் பைங்கழல் ஆர்ப்ப அரவாட அனல் ஏந்திப் பிறையுங் கங்கையும் சூடி'', தேவா. சுந்தர. 57: 2: 1 - 2; "புறமதிலொடுங்கிய பொழுதின் மறனுவந் தமரா மன்ன ரருஞ்சம முருக்கிப் பைங்கழலமைந்த பாடமை நோன்றாள் வெண்கதிர் மதியின் வீறொளி திகழ்ந்து'', பெருங். 3 : 5 : 3 - 6; "பிங்கல சார மாணி முதலாப் பைங்கழன் மறவர் பதின்மரைக் கூஉய்'', பெருங். 3 : 26 : 16 - 17; "பகை முதலறுத்துப் பைங்கழ னோன்றாள் வகைமிகு மான்றேர் வத்தவர் கோமான்'', பெருங். 4 : 1 : 1 - 2; "கிங்கரர், சம்புமாலி, கேடு இலா ஐவர் என்று இப் பைங்கழல் அரக்கரோடும் உடன் சென்ற பகுதிச் சேனை'', கம்ப. 5226 : 1 - 2; "தெறித்தவன் தலை; தெறித்தன செறி சுடர்க் கவசம்; தெறித்த பைங் கழல்; தெறித்தன சிலம்பொடு பொலந்தார்'', கம்ப. 5520 : 1 - 2; "பார் அணைத்த வெம்பன்றியை அன்பினால் பார்த்த காரணத்தின் ஆதியின் பயந்த பைங்கழ லோர்'', கம்ப. 9267 : 1 - 2
பைம்பொன்கழல்	பொன்னால் ஆன வீரக்கழல்	"சீர்தங்கு செம்பொன் கொடிமல்லிகை மாலை சேர்ந்து வார்தங்கு பைம்பொன் கழல் மைந்தர் கைக்காட்ட'', சீவக. 881 : 1 - 2

வாரொடு தொடர்ந்த பைம் பொற் கழல்	வாரினாற் பிணிக்கப் பெற்ற பசிய பொன் னாலாகிய வீரக்கழல்	"வாரொடு தொடர்ந்த பைம்பொற் கழலினன் வருதலோடும், சூரொடும் தொடர்ந்த தண்டைச் சுழற்றினான், வயிரத் தோளான்", கம்ப. 8566 : 3 - 4
பொருகழல்	கழல்	"திருநகர் முழுவதும் திருந்த நோக்கிய பொருகழல் இராவணன் அயற்குப் பூசனை வரன்முறை இயற்றி, நீ வழிக் கொள்வாய் என்றான்", கம்ப. 6074 : 1 - 3
பொலங்கழல்	பொன்னாலான வீரக்கழல்	"வியன்பணை முழங்கும் வேன்மூ சமுவத்து அடங்கிய புடையற் பொலங்கழ லோன்றாள்", பதிற். 31 : 30 - 31; "பூண்டேன் எம்கோன் பொலங்கழலும் புகழே அன்றி புன்பழியும் தீண்டேன் என்று, மனம் மகிழ்ந்தாள், திரு வின் முகத்துத் திருஆனாள்", கம்ப. 5340: 3 - 4; "பூங்கழல் அரக்கன் வந்து, பொலங்கழல் இலங்கை வேந்தைத் தாங்கிய அமளிமாட்டு, ஓர் தவிசுடைப் பீடம் சார்ந்தான்", கம்ப. 7283 : 3 - 4; "போவாய் இதுபோது பொலங் கழ லோய்! மூவாயிர கோடியரோடு, முரண் காஆர்கரி, பரி காவலின்", கம்ப. 7741 : 1 - 3
புனையும் முடி துன்று பொலங் கழல்	தரித்துள்ள கீரிடங்கள் படிவதான பொன்னால் அமைந்த வீரக்கழல்	"முனைவன், முதுதேவரில் மூவர் அலார் புனையும் முடி துன்று பொலங்கழலான்", கம்ப. 2591 : 5 - 8
அதிர் பொலன் கழல்	ஒலிக்கின்ற வீரக் கழல்	"கதிரவன் உதிப்ப, காலைக் கடன் கழித்து, இளவ லோடும் அதிர் பொலன் கழலினான்", கம்ப. 10253 : 1 - 2
பொற்கழல்	பொன்னால் செய்யப் பட்ட கழல்	"பொங்கு மலர் நறுந்தார்ப் புனைமுடிப் பொற்கழல் விச்சா தரருங் தேவ குமரரும்", பெருங். 2: 20: 118 - 119; "மாலுஞ் சோதி மலரானு மறிகிலா வாய்மையான் காலங் காம்பு வயிரங் கடிகையன் பொற்கழல் கோல மாய்க் கொழுந்தீன்று பவளந் திரண்டதோர்", தேவா. திருஞா. 2 : 6 : 10 : 1 - 3; "அன்று முப்புரஞ் செற்ற வழகநின் துன்று பொற்கழல் பேணா வருகரைத்தென்றவாது செயத் திருவுள்ளமே", தேவா. திருஞா. 3 : 108 : 10 : 1 - 3; "வளங்கிளர் நீர்ப் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய் மாமுனிகள் தொழுதெழு பொற்கழலான் கண்டாய்", தேவா. திருநா. 6. 73: 9 : 5 - 6; "பீடு விண்மிசைப் பெருமையும் பெற்ற பெற்றி கேட்டு நின் பொற்கழல் அடைந்தேன்", தேவா. சுந்தர. 45 : 7 : 3 - 4; "போந்தி யான்துயர் புகாவணம் அருள்செய்து பொற்கழலிணை காட்டி வேந்தனாய் வெளியே என் முன் நின்றதோர் அற்புதம் விளம் பேனே", திருவாச. அற்புதப். 2: 5 - 8; "சேவின் திகழ், பவர் பொன்கழல் தெளிவுற்றனர் பெரியோர்", திருத். 1384: 4
செம்பொற்கழல்	பொற்கழல்	"அடிவிளங்கு செம் பொற் கழலார் போலும் ஆக்கூரில் தான்றோன்றியப் பனாரே", தேவா. திருநா. 6: 21: 4: 7 - 8; "செக்கர் திருமேனிச் செம்பொற் கழலங்கை முக்கட் கடாயானை முன்", 11ஆம் திரு. 525: 3-4; "கற்றார் வல்விற் சூடுறு செம்பொற் கழல் நாய்கன் பொற்றார் மார்பீர் போதர்மி னென்றாங் கெதிர் கொண்டான்", சீவக. 1054: 3 - 4; "சுற்றார் வல்விற் சூடுறு செம்பொன் கழலாற்குக் குற்றேல் செய்துங் காளையும் யானுங் கொடியாளை", சீவக. 1057 : 1 - 2; "மன்றினிடையே நடம்புரிவார் மருவு பெருமைத் திருவாரூர் சென்று குறுகிப் பூங்கோயில் பெருமான் செம்பொன் கழல் பணிந்து", திருத். 3203 : 5 - 8; "அண்ட வாணர் மறைபாட ஆடும் செம் பொன் கழல் மனத்துக் கொண்ட கருத்தின் அக நோக்கும்", திருத். 3597 : 3 - 5

அம்பொன்கழல்	அழகிய பொற்கழல்	"கும்பக் கொடியோனும் நிகும்பனும், வேறு அம்பொன் கழல் வீரன் அகம்பனும்", கம்ப. 7742: 1 - 2
பொன் அவிர் கழல்	பொன்னால் ஆன கழல்	"மன்னவன் நிரைகொண் டாரை வளநகர்த்தந்து பொன் அவிர் கழலிற்தங்கள் புனைமுடி யிடுவியே னேல்'', சீவக. 1861 : 1 - 2
பொன்னங்கழல்	பொன்னால் ஆகிய கழல்	"யக்காரம் பூண்டானே ஆதியானே பொன்னங் கழல டிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணி யனே'', தேவா. திருநா. 6: 99: 9: 6 - 8; "இன்னவாறே இவர் ஒழுக ஏறுகொடிமேல் உயர்த்தவர்தம் பொன்னங் கழல்கள் மண்ணின்மேல் பொருந்த வந்து வழக்கு உரைத்து", திருத். 1717 : 1 - 4
பொன்னின் வார் கழல்	பொன்னால் ஆன நீண்ட வீரக்கழல்	"மேல் வானவர்க்கு அரசுஆம் பொன்னின் வார்கழல் புரந்தரன் போலியர் அல்லர்'', கம்ப. 1380 : 2 - 5
பொன்னுடை வனை கழல்	பொன்னால் அணி நலமுறப் புனைந்த வீரக்கழல்	''தன்னுடைச் சிரத்தை என் சரத்தின் தள்ளினால் பொன்னுடை வனை கழல் பொலம் பொன் தோளி னாய்!", கம்ப. 8482 : 2 - 3
பொன்னூர் கழல்	பொன்னாலான வீரக் கழல்	"இன்னீர் அமிர்தன் னவள் கண்ணி ணைமாரி கற்பப் பொன்னூர் கழலான் பொழிமா மழைக்காடுபோகி", சீவக. 21 : 1 - 2
செம்பொன் அணி மணிக் கழல்	ஆரவாரம் செய்யும் செம்பொன்னாலான கழல்	"மடத்திடைப் பாவை போன்றோர் நோக்கினளாகி நிற்ப அடிப்பொலிந் தார்க்கும் செம்பொன் அணி மணிக் கழலினான் அம் மடத்தகை குறிப்பு நோக்கி மனத்தித சிந்திக்கின்றான்", சீவக. 1573 : 2 - 4
ஆர்பொன் அடிசூழ் மணியங்கழல்	பொன்னிடத்தில் நிறைந்த மணியை உடைய கழல்	"வார்பொன் முடிமேல் வயிரம் உழச் சேந்த செல்வத்து ஆர்பொன் அடிசூழ் மணியங்கழலானை வேந்தன்", சீவக. 1869 : 1 - 2
மின்குலாம் கழல்	ஒளி விளங்குகின்ற வீரக்கழல்	"மின்குலாம் கழல் கால் வீரன் விண்ணிடை விரைந்த தன்மை என் கொலாம்! என்ன அஞ்சி வானவர் இரியல் போனார்", கம்ப. 8184 : 3 - 4
முடிபுனை பசும் பொன் கழல்	பகைவரை வென்ற தன் அடையாளமாக அவர்தம் பொன்முடி யினால் செய்யப்பட்ட பசும் பொன்னினால் ஆன கழல்	"முடிபுனைந்த பசும் பொன்நின் அடிபொலியக் கழல் தைஇய", புறம். 40 : 3 - 5
மையற விளங்கிய கழல்	குற்றமில்லாதபடி விளங்கிய கழல்	"மையற விளங்கிய கழலடிப் பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே", ஐங். 399 : 5 - 6
மொய் கழல்	செறிந்துள்ள வீரக் கழல்	"முன்னையின் அழகு உடைத்து! என்று மொய் கழல் மன்னனும், உவந்து, தன் முனிவு மாறினான்", கம்ப. 6072 3 - 4; "தையல்மேல் ஓடலோடும், மகோதரன் தடுத்தான் ஈன்ற மொய்கழல் தாதை வேண்ட இசை யும் நீமுனியல் என்றான்", கம்ப. 7691 : 3 - 4; "முன்செய் தார் தம்மைக் காணேன் மொய்கழல் வேடர் என்றும் மின் செய்வார் பகழிப் புண்கள் தீர்க்கும் மெய்மருந்து தேடி", திருத். 824 : 3 - 6
வரிகழல்	வரிந்து கட்டிய வீரக்கழல்	"ஏம மீகென் நிடவகற் போக்கி வரிகழனோன்றாள் வருட காரன்", பெருங். 3 : 27 : 191 - 192; "வரிக்கழற் குரிசில் மார்பும் மடந்தை வெம்முலையுந் தம்முட் செருச் செய்து திளைத்துப் போரிற் சிலம்பொலி கலந்த பாணி", சீவக. 2082 : 1 - 2

வனைகழல்	வீரக்கழல்	"வனைகழல் வயிரத் திண்தோள் மன் இளங்குமரன் சொல்வான்", கம்ப. 4337 : 7 - 8; "வினையும், நல் ஆண் மையும் விளம்ப வேண்டுமோ? வனைகழல், வரிசிலை, வள்ளியோய்! என்றான்", கம்ப. 4400 : 5 - 8; "வனை கழல் இராமன் பெரும் பெயர் ஓதி இருந்தனன், வந்து அயல் மறைந்தே", கம்ப. 5156 : 7 - 8; "நினைவதன் முன்னம் கொன்று நின்றது அந்நெடுங்கண் சீயம் வனைகழலவனும், மற்று அம் மடங்கலின் வரவு நோக்கி", கம்ப. 6331 : 3 - 4
வார்கழல்	நீண்ட வீரக்கழல்	"வார்கழல் வேந்தே வாழ்க நின் கண்ணி", மணி. 5 : 28; "செப்பான மென்முலை யாளைத் திகழ்மேனி வைப்பானை வார்கழலேத்தி நினைவார் தம் ஒப் பானை யோதமுலாவு", தேவா. திருஞா. 2 : 11 : 6 : 1 - 3; "பாரகம் சுமந்த பாம்பின் பணாமணி பறிக்க வேண்டின் வார்கழல் காலினாலே கல்ல வல்லவனை முன்னா", கம்ப. 6939 : 1 - 2; "வாளை வெளவிய கண்ணியர் வார்கழல் தாளை யேத்துபு தங்குறை செப்பினார்", சீவக. 883 : 3 - 4; "கார்பெறு கானம் போலக் களித்தன கைகள் கூப்பி வார்கழல் வேந்தன் தொண்டர் மலர்அடி தலைமேல் வைத்து", திருத். 864 : 4 - 8
பொன்னின் வார் கழல்	பொன்னாலான நெடிய வீரக்கழல்	"மன்னன் மைந்தன் மனக் கருத்து உட்கொளா பொன்னின் வார்கழல் தாதை இல் போயினான்", கம்ப. 4285 : 5 - 8
வார்த்தங்கிய கழல்	வாரால் பிணைத்துக் கட்டப்பட்ட வீரக்கழல்	"தீர்த்தன்கழல் பரவா, முதல் அரிபோல் வருதிறலான் வார்த் தங்கிய கழலான் ஒரு மரன், நின்றது நமனார்", கம்ப. 7882 : 2 - 3
வாரொடு தொடர் கழல்	வார்கயிற்றால் கட்டிய வீரக்கழல்	"காரொடு தொடர் மதக்களிறு சென்றன, வாரொடு தொடர் கழல் மைந்தர் ஆம் என", கம்ப. 1443 : 1 - 2
வார்க்குறு வனை கழல்	உருக்கி வார்த்துச் செய்த கழல்	"வார்க்குறு வனைகழல் தம்முன் வாழ்ந்த நாள் சீர்க்கு உறவு ஆய்", கம்ப. 6427 : 1 - 2
வாரின் பெய்கழல்	வாரினால் பின்னப் பட்ட கழல்	"வாரின் பெய்கழல் மாருதி கதுமென வந்தான்", கம்ப. 7232 : 4
தாள்மின்னு வீங்கு கழல்	காலில் ஒளி விளங்கு மாறு கட்டிய வீரக் கழல்	"வாள்மின்னு வண்கை வடிநூற்கடற் கேள்வி மைந்தர் தாள்மின்னு வீங்கு கழலான் தனைச் சூடி மற்றப்", சீவக. 882 : 1 - 2
வெங்கழல்	கடிய வீரக்கழல்	"கங்குல் வந்து இறுத்த காலை, கைவிளக்கு எடுப்ப காவல் வெங்கழல் அரக்கன் மௌலிமிசை மணி விளக்கம் செய்ய", கம்ப. 6943: 1 - 2
கழல் அடி	கழல் அணிந்த அடி	"திருந்து கழற்தொடி குறுகல் வேண்டி", புறம். 387: 18; "காமர் கழல் அடி சேரா", கலித். 30: 20; "திருந்து கழல்சேவடி நசைஇ", அகம். 309: 11; "தொடியணி தடக்கை தோன்ற வோச்சித் தாக்கருந் தானைத் தருச கன் கழலடி கூப்புபு பணிந்த கொடும் பூட் குருசிலை எடுத்தவன்", பெருங். 3 : 16 : 32 - 35; "ஆருணி யரசன் போதர வறிந்த பின் அடக்கருஞ் சீற்றத் தாருணி கழ லடி வடுத்தீர் வருடகன் வணங்கினன் காண", பெருங். 3 : 26 : 85 - 87
கழல் கால்	கழல் அணிந்த கால்	"ஓடாப்பூட்கை ஒண்பொறிக் கழற்கால்", பதிற். 30: 40; "பொலங்கழற்காற் புலர் சாந்தின் விலங்ககன்ற வியன் மார்ப", புறம். 3: 15 - 16; "மான்கணந் தொலைச்சிய குருதியங் கழற்கால்", புறம். 150: 5; "புனை கழற்கால் தென்னவன்", கலித். 98: 30; "கழற்கால் மின்ஒளிர் நெடுவேல் இளையோன்", அகம். 203: 9-10; "கழற்கால் இளையர்", அகம். 269: 12-13; "புடையல்அம் கழற்கால்

"புல்லி", அகம். 295: 13; "கழல்கால் பண்ணன் காவிரி வடவயின்", அகம். 177: 16; "பசுமணி பொருத பருஏர் எறுழ்க் கழற்கால்", பட். 294; "ஒண் தொழிற் கழற்கால்", பெரும். 102; "தீம்புழல் வல்சிக் கழற்கான் மழவர் பூந்தலை முழவினேன்றலை கடுப்ப", மது. 395: 96; "கச்சய மாளுங் கழற்கால் வேந் தன்", மணி. 10: 53; "ஊனிவர் நெடுவேலுருவக் கழற்கால் பொங்கு மயிர் மான்றேர்த்", பெருங். 3: 17: 34 - 35; "ஆய்கழல் காலோய் அருளிக் கேண்மதி", பெருங். 4: 10: 4 - 5; "பிரச்சோதன னெனும் பெருமக னோலை உரைசேர் கழற்கா லுதயணன் காண்க", பெருங். 4: 10: 111 - 112; "குறையிவட் கென்னெனக் கோமகளறியா வார்ப்பொலி கழற்கான் மன்னவருரு விற்றூர்த்தக் கள்வன் பாற்போய்க் கேளென", பெருங். 4: 14: 26 - 28; "வினையவர் நாலவரும், விரைவின் வந்தனர் கனை கழல் காலினர்; கருமச் சூழ்ச்சியர்", கம்ப. 6377: 2 - 3; "போர் ஒலி முரசின் ஓதை திசைகளின் புறத்துப் போக தார் ஒலி கழற்கால் மைந்தன் தானை யும் தானும் சென்றான்", கம்ப. 7906: 2 - 3; "ஒருகையிரு மருப்பின் மும்மதத்த தோங்கெழிற்குன் றனைய வேழம் திருகு கனைகழற்கால் சீவகன் வென்றிளையாட் குடைந்து தேனார்", சீவக. 985: 1 - 2; "வாள்களின் கவிக் குல வீரர் வார்கழல் தாள்களைத் துணித்தனர்", கம்ப. 8045: 1-2

கழலன்	கழல் அணிந்தவன்	"கண்ணியன் கழலன் தாரன்", நற். 128: 8
கழலோன்	வீரக்கழல் அணிந்தவன்	"கழலோன் காப்ப கடுகுபு போகி", குறுந். 356: 2
கழலணிதல்	வீரக்கழல் கட்டி இருத்தல்	"சீற்றத் துப்பிற் சேதியர் பெருமகன் கழலணி காலினன் கரணயாப்பினன்", பெருங். 3 : 27 : 137 - 138; "ஒண்கொடி யுருவத் திண்டேர் இளிமயிர்ப் புரவி பண்ணி வண்கழல் அணிந்து மள்ளர் வாள்வலம் பிடித்து நாளை", சீவக. 2151 : 2 - 3; "புனைகதிர் மருப்புத் தாடி மோதிரம் செறித் துப் பொன்செய் கனைகதிர் வாளை ஏந்திக் கால்கழல் அணிந்து நம்மை இனையன பட்ட ஞான்றால் இறை வர்கள் நினைப்பதென்று", சீவக. 2279 : 1 - 3
புரிகழல் அணிதல்	வலிய கால்களில் கழல் அணிதல்	"எரிகதிர்ப் பைம்பொற்சுண்ணம் இலங்கமெய்ம் முழுதும் அப்பிப் புரிகழல் அணிந்த நோன்றாள் போதன புரத்து வேந்தன்", சீவக. 2189 : 1 - 2
ஆர்ப்புறும் பைங் கழல் அணிதல்	ஆரவாரிக்கின்ற வீரக்கழல்களை அணிதல்	"நகுவன போலத் தொகை கொண்டார்ப் புறும் பைங் கழ லணிந்து பரிபசை வில்லா இசைகொ ணோன்றா ளசைவி லாண்மையர்", பெருங். 3 : 20 : 5 - 7
வீரக்கழல் காலில் விளங்க அணிதல்	காலில் வீரக்கழலை அழகுற அணிதல்	"வீரக்கழல் காலின் விளங்க அணிந்த பாதம்", திருத். 711 : 1
கழல் அயர்த்தல்	கழல் ஆரவாரித்தல்	"பறையுங் குழலும் ஒலிபாடல் இயம்ப அறையும் கழல யர்க்க நின்றாடும் அமுதே", தேவா. சுந்தர. 73: 7: 1-2
கழல் ஆர்த்தல்	கழல் ஒலித்தல்	"அழல் ஆர்விறலாம் வினை அது போகக் கழல் ஆர் திருவடி கண்டு அருள் ஆமே", திருமந். 1695 : 3 - 4; "அடிபுல்கு பைங்கழல் களார்ப்பப் பேர்ந்தோரன லேந்திக் கொடிபுல்கு மென்சாய லுமையோர் பாகங் கூடினீர்", தேவா. திருஞா. 2 : 55 : 7 : 1 - 2; "இறையுறு வரிவளை யிசைகள் பாடிட அறையுறு கழலடி ஆர்க்க ஆடுவர்", தேவா. திருஞா. 3 : 16 : 7 : 1 - 2; "அறைகழலுந் திருவடி மேற் சிலம்பும் ஆர்ப்ப", தேவா. திருநா. 6 : 42 : 6 : 5; "அடி கொண்டார் சிலம்பலம்பு கழலு மார்ப்ப

		அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார்", தேவா. திருநா. 6 : 96 : 3 : 3 - 4; "அறையும் பைங்கழல் ஆர்ப்ப அரவாட அனல் ஏந்திப் பிறையுங் கங்கையும் சூடி", தேவா. சுந்தர. 57 : 2 : 1 - 2; "கழலார்ப்ப பேரிரவில் ஈமப் பெருங்காட்டில் பேயோடும் ஆரழல்வாய் நீயாடும் அங்கு", 11ஆம் திரு. 94 : 2 - 4; "மாலையும் கண்ணியும் மலைந்த சென்னியர் ஆலுபு செறிகழல் ஆர்க்கும் காலினர்", சீவக. 2217 : 1 - 2
கழல் ஆர்ப்ப அணிதல்	ஒலிக்கும் தன்மை பொருந்திய பொன் னாலான வீரக்கழலை ஒலிக்கும்படி அணிதல்	"அறையார் பொற்கழலார்ப்ப அணியார் தில்லை அம் பலத்துள் நடமாடும் அழகன் தன்னை", தேவா. திருநா. 6: 54: 6: 1 - 2
செறிகழல் நின்று ஆர்த்தல்	கழல் ஒலித்தல்	"தெவ் இடைதர நின்று ஆர்க்கும் செறிகழல் புளிஞர் கோமா அன்!", கம்ப. 2346: 3 - 4
சுடர் பொன் கழல் ஆர்த்தல்	ஒளி வீசும் பொன் னால் ஆகிய வீரக் கழல் பேரொலி செய்தல்	"அடியில் சுடர் பொன் கழல் ஆர்கலி நாண ஆர்ப்ப", கம்ப. 1720: 1 - 2
தாளின் வீக்கிய கழலின் ஆர்த்தல்	காலில் கட்டப்பட்ட வீரக்கழல் ஒலித்தல்	"மின் நெடுங் கொண்டல் தாளின் வீக்கிய கழலின் ஆர்ப்ப தன் நெடுஞ்தோற்றம்", கம்ப. 4739: 1 - 3
பொற்கழல் ஆர்த்தல்	பொன்னாலான வீரக் கழல் ஒலித்தல்	"அறையார் பொற்கழலார்ப்ப அணியார் தில்லை", தேவா. திருநா. 6: 54: 6
பைங்கழல் ஆர்த்தல்	பசும் பொன்னால் செய்யப்பட்ட வீரக் கழல்கள் ஒலித்தல்	"உடைத் தாரொடு பைங்கழல் ஆர்ப்ப உலாவிப் புடைத்தார் பொருகின்றனர் கோள் அரி போல்வார்", கம்ப. 7963: 3 - 4
கழல் இலங்குதல்	ஒலிக்கும் வீரக்கழல் விளங்குதல்	"கள்ளணி மாலை மோந்து கனைகழல் இலங்கு நோன்தாள்", சீவக. 614: 2
கழல் மலிந்து இலங்குதல்	வீரக்கழல் செறிந்து விளங்குதல்	"எழில் மணிப் புரவி ஏழாமிலக்கம் ஏழ்தேவ கோடி கழல் மலிந்திலங்கும் காலாள் கட்டியங்காரற் கன்றே", சீவக. 2220: 3 - 4
திருந்தடி கழலுரீஇய	அடியில் கழல் அணிந்திருத்தல்	"கழலுரீஇய திருந்தடிக்", புறம். 7 : 2
கழல் உலாம்	வீரக்கழல் அணிந்திருத்தல்	"கழல் உலாம் காலும், கால வேல் உலாம் கையும்", கம்ப. 4870 : 1 - 2
வார்கழல் ஒலி செய்தல்	கழல் ஒலித்தல்	"ஒலி செய் வார்கழலான் திறமுள்கவே மெலியு நம்முடன் மேல்வினை யானவே", தேவா. திருஞா. 3 : 48: 10 : 3 - 4
கழலொலித்தல்	வீரக்கழல் ஒலித்தல்	"கழலொலியுங் கைவளையும் ஆர்ப்ப ஆர்ப்பக் கடை தோறு மிடுபிச்சைக் கென்று செல்லுந் திகழொளியைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத்", தேவா. திருநா. 6 : 68 : 6 : 5 - 7
கழல்கள் கலந்து ஒலித்தல்	கழல் ஒலித்தல்	"கருமானின் உரியதனே உடையாவீக்கிக் கனை கழல் கள் கலந்தொலிப்ப அனல்கை ஏந்தி", தேவா. திருநா. 6 : 1 : 3 : 1 - 2
கழல் கட்டுதல்	தொழில் அமைந்த வீரக்கழலைக் கட்டுதல்	"வலக்கால் புனைகழல் கட்டினும் இடக்கால் தனிச்சிலம் பரற்றுந் தகைமையள் பனித்துறைக் கொற்கைக் கொண்கன் குமரித்துறைவன்", சிலப். 23 : 9 - 11; "கால் கழல் கட்டிய மள்ளர்கள் கைகளின் மெய்கள் அடக் கிய வாள் ஒளி வட்டம் முனைந்திட வந்து இரு கைகளின் முந்தினர்", திருத். 623: 1 - 4

கழல் திருந்தடிக் கலாவ	கழல் அடிகளில் அசைதல்	"ஈகை வான்கழல் துயல் வருந்தோறும் திருந்து அடிக் கலாவ", குறிஞ். 126 - 127
கழல் கறங்கல்	நீண்ட வீரக்கழல் ஒலித்தல்	"மறங்கொள் வெங்கதிர் வேலவன் வார்கழல் கறங்க ஏகித்தன் காதலி யூடலை", சீவக. 1034 : 1 - 2
கழல் குரைத்தல்	வீரக்கழல் ஒலித்தல்	"குரை கழன் மாக்கள் கொலை குறித்தனரே", சிலப். 18 : 28
பொன் அவிர் கழல் கொள்ளுதல்	பொன் ஒளி வீசும் கழல் அணிந்திருத்தல்	"மன்னர் தம் முடிகள் வேய்ந்த வயிரம் போழ்ந்து உழுது சேந்த பொன்அவிர் கழல்கொள் பாதம் பொழி மழைத் தடக்கைக் கூப்ப", சீவக. 542 : 2 - 3
மணியங்கழல் சூழ்தல்	மணியையுடைய கழல் பாதத்தில் சூழ்ந்து இருத்தல்	"ஆர்பொன் அடிசூழ் மணியங்கழல் ஆணை வேந்தன்", சீவக. 1869 : 2
கழல் சேர்தல்	வீரக்கழல் அணிதல்	"நீரார்ந்த செஞ்சடையீர் நிரையார் கழல்சேர் பாதத் தீர் ஊரார்ந்த சில்பலியீ ருழைமானுரி தோலாடையீர்", தேவா. திருஞா. 2: 54: 2: 1 - 2
சேவடி சித்திரக் கழல் சேர்த்தல்	சிவந்த அடிகளின் மேல் ஓவிய வேலைப் பாடமைந்த வீரக் கழலையும் கட்டுதல்	"பத்து உள விரல் புடை பரந்த பண்பு என சித்திரச் சேவடிக் கழலும் சேர்த்தினான்", கம்ப. 7126: 3-4
கழறயங்குதல்	வீரக்கழலசைதல்	"கச்சந் தின்ற கழறயங்கு திருந்தடி", மது. 436; "களிற்றுத் தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்து அடி", சிறுபாண். 123
பொலன் கழல் தழங்கல்	வீரக்கழல்கள் ஒலித்தல்	"பாரினில் சேறலின், பரிதி மைந்தனும் தாரினின் பொலங்கழல் தழங்க தாரணித் தேரினில் சென்ற னன், சிவிகை பின் செல", கம்ப. 439: 2 - 4
இயலணி பொலிந்த ஈகை வான் கழல் துயல் வருதல்	பொன்னால் செய்யப் பட்ட அழகிய வீரக் கழல் அசைதல்	"இயலணிப் பொலிந்த வீகை வான்கழ றுயல் வருந் தோறுந் திருந்தடிக் கலாவ", குறிஞ். 126-127
கழல் தைஇய	கழல் அணிதல்	"நீயே, பிற ரோம்புறு மறமன்னெயில் ஓம்பாது கடந்து அட்டவர் முடி புனைந்த பசும் பொன்னின் அடிபொலியக் கழறைஇய", புறம். 40: 1-4
தயங்கு பொற்கழல் தாள்தொறும் தொடர்தல்	ஒளி வீசும் அழகிய வீரக் கழல் பாதங்கள் தோறும் அணியப்பெறுதல்	"தாள்தொறும் தொடர்ந்த தயங்கு பொற் கழலின் தகை ஒளிநெடு நிலம் தடவ", கம்ப. 5151: 5-6
கழல் தொடுதல்	காலில் கழல் அணிதல்	"கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டுச்", புறம். 77 : 1; "அடு புலி முன்பின் தொடுகழல் மறவர்", அகம். 75: 6; "கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்த தொடுகழன் மன்னற்குத் தொலைந்தனராகி", சிலப். 6: 8 - 9
கழல் நரலச் செல்லுதல்	பொன்னால் ஆன வீரக்கழல் ஒலித்தல்	"சிங்கந்தான் கடிய தாங்கோர் செழுஞ்சிங்க முழக்கிற் சீறிப் பொங்கிமேற் செல்வ தேபோற் பொலன் கழல் நரலச் சென்றான்", சீவக. 765: 3 - 4
கழல் சேவடி புரளுதல்	கழல் அணிதல்	"ஒண்பொறி புனைகழல் சேவடிப் புரள", அகம். 376: 7
கழல் புலம்புதல்	வீரக்கழல் ஒலித்தல்	"சேனையோர் கழலும் தாரும், சேண் தரப் புலம்ப", கம்ப. 8446: 3
கழல் புனைதல்	வீரக்கழல் அணிதல்	"கழல்புனை திருந்தடிக் காரி நின்னாடே", புறம். 122: 2; "கழல் புனை திருந்து அடிக் கடுமான் கிள்ளி", புறம். 167: 10; "கழல் புனை திருந்தடிக் கள்வர் கோமான்",

		அகம். 61: 11; "புனை கழல் இராகவன் பொன் புயத்தையோ?", கம்ப. 5137: 1; "எரிந்தன விழிகள் எங்கும் எதிர்ப்பவர் ஒருவர் இன்றித் திரிந்தனர் களனில் எங்கும் சிவன் கழல் புனைந்த வீரர்", திருத். 426: 5 - 8
செறிகழல் புனைதல்	நெருங்கிய வீரக் கழலணிதல்	"செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப் பகை யரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்", சிலப். 26: 16 - 17
தொடு கழல் அடி புனைதல்	செறிந்த வீரக்கழலை அடியின் கண் அணிதல்	"அடிபுனை தொடுகழன் மையணற் காளைக் கென் தொடி கழித்திடுதல் யான் யாயஞ் சுவலே", புறம். 83: 1-2
மாக்கழல் புனைதல்	பெரிய கழல் அணிதல்	"மா இரும்புடையல் மாக் கழல் புனைந்து", பதிற். 37: 8
வார் கழல் புனைதல்	நீண்ட வீரக்கழல் கட்டப்படுதல்	"எனா, விடை கொடுத்து உதவலும் புனையும் வார் கழலினான் அருளொடும், போயினான்", கம்ப. 4519: 5 - 8
பொலங்கழல் இலங்குறப் பூட்டுதல்	பொற் கழல்களை விளங்கும் வகையில் அணிதல்	"இரு நிலத்திடை எவ் உலகத்திடை, யாரும் புரிதரப்படும் பொலங்கழல் இலங்குறப் பூட்டி", கம்ப. 9649: 2-3
கழல் பெய்தல்	கழல் அணிந்து இருத்தல்	"பெய்பூங் கழலாற்குப் பெண்ணரசி ஏந்தினாளே", சீவக. 736: 4
கழல் பொதிதல்	வீரக்கழல் அணிதல்	"அழல் பொதிந்த நீளெ∴கின் அலர்தார் மார்பற் கிம் மலை மேற் கழல் பொதிந்த சேவடியாற் கடக்கலாகா தெனவெண்ணிக் குழல்பொதிந்த தீஞ்சொல்லார்", சீவக 1224: 1 - 3
பொற்கழல் சேவடி பொருந்துதல்	பொன்னால் செய்யப் பட்ட வீரக்கழல் பொருத்தமாக இருத்தல்	"தப்பினா ரென்ற தம்பியர் வந்தவன் பொற்கழற் சேவடி பொருந்தப் புல்லி ஓர்த்தனந் தேறி யுறுதி நோக்காது", பெருங். 3: 24: 80 - 82
கழலணிப் பொலிதல்	அடியில் சிறந்த வீரக் கழலை அணிந்து இருத்தல்	"கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்", புறம். 125 : 12
வார்கழல் பொலிதல்	கழல் விளங்குதல்	"வார்கழல் பொலிந்த வன்கண் மறவர்", அகம்: 187: 7
பொற்கழல்கள் கால்மேல் பொலி வித்தல்	பொன்னால் செய்யப் பெற்ற வீரக்கழல் களைத் திருவடியில் சிறப்புற அணிவித்தல்	"கற்பகம் ஈன்ற கமழ் பட்டினை உடுத்துக் கலை மலிந்த பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து", 11ஆம் திரு. 300. 16
கழல் முழங்குதல்	வீரக்கழல் முழங்குதல்	"முழு வெண் சங்கம் முழங்கின, தனுவின் ஓதை முழங் கின, கழலும் தாரும் முழங்கின", கம்ப. 7911 : 1 - 3
கழல் வரித்தல்	வீரக்கழலை வரித்துக் கட்டுதல்	"பல்படைக் கலன்கள் என்றிப் பைங்கழல் வரிந்த வன்கண் எல்லைஇல் படைஞர் கொட்புற்று எழுந்தனர் எங்கும் எங்கும்", திருத். 580 : 5 - 8
கழல் வனைதல்	வீரக்கழல் அணிதல்	"வனை கழல் அரசரின் வண்மை மிக்கிடும் சனகர் தம் குலத்தையோ? யாதைச் சாற்றுகேன்!", கம்ப . 5137 : 3 - 4
வன்கழல் வனைதல்	பெரிய கழலினை அணிதல்	"வினையம் மற்று இது மாயமோ? விதியது விளைவோ? வனையும் வன்கழல் அரக்கர் தம் வரத்தினோ?", கம்ப. 9822 : 2 - 3
வார் கழல் வனைதல்	நீண்ட வாரினை உடைய வீரக் கழலைக் கட்டுதல்	"தனயன் ஆதியாம் படைப்பெருந் தலைவர்கள் தம்மை, வனையும் வார்கழல் இலங்கையர் மன்னனை வந்து இங்கு இனிதின் ஏறுமின் விமானம்", கம்ப. 10107 : 2 - 4
விரவு பொற்கழல் விசித்தல்	பொருந்திய பொன்னால் செய்த வீரக்கழல்களைக் காலில் கட்டுதல்	"விரவு பொற்கழல் விசித்தனர், வெரிந் உற்று விளங்கச் சரம் ஒடுக்கின புட்டிலும் சாத்தினர்", கம்ப. 5608 : 1 - 2

செம்பொற்கழல் அடி விளங்குதல்	பாதத்தில் செம்பொன் னாலான வீரக்கழல் பொலிதல்	"கடிவிளங்கு கொன்றையந் தாரார் போலும் கட்டங்கம் ஏந்திய கையார் போலும் அடிவிளங்கு செம்பொற் கழலார் போலும் ஆக்கூரில் தான்றோன்றியப்பனாரே", தேவா. திருநா. 6: 21: 4 : 5 - 8
வீரக்கழல் காலில் விளங்குதல்	காலணி ஒளி வீசுதல்	"வீரக்கழல் காலின் விளங்க அணிந்து பாதம் சேரத்தொடு நீடு செருப்பு", திருத். 711 : 1 - 3
செய்கழல் நரல வீக்குதல்	வீரக்கழலை ஒலிக்கக் கட்டுதல்	"சிதைப்பரம் சீற்றத் துப்பின் செய்கழல் நரல வீக்கி மதக்களிறு அடர்த்துக் குன்றம் மணிவட்டின் உருட்டும் ஆற்றல்", சீவக. 611: 1 - 2
தொடுகழல் நரல வீக்குதல்	வீரக்கழலை ஒலிக்கக் கட்டுதல்	"விடுகணை தெரிந்துதானை வீக்கற விசித்து வெய் தாத் தொடுகழல் நரல வீக்கிச் சொல்லுமின் வந்த தென்றான்", சீவக. 1086 : 3 - 4
கதிர்மணியின் கிங்கிணி	ஒளிகொண்ட மணிகள் பதித்த கிண்கிணி	"கங்கணம் சேர்ந்திலங்கு கையாள் கதிர்மணியின் கிங்கிணி சேர்ந்த திருந்தடியாள்", 11ஆம் திரு. 300 : 89
கிளர் ஒலி கிங்கிணி	விளங்கும் ஒலி உடைய சதங்கை	"கிளர் ஒலி கிங்கிணி எடுப்பக் கீழ்மை நெறிச் சமயங் கள் தளர் நடையிட்டு அறத்தாமும் தளர்நடையிட்டு அருளினார்", திருத். 1953 : 3 - 4
பொலம் கிங்கிணி	பொன்னாற் செய்யப் பட்ட தண்டை எனும் காலணி	"மின்செய் பொலம் கிங்கிணிக் கால் கொட்டி அவர் மீளாமை உன் செய்கை இது ஆகில்போது என்று அங்கு உடன் சென்றார்", திருத். 1960 : 3 - 4
கிண்கிணி	காலணி	"கிண்கிணி களைந்த கால் ஒண்கழல் தொட்டு", புறம். 77: 1; "கிண்கிணிப் புதல்வர் பொலிக", புறம். 198: 5; "விசும்பாடுசலின் கிண்கிணி பாவையரெல்லாம் ஒல்லா நிலைமைகண் டுரைத்தனம் யாமென", பெருங். 5: 4: 65 - 66; "செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல் விரலில் சேர்திகழ் ஆழிகளும் கிண்கிணியும் அரை யில் தங்கிய பொன் வடமும் தாள நன் மாதுளையின் பூவோடு பொன்மணியும் மோதிரமும் கிறியும்", பெரியாழ். 1: 6: 10: 1 - 4; "கான்சேர் கமழ் கோதை கால் தொடர்ந்து கைவிடாது அரற்றுகின்ற தேன்சேர் திருவடிமேல் கிண்கிணி பொன் ஆவதற்கே தக்கது என்பார்", சீவக. 637: 3 - 4; "கிண்கிணி ஒலிக்கும் இன்று ஆடவர் உயிரென", சீவக. 655 : 2 - 3; "பஞ்சி ஊட்டிய, பரட்டு இசைக் கிண்கிணிப் பதுமச் செஞ்செவி", கம்ப. 4838: 1 - 2; " அஞ்செங் கிண்கிணி அடியலைத் தனகொல்", பெருங். 1: 33: 180; "பாதச தங்கை சிறுமணி கிண்கிணி", நிக. பி. 6: 82
அரம்கொல் கிண்கிணி	அரத்தால் அராவப் பட்ட கிண்கிணி	"அரங்கொல் கிண்கிணி யிரங்க வொல்கிப்", பெருங். 1 : 34 : 134
அரிபொலி கிண்கிணி	அரியிட்ட விளங்கு கின்ற கிண்கிணி	"அரிபொலி கிண்கிணி ஆர்ப்பு ஓவா அடிதட்ப", கலித். 81: 6
இலங்கு பொன் கிண்கிணி	அழகிய பொன்னால் ஆன கிண்கிணி	"இலை கொண்ட பூணினீர் என்றெழினி சேர்ந்தாள் இலங்கு பொன் கிண்கிணியாள் நக்கு எழினி சேர்ந்தாள்", சீவக. 653 : 4 - 5
கண்பிணிப் பகு வாய்க் கிண்கிணி	மூட்டுவாய்கள் பிணிக்கப்பட்ட பிளந்த வாயை யுடைய கிண்கிணி	"பேதை மகளிர் சேதடி யணிந்த கண்பிணிப் பகு வாய்க் கிண்கிணி யரவமும்", பெருங். 1 : 41 : 57 - 58
குரும்பை மணிப் பூண் பெருஞ்செங் கிண்கிணி	குரும்பை போன்ற மணியையுடைய பூணாகிய பெரிய செவ்விய கிண்கிணி	"குரும்பை மணிப்பூண் பெருஞ்செங் கிண் கிணிப் பாலார் துவர்வாய்ப் பைம்பூண் புதல்வன்", நற். 269: 1 - 2

சுடுபொன் வளை இய ஈரமை சுற் றொடு பொடியழல் புறந்தந்த செய்வுறு கிண்கிணி	சுடும் பொன்னாலே வளைத்த இரண்டாய் அமைந்த காற்சரி யோடே பொடி மூடு தழலாலே நிறம் உண் டாக்கப்பட்ட சதங்கை	"காலவை, சுடுபொன் வளைஇய ஈரமை சுற் றொடு பொடியழல் புறந்தந்த செய்வுறு கிண் கிணி", கலித். 85 : 1 - 2
செம்பொற் கிண்கிணி	செம்பொன்னால் இயன்ற கிண்கிணி	"பூவடர் மிதிப்பினும் புகைந்தழ லுறூஉம் சேவடிக் கேற்ற செம்பொற் கிண்கிணி", பெருங். 2 : 19 : 185 - 186
தவளைக் கிண்கிணி	தவளைவாய் கிண் கிணி	"பவளக் கொப்புளம் பக்கம் பயிலத் தவளைக் கிண் கிணி தாங்குதலாற்றா திவளதிடுக்க ணிசைத்தும் யாமெனத் ததும்பு குரற் பூசலிரங்குவன வொலிப்பத்", பெருங். 1 : 53 : 165 - 168; "தவளைக் கிண்கிணித் தாமரைச் சீறடிக் குவளை யேயள வுள்ள கொழுங் கணாள்", சீவக. 243: 1 - 2; "கற்பயிற் பழுவங் கடந்தி யான் வந்தனென் வெகுள னீயெனத் தவளையங் கிண்கிணிச் சேவடி சேர்ந்து செறியப் பற்றி", பெருங். 3: 9: 166 - 167; "மற்றவை தொலையச் செற்றொளி திகழத் தனக்கமை வெய்திய தவளையங் கிண் கிணி", பெருங். 4: 12: 160 - 161; "வாணுதன் மகளிர் மற்றுப்பிறர்க் கின்றித் தானே வவ்விய தவளையங் கிண்கிணி மானேர் நோக்கின் மதன மஞ்சிகையும்", பெருங். 5 : 9 : 89 - 91
தவளைவாய பொலம் செய் கிண்கிணி	பொன்னால் செய்யப் பட்ட தவளையின் வாய் போன்ற வாயி னையுடைய சிறு சதங்கை	"செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த தவளை வாய பொலம் செய் கிண்கிணிக் காசின் அன்னபோது ஈன்கொன்றை", குறுந். 148 : 1 - 3
தெள்ளரிக் கிண் கிணி	தெளிந்த ஓசை தரும் பரல்களையுடைய கிண்கிணி	"திருவ மேகலை தெள்ளரிக் கிண்கிணி பரவை யாழ்குழல் பண்ணமை மென்முழா", சீவக. 530 : 1 - 2
பசும்பொன் கிண்கிணி	பசிய பொன்னால் இயன்ற கிண்கிணி	"இயைந்த வதுவை யெழுநா ணீங்கலும் பசும்பொற் கிண்கிணிப் பதுமா நங்கையும் நயந்த தோழி நன்னலங் காணும்", பெருங். 3 : 22 : 104 - 106; "பாடல்வண்டு யாழ் செயும் பசும்பொன் கிண்கிணித் தோடலர் கோதைமின் துளும்பு மேகலை", சீவக. 1207: 1 - 2
பசும்பொன் செய் கிண்கிணி	அழகிய பொன்னால் ஆன கிண்கிணி	"பசும்பொன் செய் கிண்கிணியும் பாடகமும் பாடு அலைப்ப நயந்துளரி பொன் சிலம்பு முத்து அரிபெய்து அகம் நக", சீவக. 177 : 1 - 2
பயில் குரல் கிண்கிணி	ஒலிக்கின்ற ஓசையை உடைய சதங்கை	"பயில் குரல் கிண்கிணிப் பதத்த பாவையர், இயல் புடை மைந்தர்", கம்ப. 4556 : 1 - 3
பருமுத்தம் நாம மழலைக் கிண் கிணி	பெரிய முத்துப் பரல் களாகிய நாவினாலே மழலைபோல் ஒலிக் கும் கிண்கிணி	"படை அவிழ்ந்த கண்பனிநீர் பாயவிம்மாப் பருமுத்த நாம மழலைக் கிண்கிணியினார்", சீவக. 293 : 3
பாசிழைக் கிண்கிணி	ஒளி கிளருகின்ற பசிய மணிகள் இழைத்த கிண்கிணி	"கிளரும் பாசிழைக் கிண்கிணிக் கணைக்கால்", பெருங். 1 : 40 : 104
பாதக் கிண்கிணி	காலணி	"மலர்ப் பாதக் கிண்கிணி ஆர்ப்ப", பெரியாழ். 2: 3: 2
பைம்பொற் பகு வாய்க் கிண்கிணி	பகுக்கப்பட்ட வாயினை உடைய பொற்கிண்கிணி	"அஞ்சொன் மகளிரடிமிசை யரற்றும் பைம்பொற் பகுவாய்க் கிண்கிணி யொலியும் மையணி யிரும்பிடி மணியும்", பெருங். 1 : 48 : 182 - 184

பொலன் செய் கிண்கிணி	பொன்னாற் செய்யப் பட்ட சதங்கை	"பொலன் செய் கிண்கிணி நலம்பெறு சேவடி மணன் மலி முற்றத்து நிலம் வடுக்கொளாஅ..... விளையாடு ஆயத்து இளையோர்க் காண்டொறும்", அகம். 254: 3 - 4
பொன் செய் கிண்கிணி	பொன்னாற் செய்யப் பட்ட கிண்கிணி	"பொன்செய் கிண்கிணிப் புதல்வராடும்'', பெருங். 1 : 43 : 183
பொன்னணி கிண்கிணி	பொன்னாலாகிய அழகிய கிண்கிணி	"பஞ்சி அணிந்த அஞ்செஞ் சீறடிப் பொன்னணி கிண் கிணிப் போழ்வாய் நிரைய", பெருங். 2 : 7 : 87 - 88
மணியரிக் கிண்கிணி	மாணிக்கப்பரல்கள் இடப்பட்ட கிண்கிணி	"மணியரிக் கிண்கிணி சிலம்பொடு மிழற்ற", பெருங். 2 : 19 : 153
வான்பொற் கிண்கிணி	உயர்ந்த பொன்னால் ஆன கிண்கிணி	"மதுக்களி நெடுங்கணாள் வான்பொற் கிண்கிணி ஒதுக்கிடை மிழற்றச் சென் றெய்தி ஊன்கவர்'', சீவக. 1014 : 1 - 2
கிண்கிணிக்கால்	காலணி அணியப் பெற்ற கால்	"சேறாடுங் கிண்கிணிக்கால் செம்பொன் செய் பட்டத்து நீறாடும் ஆயதிவன் இல்முறை வேறாய", திணை. நூற். 151: 1 - 2
கோப்பு அமைகின் கிணி அசைதல்	கோக்கப்பட்ட கிண் கிணி அசைதல்	"கோப்பு அமை கிண்கிணி அசையக் குறுந்தளிர் மெல்அடி ஒதுங்கி", திருத். 883 : 7 - 8
தளர்வார் கிண் கிணி அசைதல்	சதங்கை ஒலித்தல்	"சீர்பெருகச் செய்யவளர் திருமகனார் சீரடியில் தார் வார் கிண்கிணி அசையத் தளர் நடையின் பதஞ் சார்ந்தார்", திருத். 3684 : 3 - 4
அஞ்செங்கிண்கிணி அடி அலைத்தல்	கிண்கிணி அசைதல்	"அஞ்செங் கிண்கிணி யடியலைத் தனகொல்", பெருங். 1 : 33 : 180
பல்சில கிண்கிணி சிறுபரடு அலைத்தல்	கிண்கிணி அசைதல்	''பல்சில கிண்கிணி சிறுபரடு அலைப்ப'', பதிற். 52: 20
அழகுடைக் கிண் கிணி அடிமிசை அரற்றல்	அழகிய கிண்கிணி ஒலித்தல்	"அழகுடைக் கிண்கிணி அடிமிசை அரற்றத் தொழிலுடைச் சிறுபறை பூண்டு தேர்ஈர்த்து", 11ஆம் திரு. 291 : 1 - 2
ஆடுபொற் கிண் கிணி அடிமிசை அரற்றல்	காலில் அணிந்த சதங்கை ஒலித்தல்	"மராஅங் குரவை மகிழ்ந்தனர் மறலியும் ஆடுபொற் கிண்கிணி அடிமிசை அரற்ற நீடியன்ன நிழலறை மருங்கிற்", பெருங். 2 : 14 : 41 - 43
சூடுறும் கிண்கிணி பாடு பெயர்ந் தரற்றல்	அடியில் அணிந்த கிண்கிணி அடியிடுந் தோறும் ஒலித்தல்	"தோழிய ரெல்லாஞ் சூழ்வன ரேந்தச் சூடுறு கிண் கிணி பாடுபெயர்ந் தரற்றக்", பெருங். 4 : 8 : 17 - 18
பசும்பொற் கிண் கிணி பரடு சுமந்து அரற்றல்	பசிய பொன்னாலியன்ற கிண்கிணி கால் அடி களைச் சுமத்தலால் ஒலித்தல்	"பசும்பொற் கிண்கிணி பரடுசுமந் தரற்ற அசும் பம றாமரை யலைத்த அடியினள்", பெருங். 3 : 5 : 10 - 11
பொன்னரிக் கிண் கிணி புடைபெயர்ந் தரற்றல்	பொன்னாலியன்ற பரலையுடைய கிண் கிணி இடம்பெயர்ந்து ஒலித்தல்	"அன்ன நாண வண்ணலைக் கவற்றாப் பொன்னரிக் கிண்கிணி புடை பெயர்ந்தரற்ற அரிச்சாலேகத் தறைபல பயின்ற", பெருங். 3 : 6 : 96 - 98
கிண்கிணி ஒலித்து ஆர்த்தல்	கிண்கிணி ஒலித்தல்	"கிண்கிணி மணித்தாரொடு ஒலித்து ஆர்ப்ப", கலித். 74: 13
கிண்கிணி மிழற்றி ஆர்த்தல்	கிண்கிணிகள் மழலை போல் ஒலித்தல்	"வெள்ளைமை கலந்த நோக்கிற் கிண்கிணி மிழற்றி ஆர்ப்பப் பிள்ளைமை காதல்", சீவக. 2529 : 1 - 2
அடியார்ந்த தேரை வாய்க் கிண்கிணி ஆர்த்தல்	அடியில் நிறைந்த தேரையின் வாய் போலும் வாயை உடைய சதங்கை ஆர்வாரித்தல்	"தொடியோர் மணலின் உழக்கி அடியார்ந்த தேரை வாய்க் கிண்கிணி ஆர்ப்ப இயலுமென் போர் யானை வந்தீக ஈங்கு", கலித். 86 : 8 - 10

அதிரரிக் கிண் கிணி ஆர்த்தல்	கிண்கிணி ஒலித்தல்	"முதிரா இளமுலை முத்தொடு பொங்க அதிரரிக் கிண்கிணி ஆர்க்கும் ஒருபால்", சீவக. 2115 : 3 - 4
அரிப்பொற் கிண் கிணி ஆர்த்தல்	மெல்லிய அடியின் கண் அணிந்த பரலை உடைய பொன்னால் இயன்ற கிண்கிணி ஆரவாரித்தல்	"அரிப்பொற் கிண்கிணி யார்ப்ப வரங்கின்", பெருங். 1 : 34 : 212; "நீரணி மாடத்து நிலா நெடுமுற்றத் தரிபொற் கிண்கிணி யார்ப்ப வியலிக் கருங்கண் மகளிர் கைபுடைத் தோப்ப", பெருங். 1 : 40 : 17 - 19
பகுவாய் அரிபெய் கிண்கிணி ஆர்த்தல்	அரிபெய்த கிண்கிணி ஒலித்தல்	"பகுவாய் அரிபெய் கிண்கிணி யார்ப்பத் தெரு வில் தேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்", நற். 250: 1 - 3
தேரை வாய்க் கிண்கிணி ஆர்த்தல்	தேரையின் வாய் போன்ற கிண்கிணி ஆரவாரித்தல்	"தேரைவாய்க் கிண்கிணி ஆர்ப்ப இயலுமென்", கலித். 86: 9
பகுவாய்க் கிண் கிணி பரட்டுமிசை ஆர்த்தல்	பிளவுப்பட்ட வாயை உடைய சதங்கை ஒலித்தல்	"கதிர்வாய் திறந்து... பகுவாய்க் கிண்கிணி பரட்டு மிசை ஆர்ப்பக் கோடுவாய் சிலம்பிற் கொழுஞ் சிகைக் குன்றின்", பெருங். 2 : 10 : 68 - 70
பைம்பொற் கிண் கிணி ஆர்த்தல்	பசிய பொன்னாலான கிண்கிணி ஒலித்தல்	"பைம்பொற் கிண்கிணி பரட்டுமிசை ஆர்க்கும்", பெருங். 2 : 3 : 85
வார் பொலங் கிண்கிணி ஆர்த்தல்	கிண்கிணி ஆரவாரித்தல்	"வார்பொலங் கிண்கிணி யார்ப்ப இயற்றநீ", கலித். 96 : 17
இலங்கு பொற் கிண்கிணி இரங்குதல்	கிண்கிணிகள் ஒலித்தல்	"சிலம்பொலி யரவமும் மிச்சில் சீப்பவர் இலங்கு பொற் கிண்கிணி யிரங்கு மோசையும்", சீவக. 832 : 2 - 3
பொன்புனை கிண் கிணி ஒலித்தல்	பொன்னால் செய்யப் பட்ட கிண்கிணி ஒலித்தல்	"வேள்விபுரி சடங்கு அதனை விளையாட்டுப் பண்ணை தொறும் பூழி உறவகுத்து அமைத்துப் பொன்புனை கிண்கிணி ஒலிப்ப", திருத். 1914 : 1 - 2
கிண்கிணி கவை இய	சதங்கையை இறுக்க மாக அணிதல்	"மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில் கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி", திருமுருகு. 12 - 13
சில்லரிக் கிண் கிணி சிலம்புதல்	சில மணிப் பரல்களை யுடைய கிண்கிணி ஒலித்தல்	"சில்லரிக் கிண்கிணி சிலம்புஞ் சீறடிச் செல்விதன் திருநலஞ் சேரும் வாயில்தான்", சீவக. 2008 : 1 - 2
செல்வக் கிண் கிணி சிலம்புதல்	கிண்கிணிகள் ஒலித்தல்	"செல்வக் கிண்கிணி சிலம்பத் தேன்சொரி முல்லைக் கண்ணிகள் சிந்த", சீவக. 3129 : 1 - 2
கிண்கிணி ததும்புதல்	கிண்கிணி ஒலித்தல்	"வரிச்சாலேகம் விரித்தனர் அகற்றித் ததும்புங் கிண் கிணித் தகைமலர்ச் சேவடி", பெருங். 2 : 7 : 69 - 70; "தாம்பலர் கவரி வீசக் கிண்கிணி ததும்ப நாகப்", சீவக. 561 : 2
தவளைக் கிண் கிணி ததும்புதல்	தவளை வாய்போன்ற வாயையுடைய கிண் கிணி முரலுதல்	"தவளைக் கிண்கிணி ததும்பு சீறடியர்", பெருங். 1 : 46 : 246
பொற்பூங் கிண் கிணி பிறழுதல்	கிண்கிணி பிறழ்ந்து ஒலித்தல்	"தழையுங் கிண்கிணியும் விழைவன ஏந்திப் பொற்பூங் கிண்கிணி புறவடிப் பிறழ நற்பூங் கொம்பர் நடை பெற்றாங்கு", பெருங். 2 : 16 : 7 - 9
பொன்னாராரிக் கிண்கிணி பூசல் இடுதல்	பொன்னாலான பரலையுடைய கிண் கிணிகள் ஒலித்தல்	"மைந்நீர் நெடுங் கண்புருவங்கள் மலங்கப் பொன் னாராரிக் கிண்கிணி பூசல் இடவே", சீவக. 1067: 3 - 4
தவளை வாய பொலஞ்செய் கிண் கிணிக் காசு சீறடி பொலிதல்	தவளையின் வாயைப் போன்ற வாயை உடைய பொன்னாற் செய்யப்பட்ட கிண்கிணி விளங்குதல்	"செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த தவளைவாய பொலஞ்செய் கிண்கிணிக் காசினன்ன போதீன் கொன்றை", குறுந். 148 : 1 - 3

கிண்கிணி மிழற்றல்	கிண்கிணி முரலுதல்	"பொங்குமலர்த் தவிசிற் பூமிசை யாயினும் அஞ்சுபு மிதியாக் கிண்கிணி மிழற்ற", பெருங். 1: 42: 103 - 104
பொற் கிண்கிணி அணிமிழற்றல்	கிண்கிணி அழகாக இசைத்தல்	"அணிமிழற்றரவத் தம் பொற்கிண்கிணி", பெருங். 2 : 2 : 202
குடைச்சூல்	காலணி; குடைந்த உள்ளிடம் பொருந்திய காலணியாகிய சிலம்பு; குடைதல் தொழில் அமைந்த சிலம்பு; புடைபட்டு உட்கருவையுடைத் தாதல் பற்றி, சிலம்பு குடைச் சூல் எனப் பட்டது (உரை, சிலம்பு 16 : 118 -119)	"வில்வகுப்புற்ற நல்வாங்கு குடைச்சூல் அம் சிலம்பு", அகம். 198 : 9 - 10; "வளங் கெழு குடைச்சூலடங்கிய கொள்கை ஆன்ற வறிவிற் றோன்றிய நல்லிசை", பதிற். 57: 11 -12; "வளம்கெழு குடைச் சூல் அடங்கிய கொள்கை", பதிற். 90: 48; "குடைச் சூல் சித்திரச் சிலம்பின்", சிலப். 16: 118
வரிக்குடைச் சூல்	சிவந்த அழகிய வரிகளையுடைய சிலம்பு	"செவ்விரல் சிவந்த அவ்வரிக் குடைச்சூல் அணங்கெழில் அரிவையர்ப் பிணிக்கும்", பதிற். 68 : 19 - 20
சதங்கை	காலணி	"பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை அரியகங் காலுக் கமைவுற அணிந்து", சிலப். 6 : 84 - 85; "சதங்கை கிங்கிணியே", நிக. தி. 7 : 60; "மதங்கியர் அச்சதி வகுத்துக் காட்டுவ சதங்கைகள் அல்லன புரவித் தார்களே", கம்ப. 144 : 3 - 4
சில் அரிச் சதங்கை பம்ப ஆடுதல்	காலில் அணிந்த சிலவாகிய பரலை உடைய சதங்கை ஒலிக்க ஆடுதல்	"வானக மகளிர் வந்தார் சில் அரிச் சதங்கை பம்ப, ஆனகம், முரசம், சங்கம், முருட்டொடும் இரட்ட ஆடி", கம்ப. 8821 : 3 - 4
தாள் அரிச் சதங்கை ஆர்த்தல்	காலில் அணிந்த பரலோடுகூடிய சதங்கை ஆரவாரித்தல்	"தாள் அரிச் சதங்கை ஆர்ப்பத் தவழ்கின்ற பருவம் தன்னில் கோள் அரி இரண்டு பற்றிக் கொணர்ந் தனை", கம்ப. 9234 : 1 - 2
பாதச் சதங்கை மணி ஒலித்தல்	பாதத்தில் அணிந்து இருந்த சதங்கை மணி ஒலித்தல்	"பள்ளியினில் சென்று எய்துதலும் பாதச் சதங்கை மணி ஒலிப்பப் பிள்ளை ஓடிவந்து எதிரே தழுவ", திருத். 3723 : 1 - 3
பாசுஒளி மணியொடு ஆர்த்த பல்மணிச் சதங்கை ஏங்குதல்	பசுமை ஒளிவீசும் நீல மணியோடு கோத்த பல மணிகளையுடைய சதங்கை ஒலித்தல்	"பாசுஒளி மணியொடு ஆர்த்த பல்மணிச் சதங்கை ஏங்கக்", திருத். 670 : 1 - 2
மின் ஒளிப் பொன் மலர்ச் சதங்கைச் சாத்துதல்	மின்னல் போன்ற ஒளியையுடைய பொன் மலர் போன்ற சதங்கைகளை அணிதல்	"முழைக் கிடந்த வல் அரி இனம் முழங்குவ போல்வ தழைக்கும் மின் ஒளிப் பொன்மலர்ச் சதங்கையும் சாத்தி", கம்ப. 9648 : 3 - 4
சதங்கை புனைதல்	சதங்கை அணிதல்	"பொருவில் வயிரச் சரிகள் பொன்னரைஞாண் புனை சதங்கை", திருத். 3685 : 3
சிலம்பு	காலணி	"அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே", நற். 363: 10; "தொடியோள் மெல்அடி மேலவும் சிலம்பே", குறுந். 7: 1 - 2; "சீறடிச் சிலம்பினொன்று கொண்டியான் போய் மாறி வருவன் மயங்கா தொழிகெனப்", சிலப். 16: 92 - 93; "சிலம்பு கொண்மெனச் சேயிழை கேள்இச் சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன்", சிலப். 9 : 73 - 75; "என் காற்சிலம்பு பகர்தல் வேண்டி", சிலப். 20 : 61; "திருநிலைச் சேவடிச் சிலம்புவாய்ப் புலம்பவும் பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்", சிலப். 28 : 67 - 68; "சிலம்புகள் சிலம்பிடை

		செறித்த கழலோடும் நிலம் புகமிதித்தனள்", கம்ப. 368: 1 - 2; "சங்கொடு சிலம்பும் நூலும் பாத சாலகமும் தாழ, பொங்கு பல் முரசம் ஆர்ப்ப இல்உறை தெய்வம் போற்றி", கம்ப. 4949 : 1 - 4; "அரிதளை நெகிழி நூபுரம் சிலம்பே", நிக. பி. 6: 83
அஞ்சிலம்பு	அழகிய சிலம்பு	"ஒன்றின வோவவ எஞ்சிலம் படியே", ஐங். 389 : 5
அதிர் சிலம்பு	ஒலிக்கும் சிலம்பு	"மதுர முத்தமிழ் வாசகர் அணைந்தனர் மன்றுள் அதிர் சிலம்பு அடியார் மகிழ் அவளிவ ணல்லூர்", திருத். 2276: 3 - 4
அம்பொன் சிலம்பு	அழகிய பொற் சிலம்பு	"செம்பொன் மலர்ந்திளையார் கண்ணென்னுஞ் சீர்மணி வண்டுழலச் சில்லென்று அம்பொற் சிலம்பரற்ற அன் னம் போல் மெல்லவே யொதுங்கி", சீவக. 646 : 2 - 3
அரிஅமைச்சிலம்பு	பருக்கைக்கல் போடப்பட்ட சிலம்பு	"வைகுபுலர் விடியற் மெய்கரந்து தன்கால் அரியமை சிலம்பு கழீஇப்பன்மாண் வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்", நற். 12 : 4 - 6
அரிஆர் சிலம்பு	பரல் உள்ளிட்ட சிலம்பு	"அத்தவாகை யமலை வானெற் றரியார் சிலம்பின் னரிசியார்ப்பக்", குறுந். 369 : 1 - 2; "அரியார் சிலம்பின் சீறடி சிவப்ப எம்மொடொ ராறு படீஇயர் யாழநின்", அகம். 257 : 3 - 4
அரிச் சிலம்பு	பரலினையுடைய சிலம்பு	"இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள் கண வனை யிழந்தாள் கடையகத்தாளென்", சிலப். 20: 27-28
அரிபெய் சிலம்பு	பரல்கள் இடப்பெற்ற சிலம்பு	"அரிபெய் சிலம்பி னாம்பலந் தொடலை", அகம். 6: 1; "ஒல்லோம் என்று ஏங்கி உயங்கி இருப்பாளோ கல்லிவர் அத்தம் அரிபெய் சிலம்பு ஒலிப்பக் கொல்களிறு அன்னான்பின் செல்லுங்கொல்", ஐந். எழு. 40 : 1 - 3
அருஞ்சிலம்பு	அரிய சிலம்பு	"விரிஞ்சன் மால்முதல் விண்ணவர் எண்ணவும் அரும் சிலம்பு அணிசேவடிக்கு ஆட்செய்வார்", திருத். 4045 : 3 - 4
அடியிறைக் கொண்ட செம் பொன் ஆடகச் சிலம்பு	அடியிலே தங்குதல் கொண்ட ஆடகச் செம்பொன்னால் செய்த சிலம்பு	"அடியிறை கொண்ட செம்பொனாடகச் சிலம் பினாளக் கடியறை மருங்கி னின்ற மைந்தனைக் கண்டு நாணி", சீவக. 2059 : 1 - 2
இணை அரிச் சிலம்பு	அரிகள் பெய்த சிலம்பு	"இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்", சிலப். 20: 26 - 27
இன்மணிச் சிலம்பு	இனிய ஒலியுடைய மணிச் சிலம்பு	"இன்மணிச் சிலம்பின் சில்மொழி ஐம்பால்", கலித். 125: 16
கண்ட சிலம்பு	ஆராய்ந்து எடுக்கப் பட்ட சிலம்பு	"கண்ட சிலம்பு, வளை, சங்கு, சக்கரம், எண்திசை யோகி இறைவி பராசத்தி", திருமந். 1085 : 1 - 2
காற்சிலம்பு	காலில் அணியும் சிலம்பு	"சுண்ணமுஞ் சூட்டுஞ் சொரிந்து வார்குழற் கண்ணி மகாரொடு காற்சிலம் பார்த்தெழ", சீவக. 2114 : 1 - 2
அணிமணிக் காற்சிலம்பு	மாணிக்கத்தைப் பரல் களாக அமைத்த சிலம்பு	"தருகெனத் தந்து தான்முன் வைப்பக் கண்ணகி யணி மணிக் காற்சிலம் புடைப்ப", சிலப். 20 : 70 - 71
சித்திரச் சிலம்பு	மாணிக்கத்தோடு வயிரமும் வரிசையாகப் பதிக்கப்பெற்ற கிளிச் சிறை என்னும் பொன் னால் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் பல கொண்ட சிலம்பு	"மத்தக மணியொடு வயிரங்கட்டிய பத்திக் கேவணம் பசும்பொற் குடைச்சூற் சித்திரச் சிலம்பின் செய் வினை யெல்லாம்", சிலப். 16 : 117 - 119

சில்லரிச் சிலம்பு	சிலவாகிய அரியினை உடைய சிலம்பு	"பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக் கண்டனன் பிறனோர் கள்வன் கையென", சிலப். பதி. 25 - 26; "சில்லரிச் சிலம்பின் வள்வார்ச் சிறுபறை கறங்கச்", சீவக. 458 : 1; "சிலைபொரத் திரண்ட திண் தோள் சில்லரிச் சிலம்பினார் தம் முலைபொர உடைந்த தண்தார் மொய்ம் மதுத்துளிப்ப வந்தான்", சீவக. 612 : 2 - 3
சூழ்சிலம்பு	சூழ்ந்த சிலம்பு	"வரும்கறைப் பொழுதுமல்கிய யாமம் சென்று சுருங்கிட அறிந்த புள்ளின் சூழ்சிலம்பு ஓசை கேட்டுக்", திருத். 781 : 2 - 4
சூழ்வினைச் சிலம்பு	சித்திர வினைப் பொருந்திய சிலம்பு	"சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்", சிலப். பதி. 58 - 60
செஞ்சிலம்பு	செம்மையாகச் செய்யப்பட்ட சிலம்பு	"சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும் செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர் வஞ்சினஞ் சாற்றிய மாபெரும் பத்தினி அஞ்சிலோதி யறிகெனப் பெயர்ந்து", சிலப். 25: 72 - 75
செண்ண அம் சிலம்பு	நுண்தொழிலையுடைய அழகிய சிலம்பு	"செண்ண அம்சிலம்பு", சீவக. 5 : 168
செம்பொற் சிலம்பு	செம்பொன்னால் ஆகிய சிலம்பு	"செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம் பொருட்டால்வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென் கொல்", சிலப். 19 : 23 - 24
செம்பொறிச் சிலம்பு	சிவந்த மூட்டுவாய் உடைய சிலம்பு	"செம்பொறிச் சிலம்பின் இளையோள்", புறம். 341: 3; "செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்", பதிற். 53: 6
செய்வினைச் சிலம்பு	தொழில் அமைந்த சிலம்பு	"சிலம்பு காணிய வந்தோர் இவரெனச் செய்வினைச் சிலம்பின் செய்தி யெல்லாம் .... இலக்கண முறைமை யின் இருந்தோன் ஈங்கிவன் கொலைப்படு மகனலன் என்று கூறும்", சிலப். 16: 159 - 163
செறியரிச் சிலம்பு	செறிந்த உள்ளிடு பருக்கையையுடைய சிலம்பு	"செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர் பொலஞ் செய் கழங்கிற் தெற்றி யாடும்", புறம். 36: 3 - 4
தெண்ணீர் முத் தரிப்பொன் சிலம்பு	தெளிந்த நீரின் முகிழ்த்த முத்துக்கள் உள்ளே பரலாக இடப்பட்ட பொற் சிலம்பு	"உண் என்று ஒக்குபு பிழைப்ப, தெண்நீர் முத்து அரிப் பொற் சிலம்பு ஒலிப்பத் தத்துற்று", நற். 110: 4 - 5
தெள்ளரிச் சிலம்பு	தெள்ளிய அரியினை உடைய சிலம்பு	"பன்மலர் சிறந்த நன்னீரகழிப் புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்பு", மணி. 5: 110 - 111
தெள் ஒலிச் சிலம்பு	தெளிந்த ஒலியை உடைய காற்சிலம்பு	"தெள் ஒலிச் சிலம்புகள் சிலம்பு பொன்மனை நள் ஒலித்தில நளிர் கலையும் அன்னவே", கம்ப. 1810 : 1 - 2
தெள்ளரிப் பொற் சிலம்பு	தெள்ளிய, உள்ளே மணிகளைக்கொண்ட பொன்னால் ஆகிய சிலம்பு	"பூணொடு தெள்ளரிப் பொற்சிலம்பு ஒலிப்ப, ஒள் அழல் தாஅற விளங்கிய ஆய்பொன் அவிர்இழை அணங்கு வீழ்வு அன்ன பூந்தொடி மகளிர்", மது.444 : 47
தோடமை அரிச் சிலம்பு	தொகுதி வாய்ந்த பரலினையுடைய சிலம்பு	"கோதை ஆயமொடு ஓரை தழீஇ, தோடுஅமை அரிச் சிலம்பு ஒலிப்ப", அகம். 49 : 16 - 17

நறுமலர் எழுது கொடி கம்மத்துச் சிலம்பு	நறிய மலர்களோடு பொறிக்கப்பட்ட பூங் கொடி யுருவத்தை உடைய தொழிற்றிறன் அமைந்த சிலம்பு	"இலம்புடை நறுமலரெழுதுகொடிக் கம்மத்துச் சிலம்பிடைத் தங்கிய சேவடி யரத்தம்", பெருங். 3: 14: 136 - 137
நித்திலவரிச் சிலம்பு	முத்துச் சிலம்பு	"நீடாழ்பு தோக்கை நித்திலவரிச் சிலம்பு", பரி. 22: 49
பாதச் சிலம்பு	பாதத்தில் அணியும் சிலம்பு	"பாதச் சிலம்பின் ஒலி வேலை ஒலிபம்ப, வேதக் கொழுஞ்சுடரை நாடிநெடுமேல் நாள் ஓதத்தின் ஓடும்மது கைட வரை ஒத்தாள்", கம்ப. 4816 : 2 - 4
அம்பொன்சிலம்பு	பொற் சிலம்பு	"அம்பொன் சிலம்பு அரற்ற அன்னம்போல் மெல்லவே ஒதுங்கி", சீவக. 646 : 3
பொன் தொழில் சிலம்பு	தொழில் திறம் அமைந்த பொற்சிலம்பு	"பொற்றொழில் சிலம்பொன் றேந்திய கையள்", சிலப். 20 : 42
பொன்னஞ் சிலம்பு	பொன்னாலாகிய சிலம்பு	"மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற் பொன் னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம் என்னச் சிலைகுலவி நந் தம்மை ஆளுடையாள்", திருவாச. திருவெம். 16: 3 - 5
ஆய்ப் பொன்னரிச் சிலம்பு	பொன் சிலம்பு	"ஆய்ப்பொன்னரிச் சிலம்புஞ் சூடகமு மேகலையும் மார்ப்ப வார்ப்ப மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை மரக்கான் மேல் வாளமலையாடும் போலும்", சிலப். 12: 12: 1 - 2
பொற் சிலம்பு	பொன் சிலம்பு	"இலவம் போதேர் எழிற்றகைய சீறடிகள் அஞ்சி யொல் கிப் புலவன் சித்திரித்த பொற்சிலம்பு நகப்பூ நிலத்து மேல்", சீவக. 1588 : 1 - 2
பொற் பூஞ்சிலம்பு	பூ வேலை செய்த பொற்சிலம்பு	"என்னோர் மருங்கினும் ஏத்தி எரிமணிப் பொன்னார் கலையினர் பொற்பூஞ் சிலம்பினர்", சீவக. 2128: 1-2
பொறிகொள் பூஞ்சிலம்பு	பூ வேலைப்பாடுடன் செய்த சிலம்பு	"பொறிகொள் பூஞ்சிலம்பும் மேகலைகளும் புணர்ந்த இன்னியங்கள் ஆர்ப்ப", சீவக. 2594: 5-6
மணிச் சிலம்பு	நவமணிகளால் அமைந்த சிலம்பு	"வாருலாவிய வனமுலை யவளொடு மணிசிலம்பவை யார்க்க ஏருலாவிய விறைவன துறைவிட", தேவா. திருஞா. 2: 105: 2: 2 - 4
மணியுடை அரி பொற்சிலம்பு	மாணிக்கங்களை அரியாக உடைய பொன்னாலாகிய சிலம்பு	"என் காற் பொற் சிலம்பு மணியுடை அரியே", சிலப். 20 - 67
முத்துடை அரிச் சிலம்பு	முத்துகளை அரியா கக் கொண்ட சிலம்பு	"யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே", சிலப். 20: 69
முத்துஅரிப் பெய்த பொன் சிலம்பு	முத்துப்பரல் இடப்பட்ட பொன் சிலம்பு	"பசும் பொன் செய் கிண்கிணியும் பாடகமும் பாடு அலைப்ப நயந்துஎரி பொன் சிலம்பு முத்துஅரிப் பெய்து அகம்நக", சீவக. 177 : 1 - 2
முத்து அரிப் பொற் சிலம்பு	முத்துஅரிகள் இடப்பட்ட சிலம்பு	"முத்துஅரிப் பொற்சிலம்பு ஒலிப்ப", நற். 110: 5
வண் சிலம்பு	வளப்பமுடைய சிலம்பு	"மஞ்சு நீள்வது போலும் மாமேனி மலர்ப்பாதங்களில் வண் சிலம்பு ஒலிப்ப", திருத். 1163 : 3 - 4
வாலரிப் பொற் சிலம்பு	தூய்மையான பரல் களையுடைய பொன் னால் ஆன சிலம்பு	"நிரைத்த தீவினை நீங்க நெடுங்கணார் வரைக்கண் ஏறலின் வாலரிப் பொற்சிலம்பு உரைத்து மின்னி ருள் மேற்கிடந்தாலுமொத்து", சீவக. 1603 : 1 - 3
சிலம்பின் னொலி	சிலம்பு ஒலி	"தாறினார்ப் பொலி அஞ்சிலம்பின்னொலி", சீவக. 859 : 3

சிலம்பொலி	அடியின்கண் பொருந்திய சிலம் பினது ஒலி	"அடியார் சிலம்பொலிகளார்ப்பக் கண்டேன் அவ்வ வர்க்கே யீந்த கருணை கண்டேன்", தேவா. திருநா. 6 : 77 : 6 : 1 - 2
பாதச் சிலம்பொலி	திருவடிகளிலணிந்த சிலம்பின் ஒலி	"வாத வூரினில் வந்தினி தருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்", திருவாச. கீர்த்தித். 52 - 53
சிலம்பொலி அரவம்	சிலம்புகளின் ஆரவாரிக்கும் ஒலி	"பெதும்பை மகளிர் சிலம்பொலி யரவமும்", பெருங். 1: 41: 68; "கலங்களும் அரவமும் கருனை யாக்குவார் சிலம்பொலி யரவமும் மிச்சில் சீப்பவர்", சீவக. 832: 1 - 2
சிலம்பு அணிதல்	சிலம்பு என்னும் காலணியை அணிதல்	"மணிமுடி, பாதம் சிலம்பு அணி மங்கை அணிபவள் அன்றி அருள் இல்லை ஆகும்", திருமந். 1377 : 1 - 2; "கையின் மழுவேந்திக் காலிற் சிலம்பணிந்து கரித் தோல் கொண்டு மெய்யின் முழுதணிந்த விகிர்தர்க்கிடம் போலும் மிடைந்து வானோர்", தேவா. திருஞா. 2: 72: 4: 1 - 2; "அடியிடப் பாலது பஞ்சுற அஞ்சும் சிலம்பணிந்து வடி வுடைத் தார்கச்சி ஏகம்பம் மேய வரதருக்கே", 11ஆம் திரு. 951: 5 - 8"அணி சிலம்பு அடிகள் பார்வென்று அடிப்படுத்தனம் என்று ஆர்ப்ப", திருத். 284 : 1 - 2; "பெருநாதச் சிலம்பு அணி சேவடி வருந்தப் பெரும்பகல்கண் உருநாடி எழுந்தருளிற்று என்பொருட்டு ஆம் என உருகி", திருத். 3340: 3 - 4
பொன் சிலம்பு அணிதல்	பொன்னாலான சிலம்பை அணிதல்	"சுற்று மாளிகை வலம்கொண்டு காலனை உதைத்து உருட்டிச் செய்ய பொன் சிலம்பு அணி தாமரை வணங்கி முன் போற்றி உய்ந்து எதிர்நின்று", திருத். 2437: 3 - 6
சிலம்பு அரற்றல்	சிலம்பு ஒலி எழுப்புதல்	"செம்பொன் மலர்ந்திளையார் கண்ணென்னும் சீர்மணி வண்டு உழலச் சில்லென்று அம்பொன் சிலம்பு அரற்ற அன்னம்போல் மெல்லவே ஒதுங்கி", சீவக. 646: 2 - 3; "மெல்லென் சிலம்பு அரற்ற மேகலை கண் மின்னுமிழ நல்லபெடை அன்னம் நாண அடியொதுங்கி", சீவக. 747: 1 - 2; "ஒல்லெனச் சிலம்பரற்ற வீதிமல்க ஓடினார் சில்சுணங் கிளமுலைச் செழும் மலர்த்தடங் கணார்", சீவக. 1000: 3 - 4; "மன்னுமா லைகொடுத் தவனுக்குய்த் தீயெனத் தொழுது கொண்டு அன்னம் என்ன வொதுங்கிச் சிலம்பரற்றச் சென்றணுகினாள்", சீவக. 1667 : 3 - 4
சிலம்பொடு சீறடிப் புறம் புதைத் தரற்றல்	சிறிய அடிகளில் அணிந்த சிலம்பு மறைந்துக் கிடந்து ஆரவாரித்தல்	"சிலம்பொடு சீறடிப் புறம் புதைத் தரற்றவும்", பெருங். 2 : 2 : 203
சிலம்பு அலம்புதல்	சிலம்பு ஒலித்தல்	"பற்றாற்றார் பற்றவனாய் நின்றான் கண்டாய் அடிமலிந்த சிலம்பலம் பத்திரிவான் கண்டாய்", தேவா. திருநா. 6 : 81 : 6 : 4 - 5; "முடிகொண்டார் முளையிலா வெண்டிங் களோடு மூசுமிள நாகமுடனாகக் கொண்டார் அடி கொண்டார் சிலம்பலம்பு கழலுமார்ப்ப அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார்", தேவா. திருநா. 6: 96 : 3 : 1 - 4; "மலர்ந்த பேர்ஒளி குளிர்தரச் சிவமணம் கமழ்ந்து வான் துகள்மாறிச் சிலம்பு அலம்பு சேவடி யர் பயல்வுறும் செம்மையால் திருத்தொண்டு", திருத். 2060 : 1 - 4
பதஞ்சிலம்பு அலம்புதல்	திருவடியில் அணிந்த சிலம்புகள் ஒலித்தல்	"தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம் பலம்பச் சடை விரித் தலையெறி கங்கை", திருவி. 101: 1 - 2
சிலம்பு அலைத்தல்	சிலம்பு ஒலித்தல்	"நெற்றியிற் கண்ணென் கண்ணினின்றகலா நெஞ்சினி லஞ்சிலம் பலைக்கும்", திருவி. 163: 2: 1 - 2

சிலம்பின் அரிசி ஆர்த்தல்	பரல் உள்ளிட்ட சிலம்பு ஆர்த்தல்	"அத்த வாகை யமலை வானெற் றரியார் சிலம்பின் னரிசி யார்ப்பக்", குறுந். 369 : 1 - 2
சிலம்பின் அரி ஆர்த்தல்	சிலம்பு ஒலித்தல்	"ஆய்சிலம்பு அரி ஆர்ப்ப", கலித். 57: 3; "நேர்சிலம்பு அரி ஆர்ப்ப", கலித். 58: 5
சிலம்பொடு சிலம்பி ஆர்த்தல்	காற்சிலம்பு ஒலித்து ஆர்த்தல்	"சிரம் செய் நூபுரமும், வண்டும் சிலம்பொடு சிலம்பி ஆர்ப்ப", கம்ப. 1138 : 3 - 4
சிலம்பு ஆர்த்தல்	சிலம்பு ஒலித்தல்	"சிறு முதுக்குறைவி சிலம்பார் சீறடி", அகம். 17 : 9; "சிலம்பு ஆர்ப்ப இயலி யாள்", கலித். 147 : 4; "ஆய்ப்பொன் னரிச்சிலம்புஞ் சூடகமு மேகலையு மார்ப்பவார்ப்ப", சிலப். 12 : 12: 1; "சுந்தரக் கழன் மேற் சிலம்பார்க்க வல்லீர்சொலீர் அந்தியின்னொளி யின் னிற மாக்கிய வண்ணமே", தேவா. திருஞா. 2: 4: 2: 3 - 4; "அரவம் பூண்பரணியுஞ் சிலம் பார்க்க வகந் தொறும் இரவி னல்லபலி பேணுவர்நாணிலர் நாமமே", தேவா. திருஞா. 2 : 7 : 6 : 1 - 2; "அடியார்ந்த பைங்கழலுஞ் சிலம்புமார்ப்ப வங்கையில் செடியார்ந்த வெண்டலை யொன் றேந்தியுலகம் பலிதேர்வீர்", தேவா. திருஞா. 2 : 58 : 2 : 1 - 2; "மண்ணைத் திகழ நடமதாடும் வரை சிலம் பார்க்கின்ற பாதங்கண்டேன்", தேவா. திருநா. 6 : 77 : 3 : 1 - 2; "செய்பாவை யன்னார் சிலம்பார்க்கு மென் சீறடியார் செய்பூந்தவிசின் மிசையல்லது சேறவில்லார்", சீவக. 2338 : 1 - 2; "நீடு சாளரம் நீடு அரங்கு எங்கனும் ஆடல் மாதர் அணி சிலம்பு ஆர்ப்பன", திருத். 89 : 4; "வையகம் பொலிய மறைச் சிலம்பு ஆர்ப்ப மன்றுளே மால் அயன்தேட ஐயர்தாம் வெளியே ஆடுகின்றாரை", திருத். 251 : 1 - 3
ஆய்சிலம்பு ஆர்த்தல்	சிலம்பு ஒலித்தல்	"ஆய் சிலம்பு எழுந்து ஆர்ப்ப", கலித். 59: 7
தெள்ளரிச் சிலம்பு ஆர்த்தல்	சிலம்பு ஒலித்தல்	"தெள் அரிச் சிலம்பு ஆர்ப்ப, தெருவின் கண்", கலித். 69: 8
மணிச்சிலம்பு ஆர்த்தல்	நவமணிகளால் அமைந்த சிலம்பு ஒலித்தல்	"வாருலாவிய வனமுலை யவளொடு மணிசிலம் பவை யார்க்க ஏருலாவிய விறைவன துறைவிட", தேவா. திருஞா. 2: 105: 2: 3 - 5
சிலம்பு ஆர்த்து எழுதல்	காலில் அணிந்த சிலம்புகள் ஒலித்தல்	"சுண்ணமும் சூட்டும் சொரிந்துகு வார்குழல் கண்ணி மகாரோடு காற்சிலம் பார்த்தெழ", சீவக. 2114: 1 - 2
சிலம்பிரங்குதல்	சிலம்புகள் ஒலி செய்தல்	"முத்து டைம்முலைக் கண்கள் நொந்த என்று எய்த்துஅ டிச் சிலம்பிரங்கும் இன்குரல் கைத்தெடுத்தலிற் காமந் தாழ்ந்ததே", சீவக. 2683: 2 - 4
சீர்அரவச் சிலம்பு ஏந்துதல்	ஒலியையுடைய சிலம்பு அணிதல்	"சீரரவச் சிலம்பேந்து மென் சீறடி", சீவக. 914 : 1
வண் சிலம்பு ஒலி செய்தல்	சிலம்பு ஒலித்தல்	"பழைய தம்மடி யார்துதி செயப்பாருளோர்களும் விண் ணுளோர் தொழக் குழலு மொந்தை விழாவொலி செய் யுங் கோட்டாற்றில் கழலும் வண் சிலம்பும் ஒலி செயக் கானிடைக்கண மேத்தவாடிய", தேவா. திருஞா. 2: 52: 5: 1 - 3
சிலம்பு ஒலித்தல்	சிலம்பு ஒலித்தல்	"அம் சிலம்பு ஒலிப்ப ஓடி", புறம். 85: 6; "பாதத்தாரொலி பல்சிலம்பினன் ஓதத்தார் விட முண்டவன் படைப்", தேவா. திருஞா. 2: 25: 5: 1 - 2; "அடிகொண்ட சிலம்பொலியும் அருளார்சோதி அணி முறுவற் செவ்வாயும் அழகாய்த் தோன்ற", தேவா. திருநா. 6: 75: 6: 3 - 4; "சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத் தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்", திருவாச. திருப்பொற். 14: 1 - 2;

		"ஒண்மணிக் குழைவில் வீச ஒளிர்ந்து பொன்னோலை மின்ன வண்ணமே கலைகள் ஆர்ப்ப வான் சிலம்பொலிப்ப முத்தும் கண்ணியும்", சீவக. 1689: 1 - 3; "நடம் நவின்றருள் சிலம்பு ஒலி போற்றும் நான் மறைப்பதியை நாளும் வணங்க", திருத். 241 : 3 - 4; "ஆலம் இருண்ட கண்டத்தான் அடித்தாமரை மேல் சிலம்பு ஒலிப்ப நீல மலர்க்கண் பரவையார் திரு மாளிகையை நேர் நோக்கி", திருத். 3493 : 5 - 8
அஞ்சிலம்பு ஒலித்தல்	சிலம்பு ஆரவாரித்தல்	"அஞ்சிலம் பொலியோ டல்குற் கலையொலி யணிந்த முன்கை", சீவக. 110 : 1
அரிபெய் சிலம்பு ஒலித்தல்	பரற்கற்கள் இடப்பட்ட கால்சிலம்பு ஒலித்தல்	"ஒல்லோம் என்று ஏங்கி உயங்கி இருப்பாளோ கல்லிவர் அத்தம் அரிபெய் சிலம்பு ஒலிப்பக் கொல்களிறு அன்னான்பின் செல்லுங்கால்", ஐந். எழு. 42 : 1 - 3
திண் சிலம்பு ஒலித்தல்	சிலம்பு ஒலித்தல்	"சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழ", திருவாச. திருப்பூ. 18: 1 - 2
தெண்ணீர் முத் தரிப் பொன் சிலம்பு ஒலித்தல்	தெளிந்த ஒளியை உடைய முத்துகள் பரலாகப் போடப்பட்ட பொன்னாலாகிய சிலம்பு ஒலித்தல்	"உண்ணென்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர் முத் தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்", நற். 110 : 4 - 6
தெள்ளரிப் பொற் சிலம்பு ஒலித்தல்	தெள்ளிய உள்ளில் மணிகளையுடைய பொன்னாற் செய்த சிலம்பு ஒலித்தல்	"பூணொடு தெள்ளரிப் பொற்சிலம் பொலிப்ப", மது. 444 - 447
தோடமை அரிச் சிலம் பொலித்தல்	தொகுதி வாய்ந்த பரலினையுடைய சிலம்பு ஒலித்தல்	"கோதை யாயமொ டோரை தழீஇத் தோடமை அரிச் சிலம் பொலிப்ப", அகம். 49 : 16 - 17
பெய்சிலம்பு ஒலித்தல்	சிலம்பு ஒலித்தல்	"பெய்சிலம்பு ஒலிப்பப் பெயர்வனள்", அகம். 383: 12
பொற் சிலம்பு ஒலித்தல்	பொற் சிலம்பு ஒலித்தல்	"கடிமலர் மங்கையர் காய் பொற் கிண்கிணி உடைமணி பொற்சிலம் பொலிக்குங் கோயிலுட் குடைநிழன் மன்னர்தங் கோதைத் தாதுவேய்த்", சீவக. 2407 : 1 - 3
வண் சிலம்பு ஒலித்தல்	வளப்பமுடைய சிலம்பு ஒலித்தல்	"மஞ்சு நீள்வது போலும் மாமேனி மலர்ப் பாதங்களில் வண்சிலம்பு ஒலிப்ப", திருத். 1163 : 3 - 4
வான் சிலம்பு ஒலித்தல்	சிலம்பு ஒலித்தல்	"வண்ணமேகலை களார்ப்ப வான்சிலம் பொலிப்ப முத்தும்", சீவக. 1689 : 2
சிலம்பு விம்மி ஒலித்தல்	சிலம்பு ஒலித்தல்	"மெலிவுடை மருங்குல் மின்னின் அலமர, சிலம்பு விம்மி ஒலிப்ப உதைக்கும் தோறும் மயிர்ப் புளகு உறுகின்றாரை", கம்ப. 4944 : 5 - 8
பசும்பொற் சிலம்பு ஓசை செய்தல்	பொற் சிலம்புகள் ஒலி செய்தல்	"நெருப்புற்ற போல நிலமோந்துழிச் செய்யவாகிப் பருக் கென்ற கோல மரற்பழம் போன்று கொப்புள் வருத்தம் மிழற்றிப் பசும்பொற்சிலம் போசைச் செய்யச்", சீவக. 2339 : 1 - 3
சிலம்பு கழீஇய	சிலம்பைக் கழற்றுதல்	"சிலம்பு உடன் கழீஇ மேயினள் கொல்", அகம். 369: 25 - 26; "சிலம்பு கழீஇ அறியாத் தேஎத்தள்", அகம். 385: 17; "அரிசிலம்பு பொதிந்த தெரிசிலம்பு கழீஇ", அகம். 321: 15; "சிலம்பு கழீஇய செல்வம் பிறர் உழைக் கழிந்த என் ஆயிழை அடியே", நற். 279 : 10 - 11; "நும் மனை சிலம்பு கழீஇ அயிரினும்", ஐங். 399: 1

அரி அமை சிலம்பு கழீஇ	பருக்கைக் கல் போட்டு நிரப்பப் பெற்ற சிலம்பைக் கழற்றுதல்	"அரியமை சிலம்பு கழீஇப்", நற். 12 : 5
சிலம்பு கழியாமை	சிலம்பு கழியாமை	"அருங்கடி வியல்நகர்ச் சிலம்பு கழியாள்", அகம். 315: 8
சிலம்பணி கொள்ளுதல்	சிலம்பு அணிதல்	"சிலம்பணி கொண்ட செஞ்சீறடி பங்கன்றன் சீரடி யார் குலம்பணி கொள்ள என்னக் கொடுத்தோன் கொண்டு தான் அணியும்", திருக்கோ. 4: 5: 1 - 2
சில்லரிச் சிலம்பு சூழ்தல்	சிலவாகிய பரல்களை உடைய சிலம்பு அணிந்திருத்தல்	"சில்லரிச் சிலம்பு சூழ்ந்த சீறடித் திருவி னற்றாய் முல்லையங் குழலினாய் நின்முலைமுதற் கொழுநன் மேனாட்", சீவக. 1399 : 1 - 2
காலில் சிலம்பு சூழுதல்	சிலம்பு அணிந்து கொள்ளுதல்	"புலம்பும் மேகலை புதுமலர் புனை அறல் கூந்தல், சிலம்பு சூழும் கால், சோணை ஆம் தெரிவையைச் சேர்ந்தார்", கம்ப. 452 : 5 - 8
சிலம்பு நகுதல்	சிலம்பு ஒலித்தல்	"சீர்கெழு வியன் நகர்ச் சிலம்பு நக இயலி", அகம். 219: 1; "சேவடிச் சிலம்பு நக இயலிச் சென்ற என் மகட்கே", அகம். 117: 8 - 9; "சிலம்புநக சில்மெல் ஒதுக்கமொடு மென்மெல இயலி", அகம். 261: 5 - 6
சிலம்பு பலபட நுவல்தல்	சிலம்பென்னும் கால் அணி பலமுறை ஒலித்தல்	"செய்ய பூங்கமலம் மன்னச் சேர்த்திய சிலம்பு, சால நொய்யவே நொய்ய என்றோ, பலபட நுவல்வது! அம்மா!", கம்ப. 1130 : 5 - 8
அருநுண் வினைச் சிலம்பு நோன் கழல் பாதம் பற்றுதல்	செய்தொழிலை உடைய ஒலிக்கின்ற சிலம்பை வலிய வீரக்கழல் உடைய பாதங்களில் அணிதல்	"நுனிப்ப அருநுண் வினைச்சிலம்பும் நோன் கழல் பனிப் பருந்தாமரைப் பாதம் பற்றவே", கம்ப. 1225 : 3 - 4
சிலம்பு புரிதல்	சிலம்பு அணிதல்	"கலம்புரி யகலல்குற் றாயர் தவ்வையர் சிலம்புரி திருந்தடி பரவச் செல்பவள்", சீவக. 184 : 1 - 2
சிலம்பு இனம் புலம்புதல்	சிலம்பும் அதன் இனங் களாகிய பிற காலணி களும் ஒலித்தல்	"மின்இனம் மிடைவ போன்றும் தேன் இனம் சிலம்பி ஆர்ப்ப சிலம்பு இனம் புலம்ப எங்கும்", கம்ப. 1063
சிலம்பு வாய் புலம்புதல்	சிலம்பு ஒலித்தல்	"சிலம்பு வாய் புலம்பவும் மேகலை ஆர்ப்பவும்", சிலப். 8 : 90
சிலம்பு பூணுதல்	சிலம்பு அணிதல்	"துடிஇடைப் பணை முலைத்தோகை அன்னவர் அடி இணைச் சிலம்பு பூண்டு அரற்று மாளிகை", கம்ப. 129: 1 - 2; "பூந்துகிலோடும் பூசல், மேகலை, சிலம்பு பூண்ட மாந்தளிர் எய்த, நொய்தின் மயங்கினர்", கம்ப. 8826: 3 - 4
ஞெகிழம்	காலணி	"அரைசுறை கோயிலணியார் ஞெகிழம் கரையாமல் வாங்கிய கள்வனா மென்றே", சிலப். 18 : 25 - 26
அரி ஆர் ஞெகிழம்	அரியிடப்பட்ட சிலம்பு	"ஒருத்தி அரிஆர் ஞெகிழத்து அணிச் சுறாத் தட்ப", கலித். 92 : 38
ஞெகிழம் ஆர்த்தல்	காலணி ஒலித்தல்	"ஆர்க்கும் ஞெகிழத்தான் நல்நீர் நடை தட்ப", கலித் 98: 23
ஞெகிழம் சிலம்புதல்	ஞெகிழம் என்ற காலணி ஒலித்தல்	"சீரார் ஞெகிழம் சிலம்ப", கலித். 90 : 11
பொன் ஞெகிழத்து முத்தரி ஆர்த்தல்	பொன்னாற் செய்த நெகிழத்தில் இடப்பட்ட முத்து ஒலி செய்தல்	"சுடுபொன் ஞெகிழத்து முத்தரி சென்றார்ப்பத்", பரி. 21 : 18

ஞெகிழி	சிலம்பு	"பரிபுரம் அரவம் பைம்பொன் ஞெகிழி அரிபெய் சிலம்பு என்று அறையல் வேண்டும்", நிக. தி. 7: 52
தண்டை	காலணி	"குண்டலங்களும், மவுலியும், ஆரமும், கோவை, தண்டை, தோள்வளை, கடகம் என்று இனையன தறுகண், கண்ட கண்டங்களொடும் கணைதுரந்தன", கம்ப. 7523 : 1 - 3
தேசுடை மருப்பின் தண்டை	ஒளியுடைய யானைக் கொம்பால் செய்யப் பெற்ற தண்டை	"தேசுடை மருப்பின் தண்டை செறிமணிக் குதம்பை மின்ன", திருத். 670 : 5 - 6
முத்தின் தண்டை	முத்தினால் ஆன தண்டை	"தாள் உறு தடக்கை முத்தின் தண்டையும் சரியும் சாத்தி", திருத். 3116 : 3 - 4
முத்தின் தண்டை சாத்துதல்	முத்தினால் ஆன தண்டை அணிதல்	"தாள் உறு தடக்கை முத்தின் தண்டையும் சரியும் சாத்தி", திருத். 3116 : 3 - 4
நூபுரம்	ஒருவகை காலணி	"பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து", சிலப். 6: 84 - 85; "நுண்ணிடைப் பேரல்குனூபுர மெல்லடிப் பெண்ணின் நல்லாளையோர் பாகமாப் பேணினான்", தேவா. திருஞா. 3: 26 : 2 : 1 - 2; "நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி நூபுரம் கிடப்பினும் நொந்து தேவர் மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த", 11ஆம் திரு. 878 : 11 - 13; "நூபுரமும் மேகலையும் நூலும், அறல் ஓதி", கம்ப. 2765 : 1 - 2; "மாரி மழையே போல் ஆரா நின்றாள் நூபுரம் அச்சம் தரு தாளாள் வேரா நின்றாள் மின்னின் இமைக் கும் மிளிர் பூணாள்", கம்ப. 4911 : 2 - 4; "நூபுர மடந்தையர் கிடந்து அலற, நோனார் மாபுரம் அடங்கலும்", கம்ப. 6915 : 1 - 2
தாள் அணி நூபுரம்	தாளில் அணியவல்ல அழகான காலணி	"தாள் அணி நூபுரம், செம்பட்டுத் தான் உடை", திருமந். 1049 : 1
நாகச் சிரம் செய் நூபுரம்	பாம்பின் தலைவடிவில் முகப்புடைய நூபுரம் எனும் காலணி	"பரந்த மேகலையும் கோத்த பாத சாலகமும், நாகச் சிரம் செய் நூபுரமும் வண்டும் சிலம்பொடு சிலம்பி ஆர்ப்ப", கம்ப. 1138 : 1 - 4
நூபுர அடி	நூபுரம் அணிந்த அடி	"நுங்களை வீணை வென்ற நூபுரவடியினாள் தன் வெங்களித் தடங்கண் கண்டீர்", சீவக. 798 : 1 - 2
நூபுர அரவம்	நூபுர ஒலி	"பம்பு இசையும் விமானத்துள் ஆடும் தெய்வப் பாவையர் நூபுர அரவத்துடனே பல்கும்", திருத். 1180 : 7 - 8
நூபுர ஒலி	நூபுரத்தின் ஒலி	"அம்பொன் மணி வீதிகளில் அரங்கில் ஆடும் அரிவையர் நூபுர ஒலியோடு அமையும் இம்பர்", திருத். 1180: 3 - 4
நூபுரக் குரல்	நூபுரத்தின் ஓசை	"கொழுங் குழல் புதுக் குதலையர் நூபுரக் குரலின் வழங்கு பேர் அருஞ்சதிகளும் வயின்தொறும் மறையும்", கம்ப. 4847 : 3 - 4
வயங்கு நூபுரத் தேன் உகுமழலை	விளங்குகின்ற காலணியின் ஒலி	"வான் அர மகளிர் தம் வயங்கு நூபுரத் தேன் உகு மழலையைச் செவியின் ஓர்ப்பது", கம்ப. 3722 : 5 - 8
மணிக் கனைகுரல் நூபுரம் அலைதல்	மணிகள் நெருங்கி ஒலிக்கின்ற காலணி அசைதல்	"மனை அகத்து மணி முன்றில் மணல் சிற்றில் இழைத்து மணிக்கனைக் குரல் நூபுரம் அலையக் கழல் முதலாப் பயின்று", திருத். 884 : 3 - 6
நூபுரம் ஆர்த்தல்	அடியில் அணிந்துள்ள காலணியாகிய நூபுரம் ஒலித்தல்	"திருந்தடிநூ புரமார்ப்ப இயலி விருப்பினால் கண்ணும் நுதலுங் கவுளுங் கவவியார்க்", கலித். 83: 16 - 17; "ஆர்க் கும் நூபுரங்கள் பேரி, அல்குல் ஆம் தடந்தேர் சுற்ற", கம்ப. 4315 : 1 - 2; "நுடங்கும் கொடிபோல் பவள் நூபுரம் ஆர்ப்ப வந்து தடங்கண் ணவள்தாய் அது கேட்டலும்

		தக்க தென்றாள்", சீவக. 1061: 3 - 4; "நாகச் சிரம் செய் நூபுரமும் வண்டும் சிலம்பொடு சிலம்பி ஆர்ப்ப", கம்ப. 1138: 2 - 4
நூபுரங்கள் ஏங்குதல்	காலில் அணிந்த நூபுரங்கள் ஒலித்தல்	"மகளிர் இடை ஏங்குவன நூபுரங்கள் இரங்குவன மணிக்காஞ்சி ஓங்குவன", திருத். 1283 : 2 - 3
நூபுரம் ஒலித்தல்	காலணி ஒலித்தல்	"பந்துபாவை பைங்கழங்கு பைம்பொன் முற்றில் சிற்றி லுள் நொந்து வைத்து நூபுரம் ஒலிப்பவோடி நோக்கி னார்", சீவக. 1099 : 3 - 4; "சீறடிமேல் நூபுரங்கள் அறிந்தன போல் சிறிதளவே ஒலிப்ப", திருத். 316: 1 - 2
கால் முதல் தொடர்ந்த நூபுரம் சிலம்புதல்	பாதத்திலே அணியப் பெற்ற சிலம்பு ஒலித்தல்	"கால்முதல் தொடர்ந்த நூபுரம் சிலம்ப, கிண் கிணி கலையொடும் கலிப்ப", கம்ப. 5148 : 5 - 6
நூபுரம் சேர்தல்	நூபுரம் அணிதல்	"நொம்பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடி யார் அம்பந்தும் வரிகழலு மரவஞ்செய் பூங்காழி", தேவா. திருஞா. 2: 41: 11: 1 - 2
நூபுரம் புலம்புதல்	காலணிகள் ஒலித்தல்	"பொங்கு இயம்பலவும் கறங்கின நூபுரங்கள் புலம்ப வெண் சங்கு இயம்பின கொம்பு அலம்பின சாம கீதம் நிரந்தவே", கம்ப. 1554 : 5 - 8; "கோலக் கற்பகத்தின் காமர் குழை, நறுங்கமல மென்பூ, நூல் ஒக்கும் மருங் குலாள் தன் நூபுரம் புலம்பும் கோலக் காலுக்குத் தொலையும் என்றால்", கம்ப. 4492 : 3 - 7; "நூபுரம் புலம்பிட சிலம்பு நொந்து அழகோபுரம் தொறும் புறம் பழகினார் சிலர்", கம்ப. 9931 : 1 - 2
பரிபுரம்	காலணி	"அஞ்சு அடுத்த அமளி, அல்த்தகப் பஞ்சு அடுத்த பரி புரப் பல்லவ நஞ்சு அடுத்த நயனியர்", கம்ப. 2385 : 1 - 3
பரிபுரம் ஆர்க்காமை	சிலம்பு ஒலிக்காமை	"தார் ஒலி இல்தேர் என பரிபுரம் ஆர்க்கில பவளச் சீறடி", கம்ப. 2283 : 2 - 3
பரிபுரம் ஒலிகள் கிளர்தல்	பரிபுரம் என்னும் காலணியின் ஒலி எழுதல்	"பரிபுர ஒலிகள் கிளர்ந்தன பணைமுரசு ஒலிகள் பரந்தன", திருத். 4257 : 3 - 4
பரிபுரம் புலம்புதல்	காற்சிலம்பு ஒலித்தல்	"பாந்தளின் அல்குலார் தம் பரிபுரம் புலம்பு பாதப் பூந்தளிர் உறைப்ப", கம்ப. 788 : 5 - 7; "பரிபுரம் புலம்ப துடி இடைத் திருமகள் தாமரை துறந்து", கம்ப. 824: 4 - 6
பரியகம்	காலணி; காற்சவடி (அரும்பதம்). பரியக மாவது; பொன்னிதழ் பொதிந்த பன்னிற மணிவடம் பின்னிய தொடரிற் பெருவிரன் மோதிரம் தன்னொடு தொடக்கித் தமனியச் சிலம்பின் புறவாய் சூழ்ந்து புணர வைப்பதுவே (அடி.ந.)	"பரியகம் நூபுரம் பாடகஞ் சதங்கை அரியகங் காலுக் கமைவுற வணிந்து", சிலப். 6: 84-85; "பரியகம் காற் சரிப் பேர் பகர்ந்த கைச் சரிக்கும் பேரே", நிக.சூ. 7 : 25; "பரியகஞ் சிலம்பு பைம்பொற் கிண்கிணி யார்ந்தபாதத் தரிவைய ராடன் மிக்கா ரருமணி வீணைவல்லார்", சீவக. 2079 : 1 - 2
பரியகம் கணைக்கால் சூழ்ந்திலங்குதல்	கணைக் கால்களின் மேலே பரியகம் என்னும் ஒருவகை அணியை அழகாக அணிதல்	"பகைகொண் டார்போற் சுமாஅய்க் கண்பின் பருஉக் காம் பனைய கணைக்கால் சூழ்ந்தகையார்ந் திலங்கும் பரியகந்தாமே கவினச் சேர்த்தினார்", சீவக. 2694: 5 - 8
பரியகம் சிலம்பு பைம்பொற் கிண் கிணி ஆர்தல்	பரியகம் போன்றன ஒலித்தல்	"பரியகஞ் சிலம்பு பைம்பொற் கிண்கிணி யார்ந்தபாதத் தரிவைய ராடன் மிக்கா ரருமணி வீணை வல்லார்", சீவக. 2079 : 1 - 2

பாடகம்	காலணி	"பரியகம் நூபுரம் பாடகஞ் சதங்கை அரியகங்காலுக் கமைவுற வணிந்து", சிலப். 6 : 84 - 85; "ஊடற் செவ்வி பார்த்துநீடாது பாடகத் தாமரைச் சீறடி பணிந்து தேமரு கொங்கையிற் குங்குமமெழுதி", மணி. 25 : 84 - 86; "பாடகச் செம் பதும மலர்ப் பாவையார் பல்லாண்டு இசைப்ப", கம்ப. 240 : 3 - 4; "பாடகம் பாரதநூல் பகர, வெங்கட கரிக்கோடு அரங்கிட எழும் குவி தடங்கொங் கையார்", கம்ப. 1061 : 3 - 5
பாடகக் கால்	பாடகம் என்ற காலணி அணிந்த கால்	"வண்ண மேகலை வளையொடு சிலம்பப் பாடகக் கான்மிசைப் பரிந்தவை விடுத்து", பெருங். 4 : 12 : 58 - 59; "அழி மதத்து இழுக்கல் ஆற்றில் பாடகக் காலினாரை பயப்பயக் கொண்டு போனார்", கம்ப. 783 : 6 - 8
பாடகச் சீறடி	பாடகம் அணிந்த அடி	"பாடகச் சீறடி பரற்பகை உழவா", சிலப். 10 : 52; "பாடகச் சீறடி ஆரியப் பேடியோடு", சிலப். 27: 186; "பாடகச் சீறடிப் பைம்பொன் சிலம்பு ஒலி ஊடகம் மேவி உறங்குகின்றாளே", திருமந். 1106 : 3 - 4; "முன்னம் புக்க தன்னமர் காதலன் பாடகச் சீறடிப் பைந்தொடி மாதரை", பெருங். 1 : 40 : 313 - 315; "ஆடுகொம் பன்ன வம்மென் மருங்குற் பாடகச் சீறடிப் பல்வளை மகளி ரைப்", பெருங். 3 : 9 : 31 - 32; "பாடகச் சீறடி பதுமா பதியொடு கூடிய கூட்டக் குணந்தனை நாடி", பெருங். 4: 8 : 98 - 99; "நாடக மகளிர் நலத்தொடு புணர்ந்த பாடகச் சீறடிப் பத்திரா பதிதான மகளிரொடு தன்புனல் யாற்ற யற்", பெருங். 5 : 3 : 81 - 82; "பஞ்சி ஊட்டிய பாடகச் சீறடி", சீவக. 1947: 2
பாடக மெல்லடி	பாடகம் என்னும் அணியை அணிந்த மெல்லிய பாதம்	"பயில் பாடக மெல் அடி பஞ்சு அனையார் செயிர் ஏதும் இலாரொடு தீருதியோ?", கம்ப. 4204 : 1 - 2
பாடகக் குரல்	பாடகத்தின் ஒலி	"சேவடிக் கேற்ற செம்பொற் கிண்கிணி பாடகக் குரலொடு பரடு பிறழ்ந்தரற்ற", பெருங். 2: 19: 185 - 186
பாடகத் தரவம்	பாடகத்தின் ஒலி	"பாடகத் தரவமுந் சூடகத் தோசையும் ஆடுபந் தொலியுங் கேட்பினல்லதை பந்தெழவெழ வதனுட னெழுதலிற்", பெருங். 4 : 12 : 210 - 212
பசும்பொன் செய் பாடகம்	பசும் பொன்னால் செய்யப்பட்ட காலணி	"பசும்பொன் செய் கிண்கிணியும் பாடகமும் பாடு அலைப்ப", சீவக. 177 : 1
பாடகக் கிண்கிணி	பாடகமாகிய சிலம்பு	"பொன் இயல் பாடகக் கிண்கிணிப்பாத நிழல்", பெரும். 2. 19: 155-6
பாடகம் மெல்லடி ஆர்த்தல்	காலில் அணிந்த பாடகம் ஒலித்தல்	"பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை பங்கினன் எங்கள் பராபரனுக்கு", திருவாச. திருப்பொற். 9: 7: 5 - 6
பாடகஞ் சுடர்தல்	பாடகம் சுடர் வீசுதல்	"பாசிழைத் தோழியர் பாடகஞ் சுடரத் தண்பெரும் பந்தருட் கண்பிணி கொள்ள", பெருங். 3 : 22 : 260 - 261
பாடகஞ் சுமத்தல்	பாடகம் அணிதல்	"தெய்வத் தானத்துத் தீண்டிய துண்டுகொல் பாடகஞ் சுமந்த சூடுறு சேவடி", பெருங். 3 : 8 : 8 - 9; "பத்திரா பதியோ டுருப்பசி யரம்பைமுதற் பாடகஞ் சுமந்த சேடு படு சேவடி", பெருங். 5 : 3 : 59 - 60; "பாடகம் சுமந்த செம்பொன் சீறடிப் பரவை அல்குல் சூடகம் அணிந்த முன்கைச் சுடர்மணிப் பூணினாள்", சீவக. 479 : 1 - 2
பாடகம் சூழ்தல்	காலில் சூழ அணிதல்	"பாடகம் போல சூழ்ந்த பழவினை பயத்தின் என்றான்", சீவக. 510: 4

பாடகம் புதை யாமை	பாடகம் அசையாமை	"செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும் பாடகம் பதையாது சூடகந் துளங்காது மேகலை யொலியாது மணிக்குழலவிழா .... கூத்தச் சாக்கைய னாடலின் மகிழ்ந்தவன்", சிலப். 28 : 70 - 77
பாடகங் கொண்டு பரிசமைத்தல்	பாடகம் என்னும் அணியை எடுத்துச் சிறப்புற அணிதல்	"அடியிணை மேல் பாடகங் கொண்டு பரிசமைத் தாள் பன்மணிசேர் சூடகம் முன்கை தொடர்வித்தாள்", 11ஆம் திரு. 300. 138 - 139
பாத கடகம்	காலணி	"பாத கடகம் பாடகம் ஆகும்", நிக. தி. 7 : 55
பாத சாலகம்	பாத சாலகம் எனும் காலணி	"பரந்த மேகலையும், கோத்த பாத சாலகமும், நாகச் சிரம் செய் நூபுரமும்", கம்ப. 1138 : 1 - 3
பாத சாலகம் தாழ்தல்	பாதசாலகம் பாதத் தில் அணிதல்	"சங்கொடு சிலம்பும் நூலும் பாத சாலகமும் தாழ பொங்குபல் முரசம் ஆர்ப்ப இல்உறை தெய்வம் போற்றி", கம்ப. 4949 : 1 - 4
பாத சாலம்	காலில் அணிகின்ற மணிவடம்	"பாத சாலம் கால் அணி மணிவடம்", நிக. தி. 7 : 54; "பாத சாலம் கால் அணி ஆகும்", நிக. பி. 6 : 86
பூண்	காலணி	"குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே", ஐங். 442: 5
அணிமணிச் சதங்கை தொடுத்த வடம்	சதங்கை தொடுத்த வடம்	"தாதியர் தம்கைப் பற்றித் தளர் நடையின் அசைவு ஒழிந்து சோதி அணிமணிச் சதங்கை தொடுத்த வடம் புடை சூழ்ந்த", திருத். 1954 : 1 - 2
அணிமணிச் சதங்கை தொடுத்த வடம் புடைசூழ்தல்	சதங்கை தொடுத்த வடம் காலில் அணிதல்	"சோதி அணி மணிச் சதங்கை தொடுத்த வடம் புடை சூழ்ந்த", திருத். 1954: 2
வயிரக்கால்	வயிரம் அணிந்த கால்	"கதிர வாள் வயிரப் பணைக் கையினான் கதிர வாள் வயிரக் காலினான்", கம்ப. 7333 : 3 - 4
அல்குற் காசு சிலம் பொடு சிலம்புதல்	இடையில் அணிந்த மணிகள் காற்சிலம் பொடு ஒலி செய்தல்	"அழலவிர் செம்பொற் பட்டங் குண்டலம் ஆரந்தாங்கி நிழலவிர் அல்குற்காசு சிலம்பொடு சிலம்ப", சீவக. 1254 : 2 - 3
கழல் திகழ் சிலம் பொலி அலம்புதல்	கழலின் ஒலியும் விளங்குகின்ற சிலம்பின் ஒலியும் ஆரவாரித்தல்	"அழல் திகழ் மேனியில் அணிந்தவனே கழல் திகழ் சிலம்பொலி அலம்ப நல்ல முழவொடும் அருநடம் முயற்றினனே", தேவா. திருஞா. 3 : 3 : 4 : 2 - 4
கழலும் பல்சிலம் பும் ஆர்த்தல்	வீரக்கழலும் சிலம்பும் ஒலித்தல்	"ஒருகாலத் தொன்றாகி நின்றவ்வடி ஊழிதோறூழி உயர்ந்தவ்வடி பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க் கும்மடி புகழ்வார் புகழ்தகைய வல்லவ்வடி", தேவா. திருநா. 6: 6: 5: 1 - 4
அறைகழலும் திரு வடிமேற் சிலம்பும் ஆர்த்தல்	காலில் அணிந்த வீரக்கழலும் சிலம் பும் ஒலித்தல்	"அறைகழலுந் திருவடிமேற் சிலம்பும் ஆர்ப்ப அவனிதலம் பெயரவரு நட்டம் நின்ற நிறைவுடையானிட மாம் நெய்த்தான மென்று நினையுமா நினைந்தக் காலுய்யலாமே", தேவா. திருநா. 6 : 42: 6: 5 - 8
நிரை கழல் சிலம்பு ஆர்த்தல்	கழலும் சிலம்பும் ஒலித்தல்	"நீடவல்ல நிமலனேயடி நிரை கழல் சிலம் பார்க்கமா நடம் ஆடவல் லவனே யடைந்தார்க் கருளாயே", தேவா. திருஞா. 2 : 51 : 3 : 3 - 4
கழலும் சிலம்பு ஒலித்தல்	கழலும் சிலம்பும் ஒலித்தல்	"கமையொடு நின்ற சீரான் கழலுஞ் சிலம்பு மொலிப் பச் சுமையொடு மேலும் வைத்தான் விரிகொன்றை யுஞ் சோமனையும்", தேவா. திருஞா. 3: 57 : 6 : 1 - 2
வார்கழல் சிலம் பொலி செய்தல்	கச்சிறுக்கிய கழலும் சிலம்பும் ஒலி செய்தல்	"நீறுதிரு மேனிமிசை யாடிநிறை வார்கழல் சிலம் பொலி செய ஏறுவிளை யாடவிசை கொண்டிடு", தேவா. திருஞா. 3 : 79 : 6 : 1 - 3

கலையும் சிலம்பும் இரங்குதல்	மேகலையும் சிலம்பும் ஒலித்தல்	"அன்றே கூற்றமாகி யருளாதாவி போழ்வது என்றே கலையும் சிலம்பும் இரங்க இனவண்டார்ப்ப", சீவக. 917 : 2 - 3
கிண்கிணி கலையொடும் கலித்தல்	சதங்கை மேகலை உடன் ஒலித்தல்	"கால்முதல் தொடர்ந்த நூபுரம் சிலம்ப கிண்கிணி கலையொடும் கலிப்ப", கம்ப. 5148 : 5 - 6
செம்பொற் கிண் கிணி சிலம் பொடார்த்தல்	செம் பொன்னால் இயன்ற கிண்கிணியும் சிலம்பும் ஆர வாரித்தல்	"கொம்பி னொல்கிக் குறிப்பிற் கொள்ளாய் செம்பொற் கிண்கிணி சிலம்பொடார்ப்ப", பெருங். 1: 46: 295 - 296
புடைச்சிறு பரடு புல்லிக் கிண்கிணி சிலம்போடு ஆர்த்தல்	சிறுகணைக் காலைப் பற்றிக் கிண்கிணியும் சிலம்பும் ஆர்த்தல்	"இடைச்செறி குறங்கு கௌவிக் கிம்புரி இளகமின்னும் புடைச்சிறு பரடு புல்லிக் கிண்கிணி சிலம் போடார்ப்ப", சீவக. 2445 : 1 - 2
கிண்கிணி சிலம் பொடு ஏங்குதல்	கிண்கிணியும் சிலம்பும் ஒலித்தல்	"பஞ்சு சூழ்பரவை யல்குல் பசுங்கதிர்க் கலாபம் வீங்கச் செந்தளிர் கோதை சோரக் கிண்கிணி சிலம்பொ டேங்க", சீவக. 840 : 1 - 2; "கிளிச் சொலின் இனிய சொல்லார் கிண்கிணி சிலம் போடேங்கக் குளித்து நீரிரண்டு கோலக்கொழுங்கயல் பிறழ்பவேபோற்", சீவக 2898 : 1 - 2
அரிபொற் கிண் கிணி சிலம்பொடு சிலம்புதல்	கிண்கிணி சிலம்பொடு சிலம்புதல்	"அரிபொற் கிண்கிணி யணிகிளர் சிலம்பொடு சிலம்பும் திருவச் சீறடிச் செழுமலர்க் கொழுங்கயன் மழைக்கண்", சீவக. 2385 : 1 - 2
மணியரி கிண்கிணி சிலம்பொடு மிழற்றல்	மாணிக்கப் பரலிடப் பட்ட கிண்கிணியும் சிலம்பும் ஒலித்தல்	"மணியரிக் கிண்கிணி சிலம்பொடு மிழற்ற", பெருங். 2 : 19 : 153
கிண்கிணியும் அஞ் சிலம்புங் கலையும் ஆரா	கிண்கிணியும் அழகிய சிலம்பும் மேகலையும் ஒலிக்காது இருத்தல்	"கண்ணார் ஒலிகவுள கிண்கிணியும் அஞ்சிலம்புங் கலையும் ஆரா", சீவக. 2967 : 5 - 6
அஞ்சிலம்பு அல்குல் கலை யொடு ஆர்த்தல்	அழகிய சிலம்பு மேகலையொடு ஆரவாரம் செய்தல்	"மைந்தன தார்குழைந் துடைய வாய்திறந்து அஞ் சிலம் பணியல்குல் கலையொடார்த்தவே", சீவக. 1493: 3 - 4
இன்னரிச் சிலம் போடு ஏங்கி கிண் கிணி இகலி ஆர்த்தல்	இனிய பரல்களை உடைய சிலம்பொலி உடன் கிண்கிணி மாறுபட்டு ஒலித்தல்	"இன்னரிச் சிலம்போ டேங்கிக் கிண்கிணி யிகலி யார்ப்பப் பொன்னரி மாலை தாழப் பூஞ்சிகை யவிழ்ந்து சோர", சீவக. 1985 : 1 - 2
செங்கதிர்ச் சிலம்பு செம்பொற் கிண்கிணி சிலம்புதல்	சிலம்பும் கிண்கிணியும் ஒலித்தல்	"செங்கதிர்ச் சிலம்பு செம்பொற் கிண்கிணி சிலம்பக்", சீவக. 677 : 1
பரியகஞ் சிலம்பு பைம்பொற் கிண் கிணி ஆர்த்தல்	காலில் காற்சரி என் னும் அணிகலன், சிலம்பு, கிண்கிணி ஆகியன ஒலித்தல்	"பரியகஞ் சிலம்பு பைம்பொற் கிண்கிணி யார்ந்த பாதத்து அரிவையர் ஆடல் மிக்கார் அருமணி வீணை வல்லார்", சீவக. 2079 : 1 - 2
தெள்நிறச் சிலம்பு செம்பொன் கிண் கிணி பாதம் சேர்த்தல்	தெளிந்த அழகிய நிற முடைய சிலம்பையும் செம்பொன்னாலான கிண்கிணியையும் பாதத்தில் அணிதல்	"தெண்ணிறச் சிலம்பு செம்பொன் கிண்கிணி பாதம் சேர்த்திப் பண்ணிறச் சுரும்பு சூழும்பனிமுல்லைச் சூட்டு வேய்ந்தார்", சீவக. 624 : 3 - 4
நன்மணிச் சிலம்பி னோடு கிண்கிணி நகுதல்	அழகிய மணிகளை உடைய சிலம்பும் கிண்கிணியும் விளங்குதல்	"நன்மணிச் சிலம்பினோடு கிண்கிணிந்ந கந் நகும் மின் மலர்ந்த முல்லை மாலை நக்கி மிக்கிறந் தெழுந்து", சீவக. 1957 : 1 - 2

சிலம்பொடு மே கலை மிழற்றல்	சிலம்பும் மேகலையும் ஒலித்தல்	"சிலம்பொடு மேகலை மிழற்றத் தேனினம் அலங் கலுண்டி யாழ்செயும் அம்பொன் பூங்கொடி", சீவக. 1012: 1 - 2
சிலம்பும் கழலும் அலம்பப் புனைதல்	சிலம்பும் வீரக் கழலும் ஒலித்திட அணிதல்	"தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து வாடாப் புது மலர்த் தோடெனச் சிவந்து சிலம்பும் கழலும் அலம் பப் புனைந்து", 11ஆம் திரு. 878 : 1 - 3
நூபுரங் கலந்த பாடகக் கம்பல்	சிலம்பும் பாடகமும் கலந்து செய்யும் ஆரவாரம்	"கோயின் மகளிர் கோல மெல்லடி நூபுரங் கலந்த பாடகக் கம்பலும் அன்னவை பிறவும்", பெருங். 2: 2: 231 - 233
நூபுரமும் மே கலையும் நூலும் பூசலிடுதல்	காற் சிலம்பும், இடை அணியும் நூலிற் கோத்த அணிகளும் ஆரவாரம் செய்தல்	"நூபுரமும் மேகலையும் நூலும் அறல் ஓதிப் பூ முரலும் வண்டும், இவை பூசலிடும் ஓசை", கம்ப. 2765: 1 - 4
பரியகம் சிலம்பு செம்பொற் கிண் கிணி பாதம் சேர்த்தல்	காற்சரி, சிலம்பு, கிண்கிணி அணிவித்தல்	"பரியகம் சிலம்பு செம்பொற் கிண்கிணி பாதம் சேர்த்தி", சீவக. 674: 3
பாடக நூபுரம் பரட்டுமிசை அரற்றல்	பாடகம், நூபுரம் எனும் காலணிகள் பரட்டின் மேல்கிடந்து ஆரவாரித்தல்	"பாடக நூபுர பரட்டுமிசை யரற்ற", பெருங். 3: 22: 235
பாடகமும் நூபுர மும் பல்சிலம்பும் ஒலித்தல்	பாடகமும், கிண்கிணியும் பரல்கள் பல அமைந்த சிலம்பும் ஒலி செய்தல்	"பாடகமும் நூபுரமும் பல் சிலம்பும் பேர்ந் தொலிப்பச் சூடகக்கை நல்லார்", திருவி. 192: 8: 1: 2
பூணொடு தெள் அரிப் பொன் சிலம்பு ஒலித்தல்	பூணையும் சிலம்பையும் அணிந்திருத்தல்	"நாண்மகி ழிருக்கை காண்மார் பூணொடு தெள் ளரிப் பொற்சிலம் பொலிப்ப வொள்ளழற் றாவற விளங்கிய ஆய்பொன விரிழை அணங்கு வீழ்வன்ன பூந் தொடிமகளிர்", மது. 443 - 446

3.12. அடி

இன்று போன்றே கால் அடிகளைப் பாதுகாப்பதற்காகக் கவசம், செருப்பு அணியும் வழக்கு அன்றும் இருந்திருக்கிறது; இவற்றையும் அழகுற அணிதல் இவர்தம் ஒப்பனைக் கலைக்குச் சான்று. இன்றைய மருதாணியிடுவதுடன் ஒப்பிடத்தக்கது அவர்களின் செம்பஞ்சிக் குழம்பு அணிந்த முறை.

அ. நிறமூட்டும் பொருட்கள்

அலத்தகம் எழுதியிடுதல்	செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"அம்மலர் அடியும் கையும்..... அலத்தகம் எழுதி யிட்டாள்", சீவக. 2446: 1 - 3
அலத்தகம் எழுதுதல்	செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"விற்படர் பவளப் பாதத்து அலத்தகம் எழுதி", கம்ப. 4943: 1 - 2
அலத்தகம் ஊட்டுதல்	அடிகளில் செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"அலத்தகம் ஊட்டிய அஞ்செஞ் சீறடி", சிலப். 6: 8: 2
அரத்தமூட்டல்	செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"உகிர் வினை செய்து பஞ்சி யொள்ளொளி அரத்தம் ஊட்டி அகில் கமழ் அங்கை சேப்ப", சீவக. 2540: 1 - 2
சிலம்படி மேல் செவ்வரத்தம் சேர்த்தல்	சிலம்பு அணிந்த அடிகளில் செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"சிலம்படியாள் ஊடலைத் தான் தவிர்ப்பான் வேண்டிச் சிலம்படிமேல் செவ்வரத்தம் சேர்த்தி நலம் பெற்று எதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான்", 11ஆம் திரு. 111 : 1 - 3
பஞ்சி	செம்பஞ்சுக் குழம்பு	"பட்டுடைச் சூழ்ந்த காசு பஞ்சு மெல்லடியைச் சூழ", சீவக. 468: 2; "பஞ்சி மென்தளிர் அடிப்பாவை கோல் கொள", கம்ப. 1331: 1 - 2; "பஞ்சு அளாவிய சீறடிச் சுவடுகள் பாராய்", கம்ப. 2065: 7 - 8; "பஞ்சி மெல் அடிப்பாவையும் ஆடினாள்", கம்ப. 1946: 4; "பஞ்சி அடி வஞ்சியர்கள் மொய்த்தனர்", கம்ப. 5442: 3
பஞ்சி அணிதல்	செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"பஞ்சி அணிந்த அஞ் செஞ் சீறடி", பெருங். 2: 7: 87
பஞ்சி ஆர்தல்	செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"சிலம்பின் மேல் பஞ்சி ஆர்ந்த சீறடி வலத்தது ஊன்றி", சீவக. 2132: 2
பஞ்சியூட்டுதல்	செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"சிறுபரட்டு, அஞ்செஞ் சீறடிப்பஞ்சி யூட்டியும்", அகம். 389: 6 - 7; "பஞ்சி ஊட்டிய பரட்டு இசைக் கிண்கிணிப் பதுமச் செஞ்செவி", கம்ப. 4838: 1 - 2

ஆ. கவசம்

ஆசு	கால் கவசம்	"காலாசோ டறவெறிந்தகனை கழற்கால்", சீவக. 2236: 3
கச்சம்	கோத்துக் கட்டிய கச்சு	"கச்சம் தின்ற கழல் தயங்கு திருந்து அடி", மது. 436

இ. செருப்பு

அடிபுதை அரணம் எய்துதல்	அடியை மறைக்கின்ற செருப்பு அணிந்து கொள்ளல்	"அரும்பொரு எருத்துந் திருந்துதொடை நோன்றாள் அடிபுதை யரண மெய்திப் படம்புக்குப் பொரு கணை தொலைச்சிய புண்டீர் மார்பின்" பெரும். 68 - 70
காலார்சு	செருப்பு	"மோலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட்ட காலார் சோடற்ற கழற்கால் இருங்கடல் ஊணில் சுற பிறழ்வ", களவழி. 9 : 1 - 3
செருப்பு	காலணி	"கொழுப்பு ஆதின்ற கூர்ம்படை மழவர் செருப்புடை அடியர்", அகம். 129: 12 - 13; "செருப்பு இடைச் சிறுபரல் அன்னன்", புறம். 257: 1; "மைதீர் பசும் பொன்மேல்

		மாண்டமணி யழுத்திச் செய்த தெனினுஞ் செருப்புத் தன் காற்கே யாம்", நாலடி. 347: 1 - 2; "உருத்த மன்னர் ஊர்ச்சி வேழத்து மருப்புக்கை அமைத்து வாய்முதல் தோறும் உருக்குறு தமனியத் தொழுகு கொடியோட்டிப் பவழக் கொட்டைப்பல் வினை நுனித்த திகழணிச் செருப்பிற் சேவடி இழிந்து", பெருங். 2 : 4 : 107 - 111; "தாளில் வாழ் செருப்பர் தழைத்த நீடுதானையர்", திருத். 717 : 1; "கானவர் தம் குலம் உலகு போற்ற வந்த கண்ணப்ப திருப்பாதச் செருப்புத் தோயமான வரிச்சிலை வேட்டை ஆடும்", திருத். 2920 : 1 - 3; "செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல", கம்ப. 5147: 2
அடிச் செருப்பு	அடியில் அணியும் செருப்பு	"அண்ணற் குமரற்கு அடிச் செருப்பாகெனத்", பெருங் 1 : 36 : 310
காலமை செருப்பு	காலுக்கு ஏற்புடைய தாக அமைந்த செருப்பு	"கொய்யுளைப் புரவி மேற்கொண்டவரிற் கைவினைக் கம்மங் காண்பினிதாக வாரமைத் தியற்றிய காலமை செருப்பினர்", பெருங். 3 : 1 : 101 - 103
காலின் தொடு செருப்பு	காலில் அணிந்த செருப்பு	"பூசனை தன்னைப் புக்கொரு காலில் தொடு செருப்பு அடியார் நீக்கி", 11ஆம் திரு. 512 : 58 - 59
செம்பொன் செருப்பு	பொன்னாலான செருப்பு	"ஏமச் செங்கோல் ஏயர் பெருமகன் செம்பொன் செருப்பிற் சேவடி இழிந்து வெண்பூ நிறைந்த வீதியுள் இயங்கி", பெருங். 2: 6 : 16 - 18
போழ்வார் போர்த்த தாழகச் செருப்பு	போழ்த்தவாரினால் மூடப்பட்ட கரிய செருப்பு	"பரிவின் தன்மை உருவு கொண்டனையவன் போழ் வார் போர்த்த தாழகச் செருப்பினன்", 11ஆம் திரு. 514 : 1 - 2
செருப்பு பாதம் சேர்தல்	காலில் செருப்பு அணிதல்	"பாதம் சேரத்தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்ப", திருத். 711 : 1 - 2
தொடுதோல்	செருப்பு	"தொடலை வாளர் தொடுதோல் அடியர்", மது. 636; "தொடுதோல் அடியர் துடிபடக் குழீஇ", பட். 265; "தொடுதோற் கானவன் கவை பொறுத்தனன்", அகம். 34: 3; "சேவடியில் தொடுதோலும் செங்கையினில் வெண் கோலும் மேவும் இசை வேய்ங்குழலும் மிக விளங்க வினை செய்யும்", திருத். 948 : 1 - 2
அடிபுதை தொடுதோல்	அடியை மறைத்துள்ள செருப்பு	"நுரைதெரி மத்தம் கொளீஇ நிறைப்புறத்து அடிபுதை தொடுதோல் பறைய ஏகி, கடிபுலம் கவர்ந்த கன் றுடைக் கொள்ளையர்", அகம். 101 : 8 - 10
தொடுதோல் மரீஇய	செருப்பு விடாமல் கிடத்தல்	"தொடுதோல் மரீஇய வடுஆழ் நோனடி", பெரும். 169
தொடுமரைத் தோல்	மான்தோலால் செய்த செருப்பு	"பிடிமுதிர் முலையினாள் தன் தழைத்துகில் பெண்ணி னோடும் தொடுமரைத் தோலன் வில்லன் மரவுரி உடையன் தோன்ற", சீவக. 1231 : 2 - 4
தோல்புதை சிரற்றடி	செருப்பு அணிந்த அடி	"தோல்புதை சிரற்றடிக் கோலுடை உமணர்", அகம். 191 : 4
மரவடி	செருப்பு	"ஏந்திய ஏற்பத் தாங்கி எரிமணிக் கொட்டை நெற்றி வாய்ந்தபொன் குயிற்றிச் செய்த மரவடியூர்ந்து போகி", சீவக. 1300 : 1 - 2
பாதக் காப்பு	செருப்பு	"பண்டச் சிறு பொதி பாதக் காப்பொடு களைந்தனன் இருப்போன்", சிலப். 23 : 78 - 79
பாதங்காப்பு	செருப்பு	"தொந்தமாம் பாதங்காப்பு கழல்தொடு தோல் செருப்பு ஆம்", நிக. சூ. 7 : 61
பாதுகம்	செருப்பு	"பாதுகம் தலைக் கொடு", கம்ப. 2513: 1; "நாதன் பாதுகம் செந்தனிக் கோல் முறை செலுத்த", கம்ப. 2514 : 1 - 2

3.13. கை, கால் விரல்கள்

விரலில் அணிகள் அணிதலும் தமிழரிடம் தொன்றுதொட்டே இருந்து வரும் பழக்கமாகும். சொற்கள் இதன் மிகு பயிற்சியையும், அழகுற செய்யப் பட்ட விரலணிகளின் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன. விரல்களில் நிறமூட்டலும் அவர்களிடம் காணப்பட்டது.

அ. நிறமூட்டும் பொருட்கள்

விரலில் பஞ்சு அணிதல்	விரல்களில் செம்பஞ்சுக் குழம்பு அணிதல்	"பஞ்சு அணி விரலினார் தம் படை நெடுங்கண்கள் எல்லாம் செஞ்செவே ஐயன் மெய்யின்", கம்ப. 1072: 1 - 3
விரல் பஞ்சுபூத்தல்	செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய விரல் பொலிதல்	"பஞ்சு பூத்த விரல், பதுமம் பவளம்பூத்த அடியாள், என் நெஞ்சு பூத்த தாமரையின் நிலையம் பூத்தாள், நிறம் பூத்த", கம்ப. 3739 : 1 - 4
பஞ்சி	விரலில் அணியும் செம்பஞ்சுக் குழம்பு	"பஞ்சி மெல்விரலிற் பாணி பண்ணொளி", சீவக. 110: 2

ஆ. அணிகலன்கள்

மெல்விரனல்லணி	கால் விரலணி; மகர வாய் மோதிரம், பீலி, கால் மோதிரம் முதலியன (அடி. ந)	"அலத்தக மூட்டிய வஞ்செஞ் சீறடி நலத்தகு மெல்விர னல்லணி செறீஇப்", சிலப். 6 : 82 - 83
விரலணி கவ்வுதல்	மோதிரம் அணிதல்	"மகர வாயொடு நகை பெறப் புனைந்த விரலணி கவ்வி நிரலொளி எய்திப் பூவடர் மிதிப்பினும் புகைந்து அழலுறூஉம் சேவடிக் கேற்ற", பெருங். 2: 19: 182 - 185
சிறுபாதம் கோல மணிவிரல் அணிதல்	கால் விரலில் அணியத்தக்க வற்றை அணிதல்	"நடைச் சிறுபாதம் கோல மணிவிரல் அணிந்து நாகத் துடைச்சிறு நாவிற் றோகை இரீஇனள் மாலை சேர்ந்தாள்", சீவக. 2445 : 3 - 4
அங்குலி	மோதிரம்	"அங்குலி கை எறிந்து" சிலப். 22: 44; "மயிலைக் கம்மமொடு மகரங் கவ்விக் கொடியொடு துளங்கி அடிபெற வகுத்த அருமணிக் கடகமொடு அங்குலி யழியச்" பெருங். 2 : 19 : 135 - 138
ஆழி	மோதிரம்	"கைவளையாழி தொய்யகம் புனைதுகில் எல்லாங் கவருமியல் பிற்றாய்த் தென்னவன்", பரி. 7 : 46 - 48; "செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல் விரலில் சேர் திகழ் ஆழிகளும்", பெரியாழ். 1: 6: 10: 1 - 2; "ஆழிவாய் விரலிற் காமனம் பொடு சிலைகை யேந்தத் தாழி வாய்க் குவளை வாட்கண் தையலார் பரவச் சார்ந்தார்", சீவக. 833: 3 - 4; "மெய்ப்பேர் தீட்டியது... காட்டின னொராழியது வாணுதலி கண்டாள்", கம்ப. 5290: 1 - 4
ஒளி மணி ஆழி	விளங்குகின்ற இரத் தினம் பதிக்கப் பெற்ற மோதிரம்	"ஒரு கணத்து இரண்டு கண்டேன்; ஒளிமணி ஆழி ஆன்ற திருமுலைத் தடத்து வைத்தாள்", கம்ப. 6048: 1 - 2
கதிர்மணி ஆழி	ஒளிமிக்க மணிகள் பதித்த மோதிரம்	"அருகுசிறை மருங்கி னொருமகள் வைத்த புதுமலர்ப் பிணையலும் புனை நறுஞ் சாந்தமும் கதிர்மணி யாழி யுங் கண்டனனாகி", பெருங். 3 : 9 : 119 - 121
சுடர்மணி ஆழி	சுடருகின்ற விரலணி	"சுடர்மணி யாழி படை பயின்று பலித்த செறிவிர லங்கையின் மறைவு கொள வைத்துக்", பெருங். 3 : 9 : 135 - 136
மணிசெய் ஆழி	ஒளிவிடும் மணிகள் பதித்த மோதிரம்	"வில்லிடுமணிசெய் ஆழி மெல்விரல் விதியிற் கூப்பி நல்லடி பணிந்து நிற்ப நங்கைநீ நடுங்க வேண்டா", சீவக. 2068 : 1 - 2

சூழ்மணி ஆழி	மணிகள் பதித்த மோதிரம்	"ஆழ்கடல் வையத் தில்லா அருநிதி அரசுநல்ல சூழ் மணி ஆழி செம்பொற் சூட்டொடு", சீவக. 2569 : 1 - 2
மெல்விரல் சூழ் அரும்பொன் ஆழி	மெல்லிய விரலில் அணிந்திருந்த பொன் மோதிரம்	"மணிக்காந்தள் அஞ்சச் சிவந்த மெல்விரல் சூழ் அரும்பொன் ஆழி அகற்றினாள்", சீவக. 351 : 3 - 4
வட்ட ஆழி	மோதிரம்	"தலைவிரற் சுற்றுந் தாதணி வளையமும் வட்ட ஆழி யுங் கட்டுவட இணையும்", பெருங். 2 : 19 : 180 - 181
வளைஇய சக்கரத்து ஆழி	வளைந்த சக்கரம் போன்ற மோதிரம்	"வளவயல் ஊரன் மருளுரைக்கும் மாதர் வளைஇய சக்கரத்து ஆழி கொளை பிழையா", ஐங். எழு. 56: 1-2
பொன் ஒளி ஆழி அகம் கௌவுதல்	பொன் மோதிரம் அணிதல்	"ஒருக்குற நெருங்கிப் பொன் ஒளி ஆழி அகம் கௌவித் திருக்கவின் கொள் மெல் விரல்கள் தேனார்க்கும் தகையே", சீவக. 178 : 3 - 4
வாள்விடு வயிரக் கட்டு ஆழி சாத்துதல்	ஒளிவிடும் வயிரம் பொருந்திய மோதிரத்தை அணிதல்	"வாள்விடு வயிரக் கட்டு மணிவிரல் ஆழி சாத்தித்", திருத். 3116 : 1 - 2
அரும் பொன் ஆழி மெல்விரல் சூழ்தல்	மென்மையான விரல்களில் பொன் மோதிரம் அணிதல்	"அஞ்சி வருத்து நுசுப்பினாள் வளைகை யுடைத்து மணிக்காந்தள் அஞ்சச் சிவந்த மெல்விரல் சூழரும் பொனாழி யகற்றினாள்", சீவக. 351 : 3 - 4
மோதிரம் செறித்தல்	மோதிரம் அணிதல்	"புனைகதிர் மருப்புத் தாடி மோதிரம் செறித்து", சீவக. 2279: 1
ஆழி மெல்விரல் சேர்த்தல்	மென்மையான விரல்களில் மோதிரம் அணிதல்	"மணியாரம் பூண்டாழி மெல்விரல் சேர்த்தி அணியார் வளை தோள் மேல்மின்ன", 11ஆம் திரு. 300: 93 - 94
பெயர் சுமந்த கதிர்மணி ஆழி சேர்த்தல்	பெயர் பொறித்த மோதிரம் அணிதல்	"காதலான் பெயர் சுமந்த கதிர்மணி ஆழி சேர்த்திக் கோதைதாழ் குழலினாளைக் கொண்டு போய் மறைய நின்றாள்", சீவக. 318 : 3 - 4
ஆழி திகழ்தல்	ஆழி ஒளி வீசுதல்	"செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல் விரலில் சேர் திகழ் ஆழிகளும்", பெரியாழ். 1: 6: 10: 1 - 2
பைம்பொன் ஆழி தொடுதல்	பொன் மோதிரம் அணிந்திருத்தல்	"செம்பொன் நீள்முடித்தேர் மன்னர் மன்னற்குப் பைம் பொன் ஆழி தொட்டான்படை காட்டினான்", சீவக. 2167 : 1 - 2
அவ்வளையவிராழி கால் பொலிதல்	அழகிய வளைந்த விரல் மோதிரம் காலில் பொலிவுடன் விளங்குதல்	"அவ்வளை யவிராழிக் கால்பொலிந் தழகார்ந்த மைவினை கழுநீர்க்கண் விலாசியும்", சீவக. 2435: 1 - 2
நன் பொன் விரல் மணியாழி மின்னுதல்	அழகுடன் விளங்கும் விரல்களில் மணி மோதிரம் மின்னுதல்	"விலங்கரம் பொருத சங்கின் வெள்வளை தெளிர்க்கு முன்கை நலங்கிளர் பவள நன்பொன் விரல்மணி யாழி மின்ன", சீவக. 2441 : 1 - 2
கட்டுவட இணை	கால் மோதிரம்	"இலைபடக் குயிற்றிய எழில் ஒளிக் கம்மத்துத் தலைவிரற் சுற்றும்... வட்டவாழியும் கட்டுவட இணையும்", பெருங். 2 : 19: 179-181
தாள் கைச் செறிதல்	மோதிரம் அணிதல்	"தகையவர் கைச் செறிந்த தாள்போல காந்தள் முகையின் மேல் தும்பி இருக்கும்", கலித். 43: 8-9
வயிரத்து மரகதத் தாள் செறி விரல் கரப்ப அணிதல்	ஒளியை உடைய வயிரம் சூழ்ந்த மரகதமணிக் கடைச் செறி விரல் மறையும்படி அணிதல்	"வாங்குவில் வயிரத்து மரகதத் தாள் செறி காந்தள் மெல்விரல் கரப்ப வணிந்து", சிலப். 6: 97 - 98
தாதணி வளையம்	கால் விரல் அணி	"இலைபட குயிற்றிய எழில் ஒளிக் கம்மத்து தலை விரற் சுற்றும் தாதணி வளையமும், ... விரலணி கவ்வி", பெருங். 2 : 19: 179 - 181

மரகத மணித் தாள் செறிதல்	தாள் என்னும் மோதிரம் அணிதல்	"மரகத மணித் தாள் செறிந்த மணிக் காந்தள் மெல் விரல்கள் பயிர் வண்டின் கிளைபோல் பன்னரம்பின் மிசைப் படர", சிலப். 7 : 10
பொன் விரல்	மோதிர விரல்	"சொன்ன நன்மலருமல்லனவும் வீழ்பலவின் சூழ்சுளை களும் நன்மை நூலினயற் தோன்றநன் பொன் விரலி னுதியினால் பன்மணியுமுத்தும் பவள மும்பைம் பொன் னுங் கோத்தா லொப்ப", சீவக. 1652 : 1 - 3
இலங்கு வளைத் தொடுஉம் மெல் விரல் மோசை	விளங்கிய வளை யொடு பிணிப்புற்ற மெல்லிய விரலில் அணிந்த விரலணி	"படுநீர்ச் சிலம்பில் கலித்த வாழைக் கொடுமடல் ஈன்ற கூர்வாய்க் குவிமுகைஒள்ளிழை மகளிர் இலங்கு வளைத் தொடுஉம் மெல்விரல் மோசை போலக் காந்தள் வள் இதழ் தோயும்", நற். 188 : 3 - 4
மோதிரம்	விரலணி	"மாதரு நீயு மயலுரைத் தெழுந்து போதரும் போதை யின் மோதிர மருளிப் பெயர்ந்தனை நயனமு மலர்ந் தன வாங்கே", பெருங். 4 : 13 : 199 - 201; "பூவொடு பொன் மணியும் மோதிரமும் கிறியும்", பெரியாழ். 1: 6: 10: 4; "ஆண்தகை தன் மோதிரம் அடுத்த பொருள் எல்லாம் தீண்டு அளவில் வேதிகை செய்தெய்வ மணிகொல்லோ?", கம்ப. 5295 : 3 - 4
கழுமணி மோதிரம்	கழுவிய மணியால் (அராவப்பட்ட மணி யால்) செய்யப்பட்ட மோதிரம்	"எழில்விரல் தோறும் இயைந்தணியாகிய கழுமணி மோதிரங் கழித்தனர் களைந்து கவற்சி கொண்ட காமத் துணைவியர்", பெருங். 2 : 12 : 73 - 75
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்	சிவந்த ஒளி வீசும் மணி மோதிரம்	"கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்...... காந்தண் மெல்விரல் கரப்ப வணிந்து", சிலப். 6 : 96 - 98
கைம் மோதிரம்	கை விரலில் அணியும் மோதிரம்	"கொழுநனை இல்லாள் கறையும்வழி நிற்கும் சிற்றாளில் லாதான் கைம் மோதிரமும் பற்றிய கோல்கோடி வாழும் அரசும்", திரிகடு. 66 : 1 - 3
சிறுவிரன் மோதிரம்	சிறுவிரல் மோதிரம்	"வழுவுத லின்றி வைகலு மீங்கே குறியெனக் கூறிச் சிறுவிரன் மோதிரம் கொடுத்தன னருளிக் கோயிலு ணீங்க", பெருங். 4 : 13 : 179 - 181
சுறா ஏறு எழுதிய மோதிரம்	சுறாவின் ஏற்றைக் குழித்த மோதிரம்	"செவ்விரற்கு ஏற்பச் சுறா ஏறு எழுதிய மோதிரம் தொட்டாள்", கலித். 84 : 23
திருமணிப் பொன் செய் மோதிரம்	அழகிய ஒளிவிடும் மணியையுடைய பொன் மோதிரம்	"புனைகதிர்த் திருமணிப் பொன்செய் மோதிரம் மலர் வனைத் தாரினான் மறைத்து வண்கையால்", சீவக. 323 : 1 - 2
நாம மோதிரம்	பெயர் பொறித்த மோதிரம்	"தாமரை யெதிர்போது வாங்கி மற்றுத்தன் காமர் செவ் வியிற் காய் நலம்பெற்ற நாம மோதிரந்தாண் முதற் செறித்துப்", பெருங். 3 : 9 : 68 - 70; "தீம்பா லமிர்தூட்டிச் செம்பொன் மணிக்கூட்டிற் காம்பேர் பணைத் தோளி மென்பறவை கண்படுப்பித் தாம்பான் மணிநாம மோதிரந் தொட்டை யென்ன", சீவக. 1040: 1 - 3
தன் நாம மோதிரம்	தன் பெயர் பொறித்த மோதிரம்	"தானையுஞ் சூழத்தானே யணிந்துதன் நாம மோதிர நன்னாட் கொண்டு சேனாபதியிவன் ஆகெனச் செறித்து", பெருங். 4: 9: 8 - 10
வண்ண மோதிரம்	நிறமுடைய மோதிரம்	"செறிவுற நோக்கி, நாயேன் சிந்தையில் திருக்கம் இன்மை முறிவு அற எண்ணி வண்ண மோதிரம் காட்ட கண்டாள்; இறுதியின் உயிர் தந்து ஈயும் மருந்து ஒத்தது, அனையது எந்தாய்!", கம்ப. 6047 : 3 - 4
வனையும் மாமணி நல்மோதிரம்	சிறந்த இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட சிறந்த மோதிரம்	"வனையும் மாமணி நல் மோதிரம் அளித்து, அறிஞ, நின் வினை எலாம் முடிக! எனா", கம்ப. 4519 : 3 - 5

வாளைப் பகு வாய் வணக்குறு மோதிரம்	வாளை மீனின் அங்காந்த வாயை ஒக்கும் முடக்கு மோதிரம்	"வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம் ..... காந்தண் மெல்விரல் கரப்ப வணிந்து", சிலப். 6 : 95 - 98
கேழ்கிளர் செங் கேழ் கிளர்மணி மோதிரம் மெல் விரல் கரப்ப அணிதல்	ஒளிமிக்க செந்நிறம் விளங்குகின்ற மாணிக்கம் பதித்த மோதிரம் விரல் முழுமையும் மறை யுமாறு அணிதல்	"கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்.... காந்தண் மெல்விரல் கரப்ப வணிந்து", சிலப். 6: 96 : 98
கழியப் பெரிய அருவிலைய சிறிய மணி மோதிரம் கனலுதல்	மோதிரம் ஒளிவிடல்	"குழிய பெரிய கோல் முன்கை மணியார் காந்தள் குவிவிரல் மேற் கழியப் பெரிய அருவிலைய சிறிய மணி மோதிரம் கனலத் தழியப் பெரிய", சீவக. 2696: 1 - 5
விரலணி கவ்வுதல்	விரலில் மோதிரம் செறித்தல்	"வட்ட ஆழியும் கட்டு வட இணையும் மகர வாயொடு நகை பெறப் புனைந்த விரலணி கவ்வி", பெருங். 2: 19 : 181 - 183
சூழ்மணி மோதிரம் சுடர்ந்து வில்லிடல்	விரலில் அணிந்த மோதிரம் ஒளிவிடுதல்	"சூழ்மணி மோதிரஞ் சுடர்ந்து வில்லிட யாழறி வித்தகன் அங்கை நீட்டினான்", சீவக. 1021 : 3 - 4
அணிமோதிரம் சூழ்தல்	அழகிய மோதிரம் அணிதல்	"அணிமோதிரம் சூழ் விரல் வாய் புதையாப் பணியா முடியாற் பணிந்தான் இளையோன்", சீவக. 2866: 3-4
மோதிரம் செறித்தல்	மோதிரம் இறுக அணிதல்	"தானையுஞ் சூழத் தானே யணிந்துதன் நாம மோதிர நன்னாட் கொண்டு சேனா பதியிவனாகெனச் செறித்துப் பன்னூறாயிரம் பழுதின்று வருவன", பெருங். 4: 9: 8 - 11; "புனைகதிர் மருப்புத் தாடி மோதிரஞ் செறித்துப் பொன்செய் கனைகதிர் வாளை யேந்திக் கால் கழல் அணிந்து நம்மை இனையன பட்ட ஞான்றா விறைவர் கள் நினைப்பது என்றே", சீவக. 2279 : 1 - 3
மோதிரம் தொடுதல்	மோதிரம் அணிதல்	"சிறுபட்டி ஏதிலார்கை, எம்மை எள்ளுபு நீதொட்ட மோதிரம்", கலித். 84 : 20 - 21
சுறாவேறெழுதிய மோதிரம் தொடுதல்	சுறாவின் ஏற்றைக் குழித்த மோதிரம் கைவிரலில் அணிதல்	"அவற்றுள் நறாவிதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச் சுறாவே றெழுதிய மோதிரந் தொட்டாள்", கலித். 84: 22 - 23
நாம மோதிரம் தொடுதல்	பெயர் பொறிக்கப் பட்ட மோதிரம் அணிதல்	"ஆம்பால் மணிநாம மோதிரந்தொட்டையென்னத் தேம்பா எழுத்தோலை செவ்வனே நோக்கினாள்", சீவக. 1040 : 3 - 4
விரற்செறி	விரல் அணி	"விரற்செறி மரபின செவித் தொடக்குநரும் செவித் தொடர் மரபின விரற்செறிக்குநரும்", புறம். 378: 14 - 15
பொலஞ்செயப் பொலிந்த நலம் பெறுவிளக்கம்	பொன்னாற் செய்த பொலிவு பெற்ற மணிகள் அழுத்தின மோதிரம்	"பொலஞ்செயப் பொலிந்த நலம் பெறுவிளக்கம்", மது. 719
தலை விரற் சுற்று	கால் மோதிரம்	"தலைவிரற் சுற்றுந் தாதணி வளையமும்", பெருங். 2: 19: 180
வாளைப் பகுவாய்க் கடுப்ப வணக் குறுத்த செங்கேழ் விளக்கம் செவ் விரல் கொளுவுதல்	வாளையினது பகுத்த வாயையொக்க முடக்கத் தை உண்டாக்கிச் சிவந்த நிறத்தையுடைய முடக்கு மோதிரத்தைச் சிவந்த விரலிடத்தே இடுதல்	"வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச் செவ்விரல் கொளீஇய செங்கேழ் விளக்கம்", நெடு. 143 - 144
விரல்கள் திருக்கவின் கொள்ளுதல்	விரல்கள் ஒப்பனை யால் அழகு பெறுதல்	"அரக்கியல் செங்கழுநீர் அகவிதழ்போல் உகிர்சூடிப் பரப்பின்றி நுதியுயர்ந்து பழிப்பறத் திரண்டு நீண்டு ஒருக் குற நெருங்கிப் பொன் ஒளி ஆழி அகம்கௌவி திருக்கவின் கொள் மெல்விரல்கள் தேனார்க்கும் தகையே", சீவக. 178 : 1

3.14. கை, கால் நகம்

உடலின் ஒவ்வொரு பகுதியையும் ஒப்பனை செய்து அழகுபடுத்திய தமிழர் நகங்களையும் விட்டுவைக்கவில்லை. அழகுற அதனைச் சீரமைத்து, நிறமூட்டிய தன்மைகள் இச்சொற்களில் வெளிப்படுகின்றன.

அ. நிறமூட்டும் பொருட்கள்

உகிர் ஒளி விடுதல்	நகம் ஒளி வீசுதல்	"கிளி வாயொப்பின் ஒளிவிடு வள்ளுகிர்", பொருநர். 34; "கிளி வாயன்ன ஒளி வாய் உகிரின்", பெருங். 2: 15: 76
உகிர் ஊட்டுதல்	நகங்களில் செம் பஞ்சுக் குழம்பு ஊட்டுதல்	"குவிமுகை முருக்கின் கூர்நுனை வைபெயிற்று நகை முக மகளிர் ஊட்டுகிர் கடுக்கும்", அகம். 317 : 4 - 5; "பஞ்சி, வான் மதியை ஊட்டியது அனைய படர் உகிர் பங்கயச் செங்கால்", கம்ப. 102 : 1 - 2
வாருகிர் குறைத்துக் கல்லின் நன்னிறம் பெறீஇ	சிவந்த அடியின் அழகுக்கேற்ப பாதித் திங்கள் போல நகத் தினைக் குறைத்து, நிறமூட்டல்	"சேவடிக் கேற்பச் செழுமதிப் பாகென வாருகிர் குறைத்து வனப்புவீற் றிரீஇய ஒண்ணிறக் கல்லின் நன்னிறம் பெறீஇ", பெருங். 2 : 4 : 186 - 187
உகிர் சூடுதல்	நகங்களில் செம் பஞ்சு ஊட்டப்படுதல்	"அரக்கியல் செங்கழுநீர் அகவிதழ்போல் உகிர்சூடிப் பரப்பின்றி நுதியுயர்ந்து பழிப்பறத் திரண்டு நீண்டு ஒருக் குற நெருங்கிப் பொன் ஒளி ஆழி அகம்கௌவி திருக்கவின் கொள் மெல்விரல்கள் தேனார்க்கும் தகையே", சீவக. 178 : 1
உகிர் வினை செய்து பஞ்சி அரத்தம் ஊட்டுதல்	மகளிர் நகத்தை அழகாகச் சீவி, நிறமூட்டல்	"உகிர் வினை செய்து பஞ்சி யொள்ளொளியரத்த மூட்டி அகில் கமழ் அங்கை சேப்ப அரிவையர் அலங்கல் தாங்கி", சீவக. 2540: 1-2
உகிரில் அலத்தகம் எழுதியிடுதல்	நகத்தில் செம் பஞ்சுக் குழம்பு இடுதல்	"அம்மலரடியும்.... திருந்தொளி உகிரோடு அங்கேழ் விம்மிதப் பட்டு வீழ அலத்தகம் எழுதியிட்டாள்", சீவக. 2446 : 1 - 3
உகிர் செம்பஞ்சி உண்ணுதல்	நகத்தில் செம்பஞ்சுக் குழம்பு அணிதல்	"உகிருங்கொடிறு முண்ட செம்பஞ்சியும்", பரி. 6: 17

4. மேனி

தமிழர் தலை முதல் கால் வரை, கூந்தல் தொட்டு பாதம் வரை பலவிதங்களில் தம்மை ஒப்பனை செய்து கொண்டதை மேலே தொகுத்துத் தந்த சொற்கள் வழிக் காண்கிறோம். இந்த ஒப்பனைகளுக்கு அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் பலவும், பல உறுப்புகளுக்கும் ஒப்பனைச் செய்யப் பயன்பட்ட பொதுவான பொருள்களே. சான்றாக, பூக்களை எடுத்துக் கொண்டால் அவை கூந்தல், மார்பு, காது, தோள் என பலவிடங்களுக்கும் ஒப்பனை செய்யப் பயன்பட்டதைக் காண முடிகிறது. இதனைப் போன்றே மணப்பொருட்கள், அணி, ஆடைகள் போன்றனவும். இந்நிலையில் உறுப்புக்களைக் குறிப்பிட்டுச் சொல்லும் புலவர்கள் மேனி எனப் பொதுவாகக் குறிப்பிட்டும் ஒப்பனை முறைகளைக் காட்சிப்படுத்துகின்றனர். மேலும் அணிகள் என்ற நிலையில் பொதுவாக அனைத்து அணிகளையும் குறிக்க நாம் இன்று பயன்படுத்தும் நகை போன்று அன்று அணி, இழை, கலன், பூண் போன்றன அமைந்திருந்த தன்மை, உடல் முழுவதையும் மறைத்தற்கு என்று இன்றும் பயன்படுத்தும் போர்வை போன்றவற்றையும் இலக்கியப் பயிற்சிகளில் காணல் இயலுகிறது. இச்சொற்களும் தமிழிரின் ஒப்பனைக் குறித்தச் சிந்தனைகளைப் பெறத் துணை செய்ய வல்லன என்ற நிலையில் இப்பகுதியில் இவை தரப்படுகின்றன.

அ. மணப்பொருட்கள்

மெய் அராகம்	உடலில் பூசும் சந்தனம்	"செய்யவாய் வெளுப்ப, கண்சிவப்புற, மெய் அராகம் அழிய, துகில் நெக", கம்ப. 947: 1-2
அலத்தகக் குழம்பு செறிதல்	செம்பஞ்சுக் குழம்பு பூசுதல்	"நலத்த மாதர் நறை அகில் நாவியும் அலத்தகக் குழம்பும் செறிந்து", கம்ப. 4986: 1-2
மெய்க் கலவை	மெய்யில் பூசும் கலவைச் சாந்து	"விதி ஆற்றான் ஆக்கிய மெய்க் கலவை போல", பரி. 7 : 20
வாசப்புனை நறுங் கலவை பூசுதல்	கலவைச் சந்தனம் அணிதல்	"மேனி, பொற்பு அளவு இல்லா வாசப் புனை நறுங்கலவை பூசி", கம்ப. 4943: 2 - 3
மங்கலக் கலவை சாத்துதல்	வாசனைக் கலவை பூசுதல்	"மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்தி", திருத். 163 : 5 - 6
வாசமென் கலவைக் களி வாரி பூசுதல்	மணமும் மென்மையும் வாய்ந்த கலவைச் சந்தனக் குழம்பை அள்ளிக் கொண்டு உடலில் பூசுதல்	"வாசமென் கலவைக் களி வாரி, மேல் பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினாள்", கம்ப. 559 : 1 - 2
நானப் பல்பல கலவைச் சாந்தம் பான்மையின் அணிதல்	வாசனைப் பொருட்களின் கலவையைச் சிறப்பாக அணிதல்	"நல்திரு உத்திரீய நறும் துகில் சாத்திநானப் பல்பல கலவைச் சாந்தம் பான்மையின் அணிந்த பின்னர்", திருத். 3112 : 5 - 8
குங்குமம் அப்புதல்	குங்குமக் குழம்பை உடம்பு முழுவதும் பூசுதல்	"குங்குமம் அப்பிக் குளிர் சாந்தம் மட்டித்து மங்கல வீதி வலஞ்செய்து", நாச். திரு. 6 : 10 : 1 - 2
சந்தனக் களபம் துதைதல்	கலவைச் சந்தனம் பூசப்பெறுதல்	"சந்தன களபந் துதைந்த நன் மேனித் தவள வெண் பொடி முழு தாடுஞ்", திருவி. 92 : 1 - 2
சந்தனச் சேறு ஆட்டுதல்	சந்தனம் பூசுதல்	"தூநறும் பசுங் கர்ப்பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில் ஆனதண் பனிநீர் கூட்டி அமைத்த சந்தனச் சேறு ஆட்டி", திருத். 163 : 1 - 4

சந்தனத்தால் மெய்பூசுதல்	மெய்யெல்லாம் சந்தனத்தைப் பூசுதல்	"தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி நீல அறுவை விரித்துடுத்துக்", 11ஆம் திரு. 300 : 82
சாந்தம் கொண்டணிதல்	சந்தனம் பூசுதல்	"பட்டுடுத்துப் பவளம்போல் மேனி யெல்லாம் பசுஞ் சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ", தேவா. திருநா. 6 : 58 : 7 : 1 - 2
சாந்தம் தடியற அப்புதல்	சந்தனத்தை உடம்பில் நன்கு தடவுதல்	"தவலருஞ் சாந்தந் தடியற அப்பிச் சீதச் செய்கையின் மாதுயர் விடுப்பத்", பெருங். 2 : 10 : 120 - 121
தண் சாந்தம் திமிர்தல்	குளிர்ந்த சந்தனத்தைப் பூசியிருத்தல்	"தம்பொன்மேனி திமிர்ந்ததண் சாந்தமும் வம்புண் கோதையர் மாற்று மயலரோ", சீவக. 128 : 3 - 4
குளிர்சாந்தம் மட்டித்தல்	குளிர்ந்த சந்தனத்தை மிகுதியாகத் தடவுதல்	"குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து மங்கல வீதி வலஞ்செய்து", நாச். திரு. 6 : 10 : 1 - 2
குளிர்சாந்தம் மிகுதல்	சந்தனக்குழம்பு பூசியிருத்தல்	"கொக்கார் வளவயல் ஊரன் குளிர்சாந்தம் மிக்கவன முலை புல்லான் பொலிவுடைத்தா தக்கயாழ்ப் பாண", கைந். 4 : 12: 1 - 3
சாந்தம் மெய்யிடல்	உடம்பில் சாந்தம் பூசிக் கொள்ளல்	"நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமுமத் தாணிச் சேவகமும் கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும் மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து என்னை வெள்ளுயிராக்க வல்ல", பெரியாழ். 1 : 8 : 1 - 3
சாந்தம் மெய் முழுதும் உரீஇ	சந்தனத்தை உடல் முழுதும் பூசிக் கொள்ளுதல்	"வெண்பலி சாந்த மெய்ம் முழுதுரீஇப் பண்பில் கிளவி பலரொடு முரைத்தாங்", மணி. 3 : 108 - 109
சாந்தவும்	சாந்துக்கு உறுப்பான முப்பத்திரண்டு உறுப்பும் (அரும்பதம்.) மயிர்ச் சாந்துக்கு உறுப்பாய் உள்ளனவும் மெய்சாந்து உறுப்புமாம் (அடி.ந.)	"புகையவுஞ் சாந்தவும் பூவிற் புனைநவும்", சிலப். 14: 178
மெய் அணி சாந்து	உடம்பை அழகு செய்யும் செஞ் சந்தனக் குழம்பு	"மிக்க வேந்தர் தம் மெய் அணி சாந்தொடும் புக்க மங்கையர் குங்குமம் போர்த்தலால் .... செக்கர் வானகம் ஒத்தது அத்தீம் புனல்", கம்ப. 949: 1 - 4
சாந்தும் கொண்டணிதல்	சாந்து பூசுதல்	"பதுமா பதிவயிற் பசைந்தவள் வைத்த கோதையுஞ் சாந்துங் கொண்டு அணிந்தனையென", பெருங். 3 : 9 : 172 - 173
கத்தூரி கமழ் சாந்து நாறுதல்	கத்தூரி கலந்த சாந்தம் மணத்தல்	"மெய்க் கினிதா நாறும் கத்தூரி கமழ் சாந்து பணித்தருள வேண்டும்", தேவா. சுந்தர. 71: 1: 6 - 7
வெண்சாந்து பூசுதல்	வெள்ளிய சாந்து பூசுதல்	"பொன்னணி மணிசெ யோடை நீரின் வெண்சாந்து பூசித் தன்னுடை விஞ்சையெல்லாந் தளிரியலோ தலோடும்", சீவக. 1147 : 1 - 2
கருப்புரச் சாந்தும் கலவையும் மலரும் கலந்து பரிமள கந்தம் உமிழ்தல்	கர்ப்பூரம் கலந்த சந்தனமும் குங்குமம் முதலியவற்றின் சாந்தும் பலவகைப் பூக்களும் ஒன்றுசேர்ந்து மேனியில் நறுமணம் வெளிப்படுத்துதல்	"அரம்பையர் குழாம் புடைசுற்ற, கருப்புரச் சாந்தும், கலவையும் மலரும் கலந்து உமிழ் பரிமள கந்தம் மருப்புடைப் பொருப்பு ஏர் மாதிரக் களிற்றின் வரிக் கைவாய் மூக்கிடை மடுப்ப", கம்ப. 5147 : 2 - 4
சிந்துரச் சுண்ணஞ் சேர்த்தல்	சிவந்த சுண்ணம் அப்புதல்	"சிந்துரச் சுண்ணஞ் சேர்ந்த மேனியில் அந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு", சிலப். 14 : 92 - 93
சேறாடுதல்	சந்தனம் அணிதல்	"பகை தொடர்ந்து கோதை பரியூஉ நனிவெருண் டியாறாடு மேனியணிகண்ட தன்னன்பன் சேறாடு மேனிதிருநிலத்துய்ப்பச் சிரமிதித்துச்", பரி. 7 : 72 - 74

நாவி செறிதல்	கத்தூரி பூசுதல்	"நலத்த மாதர் நறை அகில் நாவியும் அலத்தகக் குழம்பும் செறிந்து", கம்ப. 4986: 1-2
நாவி நாறுதல்	கத்தூரி மணத்தல்	"காவியங் கண்ணி யொன்றுங் கவலல்யா னுய்த்த தெல்லாம் நாவியே நாறுமேனி நங்கை நின்ற வத்தி னென்றான்", சீவக. 2099: 3-4; "நாவி நாறு எழில்மேனி யைக் கண்டுகண்டு", சீவக. 346: 3
நானப்பொடி மெய் திமிர்தல்	மணப்பொடி உடம்பில் பூசுதல்	"மெய் திமிரும் நானப் பொடியொடு மஞ்சளும்", பெரியாழ். 1: 4: 9: 1
மஞ்சள் அழகு	மஞ்சள் பூசுவதனால் ஏற்படும் அழகு	"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல", நாலடி. 131 : 1 - 2
மஞ்சள்	பூசுமஞ்சள்	"மெய்திமிரும் நானப் பொடியொடு மஞ்சளும்", பெரியாழ். 1 : 4: 9: 1
பற்று மஞ்சள் பூசுதல்	நிறம் பிடிக்கும் மஞ்சளைப் பூசுதல்	"பற்று மஞ்சள் பூசி பாவை மாரொடு பாடியில் சிற்றில் சிதைத்து எங்கும்", பெரியாழ். 3 : 2 : 2 : 1 - 2
மான்மதம்	கத்தூரி	"அதிர்கழல் ஒலிப்பன; அயில் இமைப்பன; கதிர்மணி அணி வெயில் கால்வ; மான்மதம் முதிர்வு உறக்கமழ் வன", கம்ப. 152 : 1 - 3
அடித்தல முதலா முடித்தலங்காறும் நெய் மொய்யுறத் தோய்த்தல்	உடலில் நெய் பூசுதல்	"அடித்தல முதலா முடித்தலங் காறும் மொய் யுறத் தோய்ந்த நெய் தயங்கு பைந்தாள் மங்கலப் புல்லவரின் புறப் பெய்தபின்", பெருங். 1 : 42 : 110 - 112
வாச வெண்ணெய் பூசுதல்	வாச வெண்ணெயை மெய்யின்கண் பூசுதல்	"கரும வித்தகர் கைப் புனைந்தியற்றிய வாச வெண் ணெய் பூசினர் போற்றி", பெருங். 2 : 5 : 100 - 101
ஓசனை கமழுதல்	வாசனைப் பொருட் களை உடம்பிற் பூசு தலால் மணத்தல்	"ஓசனை கமழும் வாச மேனியர்", பரி. 12 : 25

ஆ. அணிகலன்கள்

அணி	அணியப்படும் ஆப ரணம்; உடம்புக்கு அழகு செய்யும் புறத்தணி	"தோகை, இழை அணி மடந்தையின் தோன்றும் ஊர", ஐங். 294: 1 - 2; "நின்தோள் அணி பெற வரற்கும்", நற். 286: 8; "பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுபிற", குறள். 95; "கூறாமை நோக்கிக் குறிப் பறிவான் எஞ்ஞான்றும் மாறாநீர் வையைக் கணி", குறள். 701; "அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற் பிணியன்றோ பீடு நடை", குறள். 1014; "பிணியன்னர் பின் நோக்காப் பெண்டிர் உலகிற்கு அணி யன்னர் அன்புடைய மக்கள்", நான்மணி. 33 : 1 - 2; "புணர்வி னன்ன தண்டாக் காதல் அணிக்கவின்கொண்ட வதி நாகரிகத்து வனப்பு வீற்றிருந்த வாசவத்தை", பெருங். 4: 11 : 81 - 83; "மான் அணி நோக்கினார் தம் மங்கலக் கழுத்துக்கு எலாம் தான் அணி ஆனபோது தனக்கு அணியாது மாதோ?", கம்ப. 1123 : 5 - 85; "அன்று நீ இழித்து நீத்த மற்றை நல் அணிகள் காண், உன் மங்கலம் காத்த மன்னோ", கம்ப. 5265 : 3 - 4
இலங்கணி	விளங்குகின்ற ஆபரணம்	"பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே என்னாகம் உள்புகுந் தாண்டு கொண்டான் இலங்கணியாம் பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ", திருவாச. திருப்பூ. 17: 2 - 4
மங்கல அணி	தாலி; வெள்ளணி; முரசறையும் போது அணியும் அணி	"மறுவின் மங்கல அணியே அன்றியும்", சிலப். 2: 63; "மங்கல அணியின் பிறிதணி மகிழாள்", சிலப். 4 : 50; "மங்கல அணியினர் மலர் கதிர் மதியன", சீவக. 603 : 1

வதுவைக் கேற்ற மங்கலப் பேரணி	திருமணவினைக் கேற்ற மங்கல அணி	"ஆடமைத் தோளியை யணிந்து முறை பிறழாது வதுவைக் கேற்ற மங்கலப் பேரணி அதிநாகரி கியை யணிந்தன ரமைய", பெருங். 3 : 22 : 236 - 238
அணிதல்	அணிகலன்கள் அணிதல்	"படுதிரைப் பரப்பிற் குடைவன ராடி அணிதலும் புனைதலு முனிவில ராகிக்", பெருங். 3 : 3 : 53 - 54
நிலமறிந்து அணிதல்	நாடக அரங்கிற்கு ஏற்ப அணி செய்தல்	"நிலமறிந்து அணிக ஐயன் சீவகன் நெறியின் அன்ன", சீவக. 673 : 1
பேரணி அணிதல்	மதாணி முதலிய பேரணிகலன்களை அணிதல்	"தாரணி மார்பனொடு பேரணி யணிந்து வான வண் கைய னத்திரி யேற", சிலப். 6 : 118 - 119
விழுத்தகு பேரணி தகைபெற அணிதல்	விலைக்கு எல்லை காணமாட்டாத பேரணி கலன்களாகிய முதன்மையுடையவற்றை அழகுற அணிதல்	"விலைவரம் பறியா விழுத்தகு பேரணி தலை வரம்பானவை தகைபெற வணிந்து கூறுதற்காகாக் குறைவிலின்பமொடு வீறுபெற்றனரான்", பெருங். 4: 7: 242 - 245
வெள்ளணி அணிதல்	பிறந்தநாள் ஒப்பனை; பிறந்தநாளில் வெள் ளணி அணிதல் மரபு	"வெள்ளணி அணிந்த நான்றே வேந்தர் தம் முடியிற் கொண்ட", சீவக. 614 : 1
வாலணி கொளீஇ	தூய அணிகலன் களை அணிவித்தல்	"செங்கயற்கண்ணியை நங்கை தவ்வையார் கோல மீத்தக வாலணி கொளீஇத் திருந்தடி வணங்கி", பெருங். 3 : 22 : 204 - 206
அணி சுடருதல்	அணிகலன் ஒளி வீசுதல்	"கஞ்சிகை கடுவளி யெடுப்ப மஞ்சிடை வானர மகளிரிற் றானணி சுடர முகை நலக் காந்தண் முகிழ்விரணோ வத்", பெருங். 3 : 48 - 50
பொன்னணி சுடருதல்	பொன்னாலியன்ற அணிகலன்கள் ஒளி வீசுதல்	"முகைமலர்க் கோதை முறுவற் செவ்வாய்க் கன்னி ஆயத்துப் பொன்னணி சுடர", பெருங். 2 : 9 : 95 - 96
ஊழணி தைவரல்	முறையாக அணியப் பெற்ற வளையல் மோதிரம் போன்றவை களைத் தடவுதல்	"ஊழணி தைவரல் உடை பெயர்த்துடுத்தலொடு கெழீஇய நான்கே இரண்டென மொழிய", தொல். 1208
அணிபழுப்பப் பூசுதல்	அணிந்திருக்கும் அணிகளுக்கெல்லாம் செஞ்சாந்து பூசுதல்	"அரத்தம் உடீஇ அணிபழுப்பப் பூசிச் சிரத்தையால் செங்கழுநீர் சூடிப்", திணை. நூற். 144 : 1 - 2
அணிக்குலங்கள் வில்லிடுதல்	அணிவகைகள் ஒளி வீசுதல்	"அழகு மின்னிட குழைப் பொலி நல் அணிக்குலங்கள் வில்லிட", கம்ப. 9932 : 1 - 2
அணிப் பெறுதல்	அணிகலன்களை அணியப் பெறுதல்	"செம்மையு மென்மையுஞ் சிறந்து வனப்பெய்தி அம்மை முன்னும் அணிப் பெறப் பிணங்கி", பெருங். 2 : 19: 177 - 178
மெய்யணி பலவும் மின்னுதல்	உடம்பில் பூண்ட ஆபரணங்கள் மின்னுதல்	"உடைந்த வல்இருள் நோற்று, பல் உருக்கொடு, அக் கதிர்க் குழாங்கள் மிடைந்தன மிலைச்சியாங்கு மெய் அணி பலவும் மின்ன", கம்ப. 5754 : 1 - 2
அணிகல அரவம்	அணிகளின் ஒலி	"அணிகல அரவத்தாலும் அமிழ்துறழ் நாற்றத் தாலும் பணிவருஞ் சிங்க நோக்கிற் பணையெருத்துறழ நோக்கி", சீவக. 1569 : 1 - 2
அணிகலம்	ஆபரணம்	"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்", குறள். 575: 1
அணிகலன்	அணிகலம்	"புண்ணியம் உடைய இப்பொன் அணிகலன் என", பெருங். 2: 5: 158

ஆபரணம் அணிதல்	அணிகலன்களை அணிதல்	"ஏறுகொடுஞ் சூலக் கையர் தாமே யென் பாபரண மணிந்தார் தாமே", தேவா. திருநா. 6: 36 : 5 - 6
ஆபரண வருக்கம் தாங்குதல்	பல அணிகள் அணிந்திருத்தல்	"மாறு இலாத மணித்திரு ஆபரண வருக்கம் பல தாங்கி ஈறுஇல் விதத்துப் பரிவட்டம் ஊழின்", திருத். 3195: 3 - 5
இழை	ஆபரணம்	"வண்டே இழை யே வள்ளி பூவே", தொல். 1041; "வால் இழை மகளிர்த் தழீஇய சென்ற", குறுந். 45: 2; "விழுமிழை நல்லார் வெருள் பிணைபோல் நோக்கம் கெழுமிய நாணை மறைக்கும்", பழ. நா. 335 : 1 - 2; "ஈகையரிய இழையணி", புறம். 127: 5; "இழைகளும் குழைகளும் இன்ன, முன்னமே மழை பொரு கண்இணை மடந்தைமாரொடும்", கம்ப. 513: 1 - 2; "மாலையும் இழையும் சாந்தும் சுண்ணமும் வாச நெய்யும் .... காசும் நுண்துகிலும் வீசி", கம்ப. 702 : 1 - 4
அணியிழை	அழகிய நகை/ நகை அணிந்த மகளிர்	"பிணிக்கு மருந்து பிறன்மன் அணியிழை தன்னோய்க் குத்தானே மருந்து", குறள். 1102; "வண்டார்பூந் தொங்கல் மகன் தந்தை வண்தாராய் யாப்பார் பூங்கோதை யணியிழையை நன்கியையக் காப்பார் கருதுமிடத்து", சிறுபஞ்ச. 54 : 2 - 4; "காடெ லாம் கார்செய்து முல்லை அரும்(பு) ஈன ஆறெலாம் நுண்ணறல் வார அணியிழாய்!", திணை. ஐம். 29 : 2 - 3; "மணிமேகலையொடு மாமலர் கொய்ய அணி யிழை நல்லா யானும் போவலென்", மணி. 3 : 83; "தவாக்களி மூதூர்ச் சென்று பிறப்பெய்துதி அணி யிழை நினக்கோர் அருந்துயர் வருநாள்", மணி. 9 : 53 - 54; "அணியிழை மகளிரும் யானையும் வணக் கும்", பெருங். 1 : 35 : 100; "காசி யரசன் காதலி மற்றவள் ஆசின்று பயந்த வணியிழைக் குறுமகள்", பெருங். 3 : 6 : 173 - 174; "மாண்ட சூழ்ச்சி மனத்தே மறுகி ஆசி லணியிழை தீயயல் வைத்த", பெருங். 3 : 7 : 88 - 89; "சிலத மாக்களொடு சிவிகை வருகென அலர்ததை யைம்பாலணியிழை யேறிப் போந்தன ளாகிப் பூந்தண் கானத்துள்", பெருங். 3 : 13 : 11 - 13
ஆய் பொன் அவிரிழை	சிறந்த பொன்னாலாய விளங்கும் அணி	"ஆய்பொன் அவிரிழை தூக்கி யன்ன", அகம். 364: 4
நாவலொடு பெயரிய பொலம் புனை அவிரிழை	சாம்பூநதமென்னும் நாவலோடு அடுத்துப் பெயர் பெற்ற பொன்னால் நிருமித்து விளங்குகின்ற பூண்	"நாவலொடு பெயரிய பொலம் புனை அவி ரிழை சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனி", திருமுருகு. 18 - 19
மின்னொளிர் அவிரிழை	மின்னல் போல ஒளிவிடுகின்ற அணி	"மின்னொளிர் அவிரிழை நன்னகர் விளங்க", நற். 221 : 9
ஆயிழை	ஆய்ந்த அணிகள்/ அணிந்த பெண்	"கவிரிதழன்ன காண்பின் செவ்வாய் அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை"; அகம். 3 : 15 - 16; "வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல் அதற்கன்னள் நீங்கும் இடத்து", குறள். 1124; "அங்கோட் டகலல்குல் ஆயிழை நம்மோடு செங்கோடு பாய்துமே என்றாள் மன்", நாலடி. 372 : 1 - 2; "குருந்தலை வான்படலைசூடிச் சுரும்பார்ப்ப ஆயன் புகுதரும் போழ்தினான் ஆயி ழாய்!", ஐந். எழு. 26: 1 - 2; "அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்கும் கரும்பொத்துக் காஞ்சிரங் காயு மொத்தேனே", திருமந். 180: 3 - 4; "அருந்தவ னருள வாயிழை வணங்கித் திருந்திய பாத்திரஞ் செங்கையி னேந்திக்", மணி. 28: 163- 164; "உழையார்கர வாவுமை

		யாள்கணவா விழவாரும் வெணாவலின் மேவியவெம் அழகாவெனு மாயிழை யாளவளே", தேவா. திருஞா. 2: 23: 1: 2 - 4; "அயில்வே னெடுங்கணோ ராயிழை யணுகி அருளு மெம்மிறை யெழுபுவி யளித்தற்கு", பெருங். 5 : 1 : 77 - 78; "துடித்து ஆயிழை கண்ணினீர் முலைபாய", சீவக. 760: 2 - 3; "ஆசு இல் சுனை வால் அருவி, ஆய்இழையர் ஐம்பால் வாச மணம் நாறல் இல", கம்ப. 4224: 1 - 3; "அப்பு உருக்கொண்ட வாள் நெடுங்கண் ஆயிழை துப்பு உருக்குமுதவாய் அமுதம் துய்த்தயான்?", கம்ப. 4238 : 5 - 8; "ஐயனுக்கு அழகிது ஆம் என்று ஆய்இழை மகளிர் போற்றச் சைவ மெய்த் திருவின் கோலம் தழைப்ப வீதியினைச் சார்ந்தார்", திருத். 331 : 5 - 8
இலங்கிழை	விளங்குகின்ற இழை கள்/ அணிந்த பெண்	"இலங்கிழாய் இன்று மறப்பினென் தோள்மேல் கலங் கழியும் காரிகை நீத்து", குறள். 1262; "உள்ளுரவரால் உணர்ந்தா முதலெனினும் எள்ளாமை வேண்டும் இலங்கிழாய்!", பழ. 202: 1 - 2; "எருத்திற வுதைத்தனை யிலங்கிழையொர் பாகம் பொருத்துதல் கருத்தினை புறம்பயமமர்ந்தோய்", தேவா. திருஞா. 2 : 30 : 2 : 3 - 4; "எரிகின்ற இளஞாயி றன்ன மேனி யிலங்கிழையோர் பாலுண்டோ வெள்ளேறுண்டோ", தேவா. திருநா. 6 : 97 : 2: 1 - 2; "ஏப்பெறு துயரமொ டிலங்கிழை யிறைஞ்சிப்", பெருங். 1 : 34 : 243; "இற்ற விரும்பிடிப் பக்க நீங்கி இடுக்கணெய்தி யிலங்கிழை மாதர்", பெருங். 1 : 54 : 121 - 122; "கலங்க லோம்பிக் காஞ்சன மாலாய் இலங்கிழை மாதரை யென்வழிப் படாதோர்", பெருங். 1 : 56 : 35 - 36; "புல்லென வையத் திலங்கிழை மாதரேற்ற வேறிப் பொலந்தொடி மகளிர்", பெருங். 3 : 6 : 129 - 131; "அருள் உடை மாதவர் அத்திசை முன்னி இருள்இடை மின்னின் இலங்கிழை சென்றாள்", சீவக. 338 : 3 - 4
எல்லிழை	ஒளியையுடைய பூண் கள்/ அணிந்த மகளிர்	"எல்லிழாய் சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன் சிதைந்தாங்கே", கலித். 81 : 16
ஏந்திழை	உயர்ந்த அணிகலன் கள்/ அணிந்த மகளிர்	"ஈங்கிவன் காதலன் ஆதலின் ஏந்திழை ஈங்கொழிந் தனளென இகலெரி பொத்தி", மணி. 20: 77-78; "என் துணைக் குல மங்கை ஓர் ஏந்திழை தன் துயர்க்குத் தகவு இலென் ஆயினேன்", கம்ப. 3556 : 3 - 6; "இந்நிலை கண்ட அன்னை, ஏந்து இழை ஆயத்தோடு, மின்நிலை வில் லினானை வழி எதிர் விலக்கி நின்றான்", கம்ப. 4352: 5 - 8; "துளங்கு ஒளி விறற்கு எதிர், உதிக்கும் சூரியன் இளங்கதிர் ஒக்கினும் ஒக்கும் ஏந்திழாய்!", கம்ப. 5267: 3 - 4; "என் அவற்கு உரைப்பது? என்ன, ஏந்திழை யாளை விட்டுத் தன் உயிர் பெறுதல் நன்றோ?", கம்ப. 6984 : 1 - 2
ஒள்ளிழை	ஒளி பொருந்திய அணிகலன்கள்/ அணிந்த மகளிர்	"கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே ஒள்ளிழை யுயர்மணல் வீழ்ந்தென வெள்ளாங் குருகை வினவு வோளே", ஐங். 122; "ஏற்றுக வுலையே யாக்குக சோறே கள்ளுங் குறைபட லோம்புக வொள்ளிழைப் பாடுவல் விறலியர் கோதையும் புனைக", புறம். 172 : 1 - 3; "நொடைநவி னெடுங்கடை யடைத்து மடமத ரொள் ளிழை மகளிர் பள்ளி யயர", மது. 622 - 623; "தெண் கடல்சேர்ப்பன் பிரியப்புலம்பு அடைந்து ஒள்தடங்கண் துஞ்சற்க ஒள்ளிழாய்!", ஐந். ஐம். 41: 1 - 2; "ஒள்ளிதழ்த் தாமரைப் போதுறழும் ஊரனை உள்ளம் கொண்டு உள்ளானென்று யார்க்குரைக்கோ

		ஒள்ளிழாய் அச்சுப் பணிமொழி உண்டேனோமேனாள்", ஐந். எழு. 48: 1 - 3; "கள்வர் திரிதருஉம் கானம் கடந்தவர் உள்ளம் பிரிந்தமை நீ அறிதி ஒள்ளிழாய்! தொல்லை விடரகம் நீந்திப் பெயர்ந்தவர்", கைந். 22 : 1 - 3; "ஒள் ளிழை மாதரொழுக்கஞ் செய்கெனக்", பெருங். 1 : 34 : 238; "பிறண்முகமிதுவெனப் பெண்மையின் மயங்கிக் கள்ளினுட் டோன்றுமிவ் வொள்ளிழை மாதரைப்", பெருங். 1 : 40 : 163 - 164; "வார லோவென வாய்திறந்து மிழற்றி ஓராது புலக்குமோ ரொள்ளிழை காண்மின்", பெருங். 1 : 40 : 204 - 205; "உவந்த வொள்ளிழை யுள்ள நோக்கி நிகழ்ந்த திற்றென நெருப்பு நுனையுறீ இச்", பெருங். 1 : 47: 236 - 237; "திருமுக மருங்கிற் செரு மீக்கூரி ஒள்ளிழை மகளிருள்ளாய் கவற்றும்", பெருங். 1 : 55 : 5 - 6; "மாம் பொழிற் சோலை மகிழ்ந்துடன் ஆடும் ஒள்ளிழை மகளிர்க் கொளிர் மதியன்ன", பெருங். 2 : 12 : 106 - 107; "ஏதமில் காட்சியோர் மாதவர் உறையும் பள்ளிகுறுகி ஒள்ளிழை மகளிரோடு வான் பொற் கோதை வாசவ தத்தை", பெருங். 2 : 15 : 41 - 43; "வள்ளி தழ் நறுந்தார் வத்தவ மன்னனும் உள்ளம் புரிந்தனன் ஒள்ளிழை ஒழியக் கழிகாட் காலை", பெருங். 2 : 17 : 51 - 53; "உள்ளியது முடித்த யூகியுஞ் செவிலியும் ஒள்ளிழை மாதரோ டொளித்த பின்னர்", பெருங். 2 : 18 : 1 - 2; "உள்ளங் கொள்ளா வுவகையளாகி ஒள் ளிழை தோழியொ டுதயணற் பேணிக்", பெருங். 3 : 14 : 293 - 294; "ஐயைந் திரட்டி யவன வையமும் ஒள்ளிழைத் தோழிய ரோராயிரவரும்", பெருங். 4 : 10: 41 - 42; "நெருங்கிய பல்சனம் விரும்புபு நோக்க ஒள்ளிழை மாதரைப் பள்ளியு ணின்று", பெருங். 4 : 16: 1 - 2; "வள்ளி மருங்கி னொள்ளிழை யேழையைக் கச்சார் வனமுலை விச்சாதரியே", பெருங். 5 : 9 : 54 - 55; "வெள்ளிவெண் மலைக்கு வேந்தன் ஒருமகள் வேற்கட் பாவை ஒள்ளிழை யவளைக் கேட்பான் உறுவலி செல்லும் ஆங்கண்", சீவக. 1696 : 1 - 2; "வள்ளலார் மணம் அவ் ஊர் மருங்கு அணையாமுன் மலர்க்கண் ஒள்ளிழைப் பயந்தார் தம் திருமனையில் ஒருவழியே", திருத். 889: 1 - 4
ஒள் இழையாள்	ஒளி பொருந்திய ஆபரணங்களை அணிந்த பெண்	"உடையானை உடையானே தகுமோ இந்த ஒள்இழை யாள் உள்மெலிவு என்று எடுத்துப்பாட", திருத். 2385 : 7 - 8
குழைமாண் ஒள்ளிழை	குழை முதலாகிய ஒளி பொருந்திய அணிகள்/ அணிந்த மகளிர்	"குழைமாண் ஒள்ளிழை நீ வெய்யோளொடு வேழ வெண்புணை தழீஇப் பூழியர்", அகம். 6 : 7 - 8
ஒளியிழை	ஒளி வீசும் அணிகள்/ அணிந்த மகளிர்	"ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப நீடுக மன்னோ இரா", குறள். 1329; "குளிரும் பருவத்தே யாயினும் தென்றல் வளியெறியின் மெய்யிற்கு இனிதாம் ஒளியி ழாய் ஊடியிருப்பினும் ஊரன் நறுமேனி", ஐந். ஐம். 30 : 1 - 3; "ஒருங்குடன் தன்னைமார் தந்த கொழுமீன் உணங் கல்புள் ஓப்பும் ஒளியிழை மாதர் அணங்காகும் ஆற்ற எமக்கு", ஐந். ஐம். 47: 2 - 4; "அழிதக வுள்ளமோ டரற்றின னாகி ஒளியிழை மாதர்க் குற்றதை யுரைப்போன் புதுக் கோள் யானைமுன் போற்றாது சென்று", மணி. 12 : 43 - 45
கிளரிழை	விளங்கிய கலன்கள்/ அணிந்த மகளிர்	"எல்லி வந்த நல்லிசை விருந்திற்குக் கிளரிழை அரிவை நெய்துழந் தட்ட", நற். 41 : 6 - 7; "கிளரிழை கற்குங் கேள்விப் பொழுதெனத்", பெருங். 1 : 36 : 134

சுடரிழை	ஒளி வீசுகின்ற அணிகள்	"பாணர் முல்லை பாடச் சுடரிழை வாணுத லரிவை முல்லை மலைய", ஐங். 408 : 1 - 2
சேயிழை	செவ்விய அணிகலன் கள்/ அணிந்த மகளிர்	"ஊசன் மேவற் சேயிழை மகளிர்", பதி. 43 : 2; "அறிதோ றறியாமை கண்டற்றால் காமம் செறி தோறும் சேயிழை மாட்டு", குறள். 1110; "பூசற்கிளவி சேயிழை பயிற்ற", பெருங். 1 : 35 : 155; "ஆய்புகழண் ணலை யறிந்தன ளாகிச் சேயிழைக் கூன்மகள் சென் றனள் விரைந்தென்", பெருங். 3 : 6 : 199 - 200; "சேயி ழைக் கூன்மகள் செவ்வனங் கூறிப் போகிய பொழுதி னாகிய சூழ்ச்சி", பெருங். 3 : 7 : 1 - 2; "ஆய கேண்மைய னந்தண னென்பது சேயிழை மாதர் தேறல ளாகி ஒன்று புரி யுள்ளமொ டொன்றா ளாதலின்", பெருங். 3 : 22 : 12 - 14; "நினைப்பி னெகிழ்ந்து நீர்கொள விறைஞ்சிச் சினப்போ ரண்ணல் சேயிழை மாதர்க்கு", பெருங். 4 : 5 : 27 - 28; "பெருமலை யுலகம் பேணும வாவொடு பறத்த லூற்றம் பிறப்பப் பைம்பூட் சிறப்பொடு புணர்ந்த சேயிழை மாதர் குடர்வயிற் கிடந்த குழவிய துள்ளத்", பெருங். 5 : 1 : 174 - 177; "ஒன்றுரைத்த ஒன்றுன்னி ஒன்று செய்து ஒன்றின்கண் சென்ற மனத்தினளாம் சேயிழை யாள்", 11ஆம் திரு. 300. 81; "தூயபேர் உலகம் மூன்றும் தூவிய மலரின் சூழ்ந்த சேயிழை பாகத்து, எண்தோள் ஒருவனை வணக்கம் செய்தான்", கம்ப. 8753: 3 - 4; "சென்றவர் முனியைக் காணார் சேயிழை தன்னைக் கண்டார் பொன் திகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேல் பொலிந்தது என்னத்", திருத். 434 : 1 - 4; "சிந்தை நிறை மகிழ்ச்சியுடன் சேயிழையாருடன் அமர்ந்தார் கந்தம் மலிமலர்ச் சோலை நாவலர்தம் காவ லனார்", திருத். 3298: 3 - 4
திருந்திழை	திருந்திய அணிகள்/ அணிந்த மகளிர்	"நல்கா மையினைவரச் சாஅய் அருந்துய ருழக்குநின் திருந்திழை யரிவை", புறம். 146 : 6 - 7; "திருந்தி ழாய் காதலர் தீர்குவர் அல்லர் குருந்தின் குவியிணர் உள்ளுறையாகத்", கார் நாற். 15 : 1 - 2; "பிரிந்தவர் மேனிபோல் புல்லென்ற வள்ளி பொருந்தினர் மேனிபோல் பொற்பத் திருந்திழாய்! வானம் பொழியவும் வாரார் கொல் இன்னாத", ஐந். ஐம். 8 : 1 - 3; "விருந்தின்றி யுண்ட பகலுந் திருந்திழையார் புல்லப்புடை பெயராக் கங்கு லும் இல்லார்க் கொன்று", திரிகடு. 44: 1-2; "கரந்து நலங் கவர்ந்த காவலன் வடிவெனத் திருந்திழை மாதர் திண்ணிதி னோக்கி", பெருங். 3 : 22 : 160 - 161; "பெருந் தகைக் குரிசில் கொண்டு பெருவலம் சுடரவீக்கித் திருந்திழை மகளிர் வெஃகும் தேவிளங்குமரன் ஒத்தான்", சீவக. 698 : 3 - 4; "தரும் தகை அமைந்தும் அத்தன்மை செய்திலேன் திருந்திழை திறத்தினால் தெளிந்த சிந்தை நீ", கம்ப. 4399 : 3 - 6; "இருந்து பல நாள் கழியும் எல்லையினில், நல்லோய்! திருந்திழையை நாடி வரு தேவர் இறை சீறி", கம்ப. 4581 : 1 - 4
திருவிழை	சிறந்த அணிகலன்	"திருவிழை தெரியாள் திப்பம் கூற", பெருங். 3: 22: 139
தெரியிழை	ஆராய்ந்து தேர்ந்த ஆபரணம் அணிந்த மகளிர்	"நறும்பலொலி வருங் கதுப்பிற் றேமொழித் தெரியிழை மகளிர் பாணி பார்க்கும் பெருவரை யன்ன மார்பிற்", புறம். 209: 16 - 18; "ஒன்றின னாயிற் பொன்றுஞ் சின் முலைத் தெரியிழை மாத ருரிமையி னோடாள் அன்ன தாத லொருதலை யதனாற்", பெருங். 3 : 17 : 99 - 101
நீல் இருள் இழை	நீலநிறமுடைய அணி	"அருள்விழைவார் அஃதே முழுஎவ்வம் பாய்நீல் இருள் இழையார் வீழ்வார் மேல் பால் ஆக்கார் ஆம் ஆறு அருள் அருள் இழையார் தாமும் அது", இன்னி. 2 : 2 - 4

நுண்ணங்கிழை	நுண்ணிய தொழிலை உடைய ஆபரணங்கள்/ அணிந்த மகளிர்	"மணங்கமழ் பொழிற்குறி நல்கின ஞுணங்கிழைப்.... அங்கலிழ் மேனி யசைஇய வெமக்கே", ஐங். 174 : 2 - 4
நேரிழை	நேரிய அணிகள்/ அணிந்த மகளிர்	"தீம் பெரும் பொய்கைத் துறைகேழ் ஊரன் தேர்தர வந்த நேரிழை மகளிர்", அகம். 336 : 10 - 11; "நிரை வளை முன்கை நேரிழை மகளிர்", குறு. 335 - 1; "மாலாங்க னேயிங்கு யான் வந்த காரணம் நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு", திருமந். 77 : 1 - 2; "அலவஞ்சே ரணைவாரிக் கொணர்ந் தெறியு மகன் றுறைவாய் நிலவஞ்சேர் நுண்ணிடைய நேரிழையாள் அவளோடும்", தேவா. திருஞா. 3 : 66 : 4 : 2 - 3; "மாதன நேரிழை யேர்தடங்கண் மலையான் மகள்பாடத்", தேவா. திருஞா. 3 : 101 : 4 : 1 - 2; "ஆராய் கென்பது நேரிழைக் குரையென", பெருங். 1 : 36 : 367; "நுங்கட் காகென நுனித்தவை கூறி நேரிழை மகளிரை நீராட் டயரும்", பெருங். 1 : 41 : 104 - 105; "இருள்வயின் வந்த இன்னுயிர்க் காதலன் மார்பக மணந்த நேரிழை மடந் தையர்", பெருங். 1 : 49 : 93 - 94; "பேருடை மாதருளண் மற்றென்பது நேரிழை யரிவை நின்வாய்க் கேட்ட னென்", பெருங். 3 : 9 : 176 - 177; "நீரிற் கொண்டு நேரிழை மாதரைச் சீரிற் கூட்டுஞ் சிறப்பு முந்துறீஇ", பெருங். 4 : 15 : 92 - 93; "நெடுங்கனும் தோளும்போலும் நேரிழை அரிவை நீநின் தடங்கண்ணி தனிமை தீரத் தந்தையும் தாயும் ஆகி", சீவக. 556 : 1 - 2; "நீண்ட விழி நேரிழைதன் மின்னின் நிறம் எல்லாம் பூண்டது ஒளிர் பொன் அனைய பொம்மல் நிறம்", கம்ப. 5295 : 1 - 2; "சினத்தொடும் கொற்றம் முற்றி, இந்திரன் செல்வம் மேவி, நினைத்தது முடித்து நின்றேன் நேரிழை ஒருத்தி நீரால் எனக்கு நீ செய்யத்தக்க கடன் எலாம்", கம்ப. 9224: 1-3; "நின்றவர் அங்கு எதிர்வந்து நேர் இழையார் தம்மருங்கு சென்று அணைந்து தம் பெருமான் திரு அருளின் திறம் கூற", திருத். 3415 : 1 - 2
பாசிழை	புதிய அணி/ அணிந்த மகளிர்	"ஆயத் திடையோள் பாசிழைப் பாவை", பெருங். 1: 32: 25; "பாசிழைச் செவிலியும் பயந்த தாயும் நங்கை தவ்வையும் வந்தொருங் கீண்டிப்", பெருங். 3 : 8 : 9 - 10; "ஆயிரத் தெண்மர் பாங்கிய ரன்னோர் பாசிழைத் தோழியர் பாடகஞ் சுடரத் தண்பெரும் பந்தருட் கண் பிணி கொள்ள", பெருங். 3: 22: 259 - 261; "பணை முலை மகளிரைப் பாசிழை யாயத்து வாசவதத்தையைப் பயந்தினி தெடுத்த வயங்கிழைப் பணைத்தோட்", பெருங். 4 : 11 : 39 - 41; "பட்டதென் நங்கைக் கென்னப் பாசிழைப் பசும்பொன்", சீவக. 904: 1; "ஏசு அறு தவன் உறை இடம் இது என்றுழி, பாசிழை மடந்தையர் பன்னசாலை செய்து", கம்ப. 218 : 2 - 3; "பாசிழை அரம் பையர் பழிப்பு இல்அகல் அல்குல் தூசு", கம்ப. 4219 : 1 - 3; "பாசிழை மடந்தையர் பகட்டு வெம்முலை பூசிய சந்தனம், புழுகு, குங்குமம் மூசின முயங்கு சேறு உலர", கம்ப. 4257 : 1 - 3; "வெற்றிப் பாசிழை மகளிர் ஆடை அந்தணர் பறித்துச் சுற்ற வாசம், மென் கலவைச் சாந்து", கம்ப. 10302 : 2 - 3
புனையிழை	தொழிலிற் சிறந்த அணிகள்/ அணிந்த மகளிர்	"நன்னாப் புரையுஞ் சீறடிப் பொம்மல் ஓதிப் புனை யிழை குணனே", நற். 252 : 11 - 12; "புனையிழை நெகிழ விம்மி நொந்துநொந்துஇனைதல் ஆன்றிசின் ஆயிழை நினையின்", நற். 286 : 5 - 6; "ஒல்லென் ஒலி புனல் ஊரன் வியன் மார்பம் புல்லேன் யான் என்பேன் புனையிழையாய்

		புல்லேன் எனக்கே குறிப்பும் உடை யனோ ஊரன்", ஐந். ஐம். 29: 1 - 3; "பூமென் சேக்கையுட் புனையிழைப் புகீஇ", பெருங். 1 : 36 : 128; "வாயிலாள ரொடு வத்தவன் வழிபடப் போயினன் மாதோ புனை யிழை நகர்க்கென்", பெருங். 5 : 5 : 46 - 47; "நினையல் நீ நம்பி என்று நெடுங் கண்ணீர் துடைத்து நீவிப் புனை இழை மகளிர் போலப் புலம்பல் நின் பகைவன் நின் றான்", சீவக. 391 : 2 - 3
பொன்னிழை	பொன்னணிகலன்/ அணிந்த மகளிர்	"தமர்வழங்கு படையு மவர் வழங்கு வாளியும் பொன் னிழை மாதரொடு தன்வயிற் காத்து", பெருங். 1 : 56 : 268 - 269; "அன்னனாக வென்னயந் தோனெனப் பொன்னிழை மாதர் தன்மனத் திழைப்பத்", பெருங். 3: 6 : 121 - 122; "அன்னதாயி னாமெனிற் காண்கம் பொன்னிழை மாதர் தாவெனக் கொண்டு திண்ணிய வாகத் திவவுநிலை", பெருங். 3 : 14 : 216 - 218; "கழிந் தவும் பிறவுங் கட்டுரை மொழிந்து பொன்னிழை மாத ரொடின் மகிழ்வெய்திப்", பெருங். 4 : 2 : 93 - 94; "நிகழ்ந் ததை யெல்லா நெறிமையிற் கேட்டுப் பொன்னிழை மாதரைப் புணர்த்தல் வேண்டும்", பெருங். 4 : 4 : 79 - 80; "நன்னகர் குறுகலி னயந்துமுக நோக்கிப் பொன் னிழை யிந்நகர் புகுந்து மோவென வேண்டா வென்ற பின் மீண்டுமேக் கோங்கி", பெருங். 5 : 4 : 100 - 102; "பொன்னிழை மகளிர் ஒவ்வாதவரை முன் புணர்தல் செல்லார்", சீவக. 483 : 3
மாணிழை	மாட்சிமைப்பட்ட அணிகலன்/ அணிந்த மகளிர்	"மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும் பார்ப் பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும் வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென", புறம். 34 : 2 - 4; "மாணிழை மகளிர் புலர்ந்தனர் பரிந்த பருஉக்காழாரஞ் சொரிந்த முத்தமொடு", மது. 680 - 681; "காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும் மாணிழை கண்ணொவ் வேம் என்று", குறள். 1114; "கூனிவண்டு அன்ன குளிர் வயல் நல்லூரன் மாணிழை நல்லார் இளநலம் உண்ட வர் மேனி ஒழியவிடும்", திணை. ஐம். 35 : 2 - 4; "மையார உண்டகண் மாணிழாய்!", பழ. நானூ 56 : 2 - 3; "போது றழ் தாமரைக் கண் ஊரனை நேர்நோக்கி வாய்மூடி யிட்டும் இருப்ப ஏர் மாணிழாய்! நோவதென் மார் பறியும் இன்று", ஐந். எழு. 51 : 2 - 4; "கோசலத் தரசன் கோமகட் பூவணி வாசச் சுரிகுழன் மாணிழை ஒருத்தி யென் றாங்கொரு காரணத்தவள்", பெருங். 4 : 12 : 165 - 167
மின்னிழை	ஒளி பொருந்திய அணிகலன்கள்/ அணிந்த மகளிர்	"மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்", தொல். 1118: 3; "மின்னிழை விறலியர் நின்மறம் பாட", பதிற். 54: 6; "போற்றாமாக்க டுற்றும் பெரும்பழி மேற் கொண் டனனான் மின்னிழை பொருட்டென்", பெருங். 1 : 35 : 250 - 251
முற்றிழை	மெய்முழுதும் அணி யும் அணிகலன்கள்/ அணிந்த மகளிர்	"பொற்றொடிப் புதல்வ ரோடியாடவு முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்", பட். 295 - 296; "முற்றிழை மகளிர்க்கு முதுகணாமெனச்", பெருங். 1 : 36 : 198; "முகிழ் நகை முகத்தனாகி முற்றிழை", பெருங். 1 : 40: 171; "உடைவயிற் பிரியா துறைநரு முளரோ இற்றுங் கேண்மதி முற்றிழை மகளிர்", பெருங். 1: 47: 252 - 253; "முற்றிழை அரிவை செற்றங் கொண்டனள் மற்றிவள் வைத்த மாலையுஞ் சாந்தமும்", பெருங். 3: 10: 5 - 6; "பொற்றொடிப் பணைத்தோண் முற்றிழை மாதரை

		இற்பெருங் கிழமையொடு கற்புக் கடம் பூட்ட வரையும்", பெருங். 3: 21: 6 - 8; "நகை நயக் குறிப்பொடு தகைவிரல் கூப்ப முற்றிழை பயிற்றிய முற்பெரு நல்லி யாழ்", பெருங். 4: 5: 18 - 19; "சுற்றமும் பெயருஞ் சொல்லுமி னீரென முற்றிழை மாதரை முறைமுறை வின வலின்", பெருங். 4: 13: 12 - 13; "நான் மறையாளர் நன் மணங்காட்டத் தீவலஞ் செய்து கூடிய பின்றை முற் றிழை மகளிர் மூவரும் வழிபடக்", பெருங். 4 : 14 : 180 - 182; "மங்கல கீதம்பாட மழைநிகர் தூரியும் முழங் கச் செங்கயல் கண் முற்று இழையார் தெற்றிதொறும் நடம்பயில", திருத். 268 : 1 - 4
வயங்கிழை	ஒளிவீசும் இழை/ அணிந்த மகளிர்	"உயங்குநாய் நாவினல்லெழி லசைஇ வயங்கிழை யுலறிய வடியினடி தொடர்ந்தீர்ந்து நிலந்தோயு மிரும் பிடித் தடக்கை", சிறுபாண். 17 - 19; "வருவர் வயங்கிழாய் வாள் ஒண்கண் நீர் கொண்டு உருகி உடன்றழிய வேண்டா தெரிதியேல்", ஐந். ஐம். 9 : 1 - 2; "கவரி மடமா கதூஉம் படர்சாரல் கானக நாட! மறவல் வயங்கிழைக்கு யானிடை நின்ற புணை", ஐந். எழு. 1: 2-4; "செல்வம் தரல் வேண்டிச் சென்ற நம் காதலர் வல்லே வருதல் தெளிந்தாம் வயங்கிழாய் முல்லை இலங்கெயிறு", கார். நாற். 14 : 1 - 3; "தற்றமும் பிறவு மொற்றுவனனோக்கி வள்ளி மருங்கின் வயங்கிழைத் தழீஇ", பெருங். 1 : 47 : 118 - 119; "நலத்தொடு புணர்ந்த விலக்கண நெடுங் கண் வயப்படலுற்று வயங்கிழை மாதர்", பெருங். 3: 6: 53 - 54; "இயைந்த வேற்கணிராசனை யென்னும் வயங்கிழை மாதரொடு வதுவை கூட்டிப்", பெருங். 4 : 9 : 17 - 18; "தொடித் தோள் வேந்தன் முன்றுட்கென்று இறைஞ்சினள் வடிக்கே முண்கண் வயங்கிழை குறுகி", பெருங். 4 : 10 : 59 - 60; "மன்னிய அன்பின் வளநகர் மாந்தர் வயங்கிழையார்", திருத். 1409 : 1
வாலிழை	தூய ஆபரணங்கள்/ அணிந்த மகளிர்	"வாலிழை நெகிழ்த்தோர் வாரார்", குறு. 188 : 3; "புதல் வற் பயந்த திதலையவ் வயிற்று வாலிழை மகளிர் நால்வர் கூடிக்", அகம். 86 : 11 - 12; "வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர் சாலும் அவைப்படிற் கல் லாதன் பாடிலன்", நான்மணி. 99 : 1 - 2; "அவணை போத லஞ்சி வேய்த்தோள் வாளரித் தடங்கண் வாலிழை மாதர்", பெருங். 1 : 48 : 134 - 135; "மணங்கமழ் நறுந்தார் மன்ன குமரன் வயந்தகற் குரைக்கும் வாலிழை வருந் தினள்", பெருங். 1 : 53 : 169 - 170; "வாலிழை மகளிர் வழிவழி விலக்கவும்", பெருங். 2 : 7 : 39
விளங்கிழை	விளக்கமான அணி கலன்கள்/ அணிந்த மகளிர்	"விலங்கல் விளங்கிழாய்! செல்வாரோ அல்லர் அழற் பட்டு அசைந்த பிடியை எழில்களிறு", ஐந். ஐம். 32: 1 - 2; "வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய்! தோன்றார் பொறுக்க என்றால் பொறுக்க லாமோ - ஒறுப்பபோல் பொன்னுள் உறுபவளம் போன்ற புணர் முருக்கம்", திணை. நூற். 67 : 1 - 3; "வேட்பவன் பார்ப்பான் விளங் கிழைக்குக் கற்புடைமை கேட்பவன் கேடில் பெரும் புலவன் பாட்டவன்", சிறுபஞ்ச. 33 : 1 - 2; "விஞ்சையில் தோன்றிய விளங்கிழை மடவாள் வஞ்சஞ் செய்தனள் கொல்லோ அறியேன்", மணி. 8 : 25 - 26; "தளர்ந்துட னெரிதர வடர்த்த தன்மையன் விளங்கிழை யொடும் புகும் விசய மங்கையே", தேவா. திருஞா. 3 : 17 : 8 : 3 - 4; "கலத்திற் றந்த நலத்தகு விழுச்சீர் வேறுபடு திருவினுள்

		விளங்கிழை மகளிரை", பெருங். 1 : 40 : 346 - 347; "வைவாள் போலும் வகையிற்றாகி வெள்வேல் விடலை யொடு விளங்கிழை மாதர்க்குச்", பெருங். 3: 7: 106-107; "செவ்வியறிந்து பையெனக் குறுகி வேறுபடு வனப்பின் விளங்கிழை வையம்", பெருங். 3: 8: 20 - 21; "மனத்தகத்துள்ளோளின்னும் விள்ளாள் விழுத்தவ முடையள் விளங்கிழை பெரிதென ஒழுக்க மதுவா முயர்ந்தோர் மாட்டோ என்றுதன் மனத்தே நின்று சில நினையா", பெருங். 4: 5: 33 - 35; "இன்னுயிர் நீத்த விளங்கிழை மடவோய்", பெருங். 4: 7: 59; "விரிசிகை யென்னும் விளங்கிழைக் குறுமகள் அறிவ தறியாப் பருவ நீங்கிச்", பெருங். 4 : 15 : 10 - 11; "வீரவேந்தன் விளங்கிழைக் குறுமகள் வார் வளைப் பணைத் தோள்வாசவ தத்தையை", பெருங். 5 : 3 : 124 - 125; "வெண்தலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமியள் ஆனாள்", சீவக. 303 : 4; "எத்திறத்தும் இறக்கும் இந் நாடு எனா, மெய்த்திறத்து விளங்கிழை உன்னுவாள்", கம்ப. 1631 : 3 - 4; "என்று, என்று, உயிர் விம்மி, இருந்து அழிவாள், மின் துன்னும் மருங்குல் விளங்கு இழை யாள்", கம்ப. 5237 : 1 - 2; "வில்புரை நுதலின் வேல்கண் விளங்கு இழையவரைக் கண்டார்", திருத். 285: 7 - 8
தமனியம் வளை இய தாவுஇல் விளங்கிழை	நடுவே அழுத்தப்பட்டு உள்ள மணிகளைக் கொண்ட பொன்னால் சூழப்பட்ட விளங்கும் பேரணிகலன்	"தமனியம் வளைஇய தாவுஇல் விளங்கு இழை நிலம் விளக்குறுப்ப மேதகப் பொலிந்து", மது. 704 - 705
விறலிழை	சிறந்த அணிகலன் கள்/ அணிந்த மகளிர்	"உறல்யாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள் விற லிழை யவரோடு விளையாடு வான்மன்னோ", கலித். 30: 13 - 14
இழை(யர்)	அணிகள் அணிந்தவர்	"நீணீர் முழவின் பாணியிற் பாடியும் குழையர் கோதை யர் இழையர் ஏரிணர்த் தழையர் தாரினர்", பெருங். 2 : 14: 12 - 14; "எனக்கென் றியையான்யா தொன்றும் புனக் கொன்றை போலு மிழையார் சொற்றேறாள் களியா னேல் சாலும் பிறநூலின் சார்பு", ஏலாதி. 5 : 2 - 4
ஈகை அரிய இழையணி	அணி	"பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்...... ஈகை யரிய விழையணி மகளிரொடு சாயின் றென்ப வாஅய் கோயில்", புறம். 127 : 2 - 6
அவிர் இழைக் குப்பை	ஒளிவிட்டு விளங்கும் அணிகலன்களின் குவியல்கள்	"புவி புகழ் சென்னி.......சவியுடைத் தூசும், மென் சாந்தும், மாலையும் அவிர் இழைக் குப்பையும் அளவு இலாதது", கம்ப. 4555
பொன்னின் மணி யின் புனைந்த இழைக்குலம்	பொன்னாலும் மணி யினாலும் செய்யப் பெற்ற ஆபரணங்கள்	"உன்னரும் பொன்னின் மணியினின் புனைந்த இழைக் குலம் மழைக் கருங்கடைக் கண்", கம்ப. 5157 : 3 - 4
இழை அணிதல்	அணி அணிதல்	"இன் நகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து பின்னர் வந்த வாயிற் கண்ணும்", தொல். கற்பி. 10; "பிழையுடை விதியார் செய்த பெருங்குழல், கருங்கண், செவ்வாய், இழை அணி, மகளிர் சூழ்ந்தார், அனந்த ரால் இடங்கள் தோறும்", கம்ப. 8283 : 3 - 4
வயங்கிழை அணிதல்	விளங்கிய அணி கலத்தை அணிதல்	"நீயும் வள்ளி மருங்குல் வயங்கிழை யணியக் கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச் சென்றுவாய் சிவந்து மேல் வருக", புறம். 316 : 8 - 11; "விறலியர் சீர் கெழு சிறப்பின் விளங்கு இழை அணிய", மலை. 569 - 570

இழை ஒலித்தல்	அணிகலன்கள் ஒலித்தல்	"முத்து ஒலித்து எழும் அல்குலார் இழை ஒலித்தன புள் ஒலித்தன", கம்ப. 1552 : 4 - 5
பொன்செய் புனை யிழை ஒலித்தல்	பொன்னால் செய்யப் பெற்ற அலங்கரிக்கப் பெற்ற ஆபரணம் ஒலித்தல்	"வயிரிய மாக்கள் கடும்பசி நீங்கப் பொன்செய் புனை யிழை யொலிப்பப் பெரிதுவந்து நெஞ்சு மலியு வகைய ருண்டுமலிந் தாடச்.... பொலந்தார்க் குட்டுவ", பதி. 23 : 6 - 8
பொன்னிழை சுடர்தல்	பொன் அணி ஒளி வீசுதல்	"மன்நிரை பெயர்த்து மைந்தர் வந்தனர் கொள்க வாள் கண் பொன் இழை சுடரும் மேனிப் பூங்கொடி அனைய பொற்பின் கன்னி", சீவக. 440 : 1 - 2; "திருந்துபு செறியப் பற்றிச் சென்றுதன் உரிமை காட்டப் பொருந்துபு பொற்ப ஓம்பிப் பொன்னிழை சுடர நின்ற", சீவக. 548 : 2 - 3
இலங்கிழை செறித்தல்	கலன்கள் கழலாத வாறு செறித்தல்	"ஆரிருள் வருதல் காண்பேற்கு யாங்கா கும்மே இலங் கிழை செறிப்பே", நற். 332 : 9 - 10
இழை தவழ்தல்	அணிகள் தவழுதல்	"தழை தவழ் சந்தனச் சோலையின் நோக்கி இழை தவழ் மார்பன் இனிதின் உவர்ந்தான்", சீவக. 524 : 3 - 4
அழல்புனை அவி ரிழை திருத்துதல்	அழல்போல் ஒளி வீசுகின்ற நகையைத் திருத்தல்	"அழல்புனை யவிரிழை திருத்துவாள் குறிப்பும்", பரி. 21 : 24
ஒள்ளிழை திருத்துதல்	ஒள்ளிய அணிகளை திருத்துதல்	"ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர் உள்ளுவ தெவன்கொ லறியே னென்னும்", கலித். 4 : 15 - 16
ஒள்பொன் அவிர் இழை தெழித்தல்	ஒள்ளிய பொன்னாற் செய்து விளங்கும் சிலம்பு முதலியன ஒலித்தல்	"புலர்ந்துவிரி விடிய லெய்த விரும்பிக் கண் பொரா வெறிக்கு மின்னுக்கொடி புரைய வொண்பொனவி ரிழை தெழிப்ப இயலித் திண்சுவர் நல்லில் கதவங் கரைய", மது. 664 - 667
தெரியிழை தெளிர்த்தல்	ஆராய்ந்தணியப்பட்ட அணிகலன்கள் ஒலித்தல்	"தெரியிழை தெளிர்ப்ப முயங்கிப் பிரியல மென் கமோ வெழுகமோ தெய்யோ", ஐங். 285 : 3 - 4
திருந்திழை நெகிழ்தல்	திருத்தமான அணி கள் நெகிழல்	"கடிமனை மாடத்துக் கங்குல் வீசித் திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய", அகம். 255 : 16 - 17
அழலவிர் வயங் கிழைப் பொலிதல்	விளங்கிய ஒளியை உடைய ஆபரணங் கள் சிறத்தல்	"அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி நிழலி னும் போகாநின் வெய்யோள் பயந்த", புறம். 222 : 1 - 2
இழை வளர்தல்	ஆபரணங்கள் அணிந்திருத்தல்	"குழைவளர் சோலை சூழ்ந்த குழகன்குடமூக்கிடமா இழை வளர் மங்கையோடு மிருந்தானவனெம் மிறையே", தேவா. திருஞா. 3 : 59 : 6 : 3 - 4
இழையொளி விளங்குதல்	ஆபரணங்களின் ஒளி விளங்குதல்	"கடுத்தவாள் கலை ஏந்திக் கன்னியர் காவல் ஓம்ப இடிக்குரற் சீயம் ஒப்பான் இழையொளி விளங்கப் புக்கான்", சீவக. 2709 : 3 - 4
ஆய்பொன் அவி ரிழை அழல்தா அறவிளங்குதல்	ஒள்ளிய நெருப்பிலே வலியற விளங்கிய அழகிய பொன்னாற் செய்து விளங்கும் பூண்கள் ஒளி வீசுதல்	"வொள்ளழற் றாவற விளங்கிய ஆய்பொனவி ரிழை யணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்", மது. 444 - 446
மின்னவிரொளி இழை வேய்தல்	ஒளி பொருந்திய ஆபரணங்களை அணிந்து கொள்ளுதல்	"மின்னவி ரொளியிழை வேயுமோரும்", பரி. 12-11
கலம்	அணி	"வேப்ப ஒண்பழம் ....பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்", குறுந். 67 : 2 - 4; "பெண் அவாய் ஆண் இழந்த பேடி அணி யானோ கண் அவாத்தக்க கலம்", நாலடி. 251 : 3 - 4;

		"வனப்பின் மேலும் வனப்புடைத்தாகிக் கலத்தொடு கவினிக் கண்கவர் வுறூஉம்", பெருங். 3 : 10 : 63 - 64; "கள்ளவிழ் கண்ணி கலத்தொடு அணிந்தார்", சீவக. 1476 : 4
அணிகலம்	அணிகின்ற கலம்	" கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேற் புண்ணென் றுணரப் படும்'', குறள். 575; "கையில் படையங்குச பாசத் தோடபய மெய்யில் அணிகலம் இரத்தின மாமேனி துய்ய முடியும்", திருமந். 1316: 3 - 4; "பவழமும் முத்தும் பசும்பொன் மாலையும் திகழொளி தோன்றச் சித்திரித்தியற்றிய அணிகலம் அணிவோர் அணியிலோரே'', பெருங். 4: 17: 75-77; "ஆடல் மகளிரும் ஆவண வீதிதொறும் ஓட உதிர்ந்த அணிகலம் உக் கவை நீடிருள் போழும் நிலைமைத் தொருபால்", சீவக. 2118 : 2 - 4
அருங்கலம்	விலைமிக்க அணிகலம்	"பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப் பருப் பதத்தில் அருங்கலத்தைப் பாவந்தீர்க்கும் அரு மணியை ஆரூரிலெம்மான் தன்னை", தேவா. திருநா. 6 : 29 : 1 : 5 - 7; "அருங்கலத்துதைஇப் பெருங்கல மெல்லாம் பேணி யணிந்த நாணுக் கோலத்துப்", பெருங். 1 : 46 : 257 - 258; "வருக மற்றவன் வல்விரைந் தென் றலின் ஆணை வேந்த னருங்கல நிதியம் பேணாது பிழைத்த காவலாளன்", பெருங். 1 : 47 : 38 - 40; "பொன் னியல் பாவையும் புனைமணித்தேரும் அணிகதிர் முத் தமு மருங்கல மாதியும் பணிமொழிச் செவ்வாய்க் கணிகை மகளிரொடு", பெருங். 3 : 17 : 46 - 48
அரும்பெறலணி கலம்	பெறுதற்கரிய பேரணிகலன்	"நருமதை முதலா நாடக மகளிரும் ஆன்வீற்றிருந்த வரும் பெற லணிகலம் தான் வீற்றிருத்தற்குத் தக்கன விவையென", பெருங். 4 : 10 : 72 - 74
எரிமணி வயிரம் ஆர்ந்த பொன் னவிர் கலம்	ஒளிவிடும் மணியும் வயிரமும் பொருந்திய அணிகள்	"இன்னவா றுறுதி கூறி எரிமணி வயிரம் ஆர்ந்த பொன்னவிர் கலங்களெல்லாம் பொலிவொடு புகன்று நீட்டிச் சென்மின்நீ ரென்றுகூற", சீவக. 1556: 1-3
காமர் கலம்	விருப்பூட்டும் அணி கலன்கள்	"புதுக்கச் சார்ந்த பொன் வாளும் சுரிகையும் கதுப்பின் நானமும் காமர் கலங்களும் பதிக்கண் தம்மெனப் பாவையும் ஏவினாள்", சீவக. 1712: 3 - 4
கைந்நவில் கம் மத்துக் கம்மியன் புனைந்த செய்கலம்	தொழிற்றிறமமைந்த கம்மியன் இயற்றிய அணிகலன்கள்	"கைந்நவில் கம்மத்துக் கம்மியன் புனைந்த செய்கலத் துள்ளுஞ் சிறந்தவை நோக்கி", பெருங். 2: 7 : 151 - 152
அவிரிழை நன்கலம்	நல்ல அணிகலன்	"கவிரிதழ்ச் செவ்வாய்க் காஞ்சன மாலைகை அவி ரிழை நன்கல மமைவர நீட்டி", பெருங். 1 : 56 : 67 - 68
சில்கலம்	சில அணிகள்	"சில்கலத்து இயன்ற அணியினர் அல்லது", பெருங். 1: 34: 123
தகைமேவருகலம்	அழகு பொருந்திய அணிகலன்	"தகைமேவரு கலங்களை வெறுத்த மேனியர்'', கம்ப. 2277 : 1 - 2
பாசிழை நன்கலம்	பசிய மணிகள் வைத்திழைத்த நல்ல அணிகலன்	"குறிப்புடை வெந்நோய் நெறிப்பட நாடிய பாசிழை நன் கலம் பரியமாக மாசில் பந்தறிவு படமேல் வைத்து", பெருங். 5: 8: 122 - 2
நாளணிகலம்	ஒவ்வொரு நாளுக்கும் உரிய அணிகலன்	"பெருமுது கிளவியொடு பிறவும்பயிற்றி நங்கை விழையு நாளணி கலங்கள் கொங்கணி மலரிற் கூட்டுவன ருய்த்துச்", பெருங். 3 : 12 : 85 - 87
நிதியக்கலம்	நிதியமாகிய அணிகலன்	"கொள்ளக் கூறலும் வள்ளலும் விரும்பி நிதியக் கலத்தொடு பதிபல அருளி", பெருங். 2 : 11 : 185 - 186

பல்கலம்	பலவகைப்பட்ட அணிகலன்கள்	"கொடுப்பவர் கொள்பவர் வீழ்த்த **பல்கலம்**", சீவக. 831: 3
கம்மப் பல்கலம்	அரிய தொழிற்றிறன் அமைந்த பலவாகிய அணிகலன்கள்	"**கம்மப் பல்கலம்** விம்மப் பெய்த பொறியமை பேழை யொடு பூந்துகிறழீஇக்", பெருங். 1 : 44 : 35 - 36
காமர் பல்கலம்	விருப்பத்திற்குரிய பலவாகிய அணிகலன்	"கம்மியர் புனைந்த **காமர் பல்கலம்**", பெருங். 1 : 42: 213
மின் எறி பல்கலம்	ஒளி வீசும் அணிகலன்	"கொன்னெறியில் பெரியாய் இதுகொள்க என **மின் எறி பல்கலம்** மேதகப் பெய்தது ஓர் பொன் அறைதான் கொடுத்தான் புகழ் வெய்யோன்", சீவக. 237 : 2 - 4
புனைகலம்	அணிகலன்	"உரிமாண் **புனைகலம்** ஒண்டுகில் தாங்கி", பரி. 19: 12; "பூந்துகின் மாலை சாந்தம் **புனைகலம்** பஞ்ச வாசம் ஆய்ந்தளந்து இயற்றப்பட்ட அடிசில்நீர் இன்னவெல்லாம் மாந்தரின் மடங்க லாற்றற் பதுமுகன் காக்க என்றாங்கு", சீவக. 1896 : 1 - 3
பெருங்கலம்	பேரணிகலம்	"அருங்கலந் துதைஇப் **பெருங்கல** மெல்லாம் பேணிய ணிந்த நாணுக் கோலத்துப்", பெருங். 1: 46: 257 - 258; "வன்றோளிளையீர் வந்துநீர் கேண்மின் **பெருங்கலம்** பெய்தியாம் பிடியொடும் போந்த", பெருங். 1 : 56 : 78 - 79
மாண்புறு பெருங்கலம்	மாட்சிமைப்பட்ட பெரிய அணிகலன்	"ஒருபடுத் தொழியாது விருப்பினேந்தி மலைவயிற் பிறந்த **மாண்புறு பெருங்கலம்**", பெருங். 1 : 51 : 31 - 32
பெறலருங்கலம்	பெறுதற்கரிய பேரணிகலன்	"விழுக்குரல் கேட்டுப் பொருடெரியுமோர் வேட்டுவ முது மகன் பெருமக னென்னப் **பெறலருங் கலத்தோ** டொருமகனுள வழி யெதிர்த்து மம்மகன்", பெருங். 1: 55: 89 - 92
பொலங்கலம்	பொன் அணி	"அலங்கலங் குழலுந் தோழி யங்கையின் அடைச்சி அம் பூம் **பொலங்கலக்** கொடியனாள் கண்பொழி கலுழி யொற்றிக்", சீவக. 1497 : 1 - 2
பொற்கலும்	பொன்னாலியன்ற அணிகலம்	"பூங்கட் பாவைக்குப் **பொற்கலம்** இவையெனத் தேங் கட்சாரல் திருந்துசினை மலர்ந்த", பெருங். 2 : 14 : 22 - 23
விழுக்கலம்	சிறந்த அணிகலன்	"யாப்புறு மண்டபத் தாசனத் திரீஇக் கோப்புறு **விழுக் கலம்** ஏத்துவனர் காட்டிக்", பெருங். 2 : 5 : 136 - 137
அடிக்கலம் முதலா தலைக்கலம்	மெய் அணிகலன்கள்	"கொலைச்சிறை இருவரைப் பொருக்கெனப்புகீஇ நலத் தகு மாதர் **அடிக்கல முதலாத் தலைக்கலங்** காறுந் தந்தகத் தொடுக்கிச்", பெருங். 2 : 17 : 71 - 73
முடிக்கலம் முதலா அடிக்கலம்	தலைக்கலம் முதலாகச் சிலம்பு ஈறாக உள்ள அணிகலன்கள்	"வடிக்கண் மாதர் **முடிக்கல முதலா அடிக்கலந் தழீஇ** முடித்தார் மார்பன்", பெருங். 2 : 19 : 206 - 207
அருங்கலப் பேரணி	பெறுதற்கரிய பேர ழகுடைய பெரிய அணிகலன்	"வருந்துத றவிரயாம் வழியிடைப் புதைத்த **அருங் கலப் பேரணிப்** பெருங்கலங்கருதின் யாப்", பெருங். 1: 56: 125 - 126
அருங்கல வெறுக்கை	பெறுதற்கரிய ஆபரணங்கள்	"மேம்படு சிறப்பி **னருங்கல வெறுக்கை** தாங்காது பொழிதந் தோனே", புறம். 378: 11 - 12; "மாசறு முத்தும் மணியும் பொன்னும் **அருங்கல வெறுக்கை**யோ டளந்துகடையறியா வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு", சிலப். 5 : 19 - 20
கலங்கள் அணிதல்	அணிகலன்கள் அணிதல்	"விலங்கல் வெந்தவா வேறுஇனி விளம்புவது எவனோ அலங்கல் மாலையும் சாந்தமும் அன்றுதான் **அணிந்த கலங்**களோடும் அச்சாத்திய துகிலொடும்", கம்ப. 6581: 1 - 3

முடிக்கலம் முதலா அடிக்கலம் ஈறா அணிந்து அழகு பெறுதல்	தலையணிகலன் முதல் சிலம்பு முதலிய அணிகலன்களை அழகு பெற அணிதல்	"முடிக்கல முதலா முறைமுறை தோன்றும் அடிக் கலம் ஈறா அணிந்தழகு பெறீஇ", பெருங். 2 : 5 : 179 - 180
மணிக்கலம் ஒலித்தல்	திருவடியில் அணிந்து உள்ள மணிகள் பெய்த சிலம்பு முதலிய அணிகலன்கள் ஒலித்தல்	"திண்ணிலைப் படுகாறிருந்தடிக் கேற்ற மணிக்கல மொலிப்ப மாடமேறி", பெருங். 1 : 33 : 190 - 191
பொலங்கலக் கோலம் செய்தல்	பொன்னணிகளால் அலங்காரம் செய்தல்	"ஆடியின் நோக்கிப் பொலங்கலக் கோலம் செய்பவர் போல கோல வெறிப்பினால்", சீவக. 2397: 2 - 3
விழுமணிக் கலங்கள் தாங்குதல்	சிறந்த நகைகளை அணிந்திருத்தல்	"வித்தக இளையர் எல்லாம் விழுமணிக் கலங்கள் தாங்கி", சீவக. 971 : 2
கலம் திகழ்தல்	அணிகலன்கள் ஒளி வீசுதல்	"மெய்யடியார் தம்மை விரும்பக் கண்டேன் இளைக்குங் கதநாக மேனி கண்டேன என்பின் கலந்திகழ்ந்து தோன்றக் கண்டேன்", தேவா. திருநா. 6: 77: 4: 2 - 4
பல்கலம் நொய்ய மெய்யணிதல்	நுண்ணிய பல அணிகளை மிகுதியாக உடம்பில் அணிவித்தல்	"கம்மப் பல்கலம் களைந்து கண்தெறூஉம் விம்மப் பல்கலம் நொய்ய மெய்யணிந்து", சீவக. 991: 1 - 2
கலன்	அணி	"நன் கலன் ஈயும் நாள் மகிழ் இருக்கை", அகம். 76 : 4; "வீக்கினா னாடரவம் வீழ்ந்தழிந்தார் வெண்டலையென் பாக்கினான் பலகலன் களாதரித்துப் பாகம்பெண் ஆக்கினான் தொல் கோயிலாம் பலம்பூம் பொய்கை", தேவா. திருஞா. 2: 42: 5: 1 - 3; "இயலிசை எனும் பொருளின் திறமாம் புயல் அவமிடறுடைப் புண்ணியனே.. கலன் ஆவது வெண்டலை கடி பொழிற் புகலி தன்னுள் நிலன் நாள்தொறும் இன்புற நிறைமதி அருளினனே", தேவா. திருஞா 3 : 3 : 1 : 1 - 6; "ஆரமும் துகிலும் கலன் யாவையும் சோர, இன் உயிர் சோரும் ஓர் சோரக் குழல்", கம்ப. 1103 : 1 - 2
அருங்கலன்	அரிய அணிகலன்	"தோற்றம் என்னும் அத்தொல்வினைத் தொடு கடல் சுழிநின்று ஏற்று நன்கலன், அருங்கலன் யாவர்க்கும் இனிய மாற்ற மங்கலம்", கம்ப. 6233 : 1 - 3
பொங்கு ஒளிக் கலன்கள்	ஒளிவிடுகின்ற ஆபரணங்கள்	"பண்களின் மழலை எங்கும் பொங்கு ஒளிக் கலன் கள் எங்கும் புது மலர்ப் பந்தர் எங்கும்", திருத். 80
செழுங் கலன்கள்	ஆபரணங்கள்	"வையம்முறை செய்குவன் ஆகில் வயங்கு நீறே செய் யும் அபிடேகமும் ஆக செழுங்கலன்கள்", திருத். 1003 : 1 - 2
நன்கலன்	நல்ல அணிகலன்கள்	"யாமும் பிறரும் வாழ்த்த நாளும் நிரைசா னன்கல னல்கி உரைசெலச் சிறக்கவ வன்பாடல் சால் வளனே", புறம். 396 : 29 - 31
பல்கலன்	பல அணிகலன்	"பல்கலன் கொண்டு பலரறியாமல் எல்வளை யாளோ டரிபுர மெய்தி பண்டக் கலம்பகர் சங்க மன்றன்னை", மணி. 26 : 21 - 23
அருவிலை மாண் கலன்	அரிய விலையுள்ள சிறந்த ஆபரணம்	"அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும் திருவுடைய ராயின் திரிந்தும் வருமால் பெருவரை நாட", பழ. நா. 33 : 1 - 3
தாஇல் மாமணிக் கலன்	குற்றமற்ற பெரிய மணிகளால் ஆகிய அணிகள்	"தாஇல் மா மணிக்கலன் மற்றும் தனித்தனி சிதறி, நாவி ஓதியை நானிலம் தைவரப் பரப்பி", கம்ப. 1493 : 1 - 4

மெய்கலன்	உடம்பில் அணியும் அணிகலன்	"பொய்யாது முடித்தலின் மெய்யுறத்தழீஇ ஏறிய யானை யுந் தன் மெய்க்கலனும் கூறுபட லின்றிக் கொடுத் தனன் கூறி", பெருங். 4 : 1 : 4 - 6
சென்றுபட்ட விழுக்கலன்	பகைவரிடத்து இருந்து கவர்ந்த சீரிய அணிகலன்கள்	"உண்டாகிய வுயர்மண்ணும் சென்றுபட்ட விழுக் கலனும் பெறல்கூடு மிவனெஞ் சுறப்பெறின் எனவும்", புறம். 17 : 24 - 26
கலம் அணிதல்	அணிகலன் அணிதல்	"குலம்பணி கொள்ள எனைக் கொடுத்தோன் கொண்டு தான் அணியும் கலம்பணி கொண்டிடம் அம்பலங் கொண்டவன்", திருக்கோ. 54 : 2 - 3
கலங்களுள் ஒத் தவை ஆராய்ந்து அணிதல்	அணிகளை ஆராய்ந்து அணி வித்தல்	"தத்தம் கலங்களுள் கையுறை யென்றிவற் கொத் தவை ஆராய்ந்தணிந்தார்", கலித். 84 : 16 - 17
விரத விழுக்கலம் விதியுளி அணிதல்	நோன்பின் பொருட்டு அணிகின்ற அணி கலன்களை விதிப்படி அணிதல்	"வியலக வரைப்பின் மேவர வேண்டி விரத விழுக் கலம் விதியுளி யணிந்து திரிதலில்லாச் செந்நெறிக் கொள்கையன்", பெருங். 4 : 7 : 168 - 170
பசும்பொற் பல்கலம் பல்லூழிமைத்தல்	பசிய பொன்னால் இயன்ற பல்வேறு அணிகலன்களும் பிறழ்ந்து பன்முறை யும் ஒளி வீசுதல்	"தொடியுடைத் தடக்கையிற் றோழனைப் புல்லிப் பசும் பொற் பல்கலம் பல்லூ ழிமைப்ப விசும்பின் மின் னென மறைந்தனன் விரைந்தென்", பெருங். 5: 3: 125-127
பல்கலங் கை புனைந்தியற்றல்	ஆராய்ந்து கொண்ட ஒளிமாட்சிமையுடைய பலவாகிய அணிகலன் களையும் கைசெய்து அணிதல்	"விதிமா ணுறுப்பிற்கு வேண்டுவ வேண்டுவ கதிர்மாண் பல்கலங் கைபுனைந்தியற்றி", பெருங். 1 : 42 : 152 - 153
அருவிலை நன் கலம் அமைவர ஏற்றுதல்	அரிய விலையினை உடைய நல்ல அணிகலன்களைப் பொருத்தம் உண்டாக அணிதல்	"அருவிலை நன்கல மமைவர வேற்றிக் குரவர் போலக் கூட்டுபு கொடுப்ப", பெருங். 4 : 17 : 111 - 112
நீராடு பல்கல நெறிய வேற்றுதல்	நீராடுங்கால் அணிதற்கு இயன்ற பல்வேறு அணிகலன்களையும் நெருங்க அணிதல்	"நீராடு பல்கல நெறிய வேற்றி ஆராடு தானத் தைந் நூறாயிரம்", பெருங். 1 : 42 : 113 - 114
பொலங்கலக் கோலம் செய்தல்	பொன்னாலாகிய அணிகளால் தங் களை அலங்கரித்துக் கொள்ளுதல்	"பால் வெண் திங்கள் மணிக்கை படுத்தவை போலும் ஆடியின் நோக்கிப் பொலங்கலக் கோலம் செய் பவர் கோல வெறிப்பினால்", சீவக. 2397 : 1 - 3
பல்கலம் தாங் குதல்	பல கலங்களையும் அணிதல்	"துணிய வீசுந் துளங்கொளி மேனியன் பணியிற் பல் கலம் தாங்குபு சென்றபின் அணிசெய் கோதையங் காமினி ஓதினாள்", சீவக. 1713 : 2 - 4
ஒளிர்மணிக் கலங் களில் புனைதல்	உடலெங்கும் ஒளி விளங்கும் அணிக ளாலே அலங்கரித்துக் கொள்ளுதல்	"பிள்ளை வெண்பிறைச் சிறுநுதல் பெரும்பட்டம் அணி மின் உள்ள மேனியும் ஒளிர்மணிக் கலங்களிற் புனைமின்", சீவக. 2390 : 1 - 2
கலன் அணிதல்	நகையணிதல்	"கலனணியாயங் கைதொழ வேறிப்", பெருங். 1: 33: 195
நற்கலன் அணிதல்	நல்ல பொன்னணி கலன்கள் நிரம்ப அணிதல்	"நீல வேற்கணிரை தொடிக் கீகெனப் பொற்கோங் கேய்ப்ப நற்கலனணிந்த முப்பதினிரட்டி முற்றிழை மகளிரைப்", பெருங். 4 : 11 : 46 - 48

விலையிலி கலன் அணிதல்	விலை மதிக்கப்பட முடியாத அணிகலன்களை அணிதல்	"விண்ணின் மாமதி சூடி விலையிலி கலன் அணி விமலன் பண்ணின் பசுஉகந் தேறி", தேவா. சுந்தர. 23 : 6 : 1 - 3
கலன் தெரிந்து அணிதல்	தமக்கு ஏற்றவற்றை அறிந்து அணிதல்	"அற்புத வடிக்கண் வாளிக்கு அஞ்சனம் எழுதி, அந்தில் கற்பகம் கொடுப்ப வாங்கி கலன் தெரிந்து அணிகின்றாரை", கம்ப. 4943 : 5 - 8
கலன்பல அணிதல்	பல அணிகளை அணிதல்	"புண்ணியப் பொருளாய் உள்ள பொருஇல்சீர் உருவினானைக் கண்ணினுக்கு அணியாத் தங்கள் கலன் பல அணிந்தார் அன்றே", திருத். 666 : 5 - 8
பைம்பூண் கலன் ஆடுதல்	பசிய பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்கள் அசைதல்	"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக் கோதை குழலாடவண்டின் குழாமாடச்", திருவாச. திருவெம். 7: 14: 1 - 2
பல்கலன் ஆர்த்தல்	பல கலன்களும் ஒலித்தல்	"பஞ்சி மெல்லடிப் பல்கலன் ஆர்ப்பச் சென்று இஞ்சி மாநகர்த் தன்இடம் எய்தினாள்", சீவக. 358 : 3 - 4
பல்கலன் ஒலித்தல்	பல்வேறு அணிகலன்களும் ஒலித்தல்	"அடித்த பந்துகளங்கையினடக்கியும் மறித்துத் தட்டியுந் தனித்தனி போக்கியும் பாயிர மின்றிப் பல்கலனொலிப்ப", பெருங். 4 : 12 : 61 - 63; "பட்டமும் குழையும் மின்னப் பல்கலன் ஒலிப்பச் சூழ்ந்து மட்டு அவிழ் கோதை மாதர் மைந்தனைக் கொண்டு புக்கார்", சீவக. 472 : 3 - 4
நாமநீள் கலன்கள் சாத்துதல்	பேர்பெற்ற ஆபரணங்களை அணிதல்	"நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலம் கொண்டார்", திருத். 164 : 7 - 8
கலன் ஏற்பத் தாங்குதல்	பொன் அணிகளைப் பொருந்த அணிதல்	"புனையப்பட்ட அஞ்சனத்தைப் புகழ எழுதிப் புனைபூணான் கனை வண்டார்க்கும் அலங்கலும் கலனும் ஏற்பத் தாங்கினான்", சீவக. 2357 : 3 - 4
விழுமணிக் கலன்கள் தாங்குதல்	சிறந்த மணிப் பூண்களை அணிந்து இருத்தல்	"வரைவிழித்து இமைப்பதொக்கும் வாளொளி ஆரமார்பின் விரைவழித்து இளைய ரெல்லாம் விழுமணிக் கலன்கள் தாங்கி", சீவக. 699 : 1 - 2; "வித்தக இளையர் எல்லாம் விழுமணிக் கலன்கள் தாங்கி முத்தணிந்தாவியூட்டி முகிழ்முலை கச்சின் வீக்கிப்", சீவக. 971 : 1 - 2
கதிர்க் குழாம் புடை நிரைத்து ஒளிர் பல்கலன் பூட்டுதல்	ஒளித் தொகுதிகளைப் பக்கங்களில் வரிசையாக வெளியிடுகின்ற பல மணிகள் பதித்த அணியைப் பூட்டுதல்	"கடல் நுரைத் துகில் சுற்றி, கதிர்க்குழாம் புடை நிரைத்து ஒளிர் பல்கலன் பூட்டினான்", கம்ப. 7344 : 3 - 4
கலன் பூணுதல்	ஆபரணங்களை அணிதல்	"கானவிடம் உண்டு இருண்ட கண்டர் பணிக் கலன் பூண்டு நீள் இரவில் ஆடுவார் கழல் வணங்க நேர் பெற்றார்", திருத். 1469 : 3 - 4
கவடி மெய்கலன்கள் பூணுதல்	பல கறைகளாலாகிய உடற்பூண்களை அணிதல்	"கவடி மெய்க் கலன்கள் பூண்டு", திருத். 686 : 4
பவளத்திரி	அணிகலன்	"பாடி மகளிர் விழையும் சேடொளிப் பத்திக் கடிப்பும் பவளத் திரியும்", பெருங். 3: 17: 162-163
பூண்	அணி	"பெரும் பூண் பொறையன்", குறுந். 89 : 4
ஒள்ளெரிம் மணி உருவப் பூண்	சிறந்த ஒளி வீசும் மணிகளாலான அணி	"அள்ளியேந்திய அரத்த அல்குலார் ஒள்ளெரிம்மணி உருவப் பூணினார்", சீவக. 2685 : 3 - 4
சீர்ப்பூண்	சிறந்த அணி கலன்கள்	"தார்ப்பூண் மார்பிற்றந்தை கடிமனைச் சீர்ப்பூண் களைந்த சில்லென் கோலமொடு", பெருங். 1 : 54 : 22 - 23

பூணலாப் பூண்	அணியலாகாத அணி	"பூணலாப் பூணானைப் பூசாச் சாந்த முடையானை முடைநாறும் புன்கலத்தில் ஊணலா வூணானை", தேவா. திருநா. 6: 11: 6 : 1 - 3
பைம்பூண்	பசிய அணி	"இன்னது நிகழ இவ்வயின் தந்த பொன்னணி பைம்பூட் புதல்வன் தானிவன் ஐயாண்டு நிறைந்தனன் ஆதலின்", பெருங். 2 : 11 : 132 - 134
விளங்கு ஒளி மணி கள் வேய்ந்து பூண் சுடர்விடுதல்	ஒளி விளங்கும் மணிகள் பதித்துச் சுடர்விடும் பூண்கள் ஒளிவீசுதல்	"அளந்தன வாழும் நாளும் அது எனக்கு உரையல் என்றான் விளங்கு ஒளி மணிகள் வேய்ந்து விடு சுடர் இமைக்கும் பூணான்", சீவக. 213 : 3 - 4
பூண் தயங்குதல்	ஆபரணம் அசைதல்	"பூண்தயங்கு இவனே காணும் புண்ணிய மூர்த்தி என்பார்", திருத். 172 : 5 - 6
பூண் தாங்குதல்	அணிகளைப் பொருந்த அணிதல்	"அரிவையர் பூசியாடி அகிற்புகை யாவி ஊட்டித் திரு விழை துகிலும் பூணுந் திறப்படத் தாங்கினாரே", சீவக. 2737: 3 - 4
ஓதமணி மாலை யொடு பூண் பிறழ்தல்	கடலில் பிறந்த முத்து மாலையுடன் மற்ற அணிகள் பிறழ்தல்	"கோதையொடு தாழ்ந்து குழல் பொங்கிஞிமிறார்ப்ப ஓதமணி மாலையொடு பூண்பிறழ ஓடி", சீவக. 2014 : 1 - 2
சுமக்கலாத பூண் பொன்ஞாண் வடத் தொடு புரளுதல்	சுமக்க முடியாத பொற்பூணும் பொன் நாணும் முத்துச் சரத்துடன் புரளுதல்	"நாண்சுமக் கலாத நங்கை நகைமின்னு நுசுப்புநோவப் பூண் சுமக்கலாத பொன்ஞாண் வடத்தொடு புரள நோக்கிப் பாண்குலாய் வண்டு பாடும்", சீவக. 2443: 1 - 3
பூண்தக்க கோலம் வல்லை புனைதல்	அணிதற்குத் தகுதி யான அலங்காரங் களை விரைவாகச் செய்தல்	"பூண் தக்க கோலம் வல்லை புனைந்தன்ன வருத்தம் போக்கி ஈண்டக் கொண்டு அணைதி", கம்ப. 9990 : 3 - 4
தரளப் பைம்பூண் பூட்டுதல்	முத்துக்களால் ஆன பசும் பொன்னணி அணிவித்தல்	"சந்திரன் தேவிமாரின் தகைஉறு தரளப் பைம் பூண் இந்திரன் தேவிக்கு ஏற்ப இயைவன பூட்டி", கம்ப. 9997: 1 - 2
பூண் பூணுதல்	பூண் அணிதல்	"பூம்புறங்கவவப் புனைதா ரோதி பூண் பூணொடு பொறையொன் றாற்றேன்", பெருங். 3 : 14 : 148 - 149
பூண் எலாம் பொறுத்தல்	அணிகலன்களை எல்லாம் தாங்குதல்	"நாண் இலாது இருந்தேன் அல்லேன் நவைஆறு குணங் கள் என்னும் பூண் எலாம் பொறுத்த மேனிப் புண் ணிய மூர்த்தி தன்னைக் காணலாம்", கம்ப. 7653 : 2 - 4
மெய்யைப் பூணில் மறைத்தல்	உடலை அணிகலன் களால் மூடிக் கொள்ளுதல்	"பிறைக் கொழுந்து அனைய நெற்றிப் பெய்வளை மகளிர் மெய்யை மறைத்தனர் பூணின்", கம்ப. 10303: 3 - 4
மின்னின் இமைக் கும் பூண்மிளிர்தல்	மின்னலைப் போல ஒளிவிடுகின்ற ஆபரணம் அணிதல்	"ஆரா நின்றாள்நூ புரம் அச்சம் தரு தாளாள் வேரா நின்றாள் மின்னின் இமைக்கும் மிளிர் பூணாள்", கம்ப. 4911 : 3 - 4
பூண் மிளிர விடுதல்	ஆபரணங்களை ஒளி விடும்படி அணிதல்	"நின்றேன் அறிந்தேன் நெடுங்கண்ணாள் சென்றாளுக்கு என்னுரைத்தீர்க்கு என்னுரைத்தாட்கு என்னுரைத் தீர்க்கு என்னுரைத்தாள் மின்னுரைத்த பூண் மிளிர விட்டு", திணை. நூற். 81 : 2 - 4
பூண் மின்னுதல்	அணிகலன்கள் ஒளி வீசுதல்	"மின்னும் பூணும் மிளிர்கதிர் ஆரமும் பொன்னும் பூத்ததொர் கற்பகப் பூமரம்", சீவக. 1716 : 1 - 2
குல மணிக் கொடும் பூண் மின்னுதல்	பல மணிகள் பதித்துச் செய்யப்பட்ட அணி கலன்கள் மின்னுதல்	"கோளொடும் திரிவது என்னக் குலமணிக் கொடும் பூண் மின்ன தாள் இணை இரண்டும் பற்றிச் சுழற் றினன்", கம்ப. 6338 : 1 - 2

பூண் விளங்குதல்	விளங்குகின்ற ஆப ரணங்களை அணிதல்	"வலம்படு முரசத் துவைப்ப வாளுயர்த் திலங்கும் பூணன் பொலங்கொடி உழிஞையன்", பதிற். 56 : 4 - 5
மின்னல் இயன்றது எனலாய் விளங் கும் மிளிர் பூண் விளங்குதல்	கோடிக்கணக்கான மாணிக்கங்களினால் செய்ததால் மின்ன லினால் செய்யப் பட்டுள்ளது என்று கூறும்படி விளங்கு கின்ற ஒளி வெளி யிடும் அணிகலன் கள் விளங்குதல்	"பல் நாகர் சென்னி மணி கோடி கோடி பல கொண்டு செய்த வகையால் மின்னால் இயன்றது எனலாய் விளங்கு மிளிர்பூண் வயங்க", கம்ப. 8249 : 1 - 4
மதரணி	சுடர்விடும் நகைகள்	"நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின் செம்முகப் பெருங்கிளை யிழைப் பொலிந்தாஅங்", புறம். 378: 20 - 21
மணி	இரத்தினாபரணம்	"பிறிதினால் மாண்ட தெவனாம்? - பொறியின் மணி பொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன அணியெல்லாம் ஆடையின் பின்", பழ. நா. 27: 2-4
நவமணி அணி	நவமணிகளால் இழைக்கப்பெற்ற அணிகள்	"நால் நிறச் சுரும்பும், வண்டும், நவமணி அணியின் சார, தேன் உக மலர்ந்த சந்தச் சேயிதழ்க் காந்துட் செம்பூ", கம்ப. 4174: 1 - 4
கதிர்மணி அணி	ஒளி பொருந்திய மணிகளைக் கொண்டு செய்த அணிகலன்கள்	"உமும் கதிர் மணி அணி உமிழும் மின்னினான்; மழுங்கிய நெடுங் கணின்......", கம்ப. 4672: 1-3
மான் அணி	மாட்சிமையுடைய அணிகலன்	"பூணணி யுள்ளு மாண் அணியுடையவை ஆகக் கேற்ப அணிகம் வாராய்", பெருங். 2: 19: 124-125
கிளர்மணி ஆர்த்தல்	அணிந்த மணி ஆரவாரித்தல்	"கிளர்மணி ஆர்ப்பார்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும்", கலித். 80: 10-11
மின்மணி மிளிருதல்	ஒளிவிடும் அணி மணிகளால் ஒளி வீசுதல்	"மின்மணி மிளிரத் தேவி மெல்லவே ஒதுங்குகின்றாள் நன்மணி ஈன்று முந்நீர்ச் சலஞ்சலம் புகுவது ஒத்தாள்", சீவக. 317 : 3-4
மும்மணிக் காசு	மூன்று வகை மணிகள் பதித்த பொன் அணி கலன். மும்மணிக் காசு என்பது புருட ராகம், வைடூரியம், கோமேதகம் எனும் சிறந்த வகை மணிகள் பதித்த பொற்கலம்	"முத்தின ருத்தியர் மும்மணிக் காசினர்", பெருங். 1: 34: 121
மெய் எலாம் மிளிர் மின் வீசுதல்	உடம்பு எல்லாம் விளங்குகின்ற மின்னல் போல அணிகலன்கள் ஒளி வீசுதல்	"மெய் எலாம் மிளிர்மின் வெயில் வீசிட தொய்யில் வாசத் துவர் துதைந்து ஆடிய", கம்ப. 7346 : 1 - 2

இ. ஆடைகள்

கம்பலம்	போர்வை	"கம்பலத்தன்ன பைம்பயிர்த்தா", நற். 24; "சேண் குலாம் கம்பலம் செய்ய தொன்றனால் மாண் குலாங் குணத்தினாள் மறைத் திட்டாளரோ", சீவக. 2233: 3 - 4; "செங்கேழ் வானக் கம்பலம் புதைஇ", பெருங். 3: 7: 37
பொற்கம்பலம்	போர்வை	"செந்நெருப்புணுஞ் செவ்வெலிம் மயிர் அந் நெருப்பளவாய் பொற்கம்பலம் மன்னருய்ப்பன மகிழ்ந்து தாங்கினார்", சீவக. 2686: 1 - 3; "நிலவிய தாது பொங்க நீண்மலர்

		மணலிற் போர்த்துக் கலவியிற் படுத்த காய்பொற் கம்பல மொத்த தன்றே", சீவக. 2711: 3 - 4
கூறை	போர்வை	"கூறைகள் போர்த்துழல் வார்", தேவா. திருஞா. 3: 57: 10: 1
வெண் புடைவை மெய் சூழ்தல்	ஆடை போர்த்தல்	"வெண் புடைவை மெய் சூழ்ந்து... சென்று அடைவார்", திருத். 1331: 2 - 4
போர்வை	போர்த்தலுக்குரிய ஆடை	"மோட்டுடைப் போர்வையொடு", ஆசாரக். 91; "முல் லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்", பழ. நா. 74: 1 - 2; "போர்வை மடக்கார் பொலியப் புருதரும் கோயின் மகளிர் கோல மெல்லடி", பெருங். 2 : 2 : 230 - 231; "பூவுடைத் தெரியலான் போர்வை நீத்து", சீவக. 1812: 1; "பூத்தகிற வழும் போர்வை பூசுசாந்து", சீவக. 1906: 1
அணி நிறப் போர்வை	அழகிய போர்வை	"அணிநிறப் போர்வை யாய வரும் பெறனானும் விற்றுப் பணிநிலம் புதிய துண்டான் பன்மலர் மாலை கொண்டோன்", சீவக. 1665: 2-3
அருவிலை நன் கலஞ்செய் போர்வை	உடலில் அணிந்துள்ள விலை மதிப்பதற்கு அரிய அணிகலன்களை வெளியே காட்டும் மெல்லிய போர்வை	"அருவி லைநன் கலஞ்செய் போர்வை அன்னம் நாண அடியொதுங்கிச் சென்று", சீவக. 2586 : 1 - 2
ஈருரிப் போர்வை	போர்வை	"கைம்மலை ஈருரி போர்வை சாத்தும் கண்ணு தலாரை", திருத். 2247 : 3 - 4
எலிமயிர்ப் போர்வை	மயிர்ப் போர்வை	"பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய கனிமயிர் குளிர்ப்பன கண்கொளாதன எலிமயிர்ப் போர்வைத் தெழினி வாங்கினார்", சீவக. 2471: 1 - 3
எலிப்பூம் போர்வை	எலிமயிரானியன்ற பூ வேலையமைந்த போர்வை	"புலிக்கா லமளிப் பொங்குபட்டசைஇ எலிப்பூம் போர்வையொடு மயிர்ப்படம் விரித்துக் கலத்தி னல்லாது காலின் வாரா", பெருங். 1 : 47 : 178 - 180
தோல் போர்வை	தோல் போர்வை	"தோல் போர்வை மேலும் தொளைப் பலவாய்ப் பொய்ம் மறைக்கும் மீப்போர்வை மீட்சித்து டம்பானால்", நாலடி. 42: 1-2
புதுப் போர்வை	புதிய போர்வை	"வீங்கு வீசிப் புதுப் போர்வைத்", பரி. 2 : 88
பொத்திய பொதி யுறு போர்வை	போர்வை	"பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை", பொருநர். 8
பொன்னல்கிய வெள்ளிப் போர்வை	பொற்பூக்கள் தங்கப் பெற்ற வெள்ளியா லாகிய போர்வை	"தெள்ளொளித் திரள்காற் திகழ் பொன்னல்கிய வெள்ளிப் போர்வை யுள்ளொளிப் படலத்து", பெருங். 1 : 57 : 51 - 52
மயிரொலியின் போர்வை	மயிர்ப் போர்வை	"மயிரொலியின் போர்வையொடு எம்மன்னன் விடுத்தானே", சீவக. 1874: 4
வள்ளிப் போர்வை	பூங்கொடி ஓவியம் பொறித்த போர்வை	"பள்ளிப் பலவகைப் படுப்பவும் பிறவும் வள்ளிப் போர்வையும் வகைவகை யமைத்துத்", பெருங். 1: 57: 61 - 62
அந்துகில் போர்வை அணி பெறத் தைஇ	துகிற்போர்வை அணிதல்	"அந்துகிற் போர்வை அணி பெறத் தைஇ", கலித். 65: 4
ஈருரி போர்வை சாத்தல்	போர்வை போர்த்தல்	"கைம்மலை ஈருரி போர்வை சாத்தும் கண்ணுதலாரை", திருத். 2247 : 3 - 4

போர்வை முற்றுதல்	போர்வை போர்த்தல்	"புறங்காற் றாழ்ந்து போர்வை முற்றிநிலந் தோய் புடுத்த நெடுந் நுண்ணாடையர்", பெருங். 1 : 32 : 63 - 64
போர்வை போர்த்தல்	போர்வை அணிதல்	"முழுமெய்யும் சிலம்பி வலந்தது போறபோர்வை போர்த்துச் செல்லலுற்றாள்", சீவக. 340: 3 - 4; "பொருந்து பூம் பொய்கைப் போர்வையைப் போர்த்துடன்" சீவக. 1033: 3; "தெண்ணீர் சிறுதிரைப் போர்வை போர்த்து மீன் சென்ற நெறியும் போல", சீவக. 1390: 1 - 2
எலிமயிர்த் தொழிற் பூம்புகை போர்வை மேவுதல்	இனிய புகையூட்டிய எலிமயிரால் செய்யப் பட்ட எங்கும் கிடைக் காதப் போர்வையை விரும்புதல்	"பங்க யப்பகைப் பருவம் வந்தென எங்கும் இல்லன எலிம யிர்த்தொழிற் பொங்கு பூம்புகைப் போர்வை மேயினார்", சீவக. 2680 : 2 - 4
மெய்யாப்பு	போர்வை	"மெய்யாப்பு மெய்யார மூடுவார்", பரி. திர. 2 : 19

ஈ. கவசம்

அரணம்	உடலை மூடுகின்ற கவசம்	"அரைசருமமர் மலைந்தரணம் வீசினார்", சீவக. 777: 3; "அடுபடை யிளையரும் அரணம் வீசினார்", சீவக. 1847: 4
மெய்புதை அரணம்	உடலை மூடுகின்ற கவசம்	"மெய்புதை அரணம் எண்ணாது", பதிற். 52 : 6
அரணம் வீசுதல்	கவசத்தை அணிதல்	"அரைசரு மமர் மலைந்தரணம் வீசினார்", சீவக. 777 : 3; "அடுபடை யிளையரும் அரணம் வீசினார்", சீவக. 1847 : 4

பயன்பட்ட நூல்கள்

1. **அகநானூறு (மூலமும் உரையும்)**, புத்தகம் 1 - 2, உரையாசிரியர் முனைவர் இரா. செயபால், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

2. **அகநானூறு களிற்றுயானை நிரை**, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை, கழக வெளியீடு, சென்னை, 1943.

3. **அகநானூறு நித்திலக்கோவை**, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1951.

4. **அகநானூறு மணிமிடைப் பவளம்**, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை, கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1949.

5. **அணிகலன்களும் ஒப்பனையும்**, கிராக்கி, வானதி பதிப்பகம், சென்னை, 1995.

6. **இந்திய மூலிகைகள் மருத்துவ குணஅகராதி**, பேராசிரியர் தன்யகுமார், நர்மதா பதிப்பகம், சென்னை, 2002.

7. **உலகத் தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம்**, பகுதிகள் 1, 2, வள்ளலார் அன்பு நிலையம், மலேசியா, 2005.

8. **ஏழாம் திருமுறை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் (தேவாரம்)**, வரலாற்று முறையில் மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் பி.ரா. நடராசன், உமா பதிப்பகம், சென்னை, 2000.

9. **ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும்,ஸ்** உ.வே.சாமிநாதையரவர்கள், கபீர் அச்சுக்கூடம், சென்னை, நான்காம் பதிப்பு, 1949.

10. **ஐங்குறுநூறு (மூலமும் உரையும்)**, புத்தகம் 1 - 2, உரையாசிரியர் முனைவர் அ. தட்சிணா மூர்த்தி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

11. **ஒன்பதாம் திருமுறை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு**, (விரிவுரையுடன்), உரையாசிரியர் திரு. வே. மாணிக்கவாசகம் பிள்ளை, கழக வெளியீடு, 1971.

12. **ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு மூலமும் உரையும்**, புலவர் பி.ரா. நடராசன், உமா பதிப்பகம், சென்னை, 2001.

13. **க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி**, தமிழ் - தமிழ் - ஆங்கிலம், டாக்டர் பா.ரா. சுப்பிரமணியன் (முதன்மைப் பதிப்பாசிரியர்), க்ரியா, சென்னை, மறுபதிப்பு, 2001.

14. **கம்பராமாயணம் (8 தொகுதிகள்)**, அ.ச. ஞானசம்பந்தன் (முதன்மைப் பதிப்பாசிரியர்), கம்பன் அறநிலை, கோயமுத்தூர், இரண்டாம் பதிப்பு, 2004.

15. **கலித்தொகை (உரையுடன்)**, நச்சினார்க்கினியருரை, கழக வெளியீடு, சென்னை, ஆறாம் பதிப்பு, 1962.

16. **கலித்தொகை (மூலமும் உரையும்)**, உரையாசிரியர் முனைவர் அ. விசுவநாதன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

17. **குறுந்தொகை (மூலமும் உரையும்),1.** டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள், கபீர் அச்சுக்கூடம், சென்னை, நான்காம் பதிப்பு, 1962.

18. **குறுந்தொகை (மூலமும் உரையும்)**, புத்தகம் 1 - 2, உரையாசிரியர் முனைவர் வி. நாகராசன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

19. **சங்க இலக்கியத்தில் அறிவியல் கலை**, சங்க நூல் அறிஞர் பி.எல். சாமி, ஐ.ஏ.எஸ். (ஓய்வு), சேகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1991.

20. **சங்க இலக்கியத்தில் செடி கொடி வகை விளக்கம்**, திரு. பி.எல். சாமி, பி.எஸ்ஸி., கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1982

21. **சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி 1 (அ - ஔ)**, முனைவர் இரா. சாரங்கபாணி (முதன்மைப் பதிப்பாசிரியர்), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு, 2001.

22. **சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி 2 (க - கௌ)**, முனைவர் இரா. சாரங்கபாணி (முதன்மைப் பதிப்பாசிரியர்), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், மறுபதிப்பு, 2003.

23. **சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், தொகுதி 3 (ச - தோ)**, முனைவர் ப. அருணாசலம் (முதன்மைப் பதிப்பாசிரியர்), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1988.

24. **சங்க நூல்களில் மரங்கள்**, சங்க நூல் அறிஞர் பி.எல். சாமி, ஐ.ஏ.எஸ். (ஓய்வு), சேகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1992

25. **சித்த மருந்து முறையியல்**, டாக்டர் பொன். இராமநாதன், யாழ்ப்பாணம், 2002.

26. **சிலப்பதிகாரம் பண்பாட்டுச் சுரங்கம், (தொகுதிகள் 1, 2)**, பதிப்பாசிரியர்: முனைவர் ச.வே. சுப்பிரமணியம், முனைவர் ச. மெய்யப்பன், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், தமிழூர், நெல்லை, 2003.

27. **சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்**, உ.வே. சாமிநாதையர் அவர்கள், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, பத்தாம் பதிப்பு, 2001.

28. **சிற்பச் செந்நூல்**, வை. கணபதி ஸ்தபதி, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு, சென்னை, 1978.

29. **சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்**, டாக்டர் உ.வே. சாமிநாதையர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.

30. **சூடாமணி நிகண்டு**, மண்டல புருடர், பதிப்பாசிரியர் ஆறுமுக நாவலர், வசந்தா பதிப்பகம், சென்னை, 2005.

31. **தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள்**, இரா. வேலம்மாள், கேரளப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு, 1968

32. **தமிழ் இலக்கியத்தில் மலர்கள்**, வெற்றிச் செல்வன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2000.

33. **தமிழ்ச் சொற்றொடர் அகராதி (தெசாரசு)**, வீ.ஜே. செல்வராசு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003.

34. **தமிழ்நாட்டு அணிகலன்கள்**, அ. இராகவன், கலைநூற்பதிப்பகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, 1970.

35. **தமிழ்ப் பண்பாட்டு வரலாறு - 4 பாகங்கள்**, செ. வைத்தியலிங்கன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1996, 1997, 1999, 2002.

36. **தமிழ்ப் பேரகராதி (1 - 7 தொகுதிகள்)**, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, மறுபதிப்பு, 1982.

37. **தமிழர் ஆடைகள்**, முனைவர் கு. பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2003.

38. **தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்**, வெ. வரதராசன், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1986.

39. **திரிகடுகம் நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம் (உரையுடன்)**, திரு.பு.சி புன்னைவனநாதன், கழக வெளியீடு, சென்னை, மறுஅச்சு, 2003.

40. **திருக்குறள்,** பேராசிரியர், டாக்டர் மு.பெரி.மு. இராமசாமி, ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், தியாகராய நகர், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1993.

41. **திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள், இரண்டாவது திருமுறை,** தருமபுர ஆதினம், திரு. முத்து. அ. மாணிக்கவாசக முதலியார் (குறிப்புரையாசிரியர்), ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம், 1954.

42. **திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரப்பதிகங்கள், மூன்றாவது திருமுறை**, தருமபுர ஆதினம், பண்டித. அ. கந்தசாமி பிள்ளை (குறிப்புரையாசிரியர்), ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம், 1955.

43. **திருஞான சம்பந்தர் சுவாமிகள் (தேவாரம் - 1, 2, 3 திருமுறைகள்),** வரலாற்று முறையில் மூலமும் உரையும், முதல் பகுதி, இரண்டாம் பகுதி, மூன்றாம் பகுதி, உரையாசிரியர் புலவர் பி.ரா. நடராசன், உமா பதிப்பகம், சென்னை, 2004.

44. **திருத்தொண்டர்புராணம் (பெரியபுராணம்), அரும்பதவுரை,** திரு.வி.க., அரும்பொருள் விளக்கம், மா. பாலசுப்பிரமணிய முதலியார், அ.ச. ஞான சம்பந்தன் (பதிப்பாசிரியர்கள்), கங்கை புத்தக நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2000.

45. **திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள், ஆறாந் திருமுறை,** திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் (குறிப்புரையாசிரியர்), ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம், 1963.

46. **திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (4, 5, 6 திருமுறைகள்),** வரலாற்று முறையில் மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் பி.ரா. நடராசன், உமா பதிப்பகம், சென்னை, 2003.

47. **திருமந்திரம்,** சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1933.

48. **திவாகர நிகண்டு (1, 2 தொகுதிகள்),** பதிப்பாசிரியர் மு. சண்முகம் பிள்ளை, இ. சுந்தரமூர்த்தி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1993.

49. **தொல்காப்பியம் தெளிவுரை,** முனைவர் ச.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

50. **நவமணிகள்,** அய்யூப், நசீம் பிரதர்ஸ், நீடூர், தஞ்சை மாவட்டம், 1985.

51. **நவமணிகள்,** டி.எஸ். வைத்தியநாதன், திருவாவடுதுறை, திருந்திய பதிப்பு, 1963.

52. **நற்றிணை (மூலமும் உரையும்),** உரையாசிரியர் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

53. **நற்றிணை நானூறு (மூலமும் உரையும்),** பின்னத்தூர் அ. நாராயண சாமி ஐயர், கழக வெளியீடு, சென்னை, 1952.

54. **நறுமணப் பொருள்கள்,** ஜே.எஸ். ப்ருதி, (தமிழாக்கம் சிட்டி சுந்தரராஜன்), நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1981.

55. **நாலடியார் உரையுடன்,** திரு. தி.சு. பாலசுந்தரம் பிள்ளையவர்கள் (இளவழகனார்), கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு, 1968.

56. **நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் மூலமும் விளக்கவுரையும் (ஒன்பது தொகுதிகள்),** டாக்டர். இரா. வ. கமலக்கண்ணன், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2001.

57. **பஞ்சவாசம்,** அ. சரசுவதி, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கம், பண்பாட்டியல், 2004

58. **பண்டைய மருத்துவமும் பயன்தரும் மூலிகைகளும்**, த. கோவேந்தன், திருமகள் நிலையம், சென்னை, 1989.

59. **பத்தாம் திருமுறை, திருமந்திரம் (மூன்று தொகுதிகள்)**, உரையாசிரியர் அ. மாணிக்கம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, ஆறாம்பதிப்பு, 2003.

60. **பத்துப்பாட்டு ஆராய்ச்சி**, டாக்டர் மா. இராசமாணிக்கனார், பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு, சென்னை, 1970

61. **பத்துப்பாட்டு முதற்பகுதி (மூலமும் உரையும்)**, உரையாசிரியர் முனைவர் இரா. மோகன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

62. **பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி (மூலமும் உரையும்)**, உரையாசிரியர் முனைவர் வி. நாகராசன், தலைமைப் பதிப்பாசிரியர்கள்: முனைவர் அமா. ரிமணம், கு.வெ. பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.

63. **பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்**, டாக்டர் உவே. சாமிநாதையர், கபீர் அச்சுக் கூடம், சென்னை, ஆறாம் பதிப்பு, 1961.

64. **பதார்த்த குணசிந்தாமணி (மூலமும் உரையும்)**, எஸ்,பி. ராமச்சந்திரன் (பதிப்பாசிரியர்), தாமரை நூலகம், சென்னை, 1996(2).

65. **பதார்த்த குணவிளக்கம் (தாது - ஜீவ வர்க்கம்)**, இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது.

66. **பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்**, டாக்டர் உ.வே.சாமிநாதையர், லிபர்ட்டி அச்சுக் கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1941.

67. **பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்)**, உரையாசிரியர் முனைவர் அ. ஆலிஸ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

68. **பதினெண்கீழ்க்கணக்கு**, கழகம், சென்னை, 1951.

69. **பதினெண்கீழ்க்கணக்கு (தொகுதி - 1)**, வித்துவான் துரை, இராசராம், முல்லை நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2003.

70. **பதினெண்கீழ்க்கணக்கு (தொகுதி - 2)**, வித்துவான் துரை, இராசராம், முல்லை நிலையம், சென்னை, மறுபதிப்பு, 2001.

71. **பதினெண்கீழ்க்கணக்கு (தொகுதி - 3)**, வித்துவான் துரை, இராசராம், முல்லை நிலையம், சென்னை, மறுபதிப்பு, 2001.

72. **பதினொராந் திருமுறை**, மூலமும், உர்ரயும், உரையாசிரியர் பி.ரா. நடராசன், உமா பதிப்பகம், சென்னை, 2005.

73. **பரிபாடல் (மூலமும் உரையும்)**, உரையாசிரியர்கள் முனைவர் பெ. சுப்பிரமணியன், முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், முனைவர் அ. தட்சிணா மூர்த்தி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

74. **பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும்**, கபீர் அச்சுக் கூடம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1948.

75. **பழங்காலத் தமிழர் வாணிகம்**, மயிலை சீனி. வேங்கடசாமி, ஸ்ரீ சாரதி குவாலிடி பிரிண்டர்ஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1990.

76. **பழமொழி நானூறு தெளிவுரையுடன்**, இராசமாணிக்கம் பிள்ளை, கழக வெளியீடு, மறு பதிப்பு, 2003

77. **பழமொழி நானூறு தெளிவுரையுடன்**, புலியூர்க் கேசிகன், முல்லை நிலையம், ... சென்னை, மறுபதிப்பு, 2000

78. **பிங்கல நிகண்டு**, பிங்கல முனிவர், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1968.

79. **புறநானூறு (மூலமும் உரையும்)**, புத்தகம் - 1, 2, உரையாசிரியர்கள் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், முனைவர் அ. விசுவநாதன், முனைவர் வி. நாகராசன், முனைவர் இரா. ஆரோக்கிய சாமி, முனைவர் க. திலகவதி, முனைவர் வெ. சத்திய நாராயணன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2004.

80. **புறநானூறு மூலமும் உரையும்**, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள், ஜோதி அச்சுக் கூடம், சென்னை, நான்காம் பதிப்பு, 1950.

81. **பெருங்கதை**, டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் குறிப்புரை, மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு, 1968

82. **பெருங்கதை (பகுதி - 1, 2)**, திரு. பொ.வே. சோமசுந்தரனார், கழக வெளியீடு, மறுபதிப்பு, 1973.

83. **மணப்பொருட்கள் சிலப்பதிகாரத்தில்** கு. பகவதி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2005.

84. **மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும்**, டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், நான்காம் பதிப்பு, 1949.

85. **மர இனப் பெயர்த் தொகுதி (தொகுதி - 1)**, பெ. மாதையன், எச். சித்திரபுத்திரன், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1986.

86. **மருத்துவத் தாவரவியல்**, எஸ். சோமசுந்தரம், இளங்கோவன் பதிப்பகம், பாளையங்கோட்டை, 1997.

87. **மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம், திருக்கோவையார் ஆகிய எட்டாந்திருமுறை**, குறிப்புரையாசிரியர், தருமையாதீனப் புலவர் திரு.சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், 1966.

88. **முதுமொழிக் காஞ்சி ஏலாதி ஆசாரக்கோவை**, திரு. தி.சு. பாலசுந்தரம், கழக வெளியீடு, மறுபதிப்பு, 2004.

89. **மூலிகைகள் மருத்துவகுண அகராதி**, என். ஜனார்த்தனன், நர்மதா பதிப்பகம், சென்னை, 2002.

90. **மூலிகைச் செயல் தொகுப்பு**, டாக்டர் பொன். இராமநாதன், எம்.டி., (எஸ்.), சித்த மருத்துவத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை, 2002.

91. **மூலிகை மருத்துவம்**, சு. திருஞானம், செல்வி பதிப்பகம், திருச்சி, இரண்டாம் பதிப்பு, 1977.

92. **வரலாற்று முறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி (தொகுதிகள் 1 - 5)**, சாந்தி சாதனா, 125, சேமியர்ஸ் சாலை, சென்னை, 2002.

93. **A Glossary of Literary Terms** (Seventh Edition), M.H. Abrams, Cornell University, Prism.

94. **Pre-pallavan Tamil Index**, N. Subrahmanian, University of Madras, II edition, 1990.

95. **Seven Thousand years of Jewellery**, Edited by Hugh Talt, The British Museum Press, Reprint, 2001.

96. **Tamil Lexicon (six volumes)** University of Madras, Reprinted, 1982.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு	90.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்	40.00
தமிழக எல்லைப் போராட்டங்கள்	60.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு	50.00
தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெபொமீயும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	95.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	280.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
மொழியியல் நோக்கில் தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வுகள்	40.00

---

624 தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை - ஒப்பனையியல் 250.00